உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

கோனேரியப்ப நாவலரியற்றிய

உபதேசகாண்டம்.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீன மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ

அம்பலவாண தேசிக சுவாமிகள்

கட்டளையின்படி,

சென்னைக்கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்,
உரையாசிரியரும் சைவப்பிரசாரகருமாகிய
ஈக்காடு

இரத்தினவேலுமுதலியாரவர்களாற்

பொழிப்புரை யெழுதுவித்து,

மேற்படி மூலமும் உரையும்

தமிழ்ப்பண்டிதர்

வல்லி-ப-தெய்வநாயக முதலியாரவர்கள்

பார்வையிட்டு,

சென்னை
பிரஸிடென்ஸி அச்சுக்கூடத்திற்
பதிப்பித்தனர்.

பரிதாபி௵ மகரரவி.

1913.

Registered Copy right.] [இதன் விலை ரூபா. 4-8-0.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-8
சென்னை

உ

கடவுள்துணை.

நூலாசிரியர் சரித்திர சங்கிரகம்.

(*)

சான்றோர்மலிந்த தொண்டைநாட்டில் பெருஞ்சிறப்பமைந்த காஞ்சி நகரத்தில், இற்றைக்குச் சுமார் 1126-வருடங்கட்கு முன்னர்ச் **செங்குந்தர்** மரபில், **சிவானந்தமுதலியாரும்** அவர்மனைவி **அமுதாம்பிகையாரும்** சிவபக்திமிக்காராயிருந்தவர்கள் மகப்பேறின்றிக் குகாலயமொன்றமைத்து, அதனருகே ஒருதீர்த்தங் கண்டு அதனைக்**குகனேரி**யெனப் பெயரிட்டு வழிபாடியற்றிப் பன்னெடுநாட் பின்னர், தாம்பெற்ற புதல்வனுக்குக் **குகனேரியப்ப**னென நாமகரணஞ்செய்தனர். குகனேரியென்பதுகோனேரியெனப் பிற்காலத்து மருவியதுபோலும்.

இவர் ஐந்தாம்வயதில் வித்தியாரம்பஞ்செய்யப்பெற்று, பண்டைப்புண்ணியத்தாற்கற்றுவல்லுநராய், தமதுகுலகுருவும் அக்காலத்திற் குமரகோட்டத்தருச்சகரும் குமாரக்கடவுளின் திருவருளுடையருமாகிய **ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர்**பாற் சமயதீக்ஷைபெற்றுத் தேவார திருவாசகமுதலிய திருமுறைகளையும் வடமொழியில் இதிகாசபுராணாதிகளையுந்தேர்ந்து உபயகலாவல்லுநராயினர். பின்னர் விசேஷதீக்ஷைபெற்றுக்கொண்டு சைவசித்தாந்த சாஸ்திரங்களைக்கற்று, சிவபூசையெழுந்தருளச்செய்துகொண்டு குகப்பெருமான் சந்நிதியிலும் ஆசிரியர் சந்நிதியிலும் அணுக்கந்தொண்டராயமர்ந்திருந்து, சிலகாலத்திற்குப்பின்னர் நிர்வாண தீக்ஷையெய்திச்சிவாகமங்களையாராய்ந்து சிவத்தியானபரராய் வீற்றிருக்கையில்; இவரதாசிரியராகிய ஸ்ரீகச்சியப்ப சிவாசாரியசுவாமிகளைக் குமரகோட்டத்திறைவர் "திகடசக்கரச்செம்முகமைந்துளான்" எனமுதலடிதந்தருள, அஷ்டாதசமகாபுராணங்களிலொன்றாய் ஓரிலக்ஷங்கிரந்தமுடையதாய் ஐம்பதுகாண்டங்களுடையதாய்விளங்கும் ஸ்காந்தமகாபுராணத்துள் சநற்குமாரசங்கிதை சூதசங்கிதை சங்கரசங்கிதை விஷ்ணுசங்கிதை பிரமசங்கிதை சூரியசங்கிதையெனும் ஆறுசங்கிதைகளிலொன்றாகிய சங்கரசங்கிதையின் பன்னிருகண்டங்களிலொன்றாகிய சிவரகசியகண்டத்தின் உட்பிரிவுகளெனுஞ் சப்தகாண்டங்களில், உற்பத்திகாண்டம் அசுரகாண்டம் மகேந்திரகாண்டம் யுத்தகாண்டம் தேவகாண்டம் தக்ஷகாண்டமென்னும் ஆறுகாண்டங்களையும் தமிழ்ச்செய்யுட்களாகப்பாடிமுடித்து, இறுதியதும் ஏழாவதுமாகிய இவ்வுபதேசகாண்டத்தை அங்ஙனமேதமிழ்ப்பாக்களாற்பாடும்படி இவருக்குக்கட்டளை தந்தனர்.

ஆசிரியர் கட்டளையைச் சிரமேற்றாங்கிய இவர் தமிழ்நாடு தழைத்தோங்க நவரசாலங்காரசொற்சுவை பொருட்சுவைகளோடு 4348 செய்யுட்களாகப்பாடிமுடித்து, ஆசிரியர் விருப்பின்படி குமரகோட்டச்சந்நிதியில் வடமொழித் தென்மொழிப்பண்டிதர்களும் பிறரும் நிரம்பிய பெருஞ்சபையில் அரங்கேற்றினர். பின்னர், பலகாலம் சிவாநுபூதிச்செல்வராக வாழ்ந்திருந்து நற்றவப்பேற்றாற் சிவபெருமான் திருவடி நீழலில் இரண்டறக்கலந்தனர்.

கச்சியப்ப முனிவரருளிய வெண்பா.

"அன்றாழி நின்றுதித்த வாரமுதை யொப்பிவர்
பொன்றாமைக் கேயதுவாம் புந்திநினைந் - தொன்ற
வுகுநேரிற் றாருவென லொக்குமலால் வேறென்
குகனேரி நாவலனுக் கு."

குகப்பெருமான் பிரமோற்சவதினமொன்றிற் பெருமழைபெய்து உற்சவந்தடைபடுவதுநோக்கி, இவர் "கார்க்குமழைக்குங் கவலேல் கடுஞ்சிறையாற் சூர்க்குடைந்த நின்னைச் சுகத்திருத்தி-யூர்க்குள்விடுங், கந்தன் விழாவைக் கருதாது பெய்வித்த, லந்தமோ வாகண்டலா." எனப்பாடித்தடுத்தனரென்றும் இன்னுஞ் சிற்சில அமையங்களில் சாதுரியமாகவும் அற்புதமாகவும் பலசெய்யுள்களியற்றியுள்ளாரென்றுங் கூறுவர்.

உ

கடவுள் துணை.

உபதேசகாண்டச் சருக்க அட்டவணை.

நெ.	சருக்கம்.	பக்கம்.	பாடற்றொகை.
	விநாயக வணக்கம்.	1	1
	வாழ்த்து.	2	2
	கடவுள் வாழ்த்து வணக்கம்.	2	7
	அவையடக்கம்.	5	2
1	கைலைமான்மியச்சருக்கம்.	6	75
2	சூராதிகௌடிக்கச்சருக்கம்.	25	137
3	அயமுகிசருக்கம்.	58	82
4	மாயைசருக்கம்.	75	12
5	விபூதிமான்மியச்சருக்கம்.	78	209
6	உருத்திராக்கமான்மியச்சருக்கம்.	124	254
7	பஞ்சாக்கரமான்மியச்சருக்கம்	182	138
8	சிவநாமமான்மியச்சருக்கம்.	213	174
9	சிவவிரதமான்மியச்சருக்கம்.	248	414
10	சிவபுண்ணியமான்மியச்சருக்கம்.	346	426
11	சிவபுராணமான்மியச்சருக்கம்.	445	57
12	சிவத்துரோகிகளெய்தும் நரகவேதனைச்சருக்கம். ...	459	504
13	சிவபூசைமான்மியச்சருக்கம்.	575	117
14	மச்சாவதாரச்சருக்கம்.	603	26
15	கூர்மாவதாரச்சருக்கம்.	610	105
16	வராகாவதாரச்சருக்கம்.	634	34
17	நரசிங்காவதாரச்சருக்கம்.	642	52
18	வாமனாவதாரச்சருக்கம்.	656	68
19	பரசுராமாவதாரச்சருக்கம்.	673	56
20	இராமாவதாரச்சருக்கம்.	687	17
21	பலபத்திரராமாவதாரச்சருக்கம்.	692	2
22	கிருஷ்ணாவதாரச்சருக்கம்.	693	3
23	மாயன்வரம்பெறுசருக்கம்.	694	30
24	நரகாசுரன்வதைச்சருக்கம்.	701	40
25	திருமால்சிவார்ச்சனைச்சருக்கம்.	711	48
26	பிரமன்சிவார்ச்சனைச்சருக்கம்.	724	47
27	இந்திரன்சிவார்ச்சனைச்சருக்கம்.	735	72
28	திரிபுரவிசயச்சருக்கம்.	754	279
29	அந்தகாசுரன்வதைச்சருக்கம்.	818	36
30	பண்டாசுரன்வதைச்சருக்கம்.	827	72
31	அரிபிரமாதியர்பூசனைச்சருக்கம்.	843	40
32	சனகாதியர்சிவார்ச்சனைச்சருக்கம்.	854	150
33	வாணாசுரன்பூசனைச்சருக்கம்.	889	233
34	மன்மதன்சிவார்ச்சனைச்சருக்கம்.	944	43
35	கிருதுசிவார்ச்சனைச்சருக்கம்.	953	19
36	இலக்குமி, பூமிதேவி, சகத்திராமார்ச்சனைச்சருக்கம். ...	959	30
37	சிவார்ச்சனைமான்மியச்சருக்கம்.	966	17
38	குருமான்மியச்சருக்கம்.	970	33
39	சரியையாதிமான்மியச்சருக்கம்.	977	50
40	மூர்த்திவிசேடச்சருக்கம்.	991	35
41	சிவகாட்சிப்பேற்றுச்சருக்கம்.	998	93

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந்துணை.

உபதேசகாண்டம்.

மூலமும் உரையும்.

காப்பு.

விநாயகவணக்கம்.

கலிநிலைத்துறை.

குழவி வெண்பிறை மிலைச்சியோற் குணித்தமா தவத்தி
னிழைத டம்புன லருவிதா ழிமயமீன் றளித்த
மழைம தர்த்தகண் மரகதப் பசும்பிடி பயந்த
தழைம டற்செவித் தந்திபொற் சரணமே சரணம்.

(இ - ள்.) வெள்ளிய இளஞ்சந்திரனை (ச்சடையில்) அணிந்த சிவபிரானை நோக்கிச் செய்த பெருந்தவத்தால், ஊர்கின்ற மிக்க நீரானது அருவியாயொழுகும் இமயாசலமன்னன் பெற்ற, குளிர்ந்து மதர்த்த விழிகளையுடைய மரகத நிறந்தங்கிய பசிய பிடியானை போன்ற (நடையினை வாய்ந்த) உமாபிராட்டியார் ஈன்றருளிய, தழைத்த மடல்போலுந் திருச்செவிகளையுடைய யானைமுக விநாயகப்பெருமானது அழகிய திருவடிகளே எனக்குப் புகலிடம். எ - று.

தக்ஷப்பிரசாபதியின் சாபத்தால் தன் கலைகள் குறைந்து பல தேவராலும் நீக்க முடியாது எஞ்சியவொரேகலையுடன் தம்மையடைந்த சந்திரனைச்சிரமிசை யணிந்து அஃதாங்கிருத்தலால் வளரவும் தக்ஷசாபத்தால் தேயவும் வரமளித்த வராகலிற்சிவபிரானை "குழவி வெண்பிறை மிலைச்சியோன்" என்றும், இமயாசலமன்னன் மலைவடிவாகலின் அதற்கியைய உமாபிராட்டியாரை "ஈன்ற மரகதப்பசும்பிடி" என்றும், விநாயகப்பெருமானைப் பிடிபயந்த என்றுங்குறிப்பாலும், அவரது உத்தமாங்கமாகிய சிரம் யானைவடிவாதலாலும் "தழைமடற்செவிந்தந்தி" என்றுங்கூறினர். இஃது உருவகவணி.

"முராரியாதிய தேவர்கண் முதலுறு முழுதுலகினிலுள்ளோர், விராவி யாதொரு காரியமாயினும் விளங்குறச் செயவென்றே, பராவி யுன்னருச் சனைசெய்வோர் மனத்துறு பான்மைதந் தருளுன்னன், பிராது செம்பவர் காரிய மூறுசெய் திடுதியென் றிவைசொன்னான்" எனும் விநாயகபுராணத்தின் படி முதற்கண்வணங்கப்படு கடவுள் விநாயகராதலின், இந்நூலாசிரியர் தாமெடுத்துக் கொண்டகாரியம் முட்டின்றி முடியக்கருதி இச்செய்யுள் கூறியதாம்.

பாயிரம்.

வாழ்த்து.

கலிநிலைத்துறை.

திங்க ளஞ்சடை யெம்பிரான் றிருவருள் பெருக
பொங்கு திங்கண்மும் மாரியும் பொழிகபூ தலத்தி
லெங்க ணாயகன் றிருக்குழாத் தொண்டரீ டேற
தங்கு நான்மறைச் சைவநூ லோங்கறந் தழைக.

(இ - ள்.) சந்திரனை யணிந்த அழகிய சடையையுடைய எமது சிவபிரான் திருவருள் பெருகுக. மிகுந்த மும்மாரி மாதந்தோறுஞ் சொரியக்கடவன. எங்களிறைவராகிய பரமேச்சுவரனது உண்மையடியார்கள் பூலோகத்தில் ஓங்குக. பொருந்திய நான்கு வேதங்களின் கருத்தாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்களிற் கூறப்பட்ட சிவபுண்ணியங்கள் தழையக்கடவன. எ - று.

சிவபிரான் திருவருட் பெருக்கத்தாலேயே மாதமும்மாரி பெய்தலும், அடியவர் ஈடேறுதலும், வேதசிவாகமதருமங்கள் செழித்தலும் உண்டாக வேண்டுதலின், அவ்வடைவுபெற இவ்வாழ்த்துக்கூறியதாம். (க)

மான வெண்குடை யிறைவன்செங் கோனெறி வளர்க
வேனை மன்பதை மன்னுயிர் சிறக்கவெஞ் ஞான்றும்
வான மீச்செலுங் கடவுள ரிருவரும் வாழ்க
பேன வார்திரை நெடுநிலப் பல்வளம் பெருக.

(இ - ள்.) மாட்சிமைபெற்ற சந்திரவட்டக் குடையின் கீழுளிலுள்ள மன்னவன் செங்கோல் முறைப்படி வளரக்கடவது. மற்றைய மனிதர்களும் நிலைபெற்ற சீவராசிகளும் சிறப்புறுக. எக்காலத்திலும் ஆகாயவழியே செல்லாநிற்குஞ் சூரிய சந்திரர் (எனும் பிரத்தியட்ச தேவர்) இருவரும் வாழக்கடவர். நுரைபொருந்திய நெடிய அலைகளையுடைய கடலாற் சூழப்பெற்ற பெரிய நிலவுலகத்திலுள்ள பல வளங்களும் அதிகமாகுக. எ - று.

பேனம் = நுரை. (உ)

கடவுள்வணக்கம்.

சிவபெருமான்.

விரவு மாயிரந் திருமுகப் பகிரதி விரிக்கு
முரவு வெண்டிரை யொருமருங் கலைப்பவொண் சடைமே
லரவ கன்பண மொடுக்குற வருநடம் புரியும்
பரம னங்கதப் பரிபுரப் பதம்பணி குதுமே.

(இ - ள்.) ஒளிபொருந்திய சடையின்மேல், ஆயிரந்திருமுகங்களையுடைய கங்கையானது பரவச்செய்யும் ஓசைபொருந்திய அலைகள் ஒரு பக்கத்தில் மோதவும், (அதைக் கண்டமாத்திரையே பயந்து) அச்சடையிற் பொருந்திய

சர்ப்பங்கள் படர்ந்த படங்களைச் சுருக்கிக்கொள்ளவும், அரிய ஆனந்ததாண்டவமியற்றியருளும் சிவபெருமானது சர்ப்பமாகிய சிலம்பணிந்த திருவடிகளைப் பணிவோம். எ - று.

அருநடமென்றது பஞ்சகிருத்தியங்களும் நிகழச்செய்யும் நடனமாதலின். இதனை "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற், சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமா, ஊன்று மலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி, நான்ற திருவடியி னாம்."— எனும் உண்மை விளக்கத்தானறிக. பகீரதனாற் கொண்டு வரப்பட்டதாகலிற் கங்கை பாகீரதி யெனப்பெயர் பெற்றது. (௩)

உமாதேவியார்.

உலகு மேருவு மண்டமு முறைமுறை யுதவி
யலகில் பல்லுயி ரளித்தவைக் களவையி னருளி
நிலவு வெண்பிறைச் சடிலமற் றோர்புடை நின்றுண்
மலர்சி லம்படி வழுத்துபு கருத்துற மதிப்பாம்.

(இ - ள்.) எல்லாவுலகங்களையும், மேரு முதலிய மலைகளையும், எண்ணிறந்த அண்டங்களையும் வழிவழியாகத்தந்து, குற்றமில்லாத பலவகைச் சீவராசிகளையுங் காத்து, அவற்றிற்கு (புண்ணிய பாவங்களின்) அளவாக (போகாதிகளை) அநுக்கிரகித்து, சந்திரிகை வீசும் வெள்ளியபிறைச் சந்திரனை யணிந்த சடையையுடைய சிவபெருமானது வாமபாகத்தில் விளங்கும் உமாதேவியாரது சிலம் பணிந்த மலர் போன்ற திருவடிகளைத் துதிசெய்து மனத்தில் தியானிப்போம். எ - று. (௪)

சுப்பிரமணியர்.

பூத்த கற்பகப் பொன்னுல கிமையவர்க் கிரங்கிக்
காத்த சேவகன் கடம்பணி பன்னிரு தடந்தோ
ளேத்த நாடொறுந் தழும்புமென் னாத்தட வரலாற்
சேத்த கிண்கிணிச் சீறடி சென்னிசேர்த் துதுமே.

(இ - ள்.) மலர்ந்த கற்பகச்சோலை புடைசூழ்ந்த பொன்னுலகவாசிகளாகிய தேவர்களுக்குத் திருவுளங்கனிந்து (அவர்க்குற்ற அசுரர் பயத்தினின்றுங்) காத்தருளிய தேவசேனாதிபதியாகிய குமாரக்கடவுளின் கடப்ப மலர் மாலை தரித்த விசாலமான பன்னிரு திருத்தோள்களையும் நாடோறுந் துதி செய்வதால், தழும் பேறுகின்ற நமது நாவின் ஊர்தலினால், சிவந்த கிண்கிணி மாலை யணிந்த அவ்விறைவரது சிறிய திருவடிகளைச் சிரசின்மேலிற் சேர்ப்போம்.

துதித்தலி னிமித்தம் திருவடிகள் நாவிற் குடி கொள்ளுதலின் இவ்வாறு கூறினர். தடவரலாற்சேத்த சீறடி எனவியையும். சிறு + அடி = சீறடி. ஆதி நீண்டது. இது சிற்றடியென்றும் வரும். (௫)

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

தெள்ள ருந்தமிழ் வேட்கையிற் செலுத்துமென் சிறியே
னுள்ள மோர்தொறுஞ் சுவைப்பன வுமைதிரு முலைப்பால்
வள்ளம் வாக்கினின் றாட்டிட மாந்திய காழிப்
பிள்ளை சீறடித் தாமரைக் காதலம் பிரசம்.

(இ - ள்.) உமாபிராட்டியார் தமது திருமுலைப்பாலினைப் பொன் வட்டிலிற் பெய்து (சிவஞானத்துடன் மட்டித்து) பருகுவிக்கப் பருகியருளிய, சீகாழிப்பதியில் திருவவதாரஞ் செய்தருளிய ஆளுடைய பிள்ளையாரது சிறிய அடியாகிய தாமரை மலரில் துளித்து விருப்பினைச்செய்யும் அழகியதேன், தெளிந்த அருமை தங்கிய தமிழ் வேதத்திருப்பாசுரங்களில் ஆசையாற் செலுத்தும் தாழ்ந்த சிறியேன் மனம் உணருந்தோறும் இனியாநிற்கும். எ - று.

காழியெனும் நாகம் பூசித்த தலமாகலின் அது சீகாழி யெனப்பெயரெய்தியது. அருந்தமிழென்றது அதன் அற்புதங்களை விளக்கி. (௬)

திருநாவுக்கரசு சுவாமிகள்.

முப்ப னைத்திற மூவரிற் காட்டியோர் முதலாய்க்
கப்ப னைத்துமா ருயிரெனக் கவைத்தரு வானோற்
கொப்ப னைத்திரு நாவினுக் கரசெனு மொருபே
ரப்ப னைத்தொழு தகற்றுது மும்மலத் தவலம்.

(இ - ள்.) முக்கிளைகளின் தன்மையை மும்மூர்த்திகளின் இயல்பால் விளக்கி, தானே மூலமாகி, அக்கிளைகளிற் கிளைக்கும் யாவும் அரிய உயிர்த்திறமாகக்கிளைத்த ஒரு தாரு [விருட்ச] ரூபமான பரமேசுவரனுக்கு உரிமையுடையவரும், திருநாவுக்கரசெனும் ஒப்பற்ற திருநாமத்தை வகித்தவருமாகிய அப்பர் சுவாமிகளைப்பணிந்து (ஆணவம் காமியம் மாயை யென்னும்) மும்மலத்தாலுண்டாகிய துன்பங்களை விலக்குவாம். எ - று.

மரமெனச் சிவபெருமானைக் கூறியதற்கேற்ப, முக்கிளையென மும்மூர்த்திகளையும், கப்பு என உயிர்களையும் இனம்பற்றி உருவகஞ் செய்துளர். கப்பனைத்தும் என்றது வளார் முதலிய அதன் சிற்றுறுப்புக்களை. (எ)

சுந்தரமூர்த்திசுவாமிகள்.

உரவு மென்னுளத் தறிகடிந் தொருவல தாகி
விரவு முத்தமிழ் மும்மதச் செருக்கொடு மேவுந்
தரவ ருங்களி மீக்கொளச் சங்கிலி யகற்றிப்
பரவை யிற்படிந் தாடுறு மொருதனிப் பகடு.

(இ - ள்.) சிவபெருமானாற் கொடுக்கப்பெற்ற சந்தோஷ மதிகரிக்க, சங்கிலியைப்பிரித்து, பரவையில் மூழ்கி இன்புற்ற ஒப்பற்ற சிறந்த ஆண்யானை [சுந்தரமூர்த்தி சுவாமிகள்] மிகவும் வலிய என திதயமாகிய கட்டுத்தறியை விட்டு நீங்காததாகி, கலந்துள்ள (இயலிசை நாடக மெனும்) முத்தமிழாகிய மும்மதத்தைச் சொரிந்துகொண்டு ஆநந்தித்திருக்கும். எ - று.

சங்கிலி - சங்கிலி நாச்சியார். பரவை - பரவை நாச்சியார். சுந்தரமூர்த்தி சுவாமிகளை யானை யென்றதற்கிணங்க, அதன் இயற்கையாகிய சங்கிலியகற்றலும் பரவையிற் படிதலும் தறியிற் கட்டுண்டு கிடத்தலும் மும்மதஞ் சொரிதலுங் காட்டிச்சிலேடைப் பொருட்படுத்தினர். இதுவும் உருவகம். (அ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

வரும்ப ரிக்கருள் வழுதிபாற் பொருடனை வரதன்
பெருந்து றைப்பணி விடைக்குரித் தாக்கிய பெருமான்
றிருந்து வாதவூர்ச் செம்மொழிப் புலவனைத் திருத்தாள்
பொருந்து மன்பினாற் போற்றிவைத் தநுதினம் புகழ்வாம்.

(இ - ள்.) குதிரைவாங்கி வரும்படி அரிமர்த்தன பாண்டியனளித்த பெருந்திரவியத்தை, திருப்பெருந்துறையில் சிவாலயத் திருப்பணிக்கு உபயோகித்ததலைவரும், திருவாத ஊரிற் றோன்றிய செவ்விய வாக்கினையுடையவருமாகிய மணிவாசகப் பெருமானை, அவர் திருவடிகளிலுண்டான உண்மையன்புடன் வணங்கி, மனத்திலிருத்தி நாடோறுந் துதி செய்வாம், எ - று.

இச்செய்யுளின் இறுதியடி "பொருந்தினோன்றனைப் போற்றி நம்புன்மை போக்குதுமே" என்றும்பாடமுண்டு. (௯)

அவையடக்கம்.

எழுப சும்பரி நுகம்பிணித் தியக்குவா னிரவி
மழைதொ டுஞ்சிகை வடவரை வலம்வர னோக்கி
யிழுதை மட்பரி யிசைப்பது போலுமற் றெளியேன்
முழுது ணர்ந்தவர் முன்னரின் மொழிதருந் துணிபே.

(இ - ள்.) பசிய எழுபுரவியை நுகத்திற் பூட்டிய தேரினை ஆகாயவழியிற் செலுத்துஞ் சூரியன், மேகமண்டலமளாவிய சிகரங்களையுடைய மகமேருவைப் பிரதக்ஷிணஞ் செய்வதைக்கண்டு, ஓரறிவில்லான் (தானும் அங்ஙனஞ்செய்ய அவாவி) மண்ணாற்செய்த குதிரையைத் தேரிற்கட்டுவது போலும், முத்தமிழ் முழுதுணர் புலவர் முன்னே, யானும் இப்புராணத்தைப் பாடவந்த துணிபு (இருக்குமன்றிப்பிறிதன்று), எ - று.

வடவரை - வடக்கின் கண்ணுள்ள மலை, மேரு.

எழுபரி - ஏழுகுதிரைகளென்றும், சப்தா என்னும் பெயரையுடையதொரு குதிரையென்றும் நூல்கள் மாறுபடக்கூறுகின்றன. (௧௦)

விளங்கு மாமணி மாசிடை மேவர வதனைத்
துளங்க வேகடி துரிசறுத் தடுக்குவா னதுபோ
லுளங்கொண் மேலவ ரென்கவிப் புன்மையோர்ந் தொதுக்கிக்
களங்க றுத்துமற் றெம்பிரான் கதையுணர்ந் துவப்பார்.

(இ - ள்.) ஒளி விடுகின்ற பெரிய இரத்தினத்தினிடையே குற்றமிருக்க, அதனை யொளிசெய்யும்படி [வேகடி] இரத்தினங்களின் மாசு தீர்ப்போன் அக்குற்றத்தைப்போக்கி அடுக்குவதுபோல, மதிக்கத்தக்க மேலோர்கள் அடியேன் பாடலிலுள்ள இழிதகைமையைத் தெரிந்து அவற்றை விலக்கித்திருத்தமாக்கி, எமது சிவபெருமான் சரிதையையுணர்ந்து களிப்பெய்துவார்கள். எ - று.

களங்கறுத்து = களங்கு + அறுத்து. (௧௧)

பாயிரமுற்றிற்று.

ஆக காப்பு உள்பட திருவிருத்தம் - ௧௨.

நூல்.

முதலாவது

கைலாசமான்மியச் சருக்கம்.

நைமிசாரணியச் சிறப்பு.

கலிநிலைத்துறை.

சேண்மதித்திரு முகத்தியர் காமமுந் தெருளாக்
கோண்மதிப்படு வெகுளியு மயக்கமுங் குறைத்தோர்
வாண்மதித்துறை மாதவத் தலைவரிற் பொலியு
நாண்மலர்ப்பொழிற் பொதும்பர்சூழ் நைமிசா ரணியம்.

(இ - ள்) புதியமலர்கள் பொருந்திய மரச்செறிவுகளமைந்த சோலை சூழ்ந்த நைமிசாரணியமானது, ஆகாயத்திற் சஞ்சரிக்கும் (பூர்ண) சந்திரன் போன்ற அழகிய முகத்தையுடைய மங்கையர்மையலும், குற்றமுள்ளமனதிற் றோன்றிய கோபமும், மயக்கமும் நீங்கி, ஒப்பற்ற ஞானப்பிரகாசத்தை நாடிய பெரிய தவத்தலைவர்கள் வாசத்தினால் விளங்கிக்கொண்டிருக்கும், எ - று.

காம வெகுளி மயக்கமெனு முக்குற்றமு நீங்கிய முனிபுங்கவர் வாசஸ்தான மென்பது கருத்து.

ஒரு காலத்தில் சவுநகாதி முனிவர்கள் பிரமதேவரையடைந்து தவம்புரிதற் குரிய புண்ணிய பூமியொன்றனை எங்களுக்குத் திருவாய்மலர்ந் தருளவேண்டு மெனப்பிரார்த்திக்க, பிரமதேவர் ஒரு தருப்பையைச் சக்கராகாரமாகச்சுருட்டி அதனை நிலத்திலுருட்டி அது தங்கிய பூமியே உங்களுக்குத் தகுந்த பூமியென விடுப்ப, அவர்கள் அதன் பின்னே சென்றுஅது தங்கிய விடத்தே நின்றனர். அதுவே நைமிசவனம். நேமி - சக்கரம். நேமி சம்பந்தம் நைமிசம். இது தத்திதாந்த நாமம். (க)

கலிவிருத்தம்.

அத்த லத்துவி சேட மரும்பொருண்
முத்த மிழ்த்துறை யிற்சொல முற்றுமோ
வெத்தி றத்தது வேனுமி யன்றவா
றுய்த்த சிந்தைய றிந்த துணர்த்துவாம்

(இ . ள்.) அத்தகைய நைமிசாரணியத்தின் விசேஷத்தையும், அங்குள்ள அரும்பொருள்களையும், முத்தமிழ்க்கவிகளாலும் (அளவிட்டுச்) சொல்லமுடிவு பெறுமோ ? எவ்வகைப்பட்ட சிறப்பினதாயினும் எம்மாற் கூடியவரையில், பொருந்திய மனத்தினால் அறிந்தவரையிற் சொல்லுகின்றோம். எ - று.

முத்தமிழ்வல்ல பேரறிஞர் யாவராயினுங் கூற எல்லையில தாகுமெனுங் குறிப்புணர்த்த "முத்தமிழ்த்துறையிற் சொல முற்றுமோ" எனக்கூறிய தன்றி, தாமே கூறலாகுமெனக் கல்விச்செருக்காற்கூறிய தெனல் அடாது. தெரிந்த வகையிற் கூறுதுமெனல்கருத்து. (உ)

முனிக ரும்பென நின்றவன் மொய்கணை
முனித ருந்தவ ரோம்புமு ழுங்கழன்
முனியெ ழும்புகை வானெறி முந்துறு
முனிவ ரங்கணி மைத்துற முற்றுமால்.

(இதன்பதப்பொருள்) கரும்பு - கரும்பை, முனி என நின்றவன் - வில்லாகக்கொண்ட மன்மதனுடைய, மொய்கணை - கூட்டமாகிய (தாமரை மா அசோகு முல்லை நீலமென்னும் ஐந்து) மலர்ப்பாணங்களை, முனிதரும் தவர் - கோபிக்கின்ற தவசிகள், ஓம்பு - வளர்க்கின்ற, முழங்கு அழல் - ஒலியோடு கூடிய யாகத்தீயினின்றும், மு(ன்)னி எழும்புகை - முற்பட்டுக்கிளம்பிய புகையானது, வான் நெறி முந்துறும் - ஆகாயவழியாகச் சஞ்சரிக்கின்ற, முனிவர் அம் கண் - முனிவர்களுடைய அழகிய கண்களை, இமைத்துற முற்றும் - இமை கொட்டும்படி (நிறைந்து) படரும். எ - று. (ங)

ஆக மங்க ளருமறை யாதிய
தாக மங்கல மாக்கொண் டறைதலா
லாக மங்கமெ னந்தணர்க் கார்வதி
யாக மங்கை பங்க னளிக்குமால.

(இ - ள்.) ஆகமங்கள் - (இருபத்தெட்டுச்) சிவாகமங்களும், அருமை மறை - அரிய வேதத்தையே, ஆதி ஆக - முதன்மையாகக்கொண்டு விளங்க, மங்கலம் ஆகக்கொண்டு அறைதலால் - (இவ்வுண்மையையறிந்து) மங்கலமாகக் கொண்டு (எக்காலத்தும்) ஓதுதலால், ஆகம் - (இவர்) திருமேனி (வேதமும்), அங்கம் - (இவர்) அவயவங்கள் (ஆகமங்களும் ஆம்), என் அந்தணர்க்கு - எனக் கூறப்படும் வேதியருக்கு, ஆர்வ தியாகம் - நிரம்பு வனவாகிய தியாகங்களை, அங்கை பங்கன் அளிக்கும் - உமாதேவியைப் பாகமாகவுடைய சிவபிரான் (எக்காலமும்) அநுக்கிரகிப்பர். எ - று. (ச)

வேழ மாவரை மேய விளம்பிடி
வேழ மாவரை மேய விளம்புவார்
வாழி முற்றவ மாதவ யோகுசெய்
வாழி முற்றவ மாதவ யோகரே.

(இ - ள்.) வேழம் - கரும்பையும். மா - மாந்தளிரையும், வரை - மூங்கிலையும், மேய - விரும்பிய, இளமை பிடி - இளமைதங்கிய [பிடி] பெண்யானைகளையும், வேழம் - ஆண்யானைகளையும், மா வரை மேய - பெரிய மலைகளில் மேயும்படி, வாழிமுற்ற-மங்கல முதிர, தவயோகுசெய் - தவயோகம் புரிகின்ற, முன் தவம் - பண்டைத்தவமுடைய, மாதவ யோகர் - பெருமைபொருந்திய, மிக்க மேன்மையுடைய முனிவர்கள், விளம்புவார் - கட்டளை செய்வார்கள்.

மூன்றும் அடியில் அம்மாவெனும் வியப்பிடைச்சொல் இடைகுறைந்து அமா என நின்றது. நான்காம் அடியில் வாழி ஏ அசைச்சொற்கள்.

விலங்குகளும் முனிவர்கட்டளை வழி நிற்கும் என்பது கருத்து. (௫)

விரத மேலவ ராவையின் மேவிய
விரத மேலவ ராவையின் மேவுவார்
வரத ருப்பைத ருவன மந்தியே
வரத ருப்பைத ருவன மந்தியே.

(இ - ள்) விரதம் மேலவர்-விரதானுஷ்டானத்தை மேற்கொண்ட முனிவர்கள், ஆவயின் மேவிய - (அவ்விரத முடிவில் விண்ணுலகினின்றும்) அங்கடைந்த, இரதம் மேல் வரா - இரதத்தின்மீதூர்ந்து சென்று, ஐயின் மேவுவார் - தலைமை பெற்றுப் பொருந்துவார்கள். வர தரு - சிறந்த விருக்ஷங்கள், பை தரு வனம் - அழகைத் தரும் அவ்வனத்திலே, மந்தி - குரங்குகள், தருப்பை - (மறுதினத்திற்குவேண்டிய) தருப்பையை, அந்தியே வர - (முதற்றினத்தின்) அந்தியிலேயே வந்துசேர, தருவன - (கொய்து கொண்டுவந்து) தருவன. எ - று.

வயின் - ஏழனுருபு. இது வையின் எனப்போலியாகியது. அ+வயின்= ஆவயின். சுட்டு நீண்டது. (௬)

ஊறு மாமறை யோதிய தத்தையே
யூறு மாமறை யோதிய தத்தையே
நாறு பூமலர் நந்தவ னங்களே
நாறு பூமலர் நந்தவ னங்களே.

(இ - ள்.) ஊறும் மாமறை- பெருகுதலுடைய சிறந்த வேதத்தை, ஓதிய - உணர்ந்த, தத்தை-கிளிப்பிள்ளை, உறும்-தான்வசிக்கின்ற, மா - மாமரத்திலே, மறை - மறைந்து நின்று, ஓதியது அத்தையே - அவ்வேதத்தினையே ஓதுவதாம், நாறு பூ மலர் - மணங்கமழும் மலர்கள் விகசித்த, நந்தவனங்கள் - நந்தவனங்களிலே, நாறு பூ - தோன்றிய (நல) இடங்களிலுள்ள, வனங்கள் - ஜலங்கள், மலர் - விரிந்த, நந்து - சங்குகளையுடையனவாம். எ - று.

இரண்டாம் அடியில் ஊறுமென்பது உறுமென்பதன் நீட்டல். இது எதுகை நோக்கியும் யமகநோக்கியும் நிகழ்ந்தது.

நாறுதல் - முளைத்தல். ஈண்டுத் தோன்றல். (௭)

மெய்த்த வத்தர் விளம்பின மென்கிளி
மெய்த்த வப்பொரு ளன்றி விளம்புவ
கைத்த சிந்தைய ரோதிய காவியங்
கைத்த டஞ்சினைப் பூவை கழறுவ.

(இ - ள்) மெய் தவத்தர் - உடலளவாகிய தவத்தையுடைய முனிவர்கள், விளம்பின - பேசிய வேதப்பொருளை, மென்கிளி - மென்மைதங்கிய மதலைச் சொல்லையுடைய கிளிகள், மெய்த்த அ பொருள் இன்றி - உண்மையாகிய அப்பொருள் (அருமையை நோக்குதல்) இல்லாமல் [இலேசாக], விளம்புவ - (சொன்மாத்திரையாகப்பொருளுணராது) சொல்லுவன. கைத்த - (பந்தங்களையெல்லாம்) வெறுத்த, சிந்தையர் - மனதையுடைய தவசிகள், ஓதிய காவியம் - ஓதிய காவியங்களை, கைதடம் சினை - கைபோலும் விசாலித்த மரக்கிளைகளிலுள்ள, பூவை - நாகணவாய்ப் புட்கள், கழறுவ - சொல்லுவன. எ - று.

மெய்த்தவத்தர் - தாங்கொண்டதவம் முடிவின்றி உடல்நீங்கெல்லையுங் கொண்டோர். அல்லது. தவத்தின்கண்ணே ஒருப்பட்டமனமுடைய ரெனக் கொண்டு தவத்து மெய்யரெனச் சொல்வகை செய்யினும் பொருந்தும். (அ)

உழைம றிக்குல மொள்ளுகிர் வெம்புலி
யுழைம டிப்பய முண்டு களிப்பன
விழைபு லிப்பெடை மென்பறழ் நவ்விய
விழைசு ரைப்பய மேயினி தாடுமால்.

(இ - ள்.) உழை மறி குலம் - மான் குட்டியின் தொகுதிகள், ஒள் உகிர் வெம் புலி - ஒளிபொருந்திய நகத்தையுடைய கொடிய புலிகளின், மடியுழை பயம் - மடியிலுள்ள பாலை, உண்டு களிப்பன - பருகிச்சந்தோஷிப்பன. புலி பெடை - பெண்புலிகளின், விழை மெல் பறழ் - விரும்பத்தக்க மெல்லிய குட்டிகள், நவ்விய - மானினுடைய, இழை சுரை - இழைதலோடுகூடிய முலையிலுள்ள, பயம் மேய் - பாலைக்குடித்து, இனிது ஆடும் - இனிமையாக அவ்விடத்தில் விளையாடும். எ - று.

இழைத லென்றது பால் சுரந்து மடிபூரித்திருத்தலால் அசையில் உராய்தலை. உழை - மான். மறி - மானிலோர் பிரிவு. (௯)

மன்ற னாறுகோ டீர மதுமலர்க்
கொன்றை யேந்திக் கொடியிடந் தாங்கலா
லன்றொ ரேனமு மன்னமு நேடுவா
னின்ற முக்க ணிமலனை யொக்குமால்.

(இ - ள்) மன்றல் நாறு கோடு - வாசம் வீசும் மலையின் சிகரங்கள், ஈரம் மது மலர் கொன்றை ஏந்தி - குளிர்ச்சி தங்கிய தேனைச் சொரியும் மலர்களையுடைய கொன்றையை (முடியில்) ஏற்று, கொடி இடம் தாங்கலால் - கொடியைத்தம்மிடத்தே கொண்டு நிற்றலால், அன்று - முற்காலத்தில், ஓர் ஏனமும் அன்னமும் - ஒப்பற்ற (திருமாலாகிய) பன்றியும், (பிரமதேவராகிய) அன்னமும், நேடுவான் நின்ற - (முறையே திருவடியையும் திருமுடியையும்) தேடும்படி (சோதிமலை வடிவாக) விளங்கிய, முக்கண் நிமலனை ஒக்கும் - (சூரிய சோமாக்கினிகளை) திரிநேத்திரங்களாக வுடைய மல ரகிதரான சிவபிரானை யொத்திருந்தன. எ - று.

கோடீரமென ஒரு சொல்லாகக்கொண்டு சடையென்றும், கொடியென்பதைக் கொடிபோலும் இடையையுடைய உமாபிராட்டி யென்றுங் கொண்டு சிலேடை காண்க. (௧௦)

கலிநிலைத்துறை.

அனைய மாதவத் துறையுளி னருந்தவத் தலைவர்
வினையி னீங்கிய சூதனை வரன்முறை வினவி
யெனைய கேட்டுழிக் கேள்வியி னுணர்ந்தது திருந்த
நினைவி னீதியி னொருங்குற வுணர்குவா னினைந்தார்.

(இ - ள்) அத்தகைய பெருந்தவத்திற் கிடமான நைமிசாரணியத்தில் வசிக்குந் தவமுதியோர் யாவரும், இருவினைத்தொடக்கினின் றகன்ற சூத முனிவரிடத்தில் தாங்கள் வரன்முறையாகக் கேட்கையில், கேட்டு முடியாதனவாக இருந்தவை யெவையோ, அவற்றைக் கிரமமாக முழுவதும் அறிந்துகொள்ள மனதிற்கருதினார்கள். எ - று.

கேட்டு முடிந்தவை - சம்பவ காண்டமுதலிய ஆறும், இனிக்கேளாது நிற்பது இவ்வுபதேசகாண்டமேயாம். இது மேற் செய்யுளால் விளங்கும். (௧௧)

துரிச றுத்துநின் றியற்றிய வருந்தவச் சூத
வரிய சம்பவ காண்டமே முதலிய வாறுந்
தெரிய வெமாக்குணர்த் தினை மற்றது தெரிப்பான்
பரியு நெஞ்சினே நின்னல தியாவரோ பகர்வார்.

(இ - ள்.) (காமவெகுளி மயக்கங்களாகிய) குற்றத்தை விலக்கி (நன்னெறியில்) நின்று முடித்த அரியதவத்தையுடைய சூதமுனிவரே! அருமையாகிய [சம்பவ] உற்பத்திகாண்ட முதலாகிய ஆறு காண்டங்களையும் உணர்ந்து கொள்ளும்படி எங்களுக்குத் தெரிவித்தீர். (அவற்றின் பின்னுள்ளதாகிய) உபதேசகாண்டத்தையும் தெரிவிக்கும்படி விரும்பிய எண்ணமுடையோம். தேவரீரை யன்றி வேறெவர்தாஞ் சொல்லவல்லவர். எ - று. (௧௨)

வான ளந்தெழு வடவரை மேருவின் வடபான்
மேனி வந்தெழு மண்டபித் திகைப்பட மேவி
யான மாபெருங் கயிலையொன் றுளதென வறைந்தாய்
ஞான நாதவக் கிரிவள மறிகுவா னயந்தேம்.

(இ - ள்.) ஆகாய மளாவியுயர்ந்த வடக்கின்கண்ணுள்ள மலையாகிய மேருவின் வடதிசையில், மேலோங்கியுயர்ந்த அண்டச்சுவர்படும்படி பொருந்தி, பெருமைபெற்ற மகாகைலாய மொன்றுள்ளதென்று திருவாய்மலர்ந்தருளினீர். ஞானநாயகரே! அக்கைலாய மலையின் சிறப்புக்களைத் தெரிந்துகொள்ள விரும்பினோம். எ - று. (௧௩)

அன்ன மாபெருங் கயிலையி னகற்சியு நிவப்பு
மன்னு திண்கிரி வளங்களு மவணுறை வனப்பு
மின்ன வாகுமென் றிசைத்தரு ளெனவவ ரிசைப்பப்
பன்னு மாதவக் கொழுந்தவர்க் கின்னன பகரும்.

(இ - ள்.) அப்படிப்பட்ட பெருமைதங்கிய பெரிய கைலாயகிரியின் அகலமும் உயரமும், அம்மலையில் நிலையாயுள்ளவளப்பங்களும், அங்குள்ள அலங்காரங்களும் இத்தகையன வெனக்கூறியருளவேண்டுமென, அந்நைமிசாரணிய முனிவர்கள் வேண்டிக்கொள்ள, துதிக்கத்தக்க பெருந்தவக் கொழுந்துபோன்ற சூதமுனிவர் அவர்கட்கு இவ்வாறு சொல்லலாயினர். எ - று.

கைலாயச்சிறப்பு.

வயங்கு நெட்டிலை வேற்படை மாமயிற் பெருமா
னுயங்கு மாதவக் குறுமுனிக் குரைத்தனன் மேனூண்
முயங்கு மக்கிரிப் பெருமையை யறிந்தன மொழிவா
மியங்கு வெண்பிறைக் கண்ணியோற் கினிதுறு மிருக்கை.

(இ - ள்.) உலாவுகின்ற வெள்ளிய பிறைச்சந்திரனை மாலையாகக்கொண்ட சிவபெருமானுக்கு இனிய வாசஸ்தான மாகப்பொருந்திய அம்மகாகைலாயத்தின் சிறப்பை, விளங்குகின்ற நெடிய இலைவடிவமைந்த வேலாயுத மேந்திய சிறந்தமயில்வாகனக்கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமான், மிகுந்ததவத்தை வருந்திச்செய்த அகத்தியமுனிவருக்குப் பூர்வத்தில் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அவற்றில் யாமறிந்தமட்டிற் சொல்லுவோம். எ - று.

குறுமுனி - குறுகியவடிவுடையமுனிவர். குருமுனியெனப் பாடமாயின் செந்தமிழ் மொழிக்குக் குருவாயிருந்த முனியெனப் பொருள்கொள்க.

இளைய பிள்ளையாரே பூர்வம் திருவாய்மலர்ந்தருளிய சிறப்பினதாதலின், அதனைமுற்றும் தாம்கூறவல்லரல்லரொன்றுணர்த்தியவாறு "அறிந்தன" என அவற்றுட்சிறிதினைச் சொல்வோமெனக் குறிப்பினுணர்த்தினர். (௧௫)

மாகணங்களும் புனிதரும் வரன்முறை வணங்க
வேகநாயக னினிதுறு வடபெருங் கயிலை
மீகொள் யோசனை நாற்பது கோடிமே னிவந்த
தாக யோசனை யதிற்படும் பாதியி னகற்சி.

(இ - ள்.) பெருமை பொருந்திய சிவகணங்களும் (பரிசுத்தராகிய முனிவர்களும் முறைப்படி வணங்க, ஏகநாயகனாகிய சிவபெருமான் இனிமையாக எழுந்தருளியிருக்கும் வடதிசையிலுள்ள அம்மகாகைலாய மலையானது, அளவிலுயர்ந்த நாற்பதுகோடி யோசனைதூரம் மேலுயர்ந்தது. அகலமானது அதிற்பாதி [இருபதுகோடி யோசனை] யாகும். எ - று.

ஏகநாயகன் - தனக்குமேல் நாயகனில்லாதவன். மகாதேவன். (௧௬)

தெய்வ மால்வரை மீப்பொலி நெடுமுடிச் சிகரம்
பொய்யில் கேள்வியர் புலமையி னளப்பினும் புலவா
வெய்ய வார்குலக் கொடுமுடி நடுவுற விளங்கிச்
செய்ய பன்மணிக் காந்திவிட் டெறிப்பதோர் சிகரம்.

(இ - ள்.) தெய்வீகமமைந்த அம்மகாகைலாயத்தின் நெடிய உச்சியிலுள்ள சிகரங்கள், உண்மையறிவுடையவர்கள் தம்முடைய அறிவினாலே அளவிட்டுச்சொன்னாலும் அளவுக்கடங்காதன. மிகநீண்ட அக்கொடுமுடித் தொகுதிகளினிடையே உயர்ந்திருப்பது, செப்பமான பலவகை இரத்தின வொளியை வீசும் ஓர் சிகரம். எ - று. (௧௭)

பத்துக் கோடியோ சனையகன் றுளதது பாங்க
ரொத்துக் கோடிய தின்றிநான் மதிலொழுங் குடைத்தாய
வைத்துக் கோடிய மரகதக் கொடுங்கையால் வயங்குஞ்
சத்துக் கோடியா வதிந்தபொன் மாளிகைச் சயிலம்.

(இ - ள்.) பத்துக்கோடியோசனை அகலமுற்றுள்ளது. அதன்பக்கலில் நான்குமதில்கள் ஒரேதன்மையாய் வேறுபாடின்றி ஒழுங்கமைந்து, மரகதத்தால் வளைந்த கொடுங்கைகள் செய்யப்பட்டு விளங்குஞ்சிகரம். அதுவே கணக்கிறந்த பெரியோர் வசிக்கும் பொன்மாளிகைகளையுடையது. எ - று. (௧௮)

ஒழுகு நீண்மதி லுடுத்தவச் சிகரத்தி னுச்சி
தழுவு ஞானரூ பப்பெருந் தனித்திருக் கோயின்
முழுது கோடியோ சனையுள முழுமணித் தவிசி
னெழுதி முற்றுருச் சதாசிவ மினிதுவீற் றிருக்கும்.

(இ - ள்.) மீதுயர்ந்த நெடியமதில்களாற் சூழப்பட்ட அச்சிகரத்துச்சியிலிருக்கும் ஞானரூபமுடைய பெரிய ஒப்பற்றதிருக்கோயிலில், குறைவில்லாத கோடியோசனை விசாலமான முழுமணிகளாலிழைக்கப்பெற்றபீடத்தில், எழுதி முடியாத (திருவுருவமைந்த) சதாசிவப்பெருமான் இனிமையாக வீற்றிருந்தருள்வர். எ - று.

"எழுதிமுற்றுரு" என்றது; உலகமே திருமேனியாதலின். (௧௯)

மூல மீறிடை யென்பன மும்மையுங் கடந்து
கால நீடிய கணக்கறு கற்பனை கழிந்து
ஞால மேமுதற் பூதங்கள் யாவையு நல்கி
வால சூரிய ரளவொழிந் திமைத்தல்போல் வயங்கும்.

(இ - ள்.) அப்பெருமான், ஆதி மத்தி அந்தமென்னும் மூன்றையுங் கடந்து காலங்கள் கழியக்கணக்கில்லாத கற்பனைகளையுங் கடந்து, பிருதிவி முதலிய ஐம்பூதங்களையும் பிறதத்துவங்களையும் சிருஷ்டித்து, இளஞ்சூரியர்கள் கணக்கில்லாதவர்கள் (ஒருகாலத்தில்) பிரகாசிப்பதுபோல வீற்றிருந்தருள்வர். எ - று.

வெளிவி ளைந்தருள் பழுத்துமே லெவற்றிற்கு மேலாய்க்
களிவி ளைந்துகாண் பரிதெனக் கட்புலங் கதுவா
தளிவி ளைந்தபே ரடியவர்க் கருளிஞ் ஞனந்த
வொளிவி ளைந்தெழு முகங்களை யைந்துபெற் றுளதால்.

(இ - ள்.) வியாபகரூபமாகிய பரசிவத்தினின்றும் (அச்சதாசிவப் பெருமான்) திருவுருக்கொண்டு திருவருள்மிகுந்து பழமையான பொருள்கட்கெல்லாம் பழமையான பொருளாய், செருக்குற்றுக்காண்டற்கரும் பொருளாய், கட்புலனுக்குப்புலப்படாது மறைந்து, பேரன்பு மிகுந்த உண்மையடியார்கட்குக்கருணையுடனே சிதானந்த ரூபமாய் விளங்கி நிற்கும் (ஈசானாதி) பஞ்ச முகங்களோடு இலகுவர். எ - று.

"ஒளிவிளைந்தெழு முகங்களையைந்து பெற்று" என்பதை முகங்கள் ஐயைந்து எனக்கொள்ளாது, ஐந்து முகங்களை யெனக்கூட்டுக. அன்றேல் ஐயைந்து முகங்கள் மஹாசதாசிவனுக்காமாதலின் இங்கே மேலைச்செய்யுளில் "திருக்கரங்களோர்பத்து" என்பதற்கியையாதுநிற்கும்.

ஐந்துமுகங்கள்:—ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோஜாத மென்பன. (உக)

திருக்க ரங்களோர் பத்தினிற் சிறந்தது சிவணி
முருக்கு முத்தலைச் சூலமே முதலிய தாங்கி
யுருத்தி ரப்பெருங் கணங்களோ டுறைந்துயிர்க் குதவி
யருத்தி கூர்தரப் பஞ்சசத் திகட்கினி தருளும்.

(இ - ள்.) திருக்கரங்கள் பத்திலும் உயர்ச்சித்தன்மைகளமைந்து (எவற்றையும்) அழிக்கத்தக்க முத்தலைகளையுடைய சூலாயுத முதலியவற்றையேற்று, பெரிய உருத்திரகணங்களுக்கிடையே பொருந்தி ஆன்மகோடிகளுக்கு அநுக்கிரகித்து ஆசைமீக்கூர, பஞ்சசத்திகளுக்கும் இனிதாக அநுக்கிரகஞ்செய்வர்.

பஞ்சசத்திகள் - பராசத்தி ஆதிசத்தி இச்சாசத்தி ஞானசத்தி கிரியாசத்தி. அவற்றுட் பராசத்தி பரமசிவத்தில் ஆயிரத்தொருகூறுகொண்டது. ஆதிசத்தி பராசத்தியில் ஆயிரத்தொருகூறுகொண்டது. இச்சாசத்தி ஆதிசத்தியில் ஆயிரத்தொருகூறுகொண்டது. ஞானசத்தி இச்சாசத்தியில் ஆயிரத்தொருகூறுகொண்டது. கிரியாசத்தி ஞானசத்தியில் ஆயிரத்தொருகூறு கொண்டது. (உஉ)

அப்பெ ரும்பொரு ளுறைசிக ரத்தினுக் கயல்கு
ழொப்ப ருஞ்சிக ரங்கள்பன் னொன்றுள வுயர்சி

மூப்பெ ருந்தலை வர்க்குமெட் டாதன மொழியிற்
கப்பி ளங்கதி ரொளியெறி சூரிய காந்தம்.

(இ - ள்.) அந்தப் பெரும்பொருளாகிய சதாசிவமூர்த்தி எழுந்தருளியிருக்குஞ் சிகரத்தினருகே சூழ்ந்துள்ள ஒப்பில்லாத சிகரங்கள் பதினொன்றுள்ளன. அவற்றின் உயர்ச்சி, திரிமூர்த்திகளாலுஞ் சொல்லமுடியாது. அச்சிகரங்கள் ஒன்றுகூடிய பால சூரியர்களின் ஒளியை வீசுஞ் சூரியகாந்தக் கற்களாலமைந்தன. எ - று. (உரு)

பருதி காந்தமென் றுரைத்திடு பன்னொரு சிகரத்
துருகு காதலி னுருத்திர ரினிதுறைந் துவப்பா
ரருகு சூழ்ந்துநூற் றெட்டுள கொடுமுடி யவைதாங்
கருகி ருட்படாந் தொலைத்தெறி சந்திர காந்தம்.

(இ - ள்.) சூரியகாந்தமெனப்பட்ட அந்தப்பதினொரு சிகரங்களில், உருகுகின்ற அன்புடைய (ஏகாதச) ருத்திரர்கள் இனிமையாகக் களித்து வசிப்பர். அவற்றருகே சூழ்ந்து நூற்றெட்டுக் கொடுமுடிகளுள்ளன. அவையாவும் கருகிய இருட்டொகுதியை விலக்கி ஒளிசெய்யுஞ் சந்திரகாந்தத்தாலானவை.

ஏகாதசருத்திரர்:—மகாதேவர் ஹரர் உருத்திரர் சங்கரர் நீலலோகிதர் ஈசானர் விஜயர் வீமதேவர் பவோற்பவர் கபாலி தேவதேவரெனப்படுவர். (உச)

ஆங்க வற்றினைம் பத்தொரு சத்திக ளருநூ
லோங்கு சிந்தைய ரெம்பிரா னுருவுகொண் டுடையோ
ரோங்கு சிற்றிடைக் கொடிநவ சத்திகளினையோர்
பாங்க மர்ந்தருட் சதாசிவங் கருத்துறப் பணிவார்.

(இ - ள்.) அந்த நூற்றெட்டுக் கொடுமுடிகளில் ஐம்பத்தொரு சத்திகளும், அரிய நூலாராய்ச்சியா லுயர்ந்த சிந்தையராகிச் சிவசரூபமுற்றவர்களும் (தனபாரம் பொறாது) துவளுகின்ற கொடிபோலும் சிறிய இடையினையுடைய நவசத்திகளும் ஆகிய இத்தன்மையர், சதாசிவப் பெருமான் பக்கலிற் பொருந்தி மனமியைந்து வணங்குவார்கள், எ - று. (உரு)

இவற்றை முற்றிய வாயிரத் தொருமுடி யென்ப
வவற்றை யோதுறி னழலொளி யிமைத்துநின் றவிர்வ
தவத்த ரும்பெருந் தாண்டவஞ் சத்தகோ டிகளாய்க்
கவர்ச்செய் மந்திர முருவு கொண்டிருப்பன கருதில்.

(இ - ள்.) இந்த நூற்றெட்டுக் கொடிமுடிகளைச் சுற்றிலும் ஆயிரத்தொரு கொடுமுடிகளிருக்கின்றன. அவற்றைச் சொன்னால் தீயொளிவீசிக்கொண்டு பிரகாசிப்பன. ஆலோசிக்குமிடத்தில், அவற்றுள் அருமையுடன் பெருமை தங்கிய தாண்டவங்களும் சத்தகோடிகளாகப் பிரிந்துள்ள மந்திரங்களும் தமது தவத்தினால் திருவுருக்கொண்டு வீற்றிருக்கின்றன. எ - று.

சத்தகோடி - ஏழுகோடி. கோடி - முடிவு. (உசு)

அனைய சூழ்தரு முடிபதி னாயிரத் தொன்று
நினையி னன்னவை படிகமற் றுங்கவ ணெடுங்கைக்
கனைம தக்கரி முகவனு முருகனுங் கருணை
வினைசெய் மூவருஞ் சாத்தனுங் கணங்களும் விரவி

(இ - ள்.) அவ்வாயிரத்தெட்டுக் கொடுமுடிகளைச் சூழ்ந்திருக்குங் கொடுமுடிகள் பதினாயிரத்தொன்று. உணருமிடத்தில் அவையாவும் படிகத்தாலாயின. அவற்றில், நெடிய துதிக்கையுடனே ஒலிக்கின்ற மதஞ்சொரியும் யானை முகமுடைய விநாயகக் கடவுளும், முருகக்கடவுளும், கிருபையுடன் முத்தொழிலியற்றும் மும்மூர்த்திகளும், அரியர புத்திரனும், சிவகணங்களுஞ் சேர்ந்திருக்க, எ - று.

இது முதலிரண்டு செய்யுள்கள் குளகம். "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்" என்பது சூத்திரம். வாவி - வினையெச்சத்திரிபு. (உஎ)

நவையொ ழித்தருள் வயிரவ னந்திபிங் கிருடி
சிவகு மாரருங் காளருந் தேனுவும் விடையு
மிவர்கொ டும்படைத் துர்க்கையுஞ் சத்திகள் யாருந்
தவமு யற்சியி னினிதிருந் தப்பதஞ் சரிப்பார்

(இ - ள்.) குற்றங்களை விலக்கிக் கருணைபுரியும் வயிரவரும், நந்திதேவரும், பிங்கிருடியும், சிவ குமாரர்களும், மகாகாளரும், காமதேனுவும், தருமவிடையும் எழுச்சியுடைய கொடிய ஆயுதங்களைத் தரித்ததுர்க்கையும், எல்லாச் சத்திகளும், தவமுயற்சியோடு இனிமையாக அப்பதவியில்வீற்றிருந்து வாழ்வார்கள்.

சிவ குமாரர்கள் தொகையால் நாற்பத்தெண்ணாயிரவர், இவர் தாருவன முனிமங்கையர், பிக்ஷாடனராகவந்த பெருமானைக் காமுற்றுப் பெற்ற புத்திரர். இவர்களெல்லாரு மிருஷிகள். (உஅ)

இலக்க மொன்றுபெற் றுடையன கொடுமுடி யிவைசூழ்ந்
துலப்பி லாமணி மயத்தவாய்க் கடுங்கதி ருமிழ்வ
நிலைத்த மேற்றிசை நாரணர் கோடியர் நிறைவார்
மலத்தி னீங்குவார் தனிமுதற் சிற்பரம் வணங்கி.

(இ - ள்.) இந்த ஆயிரத்தொரு கொடுமுடிகளைச் சூழ்ந்து இலட்சத்தொரு கொடுமுடிகள் கெடுதலில்லாத இரத்தின மயமுடையனவாய்ச் சிறந்த கிரணங்களைச் சிந்துவன. அவற்றின் மேற்றிசையிலே, கோடிவிஷ்ணு மூர்த்திகள் (ஆணவாதி) மலபந்த நீங்கவேண்டியவர்களாய், ஞானரூபமாய் எல்லாவற்றிற்கும் முதற்பொருளாகிய ஒப்பற்ற சிவபெருமானை வணங்கிக்கொண்டு நிறைந்திருப்பார்கள். எ - று. (உகூ)

உத்த ரத்தன கொடுமுடி யுச்சியி னொருவார்
முத்தி வேண்டுவ ரளவறு முழுமுதற் பிரம
ரித்த ரத்தன கொடுமுடி கீழ்த்திசை யிவற்றி
லத்த னைத்தொழு தளவறு மிந்திர ரமைவார்.

(இ-ள்.) (இன்னும்) வடபக்கலிலுள்ள கொடுமுடிகளின் சிகரத்தில், முதன்மைவகித்த அளவிடப்படாத தொகையினராகிய தர்மதேவர்கள் நீங்காதவர்களாயிருந்து முத்தியைவிரும்பி வசிப்பார்கள். கீழ்ப்பக்கலிலும் இவ்வளவினதான கொடுமுடிகளிருக்கின்றன. இவற்றில் எண்ணிறந்த இந்திரர்கள் பரிசுத்தனான சிவபெருமானை வணங்கி வசிப்பார்கள். எ - று. (௩0)

தென்பு லத்துறை கொடுமுடி நெடுமுடிச் சிகரத்
தென்பு ருக்கிய கணங்களு மிருடிகள் யாரு

மன்புருக்கிட வுருகிய கருத்தின ராகித்
துன்புறுத்துநின் றருமறைத் தலைவனைத் தொழுவார்.

(இ - ள்.) தென்பக்கலிலுள்ள கொடுமுடிகளின் நீண்ட உச்சியில் என்புநெக்குருகிய சிவகணநாதர்களும் இருடிகளெல்லாரும் அன்பானது உருக்க உருகிய உள்ளமுடையவராய்த் துன்பத்தையொழித்து நின்று அரிய வேதங்கட்கிறைவராகிய சிவபெருமானை வணங்குவார்கள். எ - று. (௩௧)

ஒன்று பத்திலக் கத்துட னைவமருங் குடுத்துப்
பொன்றி கழ்ந்திடுங் கொடுமுடி யாங்கவை பொருந்தக்
கன்று பூதசே னைதிப ருருத்திர கணங்கள்
சென்ற சித்தர்வித் தியாதரர் கருடர்கந் தருவர்.

(இ - ள்.) பதினொரிலட்சமென்னுந் தொகையுடன் பொன்மயமான கொடுமுடிகள் அக்கொடுமுடிகளின் பக்கலிலே சூழ்ந்துவிளங்கும். அவற்றில் பொருந்தும்படி கோபிக்கின்ற பூதகணநாதர்களும், உருத்திரகணங்களும், உயர்ந்தசித்தர்களும், வித்தியாதரர்களும், கந்தர்வர்களும். எ - று.

இதுமுதல் இரண்டுபாடல்கள் குளகம். (௩௨)

சூல மேமுதற் கருவியுஞ் சுரபியு மணியுங்
கால மோர்ந்தரு ணிதிகளுங் கற்பக தருவு
மேல வார்குழற் கணிகைய ரீட்டமு மெம்மான்
சாலு மோருருத் தரித்தவர் யாவருஞ் சரிப்பார்.

(இ - ள்.) சூலமுதலிய ஆயுதங்களும், காமதேனுவும், சிந்தாமணியும், காலமறிந்து உதவுகின்ற (சங்கநிதி பதுமநிதி யெனும் இரு) நிதிகளும், கற்பக விருக்ஷமும், பரிமளங்கமழ்ந்து நெடுகியிருக்குங் கூந்தலையுடைய உருத்திரகணிகையர்கூட்டமும், எமது சிவபெருமானது சாரூபமடைந்தவர்களும் ஆகிய எல்லோரும் வாசஞ்செய்வார்கள். எ - று. (௩௩)

இன்ன தன்மைய கொடுமுடிக் கீழ்வளைந் திருப்ப
மின்னு வெள்ளியங் கொடுமுடி யவற்றினை விரிக்கின்
மன்னு கோடியு மொன்றுமாய் வயங்கொளி மடுப்ப
வன்ன வற்றிடைச் சரிப்பன வரன்முறை யறைவாம்.

(இ - ள்.) இத்தகையினவாகிய கொடுமுடிகளுக்குக் கீழே பிரகாசிக்கின்ற வெள்ளிக்கொடுமுடிகள் சூழ்ந்துள்ளன. அவற்றின் சிறப்பை விளக்கிச் சொல்லுகையில்,ஒருகோடியு மொன்றுமாகப் பிரகாசிக்கும். அவற்றில் வசிப்பனவற்றை முறையே சொல்லுவோம். எ - று. (௩௪)

வெள்ளை வாரண மோரிரண் டாயிரம் வியப்பி
னுள்ள மோர்வரும் பிரணவத் துருவுகொண் டுறைவ
தெள்ளு நான்மறை யுருவுகொண் டுளபரித் திரள்க
ளெள்ள ருஞ்சது முகற்குமோர் கணக்கள விறந்த.

(இ - ள்.) ஈராயிரம் வெள்ளையானைகள் வியந்து மனதாலறிதற்கும் அருமையாகிய பிரணவ வடிவங்கொண்டு வசிக்கும். தெளிந்த நான்கு வேதங்களின் உருவமைந்த குதிரைத்தொகுதிகள் இழிவற்ற பிரமதேவனுக்கும் எண்ணிக்கை செய்யத்தக்க கணக்கைக் கடந்தன. எ - று. (௩௫)

ஒற்றைத் தாளின மூன்றுடைத் தாளின வுளைக்கும்
பொற்றைத் தாள்பல வுடையன பொருந்துதா ளொழிந்த
கற்றைச் செம்மயி ருடையன கணங்கணக் கிறந்த
மற்றைக் கைகளு மன்னதன் மையவென வழங்கும்.

(இ - ள்.) ஒவ்வொரு கால்களுடையவும், மும்மூன்றுகால்களுடையவும் மலைபோன்று சொல்லத்தக்க (பெரிய) பலகால்களுடையவும், பொருந்திய கால்களற்றவும், தொகுதியாகிய செம்மயிர்ப்பங்கியுடையவுமாகிய கணங்கள் எண்ணில்லாதன. மற்றைய கைகளும் அவ்வளவினவேயாகச் சஞ்சரிக்கும். எ-று.

ஒருமு கத்தன விரண்டுதீ முகத்தன வொருவாக்
கருகு மூன்றுடை முகத்தன முகமிலாக் கணங்க
டிருகு சீற்றவெங் கணங்களு மின்னணஞ் சிறந்த
மருவு தண்பிறை யெயிற்றின பிலம்படு வாய

(இ - ள்.) ஒருமுகங்கொண்டனவும், அக்கினிபோலும் இருமுகங்கொண்டனவும், நீங்காதகரிய மும்முகங்கொண்டனவும், முகமில்லாதனவும், கூட்டமாகிய கொடியகணங்களும் இவ்வகையாகச் சிறந்துள்ளன. அவை குளிர்ந்த பிறைச்சந்திரன் போலும் வக்கிரதந்தமுடையனவும் பிலம்போல ஆழமாகிய வாயையுடையனவுமாய்ப் பொருந்தும். எ - று. (கஎ)

மானி டத்தவர் முகத்தன பறவைமா முகத்த
வானை மாமுகம் புலிமுக முடையன வழல்வாய்க்
கான மானரி முகத்தன கரடிமா முகத்த
வேனை மாமுக முடையபூ தங்களெண் ணிறந்த.

(இ - ள்.) மனிதமுகமுடையவும், பெரிய பறவைமுகமுடையவும் மாட்சிமைதங்கிய யானைமுகமுடையவும், புலிமுகமுடையவும், அக்கினி சொரியும் காட்டிற் சஞ்சரிக்கும் சிங்கமுகமுடையவும் கரடிமுகமுடையவும், பிறமிருக முகமுடையவுமாகிய பூதங்கள் கணக்கில்லாதன. எ - று.

யானைமா கரடிமா என்பவற்றில், மா=மிருகம். இப்பெயர்களை முன்னையது சிறப்பும் பின்னையது பொதுவுமாகக்கொண்ட இருபெயரொட்டுப்பண்புத்தொகை யெனக்கொள்க. அரிமான் என்றது மானரியெனநிலைமாறி இலக்கணப் போலியாயது. (கஅ)

இனைய யாவையு மெம்பிரா னாணையி னியங்கி
யனைய வெள்ளியங் குவட்டிடைச் சரிப்பன வன்றிப்
புனைசெய் தேரொடு மானமும் பொருந்துவ பொருந்தா
வினையி னீங்கிய தேவர்க்கு மதனெறி விளங்கா.

(இ - ள்.) இத்தகைய கணங்கள் யாவும் எமது சிவபெருமான் கட்டளைப்படி நடந்து அந்தவெள்ளியங்கிரியாகிய கைலாயத்தில் வசித்திருப்பன. இவையேயன்றி அலங்கரிக்கப்பெற்றதேர்களோடு விமானங்களும் பொருந்தியுள்ளன; வினைப்போகத்தை (அநுபவித்து) நீங்கியதேவர்களுக்கும் அதன்சிறப்பு விளங்காது. எ - று.

"வினையினீங்கிய தேவர்" என்றது தேவர்கள் கேவலம் புண்ணியகருமமேயுடையவரும், நாகரைப்போல பாபகருமமும், பூலோகவாசிகள்போலப் புண்ணிய பாபங்களாகிய மிசிரகருமமும் உடையரல்லருமாகலின். (ககூ)

வாழி மாபெருங் கயிலையை மருங்குடுத் தயர்ந்த
பூழில் பூத்தலர் கற்பகப் பொதும்பரின் கீழ்போய்ப்
பாழி மாநிலந் தாங்கிய படம்படப் படர்ந்த
கோழி லைக்கொழுந் தண்டமுந் திகந்தமுங் குலாய.

(இ - ள்.) சிறந்த அந்த மகாகைலாயத்தினைச்சூழ்ந்து பக்கலிலுள்ள பூமியில், மலர்ந்து விகசித்திருக்கும் கற்பகச்சோலையினது வேர்கள்போய், வலியபெரிய உலகினைத்தாங்கும் (ஆதிசேடனுடைய) படங்களிற் படும்படி படர்ந்திருக்கும். கொழுமைவாய்ந்த இலைத்தளிர்கள் ஆகாயமும் திசைகளுக்குப்புறமும் அடைந்துவிளங்கும். எ - று.

பூழில் - பூமி. (௪௦)

மாதி ரத்தொடு மணவுறு வான்சினை வகுத்த
போதி ணர்த்துவான் கயிலையை யிருள்படப் பொதிந்த
மீதி லங்கொளி முழுமணி யவ்விருள் விழுங்கி
யாத வற்குமோ ரதிசயங் காட்டிநின் றலர்ந்த.

(இ - ள்.) திசைகடோறும் கலந்த நெடிய கிளைகள் பிரிந்தன. மலர்க்கொத்துகளையுடைத்தாய்ச்சிறந்தகைலையை இருள்படும்படி மறைத்துள்ளன. தம்மிடத்து விளங்குங்காந்தியுடைய சிறந்த இரத்தினங்களால் அவ்விருளையகற்றிச் சூரியனுக்கும் ஓரதிசயத்தைக் காட்டிக்கொண்டு மலர்ந்துள்ளன. எ - று.

மரங்கள் பொன்மயமும், அரும்புகளும் பூக்களும் இரத்தின மயமுமாக விளங்கி, சூரியனாலும் நீக்கற்கரிய இருளைப்போக்கி நிற்கும் என்பது கருத்து. ()

கள்ள விழ்ந்திழி நறுமலர் தாதினங் கவிழ்ப்பக்
கொள்ளை வான்றொட நிவந்தெழு கொடுமுடிக் குவைக
ளெள்ள ரும்பசும் பொற்குழம் பங்கையா லேந்தி
யள்ளி யப்பின வாமெனப் பொலிந்ததவ் வசலம்.

(இ - ள்.) (முறுக்கு) அவிழ்ந்து தேன்சொரியும் வாசனை மிகுந்த மலர்கள் மகரந்தத்தைச்சொரிய, ஆகாயமளாவ உயர்ந்தோங்கிய கொடுமுடித் தொகுதிகள், இகழ்தற்கரிதாகிய பசியபொன்னுருக்கிய குழம்பை, உள்ளங்கையிற்கொண்டு அள்ளிப்பூசினதுபோல் விளங்கின. எ - று.

அங்கை = அகம் + கை "அகமுனர்ச்செவிகை வரினிடையனகெடும்" (௪௨)

விரிந்தி லங்கிய வடபெருங் கயிலையை மேலோர்
தெரிந்த தெய்வமென் றறிந்தன சினைக்கரங் கூப்பிப்
பரிந்த பூநறு மஞ்சன மாட்டிமென் பனிப்பூச்
சொரிந்து தாமுநின் றேத்துவ போன்றவச் சோலை.

(இ - ள்.) பரந்து விளங்கும் அவ்வடபெருங்கைலையை, மேன்மக்களால் அறியப்படும் தெய்வமென்றுணர்ந்தனவாய், அச்சோலைகள்கிளைகளாகிய தமது கைகளைக்குவித்து, அன்புகொண்டு மலர்த்தேனைத் திருமஞ்சனமாக அபிடேகித்து மெல்லிய குளிர்ச்சிவாய்ந்த மலர்களானர்ச்சித்துத் தாமும் நேர்நின்று பூசிப்பனபோல் விளங்கின. எ - று. (௪௩)

மணிகு யிற்றின மரகத மிழைத்தன வயிரத்
துணியு றுத்தின பவளமென் கொடியொடுந் தொடர்ந்த

தணிபசும்பொனிற் பொதிந்தன சினைதொறுந் தழீஇ
யணிமணிக்குவை துவன்றின தருவிரு ளறுப்ப.

(இ - ள்.) மாணிக்கங்கள் பதித்தனவும், மரகதங்களிழைத்தனவும், வயிரத்துண்டுகள் பொருந்தினவும், மெல்லிய கொடிப்பவளங்கள் பதித்தனவும், அழகிய பசும்பொன்னாற் பொதிந்தனவும், கிளைகளிலெல்லாம் நெருங்க அழகிய இரத்தினக் குவியல்கள் செறித்தனவுமாகிய அவ்விருட்சங்கள் (பலவகையாக வெய்திய) இருளை யொழிப்பன. எ - று. (௪௪)

காலமின்றியே கனிவன கண்மலர் முகிழா
வாலு நெட்டிலை யவிரொளிப் பசும்பொனா லலர்ந்த
போலு நாண்மலர் நறைபகி ரண்டமும் பொதிந்த
சோலை நீழலிற் றகையறு மிரவிதேர்த் துரகம்.

(இ - ள்.) கால நியதியில்லாமல் (எப்பொழுதும்) பழங்கடருவன. தேன் சொரியும் மலர்கள் கூம்பாதன. அசைகின்ற நெடிய இலைகள் பிரகாசிக்கும் ஒளிபொருந்திய பசும்பொன்னால் விளங்குவன போலும். புதிய மலர்களின் மணம் வெளியண்டங்களிலும் நிரப்புவன, (இத்தகைய) சோலையின் நீழலில் சூரியன் தேரிற்பூட்டிய குதிரைகள் [தளர்வு நீக்கும்] இளைப்பாறும். எ-று. ()

உருளு நேமியொன் றூட்டிய பசும்பரி யுதயோ
னருகு போதலி னயர்வுயிர்த் தருந்தகை யகற்றும்
பொருவு சீதளத் துடனடுக் குற்றனன் போவான்
கருகு கங்குலிற் போதருங் கலைமதிக் கடவுள்.

(இ - ள்.) உருளுகின்ற ஒற்றைச்சக்கரத்தேரிற் பச்சைப்புரவியைப்பூட்டிச் செலுத்துஞ் சூரியன் அச்சோலையருகே செல்லுதலால் இளைப்பாறித்தன்னுடைய தளர்ச்சியை நீக்கிக்கொள்ளுவான். இருண்ட இராக்காலத்தில் உதிக்கும் (பதினாறு) கலைகளையுடைய சந்திரன் (குளிர்ந்தவனாயிருந்தும்) இணையில்லாத குளிர்ச்சியோடும் உடல் நடுக்கமுற்று (அச்சோலைவழி) போவான். எ - று. ()

அன்ன சோலையி னகன்சினை யூழ்த்திடு நறும்பூத்
துன்னு வானிகந் திழிதொறு மலமரு தோற்ற
முன்னை யூழ்முறை யநுபவ முற்றுற முடிந்தா
ருன்ன ரும்பத மிழந்திழி வாரையொத் துளதால்.

(இ - ள்.) அந்தச்சோலையின் அகன்ற கிளைகள் சிந்துகின்றவாசமிக்க பூக்கள், மிகுந்த உயரத்தினின்றும் இறங்கும்போது சுழலுந் தோற்றமானது, முற்பட்ட ஊழின் வினைப்பயனை நுகர்ந்து முடித்தவர்களாய், எண்ணுதற்கரிதாகிய சிறந்த பதவியைவிட்டு இறங்குவாரைப் போன்றிருக்கும். எ - று. (௪௭)

ஆய சோலையி னணிமலர்க் குப்பைவீ ழருவி
யேய மால்வரை யுச்சியெம் மருங்கினு மிழிதன்
மேய செல்வனை வேண்டுநர் வேண்டுநர் விரும்பித்
தூய நாண்மலர்த் தொடைபுனைந் தனவெனத் தோன்றும்.

(இ - ள்.) இத்தகைத்தான அச்சோலையின் அழகிய மலர்த்தொகுதிகளோடு இழிகின்ற அருவியானது, அப்பெரிய கைலாய மலையினுச்சியில் எப்புறத்திலும் இறங்குந்தோற்றம், செல்வமுடையவனை விரும்பினவர் ஒவ்வொருவரும் ஆசைகொண்டு புனிதமான புதிய மலர்மாலைகளைத்தரித்தன போலக் காணப்படும். எ - று. (௪௮)

நரந்த நாறின நறுமலர்ச் சந்தனங் கமழ்ந்த
குருந்த மட்டுயிர்த் தலர்ந்தன குங்கும மணந்த
செருந்தில் வாசநா றினசெழுஞ் செண்பகம் விரைத்த
பொருந்து தண்சினை நெடுங்குர வலர்தொறும் பூத்த.

(இ - ள்.) நாரத்தைகள் மணக்கின்றன. நல்ல பூக்களையுடைய சந்தன மரங்கள் வாசம் வீசுகின்றன. குருந்தமரங்கள் தேனைச்சிந்திப் பூத்தன. குங்கும மரங்கள் மணம் வீசின. செருந்தி மரங்கள் பரிமளஞ்சிந்தின. செழிய சண்பக மரங்கள் மணக்கின்றன. குளிர்ச்சி பொருந்திய கிளைகளையுடைய குரா மரங்கள் புட்பித்தன. எ - று.

நெடுங்குரவு பொருந்துதண் சினைதொறும் அலர்பூத்த எனினும் பொருந்தும். குராமலரைக் குராப்பாவை யென்பது வழக்கு. (சகூ)

அருவி தேக்கிய படுகரிற் பொதுளிய வாம்பன்
மருவு வெள்ளியங் குவட்டொளி கதுவுற மலர்ந்த
பொருவின் மால்வரைப் பொற்குவட் டிளவெயில் பொரலான்
முருகு வாய்மடுத் தொடுக்கிதழ் மலர்ந்தன முளரி.

(இ - ள்.) அருவிகளது தேங்கிய பள்ளங்களிற் பொருந்திய ஆம்பல்கள், அழகிய வெள்ளிமலையாகிய கைலாயத்தின் ஒளி தம்பால் வீச (சந்திரகிரண மென) மலர்ந்தன. தாமரையானது ஒப்பில்லாத அப்பெரிய கைலையின் பொன் மயமான உச்சியின் இளங்கிரணம் மோதுதலால் (சூரியகாந்தியென்று) தேன் பொருந்திக் குவிந்திருந்த இதழ்களை விகசித்தன. எ - று.

ஆம்பல் சந்திரன் வருகையாலும், தாமரை சூரியன் வருகையாலும் மலருவது இயற்கை. (ருO)

காலத் தூழ்பல முறைமுறை கழிதர வயிர்த்துச்
சாலக் காரொளி தழைதரத் தனித்தனி யரும்பி
யேலத் தம்முழைக் கருங்கொழுந் தெழுந்தென நீலக்
கோலப் பாறையி னகன்சுனை நிரப்பின குவளை.

(இ - ள்.) அழகமைந்த நீலக்கற்பாறைகளிலுள்ள அகன்ற சுனைகளில், அவற்றிற் பொருந்திய கரிய பிரகாசமானது மேலோங்கி யெழுந்தாற்போலப் பொருந்தும்படி குவளை மலர்களானவை, காலமுடிவுகள் கணக்கிறந்தன முறைப்படி கழிய, அழகு பொருந்தி, மிகுந்த கருமை நிறத்தைப்பரப்பும்படி தனித் தனி பூத்து நிரம்பியுள்ளன. எ - று.

கோல நீலப்பாறையின் அகன்சுனை தம்முழை கருங்கொழுந்துஎழுந்தென குவளையயிர்த்து அரும்பி நிரம்பின எனக்கூட்டுக. (ருக)

அயிர்பெற் றோங்கிய தமனியத் தரையறை தோறு
மெயில்பெற் றோங்கிய பொற்குவட் டிடந்தொறுஞ் சார்ந்த
செயிரற் றேந்திய பொற்றகட் டழுந்துறச் செறித்த
வயிரப் பாளமொத் திமைப்பன தெளிபுனன் மடுக்கள்.

(இ - ள்.) தெளிந்த நீர்நிறைந்த மடுக்கள், நுண்மணல் பெற்றுயர்ந்த பொற்பாறைகளொவ்வொன்றிலும், மதில்களையுடைத்தாய் ஓங்கியிருக்கும் பொன்மலைச் சிகரங்கள் ஒவ்வொன்றிலும், தம்மிடம் பொருந்தக் குற்றமறப் பதிக்கப்பட்ட பொற்றகட்டில் அழுந்தும்படி பதித்த வயிரப்பாளங்களைப் போன்று ஒளிவிடுகின்றன. எ - று. (ருஉ)

ஆட்டு வார்திரை யலைத்திட வுடையரக் காம்ப
னீட்டு நீர்த்தடத் தொசிந்தன கிடப்பவந் நெடுநீர்
மாட்டு வார்திரை வாவிய வாளைவா லடிப்பக்
கோட்டு நீரராக் குருதிகொப் புளிப்பன போலும்.

(இ - ள்.) அசைகின்ற நெடிய அலைகள் அலைக்க, அவற்றால் அழிந்துள்ள செவ்வாம்பன் மலர்கள் நீளமான நீர் நிறைந்த தடாகங்களில் வளைந்து கிடக்கின்ற தோற்றமானது, அப்பெரு நீரிலுண்டான நெடிய அலைகளிற்பாயும் வாளை மீன்கள் தம்முடைய வால்களாலடிக்க, வளைந்துள்ள அந்நீரில் வசிக்கும் நீர்ப்பாம்புகள் உதிரங் கொப்புளிக்க இருப்பதுபோலும் விளங்கும். எ - று. ()

தெளிக்கு மீர்ம்புனற் றடத்துறை நறுமலர் சிவணிக்
களிச்சு ரும்பின நான்மறை யல்லன கழறு
வொளிப்பு லத்தினன் புடையவர்க் குளப்படும் பதவி
யளிக்கு மஞ்செழுத் தல்லது மிழற்றில வன்னம்.

(இ - ள்.) தெளிவாகிக்குளிர்ந்த நீரையுடைய தடாகத்திலிருக்கும் வாசந் தங்கிய மலர்களில் பொருந்திக் களிப்பெய்தும் வண்டு கூட்டங்கள் நான்கு வேதங்களை யல்லாதனவற்றை ஒலிக்கமாட்டா. (அங்குள்ள) அன்னங்களெல்லாம் தெளிந்த அறிவினிடத்தில் மெய்யன்புடையவருக்கு, அவர்களாற் கருதப்படும் பதவிகளை யளிக்கவல்ல பஞ்சாக்கரத்தையல்லது பகரமாட்டா. எ - று. ()

அப்பெ ருங்கிரி நவநதி யருங்கதி புரக்கு
மப்பெ ருந்தலை வர்க்குமெட் டாதன முயலா
வொப்ப ருந்துறை குடைபவர்க் கோங்கிரும் பதத்தி
னெப்பெ ருங்கதி யளிக்குமோ வறிந்தில மின்னும்.

(இ - ள்.) அம்மகா கைலாயத்திலுள்ள நவநதிகளும், அரிய பதவிகளைப் பாதுகாக்கும் பெருந்தலைவர்களாகிய திரிமூர்த்திகளுக்குஞ் சொல்லமுடியாப் பெருமையுடையன. ஒப்பில்லாத அரிய அந்த நதித்துறைகளில் மூழ்குபவருக்கு உயர்ந்த பெரிய பதவியில் எத்தன்மைத்தான பெரிய பதவியைக்கொடுக்குமோ அதனை இதுகாறும் அறிந்திலோம். எ - று. (௫௫)

பாங்கர் வைகிய வனந்தொறு மருந்தவம் பயில்வா
ரோங்கு மாதவ ரெப்பத முணர்ந்துகொ ளுணரோம்
வாங்கு வார்சடைப் புனிதனோர் மலர்ப்பத மல்லால்
யாங்க ணுந்தெரிந் துணரினும் பதவிமற் றில்லை.

(இ - ள்.) வளைந்து நீண்ட சடையையுடைய சிவபெருமானது ஒப்பற்ற தாமரை மலர்போன்ற திருவடியே யல்லாமல், எங்குந்தேடியாராய்ந்தாலும் அதிற் சிறந்த பதவி பிறிதொன்றில்லை. (இஃதிங்ஙன மிருக்க) பக்கலிலுள்ள வனங்களிலெல்லாம் அருந்தவஞ் செய்வார்கள் (ஆகிய) அப்பெருந்தவசிகள் எந்தப்பதவியைக்கருதியோ அறியோம். எ - று. (௫௬)

அனைய கானகத் தரும்பொறி யயிலெயிற் றரவ
முனையெ யிற்றுறை யமுதல தூற்றுறு முழங்கி
வினைசெய் வாளரி பிணையொடுங் குழைவன விரும்பி
நினையு நெஞ்சமு மஞ்செழுத் தல்லது நினையா.

(இ - ள்.) அத்தகைய வனங்களிலே அரிய பொறிகளையும் கூரிய பற்களையுமுடைய சர்ப்பங்கள், தமது முனைப்பற்களிலே துளிகளாக வழக்கையேயன்றி

(விடத்தை)ச் சொரியமாட்டா. கர்ச்சனை செய்து கொடுமைபுரியுஞ் சிங்கங்கள் பேடுகளுடன் விரும்பிக்கலந்து கருதுகின்ற அவற்றின் மனமும் பஞ்சாட் சரத்தை யன்றி (மற்றொன்றையும்) கருதமாட்டா. எ - று. (ருஎ)

வனத்து வைகுறுங் குடம்பைய வார்சிறைப் பறவை
யினத்த கிள்ளைக ளிசைப்பன செவிமடுத் தொப்பில்
புனற்கொ டுஞ்சடை யெம்பிரான் றிருவருள் பொருந்தி
யனைத்து மாகமச் சரிதைமற் றல்லதொன் றறையா.

(இ - ள்.) அவ்வனங்களிலுள்ள கூட்டில் வசிப்பனவாகி நெடிய சிறகுகளையுடைய பறவைத்தொகுதிகள் யாவும், கிளிப்பிள்ளைகள் பேசுவனவற்றைக் கேட்டு, சமானமில்லாத கங்காசலம் பொருந்திய சடையையுடைய எமது சிவபெருமான் திருவருளையடைந்து, ஆகமசரிதங்களையன்றிப் பிறிதொன்றனையுப்பேசமாட்டா. எ - று. (ருஅ)

விழைந்த மாதவர் விரும்பிய வளமெலா நுகர்ந்துந்
தழைந்த மாவனத் தருந்தவந் தவறுறு திழைப்பார்
குழைந்த வெண்ணிலாக் குழவியஞ் சிமிலியைக் குணியா
விழைந்த சிந்தையி னவனுரு வேண்டின ரிருப்பார்

(இ - ள்.) விரும்பிய பெருந்தவத்தையுடையோர் தாம் இச்சித்த பலவளங்களையும் அநுபவித்தும், தழைந்துள்ள அச்சிறந்த வனத்திலே தங்கள் அருந்தவங்களைத் தவறுபடாது செய்பவர்களாய், வளைந்த வெண்ணிறந்தங்கிய இளஞ்சந்திரனை யணிந்த அழகிய சடையையுடைய சிவபெருமானைத்தியானித்து அச்சிவசாரூபத்தை விரும்பி வசித்திருப்பார்கள். எ - று.
சிமிலி - சடை. (ருகூ)

இன்ன தன்மைய கயிலையின் கொடுமுடி யிலக்கம்
பன்னு கோடியொன் றெடுத்தபன் னோரிலக் கத்தை
மன்னு மாயிர மொன்றுபத் தவற்றொடு மருவித்
துன்னு நூற்றிரு பத்தொடு மைந்தெனச் சொல்வார்.

(இ - ள்.) இப்படிப்பட்ட இயல்பமைந்த அம்மகா கைலாயத்தின் கொடுமுடிகளினுடைய தொகை கோடியே பதினோரிலட்சத்துப் பதினோராயிரத்து நூற்றிருபத்தைந்து என்று (பெரியோர்கள் தம் விசாரணையால்) சொல்வார்கள். எ - று.
இச்செய்யுள் மேற்காட்டிய தொகையிணங்க அடைமொழிகள் சேர்த்து அமைந்துள்ளது. (சுO)

மொழித ரும்பெருங் கயிலையைக் கீழுற முயற்றி
யிழிவ றும்பசுந் தமனியத் திருநில மிதன்பா
லொழிவ றுங்கணக் கிறந்தன கணங்களோ டொழியாப்
பொழியு மன்பின ருருத்திர ராயிரர் பொலிவார்.

(இ - ள்.) (துதித்துப்) பேசப்படுகின்றன மகாகைலாயத்திற்குக் கீழே பொருந்தச்சூழ்ந்து இழிவில்லாத பசும்பொன்மயமான பெரிய பூமியிலே, நீக்கமில்லாத எண்ணிறந்த கணங்களோடு அழிவின்றிப் பெருகுகின்ற அன்பின் மிக்க ஆயிரம் உருத்திரர்கள் விளங்குவார்கள். எ - று. (சுக)

ஆட கத்தளத் தளவொரு கோடியோ சனையா
மாடு முற்றுற வெள்ளிவெண் மதிளுடுத் திருக்கு

மூடு சுற்றிய தமனிய விஞ்சியொன் றுளதா
னீடு வார்மதிற் பெருமையி னிலைநிகழ்த் துதுமால்.

(இ - ள்.) அப்பொன்மயமான பூமியின் அளவு ஒரு கோடியோசனை விஸ்தீரணமாம். அதன் பக்கலில் முழுவதும் வெள்ளியமதில் சூழ்ந்து கொண்டிருக்கும். அம்மதிலூடு சூழ்ந்த பொன்மதிலொன்றிருக்கின்றது. மிகவும் நீண்டுள்ள அந்தமதிலின் சிறப்பைச்சொல்லுவோம். எ - று. (சுஉ)

கோடி யோசனை யிடமுள கோடியிற் கோடி
யூடு போக்கியே மேக்குற நிவந்தன வோங்கி
நீடு கோபுர மெட்டுள நெடுநிலை வாயின்
மாடு காப்பவ ரிவரென வரன்முறை வகுப்பாம்.

(இ-ள்.) அம்மதில்கள் கோடியோசனை யகலமுள்ளன. மேலோங்கி அதிக உயர்வாகக்கோடி கோடியோசனை வளர்ந்திருக்கும். அவற்றில் உன்னதமான எட்டுக் கோபுரங்கள் உள்ளன. அந்நெடிய கோபுரவாயில்களில் காவல் புரிபவர்கள் இவ்விவரென்பதைக் கிரமமாகப்பிரித்துச் சொல்லுவோம். எ - று. (சுங)

பூரு வத்திடைக் கணபதி பொங்கெரிப் புறத்து
வீர பத்திரன் றென்றிசை நந்திமேன் மூலைக்
கூர யிற்படை வயிரவன் மேற்றிசைக் குமரன்
மாரு தத்திசை வைரவி வடக்குமா காளர்.

(இ - ள்.) கிழ்த்திசையில் கணபதியும், அதிகரிக்கின்ற [அக்கினி] தென்கிழ்த்திசையில் வீரபத்திரரும், தென்றிசையில் திருநந்திதேவரும், தென்மேற்கு மூலையில் கூர்மைதங்கிய சூலாயுதமேந்திய வைரவரும், மேற்றிசையில் குமாரசுவாமியும், [வாயு] வடமேற்குத்திசையில் துர்க்கையும், வடதிசையில் மகாகாளரும். எ - று. (சுச)

இது முதலிரண்டுபாடல்கள் ஒருதொடர்.

வடகி ழக்கினி லரியா புத்திரன் மறங்கூ
ரடுசி னத்தெறு கணங்களோ டவணவண் புரப்பார்
நெடுமு டிப்பெருங் கயிலையி னிலையிது பகர்ந்தே
முடனி வற்றினை வளைந்திடு மரணமொன் றுளதால்.

(இ - ள்.) வடகிழ்த்திசையில் ஐயனாரும், கடுமைமிகுந்த (பகைஞரை) அழிக்கும் கோபம்பொருந்திய கணங்களுடனே அவ்வவ்விடங்களிற் காவல் செய்வார்கள். நெடியகொடுமுடிகளையுடைய மகாகைலாயத்தின் நிலைமை இவ்வாறு சொன்னோம். இதனோடு இவற்றைச் சூழ்ந்திருக்கும் மதிலொன்றுண்டு. எ - று. (சுடு)

வனம ணிக்குலந் துவன்றின வானுற நிவந்த
சினவ ரக்கரா னிருதராற் செலற்கருந் திறத்த
கனைபெ ருந்திரைப் பிரளயஞ் செலற்கருங் காவ
லனைய மாபெருங் கயிலையி னிலையிதென் றறைந்தான்.

(இ - ள்.) (அம்மதிற்புறங்கள்) அழகிய இரத்தினத்தொகுதிகள் பதிக்கப்பட்டன. ஆகாயமட்டும் உயர்ந்தன. கோபமுடைய இராக்கதராலும் அசுரராலும் செல்லுதற்கரிய தன்மையுடையன. ஒலிக்கின்ற பெரிய அலைகளோடு கூடிவரும் பிரளய வெள்ளமும் உட்புகுதற்கரிதாகிய காவலுடையன. அம்மகாகைலாயத்தின் நிலைமை இஃதாகுமென்று இயம்பினர். எ - று. (சுசு)

சூத மாமுனி வாசகங் கேட்டலுந் துளங்கிச்
சீத மென்புனல் விழிவழி யொழுகுறத் திருந்தும்

போத நெக்குற மயிர்ப்புறம் பொடித்தனர் புலமை
மாத வத்தின ரென்புடைந் துருகினர் மயங்கி.

(இ - ள்.) (இவ்வாறு திருவாய்மலர்ந்தருளிய) சூதமுனிவருடைய வாக்கியங்களைக் கேட்டவுடனே, மெய்ஞ்ஞானமுதிர்ந்த அப்பெருந்தவசிகள் நடுக்கெய்தி, குளிர்ச்சிபொருந்திய மெல்லிய ஆனந்தக்கண்ணீர் தமது கண்களின் வழியே சொரிய, திருந்திய தங்கள் உள்ளம் நெக்குவிட்டுருக, உடல்முழுதும் மயிர்க்கூச்செறிய, மயக்கெய்தி, எலும்பும் உருகினார்கள். எ - று. (௬௭)

அன்ன காலையி னன்னவர்க் கருந்தவத் தலைவன்
மன்னு மாதவத் துறையுளீர் கேட்கென வகுப்பான்
சொன்ன மாபெருங் கயிலைவீற் றிருக்குமத் தொல்லோன்
மன்னு மாருயிர்க் குயிரெனத் திருவருள் வழங்கும்.

(இ - ள்.) அந்தக்காலத்தில், அரியதவத்தலைவராகிய சூதமுனிவர், நிலையாகிய பெரியதவத்துறையிலிருப்பவர்களே! கேட்பீர்களாகவென்று அம்முனிவர்கட்குச் சொல்லுகின்றார். நாம்சொல்லிய அம்மகாகைலாயத்தில் வீற்றிருந்தருளும் பழமையாகிய சிவபெருமான், உலகிற்பொருந்திய சீவான்மாக்கட்கெல்லாம் பரமான்மாவாகவிருந்து திருவருள்புரிவார். எ . று. (௬௮)

கண்ணுங் கட்புலங் கதுவிய வொளிகளு நிவந்த
விண்ணும் விண்ணிடை வழங்கிய கதிர்களு மேலோ
ரெண்ணு மெண்ணிய பொருள்களும் யாவையுந் தானாய்
நண்ணு நாயக னிருப்பதக் கயிலைமா நகரம்.

(இ - ள்.) கண்களும் கண்களுக்குள்ளே விளங்கிய ஒளிகளும், மேலுயர்ந்த ஆகாயமும் அவ்வாகாயத்திற் சஞ்சரிக்கும் (சூரியசந்திரர்களாகிய) இருசுடர்களும், மேலோருடைய எண்ணங்களும் அவர்களெண்ணுகின்றபொருள்களும் ஆகியவிவையெல்லாந் தாமாகவே விளங்குகின்ற சிவபெருமான் எழுந்தருளியிருப்பது அம்மகாகைலாயம். எ - று. (௬௯)

தெய்வ மேருவின் றென்புலத் திருப்பெருங் கயிலைத்
தையல் பாகன்முத் தலைநெடுஞ் சூற்படைப் பெருமா
னைய னாலமுண் டிருண்டகண் டத்தின னமர்வான்
வையம் யாவையும் படைத்தளித் தழிக்குமவ் வரதன்.

(இ - ள்.) தெய்வீகந்தங்கிய மேருமலையின் தெற்கிலுள்ள சிறந்த அம்மகாகைலாயத்தில், பார்ப்பதியைப்பாகமாகவுடையவரும், முத்தலைகளையுடைய நெடிய சூலாயுதமேந்திய பெருமானும், (சர்வலோகங்கட்கும் சர்வதேவர்கட்கும்) தலைவரும், ஆலாலத்தை யமுதுசெய்து கறுத்தகண்டத்தையுடையவரும், உலகமுழுவதையுஞ் சிருட்டித்துக்காத்து அழிப்பவருமாகிய அச்சிவபெருமான் வீற்றிருந்தருளுவர். எ - று. (௭0)

உரைத்த தெய்வமாக் கயிலைக ளிணையவோ ரிரண்டு
மருத்தி ஞானமா மயமென லாகுமிக் கயிலை
யுருத்தி ரப்பெருங் கணங்களு முலகளிப் பவருந்
திருத்த மாதவத் தலைவருஞ் சிந்தைசெய் திருப்பார்.

(இ - ள்.) இங்கே சொல்லிய தெய்வீகமமைந்த இவ்விருபெருங்கைலைகளும் யாவர்க்கும் விருப்பத்தை யுண்டுசெய்யும் ஞானசொரூபமென்று சொல்லலாகும். இக்கைலைகளைப் பெரிய உருத்திரகணங்களும் (வைரவர் முதலிய) உலகபாலகர்களும், திருத்தமாகிய சிறந்த தவத்தலைவர்களும் எக்காலத்திலும் தியானஞ்செய்து கொண்டிருப்பார்கள். எ - று. (௭௧)

இயங்கு வாயுவு மெரிகதிர்க் கடவுளு மெழுந்து
வயங்கு திங்களும் வளரொளிக் கனலியு மரபான்
முயன்று நிற்பன விவரருட் பெருமையான் முழுவுத்
தயங்கு திண்புயத் திந்திரன் பரவுமத் தகையே.

(இ - ள்.) சிவபெருமான் திருவருட்பெருமையினால், எங்கும் சஞ்சரிக்கின்ற வாயுவும், சுடுகின்ற கிரணங்களையுடைய சூரியனும், மேலெழுந்து விளங்குகின்ற சந்திரனும், அதிகரிக்கின்ற காந்தியையுடைய அக்கினியும் தங்கள் தொழின்முறையே வணங்கிக்கொண்டிருப்பார்கள். மத்தளம்போல (திரண்ட) வலிய புயங்களையுடைய இந்திரனும் அவ்வண்ணமே வணங்கிக் கொண்டிருப்பான். எ - று. (எஉ)

இந்த மாபெருங் கைலையி னியற்கையைப் புலித்தா
டந்த மாமுனி தனதுப மன்னியற் குரைப்ப
வந்த மாமுனி தாமரைக் கண்ணவற் கருள
விந்தை நாயகன் பாண்டவர்க் குரைத்தனன் மேனாள்.

(இ - ள்.) இந்த மகாகைலாயத்தின் நிலைமையைப் புலிக்கால்களை வேண்டிப்பெற்றமழமுனிவர் தமதுபுதல்வராகிய உபமன்னிய முனிவர்க்குபதேசிக்க, அந்த உபமன்னிய மகாமுனிவர் செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய கிருஷ்ணமூர்த்திக்குபதேசிக்க, திருமகள் கொழுநராகிய அக்கண்ணபிரான் முற்காலத்தில் பாண்டவர்களுக்கு உபதேசித்தனர். எ - று.

மழமுனிவர் பத்திர புஷ்பங்களெடுக்க மரமேறுகையில் கால்சறுக்காமற் புலிக்காலும் புலிக்கையும், அம்மலர்களிற் குற்றங்காண விரல்களில் நகமும் சிவபெருமானிடம் பெற்று வியாக்கிரபாதரெனும் பெயரெய்தியவர். (எங)

அறிந்த மூவகைத் தலைவருங் கயிலைபெற் றடைந்தார்
செறிந்த வார்சடை யந்தணிர் நீவிரு நினைவிற்
செறிந்த வேட்கையிற் சிவனடி சேவைசெய் திடுமி
னெறிந்த பேரொளிக் கைலையே கதிபிறி தில்லை.

(இ - ள்.) (இவ்விதமாக) உபதேசிக்க உணர்ந்த மூவகைத்தலைவரும் கைலாயபதவியடைந்தார்கள். செறிப்புற்ற நீண்டசடையையுடைய முனிவர்களே! நீங்களும் நினைவில் பெருவிருப்பத்துடன் சிவபெருமான் திருவடியைச் சேவிப்பீர்களாக. மிக்கஒளியைச்செய்யும் கைலாயமே கதி. வேறு கதியில்லை.

என்று கூறிய சொருங்குகேட் டிந்திய மனைத்தும்
வென்ற மாதவ ரிருந்தவச் சூதனை வியந்தா
ரின்று நாமிவ ணியற்றிய தவப்பெரும் பேறு
சென்று பெற்றவா கிடைத்தன மெனவகஞ் சிறந்தார்.

(இ - ள்.) என்று திருவாய்மலர்ந்தருளியதை, பஞ்சேந்திரியங்களையும் வென்ற அம்முனிவர் யாவருங் கூடியிருந்து கேட்டுச் சூதமாமுனிவரை வியந்தார்கள். நாம் இந்த நைமிசவனத்தில் வசித்துச் செய்தபெருந்தவப்பயனை, கைலைக்கு நேரேசென்று பெற்றார்போல இவ்விடத்திலேயே இன்றுபெற்றோ மென்று களித்தார்கள். எ - று. (எ௫)

கைலைமான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் அஎ.

இரண்டாவது

சூராதிகளொடுக்கச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

உள்ள மோர்ந்தன கேட்டுழி யெர்முறை யொருங்குணர்ந் தொருங்காகப், பள்ள வார்மடைப் புனலெனத் தொகுத்தனை யாமதன் பயன்றுய்த்தேம், வெள்ளெ யிற்றுவெஞ் சூரனை முதலியோர் விளிந்தபின் னவராவிக், கொள்ளை வேற்படை யொடுக்கிய தன்மையைக் கூறுதி யெமக்கென்றார்.

(இ - ள்.) (நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி) எங்கள் கருத்து முழுவதுமறிந்து ஒருசேர, பள்ளத்தை நாடி வந்த மடைசலம் போலத் திருவாய்மலர்ந்தருளினீர், நாங்கள் அதன் பலனை யநுபவித்தோம். வெள்ளிய பற்கள் பொருந்திய வெவ்விய சூரபன்மன் முதலானவர்கள் இறந்தபிறகு, அவர்கள் உயிரை, உயிர்களைக்கொள்ளை கொள்ளும் வேலாயுதமானது ஒடுக்கிக் கொண்ட சரிதையை உபதேசிக்க வேண்டுமென்று வேண்டினார்கள். எ - று.

பன்னு மாதவத் துறையுளோர் கேட்டுழிப் பழவினைப் பகை வென்றோன், பின்ன லஞ்சடை நெடுமுடி துளக்கின னுவகையிற் பெரிதுற்று, னன்ன காரண மறைகுதுங் கேண்மினென் றறைகுவா னொருகாலம், பொன்ன லங்குதார்ப் பன்னிரு தடம்புயப் புங்கவ னெங்கோமான்.

(இ - ள்.) புகழ்ந்து சொல்லத்தக்க பெருந்தவநெறியினராகிய அம்முனிவர்கள் கேட்டபோது, ஊழ்வினையாகிய பகையைவென்ற சூதமுனிவர், பின்னல்செய்த அழகிய நெடிய சடைமுடியை யசைத்து மிகவுங் களிப்பெய்தி அவ்வரலாற்றினைச்சொல்லுவோம். கேட்பீர்களாகவென்று திருவாய்மலர்ந் தருளுகின்றார். ஒருகாலத்திலே பொன் மயமாக அசையும் மாலையணிந்த விசாலமான பன்னிருதிருப்புயங்களையுடைய குமாரக்கடவுள். எ - று.

இது முதலிரண்டு பாடல்கள் ஒருதொடர். (௨)

கான வண்டறாக் கற்பகப் பொதும்பர்சூழ் கந்தமா தனநின்று
மான வேலொடு மரகதக் கலாபமா மயிற்புற மினிதேந்த
வேனை மானிலத் திருவிளை யாடலுக் கெழுந்தரு ளியஞான்று
ஞான நாயக னுமையொடு மினிதுறை கயிலையை நணுகுற்றான்.

(இ - ள்.) பண்பாடும் வண்டுகள் அகலாத கற்பகச்சோலை சூழ்ந்த கந்தமாதனகிரியிலிருந்து, மாட்சிமை தங்கிய வேற்படையுடன், பசுமை நிறந் தங்கிய தோகையையுடைய பெரிய மயிலானது தன் முதுகில் இனிமையாகத் தாங்க, பிறவுலகங்களில் இயற்றவேண்டிய திருவிளையாடல்களுக்காக எழுந்தருளிய நாளில், ஞானசொரூபியாகிய சிவபெருமான் உமாபிராட்டியுடன் இனிதாக வீற்றிருக்குந் திருக்கைலாயகிரியையடைந்தனர். எ - று. (௩)

உற்ற காலையிற் களிமயிற் புறனிழிந் தொலிதரு சிறுதண்டைச்
சிற்ற டித்துணை நோவர மென்மெலச் சென்றவச் சிறுகாலைக்

கொற்ற வார்கொடி மயிலொடுங் கயிலையின் நீழுறக் குமரேசன்
கற்றை வார்கதிர்க் கயிலைசென் றிறைஞ்சினன் பன்னிரு கரங்கூப்பி.

(இ - ள்.) அவ்வாறடைந்தபொழுது, களிப்புடைய மயிலின் முதுகினின் றிறங்கி ஒலிக்கின்ற சிறு தண்டையணிந்த சிறிய திருவடிகள் வருத்தமெய்த மெல்லென நடந்தருளிய அச்சிறுநேரத்தில், வெற்றிபொருந்திய நெடிய கொடி (ஆகிய சேவலும்) மயில் (ஆகிய) வாகனமும், கைலாயத்தின் அடிவாரத்திலிருக்க, குமார சுவாமியானவர் தொகுதியாகி நீண்ட கிரணங்களைப்பரப்பும் கைலையையடைந்து தமது பன்னிரு திருக்கரங்களையுங் குவித்துப்பணிந் தனர். எ - று. (௪)

கறுத்த கண்டனைக் கண்ணுதற் பரமனை யடியவர் கருத்தீமை
வெறுத்த நாதனை வெண்ணிலாச் சடிலினை வெருவலர் புரந்தீய
வொறுத்த வாணகைப் புனிதனைக் கண்டுகண் களித்தன னுளநெக்கான்
மறுத்து வார்குழன் மரகதக்கொம்பனை வணங்கினன் மகிழ்பெற்றான்.

(இ - ள்.) கருநிறமமைந்த கண்ட முடையவரும், நெற்றிக்கண்ணையுடைய மேலானவரும், அடியவர் பிறவிநோயை நிவிர்த்திக்கும் தலைவரும், வெண்மை தங்கிய சந்திரனையணிந்த சடையை யுடையவரும், பகைஞரது முப்புரங்களை யெரியும்படி கோபித்த ஒள்ளிய நகையுடைய பரிசுத்தருமாகிய சிவபெருமானைத்தரிசித்துக் கண்களி கூர்ந்து மனமுருகினர். மறுபடியும் நெடிய கூந்தலையுடைய மரகதக் கொம்பினையொத்த உமாபிராட்டியைப்பணிந்து சந்தோஷமிருந்தனர். எ - று. (௫)

வருக ழற்சிறு தண்டையஞ் சீறடி மைந்தனை யெதிர்நோக்கி
யுருகு காதன்மிக் கெழுந்தன னுவகையா னும்பரிற் றலைநின்றான்
றிருந டம்புரிந் தன்னது நோக்கினன் சிந்தையென் பொடுநெக்கா
னருகு நின்றனன் மெய்பொடித் தரும்பின னயர்ந்தன னக்காலை.

(இ - ள்.) தம்பால் வந்த வீரக்கழலையும் சிறு தண்டையையு மணிந்த சிறிய பாதங்களையுடைய குமாரக்கடவுளை நேரே பார்த்து, தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமான் உருகுகின்ற ஆசைமிகுந்து சந்தோஷமேலீட்டினால் திருநடனமியற்றியருள, இளைய பிள்ளையார் அதனைத்தரிசித்து மனமும் எலும்புடன் உருகி அருகே நின்று உடல்முழுதும் மயிர்க்கூச்செறிந்து பரவசமாயினர். அச்சமயத்தில். எ - று. (௬)

முடங்கு வெண்டிரை பொருந்திருப் பாற்கடன் முன்றிலின் முடத்தாந்திப், படங்கொள் பாம்பணைக் கண்டுயில் படலையம் பசுந்துழாய் மணிமார்பன், றடங்கொ டுஞ்சிறை யுவணமீப் பொலிந்தொரு மேருவின் றலைமுந்நீ, ரிடங்கொள் கார்மழை முளரிபூத் தனவென வெழுந்தனன் வருகின்றான்.

(இ - ள்.) மறிகின்ற வெள்ளிய அலைகள்மோதுகின்ற திருப்பாற்கடலின் முகப்பில், வளைந்த படப் பொறிகளையுடைய ஆயிரம் பணாமுடிகளமைந்த சேஷசயனத்தில் (யோக) நித்திரை புரியும் வரிசையாகிய பசிய துளவமாலை யணிந்த (கவுஸ்துப) மணி பொருந்திய திருமார்பினையுடைய திருமால், பரந்த வளைவாகிய சிறகினையுடைய கருடன்மீது விளங்கி, ஒப்பற்ற மகமேருவின் மீது, கடலை யிடமாகக்கொண்ட கரிய மேகமானது தாமரை மலர்களையலர்ந் தாற்போல ஆரோகணித்து வந்தனர். எ - று. (௭)

தேவி வாழிய திருமறு மார்பினன் சென்றுறு திசைநோக்கித்
தூவி யன்னமொன் றுகைத்தன னான்முகச் சுருதியெம் பெருமானு
மேவு கற்பக நறுநிழ லினிதுறை விண்ணவர் கணஞ்சூழ
மூவெ யிற்புரஞ் செற்றவ னுற்றுறை கயிலையை முடுகுற்றார்.

(இ - ள்,) சீதேவி வாழ்கின்ற அந்தத் திருமறுமார்பினராகிய விஷ்ணுமூர்த்தி சென்றடையுந் திசையினை நோக்கி, நான் முகனாகிய வேதங்களைச் சொன்ன எம்பெருமான் பிரம தேவனும் தூவியையுடைய ஓரன்னத்தில் ஆரோகணித்து, பொருந்திய நல்ல கற்பக நீழலில் இனிதாக வசிக்குந் தேவர் கூட்டம் புடைசூழ், (பொன் வெள்ளி இரும்பென்னும்) மும்மதிலுடைய திரிபுரத்தை யெரித்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கைலாயத்தை யடைந்தனர். (அவ்விருவரும்.) எ - று. (அ)

ஆழிமாயனு மருமறைக் கிழவனு மவணிழிந் தயலாகப்
பாழி வெண்சிறை யுவணமு மன்னமு மொழிந்தனர் படர்கின்றா
ரூழி பற்பல காண்கினும் பிரளய வொடுக்கினு முலவாத
சூழி மால்வரைக் கயிலைமீச் சென்றனர் திருநடந் தொழுதேத்த.

(இ - ள்.) சக்கிராயுத மேந்திய திருமாலும் அரிய வேதங்களையுணர்த்த பிரமதேவரும் அங்கே (தங்கள் வாகனங்களினின்று) இறங்கி, வலிய வெண்ணிறத்த சிறகினையுடைய கருடனையும் அன்னத்தையும் பக்கலில் நிறுத்திச்செல்வாராய், கணக்கிறந்த கற்பகாலங்கள் கழியுங்காலத்தும் மகாப்பிரளய வொடுக்கத்திலும் அழியாத சிகரத்தையுடைய பெரிய கைலாய பர்வதத்தின்மேல், திருநடனத்தைத் (தரிசித்து) வணங்கித்துதிக்கச் சென்றார்கள். எ - று. (கூ)

தொழுத கையினர் துளங்கிய மெய்யின ருருகிய தொடர்போடு
மழுத கண்ணின ரன்பினர் சென்றுழி யணிநெடு மணிவாயின்
முழுது ணர்ந்தறி நந்திகைப் பிரம்படி முடிதொட நெருக்கூடு
வழுவி யேகினர் திருநடந் தொழுதனர் வழுத்தின ரயனின்றார்.

(இ - ள்.) கூப்பிய கையையுடையவரும், நடுக்கெய்திய சரீர முடையவரும், மனதுருகுந்தன்மையோடு அழுத கண்ணினையுடையவரும், அன்புடையவருமாகி அவர்கள் சென்றபோது, அழகுற்று நீண்ட ரத்தினங்கள் பதித்த முதற் கோபுரவாயிலில் முற்றத்தெரிந்த திருநந்திதேவரது திருக்கரத்தேந்திய பிரம்படி முடிகளிற்பட நெருக்கத்திலே கடந்து சென்று திருநடனத்தை(த்தரிசித்து) ப்பணிந்து துதித்துப் பக்கலில் நின்றார்கள். (எ - று.) (கo)

மறைமு ழங்கிய முழக்கொலி யளவறு மாதிரங் கிழித்தோட
வறைக ருங்கழ லரிமுதற் பிரமரோத் தண்டகோ ளகையோங்க
இறைதி ருப்பதச் சிலம்பொலி மன்னுயிர்க் கினிதளித் திடரோட்ட
நிறைபெ ருங்கண மரகர வெனுந்தொனி பெருநெடு நிலம்போர்ப்ப.

(இ - ள்.) வேதங்களொலிக்கும் முழக்கொலியானது எல்லையில்லாத திசைகளைக் கிழித்துச்செல்லவும், ஒலிக்கின்ற வலிய வீரகண்டாமணி யணிந்த திருமால் பிரமன் முதலானோர் செய்யுந் தோத்திரவொலியானது அண்டகோளகையின் மேலோங்கவும், இறைவராகிய சிவபெருமானுடைய அழகிய திருவடிச்சிலம்பின் ஓசையானது நிலைபெற்ற உயிர்கட்கெல்லாம் இன்பத்தை யநுக்கிரகித்துத் துன்பத்தையகற்றவும், நிறைவுற்ற பெரிய தேவகணங்கள் (துதிக்கும்) அரகரவெனுந் தொனி பெரிய பூலோகமுழுவது மூடவும். எ-று.

இது முதல் மூன்று கவிகள் ஒரு தொடர். (கக)

தேவ துந்துபி முரட்டொடு பஃறொளைச் சில்லரிச் சிறுபாண்டில்
பாவு கண்படு மரம்படு திமிலைவெம் பல்லியத் தொகையார்ப்ப
மேவ ருஞ்சடைப் பகீரதி யுவட்டெழ விண்ணவர் கணஞ்சூழத்
தாவி னந்திகைப் பிரம்பினு லிமையவர் முடிமணி தகர்ந்தோட.

(இ - ள்.) தேவ துந்துபிகளும், மாறுபடத்தொளைத்த பல துவாரங்களில் சில பருக்கைக்கற்கள் பொருந்திய சிறு கைத்தாளங்களும், பரந்த இடமகன்ற கண்களையுடைய அழகு பொருந்திய பம்பையும், திமிலைகளும், பெருமைதங்கிய பல வாத்தியத்தொகுதிகளும் ஆர்ப்பரிக்கவும், சடையிற் பொருந்திய கங்காநதி ஊற்றெடுக்கவும், தேவர் கூட்டஞ் சூழவும், கெடுதலில்லாத திருநந்தி தேவர் திருக்கையிலேந்திய (பொற்) பிரம்பினால் தேவர்கள் கிரீடத்திற்பதித்த நவரத்தினங்கள் பெயர்ந்து சிந்தவும். எ - று. (௧௨)

பனிப்ப டாம்பொதி யிமயமீன் றளித்தருண் மரகதப் பசும்பாவை
கனித்த சிந்தையி னருகுநின் றியற்றிய கமலமென் கரப்பாணி
தொனித்த பன்முறைச் சதிவழி சீர்தொறுந் தூக்கிசை செவிதூங்கக்
குனித்த நாயகன் றிருநடந் தொழுதனர் விண்ணவர் குழாத்தோடும்.

(இ - ள்.) பனிப்படல மூடிய இமாசலமன்னன் பெற்றருளிய மரகதம் போலும் பசுமை நிறமமைந்த உமாபிராட்டியார், கனிவுற்ற திருவுள்ளத்துடன் அருகிலிருந்து இயற்றிய தாமரைபோலும் மெல்லிய கரதாளம் ஒலித்த சதியின் முறைப்படி, பாடுகின்ற பாடல்களின் ஓசையானது சீர்கடோறும் திருச்செவியி லேறவும், திருநடனஞ்செய்கின்ற சிவபெருமானது திருநடனத்தை (தம்முடன் வந்திருந்த) தேவர் கூட்டத்துடன் பணிந்தார்கள். (பிரம விஷ்ணுக்கள்.) எ - று.

குழைந்த சிந்தையர் குமிழிவிட் டொழுகிய கண்ணினர் குழையாநின்
றிழைந்த வன்பின ருருகிய வென்பினர் முகிழ்த்தகை யிணைவாங்கார்
விழைந்த வேட்கையி னின்றன ரயர்ந்தனர் மெய்பொடித் துளநெக்கார்
தழைந்த செஞ்சடைப் பரமனை யாடல்கண் டுவப்பொடுந் துலைநின்றார்.

(இ - ள்.) குழைவுற்ற மனமுடையவர்களும், நீர்க்குமிழிகள் தளிக்கும்படி ஆநந்த பாஷ்பஞ்சிந்தும் விழிகளையுடையவர்களும், குழைந்து கசிந்த அன்புடையவர்களும், உருகிய எலும்பினையுடையவர்களும், (சிரமிசைக்) கூப்பியகையை எடாதவர்களும், விரும்பிய வாஞ்சையோடு நின்றும், சோர்ந்தும், உடல் புளகித்தும், மனநெக்கு விட்டும், தழைந்து செந்நிறம் வாய்ந்த சடை பொருந்திய சிவபெருமான் திருநடனத்தைத்தரிசித்து அன்பின்மேம்பட்டு நின்றார்கள்.

இன்ன ரின்னண மாடல்கண் டுவப்புழி யெறிகதிர்க் கயிலைக்கீழ்
மன்னு சேவலு மரகதக் கொடுஞ்சிறை மயூரமு மினிதுற்ற
வன்ன காலையிற் சூரனும் பதுமனு மரிமுகத் தவனுங்கூர்
மின்னு வெள்ளெயிற் றடுசினத் தாருக னெனப்படு வெய்யோனும்,

(இ - ள்.) இவர்கள் இவ்வகையாகத் திருநடன தரிசனஞ்செய்து களிப்புற்றிருக்கையில், பிரகாசிக்கின்ற கிரணத்தையுடைய மகாகைலாயத்தின் அடிவாரத்தில், பொருந்திய சேவலும் மரகத ரத்தினம்போலும் வளைந்த சிறகினை வாய்ந்த மயிலும் இனிமையாயிருந்தன. அந்த வேளையிற் சூரனும் பதுமனும் சிங்கமுகனும் கூர்மைவாய்ந்து பிரகாசிக்கும் வெள்ளிய பற்களையுடைய கொல்லத்தக்க கோபமுடைய தாருகனென்று சொல்லப்பட்ட கொடியவனும்,

பூத வெங்கணக் குலத்திவர் நால்வரும் பொறிமயிற் கருகேகிப்
பாத கிண்கிணிப் பங்கயம் பொறுத்தநின் பெருந்திறல் சொலற்பாற்
கேத னத்திறற் குக்குடத் தடுதிற லெவர்களத் துவர்கெட்டேன் [ஞே
போதி ஞன்முகத் தலைவனு நும்மடி போற்றுத லெளிதன்றே.

(இ - ள்.) பூதகணக்கொடுங் குலத்திலுதித்த இவர்கள் நால்வரும், புள்ளிகளையுடைய மயிலுக்கருகே போய், குமாரக்கடவுளின் திருவடியாகிய கிண்கிணி மாலையணிந்த தாமரை மலர்களைச்சுமந்த உன்னுடைய பெரிய வல்லபம் (ஒருவராற்) சொல்லுந்தகுதியுடையதோ? துவசமாகிய வெற்றி பொருந்திய சேவலின் பேராற்றலை எவர்தாஞ் சொல்லவல்லவர்? ஐயோ! தாமரை மலரையிடமாகக்கொண்ட நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவனும் உங்கள் பாதங்களைத்துதித்தல் எளிதல்லவே. எ - று. (௧௬)

இவைய றிந்துமற் றறிகில ராமென வெறுழ்வலிக் குடையோர்போற்
கவர்கொ டுஞ்சிறைக் கலுழனு மன்னமுங் கருத்துற மதியாவா
யவம தித்தன வறிந்திலிர் போலுமற் றும்மொடு மடுபோர்க்கென்
றுவைசெ றுப்புழி நும்மொடு நால்வரு முருத்தெழூந் துடனிற்பேம்.

(இ - ள்.) இவற்றையெல்லாந் தெரிந்தும் அறியாதவையென்று (கண்டோர்) கூறும்படி, பெருவல்லபத்திற்கு உரியவர்களைப் போன்று, பிரிந்து நீண்ட சிறகையுடைய கருடனும் அன்னமும் தங்கள் மனத்திற்பொருந்த மதியாதவைகளாய் உங்களை அவமதித்திருக்கின்றன. இவை உங்கட்குத்தெரியாது போலும். உங்களோடு அவ்விரண்டும் வெற்றிபெறத்தக்கபோருக்கு எதிர்க்குஞ் சமயத்தில்; உங்களுடன் நாங்கள் நால்வரும் கோபித்து உடனாக (துணை) நிற்போம். எ - று. (௧௭)

எனமொ ழிந்தன விருசெவித் தொளைபுக வெரிப்பொறி விழிகால
வனம யில்குலச் சிறைபுடைத் தெழுந்தது வாரணஞ் சினஞ்சீறிப்
புனைபு டைச்சிறை யடிதொடப் போர்த்தடு போர்துணிந் ததுபூதத்
தினவிழிக்குலம் வடவைகக் கியவுருத் தெழுந்தன வெதிர்நோக்கி.

(இ - ள்.) என்று கூறிய சொற்கள், இரண்டு செவித் தொளைகளிலும் புகுந்தவுடனே, கண்கள் நெருப்புப்பொறிகளைச் சிந்தும்படி, அழகிய மயிலானது தனதிரு சிறகுகளையும் அடித்துக்கொண்டெழுந்தது. சேவலும் கோபமிகுந்து அலங்காரமுடைய இருபுறச் சிறகுகளும் பாதத்திற்பட விரித்துவெற்றி பெறத்தக்க போர்க்குத்தொடங்கியது. பூதகணத்தினர் கண்கள் வடவாக்கினியைச் சிந்தி அவைகளை உற்றுப்பார்த்த வண்ணமாய்க்கோபித்தெழும்பின.

உருவு சீற்றமொத் தெதிர்வர நோக்கிய வுவணமு முலகோங்கிப்
பொருபெ ருந்திரைப் பிரளயஞ் சுவற்றிய புடைச்சிறை புடைத்தார்
விருகொ டுஞ்சிறை மலரய னன்னமு மெதிர்நடந் ததுதம்மிற் [ப்ப
செருவி ளைத்தடு திமிலமிட் டுரப்பின திருகின சினஞ்சீறி.

(இ - ள்.) கோபமே உருவெடுத்தாற் போன்று எதிர் வருவதைக்கண்ட கருடனும், உலகத்திற்கு மேம்பட்டு மோதும் பெரிய அலையோடு கூடிய பிரளய வெள்ளத்தையுஞ் சுவறச்செய்யத்தக்க இரு சிறகுகளையும் அடித்துக் கொண்டு ஆர்ப்பரிக்க; கமலாசனனாகிய பிரம தேவருடைய இருபெருஞ் சிறகுகளையுடைய அன்னமும் எதிரே நடந்து வந்தது. இவை தம்முள் விளைந்த கோபம் மேலிட்டுப்போர் புரிந்து வெற்றிபெறத்தக்க பேரொலியோடு கர்ச்சித்தன. எ - று. (௧௮)

மேற்படி வேறு.

தெழித்தனவு ரப்பினசி னத்தனக னற்பொறிதெ றிப்பவெதிரே
விழித்தனக டித்தனமி தித்தனவ லங்குதிரை வேலை சிறையாற்
சுழித்தனவு வட்டெழுநெ டுங்கிரிமு டித்தலைது ளக்கியதிரக்
கொழித்தெழுநிலத்துகள்கொழுந்தொடுபடர்ந்துதிசைகொண்டுமறுக.

(இ - ள்.) இவ்விரண்டின் சிறகையடித்துக்கொண்ட காற்றினால், அசைகின்ற அலைகளையுடைய கடலானது சுழித்துப்பெருக்கெடுக்கவும், நெடிய மேருபர்வதமானது கொடு முடிகளாகிய தனது சிகரங்களை யசைத்ததிரவும், கொழித்தெழுகின்ற நிலத்தின் புழுதிகள் கொழுந்தாகப்படர்ந்து திசைகளிற் சுழலவும், பேரொலி செய்தன. கர்ச்சித்தன கோபித்தன நெருப்புப் பொறிபறக்க அவைகளை எதிர்த்துப்பார்த்தன; பற்கள் கடித்தன. பூமியை அழுத்தி மிதித்தன. (எ - று.) (௨௦)

ஆதவனொ ளித்தனன சும்புறுப சும்பொனுல கண்டர்வெருவிப்
போதரநி னைத்தனரி டிக்குலமி டிப்பொடுபொ ரிந்து திருமான்
மீகொடுநெ டுஞ்சிகர மாயிரநி லைத்தவட மேரு வரையு
மாதிரமு ழக்கவரு மாருதமெ னப்பதறி மம்ம ருறுமால்.

(இ - ள்.) சூரியன் மறைந்தனன். வழுக்குதலுடைய பசும்பொன் மயமான தேவலோகத்தில் வசிக்கும் தேவர்கள் அஞ்சி அவ்விடம் விட்டு நீங்கக் கருதினார்கள். இடிக்கூட்டங்கள் இடித்துக்கொண்டு பொரிந்துதிர்ந்தன. மேலோங்கிய நெடிய ஆயிரஞ்சிகரங்களையுடைய வடதிசையிலுள்ள மேருமலையும், திசைகளெல்லாங் கலங்கவருஞ் சண்டமாருதத்தைக் கண்டதுபோலப் பதைபதைத்துத் துக்கிக்கும். எ - று. (௨௧)

வாளெயிற துக்கியக ணத்தலைவர் நால்வருமன ஞ்சினவினார்
கோளுறுசி றைக்கலுழ னோடெதிர்ம லைந்தமர்கொ டுத்த னர்களாற்
றாளொடுசெ டித்தலைக டித்துதறி டச்சிகித டஞ்சி றையினான்
மூளுறுசி னக்கலுழ னைப்பிடர்பு டைத்ததுமு ழக்க மெழவே.

(இ - ள்.) ஒளிபொருந்திய பற்களைக்கடித்த அந்த நான்கு கணத்தலைவர்களும் மனத்திற் கோபமிகுந்தவர்களாய், வலிதங்கிய சிறகுகளையுடைய கருடனோடெதிர்த்துப் போர்செய்தார்கள். கோபமிக்க கருடனுடைய கால்களோடு முருட்டுத்தலையையுங் கடித்துதறவேண்டுமென்று, மயிலானது தனது பெருஞ் சிறகினாற் பேரொலியுண்டாகும் வகையாக அதன் கழுத்திலடித்தது. எ - று. ()

ஆரணமு தற்றலைவ னேறியத டஞ்சிறைய னத்தி னுடனே
வாரணநெ டுங்கொடிம லைந்ததிற லிதெனவ ழங்க வசமோ
கூரடியு கிர்ச்சுவடு கொண்டெகின நெஞ்சுகுறை பட்ட குறைவாய்ச்
சோரியுக ளித்தெழவ யச்சிறைபு டைத்ததுது றக்க மதிர.

(இ - ள்.) வேதங்களை யுரைத்த முதல்வனாகிய பிரமதேவன் ஏறுகின்ற பரந்த சிறகுகளையுடைய அன்னத்தோடு, நீண்டகொடியாகிய சேவல் போர்செய்த ஆற்றலை இவ்வகையென்று சொல்லவியலுமோ? தனது கூரிய கால்களின் நகக்குறியினால் அன்னத்தின் நெஞ்சைக்குத்திய அக்காயத்தினின்றும் உதிரம் பெருகியொழுகும்படி தேவலோகமும் அதிரத்தக்கதாய்த் தன்வலிய சிறகாலடித்தது. எ - று. (௨௩)

இத்தலைய ருஞ்சமரிழைத்தகரு டக்கொடியி ழந்து நெடுவான்
மொய்த்தசிறை தட்டியெழ வோதிமம தன்பிறகு முந்து றுவதாற்
கைத்தலைநெ டுங்கதைபொ றுத்தெறிக ணத்தலைவர் கண்டு கதழ்வார்
சித்திரம யிற்கொடிய குக்குடம வற்றின்வழி சென்று தொடர.

(இ - ள்.) இவ்விடத்திற் பெரும்போர் செய்தகருடன் வலியிழந்து பெரிய ஆகாயமார்க்கமாய்த் தன்னிரு சிறகையும் புடைத்துக்கொண்டு பறந்தோட, அன்னமும் அதனைப்பின்றொடர்ந்து பறக்கின்றமையால், அழகியமயிலும் கொடியாகிய சேவலும் அவற்றின்பின்னே சென்று துறத்த, கைகளில் நீண்ட கதாயுதமேந்திப் பகைஞர்மேலெறியும் பூதகணநாதர் அதுகண்டு மனங்கொதிக்கின்றார்கள். எ - று. (௨௪)

சென்றிடுபெ ருந்திசையு மண்டமுமதிர்ந்துயிர்சி தைந்து மறுக
மன்றன்மல ரோனுலக டைந்தெகின மறைந்தறுவ யக்க லுழனு
நின்றெழுது றுக்கொடுமு குந்தனுல கத்திடைநி மிர்ந்து மறையக்
கன்றியசி னத்தொடுதொ டாந்தடிப டர்ந்ததுக லாப மயிலே.

(இ - ள்.) அன்னமானது தான் செல்லுந்திசைகளும் அண்டகோடிகளும் அதிர்வெய்தி ஆங்குள்ள சீவராசிகளும் அழிந்துதுக்கிக்க, மணங்கமழுந் தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனுடைய சத்தியலோகத்தை யடைந்து மறைந்துவிட்டது. வெற்றிதங்கிய கருடனும் அங்கிருந்துண்டாகிய பயத்துடன் விஷ்ணுமூர்த்தியின் வைகுந்தத்திலே யோடி மறைந்துவிட, தோகையையுடையமயிலானது மிகுந்தகோபத்துடன் பின்றொடர்ந்து சென்றது. எ - று. (௨௫)

ஆயிரமி தழ்க்கமல பீடிகையி ருக்குமய னுதி யுலகிற்
பாயதுக ணத்தினில னத்துயிர்செ குத்தது படர்ந்து நெடுவா
னேயதுமு குந்தனுல கெய்தியவி ருஞ்சிறைவ யக்க லுழனைப்
போயுயிர்ப றித்ததுமு குந்தனுல கம்பொடிப டச்சி தறியே.

(இ - ள்.) ஆயிரம் இதழ்களையுடைய தாமரைப்பீடத்திலிருக்குஞ் சதுர்முகனுடைய சத்தியலோகத்தில் முதலிற்பாய்ந்தது. ஒரு கணப்பொழுதிற்குள்ளாக அன்னத்தினுயிரை யகற்றியது. அங்கிருந்து சென்று, நீண்ட ஆகாயவழியாக வைகுந்த மெய்தி அவ்வைகுந்தம் தூள்படும்படியழித்து, அங்கே மறைந்திருந்த பெரிய சிறகுகளையுடைய வெற்றிபொருந்திய கருடனைய ணுகி அதன் உயிரைப் போக்கியது. எ - று. (௨௬)

அங்கணம ரர்க்குமுத னுயகன்மு குந்தனுல கத்தை யழியாச்
செங்கமல நாயகனி ருந்தவுல கப்பதவி சிந்தி டமுனிந் [சூழ்
தெங்கணும்வெ குண்டுகொடி வாரணமு யிர்ப்பொறைகொ றித்தெ
வெங்கணிகல் வாளெயி றுடைத்தலைவ ரெங்கணும்வெ குண்டு முனிவார்.

(இ - ள்.) கொடியாகிய சேவலானது, அவ்விடத்திலே தேவர்களுக்கு முதற்றலைவராகிய விஷ்ணுவின் (வைகுந்த) லோகத்தையழித்து, செந்தாமரைமலரிலெழுந்தருளிய பிரமதேவன் பதவியாகிய சத்தியலோகமு மழியும்படி கோபித்து, இவ்விருபதவிகளிலுமுள்ள பலசீவராசிகளையுங் கோபித்துப் புசித்தது. அக்கினிசூழ்ந்த கொடிய கண்களையும் வலியமைந்து ஒளிசெய்யும் பற்களையுமுடைய கணத்தலைவர்கள் நால்வரும் எங்கெங்குங் கோபித்துச் சீறுவர்.

இப்படிய ருஞ்சமரி ழைத்திடும திர்ப்பினிலெ ழுந்த விமையோர்
கப்படிவி ரற்பதமு றுத்தநெடி தோடினர்க லக்க முறுவா

றெப்படியி னிக்குடியி ருப்பதென விம்மலினி ரங்கி வெருவா
மைப்படிக ளத்தனட னம்புரித ருங்கயிலை வந்த ணுகினார்.

(இ - ள்.) இவ்வண்ணமாகப் பெரும்போர் செய்யும் அதிர்ச்சியால் பயந் தோடிய தேவர்கள், தம்பாதங்களிலுள்ள கிளைகள்போன்ற விரல்கள் நிலத்திற் பதிய விரைந்தோடிக்கலங்கி, இனிநாம் எங்ஙனங் குடியிருப்போமென்று விம் முதலுடன் துக்கமெய்தி, ஆலாலவிடந்தங்கிய நீலகண்டத்தையுடைய சிவபெ ருமான் ஆனந்த நடனமியற்றுந் திருக்கைலாயமலையைச் சேர்ந்தார்கள். எ-று.

"கப்படி விரற்பதம்" என்பதை, "அடிகப்பு விரல்பதம்" எனமாற்றுக. ()

அன்னவர்தி ருக்கயிலை யண்மினர்கொ டுஞ்சமர டர்த்த மயிலு
மின்னெயிறு டைக்கணமும் வாரணமு மக்கயிலை வெற்பு மருவி
மன்னியொரு பாகமுற முந்தமர ரம்பொனணி வாயி லினுறு
மின்னலினி யாரொடும்வி ளம்புதுமெ னத்தனியி ரங்கி மெலிவார்.

(இ - ள்.) அத்தேவர்கள் திருக்கைலையை யடைந்தார்கள். பெரும்போர் புரிந்தமயிலும், மின்னுகின்ற பற்களையுடைய பூதகணத்தலைவர்களும், சேவ லும் அக்கைலாயகிரியை யடைந்து ஒருபக்கலிற் பொருந்தியிருக்க,முற்படவந்த தேவர்கள் அழகிய பொன்னாலாகிய திருவாயிலையடைந்து, நமக்குற்றதுன் பத்தை இனியாவரோடும் விண்ணப்பிப்போமென்று தனித்தனி இரக்கமெய்தி னார்கள். எ - று.

"யாரொடும் விளம்புதும்" என்றது - கருடனும் அன்னமும் அழிந்த துடன் வைகுந்தமும் சத்தியலோகமும் பாழ்படுத்தப்பட்டமையின் அவற்றின் இறைவர்களான திருமால் பிரமன் இவர்களோடு முறையிடுவதா, துன்பிழைத்த மயிலும் சேவலும் குமார சுவாமியின் வாகனமுங் கொடியுமாகலின் அவர் பால் முறையிடுவதா,சூரன் பதுமன் சிங்கன் தாரகனெனும் கணத்தலைவர்கள்சிவபெரு மானுடைய ஆட்களாகலின் அவர்பால் முறையிடுவதாவென்று தேருதுவருந் தினரென்பதாம். (உ௯)

ஆயதுநி கழ்ந்தபொழு தாரணமு தற்பரனை யாடல் பரவிச்
சேயொளிவி ரித்தபத பங்கயம்வ ணங்கினர்தி ருப்பி வரனு
மாயனையெ திர்ந்துநெடு வானவர்கு ழாமொடுவ ணங்கி வழிபா
டேயதுபு ரிந்துவெரு வந்துபடு தங்குறையி ரந்து புகல்வார்.

(இ - ள்.) ஆகிய இச்செய்தி நிகழ்ந்த காலத்தில், வேத முதல்வராகிய சிவபெருமானை நடன காலத்தில் தரிசனஞ்செய்து, செவ்வொளிபரப்பிய பாத தாமரையைப் பணிந்தவர்கள் திருப்பிவரவும், மிகுதியாகிய வானவர்கூட்டமாக விஷ்ணுமூர்த்தியைக்கண்டு வணங்கி, தகுதியாகிய வழிபாடுகளைச்செய்து பயங் கொண்டு தமக்குற்ற குறைகளை முறையிட்டு யாசித்து விண்ணப்பஞ்செய்யத் துதிப்பாராயினர். எ - று. (௩0)

தரவுக் கொச்சகக்கலிப்பா.

மூவா முதலே முளரித் திருநாபிப்
பூவா னுலகளித்த புண்ணியனே யெம்முயிரைக்
காவா யெனிலெவரே காப்பார் கடலுறங்குந்
தேவா பசுந்துழாய்ச் சென்னிப் பெருமானே.

(இ - ள்.) அழியாத முதற்பொருளே! திருவுந்தி யாகிய செந்தாமரைமலரினால் எல்லா வுலகங்களையும் படைத்த புண்ணிய மூர்த்தியே! நீ எங்களுயிரைக் காவாது விடுவாயாகில் வேறெவர்தாம் காக்கவல்லவர்? க்ஷீராப்தியில் அறிதுயில்புரியுந் தேவனே! பசிய துளவமாலையணிந்த திருமுடியையுடைய கடவுளே!

அன்றோர் களிறுதி மூல மெனவழைப்பச்
சென்றோடி யோடா விடர்தீர்த்த சேவகனே
குன்றா டினங்காத்த கோவே யுலகளந்து
நின்றா யெரிவிழிக்கு நேமிப் பெருமானே.

(இ - ள்.) முன்னாளில், ஒருயானை [கஜேந்திரன்] ஆதிமூலமேயெனக் கூப்பிட விரைந்தோடிச்சென்று நீங்காத துன்பத்தைத்தொலைத்த சேவகமுடையரே! (கோவர்த்தன மென்னும்) குன்றினால் பசு மந்தையை (இந்திரன் பெய்வித்த சோனைமாரியினின்றும்) காத்தருளிய தலைவரே! உலகத்தை (திரிவிக்கிரமாவதாரங்கொண்டு) அளந்து நின்றவரே! தீயைப்போலப் பிரகாசிக்கும் (சுதரிசனமென்னும்) சக்கிராயுத மேந்திய பெருமானே! எ - று. (௩௨)

ஐயோ வமர ருலகிறந்த தாழியாய்
வெய்யோ மெமைக்காப்பா ருன்னன்றி வேறுளரோ
மையோடு மேனி மயூரங் கடுஞ்சிறையாற்
செய்யா ளுறைநின் றிருநாடுஞ் சிந்தியதே.

(இ - ள்.) ஐயோ! சக்கரதாரியே! தேவலோகம் அழிந்தது- கொடியோங்களாகிய எம்மை உன்னையன்றிக்காப்போர் வேறொருவருண்டோ? மேகம் போலும் நீல நிறமேனியையுடைய மயிலின் வலிய சிறகினால், திருமகள் வசிக்கும் உன்னுடைய திருநாடாகிய வைகுந்தமும் அழிந்தது. எ - று. (௩௩)

வாழி மலரோ னிருக்கு மலர்க்கோயில்
பூழி படச்சிதைந்து போயினதே புங்கவரு
மாழி வரைப்புறத்தோ வண்டத்தி னப்புறமோ
வூழி யளந்தா யெளியே முணரோமால்.

(இ - ள்.) தாமரை மலரிலிருக்கும் பிரமதேவன் எழுந்தருளிய சத்தியலோகமும் புழுதியாகச் சிதைந்துபோயிற்று. (அவ்விடங்களிலிருந்த) தேவர்களும், சக்கரவாளகிரியின் அப்புறமோ இவ்வண்டத்திற் கப்புறமோ [சென்றார்கள்.] ஊழிக்காலங்களை யளவிட்டவரே! அடியேங்கள் அறிந்திலோம். (௩௪)

நீரோறு தாமரையோ னேறு நெடுந்தூவிச்
சீரோறு மன்னஞ் சிதைந்ததாற் றேந்துளவக்
காரோறு பூங்கமலக் கண்ணா கடல்வண்ணா
போரோறே நீயேறும் புள்ளரசும் போயிற்றால்.

(இ - ள்.) தேன்றுளிக்குந் துளவமாலையணிந்த கருநிறமமைந்த செந்தாமரைக்கண்ணையுடையவரே! கடல்போலும்நீல வர்ணமுடையவரே! நீரிலுள்ள தாமரையில் வசிக்கும் பிரமதேவன் ஊர்ந்து செலுத்தும் நெடிய தூவியையுடைய சிறப்புத்தங்கிய அன்ன மழிந்தது. நீ ஏறிச்செலுத்தும் பட்சி ராஜனாகிய கருடனும் உயிர்போயது. எ - று. (௩௫)

வெண்பாற் பிறையெயிற்று வெவ்வாய்க் கணநால்வ
ருண்பா னவர்க்கிவ் வுலகடையப் போதுமோ
வெண்பா லடங்குமோ வெம்மோ ரிறப்பெல்லாங்
கண்பார் கருணை சிறிதுளவேற் காண்பேமால்.

(இ-ள்.) பால்போலும் வெண்மையாய், பிறைபோலும் (வளைந்த பற்களை யும், கொடிய வாயையுமுடைய கணநாதர் நால்வரும் உண்ணப்புகுந்தால் அவர்கட்கு இவ்வுலகமுழுவதும் போதுமோ? (போதாது) எம்மனோர் இறத்தல் கணக்கிலடங்குமோ? திருக்கண் நோக்கியருள்க. சிறிதுகருணையிருக்குமாயின் இறந்தோரை மீண்டுங்காணப் பெறுவோம். எ - று. (௫௬)

என்று வணங்கி யிமையோ ரெதிர்நிற்பப்
பொன்றுண் முளரிப் புயல்பூத் தனையோனும்
பன்றுண் மலர்க்கமலப் பண்ணவனும் போயினார்
மின்று லங்கிலைய வேலோற் குறுகினார்.

(இ - ள்.) என்று தேவர்கள் பணிந்து எதிர்நிற்க, பொன்னிறமமைந்த அன்றலர்ந்த தாமரைபோலும் அவயவங்கள்வாய்ந்த மேகம்போலும் நிறந் தங்கிய திருமாலும், யாவருந்துதிக்கின்ற புதியதாமரை மலர்ப்பீடத்தை யுடைய பிரமதேவனுஞ்சென்று, மின்னலைவீசி யசைகின்ற தகட்டுவடிவாகிய வேற்படையேந்திய குமாரசுவாமிபால் அடைந்தார்கள். எ - று. (௫௭)

கண்டா ரிருகண் களிகூர்ந்தா ரோர்மருங்கு
தண்டா மரைமேக மன்னான் றனிநின்றா
னொண்டா மரைத்தவிசு வீற்றிருக்கு மோதிமத்தோன்
விண்டா னுழந்தபரி செல்லாம் விளம்புவான்.

இ - ள்.) இருவிழிகளாலுந் தரிசித்து ஆனந்தமிகுந்தார்கள். குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர்ந்த மேகத்தையொத்த திருமால் ஒருபக்கத்தில் தனித்து நின்றார். ஒளிபொருந்திய கமலாசனத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னவாகனனாகிய பிரமதேவன் தேவலோகம் பட்டபாடு முழுவதையும் விண்ணப்பிக்கலாயினன். எ - று. (௫௮)

வாரார் முலையுமையா ளீன்ற மகவேயெம்
போரேறே வானுலகங் காத்தளித்த புண்ணியனே
தாரே றியகடப்பந் தாரோய் சமர்கடந்த
வீரா மயூரா விளங்கிலைய வேலோனே.

(இ - ள்.) கச்சணிந்த குயங்களையுடைய உமாபிராட்டியார் ஈன்றருளிய குழந்தாய்! போர்க்களத்தில் எங்கள் ஆண்சிங்கமே! தேவலோகத்தைக் காத் திரட்சித்த புண்ணியசுரூபியே! கடப்பமலர்களாற்கோத்த மாலையணிந்தவனே! (அசுரர்களோடாற்றிய) யுத்தத்தை வெற்றிகொண்ட வீரனே! மயில் வாகனனே! பிரகாசிக்கின்ற இலைவடிவானவேலாயுதனே! எ - று. (௫௯)

தேவே புரந்தரனார் செல்வமே செங்கமலப்
பூவே யெனக்கும் பொருள்விரித்த புண்ணியனே
தூவே யலங்கிலைய வேலோய் சுருதியருக்
கோவே கடம்பலரும் பன்னிருதோட் குன்றமே.

(இ - ள்.) கடவுளே! இந்திரனுக்குப் (பகைவரான சூரனாதியரையகற்றிக் கற்பகநாட்டை முறைப்படியளித்த) செல்வம் போல்வானே! செந்தாமரை மலரில் வசிக்கும் அடியேனுக்கும் வேதப்பொருளைவிளக்கிய புண்ணியவானே! பரிசுத்த மெய்திப்பிரகாசிக்கின்ற தகட்டுவடிவாகிய வேற்படையேந்தியவனே! வேதத்தினின்றும் நீங்காத தலைவனே! கடப்பமாலை விளங்குகின்ற பன்னிரு புயங்களையுடைய சிறுகுன்று போல்வானே! எ - று. (௪0)

நாதா வொருதனியே நான்மறையே நாப்புரட்டி
யோதா மறையே பிரணவத்தி னுண்மயமே
பூதாதி நின்றும் புலப்படாப் போர்க்களிறே
வேதாக மத்துறையே தண்கருணை வெள்ளமே.

(இ - ள்.) தலைவனே! ஒப்பற்ற ஏகனே! நான்குவேத சொரூபியே! நாவைப்புரட்டிச் சொல்லப்படாத மறைபொருளே! பிரணவத்தில் நிறைந்த பூரணமே! பூதாதிகளிலிருந்துங் காணப்படாத போர்புரியும் யானைபோல்வானே! வேதசிவாகமங்களின் துறையே! குளிர்ச்சிபொருந்திய கிருபைப் பெருக்கமே! எ - று. (௪௧)

தேங்கு திரைததும்பு தெண்ணீரின் மெய்ஞ்ஞான
மோங்கி நிரம்பு சரவணத்தி னுற்பவமே
தாங்கு சிறியதண்டைத் தாளா யிடையறாப்
பூங்கருணை யாறு முகம்பூத்த பொற்கிரியே.

(இ - ள்.) தேக்கெடுக்கும் அலைகள் ததும்புகின்ற தெளிந்தநீரில் மெய்ஞ்ஞானம் பெருகிநிரம்பிய சரவணப்பொய்கையில் திருவவதாரஞ்செய்தவனே! சிறியதண்டைசூடிய திருவடிகளையுடையவனே! நீங்காது திருவருள் பெருகும் ஆறு திருமுகங்களையுடைய பொற்கிரிபோல்பவனே! எ - று. (௪௨)

கூற்ற முரணறுக்கு மாறெழுத்துக் கொண்டடியேம்
போற்று மெளியாய் வலியாய் புராதனனே
யாற்ற லரும்புலத்தை வென்றோ ரகந்தெளிய
நோற்றிழைத்த வெண்ணூ னுடங்குமணி மார்போனே.

(இ - ள்.) கூற்றுவனுடைய வலிமையையகற்றும் சடக்ஷர மநுவைத் தியானஞ்செய்து அடியேங்கள் துதிசெய்கின்ற எளிமையானவனே! வலியோனே! பழையோனே! வெல்லுதற்கரிய வலியமைந்த ஐம்புலன்களை வென்றவர்கள் மனந்தெளியும்படி தவஞ்செய்தியற்றிய வெள்ளிய உபவீதமசையுந் திருமார்புடையவனே! எ - று. (௪௩)

என்று பலவு மெடுத்தேத்திக் கைகூப்பி
நின்று மலர்வாய் புதையா நிகழ்த்துவான்
கன்று சினக்கணமுங் கார்மயிலுங் குக்குடமுஞ்
சென்றெகினத் தோடுங் கலுழனொடுஞ் சீறினவால்.

(இ - ள்.) என்று பிரமதேவன் பலவகையாகவும் எடுத்துத் துதித்துக் கைகுவித்து ஒருபக்கலில் நின்று வாய்பொத்திக்கொண்டு சொல்லுகின்றான். மிக்க கோபமுடைய பூதகணமும், கரியமயிலும் சேவலும்போய் அன்னத்துடனும் கருடனுடனும் போர்செய்தன. எ - று.

(௪௪)

சீறுஞ் செயலொழிந்த திண்சிறைய வன்கலுழ
னேறுந் தமியே னெனைத்தாங்கு மோதிமத்தோ
டாறுஞ் சிறகோய்ந் தலமந் தமரிழுந்து
மாறுஞ் சினவாய்ப் புறங்கொடுத்து வானடைந்த.

(இ - ள்.) போர்புரிதலற்ற வலிய சிறகினைவாய்ந்த கருடத்தலைவனும், அடியவனுகிய என்னைத்தாங்குகின்ற அன்னத்துடன் அசைந்துகொண்டிருக்குஞ்சிறகுகளோய்ந்து வருந்திப் போர்புரிதலை விட்டுப்பகைவர்க்குப் பயந்தவைகளாய்ப் புறமுதுகுகாட்டித் தேவலோக மெய்தின. எ - று. (௬௫)

பின்போ யெனதிருக்கை மாளப் பெரிதிழைத்து
வன்போடென் ஞேதிமத்தை மாய்த்து வயக்கலுழ
னென்போ டொடிய முடித்துமறுத தேகினவாற்
பொன்போ லுருவா யரியுலகும் போயிற்றால்.

(இ - ள்.) பொன்போலுந் திருமேனியை யுடையவனே! அவைபின்றொடர்ந்து சென்று என்னுடைய பீடம்முதலியவை அழியும்படி மிகத்தீங்கிழைத்து, வலிமையுடனேயடியேன் (வாகனமாகிய) அன்னத்தை அழித்து வெற்றியுள்ள கருடனது எலும்புகளும் ஒடியும்படி கொன்று திரும்பிப்போயின. திருமாலினுலகமாகிய வைகுந்தமும் அழிந்துபோயிற்று. எ - று. (௬௬)

வானோ ரநேக ரிறந்தாரவ் வானோரி
னேனோர் வடவரையும் பல்வரையு மெய்தினார்
யானோ புகல்வே னிவர்பிழைத்தா ரிங்குற்றார்
தேனோ டினவண் டுழூந் தெரியலாய்.

(இ - ள்.) தேவர்களில் அநேகர் இறந்து பட்டார்கள். அத்தேவரில் மற்றையோர் மேருமலையையும் பலமலைகளையுஞ் சென்றடைந்தார்கள். (அவ்விடயத்தை) அடியேனோ சொல்லவல்லவன்? இவர்கள்தான் பிழைத்தவர்கள். (என்னுடன்) இங்குவந்தார்கள். [தேன்] பெண்வண்டுகளுடனே கூட்டமாகிய ஆண்வண்டுகளும் குடைந்துகொண்டிருக்குங் கடப்பமலர் மாலையணிந்தவனே!

என்றுரைத்த வெல்லாந் திருச்செவிதாழ்த் தெம்பிரான்
குன்றுருவ மன்ன கணத்தோர்க் கொணர்கென்று
னின்ற கணத்தோர் நெடிதோடிக் கூவுறலு
மன்றிழைத்த சூரன் முதலோர்வந் தண்மினார்.

(இ - ள்.) என்றிவ்வாறு எமது பெருமானுகிய குமாரசுவாமி, கூறியவற்றையெல்லாம் திருச்செவியிற்கொண்டு, மலைபோலும் வடிவமைந்த அப்பூதகணங்கள் நால்வரைக்கொண்டுவருகவென்று கட்டளையிட்டனர். அருகிருந்த கணத்தவர்கள் விரைந்தோடிக்கூப்பிடவும், தீமையிழைத்தசூரன் முதலானோர் வந்து சேர்ந்தார்கள். எ-று. (௬௮)

நாவாய் வறப்பக் குறுந்தா ணடுநடுங்க
வோவாத் திறலோய்ந் துயிர்நடுங்கி யுள்ளழிந்து
மேவா வெருவெருத்து நின்றனரால் வெங்காலத்
தீவாய் விழித்தவிழி பாலிற் றிகழ்ந்தனவால்.

(இ - ள்.) நாவும் வாயும் வறளவும், குறுகியகால்கள் நடுங்கவும், நீங்காத வல்லபமும் நீங்கி, உயிர்நடுக்கெய்தி மனக்கலக்கமுற்று, மிகப்பயந்து வந்து நின்றார்கள். வெவ்வியசுழல்காற்று ஊழித்தீயுடன்கலந்ததுபோன்ற தன்மையுற்றுப் பார்த்தவிழிகள் பால்போல் வெளிதாய் விளங்கின. எ - று. (௪௯)

வந்தா ரடியற்ற மாமரம்போல் வீழ்ந்துபணி
தந்தா ரவரைத் தனிவே லிறைநோக்கிச்
செந்தா மரையுலகு மேலுலகுஞ் சேதித்தீர்
நந்தா வலிதொலைத்து வானவர்த நாடழித்தீர்.

(இ - ள்.) வந்து அடியற்ற பெருமரம்போல வீழ்ந்து பணிந்தார்கள். அப்பூதகணங்களை யொப்பற்ற வேற்படைதாங்கிய இறைவன் கண்டு, சத்தியலோகத்தையும், அதன்மேம்பட்ட வைகுந்தத்தையும் பாழாக்கினீர்கள். தேவர்களது கெடாதவல்லபத்தை யகற்றி, அவர்கள் உலகத்தையும் அழித்தீர்கள். எ-று.

நீவி ரினிப்போய் நெடுநீர்ப் பெருநிலத்துப்
பாவ நிருதர்குலத் துற்பவித்துப் பன்முறையாற்
றேவ ரிவர்க்கிடுக்கண் செய்வீர் கடைமுறையெம்
பூவிலைய வேலாற் றுலைந்து கதிபுகுவீர்.

(இ - ள்.) நீங்கள் இனிப்பெரிய கடல்சூழ்ந்தவிசாலமான பூலோகத்திற்போய், பாவச்செயலையுடைய அசுரர்குலத்திற்றோன்றி, பலவகையாலும் தேவர்களாகிய இவர்களுக்குத்துன்பஞ் செய்வீர்கள். இறுதியில் எம்முடைய வழகிய அச்ச வடிவாகிய வேலாயுதத்தாலுயிரிழந்து கதியடைவீர்கள். எ - று. (௫௧)

என்னுங் கடுஞ்சாபங் கேளா விகற்பூதர்
மின்னுஞ் சுடரிலை வெள் வேலோற் பதம்போற்றி
மன்னுங் கொடியே நிருதர்குலம் வைகுறினு
நின்னன் பகலாத நெஞ்செமக்கு வேண்டுமால்.

(இ - ள்.) என்கின்ற கடுமையாகிய சாபவார்த்தையைக்கேட்டு வலிபொருந்திய பூதகணங்கள், பிரகாசிக்கின்ற வொளிபொருந்திய வெள்ளிலைபோன்ற வேலாயுதமேந்திய குமாரக்கடவுளது திருவடிகளைத்துதித்து, கொடியேங்களாகிய நாங்கள் அசுரர்குலத்திலிருந்தாலும் தேவரீருடையபத்தி நீங்காத மனதையடியேங்களுக்கு அநுக்கிரகிக்கவேண்டும். எ - று. (௫௨)

ஈதன்றி மற்றொன் றுனதா லெளியோங்கள்
போதுங் குலத்துப் புரிதவத்தா னெட்டிலைவேல்
காதுந் திறத்திறக்குங் காலை மயிலாகிப்
பாதம் பொறுக்கக் கொடியாகப் பாலிப்பாய்.

(இ - ள்.) இஃதல்லாமல், மற்றோர்வேண்டுகோளுமுளது. (என்னெனில்) அடியேங்கள் பிறக்குமசுரகுலத்திற்செய்கின்றதவத்தால், நெடிய இலைபோலும் வேலாயுதங் கொல்லுந்தன்மையால் இறக்குங்காலத்தில், மயில்வாகனமாய்த் தேவரீர் திருவடியைத் தாங்கவும், (சேவலாகித் தேவரீருக்குத்) துவசமாகவும் வரந்தருளவேண்டும். எ - று. (௫௩)

ஆய் வரமிரண்டு மெம்பா லருடியெனத்
தூய முறுக்கெயிற்றுச் சூரன் பதுமனொடு

மேய வுவகையொடும் பெற்றூர் மிகுதவத்தான்
மாயை வயிற்றிலிவர் நால்வோரும் வைகினர்.

(இ - ள்.) ஆகிய இரண்டுவரங்களையும் அடியேங்களுக்கு அருளுகவென்று வெள்ளிய வளைந்த பற்களையுடைய சூரனென்பவன் பதுமனோடு பொருந்திய சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டனன். மிக்கதவத்தினால் இந்நால்வரும் மாயையின் வயிற்றில் கருவடைந்தார்கள். எ - று.

“சூரன்பதுமனோடு மேய உவகையொடும் பெற்றான்” என்றது சூரன் பதுமனென்னு மிவ்விருவரும் ஓர்வடிவாய்ப் பிறக்கவரம் பெற்றுக் கொண்டமையின். இது காரணத்தினாலேயே சூரபதுமனெனும்பெயர் விளங்கலாயது.

மாளா வலிதொலைந்து மாண்ட வயக்கலுழன்
றாளா ரரவிந்த னேறுந் தனிபெகினந்
தூளாய் முடிந்த சுரருலக மெம்பிரான்
றோளா றிரண்டுடையான் சொல்லினிலை பெற்றனவால்.

(இ - ள்.) அழியாதவல்லப மழிந்திறந்த வெற்றிதங்கிய கருடனும், நாளத்தையுடைய தாமரையைப் பீடமாகக்கொண்ட பிரமதேவனேறிச்செலுத்தும் அன்னமும், தூசுபட்டழிந்த தேவலோகமும், எமது பெருமானாகிய பன்னிரு திருப்புயங்களையுடைய குமாரக்கடவுளின் திருவாக்கினால் பண்டைய நிலைமையுற்றன. எ - று. (௩௫)

மூரிக் கமல விழியாற்கு மூதுணர்ந்த
வேரிக் கமலத் தயற்கும் விடையருளி
வாரிக் கருணைப் பெருமான் மயிலுகைத்துப்
பாரித்த கந்தப் பணிவரையிற் போயினன்.

(இ - ள்) பெருமைதங்கிய செந்தாமரைபோலும் விழியையுடைய திருமாலுக்கும் தேன்பொருந்திய கமலாசனத்தையுடைய மூதறிவு பொருந்திய பிரமனுக்கும் விடைகொடுத்தனுப்பி, கருணைக்கடலாகிய குமாரசுவாமி மயில் வாகனமேறிச்செலுத்தி மிகப்பெரிதாயுள்ள குளிர்ச்சி வாய்ந்த கந்தமாதனகிரிக்கெழுந்தருளினர். எ - று. (௩௬)

என்று மிளையா னியம்பு மொழிதிறம்பாத்
துன்று துணைத்தடந்தோட் சூரன் பதுமனொடு
மொன்று தனிவயிற்றி னோருருவா யுற்பவித்தார்
நின்ற விருவ ருடன்பிறந்தார் நீணிலத்தில்.

(இ - ள்.) எக்காலமும் இளையவன் சொல்லும் வார்த்தையைத் தடுக்காத நெருங்கிப்பரந்த இருதோள்களையுடைய சூரனும், பதுமனென்பவனும், பொருந்திய மாயையின் ஒப்பற்ற வயிற்றில் ஒரேவடிவமாய் இப்பூமியிலுதித்தார்கள். மற்றையவிருவரும் (தனித்தனியே) உடன்பிறந்தார்கள். எ - று.

சூரனாதிய நால்வர் மூவராய் பிறந்தார்களென்க. (௩௭)

சூலப் படைபொறுத்த சூரபன்ம னென்றொருவன்
சீலக் குணமொழிந்த சிங்கமுக னென்றொருவன்
சாலத் தவமிழைத்த தாருகனென் றொன்றொருவன்
ஞாலத் தசுரகுல மன்னவராய் நண்ணினர்.

(இ - ள்.) சூலாயுதமேந்திய சூரபன்மனென்றொருவனும், நற்குணநீங்கிய சிங்கமுகனென்றொருவனும், மிகத்தவஞ்செய்த தாரகனென்பவன் ஒருவனும் (ஆகவிம்மூவரும்) பூலோகத்தில் அசுரகுல மன்னவர்களாகப் பிறந்தார்கள்.

பூவிற் பொலியும் புனைகழலோன் போர்வேலாற்
காவற் கணத்தோ டிருவர் கலந்தொழிந்தார்
தூவிற் பொலிசூலச் சூர னுயிரிறந்து
சேவற் கொடியு மயிலுமெனச் சென்றெழுந்தான்

(இ - ள்.) தாமரைமலர்போலும் விளங்கும் அழகமைந்த திருவடியை யுடைய குமாரக்கடவுளின் யுத்தத்தில் வேற்படையாலிறந்து, (சிங்கமுகன் தாரகன் என்னும்) இருவரும் திருக்கைலையின் காவற்கணத்தோடு கலந்து போனார்கள். பரிசுத்தமான வொளிவீசும் சூலாயுதந்தாங்கிய சூரபன்மன்உயிர் நீங்கி,கொடியாகிய சேவலாகவும் (வாகனமாகிய) மயிலாகவும் வடிவங் கொண்டனன். எ - று. (௫௯)

ஈது நிருதர்பிரா னெய்தியவா றிக்காதை
யாதி முதனு ளரும்பியதா லென்றருளிச்
சூத னுரைத்தபரி செல்லாந் துரிசறுத்த
மாதவத்தோர் கேட்டு வழுத்தி மகிழ்சிறந்தார்.

(இ - ள்.) இதுதான் அசுரமன்னனாகிய சூரபன்மனடைந்தவகை. அச்சரித்திரம் முதற் கடவுளாகிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியது என்று சூதமுனிவர் கூறியவகை முழுவதையும், (ஆணவாதி) முக்குற்றங்களை யொழித்த பெருந் தவசிகளாகிய நைமிசாரணிய முனிவர்கள் கேட்டுத்துதித் துக்களிகூர்ந்தார்கள். எ - று. (௬0)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஈங்கிவணிப் பரிசாய தெனவுணர்த்த வுணர்ந்தனம்யா மினிநீ யைய
வாங்குபிறை வளையெயிற்று வாளவுண ருயிரொழிய மடிந்த ஞான்று
வீங்குதுணைப் பணைத்தமுலை யயமுகியு மிவட்பயந்த வெய்ய வேற்கட்
டாங்குகருங் குழன்மாயையெனுமவளு மொழிந்தவழி சாற்றவேண்டும்

(இ - ள்.) ஐயனே! நாங்கள் இவ்விடத்தில் இச்சரித்திர மிவ்வாறுயிற் றென்று தெரிவிக்கத் தெரிந்தோம். இதன்மேல் வளைந்த பிறைச் சந்திரன் போலும் பிரகாசிக்கின்ற வளைந்த பற்களையுடைய வசுரர்கள் மூவரும் உயிர் நீங்க இறந்தகாலத்தில், பருத்து விம்மித்த இரு தனங்களையுடைய அயமுகி யென்பவளும் இவளைப்பெற்ற கொடிய வேல்போலுங் கண்ணையும் கரிய கூந் தலையுமுடைய மாயையென்று சொல்லப்பட்டவளும் இறந்தவகையினைத் திருவாய்மலர்ந்தருளவேண்டும். எ - று. (௬௧)

என்றுமுனி வரரியம்ப விருந்தவத்தி னருங்கொழுந்தா யெழுந்த சூதன், வென்றுபுலன் களையிகந்த மாதவத்தீர் கேண்மினென விளம்பு மேனாட், பொன்றிகழ்கிண் கிணிமுளரித் தண்டையந்தாண் முருக னெடும் பொருத ஞான்றின், மன்றலெழுங் குழன்மாயை கதிர்ப்பு கைக்கோர் மறையறைந்து மறைந்து போனாள்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

(இ - ள்.) என்று முனிசிரேஷ்டர்கள் பிரார்த்திக்க, பெரியதவத்தின் அரிய கொழுந்தாக முளைத்த சூதமுனிவர், பஞ்சேந்திரியங்களையும் வெறுத்துச் செயித்த பெருந்தவத்தினரே! கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார். முற்காலத்தில் பொன்மயமாக விளங்கும் கிண்கிணியையும் சதங்கையையும் அணிந்த தாமரைமலர் போன்ற அழகிய திருவடியையுடைய முருகக் கடவுளோடும் சூரனுதியர் போர்செய்த யுத்தபூமியில், மணம் வீசுகின்ற கூந்தலையுடைய மாயையென்பவள் பானுகோபனுக்கு ஓரிரகசியங் கூறி மறைந்து சென்றாள். எ - று. (கூஉ)

போயநெறித்தலைப்பயந்த மகட்புணர்ந்துன் னுடும்பிறந்த புதல்வர்க் கெல்லா, மேயவிற லினிப்புகுதா தொருகுமரன் றிருக்கைவடிவேலால் வீவா, ராயதுவந் துறுமளவு மிவணிருத்தி மந்தரவெற் படைகின் றேன்யான், றீயநெறிக் கொடுஞ்சூரன் முதலியோர் களத்துலக்குஞ் செயனீ யோர்வாய்.

(இ - ள்.) (இவ்வாறு) போகின்ற வழியிலே தான் பெற்ற புதல்வியாகிய அயமுகியைச் சேர்ந்து, உன் உடன்பிறந்த புத்திரர்களுக்கெல்லாம் (இதுகாறும்) பொருந்திய வெற்றி இனி யுண்டாகாது. ஒப்பற்ற குமாரக்கடவுளின் திருக்கரத்தேந்திய வேற்படையால் (அவர்கள்) இறப்பார்கள். ஆகிய வச்செய்தி வந்தடையுமெல்லையும் நீ யிங்கிருக்கக்கடவை. நான் மந்திரகிரிக்குச் செல்கின்றேன். கொடு நடையுடைய வலிய சூரன் முதலானோர் போர்க்களத்தில் இறக்குஞ் செய்தியை நீ யறிந்திருக்கக் கடவாய். எ - று. (கூ௩)

மந்தரவெற் பினையடைந்து சீகுலமாப் பருப்பதத்து வருகின்றேன்யா, னிந்தநெடுங் கொடுஞ்சமரி னிவரிறப்ப துணர்ந்துபின்ன ரிவணுறாது, வந்தெழூதி வருந்தலைநீ சீகுலவெற் பினைநோக்கி வருதியென்னு, வந்தரவா னவர்க்குறித்து நகைவிளைப்ப மாயையவ ணகன்று போனாள்.

(இ - ள்.) யான் மந்தரகிரியை யடைந்து பெரிய சீகுலபர்வதத்திற்குவருகின்றேன். இப்பொழுது நிகழும் பெரிய வலிய போரில் இவர்கள் இறப்பதைத் தெரிந்துகொண்டு அதன் பின்னர் இவ்விடத்திலில்லாமல் வந்துவிடுக. இவர்கட்காக நீ வருந்தவேண்டாம். சீகுல பர்வதத்தைநோக்கி வரக்கடவாயென்று ஆகாய வாசிகளாகிய தேவர்கள் உணர்ந்து நகை செய்யும்படி மாயையென்பவள் ஆங்கிருந்து நீங்கிப்போயினள். எ - று. (கூச)

பொருசினத்த வாளவுணர் கிளைமுழுது மடிகளத்துப் புலவுவேலாற், செருவொழிய வுயிரிறந்தார் மாயைதனைப் பயந்தளித்த தீயோனுடுங், தருவுலகஞ் சிறைப்படுத்த சூரனரு ளிரணியன்பாதலத்துச் சார்ந்தா, னுருகியசெம் பெனத்தெளிந்த கண்ணியய முகியரற்றி யோடினளால்.

(இ - ள்.) போர்செய்கின்ற கோபத்தையுடைய வாளேந்திய அசுரக்கூட்ட முழுவதும் யுத்தபூமியில் புலால் மணங்கமழும் வேற்படையினால் யுத்தம் நீங்க உயிர் இறந்தார்கள். மாயையென்பவளைப் பெற்றெடுத்த கொடியோனாகிய அசுரேந்திரனும் கற்பகத்தருவையுடைய தேவலோகத்தைச் சிறைசெய்த சூரபன்மன் பெற்ற இரணியன் பாதல லோகத்தை யடைந்தனன். உருகிய

செப்பு தெளிந்தாற்போன்ற கண்ணை யுடையவளாகிய அயமுகி அழுதுகொண்டே ஓட்டமெடுத்தாள். எ - று. (௬௫)

மலைத்தலைவெம் முலைத்தலத்தி னிடியெனத்தன் கரம்புடைக்கு மருளு மேங்கும், பிலப்பகுவாய் திறந்துமுக டதிரவெடுத் தழுதாற் றும் பின்பார்த் தோடுங், கொலைத்தலைமுத் தலைப்படையோன் கொடுத்தவர மின்றளவோ வென்று கூறு, முலைத்தலைநின் றுருகுமெழு கெனக்குழைந்து தனையீன்ற ளுறைவு ளுற்றாள்.

(இ - ள்.) மலையின் சிகரத்தை யொத்த வலியதனத்தினிடத்தில் இடியென்று சொல்லும்படி தன் கையினால் அடித்துக்கொள்ளுவாள், மயங்குவாள், ஏக்கமடைவாள், பிலம்போலப் பிளவுபட்ட வாயைத்திறந்து ஆகாய முகடும் அதிரும்படி உரத்த சத்தத்தோடு அழுது புலம்புவாள், பின்புறம் பார்த்துக் கொண்டே ஓடுவாள், கொலைத்தொழிற் றலைமைபெற்ற முத்தலை வேலாகிய சூலாயுதத்தைத் தாங்கிய சிவபெருமான் கொடுத்தருளியவரம் இன்றளவு தானோவெனக் கூறுவாள், உலைக்களத்தினின் றுருகுகின்ற மெழுகுபோல வுருகித்தன்னைப்பெற்ற மாயையென்பாள் இருக்குமிடத்திற் சென்றாள். எ-று.

சிருலமாப் பருப்பதத்தி னழுதரற்றிச் செல்வாளை யெதிர்ந்து செல்லா, மாகுலமற றுறப்டிந்த தெனவுணர்ந்த மாயைநெடு மண்ணில்வீழ்ந்தாள், சோகமெடுத் தலைப்பமற்றை யயமுகியு மவளடியிற் றுயர்ந்து வீழ்ந்தா, ளாகுலத்துக் கொருநிலைய ருலகதிரத் தழுவியழு தரற்றினாரால்.

(இ - ள்.) பெரிய சிருலபர்வதத்தில் அழுதுபுலம்பிச் செல்கின்ற அயமுகியை யெதிர்கொண்டு சென்று பெரிய குலமுழுவதும் அழிந்துவிட்டது, என்று தெரிந்துகொண்ட மாயையென்பவள் பெரிய பூமியிலே வீழ்ந்தாள். துன்பமதிகரித்து வருத்த, அயமுகியும் அம்மாயையின் காலில் துக்கமுற்று வீழ்ந்தாள். துக்கத்திற்கு ஓர் இருப்பிடமாகிய (அயமுகி மாயையென்னும்) இவ்விருவரும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு உலகமதிரும்படி அழுது புலம்பினார்கள். எ - று. (௬௭)

அந்தரவா னவர்பணித்த பணிதலைக்கொண் டியற்றுமுடம் பயர்வு தீர்ந்தார், கந்தருவ ரியக்கர்சித்தர் விஞ்சையர்தந் தீராத கவ்வை தீர்ந்தார், சுந்தரிமங் கலந்தடவி நெஞ்சுதொட்டு முறுவலித்துத் துயரந் தீர்ந்தா,ளிந்திரனை முதலினோர் காற்றழும்புங் கரத்தழும்பு மிழந்தாரன்றே.

(இ - ள்.) சுவர்க்கலோகத்துள்ள தேவர்கள், கட்டளையிட்ட கட்டளையைச் சிரமேற்றாங்கி நடத்துகின்ற தங்கள் உடல் வருத்தந் தீர்த்தார்கள். கந்தர்வர், இயக்கர், சித்தர் வித்தியாதரர் (ஆகிய இவர்கள்) தங்களுடைய இடையறாத துன்பத்தை நீங்கிப்பெற்றார்கள். இந்திராணி தனது மங்கல சூத்திரத்தைத் தடவிப்பார்த்து நெஞ்சையுந்தொட்டுப்புன்னகைசெய்து துன்பந்தீர்ந்தாள். இந்திரன் முதலானவர்கள் தங்கள் காற்றழும்புங் கைத்தழும்பும் போக்கினார்கள்.

பொருவருவெண் குடைநிழற்றிப் பொதுக்கடிந்து பல்லண்டப் புவனமெல்லா, மருவரம்பெற் றினிதளித்த வசுரர்குல மொருகளத்தி னவிந்து மாளத்,தருவிழந்த விந்திரற்சென் றடுகளத்தி னெதிர்ந்து

புறந் தந்து மானச், செருவிழந்த தலைவரினி முகமலர்ந்து தமதுபதஞ் செலுத்து வாரால்.

(இ - ள்.) சமானமற்ற வெண்குடை நிழற்றிப்பொதுத்தன்மை நீக்கி, பல வண்டங்களையும் (அருமையான வரத்தால்) இனிதாக ஆண்டிருந்த அசுரர் குலம் ஒரேயுத்த களத்தில் அழிந்திறந்தமையால், கற்பகத்தருவையிழந்த இந்திரனேடுபோய்ப் போர்க்களத்திலெதிர்ந்து புறங்காட்டியோடிப்பயங்கரமான போரையிழந்த தலைவர்கள் யாவரும் இனி முகமலர்ச்சிகொண்டு தங்கள் ஆளுகையைச் செலுத்துவார்கள். எ - று. (௬௯)

அரிமுகவ னெடுத்துரைத்த மொழியுணரா யண்டமுற்று மளந்த செங்கோ, லெரியினுருத் தனைபோலும் பெருவரனு மெறுழ்வலியு மிழந்தாய் போலு, மூரியவுயிர்த் துணைவரென வோருயிரா யினிப்பிறப்பா ருளரோ கெட்டேன், விரிதருகற் பகநீழ லிந்திரனு ரரசுகொண்ட வெகுளி வேலோய்.

(இ - ள்.) சிங்கமுகன் எடுத்துச் சொன்ன நன்மொழிகளை யறியாமற் போயினை, அண்டங்கள் முழுவதையும் அரசுநடத்திய செங்கோலைத் தீயிலெறிந்தனைபோலும் (பெறுதற்கரிய) பெரிய வரங்களையும் மிக்க வல்லமையையும் இழந்தனைபோலும். பொருந்திய உயிர்த்துணைவர் என்றுசொல்ல (இருவருங் கூடி) ஒருருவாய்ப் பிறப்பவருண்டோ? ஐயோ! விரிந்தகற்பகத்தருவின் நீழலிலுள்ள இந்திரனது அரசாட்சியையுங் கைக்கொண்ட கோபந்தங்கிய வேலேந்தியவனே! எ - று. (௭௰)

ஒழியாத பெருவளனு மூவர்க்குஞ் சலியாத வுரனு மென்று, மழியாது பெறுவரனு மழிந்தனைமற் றுனதெழிலு மழிந்த தேயோ, சுழியாறு சடைக்கரந்தோன் மதலையிவ னென்றுரைத்த சொற்கேளாயாற், பழியாவி சுமந்துநும்மை யிழந்திருந்தே னுடன்பிறந்த பரிசு நன்றே.

(இ - ள்.) நீங்காத பெருஞ்செல்வத்தையும் மும்மூர்த்திகட்கும் பின்னிடாத வல்லமையையும் எக்காலத்திலு மழியாதிருக்கப்பெற்ற வரத்தையும் அழியப்பெற்றாய்! உன்னழகும் அழிந்துவிட்டதோ! சுழிபொருந்திய கங்கையாற்றினைச்சடையில் மறைத்த சிவபெருமானுடைய குமாரனிவன் என்றுணர்த்திய வார்த்தையைக்கேளாமற் போயினை. உங்களையிழந்தும் யாவரும் பழிக்கும் படி பிராணனைச் சுமந்துகொண்டிருக்கின்றேன். யானுங்களோடுதித்ததன்மை நன்றாயிருந்தது. எ - று. (௭௧)

எனவரற்று மயமுகிகட் குமிழியெடுத் தெறிபுனலை யிருகை மாற்றி, மனமயக்க மொழிதியென மாயைமகட் கருகிருந்து மம்மர் தீர்ப்பாள், புனைமயிலுங் கொடியுமெனப் பெறற்கரும் பேறினிதுபெற்றுப் பொலிந்தான் முன்னோ, னறுமுகைக்கு நான்முகனு மரியுமிவ னடிதொழுதற் கணிய வன்றே.

(இ - ள்.) என்றுவருந்தும் அயமுகியின் கண்களினின்று குமிழிவிட்டெழும் (துக்க) பாஷ்பத்தைத் தன்னிருகைகளாலுந் துடைத்து, இனிமனமயக்கம்நீங்கக்கடவாயென்று மாயையானவள் அயமுகிக் கருகிலிருந்து மயக்கத்தை நீக்குபவளாய், உன் மூத்தோனாகிய சூரபதுமன் அலங்காரமுடைய மயில் வாகனமும் (சேவற்) கொடியுமாக வொருவரும் பெறுதற்கரிய பதவியை

இனிதாகப்பெற்று விளங்கினான். அன்னத்தைச் செலுத்தும் பிரமதேவனுந் திருமாலும் வணங்குதற்கு இவன் பாதங்கள் அருகிருப்பனவல்ல. எ - று. (௭௨)

பண்டிழைத்த மாதவத்தா றிடைத்தனன்மற் றிஃதின்மேற் பதவி யுண்டோ, தண்டையஞ்சி றடிகதுவுந் துகளிழுகப் பெற்றனனெத் தவமோ வென்ன, வண்டிமிர்பைந் துணரோதி யன்னையுரைத் தனளவளை வதன நோக்கிக், கெண்டையங்க ணயமுகியுஞ் சிறிது மனக் கவலொழிந்து கிளப்ப தானாள்.

(இ - ள்.) முன்னேயியற்றிய பெருந்தவத்தினால் இப்பதவியை யடைந்தனன், இதன்மேல் வேறு பதவியுமுளதோ? தண்டையணிந்த வழகிய சிறிய பாதங்களிற் பொருந்திய பராகங்கள் தன்மீது படியப் பெற்றனன். இஃதென்ன தவமோவென்று வண்டுகளொலிக்கும் பசியமலர்க்கொத்து பொருந்திய கூந்தலையுடைய தாயாகிய மாயை கூறினள். சேற்கெண்டைபோலும் அழகிய கண்ணையுடைய அயமுகியும் சிறிது மனத்துயரமகன்றுதாயின் முகத்தைப் துச்சொல்லுகின்றாள். எ - று. (௭௩)

சூரபன்ம னடுகுருதிப் புகர்முகத்த வேலினுரந் தொலைந்து வெற்றி, வீரநெடுஞ் சிறைமயிலுஞ் சேவலுமா யினனென்ன விளம்பி னையத், தாரகனு மரிமுகனுஞ் சென்றடைந்த திசையுணரேன் றமியே னன்றோ, சோரிசொரி முத்தலைச்சூன் மறலிவலைப் பட்டனரோ சொல்க வென்றாள்.

(இ - ள்.) சூரபன்மனானவன், கொல்லுகின்ற உதிரக்கறை பொருந்திய முகத்தையுடைய வேலினால் வலிகுன்றி, வெற்றியும் வீரமுமுடைய நெடிய சிறகமைந்த மயிலுஞ்சேவலுமாகவாயினனென்று கூறினை. அந்தத்தாரகனும் சிங்கமுகனும் போய்ச்சேர்ந்த திசையை அடியேனறியேன். அவர்கள் உதிரஞ் சிந்தும் முத்தலைச் சூலந்தாங்கிய இயமனது காலபாசத்தி லகப்பட்டனரோ? சொல்லவேண்டு மென்றாள். எ - று. (௭௪)

ஆய்துமுற் றுணர்ந்தறிவா னுரைக்கின்றே னயமுகிமற் றந்தி யென்ன, மாயையுரைத் திடுமனையோர் கயிலைவரு கணத்தினொடும் வாழ்ந்தா ரென்னத், தீயவினைத் திடுமிவரிப் பெறற்கரும்பே றடைந்த தென்னை செப்பு கென்று, டாயெனநின் றிவட்பயந்தா ளவட்கறிந்த முறையனைத்துஞ் சாற்ற லுற்றாள்.

(இ - ள்.) அவர்களெய்திய கதியை முழுதுந்தெரிந்து நீ யறியும்படி சொல்கின்றேன். அயமுகியே! அறிந்துகொள்கவென்று மாயை கூறுகின்றாள், அவ்விருவரும் மகா கைலாயத்திலுள்ள கணங்களோடு வாழ்ந்தார்களென்று சொல்ல, கொடுமையையே செய்துகொண் டிருந்த இவர்கள் இவ்வண்ணமான அடைதற்கரிய பதவியையடைந்த வகை யாதென்று சொல்லவேண்டுமென்றனள். தாயாகவிருந்து இவளைப்பெற்ற மாயை அவ்வயமுகிக்குத்தானறிந்துள்ள சரிதமுழுவதுஞ் சொல்வாளாயினள். எ - று. (௭௫)

முன்னொழிந்த நெடுங்காலத் திரைதிரைகின் றுவட்டெடுக்கு மூரி முந்நீர், தன்னகத்து நவதீவிற் சாகத்தீ வொன்றுளதா லதனுட் டோன்றி, மன்னியசெங் கோலோச்சி யொருகுடையி னுயிர்புரக்கு மன்னர் மன்னன், பொன்னவிர்பைங் கழற்காற்பிர பாகரனென் றுளனொருவன் புலவு வேலோன்.

(இ - ள்.) ஒலிக்கின்ற அலைகள் நிரம்பி உவட்டெடுக்கும் பழைமையான கடல் புடை சூழ்ந்த பூமியிலுள்ள நவதீவுகளில் சாகத்தீவென்பதொன்றுளது. அத்தீவினுள், கடந்த வெகு காலத்திற்கு முன்னே பிறந்து, நிலைபெற்ற செங்கோலைச்செலுத்தி ஒப்பற்ற வெண் கொற்றக்குடை நீழலில் எல்லாவுயிர்களையுங்காத்த அரசர்களுக்கரசனும், பசும் பொன்னால் விளங்கும் வீரக்கழலணிந்த காலையுடையவனும், புலான் மணங்கமழும் வேலாயுத மேந்தியவனுமாகிய பிரபாகரனெனும் பெயரினனொருவனிருந்தான். எ - று. (எசு)

அனையவனுக் குயிரனையா ளொருத்தியக மாட்சிபுரந் தளிப்பா
ளன்னாள், புனைமணிமே கலையள்சுகு மாரியெனும் பெயருடையாள்
பொற்பி னீங்காள், கனைகழற்கா லரசனெறி முறைதிறம்பா ளருந்த
தியிற் கற்பி னிற்பா, ளினையரிவ ளளவிறந்த நெடுங்கால மரசுபுரிந்
திருந்தா ரன்றே.

(இ - ள்.) அப்பிரபாகரனுக்கு உயிர் போன்றவளாகிய மனைவி இல்லறதருமங்களைச்(சரியாகப்) பாதுகாப்பவளும், அலங்கரிக்கத்தக்க நவமணிகளிழைத்த மேகலாபரண மணிந்தவளும் சுகுமாரியெனும் பேருடையவளும், அழகிற் குறைவுபடாதவளும், சத்திக்கின்ற வீரக்கழலணிந்த மன்னவன் செங்கோன்முறை மாறுபடாதவளும், அருந்ததிபோலக் கற்புநெறியில் நின்றவளுமாவள். இத்தகைய (கணவன் மனைவி) இருவரும் கணக்கில்லாத பெருங்காலம் அரசுரிமை நடத்தி வாழ்ந்தார்கள். எ - று. (எஎ)

ஈங்கிவர்நின் றிழைத்தபெருந் தவப்பயத்தா லினிதுவப்பி னெடு
த்து மோப்பத், தீங்குதலை மதலையரோர் நால்வர்பிறந் துளரிவர்க்குச்
செங்கோல் வேந்த, னோங்குதிறற் சூரனென்றும் பதுமனென்று மிர
ட்டையருக் குரைத்தே னோர்க்குத், தாங்குகழற் சிங்கனென்றுந்
தாரகனென் றும்புனைந்தான் றாம வேலோன்,

(இ - ள்.) இவர்களிருவரும் நிலைபெறச்செய்த பெருந்தவப்பயனால், இனிமையோடு சந்தோஷித்தெடுத்து முகந்து கொள்ளும்படி, மதுரமான மழலைச்சொல்லையுடைய ஒப்பற்ற புதல்வர் நால்வர் பிறந்தனர். மலர் மாலை சூடிய வேலாயுத மேந்திய செங்கோனடாத்தும் பிரபாகரன் வல்லமை மிகுந்த சூரனென்றும், பதுமனென்றும், முன் பிறந்த இரட்டைப் பிள்ளைகட்குப் பெயரிட்டு, மற்றையோருக்கு வீரக்கழல் தரித்த சிங்கனென்றும் தாரகனென்றும் பெயர் சூட்டினன். எ - று. (எஅ)

தங்குலத்து முதியோர்பே ரீன்றெடுத்த மதலையர்க்குத் தந்த பின்
னர்ப், பொங்கொளிப்பைங் கழலிவர்க்குண் முன்பிறந்த சூரனுக்குப்
புரவு நல்கிச், சிங்கவா சனத்திருத்தித் தேவியொடு மருந்தவத்திற்
சென்றா னன்னோ, னங்கணவ னுலகுபுரந் தொருகுடையி னுயிர்க்கு
தவி யருளி னானால்,

(இ - ள்.) தங்கள் குலத்திலிருந்த முன்னோர் பெயர்களைத் தான் பெற்ற புதல்வர்களுக்குத்தரித்த பின்னே, மிக்க வொளியையுடைய பசிய வீரகண்டாமணி தரித்த இந்நால்வருள், முதலிற் பிறந்த சூரனுக்கு அரிசுரிமையையளித்துச் சிங்காதனத்திலமர்த்தி, அம்மன்னவன் தன் மனைவியாகிய சுகுமாரியோடும் தவநிலைமேற்கொண்டு சென்றனன். அந்தச்சூரன் ஒப்பற்ற சந்திரவட்டக்குடை நீழலில் உலக முழுவதுங்காத்து உயிர்கட் கெல்லாம் இதஞ்செய்து வந்தனன். எ - று. (எகூ)

அறநெறிச்செங் கோலோச்சி யவனிபுரந் தினிதளிக்கு மந்நாட் டென்பாற், குறுமுனிகுண் டிகைதூக்குங் கரத்தினனாய்த் தரித்திடு கைக் குடைய னாகி, மறைதவத்தோ ருருவுகொண்டு வருதனையோன் றனதிடத்து வரவு நோக்கி, முறையினினி துயிர்புரக்குஞ் சூரனருந் தவற்கெதிர்போய் முறையிற் றாழ்ந்தான்.

(இ - ள்.) தருமமுறையோடு செங்கோல் செலுத்தி உலகத்தை இனிதாகக்காத்து இரட்சித்துவரும் அக்காலத்தில், தென்றிசையிலுள்ள குறுகிய வடிவினையுடைய அகத்திய முனிவர் கமண்டலமேந்திய இடக்கையும், சிறுகுடையேந்திய வலக்கையுமுடையவராகித்தவசிகள் வேடந்தரித்துவந்து அச்சூரனிடம் வரவும், மநுமுறையோடு இனிதாகஉயிர்களைக்காக்குஞ் சூரன்கண்டு அருந்தவஞ்செய்த அகத்திய முனிவருக்கெதிர் சென்று நமஸ்கரித்தான்.

அருந்தவமே யருந்தவத்தோர்க் கருமருந்தே யாரணமே யளியேம் பெற்ற, பெருந்தவமே முழுஞானக் கலைக்கடலே யெழுந்தருளப் பெற்றே னெந்தை, திருந்துமல ரடிதீண்டக் கடற்கிடந்த தீவுஞ்செய திறனன் றென்னாக், குருந்தமலர் தமிழ்ப்பொதியக் குறுமுனியைத் தன்கோயில் கொண்டு புக்கான்.

(இ - ள்.) அரியதவமே! அரியதவசிகட்கு அருமருந்து போல்பவரே! வேதமே! அடியேங்கள் செய்த பெருந்தவமே! பூரணஞான நூற் சமுத்திரமே! தேவரீர் எழுந்தருளப்பெற்றேன், எமது தந்தையின் திருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகள் தீண்டும்படி கடலிலமுந்திய இத்தீவும் செய்திருந்த புண்ணியம் நன்றாயிருந்ததென்று, குருந்தமலர்கள் விகசிக்கும் தமிழ் விளையும் பொதிய வரையில் வீற்றிருக்கும் அகத்திய முனிவரைத்தனது மாளிகைக்கு அழைத்துக்கொண்டு புகுந்தனன். எ - று. (அக)

புக்கமுனி வனைத்தரளங் குயிற்றுமரி யாசனத்தி னிருத்திப் போற்றித், தக்ககடன் முறையாவுந் தம்பியொடு மினிதியற்றத் தமிழின் வேந்தன், மிக்கெழுந்த பேருவகை வெள்ளமுளத் துவட்டெறிய வியந்து நோக்கிப், பக்கமரு கிருத்திரெனத் தொழுதிருந்தா ரன்னவர்க குப் பகர லுற்றான்.

(இ - ள்.) (அரண்மனைக்கு) எழுந்தருளிய அகத்திய முனிவரை முத்துக்கள் பதித்த சிங்காதனத்திலிருத்தித்துதிசெய்து செய்யத்தக்க (அர்க்கிய பாத்திய முதலிய) ஷோடஷோபசாரங்களையுந் தன் தம்பியுடன் இனிதாகச் செய்ய, தமிழ் மொழியின் தலைவராகிய அகத்தியமுனிவர் அதிகரித்தோங்கிய பேரானந்தத்தின் வெள்ளம் பிரவகிக்க வியப்போடு பார்த்து, ஒரு பக்கலில் அருகே யிருங்களெனக்கட்டளையிட, அவர்கள் அவரைப்பணிந்திருந்தார்கள். அப்போது அகத்தியமுனிவர் அவர்கட்குச் சொல்லலாயினர். எ - று. (அஉ)

கலிநிலைத்துறை.

ஆய வெண்குடை நீழலி னவனிகாத் தளிக்குந்
தூய சிந்தையிற் றுரிசறு பெருங்குண முடையீர்
மேய நுங்களைக் காண்குறும் விருப்பொடு மடைந்தே
மேய நுண்பொரு ளொன்றுள தியம்புதுங் கேண்மின்.

(இ - ள்.) வெண்கொற்றக் குடைநிழலிலே உலகத்தைக் காத்திரட்சிக்கின்ற பரிசுத்தமான மனத்தினாற் குற்றமற்ற பெருங்குண முடையவர்களே!

இங்குள்ள உங்களைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பத்தினால் நாம் இங்கு வந்தோம். தகுதியுள்ள நுட்பமான பொருளொன்றுள்ளது. சொல்கின்றோம் கேட்பீர்களாக. எ - று. (அரு)

அறிவி னுளராந் தூயவர்க் கன்றிமற் றறிவிற்
சிறிய சிந்தையிற் றீட்டுவ தன்றது தெரிக்கின்
மறுவின் மாட்சியின் மந்திர தூபமிடத் துச்சி
யுறுவ தியாரினும் புலப்படா தொருபொரு ளுளதால்.

(இ - ள்.) அவ்விரகசியஞ் சொன்னால், அறிவுடன் மனப்பரிசுத்தமுடையவர்களுக்கல்லது, அறிவில்லாத சிறியமனதில் அழுத்துவதன்று. குற்றமில்லாத பெருமையுடனே வேதங்கள் உபநிடதங்கள் இவற்றின் உச்சியில் விளங்குவது எல்லாருக்கும்புலப்படாத ஒரு பொருளாயிருப்பது. எ - று. (அச)

கண்ணிற் காண்பன யாவையுங் கட்புலங் கதுவா
தெண்ணிற் காண்பது மெண்ணுறு புலங்களு மெண்ணும்
விண்ணிற் காண்பது மேலெனு மெவற்றிற்கு மேலாய
நண்ணிற் காண்பது மப்பொரு ளல்லதார் நவில்வார்.

(இ - ள்.) கண்ணாற் பார்ப்பனயாவும், கண்ணிற்குப் புலப்படாது மனத்தினாற்பார்ப்பதும், எண்ணுகின்ற ஐம்புலன்களும், எண்ணமும், ஆகாயத்தீற் காணப்படுவதும் மேலென்று சொல்லப்படுவன எவற்றிற்கும் மேலாய்ப்பார்ப்பதும், நாம் (உங்கட்குச்) சொல்லும் அப்பொருளையன்றி (வேறெப்பொருளை) எவர் சொல்லுவர். எ - று. (அரு)

திருமு கங்களோ ராறுளன் றீவினை யனைத்தும்
பொருது வென்றுள பன்னிரு புயமுளன்புலரிப்
பரிதி யாயிர மென்னவின் றிமைப்பது பணியார்
குருதி யூற்றெழு வேற்படை திருக்கரங் கொள்ளும்.

(இ - ள்.) (அப்பரம்பொரு ளாவார்) ஆறு திருமுகங்களையுடையவர், தீவினைத்தொடக்கு முழுவதையும் போர்புரிந்து சயித்த பன்னிரண்டு திருப்புயங்களையுடையவர், உதயகால சூரியர் ஆயிரவர் (உதித்தாற்) போல ஒளிவீசிப்பிரகாசிப்பதாகி, தம்மை வணங்காதவரது உதிரத்தை ஊற்றெடுக்கின்ற வேலாயுதத்தைத்திருக்கரத்திலேந்தியவர். எ - று. (அசா)

தெய்வமாமயி லொன்றவன் சேவடி தாங்கு
மைய வம்மயிற் பெருவலி யாரளந் தறிவார்
வைய முற்றவுங் கொறிக்குமோர் வாரணக் கொடியன்
பொய்யில் கேள்வியீ ரதன்றிறம் யாவரே புகல்வார்.

(இ - ள்.) தெய்வீகம் பொருந்திய பெரிய மயிலொன்று அவ்விறைவனது சிவந்த திருவடிகளைத்தாங்கி நிற்கும். அழகிய அம்மயில் வாகனத்தின் மிக்க வலிமையை எவர்தாம் அளவிட்டுணர வல்லவர்? (அன்றியும்) உலகமுழுவதையுங் கொறிக்கத்தக்க சேவற் கொடியையுடையவர். உண்மையாகிய நூற் கேள்வியுடையவர்களே! அதன் வல்லமைத்தை எவரோ சொல்லவல்லவர்? எ- று.

முருக நாயகன் சீறடி முளரியிற் சிறுதூள்
பொருவின் முக்கணன் புயங்களு முமைமுலைப் பொருப்பு
மருவி வாழ்ந்தன சிறிதுநாண் மாமயிற் பெருமா
னொருவில வைகலும் பொறுத்தன னென்னிலென் னுரைக்கேம்.

(இ - ள்.) முருகக்கடவுளுடைய சிறிய பாததாமரையினின் றுதிர்ந்த சிறு தூசுகள், ஒப்பில்லாத திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருத்தோள்களிலும், உமாபிராட்டியாரது தனபாரமாகிய மலைகளிலும் சில காலம் பொருந்தி வாழ்ந்தன. பெரிய மயிலாகிய தலைவனோ நீக்கமின்றி நாடோறும் பரித்தனனென்றால் வேறு என்னெனப்புகழ்வோம்? எ - று. (௮௮)

மூவ ராகிய முப்பெருந் தொழிலுடை யவர்க்குந்
தேவர் யாவர்க்கு மருந்தவஞ் செய்தியற் றுநர்க்கு
மோவி லொண்குணத் தனையனை யுளத்தமைத் தல்லால்
யாவ தாகுவ தன்னவர்க் கெடுத்தியா மியம்பில்.

(இ - ள்.) யாம்முடிவாகச்சொன்னால், திரிமூர்த்திகளாகிய (சிருட்டி திதி சங்காரமென்னும்) மூன்று பெருந்தொழில்களையுடையவர்களுக்கும், எல்லாத் தேவர்களுக்கும், (பூர்வம்) அரிய தவங்களைச்செய்து (இப்போது தவம்) புரிவோர்களுக்கும், நீக்கமில்லாத சிறந்த குணத்தையுடைய அக்குமாரக்கடவுளை மனதி லமைத்தாலன்றி அவர்கட்கு ஆகவேண்டிய எக்கருமங் கைகூடும்.

ஈது ளப்படுத் திருத்திர்நீ ரெம்பிரா னிருதாட்
போது வைகலும் போற்றுதி ரென்றனன் புகலா
வாதி நாயகற் குவமைசா லருந்தவத் தலைவன்
வேத வேதிய னாசிகண் மொழிந்தனன் வியப்பின்.

(இ - ள்.) இவ்விடயத்தை நீங்கள் மனதிற் பதித்திருக்கக்கடவீர்கள். எம்து முருகப்பெருமான் உபய திருவடித்தாமரைகளை நாடோறுந்துதிக்கக்கடவீர்கள் என்று கூறி, ஆதிதேவனாகிய சிவபெருமானுக்கு ஒப்பான அருந்தவசிரேஷ்டரும் வேதங்களை யறிந்த அந்தணருமாகிய அகத்திய முனிவர் சந்தோஷத்துடன் ஆசிர் வசனங்கூறினார். எ - று.

சாக தீவினின் றருந்தவத் தமிழ்முனி தணவா
யோக நாயக னொருவழிப் புகுந்தன னுவர்கள்
தோகை வாகன னெம்பிரான் சேவலந் துவச
மாகல் வேண்டுநா மென்றுதம் மருமனத் தடைந்தார்.

(இ - ள்.) அருந்தவமாற்றிய தமிழ் முனிவராகிய அகத்தியர், சாகத்தீவினின்றும் நீங்கி ஒருவழியாகச்சென்றனர். அவர்கள் (இருவரும்) முருகக்கடவுளுக்கு மயில் வாகனமும் சேவற் கொடியுமாக நாம் ஆகுதல் வேண்டுமென்று தங்கள் அருமையாகிய மனத்திற் கருத்துற்றார்கள். எ - று. (௯௧)

திரண விந்துவென் றொருமுனி சென்றனன் றிரைநீ
ரரண வேலியச் சாகத்தீ வாங்கவற் கெதிர்போய்ச்
சரண பங்கயம் பணிந்தனன் றாரகன் சிந்தை
முரண கற்றரி முகவனும் பணிந்துகை முகிழ்த்தான்.

(இ - ள்.) திரணவிந்து எனும் பெயர்கொண்ட ஒரு முனிவர், அலைகளையுடைய தண்ணீரையே காவலாகிய வேலியாகப்பெற்ற அந்தச்சாகத்தீவிலடைந்தனர். தாரகன் அம்முனிவர்க்கெதிர் சென்று அவரது பாததாமரைகளைப்பணிந்தனன். மனக்கோணுதலகற்றிய சிங்கமுகனும் அவரை வணங்கிக் கைகூப்பி நின்றான். எ - று. (௯௨)

முகிழ்த்த கையின ருருகிய சிந்தையர் முனியா
னெகிழ்ந்த நெஞ்சினர் புளகபடு கண்ணினர் நிறைந்த

மகிழ்ச்சி கூர்தர மாமதிட் கோயில்கொண் டணைந்தா
ரிகழ்ச்சி யல்லதோர் முழுமணித் தவிசக மிருத்தி.

(இ - ள்.) அத்திராவிந்து முனிவரிடத்தில் உருகிய சித்தமுடையவர்களாயும், கனிந்த மனமுடையவர்களாயும், ஆநந்தபாஷ்பஞ்சித்தும் விழிகளையுடையவர்களாயும், சிரமிசைக் குவித்தகைகளையுடையவர்களாயும், பூர்ணமான சந்தோஷமேம்பட, பெரிய மதிலையுடைய தமது அரண்மனைக்கழைத்துச்சென்று, தாழ்வில்லாத ஒப்பற்ற உயர்ந்த இரத்தின பீடத்தில் இருக்கச் செய்து. எ - று.

இது முதலிரண்டு பாடல்கள் குளகம். (௬௩)

செய்ய வேண்டுவ வரன்முறை யாவையுஞ் செய்தா
ரைய நின்னடி தொழப்பெறு மருந்தவம் யாதோ
வையம் யாவையும் புரந்தன மாயினு மறுமை
வெய்ய தீவினை யொழிந்தனம் யாமென வியந்தார்.

(இ - ள்.) அம்முனிவருக்குச் செய்யவேண்டிய ஷோடசோபசாரங்களையுங் கிரமப்படி செய்தார்கள். ஐயனே! தேவரீர் பாதங்களை அடியேங்கள் பணியப்பெற்ற அருமையான தவம் ஏதோ? நாங்கள் பூமி முழுவதையும் அரசு புரிந்திருந்தோமானாலும், மறுமைக்கு (வித்தாயிருந்த) கொடிய தீவினைகளையொழியப்பெற்றோமென்று மகிழ்வு கொண்டார்கள். எ - று. (௬௪)

அன்ன மன்னவர்க் காசிசொற் றங்கையா லமைத்து
மன்னு யிர்க்கினி தோர்குடை நீழலின் வகுத்தீர்
பன்னு நூன்முறை திறம்புறா தறநெறி பயந்தீ
ரின்னு மொன்றுள தூமக்கெடுத் தியம்புவா னியைந்தேம்.

(இ - ள்.) அத்தகைய அரசர்களுக்கு ஆசீர்வாதஞ்சொல்லி அழகிய கையினால் அபயந்தந்து ஒரே சந்திரவட்டக்குடை நீழலில் நிலைபெற்ற உயிர்கட்கெல்லாம் இனிமையை உண்டாக்கினீர்கள். சொல்லிய நீதி நூல்களின் முறை (சிறிதும்) தவறாமல் தரும வழியைப்பெருகச்செய்தீர்கள் (ஆயினும்) இன்னுமொன்றுள்ளது. (அதனை) உங்களுக்கு எடுத்துச்சொல்ல விரும்பினோம். எ - று.

அதுக ருத்துணர்ந் தறிகுதி ரரியரற் கெனவோர்
மதலை தோன்றினன் மாநிலத் துயிர்புரந் தளிப்பான்
விதுமு டிச்சடை யவனையும் வேரிவண் டரற்றும்
புதுந றுந்துழா யவனையு மொழித்துயிர் புரப்பான்.

(இ - ள்.) அதனை மனத்திற்றெரிந்தறியக்கடவீர்கள். பெரிய உலகத்திலுள்ள உயிர்களைக்காத்திரட்சிக்கும்படி அரியாகிய விஷ்ணுவுக்கும் அரனாகிய சிவபிரானுக்கும் ஓர் புத்திரனென்றுற்பவித்தான். சந்திரனைத்தரித்த சடாமுடியையுடைய சிவபெருமானையும், தேனைப்பருகி வண்டுகளொலிக்கும் புதிய மணமுள்ள துளவமாலை சூடிய விஷ்ணுமூர்த்தியையும் நீக்கியே உயிர்களைக் காப்பான். எ - று.

சிவபெருமானையும் திருமாலையும் நீக்கிப்புரப்பானென்றது - அரியரபுத்திரனது காத்தற்றொழிலைச்சிறப்பித்த உபசாரவாக்கென்க. (௬௫)

அவனு கைக்குமோ ரழிமதக் களிறுமால் யானை
புவன முற்றுற விடிபடுத் தண்டமேற் புரட்டி

யிவர்த டந்திரைப் பிரளய நடப்புறி னெதிர்போய்ச்
சுவர்தொ ளேக்கரத் துநிஞ்சிகின் றருயிர் காக்கும்.

(இ - ள்.) அவன் ஊர்ந்து செலுத்துகின்ற, உலகினையழிக்கத்தக்க மதப் பெருக்குடைய பெரிய ஒப்பற்றயானை, உலகங்கள் எல்லாவற்றையும் இடித்து, மேற்பட்ட அண்டங்களையும் நிலைமாற்றி, அப்பிரளயத்திற்கெதிர் நடந்து, பிளவுற்ற துவாரந்தங்கிய துதிக்கையினால், அப்பெருக்கத்தையுறிஞ்சித்தானழியாதிருந்து, நிறைந்த உயிர்களைக்காக்கும். எ - று. (௯௭)

அன்றி யின்னுமோ ரருமறைப் பொருளுள தறைவாங்
குன்று யிர்த்தெழு மரகதக் கொழுங்கொடி யுருவாய்
மின்றி ரித்தன முத்தலை வேற்படை பொறுத்தாள்
பொன்றி கழ்ந்திடு மேருவும் வையமும் புரந்தாள்.

(இ - ள்.) அஃதல்லாமலும், மற்றோர் அருமையான வேதப்பொருளுளது- அதையுஞ்சொல்வோம். இமாசலமன்னனூர் பெற்றுவிளங்கிய கொழுமை தங்கிய மரகதக்கொடி போன்ற உமாபிராட்டியார் வடிவினளாய், மின்னலைத்திரித்தாற்போன்ற முத்தலைச்சூலப்படை தாங்கினவள், பொன்மயமாக விளங்கும் மேருமலையையும் பூலோகத்தையுங்காப்பவள். எ - று. (௯௮)

புரந்து மாநிலம் பலகையுஞ் சுரிகையும் பொறுத்துக்
கரந்து பல்லுயி ரனைத்தையு மொருநெறி காப்பாள்
சுரந்த கங்கையஞ் சடையின ருடனடந் தொடுத்தாள்
பரங்கு றித்திடி லவளல துயர்ந்துளோர் பகரார்.

(இ - ள்.) பெரிய பூலோகத்தை அவ்வாறு காத்து, கேடகமும் வாட்படையுந்தாங்கி, மறைந்து நின்று, பலவகைப்பட்ட எல்லாவுயிர்களையும் ஒரேவகையாகக்காப்பவள். ஊற்றெடுக்கின்ற கங்கையை யணிந்த அழகிய சடையையுடைய சிவபெருமானுடன் நடனஞ்செய்தவள். மேன்மைபெற விரும்பின் உயர்ந்தவர்கள் அவளையன்றிச்சொல்லார்கள். எ - று. (௯௯)

அணைய நூபுரத் தளிரடி தாங்குவா ளரிக்குப்
புணைய நான்மறை நாற்பத மெனுந்தவம் புரிந்த
இணைவு வள்ளுகி ரெனத்தவம் புரிந்தது திங்கள்
கனலி யீற்றெழுந் தருப்பினு மெதிருற் றிக் கவரும்.

(இ - ள்.) அவளது நூபுர்ந்தரித்த மாந்தளிர்போலுந் திருவடிகளைத்தாங்கும் ஒள்ளிய சிங்கத்திற்கு நான்கு வேதங்களும் நான்கு பாதங்களென்று சொல்லும்படி தவம் புரிந்தன. சந்திரன் அப்பாதங்களிலுள்ள நகங்களாகும்படி தவஞ்செய்தனன். மகா சங்காரத்தில் வடவாக்கினியே தோன்றியெதிர்த்தாலும், அச்சிங்கம் எதிரேபோய்க் கிரகித்துக்கொள்ளும். எ - று. (௧00)

நுமக்கு வேண்டுவ திக்கதி ரோக்கிமற் றினையோர்
தமக்கு வேண்டிய பூசனை வரன்முறை தந்து
சமர்த்த லைப்பகை கடந்துபுன் பிறவிநோய் தவிர்ப்ப
தெமக்கு வேண்டிய திதுவென மொழிந்தன னெழுந்தான்.

(இ - ள்.) உங்களுக்கு வேண்டுவது இப்பதவியே. இவ்வரியரபுத்திரனுக்கும் காளிகாதேவிக்கும் செய்யவேண்டிய பூசைகளை முறைப்படியேசெய்து,

யுத்தபூமியிலே எதிர்த்த சத்துருக்களைச் சயித்து, இழிவாகிய பிறவிநோயைத் தவிர்த்துக்கொள்வதாகிய இதுவே எமக்கு வேண்டப்படுவதென்றுகூறியெழுந் தருளினார். எ - று. (௧0௧)

முனைவ னேகிய பின்னரு நால்வரு முயலாத்
தனையர் பாலுல களித்தனர் தவஞ்செயத் துணிந்தார்
புனையு மாமயில் வாரணம் வாளரி புகர்மா
நினையு நெஞ்சின ரப்பதம் பெறுகுவா னினைந்தார்.

(இ - ள்.) திரணவிந்துமுனிவர் சென்றருளியபின்னர், அரிய அந்நால் வரும் முயற்சியுற்று, தங்கள் புதல்வரிடம் அரசுரிமையைக் கொடுத்துவிட்டுத் தவஞ் செய்தற்கென்று,அலங்கரிக்கின்ற சிறந்த மயில்வாகனத்தையும், சேவற் கொடியையும், ஆண்சிங்கத்தையும், புள்ளிகள் பொருந்திய யானையையும் கருதிய மனத்தினர்களாய் அப்பதவிகளையடைய எண்ணினார்கள். எ - று. (௧0௨)

மஞ்சி யங்கிய பருப்பத வனத்திடை வைகிப்
பஞ்ச வக்கினி நாப்பணின் றருந்தவம் பயில்வார்
செஞ்சு டர்க்கதிர் பொழிமழை யிரும்பனித் திவலை
நஞ்செ திர்ப்பினு மந்நிலை யல்லது நடுங்கார்.

(இ - ள்.) மேகந்தவழுஞ் சிகுலபர்வதத்தை யடுத்தவனத்தில்தங்கி, பஞ்சாக்கினிமத்தியிலிருந்து அரியதவம் புரிபவர்களாய், செந்நிறந்தங்கிய சூரிய கிரணமும், சொரிகின்ற மழையும், பெரிய பனித்துளிகளும், விஷஜந்துக்களுமாகிய இவை தமது தேகத்திற்ருக்கினும் அத்தவநிலையையன்றி நடுங்கமாட்டார்கள். எ - று. (௧0௩)

இக்க ணின்னண மருந்தவ மியற்றிடு மெல்லை
தொக்க நான்முக னரிமுதல் வானவர் துவன்றிப்
புக்கி யாமளை புதல்வன்மற் றரியரன் புதல்வன்
முக்க ணன்றிரு நடந்தொழக் கைலையின் முன்னி.

(இ - ள்.) இவ்விடத்தில் இவ்வகையாக அருந்தவஞ் செய்யுங்காலத்தில், கூட்டமாகிய பிரமன் விஷ்ணுமுதலிய தேவர்களும், உமாபுத்திரராகிய குமாரக்கடவுளும், அரியரபுத்திரனும், திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருநடனத்தைத் திருக்கைலையில் வணங்கத்தொகுதியாகப்போய். எ - று. ()

தத்த மூர்தியைக் கைலையின் மருங்குறத் தணவா
வத்த னைத்திரு நடந்தொழக் கைலைவெற் படைந்தா
சித்த லைச்சிறைக் கலுழனு மன்னமு மெதிர்ந்த
சித்தி ரக்கலா மயிலினை யடைந்தன செப்பும்.

(இ - ள்.) தங்கடங்கள் வாகனங்களைக் கைலாயத்தின் சாரலிலிருக்கவிடுத்து, சிவபிரான் திருநடனத்தைப் பணியத் திருக்கைலாயமலையை யடைந்தார்கள். இவ்விடத்தில் சிறகுகளையுடைய கருடனும் அன்னமும் தமக்கெதிரேயிருக்கின்ற அழகிய கலாபத்தையுடைய மயில்வாகனத்தையடைந்து சொல்லின்றன. எ - று. (௧0௫)

சாக தீவகத் தரசரோர் நால்வருந் தழுவித்
தோகை யுங்கொடிச் சேவலுந் தூர்க்கைவா ளரியும்

வேக வெம்பரிச் சாத்தனின் றுகைக்கும்வெங் களிறு
மாக வேண்டிநின் றருந்தவ மழன்முகத் திழைப்பார்.

(இ - ள்.) சாகத்தீவிலிருக்கும் ஒப்பற்ற அரசர்கள் நால்வருஞ்சேர்ந்து, மயிலும், கொடியாகிய சேவலும், காளியின்வாகனமான சிங்கமும், அரியரபுத்திரன் ஏறிச்செலுத்தும் கடுவேகமுடைய வாகனமாகிய பெரியயானையும், ஆக வேண்டுமென்று பஞ்சாக்கினிக்கிடையிலிருந்து அருந்தவஞ் செய்கின்றார்கள்.

வருட நாற்பதி னாயிரஞ் சென்றன மதியீ
ரருட ரும்பத முங்களுக் கிழக்குநா ளடுத்த
பொரு வினும்பத மின்றுகொ னாளைகொல் புகுவார்
வெருவ ரும்புனல் வருமுன மணைசெயல் வேண்டும்.

(இ - ள்.) (அவர்கள் தவந்தொடங்கி) நாற்பதினாயிரவருடங்கள் கழிந்தன. புத்திமான்களே! திருவருளைப் பாலிக்கத்தக்க இப்பதவிகளைக் கைவிடத்தக்க நாள் உங்கட்குச் சமீபித்தன. ஒப்பில்லாத உங்கள்பதங்களுக்கு அவர்கள் இன்றோ நாளையோ வரப்போகிறார்கள். அச்சந்தரும் வெள்ளம்வருமுன்னரே அணைகோலுதல் அவசியம். எ - று. (௧௦௭)

என்னக் கூறிய கலுழனு மன்னமு மேக
வன்னக் கார்மயின் முதலிய வாகனங் குழுமித்
தின்னச் சீறிய வாமெனு மடுசினந் திருகிக்
கன்னற் போதினி லவருழைக் கடுஞ்சினங் கனலா.

(இ - ள்.) என்று சொல்லிய கருடனும் அன்னமும் போக, கருநிறங் கொண்ட மயில்முதலாகிய வாகனங்கள் ஒன்றுசேர்ந்து, அவர்களைப்புசிக்கக் கோபித்தனவென்று சொல்லத்தக்க பெருங்கோபமிகுந்து ஒரு கணப்பொழுதிற்குள் அந்நால்வர்களிடத்திலுஞ் சேர்ந்து கொடுமையான கோபத்தோடுசீறி.

கனல்வி ழித்தன வனமெலாம் பொடித்தன கதுவி
யனன்மு கத்துநீ ரருந்தவ மிழைத்தவா றறைவீ
ரெனவு ரப்புரை செவிப்புக நால்வரு மேங்கி
மனந டுக்குற வரன்முறை நினைந்தவா வளித்தார்.

(இ - ள்.) தீப்பொறி சிதறப்பார்த்தன. அவ்வனமுழுதுந் தூளிபடுத்தின. விடாதுபற்றிப் பஞ்சாக்கினியிடையிலிருந்து நீங்கள் அருந்தவஞ்செய்த காரணத்தைச் சொல்லுங்களென்றுகூறிய உரப்புவார்த்தைகள் தங்கள் காதுகளில் பட்டவுடனே, அவர்கள் நால்வரும் ஏக்கமெய்தி மனநடுக்கமடைய வரிசையாகத் தாம் எண்ணியவகையே உரக்கச்சொல்லினர். எ - று. (௧௦௯)

அச்சொற் கேட்டலு மயின்முதற் கூடிய வனைத்தும்
விச்சை மாதவம் புரிந்தருள் வேந்தரை வெகுளா
விச்சை யெம்பதம் விரும்பினி ராதலி னினிநீர்
கொச்சை மாகணக் குலத்தொடுங் கலத்திரொன் றுரையா.

(இ - று.) அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், மயில் முதலாகச்சேர்ந்துள்ள யாவும், ஞானத்தையுடையாராய்ப் பெருந்தவஞ்செய்யும் நான்கு அரசர்களையுங் கோபித்து, நீங்கள் இச்சைகொண்டு எமது பதவிகளைப்பெறுதலை

யுற்றீர்கள். ஆனதால் இனி நீங்கள் கீழ்மையான பெருங்கணத்தோடுங் கலக்கக்கடவீர்களென்று (சாபமொழி) கூறி. எ - று.

இது முதல் மூன்றுபாடல்கள் குளகம். (௧௧௦)

மீண்ட டைந்தன கயிலையின் மருங்குற வேந்தர்
மாண்ட வெங்கணத் தலைவராய் வதிந்தனர் மறித்து
மாண்டு மாமயின் முதலிய வவற்றொடு மெளியேம்
வேண்டு மாதவ முறுங்கொலென் றிரந்தனர் விளம்ப.

(இ - ள்.) அவை திருக்கைலையின் சாரலைப்பொருந்தத் திரும்பிவந்தன. (அவர்கள்) மாட்சிபெற்ற பெருங்கணத்தலைவராய் வசித்தார்கள். மறுபடியும் அவ்விடத்தில் பெரிய மயில் முதலியவற்றுடன் எளியேங்கள் விரும்பிச்செய்த பெருந்தவப்பயன் கைகூடுமோவென்று குறையிரந்துயாசிக்க. எ - று. (௧௧௧)

மயிலுஞ் சேவலு முதலிய மனநெகிழ்ந் திரங்கிக்
கயிலை மாகணத் திருந்துநீர் நாள்பல கழித்தால்
முயலு நுந்தவப் பயனெலா முற்றுதி ரென்னப்
புயனி றக்கண மண்டவா பரணனிற் புகுந்த.

(இ - ள்.) மயிலுஞ் சேவலு முதலிய நான்கும் மனங்கசிந்து இரக்கமெய்தி, நீங்கள் திருக்கைலாயகிரியிலிருந்து பெருங்கணத்துடன் பலகாலங்கழித்தால், முயன்றுசெய்த உங்கள் தவப்பலன் யாவையும் அடையப்பெறுவீர்களென்று சொல்ல, மேகநிறந்தங்கிய அந்நான்குகணங்களும், தலைமாலையை யாபரணமாக வணிந்த சிவபிரான் திருக்கோயிலிற் சேர்ந்தன. எ - று. (௧௧௨)

மாய னூர்தியு மலரய னூர்தியும் வனத்தி
னேய நந்தவ மழிப்பதற் கியற்றின வென்னத்
தீய சிந்தையிற் கிடத்தியக் கணத்தவர் சினவி
மேய தோகையுங் கருடனு முடற்றுபோர் விளைத்தார்.

(இ - ள்.) திருமால்வாகனமாகிய கருடனும், தாமரைப்பூவிலிருக்கும் பிரமன் வாகனமாகிய அன்னமும், காட்டிற்செய்திருந்த நமது தவத்தை யழிப்பதற்கு (மார்க்கம்) உண்டாக்கினவென்று, அக்கொடுமையை மனத்தில்வைத்துக்கொண்டு, அக்கணத்தவர் நால்வரும் கோபங்கொண்டு, அங்கிருந்த மயிலுங் கருடனும் எதிர்க்கத்தக்க போரினை உண்டுசெய்தார்கள். எ - று. (௧௧௩)

முக்க ணன்றிரு நடந்தொழு முதன்மையோர் யாரு
மக்க ணத்தினிற் றம்பதி யடைந்தன ரதன்பின்
மிக்க நால்வரு மறுமுக னாணையால் விரிநீர்
தொக்க மாநிலத் தசுரரிற் றோன்றினர் தொடர்பால்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானது திருநடனத்தைப் பணிந்து நின்ற தலைவர்கள் யாவரும் தங்கடங்கள் பதவிகளைச் சேர்ந்தார்கள். அதன்பின்பு, மேம்பட்ட இந்நான்குகணங்களும் சண்முகப்பெருமான் திருவாணையால், விரிந்த சமுத்திரஞ்சூழ்ந்த இப்பெரிய நிலவுலகத்தில் அசுரகுலத்திலே சகோதரர்களாகத் தோன்றினார்கள். எ - று. (௧௧௪)

ஆய தன்மையி னசுரரிற் றோன்றின ரொன்றாற்
சேய வானவர் தங்களைத் தீமைசெய் தொறுப்ப,

னேய காரண மென்கொன் மற் றியம்புதி யென்றாள்
மாயை தன்மக ளயமுகிக் குணர்த்துவாண் மறித்தும்.

(இ - ள்.) அந்தத் தன்மையால் அசுரகுலத்திற் பிறந்தார்களென்று சொன்னால், செம்மையாகிய தேவர்களைத் தீமைசெய்து வருத்தும்படி நேர்ந்த காரணம்யாது? அதனையுஞ்சொல்லவேண்டுமென்று (அயமுகி) கேட்டனள். மாயை மீண்டும் தன்மகளாகிய அயமுகிக்கு (அவற்றை) உணர்த்துகின்றாள்.

பூத ராமிவர் கணத்தொடும் பொருந்திய மேனாட்
காது வெஞ்சினத் தசுரரு மமரருங் களத்தின்
மோத வானவர் பேரம ரிழந்தன ரழிந்தார்
பாது காப்பிரென் றிவரைவந் தடைந்தனர் பதறி.

(இ - ள்.) பூதர்களாகிய இவர்கள் கணத்தோடு கலந்திருந்த அம்முற்காலத்தில், கொல்லத்தக்க கொடுங்கோபமுடைய அசுரர்களுந் தேவர்களும் யுத்தபூமியிலெதிர்க்க, தேவர்கள் தங்கள் பெரிய யுத்தத்தையிழந்து அழிந்து எங்களைப்பாதுகாக்கக் கடவீர்களென்று, இந்நால்வரிடம்வந்து பதைத்து அடைக்கலம் புகுந்தார்கள். எ - று. (௧௧௬)

அன்று வானவர்க் குதவுவா னகனிலந் தடைந்து
குன்று ருத்தெனக் குவலயப் பூதரிற் குழுமிச்
சென்று ருத்தெழு நிருதர்வெஞ் சேனையைச் செருவிற்
கொன்று வானுல கிந்திரற் குடியிருத் தினரால்.

(இ - ள்.) அக்காலத்தில், தேவர்கட்கு உதவிபுரிய, பரந்த நிலவுலகமடைந்து மலைகளெதிர்ந்தன வெனக்கூற, பூலோகத்துப் பூதகணம்போலக் கூடிச்சென்று, எதிர்த்துப்போர்க்கெழுந்த அசுரர்களின் கொடிய சேனையை யுத்தத்தில் மாய்த்து இந்திரனைத் தேவலோகத்திற் குடியிருக்கச்செய்தார்கள், எ-று.

அந்த ரத்தவர்க் குதவிவான் கயிலையை யடைந்தார்
சந்த வார்புயத் தசுரர்கோ னிடரொடுந் தமித்து
வந்தி ரங்கிய வண்டவா பரணனை வழுத்தி
யெந்தை கேண்மதி யெங்குறை யுளதென விசைப்பான்.

(இ - ள்.) (இப்படித்) தேவர்கட்குதவிபுரிந்து பெரியகைலாயமலையை யடைந்தார்கள். அழகிய நெடியதோள்களையுடைய அசுரத்தலைவன் விசனத்தோடுந் தனித்துவந்து துக்கித்து, சிரமாலையையாபரணமாகப்பூண்ட அச்சிவபிரானைத் துதிசெய்து, எமது தந்தையே! எங்கள் குறையொன்றுள்ளது. அதனைக் கேட்டருள்கவென்று விண்ணப்பஞ் செய்கின்றான். எ - று. (௧௧௮)

நின்ன தாணையி னிலைஇய பூதரோர் நால்வ
ரென்ன தாகிய சேனையை யுயிர்செகுத் திறுத்துப்
பின்ன ரீங்கிவ ணடைந்தன ரென்றனன் பிழையோர்ந்
தன்ன காலையிற் பூதநா யகன்வெகுண் டனனால்.

(இ - ள்.) தேவரீர் ஆக்கினையில் நிலைபெற்ற ஒப்பில்லாத பூதகணர் நால்வர், அடியேனுடைய சேனையை உயிர்போகமாய்த்து, பின்னே இவ்விடத்துக்குவந்துவிட்டார்களென விண்ணப்பித்தான். பூதநாதராகிய சிவபெருமான் அவர்கள் குற்றத்தையுணர்ந்து அப்பொழுது கோபங்கொண்டனர். எ - று. ()

வருதிர் நால்வரு நீவிரென் றாணையை மதியா
தொருவி வானவர்க் குதவிசெய் தவுணரை யொறுத்தீர்
குருதி வாளெயிற் றசுரர்வெங் குலத்திடைத் தோன்றித்
தருவி னாட்டவர்க் கிடும்பைசெய் தகலிலஞ் சரிப்பீர்.

(இ - ள்.) நால்வரும் வாருங்கள். நீங்கள் எமது கட்டளையை மதியாமல் இவ்விடம் நீங்கித் தேவர்கட்குதவிசெய்து அசுரரைக் கொன்றீர்கள். (ஆதலால்) உதிரம்பொருந்திய வாட்படைபோலுங் கூர்மைதங்கிய பற்களையுடைய கொடிய அசுரகுலத்திற் பிறந்து, கற்பகத்தருவையுடைய தேவலோகத்திலுள்ள தேவர்களுக்குத் துன்புசெய்து இவ்வுலகத்திற் சஞ்சரிக்கக்கடவீர்கள். எ-று. ()

என்று சாற்றன னண்டவா பரணன்மற் றிவரு
மன்ற வன்சொலுஞ் சாபத்தா லம்பரத் தவர்க்குக்
கன்று வெஞ்சினத் திடும்பைமுற் றிழைத்தனர் கண்டா
யன்று தொட்டவ ரிழைத்திடு மிடும்பையின் றகன்ற.

(இ - ள்.) என்று சிவபெருமான் கட்டளைதந்தனர். இவர்கள் அக்காலத்தில், சிவபெருமான் கூறியசாபத்தால், தேவலோகவாசிகளுக்கு விசேடித்த கடுங்கோபத்தினாலே முழுவதும் துன்புசெய்தார்கள். அவர்கள் அக்காலந் தொடங்கிச்செய்துவந்த துயரங்கள் இன்று நீங்கின. எ - று. (௧௨௧)

இவணி கழ்ந்தன வின்னனா மீங்கிதன் மேனாட்
டவறின் மாதவ மியற்றிய சாகத்தீ வரச
ரவரை மாதவ மழித்தன திருவுளத் தடையாக்
கவரொ ளிக்கழன் முருகவேள் வெகுளியிற் கழறும்.

(இ - ள்.) இங்கே யிவ்வாறு நடந்தன. இதற்கு முற்காலத்தில், குற்றமில்லாத பெருந்தவஞ்செய்த சாகத்தீவரசர்கள் நால்வரை, பெருந்தவமழித்தன வற்றைத் திருவுளத்தி லடைந்து, ஒளிகளைக்கவரத்தக்க வீரகண்டாமணிதரித்த குமாரக்கடவுள் கோபங்கொண்டு கூறுகின்றார். எ - று. (௧௨௨)

கொடியெ னப்பிடித் துயரிய சேவலைக் கொழுங்கார்
நெடிய தோகைமா மயிலினை நீவிர்போ யுருத்து
முடிவின் மாதவ முயற்சியை யொழித்தனி ரதனாற்
கொடிய பாதக மடைந்தனி ரெனமனங் கறுத்தான்.

(இ - ள்.) தாம் கொடியாகப் பிடித்துயர்த்திய சேவலையும், மிகக்கறுத்து நீண்ட சிறகுகளையுடைய பெரிய மயிலையும் பார்த்து, நீங்களிருவரும்போய்ப் போர்புரிந்து, எல்லையில்லாத பெருந்தவமுயற்சியை அழித்துவிட்டீர்களாதலால், கொடும்பாவமெய்தினீர்களென்று மனதிற்கோபங் கொண்டனர். எ - று.

இற்றை நாண்முத லெம்மடி தாங்கலை யினிநீ
கொற்ற வார்கொடி யல்லையென் றிவற்றினைக் குறித்துச்
சொற்ற வாசகங் கேட்டலுங் கொடியொடு தோகை
வெற்றி வேலவற் பணிந்துநின் றினையன விளம்பும்.

(இ - ள்.) இன்று முதலாக நீ எமது திருவடியைத்தாங்க வேண்டாம், இனிமேல் நீ வெற்றிபொருந்திய நெடியகொடியல்லையென்று இவ்விரண்டினையுநோக்கி, சொன்னவாக்கியத்தைக்கேட்ட மாத்திரத்திலே கொடி (யாகிய

சேவல், வாகனமாகிய) மயில் இவ்விரண்டும், வெற்றிபொருந்திய வேலாயுத மேந்திய குமாரக்கடவுளை நமஸ்கரித்து எதிரேநின்று இவைபோல்வனசொல்கின்றன. எ - று. (௧௨௪)

இன்று காறுநின் னிணையடித் தொண்டுபூண் டிருந்தே
மென்று நின்னடி புகுதுவ தெய்மனத் துணரோம்
வென்றி பூத்தொளிர் விளங்கிலை வேற்படைப் பெரும
வொன்றி யேழையேம் புரிகுவ துரைத்தியென் றிரப்ப.

(இ - ள்.) இற்றைவரையில், தேவரீர் உபயபாதங்கட்குத் தொண்டுசெய்திருந்தோம். மீண்டு எந்நாள் தேவரீர் திருவடியையடைவது. எங்கள் மனத்திலறியோம். வெற்றி மிகுந்துவிளங்கும் பிரகாசமுடைய தகட்டுவடிவாகியவேலாயுதக்கடவுளே! ஏழையேங்கள் பொருந்திச்செய்யத்தக்கதைத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று யாசிக்க. எ - று. (௧௨௫)

கஞ்சி மாநக ரடைந்துநீ ரெமையுணர் கருத்தான்
மஞ்சு தோய்வரை மாதவம் புரிகுதிர் புரிந்தாற்
றஞ்ச மெம்மடி தருகுது மெனச்சென்று சாரா
வஞ்சி லம்படி நினைந்துநின் றவனடி யடைந்த.

(இ - ள்.) நீங்கள் காஞ்சிமா நகரமெய்தி எம்மையுணர்கின்ற கருத்தினால் மேகங்கள் படிகின்ற மலையிற் பெருந்தவஞ் செய்யுங்கள். அப்படிச்செய்தால், அபயமாக எமது திருவடிகளைத் தந்தருள்வோமென்று திருவாய் மலர்ந்தருள, அவ்வண்ணமே சென்றடைந்து, அழகிய சிலம்பணிந்த அவ்விறைவர் பாதங்களைத் தியானித்துத் தவத்தினின்று, அம்முருகக்கடவுள் பாதங்களையெய்தின.

பயிலுஞ் சூரனும் பதுமனு மியற்றிய தவத்தான்
மயிலுஞ் சேவலு மாயினர் வாளரி முகனு
மியலுந் தம்பியு நினைந்தன முடிப்பதற் கெண்ணிப்
புயலுண் டேகுறுங் கயிலையி னந்திபாற் புகுந்தார்.

(இ - ள்.) (ஒன்றாய்ப்) பிறந்த சூரனும் பதுமனும் தாங்கள் செய்ததவப் பயனால் மயிலுஞ் சேவலுமானார்கள். சிங்கமுகனும் அவனுக்கியைந்த இளையவனாகிய தாரகனும் தாம் நினைத்தவற்றை முடிக்கக்கருதி, மேகங்கள் நீர் பருகிச் செல்லும் திருக்கைலாயத்தில் திருநந்திதேவரிடஞ் சென்றார்கள். எ - று. ()

நந்தி நாதநின் னளிர்கழற் பங்கய மடைந்தேம்
புந்தி கூர்தர நாள்பல கழிதரப் புரிந்தேம்
விந்தை யூர்தியும் வெண்ணிணைச் சூற்படைச் சாத்தன
றந்தி யூர்தியு மாகுவ மெனமனந் தரித்து.

(இ - ள்.) திருநந்தி தேவரே! தேவரீரது குளிர்ச்சிதங்கிய திருவடித்தாமரையை யடைந்தோம். அடியேங்கள் காளியின் வாகனமாகிய சிங்கமும், வெள்ளிய நிணம்படிந்த சூலாயுதந்தரித்த அரியரபுத்திரன் வாகனமாகிய யானையும் ஆவோமென்று மனத்திற்கொண்டு, வெகுகாலம் புத்திபூர்வமான தவத்தைச் செய்தோம். எ - று. (௧௨௮)

அளிய மாற்றிய வருந்தவ மவப்படா தருளி
யொளிய நீறணி யெம்பிரா னருடியென் றுரைப்ப-

வெளிய வாளெயிற் றிவர்முக நோக்கினன் வியவார்
தெளியு நான்மறை நந்திமற் றினையன செப்பும்.

(இ - ள்.) பிரகாசந்தங்கிய திருவெண்ணீற்றினைத் தரித்த எமது தலைவரே! அடியேங்களியற்றிய அருந்தவமானது பலனற்றதாகாமல் அநுக்கிரகஞ் செய்து, அருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, வெண்ணிறந்தங்கிய ஒளிபொருந்திய பற்களையுடைய இவர்கள் முகத்தைப்பார்த்து வியந்து, தெளிந்த நான்கு வேதங்களையுடைய திருநந்திதேவர் இவ்வகையாகச்சொல்லுகிறார். எ - று.

நீறணிந்தரு ளெம்பிரா னேறிய நெடுங்கோட்
டேறவர்க்குள வூர்திகட் கிருங்கதி கொடுக்குந்
தாறு மெம்மிழை யிருத்திரொன் றுரைத்தனன் கருதி
வேறு கொண்டில ரிருவருந் தமதுளம் வியந்தார்.

(இ - ள்.) திருவெண்ணீற்றினை யணிந்த எமது சிவபெருமானேறாகணிக்கு நெடிய கொம்புகளையுடைய இடபமாகிய திருநந்திதேவர், காளிக்கும் அரியரபுத்திரனுக்குமுள்ள வாகனங்கட்குப்பெரும்பதவி(ஆகிய முத்தி)அருளுமெல்லையும் நீங்கள் எம்மிடத்திலிருப்பீர்களாக வென் றநுக்கிரகித்தனர் அவர்களிருவரும் அதைக்கருதிக்கொண்டு வேறொன்று நினையாதவர்களாய் மனமகிழ்வுற்றார்கள். எ - று. (௧௯௦)

இப்பெருங்கதை கேட்டுழி யயமுகி யென்பாள்
கப்பி னந்தனச் சுமையுடைத் தாயொடுஞ் சுவைக்கோட்
டொப்பருந்திற லேற்றினு லூர்திக ளனைத்துந்
தப்பில் வான்கதி பெறுவன சாற்றெனச் சாற்றும்.

(இ - ள்.) அயமுகி யென்பவள் இப்பெருஞ் சரிதையைக்கேட்ட காலத்தில், இளைத்த இளமை தங்கிய தன பாரமுடைய தன தாயாகிய மாயையுடனே, இரண்டாகப்பிரிந்த கொம்புகளையுடைய ஒப்பற்ற வல்லமை வாய்ந்த இடபமாகிய திருநந்திதேவரால் எல்லா வாகனங்களும், தவறுதலில்லாத பெருங்கதி பெறுகின்றனவற்றைச் சொல்லவேண்டுமெனக் கேட்க, (மாயை அயமுகிக்கு மேலும்) சொல்லுவாள். எ - று. (௧௯௧)

வெள்ளி யங்கிரிக் கோட்டமே மேவரு மிறைவன்
வள்ளி நுண்மருங் குமையிடைத் துர்க்கையை வருத்திப்
புள்ளி வண்டறை துளவணி முகிலிடைப் புலவு
னள்ளி லைப்படைச் சாத்தனை வருத்தின னதுநாள்.

(இ-ள்.) அழகிய வெள்ளிமலையின் சிகரத்திலே வீற்றிருக்குஞ் சிவபெருமான், கொடிபோலும் நுண்ணிய இடையையுடைய உமாதேவியாரிடந் துர்க்கையை வருவித்து; புள்ளிகளையுடைய வண்டுகளொலிக்குந் துளவமாலைதரித்த மேகம்போன்ற திருமால்பால் புலால்கமழும் மாமிசநிறைந்த அச்சமாகிய இலைபோன்றசூலாயுதந்தாங்கிய அரியரபுத்திரனை வருவித்தனர். அக்காலத்தில்.

இனையர் போந்தன ரெம்பிரான் றிருவடி யேத்தி
வினைய வூர்திமற் றெங்களுக் கருளென வேண்ட
வனைய வேறினை யமைத்திவர்க் கூர்திநீ யருள்வா
யெனவு ரைத்தலு மெழுவழித் துணைமருப் பிடபம்.

(இ - ள்.) இவர்களிருவரும் வந்து எமது சிவபெருமான் திருவடிகளைத் துதிசெய்து நன்னடைபொருந்திய வாகனங்களை எங்களுக்கு அருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அந்தத் திருநந்திதேவனை விளித்து இவ்விருவர்க்கும் நீ வாகனங்கள் தரக்கடவாயெனக் கட்டளைதந்தவுடன், பெருவல்லபமுடைய இருகொம்புகளை யுடைய இடபதேவர். எ - று.

இதுமுதல் மூன்றுபாடல்கள் குளகம். (கரு௩)

அருவி மால்வரைக் கயிலையி னருகுறச் சரிக்குந்
திருகு சீற்றவெஞ் சீயமொன் றிழிமதச் செருக்கி
னெரிவி ழிக்கரத் தந்தியொன் றீங்கிவர்க் களிப்பக்
கரியு மத்திற லாளியுந் தனிமனங் கவலா.

(இ - ள்.) அருவிதவழும் பெருமலையாகிய கைலாயத்தின் அருகேயிருந்து சஞ்சரிக்கும் கடுங்கோபமுடைய சிங்கமொன்று, பெருகிப்பாயும் மதச்செருக்கையும் தீப்போலும் விழிகளையும் துதிக்கையையு மடைந்த யானையொன்று, இவ்விரண்டையும் இவ்விருவர்க்குங் கொடுத்தருள, அந்த யானையும் வலிய சிங்கமும் ஒப்பற்ற மனங்கலங்கி. எ - று. (கருச)

இடப நாயக யாங்களிக் கயிலையி னிருந்துன்
படரொ ளிப்பதம் பெறுகுவா னருந்தவம் பயின்றே
மிடையி னீங்கிதுற் பவித்தவா றெதுவென விசைப்ப
வடன்ம ருப்புடை விடையவற் கின்னண மறையும்.

(இ - ள்.) திருநந்திதேவரே! அடியேங்கள் இக்கைலாயகிரியி லிருந்து ஒளிவளர்கின்ற தேவரீருடைய திருவடிகளையடையக் கருதி அருந்தவஞ்செய்தோம். இதனடுவே இவ்வாறு உண்டாய காரணம் யாதென்றுவினவ, வலிதங்கிய கொம்புகளை யுடைய இடபதேவர் அவைகட்கு இவ்வணங் கூறுகின்றனர். எ - று. (கருரு)

சேய காலமற் றினையவர்க் கூர்தியாய்த் திரிந்து
போய பின்கதி யளிக்குதும் போமினென் றிவரை
யேய பின்னர்மற் றவர்க்கவை யூர்தியா யிருந்து
மாயி ரும்பத மேற்றினு லடைந்தன மகிழ்ந்து.

(இ - ள்.) நெடுங்காலம் இவ்விருவர்க்கும் வாகனங்களாய்த் திரிந்திருந்து பின்பு கதிதருவோம் செல்லுங்களென்று விடைகொடுத்து இருவரையும் அனுப்பியபின், அவை அவர்கட்கு வாகனங்களாயிருந்து, திருநந்திதேவரால் மிகப்பெரும் பதவியாகிய முத்தியை மனமகிழ்ச்சியை யுடையவைகளாய் அடைந்தன. எ - று. (கருசு)

ஏறு மூர்திமற் றிலமென விருவரு மெதிர்ந்து
கூறு நான்மறை யேற்றொடு முளாத்தனர் குறுகி
நீறி லங்கொளி நந்திதன் னுளத்தொடு நினைநதான்
வேறு கொண்டிவ ரிருவரைக் கொடுத்தனன் விரும்பி.

(இ - ள்.) (பூர்வ) காளி அரியரபுத்திரனாகிய அவ்விருவரும், ஏறத்தக்க வாகனங்க ளில்லையென்று, நான்குவேதங்களுந் துதிக்கின்ற திருநந்திதேவரோடு எதிரேவந்து கூறினார்கள். திருவெண்ணீறு பிரகாசிக்குந் திருமேனி

யையுடைய திருநந்திதேவர் தனித்திருந்து தமது திருவுள்ளத்தி லாலோசித்து அவ்விருவரையும் விருப்பத்துடன் (அவர்கள் விருப்பு நிறைவேறும்படி) வாகனங்களாகக் கொடுத்தருளினார் எ - று.

தாரகன் சிங்கமுகனென்று மிருவரும் பூர்வகாளி அரியரபுத்திரனிவர்கட்கு வாகனமாகத் தவங்கிடந்தவர்களாதலின், பண்டையவாகனமிரண்டையும் நாதனகாளி அரியரபுத்திரனுக்குக் கொடுப்பித்து, இவர்களை அவர்கள் விருப்பின்படி பூர்வகாளி அரியரபுத்திரனுக்கே கொடுப்பித்தனரென்க. (௧௩௭)

சூராதிகளொடுக்கச்சருக்கம் முற்றிற்று,

ஆ. சருக்கம் உ-இ திருவிருத்தம் - உ௨௪.

மூன்றாவது

அயமுகிசருக்கம்.

கலிநிலைத்துறை.

ஈது கேட்டுநின் றயமுகி யின்னரு மினிநீ
தாது வார்குழ லன்னையென் னிலைசொலத் தகுமென்
றோது வோருவன் கேண்மதி யென்றன ளுரைப்பாள்
சீத வார்பெருங் கடலகத் துளதொரு தீவு.

(இ - ள்.) இதனைக்கேட்டு அயமுகி நேரேநின்று, மகரந்தம் நிறைந்த கொடிய கூந்தலையுடைய தாயே! இதன்மேல், நீ என்வரலாற்றினைச் சொல்லவேண்டுமெனக்கேட்ப, சொல்கின்றேன். கேட்பாயாகவென்று சொல்கின்றாள். குளிர்ந்து நீண்டபெருங்கடலுக்குள் ஒரு தீவு உள்ளது. எ - று. (௧)

தேங்கு தண்புனற் கிடந்தகோ மேதக தீவின்
வாங்கு நான்மறை விசிட்டனென் றுளனொரு மறையோ
னாங்க வன்றனிச் சுவேதையை வேட்டன னவள்பா
லோங்கு மாதவத் துதித்தனள் சித்திர ரேகை.

(இ - ள்) தேக்கமுற்ற குளிர்ச்சிதங்கிய கடலகத்துள்ள கோமேதக தீவிலே நான்குவேதங்களையு முணர்ந்த விசிஷ்டனெனும் பெயர்கொண்ட வேதியனொருவனுண்டு. அவ்விசிஷ்டன் ஒப்பற்ற சுவேதை யென்பாளை மணஞ்செய்து கொண்டனன். அவளிடத்தில் உயர்ந்த பெருந்தவத்தால் சித்திரரேகை யென்பாள் பிறந்தனள். எ - று. (உ)

அழகெலாந்திரண் டொருருக் கொண்டன வளையாள்
குழவி மானிளம் பிடியெனத் தவழ்தொறுங் குழைவாள்
மழலை வாய்மொழிக் குதலையிற் கேட்பினு மரனுந்
தழையு லார்தன வாயினு மரும்பின தழைக்கும்.

(இ - ள்.) (பெண்கட்குரிய) அழகுகள்யாவும் ஒன்றுசேர்ந்து வடிவெடுத்ததைப்போன்றவள். இளங்கன்றாகிய பெண்மான்போலத் தவழுந்தோறுங் குழைவுறுவாள். இளம்வாயின் மழலைச் சொல்லைக்கேட்டாலும், இலைகள் முற்று முலர்ந்திருக்கும் மரங்களுந் தளிர்விட்டுத்தழைக்கும். எ - று. (௫)

குழைத்த செம்பொனா லியற்றிய புனைந்தகூன் சிலம்பு
தழைத்த சில்லொலி கலிப்புறத் தளர்நடை பயின்று
விழைத்த மாதவத் தன்னைகண் களித்தன ளிருப்ப
மழைத்த வார்குழ லேழ்வய துற்றனள் வளர்நாள்.

(இ - ள்.) இளக்கிய பசும்பொன்னாலாக்கிய அலங்காரஞ்செய்த வளைந்த சிலம்புமிகுந்த சிற்றொலியொலிக்கத் தளர்நடைபழகினாள். பெருந்தவம்புரிந்த தாயாகிய சுவேதை கண்கள் களித்திருக்க, மேகவண்ணமுற்றதாய் நீண்ட கூந்தலையுடைய அச்சித்திரரேகை ஏழுவயதெய்தி வளர்ந்து வருகையில்.

அனைய தீவகத் தயல்கிடந் துளதொரு நகரந்
தனையு ரைத்திடிற் றயங்குபூச் சக்கர மதன்பா
னினைய நான்மறைக் குலத்தரி சன்மனோர் நெறியோன்
மனைவ யிற்றிடைத் தோன்றின னொருதனி மதலை.

(இ - ள்.) அந்தக் கோமேதகதீவின் சமீபத்தில் ஒரு நகரமுண்டு. சொல்லுமிடத்தில், அதன்பெயர் பூச்சக்கர நகரமென்பார்கள். அதனிடத்தில், எண்ணத்தக்க நான்குவேதங்கட்குரிய வேதியர் குலத்தில், ஒப்பற்ற சன்மார்க்கமேற்கொண்ட அரிசன்மனென்போன் வயிற்றில் ஒப்பற்ற ஒருபுத்திரனுதித்தனன்.

புனித மாதவன் புண்டரீ கப்பெரும் பெயரான்
றனிம றைப்பெருந் தலைவனத் தையலை மணந்தா
னினிது கொண்டுபோய்த் தனதகத் திருத்தின னிவளை
வனைக னங்குழை புதுவனப் பொருங்குற வளர்வாள்.

(இ - ள்.) பரிசுத்தமான பெருந்தவஞ் செய்தவனும், புண்டரீகனென்னும் பெருமைதங்கிய பெயர்பெற்றவனும், ஒப்பற்ற வேதப்பெருந் தலைவனுமாகிய அப்புதல்வன், அச்சித்திரரேகையை வதுவைசெய்துகொண்டு, இனிமையாக அழைத்துச்சென்று தன்மனையில் இருத்திக்கொண்டனன். அலங்கரித்த மேகத்தாற் செய்ததுபோன்ற கூந்தலையுடைய அவள் புதிய அழகுகள்யாவும் ஒன்றாய்ச் சேரவளர்வாளாயினாள். எ - று. (௬)

எரியு நஞ்சமு மமுதமு மெடுத்துறக் குழைத்துப்
பரிவி னீட்டின கிடத்தின வாமெனப் பதைத்த
வரிப ரந்தன வயல்பிறழ்ந் தலிகுழை நடந்த
சரிய வாயின வெளியவா யினதடங் கண்கள்.

(இ - ள்.) தீயையும் அமுதத்தையும் விடத்தையும்மடுத்து ஒன்றாய்க் கூட்டி அன்போடு நீட்டிக்கிடத்தினவெனச் சொல்லத்தக்கதாய், பதைப்புடையனவும், செவ்வரிபரந்தனவும், பக்கலிற்புரண்டு காதோலைவரையில் நடந்தனவும், கருநிறமுற்றனவும் வெண்ணிறமுற்றனவுமாய்ப் பரந்தகண்களையுடையவள். எ - று. (௭)

ஆரி ருட்பிழம் பொழுக்குவிட் டனையதோ கமஞ்சூற்
காரி ருட்கொழுந் தொருவழிக் கான்றதோ கமழ்ந்து

வேரி யஞ்சன மயிரொன விழுதுவீழ்ந் ததுவோ
வாரி ணர்ச்சுரு ளோதியை யாதென மதிப்பாம்.

(இ - ள்.) பொருந்திய இருட்குழம்பை யொழுகவிட்டது போன்றதோ? கருக்கொண்ட மேகத்தின் இருட்கொழுந்து ஒரேவழியிற் கக்கியது போன்றதோ? மணம்வீசிய சுகந்த மையானது மயிரெனச்சொல்ல விழுதுவிட்டது போன்றதோ? நீண்ட மலர்க்கொத்துகளைச் சூடிய அவளது சுருண்ட கூந்தலை யாதென்று நிச்சயிப்போம்? எ - று. (௮)

முளைத்த வான்பிறை முத்தின முற்றிய பின்னர்க்
கிளைத்த வாரிருட் கீழ்வடிம் பிணைபெறக் கிடத்தித்
தளைத்த வாமெனக் கரும்புரு ரத்தொடுந் தயங்குந்
திளைத்த சிந்தூர வாணுதல் யாதெனத் தெரிப்பாம்.

(இ - ள்.) ஆகாயத்தில் முளைத்த சந்திரன் மூன்றுநாட்கள் கலைகள் முற்றிய பிறகு, நிறைந்தவிருள், கீழ்வடிம்பிலே இருபக்கலிலும் சரியாயிருக்க வைத்துக் காவற்படுத்தியதற்குச் சமானமென்று (கண்டோர்) சொல்லும்படி, கரியபுருவத்துடனே விளங்குஞ் சிந்துரப்பொட்டணிந்த ஒளிதங்கிய நெற்றியை யாதெனச் சொல்லுவோம்? எ - று. (௯)

பயிற்செய் கானக மரகதப் பசும்பனித் தோகை
மயிற்கு லங்குழீஇ மயங்கின சாயலின் மயங்கு
முயிர்த்த பூந்தழை மாஞ்சினை யுடனுறைந் திசைக்குங்
குயிற்கொ ழுங்குர லமுதொடுங் கூட்டின குதலை.

(இ - ள்.) பழகியுள்ளகாட்டில் மரகதம்போலும் பசியகுளிர்ந்த கலாப த்தையுடைய மயிற்கூட்டங்கள் சேர்ந்து இவள்சாயலால் மயக்கமுற்றனவாய் மயங்கும். கொழுமைதங்கிய குரலென்னும் அமிர்தத்துடன் சேர்த்த இவள் குதலைச் சொற்களுக்கு அழகிய தழைகணிறைந்த மாங்கிளையில் வசித் தொலிக்குங் குயில்கள் பெருமூச்செறிகின்றன. எ - று. (௧௦)

முழுத்த பானிலாப் பிதிர்த்தன முறைமுறை திருத்தி
யழுத்தி வைத்தவோ வமிழ்தினை யரும்பென லாக்கிப்
பழுத்த வெண்ணிலாப் படுத்திவைத் தனகொன்மற் றறியோ
மொழுக்கு வாணகை யாதென வுணர்ந்தில மின்னும்.

(இ - ள்.) கலைகணிறைந்த வெள்ளியசந்திரனைப் பகிர்ந்து வரிசைவரிசை யாய்த் திருத்தியழுத்திவைத்தனவோ, அமிர்தத்தை யரும்புபோற்செய்து மிக்க வெள்ளியசந்திரிகையைப் பரப்புப்படிவைத்தனவோ, யாதோ நாமறியோம்; ஒழுங்காயுள்ள பிரகாசிக்கின்ற பற்கள்யாதொன்று இதுகாறுந்தெரிந்திலோம்.

வட்ட வார்சுரு ளோலையிற் பொலிந்தன வள்ளை
கெட்ட காமனுக் கன்றுயிர் கொடுத்ததிக் கிளையே
தொட்ட வார்திரைப் பரவைமா நிலத்துயிர் சூறை
யிட்ட ருந்துற மறலிகைத் திருத்திய விலக்கே.

(இ - ள்.) வட்டமாகச் சுருண்ட நீண்டபொன்னோலையில் விளங்குவன வாகிய வள்ளை (இலைபோலுங்காதுகள்) அக்காலத்திலே அபசயமுற்ற மன்மத னுக்கு உயிரையளித்தது. அவனுக்குறவாயுள்ள அவையே (சகார்) தோண்டிய நெடிய அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த பெரிய பூமியில் உயிர்களைக் கொள்ளைகொண்டுண்ண இயமன் தன்கையால் திருத்தி[illegible]த்த குறியாயுள்ள பொருளுமாம். எ - று. (௧௨)

இலவு பூத்ததிற் பவளமென் கொழுந்தொளி யிருத்தி
மலர்மு ருக்கிதழ்ச் சேயொளி வழித்ததின் விரவிக்
குலநா றுங்கனி வீழியிற் கொடுத்தன வெனலா
யலைக டற்படு மாரமு தரும்புசெவ் விதழாள்.

(இ - ள்.) பூத்த இலவமலரில் மெல்லிய பவளக்கொழுந்தின் பிரகாசத்தை யமைத்து, முருக்கமலரிதழின் செந்நிறத்தை வழித்து அதிற்கூட்டி, நிறத்தோடுகூடிய நல்ல வீழிப்பழத்திற்குக் கொடுத்தன போன்று சொல்லத் தக்கதாய், அலைகள் பொருந்திய பாற்கடலிலுதித்த நிறைந்த தேவாமிர்தஞ் சிந்துஞ் சிவந்த அதரத்தினை யுடையவள். எ - று. (கங)

அரும்பு கண்கறுத் தாரமு தகம்பொதிந் தமிழ்ந்தின்
குரும்பை யொத்தணி திதலைமீப் பொடித்தறக் குழைந்த
மருங்கி னுக்கிரங் காதிரு மருங்கொளி பழுத்து
முருங்கு தன்மைபெற் றெழுநதிணை முகிழ்த்தவெம் முலையாள்.

(இ - ள்.) அரும்பையொத்த கண்கள் கறுப்பெய்தி, உள்ளிடத்தில் நிறைந்த பால்பரவி, தென்னங்குறும்பையையொத்து,மேலே அழகிய தேமல் படர்ந்து, மிகமெலிந்துள்ள இடைக்குத் தளர்வெய்தாமல் இருபுறங்களிலும் மிக்க ஒளிவீசி, கோலத்தன்மை வாய்ந்தோங்கிக் குவிந்து பூரித்த இருதனங் களையுடையவள். எ - று. (கச)

மறுவின் மென்கலை சுருக்கவக் கலையொடு மயங்கி
யுறுவ தின்மைபெற் றுலகெலா மயக்கியமார
னிறுதி பெற்றபின் னெடுத்தவோ ருருவென லாகிச்
சிறிய சிற்றிடை யவனுயி ராமெனத் திகழும்.

(இ - ள்.) குற்றமில்லாத மெல்லிய ஆடையைக்கட்டுதலும், அவ்வாடையுடன் கலந்து தானுள்ள தோற்றமேயில்லாது, உலகமுழுவதையும் மயக்கச் செய்த மன்மதன் இறந்தபின்னர் எடுத்த (அருவமாகிய) ஓர்வடிவென்று சொல்லத்தக்கதாய்,அற்பமாகிய சிறிய இடையானது, அம்மன்மதனுயிரெனச் சொல்ல விளங்கும். எ - று. (கரு)

அருப்பி ளந்தனத் தாருயி ரளித்தவ ராசை
விருப்ப மெவ்வள வவ்வள வாகிய விரிவா
யுருத்து ருத்தமு தூற்றிருந் தன்னவ ருளம்போற்
பெருத்த றக்கனிந் தகலிய வல்குல்பெற் றுடையாள்.

(இ - ள்.) அரும்புபோல் இளமையாகிய தனமுடையாளிடத்தில், தமது நிறைந்த உயிரைக்கொடுத்தவர்களின் ஆசையெவ்வளவினதோ அவ்வளவினதாகிய விரிவையுற்றதாய், சுரந்து சுரந்து அமுதமூற்றெடுத்து, அக்காமுகர்களின் மனமெவ்வண்ணம் பரந்திருக்குமோ அவ்வண்ணம்பரவி, மிகக்கனிந்து விசாலித்த அல்குலையுடையவள். எ - று. (கசு)

பாயொ ளிப்பனித் தாமரை பரிதிவிட் டுமிழுங்
காயொ ளிக்கதிர் படப்படக் கருகுவ கதுவா
மீயொ ளிப்பட மென்மையுந் தண்மையும் விரவிச்
சேயொ ளிப்படச் சிவந்தன சிறடிச் சிலம்பு.

(இ - ள்.) சூரியன் தன்பாலிருந்து பரப்பும் வெப்பமாகிய ஒளிதங்கிய கிரணங்கள் தாக்குந்தோறும், கருகிப்போகும் பரந்த காந்தியுள்ள குளிர்ச்சி

வாய்ந்த தாமரையைப் போலாகாது, சிலம்புகளின் மிக்கஒளி தாக்குதலால் மென்மையுங் குளிர்ச்சியுங் கலந்து செவ்வொளிகிலவச் சிவந்திருக்குஞ் சிற்றடியையுடையவள். எ - று. (கஎ)

சாந்த ளாவிய பொதியமின் றுயிர்ப்புறத் தவழ்ந்து
போந்த தென்றலங் குழவி யோர் தளர்நடை போலு
மாந்த ராருயிர் மயக்கிய மடநடைக் குவமை
கூந்த லம்பிடி யன்றிமற் றேதெனக் குணிப்பாம்.

(இ - ள்.) சந்தனமரங்களுயர்ந்த பொதியாசலத்திருந்து பெருமூச் சுண்டாகத் தவழ்ந்துவந்த தென்றலென்னும் அழகிய குழந்தையின் ஒப்பில்லாத தளர்நடையைப்போல, புருஷர்களின் அரியவுயிரை மயங்கச்செய்த அவளது இளநடைக் குபமானமாக, [கூந்தல்] கழுத்தடிமயிரையுடைய அழகிய பெண் யானையையன்றி வேறேதென்று குறிப்பிடுவோம். எ - று. (கஅ)

இவளை யின்னுயிர்க் குயிரெனத் தழுவின னிருந்தான்
புவன மூண்டுமிழ்ந் தாளந்தவ னிணையடி போற்றித்
தவமு யற்சியி னொழுகுவா னறநெறி தவறு
னுவர்க்க ருங்கட லுலகமொ தொழுங்குற வாழ்வான்.

(இ - ள்.) இச்சித்திரரேகையைத் தனது இனிய உயிர்க்குயிராகத் தழுவியிருந்து, உலகமுண்டுமிழ்ந்தவராகிய விஷ்ணுமூர்த்தியின் உபயபாதங்களைத் துதிசெய்து, தவமுயற்சியில் ஒழுகுவோனும், நீதிமுறை தவறாதவனும், உவர்ப்பாகிய கருங்கடலாற் சூழப்பெற்ற உலகத்தோடொத்து முறையாக வாழ்ந்திருந்தான், எ - று. (ககூ)

துளப மார்பினன் சுருக்கிய வுத்தரீ யத்த
னளவு தாமரை மணியின னாரமு தளைந்த
கிளவி மென்குயி லம்புயத் திருமகள் கேள்வ
னுளகி னோந்திடு வயிணவத் தலைமைபெற் றுடையோன்.

(இ - ள்.) துளசிமாலைதரித்த மார்புடையவனும், சுருக்கித்தரித்த உத்தரீயமுடையவனும், கணக்கிட்ட தாமரைமணி மாலைதரித்தவனும், குயிலின் குரல்போன்ற தேவாமிர்தங்கலந்த மெல்லிய சொற்களையுடையவளாய்த் தாமரைப்பீடத்திலுள்ள திருமகள் கொழுநனை மனதில் தியானஞ்செய்யும் வைணவத்தலைமை அடைந்தவனுமாவன், எ - று. (உ0)

பொருவின் மாதவப் புண்டரீ கப்பெரும் பெயரான்
மருவு சித்திர ரேகைபூண் வனமுலை மயங்கி
யொருவு றுவருங் காமவெங் கடற்படிந் தாற்றுன்
றிருகு சிந்தைய ளிவனொடுஞ் சிறந்தனள் சிலநாள்.

(இ - ள்.) ஒப்பில்லாத பெருந்தவமுடைய புண்டரீகனென்னும் பெருமை பொருந்திய பெயரை யுடையவன், தான்மணந்த சித்திரரேகையின் ஆபரணமணிந்த அழகிய தனங்களில் மயங்கி, எப்போதும் அகலாத அருமையான காமமென்னுங்கொடிய கடலில் மூழ்கிக்கிடந்தான். மாறுபட்ட மனமுடைய சித்திரரேகை இவனோடு கூடிச்சிலகாலம் வாழ்ந்திருந்தனள். எ - று. (உக)

மறைக்கு நாயக னீங்கிவன் வறுமைகண் டிரங்கி
நறைப்ப சுந்துழாய் நாயக னொருமணி நல்க
நிறைத்த மாநிதிக் குப்பையங் கதுதர நின்றான்
செறித்த வாயிரஞ் சீடருக் கருளினன் சிறந்தான்.

(இ - ள்) வேத நாயகனாகிய இப்புண்டரீகனது வறுமையைப் பார்த்துத் திருவுள்ளமிரங்கி மணங்கமழும் பசிய துளவமாலை சூடிய திருமால், ஒருமணியைக் கொடுத்தருள, அம்மணி நிறைந்த பெருந்திரவியக் குவியல்களைத் தரப்பெற்ற அப்புண்டரீகன், தன்னையடுத்த ஆயிரக்கணக்கான சீடர்களுக்கு உதவிசெய்து சிறப்புற்றிருந்தனன். எ - று. (௨௨)

இவன கத்திருந் தில்லற மாட்சியி னிழிந்தா
ளவன டித்துணைச் சீடரை யவாவின ளணைந்தாள்
குவிமு கிழ்த்துணைக் கொங்கையாள் குறிப்புவே றுகிக்
கவரு ளத்தினள் காமமிக் கூர்தரக் கவல்வாள்.

(இ - ள்.) சித்திரரேகை இவன்மனையிலிருந்து இல்லற தருமந்தவறியவளாய், அப்புண்டரீகன் திருவடியைப்பணியுஞ் சீடர்களை விரும்பிப்புணர்ந்தாள். குவிந்த அரும்பையொத்த இருதனங்களையுடைய அவள் மனந்திரிந்து வஞ்சகமனமுற்றவளாய்க் காமமிகுத்துப் பெருகுதலால் வருந்துவாள். எ - று.

வாள ரித்தடங் கண்களா லுயிருக மருட்டு
மூளெ ரிக்கடுங் காமவெந் நோய்கெட முயங்கு
நாளொர் நாழிகை யாயினு மொழிவுறா ளயப்பால்
வேள்வி கற்பமே யல்லது வேண்டுழி வேண்டாள்.

(இ - ள்.) வாள்போன்று அரிபடர்ந்த பரந்தவிழிகளால் உயிர்சோரும்படி மருட்டுவாள், மூண்டெரியுங் கடுங்கோபமாகிய கொடுநோய் கெடப்புணருவாள், ஒருநாளில் ஒருநாழிகையேனும் ஒழியாதவளாய் மதனலீலையையேயிச்சிப்பாள். பிறவற்றை வேண்டிக்கொண்டாலும் இச்சியாள். எ - று. (௨௪)

அள்ளல் வார்கட லகனிலத் தாடவ ரநேக
ரொள்ளி மைப்பொழு தொழிவுறா தியற்றினுந் தமித்தாற்
கள்ள வாணெடுங் கண்ணித னநுபவக் கலவி
யுள்ள மோர்ந்துமெய் பொடித்திருங் காமமிக் கொழுகும்.

(இ - ள்.) சேறுதங்கிய நெடிய கடல் சூழ்ந்த பரந்த உலகத்திலுள்ள ஆடவரநேகர், மிகக்குறைந்த இமைப்பொழுதும் ஓயாது புணர்ந்தாலும், பிரிந்த காலத்தில் வஞ்சகமாகிய வாள்போல் நீண்டவிழிகளையுடைய அச்சித்திரரேகை தன் அநுபவமாகிய புணர்ச்சியை மனத்திற்கருதி உடல்புளகித்துக் காமநீரை மிகுதியாக ஒழுக்குவாள் எ - று. (௨௫)

கோட்டி ரும்புனற் கொள்ளையக் கோடிற வறுத்து
நீட்டி நீடொறு மாயிரங் கவர்த்தலை நிமிரும்
வாட்ட டங்கணு மனையன மாந்தரிற் படருந்
தோட்ட லங்கலாள் சிந்தையு மவ்வழித் தொடரும்.

(இ - ள்.) கரையையுடைய மிக்கநீர்ப்பெருக்கு அக்கரையழியவுடைத்துப் பெருகுந்தோறும் கணக்கில்லாத கால்களாகப்பாயும். (அதுபோல) வாள் போன்ற பரந்த விழிகளையுடைய சித்திரரேகையும் கணக்கில்லாத சோரபுருஷருடன் கலப்பாள். இதழ்களோடுகூடிய மலர்மாலையணிந்த அவள்மனமும் அவ்வகையே பின்றொடர்ந்து செல்லும். எ - று. (௨௬)

மனையிழந்தனர் மாநிதி யிழந்தனர் மயங்கி
நினைவி ழந்தனர் நெஞ்சிழந் தனர்நிலை யிழந்தார்

புனைசெய் மாநகர் மாந்தரி லவளொடும் புணர்ந்தா
ரினைய சொன்பெருந் தியங்கிய வாக்கைய ரிளைத்தார்.

(இ - ள்.) அலங்கரிக்கின்ற அந்தச்சிறந்த நகரத்திலுள்ள ஆண்மக்களில் அவளோடு கலந்தவர்கள் வீடுகளை யிழந்தார்கள், சிறந்த செல்வத்தையிழந்தார்கள், மயக்க மெய்தித்தங்கள் நற்கருத்தை யிழந்தார்கள், மனவன்மை யிழந்தார்கள், தங்கள் நிலைமைகளை யிழந்தார்கள், இத்தன்மையர் (மேலும்) எலும்புகள் வெளியே தோன்றிய தேகமுடையவர்களாக இளைத்தார்கள். எ - று. (௨௭)

கலிவிருத்தம்.

ஆய வின்னண மவ்வழி யெய்துழி
மேய வேத வயிணவ வேந்தனை
நேய நெஞ்சொடு நீண்மறை யோரொடுந்
தூய சிந்தைத் துருமுனி யெய்தினான்.

(இ - ள்.) ஆகிய அச்சித்திரரேகை இவ்விதமாக அவ்வழியில் நடந்துவருகையில், அவள் கணவனான வேதமுணர்ந்த வைணவத்தலைவனான புண்டரீகனிடத்தில், அன்புடைய மனதோடும் திரளான அந்தணர்களோடும் பரிசுத்த மனமுடைய துருவாசமுனிவர்வந்தருளினர். எ - று. (௨௮)

சென்ற வத்துரு வாசற் கெதிர்செலா
வொன்று சிந்தை யுருக வுருகினா
னின்று நீவரற் கெத்தவஞ் செய்தனன்
வென்றி மாதவ வென்று விளம்பினான்.

(இ - ள்.) வந்தருளிய துருவாச முனிவருக்கு எதிர்சென்று, ஒருப்பட்ட மனமுருக உடலுருகினனாய், வெற்றிதங்கிய பெருந்தவமுனிவரே! தேவரீர் இத்தினத்தில் இங்கெழுந்தருளுவதற்கு யாதுதவமியற்றினேனெனக்கூறினன். (அப்புண்டரீகன்) எ - று. (௨௯)

பொய்யின் மாதவப் புங்கவ னைத்தொழு
தைய பொன்னடி சாத்தினை யாதலி
னெய்து மென்னக மெத்தவஞ் செய்ததோ
செய்த மாதவ வுண்மை சிறந்தனன்.

(இ - ள்.) பொய்ம்மை நீங்கிய பெருந்தவமுடைய துருவாச முனிவரைப் பணிந்து, ஐயரே! தேவரீர் திருவடிகளைச்சாத்தியருளினீரானபடியால், அடியேன் குடில்யாது தவம்புரிந்ததோ? யானியற்றிய பெருந்தவத்தின் உண்மைப் பலனை மேம்படவடைந்தேன். எ - று. (௩௦)

என்னு மன்பி னெடுத்தெடுத் தேத்துபு
வுன்ன ருந்தன் னுறையுள்கொண் டேகினான்
றுன்ன ருந்துரு வாசனொ டுஞ்சுடர்
மன்னு மாமணி மண்டபம் வைகினான்.

(இ - ள்.) என்று சொல்லும் அன்புடன் பலவாறாக எடுத்துத்துதிசெய்து நினைத்தற்கரிய தன் வீட்டிற் கழைத்துக்கொண்டுபோய், அடைதற்கியலாத துருவாசமுனிவருடன் ஒளிதங்கிய சிறந்த ரத்தினங்களிழைத்த மண்டபத்திலிருந்தனன். எ - று. (௩௧)

ஆசனந்தந் தருச்சனை செய்தபின்
போசனஞ்சொற் றமைக்கப் புகுந்தனன்
பாசிழைக்குப் பரிந்துரைத் தானவன்
மாசகற்றிய மைத்துனன் மாட்சியின்.

(இ - ள்.) ஆசனமளித்து அர்ச்சனைசெய்த பின்னர், திருவமுது செய்யும்படி பிரார்த்தித்து (அவர்சம்மதிக்க) அதனையமைக்கப்புகுந்து, பசும்பொன்னாபரணமணிந்த தன்மனைவிக்கு அன்புடன் சொன்னான். அவளும் குற்றமின்றிச் சிறப்போடு (உணவாதிகளைச்) சமைத்தனள். எ - று. (௬௨)

இயலு மன்பி னடிசிலி ழைத்தபின்
புயன றுங்குழல் கொண்டனை போவெனக்
கயனெ டுங்கட் கரும்புகொண் டேகினு
டுயிலு நெஞ்சிற் றுயில்வளர் வான்றனை.

(இ - ள்.) இயன்றஅன்போடு அமுதமைத்தபிறகு மேகம்போலக்கறுத்த மணங்கமழுங் கூந்தலையுடையாளே! (துருவாச முனிவரை) அழைத்துவரப்போவென்று (கணவன்) சொல்ல, சேல்மீன்போலும் நீண்டவிழிகளையுடைய கரும்புபோல்வாளாகிய சித்திரரேகை அச்சொல்லை மேற்கொண்டு துயில்புரிபவரை.

கண்டு வெஃகியக் காமக் கலவியுட்
கொண்டு வீழ்ந்து குலத்தோ டழுவினு
ளண்ட ரேத்து மருந்தவன் றன்விழி
விண்டுநோக்க வெருவர வோடினள்.

(இ - ள்.) (சித்திரரேகை துருவாச முனிவரைக்) கண்டு விருப்பமுற்று, அந்த விருப்பந்தரத்தக்க புணர்ச்சியை மனங்கொண்டு மேல் வீழ்ந்து இரண்டு புயங்களையுந் தழுவினள். தேவர்களுந் துதிக்கும் அருந்தவமுடைய அம்முனிவர் தமது கண்களைத்திறந்து பார்க்கவும், பயந்து ஓட்டமெடுத்தனள். எ - று. ()

ஓடி நாற்சதுக் கத்துய ராலடி
கூடி னாள்செந் துருவைக்கு ழாத்திடை
நீடு மாதவ னின்று வெகுண்டுதன்
சீட னைக்கடிந் தன்னவட் டேடென்றான்.

(இ - ள்.) அப்படியோடி, நாற்றெருக்கள் சேருமிடத்தில், உயர்ந்து வளர்ந்த ஆலமரத்தடியிலுள்ள செம்மறியாட்டு மந்தையிற் சேர்ந்தனள். மிக்க பெருந்தவஞ்செய்த துர்வாச முனிவர் கோபித்து நின்று, தன் சீடனைக் கடிந்து அச்சித்திரரேகை (சென்ற வழி)யைத் தேடுகவெனக் கட்டளையிட்டருளினார். எ - று. (௬௫)

விரும்பு சீடன் விரைவிற் றுருவியு
மரும்பு கொங்கையை யவ்வழிக் கண்டிலன்
திரும்பி மாமுனி தன்னொடுஞ் செப்பினு
னிருந்த மாதவன் றன்னுளத் தெண்ணினான்.

(இ - ள்.) விருப்பமுடைய புண்டரீகனெனும் அச்சீடன் விரைந்து தேடிப்பார்த்தும், அரும்பிய தனங்களையுடைய சித்திரரேகையை அவ்விடத்திற் காணாதவனாகித் திரும்பிவந்து, பெருமை தங்கிய துருவாச முனிவரிடஞ் சொல்லினன். அங்கிருந்த முனிவர் தம்மனதில் எண்ணிப்பார்த்தனர். எ - று.

தழுவி நாலு சதுக்கந் தருதெரு
வெழுவு மாவி னிருநிழற் றுஞ்சியே
குழுவு பள்ளைக் குழாத்தூட் கரந்தனள்
வழுவி னின்று வரம்பு சிதைந்துளாள்.

(இ - ள்.) தீய வழியிலிருந்து கற்பின் வரம்பை யழித்த சித்திரரேகை, நாலு வீதிகள் கூடுமிடமாகிய தெரு நிறைய ஓங்கி வளர்ந்துள்ள ஆலமரத்தின் அகன்ற நீழலிற் கூடியிருக்கும் ஆட்டுமந்தையுள் ஒளித்துக்கொண்டனள்.

தவறி னில்லறத் தாறிழிந் தாடனைக்
குவளை யுண்கட் பொதுமகட் கொண்டுபோ
யிவர்த டஞ்சினை யாலிடத் தேற்றியுன்
றவமு யற்சியைக் காட்டுதி தன்மையோய்.

(இ - ள்.) இல்லற தர்மங்கெட்டதனால் இழி வெய்திய, குவளை மலர்போலும் மையுண்டகண் பொருந்திய அப்பொது மகளை யழைத்துச்சென்று, விசாலமான கிளைகள் நெருங்கிய அவ்வாலமரத்திலேற்றி, உன்தவ மகிமையைக்காட்டுக; பெருந்தன்மையுடைய புண்டரீகனே! எ - று. (௬௮)

சேறி யென்றவத் தீதறு சிந்தையோன்
கூறு சொற்றலைக் கொண்ட குணத்தவன்
வேறு கொண்ட விருப்பின ளைப்பிடித்
தேறு தொன்மரத் துச்சியி னேற்றினன்.

(இ - ள்.) செல்வாயாகவென்று, வீணாகிய குற்றங்களற்ற மனதையுடைய துருவாச முனிவர் சொல்லிய வார்த்தையைச சிரமிசையேற்ற நற்குண முடைய புண்டரீகன், வேறு விருப்புற்ற சித்திரரேகையைக் கண்டுபிடித்து, ஓங்கி வளர்ந்த ஆலமரத்துச்சியில் ஏற்றினன். எ - று. (௬௯)

ஊடு வாடை யுறுந்தொறு மென்சினை
யாடு தோறு மலமந் தலறுவாள்
கோடு பற்றிக் கிடந்து குலுங்குவா
ணீடு நெஞ்சி னிழிய நினைந்துளாள்.

(இ - ள்.) அவ்வாலமரத்திலிருந்து இரங்கக்கருதிய அச்சித்திரரேகைக்கு நேராக வாடைக்காற்று அடிக்குந்தோறும், அக்காற்றால் மெல்லிய கிளைகள் ஆடுந்தோறும் வருந்தியழுவாள், அம்மரக்கொம்பைப்பற்றியிருந்து குலுங்கிக் கொண்டிருப்பாள். எ - று. (௭0)

மான மாநகர் மைந்தரு மாதருங்
கான வாருகுழற் கன்னியைக் கண்டுவிண்
போன மாமரத் தெவ்வணம் போயினள்
மோன ஞானி மொழிகொடி தென்றனர்.

(இ - ள்.) அந்தச்சிறந்த பெரு நகரிலுள்ளபுருடர்களும் பெண்டிர்களும் மணங்கமழும் நெடிய கூந்தலையுடைய சித்திரரேகையைக்கண்டு, ஆகாய மளாவிய இப்பெரு மரத்தில் இவள் எவ்வாறேறினள்? ஞானவரம் புணர்ந்த அம் முனிவர் சொல் கொடிது என்றார்கள். எ - று. (௭௧)

அறிந்த வட்குயி ராகிய வந்தணன்
பிறிந்தி ருக்கப் பெறுகிலன் பேரருட்
செறிந்த மாதவச் செல்வனை யேத்துரு
மறிந்து வீழ்ந்த மரமென வீழ்ந்தனன.

(இ-ள்.) அவளுக்கு உயிராக விளங்கும் புண்டரீகன் இதனை யறிந்து, அவளைப் பிரிந்திருக்கப் பெறுதவனாகி, பேரருண்மிகுந்த பெருந்தவச்செல்வராகிய திருவாச முனிவரைத் துதிசெய்து, முரிந்து வீழ்ந்த பெரு மரம்போல அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். எ-று. (௬௨)

ஐய நின்னருளின்மையென் னாயிழை
வையம் யாவும் வழுச்சொல வைகினள்
வெய்ய வாலை விடுத்திழி தற்கருள்
செய்ய வேண்டுந் திருவருள் செய்கென்றான்.

(இ-ள்.) ஐயரே! தேவரீர் அநுக்கிரகமில்லாததால் எளியேன் மனைவி உலக முழுதும் நிந்திக்கும்படியிருக்கின்றாள். கொடிய அவ்வாலினை விட்டு இறங்கும்படி யருள்புரியவேண்டும். திருவருள் பாலிக்கவெனப் பிரார்த்தனை செய்தான். எ-று. (௬௩)

இல்ல றத்தை யிகழ்ந்தொழி வாளிவள்
புல்லொ ழுக்கம் பொருந்துறு புன்மையோய்
வல்ல றுத்த வனமுலை மாநிலத்
தெல்ல வர்க்கு மினிதளித் தாளரோ.

(இ-ள்.) இல்லற வொழுக்கத்தை யிகழ்ந்து பரபுருடனை விரும்பும் இவளுடைய தீயொழுக்கத்தைச் சம்மதிக்கும் இழிதகையோனே! இவள் கச்சினைக் கிழித்த அழகிய தனங்களைப் பெரிய பூமியிலுள்ள யாவர்க்கும் இனிதாக வுதவினள். எ-று. (௬௪)

இன்ன தன்மை யிவளை யுனக்கென
வன்னி முன்னர் வழங்கின ராலவ
டன்ன லம்பிறர்க் காகச் சமைந்தன
ளுன்னை யோர்பொழு துள்ளுகி லாளென்றான்.

(இ-ள்.) இத்தகைமையாகிய இவளை உனக்கென்று அக்கினி சாட்சியாக (அவளைப் பெற்றோர்) கொடுத்தார்கள். அவளோ தன்னுடைய இன்பத்தைப் பிறர்க்காகச் சமைந்துள்ளாள். உன்னை ஒரு காலத்திலும் நினைத்தாளில்லை யென்று சொல்லினர். எ-று. (௬௫)

ஏது குற்ற மிழைத்தன ளேனுமம்
மாது குற்ற மனக்கொள லையநீ
மீது யர்ந்த வடதரு விட்டிவள்
போத வொன்று புகலுதி யென்றனன்.

(இ-ள்.) ஐயரே! அவள் எவ்வகைக்குற்றஞ் செய்தபோதிலும், தேவரீர் அக்குற்றங்களைத் திருவுள்ளத்திற் கொள்ளவேண்டாம். மேம்பட்டுயர்ந்த ஆலமரத்தை விட்டு இவள் கீழே இறங்கி வரும்படி ஒரு வார்த்தை உரைத்தருள வேண்டுமென்று வேண்டினன். எ-று. (௬௬)

கற்பி னின்ற கனங்குழை யாயினின்
சொற்ப டிக்குயர் தொன்மர நீங்குவா
னெற்ப டுஞ்சினை பற்றி யிறங்குவாள்
முற்ப டப்போய் மொழிகுதி நீயென்றான்.

(இ - ள்.) கற்புநிலையிலிருந்த மேகம் போன்ற (கரிய) கூந்தலுடைய வளாயின், உன் சொல்லின்படி உயர்ந்த ஆலமரத்தினின்று வர, சூரிய மண்டல மளாவிய கிளையினைப்பற்றி யிறங்குவாள். ஆனதால் நீ அவள் முன் சென்று (இறங்கிவா வென்று) சொல்லென்றார். எ - று. (௪௭)

வந்து நின்றென் மனைவி வருகெனச்
சந்த வார்முலை நாலடித் தாழ்ந்தன
ளிந்த வெல்லை யிறங்கப் படாதென்றாள்
குந்தி யோடினன் மாதவற் கூடினான்.

(இ - ள்.) (அவர் கூறியவாறே புண்டரீகன் ஆலமர நிழலில்) வந்து நின்று, என் மனையாளே! இறங்கிவரக்கடவாயெனக் கூப்பிட, அழகிய கச்சணிந்த முலையையுடைய சித்திரரேகை நாலடியிறங்கி, இதனைத்தாண்டி யிறங்க முடியாதென்றாள். [குந்தியோடி] இருகினைவாயோடி முனிவரையடைந்தான்.

நால டிச்சினை தாழ்ந்தன ளம்பவென்
னேல வார்குழல் பின்ன ரிறங்கிலள்
மால டிக்கொண்ட மம்மரி னேனினிச்
சீல மாதவ செய்குவ தேதென்றான்.

(இ - ள்.) புனிதமான பெருந்தவமுடையவரே! சிவபெருமானை யொத்தவரே! அடியேனுடைய மணம் வீசும் நெடிய கூந்தலையுடைய மனைவி கிளையினின்று நாலடித்தூரமே யிறங்கினள். அதன் பின் இறங்கமுடியவில்லை. ஆசைமிக்க மயக்கமமைந்த மனமுடைய அடியேன் இனியென்ன செய்குவேனென்றான். எ - று. (௪௯)

மங்கை கொங்கை மயங்கி முயங்கினா
ரங்கண் மாநிலத் தாடவர் யாவரும்
பொங்கு மாலடி போந்திறங் காயெனி
னங்கை கீழ்வரு மென்ன நவிற்றினான்.

(இ - ள்.) காமாதுரத்தினால் மயக்குற்று அம்மங்கையின் குசங்களை யணைந்தவர்களாய், மிகப்பரந்த நிலவுலகிலுள்ள ஆடவரனைவரும், பெருத்த அவ்வாலமரத்தின் கீழ்ச்சென்று இறங்குகவெனச் சொல்வார்களாயின் அப்பெண் கீழே யிறங்குவாளென்றனர். எ - று. (௫0)

மைய லொன்று மனக்கொ டிருந்தவர்
தைய லைப்புணர்ந் தாரவர் யாரையும்
வெய்தி னோடிக் கொணர விளித்தன
ரெய்து மாமரம் பாதியி றங்கினாள்.

(இ - ள்.) அவளைப்பார்த்து மயக்குற்ற மனமுடையவர்களும் அவளைக் கூடினவர்களுமாகிய வெல்லோரையும், அதிவேகங்கொண்டோடி அழைத்துக்

கொண்டு வரவும், அவர்கள் யாவரும் அவனையழைத்தார்கள். அதனால் அவன் அப்பெரிய மரத்தில் அரைப்பாக மிறங்கினன். எ - று. (கூக)

இப்பு றததி னிறங்கலி தாயவ
டப்பு றத்தழு விச்சினை சார்தலு
மொப்ப றுத்த முனியரு கோடினன்
குப்பு றுத்த முகத்தினன் கூறுவான்.

(இ - ள்.) அப்பாதிக்குக்கீழே அவள் இறங்கமாட்டாமல் கீழே விழாத வண்ணம் ஒரு கிளையைத் தழுவிக்கொண்டிருக்கையில், ஒப்பற்ற அம்முனிவ ரருகே வந்து புண்டரீகன் குனிந்த முகத்துடன் கூறுகின்றான். எ - று. (கூஉ)

என்னை யிவ்வணங் கண்டனை யேயினிக்
கன்னி பாற்றிருக் கண்ணருள் செய்யென
நின்ன ருட்பெறு வார்நின்று கூவினுன்
பொன்ன னாளு மிறங்குவள் போகென்றான்.

(இ - ள்.) அடியேனை இவ்வகையாகக் கஷ்டப்படுத்துகின்றீரோ. இனி யேனும் தேவரீர் அப்பெண்ணினிடங் கிருபா நோக்கம் வைத்தருளல் வேண்டு மென வேண்ட, உன் சீடர்கள் வந்தழைத்தால் திருமகள்போலும் அழகுடைய உன் மனைவி யிறங்குவாள். போ வென்றனர். எ - று. (கூங)

அன்ன சீடருந் தானு மடைந்துதன்
பன்னி தன்னை யழைக்கப் பகர்ந்தனன்
பின்ன ரன்னவர் கூவப் பெருமர
மன்ன டிக்கவை வந்திருந் தாளரோ.

(இ - ள்.) அத்தகைய சீடர்களுந் தானுமாக வந்து, தன் மனைவியை யழைக்கும்படி சீடர்களுக்குச் சொல்ல, அவர்களும் அப்படியே யழைக்க, அதன்பின் அப்பெரிய மரத்தின் அடிக்கிளையில் வந்திருந்தாள். எ - று. (கூச)

கூண்ட பின்னற் குடுமி யலைந்திடப்
பூண்ட தாமரை மாலை புரண்டிட
வீண்டு துன்பத் திரைத்திட வோடினன்
மீண்டு மாதவ வேந்தனை நண்ணினன்.

(இ - ள்.) கூட்டமாகிய பின்னலோடு சேர்ந்த குடுமியலையவும், பூண்டு கொண்டிருக்கும் தாமரை மணிமாலை புரளவும், தனக்குற்ற துன்பத்தோடு இளைப்பெடுக்க ஓடி, மீண்டும் பெருந்தவ வேந்தராகிய அம்முனிவர்பால் அடைந்தான். எ - று. (கூரு)

கவர்த ருஞ்சினைக் கப்பி னிறங்கின
ளிவளை முற்று மிறங்கப் பணித்தியென்
றவனை யேத்தி யிரந்தன னந்தணன்
புவன மேத்து முனிபுகல் வானரோ.

(இ - ள்.) பிளவுற்ற கிளைகளாகிய கொம்பினின்றிழிந்த இவளை முழுதும் இறங்கும் வண்ணம் கட்டளை செய்யவேண்டுமென்று அத்துருவாச முனிவனைத் துதித்துப்பிரார்த்தனை செய்துகொண்டான். (அவன் துதிகளைக்கேட்டு) உலக முழுவதும் தோத்திரஞ்செய்யத்தக்க அத்துருவாசமுனிவர் உரைக்கின்றனர்.

பேதை தன்னைப் புணர்ந்தவர் பேரெலா
மோதி யோதி யுணர்த்தி லிறங்குமென்
றோதி வேத மளந்தவன் சொற்றுழி
வேத வேதியன் பின்னரு மீண்டனன்.

(இ - ள்.) அப்பெண் தன்னைச்சேர்ந்தவர்களுடைய பெயர்களை யெல்லாஞ் சொல்லித்தெரிவித்தாளாயின், கீழே இறங்கி வருவாளென்று முதன்மையாகிய வேதங்களை அளவிட்டறிந்த முனிவர் கூறியபோது, புண்டரீகனென்னும் வேதியன் மீண்டும் (மனைவியிருக்குமிடத்திற்குத்) திரும்பினான். எ - று.

ஏடி நின்னிளங் கொங்கை யிணைத்தடங்
கூடி னார்பெயர் முற்றுறக் கூறினீ
தோடு வார்ந்த தொடுசினை விட்டடி
மூடி றங்குவை யென்று மொழிந்தனன்.

(இ - ள்.) அடிபெண்ணே! உன் இளமுலையிரண்டையும் கலந்தவர்களது பெயர்கள் முழுவதையும் நீயே சொல்வாயாகில், நீ பற்றிக்கொண்டிருக்கும் இதழ்கள் நெருங்கிய கிளையின் மூட்டைவிட்டு விலகிக்கீழே இறங்கி வருவாயென்று தெரிவித்தான். எ - று. (௧௮)

இன்ன வாசகங் கேட்டலு மேந்திழை
யன்ன கேள்வர நேகரை யெண்ணினாள்
பின்ன ரந்தப் பெருங்கவை நீத்ததின்
மன்னு கீழ்க்கவை வந்து வதிந்தனள்.

(இ - ள்.) இவ்வார்த்தையைச் சித்திரரேகை கேட்டவுடனே அத்தகைய புருஷர்கள் எண்ணில்லார் பெயரையும் (ஒவ்வொன்றாகச்) சொன்னாள். அதன் பின்னர் அப்பெருங்கிளையினின்றும் விலகி அதன் கீழிருக்குங் கிளையில் வந்திருந்தாள். எ - று. (௧௯)

எவற்றி னாலு மிறங்ககி லாளினிச்
சிவத்தி றந்தெரி நீயவட் சென்றிடில்
கவர்த்த டம்பணை கைவிடு மெய்துவாய்
தவப்பெ ருங்கட லேசர ணென்றனன்.

(இ - ள்.) எவ்வாற்றாலும் அவள் பூமியிலிறங்கவில்லை. இனி, சிவத்திறமுணர்ந்த தேவரீர் அங்கெழுந்தருளினால், பிளந்து விசாலித்த கிளையானது கைவிட்டு விலகும். பெருந்தவக்கடல்போல்பவரே! தேவரீர் ஆங்கடையவேண்டும். தேவரீருக்கடைக்கலமென்று கூறினான். எ - று. (௨0)

மூர லித்த முகத்தின னந்தணா
னார்வ நோக்கி யகநெகிழ்ந் தாரணச்
சீர ளந்தற் சிட்டர் குழாத்தொடும்
பார வெம்பழு வத்தரு கெய்தினான்.

(இ - ள்.) துருவாசமுனிவர் புன் சிரிப்புகொண்ட முகத்துடன், அப்புண்டரீகனுடைய ஆசைப்பெருக்கத்தைப்பார்த்து மனமிளகி, வேதத்தின் சிறப்புக்களையெல்லா முணர்ந்த தமது சீடர் தொகுதியோடு, மிகவும் பரந்துள்ள அந்த ஆலமரத்தருகே எழுந்தருளினர். எ - று. (௨௧)

எய்தி யன்ன விளமுலை வேட்டருள்
பொய்யி னான்மறைப் புண்டரீ கன்றனை
வைதி கத்தனி மாமுனி நோக்கிநின்
செய்கை சிற்றொழுக் கத்திற் சிறந்ததால்.

(இ - ள்.) வைதிக மார்க்கத்தில் மேம்பட்ட ஒப்பில்லாத துருவாச முனிவர் அங்கெழுந்தருளி, அச்சித்திர ரேகையின் இளமைதங்கிய தனங்களைக் காமுற்றிருக்கிற உண்மையான நான்கு வேதங்களையுணர்ந்த புண்டரீகனை நோக்கி, உன்றொழில்கள் அற்ப வொழுக்கத்தில் மேம்பட்டன. எ - று. (சுஉ)

வாளை வென்ற மதர்விழி யாளிவள்
சூளை யென்ப துணர்ந்துந் துணைமுலை
மூளு மாசையின் முற்றி முயங்கினாய்
கோள றுந்தவத் தன்மை குறைந்தனை.

(இ - ள்.) வாட்படையை வெற்றிகொண்ட மதர்த்த விழிகளையுடைய இச்சித்திரரேகை வேசையென்பது தெரிந்திருந்தும், அவளது இரண்டு முலைகளிற் பெருகிய ஆசையின் மிக்கவனாய் அவளைப்புணர்ந்தாய், அது காரணத்தாற் குற்றமில்லாத தவநிலையிற் குறைவடைந்தாய். எ - று. (சுங)

மற்றோர் மாதை மணந்திலை மாதிவள்
பெற்ற பாவம் பிரித்தொரு பாதியு
முற்ற தானுனை யோங்கெயின் முப்புரஞ்
செற்ற தேவ னடித்துணை சேர்கலாய்,

(இ - ள்.) வேறொரு ஸ்திரீயை மணஞ்செய்து கொண்டாயில்லை. இச்சித்திரரேகை சம்பாதித்த பாவத்தைப்பிரித்து அதிற்பாதி பாவம் உன்னைச் சேர்ந்தது. அதனால் உயர்ந்த மதில்சூழ்ந்த திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமானது உபய பாதங்களை நீ சேரமாட்டாய். எ - று. (சுச)

புண்ட ரீக னதுபுலத் தோர்ந்தனன்
விண்டு வாய்மொழி யொன்றும் விளம்பலன்
றண்ட ருஞ்சொற் சமயவி ரோதமுட்
கொண்டெ னக்கிது கோளுரைத் தாயென்றான்.

(இ - ள்.) (என்று சொல்லியவற்றை) புண்டரீகன் மனத்திலறிந்து வாய் திறந்தொன்றுஞ் சொல்லாமல், யாவராலுந்தள்ளுதற்கரிய புகழமைந்த வைணவ சமயத்தில் தேவரீர்க்குற்ற விரோதத்தைத் திருவுளங்கொண்டு அடியேனுக்கு இத்தகைய பழிமொழியுரைத்தீரென்றான். எ - று. (சுரு)

வேக வெஞ்சின மீக்கொண்டு தன்மன
மாக வற்சித ரத்துரு வாசனும்
யோக சித்தனை யோகிம னத்தின
னாக நின்பெய ரென்றறைந் தானரோ.

(இ - ள்.) துருவாச முனிவரும் வேகத்தோடு கூடிய பெருங்கோபமேற்கொண்டு, தமது மனமானது பெருவருத்தமெய்த, ஏய்க்கும் மனதையுடைய அப்புண்டரீகனைப்பார்த்து, இன்றுமுதல் உன்பெயர் யோகிமனத்தினனென்று வழங்கக்கடவதென்று சொல்லினர். எ - று. (சுசு)

புன்பு றச்சம யப்புற நின்றுநீ
யென்பெ ருக்கணி யெந்தைபி ரானடி
யன்பு றப்பெறு வாயலை வெண்ணிற
மின்பி றங்கு விபூதியும் வேண்டலை.

(இ - ள்.) அற்பமாகிய புறச்சமய வழியிலிருந்து, என்பு மாலையையும் எருக்கமலர் மாலையையுந்தரித்த எமது தந்தையாகிய சிவபெருமான் திருவடிகளுக்கு அன்பையடையப் பெறத்தகுந்தவனல்லை, வெண்ணிறமமைந்த ஒளிவிளங்குகின்ற திருவெண்ணீற்றினையும் விரும்பமாட்டாய். எ - று. (௬௭)

ஆகி யப்புறப் புன்சம யத்தனைப்
போக போகவெனப் புகன் றன்னவன்
பாக முற்றிடுஞ் சீடரைப் பார்த்துள
வேக வெஞ்சின மீக்கொண் டறைகுவான்

(இ - ளு.) புறம்பாகிற அற்ப சமயத்தில் அபிமான முற்றிருந்து அவ்வண்ணமே தாழ்ந்து போகக்கடவாயென்று சபித்து, அப்புண்டரீகனென்பவனிடத்திலிருக்கும் பரிபக்குவமடைந்த சீடர்களைப்பார்த்து, தமது மனத்திலுதித்த வேகமாகிய கடுங்கோப மிகுந்தவராய் மேலுஞ்சொல்லுகின்றார்.

பின்னு சிந்தைப் பிணக்கறுத் தாரணை
மன்னு சிந்தைய ராக்கிய மாதவன்
பன்னி கொங்கையிற் பற்றுவைத் தீர்நுமர்
மின்ன னார்களும் வேசைய ராகுவார்.

(இ - ள்.) பின்னிக்கொண்டிருக்கும் மனப்பிணக்குகளை யகற்றி, வேதங்குடி கொள்ளும் மனத்தினராகச்செய்த ஆசிரியது மனைவியின் குசங்களில் ஆசை வைத்தீர்களானபடியால், உங்கள் மனைவிமார்களும் வேசையர்களாவார்கள். எ - று. (௬௯)

என்று கூறி யெரிவிழித் தாங்கவர்க்
கொன்ற லாத பலமுனிந் தோதினன்
கன்று நெஞ்சக் கனங்குழை வைகிய
துன்றி ருஞ்சினைத் தொன்மர நோக்கினன்.

(இ - ள்.) எனச்சபித்துக்கூறி, கோபாக்கினி பொருந்திய கண்களாற்பார்த்து, ஒன்றல்லாத அநேக சாப மொழிகளைக் கோபங்கொண்டுரைத்து; வருத்தமெய்திய மனமுடைய அச்சித்திரரேகை யிருந்த பெருங்கிளைகள் நெருங்கிய ஆலமரத்தைப்பார்த்தருளினார். எ - று. (௭௦)

வார்ந்த கூந்தல் கவிழ்ந்திள மாமரஞ்
சேர்ந்த மார்பங் குருதி சிலும்பிடச்
சோர்ந்து மாமரந் தொற்றி யிருந்தன
ளோர்ந்த சிந்தை முனிவ னிகழ்த்துவான்.

(இ - ள்.) நெடிய கூந்தல் அவிழ்ந்து தொங்கவும், பெரிய ஆலமரத்தைத் தழுவிய மார்பில் உதிரஞ்சொரியவும், சோர்வெய்தி அப்பெரிய மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த சித்திர ரேகையை நோக்கி, இனதின் மனமெய்திய வராய்த் துருவாசமுனிவர் சொல்லுகின்றார். எ - று. (௭௧)

கொம்மை வெம்முலைக் கோற்றொடி நீயிவ
ணெம்மை மேல்விழுந் தெம்முருத் தீண்டலால்
அம்ம வெங்க ணசுரரிற் றோன்றியே
வெம்மைக் காம விகாரம் பெறுதியால்

(இ - ள்.) குவிவாகிய வலிய தனங்களையுடைய, அழகிய வளையலணிந்த பெண்ணே! நீ இப்பொழுது எமதுடலின்மேல் விழுந்து எம்மைப்பரிசித்த காரணத்தால், கொடுமையாகிய பார்வையையுடைய அசுரர் குலத்தில் தோன்றிக்கொடுமை தங்கிய காமவிகார மடையக்கடவாய். எ - று. (௭௨)

அயக்கு லத்துட் கரந்தனை யாதலின்
மயக்கு நின்முக மம்முக மாகுமால்
வியக்கு மக்குல மேவியும் வெம்முலை
முயக்கு காம முடிவொழி யாயென்றான்.

(இ - ள்.) நீ ஆட்டுமந்தையில் ஒளித்துக்கொண்டாயானபடியால், எல்லோரையும் மயக்குகின்ற உன் முகம் அந்த ஆட்டின் முகமாகக்கடவது. அந்த ஆட்டு முகத்துடன் எல்லோருக்கும் வியக்கும்படி அந்த அசுர குலத்தில் தோன்றியும் தழுவுதலாகிய காமத்தை ஆயுண்முடிவு வரையில் நீங்காது பெற்றிருப்பாயென்றனர். எ - று. (௭௩)

ஈது கூறி மரத்தி னிறங்கினை
போதி யென்ன விறங்கிப் புகுந்தனள்
கோதின் மாதவன் பாதங் குறுகினாண்
மாத ரார்க்கு மரபுவ ழுச்செய்தாள்.

(இ - ள்.) இப்படிச்சொல்லி, மரத்தை விட்டிழிந்து போவெனப்புகல், வேதியர் குலத்து மாதர்களுக்குப் பழிச்சொல்லையுண்டாக்கிய அச்சித்திரரேகையிறங்கிக் கீழேவந்து, குற்றமற்ற அம்முனிவரது திருவடிகளையடைந்தாள். எ - று. (௭௪)

எந்த நீயிவ ணென்றனைக் கேள்வனைத்
தந்த கேள்வித் தலைவரைச் சாபியா
நிந்தை தந்தனை யாயினு நின்னுழைச்
சிந்தை தந்தன னென்கொடு தேறுகேன்

(இ - ள்.) எமது தந்தையாகிய தேவரீர் இவ்விடத்தில் அடியாளுக்குத் துணைவனான கணவனையும், அவனைத்தந்தையாகக்கொண்டு நூற்கேள்வியைப் பெற்ற மாணவர்களையும் சபித்து நிந்தித்தீரானாலும், தேவரீரிடத்தில் மனவிருப்பு வைத்த அடியாள் எதைக்கொண்டு தேறுவேன். எ - று. (௭௫)

ஈது பட்டு மெளிய னிணைமலர்ப்
பாதந் தீண்டப் பணித்திலை போலுமென்
றோத ரத்தி னவளிரப் பத்தனி
வேத மாமுனி பின்னர் விளம்புவான்.

(இ - ள்.) அடியேன் இத்துன்பமெய்தியும், தேவரீருடைய மலர்போன்ற உபய பாதங்களைப் பரிசிக்கும்படி கட்டளைதரவில்லையேயென்று, அச்சித்திரரேகை அன்போடு பிரார்த்திக்க, ஒப்பற்ற வேதங்களுணர்ந்த சிறந்த துருவாச முனிவர் அதன் பின்னுஞ் சொல்லுகின்றனர். எ - று. (௭௬)

செய்த பாதகஞ் செப்புறப் போமெனப்
பைகொண் மாநில மோது பழமொழி
யைய நுண்மருங் காயறி யாய்கொலோ
தைய னின்பவந் தானே தொலைந்ததால்.

(இ - ள்.) அழகிய நுட்பமாகிய இடையையுடையவளே! ஒருவர் தாம் செய்த பாவங்கள் (பலருமறியச்) சொல்வதால் நீங்குமென்று ஆதிசேடன் பணமுடி மேற்றுங்கும் பெரிய பூலோகத்தார் கூறும் பழமொழியை அறிய மாட்டாயோ. நீ செய்த பாவந் தானே யொழிந்தது பெண்ணே! எ - று. (௭௭)

பெண்ணு ருக்கொண் டசுரர் பெருங்குல
நண்ணு நாளருங் காம நயப்பினால்
கண்ணி னைக்குரி யார்தமைக் கைக்கொளா
வண்ண வெம்முலைக் கோட்டின் மருவுவாய்.

(இ - ள்.) நீ பெரிய அசுரர் குலத்திற் பெண்ணுருவங்கொண்டு பிறக்கும் பொழுது சிறந்த காம விருப்பத்தால், இருவிழிகளாலும் இச்சிக்கத்தக்கவர் களைக்கைக்கொண்டு அழகமைந்த பெரிய முலைக்கோடுகளில் தழுவுவாய். எ - று.

ஆய காலத்தி யாமவ ணெய்துவந்
தூய வெம்மைத் தொடர்ந்தனை யாகிநீ
மேய காம விருப்பொழிந் தக்குலத்
தேய மைந்த ரிருவர்ப் பெறுதியால்.

(இ - ள்.) அக்காலத்தில் நாம் அங்கே வருவோம். பரிசுத்தராகிய நம்மை நீ பின் தொடர்ந்தவளாய், உன்னிடத்துண்டான காமவிச்சையை யொழித்துக்கொண்டவளாகி, அவ்வசுரகுலத்திற்குரிய புதல்வரிருவரைப்பெறுவாய்.

மாக்க ணத்தொடு வைகிய வையனைக்
காக்கும் வெங்கதக் காளர் கரத்தினான்
மூக்கு மிந்த முலையுங் கரத்தொடும்
போக்கி வீழ்ந்து புலம்புவை நீயென.

(இ - ள்.) சிறந்த பூதகணத்துடன் எழுந்தருளிய ஐயனைக்காத்திருக் கும்கடுங்கோபமுடைய மகாகாளன் கையினால் இந்த மூக்கையும் முலைகளையும் கையையும் போக்கிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து புலம்புவாய் என்று சொல்லி.

ஆங்க வன்றொட வன்றள வுன்வயி
னோங்கு பாவ மொழிந்துணர் வுற்றுநீ
தேங்கு தண்சுனைச் சீகுல வெற்பிடை
வாங்கி ருந்தவ மன்னுதி யேயென்றான்.

(இ - ள்.) அவ்விடத்தில், அம்மகாகாளன் உன்னைப் பரிசித்த மாத்திரத்தில், அன்றைய வரைக்கும் உன்பால் மிக்கிருந்த பாவம் விலகிஞானந்தோன்றி, தேக்கொடுக்கும் தண்ணீர் நிரம்பிய குளிர்ச்சி வாய்ந்த சுனையையுடைய சீகுல பர்வதத்தில் நீடித்த பெருந்தவஞ்செய்வாயென்றனர். எ - று. (௮௧)

அனைய ளாயவ ணீயென் னருந்தவத்
தனைய ளாகச் சனித்தனை யத்தவ
முனைவ னேதிய சாப முடிந்ததால்
வினையி னீங்கித் தவத்தை விரும்புவாய்.

(இ - ள்.) அப்படிப்பட்ட தன்மையையுடைய நீ என்னுடைய அரிய தவத்தினாற் புத்திரியாகப்பிறந்தாய். அத்தவ முனிவராகிய துருவாசரிட்ட சாபம் முடிவுற்றது. ஆதலால், இனி வினையினின்றும் வேறுபட்டுத் தவச் செயலை யிச்சிப்பாயாக. எ - று. (௮௨)

அயமுகிசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௦௪.

நான்காவது

மாயை சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

என்றுரைத் துணர்த்து மாயை தன்முக மினிது நோக்கி
வன்றிரண் முரட்டுக் கொங்கை யயமுகி மறுத்துங் கேட்கு
நின்றவென் னியற்கை யெல்லா நிகழ்த்தினை நிகழ்த்தா நின்ற
வுன்றன தியற்கை யெல்லாம் புலப்பட வுரைத்தி யென்றாள்.

(இ - ள்.) என்று (இவ்வாறு) சொல்லிப் (பூர்வசன்மத்தினைத்) தெரிவிக்கின்ற மாயையின் முகத்தை இனிமையுடன்பார்த்து, வலிமையோடு திரண்ட முரட்டுத் தனங்களையுடைய அயமுகி மீண்டுங் கேட்கின்றாள். என் பூர்வ சனனத்தின் செயல் முழுவதையும் யான் தெரிந்துகொள்ளும்படி சொல்லினை. இனி, இவையாவையும் சொல்லுகின்ற உன் பூர்வசனனசரிதை முழுவதையுஞ் சொல்லவேண்டுமெனக்கேட்டாள். எ - று. (௧)

முற்படு தொல்லை நாளிற் காசிப முனிவற் கியானே
ரிற்படு பன்னி யாகி யில்லறத் தொழுகி நின்றே
பற்பல மைந்தர்க் கோடி பயந்தன னவர்க்கு வானோ
ரொற்படு படையி னன்றே ரிறந்தனர் மடிந்துபோனார்.

(இ - ள்.) முன்னடந்த பண்டையகாலத்தில், காசிபமுனிவருக்கு யான் இல்லற தர்மத்திற்குரிய ஒருமனைவியாகி, இல்லறம் வழுவாது நடத்திவருகையில், அம்முனிவருக்கும் பலபல வகைப்பட்டகோடி புதல்வர்களைப்பெற்றேன். அம்மைந்தர்கள் அனைவரும் தேவர்களுடைய பிரகாசம்பொருந்திய ஆயுதங்களால் இறந்துபோனார்கள். எ - று. (௨)

செருமுகத் திறந்து போன மக்களிற் சிந்தை கோட்டி
பருவரற் குடனாய் நின்று பற்பக லிரங்கி மாழ்கித்
தருகிழற் பகையை வெல்வான் கருதியித் தரணி சார்ந்து
பொருமுகட் டுச்சி யேறி வீழ்ந்துயிர் போக்கி னேனால்.

(இ - ள்.) போர்க்களத்தில் இறந்துபோன புதல்வரிடத்தில் மனதைச் செலுத்தித் துன்பத்திற்காளாயிருந்து அநேகநாள் மனமிரங்கித் துக்கப்பட்டு,

கற்பகத்தருவின் நீழலிலிருக்கும் பகைவனாகிய இந்திரனைச் சயிக்கவிரும்பி இப்பூமியையடைந்து, இம்மலையுச்சியிலேறி (கீழே உருண்டு) விழுந்து உயிரைத்துறந்தேன். எ - று. (௩)

பின்னருந் தநுவர் கோற்குப் பெண்ணெனப் பிறந்து மாயை
யென்னுமோர் பெயரா லந்தக் காசிபற் கினிய ளாகும்
பன்னியாய் நும்மை யெல்லாம் பயந்தனன் பகைத்த தேவர்
பொன்னினு டனைத்து மீளாச் சிறைபுகப் பொருமறீர்ந்தேன்.

(இ - ள்.) அதன்பின்னும், அசுரேந்திரனுக்கு மகளாயுதித்து, மாயையென்னும் ஒருபெயர் பெற்றவளாய், அந்தக் காசிபமுனிவருக்கே இனியமனைவியாகி உங்களையெல்லாம் பெற்றேன். (முற்பிறப்பிலும் பிற்பிறப்பிலும் என் புதல்வரைப்) பகைத்த தேவர்களாகிய பொன்னாட்டினரையெல்லாம் மீளாச் சிறையிலிருக்கக்கண்டு என் றுயரமொழித்தேன். எ - று. (௪)

பிள்ளைக ணால்வர் யார்க்கும் பெறற்கரும் பேறும் பெற்றார்
வள்ளைவார் குழையா யானு மிப்பெருங் கிரிக்கண் வந்தே
னெள்ளருந் தவத்தைப் பன்னா ளிழைத்தருங் கயிலை சேர்வேன்
வெள்ளியங் கிரியி னம்மை யுமைபதம் பெறுவன் மேனாள்.

(இ - ள்.) எனது நான்கு புதல்வர்களும், ஒருவர்க்கும் பெறுதற்கரிய பதவியைப்பெற்றார்கள். வள்ளைத்தண்டு போலும் நெடியகாதினையுடைய அயமுகியே! நானும் இப்பெரிய மலையில்வந்து சேர்ந்தேன். இகழ்தற்கரிய பெருந்தவத்தைப் பலகாலஞ்செய்து அரிய கைலாயத்தை யடைவேன். மேல்வருங் காலத்தில் அவ்வெள்ளிமலையிலே உமாதேவியின் திருவடியையும் பெறுவேன்.

நீபெறுங் கதியு மின்றே நிகழ்த்துவ னீயு மந்த
மாபெருங் கயிலை சேர்வா யென்றனண் மகிழ்வு கூர்ந்தாள்
கோபவெந் தீயிற் றோன்றுங் கொடியவ ளன்னை நின்னைத்
தாபதர் பிரிந்த ஞான்று தனித்தவா சாற்று கென்றாள்.

(இ - ள்.) நீயடையுங்கதியையும் இப்பொழுதே சொல்கின்றேன். நீயும் அந்தச்சிறந்த கைலாயகிரியைச் சேர்வாயென்றாள். வெம்மைமிகுந்த கோபத்துடன்றோன்றிய அயமுகியும் கேட்டுமகிழ்வுமிகுந்து, தாயே! உன்னைக் காசிபமுனிவர் பிரிந்தகாலத்தில் தனித்திருந்த விதத்தைச் சொல்லவேண்டுமென்றனள். எ - று. (௫)

குனிசிலைப் பகழி மாரி யநங்கவேள் குறித்து நீட்டத்
தனிகிடந் துயிர்த்து வாடை தைவரத் தழலா நின்றான்
பனிமதி வடவை காலப் பகைத்தன னாகித் தென்பா
லினியபூந் தென்ற னோக்கி யெரிமெழு கென்ன லானான்.

(இ - ள்.) வளைத்தகருப்பு வில்லினிடத்து (மலர்)ப்பாணமாகிய மழையை உருவிலியாகிய மன்மதன் குறிப்பாகவிடுக்க, தனியேயிருந்து பெருமூச்செறிந்து வாடைக்காற்று வீசவெதும்பியிருந்த காசிபமுனிவர், குளிர்ச்சிவாய்ந்த சந்திரன் வடவைத்தீயைச் சிந்தப்பகைத்தவராய், தென்புறத்திருந்துவந்த இனிய அழகிய தென்றற்காற்றைக்கண்டு தீயிற்பட்ட மெழுகுபோலுருகினர். எ - று.

அங்கிலை கமல பீடத் தந்தண னுணர்ந்து போந்தா
னுன்னருந் தவத்து ளோரி லொருங்கிருந் தவத்தின் மிக்காய்

கன்னலஞ் சிலையிற் றாங்குங் கணைக்கிலக் கென்ன நின்று
யின்னலுற் றுழந்தாய் கெட்டே னீதுனக் கியைவ தன்றால்.

(இ - ள்.) அந்த நிலைமையைக் கமலாசனனாகிய பிரமதேவன் தெரிந்து அம்முனிவர்பாலெய்தி ஒருவராலும் நினைத்தற்கரிய தவசிகளிலே எப்பெருந் தவங்களினுஞ் சிறந்தவரே! அழகிய கருப்புவில்லிற்பூட்டும் புட்பபாணங்களுக் கிலக்காகித் துன்பெய்தி வருந்தினீர். ஐயோ! இது உமக்குத்தகுந்ததன்று. எ-று.

என்றன பலவுங் கூறி யிடரொழித் தாற்றி நின்றான்
றன்றனித் தலைமை யோனுந் தனித்துய ரொழிந்து பின்னர்ப்
பொன்றிக ழுருவ மங்கை புலத்தியன் மகளை வேட்டு
நின்றன னொழியப் பெற்று னெடுந்துயர் விரக வெந்தீ.

(இ - ள்.) இவ்வாறு பலவிதஞ்சொல்லி, அம்முனிவரது துன்பத்தை யொழித்துத் தேற்றினன். தனது ஒப்பில்லாத தலைமைபொருந்திய காசிய முனிவரும் தான் தனித்திருந்ததாலுண்டான துன்பமொழியப்பெற்று, அதன் மேல் திருமகள்போலும் அழகுபொருந்திய பெண்ணாகிய புலத்திய முனிவருடைய குமாரத்தியைத் திருமணம்புரிந்துகொண்டிருந்து பெருந்துயரமாகிய விரகாக்கினி யொழியப்பெற்றனர். எ - று. (௯)

அன்னைசொற் றறியப் பெற்று ளதிசய மடைந்தா ளின்ன
வென்னைநீ யறியப் பெற்ற காரண மியம்பு கென்று
முன்னருந் தவத்துட் டோன்றுஞ் சுக்கிர னுரைப்ப மேனா
ளிந்நிலை யுணர்ந்தேன் கால மும்மையு முணர்வ னென்றாள்.

(இ - ள்.) தாயாகிய மாயைசொல்லக் கேட்டுணர்ந்த அயமுகியென்பாள் அதிசயமெய்தி, இவற்றை யெல்லாம் நீ தெரிந்துகொண்டதற்குக் காரணம் யாது? அதனையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்டனள். நினைத்தற்கரிய தவத்தினிடத்துதித்த சுக்கிரபகவான் இவற்றையெல்லாம் முற்காலத்திலே சொல்ல வுணர்ந்தேன். இவற்றையே யன்றி, திரிகாலவர்த்தமானங்களு மறிவேனென்று கூறினள். எ - று. (௧௦)

இவையெலா முணர்ந்த பின்னர் மாயைதா ளிறைஞ்சி யேத்தி
நவையெலா மொழியப் பெற்ற நற்றவ முயற்சி பெற்று
ளிவர்கருங் கண்ணி மாயை தன்னொடு மிழைத்துத் தேவ
ரவையெலாந் தழுவா நிற்குங் கைலையை யடைந்தா ளன்றே.

(இ - ள்.) இவற்றையெல்லா மறிந்தபிறகு, அயமுகி மாயையின்பாதங்களைப்பணிந்து துதிசெய்து, குற்றங்கள்யாவும் விலகப்பெற்ற நற்றவமுயற்சி யுற்றவளாய், காதளவாகவோடிய கரியவிழிகளையுடைய மாயையோடு தானுந் தவமியற்றி, தேவர்கூட்டங்களெல்லாம் புடைசூழ்ந்து விளங்குந் திருக்கைலாய கிரியை யடைந்தனள். எ - று. (௧௧)

எனவிவ ணிகழ்ந்த காதைப் பரிசெலா மெடுத்துக்காட்டி
நனைமலர்ப் படப்பை சூழ்ந்த நைமிசா ரணியத் தோங்கும்
புனைசடை மௌலி யோர்க்குப் புகன்றனன் சூதன் கேளா
வனையவர் மகிழ்ச்சி கூர வணிமுடி துளக்கி னாரால்.

(இ - ள்.) என்றிவ்வகையாக இங்கு நிகழ்ந்த சரிதைகளின் தன்மையை யெல்லாம் விளக்கமாகத் தெரிவித்து, தேன்பொருந்திய மலர்களையுடைய சோலைசூழ்ந்த நைமிசவனத்திலுள்ள தவமேன்மையுடைய அழகிய சடைமுடி யணிந்த முனிவர்களுக்குச் சூதமுனிவர் கூறினர். அதனைக்கேட்டு முனிவர்கள் மகிழ்ச்சிமிகுந்து அழகிய தமது முடிகளை யசைத்தார்கள். எ - று. (௧௨)

மாயைசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௧௮.

ஐந்தாவது

விபூதிமான்மியச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

மேற்க டாவிய பொருளெலாம் விரித்தனை வியந்தேஞ்
சூற்பெ ரும்படை முதல்வனிற் றோன்றிய தோன்ற
லூற்பெ ருங்கலைக் குறுமுனிக் குரைத்தன நயந்தே
நூற்பெ ருங்கடற் கடந்தவ நுவலுதி யென்றார்.

(இ - ள்.) நாங்கள் மேலே கேட்ட சரித்திரங்களையெல்லாம் விளக்கமாகத் திருவாய் மலர்ந்தருளினீர். சந்தோஷித்தோம். பெரிய சூலாயுதந்தாங்கிய சிவபெருமானிடம் திருவவதாரஞ்செய்த குமாரக்கடவுள், பெருமைதங்கிய நான்குவேதங்களை யுணர்ந்த அகத்திய முனிவருக்கு உபதேசஞ் செய்தவற்றைக் கேட்க அவாவினோம். பெரியவித்தியாசாகரத்தைக்கடந்தருளிய சூதமுனிவரே! அவற்றைத்திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்றனர். எ - று. (௧)

சூத னவ்வுரை கேட்டலுந் துரிசறுத் துணர்ந்த
போத மாதவத் துறையுளீர் கேட்கெனப் புகலு
மோது தெய்வவி பூதிமற் றுருத்திர வக்கம்
வேத நுட்பமென் றெடுத்தபஞ் சாக்கர மேன்மை.

(இ - ள்.) சூதமுனிவர் அவ்வார்த்தையைக் கேட்டவுடன், குற்றநீக்கித் தெளிந்த ஞானமயமாகிய பெருந்தவமுடையவர்களே! கேட்பீர்களாகவெனத் திருவாய் மலர்ந்தருளுகின்றார். வேதத்திற் சொல்லப்படும் தெய்வீகமுள்ள திருவெண்ணீறு உருத்திராக்ஷம் வேதத்தின் கருத்தாகக் கூறப்பட்ட ஸ்ரீபஞ்சாக்ஷரம் ஆகிய இவற்றின் சிறப்புகளும். எ - று. (௨)

சிவன ருட்பெயர் தெளிந்துரைத் தனர்பெறுஞ் சிறப்புச்
சிவன யப்புறு விரதமுற் றிழைத்தவர் செய்கை
சிவனை யோர்ந்தொரு புண்ணியஞ் செய்தனர் பெறுஞ்சீர்
சிவவி ரோதமொன் றில்லவர் பெற்றிடுஞ் செல்வம்.

(இ - ள்.) சிவபெருமானுடைய திருவருளமைந்த திருநாமங்களைத் தெரிந்து தியானஞ்செய்தவர்கள் அடையும் பெருமையும், சிவபெருமான் மகிழத்தக்க விரதங்களை இடையீடின்றிச் செய்தவர்களுடைய செய்கைகளும், சிவபெருமான் பிரபாவங்களை யறிந்து புண்ணியஞ் செய்தவர்கள் பெறுஞ்சீர்களும் சிவபெருமானுக்கு விரோதமான செயல்கள் ஒன்றுமற்றவர்கள் அடையுஞ் செல்வமும். எ - று. (௩)

எம்பி ரானடிக் கருச்சனை யியற்றுவோ ரியற்கை
நம்ப னைப்பெறுஞ் சிற்சிவ ஞானத்தி னன்மை
கம்ப மாகரித் தோலுரித் துடுத்தநங் கடவுட்
டம்பி ரானுடன் கரந்துறை யோகத்தின் றகைமை.

(இ - ள்.) எமது சிவபெருமான் றிருவடியில் அர்ச்சனைசெய்வோர் தன்மையும், சிவபெருமானை யடையச்செய்யும் அறிவுமயமாகிய சிவஞானத்தின் நன்மையும், கட்டுத்தறியையுடைய பெரிய யானைத்தோலையுரித்துப்போர்த்த தேவர் பெருமானாகிய சிவபெருமானுடன் மறைந்து வசிக்குஞ் சிவயோகத்தின் தன்மையும். எ - று. (௪)

பரம நாதனுக் கற்புத மாகுமிப் பத்தில்
விரவு தெய்வவி பூதியின் றன்மையை விரிப்பே
முரக னுச்சியி னெடுநிலத் துயிர்ப்பொறைக் கெல்லாம்
புரவ ளிப்பதுந் தனிக்கதி யளிப்பதும் பூதி.

(இ - ள்.) ஆகிய இப்பத்தும் மகாதேவனாகிய சிவபெருமானுக்கு விருப்பமிக்கனவாம். இவற்றில் ஒன்றாகக்கலந்து முதலிலுள்ள தெய்வீகமமைந்த திருவெண்ணீற்றின் சிறப்பினை விரித்துரைக்கின்றோம். ஆதிசேடன் உச்சியிலுள்ள பெரிய நிலவுலகத்திற்றங்கிய ஆன்மவர்க்கங்களுக்கெல்லாம் இரட்சிப்பைத்தருவதும் ஒப்பற்ற மோட்சத்தைக்கொடுப்பதும் அத்திருவெண்ணீறே.

கற்ப மென்றநு கற்பமென் றுபகற்ப மென்றாய்
முற்ப வந்துடைத் தருடரும் பூதிமூன் றாகு
மற்பு தந்தரு கோமயந் தரைப்படு வதன்முன்
விற்க லன்படுத் தைந்துவில் வத்தொடு விளைத்தல்.

(இ - ள்.) கற்பமென்றும் அநுகற்பமென்றும் உபகற்பமென்றுஞ் சொல்லத்தக்கதாகி, முற்பிறப்பின் வினைகளையொழித்துத் திருவருள்செய்யும் அத்திருவெண்ணீறு மூவகைப்படும். மகிமைகளையுண்டுசெய்யும் பசுவின்சாணமானது நிலத்தில் விழுமுன்னரே பிரகாசிக்கின்ற பாத்திரத்திலேற்று (நொச்சி, விளா, கூவிளம், கிளுவை, மாவிலிங்கையாகிய) பஞ்சவில்வங்களுடனே விளைவித்தல். எ - று. (௫)

ஈது கற்பமற் றநுகற்ப மிப்பரிசேந்தித்
தாது வில்வமைந் தில்லதாய் விளைந்தது தரணிப்
போது கோமயம் விளைந்தது பொருந்துப கற்பந்
தீதின் மாதவத் தீரவை யிவையெனத் தெளிமின்.

(இ - ள்.) இது கற்பமாகும். மற்ற அநுகற்பமாவது இவ்வகையே சாணத்தைப் பாத்திரத்திலேற்று, தலைமையாகிய பஞ்சவில்வங்களின்றி விளைவி

பது, நிலத்தில்விழுந்த சாணத்தால் விளைவித்தது பொருத்தமான உபகற்பமாம். குற்றமற்ற பெருந்தவமுனிவர்களே! முற்கூறிய மூவகை விபூதியும் இவையென்றறியுங்கள். எ - று. (எ)

நீறு ளப்பட நினைப்பினு நீறுமெய்ஞ் ஞானத்
தூறு சிந்தையிற் றரிப்பினு மன்னவர்க் கொருங்கே
யேறு நல்வினை யாவையுந் தீவினை யிலவாங்
கூற ருந்திரு நீறுநாற் பொருளையுங் கொடுக்கும்.

(இ - ள்.) அவ்வகைய விபூதியை மனதிலூன்றத் தியானித்தாலும், அவ்விபூதியை மெய்ஞ்ஞானந்தங்கிய மனதோடு தரித்தாலும், அத்தகையினர்களுக்குப் புண்ணியங்களெல்லாஞ் சேர்ந்து விர்த்தியாகும், பாவங்களெல்லாம் விலகும். சொல்லுதற்கரிய (சிறப்புகளையுடைய) விபூதி (தர்மார்த்த காம மோக்ஷமென்னும்) நான்கு புருஷார்த்தங்களையுந் தரும். எ - று. (அ)

மூல மீறிலா முழுமுதற் பரமனை முடிவில்
கால மோரினும் புலப்படா னங்கது கடுப்ப
நாலு வேதமுற் றுணர்ந்தவர் நாற்பொரு ளளிக்கும்
பால்வெண் ணீற்றிய லளப்பரி தாமெனப் பகர்வார்.

(இ - ள்.) தோற்றமு முடிவுமில்லாத முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை எண்ணில்லாக்காலம் ஓர்ந்தாலும் அவன் விளங்கமாட்டான். அதுபோலவே நான்கு புருஷார்த்தங்களையுங் கொடுக்கின்ற பால்நிறமுள்ள விபூதியின் தன்மையை, நான்கு வேதங்களையுமறிந்த பெரியோர்களும் அளவிடற்கரிதென்று சொல்வார்கள். எ - று. (கூ)

மெய்ம்மை தேறறந் தயாவொடு விளைந்தமெய்ஞ் ஞானம்
பொய்ம்மை யின்றியே சிதைவறு பூதமோ ரைந்துஞ்
செம்மை தந்தவிப் பற்பமென் பெயர்கொடு சிறந்த
மும்மை யாகிய வெண்டிகட் பெருமையார் மொழிவார்.

(இ - ள்.) உண்மைமிகுந்த தருமமும், கிருபையோடு விளைந்த மெய்ஞ்ஞானமும், நிலையாமையின்றி அழிவற்றுச் சிறந்த ஐம்பூதங்களும், மேன்மைமிகுந்த இந்தப்பற்பமென்னும் பெயருடனே சிறப்புற்றிருக்கின்றன. மூன்றுவகையாகிய இந்தத்திருவெண்ணீற்றின் சிறப்பை எவர்தாம் எடுத்துச் சொல்லுவார். எ - று. (கய)

அரிமு தற்பெருந் தேவர்க்கும் வருணநான் காகி
விரியு மன்பதைப் பகுதிக்கும் வெண்ணிலாச் சடையோற்
குரிய நீற்றணி யின்றெனி லவர்களெம் பெருமான்
றெரிச னத்தவ ரல்லர்புன் புலையரிற் றீயோர்.

(இ - ள்.) விஷ்ணுமுதலிய பெரிய தேவர்களுக்கும், நான்கு ஜாதிகளாகப் பரந்திருக்கின்ற மானுடப்பகுதிகளுக்கும், வெள்ளிய பிறைச்சந்திரனை யணிந்த சடையையுடைய சிவபெருமானுக்குரிய திருவெண்ணீற்றின் அழகில்லையானால், அவர்கள் யாவரும் எமது சிவபெருமானைத் தரிசனஞ்செய்ய வல்லவர்களல்லர். அற்பர்களாகிய நீசரினுங் கொடியவர்களாவார்கள். எ - று. (கக)

யாது பாதகம் புரிந்தன ராயினு மிகழும்
பாத கங்களிற் பஞ்சமா பாதக ரெனினும்
பூதி போற்றிடிற் செல்வரா யுலகெலாம போற்றத்
தீது தீர்ந்தனர் பவுத்திர ராகியே திகழ்வார்.

(இ - ள்.) எவ்வகைப்பாவஞ் செய்தோராஞலும், எல்லோராலும் பழிக்கத்தக்க பாதகங்களில் மேம்பட்ட பஞ்சமாபாதகர்களாஞலும், விபூதியைத் துதிசெய்வார்களாஞல், செல்வவான்களாயும் உலகமுழுதுந் துதிக்கத் தீமையகன்றவர்களாயும் பரிசுத்தர்களாயும் பிரகாசிப்பார்கள். எ - று. (கஉ)

திருவெ ணீற்றினை வரன்முறை செங்கையி னேந்தி
யுருகு மன்பினிற் புனறெளித் தொருமையிற் குழைத்து
மருவு புண்டர மாயினும் வண்டுக ளெனினும்
பெருகு காதலிற் புனைந்துளோர் கயிலைபெற் றுடையோர்.

(இ - ள்.) திருவெண்ணீற்றினைச் சிவாகமமுறையே செவ்விய கையிலெடுத்து மனங்குழைகின்ற உள்ளன்புடனே நீர்வார்த்து ஒன்றுகக்குழைத்து, பொருந்திய திரிபுண்டரமாக வாயினும், வளர்தங்கிய உத்தூளனமாக வாயினும் மிகுந்த ஆசையோடு அணிகின்றவர்கள் திருக்கைலாயபதவியைப் பெற்றவர்களாவார்கள். எ - று. (கங)

உச்சி நெற்றிமூக் கீரங்கள முபயகை யுறுப்பா
றிச்சு வற்புற மிருவிலா விடைப்புற மென்னப்
பச்சி மப்பிறை யணிந்தவற் பணிந்துமூ வைந்தா
விச்சை மேலவர் நீற்றொளி விளங்கிடத் தரிப்பார்.

(இ - ள்.) மெய்ஞ்ஞானந்தங்கிய பெரியோர்கள் உச்சி நெற்றி நாசி மார்பு கழுத்து இருகைகளின் ஆறிடங்கள் கழுத்தின் பின்பக்கம் இருவிலாப் பக்கங்கள் இடுப்பின்பின்பக்கம் என்னும் பதினைந்து ஸ்தானங்களிலும் இளம்பிறைசூடிய சிவபெருமானை வணங்கித் திருவெண்ணீற்றின் ஒளிவிளங்கும்படியணிவார்கள். எ - று. (கச)

மந்தி ரத்தொடு தரிப்பினு மந்திர முணரார்
தந்தி ரத்தொடு தரிப்பினு மீங்கவர் தம்மை
முந்தை மூவரென் றேத்தலா மென்பது முறையாற்
புந்தி தந்துகா பாலிதே ருபநிடம் புகலும்.

(இ - ள்.) வேதமுறைப்படி தரித்தாலும் வேதமுணராதவர்கள் ஆகமமுறைப்படிதரித்தாலும் அவ்வாறு தரிப்பவர்களை முதன்மைவாய்ந்த திரிமூர்த்திகளென்று முறைமையமைந்த நீதிகளைக் கட்டளையிட்டு, [காபாலீதேருபநிடதம்] உருத்திரரருளிய உருத்திரோபநிடதம் முறையிடும். எ - று. (கரு)

மற்றி யாமினிப் புலப்பட வுரைப்பதென் மறைநூல்
சொற்ற தன்றியென் செருக்கொடு சொற்றதோ சுருதி
முற்று மிப்படி முறையிடு முழுவெணீ றணிந்தோர்
பெற்ற வாசில நிகழ்த்துது மென்றனன் பெரியோன்.

(இ - ள்.) நாம்வேறுக இன்னும் விளங்கச்சொல்லவேண்டுவது யாது? வேதங்கள் சொல்லியதேயல்லது எனது செருக்கிஞற் சொல்லியதோ? இப்

படியே வேதநூன்முற்றும் முறையிடும் மேன்மையுடைய திருவெண்ணீறணிந்தவர்கள் பெற்றபேற்றிற் சிறிதினைச் சொல்கின்றேனென்றனர் சூதமுனிவர்.

முன்னை மாநிலம் பிரளயத் தொடுங்குற முளரி
மன்னு நான்முகன் முதலினோ ரிறந்தனர் மடிய
அன்ன வெம்பிர ளயத்துமே லலர்ந்ததோ ராலின்
றுன்ன ருந்திறற் றிருநெடு மால்விழி துயில.

(இ - ள்.) பூர்வத்தில், பெரிய உலகமானது சலப்பிரளயத்தில் மூழ்க, தாமரைமலரில்வசிக்கும் பிரமதேவன் முதலானோர் இறந்தார்கள். அவர்களிறந்தபின்னர், அக்கொடிய மகாவெள்ளத்தில் விரிந்திருந்த ஓராலிலையில், ஒருவராலும் அடைதற்கரிய வல்லமையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் அறிதுயில்புரிய. எ - று. (௧௭)

ஆல மாமரத் தாங்கவன் றுயிறலு மவன்பான்
மூல மீறிலா முழுமுதன் முக்கண னடைந்தான்
வேலை வெள்ளவெம் பிரளயம் புறவடி விரவ
நீல மேனிகண் டுவப்புற வொருதனி நின்றான்.

(இ - ள்.) அப்பெரிய ஆலமரத்தில் அவ்விஷ்ணுமூர்த்தி யோகநித்திரை புரியவும், அவரிடத்தில் ஆதியும் அந்தமுமில்லாத முழுமுதற்கடவுளாகிய திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் எழுந்தருளி, சமுத்திரவெள்ளமாகிய அம்மகாப்பிரளயம் தமதுதிருவடிப் பரட்டளவாகக்கலக்க, நீலவண்ணராகிய திருமால்கண்டு வியக்கும்படி நேரில்நின்றருளினர். எ - று. (௧௮)

மாய னவ்வழி முதல்வனை நோக்கியு மதியான்
னீயெ வன்கொலென் றறிவயர்ந் துரைத்தலு நிமல
னாய மாயையி னடைந்தன னிவனென வருளித்
தூய நீறளித் தவனுள மாயையைத் துடைத்தான்.

(இ - ள்.) அப்பொழுது திருமால் சிவபெருமானைத் தரிசித்தும் மதியாதவராய் நீயாரென்று அறிவழிந்து வினவவும், சிவபெருமான் இவன் மாயையிலே மயங்கினனென்று திருவுளங்கொண்டு, புனிதமாகிய விபூதியையவருக்களித்து அவருள்ளத்திற் குடிகொண்ட மாயையை விலக்கியருளினர். எ-று.

தன்னு ளத்துறு மாயைபோ யுணர்ந்தனன் றணவா
தென்னை யாளுடை நாயக னீங்கெழுந் தருள
முன்னை யான்புரி மாதவ முளதென மொழியாப்
பன்னு நான்மறைச் சுருதிசொற் றவனடி பணிந்தான்.

(இ - ள்.) தம்மனதிற்பொருந்திய மாயைநீங்கி அறிவுண்டாகி, இடையீடின்றி அடியேனை அடிமைகொண்டதலைவர் ஈண்டெழுந்தருளும்படி யான் பூர்வத்திற்செய்த பெருந்தவம் உண்டென்றுசொல்லி, துதிக்கத்தக்க நான்கு வேதங்களாற்றுதித்து, அச்சிவபெருமானது திருப்பாதங்களைப் பணிந்தனர்.

ஈங்கெ ழுந்தருள் காரண மென்கொலென் றியம்ப
வோங்கெ யிற்புரஞ் செற்றவ னுரைக்குமூ வுலகந்
தாங்கு முந்தியந் தாமரை நான்முகன் முதலோர்
வீங்கு வெண்டிரைப் பிரளயத் தொடுங்கினர் விளிந்தார்.

(இ - ள்.) தேவரீர் இவ்விடத்தெழுந்தருளிய காரணம் யாதெனவினவ, உயர்ந்த மும்மதில்களோடுகூடிய முப்புரங்களையெரித்த சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளுகின்றார். திரிலோகங்களையுந் தாங்கியுள்ள உனதுஅழகிய நாபிக்கமலத்திற்றோன்றிய பிரமாதிதேவர்கள் பருத்தவெள்ளிய அலைகள் பொருந்திய பிரளயவெள்ளத்தில் ஒடுங்கியிறந்தார்கள். எ - று. (௨௧)

மோது வெண்டிரைப் பிரளய முடிவுமுற் றியதா
லாதி மாநிலப் பரப்பையுஞ் சராசர மனைத்து
மோது நீதியிற் படைப்பதற் கொருப்படுத் தியற்றும்
வேத வேதியன் மலரயன் வெளிப்பட வேண்டும்.

(இ - ள்.) மோதுகின்றவெள்ளிய அலைகளையுடைய பிரளயமுடிவும்முடிந்தது. முதன்மையாகிய நிலவுலகத்தையும் சராசரங்களெல்லாவற்றையும் நாம் கூறும் முறைப்படி சிருஷ்டிப்பதற்கு இசைந்து அப்படிச்செய்யும் வேதமுணர்ந்த கமலாசனத்துள்ள பிரமன் இப்போது வெளிப்படவேண்டும். எ - று.

தாரு காவனத் தெய்தியாந் தறுகண்வெஞ் சூலக்
காரி யைப்பயக் கின்றநாட் காலமோர்ந் தறிந்தெம்
பாரி சத்தியா யெதிர்ந்தனை யின்றுமப் பனிப்பூ
வேரி வார்குழற் சத்தியா குதியென விளம்ப.

(இ - ள்.) நாம் தாருவனமடைந்து அஞ்சாமையுடைய வலிய சூலாயுதமேந்திய அரியரபுத்திரனைப் பெறுகின்றநாளில், காலத்தை யோசித்தறிந்து எமது தேவியாகிய சத்திவடிவாய் வெளிப்பட்டனை. இப்போதும் (அதுபோல) அந்தக் குளிர்ந்த மலர்மணங்கமழும் நெடிய கூந்தலையுடைய சத்திவடிவாகுக எனக்கட்டளையிட. எ - று. (௨௩)

அனைய னவ்வுரு வெடுத்தலு மரனவட் புணர
வினையி னெய்திய பொற்றுளி விந்துவாங் குதித்து
நனைந றுந்துழாய் நாயக னாபியந் தலத்து
வனையு நெட்டிதழ்க் கமலமொன் றலர்ந்தது மன்றே.

இ - ள்.) அத்திருமால் அவ்வாறு வடிவேற்றவுடனே, சிவபெருமான் அச்சத்தியைக்கூட, இச்செயலாலெய்திய பொற்றுளிபோன்ற சுக்கிலம் அவ்விடத்திலுதித்து, குளிர்ந்த மணங்கமழுந் துளவமாலைபூண்ட திருமாலின் உந்தியிடத்தில், அலங்கரிக்கின்ற நெடிய இதழ்களமைந்த தாமரையொன்று மலர்ந்தது. எ - று. (௨௪)

முளைத்த தாமரைப் பீடிகை முழுமுதற் பிரமன்
கிளைத்த வைந்துமா முகத்தொடுந் தோன்றியக் கெழுநீர்
வளைத்தி டித்தழி வையமு மன்பதைப் பரப்புந்
திளைத்த சிந்தையிற் படைத்தினி திருந்தகஞ் சிறந்தான்.

(இ - ள்.) அப்படியுதித்த கமலாசனத்தில் (சிருட்டியென்னும்) முதற்றொழிற் கிறைவனான பிரமன், கிளைத்துள்ள சிறந்த ஐந்துமுகங்களோடும் உதித்து, உலகெங்கும்பரந்த அப்பிரளயவெள்ளஞ் சூழ்ந்து இடித்தழிந்த பூலோகத்தையும் ஆன்மாக்களையும் சந்தோஷித்தத்துடன் சிருட்டித்து இனிதாகவிருந்து மனங்களித்தான். எ - று. (௨௫)

வையம் யாவையு மன்னுயிர் யாவையும் வகுத்த
தெய்வம் யாமல தில்லெனச் சிந்தனை திறம்ப
வைப ணுடர வசைத்தணி வேணிய னறியா
வெய்ய சூற்படை வயிரவக் கடவுளை விடுத்தான்.

(இ - ள்.) எல்லாவுலகங்களையும் அவ்வவற்றிலுள்ள எல்லா ஆன்மாக்களையும் படைத்தகடவுள் நாமேயன்றி வேறின்றென்று எண்ணம்மாறுபட, படம் விரித்தாடும் பாம்பினை (கச்சாக)க்கட்டிய அழகிய சடையையுடைய சிவபெருமான் அறிந்து, கொடிய சூலாயுதந்தாங்கிய வயிரவக்கடவுளை அவனிடஞ் செலுத்தினர். எ - று. (உசு)

விடுத்த சூற்படை வயிரவ னுருத்தழல் விழித்துக்
கடுத்த சிந்தையிற் புகுந்தனன் கமலநா யகனை
நடுப்ப டுந்தலை யறுத்தெறிந் தரனுழை நடந்தா
னெடுத்த சிந்தைய னான்முகத் திருந்தன னின்னும்.

(இ - ள்.) அவ்வாறு அனுப்பப்பட்ட சூலாயுதமேந்திய வயிரவக்கடவுள் கர்ச்சித்து நெருப்பெழ நோக்கிக் கோபமூண்ட மனத்தோடு கமலாசனனாகிய பிரமனிடம்வந்து அவனது நடுத்தலையை யறுத்தெறிந்து சிவபெருமானிடஞ் சென்றனர். பிரமன் ஏங்கியமனதுடன் இதுகாறும் நான்குமுகங்களோடிருந்தனன். எ - று. (உஎ)

வெள்ளொ ளித்திரு நீற்றினு லாலிலை மேலோன்
கள்ள மாயைபோய்க் கண்ணுதற் காண்குறப் பெற்றான்
பிள்ளை யாமென மலரயற் பயந்தனன் பெரியோ
ருள்ள மோர்வது திருவெணீ றல்லதொன் றுளதோ.

(இ - ள்.) வெண்மையாகிய காந்திபொருந்திய திருவெண்ணீற்றினால், ஆலிலையிற்றுயின்ற திருமால், கள்ளமாகிய மாயையகன்று நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் தரிசிக்கப்பெற்றனர். (அதுவேயன்றி) தமது குமாரனாகக் கமலாசனனான பிரமனைப்பெற்றனர். பெரியோர் தங்கள்மனதில் தியானஞ்செய்வது திருவெண்ணீறன்றி வேறொன்றிருக்கின்றதோ. எ - று. (உஅ)

அஞ்ச வித்திடு தவத்துளீ ரிங்கது வன்றிப்
பஞ்ச மெட்டிர னெரியழன் முகத்தினன் பகுவாய்
நஞ்சு யிர்த்தசற் பாசுரன் மூவரு நடுக்கும்
வெஞ்சி னத்தின்மூ வுலகையும் விளித்தனர் மேனாள்.

(இ - ள்.) பஞ்சேந்திரியங்களையும் வென்ற தவநிலைமேற்கொண்டவர்களே! இப்போது கூறியதல்லாமல், பஞ்சமெட்டிரன் - எரிகின்ற அக்கினிமுகன் - பிளவுபட்டவாயில் விஷஞ்சிந்திய சர்ப்பாசுரன் என்று சொல்லப்பட்ட அசுரர்கள் மூவரும், எல்லோரையும் நடுங்கச்செய்யுங் கொடுங்கோபத்தாற் பூர்வத்தில் திரிலோகங்களையும் அழித்தார்கள். எ - று. (உகூ)

அலகி லாவலி மூவரா லமரர்பட் டிறப்ப
நிலவு நீற்றொளி வீரபத் திரத்தனி நிமலன்
பலகை வாட்படை பொறுத்தன னவருழைப் படர்ந்தான்
சுலவி வெஞ்சுரத் தனையவ ராருயிர் தொலைத்தான்.

(இ - ள்.) அளவில்லாத வல்லபமுடைய அம்மூன்றசுரரால் தேவர்களிறந் தொழிய, சந்திரிகைவீசும் திருவெண்ணீற்றின் ஒளியையுடைய ஒப்பற்ற பரிசுத்தராகிய வீரபத்திரக்கடவுள், கேடயமும் வாட்படையுந்தாங்கி அவர்பாற் சென்று கொடிய காட்டினிடத்திற் சுழன்று, அவர்களது அரிய உயிர்களை யழித்தனர். எ - று. (௬௦)

மீண்ட பத்திரன் விண்ணுல கடைந்தனன் விளிந்து
மாண்டு போயின வானவர் மறையவர் யாரு
மூண்ட பேரருள் சுரந்தவ னளித்திட முறையா
லீண்டு நீறுபட் டுயிர்ப்பொறை யினிதுபெற றெழுந்தார்.

(இ - ள்.) திரும்பிய வீரபத்திரக்கடவுள் தேவலோகஞ் சேர்ந்தனர். இறந்துபோன தேவர்களும் முனிவர்களுமாகிய வெல்லோரும், அவ்வீரபத்திரக்கடவுள் மிக்க பேரருண்மிகுந்து, தமக்குத் திருவெண்ணீறிட, அது பட்ட மாத்திரத்தில் முறையே தங்களுடலிற்சேர்ந்த உயிர்கள் இனிமையாகப்பெற்றுப் பிழைத்தெழுந்தார்கள். எ - று. (௬௧)

இன்னு மத்திரு நீற்றது பெருமையொன் றிசைப்பா
மன்னு மாதவத் துறையுளீர் வரன்முறை யுணர்வீர்
பின்னும் வெண்டிரைப் பரவைசூழ் பெருநிலப் பரப்பின்
மின்னெ யிற்றுடைப் பிரமராக் கதனொரு விறலோன்.

(இ - ள்.) நிலைபெற்ற பெரியதவசிகளே! இன்னும் அத்திருவெண்ணீற்றின் பெருமை ஒன்று சொல்லுகின்றோம். முறைப்படி யுணரக்கடவீர். பின்னிக்கொண்டுள்ள வெள்ளிய அலையமைந்த கடல்சூழ்ந்த பெரியநிலவுலகில், மின்னுகின்ற பற்களையுடைய ஒப்பற்றவல்லபனை ஒரு பிரமராக்கதனிருந்தான். எ - று. (௬௨)

பிடித்த தண்டொடும் பெருவலித் திறனொடும் பெருவான்
முடித்து மாநிலத் துயிரெலா முடித்தனன் முதனாட்
டொடுத்த பாதகக் கஞ்சுகம் புனைந்தனன் றொலான்
மடித்த வாயினன் மறலியுந் துணுக்குறு மறவன்.

(இ - ள்.) (அவன்) பூர்வத்திற் கையிற்றாங்கிய தண்டத்தோடும், மிக்க வல்லமைத்தன்மையோடும், சிறந்த தேவலோகத்தையழித்து, பெரிய பூலோகத்துயிர்க ளெல்லாவற்றையும் அழித்தனன். பாதகமாகிய கவசத்தையணிந்தவன். (எவர்பாலும்) தோல்வியுறாதவன். (கோபத்தாலே) இதழதுக்கிய வாயையுடையவன். இயமனும் நடுங்கத்தக்க கொலையையுடையவன். எ-று.

வாம தேவனென் றொருமுனி யவனுழை வரலுங்
காமர் நீற்றொளி யவனுருக் கரந்தமை கண்டான்
றாம ரைச்சர ணேசர ணென்றவற் றொழுந்தா
னேமு றத்தழீஇ நீற்றணி தன்னுரு வேய்ந்தான்.

(இ - ள்.) வாமதேவரென்னும் ஒருமுனிவர் அவனிடம்வரவும், அவர் சரீரத்தில் அழகிய திருவெண்ணீற்றின் பிரகாசங் கலந்திருத்தலைக்கண்டு, அவரது தாமரைமலர்போலும் பாதங்களே அடைக்கலமென்று அவ்வரைவணங்கி, அன்புண்டாகத் தழுவிக்கொண்டு, அவருடலிலிருந்த திருவெண்ணீற்றினழகு தன்சரீரத்திலுற ஒற்றிக்கொண்டனன். எ - று. (௬௩)

முனிவ னீற்றணி தன்னுடன் முயங்கிய பின்னர்ப்
புனித னல்லுருப் பொருந்தின னிருங்கதி புகுந்தான்
குனித டந்திரைக் கிடங்கர் சூழ் குவலயப் பரப்பிற்
பனிநி லாவிரி நீற்றுடைத் தன்மையார் பகர்வார்.

(இ - ள்.) அவ்வாமதேவமுனிவருடைய திருவெண்ணீற்றினழகு தன்னுடலிற்பொருந்திய பின்னர், புனிதமாகிய திவ்வியதேகமடைந்து பெருங்கதியெய்தினன். (ஆகையால்) வளைந்த பரந்த அலைகளையுடைய கடல்சூழ்ந்த நிலவுலகத்தில், குளிர்ந்த சந்திரிகையைப் பரப்புகின்ற திருவெண்ணீற்றின் சிறப்பை எவர்தாம் சொல்லவல்லவர்? எ - று. (ருடு)

பகரு முத்தமிழ்க் குறுமுனி தமிழ்நிலப் பரப்பிற்
புகலு நான்மறை யொருவன்மற் றொருவனிற் புகுந்து
மகர வார்குழை யொருத்தியைக் களவினுன் மணந்தா
னிகல டுஞ்சினத் தன்னவ டலைவனுற் றெதிர்ந்தான்.

(இ - ள்.) யாவரும் புகழ்ந்தோதுகின்ற முத்தமிழ்க்குரிய அகத்தியமுனிவர் வீற்றிருக்கும் தமிழ் வழங்குநாட்டிலே, நான்கு வேதங்களையும் பாராயணஞ்செய்யும் ஓரந்தணன் வேறோரந்தணன் வீட்டிற்குச்சென்று, நெடியமகரகுண்டலமணிந்த ஓர் பார்ப்பன மாதைக் களவுப்புணர்ச்சி செய்தான். பகைமையிற் கொல்லத்தக்க கோபத்துடன் அப்பார்ப்பனமங்கையின் கணவன் அங்கெய்திக்கண்டான், எ - று. (ருசு)

பாய விற்படு மிருவரைப் பற்றினன் பற்றித்
தூய மாமறைத் தலைவனை யுயிருகத் துணித்தான்
மேய தாட்டுணை யிறக்குறக் கயிற்றொடும் வீக்கி
யாய வெஞ்சினத் திழுத்தன னவணத் திட்டான்.

(இ - ள்.) ஒருபாயிற் படுத்திருந்த தன் மனைவியையும் மறையவனையும் பிடித்துக்கொண்டு, புனிதமான வேதங்களையறிந்த அவ்வந்தணனை யுயிர்போக வெட்டி விட்டு, அவனிருகால்களையும் கயிற்று லிறுக்கிக்கட்டி, தனக்குள்ள கடுங் கோபத்துடன் இழுத்துச் சென்று கடைத்தெருவிலிட்டான், எ - று.

குருதி பீர்விட மறுகிடைக் கிடக்கலுங் குறுகி
யருகு மாடுற வடலையிற் கிடக்குமோர் சுணங்கன்
பருகி நக்குற வாங்கவ னெற்றிமேற் பதத்திற்
றிருவெ ணீறுபட் டணிந்தன வாமெனச் சிறந்த.

(இ - ள்.) அவ்வேதியனுடல் உதிரமொழுகக் கடைவீதியிற் கிடக்க, அதிசமீபமாய் அருகிலுள்ள மயானத்திலிருந்த ஒரு நாய் அவ்வுதிரத்தைப்பருகி அவனை நக்கியவுடன், அவ்வந்தணன் நெற்றியில் அந்நாயின் காலிற் படிந்திருந்த சுடலைச்சாம்பர்பட, அவன் இயற்கையாகவே திருநீறணிந்துகொண்டாற்போல் தோன்றியது. எ - று. (ருஅ)

அக்க ணத்தினி லவனுயி ரடுதிறன் மறலி
தெக்க ணங்கொடு சேறலும் வெண்டுகட் சிறப்பின்
முக்க ணெம்பிரான் கணத்தவர் முன்னினர் முடுகித்
தொக்க கட்டறுத் தத்திசைத் தூதரைத் துரந்தார்.

(இ - ள்.) அந்தக்கணத்திலே, அவ்வேதியனுயிரைக் கொல்லத்தக்க வல்லபமுடைய யமன் தனது தென்றிசைகொண்டுபோய்ச் சேர்க்க, அவன் நெற்றியிலிருந்த தாவள்யமான தூளிதத்தின் சிறப்பால், திரிநேத்திரங்களையுடைய எமது சிவபெருமானது கணங்கள் அதிவேகமாய் முற்பட்டுவந்து, அவனைக் கட்டியிருந்த கட்டையறுத்து அத்தென்றிசையினின்று போந்ததூதரைத் துரத்தினார்கள். எ - று. (௫௯)

பிணத்தி னாய்ப்பதத் தடலைபெற் றிடப்பெறும் பேற்றாற்
கணத்தி னோரவன் றனைக்கொடு கயிலையிற் புகுந்தார்
புணர்த்த மாதவத் தலைவிர்காண் மும்மையிற் பொருந்தி
மணத்த வெண்டுகட் பெருமையை யார்கொலோ மதிப்பார்.

(இ - ள்.) நாயின்காலிற் படிந்திருந்த பிணச்சாம்பர் பதியப்பெற்ற புண்ணியத்தினால், அவனைச் சிவகணர்கள் திருக்கைலைக்கு அழைத்துச்சென்றார்கள். கூட்டமாயுள்ள பெருந்தவத்தலைவர்களே! மூவகையாகவமைந்து மணமுற்றுவிளங்குந் திருவெண்ணீற்றின் சிறப்பை எவர்தாம் அளவிடவல்லவர்? (ஒருவருமிலர்). எ - று. (௬௦)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

ஈங்கிவைநின் றிடக்கவித்த பணிக்கவிகைத் தனிச்செங்கோ லிகலே றன்னான், றேங்கமழூ நறுந்தெரியற் செருவொழியப் பகைதடிந்து சினவு வேலோ, னோங்குதரு மந்தழைப்ப மனுமுறையி னுயிர்புரக்கு முரவுத் தோளான், வாங்குதடந் திரையுலகிற் புயபலனென் றுளனொருவன் வங்க வேந்தன்.

(இ - ள்.) இப்போதுகூறிய இவைநிற்க. கவிந்த சந்திரவட்டக்குடையையும் ஒப்பற்ற செங்கோலையுமுடையவனும், வலிமையால் ஆண்சிங்கத்தைப் போன்றவனும், நறுமணங் கமழுமாலையைத்தரித்து யுத்தமகலும்படி சத்துருக்களைக்கொன்று கோபிக்கும் வேலேந்தியவனும், சிறந்த தருமங்களதிகரிக்க மநுமுறையோடு உயிர்களைக்காக்கும் வலியபுயமுள்ளவனுமாய், வளைந்துபரந்த கடல்சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள வங்கதேசத்தை யரசுபுரிந்த புயபலனெனும் பெயருடைய ஒருமன்னவனிருந்தான். எ - று. (௬௧)

அருமறையி னெறிதிறம்பா வந்தணருக் கினிதுபுரிந் தளிக்கு மன்னோர்
பருவரலுற் றுழலாது பல்லுயிருந் தன்னுயிரிற் பரிந்து மாயாக்
கருணையொரு திருவுருவு கொண்டனையோ னிலவலையங் காக்கு நாளில்
வருபருதி தென்றிசைவிட் டுத்தரஞ்சென் றயனமுறைவழங்கலுற்றான்.

(இ - ள்.) அரிய வைதிக மார்க்கத்தில் முறனாத அந்தணர்களை யுபசரித்துக்காக்கும் அவ்வரசன், பல சீவர்களையும் துயருற்று வருந்தாமல் தன்னுயிர்போற் பரிந்து, அழியாத கருணையே வடிவெடுத்தாற்போன்றவனாய் இந்நிலவுலகத்தை யரசுசெய்யுங்காலத்தில், உலகினை வலஞ்செய்யுஞ் சூரியன் தன் நியதிபோலத் தென்றிசை நீங்கி வடதிசையிற் பிரகாசிக்கலாயினன். உத்தராயணம் வந்தது, எ - று. (௬௨)

அக்காலத் திருநிதியக் குவைதனது முன்னரமைத் தருநூல் சொற்ற, விக்காலந் தனைநிகர்த்த தருமநா ளில்லையென்ப தெண்ணி

யோர்ந்து, முக்காலம் பகுத்துணர்ந்த முனிவரரந் தணர்வருவான் மொழிந்தான் புண்ணீர், கக்காட லலங்கிலைவேற் புயபலனுங் கவர்க்குதவக் கருதினானால்.

(இ - ள்.) அக்காலத்திலே, பெரிய பொருட் குவையைத் தன்முன்வைத்துக்கொண்டு, அரிய நூல்களிற் சொன்ன இக்காலம் போல வேறு புண்ணிய காலமில்லையென் றாலோசித்துணர்ந்து, முக்காலச் செய்திகளையு முணர்ந்த முனிவர்களையும் வேதியர்களையும் வருமாறு சொல்லி, உதிரஞ்சிந்தி வெற்றி பெற்றசையும் தகட்டுவடிவான வேலேந்திய புயபலமன்னன், அவர்கட்குத் தானங் கொடுக்கக்கருதினான். எ - று. (௪௩)

துங்குதடந் திரைப்பழன விதர்ப்பநாட் டிருந்தனனச் சுசீல னென்பான், வீங்குதடந் துணைப்பணைத்தோ ளாங்கவன்றன் றிருநாடை விருப்பி னெய்த, வோங்கருநான் மறைத்தலைவ ரெதிர்புகுந்து தொழுதுநக ருய்த்தார் மற்றைத், தீங்குதலைத் திருமணக்கும் புயபலற்கன் னவன்வரவு செப்பி னாரால்.

(இ - ள்.) அசைகின்ற விசாலமான அலைகள் பொருந்திய கழனிகள் சூழ்ந்த விதர்ப்ப நாட்டிலிருந்தவராகிய நல்ல சுசீலரென்பவர், பூரித்து விசாலித்துக் கிளைத்த புயங்களையுடைய புயபலனது வங்கதேசத்தை விருப்புடனடைய, அங்குள்ள பெருமைதங்கிய அரிய நான் மறைதேர்ந்த அந்தணரெதிர்கொண்டு பணிந்து தமது நகரிற்கு அழைத்து வந்தனர். அன்றியும், இனிய மழலைச் சொற்களையுடைய திருமகள் விலாசமமைந்த புயபலனுக்கு அவர்வருகையை யுரைத்தார்கள். எ - று. (௪௪)

வேந்தநீ புரிந்தியற்றுந் தவப்பயனோ நினதுகுல வேந்த ரெல்லா, நீந்துபெருந் தவப்பயனோ நின்னாடு புரிதருமநிலையோ முற்றுந், தோய்ந்தளந்த பெருஞ்சுருதி யோருருவு பெற்றனைய சுசீல னென்பான், போந்தனனின் னகரடைந்தான் யாவர்க்கு முதற்றலைமை பொருந்த நின்றான்.

(இ - ள்.) 'வேந்தனே! நீ விரும்பிச்செய்யும் தவத்தின்பலனோ? உன்குலத்தரசர்கள் யாவருஞ்செய்த பெருந்தவப்பலனோ? உன்னாட்டிலுள்ளோர் புரிந்த புண்ணியவசமோ? உலகுமுழுதும் பரவியளந்துள்ள பெருமைதங்கியவேதமே ஓருருவேற்றாற்போன்றவரும் எங்களெல்லாருக்குந் தலைமை பெற்றுள்ளவருமாகிய சுசீலரென்பவர் இந்நகரத்தில் வந்திருக்கின்றனர். எ - று. (௪௫)

புரக்குமுதற் பெருந்தான மன்னவற்கு முதற்புரிந்து போய பின்னர்த், தரப்பெறுதும் யாமென்னத் தனிச்செங்கோற் புயபலற்குச் சாற்றவன்னோன், வரத்தவனை யினிதினின்னே கொணர்திரென மாதவத்தோன் வருத லோடுஞ், சிரத்துமுடி படிபடியப் பணிந்தெழுந்தான் றனித்திகிரிச் செங்கோல் வேந்தன்.

(இ - ள்.) நீயளிக்குந்தலையாய பெருந்தானத்தை அச்சுசீலர்க்கு முதலிலேயளித்து, அவர்பெற்றுச் சென்றபிறகு, நாங்கள் நீ கொடுக்குந்தானத்தைப் பெறக்கடவோமென்று, ஒப்பற்ற செங்கோலையுடைய புயபலனுக்குரைக்க, அப்புயபலன் சிறந்த அத்தவசியை இனிமையாக இப்பொழுதே அழைத்து

ளாருங்களென, சிறந்த தவசியாகிய சுசீலர்வந்தவுடனே, ஒப்பற்ற ஆக்கினை சக்கரமாகிய செங்கோலேந்திய அம்மன்னவன் சிரசிலணிந்தமுடி நிலமிசைப் படிய வணங்கியெழுந்தான். எ - று. (௪௬)

எந்தைநீ யெழுந்தருளப் பெற்றபே றியானிழைத்த தவமோவெ
ன்பான், முந்தையோர் நெடுங்காலம் பெரிதிழைத்த தவமெனக்கு
முடிந்த வாறோ, விந்தமா நிலம்புரிந்த தவப்பேறோ வென்றுபல வெடு
த்துக் கூறி, வந்தமா தவற்குமணித் தவிசளித்துத் தொழுதிருத்தி
மகிழ்ந்தா னன்றே.

(இ - ள்.) எனது தந்தையே! தேவரீர் இங்கெழுந்தருளப்பெற்றது அடியேன் செய்ததவப் புண்ணியமோ? என்குடியிலுதித்த முன்னோர் எண்ணில் காலம் மிகுதியாகச்செய்த தவப்பயன் அடியேனுக்குக் கைகூடியதோ? இந்நாட்டார் செய்ததவப்பயனோ? எனப்பல உபசாரமொழிகளுரைத்து, அச்சுசீலருக்கு இரத்தினாதனமளித்துப் பணிந்து அதிலமர்த்திச் சந்தோஷித்தான். எ - று. (௪௭)

என்புருக வுருகிநிற்குஞ் சிந்தையனை யிருநிதிய மிருகை வாரி, யன்
புருகி யளித்திடலும் புயபலனை முகநோக்கி யறைவா னுள்ளத், துன்
பொழிய நிதியுதவிக் கதியுதவுந் திருநீறு தொட்டி லாயா, னின்கரு
ணைக் கிதுமுறையோ வெனவுரைதத சுசீலனின்னு நிகழ்த்து வானால.

(இ - ள்.) எலும்புகள் நெக்குவிட மனமுருகி, பெருந் திரவியத்தைத் தன் னிருகைகளாலும் முகந்து, அன்புமேலீட்டாற் கொடுக்கப்போம்பொழுது, புயபலன் முகத்தைநோக்கிச் சொல்கின்றார்: உன் மனத்துயர் நீங்கத்திரவிய மளித்து மோக்ஷத்தையுந் தரத்தக்க திருவெண்ணீற்றினை நீ யணிந்தாயில்லை. உன் கிருபைக்கு இது தர்ம மாமோவெனக்கூறி மேலுஞ் சொல்கின்றார். எ-று.

ஏறுயர்த்த சிவபெருமா னெம்பிரான் றிருவடிகண் டிறைஞ்சா ரேனு
நீறுபுனைந் திடுமவரே தேவர்க்குந் தேவரென நின்றார் நீறு
மாறுபடு மன்னவரே கொடுநிரயப் படுகுழியின் வயிற்று வாழ்வார்
சீறருஞ்செங் கோலரச நீறணிந்து தருதியெனச் செப்பி னானால.

(இ - ள்.) இடபத்தைக் கொடியாக உயர்த்திய எமது தலைவராகிய சிவபெருமானது திருவடிகளைத் தரிசித்து வணங்காராயினும் திருவெண்ணீற் றினை யணிந்தவர்களே தேவர்கட்குந் தேவரென்று சொல்ல விளங்குகின்றார் கள். திருவெண்ணீறணியாமல் மாறுபட்டவர்களே கொடிய துன்புடைய நரகக்குழியில் வாழ்வார்கள்; ஆகையால் ஒருவர்க்கும் வெறுப்பின்றிச் செங் கோல் செலுத்தும் அரசனே! நீ யளிக்குந்தானத்தைத் திருவெண்ணீறணிந்து தருகவெனக்கூறினர். எ - று. (௪௯)

செப்பருமா தவனுரைத்த மொழிதனது செவிப்புகலுஞ் சினமீக்
கொண்டு, வெப்பெழுந்த சிந்தையனாய் முனமிழைத்த விதியுடற்ற
வெகுண்டு நோக்கி, யப்பெருநீ றணிந்திலனேலென்னை கு மெனக்கேட்ப
வந்த னாள,னொப்பருமா கமத்துறைவன் புயபலனுக் கிதுவகுத் துரை
ப்பதானான்.

(இ - ள்.) சொல்லற்கரிய பெருந்தவமுடைய சுசீலர் சொல்லிய மொழி கள் தன் செவியிற்புகுந்த மாத்திரத்தில், புயபலன் கோபமிகுந்து வெம்பிய

மனமுற்றவனாய் முன்செய்த தீவினை தன்னைப்பகைத்தலால் அவரைக்கோபங் கொண்டு நோக்கி, அப்பெரிய நீற்றினை யணியாவிட்டால் எனக்கென்ன நேரிடு மென வினவ, அந்தணரும் ஒப்புசொல்லற்கரிய ஆகம நெறியிலொழுகும்சுசீலர் புயபலனுக்கு இப்படித்தெளிவுடன் சொல்வாராயினர். எ - று. (௫0)

செய்யதிரு நீறுதொட்டுத் தரியாதார் பெருஞ்செல்வஞ் சிதையு
மன்னர், கொய்யுளைய பரித்திரளுங் கரித்திரளு மறுமன்னர் கொள்
வார் வேட்ட, தையலொழிந் தருமகவு தணந்துபெரும் பிணியுடனா
ய்ச் சரிப்பரன்றி, மெய்யினுறுப் புக்குறைந்து புலையரினுங் கடைப்
பிறவி மேவு வாரால்.

(இ - ள்.) செப்பமாகிய திருவெண்ணீற்றைத்தொட்டுத்தரியாதவர்களது பெருஞ்செல்வம் அழியும். அவர்களது கத்தரிக்கின்ற புறமயிரையுடைய குதிரைக்கூட்டத்தையும் யானைக்கூட்டத்தையும் மறுதேயத்தரசர் கைக்கொள்ளுவார்கள். மணஞ்செய்த மனைவியையிழந்து அரிய புதல்வனை நீங்கிப்பெருவியாதியுற்று அலைவார்கள். அல்லாமலும் உடலின் அவயவங்கள் குறைவுற்று நீசர்களிலும் இழிந்த பிறவியெடுப்பார்கள். எ - று. (௫௧)

எங்கணிவற் குறுகதியுண் டெனவுரைத்த மொழிசெவிக்கொண்
டிகழா நின்று, பொங்கொளிவெண் ணீறுதொடே னேற்றனையேற்றரு
துமெனப் புகல வன்றோன், செங்கணிள மழவிடையோன் றிருநீறு
தீண்டாரைத் தீண்ட லாகா, விங்குனது தருநிதிய மேற்பதிலை யென்
றுவெகுண் டெழுந்து போனான்.

(இ - ள்.) அடையத்தக்க பதவி இவர்கட்கெவ்வாறு கிடைக்குமெனச் சுசீலர் சொல்லிய மொழியைக்கேட்டு இகழ்ந்துகொண்டு, ஒளிமிகுந்த திருநீற்றை யணிய மாட்டேன். தானம் வாங்குவதாயிற்றருவேனெனக்கூற, செவந்த கண்ணையுடைய இளமைதங்கிய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானது திருநீறணியாதவர்களைத் தொடப்படாது. நீ கொடுக்குந்தானத்தையும் நாம் வாங்குவதில்லையென்று கோபங்கொண்டெழுந்து சென்றனர். ()

போதரலும் புயபலற்குப் பின்னிருக்கு மவன்றேவி புதுப்பூங்கோதை
மாதொருதன் றுளைநாசி துரும்புதிரு கினடும்மி மறைவ லாளா
நீதருதா னம்பெறு தேகுதியேற் றடையிதென்ன நிகழ்த்தி னாண்முற்
றோதியவந் தணனவ்வூ ருறைந்திலன்றன் விதர்ப்பநா டுற்று னன்றே.

(இ - ள்.) அப்படிப்போகவும்; புயபலனுக்குப்பின்னிருந்த புதுமலர் மாலையணிந்த அரசன் மனைவி, தன் மூக்கின் ஒரு தொளையில் துரும்பிட்டுத் திருகித் தும்மல்வருவித்து, அந்தணா! கொடுக்குந்தானத்தை யேற்காது நீ செல்வாயாகில் இது தடையாகுமென்றாள். வேதமுழுதும் ஓதியுணர்ந்த சுசீலர் அந்த அங்கநாட்டில் வசியாமல் தமது விதர்ப்ப நாட்டையடைந்தனர். எ-று. ()

தனியாழி யினிதுபுரந் துலகளிக்குஞ் சிறிதுநாட் டணந்த பின்னர்க், குனியாடற் சிலைத்தடந்தோட் புயபலற்குப் பெரும்பிணிமேற்கொள்ள வெற்றித், தனியானை முதலினவாஞ் சதுரங்க மிறந்தொழிய வறுமை சார்ந்தான், பனியாழி நெடுநிலத்தி னிவற்குடைந்த பகையரசர் பகைத்தா ரன்றே.

(இ - ள்.) ஒப்பற்ற ஆக்கினை சக்கரத்தால் உலகத்தைக்காத்து இனிதாக அரசாளுஞ் சிலநாள் சென்ற பிறகு, வளைந்து வெற்றிதங்கிய வில்லேந்திய விசாலமான தோளையுடைய புயபல மன்னனுக்குப் பெருவியாதி அதிகரிக்க, ஜயந்தங்கிய ஒப்பற்ற யானை முதலிய சதுரங்க சேனைகளும் இறக்கத்தரித்திரமடைந்தான். குளிர்ந்த கடல் சூழ்ந்த பூமியில் இவனுக்குத்தோற்ற பகை மன்னர்களெல்லாம் மீண்டும் அவனை யெதிர்த்தார்கள். எ - று. (௩௪)

அடுகளத்தி னெதிர்பொரநின் றாற்றலறு யரணிநீத் தகன்று போகிப், படுவனத்து மனைவியொடுந் தனிப்புகுந்தா னிவனிருந்த பதியு நாடும், விடுபரிதி யிறந்துபடக் கரியகங்குல் வளைந்ததென வெகுண்டு போரி, னெடுநிலத்தி னிவற்குடைந்து புறங்கொடுத்த குறும்புதலை நிமிர்ந்த தன்றே.

(இ - ள்.) போர்க்களத்தில் அவர்களோடெதிர்த்துப்போர்செய்யவலியில்லானாய்த் தன் கோட்டையைவிட்டு நீங்கி, தன் மனைவியோடு பெரிய காட்டுக்குத் தனித்துச்சென்றான். இவன் வசித்த நகரமும் அங்கநாடும், கிரணம்வீசுஞ் சூரியன் அஸ்தமித்து மறையக்கரிய இரவு சூழ்ந்துகொண்டாற்போல, இப்பூமியில் இதன்முன் இவனோடு கோபித்தெதிர்த்துத்தோற்றுப் புறமுதுகிட்டோடிய குறும்பரசர் கூட்டம் சூழ்ந்துகொண்டது. எ - று. (௩௫)

புலிகளிறு பொருகானத் திவரிருவ ரிழந்து தனிப் புகுந்து சின்னா, ளொலியருவிப் புனலுகர்ந்து முப்பிலட கருந்தியுமற் றுவி யோம்பி, மலரமளி யுறுத்துடலம் பரலுறுக்க வைகினராய்ப் பூழ்தி வார்ந்த,நில னிடைவெம் பனியொதுக்கி னினிதுறங்கிப் பசிவருந்த நெடிது வாழ்ந் தார்.

(இ - ள்.) புலியும் யானையும் போர்செய்யும் அவ்வனத்தில், புயபலனும் அவன் மனைவியும் சகல சம்பத்துகளையும் இழந்து தனியேபோய், சிலகாலம் ஒலித்துவரும் காட்டருவி நீரைப்பருகியும், உப்பில்லாத [அடகு] இலைக்கறிகளைப்புசித்தும் உயிர்காத்து, மலர்ச்சயனமும் உறுத்துமென்னும் உடலில் பருக்கைக்கற்கள் உறுத்தப்படுத்துப் புழுதித்தரையில் கொடிய பனிக்காக ஒதுங்கி இனிய நித்திரைசெய்து பசிநோய் வருத்தப் பலகாலம் வசித்தார்கள்.

மனைவிமுகம் பார்த்தரசு முகங்கவிழ்ந்து மனமிரங்கிக் கண்ணீர் மல்க, வனையதுகண் டனையவளு மழுதிழிகட் புனலொடுநின் றலமந் தேங்க, வினைவிளைய விதிவெறுத்த மனத்தினராய் வருந்துறவோர் வேட னேர்ந்து, புனையிழையைப் பிடித்திழுத்துக் கொடுபோக வழுத ரற்றிப் புலம்ப லுற்றாள்.

(இ - ள்.) தன் மனைவி முகத்தை நோக்கி அரசன் தலையிறங்கி மனம் வருந்திக்கண்ணீர் சொரிய, அதைப்பார்த்து அவன் மனைவியும் அழுது சொரிகின்ற கண்ணீரோடு வருந்தியேங்க, பின்னர் தீவினை விளையச்செய்த விதியை வெறுத்த மனமுற்றாராய்த் துக்கித்திருக்கையில், இதனை ஒரு வேடனறிந்து அலங்கரித்த ஆபரணமணிந்த அவள் கையைப்பற்றியீர்த்துக்கொண்டு செல்ல அவள் அழுது அலறுதலோடு துக்கிப்பாளாயினாள். எ - று. (௩௬)

கலிவிருத்தம்.

மனைவா ழியகற் புவரம் பழிவான்
வினையா ரிதுகூ றுவிளைத் தனரால்

வனைவார் கழன்மன் னவர்வா ளரியே
றனையா யெதுசெய் தியறிந் திலனே.

(இ - ள்.) அரண்மனையில் வசித்துக்கொண்டிருக்குங் கற்பின்வரம்பு கெடு மாறு இத்தகைய துன்பம் நமக்குண்டாம்படி செய்தோர் யாவர்? நெடிய வீர கண்டாமணிதரித்து அரசர்களில் ஆண்சிங்கம் போல்வாரே! நீர் என்ன செய் கின்றீரோ? யான் அறிந்திலேன். எ - று. (௫அ)

பைவார் நிலமன் னர்பதம் பணியச்
செய்வார் கழலோ யெதுசெய் தொழிவாய்
மெய்வா ழுயிரென் னைவிடுத் தொருநீ
யுய்வா னுனதா வியுமுண் டுகொலோ

(இ - ள்.) அழகமைந்த பெரிய பூமியை யாளும் மன்னர்களெல்லாம் உமது பாதத்தைப் பணியச்செய்யும் பெரிய வீரகண்டாமணி யணிந்தவரே! என்ன செய்துகொண்டு காலத்தைக்கழிப்பீர், உமதுடலின் உயிர்போன்ற என்னைவிட்டு நீர் தனிமையாய்ப்பிழைக்கும் வகை உம்முயிரும் உள்ளதோ?

எரிமுன் னர்மணந் தனையென் னையெனக்
குரியா யிதுநா ளுயிர்போ லுளையா
லரிவா ழும்வனத் திலகற் றினையிப்
பிரிவா யபெரும் பிணிதந் தனையே.

இ - ள்.) ஓமாக்கினி முன்னிலையில் அடியாளைத் திருமணஞ்செய்தீர். எனக்குரியவரே! இன்று வரையில் என்னுயிர்போலிருப்பீர்! சிங்கங்கள் வாழுங் காட்டில் என்னை நீக்கிவிட்டீர். இந்தப் பிரிவாகிய நோயைத்தந்தீரே. எ - று.

வரைசேர் புயம்வை கலும்வை குறுமென்
கரைபோ யதுயர்க் கடல்கண் டிலையே
யுரவோ யெனுயிர்த் துணையே யுலகோ
ரரசே யெனையென் கொடயர்த் தனையே.

(இ - ள்.) உமது மலைபோன்ற தோள்களில் நாடோறுங் கூடியிருந்த எனது கரையில்லாத துக்க சாகரத்தைக் காணவில்லையோ! அறிவுள்ளவரே! உயிர்த்துணையானவரே! உலகத்தினர் அனைவர்க்கும் மன்னரே! அடியாளை யாது நிமித்தமாக மறந்துவிட்டீரோ? எ - று. (௬௧)

கொற்றக் குடைமன் னர்குலந் தொழவெண்
கற்றைக் கவரித் துணைகா லசைய
மற்றைத் தனியா சனம்வை குறுமுன்
வெற்றித் திறனெங் ஙன்விடுத் தனையே.

(இ - ள்.) வெண்கொற்றக் குடையையுடைய அரசவமிசத்தினர் பணிய வும், வெள்ளிய தொகுதியாகிய இரண்டு சாமரைகளுங் காற்றுவீசவும், அழகிய சமானமற்ற சிங்காசனத்தில் வீற்றிருக்கும் உம்முடைய வெற்றிப்பிரதாபத் தை எங்கே விட்டுவிட்டீர்? எ - று. (௬௨.)

என்னைப் புலவே டனெடுத் திடமற்
றுன்னைக் கொடுவே தனெளித் தனனோ
முன்னைப் பழவல் வினைமுற் றியதோ
மின்னொத் துவிளங் கிலவே லுடையோய்.

(இ - ள்.) அடியாளைப் புலைத்தன்மையுடைய வேடுவன் பற்றிக்கொண்டு போம்படி கொடிய பிரமதேவன் உம்மை மறைத்துவிட்டானே? பூர்வஜனனத்திற்செய்த ஊழ்வினை முற்றியதோ? மின்னலைப்போலப் பிரகாசிக்கும் தகட்டு வடிவான வேலாயுதந் தாங்கியவரே! எ - று. (௬௩)

சித்தத் துளிருந் துசிறந் தனநின்
றெத்தைக் கொடுதே றுவதென் றுணரேன்
முத்தத் தொடரோ டைமுகம் புரளு
மத்தக் களியா னைவயப் பரியோய்.

(இ - ள்.) அடியாள் மனதில் விசேடித்துத்தோன்றும் எண்ணங்களிலிருந்து எந்த எண்ணத்தினாலே தேறுதலடைவேன்? முத்துமாலையணிந்தவெற்றிப் பட்டயானது முகத்திற் புரளும் உன்மத்தமும் களிப்புமுடைய யானையையும் வெற்றி பொருந்திய குதிரையையுமுடையவரே! எ - று. (௬௪)

உன்னா டுபிறர்க் குளவா கவொழிந்
தென்னோ டுமிருஞ் சுரமெய் தினையென்
முன்னாள் வினையீ துமுடித் தனவான்
மன்னா வெனையெங் ஙன்மறந் தனையே.

(இ - ள்.) உம்முடைய நாடு பிறர்க்கு உரியதாகவும்; நீர் அந்நாட்டை விட்டு இப்பெரிய வனத்தில் என்னோடு அடைந்து வந்தீர். என் பண்டைக் காலப்பழவினைகள் இவ்வண்ணம் முடித்துவிட்டன. மன்னவரே! அடியாளை எவ்வகையாக மறந்துவிட்டீரோ? எ - று. (௬௫)

மயிலே களிறா டுமடப் பிடியே
குயிலே பெடையூ டுகுலக் கிளியே
பயில்கா னிடையா விபதைத் தனனா
லயில்வே லவரெங் ஙனறிந் திலிரோ.

(இ - ள்.) மயில்களே! ஆண் யானைகளுடன் விளையாடும் பெண் யானைகளே! குயில்களே! பெண் கிளியோடு ஊடல்கொள்ளும் நிறந்தங்கிய (பச்சைக்) கிளிகளே! நீங்கள் வசிக்கும் இவ்வனத்திலுயிர்பதைக்கின்றேன். கூர்மைதங்கிய வேலேந்திய எனது தலைவர் எங்குள்ளார்? நீங்களறியீர்களா? எ - று. (௬௬)

என்னப் பலபன் னியிரங் குறுவா
டன்னைக் கொடுபோ யதனிச் சவரன்
முன்னர்ப் புலிபா யமுடிந் தனனான்
மின்னொத் துநுடங் கிடைவே றுறுவாள்.

(இ - ள்.) என்று பலவாறு கூறி வருந்துபவளைக்கொண்டு சென்ற தனியாகிய வேடுவன், தனக்கு முன்னே புலிவந்து பாய இறந்தனன். மின்னல் போன்று ஒசிகின்ற இடையையுடைய அவ்விராஜபத்தினி தனியே இருக்கின்றாள். எ - று. (௬௭)

அற்கோ தையையா வியெடுத் தவனைக்
கொற்கூ னுகிர்வெம் புலிகொண் டணையப்
பொற்போ லுருவன் னவள்பொய்ம் மைபடாக்
கற்புண் மைநிகழ்ந் ததுகண் டனமால்.

(இ - ள்.) இருள்போன்ற கூந்தலையுடையவளை இச்சித்து அபகரித்த வேடுவனை, வலிதங்கிய வளைந்த நகங்களுள்ளகொடிய புலியை யுயிரொழித்துச் செல்ல, திருமகள்போல் அழகுவாய்ந்த அவளது அழியாத கற்பு நிலைமை விளங்கப்பார்த்தோம். எ - று. (௯அ)

இவளின் னணமெய் தவிகற் பகையைக்
கவருஞ் சுடர்வே லொருகா ளையனுன்
பவர்கொண் டபடப் பைவனஞ் சுழல்வா
னுவருண் டபசும் புலுலர்ந் தனையான்.

(இ - ள்.) இவள் இவ்வாறு இருக்க, வலிதங்கிய பகைவரைக்கொல்லும் ஒளி பொருந்திய வேலைத்தாங்கிய வொப்பற்ற குமாரக்கடவுளையொத்த புயபலன், நெருக்கமாகிய காட்டினையடுத்த நாட்டிலலைபவனுய் உவர் நீர் பருகிய பசும்புல் உலர்ந்தது போன்றவனுய். எ - று. (௯௯)

புனனா டுகுறும் புபுகுந் தடர
வனநா டியடைந் தவழித் தலைவாய்
மனையா ளையொர்வே டன்வலிந் துகொள்வான்
வினையே யிதுசெய் தனையே விதியோ.

(இ - ள்.) நீர் வளந்தங்கிய (எனது)நாட்டிற் குறும்பரசர்வந்து நெருங்க, காட்டை நாடிச்சேர்ந்த விடத்தில் முதலில் என் மனைவியை யொரு வேடுவன் பலாத்காரமாகப்பற்றிக்கொண்டு போக எனது தீவினையே இக்காரியத்தைச் செய்தனையே இது நீதியோ? எ - று. (௱)

இறவா வுயிர்பெற் றவெனக் கினிமற்
றுறவே துதவப் பயனுண் டுகொலோ
மறைநா வலரா சிவழுக் குறுமோ
வறமே துமெனக் கிலையா னதுவே.

(இ - ள்.) இறவாமல் உயிருற்றிருக்குமெனக்கினி வேறு சுற்றமேது? தவப்பலனுகிலுமுளதோ? வேதமுணர்ந்த பெரியோரது ஆசீர்வசனங்கள்தவறுமோ? யான் செய்த தருமமெதுவுமெனக்கு (இப்போது) இல்லையாயிற்றே.

பயில்கா னிடைவை கியபற் பலநா
டுயில்போ யொழியா ததுயர்ப் படுவான்
மயில்போ லியவால் வளையைப் பிரியா
வுயிர்போ யவுடம் பெனவொல் கினனுல்.

(இ - ள்.) (மிருகங்கள்) வசிக்குங்காட்டில் தங்கிய பல நாளாய் நித்திரை நீங்கி, நீங்காத்துயருற்ற புயபலன் மயில்போன்ற சாயலும், வெள்ளிய வளையலுமுடைய மனைவியைப்பிரிந்து உயிர்போன வுடம்புபோல வாடினுன்,எ-று.

தரவுக்கொச்சகக்கலிப்பா.

விலங்குபடு கொடுங்கானத் தொருதமியன் வேறுற்றுன்
பொலங்குழைழயி னடகருந்தப் பொருந்திலனு யுயிர்ப்பெறிவா
னலங்குநெடுஞ் சுடரிலைவே லன்னவனும் பசிவருத்த
நலங்கழிய விதர்ப்பநா டடையவந்து நணுகுற்றுன்.

(இ - ள்.) மிருகங்கள் மிகுந்த கொடிய வனத்தில் தனித்த வொருவனுய் வேறுபட்டுஅழகிய குழைதலையுடைய இலைக்கறிகளைத் தின்னப்பொருந்தவனுகி

பெருமூச்செறிகின்ற, அசைந்து வொளிவீசும் நெடிய தகட்டுவடிவான வேலைத் தாங்கிய அப்புயபலன், தன் வயிற்றிற் பசிநோய் வருத்தக் காந்தியழிந்து விதர்ப்பநாட்டிற்கேக வந்தடைந்தான். எ - று. (௭௪)

உற்றபெரு மாநகரத் துள்புக்கா னொருதமியேன்
பொற்றொடியை யிழந்தனமென் றுள்ளுயிர்க்கும் பொருமலான்
பெற்றபெரும் பசியலைப்ப நெடுமானம் பிறகிட்டான்
மற்றநகர்க் கடைத்தலைவா யிரந்திரந்து வயிறோம்பும்.

(இ - ள்.) அடைந்த பெரிய சிறப்புள்ள நகரத்திற் பிரவேசித்து, எளியேன் மனைவியை யிழந்துவிட்டேனேயென்று தன்னுள் பெருமூச்செறியத் தக்க துக்கமுள்ள புயபலன் தனக்குற்ற பெரும்பசிவருத்த, மிக்க மானத்தை யுற்று அந்நகரிலுள்ள வீடுகளின் தலைவாயிலிலிருந்து யாசித்துப் புசிப்பான்.

இரவாத மனையுழிச்சென் றிரந்தேற்றுந் தன்வயிற்று
விரவாத பசியுறுத்து மீக்கொளலு மற்றொருவர்
கரவாத கரவுணர்ந்து கரந்துபசி களைந்தனனாற்
பரவாத கழலரசர்ப் பணியுறுத்த படைவேலோன்.

(இ - ள்.) தன்னைப்பணியாத வீரக்கழல்தரித்த மன்னரைப்பணிகொண்ட வேற்படைதாங்கிய புயபலன், யாசிக்கத்தகாத வீடுகளிற் சென்று யாசித்துண்டும் தன் வயிற்றில் (அதுகாறும்) ஒருபோதுமில்லாத பசிவருத்தி அதிகரிக்கவும் வேறொருவருணரமுடியாத ஒதுக்கிடத்திருந்து ஒளித்துத்திருடியும் பசியைத்தணித்தான். எ - று. (௭௫)

மாணகரத் தவரவர்தம் மனைபுகுந்து கவர்தரலு
நீணகரக் கடுங்காவல் புரிந்துடையோர் நெறிதேர்ந்து
கோணுடைய கொடுமுடுக்கி னரணேறிக் குப்புறலும்
வாணிலவு படைத்தடக்கை யனையர்கண்டு வளைந்தனரால்.

(இ - ள்.) பெருமை தங்கிய அந்நகரத்தில் அவரவர் வீடுகள் தோறும் போய்த்திருடவும் அப்பெரிய நகரத்தைக்கடுங்காவல் செய்துள்ளவர்களாகிய வொளிவீசும் ஆயுதந்தாங்கிய பரந்த கையையுடைய காவலாளர் இவன் வருவழியுணர்ந்து, கோணலாயுள்ள வோர் மூலைவீதியின் மதிலிலேறி குதித்தவுடனே இவனைப்பார்த்துப் பற்றிக்கொண்டார்கள் எ - று. (௭௬)

பற்றிவலிந் திடையிழுத்துப் பாசத்தா லிருகரமுஞ்
சுற்றிவரிந் திறுக்கியந்தக் கருங்கங்கு றொலைந்தபின்னர்
முற்றரணப் புறங்கொடுபோய் முளரிபொருங் கரங்காலு
மிற்றுவிழ வரிந்தனராற் குருதிசொரிந் திடருழந்தான்.

(இ - ள்.) கையிற்பற்றிக்கொண்டு வொருபுறத்திலிழுத்துவந்து, கயிற்றினாலிருகைகளையுஞ் சுற்றி யிறுக்கிக்கட்டியந்த இருண்ட இரவு நீங்கிய (பொழுது வெடிந்த) பிறகு, அம்மதிலெல்லாங் கடந்து வெளியே கொண்டுபோய், தாமரைபோன்ற கைகளையுங் கால்களையுமறுந்து விழும்படி அரிந்தார்களானபடியால் உதிரம் பெருகித்துன்புற்றான். எ - று. (௭௭)

கைபார்க்கு மரிந்திட்ட கால்பார்க்குங் குருதிபட்ட
மெய்பார்க்கு மிதுவிளைத்த விதிபார்க்கும் வெய்துறுமால்

மைபார்த்த வரிநெடுங்கண் மயில்பார்த்த பொலஞ்சாய
னெய்பார்த்த கருங்குழலை நினைந்துநினைந் துயிர்ப்பெழுமால்.

(இ - ள்.) அறுக்கப்பட்ட கையைப்பார்ப்பான் காலைப்பார்ப்பான். உதிரம் படிந்த வுடலைப்பார்ப்பான். இவ்வாறு விளைவித்தவிதிப்பயனையும் பார்ப்பான். பெருமூச்சு விடுவான். மைதீட்டிய செவ்வரிபடர்ந்த நெடிய கண்களும் மயில் போன்ற வழகிய சாயலும் நறுமணத்தயிலம் பூசிய கரிய கூந்தலுமுடைய தன் மனையாட்டியை மிகவும் நினைந்து பெருமூச்சு விடுவான். எ - று. (௭௮)

பேரரசு புரிதருநாள் யானரியப் பிழைத்திலனே
னேரரசு பணிகேட்பத் தனிக்கவிகை நிழற்றினே
னோரறத்து முறைதிறம்பேன் மநுமுறையி னுயிர்புரந்தேன்
யாரிழைத்த பெரும்பாவ மெனக்கிதுவந் தெய்தியதே.

(இ - ள்.) (சக்கிரவர்த்தியாகிப்) பெரிய அரசினைச்செய்யுங்காலத்தில் யான் மனமாரக்குற்றஞ் செய்திலேன். என் போன்ற வரசர் பலரும் என் கட்டளையைக் கேட்கும்படி யொப்பற்ற சந்திரவட்டக்குடை நிழற்றினேன். ஒரு தருமத்திலும் விதிமுறை தவறிலேன். மனுமுறைப்படி யுயிர்களைக்காத்தேன். யார் செய்த பெரும்பாவத்தினால் எனக்கித்துயர் வந்தெய்தியது? எ - று. ()

கொள்ளாத முறைதிறம்பிக் கொண்டிலேன் குவலயத்து
நள்ளாத வலியரன்றி யெளியோரை நலிந்திலே
னெள்ளாத முதியோரை யிகழ்ந்துணரே னீங்கிதுநா
ளுள்ளாத வினைவிளைந்தா லின்னுமுயி ரோம்புவனோ.

(இ - ள்.) வாங்கத்தகாத வரியை நான்முறை தவறி வாங்கினேனில்லை. பூமியில் என்னைப்பகைத்த வலியோரையல்லாமல் எளியோரைத் துன்பு செய்தேனில்லை. இகழ்வில்லாத பெரியோர்களை யிகழ்ந்தறியமாட்டான். (இங்ஙனமாக) இக்காலத்தில் நாளொருபொழுது நினையாத துயரமுண்டாகில், இன்னுமென்னுயிரைக் காப்பேனோ? எ - று. (௮௦)

குலமுறையிற் பேரரசு குறும்புகொள்ள மணந்துகொண்ட
மலர்மகளை யொருவேடன் வலிந்துகொள்ள மாநகரத்
தலைகுருதி யெழுக்கரங்கா லறுப்புண்டேன் றனித்திகிரி
நிலனளித்த பேரரசி னெறிநன்றே நெறிநன்றே.

(இ - ள்.) வம்சபாரம்பரியமாயுள்ள பெரிய அரசுரிமையைக்குறுநிலமன்னர்கைக் கொள்ளவும், நாம் மணவினைசெய்த மலர் மகள்போலும் மனையாட்டியை யொருவேடுவன் பலாத்காரமாகக் கையைப்பற்றவும், இப்பெரியநகரத்தி லுதிர மொழுகக் கால்கள் அறுக்கப்பட்டேன். ஒப்பற்ற ஆக்கினைசக்கிரத்தினால் இப்பூமியையாண்ட பெரிய அரசின் முறை நன்றாயிருந்ததே! முறைநன்றாயிருந்ததே! எ-று. (௮௧)

என்றென்று பலபிதற்றித் தனிமறுகி யிடருழக்குங்
குன்றொன்று தோளானைக் குறுகினர்கண் மயங்கூரார்
வன்றுண்ட முடனரிந்தா ரில்லையென வற்புறுத்திக்
கொன்றுண்ட சினங்கதுவக் குப்புறுவான் குலவேந்தன்.

(இ-ள்.) என்றிவ்வாறு பலபடப் பிதற்றிக்கொண்டு தனியேவருந்தித்துன்பப்படும் மலைபோன்ற தோளையுடைய புயபலனைப் பார்த்து அவ்வூரார் மயங்கினவர்களாய் நெருங்கினார்கள். கழுத்தையும் அறுக்காமற்போனார்களேயென்று வலியமைந்து கொலைசெய்துகொள்ளத்தக்க கோபமதிகரிக்கப் புயபலன் தலைகவிழ்ந்துகொண்டான். எ-று. (அஉ)

காலழுகிக் கையழுகி முடைநாற்றங் கவர்ந்தபின்னர்
மேலெழுநல் வினையிருந்த கடைப்பிடியால் வேந்தற்கு
வேலெறிபுண் புலர்ந்துநெடு வீதிதொறு மிரப்புற்று
ஞலியபொற் கலத்தருந்து மவனோட்டி லருந்துவான்.

(இ - ள்.) காலழுகியும், கையழுகியும், முடைநாற்றஞ் சுற்றிக்கொண்ட பிறகு,அப்புயபலனுக்கு மேலேதோன்றிய புண்ணியபலன் கைகூடியகாரணத்தினால், வேலைச்செருகிய புண்ணைப்போல வருந்தி, பெரியதெருக்கடோறும் யாசித்தான். அகன்ற பொற்பாத்திரத்தி லுண்ணுமவன் ஓட்டிற் புசிப்பானான்.

இந்நகரத் தெருத்தலைவா யிரந்திரந்து நுகர்ந்திடுநாட்
டுன்னருங்கா னகத்திழந்த தூநிலாப் பனிமூரல்
பொன்னுருவங் கருகிமுன்னைப் பொலிவழிந்து போந்தனளா
லந்நகரத் திடைப்புக்கா ரிருவருமற் றறிவயர்ந்தார்.

(இ - ள்.) அந்நகரத்தின் தெருக்களில் அலைந்து யாசித்துப் புசிக்குநாளில், அடைதற்கரிய காட்டில் விட்டுப்பிரிந்த பரிசுத்தமாகிய சந்திரிகையை வீசும்குளிர்ந்த பற்களையுடைய திருமகள்போல்வாளது மேனிகருகி,பண்டைய வழகு நீங்கி வந்தனள். அந்த நகரத்திற் பிரவேசித்த (அவர்கள்) இருவரும் (ஒருவரையொருவர்) அறியாராயினர். எ - று. (அச)

ஆங்கவளும் பெரும்பசிதொட் டலைப்புறநின் றுற்றும
லோங்குதெருப் பெருமனையி னுட்புகுந்து கரந்திடவூந்
தூங்குகருங் குழலிவளைத் தொடர்ந்துகா வலர்பிடித்தார்
வீங்கிருளிற் பாசத்தால் விசித்திட்டார் விடிவளவும்.

(இ-ள்.) அவன் மனைவியும் பெரும்பசி தொடர்ந்து வருத்தப்பட்டுச் சகிக்கமாட்டாளாய்,உயர்ந்த தெருவில் பெரிய வொரு வீட்டினுள் மறைந்து புகுந்துவிடவும், அந்நகர்க்காவலாளர், தொங்குகின்ற கரிய கூந்தலையுடைய இவளைப் பின்றொடர்ந்து பிடித்து அம்மிக்க இருளில் கயிற்றால் கட்டி, விடியுமெல்லையுஞ்(சிறையில்)விட்டார்கள். எ - று. (அரு)

விடிந்தபொழு தெழுந்துநறை விரிமலர்ப்பூங் குழலாளைக்
கடிந்தகடுஞ் சினத்துறுக்கிக் கடிகாவற் புறங்கொடுபோய்
வடிந்தகுழை கொடிமூக்கு வனமுலையோ டரிந்தனரா
லொடிந்துவிழு மரம்போனின் றலறிநிலத் துறவீழ்ந்தாள்.

(இ - ள்.) பொழுது விடிந்தபிறகு எழுந்து தேனொழுகு மலரணிந்த அழகிய கூந்தலுடையவளைக் கடுங்கோபமுறுஞ் சொற்களாற் பயப்படுத்தி, பெரிய சிறைச்சாலையினின்றும்வெளியேகொண்டு சென்று தொங்கியகாதணி

யணிந்த அவளது நீண்ட மூக்கையும் அழகிய முலையையுமறுத்தார்கள். ஒடிந்து விழுந்தமரம் போலநின்று அலறிக்கொண்டு பூமியிற்பட வீழ்ந்தாள். எ-று.()

தேக்குயரு நெடுவனத்துக் கொலைவேடன் றீண்டியநா
ளாக்கழிவு தந்தேனென் னுளழிவு தந்திலனு
லாக்கியதண் புகழ்வேந்தே யுனைக்காணு மாசையாற்
போக்கியமூக் குடனிருக்கப் புலையாவி பொறுத்தேனே.

(இ - ள்.) தேக்கமரங்களுயர்ந்துள்ள பெரிய வனத்தில் கொலைத்தொழில் செய்யும் வேடுவன் என்னைத்தீண்டியபொழுது வீணே பிரலாபித்துவாய்போக்கினேன். என்னுயுளுக்கு அழிவு தேடினேனல்லன் குளிர்ந்த புகழை யுண்டாக்கிய அரசனே! உம்மைப்பார்க்கவேண்டிய விருப்பத்தினால் அறுக்கப்பட்ட மூக்கோடிருந்தாலும் என்னிழிவாகிய பிராணனைத் தாங்கினேன். எ-று.(அஎ)

ஒறுத்தாரை யொறுத்துமறத் துடனொழுகா தவ்வறத்தைக்
கறுத்தாரைக் கறுத்துநின்ற செங்கோன்மைக் கடனீதோ
வெறுப்பாய கடுஞ்சினத்தேன் வெம்முலையுங் கொடிமூக்கு
மறுப்பாருக் கெளிதுற்றே னெவ்வுழைக்கண் டறிவாயே.

(இ - ள்.) விரோதித்தவர்களை விரோதித்தும், தருமவழியிலொழுகாது அத்தருமத்தைக்கெடுத்தோரைத்தண்டித்தும்வந்த செங்கோன்முறைமையின் முடிவு இது தானோ? வெறுக்கத்தக்கதாகிய கொடுங்கோபமுடைய யான், வலிய முலையையும் நெடிய மூக்கையும் அறுக்கின்ற காவலாளர்க்கு எளியளாயினேன், என்னை எங்ஙனம் கண்டு அறிந்து கொள்ளுவீர்? எ - று. (அஅ)

இல்லரணுந் தனிக்குடையும் பகைவேந்தற் கீந்திறக்கும்
புல்லரணம் புரிந்தவிதிக் கதுகொண்டு போதாதோ
நெல்லரண நீர்நாட்டு நினைவணங்கா நிலவேந்தர்
வல்லரண மிடிபடுத்துச் செருக்கெழூமால் யானையாய்.

(இ - ள்.) நமது அரண்மனையையும், ஒப்பில்லாத வெண்கொற்றக்குடையையும் பகை மன்னருக்குக்கொடுத்து, வேண்டுகின்ற மஞ்சத்தைப்புல்லாகச் செய்த தலைவிதிக்கு அது வரையிற் போதாதாயிற்றோ? நெற்பயிர் வேலியுடைய நீர்வளமமைந்த நாட்டிலே, உம்மை வணங்காத பிறதேச மன்னரின் வலிய கோட்டைகளையிடித்து மதச்செருக்குற்ற பட்டத்து யானையுடையவரோ.

ஆடருவி நெடுவரையு மருவிகளு மருவிதுறுங்
காடளவு மாக்கயனிற் றனித்திரிந்துங் கண்டிலே
னேடணைந்தா யெனப்பரவி நனுகுற்றே னறவுயிர்க்கு
மேடவிழ்பூந் தெரியலாய் கடைமுறையீங் கிதுபெற்றேன்.

(இ - ள்.) அருவிதவழும் பெரிய மலைகளிலும் கான்யாறுகளிலும் அவ்யாறுகள் பாயும் நாடுகளெல்லாவற்றிலும், பெரிய கயங்களிலும் தனியாகத் திரிந்தும் உம்மைப்பார்த்திலேன். மணங்கமழும் இதழ்களோடு விகசித்த மலர் மாலை யணிந்தவரோ! இந்த நாட்டில் அடைந்திருப்பீரென அங்கிருந்து வந்து இங்கே சேர்ந்தேன். கடைசியாக இப்படி அவயவ பங்கமுற்றேன். எ - று. ()

ஏனையவெல் லாம்பிதற்றி யிருங்கூந்தல் புறஞ்சோர
மானனையா ளிருகரங்க ணிலத்துழாய் வரவிருந்து

தேனனைய கொழுங்குதலை வேறுபடத் தெருமந்தா
ளானபெருந் துயர்க்கடற்கோர் புணைகாணு தலமந்தாள்.

(இ - ள்.) (என்றிவ்வாறு) எல்லா மற்ற வற்றையுங்கூறி, நெடிய அளகமானது முதுகில் துவள, மான் போன்ற விழியையுடைய அம்மங்கை, தன்னிருகரங்களும் பூமியைத்துழாவ[உட்கார்ந்து, தனக்குற்ற]மிக்க துன்பக்கடலுக்கு ஓர் புணையின்றி வருந்தியவளாய், கேட்போர்க்குத் தேன்போலினிய நல்ல மழலைச்சொற்கள் மாறுபடப் பிரலாபித்தனள். எ - று. (௯௧)

இத்துயரம் பெரிதுழவாப் பசித்துயர மெரிமூட்ட
மெய்த்துயரத் துடனெழுந்து வீதிபுகுந் திரக்குறுநா
ளத்தெருவிற் புயபலனு மந்தணர்தந் தெருச்சார்ந்தான்
சுத்தமறை முழுதுணர்ந்த சுசீலன்கட் புறமடைந்தான்.

(இ - ள்.) இவ்வகைத்துன்பத்தால் மிகவும் வருந்தி, பசித்துயரானது தீப்போல உள்ளே கொளுத்த, உடற்றுக்கத்துடன் அங்கு நின்று வீதிவழி சென்று யாசித்துண்ணுங் காலத்தில், புயபலனும் அத்தெருக்களுக்குள்ளே அந்தணத்தெருவை யடைந்து, புனிதமானவேதங்களெல்லாவற்றையு முணர்ந்த சுசீலருடைய வீட்டின் புறத்தைச்சேர்ந்து. எ - று. (௯௨)

ஐயநீ சிறுகூழ்மற் றளித்தனையே லிவணுவி
யுய்வனே யெனவிரப்ப வோங்கருநான் மறைத்தலைவன்
செய்யநீற் றினையிகழ்ந்து செருக்குமநதத் திரைவேலி
வையம்யா வையும்புரக்கும் வங்கவேந் தினைப்போலும்.

(இ - ள்.) ஐயரே! தேவரீர் சிறிதுணவு உதவுவீராகில் இப்போது உயிர் பிழைப்பேனென யாசிக்க, உயர்ந்த வேதங்களுணர்ந்த தலைவராகிய சுசீலர், பூர்வத்தில், செவ்வையாகிய திருவெண்ணீற்றினை யிகழ்ச்சிசெய்து அகங்கரித்த சமுத்திரத்தை வேலியாகவுடைய பூமி முழுதும் அரசுசெய்த அந்த வங்க நாட்டரசன் போலிருக்கின்றது. எ - று. (௯௩)

என்றெண்ணி மனத்திலோர்ந் தியாவனீ யெனக்கேட்பக்
குன்றன்ன தடந்தோளா னஃதொன்றுங் கூறிலான்
மின்றுன்னு நூன்மார்பன் வியப்பெழுந்து விளம்புவான்
பொன்றுன்னுங் கழல்வங்கப் புயபலனீ போலுமால்.

(இ - ள்.) என்றெண்ணித் தமது மனதில் ஆலோசித்து, நீ யாவனெனக் கேட்க, மலைபோலப்பூரித்த தோளையுடைய புயபலன் அதற்குப்பதிலொன்றுஞ் சொல்லவில்லை. ஒளிமிகுந்த உபவீதமணிந்த மார்பினராகிய சுசீலர் ஆச்சரிய மிக்குக்கூறுகின்றார். பொன்னாற்செய்த வீரகண்டாமணி தரித்த வங்க நாட்டு மன்னனாகிய புயபலன் நீ போலிருக்கின்றாய். எ - று. (௯௪)

அகந்தெளிந்த மறையவர்க்கன் றருநிதிதா னம்புரிநா
ளுகந்துநின தருகியா முயர்தானம் பெறுமெல்லை
முகந்திருநீ றிலதென்று மொழிந்தனமெம் மொழிசீறி
யிகந்தனைநீ யல்லையோ வெனவுரைப்ப விகல்வேலோன்.

(இ - ள்.) உள்ளந்தெளிந்த அந்தணருக்கு அரும்பொருள்களை நீ தானஞ் செய்த அந்நாளில், யாம் மனவிருப்போடு உன்னிடத்தில் உயர்ந்த தானம்

வாங்குஞ் சமயத்தில், உன் முகத்தில் திருவெண்ணீறில்லையென்று கூறினோம். எமது அவ்வார்த்தையைக்கோபித்து வெறுத்தவன் நீயல்லையா வெனக்கூற, வலிதங்கிய வேற்படை தாங்கிய புயபலன். எ - று. (௬௫)

அருந்துயிலிற் கண்டகனா விழித்தபின ரறிவான்போற்
றிருந்தமனத் துணர்ந்தனனன் றுளவெல்லாஞ் சிந்தித்தா
னிருந்துயர மெய்தினமாங் கதனாலென் றெண்ணினான்
பொருந்துமறை யவனிருதாள் விழுந்திரந்து போற்றினான்.

(இ - ள்.) பெருநித்திரையிற்றோன்றிய கனவைத்தூக்கம் விழித்த பின்னர் அறிபவன் போன்று, திருத்தமுறத் தன்மனதிற் கவனங்கொண்டு, அக்காலத்தில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் எண்ணிப்பார்த்தும், அதனாலே தான் இவ்வகைக் கடுந்துயரெய்தினோ மெனக்கருதி, அச்சுசீலருடைய உபய பாதங்களிற் பணிந்து குறைகூறியாசித்துத் துதிசெய்தான். எ - று. (௬௬)

பொறுத்தருணீ யையவெனப் புன்கணீர் புறஞ்சோரக்
கறுத்ததிரு வுளமிரங்கக் கடவையெனக் கைகூப்பி
வெறுத்ததிரு வெண்ணீற்றால் விளைந்ததிந்த வினையென்றான்
பெறற்கருநான் மறைவேந்தே நின்னுரையும் பிழைக்குமோ.

(இ - ள்.) துக்கத்தினாற் கண்ணீர் வெளிப்பட்டொழுக, ஐயரே! தேவரீர் பொறுத்தருள்கவென்றும், அப்போது கோபமெய்திய திருவுள்ளம் இப்போது இரக்கப்பட வேண்டுமென்றும், இருகரங்களையுஞ் சிரமிசைக்குவித்து, ஒருவராலும் அடைதற்கரிய நான்கு வேதங்கட்குந் தலைவரே! தேவரீர் வார்த்தையுந் தவறுமோ? என்றும், அடியேன் அவமதித்த திருவெண்ணீற்றினாலே தான் இத்தகைத்துன்பங்கள் நிகழ்ந்தனவென்றுங் கூறினன். எ - று. (௬௭)

எனப்பலபட் டனவெல்லா மெடுத்துரைத்து வணங்குவான்
மனக்கருணை சிறிதுபுரிந் தளியவென்பால் வழங்குதியா
னினக்கபய மடைந்தனன்வெண் ணீறருள வேண்டுமெனச்
சினக்கதிர்நெட் டிலைவேலோன் செங்கரமொன் றேந்தினனால்.

(இ - ள்.) என்று பல்வேறுபட்டமொழிகளை மிகுதியாகக்கூறிப்பணிந்தவனாய், தேவரீர் திருவுள்ளக்கருணையிற் சிறிது, எளியேனாகிய அடியேன் பால் அநுக்கிரகிக்க வேண்டும். தேவரீருக்கு அடைக்கலம். இப்போது திருவெண்ணீறு பிரசாதித்தல் வேண்டுமென்று, கோபிக்கின்ற ஒளிதங்கிய நெடிய இலை போலும் வடிவமைந்த வேலைத்தாங்கிய புயபலன் சிறந்த தனதுகையை நீட்டினான். எ - று. (௬௮)

சுருதிநூன் முதற்றலைமைச் சுசீலனுள மிகவிரங்கி
வருதிநீ யெனவருளித் திருநீறு வழங்குதலு
மரசர்கோ னுடலடங்கப் பூரித்தா னக்கணத்திற்
குருதிபோக் குறவரிந்த கரத்தொடுகால் கூடியதே.

(இ - ள்.) வேதநூ லுணர்ந்த முதற்றலைமை பொருந்திய சுசீலர், தமது திருவுளத்தில் மிகவும் இரக்கமெய்தி, சமீபித்து வருகவென்று கூறி, திருவெண்ணீறு கொடுத்தவுடனே, அரசர்க்கரசனான புயபலன் உடலமுழுதும் புளகித்தான்; அப்பொழுதே இரத்தமொழுக அறுத்த கையோடு காலும் வளர்ந்தன.

அரிந்திட்ட கரங்கால்வந் தந்நிலையிற் கூடுதலும்
புரிந்திட்ட பேருவகை மீக்கொண்டு பொருமினான்
பரிந்திட்ட பெரும்பிணிபோய்ப் பண்டையினு மெழில்பெற்றான்
விரிந்திட்ட தாமரைபோல் விளங்கினவக் கரங்காலும்.

(இ - ள்.) அறுபட்ட கை கால்கள் வளரப்பெற்று அப்பொழுதே கூடியவுடன், விரும்பப்பட்ட பெருங்களிப்பு மிகுந்து பூரித்தான். துன்பப்படுத்திய பெருவியாதி யொழிந்து முன்னிருந்ததைக்காட்டிலும் அதிக அழகடைந்தான். அவனது கையும் காலும் விகசித்த தாமரை மலர்கள்போலப் பிரகாசித்தன.

பொங்கியநீற் றொளிபொதிந்த புல்லுருவம் புயபலற்கு
வெங்கதிரா யிரமிமைக்கும் பசுங்கதிர்போ லிலகமலர்ச்
செங்கமலத் தயனனையான் றிருவாயி லிவணிற்பக்
கொங்கையொடு மூக்கிழந்தா ளம்மறுகிற் குறுகினாள்.

(இ - ள்.) புயபலனுக்கு மிகுந்த திருவெண்ணீற்றின் காந்தி பொருந்திய அற்ப வுருவானது, வெவ்விய ஆயிரங் கிரணங்களோடு பிரகாசிக்கும் பாலசூரியன் போல் விளங்க, செந்தாமரையிலெழுந்தருளியிருக்கும் பிரமதேவனைப் போன்ற சுசிலர் திருமாளிகையின் வாயிலில் இவனிற்கும்போது, தனமோடு மூக்கு மறுபட்ட அவன் மனைவி அவ்வீதிவழியே யடைந்தாள். எ - று. ()

கண்டனளின் னுயிரனைய கொழுநனைத்தன் கண்களாற்
பண்டையினல் லுருப்பெற்று ளிவனென்னும் பரிவினளாய்
விண்டகுரற் போதிரப்ப விரைந்தலறி யடிவீழ்ந்தா
ளண்டரினு மெழில்பெற்று ளிவளாரோன் றையுறலும்.

(இ - ள்.) தன்னுடைய இனிய வுயிர்போன்ற கணவனைக்கண்களாற் கண்டாள். இவர் முன்னுளிலும் இப்போது நல்லழகுற்றுள்ளாரென்றும் விருப்புற்றவளாய்த் தன் வாயினின் றெழுங்குரலைக் காட்டிச்சென்று யாசிக்கும்படி அதிவிரைவாக அழுது அவன் பாதங்களிற் பணிந்தாள். தேவரினும் மிக்க அழகுற்ற புயபலன் இவள் யாவளென்று சந்தேகப்படவும். எ - று. (௧0௨)

இவ்வினையென் னெழில்கவர வெனையுணரா யானுனது
மைவரைத்திண் டோள்புணர்ந்த மாதவத்தே னிம்மறையோர்
தெய்வநீ றுதவிடிலென் செய்தபிழை தீர்வனெனப்
பெய்வளைநீ செய்தபிழை பேசுகெனப் பேசுவாள்.

(இ - ள்.)இத்தீவினையானது அடியாளழகைக் கிரகிக்க, என்னை யறியாமற் போனீர். அடியாள் கரிய மலைபோலும் வலிய உமது தோளைப்புணர்ந்திருந்த பெருந்தவமுடையாள். இவ்வந்தணர் தெய்வீகம் பொருந்திய திருவெண்ணீறு பிரசாதித்தால், பண்டு புரிந்த என் பாவ மகலப்பெறுவேனெனக் கூற, பெண்ணே! நீ யியற்றிய பாவத்தை யியம்புகவெனக்கேட்க, (அவற்றைச்) சொல்வாளாயினாள். எ - று. (௧0௩)

அரிசுமக்கு மாசனத்துத் தனியரசு செலுத்துநாட்
டுரிசறுத்த பெருங்குணத்திற் றென்மறையோர் தோன்றினார்
விரிதவளத் திருநீறு வேண்டலைநீ யிவர்போத
முரிதரும்பு மூக்கிழைத்துத் தும்மினேன் முடிவேனோன்.

(இ - ள்) நீர் சிங்கங்கள் சுமந்த ஆசனத்தில் வீற்றிருந்து ஒப்பற்ற அரசுரிமை நடாத்துங்காலத்தில், குற்றமொழித்த சிறந்த குணமுடைய பெரியோராகிய இவ்வந்தணர் வந்தனர். வெண்மை மிகுந்த விபூதியைத்தரிக்க நீர் தடுத்தமையால் இவர் திரும்பிப்போக, அடியாள் மேல் வருவது தெரியாமல், முரிந்த ஒரு துரும்பை யெடுத்து மூக்கில் திருகித்தும்மினேன். எ - று. (௧0௪)

அன்றிழைத்த மதச்செருக்கா லரசிழந்தோ மரசிழந்து
குன்றிழைத்த பெருங்கானாற் குறுகினேங் கொடும்பாவ
நின்றிழைப்ப வேருகி நீங்கினே னிற்காண்பா
னின்றிழைத்த நல்வினையொன் றிருந்தவா வெய்தினேன்.

(இ - ள்.) அப்பொழுது செய்த அகங்காரமாகிய செருக்கினால் அரசுரிமையை யிழந்தோம், மலைகள் நெருக்கிய பெருங்காட்டி லடைந்தோம்; யானியற்றிய கொடும்பாவம் நடுவே நின்று பிரிக்க, யான் வேறுபட்டுத் தனித்து நீங்கினேன்; உம்மைக்காணும்படி பண்டையநல்வினை யொன்றிருந்தபடியால் வந்தடைந்தேனென்று கூறினள். எ-று. (௧0௫)

ஆங்கவணின் றுரைத்தமொழி யறிந்தனனை யுறவொழிந்தான்
பூங்குழலா ளவட்கண்டு விழிபனிப்பப் பொருமினான்
றேங்கமழு நறுந்தெரியற் சிவபத்தையோ னுளநெக்கா
னீங்கிவர்க ணிலையோர்ந்தார் பாவமோ யிரங்காதார்.

(இ - ள்.) அவ்விடத்தில் அவளுரைத்த மொழிகளையறிந்து சந்தேக நீங்கினான். அழகிய கூந்தலையுடைய அவளை நோக்கிக் கண்ணீரொழுகத் துக்கப்பட்டான். மணம் வீசுஞ் சிறந்தமாலை யணிந்த ஆதிசைவவேதியராகிய சுசீலரென்பவர் இவற்றால் மனமுருகினர். இவர்கள் இருவருடைய பழையவரலாறுகளை யறிந்தவர்களெவர் தாம் துயரெய்தாதவர்கள். எ-று. (௧0௬)

வங்கவேந் தணிபுரிநூன் மறையோனை யடிவணங்கி
யெங்கணு யகமுழுது மிரங்குதியென் றிரந்தேற்பப்
பொங்கியவெண் ணீறவட்கும் புரிந்தனனப் பழமறையோன்
மங்கைதிரு வுருப்பெற்று மறையோனை வணங்கினாள்.

(இ - ள்.) வங்கநாட்டிறைவனான புட்பபலன் அழகிய பூணூல் தரித்த சுசீலருடைய பாதங்களிற் பணிந்து, எங்கள் தலைவரே! முற்றுங் கிருபை புரியவேண்டுமென்று குறைகூறிப் பிரார்த்திக்க, அச்சுசிலர் மிகப்பெருமையமைந்த திருவெண்ணீற்றை அவளுக்கும் பிரசாதித்தனர். அவள் இலக்குமிபோலும் அழகுவாய்க்கப்பெற்றுச் சுசீலரை வணங்கினள். எ-று. (௧0௭)

அந்நிலையி னீங்கிவர்கண் முன்னையுரு வடைந்தனரான்
மின்னிலைய முப்புரிநூன் மறையோனை வீழ்ந்திறைஞ்சி
நின்னிலையுற் றுணராது நீறிகழ்ந்தோ மிதுபட்டே
மின்னருளி னீறுதரித் தீங்கிதுபெற் றனமென்றார்.

(இ-ள்.) அச்சமயத்தில், அவ்விருவரும் பண்டையவடிவெய்தினார்கள். ஒளிதங்கிய உபவீதந்தரித்த அந்தணராகிய சுசீலர் பாதங்களிற் சாஷ்டாங்கமாக வணங்கி, தேவரீர் தன்மையை யோசித்துணராதவர்களாய்த் திருவெண்ணீற்றை யவமதித்தோம். அதனால் இத்தகைத் துன்பங்களனுபவித்தோம். தேவ

சீர் திருவருளால் திருவெண்ணீறு கொடுக்கத்தரித்து இப்பண்டையவடிவம் பெற்றோம் என்றார்கள். எ-று. (௧௦௮)

அந்தமா நகர்சிறந்தா ரதுநோக்கி யகமகிழ்ந்தார்
சந்தவார் தடநெடுந்தோட் டனிச்செங்கோல் விதர்ப்பர்கோ
னுந்துறுபே ருவகையுட னதுகேட்டங் குடனடைந்தான்
சிந்தைகூர்ந் தினிதுவந்து சுசீலரடி சென்னிவைத்தான்.

(இ - ள்.) அந்தச் சிறந்த விதர்ப்ப நகரத்தில் தகுதியுடையோரெல்லாரும் அதைப்பார்த்து மனங்களித்தார்கள். களபப்பூச்சணிந்து பரந்து நீண்ட புயங்களையும், ஒப்பற்ற செங்கோலையுமுடைய விதர்ப்பநாட்டரசன் இச்செய்தி கேட்டு, முன்னே யனுப்புகின்ற பெருமகிழ்ச்சியுடன் உடனே அவ்விடத்திற்குவந்து மனங்கசிந்து இனிமையோடு விரும்பிச் சுசீலருடைய பாதங்களைச் சிரமிசைச்சூடிக் கொண்டான். எ-று. (௧௦௯)

தேவரா யுறைந்தோரும் பல்லுயிர்க்குச் சிறந்தளிக்கு
மூவராய் நின்றோரு நீயாதி மூதுணர்ந்தோய்
பாவியேன் றிறம்பியதொன் றுளதெனினப் பழியொழித்துக்
காவல்பூண் டருளுதியென் றிரந்தனனக் கழல்வேந்தன்.

(இ - ள்.) அப்படிப்பணிந்த வீரகண்டாமணி தரித்த விதர்ப்ப நாட்டரசன், பேரறிவாளரே! தேவர்களாயுள்ளவர்களும் பல சீவராசிகளுக்குச்சிறப்போடு வரங்களுதவுந் திரிமூர்த்திகளாயுள்ளவர்களும் தேவரீரே யாவீர். பாவியாகிய அடியேன் யாதாயினும் தவறிய துண்டானால் அப்பாவத்தையும் நீக்கி அடியேனையுங்காத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். எ-று, (௧௧௦)

கனைகழற்கா லினனின்ற தனிச்செங்கோற் காரேறு
துனைபரித்தேர்த் தானையனெம் மாதுலனிற் றோன்றினு
னினையனையொற் றரையேவி யெவ்வுலகுந் தேடினே
னனையவர்தங் கட்புலத்தி னெய்தாமை யடைந்தனரால்.

(இ - ள்.) ஒலிக்கின்ற வீரக்கழலணிந்து நிற்பவனும், விரைந்து செல்லுங் குதிரை பூட்டிய தேரையும் சேனையையுமுடையவனும், ஒப்பில்லாத செங்கோல் தரித்தவனும், கரிய மேகம்போன்ற கொடையாளியுமாகிய இவன், அடியேனுக்கு மருமகனாக வந்தவன். இவனுக்காகத் தூதுவரையனுப்பி எந்நாட்டிலுந் தேடிப்பார்த்தேன். அவர்கள் பார்வைக்குத் தோன்றாமையால் திரும்பி வந்து விட்டார்கள். எ - று. (௧௧௧)

அந்தணரின் றிருவருளா லிந்நகர மடைந்தனனுன்
முந்தையுடைக் கவினொடுநின் னருள்பெற்று னெனமொழிந்தச்
சந்தநெடும் புயபெலனை யுறவணைத்துத் தழீஇக்கொண்டு
புந்திமகிழ்ந் தனையோனைத் தேவியொடுங் கொடுபோனான்.

(இ - ள்.) அந்தணரே! இந்த நகரத்திற்குத் தேவரீர் திருவருளால் வந்து சேர்ந்தான். அல்லாமலும், பண்டிருந்த தேக வழகுடனே தேவரீர் திருவருளையும் பெற்றுக்கொண்டானென்று சொல்லி, களபப்பூச்சணிந்த நெடிய புயங்களையுடைய புயபலனை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு, மனக்

களிப்புற்றவனாய், அவனை அவன் மனைவியோடு அழைத்துக்கொண்டு சென்றான், எ - று. (௧௧௨)

மழையாடு மதிற்கோயின் மண்டபத்தி னரியணைமேற்
குழையாடு முகத்தியொடு மினிதிருத்திக் குலவேந்தன்
றழையாட கத்துடுக்கை முதலவெல்லாந் தந்தளிப்ப
விழையாடு தடம்புயத்தான் சிலவைக லவணிருந்தான்.

(இ - ள்) மேகந்தவழும் மதில்களையுடைய அரண்மனையிலுள்ள மண்டபத்திலிருக்குஞ் சிங்காதனத்தின்மேல், காதணியசையும் முகமுடைய அவன் மனைவியோடும் இனிமையாக விருத்தி, அவ்விதர்ப்ப நாட்டரசன் விசேடமான பீதாம்பரங்கள் முதலிய எவையுங்கொடுத்தாதரிக்க, ஆபரணங்கள் விளங்கும் பரந்த தோளையுடைய புயபலன் சில காலம் அங்கேயே இருந்தனன். எ - று.

இப்பரிசிங் கிவணிகழ்ந்த திவணிருந்த புனனாட்டை
யொப்பருமன் னவர்கொண்டா ரவரையொழித் தோரரக்கன்
செப்பரிய கொடுங்கோன்மை செலுத்தினா னதுகேளா
வெப்பெழுந்த வெகுளியினான் விதர்ப்பநாட் டிகல்வேந்தன்.

(இ - ள்.) இவ்வாறாக இங்கே நடந்தது. இப்புயபலன் அரசு செய்து கொண்டிருந்த நீர்வள மமைந்த வங்க நாட்டை முதலிலே ஒப்பு சொல்லுதற் கரிய அரசர்கள் கைப்பற்றினார்கள். வேறோர் அரக்கன் அவ்வரசரை யகற்றி, ஒருவராலுஞ் சொல்லமுடியாத கொடுங்கோலரசு செலுத்தினான். அதனைக் கேள்விப்பட்ட கடுங்கோப மெய்தியவனாகிய விதர்ப்ப நாட்டையாளும் வலி தங்கிய மன்னவன். எ - று. (௧௧௪)

புயபெலனுக் கடுகளிறுங் கொய்யுளைய புரவிகளும்
வயவரொடு நெடுந்தானை மன்னவரு மளவொழிந்த
கயவளக்க ரோரேழு மொன்றுபடக் கலந்தவெனத்
துயல்வருகார்ப் படையனிகத் தொகைநிரப்பிச் சொல்லுவான்.

(இ - ள்.) புயபலனுக்கு, கொல்லத்தக்க வலியயானைகளும், கத்தரித்தபுறமயிருடைய குதிரைகளும், போர்ச் சேவகரோடு பெருஞ் சேனையுடைய அரசர்களும், அசைந்து செல்லத்தக்க காலாட்களுமாகிய இவற்றை, அளவில்லாத ஆழமுள்ள சத்தசமுத்திரங்களும் ஒன்றாய்க்கூடின வென்று சொல்லும்படி அனிகமென்னுங் கணக்காகத்தொகுத்துக் கொடுத்தான். எ-று.

அனிகம் என்பது மூன்று சங்கத்தின் தொகை. சங்கம்—நூறுகோடி யெனவழங்கும். (௧௧௫)

எம்முடைய பெருஞ்சேனை யுடனேகி யிகலரக்கன்
வெம்முனையி னெதிர்நடந்து போர்மாய விளித்துன்று
செம்மைதரு தனிச்செங்கோல் செலுத்துகவென் றேயினான்
பொம்மெனநின் றெழுஞ்சேனை குறித்தவனும் பூரிததான்.

(இ - ள்.) என்னுடைய இந்தப் பெருஞ்சேனையோடு சென்று, பகைத்த அரக்கன் செய்யுங் கொடிய யுத்தத்திலெதிர்த்து, அவன்யுத்த மழியும்படிமடித்து, பண்டுபோல உன்செங்கோலைச் செலுத்தக் கடவையென் றனுப்பினான்.

பொம்மென்னும் சத்தத்தோடுகூடிப்புறப்பட்ட சேனையைப்பார்த்துப் புயபல னும் மனமகிழ்ந்தான். எ - று. (ககசு)

கலிநிலைத்துறை.

புரைசெய் மாகளிறு கோடியிரு பொங்க ருவிதாழ்
வரைசெய் தன்னவை நிரைந்தன வயப்பு ரவியுந்
திரைசெய் வாரிதி யெனச்சிலவு கண்டு செறியக்
கரையெ டுத்தபுற வாழிபொரு சேனை கஞல.

(இ - ள்.) [புரைசெய்] கழுத்தணி கயிற்றையுடைய பெரியயானைகள் கோடி பெரிய அருவிகளொழுகுகின்ற மலைகள்போல் வரிசையாக நடந்தன. விரைந்து செல்லுங்குதிரைகளும் அலையோடு கூடியகடலெனச் சொல்ல உலா விக்கொண்டு நெருங்க, கரையற்ற பெரும்புறக்கடல்போன்ற காலாட்சேனை விளங்க. எ-று. (ககஎ)

வாசி யெண்டிசை குலுக்கிடு சிரிப்பு வயவெங்
காய்சி னக்களிற திர்ந்திடு மதிர்ச்சி கதுவும்
பூச லஞ்சிலையி னொலி புடைக்கு முரசோ
டாசை கொண்டுகக னந்தொட நிமிர்ந்த வமலை.

(இ - ள்.) எட்டுத்திக்குக்களையும் குலுக்குகின்ற குதிரைகளின் கனைப்பும், வெற்றிதரும் கடுங்கோபமுடைய யானையின் அதிர்கின்ற கர்ச்சனையும், யுத்தஞ் செய்தற்கு வரிந்திருக்கும் அழகிய வில்லின் குணத்தொனியும், மோதுகின்ற பேரிகைத்தொனியுடனே கூடிய இவ்வோசைகள் திசைகளில் நிரம்பி ஆகாயம் வரையில் உயர்ந்தன. எ - று. (ககஅ)

மீயொ ளிக்கதிர் பதைத்திட விதிர்த்த வடிவாட்
சேயொ ளிப்பொறி மிடைந்தன தெறித்த திசைபோய்
மாயி ருட்படல நக்கின வயத்த வருரப்
பாய வெண்டிசை யடைத்தன வெடித்த தவனி.

(இ - ள்.) அதியுயரத்தில் பிரகாசிக்கின்ற சூரியகிரணங்கள் பதைக்கும் படி வீசிய வடித்தவாட்படையின் செவ்விய ஒளிப்பொறிகள் நெருங்கினவாய்ச் சிதறுண்டன. திசைகளிலெல்லாம் பரவிப்பெருத்த இருட்படலத்தை யகற்றி விட்டன. வீரர்களின் கர்ச்சனை அஷ்டதிசைகளையுஞ் செவிடுபடுத்தின. பூமி வெடிபட்டன. எ - று. (ககக)

இன்ன சேனைகொ டெழுந்தன னெழுந்து கணிநூல்
சொன்ன போதொடு சுசீலனை யெழுந்து தொழுதா
னன்ன வன்றருவி பூதிநுதல் கொண்ட னனணிக்
கன்னி மாநக ரொழிந்திடை கடந்து புகுவான்.

(இ - இ.) இவ்வகைச்சேனையோடு வெளிப்பட்ட புயபலன், சோதிட நூலிற்சொல்லிய முகூர்த்தத்திற் சுசீலரைவணங்கி, அவராலளிக்கப்பெற்ற திருவெண்ணீற்றினை நெற்றியில் தரித்துக்கொண்டு, காவலோடுகூடிய அழக மைந்த சிறந்த விதர்ப்பநாட்டை விட்டு இடையிலுள்ளவழிகளைத் தாண்டிச் செல்கின்றான். எ - று. (கஉo)

வெய்ய சேனைகொ டுடன்புகு விசித்ர தரனை
யைய நிற்றியென வன்பினொடு புல்லி யகலா
வொய்யெ னக்கடி தெழும்படையொ டேகி யொலிநீர்
மொய்கொள் வேலிபடு தன்னகர முன்ன நிருதன்.

(இ-ள்.) வலிய சேனையை யழைத்துக்கொண்டு உடன்சேர்ந்துவந்த விசித்திரதரனென்போனை, ஐயா! நீ நிற்க வென்று அன்போடு தழுவிப்பிரிந்து அதிகவிரைவோடு வேகமாக ஒலிக்கின்ற நீர் நிறைந்த வேலியையுடைய தனது வங்காநாட்டையடைய, இராக்கதன். எ - று. (௧௨௧)

வன்ப டைத்தலைவ ரைக்கடி தவம்மி னெனலு
மின்ப டைக்குலமொ டண்மினர் வெகுண்ட திறலோ
ரன்ப டைத்தறிவி லார்முரண டைத்த கொடியோர்
துன்ப டைத்துயிர்க ளுக்குறுது னுக்க மிடுவார்

(இ - ள்.) வலிதங்கிய சேனைத்தலைவர்களை விரைவில் வரக்கடவீரெனச் சொல்லவும், கோபங்கொள்ளும் வலிதங்கியவர்களும், அன்பின் வழியடைந்த மதியினர்களும் மாறுபாடு நிறைந்த தீயோர்களும் துன்பத்தைப்பெருக்கி ஆன்மாக்கட்குப் பொருந்திய நடுக்கமுண்டு செய்பவர்களுமாகிய வீரர்கள், பிரகாசிக்கின்ற ஆயுதங்களோடு அங்கடைந்தார்கள். எ - று. (௧௨௨)

வெள்ள வெம்படை மிடைந்தொரு வழிப்பு குதரத்
தள்ளில் வாளரவ நந்தன்முடி தட்ட ழிவதாற
கள்ள வெஞ்சின வரக்கன்விழி கக்கும் வடவை
யொள்ளெ ரிப்பொறி கலித்தது சலித்த துலகம்.

(இ - ள்.) பெரிய வெள்ளக்கணக்காகிய சேனைகள் நெருங்கி ஓரிடத்திற் சேர்ந்ததனால், யாவராலும் விலக்கற்கரிய ஒளிதங்கிய சர்ப்பமாகிய ஆதிசேடன்பணமுடி தமொற்ற மடைகின்றது. கள்ளத்தன்மைபொருந்திய கடுங்கோபமுடைய அவ்வரக்கன் விழிகள் கக்குகின்ற வடவாக்கினியானது பிரகாசந்தங்கியநெருப்புப்பொறி யொலித்தது. உலகமுழுவதும் சலித்தது. எ-று.

கோல முத்தலை யயிற்படை யெடுத்த னர்கொடுங்
கால சக்கர மெடுத்தனர் கதைப்ப டையொடு
நீல மைக்கட னெருப்பொடு முருத்து திமிரு
மால மொத்தன ரரக்கனுரு மொத்த திருவான்.

(இ - ள்.) அழகிய முத்தலைச் சூலத்தையெடுத்தார்கள். கொடுமைசெய்யத்தக்க காலசக்கிரத்தை யெடுத்தார்கள். கதாயுதத்தோடு நீலம்போலுங் கருநிறமமைந்த சமுத்திரத்திலுள்ள வடவாக்கினியோடு கர்ச்சித்தோங்கிய ஆலகாலத்தை யொத்தார்கள். அதுகண்டு அரக்கனவன் இடியென்று சொல்லக் கர்ச்சித்தான். எ - று. (௧௨௪)

எழுவு சேனைபுடை கொண்டன னெழுந்த னனெழுந்
தொழுகு சேனைறி படர்ந்தன னுடற்ற நினைவான்
மஞ்சுமு ழக்கெழ விதர்ப்பர்படை மண்டி யெழலு
முழைவ யப்புலியெ னச்சினவ ரக்கன் முனிவான்.

(இ - ள்.) எழுகின்ற சேனைகள் புடைசூழ வெளிக்கொண்டுவந்து, ஒழுங்காக அதிதூரஞ் சென்று போர்செய்யக்கருதுகையில், விதர்ப்பநாட்டரசன் சேனைகள் மேகம்போலொலித்து நெருங்கிவரவும், கோபமுடைய அவ்வரக்கன், குகையிலிருக்கும் வெற்றியமைந்த புலிபோலக்கோபிக்கின்றான். எ - று.

வில்லும் வேல்களு மிடைந்தன மிடைந்து விரவக்
கல்லெனா லிப்பட வெழுங்குருதி கானி மிரவோர்
வல்லெ யிற்றாங்கிரு தன்கறுவி வங்க விறைமேற்
செல்லு றத்திருவெ ணீறரச னெற்றி திகழ.

(இ - ள்.) வில்லும் (வில்லும்) வேலும் (வேலும்) நெருங்கின. அப்படி நெருங்கிக் கலத்தலால் கல்லெனும் ஒலியுண்டாகப் பெருக்கெடுக்கும் உதிரம் வாய்க்கால்போன்றோட, ஒப்பற்ற கடியபற்களையுடைய அரக்கன் அடங்காக் கோபமுற்று, வங்கநாட்டரசன் மேல் எதிர்த்துச்செல்ல, திருவெண்ணீறு அப்புயபலனுடைய நெற்றியிற் பிரகாசிக்க. எ - று. (கஉசு)

கண்ட னன்றிருவெ ணீறருள் கனிந்து ருகினான்
மண்டு சேனையை விலக்கினன் மதித்த னன்மனக்
கொண்ட காதலினெ டுத்திருகை யுச்சி குவியாத்
தொண்ட னென்றுதனி சென்றனன்வி ழுந்து தொழுதான்.

(இ - ள்.) (புயபலன் நெற்றியில்) திருவெண்ணீற்றினைக் கண்டான். கனிவுற்று மனமுருகினான். நெருங்கிவந்த சேனைகளைத் தடுத்துவிலக்கினான், தன்மனத்திலுண்டான பேராசையால் இருகரங்களையும் உச்சியிற் கூப்பி, தானே தனியாகச்சமீபித்து, யான் உமதடிமை என்றவன் பாதங்களிற் சாஷ்டாங்கமாக வணங்கினான். எ - று. (கஉஎ)

வங்க மன்னவநி னைப்படவ ளைந்து மறலி
பொங்கு செங்குருதி நுங்குதல்பு ரிந்த புலையே
னிங்கு நின்னையெதிர் கொண்டுறலு மென்பு ருகினே
னெங்க ளையகபு குந்தபரி சென்கொ லுணரேன்.

(இ - ள்) வங்கநாட்டரசனே! உம்மைக்கொல்லச் சூழ்ந்து, இயமன்விசேடித்த செவந்த உதிரங்குடிக்க விரும்பிய புலைத்தன்மையுடைய அடியேன் இங்கு உம்மை நேரேகண்டமாத்திரத்தில் என்புகள் நெக்குவிட்டுருகினேன்; எங்கள் இறைவரே! எனக்குண்டாய விதம்யாதோ? அறிகிலேன். எ - று. ()

வன்றொ ழிற்புலைய ரக்கர்குல மன்னி யவெனக்
கின்று நிற்றொழுது தெய்வவுரு வெய்தி யதுவென்
புன்றொ ழிற்றுக ளெவ்வுழைபு குந்த தணரோ
னென்ற டிக்கடிவ ணங்கினனெ ழுந்து பணிவான்.

(இ - ள்.) கொடுந்தொழிலும் புலைத்தன்மையுமுடைய அரக்கர் குலத்திலுதித்த அடியேனுக்கு, இன்று தேவரீரை வணங்கியமாத்திரமே தெய்வதேகமுண்டாய தென்னகாரணம்? அற்பத்தன்மைவாய்ந்த தொழிலாகிய என் கொடுமைகளெல்லாம் எங்கேசேர்ந்தனவோ அறிகிலேன் என்று, அடிக்கடி தண்டாகாரமாக வணங்கியெழுந்து கைகுவித்தான். எ - று. (கஉகூ)

அன்ன தன்மையனை யன்புருகி வங்கர் பெருமா
னின்ன தன்மையிது வென்னையென நின்ற திசயித்
துன்னை யுள்ளபரி சோர்சிறிது முற்று ணர்கிலேன்
முன்னை யூழ்முறைமொ ழிந்திடுதி யென்று மொழிய.

(இ - ள்.) அத்தகையினனாகிய அரக்கனிடத்தில், வங்கநாட்டரசனான புயபலன் அன்பால் மனமுருகி, இஃதித்தன்மையால் உண்டாயிற்றென்றுணராது யோசித்து வியந்து நின்று, உன்னுடைய உண்மையான தன்மையிது வென்று சிறிதும் யோசித்தறிந்திலேன். உன் பூர்வசன்மத்தின் விதியைச் சொல்லவேண்டுமெனக் கேட்ப. எ - று. (கரு௦)

கால முற்றியது காய்சினவ ரக்கர் தறுகட்
சீல மற்றதுன சேவடிதெ ரிந்த பொழுதே
மூல முற்றனவ னைத்துமடி தொட்டு மொழிவே
னேனு நின்னகரெ ழுந்தருடி யென்று தொழுதான்.

(இ - ள்.) தேவரீர் திருவடிகளைத்தரிசித்த மாத்திரத்திலேயே அடியேனுக்கு நற்காலம் பிறந்தது. கடுங்கோபமுள்ள அரக்கர் குலத்திற்கடுத்த குரூரத்தன்மைகள்விலகின. எனக்குப்பூர்வத்தில் விளைந்த எல்லாக்கொடுமைகளையும் முதலுமீறுமாக மொழிகின்றேன். தேவரீர்க் குரித்தான வங்கநாட்டிற்கு எழுந்தருள்கவென வணங்கினன். எ - று. (கருக)

இருவ ழிப்படுமனீகமுமெ ழுந்த திரைநீ
ரொருவ ழிக்கொடுநி மிர்ந்ததென வுற்று மிடையப்
பொருகொ டித்திரண்மு கிற்றொடநி வந்து பொதுளுந்
திருந கர்த்தனது கோயிலுறை சென்று திகழ்வான்.

(இ - ள்.) இருதிறப்பட்டசேனைகளும், அலைவீசுகின்ற கடனீர் ஒருவழிக்கொண்டு பரந்ததெனச்சொல்லும்படி சேர்ந்து நெருங்க, மோதுகின்ற கொடிக்கூட்டங்கள் மேகமண்டலத்தையளாவ, ஓங்கிப்பிரகாசிக்கும் அழகிய தன் நகரிலுள்ள அரண்மனைக்குப் போய்வசித்தான். எ - று. (கருஉ)

கலிவிருத்தம்.

அன்ன வற்கன் றரக்க ருருவொரீஇப்
பொன்னு ருக்கொண் டிலங்கும் பொலிவினான்
மன்னு சோதிடஞ் சொற்ற வரன்முறை
முன்னை நாளின் முடிபுனைந் தானரோ.

(இ - ள்.) அப்புயபலனுக்கு, அரக்கர் வடிவகன்று பொன்போலுந்திருவுருவமைந்து விளங்கும் பொலிவையுடைய அவன், நிலைபெற்ற சோதிடநூலிற் சொல்லிய முறைப்படியாகவே, அரசர்கள் ஆதிகாலத்தில் முடி சூட்டுவதுபோல முடி சூட்டினான். எ - று. (கருங)

தூய மாமுடி சூட்டிய பின்னரி
னைய தன்னிலை யன்னர்க் கறைகுவான்
மேய மேற்றிசைக் காப்புடை வேந்தன்யான்
மாயி ரும்புவி காக்கும் வருணனே.

(இ - ள்.) புனிதமாகிச் சிறந்த மகுடாபிஷேகஞ் செய்தபின்னர், தன் பூர்வவரலாற்றினைப் புயபலனுக்குச் சொல்லுவான்: யான் மேற்றிசையை அரசுசெய்யும் மன்னனாய் மிகப்பெரிய இப்பூலோகத்தைக்காக்கும் வருணனாகும். (என்றறிக) எ - று. (௧௯௪)

என்ன தாகிய நாட்டை யெறுழ்வலி
மின்னெ யிற்று நிருதர் விளித்தனர்
துன்ன மர்க்குத் தொடங்குவ னேவலர்
கன்ன லொன்றிற் கரப்பர் கருங்கடல்.

(இ - ள்.) என்னுடையதாகிய நாட்டை, மிக்கவலிமையையும் ஒளிதங்கிய பற்களையுடைய அரக்கர் அழித்தார்கள். அவர்களோடு நெருங்கியுத்தத்திற்குத் தொடங்குவேனானல், அவ்வரக்கர்கள் ஒருநொடிப்பொழுதில் கரிய கடலுள்ளே ஒளித்துக்கொள்வார்கள். எ - று. (௧௯௫)

நாளு நாளுமென் னொடு நலிந்திட
வாளெ யிற்று நிருதர்செய் மம்மராற்
கோளி ழைத்த குறிப்பிற் குலிசப்புத்
தேளி ருக்குந் திருநக ரெய்தினேன்.

(இ - ள்.) நாடோறும் என்னொடு அழிவுறும்படி, வாள்போற்கூரிய பற்களையுடைய அரக்கர்செய்யுந் துன்பத்தினால், கொள்கையமைந்த குறிப்போடு, வச்சிராயுதந்தாங்கிய இந்திரன்வசிக்குந் தேவலோகத்திற்குச் சென்றேன். ()

நான நாண்மலர்க் கற்பக நாறிய
மான நீழன் மடங்க லிருப்பிட
ரான செம்பொ னவிர்மணி யாசனத்
தூன மின்றி விளங்கிய வும்பரின்.

(இ - ள்.) கஸ்தூரிபோலும் அன்றலர்ந்த கற்பகமலர்கள் வாசனைவீசும் பெருமைதங்கிய நிழலிலே, சிங்கத்தின் பெரியமுதுகிற் பொருந்தியுள்ள பசும்பொன்னாற்செய்து பிரகாசிக்கும் இரத்தினபீடத்தில், கெடுதலின்றிவிளங்கும் உச்சியில். எ - று. (௧௯௭)

கண்ணொ ராயிரந் தாமரை காட்டிட
வண்ண மேகலை மங்கையர் சூழ்தரத்
தண்ணா றுமலர்த் தண்பணைக் கற்பகத்
தெண்ண றுநுண் டிவலை தெறிப்பவே.

(இ - ள்.) ஆயிரங்கண்களும் (ஆயிரம்) தாமரைபோலப் பிரகாசிக்கவும், பலநிறத்தோடுங் கலந்த மேகலாபரணமணிந்த மங்கையர் புடைசூழவும், குளிர்ச்சியகலாத பூக்களையுடைய கிளைகளமைந்த தடப்பமாகிய கற்பகமலர்களின் தெளிந்த தேனின் சிறுதுளிகள் தெறிக்கவும். எ - று. (௧௯௮)

பன்னி றக்கதிர்க் காசு பரப்பிய
மின்னி றக்கதிர்க் கற்றை விரவலாற்
றுன்னி றச்சுடர் மாமுடி யன்னவன்
வின்னி றச்சுடர்க் கற்றை விழுங்கவே.

(இ - ள்.) பல நிறந்தங்கிய கிரணங்கள் பொருந்திய பொற்காசு வீசுகின்ற மின்னல் நிறம்போன்ற ஒளிக்கூட்டங்கள் கலத்தலால், அவ்விந்திர னுடைய பழமையான நிறத்துடன் கலந்த ஒளியமைந்த சிறந்த கிரீடத்தின் இந்திர வில்லின் நிறம்போன்ற ஒளிக்கூட்டங்கள் மழுங்கவும். எ - று.

பூசற் றும்பி புலம்பிய மென்குழ
லாசைச் சிந்தைய ரம்பையர் சாமரை
வீசக் கற்றை விரிந்தெழு தென்றலின்
வாசக் கற்பக மாலை துயல்வர.

(இ - ள்) போர்செய்யும் வண்டுகளொலிக்கின்ற மெல்லிய கூந்தலையுடைய, யாவர் மனதிலும் ஆசையை யுண்டுசெய்யும் அரம்பாஸ்திரீகள் சாமரையிரட்டவும்,அச்சாமரைத்தொகுதியால் மிகுதியாயுண்டாகும் தென்றற் காற்றினல் மணங்கமழுங் கற்பகமலர்மாலை யசையவும். எ - று. (க௪௦)

மழலை வானவர் மங்கையர் நல்லியா
ழெழுந ரம்பி னணிவிர லெற்றுழி
யொழுகு பாட லிருசெவி யூடுபுக்
கிழுகு தோறு முவகை யெடுப்பவே.

(இ - ள்.) மழலைச்சொற்களைப் பேசுந் தேவமாதர்கள் நல்ல வீணையினிடத்திலுள்ள நரம்புகளேழையும் விரல்களினுற்றடவுதலாலுண்டாகும் பண்பாடல்கள்,தன்னிருசெவிகளிற் புகுந்தூறுந்தோறும் பெருங்களிகொள்ளவும்.

முல்லை மூரன் முருக்கிதழ் மங்கையர்
கல்லெ னச்சிறு தண்டை கலிப்புறப்
பல்ல வப்பதம் போதொறும் பாடிய
மெல்லி சைக்கிளை பொம்மென விம்மவே.

(இ - ள்.) முல்லை யரும்புபோன்ற பற்களையும், முருக்கம் பூவைப்போன்ற இதழையுமுடைய அத்தேவமாதர்கள், சிறு தண்டைகள் கல்லென வொலிசெய்யத் தளிர்போன்ற தமது பாதங்களைப் பெயர்க்குந்தோறும் பாடிய மிருதுவான இசைகளின் கிளைகள் பொம்மென்று மேம்படவும். எ-று. (க௪௨)

வீற்றி ருந்தனன் கற்பக மென்னற
வூற்றி ருக்குந் தெரியலி னும்பர்கோ
னேற்றெ திர்ந்துற வெய்திய வென்னையு
மாற்ற ருஞ்சொல் வரப்பணித் தானரோ.

(இ - ள்) மிருதுவான தேன் ஊற்றெடுக்குங் கற்பக மலர்களாலாகிய மாலை தரித்த இந்திரன் வீற்றிருந்தனன். அவனுக்கெதிரே போய்ச்சேர்ந்த அடியேனையும் மரியாதை மாறுபடாத தன் அரிய சொற்களால் வருகவெனக் கட்டளை தந்தனன். எ - று. (க௪௩)

சென்றி ருந்தென் னிருங்கவல் செப்புழிக்
குன்றி ருந்த குறுமுனி யெய்தின
னன்றி ருந்தவற் காயது செய்தபி
னென்றி லங்கரி யாசனத் தேற்றினன்.

(இ - ள்.) (கட்டளைபோலச்) சென்று உட்கார்ந்து எனக்குற்ற பெருந் துயரைச் சொல்லுகையில், பொதியாசலத்தில் வசிக்குங் குறுமுனிவராகிய அகத்திய முனிவர் ஆங்கெய்தினர். அப்பெருந் தவசிக்குச் செய்யத்தக்க உபசாரங்களைச் செய்தபின்னர். சூரியன்போல் விளங்குஞ் சிங்காதனத்தில் எழுந்தருளச்செய்தான். எ - று. (கசச)

கும்ப யோனிதி திருவருள் கூர்ந்தினி
தும்பர் கோமகற் காசி யுரைத்தன
னிம்ப ரெய்தி யிருத்தி யெனுத்தமிழ்
நம்ப னோர்கர நாண்மலர் நீட்டினன்.

(இ - ள்.) குடத்திலுதித்த அவ்வகத்திய முனிவர் திருவருண்மிகுந்து, இந்திரனுக்கு இனிமையாக ஆசி கூறினர். பிறகு அவர் இவ்விடத்தில் நீ உட்காரக்கடவையெனத் தமது வலக்கரமாகிய தாமரையை நீட்டிக் காட்டினர். எ - று. (கசரு)

முனிவ னீது மொழியத் தருநிழற்
புனித னுங்கொர் தவிசிற் பொலிந்தன
னினிய சொற்றுறு மெல்லையிற் றொல்லையோ
னனித ருந்தவ நாரத னண்ணினன்.

(இ - ள்.) அகத்தியமுனிவர் இப்படிக் கட்டளையிடவும், கற்பக விருக்ஷ நீழலிற் பொருந்திய இந்திரன், அங்குள்ள ஒப்பற்ற சிங்காசனத்திலிருந்து இனிய வார்த்தைகளைக் கூறுகையில், மிகப் பழையோராய் விசேடித்த பெருந் தவமியற்றிய நாரதமுனிவர் அங்கெய்தினர். எ - று. (கசகூ)

நண்ண ருந்தவ நாரதர்க் கும்பர்நாட்
டண்ண லெய்தி யருச்சனை யாற்றுபு
வண்ண வார்மலை யம்முனிக் கங்கொர்பா
லெண்ண ரும்பொற் றவிசி னிருத்தினன்.

(இ - ள்.) பெறுதற்கரிய தவத்தையுடைய நாரதமுனிவருக்கு தேவலோக மன்னனாகிய இந்திரன் எதிர்சென்று வழிபாடு செய்து அழகிய நெடிய பொதியமலையி லெழுந்தருளிய அகத்திய முனிவருக் கொருபக்கலில், நினைத்தற்கரிய பொன்மயமான சிங்காதனத்தில் எழுந்தருளியிருக்கச் செய்தான். ()

வான விந்திரன் மாமுனி நாரத
னான மூவ ரளவளா விக்களி
மோன ராக விருந்துழி முற்றுணர்
ஞான நான்மறை நாரதன் கூறுவான்.

(இ - ள்.) தேவராசன் (சத்த விருடியரிற்) சிறந்த அகத்தியமுனிவர் நாரதமுனிவர் ஆகிய விம்மூவரும் ஒருவரோடொருவர் கலந்து பேசிச் சந்தோஷித்துச் சும்மாவிருக்கையில் ஞானமயமான நான்கு வேதங்களையும் முற்றுமுணர்ந்த நாரதமுனிவர் சொல்வாராயினர். எ - று. (கசஅ)

தொன்னி லத்திடைத் தோன்றுமோ ரற்புதம்
பொன்னி லத்துமக் கோதப் புகுந்தன

னன்ன தன்மை யறைகுவ னம்புவிக்
கன்னல் சூழ்தரு காச்சிமி ரத்துளான்.

(இ - ள்.) பழமைவாய்ந்த நிலவுலகத்திலே யுண்டான ஓரதிசயத்தைத் தேவலோகத்திலுள்ள உங்களுக்குத் தெரிவிக்கவந்தேன். அவ்விசேடத்தைச் சொல்லுகின்றேன்: பூமியில் கரும்பின் வேலிசூழ்ந்த காஸ்மீரதேசத்திலிருப்பவன். எ - று. (கஅக)

ஆர வாரி யகனில மோர்குடை
யீர நீழ லினிது புரந்துதற
சேர லாரைத் திறைகவர்ந் துற்றனன்
வார்த டஞ்சிலை வச்சிர தேயனே.

(இ - ள்.) ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த விசாலமான இப்பூலோக முழுவதையும் ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் குளிர்ச்சிதங்கிய நிழலிலே இனிமையாகக் காத்து நெடிதாகி விசாலித்த வில்லைத்தாங்கிய வச்சிரதேயனென்னும் மன்னவன் சத்துருக்கள்பாற் கப்பங்கொண்டு வாழ்ந்திருந்தனன். எ-று. (கடுo)

மன்னர் மன்னவன் வாசற்பு ரோகிதன்
றுன்ன ருஞ்சொற் சுதன்மனென் பானவன்
பன்னு சொற்கலை கற்றும் பயனிலா
னன்ன வன்றனை நோக்கி யரசர்கோன்.

(இ - ள்.) இராசராசனுன அவ்வச்சிரதேயனது அரண்மனைவாயிற் புரோகிதன் கடுஞ்சொல்லையுடைய சுதன்மனெனப்படுவன். அவன் பலராலுந் துதிக்கப்படும் நூல்களை யுணர்ந்தும் அவற்றின் பலனைப் பெறாதவன். அவனை அவ்வரசன் பார்த்து. எ - று. (கடுக)

கற்றி லாய்கலை கற்றுண ரார்முக
முற்று நோக்கின் மயானத்தை யொக்குமால்
பெற்று ளார்பெறும் பேறுதங் காதலர்
சொற்ற கல்வியிற் றாயரொன் றேறுதலே.

(இ - ள்.) நீ சாஸ்திரங்களை யுணர்ந்திலை. கற்றறியாதவர்கள் முகத்தை உற்றுப் பார்த்தால் அது மயானத்தை யொத்திருக்கும். தம்மக்கள் யாவரும் புகழத்தக்க கல்வியான் மேம்பட்டோரென்று பலருங் கூறுதலே புதல்வரைப் பெற்றோர் பெறும்பேறும். எ - று. (கடுஉ)

என்று வேந்த னியம்புறக் கேட்டபின்
பொன்ற யங்கு புரிநூற் புயத்தினான்
ஒன்று நானுண ராக்கலை யுள்ளதோ
வென்றி யாய்விளங் கப்பெறு கிற்றிலேன்.

(இ - ள்.) என்று வச்சிரதேயன் கூறக்கேட்டபின்னர், பொன்னொளி வீசும் பூணூலணிந்த புயத்தையுடைய சுதன்மன், வெற்றியுடையோனே! யானுணராத நூல் ஒன்றுமினு மிருக்கின்றதோ? அப்படியிருக்க அவற்றைத் தெளிந்துணரப் பெற்றிலேன். எ - று. (கடுங)

இற்றை நாண்முத லைம்படை யேந்திய
வெற்றி நாரணன் மென்மலர்த் தாடொழாப்
பெற்ற கல்விய னாகப் பெறுவன்யான்
கொற்ற வேந்தவென் றோதினன் கோதிலான்.

(இ - ள்.) வெற்றிதங்கிய அரசனே! இன்றுமுதற்கொண்டு பஞ்சாயுத மேந்திய வெற்றிபொருந்திய விஷ்ணுமூர்த்தியின் மெல்லிய தாமரைமலர் போலுந் திருவடிகளை வணங்கி நான் கல்வியில் தெளிவுற்றவனாவேனென்று குற்றமற்ற சுதன்மன் சொல்லினன். எ - று. (கருச)

தண்ண றுந்துள வோனடி தன்னுளத்
தெண்ணி யேத்துற வெந்தைபி ரானெதிர்
நண்ணி நாற்கலை நல்கின னன்மறைப்
புண்ணி யன்றிருப் பாற்கடற் போயினன்.

(இ - ள்.) தட்பமாகியமணமுள்ள துளசிமாலை பூண்ட விஷ்ணுமூர்த்தியின் பாதங்களைத் தன்னுள்ளத்திற்றியானித்துத் துதிசெய்ய, எமது தந்தையாகிய திருமால் சுதன்மனுக்குப் பிரத்தியட்சமாகி (அறம்பொருள் இன்பம் வீடெனும்) நால்வகை நூல்களையுந் தெளிவாக விளக்கி, வேதத்திற்குரிய புண்ணிய சொரூபியாகிய திருமால் க்ஷீராப்தியடைந்தனர். எ - று. (கருரு)

நான்ம றைத்தனி நாயக னன்குணர்
நூன்மு றைக்கலை முற்றுணர் நோன்மையைத்
தேன்ம றைத்தின வண்டடை தேன்றொடைக்
கோன்மு றைத்தனி வேந்தவை கூறினன்.

(இ - ள்.) நான்கு வேதங்கட்கும் ஒப்பற்ற நாயகராகிய திருமால் நன்றாய்த்தெளிவிக்க, முறைப்படி எல்லாநூல்களையும் முற்றுமறிந்த வகையை, தேனை மறைத்துக்கொண்டு தொகுதியாகிய வண்டுகள் அடைகாக்கும் மணமுள்ள மாலைதரித்த செங்கோன்முறை திறம்பாத சிறந்த வச்சிரதேயன் சபையிற் சொன்னான். எ - று. (கருசு)

ஞால முற்று நடத்துசெங் கோன்முறை
மாலை வெண்குடை வச்சிர தேயனும்
வேலை மாநில நான்மறை வேந்தரை
யேல வம்மி னெனவுரைத் தானரோ.

(இ - ள்.) உலகமுழுதுஞ் செலுத்திய செங்கோன் முறையும், வெற்றி மாலையும், வெண்கொற்றக் குடையுமுடைய வச்சிரதேயனும், கடல் சூழ்ந்த பெரிய பூமியிலுள்ள நான்மறை யுணர்ந்த வேதியர்களை ஒருசேர வரும்படி கட்டளை செய்தான். எ - று. (கருஎ)

வந்த நான்மறை வாணரை யிங்கிவன்
சிந்தை யோர்கவெ னச்சில செப்பலு
மந்த ணாள ரளந்தறிந் தாரவன்
தந்த கல்வி முடிவெவர் சாற்றுவார்.

(இ - ள்.) அவ்வாறு வந்துசேர்ந்த நான்மறை தேர்ந்த அந்தணர்களைக் கண்டு, இச்சுதன்மன் கல்வியுணர்வை ஆராய்கவெனச் சில வார்த்தை சொல்ல

வும், அவ்வந்தணர் அச்சுதன்மன் கல்வியுணர்வை ஆராய்ந்தறிந்தார்கள். அவன் தெளிந்த கல்வியின் அளவை யெவர்தாங் கூறவல்லவர்? எ - று. (௧௫௮)

முற்று ணர்ந்த முழுமறை வேதியர்
கற்ற தின்மையெ னக்கடிந் தானவன்
மற்று நாவலர் வந்தவர் யாரையுஞ்
சொற்றி றத்துச் சுதன்ம னொழித்தனன்.

(இ - ள்.) நான்கு வேதங்களையும் முழுதுணர்ந்த வேதியர்களை, நன்றாகக் கற்கவில்லையென்று சுதன்மன் கோபித்தான். அல்லாமலும், கற்றுணர்ந்தவர்களாக வந்தவேதியர்களை யெல்லாம், மிக்க சொல்வன்மையுடைய சுதன்மன் நீக்கி விட்டான். எ - று. (௧௫௯)

மொழிந்த மூர லிவன்முக நோக்கில
ரழிந்த சிந்தைய ராயகன் றாரவ
ரிழிந்த மேன்மைய ராகியி ருங்கலை
யொழிந்த தொன்று மிவற்கெடுத் தோதிலார்.

(இ - ள்.) அவ்வேதியர்கள் புன்னகையோடு கூடிய இச்சுதன்மன் முகத்தைப்பாராதவர்களாயும், மனம் வருந்ினவர்களாயும் அகன்று போனார்கள். தங்கள் பெருமை குன்றினவர்களாக இவனாலறியப்படாத பெரு நூல்களிலொன்றையேனும் இவனுக்கு எடுத்துச்சொன்னாரிலர். எ - று. (௧௬௦)

ஈது ணர்ந்தன னிரித ழாயிரப்
போதி ருந்தபு ராதனன் றன்னுடன்
மீது பாவத் திரைந்த விருத்தனா
யோது நான்மறைச் செல்வனை யுற்றனன்.

(இ - ள்.) இவனிப்படி யகங்கரித்திருத்தலை, குளிர்ச்சி தங்கிய ஆயிர விதழ்களையுடைய தாமரை மலரில் வசிக்கும் பிரமதேவன் உணர்ந்து, தன் மேனியிற் பரவிய திரையையுடைய விருத்தனாய், நான்மறை தேர்ந்த அந்தணனாகி வந்தனன். எ - று. (௧௬௧)

உற்ற காலைச சுதன்மனை யுற்றுநீ
கற்ற கல்விக் கழகிலை கற்றுளோர்
முற்று நன்கு மொழிவ தழகதன்
பெற்றி யீறு பிறக்கப் பெறுவரே.

(இ - ள்.) வந்தபோது சுதன்மனையடைந்து, நீகற்ற கல்விக்கேற்ற அழகு உன்னிடத்திலில்லை. கற்றோர் யாவரும் நல்லொழுக்கமுடையானெனக் கூறுவதே யழகாம். அத்தன்மை முழுதுணர்ந்த காலத்திற் பெறுவார்கள்.

என்னை யென்னுளங் கற்றன வெண்ணில
மன்னு மைம்புலத் தாறும யங்கலா
னுன்னர் நின்று மொழிந்தனை மூப்பினா
யுன்ன ருங்கலை யொன்றுணா ராயென்றான்.

(இ - ள்.) எனக்கூறவும், என் மனத்தெளிவோடு கற்றுள்ளவை கணக்கற்றன. விருத்தனே! நீ நினைத்தற்கரிய நூல்களொன்று முணராதவன். உன்பாலுள்ள ஐம்புலச்செயல்கள் மயங்கிக்கிடத்தலின் நீ யென் முன்னின்று இவ்வண்ணம் உரைத்தனை யென்றான். எ - று. (௧௬௩)

அக்க டுஞ்சொ லவனுரைத் தேகலு
முக்கு ணங்கடி நான்முக முன்னவன்
பெருக்க நான்முகந் தோன்றிடத் தோன்றினன்
மிகமிகெ ழுந்து கொளுந்து வெகுளியான்.

(இ - ள்.) அக்கொடுமொழியைக் கூறிச்சுதன்மன் போகவும், முக்குணங்களைச்சயித்த பிரமதேவன், கூட்டமாயுள்ள சதுர் முகங்களுந் தோன்றும்படி நேர்நின்று, அதிகரித்தெழுந்து சொலிக்குங் கோபமுற்றவனாய். எ - று. ()

கற்று ணர்ந்த கலைப்பெரி யோர்களை
முற்க டிந்து மொழிந்தனை யாதலிற்
சொற்க டந்தநின் னாவிழச் சொற்றநீ
நிற்க வூமரி னென்று நிகழ்த்தினன்.

(இ - ள்.) நூல்களைக்கற்றுத்தேர்ந்த பெரியோர்களை முற்பட்டுக்கடுஞ்சொற்கூறினையானபடியால், அப்படிக்கூறிய நீ அச்சொற்களைச்சொல்லிய உன் நாவானது விழுந்துபோக ஊமர் போலாகுகவெனச் சபித்தனன். எ - று.

வேத நான்முக னோதிய வெம்மையா
லோது நாவயர்ந் தூமரி னாயினன்
மாது யர்க்கொடு வச்சிர தேயனு
மேது செய்து மெனவிருந் தானரோ.

(இ - ள்.) வேத முணர்ந்த நான்முகனாகிய பிரமதேவனுரைத்த சாபத்தினால், பேசுகின்ற நாவானது சோர்ந்து ஊமையாய் விட்டான். வச்சிரதேயனும் பெருந்துயரெய்தி யாதுசெய்வோமெனக் கருதியிருந்தான். எ - று. ()

தொல்லை வேதச் சுதன்மனை நோக்கிநின்
றல்ல லுற்றன னாகி யழுங்குவான்
வல்லை யன்னவன் றம்பியை வாவென
வொல்லை கூய்க்கொண் டுணர்த்துவ தாயினன்.

(இ - ள்.) பழைமையான வேத முணர்ந்த சுதன்மனை நோக்கி, நேர்நின்று துயரமெய்தி வருந்துவோனாகிய வச்சிரதேயன், விரைவில் அவன் தம்பியை வாவென்று சீக்கிரத்தில் அழைத்துச்சென்று கூறுகின்றான். எ - று. ()

மூது ணர்ந்தநின் முன்னனை யூமனாய்ப்
போதி யென்றய னோதிய புன்மொழித்
தீது தீர்தரத் தெய்வப் பசுந்துழாய்ச்
சீத ரன்றனைச் சிந்தைசெய் வாயென்றான்.

(இ - ள்.) முற்றுமறிந்த வுன்றமையனை யூமையாய்ப் போகுகவெனப் பிரமனுரைத்த சாபத்தின் துன்பம் விலக, தெய்வீகந்தங்கிய பசுமை பொருந்திய துளவமாலை தரித்த விஷ்ணுமூர்த்தியைத் தியானஞ்செய்க வென்றான்.

வேந்த னவ்வுரை கூறலும் வேதியன்
போந்து செங்கட் புனிதனைப் போற்றினன்
சேந்த தாமரைச் செல்வத் திருமகள்
காந்த னந்நிலைக் காட்சிதந் தானரோ.

(இ - ள்.) வச்சிரதேயன் அவ்வார்த்தையுரைத்த மாத்திரத்தில் சுதன்மனுடைய சகோதரன் அதற்கிணங்கி, செந்தாமரைக் கண்ணையுடைய பரிசுத்த

ணாகிய விஷ்ணுமூர்த்தியைத் துதித்தான். செந்தாமரையில் எழுந்தருளி யிருக்குஞ் செவ்வியாகிய திருமகளின் கணவரான திருமால் அப்பொழுது தரிசனந் தந்தனர். எ - று. (௧௬௯)

ஆழி நாத னடியிணை போற்றிமற்
றாழி வேத மெனக்கு முணர்த்தியென்
வாழி முன்னவற் கோதிய மாமலர்ச்
சூழ ணன்முகன் சாபந் துடைத்தியால்.

(இ - ள்.) சக்கிராயுதமேந்திய திருமாலினுபயபதங்களைத் தோத்திரஞ் செய்து, பழமையான வேதங்களை யடியேனுக்கு விளங்கச்செய்து, என் தமையனுக்குப் பதுமாசனத்தானாகிய பிரமன் கொடுத்த சாபத்தையும் நீக்க வேண்டும். எ - று. (௧௭0)

இவையி ரங்கி யளித்தரு ளென்னலுங்
கவரொ ளித்திகி ரிக்கருங் கண்ணனு
மவையி ழந்துநின் முன்னவன் யாரையு
நவைமொ ழிந்தது நன்றல வென்றனன்.

(இ - ள்.) இவ்விருவரங்களையுந் திருவுளமிரங்கி யனுக்கிரகிக்கவேண்டும் எனப்பிரார்த்திக்கவும், எவ்வகையொளியையுங் கவரத்தக்க சுதரிசனமேந்திய கருநிறமமைந்த திருமாலும்; உன் தமையன், சபையை யவமதித்துப் பலரையுங் குற்றங்கூறியது நன்றன்றென்றனர். எ - று. (௧௭௧)

நான ளித்திடுங் கல்வியி னல்லறி
வான பேரை யவமதித் தானது
தானு ணர்ந்தயன் சாபமிட் டானவ
னூன மென்று மொழிக்கத்த காதென்றான்.

(இ - ள்.) நானனுக்கிரகித்த கல்வியறிவினால், நல்லறிவுடைய பெரியோரை யவமதித்தனன். பிரமதேவன் அதனையறிந்து சபித்தான். ஆனதால் அவனுக்குற்ற ஊனத்தை யொழிக்க வென்றால் முடியாது என்றனர். எ - று.

இதுவு ணர்ந்தவி சுத்த னிரந்துநீ
யதும னத்தில டைந்தனை யல்லையாய்ப்
புதித ளித்தரு ளென்னப் புனத்துழாய்
மதும லர்த்தொடை யோனை வணங்கலும்.

(இ - ள்.) இதையறிந்த (சுதன்மன் சகோதரனான) விசுத்தன் என்பவன் குறையிரந்து தேவரீரதனைத் திருவுள்ளங்கொள்ளாது, இப்போது புதிதாகக் காத்தருள்கவென்று, கொல்லையில் வளருந்துளபத்தையுந் தேன் நிறைந்த மலர்மாலையையுமணிந்த திருமாலை வணங்கவும். எ - று. (௧௭௩)

மீண்டு மக்கலை விஞ்சை புரிந்திடி
லீண்டு வேதனை யின்னு மிகழுமென்
றாண்டு சிந்தை யளந்தன னாகியே
நீண்ட மேனி நிமல னிகழ்த்துவான்.

(இ - ள்.) மறுபடியும் அக்கலைஞானத்தை யருள்புரிந்தாலும் இங்குள்ள வேதியனை யின்னுமிகழ்ச்சி செய்வானென்று தமது திருவுள்ளத்தில் ஆராய்ந்தவராய், நெடிய திருமேனியையுடைய விஷ்ணுமூர்த்தி கூறுகின்றார். எ - று. ()

ஆச றுங்கலை கற்றறிந் தாரவ
ரேசி னுள்ள மிரங்கி யொடுங்கினுற்
பூசை செய்வர் புலமையுள் ளோரிவன்
மாசில் சாப வழுவக லாதென்றான்.

(இ - ள்.) குற்றமற்ற நூல்களைக் கற்றறிந்தவர்களவனைக்கண்டு இகழ்வார்களாயின்; மனந்தளர்ந்து கீழ்ப்படிந்தால், அக்கற்றறிந்தவர்கள் இவனைப் பூசிப்பார்கள். அதுவரையில் இவனுடைய களங்கமற்ற சாபக்கொடுமை நீங்காதென்று கூறினர். எ - று. (கஎ௫)

ஆதி நாத னருளிய கேட்டலும்
வேத சிந்தை விசுத்தன் விளம்புவா
னீத விர்த்திலை யாகினி னன்பிறேன்
றீது தீர்ப்பதி யாரெனச் செப்புறா.

(இ - ள்.) தேவர்களுள் முதல்வராகிய திருமால் திருவாய்மலர்ந்ததைக் கேட்டவுடன் வேதமறிந்த மனத்தையுடைய விசுத்தன் சொல்லுகின்றான்: உமதன்பனாகிய வென்தமையனது தீமையைத் தேவரீர் விலக்காவிடின் வேறே விளக்குபவராார்? என்று கூறி. எ - று. (கஎசு)

மாபெ ருஞ்சொல் வசிட்ட னுரைத்திடுஞ்
சாப முற்றத்ரி சங்குவென் பான்றனைப்
பாப நீக்கிப் பதவியு ளுய்த்தனன்
கோப நீத்தருள் கோசிக னென்பரால்.

(இ - ள்.) சிறந்த பெருங்கீர்த்தி வகித்த வசிஷ்ட முனிவர் சொல்லிய சாபத்தையேற்ற திரிசங்குவென்னுமரசனைக் கோபத்தைத்தவிர்த்து அருள் செய்யத்தக்க கௌசிக முனிவர் (சாபத்திற்குக்காரணமான) பாவத்தை விலக்கிச் சுவர்க்கத்திற் சேர்த்தாரென்று பெரியோர் கூறுவர். எ - று. (கஎஎ)

நின்ன டித்துணை நெஞ்சுகொண் டேமெம
தின்ன னீக்குநர் யாரென் றிசைத்தலும்
பொன்னொ டும்பொலி கார்முகில் போலுமா
றன்னு ளங்கறுத் தின்னன சாற்றுவான்.

(இ - ள்.) தேவரீருடைய வுபய பாதங்களை மனங்கொண்டவர்களாகிய வெங்கள் துன்பத்தை நீக்குபவர் யாரென்று சொல்லவும்; திருமகளோடுங் கலந்த நீலமேகம் போலும் விளங்குந்திருமால், தமது திருவுள்ளத்திற் கோபமுற்று இவ்வாறு கட்டளை யிடுகின்றார். எ - று. (கஎஅ)

என்னை நிந்தைசெய் தீதுப கர்ந்தனை
யுன்னு றுப்பிற் குறையுள வாகநின்
முன்ன வன்றனிச் சாபமு டிந்துறு
தின்ன லுற்றுழப் பீரென் றியம்புறா.

(இ - ள்.) எம்மை நிந்தித்து இவ்வித வார்த்தைகளைச்சொன்னாய். ஆனபடியால், உன்னவயவங்களில் குறைவு உண்டாகுக. உன் தமையனுக்குற்ற பெருஞ்சாபம் முடிந்து படாமல் துக்கமுற்று வருந்துவீர்களென்று திருவாய் மலர்ந்து. எ - று. (கஎகூ)

நீங்க ருங்கடுஞ் சாபநீ கழ்த்திய
தேங்க மழ்ந்தது ழாய்புனை சென்னியோ
னீங்கொ ழிந்தன னேகவி சுத்தனு
மோங்கு றுப்பிழந் தின்னலு ழந்தனன்.

(இ - ள்.) நீங்கற்கரிய கொடுஞ்சாபமுனைத்த மணங்கமழுந்துளவமாலை தரித்த திருமுடியுடைய விஷ்ணுமூர்த்தி யவ்விடம் விட்டு எழுந்தருளவும், விசுத்தனென்பவனும் விசேடித்த அவயவங்களிழந்தவனாய்த் துயரெய்தினான்.

மன்னர் மன்னவன் வச்சிர தேயனு
மன்ன தன்மைய றிந்தல மந்தன
னென்ன செய்துமி தற்கென வெண்ணினான்
பின்ன ருற்றுநி கழ்ந்தன பேசுவாம்.

(இ - ள்.) இராஜ ராஜனாகிய வச்ரதேயனும் அத்தகைய தன்மையை யறிந்தவனாகி வருத்தமெய்தி யினி யிதற்கு யாதுசெய்வோமென்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அதன் பின்னர் உண்டாகிய நடந்தனவற்றைக் கூறுவாம்.

கலிநிலைத்துறை.

பனிபொ திந்துமெய்ஞ் ஞானநல் லொளிதிசை பரப்பி
நனியு யர்ந்தரு மாதவர்க் குறைவிட நல்கிப்
புனித மாதவர் கணத்தொடும் போற்றுறப் பொலிந்து
தனிமு தற்பர னிகர்த்தது தயங்குகே தாரம்.

(இ - ள்.) குளிர்ச்சிபெற்று, சிறந்த மெய்ஞ்ஞான வொளியைத்திசைகளிற் பரவச்செய்து, மிகமேம்பாடுற்று, அரும்பெருந் தபோதனர்க்கு வசிக்கத்தக்கவிடங்கொடுத்துப் பரிசுத்தமான பெருந்தவமுடையோர் தமது கூட்டத்தோடு துதிக்கும்படி விளங்கி தனி முதற் கடவுளாகிய சிவபெருமானை யொத்துள்ளது விளக்கந்தங்கிய திருக்கேதாரம். (கஅஉ)

அத்த லத்துறை யிறைவனைப் பணிந்தரு ளடைவான்
மெய்த்தி றந்தரு முவகையின் விரும்பினன் வேந்த
னெத்தி றத்தினு மிவரிடர் நீக்குவ னென்று
வுய்த்து டன்கொடு புகுந்தன னந்தக ருற்றான்.

(இ - ள்.) அந்தத் திருக்கேதாரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நமஸ்கரித்து அவர் திருவருளைப்பெற, உண்மைத்தன்மை பொருந்திய மனக்களிப்போடு வச்சிரதேயன் விருப்புற்று, எவ்வகையிலாயினும் இவர்கள் துன்பத்தைப் போக்குவேனென்று ஆலோசித்தவனாய், அவர்களை யழைத்துச்சென்று அத்திருக்கேதாரத்தை யடைந்தான். எ - று. (கஅங)

தேவ தேவனைச் சென்னிதாழ்த் திறைஞ்சின னிமயப்
பூவை நாயகன் சினகர முன்றிலி றபொருந்தி
யேவ ருந்துணை மறையவ ரிவரொடு முற்றான்
மேவ ரும்பெருஞ் சாபநீத் தொழித்துற விரும்பி.

(இ - ள்.) தேவ தேவனாகிய சிவபெருமானைத் தன் சிரத்தைத்தாழ்த்திப் பணிந்தனன். இமயமலை யரசகுமாரியாகிய வுமாதேவிக்குக் கணவராகிய அச்சிவபெருமான் திருக்கோயிலின் முகப்பிற்றங்கி விலக்குவதற்கரியதுணைவர்களான சுதன்மன் விசுத்தன் என்னும் வேதியரிருவரோடும் யாவருமடை தற்

கரிய பெருஞ்சாபத்தை விலக்கி யொழிக்கும்படி விருப்பெய்தித் தங்கியிருந்தான். எ - று. (கஅ௪)

மோன ஞானிக ளருந்தவர் மும்முத லனையார்
ஞான நாதனைத் தொழுதனர் வருந்தொறு நலிந்த
வேனை யீங்கிவர் சாபநீத் திடுதிரென் றிரப்பச்
சேனை வேந்தநீ கேட்டியென் றுரைப்பரச் செயலோர்.

(இ - ள்.) மௌன நிலையிலுள்ள ஞானிகளாகவும் அரிய தவநிலையிலுள்ளவர்களாகவுமிருக்குந் திரிமூர்த்திகளை யொத்தவர்கள், மெய்ஞ்ஞான விறைவராகிய சிவபெருமானைப் பணிந்துகொண்டு திரும்பி வரும்போதெல்லாம், வருந்திக்கொண்டுள்ள இவ்விருவர் சாபத்தை விலக்கி யருளவேண்டுமென்று குறையிரத்தலும், அத்தவசிகளனைவரும், சதுரங்க சேனையையுடைய அரசனே! கேட்பாயாக வெனக்கூறுகின்றார்கள். எ - று. (கஅ௫)

உலகெ லாமளந் துண்டுமிழ்ந் தருளிய வொருவன்
மலர்மி சைப்பொலி நான்முகன் வழங்கிய சாப
மலகில் பேரருட் கறைமிடற் றெம்பிராற் கன்றி
யிலகு வெண்குடை வேந்தமற் றெம்மனோர்க் கெளிதோ.

(இ - ள்.) திரிலோகங்களையும் அளவுபடுத்தி, திருவமுது செய்து உமிழ்ந்தருளிய ஒப்பற்றவராகிய திருமாலும், கமலாசனத்தில் எழுந்தருளியுள்ள பிரமதேவனுங்கொடுத்த சாபமானது, அளவில்லாத பேருருளாளராகிய நீலகண்டமுடைய எமது சிவபெருமானுக்கல்லாது, விளங்குகின்ற வெண்கொற்றக் குடையையுடைய அரசனே! எம்போல்வார்க்கு எளிதானதோ? எ - று. ()

எனவு ரைத்தவ ரேகலு மெம்பிரா னருளிற்
றனையு ணர்ந்தத தீசியா மருந்தவன் சார
வனைக ருங்கழன் மன்னனு மறைமுழு தளந்த
வினய விஞ்சைய ரிருவரு மவனடி வீழ்ந்தார்.

(இ - ள்.) என்று கூறி, அத்தவசிகள் போகவும், எமது சிவபெருமான் திருவருளால் தமது நிலையையுணர்ந்த ததீசி முனிவர் ஆங்கெழுந்தருள, அலங்கரித்த பெரிய வீரகண்டாமணி தரித்த அரசனும், வேதமுழுதும் ஓதியுணர்ந்த அதிவிநயத்துடன் கூடிய வேதியர்களிருவரும் அத்ததீசிமுனிவர் பாதங்களில் வணங்கினார்கள். எ - று, (கஅ௭)

பணங்க ளாயிரப் பாம்பணைப் பாற்கட லவனு
மணங்கொ டாமரைப் பிரமனும் வழங்கிய சாபங்
குணங்கொ ணின்னருட் பெருமையி னொழிப்பது குறித்தே
யணங்கு மித்துய ரொழித்தியென் றடிக்கடி பணிந்தார்.

(இ - ள்.) ஆயிரம் பணாமுடிகளையுடைய சேஷசயனத்தில் எழுந்தருளிய விஷ்ணுமூர்த்தியும், மணங்கமழுங் கமலாசனனாகிய பிரமதேவனுங் கொடுத்த சாபத்தை, விசேஷ குணமுடைய தேவரீர் திருவருட்பெருமையால் நீக்கிக் கொள்ளக்கருதினோம். நாங்கள் வருந்துகின்ற இத்துயரத்தை நீக்கி விடுவீரென்று அடிக்கடி பணிந்தார்கள். எ - று. (கஅ௮)

ஐய நீற்றுள பெருமையு முருத்திர வக்கத்
தெய்வ மாட்சியுந் தெண்ணிலாக் கைலையிற் சிறந்த

பைய ராவணி நம்பரன் பெருமையும் பகுத்து.
மெய்யு ணர்ந்தவர் நின்னல தியாருளர் வியப்பின்.

(இ - ள்.) ஐயரோ! திருவெண்ணீற்றின் பிரபாவத்தையும் உருத்திராக்கத்தின் தெய்வீகம் பொருந்திய சிறப்பையும், தெளிந்த நிலவைப்போன்று பிரகாசிக்குந் திருக்கைலாயத்தின் கண் சிறப்போடெழுந்தருளியிருக்கும் படத்தோடு கூடிய சர்ப்பாபரணராகிய சிவபெருமான் சிறப்பையும் வியப்போடு பகுத்து உண்மையாகத் தெளிந்தவர்கள் தேவரீரையன்றி யாவரிருக்கின்றனர்?

மறைமொ ழிந்திடு நாவிவற் கொன்றினும் வழங்கா
திறைவ தன்னுறுப் பொழிந்தன னீங்கிவ னிவற்கு
நிறைபெ ருங்குணத் தருடியே னின்னடி மறவா
துறைவ ரென்றெடுத் துரைத்தன னுலகெலாம் புரப்போன்.

(இ - ள்.) இவருக்கு வேதமோதும் நாவானது எவ்வாற்றானும் உதிக்கவில்லை. இவர் அவயவங்குறைந்துள்ளார். இவ்விருவருக்குந் தேவரீருடைய சிறந்த பெருங்குணத்தால் திருவருள் புரிந்தீரானால், தேவரீர் திருவடியை மறவார்களென்று, உலகமுழுவதையுங்காக்கின்ற வச்சிரதேயன் சொன்னான்.

உரைத்த வாசகங் கேட்டலு மொருங்குணர் முனிவ
னிரைத்த பேரருள் வெள்ளநின் றுவட்டெழ விரங்கி
விரைத்த வெள்ளொளி நீறெடுத் தளித்தனன் வேந்தன்
வரைத்த டம்புய மண்ணுற வணங்கினன் வாங்கி.

(இ - ள்.) யாவுமறிந்த ததீசி முனிவர், அவ்வரசன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடன், ஒலிக்கின்ற பெரிய திருவருட்பெருக்கம் முவட்டெடுக்கத்திருவுளமிரங்கி, மணம்வீசுகின்ற காந்தியுடைய திருவெண்ணீற்றைத்தமது திருக்கரத்தால் அள்ளி அளித்தனர். அவ்வரசன் தனது மலைபோலப் பூரித்த புயங்கள் பூமியைத் தொடும்படி வணங்கி வாங்கி. எ - று. (கககூக)

வாங்கு நீற்றினை மறையவர்க் களித்தனன் மறையோ
ரோங்கு தத்தம துடம்பறப் பணிந்தன ருவந்தா
தேங்கு நான்மறை யிசைத்தனன் முன்னவன் சிறியோ
னீங்கு தன்னுடற குறையெலா நிரப்பின னின்றான்.

(இ - ள்.) அப்படி வாங்கிய திருவெண்ணீற்றை அவ்விருவேதியருக்குங் கொடுத்தான். அவ்வந்தணர் பூரித்த தங்களுடம்பில் பொருந்தத்தரித்துக் களித்தார்கள். உடனே மூத்தவன் (நாவரப்பெற்று) நான்கு வேதங்களையுமோதினான். இளையவன் தன்னுடலில் (நீங்கிய) அவயவக் குறைவெல்லாம் நிரம்பப்பெற்றிருந்தான். எ - று. (கககூஉ)

சாற்ற ருந்தவத் ததீசியை யடிக்கடி தாழ்ந்தார்
நூற்ற டம்புய முனிவனு மாசிக ளுவன்றான்
போற்றி மூவருங் காச்சிமி ரப்பதி புகுந்தா
ரேற்ற மாதவத் தலைவனை வழுத்தின ரிருந்தார்.

(இ - ள்.) சொல்லமுடியாத தவத்தையுடைய ததீசிமுனிவரை யடிக்கடிப் பணிந்தார்கள். உபவீதமணிந்த பரந்த தோளையுடைய ததீசுமுனிவரும் ஆசிவசனங் கூறினர். (அரசனும் அந்தணரும் ஆகிய) மூவரும் ததீசிமுனிவரைத்

துதித்துத் தங்கள் காஸ்மீரநாட்டை யடைந்தார்கள். தகுந்த பெருந்தவமுடைய ததிசிமுனிவரைத் தோத்திரஞ் செய்திருந்தார்கள். எ - று. (கஙரு)

ஆதி நாயக னணிதிரு நீற்றின தருமை
யோதி லெம்மனோர்க் கெளிவர வுரைக்குமா றெளிதோ
வேத நாயகன் றிருமக ளையகன் விளம்புந்
தீது தீர்த்ததங் கதனிலை யாவரே தெரிப்பார்.

(இ - ள்.) முதற்கடவுளாகிய சிவபெருமானணிகின்ற திருவெண்ணீற்றின் சிறப்பைச் சொல்லுமிடத்தில் எம்போல்வார்க்கு இலேசிற் சொல்ல வெளிதானதோ? வேதமோதிய தலைவனாகிய பிரமதேவனும் இலக்குமிமணாளனாகிய திருமாலுங் கூறிய சாபம் போக்கியது. அத்திருவெண்ணீற்றின் றன்மையை யெவர்தாம் விளக்க வல்லவர்கள்? எ - று. (கஙசு)

என்று நாரத னிந்திர னினிதுகேட் டுவப்பக்
குன்றி ருந்தவ னென்புநெக் கன்பொடுங் குழைய
வன்று ரைத்தலு மதிசய மடைந்தன ரனையார்
மன்று ளாடிவெண் ணீற்றின தருமையார் வகுப்பார்.

(இ - ள்.) என்று நாரத முனிவர், இந்திரனினிமையாய்க்கேட்டுக் களிக்கவும், பொதியாசலத் தலைவராகிய அகத்திய முனிவர் எலும்பு நெக்குவிட்டு அன்புடனே குழையவும், அன்று கூறியவுடனே அவ்விருவரும் வியப்புற்றார்கள். ஆனபடியால், சிற்சபையிலே ஆனந்தத் திருநடனஞ்செய்யும் சிவபெருமானது திருவெண்ணீற்றினருமையை யெவர்தாம் வகுத்துரைப்பவர்? எ - று.

பொன்ன கர்க்கிறை முதலினோர் மூவரும் பொருந்தி
யின்ன சொற்றுழி யென்னதூழ் வினையிடை நிகழ
மின்னெ யிற்றுவா ளரக்கரு மசுரரும் வெகுண்டு
மன்னு யிர்த்தொகை செகுத்தன ருணர்த்துவான் வந்தேன்.

(இ - ள்.) அமராவதிக்கிறைவனாகிய இந்திரன் முதலிய மூவருஞ் சேர்ந்து இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், அடியேனுடைய ஊழ்வினையானது இடையிலே சம்பவித்ததினால், மின்னலை வீசும் பற்களையுடைய அரக்கர்களு மசுரர்களுங்கோபித்து நிலைபெற்ற ஜீவராசிகளைக் கொன்றார்கள். அதனைத் தெரிவிக்கும்படி யடியேன் வந்தேன். எ - று. (கஙஅ)

அதுகி டக்கமற் றணிதிரு நீற்றின தருமை
யிதுமொ ழிந்தனி ரினிச்சிறி தொழிதிரென் றமைத்து
மதுகை வாளெயிற் றரக்கரை வல்லையி னொழித்தற்
கெதுகொல் செய்துமென் றிந்திரன் றன்னொடு மியம்ப.

(இ - ள்;) அடியேன் வந்தகாரிய மிருக்க அழகிய திருவெண்ணீற்றின் இந்த அற்புதமாகிய சரித்திரத்தைச் சொன்னீர்கள். இனிச்சற்றதனை நிறுத்துங்களென்று கையமைத்து வலிமையுள்ள கூரிய பற்கள் வாய்ந்த அரக்கர்களை விரைவிலழிப்பதற்கெதைச் செய்வோமென்று தேவேந்திரனோடு சொல்ல.

குறுமு னிப்பெய ரருந்தவன் வெகுண்டனன் கொதித்து
மறுவி னீற்றியல் புகன்றனை மறுத்தநீ வருணை
தறுகண் வாளெயிற் றரக்கனு குதியெனச் சபித்து
நறும லர்த்தொடை யிந்திரன் றன்னோடு நவிலும்.

(இ - ள்.) குருமுனி யென்னும் பெயரினையுடைய அருந்தவஞ்செய்த அகத்திய முனிவர் கோபித்துக்குற்றமில்லாத திருவெண்ணீற்றின் சிறப்பைப் பேசிக்கொண்டிருந்தோம். அதனைத்தடைபடுத்திய வருணனே! நீ அஞ்சாமையையுங் கூரிய பற்களையுமுடைய அரக்கனுருகவென்று சபித்து, வாசனை தங்கிய கற்பகமலர்மாலை யணிந்த இந்திரனோடு சொல்லுகின்றனர். எ - று. ()

எம்பி ரான்றிரு நீற்றின துண்மைமற் றிதுவோ
வம்பொ னங்கையி னெல்லியி னறிகுதி வருகென்
றும்பர் கோமகன் றன்னொடு நாரத னொடும்போய்க்
கும்ப மாமுனி நெடுந்திரைப் பரவைநீர் குறுகி.

(இ - ள்.) எமது சிவபெருமானது திருவெண்ணீற்றின் சிறப்பிம்மட்டோ? அழகிய பொன் போன்ற வுள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனிபோலத் தெரிந்து கொள்வாய். என்னுடன் வரக்கடவாயென்று அவ்விந்திரனோடும் நாரதரோடும் போய் அகத்திய முனிவர் நெடிய அலைகளையுடைய கடலின் கணுள்ள நீரையடைந்து. எ - று. (ககூகூ)

செங்க ணேற்றுடை யெம்பிரா னணிதிரு நீற்றை
யங்கை யள்ளியிட் டறலொடுங் குழைத்தன னணிந்தான்
பொங்கு வாரிதி வாவெனக் குடங்கையுட் புகுத
துங்கி னுளத் தரனடித் தாமரை நோக்கி.

(இ - ள்.) சிவந்த கண்ணுள்ள இடபத்தை வாகனமாகவுடைய எமது சிவபெருமானணிகின்ற திருவெண்ணீற்றைத் தமது வுள்ளங்கையிலெடுத்து வைத்து நீர் சேர்த்துக்குழைத்து அணிந்துகொண்டு, பெருகுகின்ற சமுத்திரமே வாவென்றழைத்த வுடனே கடல் குறுகி உள்ளங்கையிற் சேரவுந் தமது இதயத்தில் சிவபெருமானது பாத தாமரையைத் தரிசித்துப்பருகினர். எ - று. (உ௦௦)

வயங்கு வச்சிரப் படைகொடு கடற்பட மறைந்து
முயங்க ரக்கரை முடித்தியென் றொருகர முளரித்
தயங்கு நீறளித் தருளின னவனது தரித்தான்
கயங்க ரந்துறை யரக்கரை முடித்தனன் கணத்தின்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற வச்சிராயுதத்தால், கடலில் மறைந்து கலந்துள்ள அரக்கரை யழிக்கக்கடவை யென்று, தமது ஒப்பற்ற கமலமலர் போன்ற திருக்கரத்தால் பிரகாசிக்கின்ற திருவெண்ணீற்றினைப் பிரசாதித்தனர். அவ்விந்திரன் அதனையணிந்துகொண்டு, சமுத்திரத்துள் மறைந்து வசிக்கின்ற அரக்கர்களை ஒருவிநாடியிலழித்தனன். எ - று. (உ௦க)

பொதுவ றத்தனி நோற்றருள் குறுமுனி போக
மதும லர்த்தொடை யிந்திர னவனடி வணங்கி
யெதுவு ணர்ந்தன னீங்கிவ னிவற்கிடு சாப
மதுவொ ழித்தியென் றடிக்கடி வணங்கின னவனும்.

(இ - ள்.) பொதுத்தன்மைநீங்கித் தனியாகத் தவஞ்செய்த அகத்திய முனிவர் எழுந்தருளவும், தேன்சொரியுங் கற்பகமலர்மாலை தரித்த இந்திரன் அவ்வகத்திய முனிவருடைய பாதங்களிற் பணிந்து, இங்குள்ள இவ்வருணன் தேவரீர் சிறப்பைத்தெரியாதவன். இவனுக்குத் தேவரீர் பணித்த சாபத்தை

விலக்கி யருளவேண்டுமெனப் பிரார்த்தித்து மீண்டும்பலமுறை வணங்கினுன். அப்போது அகத்திய முனிவரும். எ - று. (உ0உ)

வேலை வேலிசூழ் கிடந்தவம் மேதினிப் புறத்து
ஞால மேத்துறும் புயபல ஞட்டினை நணுகி
மாலை வெண்குடை யரசுகொண் டிருப்பவம் மன்ன
ஞலி ரும்படை யிவனெடு முடற்றுவா னணைவான்.

(இ - ள்.) சமுத்திரமே வேலியாகச் சூழ்ந்துள்ள அந்நிலவுலகத்தில், அவ்வுலகத்தார் புகழும் புயபலனென்னும் மன்னவன துவங்கநாட்டை யடைந்து, வெற்றி மாலையும் வெண்கொற்றக் குடையுமுடையவனுய் அரசு செய்கையில், அப்புயபல மன்னன் ஒலிக்கின்ற பெருஞ்சேனையையுடைய இவனேடெதிர்க்க வருவான். எ - று. (உ0ங)

அவனெ திர்ந்தமை யறிந்தன ஞகிநெஞ் சழலா
இவனி ரும்படைச் சேனையோ டடைந்திடு மேல்வைச்
சிவனி னைந்தவ னணிதிரு நீற்றெளி தெரியப்
பவமொ ழிந்துமுன் னுருப்பெறு மிவனெனப் பகர்ந்தான்.

(இ - ள்.) அப்படி அவனெதிர்த்ததைத் தெரிந்தவனுய் மனம்புழுங்கி, இவ்வருணனும் தன் பெரிய ஆயுதங்களையுடைய சேனையோடு எதிர்த்த சமயத்தில்சிவபெருமானைத்தியானித்து அப்புயபலன் அணிந்துகொண்டுள்ள திருவெண்ணீற்றின் காந்தி வீசுதலால், இவனுடைய பாவநீங்கிப் பண்டையவுருவைப்பெறுவானென்று திருவாய் மலர்ந்தனர். எ - று. (உ0ச)

அந்த மாமுனி யுரைத்தநற் காலம்வந் தடைந்தே
னிந்த நின்முக நீறுகண் டவ்வுரு விழந்தேன்
றந்தை நீதனித் தாயுநீ யென்றடி தாழா
மந்த ரம்பொரு புயபலற் குரைத்தனன் வருணன்.

(இ - ள்.) அந்தச்சிறந்த அகத்திய முனிவர் அருள்புரிந்த நற்காலம் வந்தடைந்த படியால், இங்கே வந்து சேர்ந்து, தேவரீர் திருமுகத்திலுள்ள திருவெண்ணீற்றினைத் தரிசித்து அவ்வரக்கவடிவத்தை யகற்றினேன். ஆகையால் எமது தந்தையும் தேவரீரே! ஒப்பற்றதாயும் தேவரீரே! என்று, பாதங்களில் வணங்கி, மந்தரமலை போன்ற புயபல மன்னனுக்கு வருணனுரைத்தனன். எ - று. (உ0டு)

மீண்டு தன்னுடைச் சேனையோ டொருதனி மேற்பா
லாண்டி ருந்தனன் வருணன்மற் றுங்கவ னுரைப்ப
வேண்டு நீற்றுடைப் பெருமையை வியந்தனன் விரும்பி
யாண்டு மத்திரு நீறலா தணிகில னிறைவன்.

(இ - ள்.) வருணன் தன் சேனையோடு திரும்பி, மிகவுயர்ந்த மேற்றிசையில் திசைக்காவலரில் ஒருவனுய் அரசு புரிந்திருந்தனன். கூறிய யாவராலும் வேண்டப்படும் திருவெண்ணீற்றின் பிரபாவத்திற்கு அதிசயித்தவனுய், அப்புயபலன் அன்று தொடங்கி விருப்பத்தோடு எவ்விடத்திலும் அத்தகைச்சிறப்புடைய திருவெண்ணீற்றையன்றிப் பிறிதொன்றையும் அணிய மாட்டான்.

பூசொ ளித்திரு நீற்றினு லிருநிதி புதல்வர்
வாச நான்மலர்க் குழலியர் மாபெருஞ் சேனை

யேசில் செல்வமுற் றிருந்தனன் புயபல னென்பா
ளுசை நீத்தனன் கடைமுறை கைலைசென் றடைந்தான்.

(இ - ள்.) அப்புயபலன் தரித்துக்கொண்டிருக்கும் பிரகாசந்தங்கிய திரு வெண்ணீற்றினாலே, விசேட திரவியங்களும், புதல்வர்களும், மணம் வீசும் புதிய பூக்களையணிந்த கூந்தலுடைய மனைவியர்களும், மிகப்பெரிய சேனைகளு மாகிய குறைவற்ற செல்வமுற்றிருந்தனன். இறுதிக்காலத்தில், இப்பொருள் களிலுள்ள ஆசைகளை யகற்றியவனாய்த் திருக்கைலாயத்தை யெய்தினான்.

பூதி பூசினும் பூதியின் றன்மைகேட் டுறினும்
யாது பாதக மியற்றினும் பாதவ மெனினுந்
தீது றுந்துயர் தொலைவன வாதலிற் சிறந்த
வாதி நீற்றின துண்மையை யாவர்பெற் றறிவார்.

(இ - ள்.) திருவெண்ணீறணிந்தாலும், திருவெண்ணீற்றின் பிரபாவங் களைக் கேட்டாலும், யாது பாவம் செய்திருந்தபோதிலும், [பாதவம்] மரங்க ளென்றாலும் கெடுதியை யுண்டுசெய்யும் துன்பங்கள் அகன்றனவாம். ஆதலின் சிறப்பமைந்த சிருபெருமானுடைய திருவெண்ணீற்றின் உண்மைத்தன்மை யை யாவர்தாம் அடைந்தறியத்தக்கவர்? எ - று. (உ0அ)

எழுது றுமறை மொழிதரு நீற்றியற் சரிதை
முழுது ணர்ந்தவை யுணர்த்தினன் சூதமா முனிவன்
வழுவு றுவழி கேட்டனர் முனிவரர் மகிழ்ந்தார்
தழுவு சிந்தையி னன்பொடு தனித்தனிச் சிறந்தார்.

(இ - ள். எழுதாக்கிளவியாகிய வேதத்திற் சொல்லப்படும் திருவெண் ணீற்றின் பிரபாவமாகிய சரித்திரத்தை முழுவது முணர்ந்து அவ்வளவையும் சிறந்த சூதமுனிவர் திருவாய் மலர்ந்தருளினர். நைமிசாரணிய முனிவர்கள் குற்றமெய்தா வண்ணமாகக்கேட்டுச் சந்தோஷித்து அன்புற்ற மனதோடு ஒவ்வொருவரும் சிறப்புற்றார்கள். எ - று. (உ0கூ)

விபூதிமான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ரு-இ திருவிருத்தம் - ருஉஎ.

ஆறாவது

உருத்திராக்கமான்மியசருக்கம்.

(*)

கலிநிலைத்துறை.

இலங்கொ ளித்திரு நீற்றின தியற்கையை யிசைத்தே
மலங்கு கங்கையோன் கண்ணெனு முருத்திர வக்கந்
துலங்கு மேன்மைபெற் றுணர்ந்தன வுணர்த்துதுந் தொலையா
நலங்கொண் மாதவத் துறையுளீர் கேட்கென நவிலும்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற ஒளியையுடைய திருவெண்ணீற்றின் பிரபாவத்தைச் சொன்னோம். அசைகின்ற கங்காநதியை யணிந்த சிவபெருமானது திருநேத்திரமென்று சொல்லப்படும் உருத்திராக்கத்தினுடைய விளக்கந் தங்கிய பெருமையில் ஆசிரியரால் உபதேசிக்கப்பெற்று நாம் அறிந்தவற்றை யறிவிக்கின்றோம். அழியாத நன்மை தங்கிய பெருந்தவ நிலையுள்ள முனிவர்களே! கேளுங்களென்று சூதமுனிவர் சொல்கின்றனர். எ - று. (௧)

மொழிவ தற்கரு மிதனுடைத் தன்மையை மொழியப்
பழுது றுவழி கேட்டுறிற் கேட்டவை பகரி
னொழிவ ரும்பெரும் பாதக மடைந்துளோ ரெனினு
மழிவ றும்பெருங் கயிலையுற் றிருங்கதி யடைவார்.

(இ - ள்.) சொல்லுதற்கரிய இவ்வுருத்திராக்கத்தின் சிறப்பை எவரேனுஞ் சொல்லத்தவறுபடாதவகையாகக் கேட்டாலும், கேட்டவற்றைப் பிறர்க்குச்சொன்னாலும், நீங்குதற்கரிய மகா பாதகங்களைச் செய்தவர்களானாலும் அழிவற்றிருக்கும் மகா கைலாயமடைந்து பெரிய பதவியை யுறுவார்கள். எ-று.

இதனை யன்பொடு தரிக்கினு மன்பில ராகி
யதனி லோர்மணி தரிக்கினு மாடலஞ் சிலைக்கை
மதனை வென்றரு ளெம்பிரான் கண்ணென வரலாற்
பத மனைத்தையு முதவுமத் தனிமுதற் பரமன்.

(இ - ள்.) இவ்வுருத்திராக்கத்தை அன்புடன் தரித்தாலும், அன்பில்லாதவர்களாய் அம்மணியிலொன்று தரித்தாலும், வெற்றிதங்கிய அழகிய கருப்புவில்லைக்கையிற்றாங்கிய மன்மதனை வென்ற எமது தலைவராகிய சிவபெருமானது திருவிழியென்று வருதலால், அவ்வொப்பற்ற முதற்கடவுளாகிய சிவபெருமான் எல்லாப்பதவிகளையும் அநுக்கிரகிப்பார். எ - று. (௩)

மணிக ளாயிரந் தரித்தாற் பணிகுவா னவனே
பணிகொள் செஞ்சடைப் பரமனென் றேத்திடப் படுமா
லணிபு யத்துமுப் பானிரண் டணிமணி கரத்தி
லிணையின் மாமணித் தொகையறு நான்கெனத் தரிப்பார்.

(இ - ள்.) ஆயிரமணிகளையணிந்து சிவபெருமானை வணங்குகின்றவனே, சர்ப்பத்தை யணிந்த செவந்த சடையையுடைய சிவபெருமானென்று துதிக்கப்படுவான். அழகிய புயத்தில் முப்பத்திரண்டு மணிகளும், அணியத்தக்க மணிக்கட்டுகளில் ஒப்பற்றுச்சிறந்த இருபத்திநான்கு மணிகளுமெனக் கணக்காகத்தரிப்பார்கள். எ - று. (௪)

உச்சி யொன்றிரு காதினிற் பன்னிரண் டுவந்த
வச்சி ரத்தினி னாற்பதெண் ணான்கணி களத்துச்
செச்சை மார்பினூற் றெட்டெனச் சிறந்தணி பவரே
பச்சி ளம்பிடி யிடத்தனென் றேத்துறப் பணிவார்.

(இ - ள்.) உச்சியில் ஒன்று, இருசெவிகளிற் பன்னிரண்டு, விரும்பிய சிறந்த சிரத்தில் நாற்பது, அழகிய கழுத்தில் முப்பத்திரண்டு, மார்பில் நூற்றெட்டெனக்கணக்கிட்டுச் சிறப்போடு தரிப்பவர்களே, பசுநிறமமைந்தஇளமை தங்கிய பெண் யானை போலும் உமாபிராட்டியாரை வாமபாகத்துடைய சிவபெருமானென்று துதிக்கப்படுவார்கள். எ - று. (௫)

தனைமுதி லாமணி பவளமொன் றின்னன தயங்க
விழைப டத்தொடுத் தணியினு மிடையிடை படிகம்
புழைப டுத்தன தொடுத்தன புனையினு மொளிருங்
குழைப சும்பொனிற் புனையினுங் குலக்கதி பெறுவார்.

(இ - ள்.) மிக்கவெண்மையுடைய முத்து பவளம் இவற்றில் ஒன்று விளங்கும்படி ஒற்றுமைப்பட இடையிற் கோத்தணிந்தாலும், இடை யிடையே படிகத்தைத் தொளைப்படுத்தினவாய்க்கோத்தவைகளை யணிந்தாலும், ஒளிவீசும் இளகிய பசும்பொன் சேர்த்தணிந்தாலுங் கதிகளெல்லா மடைவார்கள். எ-று.

தெய்வ மாமணி கரந்தரித் தொருமனுச் செபித்தா
லைய மில்லுரு வொன்றொரு கோடியா மன்றிப்
பொய்யின் மாமணி முடிபொறுத் தீர்ம்புனல் குளிப்பின்
றுய்ய கங்கைநீ ராடினதா மெனமறை சொல்லும்.

(இ - ள்.) தெய்வீகம்பொருந்திய சிறந்த வுருத்திராக்க வடத்தைக் கையி லெடுத்து ஒரு மந்திரத்தைச்சபித்தால், சந்தேகமின்றி யோருரு கோடியுருவாகும். அல்லாமலும் பொய்படாதசிறந்த உருத்திராக்கமணியைச் சிரசிலணிந்து கொண்டு குளிர்ந்த ஜலத்தில் மூழ்கினால் புனிதமான கங்காஜலத்தில் ஸ்நானஞ் செய்ததற்குச் சமானமாமென்று வேதங்கள் கூறும். எ - று. (எ)

இன்ன மாமணி மஞ்சனம் புரிந்திடா திரங்க
மன்னு மாகம விதிமுறை பூசனை வகுப்பார்
பன்ன கக்குழைப் பரமனை வழிபடும் பதவி
நன்ன லம்பெறப் பெறுகுவர் கயிலையை நணுகி.

(இ - ள்) இத்தகைய மேம்பட்ட வுருத்திராக்கமணிந்து ஸ்நானஞ்செய்து அணிவெய்தி, நிலைபெற்ற சிவாகமமுறைப்படி பூசித்து வருபவர்கள், சர்ப்பமாகிய குண்டலமணிந்த சிவபெருமானைத் திருக்கைலாயகிரியிலடைந்து பூசிக்கும் பதவியை நன்மையுறும்படி பெறுவார்கள். எ - று (அ)

ஒருமு கத்தது முகங்களைந் துடையது கருணைத்
திருமு கங்கள்பன் னொன்றுள தருளொடுஞ் சிறந்து
வருமு கங்களீரேழுள தனையமா மணிகள்
கருதி யர்ச்சனை புரிந்தவர் பெருவளங் கலப்பார்.

(இ - இ.) ஒருமுக முள்ளதும் ஐம்முகமுள்ளதுங் கிருபையையுடையபதினொரு திருமுகமுள்ளதுந் திருவருளோடு மேன்மையுள்ள பதினான்கு முகமுள்ளதுமாகிய இவைபோன்ற பெருமை தங்கிய வுருத்திராக்க மணியை யெக்காலமுந் தியானித்துப் பூசைசெய்தவர்கள் பெரும்பாக்கிய மெய்துவார்கள் எ - று

மன்னு சின்மய வுருத்திர வக்கமா மணியின்
முன்னி கழ்ந்துள தோர்கதை யக்கதை மொழிவாம்
பின்ன லஞ்சடை யந்தணீ ரென்றினிப் பிறவாத்
தொன்ன லந்தரு சூதமா முனிவரன் சொல்லும்.

(இ-ள்.) நிலைபெற்ற ஞான மயமாகிய சிறந்த வுருத்திராக்க மணியாற் பண்டைக்காலத்தில் நடந்த வோர் சரித்திர முள்ளது. பின்னலோடு கூடிய வழகிய சடையையுடைய வேதியர்களே! அச்சரித்திரத்தைச் சொல்கின்றோ

மென்று இனிப்பிறவியை யடையாத பூர்வ புண்ணியந்தங்கிய சூத முனிவர் சொல்லத்தொடங்கினர். எ - று. (கo)

நந்தி யென்றுளான் மறைவலோ ரறையுமா நகர
மந்த மாநக ராலயத் தடியரு ளொருத்தி
செந்து வர்க்கனி மழலைவாய்ச் சேயரிக் கருங்கட்
பைந்து ணர்க்குழ னந்தையென் றொருபெயர் படைத்தாள்.

(இ - ள்.) வேதியர்கள் வசிக்கும் நந்தியென்று சொல்லப்பட்ட சிறந்த நகரமொன்றுள்ளது. அப்பெரிய நகரிலுள்ள ஆலயத்தின் [தேவதாசி] அடியருள்ளே யொருத்தி, சிவந்தபவளம்போலும் அதரத்தையும், இனிய மழலைச் சொல்லையுடைய வாயையும், செவ்வரிபடர்ந்த கருநிறம் பொருந்திய கண்ணையும், பசிய மலர்க்கொத் தணிந்த கூந்தலையுமுடையளாய் நந்தையென்னும் பெயருற்றிருந்தாள். எ - று. (கக)

வள்ளை வார்குழை சேவலோர் வானர மிவற்றை
யுள்ள வாசையின் வளர்த்தன ளாங்கவைக் கொருங்கே
யெள்ளின் மாமணியுருத்திர வக்கமுத் திடைகோத்
தள்ளு செம்பொனிற் பொதிந்தன ளுவகையி னணிவாள்

(இ - ள்.) வள்ளையிலை போன்ற காதில் நெடிய குண்டலத்தையுடைய நந்தையென்பாள் ஒருசேவல் குரங்கு ஆகிய இவ்விரண்டையும் மனவிருப்போடு வளர்த்தாள். அவ்விரண்டிற்கும் இகழ்வில்லாதசிறந்தமணியாகிய வுருத்திராக்கத்தை முத்துகளிடையே கோத்து விசேடித்த பசும்பொன்னிலே பதிய வைத்து ஆசையோடு தரிப்பாள். எ - று. (கஉ)

காத ணிந்தனள் கழுத்திடைச் சாத்தின ளுச்சி
மீது சுற்றினள் மென்கையிற் பிணித்தனள் விரும்பி
யோது சேவலங் குழையினும் புனைந்தன ளுவப்பா
லாதி நாயகன் கண்ணெனு முருத்திர வக்கம்.

(இ - ள்.) ஆதிதேவனாகிய சிவபெருமானது திருவிழியென்று சொல்லப்படும் அவ்வுருத்திராக்க மணியைச் சந்தோஷத்தால் அக்குரங்கின் காதுகளிற் றரித்தாள். அவ்விரண்டின் கழுத்திற் கணிந்தாள். அக்குரங்கினுச் சிக்குமணிந்தாள். மெல்லிய கைகளுக்குங்கட்டினாள். முன்சொல்லிய வச்சேவலினழகிய கொண்டைக்கு மாசையாலணிந்தாள். எ - று. (கங)

கூத்து நூன்முறை பயிறரப் பயிற்றினள் குறித்துப்
பார்த்த கண்களுங் களிகொள்வா ளாங்கவை பன்னா
ணீத்து முன்னையூழ் வினைப்படி தம்முயிர் நீங்கிப்
பூத்த சூட்டிடை வாரணங் குரங்கொடும் போன.

(இ - ள்.) பரதமும் அந்நூன் முறைப்படி செய்யக் கற்பித்தாள். அவ்வாறுபழகி அவையாடும்பொழுது அவற்றைப் பார்த்துக் கண்களிரண்டுங் களிப்பாள். குரங்கும், மலர்ந்த வுச்சிக்கொண்டையுடைய சேவலும் ஆகிய விரண்டும் பலகாலமிப்படிக்கழிந்து பண்டைய ஊழ்வினையளவாக வுயிர்துறந்திறந்தன.

சிறந்த வாமணி தரித்தலா லுயிருகச் செல்லா
விறந்து காச்சிமி ரப்பதி யெறுழ்வலி வேந்தன்

பறந்த லைத்திறற் பத்திர சேனனோர் மனைவி
யறஞ்செய் தன்மையால் வாரண மவள்வயிற் றுதிப்ப.

(இ - ள்.) மிகச்சிறந்த வுருத்திராக்க மணியைத் தரித்திருந்ததினால் உயிர் துரந்திறந்துபோய், காஸ்மீர நாட்டையாண்ட வலிய வரசனாகவும், போர்க்களத்தில் வெற்றியடையும் பராக்கிரம சாலியாயுமிருந்த பத்திரசேனனுடைய வொப்பற்ற மனைவி செய்த புண்யத்தின் வசத்தால் சேவல் அவள் வயிற்றிற் பிறக்கவும். எ - று. (கரு)

மற்றை வானர மன்னவ னமைச்சனோர் மனைபாற்
பெறற பேறெனச் சென்றவ தரித்தது பிறப்பக்
கொற்ற மன்னவன் றன்னுடைக் குழவியைக் குறித்துச்
சொற்ற ருஞ்சுதன் மாவென வரும்பெயர் சொற்றான்.

(இ - ள்.) மற்றையதாகிய வானரம் அப்பத்திரசேனன் மந்திரியின் ஒப்பற்ற மனைவியிடத்தில் அவன் புரிந்த தவத்தாற் பெற்ற பேற்றினை யொத்துப்பிறந்தது. இவ்வாறு சேவல் வானரமென்னு மிரண்டும் பிறக்கவும், வெற்றி தங்கிய பத்திர சேனன் தன் குழந்தையை மதித்துப் புகழ் தரத்தக்க சுதன்மாவென அருமையான பெயரிட்டான் எ - று. (கசு)

சுதன்மா-இந்திரன் வசந்த மண்டபம்; நற்றரும முடையவன்.

காலமோர்ந்தறி யமைச்சனு மீன்றகான் முளைக்குச்
சாலு நன்மையிற் றாரக னெனும்பெயர் தந்தா
னேனு மீங்கிவர் கற்பன வெவற்றையு முணர்ந்தார்
வால வேனிலா னெனப்பொலி யெழிலொடும் வளர்ந்தார்.

(இ - ள்.) ஜனனகாலத்தை ஆலோசித்தறிந்த அவன் மந்திரியும் தான் பெற்ற புதல்வனுக்கு விசேடித்த நன்மையாலேதாரகனென்று பெயரிட்டான். பொருந்திய இவர்களிருவரும், கற்கப்படுவன வாகிய அனைத்தையுங் கற்று, பாலியபருவமுற்றமன்மதனெனச் சொல்லும்படி பிரகாசிக்கின்ற அழகோடு வளர்ந்தார்கள். எ - று. (கஎ)

குருமணிக்கலன் பலவுன புனைகிலர் கொடுங்கோ
லொருவி நின்றருண் மன்னவ னுயிரையொத் துணர்ந்தா
ரிருவ ராவியு முடலுமொத் தியஙகுவா ரெம்மான்
கருது ருத்திர வக்கமே வேண்டுவர் கருத்தால்,

இ - ள்.) நிறந்தங்கிய நவமணிகள் பதித்த பலவகையாபரணங்களை அணியாதவர்களாய், கொடுங்கோல் நீங்கி நிலைத்து அரசாளும் பத்திரசேனனென்னும் மன்னனது உயிர்போலத் தெளிந்தவர்களாய், சுதன்மா தாரகனென்னும் இருவர் உடலுமுயிரும்போலச் சஞ்சரிப்பவர்களாய், எமது சிவபெருமானது கருதத்தக்க உருத்திராக்க மணியையே நினைப்புடன் இச்சிப்பார்கள். எ - று.

பொன்செய் மாமுடி யரசமைச் சுரியராய்ப் புகுந்து
முன்செய் நலவினைத் தொடர்பினான் முப்புரஞ் செகுத்தோற்
கன்பு செய்தன ருருத்திர வக்கமே யணிவார்
மன்ப தைக்கினி தளித்துல களித்தனர் மரபால்.

(இ - ள்.) பொன்னாற் செய்த சிறந்த மகுடந்தரித்த அரசனாகவும் மந்திரியாகவுந் தக்கபருவமெய்தியவர்களாய்ப் பிரவேசித்து, சென்ற பிறவியிற்

செய்த புண்ணியத்தொடர்பினாலே, திரிபுரங்களை யெரித்தவராகிய சிவபெருமானுக்கு அன்பு பூண்டவர்களாகவும், உருத்திராக்க மணியையே தரிப்பவர்களாகவும், தம்மரசுரிமையிலுள்ள குடிகளுக்கு நன்மைபாலித்து முறைப்படி உலகத்தை யரசுசெய்தனர். எ - று. (கசூ)

உலகெ லாம்பொது வறப்புரந் தோம்பிய பின்ன
ரலகில் செல்வமு மாயுவுந் துறந்தரா வணிந்த
புலவு முத்தலைச் சூலிவெண் கைலையிற் புகுந்தார்
திலக வாணுத னந்தையு மக்கதி சிறந்தாள்.

(இ - ள்.) உலகமுழுவதையும் பொதுத்தன்மையினின்று நீக்கி [தமக்கே யுரிமையாக்கி] அரசு செலுத்திய பிறகு, எல்லையில்லாத செல்வத்தையும் ஆயுளையும் நீங்கப்பெற்றவர்களாய், சர்ப்பாபரணம் பூண்ட புலான் மணங்கமழும் முத்தலைச்சூலமேந்திய சிவபெருமானது வெண்மை தங்கிய கைலாயகிரியிற் சேர்ந்தார்கள். திலகமணிந்த ஒளிதங்கிய நெற்றியையுடைய நந்தை யென்பாளும் அக்கைலாயபதவியை யடைந்தாள். எ - று. (உ௦)

கேட்கு நன்கதை யின்னுமொன் றுளதது கேண்மின்
வாட்க டுந்திறற் புட்கர தேயத்து மன்னன்
கோட்கொ ளுந்திறற் சவுமியன் குலமனை யொருவி
நாட்க ழித்தனன் பிறர்மனை நலனுகர் நயப்பால்.

(இ - ள்.) கேட்கத்தக்க நல்ல சரித்திரம் மற்றொன்றுண்டு அதனையுங் கேளுங்கள். வாட்போரில் மிகமேம்பட்ட வலிமைதங்கிய புட்கரதேசமன்னனாகிய யாவரும் மதித்தெண்ணத்தக்க பராக்கிரமமுடைய சௌமியனென்பவன் தனது குலபத்தினியைப் பிரிந்து ஏனைமாதர்களின் புணர்ச்சி யின்பத்தை நுகரும் ஆசையாற் பலகாலங்கழித்தான். எ - று. (உக)

நல்லொ ழுக்கெனு மொழுக்கினை மறந்தன னகைக்கும்
புல்லொ ழுக்கினை யீதல திலெனப் புரிவான்
வல்லொ ழுக்கிள வனமுலை மனைவிபான் மணவா
னல்லொ ழுக்கிய வுளத்தனா யுலகுகொண் டளிப்பான்.

(இ - ள்.) சன்மார்க்கமெனும் ஒழுக்கத்தை மறந்து, நகைக்கத்தக்க துன்மார்க்கத்தை இதனிற் சிறந்த மார்க்கமில்லை யென்றுசெய்வான். சூதாடுகருவியைத் தோற்கச்செய்யும் இளமைவாய்ந்த அழகிய முலைகளையுடைய பத்தினியிடஞ்சேரான். களங்கந்தங்கிய மனமுடையவனாய் உலகத்தை யரசாட்சிசெய்வான். எ - று. (உஉ)

வார்க ருங்குழல் வசுமதி யெனுமவன் மனைவி
யூர்த ருங்கர வளையின ளுயிர்ப்பெறி துயராள்
கூரு மைங்கணை படப்படத் தன்னுளங் குழைவாள்
வேரி மென்மலர்ப் பாயலுந் தழலெழ வெதும்பும்.

(இ - ள்.) நீண்ட கருமைவாய்ந்த வசுமதியென்று சொல்லப்படும் அவன் மனைவி, நழுவுகின்ற கைவளையலையணிந்தவளாயும், பெருமூச்சு விடுந்துன்பமுடையவளாயும், (மன்மதனது) கூரிய பஞ்சபாணங்கள் தைக்குந்தோறும்

மனம் வருந்துவாள். தேனோடு கூடிய மெல்லிய புஷ்பசயனமும் சூடுமிக வெப்பமெய்தும். எ - று. (உரு)

செய்ய தாமரை நாயகி யிவளெனச் சிறந்தாள்
வெய்ய வேந்தனைத் துணைப்புயந் தழுவுவான் விரும்பி
யைய நுண்மருங் கெனத்தன தங்கநொந் தயர்ந்தாள்
கைய றுந்துய ருழந்துளம் பலபடக் கவல்வாள்.

(இ - ள்.) செந்தாமரை மலரிலெழுந்தருளிய இலக்குமி இவளே யென்று சொல்ல அழகின் மேம்பட்ட வசுமதி, கொடியோனாகிய அரசனுடைய இரு தோள்களையும் அணைவதற்கு ஆசைகொண்டு, (உண்டில்லை யெனச்) சந்தேகிக்கும் நுண்ணிய தன்னிடைபோல உடல் வருந்திச் சோர்ந்தவளாய், நீக்கமற்ற துன்பமெய்தி மனம் பலவாறு கருத வருந்துவாள். எ - று. (உசு)

அன்ன காலையி லடுதிற லரசர்கோன் றனக்குப்
பன்னு நான்மறைப் புரோகித னுளனவன் பன்னி
யுன்னு கற்பினள் சத்திய விரதையென் றொருத்தி
தன்னை வந்துற வுரைத்தன ளாங்கவள் சார்ந்தாள்.

(இ - ள்.) அத்தருணத்தில், போர்வல்லபமுடைய அம்மன்னர் மன்னனுக்கு, சொல்லுகின்ற நான்கு வேதங்களையுமுணர்ந்த புரோகிதனொருவனுண்டு. அவன் மனைவி, யாவரும் எண்ணற்குரிய கற்புடைய சத்தியவிரதை யென்னும் பெயர் கொண்ட ஒருத்தியை வரும்படி சொல்லியனுப்பினள். அவள் அங்கெய்தினள். எ - று. (உ௫)

அரச னென்றனை யிகழ்ந்தனன் பிறர்க்குள மளித்தான்
வரைசெய் திண்புய னெனதுள நீங்கலான் வருந்திக்
கரைசெ யற்கருங் காதலங் கடலிடைக் கிடந்தே
னுரைசெ யீங்கிதற் குபாயமென் றழுதழு துரைப்ப.

(இ - ள்.) (அவளோடு அரசன் மனைவி) அரசனென்னை வெறுத்து அன்னியமாதர்மே லாசைவைத்தான். (ஆனாலும்) மலை போலும் வலிய தோளையுடைய மன்னவன் என்மனத்தைவிட்டு நீங்கினானில்லை. வருத்தமெய்தி அளவிடற்கரிய ஆசைக்கடலிலமிழ்ந்தேன். இதற்கோருபாயஞ் சொல்லுகவென்று புலம்பிப் புலம்பிச்சொல்ல. எ - று. (உசா)

பெற்ற மேறிய வெம்பிரான் றிருவிழிப் பிறப்பென்
றுற்ற வாறுரைத் துருத்திர வக்கமொன் றுதவிக்
கற்றை வார்குழ லீங்கிது தரித்தியேற் கழற்காற்
கொற்ற வேந்தனுன் வசம்வரும் பிறர்மனை குறுகான்.

(இ - ள்.) இடபவாகனத்தி லாரோகணித்த எமது சிவபெருமான் திருநேத்திரத்திலுதித்ததென்று, அவ்வாறு தோன்றிய சரித்திரத்தைச் சொல்லி, உருத்திராக்க மொன்றினைக் கொடுத்து, தொகுதியாக நீண்டிருக்குங் கூந்தலுடையாளே! இதனை நீ தரிப்பாயாகில், வீரக்கழலணிந்த காலையுடைய வெற்றிதங்கிய அரசன் உன்பால் வருவான். ஏனைமாதரையடையான். எ-று. (உஎ)

நல்லெ ழிற்பிறந் திலங்குவை நன்மகப் பெறுவை
தொல்லை மால்விடை யெம்பிரான் றிருவரு ளடைவை

யில்ல றத்தினின் றிருஞ்சிறப் பெய்துவை யினிநீ
புல்லெ ஞடுடன் வாழ்கெனப் புகன்றனள் போஞள்.

(இ - ள்.) நல்ல அழகுண்டாகி விளங்குவாய். நற்புத்திரனைப் பெறுவாய். பழமைதங்கிய பெரிய இடபத்தையுடைய எமது சிவபெருமான் திருவருளைப் பெறுவாய். இல்லறத்திலிருந்து மிகப்பெருமைபெறுவாய். பொலிவழிந்திராது இனி நீ வாழக்கடவாயென்று சொல்லிப்போயினன். எ - று. (உஅ)

தொழுத கையினள் வாங்கின டரித்தன டுயில்போ
யழுத கண்ணிணை யரிபரந் தாொழி லமைந்தா
ளிழுதை மன்னவ னினையளை நோக்கின னிரங்கி
யொழுகு சிந்தனை யிவட்கல தியாவர்க்கு முதவான்.

(இ - ள்.) (அதுகேட்டவசுமதி) வணங்கிய கையுடையவளாய் அவ்வுருத்திராக்கத்தை யேற்றுத்தரித்தாள். நித்திரையில்லாது அழுதுகொண்டிருந்த இருவிழிகளும் செவ்வரிபடர்ந்து நிறைந்து அழகு வரப்பெற்ருள். அற்பனாகிய அவ்வரசன் இவ்வசுமதியைக்கண்டு மனமிரங்கி, முறைமையாய் அமைந்த நினைவு இவளிடத்திலல்லாமல் வேறொருவர்பாலுஞ் செலுத்தான். எ - று.

முகிழ்த்த வெம்முலை முகத்திடை முகம்புதைத் தொருவா
னெகிழ்த்த சிந்தையி னனையளு மவன்புய நீங்காண்
மகிழ்ச்சி கூர்தர மார னு மிரதியும் போல்வா
ரிகழ்ச்சி செய்தனர் பிறர்மனை யின்னண மிருந்தார்.

(இ - ள்.) குவிந்த வலிய தனங்களையுடைய வசுமதியின் முகத்திலே முகத்தையழுத்திப்பிரியான். உருகிய மனத்துடன் வசுமதியும்அவ்வரசன் தோளைப் பிரியாள். சந்தோஷமதிகரிக்க (அவ்விருவரும்) மன்மதனையும் இரதியையும் போல்வாராகி அயலார்மனையை வெறுத்தவர்களாய் இப்படியிருந்தார்கள்.

நரந்த நாறுபூங் குழலொடு மகத்துறை நாளிற்
புரிந்த வோலக்க மிழந்தனன் வெள்ளிடைப் புகுந்தான்
சுரந்த வெம்படைத் தானையந் தொகுதியைப் புரவான்
பரந்த சேனையுந் திசைதொறுஞ் சென்றது பாறி.

(இ - ள்.) கத்தூரிகமழுங் கூந்தலையுடைய வசுமதியோடு தனதரண்மனையிலிருக்குநாளில், ஒருநாள்தான் விரும்பிய கொலுச்சபையையகன்று அயலூருக்குப் போயினன். பெருகிய வலிய ஆயுதங்களைத்தாங்கிய சேனைத் தொகுதியைக் காக்கவில்லை. அதனுல், பரந்த சேனையும் திக்குகடோறும் ஓடிப்போயின. எ - று. (௩க)

சேனை போயது நோக்கின ரடுபடைத் திறலோர்
கான நாண்மலர்க் கழனிசூழ் நாடெலாங் கவரா
வேனை மாநகர்க் கொடிநுடங் கிஞ்சிசூழ்ந் திறுத்தார்
மான வேற்கர னென்செய்கே னினியென மதித்தான்.

(இ - ள்.) சேனையோடிப்போனதை, போர்செய்யத்தக்க சேனையையுடைய வேற்றரசரறிந்து, சோலைகளும் புதுமலர்களையுடைய கழனிகளுஞ் சூழ்ந்த அம்மன்னவன் நாடுமுழுவதையும் கவர்ந்துகொண்டு, மற்றுள்ள இராஜதானி நகரத்திலே கொடிகளனைசயும் மதிலைச்சுற்றிலுஞ் சேர்ந்தார்கள். அச்சந்தரும்

வேற்படைதாங்கிய கையையுடைய அம்மன்னவன் இனி யென்செய்வே னென்று கருதினன். எ - று. (௩உ)

அளந்த சேனைகொண் டவர்க்கெதி ருடற்றுவா னகன்று
கிளர்ந்த மன்னவர் சேனையைக் குறுகினன் கிட்டி
யுளங்க டுத்தனன் பொருதன னன்னவர்க் குடைந்தான்
வளைந்த விஞ்சிசூழ் மாநகர்ப் புகுந்தனன் வருந்தி.

(இ - ள்.) கணக்கிட்ட சேனையைக்கொண்டு அவ்வரசர்க்கெதிரே போர் செய்யச்சென்று, மனமகிழ்ச்சியுடைய அவ்வரசர் சேனையை நெருங்கியடைந்து மனதிற் கோபமுற்றெதிர்த்தான். அவ்வரசர்க்குத்தான் தோற்றான். அதனால் வருத்தமெய்தி வளைந்த மதில் சூழ்ந்த பெரிய தனது நகரத்திற் பிரவேசித்தனன். எ - று. (௩௩)

கொடிநு டங்கிய கோயிலுட் புகுந்துளங் குழைத்து
வடிநெ டுங்குழை மனைக்கம ரிழந்தவா வகுத்து
நெடிது நெஞ்சுகொண் டினைந்தனன் வெருவர னீங்கான்
கடிம லர்க்குழ லாங்கது கண்டனள் கழறும்.

(இ - ள்.) துவசங்களசைகின்ற அரண்மனையிற் பிரவேசித்து, மனங்கசிந்து, மிக நீண்ட கூந்தலையுடைய மனையாட்டிக்கு, தான்யுத்தத்திற் றோற்றமையைக்கூறி, மிகவும் மனவருத்தங்கொண்டு பயமகலாதவனு யிருந்தான். மணம் பொருந்திய மலர்மாலையணிந்த கூந்தலையுடைய அவன்மனைவி அதனை நோக்கிச் சொல்லுவாள், எ - று. (௩௪)

ஏழை யாயினு மென்னுரை மனக்கொளி னிகலார்
பூழி யாகுவர் நின்குடை யொருதனிப் பொலியும்
வாழி மங்கைய ருணர்த்துசொற் கோடலை வழுவென்
றூழி மாநிலம் புகல்வது மேற்கொள லைய.

(இ - ள்.) அடியாள் பெண்பாலாயினும் என் சொல்லை மனதிற் கொண்டால், சத்துருக்கள் சாம்பராவார்கள். உம்முடைய வெண்கொற்றக்குடையே! ஒப்பற்றதாக விளங்கும் மாதர்களுணர்த்துகின்ற சொற்களைக் கொள்ளற்கதவறென்று, கடல்சூழ்ந்த பெரியநிலவுலகத்தார் சொல்வதை மேற்கொள்ள வேண்டாம். தலைவரே! எ - று. (௩௫)

உருத்தி ரற்கிரு கண்ணெனு முருத்திர வக்கந்
தரிப்ப துண்டெனி லெவ்வுல குப்பெறத் தகுமான்
முருக்கு தெவ்வரு முன்னிலார் முருங்குவ ரிதுநீ
யருத்தி கூர்தர மேலவர்க் கேட்டுணர்ந் தறிதி.

(இ - ள்.) உருத்திர மூர்த்தியின் இருவிழிகளென்று சொல்லும் உருத்திராக்கமணியைத் தரிப்பீரானல் எல்லா உலகங்களையும் அடையலாகும். வருத்துகின்ற பகைவரும் முன்னின்று எதிர்க்கமாட்டாது அழிவார்கள். இதனைத் தேவரீர் ஆசைமிகும்படி பெரியோரை விசாரித்து ஆலோசித்தறியக் கடவீர்.

என்வு ரைத்தசொற் கேட்டுளத் துணர்ந்துயி ரன்ன
மனைவி சொற்றசொன் மறுத்தில னுகிமா மறைநூல்
வினைய மோர்ந்தறி புரோகிதற் கொணர்கென விளித்தா
ரனைய னெய்தின னவனுரை யாங்கவற் கறைந்தான்.

(இ - ள்.) என்று வசுமதிகூறிய வார்த்தையைக்கேட்டு மனதில் யோசித்து, உயிர்போன்ற மனையாட்டி சொல்லியசொற்களைத் தடுக்காதவனாகி, சிறந்த வேதநூல்களை நன்கு கற்றுணர்ந்த புரோகிதரைக் கொண்டுவருகவென ஆள்விட்டு, அப்புரோகிதன் வந்தனன். தன் மனைவியின் வார்த்தையை அப்புரோகிதனோடு சொன்னான். எ - று. (௧௭)

கேட்ட வேதிய னுவகையிற் கிளர்ந்தன னாகித்
தோட்ட டங்களு முள்ளமுந் துனுக்குறச் சொல்வா
னோட்டு வெள்விடை யவனணி யுருத்திர வக்கம்
பூட்டி டுங்கல னுமென வரன்முறை புனையின்.

(இ - ள்.) சொல்லக்கேட்ட புரோகிதன், சந்தோஷத்தில் மிகுந்தவனாகி, பரந்ததோள்களும் மனமும் நடுக்கெய்தச்சொல்லுகின்றான். செலுத்துகின்ற வெள்ளிய இடபவாகனமுடைய சிவபெருமானது அழகிய உருத்திராக்கமானது அணியத்தக்க ஆபரணமாக விதிப்படி யணிந்தால். எ - று. (௧௮)

மாறு நீங்குவை யளவொழி மாநிதி வளர்ப்பை
யூறு நீங்குவை யும்பருந் தொழுவர்மற் றுன்னை
யேறு யர்த்தவ னிணையடி பெறுகுவை யிதனைக்
கூறு சொன்முறை புனைகுதி யென்றனன் குரவன்.

(இ - ள்.) பகைவரைத்தவிர்வாய். எல்லையில்லாத பெருஞ் செல்வத்தை விர்த்தி செய்வாய். துன்பகல்வாய். உன்னைத் தேவர்களும் வணங்குவார்கள். இடபத்தைக் கொடியாக உயர்த்திய சிவபெருமானது உபயபாதங்களை யடைவாய். இதனைநாம் சொல்லுகின்ற கட்டளையின் முறைப்படி யணியக் கடவாயென்று புரோகிதன் கூறினன். எ - று. (௧௯)

நீதி நான்மறைப் புரோகிதன் சொன்முறை தெரிந்தா
னாதி நாயகன் கண்ணெனு முருத்திர வக்கம்
பேதி யாதுகொண் டாயிரம் பொறுத்தனன் பின்னர்
மாது மத்துணை பொறுத்தனள் வானுளோர் மதிக்க.

(இ - ள்.) குற்றமில்லாத நான்கு வேதங்களையுமுணர்ந்த புரோகிதன் சொல்லிய முறையை யுணர்ந்தான். (அப்படியே ஆதிநாயகனாகிய) சிவபெருமானது திருவிழியென்னும் உருத்திராக்கமணியை மனவேறுபாடின்றி விருப்போடு ஆயிரம் அணிந்தான். அதன்பின்னர், அவன் மனைவியும் தேவர்கள் துதிக்கும்படி அவ்வளவினவாகிய உருத்திராக்க மணிந்தனள். எ - று. (௨௦)

பின்ன ரன்னவன் சேனையி னுடனெழீஇப் பெருவான்
மன்னு பொற்கொடி நுடங்கிய கொடிஞ்சிமான் றேர்மே
லன்ன மன்னளைப் பாகென வமைத்திக லமர்க்குத்
துன்ன ருங்கடுஞ் சினந்தலைக் கொண்டனன் றொடர்ந்தான்.

(இ - ள்.) பின்னர், அவ்வரசன் தன்சேனையோடு புறப்பட்டு, பெரிய ஆகாயத்தில் நிலைபெற்ற அழகிய துவசங்கள் அசையுங் கொடிஞ்சியையுடைய, குதிரை பூட்டிய தேர்மிசையூர்ந்து, அன்னம்போல்வாளாகிய தன்மனைவியைச் சாரதியாக நிறுத்தி வலிதங்கியபோருக்கு, அடைதற்கரிய பெருங்கோபமிக்கவனாய்ச் சென்றனன். எ - று. (௨௧)

தொடர்ந்த சேனையுந் தானுமாய்த் தோன்றலுந் தொடர்ந்து
படர்ந்த சேனைகொண் டெதிர்ந்தனர் பகைப்புல வேந்தர்
மிடைந்த சேனைநின் றெதிரெதி ருடற்றலும் வெகுளாக்
கடந்த வெம்புலத் தடையலர் புறந்தரக் கடிந்தான்.

(இ - ள்.) தன்னைப் பின்றொடர்ந்த சேனையுந்தானுமாகக் காணப்படவும், பகைப்புலமன்னர்கள் தங்கள் பரவிய சேனையோடு எதிர்த்துப்போர்செய்தார்கள். நெருங்கிய இருதிறச் சேனைகளும் எதிர்நின்று ஒன்றோடொன்று போர் செய்யவும், அவ்வரசன் கோபமுற்றுத் தன் கட்டளை கடந்த மறுபுலப்பகைஞரை முதுகுகாட்டியோடத் துரத்தினான். எ - று. (சஉ)

போன போனதிக் கறிந்தில ரெதிரமர் புரிந்தார்
மான வேந்தனு மன்னவர் பெருநிலம் வவ்வித்
தானை காவலர்க் களித்தனன் றன்னக ரடைந்தான்
ஞான நாயகன் விழிமணிப் பெருமையார் நவில்வார்.

(இ - ள்.) அவர்கள் சென்ற சென்ற திசைகளை ஒருவரும் அறியவில்லை. அச்சத்தையுண்டு செய்யும் வேலேந்திய அரசனும் அப்பகைமன்னருடைய பெரிய பூமியைக் கைப்பற்றிச் சேனாநாயகர்கட்குக் கொடுத்துத் தன்னகரமடைந்தான். ஆனபடியால் ஞானநாயகனாகிய சிவபெருமானுடைய உருத்திராக்க மணியின் பிரபாவத்தை எவர்தாம் சொல்லவல்லவர்? எ - று. (சங)

தனிப்பெ ருங்குடை பொதுவற நிழற்றினன் றனது
கனித்த சிந்தையி னுருத்திர மணியணி கழற்றான்
பனிப்பெ ருங்கட லுடுத்தகன் மாநிலப் பரப்பி
னனைத்து ளோரையு மம்மணி பொறுத்திரென் றறைந்தான்.

(இ - ள்.) தனிமையாகிய வெண்கொற்றக்குடையைப் பொதுத்தன்மை நீக்கித்தானே நிழற்றினான். தன் கனிவுற்ற மனத்தோடு உருத்திராக்க மணிவடத்தைக் கழற்றாதவனாகி, குளிர்ச்சி தங்கிய பெரிய கடல் சூழ்ந்த பரந்த பூலோக முழுவதும் யாவரையும் அவ்வுருத்திராக்க மணியை அணியுங்களென்று கட்டளையிட்டான். எ - று. (சச)

உலகம் யாவையு முருத்திர மாமணி புனைவித்
தலகில் வெண்குடை யரசளித் தினிதுறை யந்நாள்
மலர்த ருந்தொடைச் சௌமியன் றனக்கெழின் மைந்த
ரிலகு மாமணிப் பெருமையிற் றோன்றின ரிருவர்.

(இ - ள்.) உலகிலுள்ளோ ரெல்லாரையும் உருத்திராக்க மணியையணியச் செய்து, குற்றமில்லாத வெண்கொற்றக் குடை நிழலில் இராசரீக நடத்த இனிதாக வசித்திருக்குங் காலத்தில், மலர்மாலை யணிந்த சௌமியனெனும் அவ்வரசனுக்குப் பிரகாசிக்கின்ற உருத்திராக்க மணியின் சிறப்பினால் அழகிய புத்திரரிருவர் பிறந்தார்கள். எ - று. (சரு)

இவரை யன்றியு மிருமகட் பயந்தன னென்ப
தவமு யற்சியிற் றருமிரு மைந்தர்கட் மக்கள்
றவிர தன்னதி ரதனெனப் பெறும்பெய ரறைந்தான்
கவினை மன்னவன் பின்னிரு மகளிர்பேர் கழறும்.

(இ - ள்.) இவ்விரண்டு புத்திரர்களையல்லாமலும் இருபுத்திரிகளையும் பெற்றானென்று (மூன்னோர்) சொல்லுவார்கள். தவமுயற்சியாற் பெற்ற இரு குமாரர்களுக்கு அவீரதன் அதிரதனென்று பெயரிட்டான். வெண்கொற்றக் குடையையுடைய அரசன் அதன் பின்னர் இருகுமாரத்திகட்கும் பெயர்சொல்லுகின்றான். எ - று. (சகூ)

காலஞானியென் றொருமகட் குரைத்தனன் கவிகூர்
வால சித்திராங் கனையென மற்றவட் குரைத்தா
னுலு மக்களு முருத்திர நன்மணி தரிக்கச்
சாலு மென்றவை கொடுத்திட வாங்குபு தரித்தார்.

(இ - ள்.) காலஞானியென்று ஒரு குமாரத்திக்குப் பெயர்வைத்தான். ஆசைமிக்க இளமை தங்கிய சித்திராங்கனையென்று மற்றொருகுமாரத்திக்குக் கூறினான். நான்குகுழந்தைகளும் நல்ல உருத்திராக்கமணி தரிக்கத்தகுமென்று கொடுக்க, அவர்கள் அங்ஙனமே அவற்றை வாங்கித் தரித்தார்கள். எ - று.

இத்தி றத்தின ரிவரிவ ணிருந்தன ரிப்பான்
மைத்த டம்பொழில் வளவய லுடுத்தமே னாட்டு
மெய்த்த நன்னெறிப் பிரமநா தன்னெனும் வேந்தன்
முத்த வெண்குடைக் கனைகழ லொருதனி முதல்வன்.

(இ - ள்.) இவர்கள் இத்திறத்தினராகி இப்படி இருந்தார்கள். இதன் மேல், மேகந்தவழும் விசாலமான சோலைகளும் வளந்தங்கிய வயல்களுஞ் சூழ்ந்த மேனாட்டிலே, உண்மையாகிய நல்லொழுக்கமுடைய பிரமநாதன் எனும் மன்னவன், வெள்ளிய முத்துக்குடையையும், ஒலிக்கின்ற வீரகண்டாமணியையு முடைய ஒரு ஒப்பற்ற அரசனிருந்தான். எ - று. (சஅ)

அனைய மன்னவ னருந்தவ முயற்சியி னளித்த
தநய னாகிய தாமரைக் கண்ணனைத் தனிக்கோற்
புனைபொ லன்கழற் சௌமியன் றவந்தரு புதல்வி
வனைக ருங்குழற் காலஞா னியைச்சென்று மணந்தான்.

(இ - ள்.) அத்தகைய பிரமநாதனுடைய அருந்தவப் பிரயத்தனத்தாற் பெற்ற புதல்வனாகிய கமலாக்கனென்பவன்: அந்த ஒப்பற்ற செங்கோலையும் அலங்கரிக்கின்ற பொன்னாலான வீரக்கழலையுமுடைய சௌமியனுடைய தவப் புதல்வியாகிய அழகிய கரிய கூந்தலையுடைய காலஞானியைச் சென்றுமணஞ் செய்தான். எ - று. (சகூ)

வன்னி முன்னரின் மணந்தனன் மணவினை முற்றி
யின்ன லந்தரு மணவினை யவளொடு மெய்திக்
கன்னி நன்னலங் காமுற வாங்கது கருதிப்
பின்ன கந்தரு தொடையின ளவற்கெதிர் பேசும்.

(இ - ள்.) அக்கினியின் முன்பாக மணஞ்செய்தவன், விவாகச்சடங்குகள் முடிந்து இனிய சுகத்தைத் தரத்தக்க மனையாட்டியோடும் தன்னகரடைந்து, அப்பெண்ணின் கலவியின்பத்தை விரும்ப, பின்னலின்கண் பலமலர் மாலையணிந்த காலஞானி அக்கமலாக்கனுக்கெதிர் சொல்லுகின்றாள். எ - று. (ருo)

அரசர் தொல்குலத் துதித்தனை யாயினு மரச
வுரைசெ யற்கருந் தன்மைய வுருத்திர வக்கஞ்

சிரமணிந்தனை தீண்டுதி யல்லையேற் றீண்டேல்
வரைசெய் திண்புய மறுத்தனன் வேண்டலை மணாத்தல்.

(இ - ள்.) அரசனே! பழமையாகிய க்ஷத்திரிய குலத்திற் பிறந்தாயென்றாலும், சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய உருத்திராக்கமணியைச் சிரசிற் றரித்துக்கொண்டு என்னைப்பரிசிக்கக்கடவாய்; அல்லாவிடில் என்னைப் பரிசிக்க வேண்டாம். மலைபோலும் வலிய தோளைத்தழுவவேண்டாமெனத் தடுத்தாள்.

என்னக் கேட்டுழி முறுவலித் திருங்கழல் வேந்தன்
பொன்னிற் பூண்பண வேண்டுவ வுளவெனப் புகலா
நின்னிற் பூணுதி யென்றுநீ நிகழ்த்திய மணிதான்
மன்னர்க் காவதொன் றன்றென வுரைத்தெதிர் மறுத்தான்.

(இ - ள்) என்று சொல்லக்கேட்டபோது, வலிய வீரக்கழலணிந்த கமலாக்கன் புன்னகைசெய்து பொன்னாபரணங்களி லணியத்தகுவன கணக்கின்றியிருக்கின்றன வெனக்கூறி, உன்னாலணிக வென்று நீகூறிய உருத்திராக்கமணியானது அரசர்களுக்கு உரித்தான தொன்றன்று எனக்கூறி எதிராகத் தடுத்தான். எ - று. (௯௨)

ஆய மாமணி யுருத்திர வக்கமுற் றணிந்தார்
மாயி ரும்புவிச் செல்வராய் மன்னரிற் சிறப்பா
ரேய வெள்ளியங் கைலைவீ ற றிருப்பரீ திகழ்ந்தோர்
பாய வெண்டிரை நிலத்துழல் பஞ்சபா தகரே.

(இ - ள்.) (காலஞானி சொல்லுகின்றாள்.) உருத்திராக்கமாகிய சிறந்த மணியையுடல் முழுதுந்தரித்தவர்கள் சிறந்த பெரிய பூலோகத்தில் தனவான்களாய் அரசர்களாய் மேம்படுவார்கள். பொருந்திய வெள்ளிமலையாகிய திருக்கைலாயத்தில் வீற்றிருப்பார்கள். இதனை நிந்தித்தோர் பரந்த வெள்ளிய அலைகள் சூழ்ந்த பூமியில் அலையும் பஞ்சமாபாதகர்களாவார்கள். எ - று. (௯௩)

ஆகமத்துறை முற்றுணர்ந் தறிந்தவர்க் கொணர்ந்து
யோக நாயகன் விழிமணிப் பெருமைகேட் டுணர்ந்து
நீக வன்றொழி சிந்தனை நிரம்பியொத் தனையே
லேகன் மாமணி புனைகுதி யென்றன ளிறைவி.

(இ - ள்.) ஆகமநூல்களில் முழுதுணர்ந்த அறிஞர்களை விளித்து, யோக நாயகனாகிய சிவபெருமானது உருத்திராக்கமணியின் பிரபாவத்தை விசாரித்தறிந்து, நீ மயங்கிய அறிவை நிரம்பியொப்புவாயாகில், ஏகநாயகனாகியசிவபெருமானது சிறந்த உருத்திராக்கமணியை யணிகுக வென்றரசி கூறினள். எ-று.

யாவ ராயினு நானெடுத் துரைப்பவர்க் கொண்டு
பாவை நீயத னிலைமையைப் பகர்தரப் பணித்தாற்
பூவை நானுனக் கெனக்குநீ புருடனா குதியென்
றேவி னூழ்வினை வலியினா லுணர்ந்தில னுரைத்தான்.

(இ - ள்.) நான் சொல்பவர்கள் எவரையாயினுங் கொண்டு நீ யவ்வுருத்திராக்கத்தின் சிறப்பைச் சொல்லச் செய்வாயாயின், பாவைபோல்வாளே! நானுனக்கு மனைவி. நீ யெனக்கு நாயகனாகுக வென்று, கெடாத ஆழ்வினைவசத்தால் கமலாக்கனறியாது கூறினன். எ - று. (௯௫)

கன்னி யவ்வணம் பொருந்தினள் கழிந்தது கங்கு
லன்ன மென்னடைக் கருங்குயி லனையவ ளோடும்
பொன்ன லங்கொளி மண்டபம் புலரியிற் புகுந்தான்
பன்னு நான்மறை யவரொடு மரசரும் படர்ந்தார்.

(இ - ள்.) காலஞானியும் அவ்வகைக் கிணங்கினாள். இரவு நீங்கிற்று. அன்னம்போன்ற மெல்லிய நடையையுங் கரிய குயில்போன்ற குரலையுமுடைய காலஞானியோடும் காலையில் பொன்னாலலங்கரித்து விளங்குங் கொலுமண்டபத்தில் அரசன் பிரவேசித்தான். சொல்லுகின்ற நான்கு வேதமுணர்ந்த அந்தணருமரசரு மாங்குற்றார்கள். எ - று. (ருசு)

இவர்சொற் றலது தேறுது மென்றுநீ குறித்த
வவரைக் காட்டுதி யென்றன ளாயிழை யரசன்
சுவரிற் றீட்டிய மாயவன் றுயிலுருச் சுட்டி
யிவரைக் கொண்டுநீ பகர்வியென் றிசைத்தன னிகலி.

(இ - ள்.) ஆராய்ந்த ஆபரணங்களை யணிந்த காலஞானி, இவர்கள் சொன்னாலதனை யுணர்வோமென்று, நீ குறிப்பிட்ட அவரைக் காட்டுகவென்றாள். அரசனாகிய கமலாக்கன் கோபித்து, சுவர்த்தலத்திலெழுதிய திருமாலின் சயனகோலத்திருவுருவைச் சுட்டிக்காட்டி யிவரைக் கொண்டு நீ சொல்லுவிப்பாயாகவென்று கூறினன். எ - று. (ருஎ)

நிலைக லங்கல ளனையதற் கிசைந்தன ணின்று
ளலைத டங்கட லிருவிழி துயிற்றுமோ ரவனைத்
தொலைவின் மாமணிப் பெருமையைச் சொலச்சொலி யருளென்
றிலகு வெண்மதி யணிதரும் புனிதனை யிரப்பாள்.

(இ - ள்.) மனநிலைகலங்காதவளா யதற்குச்சம்மதித்து நின்று, அலைவீசும் விசாலமான திருப்பாற்கடலில் இருகண்களுந் துயிலுகின்ற வொப்பற்ற அத்திருமாலைக் கெடுதலில்லாத சிறந்த உருத்திராக்கமணியின் சிறப்பையுரைக்கும்படி யுரைத்தருளவேண்டுமென்று, பிரகாசிக்கின்ற வெள்ளிய (பிறைச்) சந்திரனையணிந்த சிவபெருமானைப் பிரார்த்திப்பாள். - - று. (ருஅ)

கோச்சகக்கலிப்பா.

வெண்ணீ றணிந்த விமலா விரிசடைமேற்
றெண்ணீர் பொறுத்த சிவானந்த வெள்ளமே
பண்ணீர் மொழியொருத்தி பங்கா கடுவொடுக்கு
மொண்ணீல கண்டா வுயிர்க்குதவ வேண்டுமால்.

(இ - ள்.) திருவெண்ணீறு தரித்த மலரகிதனே! பரந்த சடையின்மேல் தெளிந்த கங்காசலத்தைத்தாங்கிய சிவானந்தப் பெருக்கமே! பண்ணின்றன்மையமைந்த சொல்லையுடைய உமாபிராட்டியை யொருபாகத்திலுடையவனே! ஆலால விடத்தையொடுக்கிய வொளிதங்கிய திருநீலகண்டனே! அடியேனுடைய உயிருக்குதவி செய்யவேண்டும். எ - று. (ருகூ)

எனப் பொருப்பா யனமா யிருகிலனும்
வானத் தளவு மருண்டார்க்கும் வந்திலா

பூனெக்க வன்பர்க் குடனிற்பா யென்பதெலாங்
காணக் குழல்பங்கா வித்தலையிற் காண்பேனால்.

(இ - ள்) மலைபோன்ற பன்றியா யன்னமாய்ப் பெரிய பூமிமுழுவதும் ஆகாயம் வரையும் மயக்குற்ற திருமால் பிரமர்களுக்குங் காணப்படாதவனே! என்புகள் நெக்குவிட்டுருகிய அடியார்களுக்குடனே தோன்றுபவனே! [உட னிருப்பவன்] என்று சொல்லுவதெல்லாம் மணம் வீசுங் கூந்தலையுடையவுமா தேவிபாகனே! இவ்விடத்திற் காணப்போகின்றேன். எ - று. (சுo)

மையார் களத்தாய் மறியாய் மழுப்படையாய்
பையா டரவணைய பாய்விடையா யன்பிலர்க்குப்
பொய்யாய் பிறந்திறவாப் புண்ணியா வென்போல்வார்
மெய்யாய் நினைத்தேன் முடித்தருள வேண்டுமால்.

(இ - ள்.) விடம்பொருந்திய கண்டத்தையுடையவனே? மானேந்திய வனே! மழுவாயுதந் தாங்கியவனே! படம்விரித்தாடும் ஆதிசேடனுகுஞ் சர்ப்ப சயனத்தையுடைய பாய்ந்து செல்லுமிடபத்தை வாகனமாகக்கொண்டவனே! அன்பில்லாதவர்க்குப் பொய்யானவனே! பிறத்த லிறத்தலில்லாத புண்ணிய சொரூபியே! என்போன்றவர்களுக்கு மெய்யானவனே! அடியானொன்று கருதினேனதனை நிறைவேற்றவேண்டும், எ - று. (சுக)

என்று விழிமுகிழ்த்துக் கையேந்தி யெக்குற்று
நின்று வருந்து நிலையுணர்ந்தா னெம்பிரா
னன்று சுவரொழுது மாடரவிற் கண்டுயிலுங்
குன்ற மெடுத்தோ னெழுந்துவிழி கொட்டினான்.

(இ - ள்.) என்று கண்களை மூடிக் கையையேந்தி யேக்கமடைந்து நின்று வருந்துகின்ற நிலைமையை யெமது சிவபெருமானறிந்தனர். அப்பொழுது அச்சுவர்த்தலத்தில் சித்திரித்திருந்த படமெடுத்தாடும் பாம்பணையில் அறிது யில் கூருங் கோவர்த்தனமலை யெடுத்ததிருமால் எழுந்து நின்று கண்களை யிமைத்தனர். எ - று. (சுஉ)

பாடினா ணெஞ்சம் பதைப்பொழிந்தா ளுச்சிகரஞ்
சூடினாள் பச்சைத் துழாய்மௌலித் தூயோனைக்
கூடினா ளெந்தா யுலகளந்து கொண்டருள
நீடினாய் நின்ற நிமலா சரணென்றாள்.

(இ - ள்.) (காலஞானி) தோத்திரஞ்செய்தாள். மனநடுக்கமகன்றாள். உச் சியில் கைகளைக்கூப்பினாள். பசிய துளபமாலையணிந்த திருமுடியையுடையபுனி தராகிய திருமாலைச் சமீபித்தாள். எந்தையே! உலகத்தையளந்து கொள்ளும் பொருட்டு விசுவரூபங்கொண்டவனே! (காட்சிதந்து) எதிர்நின்ற மலரகிதனே! அடைக்கலமென்றாள். எ - று, (சுங)

ஓதற் கரிய வுருத்திரவக் கப்பெருமை
பூதர்க் கறிவான் புலப்படுத்தி யென்றருள
மாதர்க் கரசே சௌமியர்கோன் மாதவமே
போதக் கொழுந்தே யுரைக்கே னெனப்புகல்வான்.

(இ - ள்.) சொல்லுதற்கருமையாகிய வுருத்திராக்கத்தின் சிறப்பை என்னுயிர்போல்வார் அறியும்படி யறிவிப்பாயென்று பிரார்த்திக்க, பெண்கள் நாயகமே! சௌமியனென்னு மரசன் புரிந்தபெருந்தவமே! ஞானச்சுடரே! சொல்கின்றேமெனச் சொல்வாராயினர். எ - று. (௬௪)

ஊனாறு சூலி யுருத்திரவக் கப்பெருமை
யானோ புகல்வே னெனக்குமெளி தாயிற்றோ
வானா தனுபொறுத்தார்க் கண்டா ரணிகைலைக்
கோனாகித் தேவர் குழாம்போற்ற நிற்பரால்.

(இ - ள்.) புலான் மணங்கமழுஞ் சூலப்படைதாங்கிய சிவபெருமானது உருத்திராக்கத்தின் பெருமையை நானோ சொல்லவல்லேன்? எனக்கும் அது எளிதாக நின்றதோ? எளிதன்று! அதனையணிந்தவர்களைத் தெரிசித்தவர்கள் அழகிய கயிலாசபதியின் சாருபமுற்றுத் தேவர்கூட்டங்கள் துதிக்கவிளங்குவார்கள். எ - று. (௬௫)

சென்மித்த நாண்முதலாய்த் தீநெறிக்கட் சென்றுசென்று
வன்மித்த நெஞ்சராய்க் கொன்றுண்ட வன்கணரு
நின்மித் தரனருளிண்மணியி லொன்றணிந்தா
லென்மற் றவர்பெறும்பே றெம்மனோர்க் கெய்துவதே.

(இ - ள்.) பிறந்தநாண் முதலாகத் தீயொழுக்கங்களில் நடந்துநடந்து கடினசித்தமுடையராய்க் கொன்றுபுசித்த வன்கணரும், நியதிசெய்துகொண்டு சிவபெருமானருளிய பெருமைமிக்க வுருத்திராக்கமணியில் ஒன்றனைத் தரித்தாலவர்களடையும்பேறு என்போல்வார்களுக்கடையத்தக்கதோ! என்ன.

யாது தவமிழைத்தா ராலு மிம்மணியோர்
போது தரித்திலரே லத்தவமும் பொய்ம்மையே
பூதி யுலோக முருக்கியவர் சிந்தூரத்
தாது கொடுத்திலரே லென்னுமத் தன்மையதே.

(இ - ள்.) எத்தகைத் தவத்தைச் செய்தவர்களானாலும் இவ்வுருத்திராக்கமணியை யொருகாலமும் அணியாதிருப்பார்களானா லந்தத்தவமும் பொய்யேயாம். உலோகங்களை மூசையிலிட்டுருக்கினவர் வேதிச்சிந்தூரம் என்னும் பரிசவேதியை யதனுட்சேர்க்காவிடி லென்னபயனுண்டு? அதுபோலவேயாம். ()

அன்ன மணிப்பெருமை யென்னா லளப்பரிதான்
முன்னர்ப் பிறந்திறவா மூர்த்திமுகக் கண்ணாகித்
தொன்மை யனவா யொழியாப் பவந்தொலைக்கும்
தன்மை யுனைப்போ லெவருணர்ந்தார் தையலே.

(இ - ள்.) பெண்ணே! அத்தகைய உருத்திராக்கமணியின் மகிமையை என்னாலளவிட்டுச்சொல்ல முடியாது. பிறந்து இறக்குந்தன்மையற்ற சிவபெருமானது முகத்தின்கண்ணுள்ள கண்ணாகி முதலிற்றோன்றி, பழமையாய் நீங்காது தொடரும் பிறவியை அது தொலைக்குந்தன்மையை உன்னைப்போல் யார்தாம் அறிந்துள்ளார்? (ஒருவருமிலர்) எ - று. (௬அ)

என்னாப் பலவு மெடுத்தோதி யெம்பிரான்
பன்னா கணைப்புறத்து முன்போற் றுயில்பயின்றான்

முன்னான் மறையோர் முடிவேந்த ரெல்லோரும்
பொன்னாண் முளரிமயி லன்னவளைப் போற்றினார்.

(இ - ள்.) என்று (அவ்வுருத்திராக்கத்தின்) பல சிறப்புக்களையும் எடுத்துச்சொல்லி, எமது பெருமானாகிய விஷ்ணுமூர்த்தி பண்டுபோல், விடப்பல்லையுடைய சேஷசயனத்தில் யோகநித்திரையிலிருந்தனர். முன்னின்றவர்களாகிய நால்வேதமுணர்ந்த அந்தணர்களும் மகுடமணிந்த மன்னர்களும் ஆகிய அங்கிருந்த யாவரும், பொன்மயமாகிய அன்றலர்ந்த தாமரைமலரிலெழுந்தருளிய மயிலின் சாயலையுடைய திருமகள்போல்வாளைத் துதிசெய்தார்கள்.

கண்டிதுவென் னென்று திகைத்த கமலாக்கன்
கொண்ட வதிசயத்தி னின்றான் குலத்தரசன்
ஒண்டொடிதற் சூழ்ந்த வுயிர்ப்பாங் கியர்குழுமித்
திண்டிறல்வேன் மன்னர்க் கெதிர்நோக்கிச் செப்புவார்.

(இ - ள்.) இதனைப்பார்த்து என்ன அதிசயமென்று திகைப்பெய்திய கமலாக்கன் அதிசயங்கொண்டு நின்றான். உயர்குலத்தரசனான கமலாக்கன் மனைவியாகிய காலஞானியைச்சூழ்ந்து நின்ற தோழியர்கள் கூடி, மிக்க வலி தங்கிய வேலேந்திய அரசனை எதிர்நோக்கிச் சொல்லுகின்றார்கள். எ - று. ()

வேந்தர் குலத்துதித்து வெண்குடையிற் பார்புரக்கு
மாந்தரில் யானொருவ னென்னா மனநினையேல்
காந்தையரில் யானொருத்தி யென்னுங் கருத்துளையாய்ப்
பூந்தளவ மூரலா ரின்னுருவாய்ப் போதுதியால்.

(இ - ள்.) அரச குலத்திற்றோன்றி வெண்கொற்றக்குடை நீழலில் உலகத்தைக்காக்கும் மானிடரில் யானுமொருவனென்று உன்மனதிற் கருதாதே. அரச மங்கையர்களில் யானொருத்தியென்னுங் கருத்துட்கொண்டு அழகிய முல்லையரும்புபோன்ற பல்வரிசையையுடைய மங்கையரது இனிய வடிவமாய் வருவாயாக. எ - று. (௭௧)

என்றா ரவரை யெதிர்நோக்கான் கீழ்நோக்கி
நின்றா னுளத்து நிலையழிந்து செப்புவான்
குன்றா ரிளமுலையா ளாணுருவங் கொண்டனளேற்
பின்றாழ் குழல்வனிதை யாவனெனப் பேசினான்.

(இ - ள்.) என்று கூறிய அம்மாதர்களை (அரசன்) நேர்நோக்காதவனாய்த் தலையிறங்கிப்பார்த்து நின்று, மனநிலைமை தவறிச்சொல்கின்றான். மலைபோன்று பூரித்த இளமைவாய்ந்த தனங்களையுடைய காலஞானி ஆண்வடிவு மேற்கொள்வாளாகில் யானும் பின்னே தொங்குங் கூந்தலையுடைய பெண்வடிவமாவேனென்று சொன்னான். எ - று. (௭௨)

அக்காலை யன்னவளு மாண்பாலா யானுறப்பின்
மிக்கா னிவனுமொரு பெண்பாலாய் மேயினான்
றொக்கா ரிவர்பெயரு மம்முறையே சூடினார்
முக்கா லமுமுணர்ந்தோர் மொய்குழலை வாழ்த்தினார்.

(இ - ள்.) அப்பொழுது காலஞானியும் ஆண்வடிவாகி ஆண்டன்மைக்குரிய அவயவங்களிற் சிறந்தனள், இந்தக்கமலாக்கனும் ஒரு பெண்வடிவைப் பொருந்தினன். ஒன்று கூடிய அவ்விருவரும் தங்கள் பெயரைத்தாம் மேற்கொண்ட வடிவிற்கேற்பத் தரித்தார்கள். திரிகால வர்த்தமானங்களையுமறிந்த ஞானிகள் காலநேமியை வாழ்த்தினார்கள். எ - று. (எரு)

மாறு நலனுகர்ந்தா ரீங்கிருவர் மாநிலத்தோர்
கூறும் பழிசுமந்தான் மேனாட்டுக் கோவேந்தன்
சீறுக் கருணைச் சவுமிய னுந் தன்செவியி
னேறும் பெரிதுவந்தான் சென்ற விடைசிலநாள்.

(இ - ள்.) இவர்களிருவரும் நீங்காத இன்ப மநுபவித்தார்கள். மேனாட்டுச் சக்கிரவர்த்தியாகிய பிரமநாதன் பெரிய நிலவுலகத்தோர் சொல்லும் பழிப்பையடைந்தான். சினங்கொள்ளாத கருணையையுடைய சௌமியனும் இச்செய்தி கேள்வியுற்று மிகக்களிப்படைந்தான். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன.

கொங்கன் குடநாடர் கோமான் சவுமியனு
மங்க ணரசுழிச்சென் றையாவெங் கோமகனார்
மங்கையென நின்மகளோர் மைந்தனெனப் பேர்புனைந்தார்
துங்க விதிநிலைமை யாரோ துடைத்தொழிப்பார்.

(இ - ள்.) கொங்கு நாடுடையவனும் மேனாட்டிறைவனுமாகிய பிரமநாதன், சௌமியன் ஆள்கின்ற இராச சபையிற்போய், ஐயனே! என் சிறந்த குமாரன் கமலாக்கன் பெண்ணெனவும், உன் குமாரத்தி காலஞானி ஒப்பற்ற ஆடவனாகவும் பெயர் தரித்துக்கொண்டார்கள். வெற்றிபொருந்திய விதியின் நிலைமையை யார்தாம் நீக்கி விலக்குவோர்? எ - று. (எ௬)

என்ப துரைத்தாங் கவற்கிளையோ னென்னநின்ற
மின்பொருத வேலோன் விபூதன் றனக்குநீ
யன்பி னளித்தசித்தி ராங்கனையை நல்குதியே
லின்பப் பெருமணஞ்செய் தின்னே முடித்துமெனா.

(இ - ள்.) என்னும் விடயத்தைக்கூறி, இக்கமலாக்கனுக்கு இளையோனாகவுள்ள மின்னல் வீசும் வேலேந்திய விபூதனுக்கு, நீ அன்போடுபெற்ற சித்திராங்கனை யென்னுங் கன்னிகையைத் தருவாயாயின், இன்பந்தருஞ் சிறந்த மணவினையைச்செய்து இப்போதே முடிப்போமெனக் கூற. எ - று. (எஅ)

தம்மி லியைந்து மணமொழிந்து தண்டரளக்
கொம்மை வனமுலையைத் தன்மகற்குக் கொண்டபின்னர்ச்
செம்மைத் தனிக்கோற் குடநாடன் சேரலர்கோன்
வெம்மைச் சுரங்கழிய மேனாடு புக்கனனால்.

(இ - ள்.) தமக்குள் சம்மதித்து மணம்பேசிக் குளிர்ந்த முத்துமாலையணிந்த குவிவாகிய அழகிய தனமுள்ள சித்திராங்கனையைத் தன் குமாரன் விபூதனுக்கு மனைவியாகக் கொண்டபின்னர், ஒப்பற்றசெங்கோலுடைய மேனாட்டரசனாகிய சேரர்களின்றலைவன் [பிரமநாதன்] பெரிய காடுகளை யெல்லாங் கடந்து சேரநாட்டையடைந்தான். எ - று. (எஎ)

மின்னிலைய வேலேலோன் விபூத னெடும்பிரியா
தன்ன மனையசித்தி ராங்கனையும் வைகினு
னுன்னருஞ்சீர் நல்கு முருத்திரவக் கந்தணிவார்
மன்னு பெருஞ்சிறப்பி னுட்கழித்தார் மாநிலத்தில்.

(இ - ள்.) மின்னலை வீசும் வேலையுடைய விபூதனோடும் அன்னம் போல் நடையையுடைய சித்திராங்கனையும் பிரியாமல் வாழ்ந்திருந்தாள். நினைத்தற் கரிய சிறப்பைக்கொடுக்கும் உருத்திராக்கமணியை நீங்காதவர்களாய் இப்பெரிய பூமியில் நிலைபெற்ற பெருஞ் சிறப்போடுந் தங்கள் வாணாள் கழித்தார்கள்.

குடக்கோனு மற்றைச் சவுமியனுங் கோலக்
கடற்கோ விருநிலத்துச் செங்கோற கடன்றிறம்பா
நுடற்கோலி யிட்ட வுருத்திரவக் கத்தால்
விடக்கோலக் கண்டத்தான் றென்கைலை மேயினார்.

(இ - ள்.) சேரநாட்டிறைவனான பிரமநாதனும் மற்றவனாகிய சௌமியனும் அழகிய கடல்சூழ்ந்த பெரிய பூமியில் செங்கோலை முறைதவறாமற் செலுத்தி, தங்களுடலிற் சூழ்ந்திருக்கும்படி தரித்த உருத்திராக்கமணியினால் விடந்தங்கிய அழகிய கண்டத்தையுடைய சிவபெருமானது சிறந்த கைலாய பதவியை யடைந்தார்கள். எ - று. (௪௯)

ஈது நிகழ்ந்தகதை யென்று விருடிகட்குச்
சூத னுரைத்தா னதுவுணர்ந்தார் தொன்மையோ
ராதி யுருத்திரவக் கத்தி னணிபெருமை
யோதுவது நீர்கேட்க வின்னு முளவென்றான்.

(இ - ள்.) இது முன்னடந்த சரிதம் என்று நைமிசாரணிய முனிவர்கட்குச் சூதமுனிவர் கூறியருளினர். பழமையாயுள்ள அம்முனிவர்கள் அதையறிந்தார்கள். முதற்கடவுளாகிய சிவபெருமானது உருத்திராக்கத்தினழகிய பெருமை நீங்கள் கேட்கும்படி சொல்லத்தக்கது மற்றொன்றுண்டென்று சூதமுனிவர் சொல்லுகின்றார். எ - று. (௫0)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பொருந்திரை புரட்டி மறுகிவீழ் பரவை புடைபடு நெடுநிலப் பரப்பிற்
றருந்தரு வுலகி னல்வளஞ் சுரப்பத் தமனிய விஞ்சிசூழ் கிடக்குந்
திருந்திய திறற்பூச் சக்கர மென்னுந் திருநக ரங்கர்ச் சிறந்தோன்
மருந்தினு மினிய சுப்பிர தீப னென்னுமோர் மறையவ னுளனால்.

(இ - ள்.) மோதுகின்ற அலைகள் புரட்டிச் சுழன்றுவீழுங் கடல்சூழ்ந்த பெரிய பூலோகத்திலே, கற்பகத் தருவால் வேண்டியவற்றைக் கொடுக்கப்பட்ட தேவலோகத்தைப்போல நல்லவளப்பங்கள் விசேடிக்கப் பொன்மதில்கள் சூழ்ந்திருக்கும் திருத்தமான வலிதங்கிய பூச்சக்கர மென்னும் பெயர் தாங்கிய சிறந்தநகர மொன்றுள்ளது. அந்நகரத்தில் பெருமையமைந்தவனாகிய அமிழ்தினு மினிய சுப்பிரதீபனென்னும் அந்தணனொருவனிருந்தான். எ - று. (௫க)

ஆங்கவ னருஞ்சீர் வளத்தொடுஞ் சிறக்கு மந்தண னன்னவன்
றனக்குப, பூங்குழ லலங்கன் மைந்தரு மவர்க்கு மைந்தரும் பொலிதர

னின்றான், றேங்கம ழிதழிச் சென்னியா னடிக்கீழ்ச் சென்னிதாழ்ந் திறைஞ்சுறுந் திறனு, மோங்கரு மறைதேர்ந் துருத்திர வக்க மல்லது புனைவதற் குணரான்.

(இ - ள்.) அச்சுப்பிரதீபன் அரிய சிறப்புற்ற வளங்களோடு பெருமை வாய்ந்த அந்தணன், அவ்வந்தணனுக்கழகிய வீரக்கழலணிந்த புத்திரர்களும் அவர்களுக்குப் புத்திரர்களும் விளங்கும்படி வாழ்ந்தான். மணங்கமழுங் கொன்றைமாலையணிந்த முடியையுடைய சிவபெருமானது திருவடிகளில் சிரசைத் தாழ்த்திப்பணிதலும் பெருமைமிக்க அருமையாகிய வேதங்களுணர்ந்து உருத்திராக்கமணியை யணிவது மல்லாமல் மற்றொன்றறியான். எ - று. (அஉ)

தனதகத் தொழுகு மனைவியு மகாருந் தன்குலக் கிளைஞரும் பசும் பொன், மனவிழைத் தணியு மணிவெறுத் தனரா யுருத்திர மணியொடுஞ் சிறப்பா, ரனையமா மணிபெற் றணிகுநர்க் கல்லா லாரமு தளித்திடான் மறையோ, னினையதோர் காலை யிவனையோ காங்க னென்னு மோர் முனிவர னெதிர்ந்தான்.

(இ - ள்.) தன் வீட்டில் வசிக்கும் மனைவியும் புதல்வரும் தன்மரபினராகிய பந்துக்களும், பசும்பொன்னில் இரத்தினங்களிழைத்துத் தரிக்கின்ற ஆபரணங்களை வெறுத்தவர்களாய் உருத்திராக்கமணி யணிந்தே சிறப்படைவார்கள். அந்தச்சிறந்த உருத்திராக்கமணியைத் தரிப்பவர்கட்கே யல்லாமல் பிறர்க்கு நல்ல உணவையளிக்கமாட்டான். இப்படிப்பட்ட காலத்தில், இவ்வந்தணனை யோகாங்கரென்னும் ஒப்பற்ற ஒருமுனிவர் கண்டார். எ - று. (அங)

ஆயமா தவத்தோ னெதிர்தலு நோக்கு மருமறைச் சுப்பிர தீபன், றூயமா தவத்தி னொழுகின னெனினும் பசியொடுந் துயரின னெனினும், பேரயநா ளுடையோ னுருத்திர மணியோன் றணிந்திலாப் புன்மைய னிவற்கு, மேயதோர் பிச்சை யளிக்கினும் பாவ மென்றுளத் துணர்ந்தனன் வெகுண்டான்.

(இ - ள்.) அத்தகைய யோகாங்க முனிவர் வருதலும், அவரைக்கண்ட அரியவேதமுணர்ந்த சுப்பிரதீபர், இவன் மிக்க வயதுடையவனானாலும், உருத்திராக்கமணி யொன்றேனும் பூண்டில்லாத அற்பனாயிருக்கின்றான். புனிதமான பெருந்தபோ மார்க்கத்தில் நடந்தவனானாலும் பசியோடு வருந்துகின்றவனானாலும் இவனுக்கு இயைந்த ஒரு பிச்சையிடினும் பாவமென்று தன் மனதிற் றெரிந்துகோபித்தார். எ - று. (அச)

எரிபெரும் பசியின் கடுவென வெடுக்கு மிருந்தவ னின்றுநின் றிரப்பப், புரியுமா தவத்தீ ருருத்திர மணியொன் றணிந்திலீர் போகெனப் புகன்று, னரிதுறும் பசியி னின்றயோ காங்கன் போகல னுங்கவன் றன்னைத், தெரிதரு மறையோன் சிறார்வளைந் துரப்பித் தள்ளலும் வெகுண்டவன் செப்பும்.

(இ - ள்.) விடம்போல வயிற்றிலெரிகின்ற பெரும்பசியோடு பெருந்தவமுடைய யோகாங்க முனிவர் நின்று நின்றுயாசிக்க; (சுப்பிரதீபர்) பெருந்தவமுடையீர்! உருத்திராக்க மணியொன்றேனு மணிந்திலீர். போகுக வென்க் கூறினர். அருட்பெரும்பசியால் வருந்திய யோகாங்கர் போனாரில்லை; அந்நனைத்

தெரிந்த அவ்வேதியருடைய சிறுவர்கள் அவ்யோகாங்கரைச் சூழ்ந்துகொண்டு கோபித்துத்தள்ளவும், அவ்யோகாங்கர் கோபித்துக்கூறுவார். எ - று. (அ௫)

இரப்பவர்க் கிரங்கி யீகலை மறுத்தா யெனதுமுத் தண்டு தொட் டிழுத்தாய், பரப்புநான் மறையோர் குலத்தினிற் றோன்றிப் பாதகம் பயின்றனை யென்று, வுரைத்தனள் புறம்போய்த் தொடுகட லாடை யுலகெலா மொருகுடை நிழற்றப், புறக்குமந் நகரத் தரசுழிச் சென்று னிவணிழைத் தனவெலாம் புகன்றான்.

(இ-ள்.) யாசிப்போர்க்கு மனமிரங்கிக் கொடுத்தாயில்லை; தடுத்தாய்; என் திரிதண்டத்தைக் கையாற் பிடித்திழுத்தாய். பரவிய நான்கு வேதமுணர்ந்த அந்தணர்குலத்திற் பிறந்து பாவஞ் செய்தாயெனக்கூறி வெளியே சென்று, தோண்டப்பட்ட கடலாற் சூழப்பட்ட பூமிமுழுவதையும் ஒப்பற்ற சந்திர வட்டக்குடை நிழல் செய்யக்காக்கின்ற அந்நகரத்தரசன்பாற்சென்று, இச் சுப்பிரதீபர் செய்தனவற்றை யெல்லாஞ் சொல்லினர். எ - று. (அசு)

கொற்றவெண் குடையோ னதுவுளத் தடைத்து வெகுளிமீக் கொண்டனன் கொதித்து, மற்றையம் மறையோன் சுப்பிர தீபற் கொணர்கென மருங்குநின் றவர்போய்ச், சொற்றன ரவனு மடைந் தன னென்னை தூயமா முனிவனிவ் விருத்த, னுற்றன னென்று னுருப் பரோ பெரியோய் நினதருட் குடன்படா திதுவே.

(இ - ள்) வெற்றிதங்கிய சந்திரவட்டக் குடையையுடைய அரசன்அதனை மனங்கொண்டு சீறிப்பெருங்கோப மெய்தி, அவ்வாறியற்றிய சுப்பிரதீபனெனும் அந்தணனைக் கொண்டுவருக வெனக்கூற, அருகே நின்றவர்கள் சென்று சுப் பிர தீபருக்குச் சொல்லினர். அதனால் சுப்பிரதீபர் அங்கெய்தினர். ஐயா பெரியோரே! புனிதமாகிய இப்பெரு முனிவன் விருத்தன் வந்த விடத்தில் கோபிக்கலாமோ? என்ன? இஃதுன் கருணைக்குத்தக்கதன்று. எ - று. (அஎ)

எனமுதற் றனிக்கோ லிறையெடுத் துரைப்ப வெழுதரு மறை முழு துணர்ந்தோன், மனுநிலத் துதிக்கு நரர்க்கெலாம் புனைவா னுருத் திராமணி வேண்டு, மனையது புனையார்க் காண்கினு மவர்க்கே யருநா கதுபுனைந் திலரேல், வினைசெய்மா தவத்தி னுயர்ந்தவ ரெனினுந் தென் றிசை யவர்க்கென விரித்தான்.

(இ - ள்.) என்று முதன்மைவாய்ந்த ஒப்பற்ற செங்கோலை யேந்திய அரசன் எடுத்துச்சொல்ல, எழுதிதற்கரிய வேதங்களையுணர்ந்த சுப்பிரதீபர், மானுடர்க்குரிய பூமியிற்றோன்றிய மாந்தர் யாவர்க்கும் சிறந்த உருத்திராக்க மணியணிதல் வேண்டும். அதனை யணியாதவர்களைப் பார்த்தாலும் பார்த்தவர் களுக்கு அரிய நரககதியுண்டாம். உருத்திராக்கமணியணியாராயின் புண்ணிய வசுத்தாற் செய்த பெருந்தவத்தால் உயர்ந்தவர்களாயினும் யமபுரமேயடைவ ரெனக்கூறினர். எ - று. (அஅ)

அவனது புகல நின்றயோ காங்க னருஞ்சின மடைந்தனன் மற்றீங், கிவனுடை மணியு மென்னுடைத் தவமு மீங்கிலை பகுத்தறி யிறைவ, பவனமிச் சடங்கொண் டேகியைந் தருவிற் பனிமலர் கொணர்குவ னென்று, னுவனுமற் றதுசெய் துளிக்குமேற் கேட்டி யென்றன னுங்கவ னுரைப்பான்.

(இ - ள்.) சுப்பிரதீபர் அவ்வாறுசொல்ல, யோகாங்கர் பெருங்கோப மெய்தி, இப்பொழுது இவருடைய உருத்திராக்கமணியினையையும் என்னுடைய தவத்தினையும் இந்நிலையிலே பகுத்தறியக்கடவாய். அரசனே! இவ்வுடலோடு தேவலோக மெய்தி, பஞ்சதருவின் குளிர்ச்சிவாய்ந்த மலரைக்கொண்டு வருவேன் என்றார். அச்சுப்பிரதீபரும் அப்படிச் செய்வாராகிற் கேட்பாயென்றனன். அதற்குச் சுப்பிரதீபர் சொல்லுகின்றார். எ - று. (அகூ)

முறுவல்பூத் தொளிரு முகத்தின ராகி முழுமதி வெண்குடை
வேந்த, குறுகிவிண் ணுலகத் தருவையோர் பூசை கொணர்தரப் புரி
குவ னின்னே, யிறையிது பொழுதி னறிதியென் றிசைத்தா னின்ற
யோ காங்கன்முன் னியற்று, மறுவறு யோகத் துயர்நில மடைந்தான்
கொணர்ந்தனன் கற்பக மலர்ப்பூ.

(இ - ள்.) புன்னகையரும்பிப் பிரகாசிக்கும் முகமுடையவராய், பூரண சந்திரன்போன்ற வெண்கொற்றக் குடையையுடைய அரசனே! ஒருபூனையானது தேவலோக மடைந்துகற்பகத்தருவைக் கொண்டுவரச்செய்வேன். இதனை இப்போதே க்ஷண நேரத்திற் காணக்கடவா யெனக்கூறினர். அருகிருந்த யோகாங்கர் முன்னே பயின்ற குற்றமற்ற யோகத்தினால் தேவலோகஞ் சார்ந்து அழகிய கற்பகமலர்களைக் கொண்டுவந்தனர். எ - று. (கூ0)

ஒருதனிச் செங்கோ லரசுகண் டுவந்தா னின்றன ருவந்ததி
சயித்தர், ரருமறை தெளிந்த சுப்பிர தீபன் றன்மனை யகத்துறை பூசை,
தருகென நின்ற மதலையோ டினனப் பூசையைக் கொணர்ந்தவட் சார்ந்
தான், கருணையெம் பெருமா னுருத்திர வக்கம் புனைந்துள தியாவருங்
கண்டார்.

(இ - ள்.) ஒப்பற்றுச் சிறந்த செங்கோலையுடைய அரசன் கண்டு சந்தோஷித்தான். அருகிருந்தவர்கள் அதிசயமுற்றார்கள். அரிய வேத முணர்ந்த சுப்பிரதீபர் தம் வீட்டிலுள்ள பூனையைக் கொண்டுவருகவென, அங்கிருந்தபிள்ளையோடிச் சென்று, அப்பூனையைக்கொண்டுவந்து அவர்பாலடைய, அதுகிருபா மூர்த்தியாகிய எமது சிவபெருமானுடைய உருத்திராக்கமணியணிந் திருந்ததையாவருங் கண்டார்கள். எ - று. (கூக)

கொணர்ந்தவப் பூசை தன்னொடு நீபோய்த் தேவர்கோன் கொடி
நக ரடைந்து, மணந்தரு தருவி னொருதருக் கொணர்தி யென்றனன்
வான்புக விடுப்ப, வுணர்ந்தவப் புலவர் கோமக னதற்குத் தனிமணி
விமானமொன் றுய்த்து, நிணங்கொளக் குலிசி வெள்ளைவா ரணத்தி
னெதிர்ந்திரு நெடுங்கரங் குவித்தான்.

(இ - ள்.) அவ்வாறு கொண்டுவரப்பட்ட பூனையுடன், நீ போய் இந்திரனுடைய கொடிகள் கட்டிய நகரத்தைச் சார்ந்து, மணம் வீசும் பஞ்சதருக்களில் ஒருதருவைக் கொண்டுவருக வென்று, ஆகாயவழியிற் செல்லும்படி விடுப்ப, இதனையறிந்த அத்தேவராசனாகிய இந்திரன் அப்பூனைக்கு ஒப்பற்ற இரத்தின விமானமொன்றனுப்பி, மாமிசந்தோய்ந்த அந்த வச்சிரபாணி ஐராவதமூர்ந்து எதிர் சென்று நெடியதன்னிருகைகளையுங் கூப்பி வணங்கினான். எ - று. ( )

உருத்திர மணியிற் பொலிதிரு வுருவ நோக்கின னுள்ள நெக்
குருகி, யிருக்குணர்ந் தளந்த சுப்பிர தீப ரினிதிருந் தருளினர் கொல்

லென், றநந்தியின் வினவி யெடுத்தணைத் துச்சி மோந்தனன் மடியகத் தருளிற், பொருந்திநீ போந்த தென்னையென் றுரைப்பப் புகுந்தவா றுரைத்ததப் பூசை.

(இ - ள்.) உருத்திராக்கமணியோடு விளங்குகின்ற திருவுருவத்தைக்கண்டு, மனம் நெக்குவிட்டுருகி, வேதங்களைக்கற்று அளவுபடுத்திய சுப்பிரதீபர் இனிமையாக இருந்தருள்கின்றாரா? என்று ஆசையோடு கேட்டு, அப்பூனையை வாரியெடுத்து மார்போடணைத்து உச்சிமோந்து தன்மடியில் அன்புடனிருத்தி நீ யிங்குவந்த காரணம் யாதெனக் கேட்ப, அப்பூனையானது நடந்தவரலாற்றினைச் சொல்லியது. எ-று. (சங)

கேட்டுழி மகிழ்ந்து மனங்களி சிறந்தீங் கிதுபெறக் கிடைத்தன மென்று, வாட்டிறற் றேவ சித்தனை நோக்கி வருதிநந் தருவிலோர் தருவை, மூட்டொடு மெடுத்துச் செல்லுதி யென்று முழுமணி மானமொன் றுதவித், தாட்டுணை தொழுதப் பூசையைப் போதி யென்றன னிமையவர் தலைவன்.

(இ - ள்.) தேவர்கட் கிறைவனாகிய இந்திரன் (பூனையின் விர்த்தாந்தத்தைக்) கேட்டவுடனே மகிழ்வெய்தி மனங்களிகூர்ந்து, இப்புண்ணியத்தினை அடையப்பெற்றோமென்று, கீர்த்திதங்கிய வலியுள்ள தேவசித்தனைப்பார்த்து, வருக, நீ நம்முடைய பஞ்சதருக்களில் ஒருதருவை வேருடன் எடுத்துப்போகுக வென்று கட்டளையிட்டு, சிறந்த இரத்தின விமானமொன்று கொடுத்து, அப்பூனையைப் பாதங்களிற் பணிந்து செல்லுக வென்றனன். எ - று. (சச)

மானநின் றிமைக்குங் கதிரொளிக் கற்றைப் பரிதிசெங் கதிரொளி மழுக்கி, யேனைமா நிலத்தின் யாவருங் காண மென்மெல விறங்கிய விதனைத், தானிழிந் திறங்கித் தருவொடுந் தேவ சித்தனென் பவனொடுந் தழுவி, மேனிவந் திலங்கு வெண்குடை வேந்த னரசவை மேவிநின் றுளதால்.

(இ - ள்.) அவ்விமானத்திலிருந்து பிரகாசிக்குங் கிரணங்களோடு கூடிய பிரகாசத்தொகுதியானது செவந்த சூரிய கிரணங்களையு மழுங்கச்செய்து, ஏனையபெரியபூமியிலுள்ள யாவருங் காணும்படி பையப்பைய விறங்கிவருகின்றது. பூனைவிமானத்தினின்றுங் கீழிறங்கிக் கற்பக தருவோடும் தேவசித்தனென்பவனோடுஞ் சேர்ந்து, மேலோங்கிப்பிரகாசிக்கும் வெண்கொற்றக்குடையையுடைய அம்மன்னவன் சபையையடைந்து நின்றது. எ - று. (சரு)

கண்டன னரச னுச்சிகை கூப்பி நின்றனன் கருணையிற் பூசை, யெண்டருந் தவத்துச் சுப்பிர தீபன் றனைவலம் புரிந்தரு கிருப்பத், திண்டிறற் றேவ சித்தனுந் தொழுது நின்றனன் றேவனின் னருளால், விண்டலம் புரப்ப தென்றனன் றொழுதே னென்றனன் விண்ணவர் பெருமான்.

(இ - ள்.) மன்னவன் அதனைக்கண்டு உச்சியின்மேற் கையைக் குவித்து நின்றனன். பூனையானது கிருபையோடு எண்ணுதற்கரிய தவத்தையுடைய சுப்பிரதீபரைப் பிரதட்சிணஞ் செய்து சமீபத்திலிருக்க, மிக்கவலிதங்கிய தேவசித்தனும் வணங்கிநின்று, தேவனே! உமது திருவருளால் தேவலோகத்தை யரசாள்வதென்றும் உம்மை நமஸ்கரித்தேனென்றும் இந்திரன் கூறினன். ()

என்றினி துவந்த தேவசித் தனுமற் றிருஞ்சினைக் கற்பகத் தருவு, மன்றுவே தியனை வலந்திரிந் தாங்க ணவனுறை யிருப்பமா மேருக், குன்றிரு தடந்தோ ளரசர்கோ மகனுங் குறித்தன னதிசயங் கொண் டான், மன்றல்ந் தெரியல் வெண்குடை வேந்த னெழுந்தனன் பின்ன ரும் வணங்கி.

(இ - ள்.) என்று இனிமையோடு மகிழ்வெய்திய தேவசித்தனும், பெருங் கிளைகளையுடைய கற்பகவிருக்ஷமும் அப்பொழுது சுப்பிரதீபரைப் பிரதக்ஷிணஞ் செய்து அவ்விடத்தில் அவரருகிலிருக்க, மகமேருகிரியைப்போன்ற பூரித்த இருதோள்களையுடைய இராசராசனும் அதிசயமெய்தினன். மணம் வீசும் அழ கிய மாலையணிந்த வெண்கொற்றக்குடையை யுடைய அவ்வரசனெழுந்து நமஸ்கரித்து. எ - று. (கள)

பொன்னகர்ப் புகுந்த பூசையை நோக்கிப் பொன்னகர் புகுந்துள வாறு, மந்நகர்ப் பெருமா னினக்கரும் பூசை யளித்துவந் தருளிய வாறு, மின்னலர்ச் சினைப்பூங் கற்பகங் கொணர்ந்து புகுந்தனை யிவையெலா மிசைப்பா, யென்னவப் பூசை மறையவர்ப் பார்ப்பப் பகருதி யென் றன னிசைக்கும்.

(இ - ள்.) தேவலோகத்திற்குப்போன பூனையைப்பார்த்து, நீ தேவலோ கத்திற்குப்போன வகையும் அந்நகரிற்குத்தலைவனான இந்திரன் உனக்கு அரிய வழிபாடுசெய்து மகிழ்ந்த வகையும், இனிமையான மலர்கள் பொருந்திய கிளை களையுடைய கற்பகவிருட்சத்தைக்கொண்டுவந்த வகையும் ஆகிய விவற்றையெல் லாம் சொல்லுக வெனக் கேட்க, அப்பூனையானது சுப்பிரதீபரைநோக்க,அவர் சொல்லுகவென, பூனை சொல்லுகின்றது. எ - று. (கஅ)

அலங்கொளி விரிக்கு முழுமணி மான மடைந்தன னந்தரம் புகுந் தே, னிலங்கொளிக் குலிசி வெள்ளைவா ரணங்கொண் டெதிர்ந்தன னென்னையதி னிருத்திப், பொலங்கதிர் தழைந்த விண்ணுல கடைந்தான் பூசனை வேண்டுவ புரிந்தா, னலங்கிளர் மருமத் தெடுத்தெடுத் தணைத்தா னுச்சிமோந் தருளொடு நயந்தான்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற ஒளியைப் பரவச்செய்யும் முழுமணிகளாலாக் கப்பட்ட விமானத்தி லிவர்ந்து தேவலோகமடைந்தேன். ஒளிவிளங்கும் வச்சி ராயுதமேந்திய இந்திரன் வெள்ளையானையாகிய ஐராவதத்தைக் கொணர்ந்து எதிர்வந்து, என்னை அதன் மிசையிருக்கச்செய்து, அழகிய கிரணங்கள் மிக்க விண்ணுலகஞ் சேர்ந்து வேண்டுவனவாகிய பூசைகளைச் செய்து, நன்மைமிகுந்த மார்பில் எடுத்தெடுத்தணைத்து உச்சிமோந்து அன்போடு சொல்லுகின்றான்.

எம்முறை விரும்பிப் பொன்னக ரடைதற் கேதுவென் னென்றன னிறைவ, னும்முறை யவையி னிகழ்ந்தவை யவனுக் குரைத்தன னுங் கவ னுவந்து, பைம்மலர்த் தருவு மானமும் புரிந்து விடுத்தனும் பனைத் தற வீங்குங், கொம்மைவெம் முலையா ளன்னவன் றேவி யடைந்தன ளதிசயங் கொண்டாள்.

(இ - ள்.) எம்மிடத்தில் விருப்புற்றுத் தேவலோகமாகிய இப்பொன்னக ரையடைவதற்குக் காரணமென்னவென வினவ, அரசனாகிய உம்முடைய

சபையில் நடந்தவற்றை இந்திரனுக்குயான் சொன்னேன். அதற்கவன் சந்தோஷித்து, பசியமலர்களையுடைய கற்பக விருட்சத்தையும் விமானத்தையும் விரும்பிக் கொடுத்தவுடனே, கிளைத்து மிகவும் பூரித்த சிகரம்போன்ற ஆசையைவிளைக்குந் தனத்தையுடைய அவ்விந்திரன் மனைவியாகிய இந்திராணி கண்டு அதிசயமுற்றாள். எ - று. (௧௦௦)

சுழல்விழிப் பூசைக் குரியதொன் றன்றி வரன்முறை பூசனை தொகுத்தா, யழலரக் கெனநின் றன்புமிக் குருகிக் கற்பக முதலொடு மளித்தாய், நிழலணி புனைந்தா யீங்கிதற் கென்னை பவித்திர நிகழ்த்தென நிகழ்த்தக், குழலிசைக் குதலை மதியொடு நுடங்குங் கொம்பரன் னவட்கவன்கூறும்.

(இ - ள்.) சுழல்கின்றவிழிகளையுடைய பூனைக்குச் செய்யவேண்டியதொன்றல்லது, நான்முறையே பூசைசெய்தீர். தீயிற்பட்ட அரக்குபோல அன்புமயமாக நின்று மிகவும் மனமுருகி, கற்பகவிருட்சத்தை வேரோடுகொடுத்தீர். ஒளிவீசும் ஆபரணங்களைச் சூட்டினீர். இதற்கு அவ்வகைய தூய்மைத்தன்மை யாது? சொல்லுகவெனச் சொல்ல, வேய்ங்குழல்போலுங் குதலைச்சொல்லோடும் சந்திரனோடும் அசைகின்ற பூங்கொம்பு போல்வாளாகிய இந்திராணியோடு இந்திரன் சொல்லுகின்றான். எ - று. (௧௦௧)

அரனிரு விழியொத் திருவினைத் தொடர்ச்சி யகற்றிய வுருத்திர வக்கம், வரன்முறை தரித்த மாட்சியின் யாமோ மூவரும் வணங்குதற் குரித்தால், விரவிய களப முகின்முலை பொறுத்த மெல்லிடை யுருத்திர மணியைப், பரமுணர்ந் தறிவோ ரறிகுவ ரவரும் பரமெனச் சென்னிதாங் குவரால்.

(இ - ள்.) களபப்பூச்சணிந்த அரும்பிய முலைகளைச் சுமந்த நுண்ணிய இடையை யுடையாளே! சிவபெருமானது இருவிழிகளைப்போன்று இருவினைச் சம்பந்தத்தை விலக்கிய உருத்திராக்கத்தை முறைப்படியணிந்த பெருமையால் யாம்மட்டுமோ திரிமூர்த்திகளும் வணங்குதற்குரியதாம். உருத்திராக்கமணியின் மேன்மையைத் தெரிந்துணர்ந்தவர்கள் உணர்வார்கள். (அத்தகையினரும் இப்பூனையைக் காணின்) மேலானதென்று சிரமிசை வைத்துக்கொள்ளுவார்கள். எ - று. (௧௦௨)

புண்ணிய மணியி னிலையினைப் புகல்கேம் புலோமசை யினதுகேட் டறிதி, யண்ணலங் கைலை தென்னலெம் பெருமா னருநடம் பரவுதற் கடைந்தேன், றுண்ணெனக் கனைக்குங் கவையடிப் பகடு தூரந்தடு தென்றிசைக் கிழவன், வண்ணவார் கணக்குச் சித்திர குத்தன் றன்னொடு மரனடி வணங்கி.

(இ - ள்.) புண்ணியசொரூபமாகிய வுருத்திராக்க மணியின் றன்மையைச் சொல்லுவோம். புலோமன் மகளாகிய இந்திராணியே! இனிதாகக் கேட்டுணர்வாயாக. பெருமைபொருந்திய அழகிய கைலையிலுள்ள வெமது சிவபெருமானது அரியதிருத்தாண்டவத்தை நேற்றுதொழுதற்குச் சென்றேன். அச்சந்தரும்படி கனைக்கின்ற பிளவுபட்ட அடியையுடைய எருமைக்கடாவைச் செலுத்தி யுயிர்களைக் கொல்லுகின்ற தென்றிசைக் கிறைவனை இயமன் பகுதிகளமைந்த நெடுங் கணக்கிற்குரிய சித்திரகுத்தனென்பவனோடுஞ்சிவபெருமான் திருவடிகளைப்பணிந்து. எ - று. (௧௦௩)

கலிநிலைத்துறை.

இருநி லத்துள வுயிர்த்தொகை யாவையு மியற்று
மருவி னைப்பய னவ்வழி யாங்கவைக் கருள
மருவு நாற்கதி பற்பல பதவியும் வகுத்தாய்
வெருவு தென்புலத் தடுதொழி னரகமும் விதித்தாய்.

(இ - ள்). பெரிய பூமியிலுள்ள ஆன்ம கோடிகளெல்லாஞ் செய்கின்ற அரிய வினைப்பயன்களை யப்படியே அவ்வான்மகோடிகளுக்கு அருள்புரிய, பொருந்திய (தேவர் நரகர் மனிதர் விலங்கு) என்னும் நான்கு கதிகளையும், (கைலாயம், வைகுந்தம், சத்தியலோகம், அமராவதி, சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சிய முதலிய) எண்ணிறந்த பதவிகளையும் ஏற்படுத்தினீர். அச் சந்தரத்தக்க தென்றிசையில் கொலைத் தொழிலையுடைய நரகங்களையும் உண்டுசெய்தீர். எ - று. (கoச)

தீய செய்தனர் யாவருந் தென்புலத் தென்பா
லாய தீவினை யனுபவம் பெறுவதற் கருளி
மேய நல்வினைப் பயனுளோர் நின்னடி விரும்பித்
தூய சேவடித் துணைபெற வளித்தனை தொல்லோய்.

(இ - ள். கொடுந்தொழில் புரிந்தோர் யாவரும் தென்றிசையிலுள்ள வெல்லிடத்தில் தீவினைக்கேற்ற நரகப் பிராப்தி பெறும்படி கட்டளையிட்டு, பொருந்திய நல்வினைப் பயனுள்ளவர்கள் தேவரீர் திருவடியை யிச்சித்து அப் புனிதமாகிய செவ்விய வுபயபாதங்களைப் பெறும்படி யனுக்கிரகித்தீர். பழமை யானவரே! எ - று. (கoரு)

அளித்த நின்றிரு வாணையி னியற்றின னைய
தெளித்த நல்வினை மேலவர்ப் பூசனை செய்துங்
களித்த கண்மைய மில்லவர்க் காயெரி நிரயத்
தொளித்து மின்றள வொருநெறிச் சென்றன னென்றான்.

(இ - ள்). ஐயனே! அவ்வாறருள்செய்த தேவரீர் கட்டளைப்படி தெளிவடைந்த நல்வினையுடைய மேலோரைப் பூசித்துங் களிப்பெய்திய தாட்சண்ய மில்லாதவர்களைக் காய்ந்தெரியும் நரகத்திலமிழ்த்தியும் இன்றுவரையு மொரு மார்கத்திலொழுகினேனென்றான் எ - று. (கoசு)

மறலி யவ்வுரை நின்றிரந் துரைத்தலும் வழிநீர்
பிறைமு டித்தரு ளெம்பிரான் றிருவருள் பெருகி
முறையி னும்புரி தொன்மையி னுயநின் முதன்மை
குறைவு துண்டெனி லுரைத்தியென் றருள்செயக் கூறும்.

(இ - ள்). இயமன் அவ்வார்த்தையைச் சிவபெருமான் முன்னின்று பிரார்த்தித்துக் கூறவும், வழிகின்ற கங்கா சலத்தையும் பிறைச் சந்திரனையுந் திருமுடியிலணிந்த எமது சிவபெருமான் திருவருள் மிகுந்து முறைமைப்படி நாம் நியமித்த பழமையாகிய வுன்னதிகாரங் குறைவுபடுதலுண்டாயின் சொல் லுகவென்று திருவாய்மலர்ந்தருளவும், இயமன் சொல்லுகின்றான் எ - று. ()

பிறந்த நாண்முதற் செய்தனன் பெறற்கரும் பாவ
மறந்து றந்தன னருளில னருங்கொலைப் புலையன்

மறந்தி ரண்டொரு வடிவுகொண் டன்னவ னவனை
யிறந்து ழிப்பிடித் தெரிநிர யத்துவீழ்த் திடலும்.

(இ - ள்): ஜனனந்தொடங்கி யொருவருஞ் செய்தற்கரிய பாவங்களைச் செய்தவனுந் தருமத்தை யறவே நீங்கியவனுங் கிருபையில்லாதவனுங் கடுங்கொலைசெய்த புலையனுங் கொடுமைகளெல்லாஞ் சேர்ந்தோருருவெடுத்தாற் போன்றவனுமாகிய வொருவனை, அவனிறந்தபோது பிடித்துச்சென்று எரிகின்ற நரகத்திற் றள்ளியவுடன் எ - று. (க௦அ)

சிவக ணத்துளோ ரொன்னுடைத் தூதரைச் சீறி
யவனை மாமணி யவிரொளி மானமுய்த் தகன்றா
ரிவரி ழைத்தவை நோக்கினின் றெய்தின னடியேன்
றவறி ழைத்தில னீதவட் புகுந்துள தன்மை.

(இ - ள்.) சிவகணங்கள் அடியேன் றூதுவர்களைக் கோபித்து, அப்பாவியைப் பெரிய இரத்தினங்கள் மிக்குப் பிரகாசிக்கும் விமானத்திலேற்றிக் கொண்டு சென்றார்கள். இச்சிவகணர் செய்தவற்றைப் பார்த்திருந் திங்குவந்தேன். அடியேன் குற்றஞ் செய்திலேன். இதுவே அங்கு நடந்ததன்மை.

என்று கூறிய கூற்றினுக் கெதிர்முக நோக்கி
மன்றன் மாலிகைச் சூற்படை வயிரவக் கடவுள்
புன்றொ ழிற்கொலை யல்லது செய்திலன் போலு
மொன்ற வோர்ந்துநின் றுரைத்தியென் றுள்ளுறுத் துரைத்தான்.

(இ - ள்). என்றுரைத்த இயமனுக்கு நேராக அவன் முகத்தை நோக்கி மணங்கமழும் மாலைதரித்த சூலாயுதந் தாங்கிய வைரவக் கடவுள் அவன் அற்பத்தன்மையுடைய கொலைத்தொழில் நீங்க வேறொன்றுஞ் செய்யவில்லை போலும். பொருந்தும்படி ஆராய்ந்து பார்த்துச் சொல்லென ஞாபகப்படக் கூறினார். எ - று. (கக௦)

தரும னவ்வுரை கேட்டலு மிருவினை தவறா
தொருவ ழிப்பட வுரைதருள் சித்திர குத்த
னருகு நிற்புழி நோக்கினன் வயிரவற் கறிவா
றொருமை நின்கணக் குரைத்தியென் றன்னவ னுரைப்பான்.

(இ - ள்). இயமனவ்வார்த்தை கேட்டமாத்திரத்தில், புண்ணிய பாவங்களைப் பிசகாமல் ஒரு படித்தாய்ச் சொல்லுஞ் சித்திரகுத்தன் பக்கத்திலிருக்கையிலவனைப்பார்த்து, இவ்வைரவக் கடவுளுக்கறியும்படி யொரு வழிப்பட்டிருக்குங் கணக்கைச் சொல்லுகவெனக் கட்டளையிட்டான். அச்சித்திரகுத்தன் சொல்லுகின்றான் எ - று. (ககக)

மங்கை பாகனை வழுத்தினன் வைரவ குறித்துப்
பொங்கு நீர்வயற் கலிங்கதே யத்தொரு புடையி
னங்க மர்ந்ததோர் வியாக்கிர புரமுள ததன்பாற்
றங்கு நான்மறைப் பெருங்குலத் திவனவ தரித்தான்.

(இ - ள்). பார்வதி பாகனாகிய சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து, வைரவக் கடவுளை நோக்கி, மிக்க நீர் நிறைந்த வயல்சூழ்ந்த கலிங்க நாட்டின் ஓர் புறத்தில், அங்குள்ளோரால் விரும்பப்பட்ட வொப்பற்ற வியாக்கிரபுர

மொன்றுண்டு. அந்நகரத்தில் நிலைபெற்ற நான்கு வேதங்களையுமுணர்ந்த பெருமை தங்கிய அந்தணர் குலத்தில் இவன் பிறந்தான் எ - று. (ககஉ)

பயந்த வன்னையும் பரவச மாய்ப்பலர்ப் புணர்ந்து
முயங்கு சூலையாய் முடிந்தனண் முன்னைநாள் வேட்டோ
னியங்கு நாள்கழித் திறந்தன னீங்கிவ டனக்கு
மயங்கு சிந்தையன் களவினோர் மறையவ னுளனால்.

(இ - ள்). இவனைப்பெற்ற தாயுந் தன் கணவனை விடுத்துப் பிறர்வயப் பட்டு, பல புருடரைச் சேர்ந்து தழுவுகின்ற வேசையாயினாள். அவளைப் பூர்வத்தில் மணஞ்செய்த இவன்றந்தை யாயுள்முடிந் துயிர்நீங்கினான். இவளுக்கு மயங்குகின்ற மனமுடைய சோர நாயகனாகிய வொரு வேதியனிருந்தான்.

ஈன்ற தந்தையு மன்னையு மிறந்தபி னிவற்குத்
தோன்று தந்தையிற் சிறந்தனன் களவழித் தோய்ந்தோ
னென்ற நாள்பல கழிந்தன வீங்கிவன் றனக்கு
மூன்று நூல்புனை மணவினை மறைமுறை முடித்தான்.

(இ - ள்). இவனைப்பெற்ற பிதாவுந் தாயுமிறந்த பின்னர், இவன் தாயைக் களவிற்புணர்ந்த அந்தணன் இவனுக்குத் தந்தையாயிருந்தான். இப்படிப் பல நாட்களகன்றன. இவனுக்கு அப்பிதாவானவன் முப்புரிநூல் அணிவிக்கும் உபநயன விவாகச் சடங்கை வேதவிதிப்படி செய்வித்தான் எ - று. (ககச)

மைந்த னீங்கிவ னலதுமற் றிலையென வளர்த்தான்
சிந்தை காரிருட் பிழம்பெனச் சிறந்தவத் தீயோன்
முந்தை மாநிலப் பிறர்பொருள் கவர்ந்தற முடித்தா
னந்த வாறுணர் தந்தையென் றுளன்கடிந் தகற்ற.

(இ - ள்.) புத்திரன் இவனை நீங்க வேறில்லையென்று வளர்த்தான். மன மானதுகரிய இருட்பிழம் பென்று சொல்லத்தக்கதா யஞ்ஞான மிகுந்த அக் கொடியோன், முற்பட்ட பெரிய பூமியிலுள்ள ஏனையோர் பொருள்களை யபகரித்துத்தர்மத்தை யழித்தான். அதனையறிந்த பிதாவாயிருக்குமந்தணன் அவனை யடித்துத்துரத்தவும். எ - று. (ககரு)

கோற லல்லது பயின்றிலன் பிறர்பொருள் குறித்து
மாறி வவ்வினன் மதுவொடு புலவுணு மறவோன்
சீறு சிந்தையோன் றெய்வவே தியருழைப் பிறந்து
மீறில் செய்தனன் புன்மைசா மித்திர னிவன்பேர்.

(இ - ள்.) கொலைத்தொழிலல்லது பிறிது தொழில் பழகினானல்லன். அன்னியர் பொருளையே விரும்பி மாறுபட்டபகரித்தவன். மதுவுடன் மாமிச பட்சணமுஞ் செய்யுங்கொரேன். கடுங்கோபமுள்ள மனமுடையவன். தெய் வீகந்தங்கிய அந்தணர் குலத்திற் பிறந்து தீமைகள் கணக்கின்றிச்செய்தான். இவன் பெயர் சாமித்திரன். எ - று, (ககசா)

சோர தாதைதன் கைப்பொருள் கவர்ந்திடத் துணியா
வார்வ மின்றிமற் றன்னவ னுருயிர் செகுத்தான்
பாரி னீங்கிவன் செய்தமா பாதக மனைத்துந்
தேரி னெண்ணகக் களவையி னடங்குமோ செப்பின்.

(இ - ள்) இவன் தன் சோர தந்தையின் திரவியத்தை யபகரிக்கத்துணிந்து அவன் பால் சிறிது மன்பின்றி யவனரிய வுயிரைக்கொன்றான். முடிவாகச் சொன்னால், இப்பூமியிலிவன் செய்த பெரும்பாதகங்களையெல்லாம் தெளிய வேண்டுமாயில், அடியேன் கணக்கிலடங்குமோ? எ - று. (கக௭)

சனித்த நாண்முதற் பாதக மல்லது தன்னாற்
குனித்த சிந்தையி னறமெனக் குனித்தது முளதோ
பனித்து மற்றவன் பெயர்சொலி னெம்முடல் பதறு
மினிச்செ யும்பவ மென்பதொன் றில்லென விசைத்தான்.

(இ - ள்.) பிறந்தநாள் முதலாகப் பாவங்களே யல்லாமல் தன்னாலிரக்கமுள்ள மனதோடு தருமமென்றெண்ணியது முளதோ? அவன் பெயரைச் சொன்னாலெங்களுடல் நடுங்கிப்பதைக்கும். இவன் இனிமேல் செய்யத்தக்க பாவமென்பது ஒன்றுமேயில்லையென்று சொன்னான். எ - று. (கக௮)

ஒழுகு கங்குலிற் பிறர்மனை கவர்ந்தன னொருநாள்
வழுவி யேகலுங் காவலர் பிடித்துற வரிந்து
பொழுதி யங்கிடு முன்னமம் மாணகர்ப் புறம்போய்
மழுவி னாலெறிந் தன்னவ னுருயிர் மாய்த்தார்.

(இ - ள்.) ஒரு நாளிரவில் பிறர் மனைவியை விபசரிப்பவனாய் நடக்கையில் வழிதவறிச்சென்றவுடன் காவலாளர் இவனைக் கைப்பிடியாகப்பிடித்துச் சேர்த்துக்கட்டி, பொழுது புலர்வதற்குள் அப்பெரிய நகரத்தின் புறம்பேகொண்டு சென்று பரசாயுதத்தாலவனுயிரை யழித்தார்கள். எ - று. (கக௯)

இறந்து நாலுநா ளிறந்தன வீங்கிவன் றன்னை
மறந்த ருங்கடுங் கட்கொலை மறவனைத் தெய்வச்
சிறந்த மாமணி மானமீ திருத்தினர் சென்று
ரறந்த ருங்கணத் தலைவரொன் றுரைத்தடி தொழுதான்.

(இ - ள்.) இவனிறந்து நாலு தினங்களாயின. பாவத்தைச்செய்யுங்கொடுமைதங்கிய கொலைத்தொழிலுடைய குரூரனாகிய இவனை, புண்ணிய சொரூபிகளாகிய சிவகணத்தலைவர் தெய்வீகம் பொருந்தி யுயர் குணங்களமைந்த சிறந்த இரத்தினங்கள் பதித்த விமானத்திலேற்றிக்கொண்டு சென்றார்களென்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளில் வணங்கினான். எ - று. (கஉ0)

வகுத்து ரைத்தசொற் கேட்டலும் வைரவக் கடவு
டொகுத்து ணர்ந்துமற் றுங்கவற் கினையன சொல்வான்
பகுத்த பாவியென் றிவனிலை பகர்ந்தது சரத
மிகுத்த நல்வினைப் பயனுள தொன்றது விளங்காய்.

(இ - ள்.) விவரித்துச்சொன்ன சித்திரகுத்தன் வார்த்தைகளை வைரவக்கடவுள் கேட்டவுடன். அவையனைத்து மொழுங்காயுணர்ந்தசித்திர குத்தனுக்கிவ்வகை வார்த்தைகள் சொல்லுகின்றார். அளவுபடுத்திய பாதகனென்றிவன்றன்மையைச் சொல்லியது மெய்யே (ஆனால்) விசேடித்த நல்வினைப்பயனொன்றுண்டு. அதனை நீ யுணர்ந்திலை. எ - று. (கஉக)

வலங்கொள் சக்கர வாகுவென் றுளனொரு மன்னன்
பொலங்கொ ளங்கசுந் தரியெனு மன்னவன் புதல்வி

யலங்கு திண்சினைப் பொதும்பர்சூழ் தடங்கரை யடைந்தாள்
விளங்கு வெண்டிரைப் புனல்விளை யாடலை விரும்பி.

(இ - ள்.) சயங்கொண்ட சக்கரவாகுவென்றோ ராசனுண்டு. அவ்வரசன் மகளாகிய அங்கசுந்தரியென்பாள் விலகிச்செல்லும் வெள்ளிய அலையையுடைய நீர்விளையாடலை விரும்பியவளாய், அசைகின்ற வலிய கிளைகள் பொருந்திய சோலை சூழ்ந்த விசாலமான தடாகக்கரையை யடைந்தாள் எ - று. (௧௨௨)

மாடு சுற்றிய சிலதியர் குழாத்தொடு மலர்த்தா
ளாட கச்சிலம் பரற்றுறப் புனலரு கடைந்து
கோடு வெண்டிரை யிப்பிமுத் திடையிடை கோத்து
நீடு ருத்திர மணிவடங் கழற்றின ளின்றாள்.

(இ - ள்.) பக்கலிற் சூழ்ந்த தோழிமார் கூட்டத்துடன் தாமரை மலர் போன்ற பாதங்களிற் பொற்சிலம்பு அதிரும்படி, தடாகநீரின் சமீபத்திற் சேர்ந்து, வெள்ளிய அலைகள்வந்து மோதுங்கரையினிடத்தில், இப்பியினிடத் துற்பவித்த முத்துக்களை இடையிடையே கோத்து நீண்டுள்ள உருத்திராக்க மணிகளாலாகிய மாலையைக் கழற்றிவைத்திருந்தாள் எ - று. (௧௨௩)

நீத்த மொத்தலை புனற்கரை நிரைசுரும் பரற்றப்
பூத்த மவ்வலங் கொடியிடை யாங்கது பொருத்தி
மீத்த தும்பிய புனல்குடைந் தாடுமவ் வேலை
யேத்து வெண்மணிச் சோறெனக் காகம்வந் தெடுத்து.

(இ - ள்.) வெள்ளம்போன்று அலைந்துகொண்டிருக்கும் நீர்க்கரையிலே, வந்த வரிசையாகவுள்ள வண்டுகள் ரீங்காரஞ்செய்ய மலர்ந்திருக்கும் அழகிய முல்லைக்கொடியையொத்த இடையையுடைய அவ்வங்கசுந்தரி, அந்தக்கரையில் மாலையைவைத்து, கரையின்மீது வழிந்தோடிய நீரில் ஸ்நானஞ் செய்யுஞ் சமயத்தில், அம்மாலையிற் கோத்திருந்த முத்துகளைச் சோறென்று கருதி ஒரு காக்கை வந்தெடுத்து எ - று. (௧௨௪)

அலகு கோலிவீழ்ந் தெடுத்தவக் காகம்விண் ணடைந்து
சுலவி யேகலு மற்றிழி மாமணித் தொடையன்
மிலைவ தாமென வீங்கிவன் சென்னிமேல் வீழப்
புலையொ ழிந்தன னதலாற் கைலையிற் புகுந்தான்.

(இ - ள்.) தன் மூக்கைவளைத்து வந்தெடுத்த அக்காகமானது, ஆகாயத்திற்சேர்ந்து சுழன்று சென்றவுடனே, அறுந்து கீழே விழுகின்ற சிறந்த அவ்வுருத்திராக்க மணிமாலை, அணிவதுபோல இவன் தலைமேல் வீழ்ந்தவுடனே புலைத்தன்மை யகன்றனன். அது காரணத்தினாலே இவன் மகா கைலாயத்தை யடைந்தான் எ - று. (௧௨௫)

ஆது னார்ந்திலீர் போலுமென் றவனிகழ்ந் தவர்பாற்
காது சூர்படை வைரவக் கண்ணுதல் கழற
வீது மற்றவ னுயிரொழி யாக்கையி னியைந்து
தீது தீர்த்திருங் கதியினை யளிப்பதெத் தன்மை.

(இ - ள்.) அதனை நீங்கள் அறியீர்போலுமென்று அச்சாமித்திரனை இகழ்ந்தவர்களாகிய இயமன் சித்திரகுத்தனாகிய இவர்களிடத்தில், கொல்லுஞ்

தன்மையுடைய சூலாயுதமேந்திய வைரவப்பெருமான் சொல்ல, இப்புண்ணியம் அச்சாமித்திரனது உயிர் நீங்கிய உடலிற் பொருந்திக் கெடுதியை விலக்கிச் சிறந்த பதவியை யெவ்வாறு தருவது? எ - று. (கஉசு)

என்ன மாறுகொண் டிசைத்தனன் றென்புலத் திறைவன்
பொன்னின் வார்கழ னந்திகேட் டெதிர்மொழி புகல்வான்
றுன்னு பாதகர் சடத்துவெள் ளென்புவெண் டிவலை
மன்னு கங்கையிட் டுய்ந்தில ரோவென வலித்தான்.

(இ - ள்.) என்று, தென்றிசைக் கிறைவனாகிய இயமன் எதிர்த்துக் கூறினன். பொன்னாலாகிய நெடிய வீரக்கழலணிந்த நந்தி யெம்பெருமான் கேட்டருளி, அதற்கு விடை திருவாய்மலர்கின்றவராய், மிக்க பாதகமுடையோரது உடலிலுள்ள வெள்ளிய எலும்புகளை வெண்ணிறத் துளிகள்பொருந்திய கங்காநதியிற்போட்டு, அப்பாதகங்களொழியப் பெற்றுப் பிழைக்கவில்லையோவென் றுரத்துக்கூறினர் எ - று. (கஉஎ)

நந்தி யவ்வழி மொழிதர நமனுட னடுங்கி
யந்தி வெண்பிறை மிலைதரு மமலனை யன்பாற்
சந்த வார்புய முதலிய பொருந்துறத் தரைமேல்
வந்து வீழ்ந்தடி வணங்கின னெம்பிரான் வழங்கும்.

(இ - ள்) நந்திதேவர் அவ்வாறுரைக்கவும் இயமன், உடல் நடுக்கமெய்தி, மாலைக்காலத்திலுதிக்கும் வெள்ளிய பிறைச்சந்திரனையணிந்த புனிதராகிய சிவபெருமானை, அழகிய நெடிய புயமுதலிய உறுப்புகள் நிலமிசைப்படியும்படி அன்போடுவந்து வீழ்ந்து திருவடியைப் பணிந்தனன். சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளுகின்றார் எ - று. (கஉஅ)

அரிய மாதவர்க் கருடரு முருத்திர வக்க
முரிய நீறிவை புனைந்துளோ ரோங்கரும் பாவம்
புரியும் வன்றொழிற் புலையரே யாயினு மவரென்
றெரிச னத்துள ரெமதருட் குரியராய்ச் சிறப்பார்.

(இ - ள்.) அரிய பெருந்தவமுடையார்க்கு அநுக்கிரகிக்கும் உருத்திராக்கம் நமக்குரித்தாகிய திருவெண்ணீறு ஆகிய விவற்றைத்தரித்தவர்கள், உயர்ந்த பெரும்பாவங்களைச் செய்யுங் கொலைத் தொழிலையுடைய புலையர்களேயானும், அவர்கள் எம்மைத் தரிசித்தவர்களாய் எமது திருவருட் குரியவர்களாய்ச் சிறப்பெய்துவார்கள் (எ - று). (கஉகூ)

புனித மாமணி நீறிவை புனைந்தவர்க் காணி
னினிது பூசனை வரன்முறை யியற்றுதி நீநின்
முனிக டுங்கணத் தூதர்க்கு மவ்வழி மொழிதி
நனிவ ணங்குதி போதியென் றுனரு ளுதன்.

(இ - ள்). பரிசுத்தமான சிறந்த உருத்திராக்கமணியும் திருவெண்ணீறுமாகிய இவற்றையணிந்தவர்களைக் கண்டால், நீ நியதிப்படி இனிமையாக அவர்களைப் பூசிக்கக்கடவாய், உன்னுடைய கோபந்தங்கிய தூதகணங்கட்கும் அவ்வாறு சொல்லக்கடவாய். நன்றாய் வணங்குக, போகுக என்று கிருபாமூர்த்தியாகிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர் எ - று. (ககூ0)

ஆல கண்டனன் கைலைசென் றீதுணர்ந் தறிந்தே
னேல வார்குழ லாதலா லெதிர்வரும் பூசை
சீல மாமணி புனைந்தது கண்டெதிர் சென்றேன்
ஞால முய்வதிம் மணியினா லென்றிவை நவின்றான்.

(இ - ள்.) வாசம் வீசும் நெடிய கூந்தலையுடைய இந்திராணியே! விஷம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானது நல்லகைலாயமலைக்குப்போயிதனையாய்ந்தறிந்தேன். ஆனபடியால், எதிர் வந்த பூனையானது சிறந்த பெரிய வுருத்திராக்கமணி யணிந்திருந்தது பார்த்தெதிர்சென்றுபசரித்தேன். இவ்வுருத்திராக்க மணியினாலேயே யுலகமுச்சீவிக்கின்றதென்றிவற்றை இந்திரன் சொன்னான். எ - று. (௧௩௧)

புகலு மிந்திர னுரைகொடு புலோமசை யென்பா
ளகநெ கிழ்ந்தன ளன்புமிக் குருகின ளாகி
மகர வார்குழை யெடுத்தெடுத் தணைத்தனள் வணங்கி
யகனி லத்தனை விடுவதற் கிசைந்தில ளாக.

(இ - ள்.) அப்படிச்சொல்லிய இந்திரன் வார்த்தையைக்கொண் டிந்திராணி யென்பவள், மனங்கசிந்தன்பு மிகுந்துருகியவளாகி, நெடிய மகரகுண்டல மணிந்த அவ்விந்திராணி யென்னைப்பரந்த பூமியிற்செல்ல விடுதற்குச் சம்மதியாதவளாகப் பலமுறை யெடுத்தணைத்தாள். எ - று. (௧௩௨)

யான டைந்தபொன் னாட்டின தன்மையீ தென்னா
மான வேந்தற்கு மறையவன் றனக்குள மகிழ
ஞான மாமணிப் பூனைநின் றிவைசொலா நவில
வேனை யோரெலாங் கேட்டன ரதிசயித் திருந்தார்.

(இ - ள்.) யான் சென்ற தேவலோகத்தின் றன்மை யித்தகையதென்று மாட்சிமை பொருந்திய அரசனுக்குஞ் சுப்பிரதீபனென்னு மந்தணனுக்கும் மனமகிழ்ச்சியுண்டாகச் சிறந்த ஞானமயமாகிய வுருத்திராக்கமணி யணிந்த பூனையானது நேர் நின்றிவற்றையெல்லாஞ் சொல்ல, அங்கிருந்தவர்கள் யாவருங் கேட்டாச்சரிய மடைந்திருந்தார்கள். எ - று. (௧௩௩)

வெள்ளை வெண்குடை நிழற்றிய வொருதனி வேந்தன்
கொள்ளை நான்மறைச் சுப்பிர தீபனைக் குறுகி
யெள்ள ருஞ்சிறப் புருத்திர மாமணி யெளியேற்
குள்ள வன்பினோ டளித்தியென் றிறைஞ்சின னுதவ.

(இ - ள்.) வெள்ளிய சந்திரவட்டக் குடையினிழலைச்செய்யு மொப்பற்ற அவ்வரசன், நான்கு வேதங்களையும் நன்குணர்ந்த சுப்பிரதீபரை யடைந்து இகழ்வில்லாத சிறப்புடைய வுருத்திராக்க மாமணியை யடியேனுக்கு மனவிருப்போடு கொடுத்தருளுகவென்று வணங்கினான். (சுப்பிரதீபர் அங்ஙனமே) கொடுக்க. எ - று. (௧௩௪)

பணிந்து வாங்கினன் பன்முறை யினியன பகர்ந்தா
னணிந்து சென்னியிற் பொருத்தினன் பவித்திர மடைந்தான்
றுணிந்து ருத்திர மாமணித் தொடையலிற் சிந்தை
தணிந்திருந்தனன் சாலங்க னென்னுமத் தலைவன்.

(இ - ள்.) சாலங்கனென்னு மவ்வரசன் தொழுது (அவ்வுருத்திராக்க மணியை) வாங்கி யினிய வார்த்தைகள் பலமுறை கூறி, சிரசிற்சூடித் தரித்துக் கொண்டனன். பரிசுத்தனுனன். புனிதமான வுருத்திராக்கமணி மாலையினிடத் தில் நீங்காத விருப்புற்றிருந்தான். எ - று. (கருரு)

அரச வைத்தலை யிருந்திவை யறிந்தயோ காங்கள்
மரபி ன்மாமணிச் சுப்பிர தீபனை வணங்கிக்
கரைசெ யற்கருங் காதலங் கடலொடுங் கனிந்தா
னுரைசெ யற்கருந் தன்மைநின் றன்மையென் றுரைத்தான்.

(இ - ள்.) இராஜசபையின்க ணிருந்திவற்றை யெல்லாந்தெரிந்த யோ காங்கர் சிறந்த வுருத்திராக்கமணிந்த சுப்பிர தீபனை முறைப்படிபணிந்து, அளவிடற்கரிய ஆசைக்கடலிலமிழ்ந்து உமது நிலைமையெடுத்துச் சொல்லற் கரிய நிலைமையென்று சொல்லினர். எ - று. (கருசு)

அருகு நின்றிரந் தேத்துய்யோ காங்கனை யவனி
வருபொ துக்கடிந் தளித்தருண் மன்னனை மருங்கி
னிருமெ னப்பகர்ந் திருத்தின னன்னவர்க் கிசைய
மருவு ருத்திர மாமணிப் பெருங்கதை வகுப்பான்.

(இ - ள்.) சமீபத்திலிருந்து, துதிக்கின்ற யோகாங்கரையும், உலகத்தைப் பொதுத்தன்மையினீக்கிக்காத்து வருகின்ற கிருபையுடைய சாலங்கனென்னு மரசனையும் பக்கலிலிருங்களென்று கூறியிருக்கச்செய்து அவர்களுக்கிசைய, பெருமை பொருந்திய வுருத்திராக்க மணியைப்பற்றிய வொரு பெருங்கதை சுப்பிர தீபர் சொல்லுகின்றார். எ - று. (கருஎ)

மாக ரப்பெருந் தேயமொன் றுததன் மருங்கி
னாக ரப்பதி நகரமொன் றுளதத னகத்திற்
சாக ரப்பெரு மறையவர் குலத்தவ தரித்தோன்
சேக ரக்குலச் சுபுத்தனென் றுளனொரு செல்வன்.

(இ - ள்.) மாகரமென்னும் பெரிய நாடொன்றுண்டு. அந்நாட்டின் பக்கலில் ஆகரப்பதியென்னும் நகரமொன்றுண்டு, அந்நகரத்திலே வசிக்கும் கடல்போலும்பெரிய அந்தணர் குலத்திலவதரித்தவனுய், அக்குலத்தலைவனுகிய சுபுத்தனென்னுமோர் வேதியச்செல்வனிருந்தான். எ - று. (கருஅ)

மறைப குத்தறி யாங்கவன் றனக்குள மைந்தர்
பெறல ருஞ்சிறப் பைவரிற் பின்னரிற் பிறந்தோன்
பொறைத ருங்குணன் சாந்திக னெனும்பெயர் புனைந்தான்
சிறைத ரும்பவந் தொலைந்திடப் பிறந்தவச் செல்வன்.

(இ - ள்.) வேதங்களைப்பகுத்துணர்ந்த அச்சுபுத்தனுக்கிருந்த ஐந்து புத் திரர்களில், ஐந்தாவது புத்திரன் அடைதற்கரிய சிறப்பமைந்த பொறுமை தங்கிய குணமுள்ளவன், சாந்திகனென்னும்பெயர் பெற்றவன், துன்பத்தைத் தரும் பிறவியழியும்படி யுதித்த அச்செல்வப்புத்திரன். எ - று; (கருகூ)

தெருவு நண்மணை யிழைத்திழைத் தாடுமச் சிறுநா
ளருகு ருச்சிறப் பளித்தரு ளுருத்திர வக்க

மொருத னிச்சிறு மணியெடுத் தெழுந்தகத் தோடிக்
கருதி நூலிடைக் கோத்தன னணிந்தனன் களத்தில்.

(இ - ள்.) தெருவிலுள்ள சிறுமணலைக்குவித்துக் குவித்து விளையாடும் அச் சிறுவயதில், அடைதற்கரிய பெருமையைத்தரும் உருத்திராக்க மணிகளில், ஒப்பற்ற தனியாகிய சிறுமணி யொன்றனைக்கண்டெடுத்து, அவ்விடம் விட்டு வீட்டிற்கோடி அதன் மகிமையைச்சிந்தித்து நூலிற்கோத்துக் கழுத்தில் அணிந்து கொண்டான். எ - று. (கசO)

பெற்ற தந்தைசொற் கேட்கிலன் முன்னரிற் பிறந்தான்
சொற்ற சொற்குட னாகிலன் வறிதிடை திரப்பக்
கொற்ற மாநக ரிரவினுக் கிவருடன் கூடான்
மற்றை யன்னவர் வார்ப்பன நுகர்ந்துள மகிழும்.

(இ - ள்.) தன்னை யீன்ற தந்தை சொல்லைக்கேளாதவனையும், தனக்கு முன் பிறந்த தமையன்மார் சொல்லைக்கேட்டுடன்படாதவனையும் சில நாட்கள் இப்படிச்செல்ல, வெற்றி பொருந்திய அப்பெரிய நகரத்தில் யாசிப்பதற்காக இவருடன் கூடாதவனாய், அவர்கள் தருவனவற்றையுண்டு உள்ளங்களிப்பான்.

இப்பெ ருங்குல மறையவ னிங்ஙன மிருப்ப
வப்பெ ருந்தமிழ்க் கேரள நாட்டினோ ரரசன்
கப்ப ருந்திறற் சூற்படைக் கடுந்திறற் காளிக்
கொப்ப ருங்கட னரபலி கொடுப்பதற் கோர்ந்து.

(இ - ள்.) பெரிய குலத்திற் பிறந்த இவ்வந்தணச்சிறுவன் இங்ஙனமிருக்கையில், மிகச்சிறந்த தமிழ் வழங்குங் கேரள நாட்டிலுள்ள ஓரரசன், முக்கிளையோடு வலிதங்கிய சூலப்படையேற்ற கொடிய வெற்றி பொருந்திய காளிகா தேவிக்கு, தான் அளிப்பதாகச் செய்துகொண்ட அரிய பிரார்த்தனையாகிய நர பலியைக்கொடுப்பதற்கு ஆலோசித்து. எ - று. (கசஉ)

மன்னன் வாயிலின் வைகிய புரோகித மறையோன்
றன்னை யேயின னரபலி மைந்தனைத் தருவான்
பொன்னோர் கோடிகொண் டேகெனப் புகன்றன னனையோன்
றொன்னி லத்திவ னொற்றர்போய் மைந்தரைத் துருவ.

(இ - ள்.) அவ்வரசன் தன்னரன்மனை வாயிலிலிருந்த புரோகிதப் பிராமணனை, நரபலி செய்தற்குரிய பிள்ளையைச்சேகரிக்கும்படி கட்டளை தந்து, ஒரு கோடி பொன் கொண்டு செல்லுகவெனக் கூறினன். அவ்வரசனுடைய பழமையான கேரள நாட்டிலே இவனுடைய தூதர்கள் சென்று (நரபலிக் கேற்ற) ஒரு குமாரனைத்தேட. எ - று. (கசங)

மகர மாநகர் புகுந்தனர் மறைவலோர் மறுகிற்
புகுது மேல்வையிற் சுபுத்தனோர் மனைப்புறம் புகுந்து
மிகுதி மாநிதி தருகுதும் வேண்டினர் கொண்டோர்
தகுதி மைந்தனைத் தருதிரோ வெனவவர் சாற்ற.

(இ - ள்.) சிறந்த மாகர நாட்டிற் பிரவேசித்து அந்தணர் வீதியிற் புகுஞ் சமயத்தில், சுபுத்தனென்பவன் வீட்டருகே சென்று, மிகுதியாகிய பெருஞ்

செல்வத்தைக்கொடுப்போம் விரும்பினவர்கள் பெற்றுக்கொண்டு தகுதியாகிய ஒரு புதல்வனைக்கொடுப்பீர்களோ? என்று அவர்கள் சொல்ல. எ - று. (கசச)

இத்தெருத்தலையிம்மொழி பகர்ந்திடே லென்று
வத்தெருத்திரு மறையவர் வெகுண்டவர்க் கறைய
வுய்த்த நல்குர வுடன்பிறந் துழந்திடு சுபுத்தன்
சித்தமோர்ந்துநின் றெண்ணினன் றன்னுளந்திகைப்பான்.

(இ - ள்.) இவ்வேதிய வீதியில் இவ்வார்த்தையைச் சொல்லவேண்டா மென்று, அவ்வீதியிலிருந்த சிறந்த அந்தணர் கோபித்து அத்தூதுவர்க்குச் சொல்ல, பொருந்திய தரித்திரத்தோடு பிறந்து வருந்துகின்ற சுபுத்தன், இத்தூதர் கருத்தை யறிந்து தன் மனந்திகைத்து ஆலோசித்தான். எ - று. (கசரு)

உள்ள மாறுற மலைந்தன னொருவழி நிறுத்திப்
பிள்ளை யைவரிற் பின்னவன் றனையவர்க் களிப்பான்
கள்ள நெஞ்சினன் கதுமென வெழுந்தனன் கனகக்
கொள்ளை மாநிதிச் சுமையினர் வம்மெனக் கூவி.

(இ - ள்.) மனம் வேறுபட மயங்கினான். அதனை ஒரு வழியில் நிறுத்தி, தன் ஐந்து புத்திரரில் இளையவனை அவர்கட்குக்கொடுக்க வஞ்சக மனதோடு விரைந்தெழுந்து, பொன்னாலாகிய மிக்க பெருஞ்செல்வச்சுமையை யுடையோரை வருகவென்று விளித்து. எ - று. (கசசா)

அருகு சென்றவன் கையெடுத் தழைப்புழி யகன்ற
பெருகு மாநிதிச் சுமையினர் மறுகிடைப் பெயர்ந்தார்
வருதி ரென்றவர்க கிருப்பளித் துள்புகு மறையோன்
கருகு சிந்தையட் கெண்ணினன் புலப்படக் கழற.

(இ - ள்,) அருகேபோய், அச்சுபுத்தன் கைகாட்டி யழைக்கையில், அங்கு நின்றும் போய்விட்ட மிக்க பெருந்திரவியச்சுமையுடைய அத்தூதர்கள் மீண்டும் அவ்வீதியில் வந்தார்கள். வாருங்களென்று அவர்கட்கு ஆசனங்கொடுத்து உள்ளே பிரவேசித்த அச்சுபுத்தன் வாடிய மனமுடைய தன் மனைவிக்கு இவ் விடயம் விளங்கச்சொல்லக் கருதினான். எ - று. (கசஎ)

அன்ன மன்னவ ளம்மொழி கேட்டலு மயரா
ளுன்னு ளக்கருத் தல்லதொன் றெனக்குவே றுளதோ
வென்ன நால்வரு மாங்கதற் கிசைந்தன ரிசைத்தார்
பின்ன வன்றன தின்னுயிர் கொலைபடப் பிறந்தான்.

(இ - ள்.) அன்னம்போன்ற நடையையுடைய அவன் மனைவி இவ்வார்த்தையைக் கேட்டவுடன் வருந்தாமல், உமது மனக்கருத்தை யன்றி எனக்கு வேறெண்ணமுண்டோ? எனக்கூற, நான்கு சகோதரர்களும் அதற்குச்சம்மதித்துச் சொன்னார்கள். இளையவனும் தன் இனிய வுயிர் கொல்லப்படுதற்குப் பிறந்தவனுமாகிய. எ - று. (கசஅ)

இளைய மைந்தனை வருதியென் றழைத்தனர் யாமே
யுளைய நல்குர வுழன்றன மரும்பசி யுடற்றக்
கிளையொ டிந்துரந் துயிரொழி குதுமெனக் கிளத்தி
விளைவி திப்படி யொன்றுள துனக்கென விரிப்பார்.

(இ - ள்.) இளைய குமாரனை வாவென்று கூப்பிட்டு, நாமெல்லாரும் வறுமையானது வருத்துதலால் வருந்தினோம். கொடும்பசி தகிக்க அதனால் நம்கிளையோடும் உயிர் துரந்திறப்போம் என்று கூறி, உன் விதியின்படி உனக்குண்டாவதொன்றுண்டென உணர்த்துகின்றார்கள். எ - று. (௧௪௯)

ஐந்து மக்களி லொருவனை மாநிதிக் கருளி
யுய்ந்து வாழுது மென்பது துணிந்தன முனக்கு
முந்தை யோரினோர் புதல்வனைக் கொடுப்பது முறையோ
மைந்த நின்கருத் தென்கொலென் றறைந்திட மைந்தன்.

(இ - ள்.) ஐந்து பிள்ளைகளில் ஒரு பிள்ளையைப் பெருஞ் செல்வத்திற்காகக்கொடுத்து நன்றாகச்சீவித்து வாழ்வோமென்று தீர்மானித்தோம். உனக்கு மூத்தோரில் ஒருவனைக் கொடுப்பது தகுதியோ? மகனே! உன் கருத்து யாது? எனக்கேட்க, சாந்திகன். எ - று. (௧௫௦)

உலகி றப்பதி லொருதனி நாடிறந் தொழிதல்
குலவு நாடிறந் தொழிவதற் கொருநக ரிறத்த
லலகின் மாநக ரிறப்பதி லொருகுடி யழித
லிலகு மோர்குடி யிறப்பதி லொருவனீ றினிதே.

(இ - ள்.) உலக மழிவதைக்காட்டிலும் ஒப்பற்ற ஒரு நாடு அழிதலும், பிரசித்தமான ஒரு நாடு அழிவதைக்காட்டிலும் ஒரு நகர மழிதலும், அளவில்லாத பெரிய நகர மழிதலும் ஒரு குடும்ப மழிதலும், விளங்குகின்ற ஒரு குடும்ப மழிதலிலும் ஒருவனிறப்பதும் இனியதாம் எ - று. (௧௫௧)

தரவுக்கொச்சகக்கலிப்பா.

முற்றாத முகிண்முலைப்பால் பிதிர்ந்தோட முன்சுமந்து
பெற்றாளுஞ் சிறிதிரங்கா ளிதற்கிசையப் பெற்றனளாற்
கற்றாவி னுளங்கழிந்த தாதைதறு கண்பெற்றான்
மற்றாவ ரெனக்கிரங்கி மறுத்துரைப்ப தறியேனால்.

(இ - ள்.) குவிந்த இளந்தனங்களில் பால் சுரந்தொழுக முன்னே (என்னை வயிற்றிற்) சுமந்து பெற்றதாயும், சிறிதும் இரக்க மில்லாளாய் இச்செயலுக்கிணங்கினாள். கன்றையுடைய பசுவைப்போல மனக்கனிவுற்ற தந்தையுங் குரூரத்தன்மை யெய்தினான். மற்றவர் யாவர் எனக்காக மனமிரங்கித்தடுத்துக் கூறுபவர்கள்? யான் அறிகலேன். எ - று. (௧௫௨)

முன்னீன்ற தாயர்பாற் றந்தையருண் முழுதிருத்தப்
பின்னீன்ற தநயர்பாற் றாயுவக்கும் பெரிதென்பா
ரென்னீன்ற தாயிடத்தொன் றிதுகாணே னிகல்வேந்தன்
பொன்னீன்ற பேராசை பலிக்களிக்கப் பொருந்தினார்.

(இ - ள்.) முதலிற்பெற்ற புத்திரரிடத்தில் தந்தை மிகவுங் கருணைகொண்டிருக்க, பிற்படப்பெற்ற புத்திரரிடத்தில் தாய் மிகவும் விருப்பாயிருப்பாளென்று பெரியோர் சொல்லுவர். என்னைப்பெற்ற தாயினிடத்தில் இந்தக்குணங் காண்கிலேன். வலிதங்கிய மன்னவனுடைய பொன் கொடுத்த பேராசையாலே என்னைப்பலிக்குக்கொடுக்கும்படி மனமிசைந்தார்கள். எ - று. ()

பொன்பரவு தாமரைமேற் புண்ணியனே யெனையீன்ற
மின்பரவு முப்புரிநூல் வேதியனே வணைகிடத்தி
யன்பாய மூலைபிதுக்கி யளித்தவளோ வையகோ
வென்பாவ மோவெளியேற் கிதுவிளைத்த தறியேனால்.

(இ - ள்.) அழகு பரவிய தாமரை மலரிலெழுந்தருளிய பிரமதேவனே, என்னைப்பெற்ற மின்னலைப்பரப்பும் உபவீதமணிந்த அந்தணனே, அணையிற் கிடத்தி அன்பாகிய முலையைப்பிதுக்கிப் பால் கொடுத்ததாயோ, ஐயோ! என்னுடைய பாவமோ. எளியேனாகிய எனக்கு இப்பொல்லாங்கினை யுண்டு செய்தது? அறிகலேன்! எ - று. (கருச)

என்றேங்கி யழுதிரங்கு மிவனைமுக நோக்காராய்க்
குன்றேந்து பணைமுலையு மறையவனுங் கொடுபோகி
நின்றேந்தி மாநிதிபெற் றீங்கிவனை நேர்ந்திட்டார்
மன்றேந்து முதியோரு மிளையோரு மறுகுற்றார்.

(இ - ள்.) என்றேக்கமெய்தி அழுது வருந்துகின்ற இவனை முகம் பாராதவர்களாய் மலைபோலப்பூரித்த இருதனங்களையுடைய தாயும் தந்தையுங் கொண்டுசென்று, தூதுவர்க்கு நேர்நின்று கையேந்திப் பெருந்திரவியத்தைப் பெற்றுக்கொண்டு இவனைக்கொடுத்து விட்டார்கள். இது பார்த்த வெளியிலிருந்த விருத்தர்களும் பாலியர்களும் மனமயங்கினார்கள். எ - று. (கருரு)

பொன்னேய பேராசை யிருந்தவா பொருபலிக்குப்
பின்னேய மகற்கொடுத்தான் பிரமகுலத் திவனாமோ
முன்னேய மைந்தரதற் குடனின்றார் முகம்பாரா
ரென்னேமற் றிவர்நிலையீங் கென்னாமென் றிரங்கினார்.

(இ - ள்.) பொன்னின்பா லிவன்வைத்த பேராசையால் கொல்லத்தக்க பலிக்கு இறுதியிற்பெற்ற மகனைக்கொடுத்தான். இவன் பிராமண குலத்தினனாவானோ? முன் பிறந்த பிள்ளைகளும் அதற்குடன் பட்டார்கள். ஒருவரு மிவன் முகத்தினைப்பார்த்திலர் ஈதென்ன? இவர் நிலைமை நன்றாயிருந்தது. இஃதெப்படியாமென்று வருந்தினார்கள். எ - று. (கருசு)

கடுக்காது கடுமனத்தார் மகனையவர் கைப்பிடித்துக்
கொடுத்தாரக் குலமதலை யிண்டிவரைக் கும்பிட்டா
னெடுத்தேறும் வறுமையொழிந் திருத்திரென வெதிரேத்தித்
தொடுத்தேறு வினையுணர்ந்தா னங்கவர்பின் றொடர்ந்தனனால்.

(இ - ள்.) கோபியாத கொடுமனமுடைய பிதாமாதாக்கள் தன் மகனைப் பிடித்துத் தூதர்கையிற் கொடுத்தனர். அச்சிறந்த குமாரன் இவர்களிருவரையுங் கும்பிட்டு இதுகாறும் விருத்தியாய்வந்த தரித்திரம் நீங்கி யிருப்பீர்களாக வென்றெதிரே துதித்துத், தனக்குச் சம்பவித்ததிகரித்த தீவினைப்பயனை யுணர்ந்தவனாய்த் தூதர் பின்னே சென்றான். எ - று. (கருஎ)

கோடாத நெறிவேந்தன் கூடநாடு கொடுசென்றார்
வாடாது முகமலர்ந்த மைந்தனையம் மாமறைநூல்
வீடாத புரோகிதன்பால் விடுத்தனரம் மறையோனு
மேடாரு நறுந்தெரிய லரசவைக்கொண் டிருந்தினன்.

(இ - ள்.) செங்கோன் முறை தவறாத அவ்வரசனுடைய சேர நாட்டிற்குக்கொண்டுபோய், முகவாட்ட மெய்தாது மலர்ச்சி யுற்றிருந்த அப்புத்திரனைச் சிறந்த வேதவொழுக்கந் தவறாத புரோகிதனிடம் விட்டார்கள். அவ்வேதியனும் இதழ்கள் பொருந்திய மணம் வீசுகின்ற மாலை யணிந்த அரசன்சபையிற் கொண்டுபோய் நிறுத்தினான். எ - று. (கருஅ)

மன்னவனு மெதிர்நோக்கி மனமகிழ்ந்தான் மாகாளிக்
கந்நிலையிற் பலிகொடுக்குங் கொலைநாளு மடுத்ததாற்
றொன்னிலையி னெய்யிழுகிப் புனலாட்டித் தோன்றலுக்கு
மென்னிலைய செஞ்சாந்துஞ் செம்பூவு மிலைந்திட்டார்.

(இ - ள்.) அரசனு மவ்வந்தணச்சிறுவனை நேரே கண்டு மனக்களிப் படைந்தான். மகாகாளிக்கு நரபலி கொடுக்குங்கொலைத்தினமுமன்று வந்தது. பண்டைய வழக்கப்படி அப்பிள்ளைக்கு அப்பியங்கன ஸ்நானஞ் செய்வித்து மென்மைத்தன்மை பொருந்திய செஞ்சந்தனமுஞ் செம்மலர் மாலையு மணிந்தார்கள். எ - று. (கருகூ)

வேந்தவையி னீங்கிவனை யம்மறையோன் விடுத்துறலுஞ்
சேந்ததிரு வுருநோக்கி யரசனகஞ் சிறப்புற்றான்
பூந்தொடைய னெடுவேலோன் புனிதநீ ரினிதாடிச்
சாந்திகனைக் கொடுகாளி திருக்கோட்டஞ் சார்ந்தனனால்.

(இ - ள்.) அரசசபையில் இச்சாந்திகனைப் புரோகிதன் கொண்டுபோய் விடுத்தவுடன், அவனது செவந்த வடிவினைப்பார்த்தரசன் மனங்களித்தான். அழகிய மாலை யணிந்த நீண்ட வேலேந்திய அம்மன்னவன் புனிதமாகிய ஜலத்திலினிதான ஸ்நானஞ்செய்து சாந்திகனை யுடன்கொண்டு காளிகாதேவியின் அழகிய கோயிலை யடைந்தனன். எ - று. (கசுO)

குடவாயி னின்றதனிக் குடைவேந்தன் றிருக்கோயில்
வடவாயி லெதிரேத்தி மண்ணுறவீழ்ந் தடிவணங்கிப்
படதீப முதலாய பரிநதியற்றிப் பலவாற்றான்
விடுசோரி யெடுத்திறைத்துப் புலவமுது மிசைவித்தான்.

(இ - ள்) மேனாட்டிலிருந்த வொப்பற்ற வெண்கொற்றக்குடையுடைய அரசன் அத்திருக்கோயிலின் வடவாயிலை யெதிரே துதித்துப் பூமி மேற்படிய வீழ்ந்து காளியம்மையின் றிருவடியைப்பணிந்து, நாகதீப முதலிய தீபாராதனைகளை யன்போடுசெய்து, பலவகையால் விடத்தக்க வுதிரங்களை யெடுத்திறைத்து, புலான் மணங்கமழு முணவையு நிவேதித்தான். எ - று. (கசுக)

பூமாரி தொழுதிறைத்துப் புகன்றவரன் முறைபோற்றிக்
காமாரி திருமுன்னர்ச் சாந்திகனைக் காட்டுறலுந்
தேமாலை முத்தலைவேற் படைபொறுத்தான் சிறுவனணி
மாமாலை யுருத்திரமா மணிகண்டாண் மனநெகிழ்ந்தாள்.

(இ - ள்.) புஷ்பமாரி பொழிந்து பணிந்து ஆகமங்கள் கூறிய வரன்முறையே தோத்தரித்துக் காளிகாதேவியின் சந்நிதிக்கெதிரே சாந்திகனை நிறுத்தினவுடன், மணம்வீசும் மாலைதரித்த முத்தலைவேலாகிய சூற்படையைச் சுமந்த காளிகாதேவி யச்சாந்திகனணிந்திருந்த சிறந்த மகிமைதங்கிய வுருத்திராக்கமணி மாலையைப்பார்த்து மனங்கரைந்தாள். எ - று. (கசுஉ)

ஈங்கிவனை யார்கொணர்ந்தா ரெனவிரங்கி யெதிரோடி
யோங்கருநான் மறைக்களிற்றை யுச்சிமோந் தெடுத்தணைத்துப்
பூங்கழற்காற் றுகணீவி நெற்றிநீ வினள்பொருமித்
தேங்கியதன் றிருவருட்க ணீராட்டிச் சிறப்பித்தாள்.

(இ - ள்.) இவனை யிவ்விடத்தில் யாவரழைத்து வந்தவரென்று வருந்தி யெதிரோடிச்சென்று, விசேட அருமைதங்கிய நான்மறை யுணர்ந்த ஆண் யானைபோன்ற அச்சாந்திகனை யுச்சிமோந்து எடுத்தணைத்து, அழகிய வீரக் கழலணிந்த காலிற்பட்டிருந்த தூசுகளைத்தடவி நெற்றியிலிட்டு அழுதலினால் தேக்கெடுத்த தன் திருவருள்பொருந்திய கண்ணீராலவனை மூழ்குவித்துப் பெருமை செய்தனள். எ - று. (௧௬௪)

அரசர்கோ னதுநோக்கி யதிசயித்தா னயனின்ற
புரோகிதனை யெதிர்நோக்கி யடச்சீறிப் பொருமினாள்
விரைவினவன் றலைதிருகிக் குருதிகுடித் தனள்விளித்தாள்
பரவியருட் சாந்திகனுக் கிவ்வாறு பகர்கின்றாள்.

(இ - ள்.) இராஜ ராஜனாகிய அவ்வரசன் அதனைப்பார்த்தாச்சரியப் பட்டான். அவனருகேநின்ற புரோகிதனை யெதிர்த்துப் பார்த்துக்கொல்லும் படி கோபித்து வருந்தி விரைவாக அவன்றலையைத்திருகி யுதிரங்குடித்துக் கொன்றனள். அருள்மிகுந்த சாந்திகனைவணங்கி அவனுக்குச் சொல்கின்றாள்.

அரியமா தவர்புனையு முருத்திரவக் கம்புனைந்தாய்
பெரியனீ யுனைநோக்கி வெருவந்தேன் பேதையே
னுரியவாங் கேட்டவர முதவுகின்றே னுனக்கினே
பரியவா யினவெல்லாங் கேட்டியெனப் பணிநின்றாள்.

(இ - ன்.) செய்தற்கரிய பெருந்தவமுடையோர் அணியு முருத்திராக்கத் தினை நீ யணிந்தாய், நீ பெரியவன்; உன்னைப்பார்த்து அஞ்சினேன். எளியே னுக்குரியனவாகிய வரங்களிற் கேட்டவற்றைக் கொடுக்கின்றேன். உனக்கு விருப்புள்ளனவற்றையெல்லா மிப்பொழுதே கேட்பாயாக வென்றவன் கட் டளைக்கெதிர் நோக்கி நின்றாள். எ - று. (௧௬௫)

நின்றாளை யெதிர்நோக்கி நெடிதாய பவக்குரம்பை
வென்றானக் குலமதலை வெருவொழிய விளம்புவான்
குன்றாய பணைமுலையிக் குலவேந்த னரபலிமற்
றின்றாய நாண்முதலா வேண்டலையா லென்மொழிந்தான்.

(இ - ள்.) அப்படி நின்ற காளிகாதேவியை, அநாதியாகத்தொடர்ந்த சரீரத்தோடு கூடிய பிறவியைக்கடந்தவனாகிய அச்சிறந்த சிறுவனோ பார்த் தச்சமகலச்சொல்லுகின்றான். மலையை யொத்த பூரித்த விருதனங்களையுடை யாளே! இச்சிறந்த வரசன் கொடுக்கின்ற நரபலியை யிற்றைய நாள் முதலாக நீ விரும்பாதிருப்பாயாக (இதுவே என்வரம்) என்றான். எ - று. (௧௬௬)

அப்பணிதன் றலைக்கொண்டா ளரசனையாங் கயனோக்கி
யொப்பருநல் வரங்கேட்ட தனையனைத்து முனக்கீந்தே
னிப்புதல்வன் றனைக்கொணர்ந்த புரோகிதனி னுயிருண்டேன்
செப்பரும்பா தகனவன்றன் மனைமக்க ளுயிர்செகுத்தேன்.

(இ - ள்) அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட காளிகாதேவி யவ்விடத்திலேயக்கலில் நின்றிருக்குமரசனைப்பார்த்து ஒப்பற்ற நல்ல வரங்களாய்க்கேட்டனவற்றையெல்லா முனக்குக்கொடுத்தேன். இப்பிள்ளையைப் பலிக்குக்கொண்டு வந்த புரோகிதனுடைய உயிரைப்பருகினேன், சொல்லுதற்கரிய பாதகனாகிய அப்புரோகிதனுடைய மனைவி மக்களுயிரையுங் கொன்றேன். எ - று. ()

அதுகிடக்க வீங்கிவனை யடிபோற்றி யரசநீ
புதுமணிச்சிங் காதனத்தி னினிதிருத்தி நின்புதல்வி
வதுவையிவற் களித்துவைகல் வணங்குதியா லுனைவேண்டி
யிதுபகர்ந்தே னுயிர்க்குறுதி யெனக்கொடியகல்வேந்தே.

(இ - ள்.) அரசனே! அஃதிருக்கட்டும். இப்புத்திரன் றிருவடிகளைத்துதித்துப் புதிய இரத்தின சிங்காதனத்திலிவனை யினிதாக விருத்தியுன்புத்திரியையிவனுக்கு மணமுடித்து நாள் தோறும் வணங்கக்கடவாய். உன்னை விரும்பியிது சொன்னேன். இவ்வாக்கியம் உன்னுயிர்க் குறுதியெனக்கொள்க. வெற்றி தங்கிய அரசனே! எ - று. (௧௬௮)

அன்றிவனை விலைகூறி யளித்துவாங் கியநிதியக்
குன்றுகவர்ந் தடுசோரர் கொடுபோகக் குலமறையோ
னென்றுமுள வறுமையொழிந் திலனாகி யெத்தெருவுஞ்
சென்றிரக்கு மக்களொடுந் தீவினைநல் வினையாமோ.

(இ - ள்.) அன்றைய தினத்திலிவனை விலைகூறி விற்றுவாங்கிய திரவியக்குவியலை வலிய கள்வர்கள் கவர்ந்து போகவும், வேதியர் குலத்துதித்தவிவன்றந்தை தனக்கெக்காலத்திலுமுள்ள தரித்திர நீங்காதவனாய்த்தன் புத்திரரோடு மெல்லாத்தெருக்களிலும் போயாசிப்பான். பாவம் புண்ணியமாகுமா? எ - று.

தேவர்க்கும் பவித்திரமாந் தெய்வமா மணியிதனை
யாவர்க்கும் புனைதருதற் கெளிதன்றே யிதுபுனைந்தார்
மூவர்க்கு முதலான முதன்மையோ ரதுவறிந்து
பூவர்க்க மிவனடிக்கே சொரிந்திவனைப் பூசிப்பாய்.

(இ - ள்.) தேவர்களுக்கும் பரிசுத்தமாகிய தெய்வத்தன்மை தங்கிய சிறந்த இந்த வுருத்திராக்க மணியை யெல்லோர்க்கும் அணிந்து கொள்ளுவதற்கு எளிதன்று. இதனை யணிந்தவர்கள் திரிமூர்த்திகட்கும் மேலான முதன்மைத் தன்மையுடையோர். அதனை யறிந்து மலர்வகைகளை யிவன் பாதங்களிலே பெய்து பூசிக்கக்கடவாய். எ - று. (௧௭0)

என்னுமுத் தலைச்சூலி யிசைத்தமொழி மனக்கொண்டு
பொன்னுள முளரிமயி லனையதனிப் புதல்விதனை
யன்னுனுக் குடனளித்தா னவிரொளிப்பன் மணிகுயிற்று
மின்னுரை நெடுவேலித் திருக்கோயின் மேவித்தான்.

(இ - ள்.) என்று முத்தலைச்சூலந்தாங்கிய காளிகாதேவி சொன்ன சொற்களை மனதிற்கொண்டு, பொன்போன்ற நாளத்தோடு கூடிய தாமரையில் வசிக்கும் மயிலின் சாயலையுடைய இலக்குமிபோன்ற தன் புத்திரியை யவ்வேதியச் சிறுவனுக்கு விரைவில் மணமுடித்து, பிரகாசிக்குமொளிதங்கிய பலவகையிரத்தினங்கள் பதித்த விளக்கமுற்ற மதில் சூழ்ந்த தனதரண்மனையிற் பொருந்தியிருக்கச்செய்தான். எ - று. (௧௭௧)

அக்கோயி லவர்க்கருளி யவனையா னெனவைகன்
முக்காலுந் தொழுதுற்றான் சுதன்மனெனு முதல்வேந்தன்
மைக்காள கண்டனிரு விழியென்னு மாமணியைத்
தக்காரிற் பெரிதுற்ற சாந்திகனு மிரந்தரித்தான்.

(இ - ள்.) அவ்வரண்மனையை யவ்விருவர்க்குங்கொடுத்துச் சுதன்மனென்னுந் தலைமைபெற்ற அரசன், அச்சாந்திகனையே சிவபெருமானாகக்கொண்டு நாள்தோறுங் காலையுச்சி மாலைகளில் வணங்கிவந்தான். கரிய நீலகண்டராகிய சிவபெருமானது சிறந்த விழிகளென்று கூறப் மேன்மைதங்கிய அவ்வுருத்திராக்க மணியை மேலோரிற்சிறந்த சாந்திகன் ஆயிரங்கணக்காகத் தரித்தான்.

தூநாறு சுடரிலைவேற் சுதன்மனருள் புதல்வியொடு
மாறாத சாந்திகனு மின்னலம்பெற் றருள்கூர்ந்தா
னேனுமை பெற்றொழியா நோவுழந்தா ரிவர்பயந்தோர்
தேனாறுந் தெரியலா னினிதிருந்த செயலுணர்ந்தார்.

(இ - ள்.) புலால் மணங்கமழும் பிரகாசமுற்ற அச்சவடிவான வேல் தாங்கிய சுதன்மனுடைய புதல்வியும், அவளைக்கலந்து நீங்காத சாந்திகனுமினிய நன்மைகளையுற்று வாழ்ந்திருந்தார்கள். பொருளுடையுள்ளவர்களாய்த் துன்புற்றவர்களாகிய இவனைப்பெற்ற தாய்தந்தையருந்தேன் மணக்கும் மாலை தரித்த சாந்திகன் சுகத்தோடு வாழ்ந்திருக்குஞ்செய்தியைத் தெரிந்தார்கள். எ - று. ()

இல்லாமை யெனுஞ்சிறுமை யிருந்தவவர் தாமிழைத்த
பொல்லாமை யுணர்கிலராய்ப் புதல்வரொடும் போதரலுஞ்
செல்லாமை பெற்றிருந்தா னலனாகி யெதிர்சென்று
னல்லாமை யிருளோதி யீன்றவட னடிவீழ்ந்தான்.

(இ - ள்.) தரித்திரமென்னுஞ் சிறுமையில் வருந்திய அவர்கள் தாஞ்செய்த துன்பத்தைத் தெரியாதவர்களாய்த் தம் புத்திரரோடு வந்தவுடனே யெதிர்கொண்டு போகாமல் இறுமாப்புற்றிராதவனாய் எதிர்சென்றான். இருளின் காரணமாகிய மேகம்போன்ற கூந்தலுடைய தன் தாயின் பாதத்தில் பணிந்தான். எ - று. (௧௭சு)

மல்கியகண் ணீர்ததும்ப வன்கண்மை புரிந்தனமென்
றொல்கியசிந் தையனாகி யுள்ளுடைந்து மெலிவானை
நல்கியபே ரன்பினொடு பணிந்தனனு லந்நால்வ
ரல்கியசிந் தையராகிப் புல்லினா ரவர்ப்பணிந்தான்.

(இ - ள்.) மிக்க கண்ணீர் துளிக்கும்படி, கொடூரச்செயல் செய்தோமென்று வருந்திய மனமுடையவனாய் உள்ளம் நைந்து மெலிகின்ற தந்தையைத் தனக்குள்ள பேரன்போடு பணிந்தான். அந்நான்கு சகோதரர்களும் தளர் மனமுடையவராய்த் தழுவிக்கொண்டார்கள். அவர்கள்பாற்பரிவுகாட்டினான்.

பெருநிதிபெற் றிவன்பயந்த பிள்ளையென்றும் பாராம
லருகியவன் பினராகி யளித்தனரொன் பதுமதியா
னுருகியவன் பொடுபணிந்தான் வேண்டுவன வுவந்துதவிச்
தருநிழலிற் திரற்குவமை யிவரெனத்தந் தளித்தனனால்.

(இ - ள்.) பெருஞ்செல்வம் பெற்றுக்கொண்டு, பெற்றமகனிவனென்றும் பாராமல் பட்சமில்லாதவர்களாய்ப் (பலிக்கு) க்கொடுத்தார்களென்

பதையு மெண்ணாதவனாய், இளகிய அன்போடு பணிந்துஅவர்களுக்கு வேண்டிய வற்றைச் சந்தோஷித்துக்கொடுத்து,கற்பக விருட்ச நீழலிலுள்ள இந்திரனுக்குச் சமானமானவர்களிவர்களென்று சொல்லும்படி யாதரித்தான். எ - று. (௧௭௬)

தந்தையர்க்கும் பயந்தளித்த தாயர்க்கு முன்பிறந்த
முந்தையர்க்கு மெம்பிரான் முளரிமல ரடிபுகுவான்
றந்துமா மணிபுனையத் தந்தளித்தான் கடைமுறைபோ
யெந்தைவான் கைலைபுகுந் தினிதிருந்தா னிவரோடும்.

(இ - ள்.) தன் பிதாவிற்குந் தன்னைப்பெற்று வளர்த்த தாயிற்குந் தன்முன் றோன்றிய தமையன்மார்க்கு மெமது சிவபெருமானது தாமரை மலர் போன்ற திருவடியிற் சேரும்பொருட்டு நூலிற்கோத்த சிறந்த வுருத்திராக்க மணியணியும்படிகொடுத்துக்காத்து வந்தான். இறுதிக்காலத்தில் சென்று எமது சிவபெருமானது திருக்கைலாயகிரியை யடைந்திவர்களோடு மினிதாக வீற்றிருந்தான். எ - று. (௧௭௭)

ஒறைமா மணிப்பெருமை யுணரானு மெடுத்தணியப்
பெற்றசாந் திகன்பெற்ற பேறிதென்றால் யாமெடுத்துச்
சொற்றமா மணியறிந்து தொடுத்தணிந்தார்க் கரவசைத்த
கற்றைவார் சடையான்றன் கழலன்றி நிழலின்றே.

(இ - ள்.) ஒன்றியாகிய சிறந்த வுருத்திராக்க மணியின் பெருமையைத் தெரியாதவனாய் அதனை யெடுத்து அணிந்துகொண்ட சாந்திகனடைந்த பதவியிஃதென்று சொன்னால், நாமெடுத்துச்சொல்லிய சிறந்த அவ்வுருத்திராக்கத்தின் மகிமையைத்தெரிந்து மாலையாகக்கோத்தணிந்தவர்கட்குச் சர்ப்பத்தை யணைக்கச்சாகக்கட்டிய கூட்டமாகிய நீண்ட சடையையுடைய சிவபெருமானது திருவடியைத்தவிர நிழல் வேறில்லை. எ - று. (௧௭௮)

இப்பரிசிம் மணிப்பெருமை யெனவுணர வெடுத்துரைத்த
சுப்பிரதீ பற்பணிந்து யோகாங்கன் றொழுதேத்தி
யப்பெருமா மணியவன்பா லருள்பெற்றுச் சிவயோகத்
துப்புரவு பெற்றமலன் கைலைவரை துன்னினான்.

(இ - ள்.) இவ்வுருத்திராக்க மணியின் சிறப்பு இத்தகைத்தென்று தெரிந்துகொள்ள விரித்துச்சொன்ன சுப்பிர தீபனை யோகாங்க முனிவர் நமஸ்கரித்துப்பணிந்து துதித்து, அச்சிறந்த மகிமை தங்கிய வுருத்திராக்க மணியை அச்சுப்பிர தீபர் அன்போடு அருள்செய்யப்பெற்று, சிவயோகானுபவமெய்தி மலரகிதனாகிய சிவபெருமானது திருகைலாயத்தை யடைந்தனர். எ - று.

தருவினிலம் புரந்தளிக்குஞ் சாலங்க னெனும்வேந்தன்
சுருதிமா தவத்தோனைச் சுப்பிரதீ பனைப்பணிந்து
மருவுசிவ மணிவாங்கி முடிபொறுத்து மண்புரக்குந்
திருவருசெங் கோலோச்சிப் பின்கைலை சென்றுற்றான்.

(இ - ள்.) கற்பக தருவைப்போலும் (ஈகைத்தன்மையுடையவனாய்) உலகத்தைக்காத்திரட்சிக்குஞ் சாலங்கனென்னு மன்னவன், வேதமறிந்த பெருந்தவமுடையோராகிய சுப்பிரதீபரைப் பணிந்தவர்பாலுள்ள வுருத்திராக்கமணியைப்பெற்றுச் சிரசிற்றரித்து உலகினைக்காக்கும் வளமிக்க செங்கோல் செலுத்தி நெடுங்காலத்திற்குப்பின் கைலாய மெய்தினன். எ - று. (௧௮௦)

ஓரரச னவையகத்தி லினிதுணர்த்தி யுலவாத
வார்வமுட னகம்புகுந்த வருமறைச்சுப் பிரதீபன்
பார்புகழ நலனுகர்ந்து பற்பகல்வை கியபின்னர்ச்
சார்தருவை யுச்சினி மாகாளர் தமக்கீந்தான்.

(இ - ள்.) ஒப்பற்ற சாலங்கனென்னும் மன்னவன் கொலுச்சபையில் உருத்திராக்க மகிமையை யினிமைபெற விளக்கி, நீங்காத அன்போடு தம்மனைக் குச்சென்ற அரிய வேதங்களை யறிந்த சுப்பிர தீபர், உலகமுழுதுந் துதிக்கும் படி சகல சுகங்களையு மநுவித்துப் பலகாலஞ்சென்ற பிறகு, தமக்கு தேவ லோகத்திலிருந்து வந்த கற்பகதருவை உச்சினிமாகாளர்க்குக்கொடுத்தனர்.

இந்நகரத் தின்பநுகர்ந் தில்வாழ்க்கை யினிதோம்பிப்
பின்னரருங் கிளையோடு மக்களொடும் பெரிதுவப்புற்
றந்நகர மதிசயிப்ப வந்தரதுந் துமியார்ப்பப்
பொன்னகர்வேந் தெதிரேத்தத் திருக்கைலை வரைபுகுந்தான்.

(இ - ள்.) இவ்வுலக வின்பங்களை யனுபவித்து இல்லற தருமத்தை நன்று கக்காத்து அதன்பின்னர் அரிய உறவினரோடும் புதல்வரோடும் மிக்க மகிழ் வெய்தித் தேவலோகமாச்சரிய மெய்தவும், அந்தரதுந்துமி யொலிக்கவும், பொன்னகர்க்கரசனை இந்திரன் எதிர்கொண்டு துதிசெய்யவுந் திருக்கைலாய கிரி யடைந்தனர். எ - று. (கஅஉ)

முன்னிகழ்ந்த கதையிதுவென் றெடுத்துரைத்து முனிவரர்க்குப்
பின்னிழ்ந்த வதன்காதை பிறிதொன்று பேசுறலும்
பன்னுகணத் தவர்புகழ்ந்து பலவாற்றாற் பரசுற்றுப்
பொன்னவிர்புன் சடைச்சூத புகல்வாயென் றடிபணிந்தார்.

(இ - ள்.) பூர்வத்தினடந்த சரித்திரமிஃதென்று நைமிசாரணிய வாசி கட்கு எடுத்துச்சொல்லி, சூதமுனிவர் பிற்காலத்தினடந்த அவ்வுருத்திராக்க மணியின் மற்றொரு கதைசொல்லத் தொடங்கவும், பலரும்வியந்து சொல்லும் முனிவர்கள் புகழ்ந்து பலவிதமாகத் துதிசெய்து பொன்போலவிளங்கும் புன் சடையையுடைய சூதமுனிவரே! இன்னுந் திருவாய்மலர்ந்தருளுகவென்று அவர் பாதங்களில் நமஸ்கரித்தார்கள். எ - று. (கஅ௩)

கலிநிலைத்துறை.

அடவி மால்வரை யகடுகிண் டொழுகிய வருவி
மடல விழ்ந்துவீழ் நறுமலர் மிதந்திட வரலாற்
புடவி மாமகள் புனைமலர் மாலையிற் பொலிந்து
நடவு தன்மைபெற் றொழுகிய நருமதை யாறு.

(இ - ள்.) வனத்திலுள்ள பெரிய மலைகளின் வயிற்றைக்கிழித்தொழுகும் அருவியானது முறுக்கவிழ்ந்து விழுந்த மணநதங்கிய மலர்கள்மேலே மிதக்கும் படிவருதலாலே, பெருமைதங்கியபூமிதேவி அணிந்துகொண்டுள்ள மலர்மாலை போன்று விளங்கிப் பாய்கின்றதன்மையைப் பெற்றுப் பிரவாகிக்கும் நருமதை யாறு. எ - று. (கஅச)

கூல வார்க்கரைக் கனியொடுங் குழைந்தவான் சினைய
சோலை யந்நதி வணங்கின தொழுவன போன்ற

சால நீண்மருங் கெய்தியந் தடந்திரைக் கரத்தான்
மூல மூடிபுக் கெடுத்தெமை முடிக்கலை யென்றே.

(இ - ள்.) அவ்வாற்றின் குவிந்துநீண்ட கரையிலே, பழங்களோடுவளைந்த உயர்ந்த கிளைகளையுடைய சோலைகள், மிக நீண்ட பக்கங்களிலெய்தி, அழகிய விசாலமான அலைகளென்னுங் கைகளால் எங்கள் வேரிற்புகுந்து எங்களை யெடுத்து முடித்துக்கொள்ளவில்லையென்று, அவ்வாற்றைப்பணிந்து அஞ்சலி செய்வனபோன்றிருந்தன. எ - று. (௧௮௫)

மணிவ ரன்றியும் வைரமீர்த் தொழுகியும் வனவே
யணிநி லாமணி யுந்தியு மார்கலி யார்த்தன்
மணம கன்புலத் துள்ளவை வானவர் கொள்லாற்
றணியு மன்னவற் களிப்பது போன்றதத் தடநீர்.

(இ - ள்.) அப்பரந்த நீர்ப்பெருக்கானது மாணிக்கங்களை வாரிக்கொண்டு பாய்ந்தும், வைரங்களை யிழுத்துக்கொண்டோடியும், வனத்திலுள்ள மூங்கிலிற்பிறந்த அழகிய வெண்முத்தங்களைச் செலுத்தியுஞ் சமுத்திரத்தைத்தூர்த்தல், தன் கணவனாகிய சமுத்திரத்திருக்கும் நவமணிகளைத் தேவர்கள் கொண்டமையின், செல்வங்குறைந்த அந்நாயகனுக்குக்கொடுப்பதை யொத்திருந்தது. எ-று.

வரைய கழ்ந்தெழு மாவொடு மாமதக் களிறுந்
திரைசெய் வேலைதொட் டீர்த்தது செறிப்பது செப்பி
னிரைபெ ருங்கடற் களிற்றொடு தருவிழந் தேங்கக்
குரைபெ ரும்புன னருமதை கொடுப்பது கடுக்கும்.

(இ - ள்.) மலைகளைப்பிளந்து எழும்பிய மரங்களோடு பெருமதஞ்சொரியும் யானைகளையும், கரை வரையில் மோதும் அலைகள்பற்றி யிழுத்துச்சென்று கடலிற்சேர்ப்பதைச் சொல்லுமிடத்தில், ஒலிக்கின்ற பெரிய கடல் தன்பாலுதித்த வெள்ளை யானையையும் கற்பகதருவையும் இழந்தேங்கி யிருப்பதால் ஒலிக்கின்ற நீர்ப்பெருக்குடைய நருமதையாறு அக்கடலுக்குக்கொண்டுபோய்க் கொடுப்பது போலாம். எ - று. (௧௮௭)

தூய நாண்மலர்த் தாமரை யோதிமந் துவைப்ப
மேய தேன்றுளி விரையொடு தென்றன்மோந் திரைக்கு
மாய வார்கரை யருகுறத் திரிதரு மாக்கள்
சேயொ ளிக்கதிர் மார்பினுந் தோளினுந் தெறிப்ப.

(இ - ள்.) பரிசுத்தமான அன்றலர்ந்த தாமரை மலரை அன்னப்பறவைகள் துவைத்தலினால் வெளிப்பட்ட தேன்றுளிகளைத்தென்றற் காற்றானது மோந்து வாசனையோடு வீசும். இதனால் அவ்வாற்றின் நீண்ட கரைக்கருகே சஞ்சரிக்கும் மனிதரது செந்நிறம்பொருந்திப் பிரகாசிக்கும் மார்பினுந்தோளினுந் தெறிக்கின்றன. எ - று. (௧௮௮)

இனைய மாநதி யுடுத்திடு மாயிட மென்னும்
புனைசெய் மாநக ரொன்றுள தந்நகர் பொருந்தி
மனைவ ளந்தரு விச்சுவ சித்தனோர் வணிக
னினையு நீதியி னீடறத் துறைவழி நின்றான்.

(இ-ள்.) இத்தகைய சிறந்த நருமதையாறு சூழப்பெற்ற அலங்காரத்தோடு கூடிய ஆயிடமென்னும்பெருநகரொன்றுண்டு. அந்நகரத்தில்வசித்து இல்லற

நடாத்தும் விசுவசித்தனென்னும் ஒப்பற்ற வைசிய குலத்தவன், மதிக்கத்தக்க மநுமுறைப்படி மேம்பட்ட தருமமார்க்க வழியேயொழுகினான். எ - று. ()

வேட நல்லுருக் காண்டொறும் வீழ்ந்தடி பணிந்து
மாடி ருந்தியாங் கவர்க்கமு துதவியு மனையார்க்
காடை கோவண மருத்தியி னருளியு மரபிற்
றேட ரும்பொரு டருமமொன் றல்லது தேடான்.

(இ - ள்.) சிவவேடந்தாங்கிய நல்ல உருவங்களைத்தரிசித்த பொழுதெல்லாம் சாஷ்டாங்கமாக அவர் திருவடிகளில் நமஸ்கரித்து, தன்னருகே யெழுந்தருளச்செய்து அவர்கட்குத் திருவமுது ஊட்டியும், அத்தகையினர்க்கு ஆடைகோவணம் இவற்றை ஆசையோடு கொடுத்தும், கிரமமாகத்தேடத்தக்க பொருள்களில் தருமத்தை நீங்கப் பிறிதொன்றினையுந் தேடாதவன். எ - று. ()

ஆற ருஞ்சுரத் தரும்புனற் பந்தர்செய் தமைத்து
மூறு கூவனீள் குரம்பொடு கழனிசெய் துவந்துந்
தேறு கின்றதிற் சிவனடி யல்லது தேரு
வீறி லாப்பெருங் கருணையே யுருவெடுத் தனையான்.

(இ - ள்.) வழியிலுள்ள அரிய பாலைவனத்திலே அரிய தண்ணீர்ப்பந்தலை யேற்படுத்தியும், ஊற்று நீர் சுரக்குங் கிணறுகளையும், நீண்ட வரப்போடுகூடிய கழனிகளையுமமைத்துக் களித்தும் தேறவேண்டியவற்றில் சிவபெருமான் திருவடியையன்றி வேறொன்றுந் தேறாதவனாய் முடிவில்லாத பேரருளே வடிவமெடுத்தாற் போன்றவன். எ - று. (கககூ)

கடவுண் மாப்பெருங் கங்கையா டுதுமெனக் கருதி
யிடப வேறொடு கத்தப மொட்டக மிவற்றின்
மிடைபெ ருஞ்சரக் கேற்றுவோன் வேசரிப் புறத்தி
னடைத ரும்பொதி யேற்றின னுருத்திர வக்கம்.

(இ - ள்.) தெய்வீகந்தங்கிய சிறந்த மேன்மையுடைய கங்காஸ்நானஞ் செய்வோமென்று கருதி, இடபத்தின் மேலும் கழுதையின் மேலும் ஒட்டகத்தின்மேலும் விசேட விலைதங்கிய சரக்குகளை யேற்றுவோனாய், கழுதையின் முதுகில் உருத்திராக்கமணிகளாலாகிய மாலைகளின் பொதியை யேற்றினான்.

காதங் காதரை வைகலுங் கழிதரக் கழித்துப்
போதந் தன்னவன் பொதும்பர்சூழ் விந்தியப் பொருப்பின்
மீதந் தேறலும் வீழ்ந்துகோ கிறப்புழி நமனார்
தூதன் பற்றினன் றென்புலத் துடன்கொடு தூர்ப்ப.

(இ - ள்.) ஒரு காதம் ஒன்றரைகாதமாக நாடோறுங்கழியும்படி கடந்து போய், அவ்விசுவசித்தனென்னும் வணிகன் சோலை சூழ்ந்த விந்தகிரியின் மேலே யேறவும், அக்கழுதை யேறமுடியாது தவறிவீழ்ந்து இறக்கும் சமயத்தில் இயமதூதன்பற்றித் தென்றிசையிலுள்ள இயமபுரத்திற்கழைத்துக்கொண்டு செல்ல,

கயிலை மால்வரைக் கணத்தவர் வெகுண்டனர் கடுங்க
ணயிலை யிற்றிடு மறலிதன் றூதனை யடர்த்து
வெயிலி மைத்தெழு மானமீ திருத்துற மீண்டு
சயில நாயகன் சந்நிதிப் படுத்தினார் தலைவர்.

(இ - ள்.) பெரிய கைலாயகிரியிலுள்ள சிவகணத்தலைவர் கோபித்து, கடூரமான விழிகளும் முட்போன்ற பற்களுமுள்ள கொல்லத்தக்க இயம தூதனை யெதிர்த்து, ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் விமானத்தின்மேலேற்றிக்கொண்டு திரும்பி, கைலாச நாதராகிய சிவபெருமான் சந்நிதியிற் கொண்டுபோனார்கள்.

நூறு கற்பமங் கிருந்தது கணமென நூல்கோத்
தேறு ருத்திர மாமணி சுமத்தலா னெவர்க்கும்
பேற ளிக்குமிம் மாமணி தரித்தவர் பெருமை
கூறி னெம்முறை யடங்குறு தென்றனன் சூரவன்.

(இ - ள்.) அக்கழுதை, நூல்களிற் கோத்த உருத்திராக்கமணி மாலைகளைச் சுமந்த விசேடத்தால், நூறு கற்பகாலம் வரையில்,ஒருக்ஷண நேரம்போல அக்கைலாயத்திலிருந்தது. எத்தகையினருக்கும் உயர்கதியைத் தரும் இச்சிறந்த உருத்திராக்கமணியைத் தரித்தவருடைய சிறப்பைச்சொல்லத் தொடங்கினால் எம்மால் முடிவுறாதென்றார் சூதமுனிவர். எ - று. (கசுரு)

கேட்ட ரும்புலங் களிப்புறு மாதவக் கிழவர்
தோட்ட லங்கலாய் சூதநீ முன்புகல் விபூதி
நாட்ட ருங்கதி தருமென நவின்றனை யதனோ
டேட்டி மாமணி புனையவேண் டுவதென விசைத்தாய்.

(இ - ள்.) இவற்றையெல்லாங் கேட்டு, அரிய ஐம்புலங்களு மகிழ்வெய்திய பெருந்தவமுடையோராகிய நைமிசாரணியவாசிகள், இதழ்களோடு விகசித்த மலர்மாலை யணிந்த சூதமுனிவரே! தேவரீர் முன்னே யுபதேசித்த விபூதியே சொல்லற்கரிய மெய்க்கதியைத் தருமென்றுரைத்தீர். அதனோடு கூட்டி உருத்திராக்கமணி யணியவேண்டுமென்று இப்போது கூறுகின்றீர். எ - று.()

ஒன்றி ருங்கதி தருமெனி லுருத்திர வக்க
மின்று பூண்பதில் வருபய னென்கொலோ வென்றே
யன்று மாதவர் சூதனை வினவலு மனையான்
மின்றி ரண்டன மேவணியார்க் கின்னணம் விளம்பும்.

(இ - ள்.) அவ்விபூதி யொன்றே பெருங்கதி தருமென்றால் உருத்திராக்கமணியை இப்போது அணிவதில் வரும்பயன் யாதோவென்று, அப்போது நைமிசாரணிய வாசிகள் சூதமுனிவரை வினவவும், அச்சூதமுனிவர் மின்னல்கள் சேர்ந்திருந்தாற்போலுஞ் சடைமுடியையுடைய அந்நைமிசாரணிய முனிவர்கட்கு இப்படிக்கூறுகின்றார். எ - று. (கசுஎ)

மெய்ய ரும்பிய வேர்வையின் விரிபுன லாட்டின்
மைய ரும்பிய மழையினின் மக்கண்மெய்ந் நெருக்கிற்
றெய்வ வெண்டிரு நீற்றணி சிதைதருஞ் சிதைந்தால்
வெய்ய பூதம்வெங் கழுதரா லரக்கரான் மெலிவார்.

(இ - ள்.) உடலிற்றுளிக்கின்ற வெயர்வையாலும், பரந்த நீர்விளையாட்டாலும், மேகங்கள் சொரிந்த மழையாலும், மனிதர்களுடைய உடல் நெருக்கத்தாலும் தெய்வீகந்தங்கிய வெள்ளிய திருநீற்றின் அணிதல் அழியும். அப்படியழிந்தால், கொடிய பூதர்களாலும் பெரிய பிசாசுகளாலும் இராகு கேதுக்களாலும், இராக்கதர்களாலும் வருத்த மெய்துவார்கள். எ - று. (கசுஅ)

அலங்கு மாமணி யுருத்திர வக்கமொன் றணியின்
விலங்கெ யிற்றுவெம் பூதமே முதலிய மேவா
புலங்கொண் மாமணி புனைதரிற் போக்குறு திதனு
லிலங்கு மாமணி நீற்றொடும் புனைவதற் கிசையும்.

(இ - ள்.) விளங்குகின்ற சிறந்த உருத்திராக்கமணி யொன்றணிந்தால், கோரமான பற்களையுடைய கொடிய பூதமுதலியன பொருந்தா. ஞானந் தரும் சிறந்த உருத்திராக்கமணிமட்டுமே யணிந்தாலும் அவற்றை யகற்றுது. அக்காரணத்தால் பிரகாசிக்கின்ற உருத்திராக்கமணி திருவெண்ணீற்றோடும் அணிதற்கமையும். எ - று. (கசகூ)

கவர்க்கொ டுஞ்சடை யந்தணீ ரொருகதை கேண்மின்
சவித்து ருப்பெரு நாடெனு மொருதனி நாட்டிற
பவித்த சூரிய புரமெனு மோர்பதி யதன்பாற்
குவப்பு யச்சிந்து சேனனென் றுளனொரு கோமான்

(இ - ள்.) பிளவுற்ற வளைந்த சடையையுடைய அந்தணர்களே! வேறோர் சரித்திரங் கேட்பீர்களாக. சவித்திருவென்னும் பெருநாடாகிய ஒரு ஒப்பற்ற நாட்டிலே, சிலாக்கியமான சூரிய புரமெனும் ஒரு நகரமுண்டு. அந்நகரத்தில் திரண்ட புயத்தையுடைய சிந்துசேனனெனும் ஓரரசனிருந்தான். எ - று. ()

சிந்து நாட்டினிற் காகள நகருடைச் சிங்கன்
வந்து போர்க்கறை கூவலும் வருத்தநாற் படையை
யுந்த மூண்டிரு சேனையு முடற்றிடுங் காலை
முந்து தூசியின் முறிந்தனன் சிங்கனு முதல்வன்.

(இ - ள்.) சிந்து நாட்டிலே, காகள நகரத்தை யரசுடைமை கொண்ட சிங்கனெனு மன்னவன் எதிர்த்து வந்து போருக்கழைத்தவுடனே, சிந்து சேனன் சதுரங்க சேனையையுஞ் செலுத்த, இருவர் சேனையும் எதிரிட்டுப்போர் செய்கையில், சத்துருவின் முற்பட்ட தூசிப்படையால் சிங்கனெனு மன்னவன் தோற்றனன். எ - று. (உ0க)

சிங்க னென்னுமத் திறலுடை யொருதனிச் செல்வன்
பொங்கு நாற்பெருஞ் சேனையைக் களம்படப் போக்கி
யங்க வன்றனித் தொருவனு யடவிபுக் கடைந்து
செங்கண் மாயனை நோக்கின் றருந்தவஞ் செய்தான்.

(இ - ள்.) சிங்கனென்னும் பெயர் பெற்ற வலிய ஒப்பற்ற வரசன், கோபிக்கின்ற தனது நால்வகைப்பெருஞ் சைநியத்தையும் யுத்தத்தில் மாளும்படி யழித்து, அவ்வரசன் ஒன்றியாய்த்தனித்து ஒரு வனத்திற்போய்ச்சேர்ந்து, தாமரைமலர்க் கண்களையுடைய திருமாலைத் தியானஞ்செய்திருந்து அரிய தவம் புரிந்தனன். எ - று. (உ0உ)

சால நாள்பல கழிதரக் கழிந்தபின் றுளப
மாலை மார்பினன் புள்ளர சுகைத்தெதிர் வந்தா
னேனு மன்பொடு மென்புறக் குழைந்துநின் றேத்தி
மூல மாமுதன் முகுந்தனைப் பணிந்தனன் மொழிவான்.

(இ - ள்.) எண்ணிறந்த நாட்கள் இப்படித் தவஞ்செய்து நீங்கிய பிறகு, துளசிமாலை யணிந்த திருமார்பையுடைய திருமால், பட்சி ராஜனாகிய கருடன்

மீதாரோகணித்துக் காட்சி தந்தனர். பொருந்திய அன்புடன் என்புகள் நெக்கு விட வுருகி நேர் நின்று தோத்திரஞ்செய்து ஆதிமூலமாகிய திருமாலெனும் முதல்வனை நமஸ்கரித்து விண்ணப்பஞ் செய்கின்றான். எ - று. (௨௦௩)

செருமு கத்தடு நிருபராற் றிருநகர் நீர்ந்தே
னருவி மால்வரை யடைந்துநின் னருள்பெற வேண்டி
யொருவ ருந்தவத் தடைந்தன னுவந்தருள் சுரந்தாய்
மருவ லர்க்கடந் தியானர செய்துவான் மதிப்பாய்.

(இ - ள்.) போர்முகத்தி லெதிர்த்த பகை மன்னரால் என் செல்வ நகரத்தைப்பிரிந்தேன். அருவிதவழும் இப்பெரிய மலையை யடைந்து தேவரீர் திருவருளைப்பெறக் கருதி நீக்கற்கரிய தவநிலை மேற்கொண்டேன். தேவரீர் திருவுள்ளமுவந்து திருவருள் புரிந்தீர். சத்துருக்களைச்சயித்து அடியேன் அரசுரிமை யெய்தும்படி திருவுள்ளம் பற்றவேண்டும். எ - று. (௨௦௪)

என்ன வேந்தனின் றிரந்திரந் தெடுத்தெடுத் தியம்பப்
பொன்னி லங்கெழி லெம்பிரான் றிருவருள் புரிந்து
தன்ன லங்கொளிச் சக்கரந் தருதுநின் றணவாத்
துன்னு சேனைகொண் டேகிமற் றடுபடை தொலைப்பாய்.

(இ - ள்.) என்றிவ்வகையாக அவ்வரசன் திருமாலின் திருமுன்னின்று விண்ணப்பஞ்செய்து விளம்பவும், திருமகள் விளங்கும் அழகுடைய திருமால் திருவருள் கூர்ந்து, தனக்குத்தானே யொப்பாகிய இச்சக்கராயுதத்தைத் தருகின்றோம். உன்னுடைய பிரியாத நெருங்கிய சேனையை உடன்கொண்டு போய் மாற்றான் சேனையை யொழிப்பாய். எ - று. (௨௦௫)

விடுத்த காலைநின் வெம்முனை யடுபகை வீட்டி
யடுத்து நின்கரத் தும்முறை யடையுமற் றப்பாற்
கொடுத்த சக்கர மெம்முழை வருமெனக் கொடுத்தா
னெடுத்த வெண்குடை வேந்தனேற் றெழுந்தன னிப்பால்.

(இ - ள்.) பிரயோகித்தபோது போரிலெதிர்த்த நின்கொடிய பகைவரை யழித்து, உடனே பண்டுபோல உன்கையில் வந்து தங்கும். அதன் பின்னர், நாம் கொடுத்த இச்சக்கரம் நம்மிடத்தில் வந்தெய்துமென்று திருவாய்மலர்ந்தளித்தருளினர். வெண்கொற்றக்குடை நிழல் செய்யும் அம்மன்னவன் அதனை வாங்கிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். இதன் பிறகு. எ - று. ()

பரிதி நல்கிய நேமியோன் பாற்கட லடைந்தா
னொருத னிக்குடை வேந்தனுஞ் சேனைகொண் டுருத்தான்
செருமு ரட்கடுஞ் சிந்துசே னைக்களஞ் செறுத்துப்
பொருது தங்களின் மிடைந்தன ரெதிரெதிர் புகுந்தார்.

(இ - ள்.) சக்கராயுதமளித்த திருமால் க்ஷீராப்திக்கு எழுந்தருளினர். ஒப்பற்ற சந்திரவட்டக்குடையையுடைய சிங்கனெனும் அவ்வரசனும் தனது சிறு சேனையைச்சேர்த்துச்சென்றெதிர்த்தான். முருட்டுத்தனமுடைய கொடும் போர் செய்யத்தக்க சிந்து சேனனை யுத்தத்திற்கிட்டி யெதிர்த்து, இருதிறச் சேனைகளுஞ் சேர்ந்து எதிர்த்து யுத்தஞ்செய்யலானார்கள். எ - று. (௨௦௭)

ஆழி மாயவ னளித்தரு ளாழிவெம் படைக்கு
வாழி நாண்மலர்ப் புனலொடு மருச்சனை வகுத்துச்

சூழு மிக்களச் சிந்துசே னன்மேருகு சேனை
பூழி யாக்குதி யெனவிடுத் தொருகைதோள் புடைத்தான்.

(இ - ள்.) க்ஷீராப்தியிற்றுயிலுந் திருமால் கொடுத்தருளிய சக்கராயுதத்திற்குப் புதிய பூக்களாலும் நீராலும் பூசித்து, இவ்யுத்த பூமியிற் சூழ்ந்துள்ள சிந்து சேனனுடைய தொகுதியாகிய சேனையைப் புழுதியாகச்செய்யக்கடவாயென்று பிரயோகஞ்செய்து, தனது ஒப்பற்ற வலக்கையால் இடத்தோளைத் தட்டினன். எ - று. (உ0அ)

கடவுண் மாப்படை முள்ளுடைக் கடுவனங் கவர்ந்து
படவெ ரித்தடு வடவையிற் படர்ந்தது பாரா
மிடைபெ ருப்படை முற்றுற விரித்தது வேந்தன்
சுடர்மு னின்றொளி மழுங்கிய மதியெனத் தொலைந்தான்.

(இ - ள்.) தெய்வீகந்தங்கிய சிறந்த சக்கராயுதமானது, முள்ளுகளையுடைய பெரிய வனத்தைக்கவளீகரித்து அழித்துவிட்டுத் தகித்தற்குரிய வடவாமுகாக்கினிபோலப் பரவியதைப்பார்த்து, நெருங்கிய பெருஞ்சேனை முழுதும் அழிந்தது. அரசனாகிய சிந்து சேனனும் சூரியனுக்கு முன்னிருந்து ஒளி மழுங்கிய சந்திரனைப்போன்று அழிந்தான். எ - று. (உ0கூ)

தன்ன வாகிய சேனையுந் தானுமாய்த் தணந்து
முன்னை நாடுகொண் டிருந்தனன் சிங்கனு முதல்வ
னன்ன வன்றனி நாட்டையு மணங்குற வலைத்தான்
பின்னர் சிந்துசே னன்றனித் தன்னகர் பெயர்ந்தான்.

(இ - ள்.) சிந்து சேனன் தன்னுடையதாகிய சேனையுந்தானுமாய் யுத்தகளத்தை நீங்கித்தன் பழைய நாட்டை அரசு செய்திருந்தான். சிங்கனெனுமரசன் அச்சிந்து சேனனுடைய ஒப்பற்ற நாட்டையும் துன்பெய்தும்படியழித்தான். அதன் பிறகு, அச்சிந்து சேனன் ஒன்றியாய்த் தன் நகரத்தைவிட்டுச்சென்றான். எ - று. (உக0)

வெருவி யோடினன் கோசிகன் மேதகு வசிட்ட
னருகி ருந்தநா ரதனிவர் மூவரை யடையா
வுருகு காதலின் மண்ணுற வணங்கிநின் றுரைப்பான்
றிருகு சீற்றமு நாடுநீத் திடுசிந்து சேனன்.

(இ - ள்.) கடுங்கோபத்தையும் நாட்டையும் விட்டு நீங்கியோடிய சிந்து சேனன், பயந்தவனாய், பெருமைதங்கிய கௌசிகர் வசிஷ்டர் அவர்களோடிருந்த நாரதரென்னும் இம்மூன்று முனிவரை யடைந்து மனமுருகுகின்ற பேரன்போடு பூமியிற்பொருந்தச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவர்கட்கெதிர் நின்று விண்ணப்பஞ்செய்கின்றான். எ - று. (உகக)

சிங்க னென்படைச் சேனையாற் செருவலி யிழந்து
பொங்கு கானிடைப் புகுந்துசி தரனடி போற்றிச்
செங்கண் மாலவ னுழிபெற் றனனமர் செறுத்தா
னங்க ணுழிபுக் கறுத்ததென் சேனையை யனைத்தும்.

(இ - ள்.) சிங்கனென்பவன், எனது ஆயுதமேந்திய சேனையால் யுத்தஞ்செய்யும் வல்லபமற்று, பெரிய காட்டையடைந்து, இலக்குமியை மார்பி

லணிந்த திருமாலைத்துதித்துத் தவஞ்செய்து, அத்தாமரைக்கண்ணனுடைய சக்கராயுதத்தைப்பெற்று மீண்டும் யுத்தத்திற்கு நெருங்கினான். அவ்விடத்தில் அச்சக்கரம் நெருங்கி என் சேனை முழுவதையும் அழித்துவிட்டது. எ - று. ()

ஆண்டு நின்றெனை தரும்பகை கடப்பதற் கஞ்சி
யீண்டு நும்மடி சரணெனப் புகுந்தன னெளியேன்
றாண்டு சிந்தையிற் றிருவருள் சுரந்தனி ராகி
வேண்டு மொன்றெனக் களித்திரென் றவரடி வீழ்ந்தான்.

(இ - ள்.) அங்கிருந்து என் பெரும்பகையை வெல்வதற்குப்பயந்து, இங்கே தேவரீர் திருவடிகளை அடைக்கலமாக அடைந்தேன். மெய்ஞ்ஞானமோங்கும் உங்கள் திருவுள்ளங்களில் திருவருள் சுரந்தவர்களாய் விரும்பிய ஒருவரத்தை அடியேனுக்கு அநுக்கிரகிப்பீர்களென்று அம்முனிவர்கள் பாதங்களில் வணங்கினான். எ - று. (உகரு)

வேத நான்குமூ வுருவெடுத் தனையமெய்த் தவத்தோர்
காது வெஞ்சம ரஞ்சுமன் னவன்கருத் துணரா
வோது முண்மையொன் றுளதுனக் குணர்த்துது முணர்வாய்
பூதி பூசிமற் றுருத்திர மாமணி புனைவாய்,

(இ - ள்.) நான்கு வேதங்களுமே மூவுருவேற்று வந்தாற்போன்ற உண்மைத்தவத்தையுடைய கௌசிகாதி முனிவர்கள், கொலைத்தன்மை பொருந்திய கொடிய யுத்தத்திற்கு அஞ்சிய சிந்து சேனனெனும் மன்னவனுடைய வெண்ணத்தை யறிந்து, சொலத்தக்க உண்மைப்பொருளொன்றுண்டு. அதனை யுனக்குச்சொல்வோம் அறிவாயாக. திருவெண்ணீறு தரித்து உருத்திராக்கமணி யணியக்கடவாய். எ - று. (உகச)

நின்பெ ரும்படை யிறந்தநா ணின்னுயிர்க் கிரங்கிற்
றன்ப னாழிமற் றேதென வுணர்ந்திலை யையா
வுன்க லத்துறை யுருத்திர மாமணி யுளவான்
முன்பு ணர்ந்திலை பார்த்தியென் றன்னவர் மொழிந்தார்.

(இ - ள்.) உன் பெருஞ்சேனைகள் இறந்த காலத்தில், சிவபெருமானுக் கன்பராகிய திருமால் அநுக்கிரகித்த சக்கராயுதம், உன்னுயிரை யகற்றாது இரக்கமுற்றிருந்தது என்ன காரணமென்று நீ யறிந்தாயில்லை. ஐயனே! உன்னுடைய ஆபரணங்களிற் சிறந்த உருத்திராக்கமணி யொன்றிருக்கின்றது. நீ யதனை முன்னே யறிந்திலை. இப்போது காண்கவென்று முனிவர்கள் கூறினார்கள்.

யான றிந்திடு முருத்திர மணிபிறி தில்லை
மான வெம்படை களனுற வருமோர் வணிகன்
பானி லாமணி முத்தணி யளித்தனன் பாரே
னேனை மாமணித் தொடையலி னுளதுகொ லென்றான்.

(இ - ள்.) அடியேன் தெரிந்து தரித்த உருத்திராக்கமணி வேறேயின்று. அச்சத்தைத்தரும் பெருஞ்சேனையினிடையே யான் வருகையில், ஒரு வணிகன் வெள்ளிய சந்திரன்போலப் பிரகாசிக்கும் முத்துமணிகள் கோத்த மாலையாகிய ஒரு மாலையைக்கொடுத்தனன். அதனையும் நன்கு பார்க்கவில்லை. என்னுடைய தல்லாத அம்முத்துமாலையில் அவ்வுருத்திராக்கமணியுள்ளதோ அறியேன் எனக்கூறினன். எ - று. (உகசு)

என்று முத்தணி கழற்றின னோக்கின னிடையே
யொன்று ருத்திர மணிகரந் திருந்ததென் றுரைப்ப
வன்று மூவரு நோக்கின ரதிசயங் கொண்டார்
நின்ற வேந்தனு மதனுடைப் பெருமையை நினைத்தான்.

(இ - ள்.) என்றிவ்வாறு சொல்லி, அம்முத்துமாலையைக் கழற்றிப்பார்த்தான். அதனிடையே உருத்திராக்கமணியொன்று மறைந்திருந்தது எனச் சொல்ல, அதனைக்கேட்ட அம்முனிவர் மூவரும் அதிசயப்பட்டார்கள். அவர் முன்னின்ற சிந்து சேனனும் அவ்வுருத்திராக்கத்தின் பிரபாவத்தைச்சிந்தித்தான். எ - று. (உகஎ)

மன்ன கேண்மதி நின்னுடைப் பூமியும் வளனு
நின்ன வாகுற வேண்டுமே னீற்றொடு மணியைச்
சென்னி தாங்குதி சிந்தையி லிருத்துதி செருவேட்
டுன்னு சேனையு மிவ்வழி புனையுமா றுரைப்பாய்.

(இ - ள்.) அரசனே! கேட்பாயாக. சத்துருவாற்கைக்கொள்ளப்பட்ட உன் பூமியும் வளங்களும் உன்னுடையனவாகப்பண்டுபோற் பெறவேண்டுமாயின், திருவெண்ணீற்றோடு உருத்திராக்கமணியைச் சிரமிசையிருத்தி மனதிலுந் தியானஞ்செய்க. யுத்தத்தைச்செய்ய விரும்பி நீ யனுப்புஞ் சேனைகளுக்கும் இப்படியே யணியும்படி கட்டளை தரக்கடவை. எ - று. (உகஅ)

போவெ னச்சொலு மந்நிலை மாதவப் புனிதர்
மூவர் தாளிணை சென்னிசேர்த் துருத்திர மூர்த்திக்
காவ திம்மணி யருளவேண் டுதிரென வளித்தார்
காவ லன்றொழு தேந்தின னருநெறி கடந்தான்.

(இ - ள்.) இனிச்செல்லுகவெனக்கூறிய அப்பொழுது, பெருந்தவமுடைய பரிசுத்தர்களாகிய கௌசிகர் முதலிய மூன்று முனிவர்களுடைய உபய பாதங்களையுஞ் சிரசிற்சூடி, சிவபெருமானுக்குரிய உருத்திராக்கமணியாகிய இதனைத் தேவரீர் கொடுத்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, அம்முனிவர்களும் அங்ஙனமே கொடுத்தார்கள். அரசன் அவர்களைப்பணிந்து மணியைப்பெற்றுக் கொண்டு அரிய வனத்தைக்கடந்தான். எ - று. (உகசு)

வந்து சேனையுந் தானுமவ் வுருத்திர மணியைச்
சிந்தை செய்தணிந் தணிதிரு நீற்றொளி சிறக்க
முந்தை வெம்படைத் தலைவரோ டவனகர் முடுகிச்
சிந்து சேனனுஞ் சிங்கனு மமரெதிர் செறுத்தார்.

(இ - ள்.) தன்னகரமெய்தி, சேனையுந்தானுமாக அவ்வுருத்திராக்கமணியைத் தியானஞ்செய்து அணிந்துகொண்டு, அழகிய திருவெண்ணீற்றின் பிரகாசம் அதிகரிக்க, முன்போலவே பெரிய சேனா நாயகரோடு, சத்துருவாகிய அச்சிங்கனுடைய நகரத்தை யடைந்து, சிந்து சேனனும் சிங்கனுமாக எதிரெதிர் நின்று யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். எ - று. (உஉ0)

செறுத்த சேனையுட் சிங்கனு மடுசினந் திருகி
மறுத்தும் வந்தன னெனவுருத் தெழுந்தெதிர் வந்தான்
கறுத்த நெஞ்சொடு கனலுமி ழாழிகைக் கொண்டா
னிறுத்த நீரொடு மலரொடு மருச்சனை யீந்தான்.

(இ - ள்.) நெருங்கிய சேனைகளுக்குள் சிங்கனென்பவனும் கடுங்கோபமிருந்து, மீண்டும் வந்தானென்று கோபத்தோடு புறப்பட்டு எதிர்வந்து, வஞ்சக மனத்தோடு நெருப்பைச்சொரியும் சக்கராயுதத்தைக் கையிலெடுத்து சலத்தாவிடேகித்து மலர்களாலர்ச்சனை செய்து பூசித்தான். எ - று. (உஉக)

கடவுண் மாப்படை யாழியை விடுத்தலுங் கனல்கான்
றிடந டந்தவத் திகிரியு மெம்பிரான் மணியை
யடலை நீற்றையுங் கண்டது வெருவொடு மகலாப்
புடைவ லன்றிரிந் தாங்கவன் கரதலம் புகுத.

(இ - ள்.) தெய்வீகந்தங்கிய சிறந்த சக்கராயுதத்தை ஏவியவுடனே, நீயைச்சிந்தும்படி சென்ற அச்சக்கராயுதம், எமது சிவபெருமான் உருத்திராக்கமணியையும் வெற்றியைத்தருந் திருவெண்ணீற்றையும் பார்த்து, அது அச்சத்தோடும் அங்கு நின்றகன்று, அச்சேனையைப்பிரதக்கணஞ்செய்து அச்சிங்கனுடைய கையிலடைய. எ - று. (உஉஉ)

சீற்ற வெம்படைச் சிந்துசே னன்சினத் தெழுந்தா
னூற்ற லன்னவ னீகவெஞ் சேனையை யடர்த்துப்
பாற்றி னங்களம் படர்தரப் பொருதனன் பழநா
ளேற்றி ருந்தனன் வனம்புகுந் தொருதனி நோற்றான்.

(இ - ள்) கோபத்தையுடைய வெவ்விய சேனையையுடைய சிந்துசேனன் கோபித்தெழுந்து, தன் வலிமையால் அச்சிங்கனுடைய பெருந்தொகையாகிய சேனையை அழித்து, பருந்து கூட்டங்கள் யுத்தகளத்திற்பரவ யுத்தஞ்செய்தனன். அது கண்ட முன் தவஞ்செய்தவன் காட்டிற் பிரவேசித்து ஒன்றியாகத்தனியே தவம்புரிந்தான். எ - று. (உஉங)

உருத்தி ரப்பெரு மணியினு நீற்றினு முடற்றுஞ்
செருச்சி றந்தன னன்னது தீர்ப்பனென் றெண்ணிக்
குரைக்க ருங்கட லிறைவனை வணங்கினன் குறிப்ப
விரைக்க ருங்கட லிறைவனு மாங்கவற் கெதிர்ந்தான்.

(இ - ள்.) பெருமை தங்கிய உருத்திராக்கமணியாலும் திருவெண்ணீற்றாலும் செய்கின்ற போரில் ஜயமடைந்தான். அந்தச்சயத்தை யொழிப்பேனென்று கருதி, ஒலிக்கின்ற கரு நிறமுள்ள சமுத்திரராஜனை வருணனை வணங்கித்தியானஞ்செய்ய, சத்திக்கின்ற வருணனும் அச்சிங்கனுக்குத்தரிசனை தந்தான். எ - று. (உஉச)

அரிது நோற்றனை யென்னைவேண் டுதியென வருளான்
விரிக ருங்கட லுயகன் கேட்புழி வேந்தன்
பெரிது வந்தரு ளெந்தையென் பெருவிருப் பெல்லாம்
புரிதி யாயினுய் நினைதொறும் பொழிகுதி யென்றான்.

(இ - ள்.) அரிதாகத்தவஞ்செய்தாய். யாது வேண்டுமென்று கருணையோடு, பரந்த சமுத்திரத்திற்குத்தலைவன் கேட்டபோது சிங்கன், மிகவும் களிப்பெய்தி, திருவருள்புரிந்த எந்தையே! அடியேன் பெருவிருப்பமெல்லாம் அநுக்கிரகிக்கத் தொடங்குவீராகில், யான் கருதும் பொழுதெல்லாம் மழை பெய்யச்செய்வீரென்று கேட்டுக்கொண்டான். எ - று. (உஉரு)

ஆங்க தாகவென் றளித்தன னலைகடற் பெருமா
னோங்கு வெண்குடைச் சிங்கனுஞ் சேனைகொண் டொருங்கே
வீங்கு திண்புயச் சிந்துசே னனையமர் விளைப்ப
ஞாங்க ரன்னவர் படையெலா மெதிரெதிர் நடந்த.

(இ - ள்.) அலைகளோடு கூடிய சமுத்திரராஜனை வருணன் அவ்வாறே யாகுகவென்று வரங்கொடுத்தான். சந்தோஷ மிக்க வெண்கொற்றக்குடையை யுடைய சிங்கனும் தன் சேனைகளை ஒருங்கு சேர்த்துக்கொண்டு, பூரித்த வலிய தோளையுடைய சிந்து சேனனோடு யுத்தஞ்செய்ய, இருபக்கமாயிருந்த அவர்கள் சேனை முழுதும் எதிரெதிராகப்போர்செய்தன. எ - று. (உஉசு)

எதிர்ந டந்திகல் சிந்துசே னன்படை யாவும்
பொதியு நீற்றொடு முருத்திர மணியொடும் பொலிந்த
கதுமெ னக்கண்ட சிங்கனீர்க் கடவுளை நினைந்தா
னதிர்பெ ரும்புயல் பொழிதர நனைந்ததவ் வநிகம்.

(இ - ள்.) எதிரேறி வந்து போர்செய்யுஞ் சிந்து சேனனுடைய சேனை முழுதும் தமது தேக முற்றிலும் நிறைந்த திருவெண்ணீற்றோடும் உருத்திராக்கமணியோடும் விளங்கின. அதைக்கண்ட சிங்கன்விரைந்து வருணனைத் தியானித்தான். இடிமுழக்கோடு கூடிய பெரிய மேகங்கள் மழை பொழிந்தமையால் சிந்துசேனன் சேனைமுழுதும் நனைந்தன. எ - று. (உஉஎ)

அதுக ணத்தினிற் சிங்கனோ ரங்கையிற் றிகிரி
கதுமெ னத்தூரந் தனனரன் கண்மணி மணியைப்
புதித ணிந்தவர்த் தொழுதுவெண் பொடிநனைந் தழுந்த
மதுகை வீரரை யாருயிர் குடித்தது வளைத்து.

(இ - ள்). அத்தருணத்தில் சிங்கன் அழகிய கையிலேந்திய ஒப்பற்ற சக்கரத்தை ஏவினான். அது உருத்திராக்கமணியை நூதனமாகத்தரித்தவர்களைப் பணிந்து, திருவெண்ணீறு மழையினால் நனைவுற்ற வெற்றி பொருந்திய சேனைகளைச்சூழ்ந்து அவர்கள் அரிய உயிரை யுண்டது. எ . று. (உஉஅ)

சிந்து சேனைய னாகிய சிந்துசே னனும்போ
யிந்து சேகரற் குவமைசால் வசிட்டர்மற் றிவரைச்
செந்த ளிர்ப்பதம் வணங்கிநின் றஞ்சலி செய்து
புந்தி யுந்தனி வதனமும் புலர்ந்திது புகல்வான்.

(இ - ள்): கடல் போலுஞ் சேனையையுடைய சிந்து சேனன் உடனே சென்று, சந்திரனைச்சடையிலணிந்த சிவபெருமானை யொத்த வசிஷ்டர் முதலிய மூன்று முனிவர்கள் செவ்விய தளிர் போன்ற பாதங்களில் வணங்கி நேர் நின்று கைகூப்பி, மனமும் ஒப்பற்ற முகமும் வாடி இவ்வாறு சொல்லுகின்றான். எ - று. (உஉகூ)

நுணங்கு மாதவத் துறையுளீர் நும்மொழி தலைக்கொண்
டிணங்கு ருத்திர மணியொடும் விபூதிபெற் றெளியேன்
கணங்கொள் சேனைகொண் டெதிர்தலு மன்னவன் கடற்கோ
வணங்கி யேத்துறப் பொழிந்தனன் பன்மழை வருணன்.

(இ - ள்.) நுண்ணிய பெருந்தவமார்க்கத்திலிருப்பவர்களே! உங்கள் சொல்லைச்சிரசாகவகித்து, பொருத்தமான திருவெண்ணீற்றோடு உருத்திராக்க

மும் உங்கள் பாற்பெற்று, அடியேன் கூட்டமாகிய சேனைகளைக் கூட்டிக்கொண்டு எதிர்த்தபோது, அச்சிங்கன் சமுத்திரராசனுன வருணனை வணங்கித் துதிசெய்ய, வருணன் பல மழைகளைப்பெய்தான். எ - று, (உகூ0)

ஆதி மாமணி புனைந்தனர் சிலர்சில ரணிந்த
பூதி சாதன வெண்பொடி புயனைத் தழிப்பக்
காது நேமிவெம் படைசில வொழிதரக் கதுவி
மோது சேனையை முற்றுற முடித்தது முனிந்து.

(இ - ள்.) சிவபெருமானது உருத்திராக்கமணி யணிந்தவர்கள் சிலர், மற்றுஞ்சிலர் அணிந்திருக்கின்ற விபூதிக்காப்பாகிய திருவெண்ணீற்றை மேகங்கள் நனைத்தழித்து விட்டமையால், கொல்லுகின்ற கொடிய சக்கராயுதமானது சிலவற்றை ஓடிப்போய் விழும்படிசெய்து, கோபித்து நெருங்கிய வனைச்சேனை முழுவதையும் மாய்த்தது. எ - று. (உகூக)

எனமொ ழிந்தனன் கேட்டருண் மாதவ ரிசைப்பார்
வனையு ருத்திர மாமணி யாவரும் வனைந்து
புனையு நீற்றொடும் பொருதிலர் புயல்பட நடந்தா
ரனையர் யாவரு மிறந்தன ரரணமற் றில்லார்.

(இ - ள்.) என்று விண்ணப்பஞ்செய்து கொண்டனன். அதனைக்கேட்ட முனிவர் சொல்லுவார். அலங்கரிக்கின்ற உருத்திராக்கமாகிய சிறந்த மணியை எல்லோரும் அணிந்துகொண்டு அணிகின்ற நீற்றணியோடு போர் செய்திலர். ஆதலால், வேறு காப்பில்லாதவர்களாய் மழை சொரிதலால் நனைந்த யாவரும் இறந்தார்கள். எ - று. (உகூஉ)

இன்னு மோர்பொரு ளியம்புதுங் கேட்டியா லிறைவ
மின்னெ யிற்றுவா ளசுரர்யா வருந்தவம் விரும்பி
மன்னு ருத்திர மணியொடு பூதியும் வனைவார்
துன்னு முப்புரத் தகவையி னிருப்பரத் தொல்லோர்.

(இ - ள்.) இன்னும் ஒருண்மை சொல்லுவோம். அதனையுங்கேட்பாயாக. அரசனே! ஒளி வீசுகின்ற வாட்படைபோன்ற பற்களையுடைய அசுரர்கள் யாவருந் தவச்செயலை யிச்சித்து நிலை பெற்ற உருத்திராக்கமணியோடு திருவெண்ணீறுந் தரிப்பார்கள். அப்பழைய அசுரர்கள் நெருங்கிய திரிபுரங்களினுள்ளிருப்பார்கள். எ - று. (உகூங)

அனைய தொன்மையோ ரரிமுதற் பிரமரை முதலாம்
வினையி னீங்கிய தேவர்க்கும் வினைவிளைத் துவப்பார்
முனைமு கத்தவர்க் குடைந்துமுப் பத்துமுக் கோடி
துனைபெ ரும்படை வானவ ராற்றலர் துயர் வார்.

(இ - ள்.) அத்திறப்பழைய அசுரர்கள், பிரமனுக்கும் பிதாவான திருமால் முதலாகிய தீவினையினின்று கழிந்த தேவர்களுக்கும் தீமை செய்து களிப்பார்கள். யுத்தத்தில் அவ்வசுரர்க்குத்தோற்று முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆற்ற முடியாதவர்களாய் வருந்துவார்கள். எ - று. (உகூச)

அரியு நான்முகக் கடவுளுந் தேவர்கள் யாரும்
புரிய முப்புரஞ் செகுத்துறப் புலமையி னோர்ந்தா

ரெரியும் வேள்வியொன் றோம்பின ரவ்வெரி யிடைநின்
றுரிய பூதமும் பேய்களும் பிறந்தன வுலப்பில்.

(இ - ள்). விஷ்ணுவும் பிரமனும் ஏனைய தேவர்கள் யாவரும், தமக்குத் துன்பு செய்யும் திரிபுரங்களை யழித்துவிடத் தங்கள் புத்தியால் ஆலோசித்தார்கள். எரிகின்ற ஆபிசாரயாகமொன்றுவளர்த்தார்கள். அவ்யாகாக்கினியிலிருந்து குரூரஞ்செய்யத்தக்க பூதங்களும் பேய்களுங் கணக்கின்றித்தோன்றின. எ - று.

ஈண்டு குண்டவெந் தழலிடை யெழுந்தவெஞ் சேனை
தூண்ட முப்புரஞ் சுற்றின கடுஞ்சமர் தொடுத்த
வாண்டெ திர்ந்தவ ரணிந்தரு ளுருத்திர வக்கம்
பூண்ட பூதிகண் டெதிர்தொழு திறைஞ்சின போன.

(இ - ள்.) இவ்விடத்தில், அவ்யாக குண்டத்தின் கொடிய அக்கினியில் தோன்றிய கொடிய சேனையை யேவவும், அவைதிரிபுரங்களைச்சூழ்ந்துகொண்டு கடும்போர்செய்தன. அங்கெதிர்ந்த திரிபுர வசுரர்கள் அணிந்திருக்கும் உருத்திராக்கமணியையும் திருவெண்ணீற்றையும் பார்த்து அவர்களை யெதிர்கொண்டு வணங்கிச்சென்றன. எ - று. (௨௬௬)

ஒன்றி னானுமுப் புரத்தவ ரொழிகில ரென்னா
மன்ற லந்துள வணிந்தருண் மாயவன் மதித்துச்
சென்று தாமொரு பவுத்தரிற் சிறந்தன னாகி
யன்ற வர்க்குவே றுணர்த்தினன் பேரறி வழித்தான்.

(இ - ள்.) ஒரு வழியாலும் இத்திரிபுரர்கள் அழிந்திலரே யென்று, மணம்வீசுந் துளசிமாலையணிந்தருளும் திருமால் யோசித்து, தாமே யொரு சிறந்த பவுத்தாசாரியராகப்போய், அவ்வசுரர்கட்குப்பவுத்த மார்க்கத்தை யுபதேசித்து அவர்களுடைய பெரிய ஞானத்தை யொழித்தார். எ - று. (௨௬௭)

முப்பு ரத்தினர் மணியொடு பூதியோர்ந் தெடுத்த
வப்பு ரத்தினை வறும்புர மாக்கின ரதுவோர்ந்
தெப்பு ரத்தினு முறைந்தரு ளிமையவர் பெருமா
னிப்பு ரத்தழ னகைவிளைத் திடவுயிர் நீத்தார்.

(இ - ள்.) திரிபுரவவுணர்களின் உருத்திராக்கமணியுடன் திருவெண்ணீற்றையும் முன்னே யணிந்திருந்த அவ்வுடல்களை வெற்றுடல்களாக்கினார்கள். அதனை யறிந்து எவ்வுலகங்களிலும் நிறைந்தருளிய தேவநாயகனாகிய சிவபெருமான், இத்திரிபுரங்களிற் கோபச்சிரிப்புண்டாக்க அவர்கள் உயிர் விட்டார்கள்.

நீயு மவ்வழி யுருத்திர மணியொடு நீறு
மேய சேனையோ டணிந்துமால் விழிவளர்ந் தருளும்
பாயி ருந்திரைக் கடலெனப் பெரும்படை பரப்பிப்
போய வன்படை வரவழைத் தெதிரெழப் பொருதி.

(இ - ள்.) அப்படியே, நீயும் பொருந்திய உன்சேனையோடு உருத்திராக்கமணியையுந் திருவெண்ணீற்றையுந் தரித்து, திருமால் யோகநித்திரை புரியும், பாய்கின்ற பெரிய அலைகளையுடைய பாற்கடல்போலப் பெருஞ்சேனை பரவச்சென்று, அச்சிங்கன் சேனையை வரும்படி அழைத்தெதிர்த்து யுத்தஞ் செய்யக்கடவாய். எ - று. (௨௬௮)

பூசு பூதிதண் புயற்புன லனைந்துபோக் குறினு
மாச றப்புனை யுருத்திர மாமணி யழியா
பேசி லிங்கிவை யிரண்டையும் பெரிதுறப் புனைந்து
மூசு வண்டிமிர் வாகைபெற் றெழுகென மொழிந்தார்.

(இ - ள்.) அப்படிச்சென்றால், அணிந்த திருவெண்ணீற்றை மேகங்கள் மழையால் நனைத்துக்கலைத்து விட்டாலும், குற்றமகலத்தரித்துள்ள சிறந்த உருத்திராக்கமணி நனைந்தழியாதாதலால், சொல்லுமிடத்தில் இவ்விரண்டையும் மிகுதியாகத்தரித்து மூசுகின்ற வண்டுகளொலிக்கும் வெற்றிமாலை யடைந்து செல்கவெனக் கூறினர். எ - று. (௨௪௦)

அருந்த வங்கிளைத் தனையர்சொற் றருளிய மொழியாற்
றிருந்து சிந்தைய னுருத்திர மணியொடுஞ் சிறந்து
பொருந்து பூதியைச் சேனையும் புனைதரப் புனைதந்
திருந்த சேனைகொண் டெறுழ்வலிச் சிங்கன்மே லெழுந்தான்.

(இ - ள்.) அரியதவமே கப்புவிட்டதுபோன்ற அம்முனிவர்கள் மொழிந்தருளிய வார்த்தைகளால், திருந்திய மனத்தையுடைய சிந்து சேன மன்னவன், உருத்திராக்கமணியோடு, சிறப்புற்றுப்பொருந்திய திருவெண்ணீற்றையும், தன் சேனையும் அணிந்துகொள்ளத் தானுமணிந்து, தன்பாலிருந்த சேனைகளைக்கூட்டிக்கொண்டு, மிக்க வலிதங்கிய அச்சிங்கன்மேலெதிர்க்கப் புறப்பட்டான். எ - று. (௨௪௧)

எழுந்த சேனைகொண் டேகலு மெய்திய சேனைக்
கொழுந்து சிங்கனூர்க் கொடிமதி ளடுத்தன வனையான்
புழுங்கு சீற்றமோ ருருவுகொண் டாலெனப் புகுந்தா
னழுந்து பாற்கடன் மேல்விழு மதிர்முகில் பொருவ.

(இ - ள்.) இவ்வாறு புறப்பட்ட சேனையை யுடன்கொண்டு செல்லவும், சேனையின் முதல் வரிசைகள் சிங்கனுடைய நகரத்தின் துவசங்கட்டிய மதிலைச் சூழ்ந்து கொண்டன. அச்சிங்கன், ஆழமாகிய க்ஷீராப்தியின் மேல்விழுங் கர்ச்சனையுடைய மேகத்தைப்போல, கடுங்கோபமே ஓர் வடிவெடுத்ததென்று சொல்லும்படி சேனையோடு வந்தான். எ - று. (௨௪௨)

இருவர் சேனையு மெதிரெதி ருடற்றின விடையே
குருதி யாறெழுந் தலைப்பது பெரும்பிணக் குப்பை
யருகு யர்ந்தன வெருவருஞ் சிங்கனேற் றடர்ந்தா
னொருவ னிப்பெருந் திகிரிகொண் டருச்சனை யுஞற்றி.

(இ - ள்.) இருமன்னவர் சைனியமும் ஒன்றுடனொன்று எதிர்த்துப் போர் செய்தன. இவ்வகைப் போர்க்கிடையில் உதிரவெள்ளம் அலைத்தோடியது. பெரிய பிணக்குவியல்கள் அருகே மலைபோன் றுயர்ந்தன. அச்சந்தரும் அரிய சிங்கனென்பவன் எதிர்த்துப் போர் செய்தவனாய், ஒப்பற்றதாகிய பெரிய சக்கராயுதத்தைக் கையிலேற்றுப் பூசித்து எ - று. (௨௪௩)

விடுத்த னன்றனித் திகிரியவ் வெண்ணிணத் திகிரி
யெடுத்த சேனையி னிடையிடை கழிதர வேகித்
தொடுத்த மாமணித் தொடையுணர்ந் தாங்கவர்த் தொழுது
மடுத்த சேனையை வலன்றிரிந் தகன்றது வாழ்த்தி.

(இ - ள்.) ஒப்பற்ற சக்கராயுதத்தைப் பிரயோகித்தான். வெள்ளிய நிணந்தோய்ந்துள்ள அந்தச் சக்கராயுதம் சைநியங்களின் இடையிடையே விலகும்படி போய், அணிந்திருக்கும் சிறந்த உருத்திராக்கமணி மாலையைப் பார்த்து அவர்களைப் பணிந்து, நிறைந்த அச்சேனையைப் பிரதக்ஷிணஞ்செய்து தோத்திரித்துப்போயது. எ - று. (உசச)

சிங்க னென்னுமக் கடுஞ்சினத் திறலுடை வேந்தன்
பொங்கு வெண்டிரைக் கருங்கட லிறைவனைப் போற்ற
மங்கு லண்டமுற் றிடிக்குர னுழக்குடன் வந்து
துங்க வெம்படை விபூதிதோய்ந் தழிதரச் சொரிந்த.

(இ - ள்.) சிங்கனென்று சொல்லுங் கடுங்கோபமும் வலிமையுமுடைய அவ்வரசன், விசேடித்த வெள்ளிய அலைகளையுடைய கருங்கடலுக்குத் தலைவனான வருணனைத் துதிசெய்ய, மேகங்கள் ஆகாயத்திற் பொருந்தி இடியாகிய குரன் முழக்கத்துடன் வந்து, புனிதமாகிய பெரிய சேனையின் விபூதிக்காப்பை நனைந் தழியும்படி மழை சொரிந்தன. எ - று. (உசரு)

சொரிந்த காலையி னீற்றொளி தொலைதரச் சோதி
விரிந்த மாமணி விளங்குற நமக்கினி விறலே
தரிந்த நீர்ப்புன லருவரை யடைதுமென் றடைந்தான்
புரிந்த சேனையுந் தானுமா யவ்வனம் பயின்றான்.

(இ - ள்.) அப்படி மழைபெய்த சமயத்தில், திருவெண்ணீற்றொளி மறைய, ஒளிமிக்க சிறந்த உருத்திராக்கமணி பிரகாசிக்கப் பார்த்து, சிங்கன் இனி நமக்கு ஜெயமுண்டாவதெங்ஙனம்? குளிர்ந்த நீரருவி பாயும் பெரிய மலையை யடைவோமென்று சேர்ந்து, தன்பாற் பரிவுள்ள சேனையுந் தானுமாக மலையருகிலுள்ள வனத்திற் றங்கினான். எ - று. (உசசு)

தெண்ணி லாத்தனிக் கவிகைமே னிழற்றுறச் சினங்கா
லண்ணல் வாரண மீப்பொலிந் தரும்பகை கடந்து
வண்ண வார்சிலைச் சிங்கனு டடங்கலும் வணங்க
வெண்ண ருமணி குயிற்றரி யாசனத் திருந்தான்.

(இ - ள்) தெளிந்த சந்திரிகையை வீசும் ஒப்பற்ற வெண்கொற்றக் குடை மேலே நிழலைச்செய்ய, கோபத்தைச் சிந்தும் பெருமை தங்கிய பட்டத்து யானைமேல் விளங்கி அரிய பகைவர்களை வென்று அழகமைந்த நெடிய வில்லைத் தாங்கிய சிங்கனுடைய நாடு முழுவதையும் தன்னை வணங்கும்படி அளவற்ற நவமணிகள்பதித்த சிங்காசனத்திற் பொருந்தியிருந்தான். எ - று. (உசஎ)

செய்ய கோன்முறை பொதுவறச் செலுத்தியந் நாடும்
பொய்யின் மாமணி நீற்றொடும் புனைதரப் பொலிந்தான்
வையம் யாவையு மொருகுடை நிழற்றினன் மனையாண்
மெய்யொ டுஞ்சிறந் தருநல நுகர்ந்தனன் மிகுநாள்.

(இ - ள்) பொதுத்தன்மை நீங்கச் செங்கோன்முறையை நடாத்தி, அந் நாடுகளையும் பொய்மையில்லாத உருத்திராக்கமணியுடன் திருவெண்ணீற்றை யும் அணியச்செய்து விளங்கினான்; உலக முழுவதையும் ஒப்பற்ற சந்திரவட்டக்

குடையால் நிழல்செய்து, மனைவியோடுகூடி வெகுகாலம் உண்மை நிலையுடன் பெருமைபெற்று அரிய சுகங்களை யநுபவித்தான். எ - று. (௨௪அ)

விரும்பு நன்னலம் யாவையு நுகர்ந்தனன் வியந்தான்
றிருந்து மைந்தரு மனைவியு நிதியமுஞ் சிறந்தா
னிருந்து நாள்பல கழிந்தபின் றன்குலத் தெவரும்
பொருந்து சேனையுந் தானுமாய்க் கைலைமீப் பொலிந்தான்.

(இ - ள்.) விரும்பத்தக்க நல்ல இன்பங்களையெல்லாம் அநுபவித்துக் களித்து, திருந்திய புதல்வரும் மனைவியரும் செல்வமுமுடையவனாய்ச் சிறப்பெய்தி, அநேககாலங் கழிந்தபிறகு, தன் குலத்தாரெல்லாரும், பொருந்திய சேனையுந்தானுமாகச் சேர்ந்து திருக்கைலாயத்தில் விளங்கிவாழ்ந்தான். எ - று.

மாறு கொண்டிகல் வேந்தனும் வனம்புக வைகி
நீறு மாமணி யுருத்திர வக்கமு நீங்கான்
வீறு கொண்டுமால் விடையினன் றிருவருள் வேண்டி
யீறு பெற்றனன் கடைமுறை கைலைபெற் றிருந்தான்.

(இ - ள்.) வேறுபட்டுப் பகைத்த அரசனாகிய சிங்கனும், வனத்திற்புகுந்து வசித்து, திருவெண்ணீற்றையும் சிறந்த உருத்திராக்கத்தையும் நீங்காதவனாய்த் திடசித்தமுற்று, திருமாலை இடபமாகக்கொண்ட சிவபெருமான் திருவருளை விரும்பி முடிவெய்தினன். இறுதியாகக் கைலாயபதவியுற்று வாழ்ந்தனன். எ - று. (௨௫௦)

பொன்னிற் சூழ்ந்தன செம்பினிற் பொதிந்தன புயல்வான்
மின்னிற் றோன்றிய வெள்ளியிற் போர்த்தன விவற்றின்
பின்னற் கம்பியிற் கோத்தன பெரிதணிந் துவப்பார்
தன்னைத் தன்வினை யைத்தலை வனையுணர் தவத்தோர்.

(இ - ள்.) பொன்னாற் கவசஞ் செய்யப்பட்டனவும், ஆகாயத்திலுள்ள மேகத்திலுண்டாகும் மின்னல்போன்ற வெள்ளியாற் சூழப்பட்டனவும், இவ்வுலோகங்களின் பின்னலாகிய கம்பியிற் கோத்தனவுமாக மிகவுந் தரித்துச் சந்தோஷிப்பவர்களே தன்னையும் தன் வினையையும் தலைவனையும் உணரத்தக்க தவத்தினராவர். எ - று. (௨௫௧)

ஆத லாற்றிரு நீற்றொடு முருத்திர வக்க
மீத ணிந்திட வேண்டுமா லிவற்றுள விழுப்ப
மோது நான்மறை யோதுவ தன்றிமற் றொருவ
ராதி தோன்றிய விவற்றினை யெவருணர்ந் தறிவார்.

(இ-ள்.) ஆகையால், திருவெண்ணீற்றோடு உருத்திராக்கமணியை உடம்பிலணியவேண்டும். இவற்றிற்குள்ளனவாகிய மேன்மைகளை ஓதப்படும் நான்கு வேதங்களும் சொல்லுவதன்றி, ஆதியிலுற்பவித்த இவ்விரண்டின் சிறப்புகளை. வேறே யாரொருவர் தெளிந்துணரத்தக்கவர்கள்? எ - று. (௨௫௨)

உரைத்த மாமணி யணிந்தவ ரெம்பிராற் குகந்தோ
ரிரைத்த கங்கையஞ் சடையவர்க் கிருவிழி யனையார்
திரைத்த வார்கட னெடுநிலத் திம்மணிச் சிறப்பை
நிரைத்த நான்முறை கேட்பவ ரவர்தமை நிகர்ப்பார்.

(இ - ள்.) சொல்லிய அச்சிறந்த உருத்திராக்கமணியை யணிந்தவர்கள் எமது சிவபெருமானுக்கு உவப்புடையவர்கள், ஒலிக்கின்ற கங்கையையணிந்த சடையையுடைய சிவபெருமானுக்கு இருவிழிகளையொத்தவர்கள். அலைகள் பொருந்திய நெடிய கடல்சூழ்ந்த பெரிய பூமியில், இவ்வுருத்திராக்கமணியின் மகிமையை வரிசையான நூல்களில் முறைப்படி கேட்பவர்கள் தம்மைத்தாமே யொத்தவர்கள், எ - று. (௨௫௩)

என்று சூதமா முனிவர னியம்பிய தியாவு
நின்று ணர்ந்தமா முனிவர ருள்ளுற நெகிழ்ந்தா
ரன்றெ டுத்தெடுத் துரைத்தரு ளுருத்திர வக்கத்
துன்று காதைமுற் றுணர்த்துமச் சூதனைத் தொழுதார்.

(இ - ள்.) என்றிவ்வகையாகச் சூதமகாமுனிவர் திருவாய்மலர்ந்தவற்றை யெல்லாம், நன்னிலையினின்றுணர்ந்த சிறந்த நைமிசவன முனிவர்கள் மன முருகினவர்களாய், பூர்வத்தில் பலரெடுத்துச்சொன்ன உருத்திராக்கமணியின் சரிதைகள் எல்லாவற்றையும் உணர்த்தியருளிய அந்தச் சூதமுனிவரை வணங்கி னார்கள், எ - று. (௨௫௪)

உருத்திராக்கமான்மியசருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௭௮௧.

ஏழாவது

பஞ்சாக்கரமான்மியசருக்கம்.

கலிநிலைத்துறை.

முனிவர் யாரினு முன்மொழி சூதமா முனிவ
னனித வம்புரி பெருமைசா னைமிசா ரணியத்
தினிய மாதவர்க் கெம்பிரா னஞ்செழுத் தியற்கைப்
புனித மாக்கதை யாவையும் புலப்படப் புகலும்.

(இ - ள்.) முனிவர்களெல்லோருள்ளுந் தலைமையாகச் சொல்லப்படும் பெருமை தங்கிய சூதமுனிவர், மிகுதியாகிய தவத்தைச்செய்த மேன்மை மிகுந்த நைமிசாரண்ய வாசிகளாகிய இனிய பெருந்தவசிகளுக்கு எமது சிவ பெருமானது பஞ்சாக்கரத்தின் இயல்பாகிய புனிதமான சிறந்த சரிதங்களெல் லாவற்றையுந் தெரியும்படி உரைக்கின்றனர் எ - று. (க)

எந்தை யெம்பிரா னருளையிவ் வெழுத்தெனப் பிரித்துத்
தந்த மந்திர மைந்தெழுத் தாமெனத் தருமா
லந்த மந்திரத் தளவையைச் சற்குரு வறிந்து
சிந்தை தேறுறத் தெளிப்பதங் கதனிலை தெரிக்கில்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் தமது திருவருளையே இவ்வெழுத்துகளாக வகுத்துக்கொடுத்தருளிய மந்திரமானது பஞ்சாக்கரமென்று சொல்லத்தக்கது. அந்தப் பஞ்சாக்கர மந்திரத்தின் பிரமாணத்தை ஞானசிரியர் நன்றாக வுணர்ந்து மனந்தெளியும்படி யுணர்த்துவது. அம்மந்திர நிலைமையைச் சொல்லுமிடத்தில் எ - று. (உ)

இனைய மந்திரத் தியல்புணர்ந் தோர்பொழு திசைப்போ
ரனையர் தம்முழைப் புண்ணியம் யாவையு மடங்கும்
வினையு நீங்குவர் மேதினி புரந்தினி தளிப்பார்
புனையு மேற்பதம் புகுவர்முத் தேவரிற் பொலிவார்.

(இ - ள்.) இத்தகைய மந்திரத்தின் இயல்பினைத் தேர்ந்து ஒருகால் தியானஞ் செய்வோர்கள் யாரோ அவர்கள் பால் எல்லாப் புண்ணியங்களும் சேரும். சகல வினைகளுமகல்வார்கள். உலகத்தை யரசுசெய்து இனிதாகக் காப்பார்கள். அலங்காரமான உயர்பதவி யடைவார்கள். திரிமூர்த்திகள்போல விளங்குவார்கள் எ - று. (ங)

புலரிக் காலையு முச்சியு மாலையும் புனிதன்
பலரிக் கிண்கிணிப் பாததா மரைமுறை பரவி
மலரிப் புந்தியிம் மந்திர நினைபவர் மனஞ்சூ
முலரிக் குஞ்சகத் தவரையே சிவவடி வாக்கும்.

(இ - ள்.) விடியற்காலத்திலும் உச்சிக்காலத்திலும் மாலைக்காலத்திலும், சிவபெருமானது பலமரகதங்களாலாகிய கிண்கிணிமாலை யணிந்த திருவடித்தாமரைகளை முறைப்படி துதித்து, தெளிந்த சித்தத்தோடு இப்பஞ்சாக்கர மந்திரத்தைத் தியானஞ் செய்பவர்களது மனத்திற் சூழ்ந்து மலரச்செய்யும் இப்பூமியில் அத்தகையினரையே சிவசாரூப மடையச்செய்யும் எ - று. (ச)

அஞ்செ ழுத்தெனு மருமறை மந்திர மதனை
நெஞ்ச ழுத்தவர் முழுமுதற் றேவனை நிகர்ப்பார்
பஞ்ச பாதகர் மீதுமற் றவர்நிழற் படினுஞ்
செஞ்செ வேயவர் காண்கினும் பவந்தொலை செல்லும்.

(இ - ள்.) பஞ்சாக்கரமென்று சொல்லப்படும் அரிய இரகசியப்பொருளாகிய இம்மந்திரத்தை மனதிற்றியானஞ்செய்வோர் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுக்கு ஒப்பாவார்கள். அத்தகையினருடைய நிழலானது ஐம்பெரும்பாதகஞ்செய்தோர் மேற்பட்டாலும், (அப்பாவிகள் அவர்களைத்) தரிசித்தாலும், அதிதூரமாகப்பாவங்களெல்லாம் ஓடிப்போம். எ - று. (ரு)

சிற்ப ரந்தெரி மந்திர மீங்கிதிற் சிறந்த
முற்பெ ருங்கதை யுளததுமொழிகுதுங் கேண்மின்
பொற்ப ழம்பதி காசிவாழ் வெண்குடைப் புனிதன்
மற்ப குந்தன தடம்புயன் வச்சிர வாகு.

(இ - ள்.) ஞானரூபியாகிய சிவபெருமானைத்தெரிவிக்கும் மந்திரமாகிய இப்பஞ்சாக்கரத்தைப்பற்றி, மேலான சிறந்த பூர்வசரிதை யொன்றுண்டு, அதனைக்கூறுவோம் கேட்பீர்களாக, அழகமைந்த காசி யென்னும்பழய நகரத்தில் வாழ்ந்திருந்த வெண்கொற்றக்குடையையுடைய பரிசுத்தனும் வலிமை

யைப்பாகு படுத்தியது போலும் பரந்த தோள்களுடையவனுமாகிய வச்சிர வாகுவென்றொருவனுண்டு. எ - று. (சு)

வாழி மன்னவன் மனைவயிற் றோன்றினண் மகர
யாழி னின்னிசை பிறந்தெனெ விமையவர்க் கெறிநீ
ராழி யாரமு துயர்த்தென வருந்தமிழ்ப் பொதியஞ்
சூழி ருந்தமி ழீன்றென வொருதனித் தோகை.

(இ - ள்.) இச்சிறந்த மன்னவனுடைய மனைவியினிடத்தில், மகரயாழிலே இனிய இசைகள் பிறந்தாற்போலவும், தேவர்களுக்கு அலைவீசுங் கடலானது அமுதத்தைப்பெற்றது போலவும், அருமையான இனிய பொதிய மலையானது உலகமுற்றும் பரவிய பெரிய தமிழைக்கொடுத்தது போலவும், ஒப்பற்ற வொரு குமாரத்தி பிறந்தாள். (எ)

பருவ மங்கைய ரழகெலா மொருவழிப் படுத்தி
யுருவ மாக்கின னுறுப்பெனு மவயவத் துவமை
பொருவ மற்றையோர்க் குள்ளபோற் படைத்திலன் புதுப்பூ
மருவி ருங்குழற் குவமையே தியம்புமிவ் வையம்.

(இ-ள்.) பால்ய ஸ்திரீகளின் அழகு முழுவதையும் ஒன்றுசேர்த்து ஓருருவமாக்கினன் பிரமதேவன். அவளுக்கு அங்கங்களென்னும் அவயவங்களுக்குரிய உவமானங்கட்குப்பொருந்த, மற்றப்பெண்கட்கிருப்பனவொன்று உண்டாக்கினனில்லை. அன்றலர்ந்த மலர் சூடிய அவளுடைய பெரிய கூந்தலுக்கு இவ்வுலகினர் எதனை உவமையாகச் சொல்லுவர். எ - று. (அ)

இத்தி றத்தொடும் வளர்தரு கலாவதி யென்பா
ளுய்த்து ரைத்துள கலையெலா மொருங்கினி துணர்ந்தாள்
முத்த வாணகை யிவடனை மணந்தனன் முரட்போர்
மத்த யானையோர் தனிக்குடை மதிக்குல வழுதி.

(இ - ள்.) இவ்வகை யழகோடும் வளர்கின்ற கலாவதியெனும் பெயர்பெற்ற அப்பெண், பெரியோர் தேர்ந்து கூறிய நூல்களையெல்லாம் முற்றும் இனிதாகத்தேர்ந்தனள். முத்துப்போலும் ஒளிவீசும் பற்களையுடைய இவளை, மாறுபடுகின்ற யுத்தத்தில் வலிய மதங்கொண்ட பட்டத்து யானையையும் ஒப்பற்ற ஓர் சந்திரவட்டக்குடையையுமுடைய சந்திர குலத்தவனாகிய ஒரு பாண்டியன் மணஞ்செய்தனன். எ - று. (கூ)

வதுவை முற்றினன் மாநகர் கொணர்ந்தனன் வழுதி
விதுமு கத்தின ளலருகர் விருப்பொடு வெதும்பிப்
புதுமு லைத்தடம் புல்லலுற் றனனது பொழுதின்
மதும லர்க்குழ றீண்டலீ யென்றிடை மறுத்தாள்.

(இ - ள்.) அம்மன்னன் மணவினை முடித்துத்தன்னுடைய சிறந்த நகரத்திற்கழைத்து வந்தான். பூரண சந்திரன்போலும் முகத்தையுடைய அக்கலாவதியின் கல்விச்சுகத்தை விரும்பிக்காமத்தீயாற்றகிக்கப்பட்டு, பரந்த அவளுடைய இளந்தனங்களைத்தழுவத் தொடங்கினன். அப்போது தேன் சிந்தும் மலர்மாலை யணிந்த கூந்தலையுடைய கலாவதி தொடாதேயெனத் தடுத்தாள்.

உலகம் யாவையு முள்ளன சராசர மனைத்துஞ்
சுலவி நிற்பது தொன்மைய தாயது சுருதி

உலகின் மந்திர வஞ்செழுத் தறிந்திலை யரச
புலவ ருந்தினை பிறர்மனை விரும்பினை புகுந்தாய்.

(இ - ள்.) அரசனே! உலக முழுவதிலும் உள்ளனவாகிய சராசரப்பொருள் களிலெல்லாஞ் சூழ்ந்திருப்பதும், பழமையானதும், வேதத்திற்சொல்லுங் குற்றமில்லாத மந்திரமுமாகிய பஞ்சாக்கரத்தை நீ யறிந்தாயில்லை. மாமிச பட்சணஞ் செய்திருக்கின்றனை, பிறர் மனைவியரை விரும்பி அவர் பாற்சுக மநுபவித்தனை. எ - று. (கக)

என்றெ டுத்தெடுத் தீதல பலவெலா மிசைத்தாள்
குன்றெ டுத்தமென் கொம்பரிற் குழைபடு நுசுப்பாள்
மன்ற லந்தொடை வழுதிமா னுணர்ந்திகன் மார
னென்ற லாதன பலகணை சொரிந்துநின் றுருத்தான்.

(இ - ள்.) குன்றுகளைச்சுமக்கும் மெல்லிய கொடிபோலத்துவளும் இடை யையுடைய அக்கலாவதி, இப்படியும் இதுவல்லாமற் பலவற்றையும் எடுத்துச் சொல்லினள். மணந்தங்கிய அழகிய மலர்மாலை யணிந்த பாண்டியனது காம விச்சையை வலிதங்கிய மன்மதனறிந்து ஒன்றல்லாதனவாகிய மலர்ப்பாணங் கள் பலவற்றையும் அவன்மேற் பிரயோகித்துநேர் நின்று துன்பு செய்தான்.

மார னம்புதொட் டீர்த்தெழ மம்மரின் மயங்கு
மீர வாடைதொட் டிழுகுற வெரியெழ வுயிர்க்குங்
காரி ருட்பிழம் பொழிவது கற்பமென் றயரும்
வேரி யந்தொடை சாந்தொடும் பொரிதர வெதும்பும்.

(இ - ள்.) மன்மத பாணங்கள் பாய்ந்து தைத்துக் காமம் அதிகரித்தலால் காம மயக்கத்தோடு மயங்குவான். குளிர்ந்த வாடைக்காற்று உடலைப்பரிசித் துச்செல்ல, தீப்பொறி சிந்தப் பெருமூச்செறிவான். கறுத்த இருட்டொகுதி நீங்குவது ஒரு கற்ப காலமென்று வருந்துவான். வாசந்தங்கிய அழகிய மாலை யும் கலவைச்சாந்தும் கருகிப்போக வெதும்புவான். எ - று. (க௩)

ஊது தென்றல்வெற் புயிர்த்திட வுடனுயிர்ப் பெறியுஞ்
சீத ளக்கலைத் திங்களாற் றெருமருந் திகைக்கும்
போது மேற்றிசை புகுதரப் புகுந்தபுன் மாலை
மீதெ ழுந்தழற் செக்கரால் வெதும்புமெய் வெயர்க்கும்.

(இ - ள்.) பொதிய மலையிற்பிறக்கின்ற மிருதுவாக வீசுந் தென்றற்காற்று வீசுதலால் உடனே பெருமூச்செறிவான். குளிர்ச்சி வாய்ந்த கலைகளையுடைய சந்திரனால் மயக்கெய்தித் தியங்குவான். சூரியன் மேற்றிசையடைய உடனே தோன்றிய சிறுமாலைப்பொழுதில் ஆகாயத்திற்றோன்றுந் தீமயமான செவ்வா னத்தால் உடல் வெப்பமெய்தி வெயர்ப்பான். எ - று. (க௪)

கருகு வார்குழ லறிவெலா நுகர்ந்தது கமலத்
தருகு வார்குழை மனங்கவர்ந் தனவவற் றிடைபோய்ப்
பொருது லாவிமீன் டொருகுமி ழிடறிய புலவுக்
குருதி வேனெடுங் கண்களென் னுருயிர் குடித்த.

(இ - ள்.) கலாவதியின் கரிய நெடிய கூந்தல் என்னறிவு முழுவதையுங் கவளீகரித்தது. முகமாகிய தாமரைக்கு அருகேயுள்ள குண்டலங்கள்பாற் போர்

செய்து ஓடித்திரும்பி ஒரு குமிழம்பூவாற்றடைபடுத்தப்பட்ட புலான் மணங் கமழும் உதிரந்தோய்ந்த வேல் போலும் நெடிய விழிகள் என்னரிய உயிரைப் பருகின. எ - று. (௧௫)

ஈர வாணிலா வெரியெழத் தந்தனை யிலவை
யூரல் வாணிலா வளித்திலை முடிப்பட முயன்றாய்
மார வேளெறி குவளையென் மருங்குற வைத்தா
யேரி தழ்க்கருங் குவளைநோக் களித்திலை யென்றான்.

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய ஒள்ளிய நிலவைத்தீப்பொறச் சுடச்செய் தனை. இலவுபோன்ற இதழ்களினுள்ளிருக்கும் வெள்ளிய சந்திரிகையைத் தந்தாயில்லை. கொல்லத்தொடங்கியவளாய், மன்மதன் தொடுக்கும் நீலோற் பல மலரை என்பாலடையப்பொருத்தினை. ஒப்பற்ற இதழையுடைய கரிய நீலோற்பலம் போன்ற பார்வையைத்தந்தாயில்லை. எ - று. (௧௬)

நஞ்சி ருத்திய கண்களு முளைத்துநாண் மதியப்
பிஞ்சி ருத்திய நெற்றியும் பிண்டிமென் றளிரிற்
பஞ்சி ருத்திய பாதமும் படைத்தொரு மருங்கு
நெஞ்சி ருத்திய விரக்கமும் படைத்தில னிமலன்.

(இ - ள்.) விஷத்தைப்பொருந்திய விழிகளும், தோன்றுவதாகிய மூன்று நாளாகிய பிறைச்சந்திரன் பொருந்திய நெற்றியும், மெல்லிய அசோகந்தளிர் போன்று செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாதங்களும் ஈசுவரன் படைத்து, ஒரு பக்கலில் மனத்தின்கண் இரக்கத்தினையும் ஏன் உனக்குப் படைத்தானில்லை?

இரங்கு நாளினி யென்றுள துரைத்திடு மெளியேன்
கரங்க ளும்முலை புதைத்திடுங் காலமு முளதோ
சரங்க ளெண்ணில துரந்தனன் மதனனச் சரத்தா
லரங்கு நெஞ்சொடு மயர்ந்தனன் றிருவுளத் தடையீர்.

(இ - ள்.) உமது மனம் இரங்குந்தினம் என்றைக்குள்ளது? சொல்லும். என் கைகள் உம்முடைய தனங்களைத்தழுவுங் காலமுமுள்ளதோ? மன்மதன் கணக்கில்லாதனவாகிய அம்புகளை விருத்தனன். அவ்வம்புகளால் வருந்துகின்ற மனத்துடன் சோர்ந்துள்ளேன். இவற்றை உம்முடைய மனதிற் கொள்ள வேண்டும். எ - று. (௧௭)

மாண்டி றந்திடு நாளிது மங்கலங் காத்தெ
னீண்டு துன்பொழித் திரங்கவி ரென்றெடுத் திரந்து
மூண்ட காமநோ யாற்றலன் முகிண்முலைத் தடத்துப்
பூண்டு வீழ்ந்துறத் தழுவினன் மதிக்குலப் புதல்வன்.

(இ - ள்.) சந்திரவமிச குமாரனாகிய அப்பாண்டியன், இன்று நான் உயிர் நீங்கியிருக்குந்தினமாயிருக்கின்றது உமது மாங்கல்யத்தைக்காத்துக்கொண்டு எனக்குண்டாகிய துயரத்தை யகற்றி மனமிரங்க வேண்டுமென்று யாசித்துப் பன்முறை கூறி, அதிகரித்த காமநோயைச் சகியாதவனாகி, கோங்கரும்பு நிகர்த்த முலைகளினிடத்து விருப்புற்று மேல்விழுந்து மார்புறத் தழுவிக்கொண் டான். எ - று. (௧௮)

அனைய மேனிநின் றனலெழ வாற்றல னாகி
வினைய முற்றுறு தந்நிலை வெருவர னீங்கி

நணைந ருங்குழ லல்லுருத் தீண்டலும் வடவைத்
துணைக டுங்கனல் வெதுப்பிய தென்னெனச் சொல்லும்.

(இ - ள்.) அக்கலாவதியின் திருமேனியிலிருந்து அக்கினிச்சுவாலை யுண்டாக, சகியாதவனாகி, தன் வஞ்சக எண்ண முடிவுறாமல் அச்சமயத்திற் பயத்துடன் நீங்கி, தேன் பொருந்தி மணங்கமழும் கூந்தலுடையாளே! உன்னழகிய உடலைத்தொட்ட வுடனே, வடவாக்கினியினும் வேகமாகிய கடுநெருப்பு தகித்தது. இஃதியாது? எனக்கேட்க, கலாவதி கூறுகின்றாள். எ - று. (உ0)

ஆதி நாயகன் றிருவரு ளாயவஞ் செழுத்து
மோதி யுச்சரித் துணர்ந்திலை யுளத்துறு மயக்காற்
பேதை யென்னுருத் தீண்டிமெய் வெதுப்பெழப் பெற்றாய்
மாத வத்தர்பாற் கேட்டுணர்ந் தென்னுழை வருதி.

(இ - ள்.) முதற் கடவுளாகிய சிவபெருமானது திருவருளாகிய ஐந்தெழுத்துக்களையும் கற்றுச்செபித்துத் தெளிந்தாயில்லை. உன் மனதிலுள்ள காம விகாரத்தால் பேதைமைத் தன்மையோடு என்னுடலைப்பரிசித்து உன்னுடல் முழுதும் வெப்பமெய்தப்பெற்றனை இனி, பெருந்தவசிகளிடம் அதனையுபதேசிக்கப்பெற்றுத்தெளிந்து, பின்னர் என்னிடம் வருக. எ - று. (உக)

அல்லை யாகிமற் றென்னுழை விரும்புதி யாகின்
வல்லை வெந்தொழிந் திறக்குவை யென்றனண் மனையா
ளெல்லை மாநில மொருகுடை புரக்குமவ் விறைவன்
றொல்லை மாதவக் கற்கரைத் தொழுதனன் றுணைத்தாள்.

(இ - ள்.) அப்படிக்கல்லாது என்பால் இச்சிப்பையாயின் அதிவிரைவில் வெந்து உயிர் நீங்குவையெனக் கலாவதி சொன்னாள், எல்லைக்குட்பட்டபாண்டி நாடு முழுவதையும் ஒப்பற்ற வெண்குடை நிழலிற்காக்கும் அவ்வரசன், பெருந்தவமுடைய பெரியோராகிய கற்கரைத்தரிசித்து, அவர் உபய பாதங்களை வணங்கினான். எ - று. (உஉ)

தொழுத வேந்தனை நோக்கினன் மாதவத் தூயோன்
முழுது மாநில மொருங்கெடுத் தாண்டருண் முதல்வ
வெழுது பேரெழி லிழிந்தனை யொளிமழுங் கினையாற்
றழுவு சிந்தனை தளர்ந்தனை யென்னெனச் சாற்றும்.

(இ - ள்.) தம்மைப்பணிந்த பாண்டியனைப் பெருந்தவமுடைய புனிதராகிய கற்க முனிவர் பார்த்தருளி, பெரிய பாண்டிநாடு முழுவதையும் ஒன்றாய்ச்சேர்த்து அரசுசெய்யும் முதன்மையுடையானே! சித்திரத்தெழுதத்தக்க மிக்க அழககன்று சோபித நீங்கினை அன்றியும் களிப்போடுகூடிய மனம் வருந்தினை. யாது காரணம்? என வினவ, அரசன் சொல்லுவான். எ - று. (உங)

இற்றை நாள்வரை நாளவங் கழித்தன னெறிநீர்
முற்று மாநிலம் புரந்தனன் முன்வினைப் பயனாற்
பெற்ற பேறிது பிழைபடா தொருநெறி மறைநூல்
சொற்ற வஞ்செழுத் துணர்ந்தெனப் பின்னருந் தொழுதான்.

(இ - ள்) இன்றுவரையில், நாள்களை வீணாகக்கழித்தேன். தேக்கெடுக்கும் நீர்வளமுள்ள பாண்டிநாடு முழுவதையும் அரசு செய்தேன், முற்பிறவியில்

யான் செய்த தீவினைப்பயனால் அடையத்தக்க பயன் இதுவாயின் அது தவறாது ஒப்பற்ற வேதமார்க்கமாகிய சாத்திரங்களிற்கூறிய பஞ்சாக்கரத்தை யுபதேசிப்பீரென்று வேண்டி மீண்டும் வணங்கினான். எ - று. (உச)

கனித்த சிந்தையம் மாதவன் கண்ணருள் சுரந்து
தனித்த வானெறி யஞ்செழுத் தொருசெவித் தாரை
தொனித்து ணர்த்தின னன்னவன் றன்னுழைத் தொடர்ந்த
பனித்த பாதகங் கருங்கொடி யுருக்கொடு பறந்த.

(இ - ள்.) கனிவாகிய மனமுடைய அக்கற்க முனிவர் பெரிய திருவருண் மிகுந்து, ஒப்பற்ற சிறந்த மார்க்கமாகிய பஞ்சாக்கரத்தை, அப்பாண்டியன் வலக்காதுவழியாய் உச்சரித்து உபதேசஞ்செய்தருளினர். உடனே அப்பாண்டியன்பால் தொடர்ந்ததாய் அவனை வருத்திய பாவங்கள் கரிய காக்கை வடிவாய்ப் பறந்தோடின. எ - று. (உரு)

பறந்து சென்றவப் பாதகப் படர்சிறைக் காகஞ்
சிறந்த வஞ்செழுத் தெரியினுற் செலவறக் கரியா
யிறந்து வீழ்ந்தன வீங்கிவன் பவித்திர மெய்தி
மறந்து ணர்ந்தன னெமென முனிவனை வணங்கி.

(இ - ள்.) பறந்தோடிய பாவங்களாகிய பரந்த சிறகுகளையுடைய அக்காகங்கள் சிறப்புப்பொருந்திய பஞ்சாக்கரமெனும் அக்கினியினால் பறத்தலினின்று நீங்கிக்கரியாகி இறந்து விழுந்தன. இவ்விடத்தில் இப்பாண்டியன் புனிதமுற்று, நித்திரை விட்டெழுந்தவனைப்போல அக்கற்க முனிவரை வணங்கி. எ - று. (உசு)

ஆசி பெற்றனன் முனிவரற் கருச்சனை யயர்ந்தான்
பூசல் வண்டறை தாரினன் றன்னகர் புகுந்து
பாசி ழைத்துணைப் பணைமுலைக் கலாவதி பணைத்தோ
ளேசி லன்பொடு மின்னல நுகர்ந்தன னிருந்தான்.

(இ - ள்.) ஆசிவசனங்களை அவர் பாற்பெற்றுக்கொண்டு, வழிபாடியற்றி, போர்செய்யும் வண்டுகளொலிக்கும் மலர்மாலை சூடிய பாண்டியன் தன் நகரையடைந்து, பசிய ஆபரணந்தரித்த பூரித்த இருதனங்களையுடைய கலாவதியின் மூங்கிலையொத்த இருதோள்களைத்தழுவி, குற்றமில்லாத உண்மையன்புடன் அவளது இனிய சுகத்தை அநுபவித்திருந்தான். எ - று. (உஎ)

வைகல் பற்பல கழிதரக் கலாவதி மணிநூல்
பெய்க லத்திள முகிண்முலைத் தலம்பிரிந் திலனுச்
செய்க லத்தொடு மகவொடு நிதியொடுஞ் சிறந்தான்
பைக லப்புறு நெடுநில நெடிதுநாட் பரித்தான்.

(இ - ள்.) பற்பல நாட்கள் இப்படிச்செல்ல, கலாவதியின் அழகிய மாங்கல்யதாரணமும் மிக்க ஆபரணங்களுமுடைய இளமைத்தன்மை வாய்ந்த அரும்பு போன்ற குசங்களைவிட் டகலாதவனும், செய்யப்பட்ட ஆபரணங்களுடனும் புத்திரர்களுடனும் சிறப்பெய்தியவனும், ஆதிசேடன்பணா முடியிற்றாங்கிய பெரிய அப்பாண்டிநாடு முழுவதையும் பல காலம் அரசு செய்திருந்தான். எ - று. (உஅ)

கருமமுற்றிய காலம்வந் தடுத்தது மூலைகொண்
டருகு சிற்றிடைக் கலாவதி தன்னொடு மரன்கூர்
திருவ ருட்பெறக் கைலைபோய்ச் சிறந்தனன் சிலநா
ளுருகு காதலி னவளொடு மருங்கதி யுற்றான்.

(இ - ள்.) வினைப்போகம் முற்றுப்பெற்ற காலம் வந்து சேர்ந்ததும், முலைகளைத்தாங்கி வருந்தும் நுண்ணிய சிற்றிடையையுடைய கலாவதியுடன், சிவபெருமானுடைய திருவருளைப்பெறக்கருதித் திருக்கைலைக்குச்சென்று, சில தினங்கள் சிறப்புற்றிருந்து, மன வுருக்கத்தோடு கூடிய அன்புடையவனாய், அக்கலாவதியோடும் அரிய மோட்சபதவியை யடைந்தான். எ - று. (உகூ)

இன்னு மோர்பெருஞ் சரிதைமற் றுளதென வெடுத்து
மன்னு மாதவச் சூதமா முனிவரன் வகுப்பான்
கன்னல் வேலியுங் கதலியுங் கழனியுஞ் சூழ்ந்த
துன்ன ரும்புக ழாடவ தேயமொன் றுளதால்.

(இ - ள்.) மற்றும் வேறொரு பெரிய சரித்திரமுளதென்று சொல்லத் தொடங்கி, நிலைபெற்ற பெருந்தவத்தையுடைய சிறந்த சூத முனிவர் சொல்லுகின்றார். கரும்பும் வாழையுமே வேலியாகவுள்ளதும் கழனிகள் சூழ்ந்துள்ளதுமான யாவரும் நினைத்தற்கரிய கீர்த்தியமைந்த ஆடவமென்னும் ஒரு தேசமுண்டு. எ - று. (௩௦)

சாலி வேலியந் நாட்டிடைத் தடநெடும் புரிசை
கோலி யிட்டமா லியமெனுங் கொடிநக ரதன்பா
னூலு மாமறை முறைதெளிந் துணர்ந்தவ னாறு
நூலி யற்கைமுற் றுணர்ந்தவன் சுபுத்தன்முந் நூலோன்.

(இ - ள்.) நெற்பயிரை வேலியாகவுடைய அவ்வாடவ நாட்டில், பரந்து நீண்ட மதில்கள் சூழ்ந்தமைந்திருக்கும் கொடிகள் கட்டிய மாலியம் எனும் நகரத்திலே, முப்புரிநூலணிந்த வேதியராய், சிறந்த நான்கு வேதங்களையும் முறைப்படி ஓதி யுணர்ந்தவராய், ஆறு சாத்திரங்களின் தாற்பரிய முற்றும் தெரிந்தவராய்ச் சுபுத்தரெனும் பெயரினரொருவரிருந்தார். எ - று. (௩க)

இருக்கு முற்றுணர்ந் திவன்றவ மிழைத்தது மிவன்பாற்
சுருக்கில் கேள்வியன் றருமனென் றொருமகன் றோன்றப்
பெருக்கு மந்நகர்ப் பெருமறைக் குலத்தொடு விபுல
னுருக்கு மெய்த்தவத் துதவினன் மக்களோ ரிருவர்.

(இ - ள்.) இச்சுபுத்தர் வேதமுழுவது முணர்ந்து தவம்புரிந்து வருகையில் இவருக்குப் பரந்த நூற்கேள்வியுடைய தருமனென்று வொருபுத்திரன் பிறக்க, பெரிய அந்த மாலிய நகரிலுள்ள சிறந்த அந்தணர் குலத்தினராகிய விபுலரென்பவர் மனவுருக்கத்தோடு கூடிய மெய்த்தவத்தினால் இருபுதல்வரைப் பெற்றனர். எ - று. (௩உ)

தநயன் முன்னவன் றரும்பெயர் சந்திர சேனன்
பினைய வன்பெயர் மிருதுசந் திரனெனப் பெற்று
னினைய மைந்தரின் முன்னனுந் தருமனு மியைந்து
வினைக ளைந்தனர் நண்புகொண் டொழுகினர் விரும்பி.

(இ - ள்,) அவ்விபுலர் புதல்வரில் முன்னவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் சந்திர சேனன். பின்னவன் தன் பெயர் மிருது சந்திரன் என்றழைக்கப்பெற்ருன். இவ்விருபுதல்வரில் மூத்தோனுகிய சந்திரசேனனும் சுபுத்தர் மகனுகிய தருமனும் மனமியைந்து வஞ்சகம் நீங்கினவர்களாய் விருப்பெய்திச் சிநேகமுற்றிருந்தனர். எ- று. (௯௩)

பருவ மேழ்பிற கிட்டனர் பழமறை விதியா
லுருவ நூல்புனைந் தோதின ருணர்ந்தன ரொருங்கே
தரும நீதியு மொழுக்கமுந் தழுவினர் சான்றோர்
பெருகு மன்பினர் களிப்புற வளர்ந்தனர் பிரியார்.

(இ - ள்.) ஏழுவயது கழிந்தவர்களானூர்கள். பழைமையான வேதங்களை விதிப்படி, அழகிய உபவீதந்தரித்து ஓதி யுணர்ந்தார்கள். புண்ணியத்திற்குரிய நீதிகளையு மொழுக்கங்களையுங் கடைப்பிடித்தார்கள். மேலோர்களுந் தம்பால் விசேட அன்புடையவர்களும் மகிழ்வெய்தும்படி யொருவரை யொருவர் பிரியாமல் வளர்ந்து வந்தார்கள். எ - று. (௯௪)

மறைக வர்ந்தெழு கொழுந்தென விவர்வளர் நாளி
னுறைத வத்துறை வித்தியா னந்தனென் ருெருவ
னிறைம யக்கமுங் காமமும் வெகுளியு நீத்தோன்
றுறைகொள் பற்பல தவத்தினு லில்லறந் துறந்தோன்.

(இ - ள்.) வேதங்களை விழுங்கி யுயர்ந்து கொழுந்துபோல விவ்விருவரும் வளருங்காலத்தில் உறுதியான தவநிலையுடையராய் ஆத்மாக்களுக்கு மிகுந்துள்ள காமம் வெகுளி மயக்கம் என்னுமுக்குற்ற நீங்கினவராய் அளவையுடைய வெண்ணிறந்த தவச்செயலால் இல்லறத்தை விடுத்தவராகிய வித்தியானந்தரென்னும் ஒரு முனிவரிருந்தார். எ - று. (௯௫)

அந்த மாமுனி வரனடி யடைந்தன ரிவர்க
ளெந்தை யாங்களு மில்லறந் றுறப்பதற் கியைந்தேஞ்
சிந்தை கூர்ந்தினித் திருவருள் புரிகெனச் செப்பி
மைந்த ராங்கவன் ருண்மிசை வீழ்ந்தனர் வணங்க.

(இ - ள்.) இத்தருமன் சந்திரசேனனென்னும் புதல்வரிருவரும், சிறந்த அவ்வித்தியானந்த முனிவருடைய பாதங்களை யடைந்து, எமது தந்தையே! நாங்களு மில்லறத்தைத் துறப்பதற்குடன் பட்டோம். தேவரீர் திருவுள மிகுந்தினித்திருவருள் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து அம்முனிவர் பாதத்தில் வீழ்ந்து வணங்க. எ - று. (௯௬)

புரிதும் யாமெனப் புதல்வருக் காசிகள் புரிந்து
பெரிது வந்தன னில்லறத் திழிபையும் பிரிந்தோ
ரரிது பெற்றுள பேற்றையு முணர்த்தின னனையார்
துரிச றுத்துணர் சிந்தையர் விடைபெறத் தொழுதார்.

(இ - ள்,) நாமப்படியே செய்வோமென்று அவ்விருசிறுர்க்கும் ஆசிர்வாதஞ் செய்து மிக மகிழ்ச்சியெய்தி யில்லறத்தினது இழிதன்மையையுந் துறவிகள் அரிதாகப்பெற்றிருக்கும் பேறுகளையும் அறிவித்தார், அவ்விருவருங் குற்றமறத்தெளிந்த மனமுடையராய் அவர்பால் விடைபெறப்பணிந்தார்கள், எ- று.

வணங்கி மீண்டன ரீன்றவர்க் குரைத்தனர் மைந்தர்
பிணங்கு நூல்புனை விபுலனன் பொடும்பெரி துவந்தா
ரிணங்கு மைந்தர்க ளிருவரி லொருவனில் லறத்தை
மணந்து வாழவு மற்றவன் றுறக்கவு மதித்து.

(இ - ள்.) அவ்வாறு பணிந்து திரும்பித்தம் பெற்றோர்க்குச்சொல்லினர். அப்பெற்றோரில் நெருங்கிய உபவீதமணிந்த விபுலர் தமக்கு வாய்த்தவிருபுத்திரரில் ஒருவன் இல்லறத்தைக்கலந்து வாழவும் மற்றொருவன் துறவியாகவும் யோசித்து அன்பொடு பெருமகிழ்ச்சி யெய்தினர். எ - று. (௫௮)

நன்று சந்திர சேனநின் கருத்தென நயந்தா
னன்று மைந்தனும் வித்தியா னந்தனை யடைந்து
தன்றுணைப்பெருங் கிளையொடு மில்லறந் தணந்தா
னென்று மூன்றுதண் டெடுத்தனன் மாதவத் துயர்ந்தான்.

(இ - ள்.) சந்திர சேனனே! நின் கருத்து நன்று யிருந்ததென்று மகிழ்ந்தார். சந்திர சேனனென்னுங் குமாரனும் அப்பொழுதே வித்தியானந்த முனிவரையடைந்து தன்றுணை வரையும் பெரிய வுறவினரோடு மில்லறத்தை விடுத்தான். பொருந்திய திரிதண்டத்தை யெடுத்துக்கொண்டான். சிறந்த தவத்தில் மேம்பட்டான். எ - று. (௫௯)

ஐந்து மாபெரும் புலத்தின்மே லெழுதரு மவாவை
யிந்தி யங்களோ டொடுக்கினன் யோகமுற் றிழைத்தா
னந்த யோகத்தி னுயர்நிலைப் பதவிமுற் றறிந்து
சிந்தை யாரினுந் தெரிவுறுப் பரத்திடை செறித்தான்.

(இ - ள்.) பெரிய ஐம்பெரும் புலன்களின் மீதுண்டாகு மாசையையுமைம் பொறிச்சேஷ்டையையு மொழித்தவனுயோக நிலையெய்தி யொழுகினான். அந்த யோகத்தின் உயர்ந்த நிலையிலுள்ள பதவி முழுவதையுந்தெரிந்து தன் மனதை யொருவராலு முணரப்படாத பரமாகிய சிவபெருமானிடத்திற் கலக்கச்செய்தான். எ - று. (௬௦)

மற்றை யோர்தனிப் புதல்வனுந் தன்மனத் தொருப்பா
டுற்ற தந்தையாஞ் சுபுத்தனுக் குரைத்தலு மொருநீ
கற்ற கல்வியைக் கமர்விடுத் தொழிதியோ தமியேம்
பெற்ற பேறனை யன்றியும் பிள்ளைமற் றுளதோ.

(இ - ள்.) ஒப்பற்ற மற்றொரு புதல்வனாகிய தருமனுந் தன் மனவொருப்பாட்டைத்தன் பிதாவாகிய சுபுத்தருக்குச்சொன்ன வுடனே, ஒப்பற்ற நீ பயின்ற கல்வியை வெடிப்பிற் கவிழ்த்தொழித்தனையோ? தனியே யிருக்கு நாங்களிருவருமுன்னை யன்றிப்பெற்ற பிள்ளைகள் வேறுண்டோ? எ - று. (௬௧)

மட்டு லாவருங் குழலியை வதுவைசெய் மணநா
ளிட்ட மாலையுந் தோள்களுங் காணவென் றிருக்கேங்
கட்டு காவியந் துகிலொடு நீவரக் காணப்
பட்ட கண்களைப் பறித்தெறி யேன்கொலிப் பாவி.

(இ - ள்.) மணங்கமழு மளகத்தையுடைய வோர் கன்னிகையை மணம் புரியுந் திருக்கலியாண தினத்தில் நீயணிந்த மணமாலையையும், அதை யணிந்த

தோள்களையுங் காணவேண்டுமென்று விரும்பியுள்ளோம். கட்டுகின்ற அழகிய காவி வஸ்திரத்தோடு நீ வரக்காணப்பட்டவென் கண்களை இப்பாவியாகிய நான் பிடுங்கியெறிய மாட்டேனோ? எ - று. (௪௨)

ஈன்ற தாயினை யீன்றெடுத் திருபுயத் தணைக்கு
மான்ற தந்தையை யரந்தைசெய் தகன்றுபோ யடவி
தோன்றி மாதவந் தொடங்கினோ ரிவர்களைத் தொல்லை
மூன்று தேவரு முனிவுற நிரயமுற் றிழிவார்.

(இ - ள்.) பெற்ற தாயையும் பெற்றெடுத்து இருதோளினுமணைத்துக் கொள்ளுஞ் சிறந்த தந்தையையுந் துன்பப்படும்படி விட்டுச்சென்று வனத்திலடைந்து பெருந்தவஞ்செய்யத் தொடங்குமிவர்களைப் பழமையான மும்மூர்த்திகளுங் கோபமடைய நரகத்திலடைந்து தாழ்வார்கள். எ - று. (௪௩)

என்னை நீத்துநீ யிற்றுறந் தேகினை யாயி
னுன்னை நீத்துநா னுயிர்பொறுத் துய்யுநா ளுளதோ
பின்னை நோற்றொரு மகப்பெறப் பெற்றிலே னென்று
வன்னை யாகுலித் தழுதன ளருகிருந் தரற்றும்.

(இ - ள்.) என்னைப்பிரிந்து நீ இல்லறத்தை விட்டுச் செல்வாயாயின், உன்னை நீங்கி நான் உயிர் சுமந்து பிழைத்திருக்கும் நாளும் உளதோ? மீண்டுந் தவஞ்செய்து ஒரு பிள்ளையைப் பெறுவதற்கும் வலியில்லேன் என்று, தாயானவள் வருந்தி அழுபவளாய் அருகிலிருந்து அலறுவாள். எ - று. (௪௪)

தாயி ரங்கவுந் தந்தைநின் றிரங்கவுந் தமர்சூழ்ந்
தாயி ரம்பெய ரிரங்கவு மிரங்கில னனையான்
பாயி ரந்தொகு நூலுணர்ந் தில்லறம் பரியான்
போயி ரங்கரு விக்கிரி புகமனம் புரிவான்.

(இ - ள்.) தாய் வருந்தவும், தந்தை எதிர் நின்று வருந்தவும், உறவினர் பலர் சுற்றிக்கொண்டு வருந்தவும், அத்தருமன் வருந்தாதவனாகி, பாயிரத்துடன் சேர்ந்த ஞான நூல்களை யுணர்ந்து இல்லறத்தைத் தாங்காதவனாகி, ஒலிக்கின்ற அருவியானது ஒழுகிக்கொண்டிருக்கும் மலைக்குப் போகும்படி மனங்கொண்டான். எ - று. (௪௫)

மைவ ருங்குழ லன்னையுந் தந்தையு மதலை
மெய்யு நீழலு மாமென விடுத்தில ரதுநாட்
செய்ய மாநக ரதனிடைப் பிருகுவாந் தெய்வப்
பொய்யில் கேள்வியன் புகுந்தன னவனுழைப் புகுந்தார்.

(இ - ள்.) மேகம்போலுங் கூந்தலையுடைய தாயும், பிதாவும், தமது குமாரனை ஒருடல் போலவும், தாங்களே அவ்வுடலின் நிழல் போலவும் அவனை நீங்காதிருந்தார்கள். அப்போது செப்பமாகிய சிறந்த அந்நகரத்தில், பிருகுவென்னுந் தெய்வீகந்தங்கிய மெய்யுணர்வுடைய முனிவர் எழுந்தருளினர். இவர்கள் அவர் சந்நிதியுற்றார்கள். எ - று. (௪௬)

அரிய மாதவத் தந்தணீ ரருந்தவம் வருந்திப்
புரியு நன்மையிற் பெற்றன மொருதனிப் புதல்வ
னெரியு நெஞ்சினே மிறந்துற வில்லறந் துறந்து
பிரிவ தெண்ணுமற் றிவனல தில்லையோர் பிள்ளை.

(இ - ள்.) அரும் பெருந்தவமுடைய முனிவரே! நாங்கள் வருத்தத்தோடு அருந்தவஞ்செய்த புண்ணியத்தால் ஒப்பற்ற ஒரு புத்திரனைப்பெற்றோம், அத்தகைய இவன், வருத்தமெய்தும் மனமுடைய நாங்கள் இறந்து போம்படி இல்லறத்தைவிட்டுப் பிரிதலைக்கருதுகின்றான். இவனையல்லாமல் வேறொரு பிள்ளையும் எங்களுக்கில்லை. எ - று. (சஎ)

ஆங்க வன்றனை யருகழைத் தருக்கிய சிந்தை
யோங்கி நீச்செல வுரைத்தியென் றுரைத்தடி வணங்கத்
தேங்கு மாதவப் பிருகுவர் செல்வனைச் சிறியோய்
பாங்கி ருத்தியென் றிருத்தின னினையன பகர்வான்.

(இ - ள்.) ஆதலின், தேவரீர் அப்புத்திரனை யருகே யழைத்து, அவனுடைய அற்ப யோசனை விசேடித்துத்தீர்க்கமாம்படி கூறியருளவேண்டுமென்று வேண்டி, அவர் பாதங்களிற் பணிய, பெருந்தவமுடைய பிருகு முனிவர், அச்சிறுவனை நோக்கி, பிள்ளாய்! பக்கலிலிருக்க வென்றிருக்கச்செய்து இப்படியுரைக்கின்றார். எ - று. (சஅ)

தருமமேமுத லாகிய நான்கையுந் தழுவி
யிருமையும்பெறத் தருகுவ தில்லறப் பகுதி
யருமை நல்லற மிழைக்கினு மத்தவத் துறையோர்
கருமமில்லையே லத்தவ மவத்தொடுங் கழியும்.

(இ - ள்.) தருமமுதலிய நான்கு புருடார்த்தங்களையுந் தழுவி, இம்மை மறுமைப்பயன்களையுந்தருவது இல்லற தருமமாம். அத்துறவற மார்க்கத்தில் அருமையாகிய நல்ல புண்ணியங்களைச்செய்தாலும் ஓர் விடயந்தவறினால் அத்துறவறம் அப்பிரயோசனமாகி நீங்கும். எ - று. (சக)

நோற்ற ருந்தவ முயன்றுளோ ரத்தவ நோலார்
வேற்று வெவ்வினைத் துறையுளோர் தெய்வவே தியர்கண்
மாற்ற ரும்பசித் தழலெழ வரவெதிர் வழங்கி
யாற்றி யத்தழ லவிப்பரேற் றீவினை யவிப்பார்.

(இ - ள்.) அருந்தவங்களை அநுஷ்டித்து முயன்றோர்களும், அவ்விததவத்தை யநுஷ்டியாதவர்களும், இவற்றிற்கு வேறாயுள்ள கொடுந்தொழின் மார்க்கத்துற்றோரும், தெய்வீகந்தங்கிய அந்தணர்கள் ஒரு காலத்தில் தணிக்கமுடியாத பசித்தழலோடு வந்த வுடனே, அவர்களை யெதிர்கொண்டழைத்து உபசரித்து, அத்தீபாக்கினியைத் தணிப்பாராகில், தங்கள் தீவினையை யொழிப்பார்கள். எ - று. (ருo)

இன்று நோற்றுள தவமெலா மிவ்வுடம் பிகந்து
சென்று வேண்டுவ தினனலஞ் செறிவதற் கன்றோ
வன்று வேண்டுறு பிறப்பினிவ் வில்லறத் தடைந்தோ
ரென்று மச்சிறப் பெய்துவ ரையமற் றில்லை.

(இ - ள்.) இக்காலத்தில், நாம் நோற்குந் தவங்கள் யாவும், இத்தேகத்தைவிட்டுப்போய் (மேலைப்பிறப்பில்) வேண்டிய இன்ப சுகங்களைப் பொருந்துதற்கல்லவோ? அக்காலத்தில்விரும்பத்தக்க பிறவியிலே இவ்வில்லறத்தையடைந்தவர்கள், எக்காலத்திலும் அந்தச் சிறப்பினைப் பெறுவார்கள். வேறு சந்தேகமேயில்லை எ - று. (ருக)

வகுத்த நுண்பொருள் பெருக்குவான் வயின்வெறுத் தகனற்
றொகுத்த ரும்பொருள் பெற்றனர் பெருவளந் துய்ப்பார்
பகுத்த மேலவர்க் கில்லிருந் துண்பன பகுத்தார்
புகுத்த ருந்தனிப் பதவிவந் தெளிதுறப் புகுவார்.

(இ - ள்.) சொல்லிய நுண்ணிய சிவமென்னும் பொருளினிடத்தில் அன்பைப்பெருக்க இல்லறத்தை வெறுத்தலால், தொகுத்துள்ள அவ்வரும் பொருளைப் பெற்றவர்களாய்ப் பெருஞ்செல்வ மநுபவிப்பார்கள். உலகிற்பிறந்த பெரியோர்க்குத் தாம் புசிப்பனவற்றைப் பாகித்துத்தந்தவர்கள், எவரும் பெறுதற்கரிய ஒப்பற்ற பதவியை இலேசில் அடையப்பெறுவார்கள் எ - று. (௫௨)

ஈவ தீதரு மிருவினைப் பகுதிமுற் றிடையே
வீவ துண்மைமன் மைந்தரால் வினையற நோலார்
யாவ ராயினுந் தென்புலத் தெரிபடு நிரயம்
போவ தின்றிமற் றும்பரி னும்பரிற் பொலிவார்,

(இ - ள்.) அரிய இருவினைகளுந் தரும் இயற்கையிது. இவை முற்றும் இடையே அழிந்துவிடுவது உண்மை. தீவினையகலத் தவஞ்செய்யார் யாவராயினும், யமபுரத்தில் தீயமாகிய நரகத்தில் அடைவதில்லாமல், புத்திரப் பேற்றினால் மென்மேலும் உயர்வாகிய பதவிகளையெய்தி விளங்குவார்கள். ()

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்பன பலவும் பன்னித் தெருட்டினன் பிருகு வென்பான்
றன்பரி வுள்ளத் தொன்று முணர்ந்திலன் றரும னென்போன்
பொன்பொதி யுளத்தோ ரெய்து மிரவலர் புகன்ற வெல்லா
மன்பறத் துறப்பா னன்ன தன்மைய னாயி னானே.

(இ - ள்.) என்பனவாகிய பலவற்றையும் பிருகுமுனிவர் கூறித்தெரிவித்தார். தருமனோ தன் பரிவுதங்கிய மனதில் ஒருசிறிதும் உணர்ந்தானில்லை. பொன்னைமதித்த மனமுடைய செல்வர்கள் தம்பால் யாசகர் கூறினவனைத்தும் அன்பற்று விட்டுவிடுவதுபோன்ற தன்மையையுடையவனாயினான் எ - று.

ஞானமா முனிவ கேண்மோ நளிதிரைப் பரவை சூழு
மாநிலப் பரப்பி னுள்ள மன்பதை யெடுத்த வாக்கை
யூனெறுத் துணவு வேண்டா தருந்தவ முயற்றி னுய்வா
ரேனைவாய்ப் படுவ ரன்றே னுருளுடைச் சகட மொப்பார்.

(இ - ள்.) சிறந்த ஞானமுனிவரே! கேட்பீராக. குளிர்ச்சிவாய்ந்த அலைகளையுடைய கடல்சூழும் பெரிய பூமியிலுள்ள மானுடரெடுத்த வுடலின்றசையை வெறுத்தாகாரத்தை யிச்சியாமல் அருந்தவம் முயன்று உய்வார்கள். அல்லாவிடின் உருட்சியாகிய வடிவுடைய தேர்ச்சக்கிரத்தை யொத்தவர்களாய்ப் பலயோனிகளிலுமுதிப்பார்கள் எ - று. (௫௫)

இல்லறத் தியற்றுந் தீமை யிருஞ்சிலை மருங்கு வீக்கித்
தொல்லைவெம் பிறவிப் பௌவங் கடக்குமா றெவனோ தூயோ
யொல்லையின் வெகுளி காம மயக்கமென் றவற்றை நீப்பா
னல்லறத் தவமே யன்றி யாருளர் நடுவு தீர்ப்பார்.

(இ - ள்.) இல்லறத்திலிருந்து செய்யுந் தீமையாகிய பெரிய பாறையை அரையிற்கட்டிக்கொண்டு பழைய கொடிய பிறவிக்கடலைக் கடப்பதெங்ஙனமோ? அநிகேக்கிரத்திற்காமவெகுளி மயக்கங்களாகிய முக்குற்றங்களை யகற்றுகிறவன் நல்ல துறவியேயல்லது இல்லறத்தாருள் இடையில் அகற்றுபவர் யாவரிருக்கின்றனர் எ - று. (௬௭)

மக்களை நிதியைப் பேதை மகளிரை மருங்கு சூழ்ந்த
வொக்கலை நோக்கி யேமாந் துறுகதி நோக்க லாராய்
மிக்கழி நிரயத் தாழ்வார் மென்சிறு பறவை கண்டந்
தொக்குறு சுழனுக கெண்டை கொண்டுவிண் டெயலா தன்றே.

(இ - ள்.) மெல்லிய சிறு பறவைகள் தங்கள் கழுத்திற் கோக்கப்பட்ட சிறு கெண்டையைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் பறவாது. அதுபோல, பிள்ளைகளையும் பொன்னையும் பேதைமை தங்கிய மாதரையும் அருகே சூழ்ந்த உறவினரையும் பார்த்துக்கொண் டேமாந்தவர்களாய்த் தாமடையவேண்டிய பதவியை விரும்பாதவர்களாய் மிக்க கெடுதிவாய்ந்த நகரத்தில் அமிழ்வார்கள்.

இருவினை யிவற்றை யாண்பெண் ணெனவெடுத் தியற்றி வேதன்
றிருவினை யாண்பா லாகத் தீவினை முற்றும் பெண்பா
லுருவெனப் படைத்து விட்டா னதலா லும்ம னோர்மற்
றருவினை மகளி ரென்றே துறந்தன ராசை யெல்லாம்.

(இ - ள்.) வேதங்களைச்சொல்லிய பிரமதேவன் நல்வினை தீவினையென்னு மிவ்விரண்டையுமெடுத்து ஆண்பெண்ணைகப் படைக்கத் தொடங்கி நல்வினை முற்று மாண்பாலாகவும் தீவினைமுற்றும் பெண்பாலாகவும் படைத்துவிட்டான். ஆனதால் உன்னைப்போன்ற பெரியோர்கள் தீவினையுருவமென்று அம்மாதர்கள் மேலுள்ளவாசை முழுவதையும் அகற்றினார்கள் எ - று. (௬௮)

தாமத்தால் வீழ்ந்து சோர்ந்த குழலியர் தழுவித் தந்த
காமத்தாற் பெருகும் பாவக் கடற்கரை காண்ப தன்றே
பாமத்தாற் கலக்கத் தோன்றும் பரவைநஞ் சணிந்த கண்ட
னாமத்தாட் புணையொன் றன்றி நமக்கது கடக்க லாமோ.

(இ - ள்.) மலர்மாலையால் அவிழ்ந்துதொங்கிய கூந்தலையுடைய மாதர்கள் தழுவியுண்டாக்கிய மோகத்தினாலே பெருகுகின்ற பாவக்கடலானது கரை கடக்கத்தக்கதன்று. பரவிய மந்தரமாகிய மத்தாற்கடைந்ததாற் திருப்பாற் கடலிலுண்டான ஆலகாலவிடத்தையணிந்த கண்டத்தையுடைய சிவபெருமானது கீர்த்திபொருந்திய திருவடிகளாகிய தெப்பமொன்றினாலல்லது நம் போன்றவர்களுக்கு அக்கடலைக்கடக்க முடியுமோ? எ - று. (௬௯)

இவ்வழி தரும னென்பா னெதிரெடுத் தியம்ப நோக்குஞ்
செவ்வழி பிருகு முற்றுங் கேட்டனன் சீற்றங் கொண்டா
னவ்வழி யெடுத்த சீற்ற மரிதொழித் தவனை நோக்கி
வெவ்வழி நீப்பா னென்று விளம்புதுங் கேட்டி யென்றான்.

(இ - ள்.) இவ்வழியாய்த்தருமனென்பவனெதிராக வெடுத்துச்சொல்லவும், அவனைப்பார்த்திருக்கும் மேலான மார்க்கத்திலுள்ள பிருகுமுனிவர் அதற்றையெல்லாங்கேட்டுக் கோபமுற்று, அப்போதுண்டான கோபத்தை யரி

தாகவடக்கி அவனைப்பார்த்துத்துன்மார்க்கத்தை நீக்குவதற்கொன்று சொல்லுவோம். கேட்பாயாக வென்றனர். எ - று. (௬௦)

மூலமாய் நடுவா யீறாய் முதற்பெரும் பொருளாய் முற்று
ஞாலமாய்ப் புனலாய்த் தீயா யுலவையாய் ஙளிவ ராகி
மேலதாய்க் கீழ தாகி மெய்யுமாய்ப் பொய்யு மாய்முக்
காலமா யுயிர்க டோறுங் கரப்பதொன் றுளது காண்டி.

(இ - ள்.) முதலிடை கடையாகியும், முதற்பெரும் பொருளாகியும், முடிவாயுள்ள பிரிதிவியாகியும், அப்பாகியும், தேயுவாகியும் வாயுவாகியும் குளிர்ச்சி பொருந்திய ஆகாயமாகியு முயர்ந்ததாகியு மிழிந்ததாகியும் உண்மையாகியும் பொய்யாகியும் காலத்திரயங்களாகியும், ஆன்மாக்கடோறும் மறைந்திருக்குமொரு பொருளுள்ளது. அதனைப்பார்க்கக்கடவாய். எ - று. (௬௧)

செய்தவப் பயனு மற்றை யில்லறச் சிறப்பு மெல்லா
மெய்திய வெளிதி னல்கு மஞ்செழுத் திதனை யின்றுன்
பொய்யறு சிந்தை பற்றிப் புலப்பட வுணர்த்து கின்றே
முய்தியென் றுணர்த்தி னனப் புதல்வனு முணர்ந்தா னன்றே.

(இ - ள்.) துறவு நெறியிலிருந்து செய்யத்தக்க தவப்பலனும் அதின் வேறாகிய இல்லற நெறிக்குரிய மேன்மைகளும் ஆகிய வெல்லாவற்றையும் நாம் இலேசிற் பெறும்படி திருவைந்தெழுத்தே கொடுக்கும். இப்பஞ்சாக்கரத்தை யிற்றைத்தினமே யுன்னுண்மை தங்கிய மனத்திற் பதிந்து தெளியும்படி யுபதேசிக்கின்றோம். நீ கடைத்தேறுகவென்று உபதேசித்தனர். அப்புத்திரனுமதைத்தெளிந்து கொண்டான். எ - று. (௬௨)

தாபத நிலைமை பெற்ற சந்திர சேன னின்னை
மாபெருங் கதியி னுய்க்கும் வழிமொழி யென்றி ரப்ப
நீபக லிரவு மாறுச் செபித்தரு ளெனநி கழ்த்தத்
தீபமு மிருளும் போலத் தெளிந்தனன் சிறுவன் சிந்தை.

(இ - ள்.) துறவற நிலைமையடைந்த சந்திர சேனன் உன்னை யடைந்து மிகப்பெரிய முத்தியிற் செலுத்தும் வழியைக்கூறுகவென்று யாசிக்கும்படி, நீ யிரவும் பகலும் விடாமற் பஞ்சாக்கரத்தைச் செபித்திருக்கக்கடவாயென்று கூறவும், அத்தருமன் தீபத்தைக்கண்டவிருள்போல மனமயக்க நீங்கித்தெளிந்தான். எ - று. (௬௩)

பெருந்தவத் தலைமை சான்ற பிருகுமா முனிவன் பின்னர்
மருந்தினு மினிய தோன்றற் கருமறை வதுவை முற்றப்
பொருந்துநா ளோரை நோக்கிப் பொருவருங் கற்பின் மிக்க
திருந்திழை யவனை நோக்கி மணவினை சிறக்கச் செய்தான்.

(இ - ள்.) பெரிய தவநிலையின் முதன்மை மிக்க பிருகுமாமுனிவர் அதன் பின்னர், அமிழ்தத்தினு மினிதாகிய அவனுக்கு அரியவேத விதிப்படி மணவினை முடிக்கப்பொருத்தமாகிய நாளும் முகூர்த்தமும் பார்த்து, ஒப்பிடற்கரிய மிக்க கற்பினையுடைய திருந்திய ஆபரணமணிந்த வொரு பெண்ணைத்தேடித் திருமணச்சடங்கினைச் சிறப்போடு செய்து முடித்தார். எ - று. (௬௪)

மணவினை முடிந்த பின்னர்ப் பிருகுமா தவத்தோர் தெய்வக்
கணமுறை குழுவிற் சென்றுன் றருமனுங் கல்விச் செல்வத்

துணர்வின னஞ்செழுத்துச் சரித்தன னெழியா னென்றுந்
துணைபடப் புரண்டா னந்த வெள்ளநீர் துள்ளுங் கண்ணன்.

(இ - ள்.) மணவினை முடிந்த பிற்பாடு பிருகு முனிவர், பெருந்தவசிகளு டைய தெய்வீகந்தங்கிய கூட்டத்தார் வசிக்குஞ்சபைக்குப்போயினர். தரும னென்பவனுங் கல்விப்பொருளுணர்ச்சிபெற்றவனுய்ப் பஞ்சாக்கரத்தை நீங்கா மலுச்சரிப்பவனுய், அன்பின் மிகையாலானந்தக்கண்ணீர் இருபாகமாகப்பெருக் கெடுத்துத்துளிக்கும் இருவிழிகளையுடையவனுனன். எ - று. (சுரு)

ஈங்கிவ னினைய னுகப் பற்பக லிறந்த பின்னர்த்
தாங்கருந் தவமேற் கொண்ட சந்திர சேன னென்பான்
றூங்குகுண் டிகையன் றள்ளித் துளங்குறு நடையன் மீச்சென்
றோங்கிய குடையன் முக்கோ லுயரிய கரத்த னுற்றுன்.

(இ - ள்.) இவ்விடத்தில் தருமன் இவ்வண்ணமாக விருக்க, அநேக நாட் கள் அகன்ற பிறகு, நிர்வாகஞ் செய்தற்கரிய துறவறத்தை மேற்கொண்ட சந்திர சேனனென்பவன், கையிற்றூங்குங் கமண்டலமுடையவனும், தள்ளாடி யசையும் நடையுடையவனும், மிக உயர்ந்த குடையையுடையவனும், திரிதண் டத்தை யுயர்த்திய கையையுடையவனுமாக வந்தான். எ - று. (சுசு)

கண்டன னெதிர்ந்து செய்யுங் கடன்முறை யாவுஞ் செய்து
குண்டிகைத் தண்டு கொண்டான் குடைபிடித் துடன்கொண் டேக
வெண்டரு மனையி னுய்த்தா னுசனத் திருத்தி யன்னு
னுண்டியி னுவந்த பிச்சை யுதவின னுவப்பின் மிக்கான்.

(இ - ள்.) இப்படி வரக்கண்டு தருமனெதிர்கொண்டு செய்யவேண்டிய கடன்களையெல்லாஞ் செய்து கமண்டலந் திரிதண்டம் இவற்றைத்தாங்கிய அச்சந்திரசேனனைத் தன்னேடு குடை பிடித்துக்கொண்டு அழைத்துச்சென்று எண்ணத்தக்க தன் மனையிற்செலுத்தி ஆசனத்திலிருத்திச்சந்தோஷ மிக்கவனு யச்சந்திர சேனன் புசித்தற்கு விரும்பிய உணவை யளித்தான். எ - று. (சுஎ)

அணிமறு காட லெண்ணி யளவளாய்ப் பழமை கூறித்
தணிவில்பே ரன்பு மிக்குத் தங்களிற் றமித்த காலைத்
திணிதவத் துருவ மன்னுன் சந்திர சேன னென்போன்
பணிதரு தருமற் பார்த்துச் சிற்சில பகர்வ தானுன்,

இ - ள்.) அழகிய வீதியிலுலாவி வார்த்தையாடக்கருதி அளவளாவித்தங் களுக்குள்ள பழய சிநேகத்தைச்சொல்லிக்குறையாத பேரன்பு மிகுந்து, இரு வருந்தனித்த காலத்திற் பெரிய தவத்தின் உருவத்தைப்போன்ற சந்திரசேன னென்பவன்தன்னை வழிபடுந்தருமனைப்பார்த்துச் சிற்சில வார்த்தைகள் செப்பு வானுயினுன். எ - று. (சுஅ)

கெடுத்தனை யறிவை மற்றைக் கேழ்கிளர் மறையி னுட்பம்
விடுத்தனை கோத்தி ரத்தின் மெய்ந்நெறி யொழுக்கம் பாழே
மடுத்தனை யில்ல றத்து வாழ்வினை யோம்பி நன்று
தடுத்தனை தவத்தை யெங்ங னுய்குவை தருமம் பாராய்.

(இ - ள்.) தருமனே! உன்னறிவைக் கெடுத்தாய். அன்றியும்' பெருமை மிகுந்த வேதத்தின் கருத்தைவிட்டாய், உன் கோத்திரத்தின் உண்மை மார்க் கத்திற்குரிய வொழுக்கங்களை வீணக்கினுய். இல்லறவாழ்க்கையைப் பாது காத்து நல்ல தவமார்க்கத்தைத் தடுத்தாய்; நீ எப்படிக் கடைத்தேறுவாய்?

இல்லறந் துறவென் றோது மீங்கிவை யிரண்டு நோக்கி
னல்லறந் துறவே யின்று நாளவங் கழிய வாழும்
புல்லற மில்லின் வாழ்க்கை பொன்னகர்த் தருவுங் கோவும்
வல்லையில் வருக வென்னில் வரவெதிர் வரத்தி னின்றேன்.

(இ-ள்) இல்லறந் துறவறமென்று கூறும் இவை யிரண்டனையும் யோசித்துப்பார்த்தால் துறவறமே நன்மார்க்கம். வாணாள் வீணே கழியும்படி வாழும் இல்லறவாழ்க்கையே அற்ப அறம். நான் தேவலோகத்துள்ள கற்பகவிருட்சமு மிந்திரனுஞ் சீக்கிரத்தில் வரக்கடவாயென்று கூறினால் உடனே யெதிரில் தக்கவரமுடையவனாயிருக்கிறேன் எ-று. (௭௰)

சுரிதருங் கூந்த னல்லார் முலைமுக மயங்கி வேதந்
தெரிதரு சிந்தை யெல்லாஞ் சிந்தனை சிறியை யானு
மரிமுதற் றேவ ரெல்லா மென்றவத் தடங்க நோற்றுப்
பெரியரிற் பெரிய ரானேன் பிழைத்தனை தவத்தை யோராய்.

(இ-ள்.) சுரிகின்ற கூந்தலையுடைய மாதர்களது குசங்களில் மயக்கெய்தி வேதத்தையுணர்ந்த மனமுழுமையும் அற்ப வெண்ணங்களுடையவனாயினை. விஷ்ணுமுதலிய வெல்லாத் தேவருமென்தவ மகிமையாலெனக்கு அடங்கி யிருக்கத் தவஞ்செய்து பெரியோர்களிலெல்லாம் பெரியோனாயினேன். நீ யறியாதவனாய்த் தவமார்க்கத்தைத் தவறினாய். எ-று. (௭௧)

இந்திரன் முதலி னோரை யிக்கணத் தழைப்ப னென்னை
மைந்தநீ யொப்பா யல்லை வரன்முறை பிழைத்தா யென்ன
வந்தணன் றரும னுள்ளத் தணிநகை பூத்து மற்றைச்
சந்திர சேனன் றன்னை நோக்கினன் சலித்துச் சொல்வான்.

(இ-ள்.) இந்திரன் முதலான தேவர்களை இக்கணத்திலேயே யிங்கு வரவழைப்பேன். பிள்ளாய்! நீ தவறினையாகலின் எனக்குச் சமானமில்லை யென்று சந்திரசேனன் சொல்ல, அந்தணனாகிய தருமன் றன்மனதிலழகிய புன்னகையரும்பினவனாய், அச்சந்திரசேனனைப்பார்த்து மனவெறுப்புற்றுச் சொல்லுகின்றான் எ-று. (௭௨)

இயலுடை மூவர்க் கெல்லா மில்லற மில்லை யாகின்
முயலுறு தவங்க ளெங்ஙன் முற்றுறு முடிவு பாரா
யயலுற மொழிந்தா யும்ப ரிறையைநீ யழைத்தி யாயின்
மயலுறு மனத்தோ யானு மவ்வழி வருவனென்றான்.

(இ-ள்.) கிருதகிருத்தியங்களையுடைய திரிமூர்த்திகளுக்குமில்லறமில்லாவிடின், அவரவர்கள் செய்யுந் தவங்களெல்லா மெப்படிமுடியும்? அம்முடிவை நீ யூகித்துப்பார்க்கவில்லை. ஆதலாலென்னை வேறுபடுத்திப்பேசினை. தேவராசனாகிய இந்திரனை நீ வரவழைத்தாயாயின் மயக்கமுற்ற மனமுடையோனே! நானுமுன்மாககத்திற்கு வருவேனென்று சொன்னான் எ-று. (௭௩)

தருமனீ துரைத்த லோடுஞ் சந்திர சேன னென்பான்
பொருவரு சீற்ற மிக்குப் புரந்தர வருதி யென்ன
நிருமியா முன்ன மன்னா னெதிருறப் போற்றி நின்றா
னிருகவுட் கரட வெள்ளை வாரண னூர்ந்து போனான்.

(இ-ள்.) தருமனிவ்வார்த்தைகள் சொன்ன மாத்திரத்தில், சந்திரசேனனென்பவன் ஒப்பிடற்கரிய கோபமிகுந்து விந்திரனே வருகவெனக் கட்டளையிடு முன்னரே யவ்விந்திரனெதிராகவந்துதித்து நின்று இருசன்னங்களினும் மதமொழுகும் வெள்ளை யானையையுடையவன் அங்கிருந்து போயினன்.

சுட்டினன் காட்ட நின்ற தருமனைச் சுடுவ சொல்லி
மட்டவி ழலங்க லோய்நீ வலலையேல் வருவி யென்னக்
கட்டவி ழிதழி வேணிக் கடவுளஞ் செழுத்தை நெஞ்சத்
தொட்டின னொட்டா முன்ன மெதிர்ந்தன னும்பர் கோமான்.

(இ-ள்.) சந்திரசேனனவ்விந்திரனைச் சுட்டிக்காட்டி நேர்நின்று, தருமனைப்பார்த்துக்கடுமொழிகள் சொல்லி மணம்வீசும் மாலையுடையோனே! நீவருவிக்க வல்லவனாயின் வருவிப்பாயென்று கூற, முறுக்கவிழ்ந்த கொன்றைமலரையணிந்த சடையையுடைய சிவபெருமானது பஞ்சாக்கரத்தை மனதிற்றியானித்தான். அவன்றியானிக்கு முன்னரே இந்திரனெதிற்றோன்றினன் எ-று.

அலங்கலந் தடந்தோள் வெள்ளை வாரண னச்ச மெய்தக்
கலங்கிய மனத்த னாகித் தருமனைக் கரங்கள் கூப்பி
வலந்திரிந் திரங்கி நின்று வரன்முறை வழுத்தி ஞானப்
பொலங்கழற் குமர னேக்கிப் போகெனக் குலிசன் போனான்.

(இ-ள்.) அழகிய கற்பக மாலையணிந்த விசாலமான தோள்களையும் வெள்ளையானையையுமுடைய அவ்விந்திரன் பயமடைதலாற் கலக்கமுற்ற மனமுடையவனாய்த் தருமனை நோக்கிக் கைகளைக் குவித்துப் பிரதக்கணஞ்செய்து மனமுருகி நேர்நின்று கிரமப்படி துதிசெய்து ஞானவானாகிய அழகிய வீரக்கழலணிந்த அத்தருமன் போவென்று கட்டளையிட, வச்சிராயுதமேந்திய அவ்விந்திரன் சென்றான் எ-று. (எசு)

திருத்திய தவத்தின் மிக்கான் சந்திர சேன னென்போ
னருத்தியி னச்சங் கூர வதிசய மடைந்தான் மற்றை
யிருக்குநூன் முழுதும் போக்குந் தருமனிங் கிவனை நோக்கி
மருக்கமழ் கமலத் தோனை வருத்துவன் காண்டி யென்றான்.

(இ-ள்.) திருத்தமாகிய தவத்தில் மேம்பட்ட சந்திரசேனனென்பவன் ஆவலோடு அச்சமுமதிகரிக்க ஆச்சரியமடைந்தான். வேதசாஸ்திரமுழுவதுமறிந்த தருமனென்பவனிச்சந்திரசேனனைப்பார்த்து மணம்வீசுந் தாமரைப்பீடத்திலுள்ள பிரமதேவனை நான் வரழைக்கின்றேன் பார்ப்பாயாக வென்றனன் எ-று. (எஎ)

அந்நிலை புரிதி யாயி னருமறைக் கிழவன் றன்னை
யிந்நிலை யானு மின்னே வருவிப்பே னென்ன லோடுஞ்
செந்நெறித் தரும சீலன் றெய்வவஞ் செழுத்தை யுள்ளத்
துன்னலுங் கணத்தி னுற்றா னுந்தியம் பொகுட்டு மேலோன்.

(இ-ள்.) நீ யப்படிச்செய்வாயாயின் அரிய வேதங்களுக்குரிய பிரமதேவனை இவ்விடத்திலேயே நானுமிப்பொழுதே வருவிப்பேனென்று சொல்லவுஞ் செப்பமான மார்க்கத்திலுள்ள தருமனென்னும் பரிசுத்தமானவன் தெய்வீகம் பொருந்திய பஞ்சாக்கரத்தைத்தான் மனதிலெண்ணியவுடனே தாமரைப்பொகுட்டின் நடுவில் வசிக்கும் பிரமதேவன் ஒரு க்ஷணகாலத்திற்குள் அங்கே வந்தான். எ-று. (எஅ)

எம்முறை யருள்வைத் தாயின் றெத்தவம் புரிந்தே னென்று
மும்முறை வணங்கிச் சூழ்ந்து மொழிதரு கடன்கள் யாவுஞ்
செய்முறை திருந்தச் செய்தான் றிசைமுகக் கடவுட் செல்வ
னம்முறை யருளி னோக்கி யேகுதி யமல வென்றான்.

(இ - ள்.) ஓ தருமனே! நீ யெங்களிடத்திலின்று கருணை வைத்தாய். இதற்காக நாங்கள் யாது தவஞ்செய்தோமென்று மும்முறை பிரதக்கணஞ்செய்து வணங்கி, சொல்லுகின்ற வழிபாடுகளை யெல்லாஞ் செய்யவேண்டிய முறைகள் திருத்தமாகச்செய்தான் நான்குமுகங்களையுடைய பிரமதேவன். ஞானச்செல்வமுடைய தருமனும் அப்படியே கருணையோடு பார்த்து மலமற்றனே! நீ போகுக வெனக் கூறினன். எ - று. (எகூ)

உந்தியங் கமலத் தோங்குந் திசைமுகத் தொருவன் செல்ல
வந்தரத் திமையோர் யாரு மன்னவர்க் கெதிரே வானத்
துந்துமி முழங்க மற்றைப் பல்லியந் துவைப்பப் பொன்னாட்
டிந்திர னெதிர்நின் றேத்தத் தன்னுல கெய்தி னானால்.

(இ - ள்.) அழகிய உந்திக்கமலத்தில் வீற்றிருக்கும் நான்கு முகங்களையுடைய வொப்பற்ற பிரம தேவன் செல்லவும், ஆகாயத்திலுள்ள தேவர்களெல்லாரும் பிரமதேவனுக்கு எதிராகத் தேவதுந்துபி யொலிக்கவும் பல வகைப்பட்ட பிறவாத்தியங்கள் முழங்கவும் தேவலோக மன்னவனாகிய இந்திரன் எதிர் நின்று துதிசெய்யவுந் தனது சத்திய லோகமெய்தினன். எ - று. (அ0)

வல்லையே லழைத்தி யென்று மொழிந்தனன் மறைவ லாள
னெல்லையின் மான மீககொண் டிருந்தன னிந்து சேன
னொல்லையி லவனை நோக்கிக் கண்முகிழ்த் திமயோகத் தூற்றான்
றொல்லைமா தவத்தோன் றன்மை மதிக்கிலன் சுருதிச் செல்வன்.

(இ - ள்.) நீ வல்லவனாயின் பிரமதேவனை யழைத்தவென்று தருமன் கூறினன். கணக்கில்லாத மானமதிகரித்திருந்த சந்திர சேனன் அதிசீக்கிரத் திற்றருமனைப்பார்த்துக் கண்களை மூடிக்கொண்டு யோகத்திலிருந்தான். பழமையாகிய பெருந்தவமுடைய சந்திரன்சேனன் றன்மையை வேதமுணர்ந்த தருமன் சிறிதும் மதித்தானில்லை. எ - று. (அக)

இருநிலத் துள்ளோர் யாருந் தெய்வமற் றிவனே யென்னுத்
தருமனை வணங்கி யேத்தி வழுத்தலுஞ் சந்திர சேன
னுருகிய வுளத்த னாகி யுவகையங் கடலு ளாழ்ந்தா
னருமறைத் தரும நின்னை யினையனென் றறிந்தி லேனால்.

(இ - ள்.) பெரிய பூமியிலுள்ளவர்கள் யாவரு மிவனே தெய்வமென்று தருமனை வழிபட்டு வணங்கித்துதிக்கவும், அதனைகண்ட சந்திரசேனன் உருக்கமுள்ள மனமுடையவனாய்ச்சந்தோஷ சாகரத்திலமிழ்ந்து அரிய வேதங்களை யுணர்ந்த தருமனே உன்னை யிதுகாறு மித்தகை மகிமையுடையவனென்றுணராமலிருந்தேன். எ - று. (அஉ)

எனவுரைத் திரந்து நின்பாற் புண்ணிய மிருந்த வாவென்
மனனினைந் துணர வல்லே னல்லனாய் மதித்தி லேன்யான்
புனையுமுப் புரிநூன் மார்ப நின்னுழைப் புலமை யெல்லாம்
வினையினேற் குணர்த்த வேண்டு மென்றுளம் வியந்து நின்றான்.

(இ - ள்.) என்று கூறி யாசித்து, உன்னிடத்திற் பொருந்திய புண்ணியத்தை யென் மனதினினைத்துத்தெளிய வல்லபமில்லாதவனாய், யானுன்னை பத்தியாமல் அலட்சியஞ்செய்தேன் அலங்கரிக்கின்ற வுபவீதமணிந்த மார்பையுடையோனே! உன்பாற் பொருந்திய வல்லபங்களை யெல்லாம் வினைச்சம்பந்தமுடையேனாகிய வெனக்குணர்த்த வேண்டுமென்று விண்ணப்பித்து மனங்களித்து நின்றான். எ - று. (௮௩)

மறைவரம் பிறைய றுமை யில்லற வரம்பி னின்றான்
றிறநெறித் தவத்தி னோங்குஞ் சந்திர சேனற் கன்பா
லறநெறிக் கதியி னுய்க்கு மஞ்செழுத் துணர்த்தத் தம்மி
னிறைதிறம் பலராய்ப் பன்னா ளிருந்தன ருலக மேத்த.

(இ - ள்.) வைதிகமார்கம் ஒரு சிறிதுந்தவறாது இல்லற தருமாத்திலொழுகிய தருமநிலையான துறவற நெறியினின்று தவத்தான் மேம்பட்ட சந்திரசேனனுக்கன்புடையவனாய்த் தரும மார்கத்தினருக்கு உரித்தாகிய பதவியிற் செலுத்தத்தக்க பஞ்சாக்கரத்தை யுபதேசிக்கவுந் தமக்குள்ளசிநேகிதத்திலொரு சிறிதும் மாறுபாடில்லாதவர்களாய் உலகினர் தங்களைத் துதி செய்யும்படி வெகு காலம் வாழ்ந்திருந்தார்கள். எ - று. (௮௪)

இந்நல நுகர்ந்து மண்மே லிந்திர செல்வந் துய்த்து
நன்னெறித் துறையின் வைகி நாள்பல கழித்த பின்னர்த்
துன்னருங் கிளையு மீன்ற மக்களுந் தொடரப் போந்து
பொன்னெடுஞ் சடில மௌலி திருவடிக் கமலம் புக்கார்.

(இ - ள்.) இனிய சுகங்களை யநுபவித்துப் பூலோகத்திலிந்திர போகத்தை நுகர்ந்தும், நன்மார்க்கமாகிய துறவறத்திலிருந்து பலநாள்கள் கழிந்த பின்னர் சூழ்ந்துள்ள வரிய வுறவினரும் பெற்ற புதல்வருந்தம்மைத்தொடர்ந்து வரச்சென்று பொன்போலும் நெடிய சடையையுடைய சிவபெருமானது சிறந்த பாத தாமரையிலொடுங்கினர். எ . று, (௮௫)

கொழுந்துவிட் டிலங்கி நீண்டு படர்கொடிப் பவள வேணிச்
செழுந்தவத் துறையி னின்னு மஞ்செழுத் தியல்பிற் செல்லு
மொழுங்குறு கதையொன் றுண்டா லுணர்த்துது முணர்மி னென்னாத்
தொழுந்தகைக் குரவ னென்னுஞ் சூதனீ தெடுத்துச் சொல்வான்.

(இ - ள்.) கொழுந்து விட்டுப்பிரகாசித்து நீண்டு படர்ந்த கொடிப்பவழம் போலுஞ் சடையையுடைய சிறந்த தவநெறியிலுள்ள நைமிசாரணிய முனிவர்களே! பஞ்சாக்கர மகிமையைக்கூறு மொழுக்கம் பொருந்திய இன்னுமோர் சரிதமுளது. அதனையுந்தெரிவிப்போம். தெரிந்து கொள்ளுங்களென்று வணங்கத்தக்க தன்மை வாய்ந்த ஆசிரியரென்னுஞ் சூதமுனிவரிவ்விதந்தொடங்கிச் சொல்வாராயினர். எ - று. (௮௬)

விட்புலத் திமையோர் வீந்து பிறப்பதை விரும்ப வன்னோர்
கட்புலங் கதுவுந் தொல்சீர்க் கவுசிக மென்னு நாட்டி
னுட்புலத் தாடி வீழ்ந்த வானக ருருவு போலு
நட்புலந் திறவாச் செல்வ விக்கிரம நகரொன் றுண்டால்.

(இ - ள்) விண்ணகரிலுள்ள தேவர்கள் மாண்டுபிறப்பதை விரும்பும்படி அத் தேவர்களது கண்களைப்பற்றிக் கொள்ளும் பண்டைய சிறந்திய கௌசிக

யென்னும் நாட்டிற் கண்ணுடியினுள்ளே பொதிந்த தேவலோகத்தின் வடி வத்தைப்போன்று எல்லோர்க்குந் தன்னிடத்துள்ள நேசங்கழிந்துபோகாத செல்வந்தங்கிய விக்கிரம நகரம் என்றொரு நகரமுண்டு எ-று. (அஎ)

அத்திரு நகரின் வேத கோத்திரத் துளரா னந்தன்
சுத்தநாற் சுருதி வல்ல சூரிய சன்மாவென்னு
மித்திறத் திருவர் தம்மு ளிகலுளார் நிகழுங் காலைச்
சத்திரம் புதைத்த நெஞ்சன் றறுகணு னந்த னென்போன்.

(இ - ள்.) அந்த சிறந்த நகரத்தில் அந்தணர் குலத்திலுள்ள ஆனந்தன் பரிசுத்தமாகிய நான்கு வேதங்களில் வல்லவனுகிய சூரியசன்மாவென்னுமிவ் விருவருந் தமக்குள்ளே பகையுள்ளவர்களா யிருக்குங்காலத்தில் வேலாயுதத்தை புதைத்துள்ளதுபோன்ற மனமுடைய அஞ்சாதவனுகிய ஆனந்தனென்பவன்.

மாறுகொண் டிவனை வெல்லப் படுவதன் றென்று மாயங்
கூறுகொண் டனைய நெஞ்ச னானந்தன் குறித்து வேதத்
தீறுகண் டிருந்த போதத் திரவிசன் மாவை யெய்தி
வேறுகொண் டிருந்த தீமை பொறுத்தியென் றடியில் வீழ்ந்தான்.

(இ - ள்) இச்சூரியசன்மாவை யெதிர்த்து வெற்றிகொள்ளத்தக்கதன்று என்று வஞ்சகமே யமர்ந்திருப்பதுபோன்ற மனத்தையுதையுடைய ஆனந்தன் ஆலோசித்து வேதத்தின் முடிவை யறிந்திருந்த அறிவையுடைய சூரியசன் மாவை யடைந்து நான் றங்களை யிதுகாறும் வேறுபடுத்தி யிருந்தவென் கொடு மையைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென் றவன்பாதத்தில் வணங்கினுன்.

இற்றைநா ளளவு நின்பான் மாறுகொண் டிழைத்த தீமைக்
கற்றமொன் றில்லை யைய வென்னறி வின்மை யானே
குற்றமுற் றொழித்து நீயே பொறுத்தனை கோடி பொல்லா
வெற்றனை யருள்வா யென்னப் பின்னரும் வணங்கி வீழ்ந்தான்.

(இ - ள்.) இன்றுவரையி லும்மிடத்திற் பகைபாராட்டி நான்செய்த கொடுமைகளுக்குச்சோர்வு சிறிதுமில்லை. ஐயனே! அவையெல்லா மென்னறி வின்மை யானே நடந்தன, என் குற்றங்களையெல்லாம் நீக்கி நீரே மனம் பொறுத்துக்கொள்ளவேண்டும். அல்லாமலுங் கொரேனுகிய இவ்வீணனைக் காத்தருளவேண்டுமென்று மறுபடியுமவனடிகளில் வீழ்ந்து வணங்கினுன்.

தோமறு குணத்தின் மிக்க சூரிய சன்ம னுளத்
தாமரை யயனுக் கொப்பா னுங்கவன் றன்மை நோக்கி
வேமெரி மெழுகை வைத்தா லன்னதாய் மெலியு நெஞ்சன்
காமருங் கருணை நல்கி யிருக்கெனக் கழறி னுனல்.

(இ - ள்.) குற்றமற்ற நற்குணங்களான மேம்பட்ட சூரியசன்மனென்று சொல்லப்படும் நாளத்தையுடைய தாமரை மலரிலெழுந்தருளிய பிரமதேவ னுக் கொப்பானவன் அப்போது அவ்வானந்தனைப்பார்த்து ஜ்வலிக்கின்ற வக் கினியில் மெழுகை வைத்ததுபோல வுருகிய மனனுடையவனு யழகிய திரு வருள் சுறந்து இருக்கவென்று கூறினுன் எ. று. (கூக)

ஆங்கவன் பணித்த லோடு மருகுபோ யிருத்தற் கஞ்சித்
தேங்கிய கருணை யைய நின்னடிச் சேவை நல்கிப்

பூங்கழற் குரிமை யென்னை யாக்குதி புலையன் செய்த
தீங்கினைப் பொறுத்தி யாயிற் றேவரிற் றேவ னீயே.

(இ - ள்.) அவ்வண்ணமவன் கட்டளையிடவும் அவனருகே சென்றிருக்கப் பயந்து அருள்பெருகிய ஐயரே! உம்முடைய பாததரிசனந்தந்து அந்த அழகிய பாதத்திற்கு என்னை யடிமையாக்கிக்கொள்ளவேண்டும். புலைத்தன்மையுடைய நான் இதுகாறுஞ்செய்த கொடுமைகளைப்பொறுத்தருள்வீரானால் நீரே தேவர்களுக்குந் தேவனாக மதிக்கப்படுவீர். எ - று. (௯௨)

என்றவ னுரைத்த மாற்ற மிருசெவிப் படுத்தி வெண்ணெய்க்
குன்றெரி துற்ற தென்னக் குழைந்தன னிரவி சன்மா
வின்றுதொட் டெனது சுற்றத் தினியைநீ யெனக்கு நின்போ
னன்றியோ ருளரோ வென்னத் தழுவின னட்புக் கொண்டான்.

(இ - ள்.) என்று ஆனந்தன்சொல்லிய வார்த்தைகளைத்தன்னிரு செவிகளிற்கேட்டு வெண்ணெய் மலையிற் றீபட்டதுபோல மனமுருகியவனாய் இன்று முதல் என்னுறவினரிலும் நீயே யினிமையானவன். உன்னைப்போல நன்மையுடையோர் வேறொருவருளரோ வென்று (சூரிய சன்மா ஆனந்தனை)ச் சேர்த்தணைத்து நேசித்தான். எ - று. (௯௩)

அற்றிரண் டனைய நெஞ்சத் தானந்த னொருநால் வேதச்
சொற்றிரண் டனைய நாவான் சூரிய சன்ம னோடு
மற்றிரண் டிலனு யொன்றிப் பற்பல வைகல் சென்றான்
கொற்றிரண் டனைய வைவே லுள்ளத்தான் குறித்துக் கூறும்.

(இ - ள்.) இருள் முழுவதுந் திரண்டாற்போன்ற மனமுடைய ஆனந்தனென்பவன், ஒப்பற்ற நான்கு வேதச்சொற்களுமொன்று சேர்ந்துருவெடுத்தாற்போன்ற நாவினையுடையவனாகிய சூரிய சன்மாவுடன் இரண்டுபட்ட மாறுபாடற்றவனாய்க்கலந்து பல காலங்கழித்தனன். கொலைத்தன்மைதிரண்டாற்போன்ற கூரிய வேலையொத்த மனமுடைய ஆனந்தனாலோசித்துச்சொல்கின்றான், எ - று. (௯௪)

வரையடுத் திருக்கு நம்மூர் மறுகெலாம் வரிகொள் வேங்கை
யிரையெடுத் துழலும் வாளிட் டிருட் பிழம்பு வீங்கும்
விரைகம ழலங்க லாய்நீ வெளிப்படா திருத்தி யானே
யரையிரு ணடுநா ளெல்லாந் துயில்கலன் றிரிவ னென்னு.

(இ - ள்.) மலையருகிலுள்ள நமதூர்த்தெருக்கள் யாவும் வரிகள் பொருந்திய புலிகள் உணவெடுத்துச்சஞ்சரிக்கின்றன. இப்போதோ பெரிய விருட்டொகுதி யொளிவிட்டதிகரிக்கும். வாசனை வீசும் மாலையுடையவனே? நீ வெளிவராமலிருநாவொருவனே பாதியிரவாகிய நடுச்சாமமெல்லாம் நித்திரை நீங்கியவனாய் அறிவேன். எ - று. (௯௫)

வாளுகிர்த் தடக்கை வேங்கை வருநெறி பார்த்து நின்பான்
மூளிருந் துயிலை நீக்கி யெழுப்புவன் முனிநாண் கோத்துக்
கோளிரும் பகழி தூண்டிக் கோறியென் றுரைப்ப வொத்தான்
கேளிரும் பவத்தை வென்றோ னவனுளங் கிடப்ப தோரான்.

(இ - ள்.) ஒளிதங்கிய மேகம் பொருந்திய பரந்த கைகளையுடைய வேங்கைப்புலி வருவழியை நோக்கி உனக்குண்டான பெரிய நித்திரையை

யகற்றி யெழுப்புவேன், வில்லில்நாணை ஏறிட்டுக்கொல்லும்படி செல்லும்பெரிய அம்புகளை விட்டுக்கொல்லுகவெனக்கூற, பலராலுங் கேட்கப்படும் பெரிய பிறவிப்பகையைச்செயித்த சூரிய சன்மன் அவ்வானந்தன் மனதிலுள்ளதை யறியாதவனும் அதற்கிணங்கினன். எ - று. (கசக)

அளித்தக வில்லா நெஞ்சத் தானந்த னன்றோ ராவை
வெளிப்பட விடுத்து வீக்கி வேங்கையி னதளாற் போர்த்துத்
துளிப்புனல் விழியிற் சோரச் சூரிய சன்மற் கூவி
விளித்தனன் சிலைகை யேந்தி யனையனும் வெளிவந் துற்றான்.

(இ - ள்.) கருணைத்தன்மையில்லாத நெஞ்சத்தையுடைய ஆனந்தனென்பவன் அப்பொழுது ஒரு பசுவை வெளியே வரவிடுத்து நன்றாகப் புலித்தோலால் மூடிக்கட்டி, கண்களில் நீர்த்துளிசிந்தச் சூரிய சன்மனை உரக்கக்கூப்பிட்டான். அச்சூரிய சன்மனுங் கையில் விற்பிடித்து வெளியே வந்து சேர்ந்தனன்.

சுட்டினன் வேங்கை யீதென் றுரைத்தனன் சுட்டா முன்னம்
விட்டனன் பகழி யீது வேங்கையென் றுண்மை கொண்டான்
பட்டது பகழி வீழ்ந்து பட்டது பசுவு நோக்கிக்
கெட்டன னிவனென் றன்னாப் பின்னரும் கிளத்த லுற்றான்.

(இ - ள்.) இதுதான் புலியென்று சுட்டிக்காண்பித்தான். அப்படியவன் காட்டு முன்னரே யிது புலிதானென்று நம்பினவனும்ச் சூரியசன்மன் அம்பு விட்டான். அவ்வம்பு பாய்ந்தது. உடனே அப்பசுவும் வீழ்ந்திறந்தது. அதைப் பார்த்து ஆனந்தன் (இவன் கோஹத்தியால்) சீக்கிரத்திற் கெட்டுப்போவானென்று கருதி மீண்டுஞ் சொல்கின்றான். எ - று. (கசஅ)

நள்ளிருட் பொழுது நீங்கா நாமிவ ணிருப்பி னேருங்
கள்வரால் வெருவா தியான்போய் நம்மனை கண்டு மீள்வேன்
வள்ளலிங் கிருத்தி யென்னா வேகினன் மனையு ளெய்தி
யொள்ளிழாய் சோரர் சேர்வ ரகத்தைவிட் டொழிதி யென்றான்.

(இ - ள்.) நடுராத்திரி யின்னும் நீங்கவில்லை. நாமிங்கிருந்தால் இதையுணர்ந்த திருடர்களால் நம்வீட்டவர் பயமுறாமல் நானே சென்று நமது வீட்டைப்பார்த்து வருவேன். வள்ளலே! நீரிவ்விடத்திலிருமென்று சொல்லிப் போயினன், அவன் சூரிய சன்மன் வீட்டை யடைந்து அவன் மனைவியை நோக்கி ஒளிதங்கிய ஆபரணமணிந்த அன்னையே! திருடர் வருவார்கள். வீட்டை விட்டு வெளியே சென்றிருவென்று சொன்னான். எ - று. (கசகூ)

கொண்டுபோ யவளை மைந்தன் குலமனை யிருத்தி மைந்த
னொண்டொடி யோடுங் கூடி யுடன்செல வருத்தித் தாதை
தண்டலின் மனையுட் போக்கித் தம்பிநின் றந்தை போல
மண்டிருள் விளிப்பர் கள்வர் திறக்கலை வாயி லென்றான்.

(இ - ள்.) அவளை யழைத்துச்சென்று அவள் மகன் படுக்கை அறையிலிருத்தி, அவர்கள் புத்திரனை அவன் மனைவியோடுங்கூடித் தன்னோடு வரும்படி வரவழைத்துச்சென்று, அவன் தந்தையாகிய சூரிய சன்மாவின்றடையில்லாத படுக்கை யறையிற் செலுத்தி, தம்பீ! இந்நடுராத்திரியில் உன்றந்தையைப் போலக் கள்வர்வந்து கூப்பிடுவார்கள், நீ கதவைத்திறக்கவேண்டாமென்றான்.

இவரையீங் கிருத்தி மீண்டு புன்மைய வனைத்துங் கூடிக்
கவர்படு மனத்தன் சென்றான் கைபுடைத் துயிர்த்து நின்றான்
குவிமுலை மடந்தை மற்றோர் கொழுநனைக் கொணர்ந்து பாய
லவள்விளைத் திடுதல் கேட்பா னரிதுநின் னருகு வந்தேன்.

(இ - ள்.) இவர்களை யிப்படி யிடமாற்றியிருக்கச்செய்து திரும்பி, இழி குணங்களெல்லா மொன்று சேர்ந்து கிளைத்த மனமுடைய ஆனந்தன்போய், கைகொட்டிப்பெருமூச்செறிந்து அச்சூரிய சன்மன் முன்னின்று உன் குவிந்த தனங்களையுடைய மனைவி, பிறிதொரு கணவனை வருவித்து அவள் சயனித் திருப்பதைக்கேட்கும்பொருட்டுன்னருகே விரைந்து வந்தேனென்று சொன் னான். எ - று. (௧௦௧)

அன்னவ னுரைத்த லோடு மழலெழ வுயிர்ப்பு வீங்கி
மின்னிலை வாளொன் றேந்தி வெகுண்டுருத் தெழுந்து மீண்டான்
றன்னிலை வாயிற் கூவத் திறந்திலர் தறுகண் பெற்று
னந்நிலை மதிலொன் றேறித் தன்னக மதனுட் புக்கான்.

(இ - ள்.) அவ்வானந்தன் சொன்னவுடன் நெருப்புப்பறக்கப் பெருமூச் செறிந்து, மின்னல்போலும் பிரகாசிக்கும் ஓர்வாளாயுதத்தைக் கையிற்கொண்டு, கோபித்து ஆர்ப்பரித்துப்புறப்பட்டுத் திரும்பினான். தன் வீட்டு வாயிற்படியி லிருந்தழைக்கவும் அவர்கள் கதவைத்திறக்கவில்லை. கொடுமையுற்றிருக்குஞ் சூரிய சன்மா அங்குள்ள வொரு மதிலின் மேலேறித் தன் வீட்டினுள் பிரவேசித் தான். எ - று. (௧௦௨)

புகுந்தனன் மனையுட் புக்கான் மருகியைப் பொருந்திப் புல்லி
மகன்றுயில் கொள்வ தோரான் மறம்படு குருதி வாளாற்
பகுந்திற மருமம் போழ்ந்தா னிருவரும் பட்டார் கங்கு
லிகந்தது பரிதி வெய்யோ னெழுந்து குணபா லெய்தி.

(இ - ள்.) வீட்டுட்புகுந்த சூரிய சன்மா படுக்கையறையினுள்ளே போய். தன் மருகியைப்பொருத்தமாகத் தழுவிக்கொண்டு தன் மைந்தன் றுயில் புரிவ தை யறியாதவனாய், கொலைபுரியு முதிரம்படிந்த வாட்படையால் பிளக்குந்தன் மையோடு மார்பைப்பிளந்தாள். அவர்களிருவரு மிறந்தார்கள். இரவு நீங்கி யது. சூரியன் கீழ்த்திசையில் வந்துதித்தான். எ - று. (௧௦௩)

தரவுகொச்சகக்கலிப்பா.

வந்தாண் மனையாண் மதலை யொடுமருகி
செந்தார் குருதிச் செழுஞ்சேற் றிடைக்கிடப்ப
வந்தோ விதுகாணப் பெற்றேனீ தாரிழைத்தா
ரெந்தாய் மகனேயென் றேங்கி யெடுத்தழைத்தாள்,

(இ - ள்.) பொழுது விடிந்தபின் சூரிய சன்மன் மனைவி அங்குற்றுப்புத்திர னோடு மருகியுஞ் சிவந்த மாலைபோலோடிய செழுமையான வுதிரச்சேற்றிலிருக் கப்பார்த்து ஐயோ நானிதைக்காணப்பெற்றேனே! இப்படிச்செய்தார் யார்? எந்தையே மகனே! என்று ஏக்கமெய்தி யுரத்த சப்தத்தோடும் விளித்தாள்.

சோரிக் கொழுஞ்சேற் றிடைக்கிடக்குந் தோன்றலைத்தான்
வாரி யெடுத்து மடிகிடத்தி மைந்தனுக்கும்

பாரிக்கு மீதோ வகுத்தான் பழமறையோன்
யாரிக் கொடிதிழைத்தா ரென்று வரற்றினாள்.

(இ - ள்.) உதிரச்சேற்றிற் கிடக்கும் புத்திரனைத்தான் வாரியெடுத்துத்தன் மடியிலிருக்கவைத்து, பழய வேதங்களை யுணர்ந்த பிரமதேவன், என் புத்திரனுக்கும் அவன் மனைவிக்கும் இவ்விதியையோ அமைத்திருக்கின்றான்? யாவரோ இக்கொடுங்கொலை புரிந்தவர்? எ - று. (க0௬)

பெற்றெடுத்த தாதை யறிந்துமுயிர் பெற்றானோ
விற்றிரண்டு கூறா யிறந்தா யுனைக்கண்டு
முற்ற வுயிர்சுமந்து வாழ்ந்தே னுலகத்தோர்
மற்றெனைக்கை தீண்டி யழவழக்கு வாராதே.

(இ - ள்.) நீ யிறந்ததை உன்னைப்பெற்ற தந்தை யறிந்தும் உயிர்வைத்திருக்கின்றாரோ? இருகூறாகப் பிளக்கப்பட்டிறந்த உன்னைப்பார்த்தும், பொருந்திய உயிரைத்தாங்கி வாழ்ந்திருக்கின்றேன். இவ்வுலகிலுள்ளவர்கள் இத்தகைப்பாவியாகிய என்னைக் கைப்பற்றியழுதற்கு நியாயம் தோன்றாதே.

கல்விக் கடலே கலைஞான தீபமே
செல்வக் கொழுந்தே செழுநான் மறைப்பொருப்பே
சொல்வித் தகனேயென் றோன்றா லுனையிதுநாட்
கொல்வித்த தாரென் றுணரேன் குலமுடிந்தேன்.

(இ - ள்.) வித்தியாசாகரமே! நூற்பயனாகிய விளக்கே! ஐசுவரியத்தின் கொழுந்தாயுள்ளவனே! உயர்ந்த நான்கு வேதமலையே! புகழ்ந்து சொல்லத்தக்க ஞானவானே! என்மகனே! இன்றுன்னைக் கொலைசெய்வித்ததை யாரென்றுணர்கிலேன். என் குலத்தை யழிந்தேன் எ - று. (க0எ)

பீரியல் சேரி பெருகப் பெருந்தாமத்
தாரியன் மார்ப மிருபிளவு தந்தாரே
யாரிது செய்தன ரறியே னுனையீன்ற
சூரிய சன்மா வறிந்திலனோ தோன்றலே.

(இ - ள்.) என்மகனே! பீரிடுந் தன்மையுடைய உதிரம் பெருகும்படி பெரிய மலர்மாலைகளும் இரத்தின மாலைகளும்பூண்ட உன்மார்பை இருபிளவாய்ப் பிளந்தார்களே. யாவர் இப்படிச் செய்தனரோ? அறியேன். உன்னைப் பெற்ற தந்தையாகிய சூரியசன்மா இதனை யுணராரோ? எ - று. (க0அ)

கள்வர் வருவ துரைத்தறிந்த கள்விநா
னுள்புக் குமைப்புறத்துப் போக்கினே னோர்பாவி
தள்ளு திரையுலகங் கைசழிப்பத் தானமிழந்
தெள்ளிறையு நீங்கே னிருந்தே னுமையிழந்தும்.

(இ - ள்.) திருடர்கள் வருவார்களென்பது ஆநந்தர் சொல்லவுணர்ந்த திருடியாகிய நான், ஒப்பற்ற பாவியானபடியால், உள்ளே புகுந்துகொண்டு உங்களிருவரையும் வெளியே யனுப்பினேன். அலைகள்மோதும் கடல்சூழ்ந்த உலகிலுள்ளார், என், கையைத்தொடாது கழிக்கும்படி, இருக்குமிடம்விட்டு எட்டுணையும் நீங்காதிருக்கும் யான் உம்மைப்பிரிந்துந் தனியேயிருந்தேன்.

ஈனுந் தனித்தாய் யானிருப்ப வீங்குனக்கு
ஞானம் புரிந்தோ னிருப்பவிது நாள்வரையுந்
தானென்று நீயென்றும் வேறுபடுத் தாத்தகைமை
யானந்த னின்னு மறிந்திலனோ வையனே.

(இ - ள்.) உன்னைப்பெற்ற ஒப்பற்ற தாயாக நானிருக்கவும், இவ்வுலகில் உனக்கு ஞானோபதேசஞ்செய்த தந்தையிருக்கவும், இன்றுவரையிலும் நீயென்றும் நானென்றும் வேறுபடுத்தாத தன்மையையுடைய ஆனந்தர் இச்செய்தியை அறியவில்லையோ? ஐயனே! எ - று. (கஎ0)

என்றரற்றி யேங்கு குரல்கேட் டிரவிசன்மா
வின்றுணைவி யாமென் றிடிவீழ் மரம்போல
நின்றலறி வீழ்ந்தா னெடிதோடி யுள்புக்கென்
வன்றடக்கை வாளா லிறந்தனையோ மைந்தனே.

(இ - ள்.) என்றுகூறிப் புலம்பியேங்குங் குரலைச் சூரியசன்மாகேட்டு, இக்குரலுடையவள் தன் இனிய மனைவியாகுமென்று, இடிவிழுந்த மரம்போல, நின்று பிரலாபித்துக் கீழேவிழுந்து, மீண்டெழுந்து உள்ளே போய்ப்பார்த்து எனது வலியோடு விசாலமான கரத்திற்றாங்கிய வாளாலிறந்தனையோ? மகனே! எ - று. (கஎக)

செய்வார் செயற்கரிய செய்தே னெனவுனையான்
வைவா ளெறிந்து வதைத்தேனே யானந்த
னுய்யா வழிபார்த் துடனாடு சத்துருவாய்ப்
பொய்யாய்ப் படுத்தா னினியாவி போற்றேனே.

(இ - ள்.) விபசாரஞ் செய்வோரும் செய்தற்கரிய தொழிலைச் செய்தவனாகக்கருதி, உன்னை நான் எனது கூர்மைதங்கிய வாளைவீசிப் பிளந்தேனே! ஆநந்தனென்பவன் நான் உச்சியாத வழியைநாடி அநுகூல சத்துருவாய்ப் பொய்சொல்லிக் கொல்லுவித்தான். இனி, நான் என் பிராணனைக் காப்பாற்ற மாட்டேன். எ - று. (கஎஉ)

விள்ளா விருளிற் புலிவேட்டம் போக்கினா
னெள்ளாது செய்தே னெனதுவினை தீரேனா
னுள்ளாடு சத்துருவென் றோரேன் மருகியொடும்
பிள்ளா யுனையிழக்கப் பெற்றேனே பேறிலியேன்.

(இ - ள்.) தெளியாதவிருளிலே யென்னைப் புலிவேட்டைக் கனுப்பினான். அதனையுங் குலமுறையன் றென்றிகழாது செய்தேன். அதனானேர்ந்த வென் றீவினையை யானொழியமாட்டேன், அவனுள்வீட்டுச் சத்துருவென் றுணரேனாகி, புத்திரனே! உன்னையும் மருகியோடும் போக்கடித்துக் கொல்லப் பெற்றேன். பேறற்றவனாயினேன். எ - று. (கஎ௩)

என்னாப் பலபிதற்றி யேங்கு மிரவிசன்மா
தன்னா லறியாத் தவறிழைத்த தீராமை
யந்நா ளவையறிந்த வந்தணரு மையுற்றார்
பின்னாநின் றானந்த னாங்கொன்று பேசுவான்.

(இ - ள்.) என்றிப்படிப் பலவாறாகப் பிரலாபித்தேக்கமெய்திய சூரியசன்மாவினால் தெரியாமற்செய்த தீவினை நீங்காமையை அந்தத்தினத்திலறிந்த வேதியர்களுஞ் சந்தேகமுற்றார்கள். அவர்கள் பின்னே ஆனந்தனென்பவன் வந்துநின்று அச்சமயத்திலொன்று சொல்கின்றான். எ - று. (ககச)

கம்பங் கழுது தருமிருளிற் கைச்சிலையா
லம்பொன் றெறிந்துசன்மா கொன்றான் சினையாவை
வெம்புங் கொலைவாள் விதிர்த்தீன்ற மைந்தனையும்
வம்புண் குழலியையுங் கொன்றான் மருளுற்றான்.

(இ - ள்.) சூரியசன்மாபித்துப் பிடித்தவனாய்ப் பிசாசுகளும் நடுங்கும் நிசராத்திரியில் கருப்பங்கொண்ட பசுவொன்றைத் தன்கைவில்லில் அம்பொன்று பூட்டிக்கொன்றான். கடுங்கோபத்துடன் கூடிய கொலைத்தன்மை பொருந்திய வாளைவீசித் தான் பெற்றமகனையும் மருகியாகிய வாசனையூட்டிய கூந்தலையுடைய பெண்ணையுங் கொலைசெய்தான். எ - று. (ககரு)

என்றானவையோ ரெழுந்தா ரிவன்சினையாக்
கொன்றானோ வல்லனோ பார்த்துமெனக் கூடினார்
சென்றார் பகழி தினைப்பச் செயலொழிந்தாங்
கன்று விறந்த தறிந்தா ரருமறையோர்.

(இ - ள்.) என்று கூறினான், சபையோராகிய வந்தணர் இச்சூரியசன்மா சினைப்பசுவை வதைத்தானோ வில்லையோ? பார்ப்போமென்று ஒன்றுகூடிப் போனார்கள், அம்பு ஏறுண்டு செயல்நீங்கி யவ்விடத்தி லன்றிறந்துள்ள பசுவை யவர்கள் கண்டார்கள். எ - று. (ககசு)

மீண்டார் மறையோர் வெகுண்டிரவி சன்மனெனுந்
தீண்டாப் புலைய வருதியெனச் செப்புறலு
மாண்டா ரணத்துறையோர் முன்வந்தா னன்னவரும்
வேண்டா விழைத்தனையெம் பேரவையின் மேவலையால்.

(இ - ள்.) அவ்வேதியர்கள் திரும்பிவந்து சூரியசன்மாவென்னுந் தீண்டத்தகாத நீசனே! வாவென்று கோபித்துச்சொல்லவும், அவனும் அங்குள்ள வேதமார்க்கமுணர்ந்த மறையோருக் கெதிரில்வந்தான். அம்மறையவரும் நீ செய்யத் தகாதனவற்றைச் செய்தாயானபடியகல் இனியெங்கள் பெரிய சபையின் கண் வரவேண்டாம். எ - று. (ககஎ)

ஆவி னுயிரொறுத்தாய் மைந்தனையு மன்னவன்றன்
பூவியலுங் கூந்தலையுங் கொன்றாய் புலைபூண்டாய்
மூவழியா யுள்ள பழிபொறுத்தாய் முன்னின்றாய்,
பாவி யுனைநோக்கி லுண்டாம் படுநிரயம்.

(இ - ள்.) பசுவினுயிரைக் கொன்றாய். மகனையும் அவனுடைய மலரணிந்த அளகத்தையுடைய மனைவியையுங் கொன்றாய். இதனால் நீசத்துவமடைந்தாய். கோஹத்தி சிசுஹத்தி ஸ்திரிஹத்தியாகிய மூவகைப்பட்ட பாவங்களையும் பொருந்தினாய், எங்கள்முன்னே நிற்கின்றாய். பாவியாகிய வுன்னைப் பார்த்தாலும் அத்தோஷங்களா லெங்களுக்குங் கடுநரகமுண்டாகும். எ - று. ()

என்றெடுத்துக் கூறி யெமதுநக ருற்றனையேற்
கொன்றிடுது மென்று ரவரையெதிர் கைகூப்பி
யன்றளவை யானந்தன் செய்தபரி சத்தனையு
மொன்றுவழா தோதினு னோர்ந்தறியா தையுற்றார்.

(இ - ள்.) என்றெடுத்துச்சொல்லி யெங்கணகரத்திற்கு வருவாயாகின், கொன்று விடுவோமென்றார்கள். அவர்களைச் சூரியசன்மா நேரில் கைகுவித்து, அன்று வரையிலானந்தன் செய்த வஞ்சனைகளெல்லாவற்றையும் ஒன்று விடாமற் சொன்னான். அச்சபையினர் ஆலோசித்துணராதவர்களாய் மயங்கினார்கள்.

சூதால் விளைந்த பரிசென்று சொற்றனை நீ
கேதார நாதன் திருமுற்றங் கிட்டினையிப்
போதா ரிடபத்தைப் புல்லருந்த நல்கினையே
னீதா னிழைத்தனவன் றென்று நிகழ்த்தினார்.

(இ - ள்.) இது வஞ்சகத்தானிகழ்ந்த தன்மையென்று நீ சொல்லினை. ஆதலால் நீ நமது கேதாரேசுவரர் திருக்கோயிலை யடைந்து இப்போதே அங்கு நிறைந்துள்ள சிலை யிடபங்களைப்புல்லுண்ணக்கொடுப்பாயாகில் இப்பாதகங்கள் நீயே புரிந்தன வல்லவென்றுரைத்தார்கள். எ - று. (௧௨0)

எந்தை பெருமான் திருமுனிட பத்தேறு
சிந்தை திருவருளிற் சீரியதா னன்மதினுந்
தந்த விடபந் தருகோ புரத்திடபம்
வந்தருந்தச் செய்வேனீர் காண்பான் வரிலென்றான்.

(இ - ள்.) நீங்கள் காணும்படி வருவீர்களாயின், எமதுதந்தையாகிய கேதாரேசுவரருடைய சந்நிதானத்தின் முன்னுள்ள அதிகார நந்தி, அவ்விறைவன் திருவுள்ளத்திற்கியைந்த திருவருள் பெற்றுச் சிறப்புற்றதாகையால், நான்கு மதில்களிலுமுள்ள விடபங்களுந் திருக்கோபுரத்திலுள்ள விடபங்களும் அந் நந்திதேவர் பால் வந்து புல்லருந்தச்செய்வேனென்றான். எ - று. (௧௨௧)

ஆயது செய்து மெனநான் கருமறையோர்
தூய திருமனத்துச் சூரியசன் மாவொடும்போ
யேய பெருமான் திருமுற்ற மெய்தினார்
போயொருதன் சீடனையும் புற்கொணர்தி யென்றுரைத்தான்.

(இ - ள்.) அப்படியே செய்வோமென்று அரிய நான்கு வேதங்களுமுணர்ந்த அந்தணர்கள், புனிதமான அழகிய மனதையுடைய சூரிய சன்மாவுடன் சென்று தங்களுக்குரிய சிவபெருமான் திருக்கோயிலையடைந்தார்கள். சூரிய சன்மா தன் சீடனொருவனை நோக்கிப்பசிய புல்லை யறுத்துக்கொண்டு வருக வென்க்கட்டளை யிட்டான். எ - று. (௧௨௨)

ஈட்டு மதிட்கோடி யெய்திடபத் தேறுகா
ணீட்டுநெடுங் கோபுரத்து நின்றொழிந்த சேவினங்கா
ளாட்டுதிரைக் கங்கை யணிந்தபிரா னஞ்செழுத்து
மாட்டு திருவருளுண் டென்றால் வருதிரென்றான்.

(இ - ள்.) தொகுத்துள்ள மதில்களின் இறுதி வரையிலுள்ள இடப வேறுகளே! நீளமாயிருக்கும் நெடிய கோபுரத்திலிருந்துள்ள விடபங்களே! அசை

கின்ற அலைகளையுடைய கங்காநதியை யணிந்த சிவபெருமானது பஞ்சாக்கரத்தில் திருவருளுளதாயின் வாருங்களென்றான். எ - று. (கஉரு)

பொய்யிலிருங் கேள்விப் புலமையோன் சொற்றவுடன்
றைய லொருபாகன் சந்நிதியி னேற்றருகு
வெய்ய முழக்கெழுப்பி மேவந்து வேதியன்கைச்
செய்யபசும் புற்கொழுந்து நாவளைத்துத் தின்றனவால்.

(இ - ள்.) பொய்மையில்லாத சிறந்த நூற்கேள்வியாற் புலமை வாய்ந்த சூரிய சன்மா அப்படிச்சொல்லியவுடன், உமாதேவிபாகராகிய கேதாரேசுவரர் சந்நிதியிலுள்ள அதிகார நந்தியினருகே, கரேமாகிய முழக்கத்தைச்செய்து கொண்டெல்லா விடபங்களும் வந்து, அச்சூரிய சன்மாவின் கையிலிருந்த செவ்விய பசும்புற்கொழுந்துகளைத்தமது நாக்களை வளைத்துக்கறித்துத்தின்றன.

கண்டார் மறையோர் களித்தா ரதிசயமுட்
கொண்டார் வெருவந்தார் கும்பிட்டார் கோமானைத்
தண்டா மரைச்சரணந் தாழ்ந்தாராய் நீயன்றோ
பண்டா லிலைகிடந்தோற் கெட்டாப் பரனென்றார்.

(இ - ள்.) வேதியர்கள் பார்த்தார்கள். மனமகிழ்ச்சியுற்று அதிசயித்துப் பயந்து, சூரிய சன்மாவைக் கும்பிட்டு அவனது தாமரை மலர் போன்ற பாதங்களிற் பணிந்தவர்களாய், நீ யல்லவா பண்டைக்காலத்திலாலிலையிற்சயனித்த திருமாலிற்கும் எட்டப்படாத மகாதேவனென்று தோத்திரஞ்செய்தார்கள்.

யாங்க ளிழைத்தபிழை யெல்லா மிதழவிழ்ந்த
பூங்கமலத் தாரோய் பொறுப்பாய் நினதிடத்தி
ஞேங்கறமே யன்றி மறமிருக்க வொண்ணுமோ
வீங்கு பவப்பரவை கீழ்போக மேனின்றாய்.

(இ - ள்.) நாங்களிதுகாறு மியற்றிய குற்றங்களெல்லாவற்றையும், இதழ்கள் விகசித்த தாமரை மலர்மாலை யணிந்தவனே! மனம் பொறுக்கவேண்டும். உன்னிடத்தில் மிகுந்த புண்ணியமேயன்றிப் பாவ மிருக்கக்கூடுமோ? பெரிய பவக்கடல் கீழேயிருக்க அதன் மேலிருக்கின்றாய். எ - று. (கஉசு)

இன்ன பலபன்னி யேத்தி யிரவிசன்மா
பொன்னடியை மீண்டும் பணிந்து புலமையோய்
சின்னெறிய வஞ்செழுத்தி னுண்மை தெளிவிப்பா
னின்னலதி யாருளரே யென்று நிகழ்த்தினார்.

(இ - ள்.) இப்படிப்பட்ட பல வார்த்தைகள் சொல்லித் துதிசெய்து அச்சூரியசன்மாவின் அழகிய பாதங்களை மீண்டும் வணங்கிப் புலமைவாய்ந்தவனே! ஞான நெறியையுடைய பஞ்சாக்கரத்தின் உண்மைத்தன்மையை யும்மைத் தவிர வெங்கட்குத்தெரிவிப்போர் வேறெவர்தாமுளர் என்று சொன்னார்கள்.

அருளிற் கதிபுரக்கு மஞ்செழுத்து நாலு
வருணத் தவர்க்கும் வகுத்தபரி சோதித்
தெருளத் தெருட்டித் தெளிவிப்பாய் நீயென்னத்
துரிசற்ற சிந்தையோன் சூரியசன் மாவுரைப்பான்.

(இ - ள்.) திருவருளினாலே நற்கதியைத்தரும் பஞ்சாக்கரத்தை, (பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு) வருணத்தாருக்கு மேற்படுத்திய தன்மையை யுபதேசித்துத்தெளிவாகும்படி யுணர்த்தி யெங்கள் மயக்கத்தைத் தெளிவிக்கவேண்டுமென வேண்ட, குற்றமற்ற மனதையுடைய சூரியசன்மா சொல்லத்தொடங்கினான். எ - று. (கஉஅ)

பேரா மறையோர் பிரணவத்தோ டுச்சரிக்க
பாரா ளரசரது வொழிக பல்சனங்க
ளோராச் சிகார முதன்மகர மீறாக
வாராய்ந் துருவேற்றி யுய்ந்தொழிக வென்றறைந்தான்.

(இ - ள்.) பெருமை மிகுந்த அந்தணர்கள் பிரணவத்தோடுச்சரிக்கவேண்டும், உலகத்தையாளு மரசர்கள் அப்பிரணவ நீக்கிச்செபிக்க வேண்டும். ஒழிந்த ஏனையர் இதனை யுணர்ந்து சிகார முதலாகவும் மகார மிறுதியாகவும் ஆராய்ச்சியோடு செபித்துச்சீவிக்க வேண்டுமென்று சொன்னான். எ - று. ()

அக்காலை யாங்கனையான் பன்னி யருகடைந்தா
டக்கோ ருடன்சூழ்ந் தவனடியிற் றாழ்ந்தனளான்
மிக்கார் பகழிதொட வீழ்ந்த பசுவுமுயி
ருக்காரு முய்வா றுரைத்தி யெனவிரந்தாள்.

(இ - ள்.) அக்காலத்திலவ்விடத்தில் அச்சூரிய சன்மன் மனைவி யருகே வந்து, பெரியோர்களோடு சேர்த்துச் சூரியசன்மனைப் பிரதக்கணஞ்செய்து பாதங்களில் வணங்கி, மேம்பட்டவரே! (உம்மாலம்புவிட) இறந்த பசுவும் (வாளால் வெட்டுண்டு) இறந்தவர்களும் பிழைக்கும்படிச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தாள். எ - று. (கஙO)

தெய்வத் திருவஞ்செழுத்தொடுதன் சிந்தைவைத்தான்
மைவைத்த கண்ட னிரங்கி வரங்கொடுத்தான்
வைவைத்த வாளி செகுத்தபசு மைந்தனொடு
முய்வித்தான் மாமருகி யாங்க னுடனெழுந்தார்.

(இ - ள்.) அதுகேட்ட சூரியசன்மா தெய்வீகம்பொருந்திய பஞ்சாக்கரத்தைத் தன் மனதிற்றியானித்தான். கருநிறங்கொண்ட கண்டத்தையுடைய சிவபெருமான் றிருவுளங் கனிந்துவர முதவினர். உடனே கூர்மைவாய்ந்த அம்பினாற்கொன்ற பசுவையும் (வாளால்வெட்டிய) மகனோடு சிறந்த மருகியையும் பிழைக்கச்செய்தான். அவ்விடத்திலுடனே யுயிர்பெற்றிருந்தார்கள் எ-று.

எல்லோரு நோக்கி யதிசயங்கொண் டேத்தினார்
நல்லோனைச் சூழ்ந்து நடுநடுங்கி யஞ்செழுத்து
வல்லோனை நோக்கி வலஞ்சூழ்ந்து போந்தகன்று
புல்லே றனைத்து மிருந்தவுழைப் போயினவால்.

இ - ள்.) யாவருமிதைப்பார்த்து ஆச்சரியமெய்திச் சூரியசன்மாவைப் பிரதக்கணஞ்செய்து பயத்தோடு துதித்து அப்போது பஞ்சாக்கரஞ் செபிப்பதில் வல்லவனாகிய அவனைப்பார்த்து அங்கே கூடியிருந்த விடபங்களெல்லாம் வலஞ்செய்து தத்தமிருந்த விடங்களிற்போயின எ - று. (கஙஉ)

சொல்லா மறைதெளித்த சூரியசன் மாவருள
வெல்லாருந் தங்கண் மனையகத்தி னெய்தினார்

பொல்லாத தீங்கிழைத்த வானந்தன் பொங்கருவிக்
கல்லா நெடுவரையுங் கானகமுஞ் சென்றொளித்தான்.

(இ - ள்.) சொல்லமுடியாத மறைபொருளாகிய பஞ்சாக்கரத்தை யுணர்த்திய சூரியசன்மா விடைகொடுக்க யாவருந் தத்தம் மனைக்குச் சென்றார்கள் கொடும் பாதகங்களைச்செய்த ஆனந்தன் அருவிகள் பெருக்கெடுக்குங் கற்களாலாகிய பெரிய மலைகளிலுங் காடுகளிலும்போய் மறைந்து வசித்தான். எ - று.

தன்னுருவ மெல்லாம் பிணிக்களித்துத் தன்னுடலைச்
செந்நிறநீர் பாயப் புழுக்கிளைப்பத் தீதுற்றான்
மன்னுயிரு மாண்டான் மறலி வதைத்திழுப்ப
வின்னு நிரயத் திழிந்தா னெழுந்திலனால்.

(இ - ள்.) அவ்வானந்தனென்பவன் உடல்முழுவதும் நோய்க்குக் கொடுத்துத் தன்னுடலிலுள்ள வுதிரமுழுவதும் இரணங்களின் வழிமேலொழுகவும் இரணங்களில் புழுக்கள் நெளியவுங் கெடுதியடைந் துயிருமிழந்தான். இயமன் றண்டஞ்செய்து இழுத்துப்போக நரகத்திலழுந்தியவன் இன்னும் மீளவில்லை. எ - று. (கஙச)

சூரிய சன்மா சுருதியுரைக் கெட்டாத
சீரிய வஞ்செழுத்தின் சின்மயனாய்ச் சேயநாட்
பாரி னினிதுவந்து வைகல் பலகழித்தா
ளுரி யொருபாகன் றிருக்கைலை நண்ணினான்.

(இ - ள்.) சூரியசன்மா வேதவாக்கியங்கட் கெட்டாத சிறப்பமைந்த பஞ்சாக்கரத்தாலாகிய ஞானமயனாகி யநேகநாள் உலகத்திலினிதாக வாழ்ந்து பல காலங்கழித்து மாதேவியாரை யொருபாகத்திலுடைய சிவபெருமானது கைலாயகிரியை யடைந்தனன். எ - று. (கஙரு)

நண்ணுங் கைலைக் கிரியினெடு நாள்கழித்துக்
கண்ணுத லெம்மா னுருவிற் கரந்தொழிந்தா
னண்ண லருந்தவத்தீ ரென்னாவவ் வஞ்செழுத்தி
னுண்மை தெரிப்பி னுணர்த்தற் கெளிதன்றே.

(இ - ள்.) தானடைந்த கைலாயகிரியி லநேககாலம் நீங்கியபிறகு, நெற்றிக் கண்ணையுடைய வெமது சிவபெருமானுடைய வடிவத்தி லயிக்கியமாயினான். சிறந்த பெருந்தவமுடைய முனிவர்களே! அப்பஞ்சாக்கரத்தின் மகிமையை அடியேனால் சொல்லப்புகுந்தாற் சொல்லுவதற் கெளிதல்லவே. எ - று. (கஙசு)

அஞ்சு திருவுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை
நெஞ்சி னினைவா ரிதழியொடு நீணிலாப்
பிஞ்சு புனையும் பெருமானே யென்பதல்லால்
வஞ்சமறுத் தீரவரை யென்னென்று வாழ்த்துகேன்.

(இ - ள்.) ஐந்து திருவுருவங்களைப் பெற்றோங்கிய அப்பஞ்சாக்கரத்தை மனதிற்றியானிப்பவர்கள் கொன்றைமாலையோடு நீண்ட பிறைச்சந்திரனையுந் தரித்த சிவபெருமானேயென்று சொல்லுவதல்லாமல் அத்தகையினரை யாதென்று துதிப்பேன். களங்கமற்றவர்களே! எ - று. (கஙஎ)

ஆதி யருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை
யோதி யுணர்ந்தாரை யுள்ளத் துணர்ந்தாலுந்
தீது பிறப்பறுப்பா ரன்னவர்க்குத் தீங்கிழைப்பார்
போது நரகினுக்கு மண்ணுத்தல போகாதே.

(இ - ள்.) சிவபெருமானது திருவருளே வடிவமாகக் கொண்டோங்கிய பஞ்சாக்கரத்தைத் தியானஞ்செய்து தெரிந்தவர்களை மனதினினைத்தாலும்வா கள் கொடிய பிறவியையொழிக்கும். அத்தகையினருக்குத் தீமை செய்டவர்கள் போகும் நரகங்களுக்கு வாய்திறந்த நீங்காது (என்று சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குக் கூறியருளினர்) எ - று. (கரு௮)

பஞ்சாக்கரமான்மியசருக்க முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூகக.

எட்டாவது

சிவநாம மான்மியசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேதத் தொழுக்க முழுதுணர்ந்த விரிபுன் சடையீர் விமலனம
தாதிப் பெருமான் றிருவெழுத்தி னுண்மை யறிந்த முறையறைந்தே
நாதத் தொளிருந் திருவுருவ நாம முளதென் றுரைத்தனமெம்
பேதைச் செருக்கி னறிந்தவற்றைச் சொல்வாங் கேட்டுப்பெரிதுவப்பீர்.

(இ - ள்.) வைதிகமுறைமை முற்றுமறிந்த புரிந்த சிறு சடையையுடைய முனிவர்களே! மலரகிதரும் முதற்கடவுளுமாகிய நமது சிவபெருமானது பஞ்சாக்கரமகிமையைத் தெரிந்தவகையே சொன்னோம். நாதத்துவத்திற் பிரகாசிக்கும் அச்சிவபெருமானது திருமேனிக்குரிய திருநாமங்களுண்டென்று சொன்னோம். அவற்றுள், எமது பேதமையால்விளைந்த செருக்கினால் நாமுணர்ந்தவற்றைச் சொல்லுவோம். அவற்றையுங்கேட்டுச் சந்தோஷிப்பீர்களாக வென்றனர் சூதமுனிவர் எ - று. (க)

புரங்கண் மூன்று மடுவடவைக் கொடுந்தீமாட்டும் புன்னகையோன்
சிரங்க ளோரைந் துடையபிரான் றிருநா மத்தி னொருநாம
மிரங்கி யொருகா லுரைத்தாலு மிவனே யவனென் றெணலன்றி
யரங்கி மனஞ்சூ ழஞ்ஞானத் திகழ்வா ரளறு புகுவாரே.

(இ - ள்.) திரிபுரங்களையும் எரிக்கத்தக்க கொடிய அக்கினியையூட்டும் புன்னகையுடையவரும், ஐம்முகங்களுடையவருமாகிய சிவபெருமானது திருநாமங்களில் ஒரு திருநாமத்தை மனமுருகி ஒருமுறைசொன்னாலும், இவனே அச்சிவபெருமானென்று எண்ணவேண்டியதன்றி, தங்கள் மனதிற்படிந்த அஞ்ஞானத்திலமிழ்ந்து இகழ்கின்றவர்கள் நரகச்சேற்றிலமிழ்வார்கள் எ - று.

எந்தை பெருமான் றிருநாமம் பிறந்த நாட்டொட் டிறப்பளவுஞ்
சிந்தை யொருபோ துணராராய்த் தீது புரிந்தோர் செல்லுநா
ளைந்து புலனு மயர்ந்தபின ரறிந்து மறியா மையினுலும்
வந்த நாமங் கைலைகொடு புகுத்தப் புகுந்த வழிமொழிவாம்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானது திருநாமத்தை, பூமியிற் பிறந்த நாள்தொடங்கி இறக்குமெல்லையும், தங்கள் மனதில் ஒருகாலத்தும் எண்ணாதவர்களாய்த் தீமையையே செய்தவர்கள், உறங்குகையில் ஐம்புலன்களும் ஓய்ந்தபின்னர், தெரிந்தாவது தெரியாமலாவது தங்கள் வாயில்வந்த சிவநாமமானது, அவர்களைக் கைலாயகிரியிற் கொண்டுபோய்ச் செலுத்தவந்த வகையினைச் சொல்லுவோம் எ - று. (௩)

திரைநீர் வேலை யகழுடுத்த கொடிக்கோட் புரிசை செலக்கிடந்த,
வரைநீண் மாட மறுகுதொறு மழைகீண் டுயர வருகலிங்கப், புரைதீர்
திருநாட் டகவைபறம் புரிகந் துகமென் றொருநகரத், துரைநான்
மறையோர் குலந்தோன்றும் வியாழ னென்போ னொருமறையோன்.

(இ - ள்.) அலையோடுகூடிய நீர்மயமான கடல்போன்ற அகழிசூழ்ந்ததும், கொடிகள்கட்டிய மதில்கள் சுற்றியிருப்பதும் மலைபோலுயர்ந்த நெடியமாடங்கள் தெருக்கடோறும் மேகமண்டலத்தைக் கிழித்து உயர்ந்தோங்கியிருப்பதுமாகிய கலிங்கமென்னுங் குற்றமற்ற அழகிய நாட்டிலே, தருமநிகழுங் கந்துகமெனும் நகரத்தில், புகழ்ந்து சொல்லத்தக்க அந்தணர் குலத்துதித்த வியாழனென்னும் வேதியனொருவனிருந்தான் எ - று. (௪)

புதல்வ ரிலனாய் நெடுங்காலம் புரிந்த தவத்தின் பொருட்டாலோர்
மதலை பயந்தான் வீரியனென் றவற்கு நாம மதலையவன்
சிதையு மனத்தான் வரம்பிகந்து புலவு மதுவுந் தின்றருந்து
மதுமற் றொழியான் கள்விலைகூய் மறுகு தோறு மலமருமால்.

(இ - ள்,) புத்திரப்பேறில்லாதவனாய், வெகுகாலஞ்செய்த தவத்தின் காரணமாக ஒரு புதல்வனைப்பெற்றான். அப்புத்திரனுக்கு வீரியனென்று பெயர். அம்மைந்தன் துன்மனமெய்தியனாய், எல்லைகடந்து புலாலுண்பதுங் கட் குடித்தலுமாகிய இவற்றை நீங்காதவனாய், கள்ளைவிலை கூறிவிற்றுக் கொண்டு தெருக்கடோறுஞ் சுழன்று திரிவான் எ - று. (௫)

அறுத்த புலவு வகைந்தரிந்து கூலத்த மைத்து விலைபகரு
நிறுத்த பொருள்வேட் டவாவினனாய்ப் பிறந்த வரம்பி னெறிநீத்தான்
கறுத்த மனத்தின் புலைத்தொழிலே யன்றிக் கருதான் பரப்பிரமத் [ம்.
திறுத்த பொருளோர்ந் துள்ளோரை யிகழா தொழியா னெஞ்ஞான்று

(இ - ள்,) அறுத்த இறைச்சியைப் பிளந்து துண்டுகளாக அரிந்து கடைத் தெருவில் வைத்துக்கொண்டு விற்பான். அப்புலாலை (எடையுடன்) நிறுத்த பொருளை இச்சித்தவனாய், தான்பிறந்த குலத்தின் ஒழுக்கத்தைக் கைவிட்டான். கரேமான மனதில் புலைத்தொழிலேயன்றிப் பிறிதொன்றை நினையான். பரப்பிரமப் பொருளைத் தெரிந்தவர்களை எப்போதும் நிந்தியாமலிரான்.

இவ்வா றொழுகும் புல்லொழுக்கி னொழுகிச் சிலநா ளொழிந்தபின்னர்
வெவ்வா றிழைத்த வினைபெருக்கி வீந்து படுநாண் மெய்தீண்டி

யவ்வா ஞெருகு மதலையவ னருகு சார்ந்தா னினதுபொரு
ளெவ்வா றுணரேன் கொடுத்தபரி சேற்ற பரிசே தியம்பென்றான்.

(இ-ள்.) இப்படி நடக்குந் தீயொழுக்கிலே நடந்து சிலநாள் கழிந்த பிறகு, துன்மார்க்கத்தாற் செய்த பாவச்செயல்களைப் பெருக்கி இறந்து போகும்நாளிலே, அப்படி நடந்த புதல்வனருகே வியாழனென்பவன் சென்று, உன்பொருள்கள் எப்படியானதோ? உணரேன். நீ கொடுத்த தன்மையும் வாங்கினதன்மையும் சொல்லுகவென்று வினவினான் எ-று. (எ)

செல்லக் கிடக்கும் புலைச்சேரித் தலைவ ரிருவ ரிவர்களிலோ
ரல்லற் புலையன் புலவுவிலை தரவேண் டுவதுண் டரைப்பணமற் [னவ்
ஞெல்லைக் கொடுத்த மதுச்சிவமென் றுரைத்தானுயிர்விட் டொழிந்தன
வெல்லைக் கடைபார்த் திருந்தநமன் பாசங் கழுத்திட் டிழுத்தனனால்.

(இ-ள்.) தூரமாகவிருக்கும் புலைச்சேரிக்குத் தலைவர்களிருவருளர். அவரில், கொடியோனாகிய ஒருபுலையன் புலால்வாங்கியதில் பாக்கி அரைப்பணங் கொடுக்கவேண்டியுள்ளது. பிறனொருவனுக்கும் பல நாட்களின் முன்னே கொடுத்தகள் ஒரு குறுணியென்று கூறி உயிர்விட்டிறந்தான். அக்காலத்தினளவைப் பார்த்துக்கொண்டிருந்த நமன், அவன்கழுத்திற் பாசத்தைமாட்டியிழுத்துப்போனான் எ-று. (அ)

தென்பா னமறலி செலக்கொடுபோய்ச் செக்கிற் றிருக்கித் திருக்கியவ
னென்பா னவையொன் றறியாம லரைக்குங் காலை யிறந்தொழிநா
ளன்பாஞ் சிவமென் றுரைத்ததனைக் கயிலைக் கணத்தோ ரறிந்துறுத்து
முன்பா மறலி யொடும்பொருது முடித்தார் மறலி முரட்சேனை.

(இ-ள்.) இயமன் தென்றிசையிலுள்ள தனது நகரத்திற்கு அழைத்துச் சென்று, செக்கிலிட்டு அவனைத் திருப்பித்திருப்பி, அவனுடலிலுள்ள எலும்புகள் ஒன்றாயினுந் தெரியாதவகையாக வரைக்கும்பொழுது, அவன் இறக்குங் காலத்தில் அடியார்க்கு அன்புவடிவாகிய சிவமென்று (குறுணியின் பெயரைக்) கூறியதைக் கைலாயத்திலுள்ள சிவகணர்களுணர்ந்து, நமனுக்கு எதிரேவந்து கோபித்தெதிர்த்து அவ்வியமனது வலிய சேனைகளையெல்லாம் போர்செய்தழித்தார்கள். எ-று. (கூ)

நிரையத் தலைவன் பெருஞ்சேனை யிறந்து நீங்க நெடுமறலி
வரையொத் திவரும் புயத்தடத்தைப் பாசத் திறுக்கி வலித்திழுத்தா
ருரையிற் சிவமென் றுரைத்தானைத் தெய்வ மானத் தும்பருய்த்து
விரையக் கொடுபோய்த் திருக்கயிலைப் புனிதன் றிருமுன் விடுத்தனரால்.

(இ-ள்.) நரகாதிபனாகிய இயமனது பெருஞ்சேனை யிறந்தொழிய, அவ்வியமனது மலைபோல்வளர்ந்து பூரித்த தோள்களைப் பாசத்தால் வீக்கியிழுத்தார்கள். பேசுகையில், சிவமென்று சொல்லிய அவ்வொழுக்கீனனாகிய வேதியனைத் தெய்வ விமானத்திலே ஆகாசவீதியிற் செலுத்தி, அதிவேகமாய்க் கொண்டு சென்று திருக்கைலாயத்திலெழுந்தருளிய தலைவராகிய சிவபெருமான் சந்நிதியில் விடுத்தார்கள். எ-று. (௧௦)

விடுத்த மறையோன் முதற்புரிந்த வெம்மை நீங்கி யும்பாகத்
தெடுத்த பெருமான் றிருவுருவ மெடுத்துச் சிறந்தான் றொடர்பாசந்

தொடுத்த நமனைக் கொடுமுழையின் றூரவுட் புகுத்தா ரதுகேளாப்
படுத்த நிரயத் தென்றிசைக்கோன் வடபாற் கைலை படர்ந்துற்றான்.

(இ - ள்.) சிவபெருமான் முன்னர் விடப்பட்ட வீரியன், முதலிலேசெய்த பாவங்களை விலகி, உமாதேவியாரை வாம பாகத்திற் பொருத்திய சிவபெருமானது திருவடிவமைந்து சிறப்புற்றான். பாசக்கயிற்றாற் கட்டிய நமனைக் கொண்டு சென்று கைலையின் குகையிலுள்ள ஒரு தூரவிற்றள்ளினார்கள். அதனைக்கேள்வியுற்றவனும் அவனை நரகத்திலிட்டவனுமாகிய இயமன் வடதிசையிலுள்ள கைலாயத்திற்கு வந்து சேர்ந்தான், எ - று. (கக)

எங்கோ னந்தி யெம்பெருமான் றிருத்தா ளிறைஞ்சு மியமனொரு
செங்கோ லளித்தா யதுவன்றித் தீமை புரியே னொருசிறியே
னங்கோர் மறைநன் குலமிகந்து புலவு மதுவு மயின்றருந்தி
வெங்கோ லரசன் றிருப்போலத் தருமங் கழிய மீதூர்ந்தான்.

(இ - ள்.) எமது தலைவராகிய நந்தி பகவானது திருவடிகளை வணங்கும் இயமன், அடியேனுக்கொரு செங்கோலளித்தீர். அதின்படியன்றி அடியேன் ஒரு தீமையுஞ் செய்திலேன். ஆங்குள்ள ஒரு வேதியன் நல்ல குலாசாரமிழந்து புலாலுங்கள்ளுந் தின்று குடித்து, கொடுங்கோன் மன்னனுடைய ஐசுவரியம் போலப் புண்ணியங்குறையப்பாவத்தில் அதிகப்பட்டவனாயினான். எ-று. (கஉ)

அவனைக் கொணர்ந்தார் கொணர்வழிச்சென் றயில்வா ளெயிற்றுக் கணநாதர், சிவனைப் பணிந்தோ னிவனெனவென் சேனை முடியச் செகுத்திறுத்திப், பவனத் தொருசார் நெடுமானப் பாங்க ரேற்றி யிவனுய்த்தா, ரெவணுற் றடைத்தா ரறியேனென் பணிமேற் கொண்டிழைத்தானை.

(இ - ள்.) அப்பாவியை என்னேவலாளர்கள் பிடித்து வந்தார்கள். அப்படிப்பிடித்து வருகையில், கூரிய ஒளிதங்கிய பற்களையுடைய சிவகணத்தலைவர்கள் இவன் சிவபெருமானை வணங்கியவனென்று என் சேனை முழுவதையும் அழித்தொழித்து, ஆகாயவீதியில் ஒரு பக்கமாகப்பெரிய விமானத்திலேற்றிக்கொண்டு இங்குக்கொணர்ந்தார்கள். என் கட்டளை பெற்று இப்படிக்கொண்டு வந்த நமனை எங்கே சிறையிட்டார்களோ? தெரிகலேன். எ - று. (கங)

இதுகேட் டுனது திருவடிக்கீ ழெய்தி யடைந்தே னெம்பெருமா
னதுகேட் டின்ன பரிசெனவோர்ந் தருள்வா யெனலு மருணந்தி
மதுவாய்ப் புலையன் மறைக்குலத்து வரம்பு நீத்த வீரியவா
னதுதீர்த் தொழிவா னல்வினையொன் றிருந்த திறந்த முற்பிறப்பின்.

(இ - ள்.) எம்பெருமானே! இச்செய்தியைக்கேட்டுத்தேவரீர் பாதங்களின் கீழ்வந்து சேர்ந்தேன். சிவகணங்களை விளித்து அதனைக்கேட்டுணர்ந்து இன்னதன்மையதென்று அடியேனுக்குத்திருவாய் மலர்ந்தருளவேண்டுமெனப்பிரார்த்திக்கவும், கிருபாமூர்த்தியாகிய நந்திதேவர் சொல்லுகின்றார். கட்குடித்துப் புலாலுண்ட வாயையுடைய, அந்தணர் குலாசாரங்கெட்ட வீரியனென்பவன், இத்தீவினைகள் நீங்கற்கேதுவாய் முற்பிறப்பிற் செய்த புண்ணியமொன்றுள்ளது. எ - று. (கச)

ஆத லானு மயிரிறக்கு மற்றை நாளி லரனும
மோத லானும் பெறற்கரிய கதியி னுயர்ந்தா னுடம்பெடுத்தா

தீதி லாமை செய்திலராய்ச் செனன வலையிற் றியங்குறினுஞ்
சாத லான காலைசிவ நினைந்தார் கதியின் றலைநின்றார்.

(இ - ள்.) ஆதலினாலும், இப்பிறப்பில் உயிர் துரக்கும் அற்றைய தினம் சிவநாமத்தைக்கூறிய தினாலும் பெறுதற்கரிதாகிய கதியிற்சிறந்துவிளங்கினான். மனித சரீரம் பெற்றவர்கள் தீவினையையன்றி வேறு செய்யாதவர்களாய்ச் சனனமாகிய வலையிற்சிக்குண்டிருந்தாலும், மரண மெய்துங்காலத்தில் சிவ பெருமானைத்தியானஞ்செய்பவர்கள் மேலான பதவியில் விளங்குவார்கள்.

அப்பே ருரைக்கி லரும்பதவி யவர்க்கல் லாம லெவர்க்குண்டோ
வெப்போ டெரியுந் தீநிரயத் திழிவா ரிவர்க்கு வினைசெய்வா
ரிப்போ துனது கொடுங்கோன்மைக் கரன்பே ருரைத்தா ரெளியரோ
மைப்போ லுளத்தாய் முன்னொருநா ணிகழ்ந்த காதை மறந்தனையே.

(இ - ள்.) அந்தச்சிவநாமத்தை யுச்சரித்தால், அவர்களுக்கே அரிய பதவி யுண்டாவதல்லாமல் எம்மவர்க்குண்டாகுமோ? இத்தகையோருக்குத்துன்பி யற்றினவர்கள்வெப்பத்தோடெரியும் அக்கினிமயமான நரகத்திலமிழ்வார்கள். இப்போது உன்னுடைய கொடுங்கோன்மைக்குச் சிவநாமங்கூறினோர் எளிய ராவார்களோ? மேகம் போற்கரிய மனமுடையவனே! முன்னொரு காலத்தில் நடந்த சரித்திரத்தை மறந்து விட்டாயோ? எ - று. (கசு)

கழிந்த காலத் தொருவேடன் வைவாள் விதிர்க்குங் கரத்தினனா
யழிந்த சிந்தை மறச்செருக்கால் வழிச்செல் வோரை யாறலைத்துஞ்
சுழிந்த சீற்றத் துடனுயிரைத் துறந்தீர்ந் திட்டும் புலமயக்கி
னிழிந்த மதுவுண் டூர்ம்புலவு தின்றும் பிறர்பா லிடர்விளைத்தும்.

(இ - ள்.) கடந்த பண்டைக்காலத்தில், ஒரு வேடன் கூர்மைதங்கிய வாளை வீசுங்கையையுடையவனாய், எண்ணமற்ற கொடிய கர்வத்தினால், வழிச் செல்பவர்களை வழி பறித்தும், மிகுந்த கோபத்தோடு உயிர்களைப்போக்கிக் கொன்றும், புத்தி மயக்கத்தால் இழிவாகிய கட்குடித்தும், பச்சையாகிய புலாலைத்தின்றும், அயலார்க்குத்தீமை செய்தும். எ - று. (கஎ)

இரக்க மென்ப தொருசிறிது மில்லா னாகித் தறுகண்மை
கரக்கு மனத்திற் பிறர்பொருளைக் கவ்விக் கவர்ந்துங் கடும்பாவம்
புரக்கும் புலைய ரிற்பழகிக் கண்மோந் துண்டும் புரியறத்தைத்
துரக்குந் தொழிலுக் குளனாகிக் களவா னிரவுந் துயில்கொள்ளான்

(இ - ள்.) இரக்கமென்பது ஒருசிறிதும் இல்லாதவனாய், அஞ்சாமையால் வஞ்சகஞ்செய்யும் மனத்தோடு பிறர் பொருளை விடாது அபகரித்தும், பெரிய பாதகங்களைக் காக்கும் புலையர்களோடு சிநேகித்து, கள்ளை வாசனை பார்த்துக் குடித்தும், பலர் செய்யுந்தருமத்தையழிக்குந் தொழிலுக்கே உரியவனாய்த்திருடு தலால் இரவிலுந்துயில் செய்யான். எ - று. (கஅ)

வரைக்குண் முழைழயி னகத்தொதுங்கி வழிச்செல்வோரையாகரவென்
றுரைக்கு மொருகாற் பிறகரவென் றுரைக்கு மொருகாற் கடுஞ்சீற்றத்
திரைத்து வெகுளாச் சங்கரவென் றியம்பு மிவனுக் கிறுதியடுத்
தரைக்குங் குழவி யெனவுயிர்க்குங் காலை மதலை யருகுற்றான்.

(இ - ள்.) மலைகளிலிருக்குங் குகைகளில் மறைந்து; வழிப்போக்கர்களை [ஆகர] உங்கள் கைப்பொருளை யபகரிப்பேனென்று சொல்லுவான். ஒருதடவை [பிறகர] அடித்துப்பிடுங்குவேனென்று சொல்லுவான். பின்னுமொரு தடவை பெருங்கோபத்தாலிரைந்து [சங்கர] சினந்துகொன்று பிடுங்குவேனென்று சொல்லுவான். இவனுக்கு மரணம் சமீபித்து, வியாதியுள்ள குழந்தைபோல வலிவொடுங்கிப்பெருமூச்செறிகையில், அவன் புத்திரன் அருகே வந்தான்,

எளியே னுய்வ தெவ்வாறென் றிரங்கி யழக்கண் டிவனோக்கி
யொளிவா யெழுந்து செல்வோரை யோடி மறித்துன் னேவலரை
விளியா கரவென் பிறகரவென் விடலை யாகிச் சங்கரவென்
றுனிநீர் கலுழக் கவர்ந்திடென வுரைத்தா னுவி துறந்தொழிந்தான்.

(இ - ள்.) அடியேன் பிழைப்பதெப்படி யென்று அப்புத்திரன் மனமுருகி அழுவதை இவ்வேடன் பார்த்து, செல்வந்தர்களாய்ப்பிரயாணமுற்றுச் செல்பவர்களைத்தொடர்ந்து சென்று தடுத்து, ஏவலரை யழைத்து ஆகரவென்று சொல். பிறகரவென்று சொல். விடாதவராய்ச் சங்கரவென்று சொல் இப்படி வழிப்போக்கர் கண்களில் நீர்த்துளி சிந்த அவர்கள் பொருளை யபகரியென்று கூறினன். உடனே உயிர் விட்டிறந்தான். எ - று. (உ0)

தொலைவில் காலம் பெரும்பாவந் தொடக்கத் தொடர்ந்தா ருயிரனைத்
கொலைசெய் வேட னிவனைநெடு நிரயங் குமிழி யெழவமிழ்த்தி [துங்
யலகில் காலங் கிடத்தியென வறைந்த கணக்கற் கெதிர்நோக்கிப்
புலைய னெனினுஞ் சிவநாம முரைத்தா னிறக்கும் பொழுதென்றாய்.

(இ - ள்.) எண்ணில்லாக்காலமாகப் பெரும்பாவங்கள் சேர்ந்துகொண்டேவர, கொலைத்தொழில்புரிந்த வேடனாகிய இவனை, பெரிய நரகக்குழியில் குமிழியுண்டாம்படி யழுத்தி, எண்ணில்காலம் இட்டுவைப்பீரென்றுசொல்லிய சித்திரகுத்தனை யெதிரேபார்த்து, இவன் புலைமையுடையவனாயினும் இறக்கும்போது சிவநாமத்தைச் சொன்னானென்று சொல்லினை. எ- று. (உக)

நீயா யுரைத்த வுரையுணர்ந்த நிறைந்த குணச்சித் திரகுத்தன்
றேயாப் பதவி புரந்தளிக்கும் பெருமா னணியுந் திருநாமம்
வாயா னுரைக்குந் திறனுற்று னொழிந்தா னிரய மெனமதிப்பத்
தூயார் வழுத்த நடுநின்றாய் நீயன் றிழைத்த சொல்லுவாம்.

(இ - ள்.) நீயேயுரைத்த சொற்களையுணர்ந்த நற்குணமமைந்த அச்சித்திரகுத்தன், அழியாப் பதவியைக் கொடுத்துக்காக்குஞ் சிவபெருமான் தரிக்கின்ற திருநாமத்தைத் தன் வாயாற்சொலலும் வல்லபமுற்றானாய், நரக வேதனையை நீங்கினானென்று கருதும்படி, புனிதர்கள் வாழ்த்தும்படி நடுவு நிலைமையில் நிற்பவனே! அப்போது செய்தவைகளைக் கூறுவோம். எ - று. (உஉ)

வெள்ளே றுகைத்த தனிப்பெருமா னும முரைத்தான் வீந்துறுநாட்
புள்ளே றுகைக்கும் பெருமாற்குமயற்கும்போற்றும்பொறைபெற்றான்
வள்ளே றுருகா னெடுஞ்சூலப் படையீர் வழுத்தும் வழுத்துமெனக்
கள்ளே றிதழ்ப்பூ மலரிறைத்துத் தொழுதாய் களித்தாய் நீயன்றே.

(இ - ள்.) வெண்ணிறந்தங்கிய இடபத்தை வாகனமாகச் செலுத்திய ஒப்பற்ற சிவபெருமானது திருநாமத்தை யிறக்குந் தினத்திற் கூறினான். பட்சி

ரீசனாகிய கருடனை வாகனமாகக்கொண்ட திருமாலுக்கும் பிரமாவுக்கும் துதி செய்யத்தக்க பெருமையையடைந்தான். கூர்மை மிகுந்த ஒற்றைத்தாளுள்ள நெடிய சூலாயுதந்தாங்கிய கணங்களே! நீங்களும் துதிசெய்யுங்கள் துதிசெய்யுங்களென்றுசொல்லி, தேன்பொருந்திய இதழ்களையுடைய அழகிய மலர்களைத்தூவிக் களித்தவன் நீயல்லையா? எ - று. (உங)

இன்ன கால னெனத்தெரியேன் வேட னிருந்தா னெம்பெருமான்
றன்ன தாய திருவுருப்பெற் றதியாய் போலுஞ் சதுமறைதேர்
மன்னு புரிநூல் வேதியனை மறலப் புகுந்தா ருன்னுழையோர்
பன்னு கணத்தோ ரிதுபுரிந்தா ருனக்கே சாலப் பழுதென்றான்.

(இ - ள்.) அவ்வேடன் இத்தனைகாலம் இப்படியிருந்தானென்று நானுமுணரேன், அவன் எமது சிவபெருமானது திருவுருவமெய்தினன். இதனை நீயறிந்திலைபோலும். நான்குவேதங்களுமுணர்ந்த நிலைபெற்ற உபவீதமணிந்த அந்தணனை உன்பாலுள்ளார் வதைக்கப் புகுந்தார்கள். துதிக்கத்தக்க சிவகணர்கள் இதனைச் செய்தார்கள். உனக்கேயிது கெடுதியானதென்று நந்திதேவர் திருவாய்மலர்ந்தனர். எ - று. (உச)

நந்தி யுரைத்த பரிசனைத்துஞ் செவியோர்ந் துணர்ந்த நமனுரைக்கு
மெந்தை பெருமான் றிருநாமத் துயர்ந்தோ னவனை யிடரிழைத்தல்
சிந்தை யுணர்ந்தே னலன்கைலைப் பெருமான் சேவை செயப்புகுந்தேன்
முந்தைமுறைக்காலனையொழித்தீங்கிவனையமைத்தேன்முறையோரான்

(இ - ள்.) திருநந்திதேவர் கூறியன முழுவதையும் கேட்டுத்தெளிந்த இயமன் சொல்லுகின்றான். எமது தந்தையாகிய சிவபெருமானுடைய திருநாமதியானத்தால் மேம்பாடுற்ற அவ்வந்தணனை வதைபுரிதலை என்மனதில் தெளிந்தேனில்லை. அச்சமயம் சிவபெருமானைத் தரிசிக்கக் கைலாயகிரிக்கு வந்திருந்தேன். பழமையாயிருந்த நமனை நீக்கி நவீனமாக இவனை நியமித்தேன். இவன் அவ்வழக்கந்தெரியான். எ - று. (உரு)

சேவே றுகைத்த முதற்பெருமான் றிருநா மத்தி னொருநாம
நாவே றுதற்கன் புடனின்று ரெனக்கு நமரே நனியிழைத்த
பூவே றிதழிப் புரிசடைமேன் மதியு மரவும் புனைந்தாரா [ந்தான்.
யாவே றுகைத்தோ னருட்பெருமான் பொறுத்தி யெனச்சே வடிவீழ்

(இ - ள்.) இடபவேற்றைச் செலுத்திய முதற்கடவுளாகிய சிவபெருமான் திருநாமங்களில் ஒரு திருநாமத்தைத் தமது நாவால் உச்சரிக்க அன்புள்ளவர்கள் அடியேனுக்கும் உறவினரேயாவர். நான்புரிந்த தீமைகளை, கொன்றைமலர்சூடிய முறுக்கிய சடைமீது பிறைச்சந்திரனையும் சர்ப்பத்தையுந் தரித்தவராய், இடபவேற்றை வாகனமாகச் செலுத்தும் சிவபெருமான் திருவருள் பெற்று விளங்கும் நந்தி பகவானே! பொறுத்தருள்கவென்று, அவர் தம் செவந்த பாதங்களிற் பணிந்தான். எ - று. (உசா)

தருமனிரங்கத் தானிரங்கி நந்தி புகலுஞ் சண்டனைவெஞ்
செருவி னெழுந்து மாகாளர் கணத்தோர் பிடித்துச் சேமித்தார்
அருகு செலப்போ யாமுரைத்தே மென்னவுணர்த்தி யாங்கவனை [டான்
மருவு சிறைமீட் டுடன்கொடுபோ வெனலுந தொழுது வழிக்கொண்

(இ - ள்.) இயமன் இப்படி வருந்த நந்திதேவரும் வருந்திச் சொல்கின்றார். நமனை மாகாளாரின் கணத்தோர் போர்மேற்கொண்டு சென்று பிடித்துச் சிறையிலிட்டார்கள். நீ அவர்கள்பாற் சென்று, யாம் சொன்னோமென்று தெரிவித்து, அவன் பொருந்திய சிறையினின்றும் அவனைமீட்டு, உன்னோடழைத்துச் செல்கவெனக் கூறவும், நந்திதேவரை வணங்கிப் புறப்பட்டான்.

கலிவிருத்தம்.

ஏகா நெறியெய் தலுமெண் ணுறுவான்
சோகா குலனெஞ் சுதுணுக் குறுவான்
மாகா ளரைமுன் னிவணக் கமுறா
நீகா வெனநின் றுநிகழ்த் துவனால்.

(இ - ள்.) அங்குநின்றும் புறப்பட்டுச் செல்லும்வரையும் சிந்தனையுற்றவனாய், சோர்வுடன்கூடிய விசாரமுடைய மனநடுக்கத்துடனே மகாகாளரையடைந்து பணிந்து, தேவரீர் அடியேனைக் காக்கவேண்டுமென்று நேர்நின்று சொல்லுகின்றான். எ - று. (உஅ)

எந்தாய் நினபொன் னடியெய் தினனென்
சிந்தா குலமுற் றருள்செய் திடென
வந்தா னைவருந் தினையென் னையென
நந்தா மொழிகா ளர்நவிற் றினரால்.

(இ - ள்.) எந்தையே! தேவரீருடைய அழகிய திருவடியையடைந்தேன். என் துயரமுழுவதையும் விலக்கி யருளவேண்டுமென்று சொல்லிவந்த இயமனை, மகா காளர்நோக்கி, ஏன் வருந்துகின்றாயென்று, கெடாதவார்த்தைகள் சொல்லினர். எ - று. (உகூ)

முன்னுற் றுநிகழ்ந் தனமுற் றுமுரைத்
தின்னற் குறைகூ றியிரந் திடுமக்
கன்னற் பொழுதிற் றெறுகா ளர்வெகுண்
டுன்னச் சமொழிந் தனைபோ துமென.

(இ - ள்.) இயமன், முன்னே நடந்தனவற்றை யெல்லாஞ்சொல்லி, தனக்குற்ற தீமையை முறையிட்டு வருந்துகின்ற அத்தருணத்தில், அழிக்கத்தக்க வல்லமையுடைய மகாகாளர் கோபமற்று, உன் மனத்துள்ள பயம் நீங்கினைபோதுமென்றார் எ - று. (௩0)

ஐயா வெனதச் சமொழிந் திலநீ
செய்யா யருள்சீ றலைசீ றியநின்
கையால் வரவந் தகதைத் துயரென்
மையார் தனிநெஞ் சுமறக் குமதோ.

(இ - ள்.) ஐயனே! யான் என் பயத்தினின்று நீங்கிலேன். அருள்புரியவேண்டும். கோபிக்கவேண்டாம். முன்னொருகாலத்தில் கோபமுற்ற தேவரீர் திருக்கரத்தால் விடுத்த கதாயுதஞ்செய்த துயரத்தை ஒப்பற்ற அஞ்ஞானமுடையேன் மனம் மறக்குமோ? எ - று. (௩க)

என்றன் னவனஞ் சியெழுந் துமுடிக்
குன்றென் னவிழுந் திடர்கூ றினனெ

றன்றோ தியசூ தனையந் தணர்வான்
மின்றோ யுநெடுங் கொடிவே ணியனே.

(இ - ள்.) என்று கூறி, அவ்வியமன் அஞ்சி யெழுந்து, மகுடம்பூண்ட மலைபோலப்பணிந்து தன் துயரத்தை மறுபடியுஞ் சொன்னனென்று திருவாய்மலர்ந்தருளிய சூதமுனிவரை, நைமிசாரணிய முனிவர் நோக்கி, ஒளி பொருந்திய நெடிய கொடியைப்போன்ற சடையையுடைய சூதமுனிவரே!

மறலிக் கிடர்கா ளர்வருத் தியவா
றுறமுற் றுமுணர்த் துதியென் னவுணர்ந்
தறமுற் றுமளந் ததவத் தறவோன்
முறைபற் றியவர்க் குமொழிந் திடுவான்.

(இ - ள்.) இயமனுக்கு மகாகாளர் வருந்தச்செய்த சரிதையை நாங்கள் அறியும்படி முழுதுந்தெரிவிக்கவேண்டுமென்று வேண்ட, தருமங்களை யெல்லாம் அளவிட்டறிந்த தவத்தையுடைய புண்ணியசொரூபியாகிய சூதமுனிவர், வரிசையாக அந்நைமிசாரணிய முனிவர்க்குச்சொல்வாராயினர். எ - று.

ஓதுஞ் சவுராட் டிரமென் னொருநாட்
டேதந் தருதீ விரனென் றொருநால்
வேதம் பயிறொல் குலவே தியனை
மாதந் தையெனப் பெறுமோர் மதலை.

(இ - ள்.) யாவரும் புகழ்ந்து சொல்லுஞ் சௌராட்டிரமெனும் ஒரு நாட்டிலே, தீவிரனென்னும் பெயருற்று நான்கு வேதங்களையுமோதிய பழய வேதிய குலமுற்றவனை, சிறந்த தந்தையாகப்பெற்ற குற்றத்தை விளைக்கும் ஒரு புத்திரன். எ - று. (௬௪)

கூறும் பெயர்கோ சிகனென் றுடையான்
மாறுண் டமனத் தன்வரம் புகடந்
தூறுங் களிமா மதுவுண் டுசுலாய்
நாறும் புலவுண் டுநடக் குவனால்.

(இ - ள்.) கோசிகனென்று சொல்லும் பெயரையுடையவன், மாறுபட்ட மனமுடையவன், குலாசாரத்தை விலகிக், களிப்பைத்தருங் கள்ளைக்குடித்து எங்குந்திரிந்து, துர்நாற்றம் பொருந்திய மாமிசத்தைத்தின்று துர்வழியில் நடப்பவன். எ - று. (௬௫)

வள்வா ளொடுநள் ளிருள்வா யுழல்வான்
கள்வா ரொடுநா டுகவர்ந் துறுவான்
புள்வாய் விடல்கண் டுபுலைக் குடில்புக்
குள்வாய் மதுவுண் டுடனா டுவனால்.

(இ - ள்.) கூர்மை தங்கிய வாளாயுதத்தோடு நடுராத்திரியில் எங்குந்திரிவான். திருடுபவர்களோடு அந்நாட்டினர் பொருளை யபகரிப்பான். காகங்கரை தலையுணர்ந்து புலையர் குடிசையிற் பிரவேசித்து, அதனுள்ளேயே கள்ளைக் குடித்து அவர்களோடு கூத்தாடுவான். எ - று. (௬௬)

இத்தன் மையனா கியயங் குவனோர்
பொய்த்தன் மையளா யபுலைச் சிமுலைப்

பித்தின் மயலா யவள்பின் சுழல்வான்
மத்தன் கொலையஞ் சிமனந் திரியான்.

(இ - ள்.) இவ்வகையினனுயொழுகுபவன், இயற்கையாகவே பொய்மை நிறைந்த ஒரு புலைச்சியின் தனங்களிற்கொண்ட ஆசை மயக்குற்று, அவளைத் தொடர்ந்து பின்னேயே சுழல்பவன். ஐம்புலச்செயல் மாறிக் கொலைக்கும் பயந்து மனங்கலங்காதவன். எ - று. (கஎ)

ஒருநா ளவளோ டுறையும் பொழுதிற்
செருவா ளொடுகண் டசினப் புலையன்
பெருமா றுடுகண் டுபிடித் திவனை
யிருதோ ளுமிறுக் கிவிசித் தனனால்.

(இ - ள்.) அவளோடிருக்கும் ஒரு நாட் பொழுதில், போருக்குரியவாளோடு இவனைப்பார்த்த கோபமுடைய அப்புலையன், விகாரத்தோடிருக்கும் இவனைக்கண்டு பிடித்துக்கொண்டு இவனுடைய இரு தோள்களையும் இறுக்கிக் கட்டி, எ - று. (கஅ)

வைவாள் கொடுவவ் வியவன் குறியைக்
கொய்தா னதுகொண் டுயிர்விண் டனனன்
மொய்வார் படையோ டுமுடுக் கிநமன்
கைவார் கொடுகட் டியிழுத் தனனால்.

(இ - ள்.) கூர்மையாகிய வாளினாலே அவன் குறியைப்பற்றி அறுத்தனன். அவன் அதனால் உயிர் விட்டனன். மிக்க பெரிய ஆயுதத்துடன் வந்த நமன், கோப மெய்தி, தன் கையிலுள்ள பாசத்தாலே அவனைப்பிணித்து இழுத்தான். எ - று. (கக)

தென்றிக் கிவனைக் கொடுசே றலுமவ்
வென்றிச் சிவதூ தர்வெகுண் டனரா
யொன்றிச் சமதூ தரையோ டவடித்
தன்றிப் படுபா வியையண் மினரால்.

(இ - ள்.) தென்புறத்துள்ள இயமலோகத்திற்கு இவனைக்கொண்டு சேரவும், அந்த வெற்றிதங்கிய சிவகணங்கள் கோபித்தவர்களாய், சமனுடைய தூதுவர்களை நெருங்கி அவர்களை யோடும்படி யடித்ததன்றி இக்கொடும் பாவியை நெருங்கினார்கள். எ - று. (சO)

செம்பொற் றணிமா னமிசைச் செறிவித்
தும்பர்க் கொடுசென் றனருற் றனராற்
கம்பக் களியா னையுரிக் கனகப்
பைம்பொற் கிரிவில் லிபழங் கயிலை.

(இ - ள்.) செம்பொன்னாற் செய்த ஒப்பற்ற விமானத்தின்மே லிருக்கச் செய்து ஆகாய வழியே கொண்டுபோய், கட்டுத்தறியையுடைய மதஞ்சொரியும் யானை யுரிபோர்த்த மேரு மலையாகிய பசிய பொன் வில்லையேந்திய சிவபெருமானது பழமையான கைலாயகிரியிற் பொருந்தினார்கள். எ - று. (சக)

குருதிப் புனலா றுகுதித் தெழமற்
றொருதிக் கிலர்தென் றிசையுற் றனரால்
வெருவிப் பதறித் தனிவிம் முறுவார்
செருவிற் றருமற் குரைசெய் தனரால்.

(இ - ள்.) அதனால் காலதூதர், உதிர நீர் ஆறாய்ப்பெருகிப்பிரவகிக்க, பிறிதொரு ஆதாரமேயு மில்லாதவர்களாய், இயமபுரியணுகி, தனித்தனியே பயந்து ஏக்கமெய்தி, போர் செய்தற்குரிய வில்லேத்தாங்கிய இயமனுக்குச் சொன்னார்கள். எ - று. (௬௨)

அக்கா லெயெழுந் தனனந் தகனு
மிக்கா யகடுஞ் சினமீ துறுவான்
மைக்கா ளகளத் தன்மணிக் கயிலை
புக்கா னதுசென் றுபுகுந் துறலும்.

(இ - ள்.) இயமனும் அப்பொழுது மிகுந்த கடுங்கோபம் அதிகரித்துப் புறப்பட்டு, கரிய விடந்தங்கிய கண்டத்தையுடைய சிவபெருமானுடைய அழகிய கைலாயகிரியை யடைந்தான். அவன் அக்கைலாயகிரியிற் சேர்ந்தமாத் திரத்தில். எ - று. (௬௩)

கண்டா ரதுகா ளர்கணத் தலைவ
ருண்டா யதுவென் னையுரைத் தியெனத்
தண்டா மரையன் னசரண் பரவா
விண்டா னிடருற் றுவினைந் தவெலாம்.

(இ - ள்.) மகாகாளரது சிவகண நாதர்கள் அதனைக்கண்டு, உனக்கு நிகழ்ந்தது யாது? அதனைச்சொல்லுகவென, குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர் போன்ற பாதங்களைத்தொழுது, நிகழ்ந்த செய்தி முழுதும் துன்புற்றுச்சொல்லினன். எ - று. (௬௪)

தென்பா லிறைசொற் றசெவிப் புகுதா
முன்பா யதுகா ளர்மொழிந் திடுவா
ரன்பா னவனன் பனெனத் தகுமா
றன்பா லறிவிப் பனுணர்ந் தறிநீ.

(இ - ள்.) தென்றிசைத்தலைவனான இயமன் சொல்லிய வார்த்தைகள் செவியிற் புகாமுன்னரே அம்மகாகாளர் கூறுவார். அக்கோசிகன் அன்பின் மயமாகிய சிவபெருமானுக்கு அன்பனென்று சொல்ல வந்த காரணத்தை உன்னிடத்திற் சொல்லுகின்றேன். தெளிந்தறிவாயாக. எ - று (௬௫)

விளையார் டிடவீ திபுகுஞ் சிறுநாட்
டளையா ரருள்சம் புவொடும் பயில்வா
னிளையா மறைவே தியனென் றிடுசம்
பளையார் வமொடின் னவ்வுரைந் தனனால்.

(இ - ள்.) இவன் விளையாடும்படி தெருவிற் செல்லுஞ் சிறு வயதில், மிகப்பக்ஷமுடைய சம்பு வென்பவனோடும் விளையாடுகையில், தவறாதவைதிக வொழுக்கமுடைய வேதியனென்று யாவருஞ் சொல்லும் அச்சம்பு வென்பவன், ஒற்றுமைப்பட்ட அன்புடன் இப்படிச்சொன்னான். எ - று. (௬௬)

கூகைப் பெயர்கோ சிகனென் பதனக்
காகத் தருமா றலவென் றுமையாள்
பாகத் திரியம் பகனென் றுபகர்ந்
தோகைப் படவோ தியழைத் தனனால்.

(இ - ள்.) [கோசிகம்] கூகையின் பெயராக, உனக்குக் கோசிகனென்னும் பெயர் தகுதியுடைய தன்றென்று, பார்வதிபாகராகிய சிவபெருமான் திருநாமமாகிய திரியம்பகனென்று அவனுக்குப் பெயர் கூறி, அவன் களிக்கும்படி சொல்லியழைத்தான். எ - று. (சஎ)

சம்புப் பெயரான் முறைதந் தபெயர்
நம்பற் கினிதா யருணண் ணினனு
னும்பர்க் குமுயர்ந் துடையோ னிவனைக்
கம்பித் தனையென் னைகொல்கா ரணமே.

(இ - ள்.) சம்புவென்னும்வேதியச்சிறுவன் தகுதியென்றளித்த திரியம்பகனென்னும் பெயரானது, சிவபெருமானுக்கு இனிதாகித்திருவருளெய்தினன். தேவர்களுக்கும் உயர்ந்துள்ள இவனை நடுங்கச்செய்தனையே? யாது காரணம்? எ - று. (சஅ)

உற்றோன் றுமுரைத் திலையென் னையெனை
மற்றந் தகனீ துவழுங் குவனு
விற்றின் னதிரியம் பகனென் பெயரா
கிற்றன் னருமிக் கதிகிட் டுவனே.

(இ - ள்.) நேர் நின்று ஒன்றும் பதில் சொல்லவில்லை. என்ன காரணமெனக்கேட்க, இயமன் இப்படிக்கூறுகின்றான். இப்போது சொல்லிய இத்திரியம்பகனென்பது என் பெயராயிருந்தால், அடைதற்கரிய இப்பதவியைப் பெறுவேனே. எ - று. (சகூ)

செய்யா தபவத் தொடுசென் மமெடுத்
துய்யா தவரோர் பெயரோ திடினப்
பையா டரவோ னடிபற் றுவரே
லையா வதிகா ரநடத் துவனே.

(இ - ள்.) ஒருவருஞ்செய்யாத தீவினைகளோடு பிறவிகளெடுத்து உய்யாதவர்கள் ஒரு திருநாமத்தைச்சொல்வார்களானால், அந்தப்படமெடுத்தாடும் சர்ப்பங்களை யணிந்த சிவபெருமானது திருவடிகளைச்சேர்வார்களானால், ஐயா! யான் அதிகாரம் நடத்துவேனே. எ - று. (ருo)

என்னச் சிலகூ றியிகழ்ந் தனனுய்த்
தன்னைக் கொடும்பா துறனுந் தழலா
முன்னர்ப் படவா வெனமுந் துறனுங்
கன்னத் துவிழுந் ததுகா ளர்கதை.

(இ - ள்.) என்றிது போன்ற சில வார்த்தைகளுரைத்து இகழ்ச்சி செய்து மெல்ல நழுவிச்செல்லவும், மகா காளர் சினந்து, இயமனே! முற்படவந்து நில்லென, அப்படியே முன் வந்த மாத்திரத்தில், மகா காளரது கதாயுதமானது இயமன் கன்னத்தில் விழுந்தது. எ - று. (ருக)

அடியுண் டதுசோ ரியலைத் தெழுவா
னிடியுண் டவரா வினிடிந் துவிழா
முடியுண் டனனென் னமுயங் கிநெடும்
படியுண் டனறு விபதைத் திலனே.

(இ - ள்.) அடிபட்டதினால் உதிரம் பெருகியோட, மேகத்திலுண்டான இடிமுழக்குற்ற பாம்பைப்போல வருந்திவிழுந்து இறந்தவன்போல மூர்ச்சித்துப் பெரிய பூமிமேல் சாய்ந்தனன். உயிர் துரந்தானில்லை. எ - று. (ருஉ)

அதுகா லையிலா ழிவயப் படையோன்
பதுமா சனமீ துறைபண் ணவனங்
கெதிர்வார் கயிலைக் கிரியெய் தினரா
விதுயார் நமனைக் கொடடாத் தவரே.

(இ - ள்.) அப்போது, வெற்றிதங்கிய சக்கராயுதந்தாங்கிய திருமாலும், கமலாசனத்தில் வாழும் பிரமதேவனும், திருக்கைலாயகிரிக்கு வருபவர்களாக எதிர்ப்பட்டார்கள். விழுந்துகிடக்கும் நமனைநோக்கி இவனை யெதிர்த்தவர்கள் எவர்? எ - று. (ருங)

என்றுற் றனர்கா ளரையெய் தினராய்
மஙுறற் றுளவோ னுமலர்க் கிறையும்
மின்றெரத் துமெயிற் றுடைவெம் மறலிக்
கின்றைப் பிழைநீ விர்பொறுத் திரென.

(இ - ள்.) என்றெண்ணி வந்தவர்கள் மகா காளரை யெய்தினவர்களாய் மணங்கமழுந்துளவ மாலையணிந்த திருமாலும் தாமரை மலரிலுள்ள பிரமனும் மின்னல் போலப்பிரகாசிக்கும் பற்களையுடைய கொடிய இயமனுக்கு இன்று நேர்ந்த குற்றத்தைப்பொறுத்தருள்கவென்று விண்ணப்பஞ்செய்யவும். எ-று.

கூறந் தகனுங் குருதிப் புனலாற்
றேறுண் டெழுசிந் தைதெளிந் தனனன்
மாறின் றியகா ளரைவந் துதொழா
நாறும் பனிநாண் மலரோ னறைவான்.

(இ - ள்.) மேலேசொல்லிய இயமனும், உதிர நீர்ப்பெருக்கின் கரையேறி மயக்ககன்று மனந்தெளிந்தான். மாறுபாடில்லாத மகாகாளரை வந்துபணிய, மணங்கமழும் புதிய தாமரை மலரிலுள்ள பிரமன் சொல்லுகின்றான். எ - று. ()

மேற்படி வேறு.

கொழித்த நான்மறைக் கோசிக னென்பவன்
கழித்தி டும்பெய ராற்கதி நண்ணினன்
விழித்து வேளை யெரித்தவன் மெய்ந்நெறி
மொழித்தி றத்தின் மொழிதர முற்றுமோ.

(இ - ள்.) நான்கு வேதங்களையுமுணர்ந்த கோசிகனென்பவன், பெயர் மாற்றிக்கொண்டதனாலேயே உத்தம பதவியடைந்தான். நெற்றிக்கண்ணைத் திறந்து மன்மதனை யெரித்த சிவபெருமானது சத்திய வழியைச்சொல்லுந் திறத்தாற்சொல்ல முடியுமா? எ - று. (ருசு)

கயிலை மேவு கடவுடன் னாமத்தைத்
துயிலை மேவி வெருவந்து சொல்லினு
மயிலை யோர்மருங் காக்கிய வானவன்
பயிலு மிந்தப் பருப்பதம் வைகுவார்.

(இ - ள்.) கைலாயகிரியிலெழுந்தருளிய சிவபெருமான் றிருநாமத்தை; நித்திரை யெய்தி அப்போது பயந்து சொன்னாலும், மயில் போலுஞ் சாயலை யுடைய உமாதேவியை யொருபக்கலிலுடைய சிவபெருமான் வசிக்கும் இந்தக் கைலாயகிரியில் வசிப்பார்கள். எ - று. (௫௭)

நீயி ழைத்த தரும்பிழை நீயுநின்
வாயி ழைத்தன காளரை வாழ்த்துதி
யாயி ழைக்கொரு பாகனை யாமென
மீயி ழைத்த வினையற மேவுவாய்.

(இ - ள்.) நீ செய்தது பெருங்குற்றம். உன் வாயாற் கூடியமட்டும் மகா காளரை வாழ்த்துக. திருத்தமாகிய ஆபரணங்களை யணிந்த உமாதேவிபாக ராகிய சிவபெருமானை சிந்தித்ததை யொத்த விசேடித்த தீவினையினின்று விலகினவனாயிருப்பாய். எ - று. (௫௮)

என்று காளரை யேற்புற நோக்கியே
யின்று காறு மிவன்பிழை நோக்கலை
வென்றி யாள விடுத்திடு வாயென
நன்று கூறிக் கயிலையை நண்ணினார்.

(இ - ள்.) என்று இப்படி இயமனுக்குச்சொல்லி, மகாகாளரை அன்பு பொருந்தப்பார்த்து, இவன் இன்று வரையிற் செய்த பிழைகளைப்பாராட்ட வேண்டாம். வெற்றியுடையோய்! விட்டு விடுவாயாகவென்று இதவார்த்தை களாகவுரைத்துக் கைலாயகிரியையடைந்தனன், எ - று. (௫௯)

வாள ரப்பணி யானைவ ணங்கினார்
நீள றத்த நெறிப்பட நின்றவெங்
கோள ரத்தரு மற்குறித் தாரமா
காள ரற்ற கருணைவ ழங்கினார்.

(இ - ள்.) பிரம விஷ்ணுக்கள், ஒளி பொருந்திய சர்ப்பாபரணமணிந்த சிவபெருமானை வணங்கினார்கள். நெடிய தரும வழியில் நின்ற சிறந்த கொள் கையையுடைய மகா காளர் அவ்வியமனை நோக்கி, தமதுநீங்கிய கருணையை மீண்டும் அளித்தார்கள். [விடுத்தார்கள்.] எ - று. (௬௦)

தென்பு லத்திய மன்புகச் சென்றன
னன்பு லப்புறு காளர வன்றனை
வன்பு றுத்திய வாறுவ குத்தன
முன்பு ணர்த்து வழிமொழி வாமரோ.

(இ - ள்.) இயமன், தென்றிசையிலுள்ள தன் நகரடையச்சென்றான். பேரன்பு நீங்காத மகாகாளர் அவ்வியமனைத்தண்டித்த வகையை இதுகாறுஞ் சொன்னோம். இனி, முற்கூறி வந்த சரிதத்தின் றொடர்பினைச் சொல்லுவோ மென்று (சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச்சொல்லத்) தொடங்கினார்.

ஐய னந்தி யருளிய வாறுநின்
செய்ய தாமரைச் சீறடி போற்றினேன்
வெய்ய காலனை விட்டிடெ ளுமன
மைய றுங்குணக் காளரை வாழ்த்தினுன்.

(இ - ள்.) தலைவராகிய திருநந்தி தேவர் உரைத்தருளிய வண்ணம் தேவரீருடைய தாமரை மலர்போலுஞ் சிறிய பாதங்களைத் துதிசெய்தேன். கொடுமை புரிந்த காலனை விட்டு விடவேண்டுமென்று, குற்றமற்ற சற்குணமுடைய மகாகாளரைப்பலவாறு துதிசெய்தான். எ - று. (௬௨)

நந்தி சொற்றன நாமறுப் பேமலேஞ்
சிந்தை கூர்ந்தன மென்றுதி ருந்தியே
முந்து பூதரு டன்மொழிந் தானவ
ருந்து காவனைக் காவலொ ழிக்கவே.

(இ - ள்.) நந்திதேவர் கூறிய சொற்களை நாம் தவறமாட்டோம். இரக்கமெய்தினேமென்று மனந்திருந்தி, தமக்கெதிரேநின்றதமதுபூதகணங்களோடு, அவர்களாற் சிறையிற் சேர்க்கப்பட்ட காலனை, அக்காவலினின்றகற்றக்கட்டளையிட்டனர். எ - று. (௬௩)

பூத ரோடிப் புகுந்தனர் சற்றெனு
மூது காலியங் காதவு ழைமுழைச்
சாதன் மேவிய காலனைத் தள்ளியே
தீதில் காளர் திருமுன் விடுத்தனர்.

(இ - ள்:) அப்படிக்கட்டளையிட்ட வுடனே, நுட்பமாக வீசுங் காற்றும் நுழையாத இடத்திலுள்ள குகையில் மிக வேகமாகச்சென்று சேர்ந்து; மரணவாதனையுறுங் காலனை வெளியே தள்ளி, குற்றமில்லாத மகாகாளர் திருமுன் கொணர்ந்து நிறுத்தினர்கள். எ - று. (௬௪)

கொண்டு போவெனக் காளருங் கூறினர்
பண்டு போலிரு பாதம் வணங்கினன்
மண்டு காலனொ டும்வழிச் சேறலும்
விண்ட நெஞ்சொடு காலன் விளம்புவான்.

(இ - ள்.) இயமனை நோக்கிக் கொண்டுபோகவென மகாகாளர் உத்தரவளித்தனர். முன் போலவே அவருடைய இருபாதங்களையும் பணிந்து,பயமிகுந்த காலனோடு வழிச்செல்லவும், காலன் உடைந்த மனதுடன் இப்படிச்சொல்கின்றான். எ - று. (௬௫)

போதும் போதுமெ னக்கிது புன்றொழில்
யாதுஞ் செய்தில னித்துய ரெய்தினேன்
மீதுண் டோடுங் குருதியின் விம்மினு
னோதுந் தன்மைத் தருமனு ணர்த்துவான்.

(இ - ள்.) எனக்கு இவ்வற்பத்தொழில் இது வரையிற்போதும் போதும். யாது தீமையுஞ் செய்திலேன். இவ்வகைய துன்பமடைந்தேன் என்று, வெ:ளிப்பட்டு உடல் முழுவதையும் நனைத்துப்பெருகும் உதிரத்தால் வருந்தியவன் சொல்லியதற்காக நமன் சொல்லுகின்றான். எ - று. (௬௬)

தொட்ட நாளிற் றொழிலிற் புகுந்தியான்
பட்ட பாடு பகர்வது கேளென்று
வட்ட வாரி வளைந்த வரம்புடைத்
திட்ட கந்துக மென்றொரு நாடுளே.

(இ - ள்.) இத்தொழிலிற் புகுந்து தொடங்கிய நாள் முதலாக, யான் பட்ட பாடுகளைச்சொல்வதைக்கேட்பாயாக வென்று, வட்ட வடிவான சமுத்திரத்தாற் சூழப்பட்ட எல்லையையுடைய கந்துகமென்னும் ஒரு நாடு உள்ளது.

அந்த நாட்டி னருங்கத லிப்பதி
நந்த கப்பெயர் வெண்குடை நாயகன்
புந்தி கூரப் பொதுக்கடிந் தோர்தனி
முந்தை வைய முறையிற் புரக்குநாள்.

(இ-ள்.) அந்தக்கந்துக நாட்டிலே அரிய கதலிநகரத்தில், நந்தகனென்னும் பெயரமைந்த வெண்கொற்றக்குடையையுடைய அரசன், அறிவு மிகுதியால் பொதுத்தன்மை நீக்கி, பழமையாகிய உலகத்தைத்தானே மநு முறைப்படி அரசு செய்கையில். எ - று. (கூஅ)

அன்ன வன்றனக் காருயிர்த் தேவியோர்
கன்னி யன்னவள் காமதை யென்றுளாள்
பொன்னி னின்னுரு வேண்டும் பொலிவினாள்
பன்னி கற்பை யிகந்து பரந்துளாள்.

(இ - ள்.) அவனுக்கு உயிர்போலும் மனைவியாகிய ஒரு பெண்ணிருந்தாள். அவள் பெயர் காமதையென்று சொல்லப்படும். இலக்குமியும் அவளழகை விரும்பத்தக்க அழகு வாய்ந்தவள். அவன் மனைவி தன் கற்பையழித்தவளாய்ப் பூமி யெங்கணுந் திரிந்திருந்தாள். எ - று. (கூகூ)

கட்பு லத்தி னினியரைக் கண்ணுறீ இ
யுட்பு லத்தி னுடன்கொடு போயவர்
நட்ப ளாவிய காமந லத்தினால்
வெட்க மின்றியு மேல்விழப் புல்லுவாள்.

(இ - ள்.) தன் கண்களால் அழகுடையோரைக்கண்டு, உள்ளிடத்திற்குத் தன்னோடழைத்துச்சென்று, அவர்களுடைய நேசத்தைப்பற்றிய காம சுகத்தினால், நாணமில்லாமலும் அவளே வலிய மேல் விழுந்து அணைவாள் எ - று.

பொங்கு பேரெழி லானதுர் புத்தியென்
றங்கொ ருத்த னவனைய ணைந்தனள்
வெங்க னற்கடுங் காமவெ துப்பினாற்
றங்கு வேகந் தலைப்படு மாசையாள்.

(இ - ள்.) வெவ்விய அக்கினிக்கு ஒப்பாகிய கடிய காம வெப்பத்தினாற் பொருந்திய வேகத்தின் மேம்பட்ட ஆசையுடையவள். அவ்வூரிலுள்ள மிக்க அழகு பொருந்திய துர்புத்தியென்பா னொருவனைச்சேர்ந்தாள். எ - று. (எக)

இனைய காத லிவனொடும் வைகுறு
மனைய தன்மை யரசனு ணர்ந்தனன்

புனைசெய் கொங்கை புறம்படப் போவென
மனனி கழ்ந்து நந்தனன் மன்னர்கோன்.

(இ - ள்.) இவ்வகையாசையுற்று, அத்துர்புத்தியோடு கூடியிருக்கும் அச்செய்தியை மன்னவனறிந்தான். அம்மன்னவன் உடனே, அலங்கரிக்கின்ற கொங்கையையுடையாளே! இப்பொழுதே நீ அரண்மனையை விட்டு வெளியே செல்கவென்று மனவெறுப்புற்றுத்துரத்தினன். எ - று. (எஉ)

போன மங்கைதுர் புத்தியொ டுங்களித்
தான காமம னுபவித் தாளறற்
கான வோதிக ருப்பமுண் டாயினு
ளேனை யன்னவன் றன்னைவிட் டேகினுள்.

(இ - ள்.) அப்படியே புறஞ்சென்ற அம்மங்கையாகிய காமதை, துர்புத்தியோடு சந்தோஷித்து, காமவின்ப மநுபவித்து, கருமணற் படிவுபோன்ற கூந்தலையுடைய அவள் கருப்பமெய்தினுள். உடனே சோர புருடனுகிய அவனை விட்டுப்போயினுள். எ - று. (எகூ)

வடித்த வேத வசுமதி மின்னெனத்
துடித்த முப்புரி தோன்றிய மார்பினு
னடித்தொ டர்ந்தனள் சென்றன ளன்னவற்
பிடித் திருந்துதன் காமம்பி தற்றினுள்.

(இ - ள்.) துர்புத்தியை விலகிப்போனவள், வேத முழுதுணர்ந்தவனும், மின்னல்போலப் புறளும் உபவீதமணிந்தமார்புடையவனும், வசுமதியென்னும் பெயர் பெற்றவன் ஒரு வேதியனைப் பின்றொடர்ந்துபோய், அவனைப்பிடித் திருந்து தன் காம விச்சையைச்சொன்னுள். எ - று. (எச)

வேத வேதியன் விட்டில னன்னவட்
பூத ரம்பொரு கொங்கைபு ணர்ந்தனன்
மாத ராளு மகப்பயந் தாளரோ
காத லந்தணன் காலங்க ழிந்தனன்.

(இ - ள்.) காமதையின் சொல்லைக்கேட்ட வேதமறிந்த அவ்வந்தணன்; அவளை விடாதவனுய், மலைபோலப்பூரித்த அவளது தனங்களைத்தழுவினுன். அம்மங்கையும் பிள்ளையைப்பெற்றனள். அவள் பால் ஆசை வைத்திருந்த வசுமதியென்பானும் உயிர் நீங்கினுன். எ - று. (எரு)

பிறந்த காதற் பெறலரும் பிள்ளையை
மறந்தும் வேண்டல ளாய்மறு கிட்டன
டுறந்த சூத்திரன் றுர்புத்தி தன்னொடுஞ்
சிறந்தி ருந்தனள் கற்பிற் றிறம்பினுள்.

(இ - ள்.) கற்புதவறிய காமதை, தனக்குப்பிறந்த ஆசை தரத்தக்க பெறுதற்கரிய பிள்ளையை மறந்தும் ஆசைவையாதவளாய்த்தெருவிலிட்டனள். தான் முன்னே விட்டுப்பிரிந்த சூத்திரனுகிய துர்புத்தியோடு சேர்ந்து சந்தோஷித் திருந்தாள். எ - று. (எசு)

அவனொ டன்பி னருங்கல மேறியே
யுவரி புக்கன ளோட்டுறு நாளையிற்

கவன வெங்கடுங் காலெறிந் தெற்றலி
னிவர்க லன்கவிழ்ந் திட்டிறந் தாரரோ.

(இ - ள்.) அத்தூர்புத்தியோடு, அரிய கப்பலிலேறிக்கடலிற் புகுந்தாள். இக்கப்பலையோட்டும் காலத்தில், வேகமாய்ச்செல்லுங் கொடிய சூறைக்காற்று வீசித்தள்ளுதலால் இவர்களேறிய கப்பல் கவிழ்ந்து இறந்தார்கள். எ - று. ()

ஈறு கண்டன ரென்னுமைத் தூதர்கண்
மாறு கொண்டனர் வம்மினெ னச்சொலாச்
சீறு சீற்றத் தெதிர்ந்தவர் திண்புயங்
கூறு பட்டுறக் கட்டிக் கொணர்ந்தனர்.

(இ - ள்.) என் தூதர்கள் இவர்களுடைய முடிவைப்பார்த்து, தீயொழுக்க முடையோரே! வாருங்களென்று கூறிச் சீறுகின்ற கடுங்கோபத்தோடு அவர்களை நெருங்கி, அவ்விருவருடைய வலிய புயங்களைத்தனித்தனி கட்டிக் கொண்டு வந்தார்கள். எ - று. (எஅ)

ஈரு மீர்வடி வாளெடுத் தீர்ந்தனர்
சோரு மாவியர் துண்ணெனு நெஞ்சினர்
யார்கொல் காப்பவ ரென்றென் றரற்றினர்
வீர பத்திரன் றூதர் வெகுண்டனர்.

(இ - ள்) அறியத்தக்க கூரிய அரிவாளைக்கொண்டரிந்தார்கள். அப்போது தவிக்கின்ற பிராணனுடையவர்களாயும், நடுக்கமெய்திய மனமுடையவர்களாயும், நம்மை இச்சமயத்தில் எவர் காப்போரென்று சொல்லியழுதார்கள். உடனே வீரபத்திரக்கடவுளது தூதுவர்கள் கோபங்கொண்டார்கள். எ - று. ()

சூலம் வாண்மழுத் தண்டுசு ரிகைவெங்
கால நேமி முதற்படை கைக்கொளா
வால காலமெ னப்பரந் தண்மினூர்
மூல முற்றவெஞ் சேனைமு டித்தனர்.

(இ - ள்.) சூலாயுதம் வாளாயுதம் மழுவாயுதம் தண்டாயுதம் அரிவாள் வெவ்விய கால சக்கிரம் முதலாகிய ஆயுதங்களைக் கையிலேற்றுக்கொண்டு ஆலால விடம்போலெங்கும் பரவி நெருங்கி, முதலிலிருந்த எனது சேனைகளை யழித்தார்கள். எ - று. (அ0)

இழைத்த பாவிக ளாமற் றிருவரைத்
தழைத்த பேரொளி மானந் தனிவர
வழைத்தி ருத்தின ரேகனு மண்மினீர்
பிழைப்ப தெவ்வுழை யென்றுபின் சென்றனன்.

(இ - ள்.) தீமைகள்செய்த பாவிகளான அவ்விருவரையும், மிகப்பிரகாசம் வீசும் ஒப்பற்ற விமானத்தை வரவழைத்து, அதில் இருத்திக்கொண்டு செல்லவும், அதனைப்பார்த்த யான் விமானத்தை நெருங்கி, நீங்கள் எங்கே பிழைப்பீர்களெனப்பின்றொடர்ந்து போயினேன், எ - று. (அக)

என்னைப் பற்றியென் பாசத்தி றுக்கினர்
தின்னுஞ் சீற்றமொ டுந்திகி ரிக்கிரி

துன்னக் கொண்டோர் முழையிட் டிறுத்தினர்
மன்னு பூதரைக் காக்கவும் வைத்தனர்.

(இ - ள்.) என்னைப்பிடித்து என் பாசத்தினாலேயேயிறுக்கி, என்னைத் தின்று விடத்தக்க கோபத்தோடு, சக்கரவாளகிரிக்கருகே கொண்டுபோய் ஒரு குகையில் அடைத்தார்கள். நிலைபெற்ற பூதகணங்களைக்காவல் புரியவும் வைத்தார்கள். எ - று. (௮௨)

மற்றோர் பூதத்தை வாவெனக் கூவிநா
ணற்ற தென்றிசை யாங்கதுக் கீந்தனர்
குற்ற பாவ ரிருவரைக் கொண்டுபோய்
நெற்றி நேத்திரன் முன்னர்நி றுத்தினர்.

(இ - ள்.) மற்றொரு பூதத்தை வருகவென விளித்து, நான் பிரிந்த இயமபுரத்தை யரசு செய்யும் அதிகாரத்தை அப்பூதத்திற்கு அளித்தார்கள்; கொடுமை புரிந்த அப்பாவிகளிருவரையும் அழைத்துக்கொண்டு சென்று, நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் திருமுன்னே நிறுத்தினார்கள். எ - று. (௮௩)

இத்தி றத்தி னிகழ்ந்த வினையெலாஞ்
சித்த மோர்ந்தறி சித்திர குத்தனும்
பைத்த பாம்பணைப் பாற்கடற் றுஞ்சிய
வத்த னைத்தொழு தாங்கறி வித்தனன்.

(இ - ள்.) இவ்வாறாக நடந்த இவற்றையெல்லாம், தன் மனதில் ஆலோசித்தறிந்த சித்திர குத்தனும், படத்தோடு கூடிய சேஷ சயனத்திலே திருப்பாற் கடலில் யோக நித்திரை செய்யும் விஷ்ணுமூர்த்தியை வணங்கி அவ்விடத்தில் இச்செய்தியைத்தெரிவித்தான். எ - று. (௮௪)

பைந்து ழாய்நறு மாலைப் படலையோ
னுந்தி பூத்தெழு நான்முகத் தோனொடும்
வந்து வெள்ளிப் பருப்பத மன்னினன்
றந்தி மாமுகப் பிள்ளையைச் சந்தியா.

(இ - ள்.) பசிய துளவின் மணங்கமழும் மாலையணிந்த திருமால் தனது நாபிக்கமலத்திலுதித்த நான்கு திருமுகங்களையுடைய பிரம தேவனோடும் புறப்பட்டு வந்து வெள்ளி மலையாகிய கைலாயத்தை யடைந்தார். சிறந்த யானை முகமுடைய மூத்தபிள்ளையாரைச்சந்தித்து. எ - று (௮௫)

செய்ய வேண்டுவ யாவையுஞ் செய்தனர்
வெய்தி னென்னைப் பிடித்தது மேயவென்
பொய்யில் செய்கையோர் பூதற்களித்ததுங்
கைகொண் மாமுகற் குற்றுக் கழறினர்.

(இ - ள்.) செய்யவேண்டுவனவாகிய வந்தனை வழிபாடுகளையெல்லாஞ் செய்தனர். விரைவாக என்னைப்பிடித்ததும், எனக்குப்பொருந்தியிருந்த உண்மையோடு கூடிய என்றொழிலை மற்றொரு பூதத்திற்குக்கொடுத்ததும், துதிக்கையுடைய அவ்யானை முகக்கடவுளுக்குக்கூறினார்கள். எ - று. (௮௬)

தும்பி மாமுகத் தோன்றனந் தூதரை
வெம்பி மேல்விழுந் தானறி யாதுநீ

ரிம்ப ரெய்தினீ ரென்னலு மீர்ந்திரைப்
பம்பு பாற்கட லுதன் பகர்ந்தனன்.

(இ - ள்.) சிறந்த யானை முகமுள்ள விநாயகக்கடவுள், அந்த யமன் நமது தூதர்களாகிய சிவகணங்களின்மீது கோபித்து விழுந்தான். இதனை நீங்களுணராமல் இங்கே வந்தீர்கள் என்று திருவாய்மலர்ந்தருளவும், குளிர்ந்த அலைகளொலிக்குந் திருப்பாற்கடலுக்கிறைவராகிய திருமால் இப்படிச்சொன்னார்.

என்னை வேண்டுறி னிப்பிழை தீர்கெனப்
பின்ன ருஞ்சில சொற்றனன் பேதையோன்
முன்ன றிந்திலன் செய்யுமு யற்சியி
னின்னு மொன்றறி யான்புதி தென்றலும்.

(இ - ள்.) தேவரீர் அடியேனை விரும்பினால், இக்குற்றத்தைப்பொறுத்தருளவேண்டுமென்று, பின்னுஞ் சில வார்த்தைகள் சொல்லினர். மேலும் இவ்வியமன் மதியில்லாதவன். பண்டைய வழக்கம் உணர்ந்திலன். தன்னெழிலுக்குச்செய்யவேண்டிய முயற்சிகளில் ஒன்றனையும் இதுகாறும் தெரிந்திலன். புதியவனென்று சொல்லவும். எ - று. (அஅ)

ஐந்து செங்கைய வானைக் குழவியுங்
குந்து தாளச லாக்கனைக் கூவியே
வெந்தொ ழிற்கண வீரரி யமனைச்
சிந்து சூழ்கிரி யிக்கிரி யிட்டனர்.

(இ - ள்.) செம்மையாகிய ஐந்து திருக்கரங்களையுடைய யானைக்கன்றாகிய விநாயகப்பெருமானும், குந்து காலையுடைய அசலாக்கனெனும் பூதகண வீரனை விளித்து கொடுந்தொழிலுடைய பூதகண வீரர்கள் இயமனைக்கொண்டுபோய்க் கடல் சூழ்ந்த சக்கரவாளகிரியிலடைத்தார்கள். எ - று. (அகூ)

சென்று நீயவன் சேமந் திறந்தனை
யின்று கொண்டுட னெய்துதி யென்றலு
மன்றெனைக்கொண் டளித்தன னென்வினை
யொன்ற யானை முகவனைப் போற்றினேன்.

(இ - ள்.) நீ போய் அவன் சிறையைத்திறந்து, இப்போதே யழைத்துக்கொண்டு வருகவெனக்கட்டளையிடவும், அக்காலத்திலே என்னை யடிமைகொண்டு என்வினை யொழிய ஆட்கொண்டனர். யான் உடனே அக்கஜமுக கணேசனைத்துதி செய்தேன். எ - று. (கூ0)

என்னை நோக்கி நகைவிளைத் தீங்கிவ
டன்னை யின்னவன் றன்னைத் தளைப்படுத்
தின்னல் செய்தனை யீங்கிதர்க் கெய்திய
மன்னு நல்வினை யொன்றும னக்கொளாய்.

(இ - ள்.) அப்போது கணபதி என்னைப்பார்த்து நகைபுரிந்து, இங்குள்ள இவனையும் இவளையும் கட்டிவைத்துத்துன்பு செய்தனை. இவ்விருவர்க்கு முண்டான நிலைபெறுன புண்ணியமொன்றுள்ளது. அதனை யுன்மனதில் நினைத்திலை, எ - று. (கூக)

இவளொ ருத்தி யரசரில் லெய்திரு
ளவனொ ருத்த னவள்வயி னுயின்ன்

றவறி ழைத்தவர் தம்மிற் கலந்தனர்
கவரு ளத்திக ருப்பமுண் டாயினாள்.

(இ - ள்.) இவளொருத்தி மன்னர் வீட்டிலுதித்தாள். அவனொருத்தன் அவளிடத்திற் சேர்ந்தான், இவ்விருவரும் குற்றஞ்செய்தவர்களாய்த்தம்மிற் கலந்தார்கள். பலரையுங் கவரத்தக்க மனங்கொண்டவளாகிய இவள் கருப்ப மெய்தினள். எ - று. (௬௨)

மால்வி ளைத்ததுர் புத்தியை மாற்றிமென்
மேல்வி ளைத்தெழு காமவி ருப்பினாற்
சீல வேத வசுமதி செவ்வெழிற்
கோலம் வவ்வி யவனுடன் கூடினாள்.

(இ - ள்.) காமத்தை யுண்டுசெய்த துர்புத்தியென்பவனைப்பிரிந்து, மேன் மேலும் ஓங்கி யெழுந்த காம விருப்பால், புனிதமான வேதமுணர்ந்த வசுமதி யென்னும் வேதியனுடைய செப்பமாகிய அழகின் அலங்காரத்தை இச்சித் துக்கொண்டு அவனுடனே சேர்ந்தாள். எ - று. (௬௩)

அந்த ணாள னகத்திருந் தோர்தனி
மைந்த னீன்றனண் மாமறை யோனுயிர்
நந்தி னானிவண் மைந்தனை நாடுறாள்
புந்தி யோடுதுர் புத்தியை மேவினாள்.

(இ - ள்.) அவ்வந்தணன் மனையிற் சில நாளிருந்து ஒப்பற்ற ஒரு புதல் வனைப்பெற்றாள். சிறந்த அவ்வந்தணன் உயிரொழிந்தான். அப்போது இவள் தன் மகன் மேல் நாட்டமில்லாதவளாகி, சித்தத்துடன் மீண்டும் துர்புத்தியை யடைந்தாள். எ - று. (௬௪)

பங்க யக்கை வசுமதி பத்தினி
மங்கை காமதை மைந்தனை யேற்றனள்
சங்க ரன்னெனத் தந்தன ரப்பெய
ரிங்கி வர்க்குப் பெருங்கதி யீந்ததால்.

(இ - ள்.) வசுமதியின் பத்தினியாகிய தாமரை மலர்போலுங்கைகளை யுடைய மங்கைப்பருவம் வாய்ந்த காமதை யென்பாள், அப்புத்திரனை யெடுத் துக் கொண்டனள். அதற்குப்பெயர் சங்கரனென்றிட்டனள். அப்பெயரே இப்போது இவர்களுக்குப் பெரும்பதவியைத்தந்தது. எ - று, (௬௫)

யாவ ரேனு மிழிகுலப் பஞ்சமர்
பாவ காரிய ரேனுமெம் பண்ணவன்
மேவ ருந்திரு நாமமி லைந்துளோர்
தேவ ரேயவர் தேவரிற் சீரியோர்.

(இ - ள்.) யாவரானாலும், இழிகுலத்துதித்த பஞ்சமராய்ப்பாவத்தொழில் செய்பவரானாலும், எம்மிறைவராகிய சிவபெருமானது அடைதற்கரிய திரு நாமத்தை வகித்தவர்களே தேவர்கள். அவர்களே தேவர்களிற் சிறந்தவர்கள்.

பிள்ளை யானை முகப்பெரு மானெனக்
குள்ள வாறிது ணர்த்தலு முள்ளுறக்

தன்று மாவிந டுங்குறத் தாழ்ந்தனன்
வள்ளன் மாய னயனொடும் வாழ்த்தினான்.

(இ - ள்.) மூத்த பிள்ளையாகிய யானைமுக விநாயகப்பெருமான் இதனை எனக்கு உள்ளபடியே உபதேசிக்கவும், என்னுடலிலே யுலாவும் பிராணன் துடிக்கும்படி வணங்கினேன். வள்ளலாகிய திருமாலும் பிரமதேவரோடு துதிசெய்தனர். எ - று. (௯௭)

என்னை மாற்றி யிருத்திய வெங்கணந்
தன்னை மாற்றித் தனக்களித் தன்புடன்
மின்னெ யிற்றயி லந்தக மேவுநின்
பொன்ன கர்க்கினிப் போதியென் றனரோ.

(இ - ள்.) என்னை மாற்றிப்பதிலாக அமர்த்திய கொடிய பூதத்தைமாற்றி, பழயபடியே எனக்கென்றொழிலைக்கொடுத்து, அன்புடன் பார்த்து, மின்னலை வீசும் வேலைப்போன்ற பற்களையுடைய இயமனே! நீ வாழும் உன்னழகிய நகரத்திற்கு இனிப்போகுக வென்றனர். (௯௮)

சாந்து றுங்கை தலைதட வித்தனிப்
போந்த னன்றிருப் பூங்கம லாசனி
காந்த னம்பொற் கருடனு கைத்தனன்
சேந்த பங்கபச் செல்வனும் போயினான்.

(இ - ள்.) சிறந்த தாமரை மலர்ப்பீடத்தையுடைய திருமகளின் கொழுநனாகிய திருமால், சந்தனக்குழம்பு பொருந்திய தமது திருக்கரத்தால் என் சிரத்தைப்பிடித்து உச்சிமோந்து அழகிய பொன்னிறத்த கருடவாகனத்தைச்செலுத்திப்போயினர். செவந்த கமலாசனனாகிய பிரமதேவனும் போயினன். எ - று)

அல்லல்-வெஞ்சின மாளறிந் தல்லது
செல்லு றுதெனச் செப்புவர் சீரியோர்
புல்லை யேறுயர் புங்கவன் றூதரை
யொல்லை கண்டு தொழாதுருத் தேகினீர்.

(இ - ள்.) துன்பகாரணமாகிய கடுங்கோபம் ஆளைக்கொன்றாலன்றி யழியாதென்று மேலோர் சொல்லுவர். வெண்மையோடு கூடிய செந்நிறந்தங்கிய இடப வாகனத்தைச்செலுத்தும் சிவபெருமான் தூதர்களை [கணங்களை]க்கண்டு உடனே வணங்காமல் கோபித்துச்சென்றீர்கள். எ - று. (௪00)

பஞ்ச பாதக ராயினும் பாவமே
தஞ்ச மாகச் சரிப்பவ ராயினு
நஞ்ச யின்றவ னுமமு ரைப்பரே
லஞ்சு மஞ்சுமென் னெஞ்சக மஞ்சுமால்.

(இ - ள்.) ஐம்பெரும் பாவங்களைச்செய்தவர்களானாலும், பாவங்களையே தமக்குச்சார்பாகக்கொண்டு திரிபவர்களானாலும், ஆலால விடத்தைப்புசித்தருளிய சிவபெருமானது திருநாமத்தைச்சொல்வார்களானால், என் மனம் பயப்படும்! பயப்படும்! பயப்படும்! எ - று. (௪0௧)

எண்ணி யீதொன் றறிந்திலை யின்றள
வண்ண லஞ்சடை யானடி யாரெனிற்.

கண்ணிற் காணுமுன் கைதொழு தில்லையே
னண்ணு நம்மதி கார நமக்கல.

(இ-ள்.) பெருமை தங்கிய அழகிய சடையையுடைய சிவபெருமானுக்கு அடியார்களானால், அவர்களை உன் கண்களாற் காணு முன்னரே கைகூப்பி வணங்காவிட்டால் நம்முடைய அதிகாரம் நமக்குரித்தன்று. இவ்வொரே வுண்மையை யின்று வரை யறிந்தாயில்லை. எ-று. (௧௦௨)

எனக்கு மற்றிங் கிருக்க விடையிலை
நனைத்து ழாய்முடி நாயக னேடும்போய்ப்
புனற்கொ டுஞ்சடைப் புங்கவன் வாயிலை
வினைத்தி றங்கொடு காக்குதல் வேண்டுவேன்.

(இ-ள்.) எனக்கு இங்கிருக்க உத்தரவில்லை. குளிர்ந்த துளவமாலை யணிந்த முடியையுடைய விண்டுவுடன் சென்று, கங்கையை யணிந்தவளர்ந்த சடையையுடைய சிவபெருமான் திருக்கோபுரவாயிலைத்தொழிின் முயற்சியோடு காவல் புரிய வேண்டுவோன். எ-று. (௧௦௩)

நீடு கோடி நிரயமு நின்னது
நாடு நின்னது நன்னகர் நின்னதென்
றூட லந்தகன் காலற் கருகுறப்
பாடி ருத்தி யிதுபகர்ந் தானரோ.

(இ-ள்.) கோடிக்கணக்காகிய மிக்க நரகங்களும் உன்னுடையதே. என் நாடு முழுவதும் உன்னுடையதே. என் நல்ல நகரமும் உன்னுடையதே யென்று வெற்றிதங்கிய இயமன், அருகாகச்சமீபத்திலிருக்கவைத்து, காலனுக்கு இப்படிச்சொன்னான். எ-று. (௧௦௪)

உரைத்த வாய்மை யுணர்ந்தறி காலனு
மிரைத்த வச்ச மிவனுரை கீழ்ப்பட
நிரைத்து நிற்பன நெஞ்சக மஞ்சுவான்
வரைத்த டம்புயன் பின்சொல் வழங்குவான்.

(இ-ள்.) சொல்லிய இவ்வுண்மையைத்தெளிந்துணர்ந்த காலனும், அச்சத்தால் வார்த்தையாடிய இவ்வியமனது சொற்களுக்குக்கீழ்ப்பட்டிருக்கவும், தகுந்த சில வார்த்தைகளை, மலைபோற் பரந்த புயத்தையுடைய இயமன் சொல்லி முடித்தபின், மனமஞ்சிச்சொல்வானாயினன். எ-று. (௧௦௫)

சிவக ணத்துறை திண்டிறல் வீரரை
யவம தித்தில னாயினு மற்றையோர்
தவறி ழைத்தன னென்பரத் தன்மையர்
சிவரு நெஞ்சொடு மஞ்சுவன் யானென்றான்.

(இ-ள்.) சிவகணத்துள்ள திண்ணிய வலிதங்கிய வீரர்களை அவமதித்தே னில்லையானாலும், ஏனையோர் இவன் குற்றஞ்செய்தானென்று சொல்வார்களே யென்றுண்டாகிய மனத்தினால் நான் அஞ்சுகின்றேனென்று கூறினான். எ-று.

என்ற காலற் கியம னியம்புவான்
குன்ற வில்லி குலக்கணத் தாதரை

யன்றி நீமற் ெறாருவற்கு மஞ்சலை
யொன்று கேட்டி யுரைத்துமென் றோதுவான்.

(இ - ள்.) எனக்கூறிய காலனுக்கு இயமன் கூறுகின்றான். மலை வில்லி யாகிய சிவபெருமானது கணங்களாகிய தூதர்களையல்லாமல் நீ வேறொரு வருக்கும் பயப்பட வேண்டாம். ஒரு சரித்திரங்கேட்பாயாக. சொல்கின்றே னெனச்சொல்கின்றான். எ - று. (௧௦௯)

வஞ்சிவிருத்தம்.

பார்மட மங்கை பணைத்தோண் - மார்பணி யென்ன வயங்கும்
வார்திரை வாளை புரட்டு - மார்கலி சூழு மவந்தி.

(இ - ள்.) மூங்கிலையொத்த தோளையுடைய பூமி தேவியின் மார்பிலணிந்த ஆபரணமெனச்சொல்லும்படி பிரகாசிக்கும், நெடிய அலைகளால் வாளை மீன்கள் புரட்டப்படும் கடல் சூழ்ந்த அவந்தியென்னும் நகர மொன்றுண்டு, எ-று.

வாய்ந்தந கர்த்திரு மறையோன் . சாந்திக னன்புறு தநய
னேய்ந்தக லைக்கட லெல்லாந் - தோயந்த மறைக்குண சீலன்.

(இ - ள்.) சிறப்புப்பொருந்திய அவ்வவந்தி நகரத்திலுள்ள அழகிய வேதியனான சாந்திகனென்பவனுடைய அன்பு பொருந்திய புத்திரன், பொருந்திய நூற்கடல் முழுவதும் தேர்ந்த வைதிக வொழுக்குடைய புனிதன். எ - று.

அன்னவன் மேல்கட லருகோ - ருன்னுசி வாலய முளதாற்
பின்னிட மேவிய பெருநீர் - மன்னுத டங்கரை வரலும்.

(இ - ள்.) மேற்கடலருகே ஒரு சிவாலயமுண்டு. அச்சிவாலயத்தின் பின் பக்கலிலுள்ள விசேட நீர் நிலைத்துள்ள அக்கடற்கரையில் அப்புத்திரன் வரவும்.

நீடிய மாலை நினைத்தா - ுடின னத்துறை யன்னோன்
மாடு கிடந்தொரு வன்மீ - ேடிெய டுத்துயி ருண்ண.

(இ - ள்.) நெடிய திருமாலைத்தியானஞ்செய்து அக்கடற்றுறையில் நீராடினன். அங்கே பக்கலிலிருந்த ஒரு முதலை அதிவேகமாக வந்து அவனை விழுங்கி உயிர் நீக்க. எ - று. (௧௧௧)

மாதவ னுமம் வணங்கி - யேதமி லாவி யிழந்தான்
காதுக டுஞ்சின மோடென் - றூதர்தொ டர்ந்து கொணர்ந்தார்.

(இ - ள்.) திருமாலின் திருநாமங்களைக்கூறிப்பணிந்து குற்றமில்லாத உயிர் நீங்கியிருந்தான். கொல்லத்தக்க கொடிய கோபத்துடன், என் தூதர்கள் போய், அவனைக்கட்டிக்கொண்டு வந்தார்கள். எ - று. (௧௧௨)

சேயுயிர் சென்றது கேளாத் - தாயொடு தந்தை சலித்து
மேயுடன் மேவினர் தம்மோ - டேயது சொல்லியி றந்தான்.

(இ - ள்.) அவனது தாயுந்தந்தையும், தம் புத்திரன் உயிர் நீங்கியதைக் கேள்வியுற்று மனம் வருந்தி, அவனோடு கூடியிருந்து வந்த நண்பர்களை, அவனிறக்கும்போது யாது சொல்லிக்கொண்டிறந்தான். எ - று. (௧௧௩)

என்றலு மன்னரி ரங்கி - மன்றன் மலர்த்துள வோனை
யொன்றுக ருத்தொ டுரைத்தான் - கொன்றதி டங்கர் கொதித்து.

(இ - ள்.) என்று கேட்கவும், அந்தணர்கள் வருத்தமெய்தி, மணங்கமழுந் துளவமாலையணிந்த விஷ்ணுமூர்த்தியை ஒருப்பட்ட மனதோடு துதிசெய்தான். உடனே முதலை கோபித்துக்கொன்றது. எ - று. (௧௧௪)

என்னனு மன்னவ னென்சேய் - தன்னையவன் றருமென்று
வுன்னரு மம்ம ரொழிந்தான் - பன்னியு மன்ன பகர்ந்தாள்.

(இ - ள்.) என்று அந்தணர்கள் சொல்லவும், அச்சாந்திகன், என் புத்திரனை அத்திருமாலே வருவித்துக்கொடுப்பானென்று சொல்லி, எண்ணுதற்கரிய துக்க மொழிந்தனன். அவன் மனைவியும் அங்ஙனமே சொல்லினள்.

ஆவது போக வதன்பின் - மாவசு தேவர் வரத்தாற்
றேவகி சிற்றுத ரத்தி - லோவறு மாய னுதித்தான்.

(இ - ள்.) ஆகிய விது இப்படியாக அதன் பின்னர், சிறப்பு தங்கிய வசுதேவன் வரத்தினால் தேவகிதேவியின் சிறிய வயிற்றில், கெடுதலற்ற மாயாசொரூபியாகிய கண்ணபிரான் அவதரித்தனர். எ - று. (௧௧௬)

கண்படு கட்செவி முன்னு - வெண்பல பத்திர னென்னு
வொண்டொடி பக்க லுதித்தான் - றிண்டிறல் வீரர் சிறந்தார்.

(இ - ள்.) திருமால் யோக நித்திரை புரியும் ஆதிசேடன், இக்கிருஷ்ணவதாரத்திற்கு முன்னரே, யாவரும் எண்ணத்தக்க பல பத்திரராமனாக, ஒள்ளிய வளையலணிந்த அத்தேவகியிடம் அவதரித்தான். திண்ணிய வலியமைந்த வீரரிருவருஞ் சிறப்புற்றார்கள். எ - று. (௧௧௭)

கற்படு நெஞ்சொரு கஞ்சன் - சொற்கொடு வந்து தொடர்ந்த
மற்பொரு தாவி மடித்தா - ருற்பவ வைய முதைத்தார்.

(இ - ள்.) கல்போலுங் காடின்ய சித்தமுடைய ஒப்பற்ற கஞ்சனுடைய சொல்லை மேற்கொண்டு வந்துபோர் தொடங்கிய அசுரர்களை யெதிர்த்து அவர்களுயிரைக்கொன்று திரும்ப வருவார்களோவெனுஞ் சந்தேக மொழிந்தார்கள். எ - று. (௧௧௮)

பூதன்மு தற்பெயர் புக்கோ - ரோதரு சாசர ரெல்லா
மீதுறு விண்ணில் விடுத்தார் - தீதுறு தும்பி செகுத்தார்.

(இ - ள்) பூதன் முதலாகிய போருக்கு வந்த குற்றமுள்ள அசுரர்களெல்லாரையும் மேலேயுள்ள விண்ணுலகத்திற்குச் செல்லவிடுத்தார்கள் [கொன்றார்கள்.] கொல்ல விடுத்த குவலயாபீட மென்னும் யானையைக்கொன்றார்கள்.

காமரு சிந்தைக னன்றார் - மாமனை யோடிம டித்தார்
தாமரு தந்தையர் தாய - ரேமுற வல்லியி றுத்தார்.

(இ - று.) அழகிய மனத்திற் கோப மூண்டார்கள். தங்கள் மாமனாகிய கஞ்சனை வேகமாய்ப்போய்க்கொன்றார்கள். தாங்கள் மருவிய பிதா மாதாக்கள் இறுமாக்கும்படி, கஞ்சன் அவர்கட்குப்பூட்டியிருந்த விலங்கை முரித்தார்கள்.

போயவ னுவிபு ரட்டித் - தூயவ னுடுசி றந்தா
ராய்புரி நூலுப னயித்தார் - சேயபெ ருங்கலை தேர்வார்.

(இ - ள்.) பொய்க்கஞ்சனுயிரை யொழித்து, அக்கொடியோனூட்டிற் குடி புகுந்தார்கள். பூணூலணியும் உபநயனக்கிரியையையும் பொருந்தினார்கள். விரிவாகிய பிரபலமான நூல்களை யாராய்ந்தார்கள். எ - று. (கஉக)

சாந்திக னுற்றுழிச் சார்ந்தார் - நீந்துக லைக்கட லேனடி
யேய்ந்தன மென்னவி ரப்பப் - போந்தவ னன்புபு ரிந்தான்.

(இ - று.) மேற்கூறிய சாந்திகனென்னும் அந்தணனிடஞ்சார்ந்தார்கள். சாஸ்திரக்கடலை நீந்தத்தேடி வந்தோமென்று பிரார்த்திக்க, சாந்திகனும் அன்புற்று அதற்கிணங்கினான். எ - று. (கஉஉ)

ஆறு நாலறு பத்து - நாலுமு டித்துந வின்றார்
சீறு தெக்கணை கேளா - நூலுறு மார்பனு வன்றான்.

(இ - ள்.) ஒன்று சேர்ந்துள்ள அறுபத்துநான்கு கலை ஞானங்களையுங் கற்று முடித்து, விடை கேட்டார்கள். புனிதமாகிய தக்ஷிணை கேளாத உபவீதந் தங்கிய மார்பினையுடைய சாந்திகன் கண்ணனை நோக்கிக்கூறுகின்றான். எ - று.

என்னுயி ரேயதொர் மைந்தன் - முன்னர்நின் னாமமொ ழிந்தா
னன்னெடு ங்கட லாட - வின்னுயி ருண்டதி டங்கர்.

(இ - ள்.) என் உயிர்போன்ற புத்திரனொருவனிருந்தான். சில காலத்திற்கு முன்னர், உன் திருநாமத்தை ஸ்மரித்துக்கொண்டே, அப்பெருங்கடலில் நீராடுகையில் முதலை அவனுயிரைப்பருகியது. (கஉச)

அக்கும ரற்றரி லாமென் - றக்கம னத்தினு ரைத்தான்
மிக்கதொர் தேரின்வி ரைந்தார் - மைக்கட லையகன் வந்தான்.

(இ - ள்.) அக்குமாரனை வருவித்தளித்தால் தக்ஷிணையாகுமென்று நைந்த மனதோடு சொல்லினன். அவ்விருவரும் மேன்மை வாய்ந்த ஒருதேரில் உடனே யேறினார்கள். கரிய கடற்கிறைவனாகிய வருணன் வந்தான். எ - று. (கஉரு)

பிள்ளைத ரற்கெதிர் பேச - வுள்ளந டுங்கியு ரைப்பான்
வள்ளுகிர் வன்றலை வன்மீ - னள்ளல்பு தைத்தத ருந்தி.

(இ - ள்.) அப்புத்திரனைத்தரும்படி வருணனை நேரே கேட்க, வருணன் மனநடுக்கெய்திச்சொல்லுவான். கூரிய நகங்களையும் கடினமான தலையையுமுடைய முதலை அக்குமாரனைக்கொன்று சேற்றிற் புதைத்தது. எ - று. (கஉசா)

என்னவ ழற்கணி றைப்ப - வன்னத னைப்பிள வாக்கித்
தென்னிலை யென்னெதிர் சேர்ந்தா - ரின்னய மாகவி சைத்தார்.

(இ - ள்.) எனக்கூற, அவ்விருவரும் விழிகளில் நெருப்புப்பொறி பறக்க, அம்முதலையை இருகூறாகப் பிளந்து, தென்றிசையிலுள்ள என்முன்னேவந்து இனிமையாகவும் நயமாகவும் புதல்வனைத் தரச்சொன்னார்கள். எ - று. (கஉஎ)

யானதி னெஞ்சமி ரங்கிப் - போனவு யிர்ப்பொறை யோடு
மூனமி லாமறை யோனை - மானவர் தம்முனம் வைத்தேன்.

(இ - ள்.) நான் அவர்கள் வேண்டுகோளில் மனமிரங்கி, இழந்தவுயிரோடு அழிவில்லாத அவ்வந்தணச்சிறுவனை அவ்விருவர்க்கு முன்னர் வருவித்து விடுத்தேன். எ - று. (கஉஅ)

தேரின மைத்தனர் சென்று - ரோர்குரு வுக்குமு னுய்த்தார்
வார்கட லாடை வளைக்கும் - பாரர செய்தினர் பன்னாள்.

(இ - ள்.) அப்புதல்வனைத் தாமேறிவந்த தேரிலேற்றிக்கொண்டு சென்று ஒப்பற்ற தமது குருவின்முன் காணிக்கையாக விடுத்தார்கள். அவர்பால் விடைகொண்டு சென்று நெடிய கடலாடைபோர்த்த பூவுலகத்தைப் பலகாலம் அரசு செலுத்தினார்கள். எ - று. (௧௨௯)

மாயவ னென்னைவ ழுத்திப் - போயவு யிர்ப்பொறை பெற்று
னீயெனை யென்னநி னைந்தா - யெயது கேட்டரு ளென்றான்.

(இ - ள்.) கண்ணன் அப்போது என்னைத் துதிசெய்து, அவ்வந்தணச் சிறுவனது இறந்தவுயிரை மீண்டும் பெற்றுக்கொண்டனன். நீ விரும்பியதனைக் கேட்டருள்வாயாக வென்றனன். எ - று. (௧௩௦)

காமனை யன்றுக னன்றோ - னாமந வின்றவர்க் கல்லால்
யாமொரு வற்கெளி யேமோ - நீமன னஞ்சனி னைத்து.

(இ - ள்) அக்காலத்தில், காமனை யெரித்தருளிய சிவபெருமானது திருநாமத்தை ஓதுபவர்களுக்கன்றி, நாம் வேறொருவர்க்கும் எளியவர்களோ ? ஆதலால், நீ இதைக்கருதி மனதில் அஞ்சவேண்டாம். எ - று. (௧௩௧)

என்றிய மன்சில சொல்லக் - கன்றுக ருத்துறு காலன்
சென்றுறு சிந்தைதெ ளிந்தா - னன்றொடு முண்மை நயந்தான்.

(இ - ள்.) என்று சிலவார்த்தைகளை இயமன் சொல்ல, வருத்தமுற்ற மனமுடைய காலனானவன், கலக்கமெய்திய தன் மனந்தெளிந்தவனாய், மேற்சொல்லியவற்றின் நன்மையையும் சத்தியத்தையும் அறிந்து சந்தோஷித்தான்.

சீலனெ னுஞ்சிறு செல்வன் - மாலைவ ணங்கன் மறந்து
பாலவி லோசனர் பாதங் - காலமு ணர்ந்து களித்தான்.

(இ - ள்.) சீலனென்று சொல்லப்படும் அவ்வேதியச் சிறுவன், அதுமுதல் விஷ்ணுவின் வழிபாடுபுரிதலை மறந்து, நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருவடிகளை (காலை உச்சிமாலையென்னுந்) திரிகாலங்களிலும் தரிசித்து மகிழ்வெய்தினான். எ - று. (௧௩௩)

மைக்கடன் மாநில மன்னித் - தொக்க சிறப்பொடு துய்த்தா
னெக்கமெ லுங்கிளை யோடு - மக்கயி லாயம டைந்தான்.

(இ - ள்.) கரியகடல் சூழ்ந்த பூமியில் நிலைத்திருந்து, தொகுதியாகிய சிறப்புடன் போகங்களை யநுபவித்தவனாய், உறவினரெனுங் கூட்டத்தோடும் அந்தக்கைலாயபதவியை யடைந்தான். எ - று. (௧௩௪)

கலிநிலைத்துறை.

மற்று மோர்கதை நிகழ்ந்தன வரன்முறை கேட்டி
தெற்று வெண்டிரைச் சரையுவென் றொருநதி சிறக்கு
மெற்று வார்திரை யுலகுள வினையொழித் திடுவா
னுற்ற தன்கரை நந்தியங் கிராமமொன் றுளதால்.

(இ - ள்.) நடந்ததாகிய பிறிதொரு சரித்திரமுள்ளது. சாங்கோபாங்கமாகக் கேட்பாயாக. மோதுகின்ற வெள்ளிய அலைகளையுடைய சரையுவென்னும் சிறப்புத்தங்கிய ஓராறுள்ளது. எதிர்த்தேறுங் கொடிய அலைகள் தங்கிய அந்நதிக்கரையில், உலகினரது தீவினைகளை யகற்றும்படி நந்திக்கிராமமென்னும் ஓரழகிய நகரமுள்ளது. எ - று. (கரு௫)

அக்கி ராமத்தி னருமறை தந்தகோத் திரத்துட்
புக்க வேதிய ரிருவர்புட் கரனெனும் பெயரோன்
மிக்க மாநிலப் பாதக மவையெலாம் விரவி
யொக்க மேவிய வாக்கைய னிருவரி லொருவன்.

(இ - ள். அந்தக்கிராமத்திலே, அரியவேதியர் குலத்திலே பிறந்த வேதியர் இருவரிருந்தனர். அவரில், ஒருவன் புட்கரனென்னும் பெயர்வகித்தவன். அவன்பெரிய நிலவுலகிற் செய்யப்படும் பெரும் பாதகங்களெல்லாங் கூடியோருருவாய்ப் பொருந்திய தேகமுடையவன். எ - று. (கருசு)

ஒருவ னாயிரம் பெயருடை யமலனை யொருங்கே
கருதி யன்பொடு மென்புநெக் குருகுறுங் கருத்தான்
மருவ ருந்துழாய் மாலிகை மார்பினன் மனத்தாற்
பொருவ ருந்திரு வெட்டெழுத் தல்லது புகலான்.

(இ - ள்.) மற்றொருவன், ஆயிரந்திருநாமங்களையுடைய மலரகிதராகிய சிவபெருமானை ஏகமனதோடு தியானித்து அன்புடன் எலும்பும் நெக்குவிட்டுருகத்தக்க மனமுடையவனாகிய, மணங்கமழுந் துளவ மாலைதரித்த மார்பையுடைய திருமாலின் ஒப்பற்றுச் சிறந்த அஷ்டாக்ஷரத்தையன்றிப் பிறிதொன்றனைத் தியானிக்கான். எ - று. (கருஎ)

படமொ ராயிரம் பரப்பிய பாப்பணை யவற்கு
மடல விழ்த்திடு நறுமல ரருச்சனை வழங்கிக்
கடவுண் மற்றிலை யென்றுளக் கருத்தொடுங் கனிவா
னுடனி கழ்ந்திவற் பூசனை புரிந்தினி துவப்பான்.

(இ - ள்.) ஆயிரம் படங்களைப்பரப்பிய ஆதிசேடனாகிய சயனத்தையுடைய திருமாலுக்கு, இதழ்கள் விகசித்த மணந்தங்கிய மலர்களானருச்சனைபுரிந்து, வேறுகடவுளில்லை யென்னும் மனதோடுருகுவான். அதனோடு ஏனைத்தேவரையும் இகழ்ச்சிகூறி இத்திருமாலையே பூசைசெய்து இனிதாகக் களிப்படைவான். எ - று. (கருஅ)

அனைய காலையி லத்திரு மாநக ரதன்பாற்
புனைய நல்லறந் துறந்தவப் புட்கரன் றன்னை
நினையு மிக்கணங் கொணர்கென நானிகழ்த் திடலும்
வினைசெய் தூதர்போய் மயக்கினு வென்றனை விடுத்து.

(இ - ள்.) அக்காலத்தில், அந்தச்சிறந்த பெரியநகரத்தில், அலங்கரிக்கின்ற நல்ல தருமநெறியை யொழித்த அப்புட்கரனென்பவனை, எண்ணுகின்ற இக்கணத்திலேயே கொண்டுவருகவென்று நான் சொல்லியவுடனே, எனது ஏவல்புரியுந் தூதுவர்கள்போய் மயக்கத்தினாலே அப்புட்கரனை விட்டுவிட்டு,

புள்ளு யர்த்தவன் திருவடித் தாமரை போற்றி
யுள்ளி நெக்குறு வேதியற் கொணர்ந்தன ருணர்ந்து
வெள்ள வெம்படைத் தூதரை வெகுண்டன னெருநீ
ரெள்ளின் மாதவத் திவனையென் கொணர்ந்தனி ரென்று.

(இ - ள்.) கருடனைக் கொடியாக வுயர்த்திய திருமாலின் திருவடித்தாமரைகளைத் துதிசெய்து தியானஞ்செய்து நெக்குருகும் மற்றோரந்தணனைக் கொண்டுவந்தார்கள். அதனையறிந்து கணக்கில்லாத கொடிய ஆயுதங்களேந்திய என்தூதுவரைநோக்கி, நீங்கள் இகழ்வற்ற பெருந்தவமுடைய இவரையேன் கொண்டு வந்தீர்களென்று கோபமுற்றேன். எ - று. (௧௪௦)

எடுத்த பாதக னவனைவிட் டிவற்கொணர்ந் திடலாற்
கடுத்த சிந்தைவிட் டிவற்கொரு நன்னெறி காட்டி
விடுத்து விட்டன னுங்கவன் றன்னகர் மேவிப்
படுத்த பாம்பணைப் பள்ளியோற் பழித்திது பகர்வான்.

(இ - ள்.) மிக்கபாதகமுடையவனாகிய அப்புட்கரனை விடுத்து இவனை யழைத்துவந்தபடியால், இவன்மேற் கோபிக்கும் எண்ணத்தைவிட்டு இவனுக்கொரு நல்வழியைக்காட்டி விட்டுவிட்டேன். அவன் உடனே தன்னகரமடைந்து சேஷசயனத்தில் அறிதுயில்புரியும் திருமாலை நிந்தித்து இப்படிச் சொல்லுகின்றான். எ - று. (௧௪௧)

இறந்து ழித்தன திணையடித் தாமரை யெனக்குச்
சிறந்து நல்குமென் றின்றள வருச்சனை செய்தேன்
மறந்த ருந்திகி ரிப்படை நாயகன் மறந்தான்
றுறந்து ழிச்சிவ மன்றிமற் றில்லையோர் துணையே.

(இ - ள்.) இறந்தகாலத்தில், தமது உபயபாதங்களாகிய சிறந்ததாமரை மலர்களை எனக்குச் சிறப்போடு கொடுப்பாரென்று கருதி, இன்றுவரையில் அருச்சனைசெய்தேன், கொடுந்தொழிலைப்புரியும் சக்கரப்படைதாங்கிய திருமால் என்னைமறந்தனர். ஆதலால், உடல்விடுகையில், ஆன்மாக்களுக்குச் சிவமன்றித்துணையாயுள்ளது வேறில்லை. எ - று. (௧௪௨)

எனநி னைந்தணி நீற்றொடு மிலங்குற நின்றான்
புனைச டைப்பிராற் கினியன பூசனை புரிந்தான்
பனக மாநிலச் சிறப்பொடு மிருந்தனன் பன்னா
ளனகன் வைகுறுங் கயிலைபோய்க் கடைமுறை யடைந்தான்.

(இ - ள்.) என்று கருதி, அழகிய திருநீற்றோடு பிரகாசிக்க நடப்பவனாய், அலங்கரிக்கின்ற சடையையுடைய சிவபெருமானுக்கு இனியனவாகிய சிவபூசையைச்செய்தான். ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட பெரிய பூமியிற் பலகாலம் சிறப்புடன் வாழ்ந்திருந்தான். இறுதியாக, சிவபெருமான் எழுந்தருளியிருக்குங் கைலாயகிரியிற்போய்ச்சேர்ந்தான். எ - று. (௧௪௩)

ஆத லானுமற் றரிமுதற் றேவர்க்கு மஞ்சேன்
மாது பாகனை வழுத்துநர் மழுப்படை யவனைத்
தீதி னெஞ்சொடு நினைப்பவ ரவன்றிரு நாம
மீது கொண்டவ ரெதிர்ந்துறிற் பணிந்தடி வீழ்தி

(இ - ள்.) ஆனபடியாலும், திருமால் முதலிய மற்றத்தேவர்களுக்கும் அஞ்சவேண்டாம். உமாசமேதனாகிய சிவபெருமானைத்துதி செய்பவர்களும், மழுவாயுதந்தாங்கிய அவ்விறைவனைக்குற்றமில்லாத மனதோடு தியானஞ் செய்பவர்களும், அச்சிவபெருமான் திருநாமத்தைத்தமது பெயராகக்கொண்டவர்களும் எதிர் வருவார்களாயின், அவர்கள் பாதங்களிற் பணிவாயாக. எ - று.

இன்னு மோர்மறை யுனக்குள தியம்புவன் கேட்டி
கன்னி யம்பிகை யாங்கவள் கருணைவான் புதல்வர்
மின்னு சூற்படை நந்திவெள் விடைச்சிவ னடியார்
மன்னு காளர்மா சாத்தர்நம் வயிரவக் கடவுள்.

(இ - ள்.) வேறோரிகசியமுள்ளது. அதனையும் உனக்குச் சொல்லுவேன். கேட்டாயாக, அழியாமையுடைய உமாபிராட்டியும், அப்பிராட்டியின் திருவருள் மிகுந்த புதல்வர்களும், மின்னலைவீசுஞ் சூலாயுதமேந்திய நந்திதேவரும், வெள்ளிய இடபாரூடராகிய சிவபெருமானுக் கடியவர்களும், நிலைபெற்ற மகாகாளரும், சிறந்த ஐயனாரும், நமது வைரவக் கடவுளும். எ - று.

ஈங்கி வர்க்குள பெயரெவ ருரைக்கினு மிவரைப்
பூங்க ழற்றொழு தங்கிலை நெடுந்தொலை போதி
யாங்க வர்க்குள பெயரெவர் பொறுக்கினு மவருக்
கோங்கி ருங்கதி யுளதுமற் றங்கிலை யுரைக்கேன்.

(இ - ள்.) ஆகிய இவர்களுக்குள்ள திருநாமங்களை யாவர் சொன்னாலும், இப்படிப்பட்டவர்களை அழகிய பாதங்களிற் பணிந்துகொண்டு அப்போதே அங்கிருந்து நெடுந்தூரத்தே போய்விடக்கடவாய். அப்படிப்பட்ட அவர்களுக்குள்ள பெயர்களை யாவர் தரித்திருந்தாலும் அத்தகையினருக்கு உயர்வாகிய பெரிய முத்தியுண்டு. அத்தன்மையையுஞ் சொல்லுகின்றேன். எ - று. (கசசு)

மல்ல லம்பழ னத்தொடுஞ் சிறந்ததோர் மகத
வெல்லை நாட்டகத் தருமறைக் குலத்துவந் துதித்தான்
பல்பெ ரும்பவக் கிளையெலாம் விளைக்குமோர் பாதகன்
றொல்லை வல்லிருட் கங்குலிற் பிறர்மனை துழாவும்.

(இ - ள்.) அழகிய வளந்தங்கிய வயல்களோடு மேம்பட்ட மகதநாட்டின் ஓர் எல்லையில், அருமையாகிய வேதியர்குலத்தில் வந்து பிறந்தவன். பலவகைப்பட்ட பெரிய பாவத்தொகுதிக ளெல்லாவற்றையும் விளைவித்த பெரும் பாதகன். பழமையாகிய வலிய இருள்நிறைந்த இரவில் பிறர் மனைவியைத் தழுவுவான். எ - று. (கசஎ)

கொலைக்க டுந்தொழிற் கஞ்சலன் மதுக்குடித் துழலு
மலைக்கு மாக்களை யாறலைத் தரும்பொருள் கவரும்
புலைக்கு லத்தரிற் புலவுணுங் கண்மயம் பொருந்தா
னுலைத்த ழற்கணா னொளிபடக் கானகத் துறையும்.

(இ - ள்.) கொலையாகிய கொடுஞ்செயலுக்குப் பயப்படாதவனாய்க் கட்குடித்து உழல்வான். மிருகங்களைக் கொல்லுவான். பிரயாணஞ் செய்வோரைத் தடுத்து அவர்களது அரும்பொருள்களை யபகரிப்பான். நீசகுலத்திற் பிறந்தவர்களைப்போல மாமிசமுண்ணுவான். கொல்லனுலைக்களம்போலத் தீப்பொறி சிந்தும் விழியையுடையவனாய்த் தாட்சணியமில்லாதவன், காடுகளில் மறைந்து வசிப்பான். எ - று, (கசஅ)

அத்த னிக்கொலைப் பாதக னுங்கவ னொருநாண்
மைத்த காரிருட் கனைபெயன் மழைநடு நாளிற்
கைத்த சிந்தையக் கள்வனோர் கடிநகர் புகுந்து
மெய்த்த னிப்பொருள் கவர்தலுங் காவலர் வெகுண்டார்.

(இ - ள்.) அந்த ஒப்பற்ற கொலைப்பாதகனும், வெறுக்கத்தக்க மனமுடையவனுமாகிய அத்திருடன், அங்கே யொருநாள் மைபோலும் இருள் நிறமுடையதாய்க்கர்ச்சனையோடு கூடிய மேகம் மழைசொரியும் நடுராத்திரியில், ஓர் காவல்பூண்ட நகரத்தையடைந்து, உண்மையான ஒப்பற்ற பொருளைத் திருடவும், அங்கிருந்த காவலாட்கள் கோபமுற்றார்கள் எ - று. (கஉகு)

வெருவி யோடினன் காவலர் தொடர்ந்தனர் வெகுண்டு
துருவு கள்வனைக் காண்கிலர் சுவட்டடி தொடர்ந்தார்
கருவி யேந்திய கையினர் பிற்படக் களைத்தா
னொருவ னுங்கவன் றன்னொடு முடன்கலந் துற்றான்.

(இ - ள்.) அஞ்சியோடினன். காவலாளிகள் கோபித்துத் தொடர்ந்தார்கள். ஓடிய திருடனைக் காணாதவர்களாய்க் காற்சுவட்டடிபற்றித் தொடர்ந்தார்கள். ஆயுதந்தாங்கிய கையையுடையவர்களாய்ப் பின்தொடர்ந்தோடிச் சேர்ந்தார்கள். ஒருவன்மட்டும் அவனோடே தொடர்ந்தோடிச் சென்றான். எ - று.

உற்ற காட்டிடைப் பிடிபிடி யெனத்தொடர்ந் துற்றான்
மற்றி வன்குரல் கேட்புழி யொருவரி வேங்கை
முற்ற கன்புழை முழையகன் றிவனெதிர் முழங்கி
யொற்றை வான்பதத் தடித்தலுங் காவல னுலந்தான்.

(இ - ள்.) அவனை நெருங்கிய அக்காட்டிலே பிடிபிடியென்று சொல்லிக்கொண்டே தொடர்ந்துபோனான். அக்காவலாளனது ஓசையைக் கேட்கையில் வரிகளையுடைய ஒரு புலி மிக்ககன்ற துவாரத்தோடுகூடிய குகையினின்று இக்காவலாளியெதிரே உறுமி, பெரிய தனது ஒற்றைக்காலால் அடிக்கவும் அக்காவலன் மடிந்தான். எ - று. (கஙக)

துரந்த காவல னிறத்தலு மிவன்றுயர் துறந்தான்
பரந்த கானிலோர் படப்பையுட் கொதுங்கினன் பதுங்கிக்
கரந்து றப்புகு நெறியெலாங் காவலொற் றுணர்ந்தா
னரந்தை வெம்பசி யுடற்றலி னவணிகந் தகன்றான்.

(இ - ள்.) தன்னைத் துரத்திவந்த காவற்காரன் இறந்தவுடன், இத்திருடன் துயரமொழிந்தான். பரவிய அக்காட்டில் ஒரு கொல்லையிற் பிரவேசித்து ஒதுங்கி மறைந்திருந்து, தான் மறைவாகப் போகும் வழிகளிலெல்லாம் காவலாட்களுண்டோவென்று ஒற்றலாலறிந்துகொண்டான். துயரஞ்செய்யுங் கடும்பசி வருத்துவதால் அங்கிருந்து பிரிந்து புறப்பட்டான். எ - று. (கஙஉ)

வல்லி யந்தொகு மருவரை முடுக்கரின் வழிபோய்க்
கல்லி ருஞ்சுர நெடுநெறி யொருதனிக் கடந்தா
னெல்லை சென்றனன் கேரள நாட்டக முற்றான்
றொல்லை நல்லறம் புரியுமந் நாட்டகந் தொக்கான்.

(இ - ள்.) புலிகள் கூடிய அரிய மலைகளிலுள்ள குகைகளின் வழியேபோய், கற்கள் நிறைந்த பெரிய பாலைவனமாகிய மிக நீண்ட வழியைத் தனியே ஒருவனாகக்கடந்து மிகவிரைவாயோடிக் கேரளநாட்டிற் சேர்ந்தான். பழமையாகிய நல்ல தருமங்களைச் செய்யும் அக்கேரளநாட்டையுற்ற அக்கள்வன். எ-று

புலிதொ டர்ந்தவற் பதங்கொடு கோறலும் பொய்ம்மை
நலிவி யாக்கிர பாதனென் றொருதனி நாம
மலித ரச்சில நாள்கழித் தொழிந்தனன் மாண்டா
னெலிது ரந்தெழு பூசைபோ லெமர்பிடித் திழுத்தார்.

(இ - ள்.) புலி தொடர்ந்ததென்னும் அப்பதத்தை முதலாக அமைத்துக்கொண்டு கொலைசெய்தலையும் பொய் பேசுதலையும் நீங்கிய வியாக்கிரபாதனென்னும் ஒரு ஒப்பற்ற திருநாமம் தனக்குவழங்கும்படி சிலதினங்கள்சென்று தன் ஆயுள்நீங்கி யிறந்தான். எலியைத் துரத்திக்கொண்டு செல்லும் பூனையைப்போல் எமது தூதர்கள் அவனைப் பிடித்திழுத்தார்கள். எ - று. (க௩௪)

பிடித்தி ருந்திறற் புயவரை யிறுகுறப் பிணித்தா
ரடித்து ரப்பினர் புரந்தொறுங் குருதிதொட் டலைப்பான்
கொடிக்க யிற்றொடுங் கொணர்ந்தனர் சிவகணக் குலத்தோர்
துடித்து யர்ந்தனர் முன்மறித் தாரமர் தொடுத்தார்.

(இ - ள்.) பிடித்துப்பெரிய வலிதங்கிய தோள்களாகிய மலைகளை இறுகும்படி கட்டி அடித்துக் கர்ச்சித்தார்கள். உடல்முழுதும் உதிரம் பெருக்கெடுக்கும்படி கட்டிய பாசத்துடன் கொண்டுவந்தார்கள். உடனே சிவகணங்களாகிய கூட்டத்தினர் கோபாவேசமுற்றவர்களாகி ஆகாயவழியாய் முன்னேநின்று தடுத்து யுத்தஞ்செய்யத் தொடங்கினார்கள். எ - று. (க௩௫)

காலொ டிந்தனர் கண்மணி தகர்ந்தனர் கைபோய்
மேலெ ழுந்துகள் குருதியின் றலைப்புற வெருவிச்
சூல வெம்படை யிழந்தனர் நம்முடைத் தூதர்
பாலெ னத்தெளி கண்ணின ரெம்முழைப் படர்ந்தார்.

(இ - ள்.) நமது தூதர்கள் காலொடிந்தார்கள். கண்மணிகள் பெயர்க்கப்பட்டார்கள். கையறுபட்டு மேலெழுந்து பாயும் உதிரவெள்ளம் ஓயாதிழியப் பயந்து, பெரிய சூலாயுதத்தை யிழந்தார்கள். பால்போற்றெளிந்த விழிகளையுடைய சிவகணங்கள் எம்பாற் சேர்ந்தார்கள். எ - று. (க௩௬)

இரக்க மின்றிய வியாக்கிர பாதனை யெடுத்துப்
புரக்கு நல்லொளி மானமீ தேற்றினர் போனார்
வரப்பெ ருந்திறச் சிவகுலக் கணத்தவர் வானத்
துரப்பு துந்துமி முழக்குறக் கயிலைகொண் டுய்த்தார்.

(இ - ள்.) கிருபையற்ற வியாக்கிரபாதனைத் தூக்கி, யாவரையுங் காக்கும் நல்ல காந்தியுடைய விமானத்தின்மீதேற்றிச் சென்றார்கள். விரும்பினோர்க்கு வரங்களையுதவும் வல்லபமுடைய சிவகணத்தோர்கள், ஆகாயத்தில் தொனிக்கும் துந்துமியொலிக்கும்படி திருக்கைலாயத்திற்குக் கொண்டுபோய்ச் செலுத்தினார்கள் எ - று. (க௩௭)

வெள்ளி யங்கிரிப் பரஞ்சுடர் வியாக்கிர பாத
னுள்ளு றத்தரு கெனப்புகுந் தரனரு ளுவந்தான்

றெள்ளு கங்கைசூ டெம்பிரான் சிதம்பரத் தவைக்கு
ளௌ்ளி லெம்மடி யான்பெயர் பொறுத்தனை யென்று.

(இ - ள்.) வெள்ளி மலையாகிய கைலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான், வியாக்கிரபாதனை உள்ளழைத்துவருக எனக்கட்டளையிட, அவனுட்புகுந்து சிவபெருமான்றிருவருளுக்கு மகிழ்வுற்றான். தெளிவாகிய கங்காநதியை யணிந்த சிவபெருமான் சிதம்பரத்திலுள்ள சிற்சபையிலே நமது நடனத்தைச் சதாதரிசிக்கும் இகழ்வில்லாத நம்மடியவனது நாமத்தைப்பெற்றாயென்று.

அவனை யாரருள் புரிந்தளித் தாங்கவ ணிருத்திச்
சிவனி ருங்கதி தருதுமென் றருளுறச் சிறந்தா
னிவர்த ரும்பெருங் குருதியின் றலைத்துற வெம்மோர்
தவறி யோடினர் சிலர்சில ரெம்முழைச் சார்ந்தார்.

(இ - ள்.) அவ்வியாக்கிரபாதனை மிக்க கிருபைமிகுந்து அங்கிருக்கச் செய்து, பெரும்பதவி தருவோமென்று சிவபெருமான் அநுக்கிரகிக்கச் சிறப்பெய்தினான். எனது தூதர்கள் ஓடுகின்ற வுதிரவெள்ளஞ் சிந்திக்கொண்டிருக்கச் சிலர் தப்பித்துக்கொண்டு ஓடினார்கள். சிலர் எம்பால்வந்து சேர்ந்தார்கள்.

தாங்க ளாயிடை யுற்றன யாவையுஞ் சாற்றி
யேங்கி நின்றன ரங்கிலே யெழுந்தனன் சென்றே
னோங்கி மீச்செலுங் கொடுமுடிக் கயிலைசென் றுற்றேன்
றேங்கு கங்கைசூ டெம்பிரான் றிருவடி தெரிந்தேன்.

(இ - ள்.) தாங்கள் அங்குற்ற எல்லாத் துன்பங்களையுங்கூறி யேக்கமெய்தினவர்களாய் நின்றார்கள். நான் அப்பொழுதே புறப்பட்டுப்போய் உயர்ந்து மேலோங்கியெழுந்த கொடுமுடிகளையுடைய திருக்கைலாயகிரியை யடைந்தேன். நிறைந்த கங்கையணிந்த எமது சிவபெருமானது பாதங்களைத் தரிசித்தேன். எ - று. (கசுO)

தெரிந்து நூபுரச் சேவடி சிந்தையுட் சிறப்பப்
பரிந்து போற்றிநின் றேத்தலு மெம்மையாள் பரமன்
புரிந்த துன்பொடும் போந்தனை யாதெனப் போற்றி
விரிந்த மாநிலத் தவன்புரி பவமெலாம் விரித்தேன்.

(இ - ள்.) தெரிசித்துச் சிலம்பணிந்த சிவந்த பாதங்களை மனதிற்பதிய அன்போடு பணிந்து சந்நிதியினின்று தோத்திரஞ்செய்யவும், எம்மை ஆட்கொண்ட, சிவபெருமான் உண்டாகிய துயரத்தோடு வந்தாய்! அஃதியாது? என வினவ, உடனே துதித்து, பரந்த பெரிய பூமியில் அவ்வியாக்கிரபாதன் செய்த பாவங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்தேன் எ - று. (கசுக)

திருச்செ விப்புறத் தேற்புழி யெம்பிரான் சிரித்தெம்
மருட்பெ ருந்துற மடியவர் நாமமற் றெம்பாற்
கருத்து வந்திடு நாமமோ துற்றவர் கருத்தி
னுருத்த பாதகங் கனற்படு பஞ்சில்வெந் தொழியும்.

(இ - ள்.) எமது சிவபெருமான் திருச்செவியில் ஏற்றுக்கொண்டபோது, நகைத்தருளி, எமது திருவருளைப்பெற்ற அடியார் திருநாமங்களையும் எமக்கு விருப்பாயுள்ள திருநாமங்களையும் ஓதுகின்றவர்கள் மனமறிந்துசெய்த பாதகங்கள் தீயிற்பட்ட பஞ்சுபோல வெந்து நீங்கும் எ - று. (கசுஉ)

தேவ ருந்தொழுஞ் சின்மய சிதம்பரத் தவையுண்
மேவ ருந்தவ வியாக்கிர பாதனோர் பெயரை
யாவ றச்சுமந் திறந்தன னிவனைநீ யுறுத்தாய்
பாவி யாயினும் பயந்திலே யப்பெயர் பாராய்.

தேவர்களும் வணங்குகின்ற சிதம்பரத்திலுள்ள ஞானமயமாகிய சிற்சபையிலே வசித்துத் தெரிசிக்கின்ற அருந்தவமுடைய வியாக்கிரபாதனது ஒப்பற்றபெயரை நீங்காமற் றரித்திருந்திறந்தான். நீ யிவனைத் தண்டித்தாய். இவன் பாவியானாலும் இவனுககுரிய அப்பெயரைப் பாராமல் பயப்பட்டாயில்லை. எ - று. (௧௬௩)

ஆயி னின்னுழை யறப்பழு துளதென வருளும்
பாய்வி டைத்தனிப் பரமனைப் பின்னரும் பணிந்தே
னேய வென்பிழை பொறுத்தியென் றிவற்கரு கிருந்த
தூய வேற்படைச் சேவலங் கொடியினன் சொல்லும்.

(இ - ள்.) ஆனால் உன்னிடத்தில் நீதிவிரோதம் உண்டென்று அருள்புரிந்து, பாய்ந்து செல்லுமிடபத்தையுடைய வொப்பற்ற சிவபெருமானை, என்பாற் பொருந்திய தவறுபாட்டை க்ஷமித்தருளவேண்டுமென்று மறுபடியும் பணிந்தேன். அப்போது சிவபெருமானுக் கருகிலெழுந்தருளியிருந்த புனிதமாகிய வேலாயுதத்தையு மழகிய சேவற்கொடியையுமுடைய முருகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளுகின்றார். எ - று. (௧௬௪)

மறந்தொ ழிந்தனை முன்னொரு காலத்து மறைநூற்
றிறந்தெ ரிந்தருள் சதானந்த னெனுந்தவத் திறலோன்
கறங்கு வார்திரை யுலகெலாந் திரிதருங் காலை
யறன்கொள் சிந்தைய னின்னுடைத் தென்புல மடைந்தான்.

(இ - ள்.) நீ மறந்துவிட்டாய். முன்னொருகாலத்தில், வேதசாஸ்திரத்தினை யுணர்ந்த சதானந்தனென்னுந் தவவலியுடையவன், ஒலிக்கின்ற நெடிய கடல்சூழ்ந்த உலகமுழுவதுந் திரிந்துகொண்டிருக்கையில், தருமங் குடிகொண்ட மனமுடைய உனது இயமபுரத்திற்கு வந்தான் எ - று. (௧௬௫)

மண்டு மாநிர யத்திடைக் கிடப்பவர் மறுக்கங்
கண்டு கண்புதைத் திரங்கின னவரைமெய்க் கதியிற்
கொண்டு போவனென் றுளத்தொடுங் குறித்தனன் கூவித்
தொண்டை விம்மநின் றரகர கரவெனச் சொன்னான்.

(இ - ள்.) நெருங்கிய பெரு நரகங்களில் வீழ்ந்துள்ளவர்களது துன்பங்களைப்பார்த்து, கண்களை மூடிக்கொண்டு வருந்தினவனாய், இப்பாவிகளை உண்மையாகிய நற்கதியில் விடுவேனென்று தன் திருவுளத்திற் குறிக்கொண்டு, கழுத்து வீங்கும்படி அங்கே நின்று ஹரஹரஹரவென்று சொன்னான். எ - று. (௧௬௬)

அன்ன காலையி னிரயநீத் தெழுந்தன ரவர்க்குப்
பொன்னின் மானமவ்வ் வேறெனப் புகுந்துள பொருந்தி
யென்னை யாளுடை யெம்பிரான் கயிலைவந் திறுத்தார்
கன்ன லொன்றிலாண் டெய்தினை நீயுமிக் கயிலை.

(இ - ள்.) அப்பாவிகள் அப்போது நரகத்தைவிட்டுப் புறப்பட்டார்கள். பொன்மயமான விமானங்கள் தனித்தனி வந்திருந்தன. அவைகளிலேறி

என்னை ஆளாகவுடைய எமது சிவபெருமானது கைலாயத்திற்குவந்து சேர்ந்தார்கள். ஒரு நாழிகைக்குள்ளாக நீயும் அங்கிருந்து, இக்கைலாயகிரியை யடைந்தனை. எ - று. (கசுஎ)

நிரய முற்றுற வறிதுபட் டனவென நிகழ்த்தி
யிரைபு னற்சடை யெம்பிராற் றொழுதுமுன் றிசைத்தா
யரனு ரைத்தன வன்றுகொண் டயர்த்தனை கொல்லோ
நரக மில்லையென் னுமமோர்ந் தறிந்தவர்க் கென்னு.

(இ - ள்.) நரகங்களெல்லாம் வெறுமையாயுள்ளன வென்றுரைத்து, ஒலித்தின்ற கங்காநதியையணிந்த சடையையுடைய எமது சிவபெருமானை வணங்கித் திருமுன்னே நின்று விண்ணப்பஞ்செய்தாய். அதற்குச் சிவபெருமான், என் திருநாமங்களை யறிந்து தியானஞ் செய்வோர்க்கு நரகமில்லை யென்று அப்போது திருவாய்மலர்ந்தருளியதை மனங்கொண்டும் மறந்துவிட் டனையோ? எ - று. (கசுஅ)

எந்தை யெம்பிரான் றிருவரு ளுமமொன் றெடுத்துத்
தந்த நாவின ரெம்மினித் தலைமையிற் சிறப்பா
ரந்த நாமமற் றிருசெவி குளிர்ப்புற வறிந்தார்
பைந்து ணர்ச்செழுங் கொன்றையான் றிருவடிப் பதிவார்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் திருவருள்பொருந்திய திருநாமங்களுளொன்றனை யெடுத்துரைக்கும் நாவுடையவர்கள், எம்மைப்போல இவ்வகைப முதன்மையான சிறப்பெய்துவார்கள். அவ்வகைத் திருநாமங்களைத் தங்கள் இருசெவிகளும் குளிரும்படி கேட்டறிந்தவர்கள், பசிய பூங்கொத்தாக வுள்ளசெழிய கொன்றைமாலையுடைய சிவபெருமான் திருவடியிற்சேர்வார்கள்.

ஈத றிந்துமற் றறிகில ராமென விழைத்தாய்
தீது செய்தனை செயத்தகு மென்பன செய்யா
யாத லாலெதிர் நிற்கலை போதியென் றருள
மீது ளந்தனில் வெருவரத் தொழுதனன் மீண்டேன்.

(இ - ள்.) இதனை யறிந்திருந்தும் அறியாதவர்களைப்போல இவ்வகைக் காரியஞ்செய்தாய். செய்யத்தக்க காரியத்தைச் செய்தாயில்லை ஆதலால், நீ முன்னே நில்லற்க. செல்க எனத் திருவாய்மலர்ந்தருளியவுடனே, என் மனதில் பயம் உண்டாதலிற் பணிந்து அங்கிருந்து திரும்பினேன் எ - று.

இவையெ லாமுனக் கெடுத்தெடுத் திசைத்தன னினிநீ
யவையெ லாமுளர் தறிந்துதென் றிசைபுரந் தளிப்பாய்
நவையெ லாம்பொறுக் கினுமரன் றன்னுடை நாமந்
தவறி னப்பிழை பொறுக்கலன் முனிவுதந் தருளும்.

(இ - ள்.) இவையெல்லாவற்றையும் உனக்கு எடுத்தெடுத்துச் சொன்னேன். இனி நீ அவையெல்லாவற்றையும் மனத்திலுணர்ந்து இயமபுரத்தைக் காக்கக்கடவாய், சிவபெருமான் நாம் செய்யுங் குற்றங்களையெல்லாம் மனம் பொறுத்திருந்தாராயினும், தமது திருநாமத்திற்குத் தவறு செய்வார்களாயின் அக்குற்றத்தைப் பொறாதவராய்க் கோபஞ்செய்தருளுவர். எ - று. (கஎக)

என்று காலனுக் கியமனோர்ந் துணர்த்தின னிதன்மேற்
சென்ற சிந்தையன் காலனு மவ்வழிச் சிறந்தா

னன்று கொண்டவர் சிவன்றிரு நாமத்தை நவின்றோ
ரன்றி யார்பொறுத் துளரவர் பெருமையா ரளப்பார்.

(இ - ள்.) என்று, இவ்விதமாகக் காலனுக்கு இயமன் அறிந்து தெரிவித்தான். இதன்பிறகு, தெளிந்த மனமுடைய 'காலனும் அப்படியே நடந்து சிறப்பெய்தினன். நன்னெறியைக் கைக்கொண்டு சிவபெருமான் திருநாமத்தை எவர்கள் ஓதுகின்றார்களோ அல்லது அத்திருநாமத்தைத்தமது நாமமாகத்தரிக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் பெருமையை அளவுபடுத்த வல்லோர் யார்? (ஒருவருமிலர்.) எ - று. (கஎஉ)

பூதி பூசினு முருத்திர மாமணிப் புனையன்
மீது கொண்டவர் மிலையினு மஞ்செழுத் துண்மை
யோதி யோரினு மரன்றிரு நாமமோர்ந் துறினுந்
தீது தீர்த்தவர் முழுமுதற் றலைவரிற் சிறப்பார்.

(இ - ள்.) திருவெண்ணீறணிந்தாலும், சிறந்த உருத்திராக்கமணி வடத்தை யுடலிற் பூண்டாலும், பஞ்சாக்கரத்தை உண்மையன்போடு ஜபித்துத் தெளிந்தாலும், சிவநாமங்களை ஆராய்ந்தறிந்தாலும், அவர்கள் தங்குற்றங்களகன்று முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைப்போலச் சிறப்பெய்துவார்கள்.

எனவெ டுத்தெடுத் திருடிகட் கியம்பினன் சூதன்
மனனு வந்தவர் வரன்முறை கேட்டுள மகிழ்ந்தார்
புனனெ டுஞ்சடைப் புங்கவற் கினிதுறு விரத
மினியு ரைக்குதுங் கேட்டிரென் றிருந்தவ னிசைப்பான்.

(இ - ள்.) என்றிப்படி, சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்தெடுத்துக் கூறியருளினர். அவர்கள் மனமகிழ்ந்து முறைப்படிகேட்டுச் சித்தமுவந்தார்கள். கங்கையாறு தங்கிய நெடிய சடையையுடைய சிவபெருமானுக்கு இனிமைசெய்யும் விரதங்களை இனிச்சொல்லுவோம் கேட்பீர்களாக என்று பெருந்தவமுடைய சூதமுனிவர் சொல்வாராயினர் எ - று. (கஎச)

சிவநாமமான்மியச்சருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம். க0கங.

ஒன்பதாவது

சிவவிரதமான்மியச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தொல்லையவல் வினைகழித்துத் தருஞ்சோம வாரமா திரைநோன் பன்றிப், புல்லியவு மாமகேச் சுரஞ்சிவராத் திரிமுறையிற் பொருந்த நோற்கப், பல்வினையுந் தொலைத்திடுகே தாரமண விரதமிவை பரம னோன்பு, கொல்லுறுசூற் படைவிரத மெனுமெட்டுஞ் சிவவிரதங் குணிக்குங் காலே.

(இ - ள்.) சிவவிரதங்களைச் சொல்லுமிடத்தில், பழமையாகிய தீவினைகளை நீக்கி, நன்மையைத்தரும் சோமவார விரதம் திருவாதிரை விரதம், இதுவேயல்லாமல் இதனோடு சேர்ந்த உமாமகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், சிவாகம முறைக்குப்பொருந்த அநுஷ்டித்தால் பல பாவங்களையும் போக்கிக் காக்கின்ற கேதாரநாதர் விரதம், திருமண விரதம் ஆகிய விவற்றுடனே, சிவபெருமானுக்குரிய விரதமாகிய பகைவரை யழிக்கத்தக்க பாசுபத விரதம், அஷ்டமி விரதத்துடன் எட்டுமாம். எ - று. (க)

சித்திரைபூ ரணைப்பக்கஞ் சுக்கிரவா ரம்பயில்வார் தீமை தீர்த்து
முத்திதரு மைப்பசியுத் திரத்தொடுமா நவமியிவை மூன்றும் பச்சைத்
தத்தைமொழி யுமைவிரதந் தந்திமுகன் விரதம்வெள்ளி சதுர்த்தி யன்றி
யொத்துறுமார் கழிசட்டி யிவைமூன்று மாங்கவனுக் குரியநோன்பே.

(இ - ள்.) சித்திரைமாச பூர்வபக்ஷ சுக்கிரவாரமும், அநுஷ்டிப்போருடைய பாவங்களை விலக்கி மோட்சத்தைத் தரும் ஐப்பசிமாச உத்திர நக்ஷத்திரமும், மகா நவமியுமாகிய இம்மூன்றும் பச்சைக்கிளிபோலும் மொழியையுடைய உமாதேவி விரதங்களாம், யானைமுகமுடைய விநாயகக்கடவுளுக்குரிய விரதங்கள் சுக்கிரவாரமும் சதுர்த்தி திதியும் இவையன்றி மார்கழிமாசத்தில்வரும்சஷ்டி திதியும் ஆகிய இம்மூன்றும் அவருக்குரிய நோன்புகளாம். எ - று. (உ)

ஐப்பசிவெள் ளிக்கிழமை கார்த்திகைகார்த் திகைச்சட்டி யனைய
மூன்றுங், கொற்படுவேற் றனிக்குமர முருகவேள் விரதம்வெய்யோன்
குலவு தையிற், சொற்படுஞா யிறுசித்தி ரைப்பரணி யைப்பசியிற்
பொருந்த வந்நா, ளுற்பவிக்கு மிவைமூன்றும் வைரவற்குற் றிடுவிரத
முரைக்கின் மன்னே.

(இ - ள்.) ஐப்பசிமாச சுக்கிரவாரமும், மாசந்தோறும் வரும் கார்த்திகை நக்ஷத்திரமும், கார்த்திகை நக்ஷத்திரத்துடன் கூடிய சஷ்டிதிதியும் ஆகிய விம்மூன்றும், வெற்றிதங்கிய வேற்படை தாங்கிய முருகக்கடவுளின் விரதங்களாம். சூரியன் மகரராசியில் பிரவேசிக்குந் தைமாதத்தில் சொல்லப்படும் ஆதிவாரமும், சித்திரைமாச பரணி நக்ஷத்திரமும், ஐப்பசிமாச பரணி நக்ஷத்திரமும் என்றுண்டாய இம்மூன்றும் சொல்லுமிடத்தில் வைரவக்கடவுளுக்குப் பொருந்திய விரதங்களாம். எ - று. (௩)

பரித்திடுசெவ் வாய்விரதந் திறல்வீர பத்திரற்குப் பகுத்தநோன்பு,
தெரித்தவரன் முறைநோற்ற ரிருநிலத்துப் பெருநிதியச் செல்வ ராகி,
விரித்தபெருங் கிளைகளொடு மக்களொடு நலநுகர்ந்து மிகுநாள் வை
கிப், புரித்தபெருஞ் சடைப்பெருமான் றிருக்கைலை புகுந்துகதி புகுது
வாரால்.

(இ - ள்.) காக்கத்தக்க மங்களவார விரதம், வலிமைதங்கிய வீரபத்திரக்கடவுளுக்கு நியமித்த விரதமாகும். மேற்சொல்லிய முறைப்படி அநுஷ்டித்தவர்கள் பெரிய உலகத்திலே மிக்க ஐசுவரியந்தங்கிய செல்வர்களாகி, பரந்த பெரிய உறவினருடன் பிள்ளைகளோடும் இம்மைச் சுகங்களை யநுபவித்துப் பன்னெடுநாள் வாழ்ந்து, புரிந்துள்ள நெடிய சடையையுடைய சிவபெருமானது திருக்கைலாயகிரியிற் சேர்ந்து முத்தியை யடைவார்கள். எ - று. (௪)

ஈங்கிவைநோற் றிடுமுறைமை யின்னபரி செனவிசைத்து மினிது
கேண்மி, னோங்கியசந் திரவாரங் கார்த்திகைத்திங் களிற் றொடங்க

வுதய காலம், வீங்குபுனற் குடைந்துமுன்னர்க் குறைமுடித்துச் சிவ
பூசை விருப்பிற் செய்து, பாங்கொர்மறை யவனையன்னான் மன்னியையு
முடனழைத்துப் பரிந்து போற்றி.

(இ - ள்.) இங்கு இவ்விரதங்களை ஆசரிக்கும் ஒழுங்கு இவ்வகைத்தென்று சொல்லுகின்றோம். இனிமையோடு கேட்பீர்களாக, பெருமை மிக்க சோமவார விரதம் கார்த்திகை மாசத்தில் தொடங்கவேண்டும். அன்று உதயகாலத்தில் மிகுந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்து, முதலில் நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, சிவபூசையை விருப்புடனே நிறைவேற்றி, நற்குணமமைந்த ஒரு வேதியனையும் அவன் மனைவியையும் ஒன்றாக வருவித்து அன்போடு துதிசெய்து. எ - று. (௫)

அன்னவனைச் சிவனாகப் பாவித்தாங் கவளையுமை யாகப் பாவித்
துன்னருந்தண் டுலமுதல கொடுத்துத்தா னொருபோது நுகர வேண்டு
மன்னுகதிர் மறைந்தருந்தின் மிகநன்று சிவபூசை வரம்பி லாதார்
முன்னுரைத்த வழிமுயன்று சிவபரனா லயம்புகுந்து முன்னின் றேத்தி.

(இ - ள்.) அவ்வேதியனைச் சிவபெருமானாகப் பாவனைசெய்தும், அவன் மனைவியை உமாதேவியாகப் பாவனைசெய்தும, நினைததற்கரிய அரிசி முதலிய பொருள்களைத் தானமாகக்கொடுத்து, தான் ஒருவேளையுணவே கொள்ளவேண்டும். நிலைபெற்ற சூரியன் அஸ்தமித்த பிறகு (அவ்வொருவேளையை) புசித்தால் மிக விசேடம். சிவபூசை நியமனமுறாதவர்கள் முற்கூறிய முறையே முடித்து, சிவபெருமானுடைய திருவாலயத்தையடைந்து சந்நிதியின் முன்னின்று துதிசெய்து. எ - று. (௬)

அரனுக்குப் பஞ்சவமிர் தத்தினா லபிடேகஞ் செய்வித் தந்த
வரனுக்குப் பன்மலரால் வழிபட்டு மறையவர்போ சனமு நல்கிப்
பரனைச்சே வித்தொருபோ துண்கினுமா முபவாசம் பயின்று மற்றை
யிரவிற்கண் டுயிலினுமா மிப்படிநோற் பவர்கயிலை யெய்து வாரே.

(இ - ள்.) சிவபெருமானுக்குப் பஞ்சாமிர்தத்தினால் அபிஷேகஞ் செய்வித்து, அவ்விறைவனுக்குப் பல புஷ்பங்களால் அருச்சனை நடத்தி, பிராமண போசனமும் நடத்துவித்துச் சிவபெருமானைச் சேவைசெய்து ஒருவேளையே யுணவுகொண்டாலும் உத்தமமாம். அன்று முழுவதும் உபவாசம் [பட்டினி] இருந்து அன்றிரவில் நித்திரை செய்தாலும் உத்தமமே. இவ்வாறாக அநுஷ்டிப்பவர்கள் திருக்கைலாய பதவியை யடைவார்கள். எ - று. (௭)

இதினிகழ்ந்த தொருகதைசீ மந்தினியென் றரசர்குலத் தெய்தி
நின்றாண், முதனிகழ்த்து வரன்முறையாற் சோமவிர தந்தவறாண் முய
ன்று நோற்கும், புதுமறையோர் தமையுமவர் பன்னியையு மரனுமை
யிற் புகழ்ந்து போற்றிப், பதிவிரத முறைதிறம்பா ளிவ்வண்ண நல்லொ
ழுக்கிற் படரு நாளில்.

(இ - ள்.) இச்சோமவார விரத சம்பந்தமாக நடந்த ஒரு சரிதமுளது சீமந்தனியெனும் ஒருத்தி அரசர் குலத்தில் அவதரித்திருந்தாள். முற்சொல்லிய முறைமைப்படி சோமவார விரதாநுஷ்டானத்தைத் தவறாது நடத்திவந்தாள். புதுமை மிக்க அந்தணர்களையும் அவர் மனைவிமாரையும் சிவபெருமா

னுகவும் உமாபிராட்டியாராகவும் புகழ்ந்து தோத்திரஞ்செய்து, பதிவிரதா தர்மத்தில் முறை தவறாதபடி, இப்படி நல்லொழுக்கத்தில் நடக்குங்காலத்தில்.

பாரரச னொருவனிவ ளுளத்தியற்கை யளந்தறிவான் பரிவினோர்வா, னோரிருவ ரெனும்பிரம சாரிகளி லொருவனைப்பெண் ணுருவமாக்கித், தாரிவருங் குழலிவள்பாற் றிங்களினன் றேவினனத் தகையணோர்ந்து, சீர்கெழுபெண் ணுமையென்னத் தியானிப்பப் பெண்குறியிற் சிறந்தா னன்றே.

(இ - ள்.) உலகினையாளும் ஒரு மன்னவன் இச்சீமந்தனியின் மனவுறுதியை அளவிட்டறியவேண்டி அன்போடு தெரிந்துவர, இரண்டு பிரமசாரிகளில் ஒருவனைப் பெண் வடிவுடையவனாக அலங்கரித்து மலர்மாலையணிந்த கூந்தலையுடைய இச்சீமந்தனிபால் அனுப்பினான். சீமந்தனி அப்பிரமசாரியைக்கண்டு, சிறப்பு மிகுந்தபெண் வடிவினனை உமாபிராட்டியாகப் பாவனை செய்ததால் அவன் பெண்குறியுற்றவனாய்ச் சிறந்தான். எ - று. (கூ)

வினையறநோற் றுளவசிட்டன் சோமசன்மன் றன்மவீ ரியனோர்கற்க, வினையவிர தத்தினைநோற் றருந்ததியை யரும்பொருளைக் கதியையீன்ற, தநயரைப்பெற் றினிதுவந்தா ரின்னுமொரு கதைநிகழ்ந்த தன்மை சொல்கே, னமறைச்சத் தியசந்தற் கொருமைந்தன் விராடனென்பே னெறியை நீத்தோன்.

(இ - ள்.) தீவினைநீங்கத் தவஞ்செய்த வசிஷ்டரும் சோமசன்மரும் தன்மவீரியரும் கற்கரும் இந்தச் சோமவார விரதத்தை அநுஷ்டித்து, முறையே அருந்ததியையும் பெருஞ்செல்வத்தையும் நற்கதியையும் புதல்வர்களையும் பெற்று இனிதாக வாழ்ந்தார்கள். இன்னுமொரு சரிதம் முன்பு நடந்துள்ளது. சொல்லுகின்றேன். தொகுதியாகிய வேதங்களுணர்ந்த சத்தியசந்தனென்பவனுக்கு விராடனெனும் பெயருடைய ஒரு குமாரனிருந்தான். அவன் சன்மார்க்கந் தவறினவன். எ - று. (கo)

கள்ளுண்பான் புலவுதின்பான் காரிருளிற் பிறர்மனைபோய்க் கவருமோர்நாட், புள்ளுண்பூந் தொடைக்குழலார்க் கெடுத்தபொருள் கொடுத்தணைவான் புகுத லோடும், வள்ளுண்கோற் சிலைவயவர் காவலர்கண் டிடைதொடர மழையி னோடி, முள்ளுண்கா னகம்புகுந்தானரும்பசியா னுதரவங்கி மூள நின்றான்.

(இ - ள்.) அவன் கட்குடிப்பான், புலால்புசிப்பான், கரிய இருட்காலத்திற்போய் அன்னிய மாதரைக் களவிற் புணர்வான். ஒருநாளில் வண்டுகள் தேனுண்ணும் மலர்மாலையணிந்த கூந்தலையுடைய சோரமங்கையருக்குத் தான் திருடிய பொருளைக்கொடுத்துக் கலக்கும்படி களவுசெய்யச் சென்றபோது, கூரிய அம்புபூட்டி வில்லைத்தாங்கிய வீரர்களான காவலர்கள் இவனைப் பின்றொடர, மழையில் நனைந்தோடிச்சென்று முட்கள் நிறைந்த காட்டிற் சேர்ந்தான். பெரும்பசியால் உதராக்கினி மிக்கெரிய நின்றான். எ - று. (கக)

அன்றுகதி தருஞ்சோம வாரமத னுண்மையிவ னறியா னந்நாட், கன்றுசினப் படவரவம் பற்புதையக் கடித்துவிடங் காலப்பட்டா, னென்றுணர்ந்த கடுமறலி விடுதூதர் பாசமெடுத் தெறிந்து வீசிக், குன்றனைய பணைத்தடந்தோள் பிணித்திறுக்கி நெடுகிரயங் கொடுசெல் காலை.

(இ - ள்.) இது நடந்த அந்நாள் கதியளிக்கத்தக்க சோமவாரமாம். அவ்வாரவிசேடத்தை யிவனறியான். அந்நாளிலே அக்காட்டில் கோபம்பொருந்திய படத்தோடுகூடிய பாம்பு தன் பல்லூன்றக் கடித்து விடங்கக்க இறந்தான். இதனையறிந்த கொடிய நமனால் விடப்பட்ட தூதர்கள் பாசத்தை வீசியெறிந்து, மலைபோன்ற பூரித்த தோள்களைச் சேர்த்துக்கட்டிப் பெரிய நரகங்களில் அழைத்துக்கொண்டு போகுங்காலத்தில். எ - று. (கஉ)

அறிந்தசிவ கணத்தலைவ ரெதிர்புகுந்தா றலைத்தவரை யடர்த்துச் செம்பொற், செறிந்தமணி மானத்து விராடனையேற் றினர்கயிலை செல்லுங் காலை, மறிந்தியம தூதரவற் கவையுரைப்பத் தென்றிசையோனவர்பின் வந்தா, னெறிந்துயிர்கொன் றிடுபாவிக் கிதுசெய்வ தியல்பலவென் றிசைத்துப் பின்னும்.

(இ - ள்.) இவற்றையறிந்த சிவகணத்தலைவர்கள் எதிர்சென்று வழிமறித்து அவர்களைக்கொன்று, செம்பொன்னிற்பதித்த இரத்தினங்களாலான விமானத்தில், விராடனை யேற்றிக்கொண்டு திருக்கைலைக்குச் செல்லுங் காலத்தில், அத்தூதுவர்கள் திரும்பிச்சென்று இதனை இயமனுக்குச் சொல்லவும், இயமன் அத்தூதுவர் பின்னே தொடர்ந்துவந்து, ஆயுதங்களை யெறிந்து உயிர்க்கொலைசெய்யும் பாவிக்கு இப்படிச்செய்வது தகுதியன்றென்றுசொல்லி, பின்னும். எ - று. (கங)

பாதகமென் றுள்ளவைமற் றெவற்றினுக்கு மிவனொருவன் பற்றாநின்றான், மீதகுபுன் றசையனைத்தும் பிறவுயிர்கொன் றெடுத்துமிசைவீக்க மிந்தத், தீதகத்தோன் றெய்வவிமா னந்தொடுதற் கியலானென் செய்தீ ருள்ளப், பேதகத்தி னிதுபுரிந்தீ ரிவனுழைப்புண் ணியமுளவேற் பேசு கென்றான்.

(இ - ள்.) பாதகங்களென்று சொல்லப்பட்டவை எல்லாவற்றிற்கும் இவனே ஒருபற்றுக்கோடா யிருந்தான், மிகுந்த இழிவாகிய மாமிசங்களையெல்லாம் பிறவுயிர்களைக் கொன்று தின்னும் விருப்பமுடைய இந்தக் கடினசித்தமுடையவன், தெய்வீகம்வாய்ந்த விமானத்தைத் தொடுதற்கும் பாத்திரனுகான். யாது செய்தீர்கள்? மனவிகற்பத்தினாலேயே இப்படிச் செய்தீர்கள். இவனிடத்திற் புண்ணியகருமங்கள் இருக்குமாயின் சொல்வீர்களாகவென்றான். எ - று. (கச)

மேற்படி வேறு.

சோம வாரநா ளிருளிடைக் களைபெய றோய்ந்தனன் கடுங்கானிற்
காம ரொண்கனி கிழங்கிவை யருந்தின னுண்பன கானுல்
வேம லங்கெரி விழிசொரி படவராக் கடித்துற வீந்துற்றான்
போம ரும்பிறப் பருந்தவ மிருந்தவா கயிலையிற் புகுகின்றான்.

(இ - ள்.) சோமவாரத்தில் நடுராத்திரியில், கர்ச்சனையோடு கூடிய மழையிலே மூழ்கினான். கொடிய காட்டிலே உணவுப்பொருள்கள் கிடைக்காமல் அழகிய பிரகாசமிக்க கனிகள் கிழங்குகள் முதலிய இவற்றைப் புசித்திருந்தான். உட்டினமிக்கு அசைகின்ற தீப்பொறிகள் கண்களிற் சிந்தும்படி படத்தையுடைய பாம்பு கடித்தலால் இறந்தான். அப்படியிறந்த அரிய அப்பிறவியில் மேம்பட்ட தவப்பயன் அவனுக்கு உண்டாயிருந்தபடியால், அவன் திருக்கைலைக்குப் போகின்றான். எ - று. (கரு)

ஏழை பங்கினன் றிருவருள் பெற்றனன் கயிலையி னினிதூழி
வாழி வாழ்ந்துறுங் கடைமுறை யெம்பிரான் றிருவடி மலர்சேரும்
பாழி வெம்பகட் டந்தக வென்கொலெம் பிறகுறப் படருற்றா
யாழி நிற்குதி யல்லையேற் பிழைவரு மென்றிசைத் தவர்போனார்.

(இ - ள்.) உமாசமேதராகிய சிவபெருமானது திருவருளைப் பெற்றான். கைலாயத்தில் கற்பகாலம்வரையில் இனிமையாக வாழ்ந்திருப்பான். இறுதியில் எமது சிவபெருமானது திருவடித் தாமரையைப் பொருந்துவான். வலிதங்கிய கொடிய எருமைக்கடாவை வாகனமாகவுடைய இயமனே! நீயேன் எங்கள்பின்னே தொடர்ந்து வருகின்றாய்? கட்டளைபோல நிற்பாயாக. அல்லாவிடிற் குற்றமுண்டாகுமென்று சிவகணங்கள் சொல்லிச் சென்றார்கள். எ - று.

செய்ய கோன்முறைத் தென்றிசைக் கிழவனுந் தன்றிசை செலலுற்றான்
றெய்வ மானமும் விராடனு மெம்பிரான் கயிலையிற் செலப்பெற்றான்
பைய ராவணி யான்றிரு வருளினா லூழிகள் பலபோக்கிப்
பொய்யில் வான்கதி புகுந்தன னதனிலை யாவரே புகல்கிற்பார்.

(இ - ள்.) நீதியோடுகூடிய செங்கோலையுடைய இயமனும் தனது தென்றிசைநோக்கிச் சென்றான். தெய்வ விமானத்துடன் விராடனும் எமது சிவபெருமான் எழுந்தருளிய திருக்கைலையிற் போகப்பெற்றான். படத்தையுடைய சர்ப்பாபரணராகிய சிவபெருமான் திருவருளினாற் பல்லூழி காலங்கழித்து உண்மையாகிய சிவகதியடைந்தான். அச்சோமவார விரதத்தின் தன்மையை எவர்தாம் சொல்லவல்லவர்? எ - று. (௧௭)

சந்தி ரத்தனிப் பெயரினான் மற்றிது நோற்றலுந் தனிநாதன்
வந்தி ரக்கமுற் றுன்றிறத் துருகினம் வேண்டுதி வரமென்னா
இந்தி ரப்பெரும் பதவியோ வன்றிமற் றெம்மடி யவர்பேறோ
சுந்த ரத்திரு நாயகன் முதலியோர் முதன்மையோ சொல்லென்றான்.

(இ - ள்.) சந்திரனென்னும் ஒப்பற்ற பெயரையுடையவன், இச்சோமவார விரதத்தை ஆசிரயிக்கவும் ஒப்பற்ற சிவபெருமான் றிருவருள்சுரந்து பிரசன்னராய் உன்பாலிரக்கமுற்றோம். வேண்டிய வரங்களைக் கேள் என்றும், இந்திரனது பெரிய.பதவியோ அல்லது எமது அடியவர்கள் பதவியோ அழகுள்ள திருமகள் கொழுனனான திருமால் முதலினோரது தலைமைத் தன்மையோ? அதனையுடனே சொல்லக்கடவாயென்றனர்: எ - று. (௧௮)

என்ன தாகிய பெயருடைக் கிழமையி னியலுநின் றிருநோன்பு
நின்ன தாகிய வருளினென் பெயரொடும் வழங்குவா னினைகின்றே
னன்ன வாறளித் தருளெனக் கேட்டலு மருள்புரிந் தருளிப் போய்ப்
பொன்ன லர்ந்தெழு கொன்றையஞ் சடையினான் கயிலையங் கிரிபுக்கான்

(இ - ள்.) அடியேன் பெயருற்ற வாரத்தில், பொருந்திய தேவரீரது சிறந்த விரதத்தைத் தேவரீர் திருவருளால் அடியேன் பெயரோடும் வழங்கிவரும்படி யெண்ணுகின்றேன். அவ்வாறே யநுக்கிரகிக்கவேண்டுமென்று விண்ணப்பிக்கவும், திருவருள்செய்து பொன்போல் மலர்ந்து ஓங்கிய அழகிய கொன்றைமாலையணிந்த சடையையுடைய சிவபெருமான் திருக்கைலாயமலையையடைந்தனர். எ - று. (௧௯)

பட்ட ராகனென் றொருதிரு மறையவன் வறுமையிற் புரிவுற்றான் [ற்
றொட்ட கார்த்திகைத் திங்கண்முற் றிங்களிற் றொடுத்தியன்முறையானோ

திட்டி ரும்பொரு ளெய்தினன் பன்மகப் பெற்றன னிதழிப்பூ
மட்ட லர்ந்தெழு வேணியான் கயிலைபோல் மன்னிவான் கதிபெற்றான்.

(இ - ள்.) பட்டராகனென்னும் பெயர்வாய்ந்த ஒரு சிறந்த அந்தணன் தரித்திரத்தால் வருந்தினவனாகித் தொடர்ந்துவரும் கார்த்திகைமாதம் முதற் சோமவாரத்தில் ஆரம்பித்து விதிமுறைப்படி இவ்விரதாநுஷ்டானஞ்செய்து பெருந்திரவியமடைந்து, பல புதல்வரைப்பெற்று, கொன்றைமலரின் மணமானது மிகுந்து விளங்குஞ் சடையையுடைய சிவபெருமானது திருக்கைலைக்குப் போய் நிலைத்துப்பெரிய முத்தியெய்தினான். எ - று. (௨௦)

ஆத லாலியற் சோமவா ரத்தினை நோற்பவ ரகன்ஞாலத்
தீது தீர்த்தனர் பல்வள நுகர்ந்தனர் சேவுடைப் பெருமானுக்
கோது மீதுபோ லுவந்தநோன் றில்லையா லுவகையிற் றலைநின்றா
ரீது நோற்பவ ரிக்கதை கேட்பவர் கயிலைவீற் றிருப்பாரே.

(இ - ள்.) ஆதலால், பொருந்திய சோமவார விரதத்தை யநுஷ்டிப்போர் இடமகன்ற பூமியில் துன்பம் நீங்கினவர்களாய்ப் பல போகங்களையு மநுபவித்தவர்களாவார்கள். இடபவாகனமுடைய சிவபெருமானுக்கு இப்போது சொல்லிய இச்சோமவார விரதத்தைப்போல் விருப்பமுள்ள விரதம் வேறொன்றுமில்லை. அவ்விதறவர் இவ்விரதத்தில் மிக்க விருப்பம் வைத்திருக்கின்றனர். இவ்விரதத்தை யநுஷ்டிப்பவர்களும் இச்சரிதத்தைக்கேட்பவர்களுந் திருக்கைலாயகிரியில் வீற்றிருப்பார்கள் எ - று. (௨௧)

கலிவிருத்தம்.

ஆதிரை நோன்புள தென்ற றைந்தனந்
தீதற நோற்றிடு முறைமை செப்புகே
மேதகு மார்கழித் திங்கண் மேவரு
கோதறு மாதிரை குறுகும் வைகலின்.

(இ - ள்.) திருவாதிரை விரதமொன்றுளதென்று சொன்னோம். அவ்விரதத்தைக்குற்றமற நோற்கும் வகையைச்சொல்கின்றோம். மேன்மை தங்கிய மார்கழி மாசத்தில் வருங் குற்றமற்ற திருவாதிரை நக்ஷத்திரங் கலக்குந்தினத்தில். எ - று. (௨௨)

காலையி லீசனைக் கருத்து ளோர்ந்துநற்
கோலநீ ராடிய பின்னர்க் கோதறு
வாலநீ றணிந்துசெய் மரபு நேர்ந்துசென்
றாலய மடைந்துசூழ்ந் தரனைப் போற்றியே.

(இ - ள்.) பிராதக்காலத்தில், சிவபெருமானை மனதில் தியானஞ்செய்து, நல்ல அழகிய சலத்தில் ஸ்நானஞ்செய்த பிறகு, குற்றமற்ற தாவள்யமான திருநீறு அணிந்து செய்யவேண்டிய நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு போய், சிவாலயத்தை யடைந்து பிரதக்கணஞ்செய்து சிவபெருமானைத் துதிசெய்து. எ - று. (௨௩)

ஈசனுக் கருளபி டேக மேற்றுவித்
தாசினெய் வேத்தியக் காவ தீந்தவற்

தேசறு நெய்விளக் கேற்றி யீசனைப்
பூசனை யாற்றுவித் தகத்துப் போற்றியே.

(இ - ள்.) சிவபெருமானுக்கு அபிடேகம் நடப்பித்து, குற்றமற்ற நிவேதனத்திற்கு வேண்டியவற்றைத் தந்து அப்பெருமானுக்கு ஏசுதலற்ற, திருநெய் விளக்கேற்றி வைத்து அப்பெருமான் பூசையை முடிப்பித்து மனதிலுந் தியானஞ் செய்து. எ - று. (உ௪)

இம்முறை தாண்டவேச் சுரற்கு மேய்ந்தபின்
செம்மையி னவனடி சிந்தை செய்துபோய்த்
தம்மனை புகுந்துண றவிர்ந்து வைகியே
வெம்மைவெங் கதிரெழும் விடியல் வைகலின்.

(இ - ள்.) இவ்வகையாக நடராசப்பெருமானுக்குஞ் செய்வித்த பின்னர், செவ்விய அப்பெருமான் பாதங்களைச் சிந்தனைசெய்து போய், தமது இருக்கையை யடைந்து உணவாதிகளை நீங்கியிருந்து, வெப்பமிகுந்த சூரியோதயமாகும் விடியற்காலத்தில, எ - று. (உ௫)

தெண்புனல் குடைந்துநீ றணிந்து செந்தழற்
கண்படு நுதலவற் பணிந்து கைதொழூ
தெண்படு மறையவர்க் கடிசி லீந்துபி
னுண்பன பாரணை முவந்து கொள்வரே.

(இ - ள்.) தெளிந்த நீரில் ஸநானஞ்செய்து, திருவெண்ணீறணிந்து அக்கினிக்கண்ணையுடைய நெற்றிவாய்ந்த சிவபெருமானைப்பணிந்து, மதிக்கத்தக்க அந்தணருக்குக்கைகுவித்து வணங்கி அன்னமளித்து, அதன் பின்னர்ப் பாரணஞ் செய்தற்கு (உண்டற்கு) யோக்கியமானவற்றைச் சந்தோஷித்துண்பார்கள்.

செவ்வழிச் சின்மயச் சிதம்ப ரத்தலத்
திவ்வழி யிந்தநோன் பியற்று வாரவர்
வெவ்வழித் தன்மைய வினையி னீங்கிமற்
றுய்வழி யருங்கதி யொடுங்கு வார்களே.

(இ - ள்.) செவ்வையாகிய வழியைக்காட்டும் ஞானமயமாகிய சிதம்பர க்ஷேத்திரத்திலே, இவ்வகையாக இந்த விரதத்தை ஆசரிப்பவர்கள், கொடுந் தன்மை யனவாகிய தீவினைகளினின்றும் நீங்கி, கடைத்தேறும் வழியாகிய அரிய முத்தியில் ஐக்கியமாவார்கள். எ - று. (உ௭)

அந்தமின் மார்கழித் திங்க ளாதிரை
வந்தநாட் சிதம்பரத் தலத்து மன்னுவா
ரிந்திரன் முதலிய தேவர் யாரினு
முந்துறு நாரதன் முதல மாதவர்.

(இ - ள்.) அழிவில்லாத மார்கழி மாசத்தில் திருவாதிரை நட்சத்திரங் கலந்த தினத்தில், சிதம்பர ஸ்தலத்திலே இந்திராதி தேவர்களும் தவசிகளி லெல்லாம் முற்பட்ட நாரதாதி மாதவர்களும் நிலைத்து வசிப்பார்கள், எ - று.

இருடிக ளாயிர நாற்பத் தெண்மரு
மருடிக ழுத்தலத் தன்பி னெய்துவார்

மருடிரீ மேருவே முதல மால்வரை
யுருடிரைக் கங்கையே முதல வொண்புனல்.

(இ - ள்) நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும், திருவருள் விளங்கும் அச்சிதம்பர ஸ்தலத்தில் அன்போடு சேர்வார்கள். மயக்கமொழித்த மகமேரு முதலிய மகாபர்வதங்களும், புரள்கின்ற அலைகளையுடைய கங்கை முதலாகச் சொல்லப்பட்ட சிறந்த தீர்த்தங்களும். எ - று. (௨௯)

எழ்திரைப் பரவையு முருவ மெய்தின
சூழ்தரு மத்தலந் தொழுது சூழுவ
கேழ்கிளர் தும்புரு கருடர் கின்னரர்
வாழிய பன்னகர் மறைந்து வைகுவார்.

(இ - ள்.) அலைகள் பொருந்திய சப்தசமுத்திரங்களும் வெவ்வேறு வடிவமெடுத்தனவாய்ப் பிரதக்கணஞ்செய்யத்தக்க தகுதிவாய்ந்த அத்தலத்தை வணங்கிப்பிரதக்கணஞ் செய்வன. வல்லபமிகுந்த தும்புருவர் கருடர் கின்னரர் நாகர்கள் ஆகிய இவர்களும் மறைந்து வசிப்பார்கள். எ - று. (௩௦)

முற்படக் கழிந்ததோர் மூன்று கத்தினுஞ்
சொற்பெயர் வெளிப்படத் தொழுது தோன்றுவார்
பிற்படு கலிவெளிப் படாது போற்றுவார்
சிற்பர ஞானமச் சிதம்ப ரத்தலம்.

(இ - ள்.) மேற்கூறியவர்கள் யாவரும், முற்பட்டுச்சென்றதாகிய ஒப்பற்ற (கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகமென்னும்) மூன்று யுகங்களிலும், யாவருக்குந்தோன்றும்படி, சிறந்த பரஞானத்தைத்தரும் அச்சிதம்பர ஸ்தலத்திலே வணங்கியிருப்பார்கள். இழிவாகிய கலியுகத்திலே ஒருவருக்குந்தோன்றாதபடி துதி செய்வார்கள். எ - று. (௩௧)

கங்கைசூழ் காசியி னிறக்க முத்தியிப்
பொங்குமா நகர்தொழ முத்தி பூங்கலைத்
திங்களோர் சடையினோன் றிருந டந்தரத்
தங்குமிந் நகர்ச்சிறப் பியாவர் சாற்றுவார்.

(இ - ள்.) கங்காநதியானது சூழ்ந்துள்ள காசிப்பதியிலே இறத்தலாலே முத்தியுண்டு. மிகச்சிறந்த இந்தச்சிதம்பர ஸ்தலத்தைத்தொழுதலால் முத்தியுண்டு. ஆதலால் அழகிய பிறைச்சந்திரன் தவழுஞ் சடையையுடைய நடராசப்பெருமான் திருநடனதரிசனந் தந்தருளும்படி அழியாத இந்தச்சிதம்பர ஸ்தலத்தின் சிறப்பை எவர் சொல்லவல்லவர்? எ - று. (௩௨)

முன்னைநா ளையின்முரு கேச னெம்பிரா
னந்நக ரிந்தநோன் பாற்றி யேத்தியப்
பொன்னொளி மானமீப் பொலிந்து போய்மதி
நன்னுத லிடத்தனைக் கயிலை நண்ணினான்.

(இ - ள்.) முன்னோர் காலத்தில், முருகப்பெருமான், எமது சிவபெருமானுடைய சிதம்பர ஸ்தலத்தில் இந்தத்திருவாதிரை விரதத்தைச்செய்து துதித்து, சிறந்த பொன்மயமான விமானத்தின் மேலாரோகணித்துச்சென்று. திருக்கைலையில் வீற்றிருக்கும் மூன்றாம் பிறையைப்போலும் நல்ல நெற்றியையுடைய உமாதேவியைப்பாகமாகவுடைய சிவபெருமானைக்கலந்தருளினார்.

மேற்படி வேறு.

வெள்ளை வாளுகிர் வியாக்கிர பாதனு
முள்ள மோர்ந்திது நோற்றுப மன்னியப்
பிள்ளை யாமெனப் பெற்றுமத் தொன்னக
ருள்ள ருங்கதி பெற்றுறைந் தானரோ.

(இ - ள்.) வெள்ளிய கூர்மையான நகங்களையுடைய வியாக்கிரபாத முனிவரும் இவ்விரதமேன்மையை மனதிற் றெளிந்து அநுஷ்டித்து, உபமந்யு முனிவரைப் புத்திரராகப் பெற்றும், பழமையான அச்சிதம்பர ஸ்தலத்திற்றானே நினைத்தற்கரிய முத்தியடைந்து வாழ்ந்தனர். எ - று. (௬௪)

வேத ரூப விபுலனென் பானொரு
போத னந்நகர் நோற்றுப் பொருந்தினு
னாதி நாத னிமாசலை யாரெழின்
மாது பாக னுபய மலர்ப்பதம்.

(இ - ள்.) வேத சொரூபமாயுள்ள விபுலனென்னும் ஒரு ஞானி, அச்சிதம்பரத்திலே இவ்விரதத்தை யநுஷ்டித்து; முதற்கடவுளாகியும், இமயாசல புத்திரியாராகிய அழகிய உமாபிராட்டியாரை வாமபாகத்துடையவராகியும் விளங்குஞ் சிவபெருமானது தாமரை மலர்போலும் உபய பாதங்களை யெய்தினன்.

இன்னு மெத்தனை பேரித் திருநகர்
மன்னி முன்னர் வரன்முறை நோற்றவ
ரன்னர் பெற்ற வருங்கதி முற்றுறப்
பன்ன கேசனுங் கூறப் படுவதோ.

(இ - ள்.) இன்னம் இந்தச்சிதம்பர ஸ்தலத்தில் வதிந்து முற்காலத்தில் இத்திருவாதிரை விரதத்தை யநுஷ்டித்துப் பேறுற்றவர்கள் எத்தனை பேருளர். அவர்களெய்திய அருமையாகிய முத்திப்பேறுகளை நாகராசனுகிய ஆதிசேடனும் முடிவு படுத்திச்சொல்லத்தக்கதோ? எ - று. (௬௫)

மார்க ழித்திரு வாதிரை மஞ்சனத்
தாரு யிர்க்கெலா மன்பி னடம்புரிந்
தோர்வ ருங்கதி நல்கி யுமைமிடக்
கார்மி டற்றன் கருணை வழங்குமால்.

(இ - ள்.) மார்கழிமாச திருவாதிரை நக்ஷத்திரத்திற் செய்கின்ற திருமஞ்சனத்தினுல் உலகத்தில் நிறைந்த ஆன்மாக்களுக்கெல்லாம் அன்போடு பஞ்சகிருத்திய திருநடனஞ்செய்தருளி, அறிதற்கரிதாகிய முத்தியைக்கொடுத்து, உமாதேவியாரை வாமபாகத்திலுடைய நீலகண்டராகிய சிவபெருமான் திருவருள் பாலிப்பார். எ - று. (௬எ

நீற்று மேனி நிமலன் றிருநடம்
போற்றி யன்பு புரிந்தொரு காநின்றூர்
மாற்ற ருங்கதி வைகுவ துண்மையாற்
சாற்றி னேமிது சத்தியஞ் சத்தியம்.

(இ - ள்.) திருவெண்ணீறணிந்த திருமேனியையுடைய நிமலராகிய நடராசப்பெருமானது திருநடனத்தைத் துதிசெய்து உண்மையன்பு மிகுந்து

மனமுருகுகின்றவர்கள், வேறுபடுத்தற்கரிதாகிய முத்தியின்பமெய் திவாழ்வது உண்மையாகும். இதனைச்சொன்னோம். இது சத்தியம் சத்தியம். எ-று. (௬௮)

திரளி ருஞ்சடை யான்றிரு வாதிரை
விரத நோன்மை விளம்பினம் வெள்விடை
வரத னொன்புமா மேச்சுர மாமுறை
சரத மின்ன பரிசெனச் சாற்றுவாம்.

(இ-ள்.) திரண்டிருக்கின்ற பெரிய சடையையுடைய சிவபெருமானது திருவாதிரை விரதத்தின் சிறப்பை இதுகாறுஞ் சொன்னோம். வெள்ளிய இடப வாகனத்தையுடைய சிவபெருமானது விரதமாகிய உமா மகேச்சுர விரதத்தின் முறையையும் அதன் உண்மையையும் இத்தன்மையதென இனிச் சொல்லுவோம். எ-று. (௬௯)

மேற்படி வேறு.

கார்த்திகைப் பூரணை யன்று காலையிற்
சேத்துரந் திடுமவற் சிந்தை செய்துமின்
பூத்துறு நறும்புனற் பொய்கை மூழ்கினின்
றேத்துறு கடன்முறை யாவுஞ் செய்தபின்.

(இ-ள்.) கார்த்திகைமாச பௌர்ணமிதின உதயத்தில், இடபத்தை வாகனமாகச்செலுத்தும் சிவபிரானைத்தியானஞ்செய்து, ஒளிமிகுந்து விளங்கும் நல்ல நீர் நிரம்பிய தடாகத்தில் மூழ்கி, அதன் கரையிலிருந்து நித்திய கர்மாநுஷ்டானங்களை யெல்லாம் முறைப்படிசெய்து முடித்து. எ-று. (௭0)

பொன்னினால் வெள்ளியா லிமயப் பூவையை
யன்னவட் பாகம்வைத் தமைத்த வீசனை
யின்னுரு வமைத்தொரு தலத்தை யீர்ப்புனன்
மன்னுகோ மயத்தினன் மெழுக்கு மாற்றியே.

(இ-ள்.) பொன்னாலேனும் வெள்ளியாலேனும், இமாசல புத்திரியாராகிய உமா பிராட்டியாரையும், அப்பிராட்டியாரை வாம பாகத்தில் வைத்துப் பொருந்திய சிவபெருமானையும் இனிய திருவமாக்ச்செய்து, ஓரிடத்தைக்குளிர்ந்த சலத்தாற் பசுவின் சாணங்கலந்து திருமெழுக்கிட்டு (சுத்திசெய்து) எ-று.

ஆங்கவ ணையிரு நாழி நெற்குவித்
தோங்கிய கும்பமீ திருத்தி யுள்ளுறப்
பூங்கமழ் நறும்புனல் பொழிந்து பூஞ்சினை
மாங்கமழ் நறுந்தழை வாய்ப்பெய் திட்டபின்.

(இ-ள்.) அவ்விடத்தில் பத்துநாழி நெல்லைக்கொட்டி, சிறந்த தொரு கும்பத்தை அந்த நெல்லின்மேல் வைத்து, அக்கும்பத்தினுள்ளே மலர் மணங்கமழும் சுத்த ஜலத்தைவிட்டு, அழகிய கிளைகளையுடைய மாமரத்தின் மணங்கமழும் நல்ல இலைகளை அக்கும்பத்தின் வாயில் வைத்த பின்னர். எ-று.

புதுக்கலை நான்மடிப் பாக்கிப் பூந்தழை
யதுக்குறக் கும்பமீ தமைத்து முன்புற
வொதுக்கிய விம்பமோ ரிரண்டை யொன்றெனப்
பொதுப்படு கெவியமோ ணாந்திற் போற்றியே.

(இ - ள்.) புதிய வஸ்திரத்தை நான்கு மடிப்பாக மடித்து அழகிய மாந்துழைகள் அழுந்தும்படி அக்கும்பத்தின்மீது வைத்து, முன்னமைத்து வைத்துள்ள உமாமகேசுவர மூர்த்தபிம்பங்கள் இரண்டனையும், ஒன்றாகக்கூட்ட வைத்துள்ள (பால், தயிர், நெய், கோமயம்=சாணம், கோசலம் ஆகிய) பஞ்சகவ்வியத்தினால் அபிடேகஞ்செய்து, எ - று. (சங)

வகுத்தவோ ரிரண்டையு மடித்து வான்கலை
தொகுத்துவைத் தினியதோர் தூபங் காட்டிமென்
முகிழுத்தபூச் சந்தன முடியிற் சூட்டிநெஞ்
சகத்துற வுருகியா ரமுது நீட்டியே.

(இ - ள்.) மேற்கூறிய வஸ்திர மடிப்புகளில் இரண்டினை உமாமகேசுவர மூர்த்திகள் இரண்டிற்கும் மேம்பட்ட வஸ்திரங்களாகத்தரித்து அலங்கரித்து வைத்து, இனிதாய்ச்சிறந்த தூபங்காட்டி, மலர்ந்த மெல்லிய மலர்களையும் சந்தனத்தையுஞ் சிரசிலணிந்துபொருந்தும்படி மனமுருகி நிறைந்த திருவமுது நிவேதனஞ்செய்து, எ - று. (சச)

மரபினான் மும்முறை வலன்றி ரிந்தருட்
பரமனை யுமையொடும் பணிந்து தம்முளம்
விரவிய வொருபொருள் விரும்பி வேண்டிப்போ
யரனுடை யாலய மணைந்து போற்றுவார்.

(இ - ள்.) முறைப்படி மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து, கிருபாமூர்த்தியாகிய சிவபெருமானை உமாதேவியோடு நமஸ்கரித்து, தம்மனதிற்கருதிய ஒரு பொருளை விரும்பி யாசித்து, சிவாலயத்தையடைந்து சென்று தோத்திரஞ் செய்வார்கள். எ - று. (சரு)

ஆலயத் தீசற்கு மந்த வாறிழைத்
தோலைவார் குழையொடு மரனை யுண்ணினைந்
தேலவே தம்மனை யெய்தி யற்றையோர்
காலமுண் டப்பகல் கழித்த பின்னரின்.

(இ - ள்.) ஆலயத்திலெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் அப்படியே பூசை நடத்தி, பொன்னோலை யணிந்த நீண்ட செவிகளையுடைய உமாபிராட்டியாரோடு சிவபெருமானையும் மனதில் தியானஞ்செய்து, பொருந்தும்படி தமது இருக்கையையடைந்து, அன்று ஒருகாலமே புசித்து, அன்றைய பகற்பொழுது நீங்கிய பிறகு, எ - று. (சசு)

இனியதோர் பண்டமுண் டிரவு போக்கியே
நனிகதிர்ப் பகலெழும் பிற்றை நாளிடைப்
புனிதநீ ராடித்தன் னியதி போக்கியப்
பனிவருங் குழலிவைப் பரனைப் போற்றியே.

(இ - ள்.) இனிதாகிய ஒரு பண்டத்தைப்புசித்து இரவைக்கழித்து, மிக்க கிரணங்களையுடைய சூரியன் உதிக்கும் அடுத்த தினத்தில், சுத்தமான நீரில் ஸ்நானஞ்செய்து, தனது நித்தியமாகிய சந்தியை முடித்து, முன்கும்பத்தி லெழுந்தருளச்செய்துள்ள இமாசல புத்திரியாகிய உமாபிராட்டியையும் சிவபெருமானையும் பூசித்து, எ - று. (சஎ)

மீண்டருச் சனைபுரி கும்ப மேவிய
மாண்டரு பொன்னுரு விரண்டு மாமறை
யாண்டருள் வேதியர்க் கவற்றொ டீந்தபிற்
கூண்டவே டத்தரோ டமுது கொள்வரால்.

(இ - ள்.) திரும்பவும் பூசித்த அக்கும்பத்தில் எழுந்தருளச்செய் திருந்த மாட்சிமை தங்கிய பொன்னாலான அம்மூர்த்தங்களிரண்டினையும், அவ்விடத் தீற் சிறந்த வேத கோஷஞ்செய்து கொண்டிருக்கும் அந்தணருக்கு அக்கும்பம் வஸ்திர முதலியவற்றுடன் தானமாகக்கொடுத்த பிறகு, தொகுதியாகிய சிவனடியவர்களோடு திருவமுது செய்வார்கள். எ - று. (சஅ)

இத்திறந் திறம்புறா தியல்பி னேற்றவர்
புத்திர ரொடும்வளம் பொருந்தி வாழ்ந்துபி
னத்தகை யவரொடு மமர ரேத்தப்போய்
முத்திசென் றடைந்தனர் முதல்வ ராகுவார்.

(இ - ள்.) இவ்வகையாக முறைவழாமல் விதிப்படி அநுஷ்டித்தவர்கள், புத்திர பாக்கியத்துடனே ஐசுவரிய மெய்திவாழ்ந்து, பிறகு புத்திர பௌத்திரகளத்திரங்களுடன் தேவர்கள் துதிசெய்யச்சென்று முத்தியடையப்பெற்றவர்களாய்ச்சிவபெருமானுடைய சாரூபமடைவார்கள். எ - று. (சகூ)

கலிநிலைத்துறை.

சீர்த்த மாதவத் திரணவிந் தென்றொரு செல்வன்
பார்த்த கட்புலங் குழிபட வருந்தினன் பன்னா
ளோற்ற றிந்திது நோற்றன னோற்றலு நிவப்புற்
றார்த்த கட்புலம் பெற்றனன் கயிலைசென் றடைந்தான்.

(இ . ள்.) சிறந்த பெருந்தவமுடைய திரணவிந்து எனும் பெயருடைய ஒரு முனிவன் பார்த்தற்குரிய நேத்திரேந்திரியம் குறைவுற்றமையால் பல காலம் வருந்தியிருந்தான். இவ்விரத மகிமையைத்தெரிந்து இதனை யநுஷ்டித் தவுடனே, அம்மேன்மையுற்று நிறைந்த பார்வையைப்பெற்றவனாய் இறுதியில் திருக்கைலாயபதவி யெய்தினான். எ - று. (ருo)

பாக்கி யம்புரி தேவகி பயந்தகோ பால
னாக்க மாதரெண் ணாயிர விரட்டிபெற் றணைந்தான்
கோக்கு மாரர்க ளொன்பது கோடிபெற் றுயர்ந்து
தேக்கு வார்கட லுலகெலாம் புரந்தனன் சிறந்தான்.

(இ . ள்.) புண்ணியங்களைச்செய்த தேவகி தேவி பெற்ற கிருஷ்ண மூர்த்தி இவ்விரதாநுஷ்டானத்தால் செல்வம் பொருந்திய பதினாறாயிரம் மாதர்களைத் தேவிமாராகப்பெற்றுக்கூடி, யதுகுலமைந்தர்கள் ஒன்பது கோடி பேரைப்பெற்று மேம்பட்டு, தேக்கெடுக்கும் நீரையுடைய நெடிய கடல்சூழ்ந்த உலக முழுவதையும் அரசு செய்து சிறப்பெய்தினர். எ - று. (ருக)

மழலை வார்குழைக் கரும்புகா யத்திரி வாணி
யொழுகு வார்சிலை நுதலிசா வித்திரி யொளிகா
லிழைபொ ருந்தன மூவரு மணையெனச் சிறந்தான்
செழும லர்த்தவி சினிதுறை நான்முகச் செல்வன்.

(இ - ள்.) செழுமை தங்கிய தாமரை மலர்த்தவிசில் இனிதாக வாழும் நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன், மழலைச்சொல்லையும் நெடிய காதையுமுடைய செங்கரும்பு போன்ற காயத்திரி, சரசுவதி, நீண்டு வளைந்த வில் போலும் நெற்றியையுடைய சாவித்திரியாகிய ஒளி வீசும் ஆபரணமணிந்த மூவரையும் தனக்கு மனைவிமாராகப்பெற்றுச் சிறப்பெய்தினன். எ - று. (௫௨)

ஈர நாண்மல ரிழிதர விருஞ்சினை விடுக்குந்
தாரு விந்திரன் சயந்தனைப் பயந்தனன் றவத்து
மேரு வன்னமேவோர் வசிட்டமா முனிவரன் விரும்பி
யோர்வ ருந்தனித் தெய்வமாச் சுரபிபெற் றுயர்ந்தான்.

(இ - ள்.) பெரிய கிளைகள் குளிர்ச்சி யெய்திப் புதிய பூக்களைக்கீழே விழச் சிந்துகின்ற கற்பக விருட்சத்தையுடைய இந்திரன் இவ்விரதாநுஷ்டானத்தால் சயந்தனை மகனாகப்பெற்றான். தவத்தால் மேருவை யொத்த வசிஷ்ட மகா முனிவர் விருப்போடுசெய்து சொல்லுதற்கரிய ஒப்பற்ற தெய்வீகமுற்றுச் சிறந்த காமதேனுவைப்பெற்று உயர் வெய்தினர். எ - று. (௫௩)

கனக மாமதி லுடுத்தகல் கடிநகர் மிதிலைச்
சனக னாருயிர்த் தநயர்க ளின்மையிற் றளர்ந்து
வனச ரோருக மடந்தையை மகளெனப் பயந்தா
னினைய ரின்னணம் வரன்முறை விரதமீ திழைத்து.

(இ - ள்.) பொன் மயமான பெரிய மதில்களாற் சூழப்பட்ட விசாலமான காவலோடு கூடிய மிதுலையை யாண்ட சனகராசன், தன் அரிய உயிர்போன்ற புத்திரர்களில்லாமையால் மனம் வருந்தி அழகிய செந்தாரை மலர் மங்கை யெனப்படும் சீதாதேவியைத் தன் புத்திரியாகப்பெற்றான். இவர்கள் யாவரும் இவ்வகையாக இவ்விரதத்தை யநுஷ்டித்தாரகள், எ - று, (௫௪)

சிலைத்த ழும்புடைத் திண்புயச் சித்திர தேய
னிலைத்த நன்னெறி விரதமீ திழைத்தன னேராக்
கொலைத்த வாணெடுங் கட்கடை யுருப்பசி குலத்தோண்
மலைத்த டந்தன மணந்தவண் மனையெனச் சிறந்தான்.

(இ - ள்.) வில்லேந்திய வடுவையுடைய சித்திர தேயனென்னும் வலி தங்கிய தோளையுடையவன், நிலைபெற்ற ஆக மோக்தமாக இவ்விரதத்தை யநுஷ்டித்து ஒருவருக்குங் கிடைக்காத கொலைத்தன்மை வாய்ந்த வாள்போன்ற நெடிய கடைக்கண்களையுடைய ஊர்வசியின் இரு தோள்களையும் மலைபோலப் பரந்த முலைகளையுந்தழுவி அவளையே மனைவியாகக்கொண்டு சிறப்பெய்தினான்.

பூத லத்திவ னிவளொடு மணந்துறை பொழுதிற்
றூத விழ்த்தலர் கற்பக மிவனுழைச் சார்ந்து
மேத கப்பல வேண்டுவ வேண்டுவ புரியத்
தீத வித்தரு மைந்தரைப் பயந்தறஞ் சிறந்தான்.

(இ - ன்.) பூலோகத்திலே இச்சித்திரசேனன் இவ்வூர்வசியோடு கூடி வாழ்ந்த காலத்திலே, மகரந்தப்பொடிகளைச்சிந்தி மலருங் கற்பக விருட்சம் இவனிடத்தே வந்து மேன்மை தங்கிய பற்பல செய்கைகளையும் அவன் விரும்

பிய வண்ணமே யியற்ற, தீமையை யகற்றிப் பல அரிய புதல்வரைப்பெற்று இல்லற வொழுக்கத்தில் சிறந்திருந்தான். எ - று. (ருசு)

கால நீடுறு பற்பகல் கழிதரக் கழித்து
ஞால மன்னுயிர் தன்னுயி ராமென நடாத்திக்
கோல வெண்குடை நிழற்றினன் பின்னர்வெண் குழவி
வால சந்திர மௌலிதன் கயிலைபோய் வதிந்தான்.

(இ - ள்.) காலம் நீடித்து அநேக காலங்கள் கழியும்படி கழித்து, உலகிலுள்ள மன்னுயிர்களையெல்லாந் தன்னுயிர் போல நடத்தி, அழகிய வெண்கொற்றக்குடை நீழலில் அரசு செய்தான். அதன்பின்னர், வெள்ளிய இளமை தங்கிய பிறைச்சந்திரனையணிந்த முடியையுடைய சிவபெருமானது திருக்கைலையிற் சென்று வாழ்ந்திருந்தான். எ - று. (ருஎ)

வயங்கு முப்புரி நூற்சுதன் மாவெனு மறையோன்
றயங்கு விஞ்சையிற் றகவுறுக ருத்திலனாகி
மயங்கி நாள்பல கழித்தனன் வையக மிகழ
முயங்கு விஞ்சைகேட் டீங்கிது நோற்றனன் முறையின்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பூணூலணிந்த சுதன்மாவென்னும் வேதியன், தான் கற்றறியவேண்டிய வேத பாராயணத்தில் தகுதியாகிய மனமில்லாதவனாகி, உலகினர் பழிக்கும்படி மயக்கமெய்தி நெடுநாள் கழித்தனன். இவ்விரதத்தை அநுஷ்டிக்கும் வித்தையைக் கேள்வியுற்று இதனை முறைப்படி அநுஷ்டித்தான். எ - று. (ருஅ)

விரத மீங்கிது நோற்றலும் வெள்ளைவெண் கமலை
வரம கிழ்ந்தெதிர் தோன்றினா ளுதவிய வரத்தாற்
பரவு நான்மறை முதலிய கலையெலாம் பயின்று
சுரரு வப்புற வயற்குமோர் மறைக்குரை சொல்லும்.

(இ - ள்.) இவ்விரதத்தை யநுஷ்டிக்கவும், வெண்ணிறந்தங்கிய கலைமகள் வீற்றிருத்தற்குத் திருவுளங்கொண்டு பிரசன்னமாய் அநுக்கிரகித்த வரத்தினால் துதிக்கத்தக்க நான்கு வேதங்கள் முதலாகிய எல்லா நூல்களையும் பழகி, தேவர்கள் மகிழும்படி, பிரமதேவனுக்கும் ஒப்பற்ற வேதத்திற்கும் பொருள் சொல்ல வல்லவனானான். எ - று. (ருகூ)

ஓத வேட்டவர்க் கோதுவித் தொருபொருள் விரும்பான்
மூது ணர்ந்தவர் யாவர்க்கு மூதுணர்த் துறுமா
வீது ணர்ந்தக னெடுநிலம புரந்தரு ளிறைவர்
நீது தீர்த்திரு நிதிதரப் பெற்றனன் செல்வன்.

(இ - ள்.) நூல்களைக்கற்க விரும்பினோருக்குக் கற்பித்து, ஒரு பொருளையும் விரும்பாதவனாய், நன்றாய் ஓதித்தேர்ந்தவர்கள் எல்லாருக்கும் அதிகமாகத் தெரிவிப்பான். இந்நிலையை யறிந்து உலகத்தை யாளும் அரசன், இவனது தரித்திரத்தையொழித்துப் பெரும்பொருள் பரிசு கொடுக்கப்பெற்றான் அக்கல்விச்செல்வமுடைய சுதன்மன். எ - று. (சுo)

இகழ ருங்கலைக் கடலென மைந்தரீன் றெடுத்தா
னகழி மாநிலத் தளவறு வளநுகர்ந் தருளு

மகிழ்சி றந்தனன் கடைமுறை கயிலைவான் கணத்தோர்
புகழ வன்னவர் தலைவர்க்குந் தலைவனிற் பொலிந்தான்.

(இ - ள்.) இகழ்தலற்ற கல்விக்கடலென்று சொல்லும்படி புதல்வர்களைப்பெற்றான். கடல் சூழ்ந்த பெரிய பூமியில் எணணில்லாத போகங்களை யநுபவித்து, நீங்காத களிப்பின் மேம்பட்டவனாய், இறுதியில் திருக்கைலாயத்திலுள்ள சிறந்த சிவகணத்தவர்கள் புகழும்படி, அக்கணங்களுக்குத் தலைவர்களுக்கெல்லாந் தலைவனாக விளங்கினான். எ - று. (௬௧)

உந்து வெண்டிரைப் புணரியின் றுவட்டெழு முவரி
தந்த மாநிலப் பரப்பெலா நிழற்றிய தகைசா
லிந்து வெண்குடைத் தனிச்சுட ராழியோ னெறிவே
லிந்து சேனனென் றுளனிகன் மன்னவர் திலகன்.

(இ - ள்.) பாய்கின்ற வெள்ளிய அலைகள் அலைந்து பொங்கியெழுங் கடலாற் சூழப்பட்ட உலக முழுமையும் நிழல் பரப்பிய பெருமை தங்கிய வெண்ணிறமுற்ற வெண்கொற்றக்குடையையும் ஒப்பற்ற ஆக்கினை சக்கரத்தையும் உடையவனாய், எறிகின்ற வேலேந்திய இந்து சேனனென்னும் வலிதங்கிய மன்னவர் திலகனொருவனிருந்தான். எ - று. (௬௨)

அனைய னிந்நிலத் தாருயிர் புரக்குநா ளவன்பால்
வினைசெய் திண்பரி வேற்படை மன்னவர் வெகுண்டு
முனைசெய் காலையி னவர்க்குடைந் தோடினன் முந்நீர்க்
கனைக ருங்கட லுலகுபோயக் கானக மடைந்தான்.

(இ - ள்.) அவ்விந்து சேனன் இவ்வுலகில் நிறைந்த உயிர்களையாளுங் காலத்தில், அவனோடு போர்த்தொழில் செய்யும் வலி தங்கிய குதிரைகளையும் வேல் தாங்கிய சேனைகளையுமுடைய மறு மன்னா பகைத்துப்போர்செய்த போது, அப்பகைஞர்க்குத்தோற்றுப் புறமுதுகு காட்டிச்சென்று, (ஆற்று நீர் வேற்று நீர் ஊற்று நீராகிய) மூன்று நீர்கள் நிறைந்து ஒலிக்குங் கரிய கடல் சூழ்ந்த அந்நகரைவிட்டுக் காட்டை யடைந்தான், எ - று. (௬௩)

அரிதி யற்றிய வறுசுவை யுண்டியி னமைத்த
கருனை வெண்சுதை யுணவொடு மயின்றவன் கனலா
யுருகு வெம்பசி யுடற்றுற வொள்ளுகிர்க் கரங்கள்
குருதி போர்த்தெழ முண்டகக் கனிகரங் கொள்வான்.

(இ - ள்.) அரிதாகச்சமைத்த அறுசுவையுடைய உணவாகிய பாகப்படுத்தியபொறிக்கறியும் வெண்ணிறந்தங்கிய அமுதம் போன்ற சாதத்தோடு புசித்து வந்த அம்மன்னவன், தீயமாயுருகுகின்ற கொடிய பசிநோய் வருத்த, அழகிய நகங்களமைந்த விரல்களில் உதிரம் பெருக்கெடுக்கும்படி, தாழைக்கனிகளைக் கையாலெடுப்பான். எ - று. (௬௪)

அடக விந்தன வுப்பிலி யருந்தியு மகிழ்ந்து
புடவி கீண்டமென் கிழங்குமென் றும்பசி போக்கான்
படர்கொ முந்தொடும் பலகனி புசித்தனன் படர்ந்த
விடரெ னுங்கொடி தவழ்ந்தகொள் கொம்பென லானான்.

(இ - ள்.) வதக்கிய இலைக்கறிகளை உப்பில்லாது புசித்தும், பூமியைப் பிளந்து தோண்டி யெடுத்த மெல்லிய கிழங்குகளைத்தின்றும், பசி தணியாத

வனாய், மேலே படர்ந்த பலகொழுந்துகளையும் கீழே விழுந்த பல பழங்களையும் புசித்துக்கொண்டிருந்தான். ஆதலால், துன்பமென்னுங் கொடியானது சுற்றப் பெற்ற கொழுகொம்பென்று சொல்லற்கிடனானான். எ - று. (௬௫)

அரக்கர் வெங்கழு நயிலெயிற் றரவுதேண் மதமா
முருக்கு வெஞ்சின வாளரி முதற்பல விலங்கிற்
கருக்கி யாருயிர் பொறுக்கினன் றிரிந்தன னந்நாட்
செருக்கின் மாதவக் குறுமுனி யவ்வனஞ் சென்றான்.

(இ - ள்.) அசுரர்கள்-கொடிய பேய்கள்-கூரிய பற்களையுடைய பாம்புகள்-தேள்கள்-மத யானைகள்-கொல்லுகின்ற கடுங்கோபமுள்ள சிங்கங்கள் முதலிய மிருகங்களுக்குப்பயந்து தன்னுயிரைத்தாங்கிச்சஞ்சரித்திருந்தான். அப்பொழுது பெருந்தவத்தினால் செருக்கற்ற அகத்திய முனிவர் அவ்வாரண்யத்தை யடைந்தனர். எ - று. (௬௬)

சென்ற மாதவத் தலைவனை யெய்தினன் சிறந்த
மன்றன் மாமலர்த் தாளிணை வீழ்ந்தனன் வணங்கி
நின்று தன்னுடைக் குறையெலா நிகழ்த்தினன் மலயக்
குன்றி ருந்திடு முதுதமிழ்க் குறுமுனி கூறும்.

(இ - ள்.) அங்கெழுந்தருளிய பெருந்தவ சிரேஷ்டராகிய அகஸ்திய முனிவரை யடைந்து மணங்கமழுஞ்சிறந்த தாமரை மலர்போலுந் திருவடிகளிற் பணிந்து கும்பிட்டு நேர் நின்று தன் குறைகளை யெல்லாம் விண்ணப்பஞ்செய்தான். பொதிய மலையில் எழுந்தருளி யிருக்கும் முதிர்ந்த தமிழ் முனிவராகிய அகஸ்திய முனிவர் கூறுகின்றார். எ - று. (௬௭)

மதித்த நல்குறு மாமகேச் சுரமெனும் விரதம்
விதித்த வாறுநோற் றனையெனில் வினையற விளங்கி
யுதித்த வெண்மதிக் குடைநிழ லரசுபெற் றுவப்பாய்
கதிக்கு நாயக னாகுவை கடைமுறை கயிலை.

(இ - ள்.) எண்ணிய வரங்களைக்கொடுக்கும் உமா மகேசுவரமென்னும் விரதத்தை விதிப்படி யநுஷ்டிப்பாயாகில் உன் பாவங்களெல்லாம் நீங்கி யோங்கி உதிக்கின்ற வெள்ளிய சந்திரன் போன்ற வெண்கொற்றக்குடையின் நிழலில் அரசாட்சியை யெய்திச் சந்தோஷிப்பாய். தேகாந்தத்தில் கைலாய பதவிக்குந் தலைவனாக ஆகுவை. எ - று. (௬௮)

என்று ரைத்தசொற் செவிமடுத் தேத்தின னிறைவ
னன்று தொட்டுநல் விரதமீ தாற்றினன் முறையாற்
சென்று நாள்பல கழிந்தன சேவுயர்த் தியமான்
கன்று ழைக்கையான் றிருவுள நெகிழ்ந்தது கருணை.

(இ - ள்.) என்று கூறியருளிய சொற்களை மன்னவன் கேட்டு, அகத்திய முனிவரைத் துதிசெய்து, அது முதல் சிறப்புற்ற இவ்வுமா மகேசுவர விரதத்தை முறைப்படி யநுஷ்டித்தான். இப்படிப்பல காலங்கள் சென்றன. இடபக் கொடியை யுயர்த்தியவரும் மான்கன்றையேந்திய திருக்கரத்தையுடையவருமாகிய சிவபெருமான் திருவுள்ளத்திற் கருணை மிகுந்து. எ - று, (௬௯)

ஓரி டப்புறத் தம்பிகை யுணர்ந்தன ளொருங்கே
யார ருட்கட லுவட்டெழ விருவரு மருளிற்
கூரி லைப்படைக் குபேரனை யழைத்துநீ குரைநீர்ப்
பாரி டத்திந்து சேனனுக் குதவெனப் பணித்தார்.

(இ - ள்.) ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியாரும் இதனை யுணர்ந்தனர். சிவபெருமானும் உமாதேவியாரும் ஒன்றாய் நிறைந்த திருவருட்கடல் பெருகும்படி, கிருபையோடு கூர்மைதங்கிய சூலாயுதமேந்திய குபேரனை வருவித்து ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூலோகத்தில் இந்து சேனனென்னும் மன்னவனுக்கு வேண்டிய பொருளைத்தருவாயாகவெனக் கட்டளையிட்டருளினார். எ - று. (௭0)

அளகை மாநக ரிறைவனு மக்கணத் தடைந்து
முளைவ னத்திந்து சேனனை யெதிர்ந்தனன் முழங்குந்
தொளைநெ டுங்கைமால் யானைமீப் பொலிதரத் துவன்றி
வளைத டங்கடற் சேனைகொண் டவனொடும் வந்தான்.

(இ - ள்.) சிறந்த அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனும் அந்தக்ஷணத்திலேயே சென்று வனத்திலே தவஞ்செய்யும் இந்து சேனனை யெதிர்கொண்டு, கர்ச்சிக்கின்ற நெடியதுதிக்கையையுடைய பெரியயானையின் மேல் வணங்கும்படி, வளைந்த விசாலமான கடல்போலும் பெரிய சேனையை யுடன்கொண்டு அவ்விந்துசேனனோடும் வந்தான். எ - று. (௭௧)

செருத்த லைப்புறத் தரசெலா மருவரை சேர்ந்தா
ரொருத்தன் மும்மதத் தோடைநீ டொருகரப் பொருப்பி
னெருத்த மீப்பொலி யிந்துசே னற்கர சீந்தான்
றிருத்து மாமுடி புனைந்தன னளகையஞ் செல்வன்.

(இ - ள்.) யுத்தத்தில் முன்னேபுறங் கொண்ட மன்னர்கள் யாவரும் அரிய மலைகளையடைந்தார்கள், யானையாகிய மும்மதத்தையும் முகபடாத்தையும் துதிக்கையாகிய நெடிய ஒரு கரத்தையுமுடைய மலையின்பிடரிமேல் விளங்கிய இந்து சேனனுக்கு அரசளித்து, திருத்தமாகிய கிரீடந்தரித்து அரசுரிமையளித்தனன் அளகாபுரித்தலைவனாகிய குபேரன். எ - று. (௭௨)

மதிமு டிச்சடை யெம்பிரா னருளிய வரத்தா
லிதுவி யற்றின னீங்குனக் கென்றெடுத் தியம்பிப்
பொதிநி திக்குவை யளகைவேந் தளித்தனன் போனா
னதிரு மார்கலி நிலமிவ னெடிதுநா ளளித்தான்.

(இ - ள்.) சந்திரனையணிந்த சடைமுடியையுடைய எமது சிவபெருமான் அநுக்கிரகித்தவரத்தினால், இப்போது இதனை உனக்கு யான் செய்தேன் என்று சொல்லி, பொருந்திய நிதிக்குவைகளை அவனுக்குக்கொடுத்து, குபேரன் தன் அளகாபுரிக்குப் போயினன். ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகத்தை இவ்விந்து சேனன் நெடுங்காலம் அரசாண்டான். எ - று. (௭௩)

கடுத்த மன்னவ ரிருநிலங் கனவரைப் புயத்தா
லெடுத்த னன்பொறாக் கடிந்தன னுயிர்புரந் திருந்தா
னடுத்த காலம்வந் தெதிர்ந்துழிக் கயிலைவா ழமலன்
விடுத்த மானமீச் சிறந்தனன் வெள்ளிவெற் படைந்தான்.

(இ - ள்.) பகைத்த அரசர்களுடைய பெரிய நகரங்களைத் தனது பெரிய மலைபோலுந் தோள்களிலே தாங்கிப் பொதுத்தன்மை நீக்கி உயிர்களைப் யாது காத்துக்கொண்டிருந்தான். முடிவுகாலஞ் சம்பவித்தபோது, திருக்கைலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் அனுப்பிய விமானத்திலிவர்ந்து வெள்ளி மலையாகிய கைலாயத்தை யடைந்தான். எ - று. (௭௪)

அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம்.

எக்கு ணத்தினு மருந்தவ மல்லதொன் றில்லென வெடுத்தோதி
யக்கு ணத்துட னொழுகிய முனிவரர்க் கருந்தவத் தலைநின்று
முக்கு ணங்கடிந் தியற்றிய சூதமா முனிவரன் முறைநோக்கி
மெய்க்கு ணத்தவத் தலைவிர்கா ளின்னுமோர் விரதமுண் டதுகேண்மின்

(இ - ள்.) முக்குணங்களைக் கடிந்து பெருந்தவஞ்செய்த சூத மகாமுனிவர் நைமிசாரணிய முனிவர்களை முறையோடுபார்த்து, எவ்வகைய நூலினும் அருந்தவத்தைக் காட்டிலும் வேறொன்றில்லை யென விளக்கிக்கூறி, அத்தகைத் தவமார்க்கத்தோடு அநுஷ்டித்த முனிவர்களுக்குள் உண்மைக்குணமுள்ள தலைவர்களே! மற்றோர்விரதமுள்ளது கேட்பீர்களாக. எ - று. (௭௫)

என்று ரைத்தவர்க் கியம்புவான் மழவிடை யேறுகைத் திடுமெம்மான்
சென்ற சிந்தையிற் றிருவுள முவந்தது தேவரு முறைநோற்பார்
நன்றெ னுஞ்சிவ ராத்திரி யீங்கிது நோற்பவர் நறுங்கொன்றைப்
பொன்றி கழ்ந்திடு சடைமுடிக் கயிலையம் புனிதனிற் றொழுநிற்பார்.

(இ - ள்.) என்றுரைத்து அம்முனிவர்களுக்குக் கூறுகின்றனர். இளமை தங்கிய இடபவாகனததி லாரோகணிக்கும் எமது சிவபெருமான் மேம்பட்ட எண்ணத்தோடு திருவுள்ளத்திற்களித்ததும், தேவர்களும் முறையோடு நோற்பாராய் நல்விரதமெனச் சொல்வதும் சிவராத்திரிவிரதமாம். இச்சிவராத்திரி விரதத்தை யநுஷ்டித்தவர்கள் நறுமணங்கமழுங் கொன்றைமலராகிய பொன் பிரகாசிக்கும் சடைமுடியையுடைய சிவபெருமான் போன்று பலரும் வணங்க வாழ்வார்கள். எ - று. (௭௬)

ஒற்றை யாழியங் கடவுளூர் வைகலி னுணவொழிந் துதயம்போய்
முற்று கங்குலின் யாமமோர் நான்கினு முறைமுறை துயில்போக்கிக்
கற்றை யஞ்சடைக் கடவுளை விதிமுறை யருச்சனைக் கடனாற்றிப்
பிற்றை வைகலிற் பாரணங் கூட்டுவார் பெறற்கருங் கதிசேர்வார்.

(இ . ள்.) ஒற்றைச்சக்கரமுடைய தேரைச் செலுத்துஞ்சூரியன் சஞ்சரிக்கும் பகற்பொழுதில் உணவைவிலக்கி, காலைமுதற் பகற்காலங் கழிந்தபிறகு, வருகின்ற இரவில் நாலுசாமங்களிலும் விதிமுறை நித்திரை நீங்கி, தொகுதியாகிய அழகிய சடையையுடைய சிவபெருமானை விதிப்படி பூசித்தலாகிய கிரியையை முடித்து, அடுத்ததினங்காலையிற் பாரணஞ் செய்பவர்கள் அடைதற்கரிய பதவியை யடைவார்கள். எ - று. (௭௭)

வருட மொன்றின்மூ வெட்டெனத் தொடர்ந்திடை வந்துறு பதினொன்
கருதி யிப்படி வரன்முறை நோற்பது கணக்கறு தவத்தீர்காள் [கிற்
பொருவி னித்திய சிவநிசி யாகுவ பொங்கிருட் பதினொன்கு
தருவ பன்னிரண் டெனுமிவை பதிச்சிவ ராத்திரி யெனத்தக்க.

(இ - ள்.) கணக்கிடப்படாத தவமுடையவர்களே! ஓராண்டில்இருபத்து நான்காகத் தொடர்ச்சியாய் வரத்தக்க பதினான்காவது திதியாகிய சதுர்த்தசித்திதியில், ஞாபகத்தோடு இப்படி விதிமுறையால் அநுஷ்டிப்பது ஒப்பற்ற நித்திய சிவராத்திரியாகும். இவ்விருபத்து நான்கினில், அமரபட்ச சதுர்த்தசிகளெனச் சொல்லும் பன்னிரண்டும் மாசசிவராத்திரிகளெனச் சொல்லத்தக்கன. எ - று. (எஅ)

வருட மொன்றிடை வருதின மனைத்தினு மதிக்கிழ மையிற்றோன்றுங்
கருகு கங்குலு வாவரி லவ்விராக் கணணுத லிரவாகு
முருகு சிந்தைமீ ருரைத்திடி லாங்கது யோகராத் திரியாகும்
பொருவி லற்றைநா ணோற்றவர் பெற்றபே றெம்மனோர் புகல்வாரே.

(இ - ள்.) ஒருவருடத்தில் வரும் எல்லா நாட்களிலும் சோமவாரத்தின் இரவில் அமாவாசை வருமாயின் அவ்விரவும் சிவராத்திரியாகும். உருகுகின்ற மனமுள்ள முனிவர்களே! அச்சிவராத்திரியைக் குறித்துச் சொல்லப்புகுந்தால் அது யோகசிவராத்திரியென்று சொல்லலாகும். ஒப்பற்ற அத்தினத்தில், சிவராத்திரிவிரதத்தை யநுஷ்டிப்பவர்கள் பெறும்பயனை என்னையொத்தவர்கள் சொல்லுவார்களோ? எ - று. (எகூ)

மகர திங்களி னமரபக் கத்திடை வருபிர தமையெய்திப் [தாக்கிப்
புகலு மன்றுதொட் டெதிர்ந்தபன் மூன்றுநாட் புசிப்பதோர் பொழு
பகர்த ரும்பதி னான்கிடை நோற்பது பக்கராத் திரியாகு
மிகப ரந்தரு மாகமா தத்திடை நோற்பது வியல்பாமே.

(இ - ள்.) தைமாதத்தில் அமரபக்ஷத்தில் வரும் பிரதமை திதிநேர்ந்த அன்றைநாள் தொடங்கி எதிர்ந்து வரும் பதின்மூன்று நாட்களும் ஒருவேளை யுணவுகொண்டு, யாவரும் புகழ்ந்து சொல்லும் சதுர்த்தசித்திதிவரையில் அநுஷ்டிப்பது பக்ஷசிவராத்திரியாகும். இகத்திலும் பரத்திலும் பலன்களைத்தரும் மாசிமாதத்தில் அநுஷ்டிப்பது இயற்கையாகும். எ - று. (அ0)

அருட ருஞ்சிவ ராத்திரி யிப்படி யைந்துபட் டதுவாகு
முருகு காதலி னீங்கிவை நோற்கயற் றொன்றெனுந் திறம்பாமல்
வருவி திப்படி யூண்டுயி லொழிந்திது வரன்முறை நோலாதார்
பெருகு மாதவம் புரிந்தவ ராயினும் பிழைத்தனர் பிழையாதார்.

(இ - ள்) திருவருள் பாலிக்குஞ் சிவராத்திரி விரதமானது இப்படி ஐந்து வகையினை யுடையதாம். மனமுருகிய அன்போடு ஒருவகையினுங் குறைவுநேராமல் இவ்வைந்துவகையினையும் அநுஷ்டிக்கக் கடவீர்கள். சிவாகமங்களிற் சொல்லிய விதிப்படி ஆகார நித்திரைகளில்லாமல் இதனைத் தொடர்ச்சியாக நோற்காதவர்கள் சிறந்தபெருந்தவங்களைச் செய்தவர்களானாலும் அவர்கள் உச்சீவித்தவர்களல்லர். எ - று. (அக)

இன்ன வாய்நிகழ்ந் தெய்திய வருட்சிவ ராத்திரி யெனுமந்நாண்
மன்னு காலையிற் புனல்குடைந் தவரவர் வரன்முறை கடனாற்றி
மின்னி ருங்கொடி மேவணி யெம்பிரா னுறை கோயிலம்போய் வியந்தேத்தி
யன்ன வற்குநெய்த் தீபமே முதலிய வாற்றிநின் றடிபோற்றி.

(இ - ள்.) இவ்வகையாக நடந்துவருகின்ற அருள்தரத்தக்க சிவராத்திரி யென்று சொல்லப்படும் அந்தத்தினத்திலே, நிலைபெற்ற விடியற்காலத்திலே

ஸ்நானஞ்செய்து தங்கடங்கள் வருணாசிரமங்கட்கியைய நித்திய கருமங்களைச் செய்து முடித்து, நெடிய மின்னற்கொடிபோலும் சடையையுடைய எமது சிவபெருமான் வீற்றிருந்தருளும் ஆலயத்தையடைந்து சந்தோஷித்துத் துதி செய்து, அப்பெருமானுக்கு நெய்த்திருவிளக்கு முதலிய திருப்பணிகள் புரிந்து சந்நிதானத்தில் நின்று திருவடிகளை வணங்கி. எ - று. (அஉ)

உறக்க முண்பன வொழித்துமற் றெம்பிரான் றிருநடத் துபயத்தா
ணறைப்ப சுந்துண ரருச்சனை புரிந்திரு நாலியா மமும்போற்றி
பிறைக்கொ டுஞ்சடை யெம்பிரா னருச்சனை யில்லவர் பெருமானைத்
திறத்து ணர்ந்திடு முளத்தராய்க் கோயில்சென் றேத்துவர் சிவகங்குல்.

(இ - ள்.) நித்திரை ஆகாரமுதலியவற்றை நீக்கி, எமது சிவபெருமானது திருநடம் புரியும் உபயபாதங்களில், மணங்கமழும் பசிய மலர்க்கொத்துக்களால் அர்ச்சனைபுரிந்து (பகலிரவாகிய) எட்டு ஜாமங்களிலும் பூசிக்கக்கடவர். பிறைச்சந்திரனை யணிந்து வளைந்த ஜடையையுடைய எமது சிவபெருமான் பூஜை செய்யாதவர்கள் அப்பெருமானைத் தியான வல்லபத்தால் தரிசிக்கும் மனமுடையவர்களாய்த் திருக்கோயிலையெய்திச் சிவராத்திரிதினத்தில் தோத்திரஞ் செய்க. எ - று. (அங)

எடுத்து ரைத்தமற் றீங்கிவை யைந்தையு மிப்படி முறைநோற்கத்
தொடுத்தி லாரெனில் விரதமொன் றாயினு நோற்றுறி னவர்தூய்மை
யடுத்த நாவினாற் சொற்றுறிற் செழுங்கம லாலயத் தயனாலும்
விடுத்த கோடிகற் பத்தினு மமையுமோ யாரது விரிப்பாரே.

(இ - ள்.) இதுகாறும் எடுத்துக் கூறிய இச்சிவராத்திரி விரதங்களைந்தையும் இவ்வகையாகக்கிரமப்படி அநுஷ்டிக்கத் தொடங்காதவர்களானால், இவற்றில் ஓர்விரதத்தை யேனும் அநுஷ்டிப்பாராயின், அவர்களது சிறப்பை நாவினாற் சொல்லுமிடத்தில், செழுமைதங்கிய தாமரைப்பீடத்திலுள்ள பிரமதேவனாலும் கழிகின்ற கோடிகற்பங்களிலும் முடியுமோ? அதனை விரித்துச் சொல்லுவோரெவர்? எ - று. (அச)

ஆழி மாயவ னுயிர்புரந் தளிப்பது மம்புயத் திருக்கோயிற்
பாழி யெண்புய னெடுநில மின்னுயிர் படைப்பதும் பசும்பொன்னா
டூழி யிந்திரன் புரப்பதூஉ மளகையா னொழிவறு வளனீண்டி
வாழி பெற்றதும் விரதமீ திழைத்தலா லென்பது மனக்கொள்வீர்.

(இ - ள்.) திருப்பாற்கடலில் அரிதுயில்புரியும் திருமால் உயிர்களைக்காத்திரட்சிப்பதும், அழகிய தாமரைமலரிருக்கையையுடைய வலிய எட்டுத்திருப்புயங்களையுடைய பிரமன், நெடிய உலகத்தையும் அதிலுள்ள இனியவுயிர்களையுஞ் சிருட்டித்தலும் பசிய பொன்மயமான தேவலோகத்தைஇந்திரன் அரசுசெய்வதும், அளகேசனாகிய குபேரன் ஒழிவில்லாத வளங்கள் சேரப்பெற்று வாழ்வெய்தியதும், இவ்விரதத்தை யநுஷ்டித்ததாலே யென்று மனதிற்கொள்வீர்களாக. எ - று. (அரு)

மதிக வித்தென வெண்குடை நிழற்றுகன் மாடபா தனைப்பற்றி
விதிவ ழித்தொடர் பிரமகத் தியைவிடுத் தொழிப்பது விரும்புற்று
முதிய மாதவக் கௌதமன் சொற்படி யீங்கிது முறைநோற்றுக்
இந்த ருந்தனித் தலைவனாய்ப் பாதக மெவற்றையுங் கடந்துற்றான்.

(இ - ள்.) சந்திரனைக் கவித்ததுபோலும் வெண்குடையால் நிழல் செய்கின்ற கன்மாடபாதனென்னும் அரசன் தன்னைப் பிடித்துக்கொண்டு விதிப்படி தொடர்ந்துவந்த பிரமகத்தியைப் போக்கவிரும்பி, சிறந்தபெருந்தவமுடைய கௌதம முனிவர் சொற்படி இவ்விரதத்தைக் கிரமப்படி செய்து, வேண்டிய வரத்தை யநுக்கிரகிக்கும் ஒப்பற்ற தலைவனைத் தன்பாவங்களை யெல்லாம் விலக்கிப் புனிதனாயினான். எ - று. (௮௬)

குனித்த வார்சிலைக் கரத்தினன் சுருடரு குஞ்சியன் றிணிதோளான்
றுனித்த சிந்தையன் காரண மின்றியே சுடுசினக் கொலைவேடன்
பனித்த கங்குலி னடுகொலை வேட்டைமேற் படர்ந்தனன் படர்கானந்
தனித்து லாவினன் கிடைத்தில தொன்றையு மிருந்தனன் றனியோர்பால்.

(இ - ள்.) வளைந்த நெடிய வில்லேந்திய கையை யுடையவனும் சுருண்ட தலைமயிரையுடையவனும் வலிய புயமுடையவனும் வருத்தும் மனமுடையவனும் காரணமின்றிக் கடுங்கோபத்தாற் கொல்பவனுமாகவுள்ள ஒருவேடன், பயத்தை விளைவிக்கும் ஓரிரவில், உயிர்போக்குங் கொலைத்தொழிலாகிய வேட்டைக்குச்சென்றான். பரவிய காட்டில் தனியே திரிந்தும் ஒன்றும் கிடையாதவனாய் ஓர்பக்கலில் தனிமையாயிருந்தான். எ - று. (௮௭)

அன்ற ரன்சிவ ராத்திரி யென்பது மறிந்தில னயனோக்கிக்
கன்று வெஞ்சின விலங்கினை வெருவியோர் வில்வமேற் கவையுற்றா
னின்றி ருந்துயி லுறந்தில மாயின்வீழ்ந் திடுதுமென் றுளத்தெண்ணி
மன்ற னாறுபத் திரம்பறித் திட்டன னிரவிதேர் வருங்காறும்.

(இ - ள்.) அன்று சிவராத்திரியென்பதையும் உணராதவனாய்ப் பக்கத்திற் பார்த்து வருந்தத்தக்க கடுங்கோபமுடைய ஒரு மிருகத்திற்குப் பயந்து அதற்குத் தப்பும்படி அங்கிருந்த ஒரு வில்வமரத்தின் உயர் கிளையிலேறிக்கொண்டான். இன்றிரவு பெருநித்திரையை யொழித்திடாவிடின் தரைமேல் விழுந்துவிடுவோமென்று மனதிற்கருதி, சூரியன் றேர் உதயமாகுமெல்லையும் மணங்கமழும் வில்வ தளங்களைப் பறித்து எறிந்துகொண்டிருந்தான். எ - று. (௮௮)

பறித்த பத்திர மெம்பிரான் றிருமுடி வீழ்தலும் பனிக்கற்றை
வெறித்த வார்சடை யெம்பிரான் றிருவருள் புரிந்தனன் விறல்வேடன்
செறித்த பாதகங் கனற்படு பஞ்சியிற் றீர்ந்தன மறையாவுங்
குறித்த நாயகன் சேவடி புகுந்தனன் விண்ணவர் குலம்போற்ற.

(இ - ள்.) பறித்தெறிந்து வந்த அவ்வில்வபத்திரங்கள் எமது சிவபெருமான் திருமுடிமீது சேர்ந்தவுடனே, குளிர்ச்சியுற்றுக் கூட்டமாய் மணந்தங்கி நீண்ட சடையையுடைய எமது சிவபெருமான் அவனுக்குத் திருவருள் புரிந்தனர். வலிதங்கிய அவ்வேடனது நிறைந்த பாவங்களெல்லாம் தீப்பொறிப்பட்ட பஞ்சு மூட்டைபோ லழிந்தன, வேதங்களெல்லாம் நாடியிருக்கும் சிவபெருமான் திருவடி நீழலில் தேவகணங்கள் துதிசெய்யும்படி சேர்ந்தனன் ()

இழிதொ ழிற்குலப் புலையரிற் றோன்றின ளொருத்திமற் றிரப்புற்றாள்
விழிபி ழந்தனள் வறுமையிற் றேம்பினள் விரதமீ துறுமந்நாட்
கழிபெ ருங்கட லுலகுளோ ரெழுந்துகோ கன்னமெய் திடுங்காலை
வழியி ருந்தன ளிருகையேற் றிரந்தரும் பசியொடும் வருந்துற்றாள்.

(இ - ள்.) மேலும், இழிந்த அசேதனச் செயற்குரிய குலமாகிய புலைச் சாதியிற் பிறந்தாளொருத்தி, யாசிப்பவளும் கண்ணொளி யில்லாதவளும் வறுமையால் வருந்துபவளுமாகி இச்சிவராத்திரி வந்த தினத்திலே, மிகப்பெரிய கடலாற் சூழப்பட்ட உலகினர் புறப்பட்டுக் கோகர்ண ஸ்தலத்திற்குப்போகுஞ் சமயத்தில் அவ்வழியிடை யிருந்துகொண்டு இருகைகளையும் பரப்பி யாசித்துக் கொடும்பசியோடு வருத்தமெய்தியிருந்தாள். எ-று. (கூ0)

அந்நெ றித்தலை யருட்சிவ ராத்திரி நோற்கவென் றவணேகுஞ்
செந்நெ றித்தலை மாந்தரி லொருவனின் றவள்கரந் தீண்டாமற்
பன்னு பத்திர வில்வமிட் டேகின னங்கது பசிதீரத்
தின்னு தற்கியைந் தனவல வெனவெறிந் திட்டன டிசைநோக்காள்.

(இ - ள்.) அவ்வழியிலே சிவராத்திரி விரதத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று கோகர்ணத்திற்குச் செல்லும் நல்லவழியிலே சிறந்த மாந்தர்களிலொருவன், அங்கே நின்று அவள் கையைத்தொடாமல் யாவரும் புகழும் வில்வ தளத்தை அவள் கையிற் போட்டுப் போயினன். அது தன் பசியடங்கத் தின்னுதற்குப் பொருந்தியதன்றென்று கருதி, திசையைப் பாராமல் எறிந்து விட்டாள். எ-று. (கூக)

அனைய காலையிற் சுழித்தெறி காலெழுந் தாங்கவ ளெறிவில்வம்
புனித மேனியோ ரிலிங்கமுற் றுளததன் திருமுடி பொலிந்திட்ட
வினைய டுஞ்சிவ ராத்திரி யற்றைநா ளாதலின் விடையூர்ந்தோ
னினைவ ருந்திரு வுளமிரங் கினனவள் கயிலைநன் னெறிசென்றாள்.

(இ - ள்.) அப்படிப்பட்ட சமயத்தில் சுழன்று வீசுங் காற்றினால் அவள் வீசியெறிந்த வில்வ பத்திரமானது போய், அங்கே புனிதமான திருமேனியையுடைய ஒரு சிவலிங்கப்பெருமான் இருந்ததனால், அப்பெருமான் அழகிய திருமுடியிற் பொருந்தியது. அன்றையதினம் ஆன்மாக்களின் வினைகளை யொழிக்கும் சிவராத்திரி தினமாதலால், இடபவாகனத் தாரோகணித்த சிவபெருமான் திருவுள்ளமிரங்கினர். அப்புலைச்சி கைலாயமாகிய நல்ல பதவியைச் சென்றடைந்தாள். எ-று. (கூஉ)

கலிநிலைத்துறை.

முடங்கு வெண்மதிக் கண்ணியன் முகிண்முலை யொருத்தி
யிடங்கொ ளெம்பிரா னிரவுநோற் றின்னருட் கடற்பா
ளடங்கி னோர்கதை யின்னுமொன் றுளதுமக் கறைவாம்
படர்ந்த புன்சடை யந்தணீ ருணர்கெனப் பகர்வான்.

(இ - ள்.) வளைந்த சந்திரனை மாலையாக வுடையராய், அரும்புபோலுந் தனங்களையுடைய ஒப்பற்ற உமாபிராட்டியாரை வாமபாகத்திற் கொண்ட எமது சிவபெருமானுடைய சிவராத்திரி விரதத்தை யனுஷ்டித்து இனிய திருவருட் கடலில் மூழ்கினவரது சரித்திரம் வேறொன்றுளது. அதனை யுமக்குச் சொல்லுவோம். படர்ந்துள்ள சிறு சடையையுடைய நைமிசாரணிய முனிவர்களே! தெரிந்துகொள்ளுங்களெனச் சூதமுனிவர் சொல்லலாயினர், எ-று.

சுரிமு கக்குல மெடுத்திரும் பவளவேர் துருவி
விரிதி ரைக்குலஞ் சுமந்துற வொழுகிமீ தூர்ந்து
வரிம டப்படங் குளிர்ப்புற நடப்பது வானோர்
தெரித ரும்புனற் சிந்துவென் றொருநதி யுளதால்.

(இ - ள்.) சங்குகளின்தொகுதியை மேலேதாங்கிக்கொண்டு, பெரிய பவளக்கொடிகளின் வேரைத்தேடிக்கொண்டு, பரவிய அலைத்தொகுதிகளையும் மேற்கொண்டு மேலேபொங்கி, வரிசையுற்று வளைந்திருக்கும் ஆதிசேடன் பணமகுடங்கள் குளிர்ப்பெய்தும்படி பாயத்தக்க, தேவர்களும் தேடிக்கொண்டிருக்கும் நீர் நிரம்பிய சிந்து வென்றொரு நதியுண்டு. எ - று. (கூச)

அன்ன மாநதிக் கரைமருங் கயல்வய லுடுத்த
பொன்னி னிஞ்சிசூழ் கிடந்தது தேவரும் புகழ்தற்
கின்ன லந்தரு குஞ்சரத் திருநக ரிதன்பான்
மின்னு வேற்படைக் குஞ்சக னுளனொரு வேந்தன்.

(இ - ள்.) அந்தச் சிறந்த நதிக்கரைக்கருகே அயலில் வயல்கள் சூழ்ந்த பொன்னாலாகிய மதில்கள் நாற்புறஞ் சூழ்ந்த நகரமானது தேவர்களுந் துதித்தற்குரிய இனிய இன்பத்தைத்தருங் குஞ்சரமென்னும் அழகிய நகரமாம். இந்நகரத்திலே பிரகாசிக்கின்ற வேற்படைதாங்கிய குஞ்சகனென்னும் மன்னவனொருவனிருந்தான். எ - று. (கூரு)

அனைய வேந்தனுக் காசிசொற் றிடுமொரு மறையோன்
றனைய ரின்றியே யருட்பெருந் தவத்தொடுஞ் சரித்தான்
புனைநெ டுஞ்சடை யெம்பிரான் றிருவருள் புரியா
வனைத ருஞ்சுகு மாரன்வந் துதித்தனன் வரத்தால்.

(இ - ள்.) அத்தகைய மன்னவனுக்கு ஆசி கூறும் ஒருவேதியன் புதல்வர்களில்லாமல் அரியபெருந்தவங்களைச் செய்துகொண்டிருந்தான். அலங்கரிக்கின்ற நெடிய சடையையுடைய எமது சிவபெருமான் திருவருள்புரிந்த வரத்தினால் அலங்கரிக்கத்தக்க சுகுமாரனென்னும் புத்திரன் தோன்றினன். எ-று.

வனப்பெ லாந்திரண் டொருவுழிக் கொண்டென வளர்வா
னினக்கு நான்மறை முதலிய யாவையு மிசைத்தான்
சினக்கொ டுந்தொழில் வேளிலாற் றுவமையிற் சிறந்தான்
கனைக்க ருங்கட லுலகுளோர் காண்டொறுங் கவினும்.

(இ - ள்.) அழகுமுழுவதுஞ் சேர்ந்து ஓர் வடிவெடுத்தாற்போல வளர்ந்துவருகின்ற சுகுமாரன், இனமாயுள்ள நான்குவேதங்கள் முதலிய எல்லாவற்றையும் ஓதியறிந்தவனாய், கோபத்தோடு கூடிய கொடுந்தொழிலுடைய மன்மதனுக்குச் சரியானவனென்று ஒப்பிடப்படாமல் மேம்பட்டான். ஒலிக்கின்ற கருநிறங்கொண்ட கடல்சூழ்ந்த உலகினர் அவனைப்பார்க்குந்தோறும் அழகோடு விளங்குவான். எ - று. (கூஎ)

தகர்ந்த வெண்மதி திருத்திய முறுவலன் றுழாப்
பகர்ந்த மென்மொழி மயக்கினன் பணைத்தடம் புயத்தான்
சகந்தொ ழுந்தகுந் தன்மையான் றண்சிறைச் சுரும்பர்
நுகர்ந்த தாரொடு மின்னென நுடங்குநூன் மார்பன்.

(இ - ள்.) பிளவுபட்ட வெள்ளிய சந்திரனை வரிசைப்படுத்தியதுபோன்ற பற்களையுடையவன். தாழ்ந்தவோசையோடு கூறும் மென்மொழிகளால் கேட்போர் யாவரையும் மயக்குகின்றவன். பருத்துப் பரந்த தோள்களையுடையவன். உலகினர் பணியத்தக்க ஒழுக்கமுடையவன். வண்டுகள் தேனுண்ணுந் தாமரைமலர்மாலையோடு மின்னல்போலசையும் உபவீதம் விளங்கும் மார்புடையவன்.

வருண நான்குள மாந்தரு மயங்குறு வனப்பி
னுருவ மெய்திய வுறுப்பின னோடரித் தடங்கண்
மருவ ருங்குழன் மகளிர்கண் கவர்தரு வதனன்
செருகு மென்மலர்க் குடுமிய னாடவர் திலகன்.

(இ - ள்.) வருணங்கள் நான்கிலுள்ளாரும் மயங்கத்தக்க அழகுபொருந்திய வடிவோடுகூடிய அவயவங்கள் வாய்ந்தவன். காதளவும் ஓடிய அரிபடர்ந்த பரந்தவிழிகளையும் மணங்கமழுங் கூந்தலையுமுடைய மங்கையரது விழிகளைக் கவரத்தக்க முகமுடையவன். மெல்லியமலர்சூடிய சிகையையுடையவன். ஆண்மக்கட்கொரு திலகம் போன்றவன். எ - று. (கூகூ)

மார னூல்வழி வரன்முறை தெரிந்தது வகுத்த
சேர லீற்றல்கோ தன்மையீ றிவற்றிடைத் தெரிந்த
வோர்வ ருங்கர ணங்களுற் பத்தினெட் டுருக்கி
யார்த ருஞ்சுவைப் பானமைந் தாறுமுற் றளந்தான்.

(இ - ள்.) காமாகமத்திற் சொல்லியுள்ள முறைமைகளெல்லாவற்றையும் தெரிந்து அதில் வகுக்கப்பட்டுள்ள சேர்தல்முதலாக உவகையிறுதியாகக் கூறப்படும் எட்டு அங்கிதங்களையும், இவற்றுள் வகுக்கப்பட்ட யாவரும் உணர்தற்கரிய கரணங்கள் நாற்பத்தெட்டினாலும் உருகச்செய்துண்ணும் நிறைந்திருக்கின்ற ஏகாதசமானங்கள் முழுவதுந் தேர்ந்தவன். எ . று. (௧௦௦)

"சேரலாதி காதன்மை" என்பதை—"புல்லுதல் சுவைத்திடல் புணர்நகக் குறி, பல்லுறல் மத்தனம் பயிலுந்தாடனம், ஒல்லொலிகரணமோடுவகையாதிய, எல்லையில் புணர்நிலைக் கியைந்த வென்பவே" என்பதனாலுணர்க. இதன் விரிவு காமநூலுள்ளும் கந்தபுராணத்துள்ளுங்காண்க - விரிப்பிற்பெருகும்.

துஞ்சு கங்குலிற் பக்கமு மிருத்தையுந் தோய்ந்து
நஞ்சு மாரமு திடையிற நடப்பன நாடி
யஞ்சி னத்துகிர்க் குறியெயிற் றுறுகுறி யளந்து
பஞ்சின் மெல்லடி மகளிரைத் தன்வயப் படுத்தான்.

(இ - ள்.) சித்திரைபுரியும் இராக்காலத்தில் பட்சத்தையும் திதியையும் உணர்ந்து, விடமும் அமுதமும் இடையே நில்லாமல் நடக்குந்தன்மையறிந்து ஐந்துவிரல்களிலும் பொருந்திய நகக்குறியையும் பற்குறிகளையும் உணர்ந்து செம்பஞ்சுக்குழம் பூட்டிய மெல்லிய பாதங்களையுடைய மாதர்களைத் தன் வசஞ் செய்து கொண்டனன். எ - று. (௧௦௧)

கொழுந ரன்றியோர் கடவுளைத் தளிர்க்கரங் குவியா
வழுவில் கற்புடை மடந்தையர் மனங்கனிந் துருகி
யொழுக நின்றனன் பிறர்மனை யென்பதொன் றுணரா
னெழுவு கோக்குலத் தொருதனி யேறெனத் திரிவான்.

(இ - ள்.) வேதியர் குலத்திற்கு ஒப்பற்று மேம்பட்ட ஆண்சிங்கம்போற் சஞ்சரிப்பவனாகிய சுகுமாரன், தங்கள் கணவரையல்லது பிறிதொருதெய்வத்தை மாந்தளிர்போலுங் கைகளைக் கூப்பிப்பணியாத குற்றமற்ற கற்புவாய்ந்த தன்மனைவிமார் மனக்கனிவுற்றவர்களாய் உபசரிக்கவிருந்தான். பிறர் மனைவியர்சையோகமென்பது ஒருசிறிது முணரான். எ . று. (௧௦௨)

கன்னி மாடமுங் கடிமதிற் காவலுங் கழியத்
துன்னு மாயிருட் பிழம்பிடை யிவனடித் தொடர்வா
ரன்ன மன்னவர்க் கலக்குற விலக்கினு மமையா
ரின்ன தன்மையி னீங்கிவை நிகழ்ந்துறு மேல்வை.

(இ - ள்.) கன்னிமாடங்களையுங் காப்பமைந்த மதிற்காவலுடைய வற்றையுங் கடந்து மிகவிசேடித்த நடுராத்திரி இருளிலே, இவனைத்தேடிவரும் அன்னம்போலும் நடையையுடைய மாதர்களை இவன் கூடுதற்குத் தடுத்தாலும் அவர்கள் சம்மதியார்கள். இவ்வகையாக இவ்விடத்தில் இவை நடந்தேறிவருகின்றகாலத்தில், எ - று. (௧௦௩)

ஒளித்த காமமீக் கூர்சுகு மாரனென் றொருவன்
றெளித்த கற்புடை மகளிரை யழித்தபுன் செயலை
வெளிப்ப டுத்தின ராகிவந் திருநிலம் வியப்பா
வளித்த மன்னவற் கறைந்தனர் மானநீத் தயர்ந்தார்.

(இ - ள்.) சுகுமாரனென்னும் பெயரையுடைய அதிகமாகிய காமத்தை மறைத்து வைத்துள்ள வொருவன், தெளிந்த கற்புறுமாதரை அவர்கள் நிலை தவறும்படி அழித்ததுர்செயலை வெளியிடுவோர்போலவந்து, இவனை விரும்பிப்பின்றொடர்ந்து தமது விருப்பங் கைகூடாதவர்களாய் மானம்விட்டு வெறுப்பெய்தியவர்கள், உலகினைக் காத்திருந்த அரசனுக்கு அபவாதமாகச் சொன்னார்கள். எ - று. (௧௦௪)

கேட்ட மன்னவன் செவித்தொளை சுறுக்கொளக் கிளரா
வீட்டு சீற்றமிக் கெழுந்தவற் கொணர்மினென் றிசைப்ப
வாட்ட டக்கையோர் சென்றனர் கொணர்தர வந்தான்
றீட்டு பேரெழி னோக்கினன் குளிர்ந்ததச் சீற்றம்.

(இ - ள்.) கேட்டறிந்தஅரசன் செவித்தொளையிற் சுறுக்கென்றுதைக்கப் பொங்கியெழுந்த கோபமுண்டாகி; அவனைப்பிடித்துவருக வென்றாக்கியாபிக்க, வாளாயுதந்தாங்கிய விசாலமானகையையுடைய காவலாளர் உடனே போய்ப் பற்றிவர அவனும் வந்தனன், மன்னவன் அவனது அழகிய சித்திரம் போலும் வடிவைப்பார்த்தான். அதனால் அவனுக்குண்டான கோபந்தணிந்தது. எ-று.

கொல்ல லாமெனுந் தகையனன் றிவனெழில் குறிப்பின்
றொல்லை நான்மறை யவருழைத் தோன்றியோ னிவனை
யொல்லை கொண்டனிர் போதிரெம் முயர்குடை நிழற்கீ
ழெல்லை மாநிலங் கடத்திநீர் விடுத்திரென் றிசைத்தான்.

(இ - ள்.) இவனழகை யெண்ணிப்பார்த்தால், கொல்லலாமெனச் சொல்லத்தக்க தகுதிவாய்ந்தவனல்லன். பழமையாகிய நான்குவேதங்களையுணர்ந்த மறையவர் குலத்திற் சனித்தவன். இவனை, அதிவிரைவிற்கொண்டு சென்று நமது வெண்கொற்றக்குடைநிழலில் அரசுநடத்தும் பூமியின் எல்லையைக் கடத்து விட்டுவிடுங்களென உத்தரவளித்தான். எ - று. (௧௦௫)

அனைய ரவ்வுரை கேட்டலும் பற்றின ரகன்றார்
கனைபொ லன்கழன் மன்னர்கோ னகனிலங் கடத்தி

விளையு ளக்கிது விளைந்தவா றென்றனர் விடுத்தார்
சினைய கானகத் தருவரை நெடுநெறி சென்றான்.

(இ - ள்.) அத்தண்டலாளர் அக்கட்டளையைக் கேட்டமாத்திரமே, அவனைப்பற்றிச் சென்று ஒலிக்கின்ற பொன்னுலான வீரகண்டாமணிதரித்த இராசராசனுடைய பூமியின் எல்லையைக்கடந்து, இப்படி உனக்கு நேர்ந்தது உன் வினைப்பயனெனக் கூறிவிடுத்தார்கள். கிளைவழிகளையுடைய ஒரு காட்டிலிருக்கும் பெரியமலையின்மேல் வெகுதூரஞ்சென்றான். ஏ - று. (கo௭)

சென்ற கானகத் தடுபுலி கொய்யுளைச் சீயங்
கன்று வெஞ்சின விடவரா வழிமதக் களிறு
துன்று மோர்நெறி முடுக்கரி னெடுவனஞ் சுழன்றான்
மன்ற லம்புனற் பொய்கையொன் றெதிர்ந்தனன் மறையோன்.

(இ - ள்.) அப்படிச்சென்ற காட்டிலே கொல்லத்தக்க புலிகளும், கத்தரித்தது போன்ற பிடரிமயிரையுடைய சிங்கங்களும், கொடூரமான கோபமுடைய பாம்புகளும், மதஞ்சொரியும் யானைகளும் நெருங்கிய ஒருவழியின் முடுக்கில் அகப்பட்டு, பெரிய காடுமுழுவதுந் திரிந்துகொண்டிருந்த சுகுமாரனென்னும் வேதியன் மணந்தங்கிய அழகிய நீர்நிரம்பிய தடாகமொன்றை எதிரே கண்டான். எ - று. (கoஅ)

அன்ன நாண்மலர்ப் படுகரி னளவைபெற் றறியேந்
துன்னு பன்மலர் மிடைந்தன வுடைந்துதேன் சொரியக்
கன்னி யன்னமே முதலிய தொகுதியிற் கலந்த
பன்னி றத்தெழு தியபடாம் படுத்தன கடுக்கும்.

(இ - ள்.) அத்தகைய புதியமலர்களையுடைய தடாகத்தின் அளவை நாம் சொல்ல அறியோம். அதில் நெருங்கிய பல்வகைப்பூக்களும் ஒன்றுகூடியன வாய் இதழ்கள் விரிந்து தேனைச்சொரிய, இளமை தங்கிய அன்னமுதலிய பறவைகள் கூட்டமாகக் கலந்திருக்கின்ற தோற்றமானது, பலவர்ணங்களோடமைத்த சித்திரவஸ்திரங்கள் விரித்திருப்பனவற்றைப்போன்றிருக்கும். எ - று.

சில்லு கிர்ச்சிறு தாட்படு புள்ளியஞ் சிரலை
யெல்லை வானெழூந் திருங்கயல் கதுவவீழ்ந் திடலு
மொல்லை பாசடைக் கயலொளித் தொதுங்குற வோங்கி
மெல்லி ருஞ்சிறை விதிர்த்துவே றிருப்பது வெள்கி.

(இ - ள்.) சில நகங்களையுடைய சிறுகால்களையும் புள்ளிகள் தங்கிய சிறகுகளையுமுடைய அழகிய [சிச்சிலி] மீன்கொத்திக்குருவியை அத்தடாகத்திலுள்ள பெரிய கயல் மீன்கள் ஆகாயமளவும் எழுப்பிப்பற்ற, அக்குருவி நிலமிசைவிழுந்தவுடனே, அக்கயல் மீன்கள் சீக்கிரத்தில் அத்தடாகத்திலுள்ள தாமரையின் பசிய இலைகளின் கீழேயொளித்துமறைய அக்குருவிமேலேபறந்து தன்மெல்லிய பெருஞ் சிறகுகளையடித்துக்கொண்டு வெட்கித்தனியிருக்கும்.

தாது நாண்மலர்க் குப்பையின் றுயிர்ப்புறத் தவழ்ந்து
போது காலொடு நறைகரந் தொதுங்குறப் புகுந்தோ
ரீது வாசமென் றறிவரி தாகிமற் றெல்லை
காத நாறின தடம்புடைக் கிடந்தவக் கானம்.

(இ - ள்.) அத்தடாகத்தைச் சூழ்ந்து வீசும்வாசனை, மகரந்தத்துடன்அன்றலர்ந்தமலர்க் குவியலிற்படிந்து மெல்ல வீசுங்காற்றோடு சிறிதுமறைந்து ஒளித்துக்கொண்டமையால், அவ்விடத்திற்கு வந்துசேர்ந்தவர்கள், இஃதின்ன மலர் மணமென்று உணர்வதற் கருமையாகிக் காததூர விஸ்தீரணம் மணங் கமழ்ந்தன. எ - று. (ககக)

முளரித் தாதொடும் பொம்மென முழங்கிய சுரும்பர்
களரிப் பானலம் பெடையொடு மணந்துறக் கனலா
விளரிப் பாடல்வண் டடுசின மிழற்றின விரிநீர்
தளரிக் கொம்பரின் வாரலி ரெனச்சினை தாழ்ந்த.

(இ - ள்.) தாமரைமலரின் மகரந்தங்களில் பொம்மென்னும் ஒலியுடன் ரீங்காரஞ்செய்யும் [சுரும்பர்] ஆண்வண்டுகள், கருங்குவளைமலரிலிருந்த [தேன் என்னும்] பெண்வண்டுகளுடன் சேர்தலால், அத்தாமரைமலர்களிலிருந்தபெண் வண்டுகள் கோபமெய்தி விளரியென்னும் பண்ணைப்பாடின. மிக்க நீரிலேதளர்ந்திருக்கும் இக்கொம்பில் வராதீர்கள் என்று, கருங்குவளை யரும்புகள் கீழே நோக்கித் தொங்கின. எ - று. (ககஉ)

பாளை வாளெயிற் றிடங்கர்வாய்த் தவறிய பகுவாய்
வாளை தாவுற வயவர்கை வாட்படை மருட்டுந்
தாள தாமரை முகம்படு சுரிமுகச் சங்கங்
காள வேல்விழி மகளிர்கைக் கந்துகங் கடுக்கும்.

(இ - ள்.) தென்னம்பாளைபோலுங் கூர்மை தங்கிய பற்களையுடைய முதலைவாயினின்றுந் தப்பிய பிளவுபட்டவாயையுடைய வாளைமீன்கள் அத்தடாகத்திற்சஞ்சரிக்குந் தன்மையானது, போர்வீரர்கையிலேந்திய வாட்படையைமயக்காநிற்கும். தாளோடுகூடிய தாமரையினிடத்திலிருக்கும் சுரிமுகச்சங்கங்கள் நஞ்சூட்டியவேல்போலுங் கண்களுடைய மங்கையர்கரத்திற்றாங்கிவிளையாடும் பந்துகளையொத்திருந்தன. எ-று. (ககங)

மடலு டைந்தலர் தாமரை யுழக்கிமென் மதுவாய்க்
குடமு டைந்தல ராம்பலங் காடிடை குழப்பி
முடவு வெண்டிரை கிழித்துவாய்த் தவறிய முதுநீர்
நெடுவ ராலினைத் தொடர்ந்தெழு மடுசின நீர்நாய்.

(இ - ள்.) இதழ்கள் விகசித்தலர்ந்த தாமரைமலர்களைக் கசக்கி, மெல்லிய தேன்நிறைந்த குடமானது உடைந்தாற்போல விகசிக்கும் ஆம்பற்பூக்களின்கூட்டத்திலே கலக்கி, வளைந்திருக்கும் அலைகளைக்கிழித்து அவ்வலைகளைத்தப்பித்துக்கொண்டு, அத்தடாகத்தின் மிக்க நீரிற்சஞ்சரிக்கும் பெரியவரால்மீன்களைக் கடுங்கோபமுற்ற நீர் நாய்கள்பின் தொடர்ந்து செல்லாநிற்கும். எ-று. (ககச)

அனங்கொ டுஞ்சிறைப் புறவொடு புள்ளியஞ் சிரலை
யினந்த ருங்குரு கிடையிடை நடப்பன குரண்டம்
புனைந்த வன்னகம் புட்படு சக்கர வாக
நனைந்த மென்சிறை புலர்த்துவ புளினமே னடப்ப.

(இ - ள்.) அன்னப்புட்களும் வளைந்தசிறகினையுடைய புறாக்களும் புள்ளிகள்பொருந்திய [சிச்சிலி] மீன்கொத்திக்குருவிகளுமாகிய இவ்வகைக் கூட்

டங்களாகிய பட்சிகட்கிடையே கொக்குகள் உலாவித்திரியும். அலங்கரித்தாற் போன்ற வானம்பாடிக்குருவிகளும் அங்குள்ள சக்கரவாஹப்பட்சிகளும் ஈரமாயுள்ள தங்கள் மெல்லியசிறகுகளைப் புலர்த்துவதற்கு மணன்மேடைகளில் உலாவித்திரிவன, எ-று. (௧௧௫)

அன்ன தன்மைய வகன்புனற் படுகரின் பாங்க
ருன்ன ருங்கொலைப் புலைக்குலந் தோன்றிய வொருத்தி
மன்னு தன்மனை நீக்கமுற் றிருந்தனள் வந்தா
ளின்ன தன்மையென் றவள்வனப் பியம்புவ தியாரே.

(இ - ள்.) அத்தகைய பரவிய நீர்நிரம்பியதடாகத்தினருகே, எவராலும் எண்ணற்கரிய கொலைத்தன்மைவாய்ந்த புலையர்குலத்திற் பிறந்தவொருத்தி, தான்வாசஞ்செய்யும் தன்வீட்டிற் புறம்பாய் [பிரஷ்டையாய்] இருந்தவளாக வந்தனள். அவளுடைய அழகு இத்தகைத்தென்று எவர்தாங்கூறவல்லவர்?

அள்ளி வாரிமற் றொருகையிற் செருகிய வளகந்
தொள்ளி நானநெய் யிழுகிய கருமையின் றோற்றம்
வெள்ள வாரிமேற் படிந்தெழு கரும்புயல் விரவி
யொள்ளி ருட்பிழம் பஞ்சனந் தீற்றின வொக்கும்.

(இ - ள்.) ஒருகையாற் சேர்த்துப்பிடித்துச் செருகியகூந்தலிலே, கஸ்தூரித் தைலத்தினாற் குழைந்த சேறானது ஒழுகிக்கொண்டிருக்கும் கருநிறத்தின் காட்சியானது, நீர்ப்பெருக்குடைய சமுத்திரத்தின்மீது மூழ்கியெழுந்த கார் மேகமானது மிகக்கருநிறந்தங்கிய இருட்பிழம்போடுகூட்டி அஞ்சனத்தைத் தடவிக்கொண்டதற்குச் சமானமாகும். எ-று. (௧௧௭)

எங்கொ ளிப்பது மருங்கெனக் கணக்கறுத் திளகிப்
பொங்கு வெம்முலை மீப்படப் பொடித்தலர் திதலை
யங்க திர்ப்பக விளங்கொழுந் தளவிய பசும்பொற்
செங்கு றுந்தொளி யிடைபடச் செறித்தன சிவணும்.

(இ - ள்.) இடையானது எங்கேயொளித்துக்கொள்வதென்று, தங்கள் கண்கள் கருநிறமெய்தி, இளகுதலுற்றுப்பூரித்த பெரியமுலைகளின்மேல் பொடிப்பொடியாகவிளங்குந்தேமல்கள், அழகிய கிரணங்களையுடைய சூரியனது இளங்கொழுந்துகலந்த பசும்பொன்னிலே, இடையிடையே செவ்வயிரத்தின் காந்திநெருங்கியிருந்ததற்குச்சமானமாகும். எ-று. (௧௧௮)

ஒழுங்கு வார்குழைத் திருத்திய பொற்சுரு ளோலை
யழுங்கு வார்கட லுலகெலா மடக்கிய மாரன்
கொழுங்கு யிற்குரற் குதலையாட் கெழுதினன் கொடுத்த
தொழுந்த கைத்தனிச் சாதனங் கடுப்பன சொல்லின்.

(இ - ள்.) ஒழுங்காயுள்ள நெடிய காதுகளில் திருத்தியுள்ள பொன்னாற் செய்த சுருளோலைகள், ஒப்புகூறுமிடத்தில்; ஆழமாகிய நெடுங்கடல் சூழ்ந்த உலகமுழுவதையும் தனக்கு ஐக்கியஞ் செய்துகொண்ட மன்மதன், கொழுவிய குயில்போலிலுங் குரலமைந்த குதலைமொழியையுடைய அப்புலைச்சிக்குஎழுதிக் கொடுத்த ஒப்பற்ற வணக்கமுள்ள சாசனத்தைப்போன்றிருந்தன. எ - று. ( )

ஈர வாரமு தொழுக்கிய முழுமதிக் கிடையே
காரி ருட்கொழுந் தெனவளர் கரும்புரு ரத்தி
ஞோர நஞ்சிரண் டெனவகுத் துறுத்திய கொலலோ
வாரி மாநில முடித்திடச் செருக்கிய வடிக்கண்.

(இ - ள்.) கடல் சூழ்ந்த உலகினை யழிக்கும்படி மதர்த்துள்ள மாவடுப் போன்ற அம்மங்கையின் கண்கள், குளிர்ச்சியுற்றுநிறைந்த அமுதத்தைத் துளிக்கும் பூரணசந்திரனுக்கிடையே, கருநிறந்தங்கிய இருட்பிழம்புபோல் வளர்ந்துள்ள கரிய புருவங்களின் ஓரத்தில், இரண்டு விஷங்களென்று சொல்லும்படி பிரித்துச் செலுத்தியனவோ? (அறிகலேன்) எ - று. (கஉ0)

இனைய ளெய்துற நோக்கினன் வெய்துயிர்ப் பெறிந்தான்
புனைக ருங்குழ லீங்கிவள் யாரெனப் புலமபா
நினையு நெஞ்சொடு மணங்கென வயிர்த்தன னின்றான்
வனைசி லம்படி மண்ணுறத் தெளிந்தனன் மயக்கம்.

(இ - ள்.) இத்தகையளான புலைச்சி ஆங்கடைய, சுகுமாரனென்னும அந்தணன் கண்டு பெருமூச்சு விட்டவனாய், அலங்கரிக்கின்ற கரிய கூந்தலையுடைய இவள் யாவளென வருந்திக்கருதும் மனதோடு [அணங்கு] தெய்வப் பெண்ணெனச் சந்தேகித்து நின்றான். ஆனால், சிலம்பணிந்த அவளுடைய பாதங்கள் நிலமிசைப்படிதலால் (மானுடப்பெண்ணேயென்று) தன் மயக்கம் தெளிந்தனன். எ - று. (கஉக)

தாம ரைப்பொகுட் டாசன மிகந்தொரு தனியே
காமர் பூமக ணின்றனை ளாமெனக் கவலா
வேம ருந்துயர் நெஞ்சினன் வெதுப்புறு விரகின்
வாம மேகலைக் கருகுறப் பைப்பைய வந்தான்.

(இ - ள்.) தாமரை மலர்ப்பொகுட்டாகிய பீடத்தைவிலகி அழகிய திருமகளே, ஒன்றியாகவந்து நின்றாளென விரும்பி, வருந்தினையும் கொடுந்துயர் தங்கிய மனமுடைய அச்சுகுமாரன், தன்னைத் தகிக்கின்ற காமத்தினாலே அழகிய மேகலாபரணமணிந்த அப்புலைச்சியினருகே மெல்லமெல்லப் போயினன்.

வந்த பொற்சுகு மாரனைக் கண்டனள் வனம்போந்
திந்த நல்லுருக் காட்சிதந் தனனிவ னென்னா
வுந்து சிந்தையள் வெள்கினள் வல்லியொன் றொதுங்கித்
தந்த காமநோய் புலப்படா தொருதனி தளர்வாள்.

(இ - ள்.) அப்படித் தன்னருகே யடைந்த அழகிய சுகுமாரனைப் புலைச்சியானவள் கண்டு, இவன் இந்தக்காட்டிலெய்தி, இத்தகைய அழகிய வடிவினைக்காண்பித்தானென்று, அவன் பாற்சென்ற மனமுடையவளாய் வெட்கமுற்று, ஓர் பூங்கொடிபோலத் துவண்டு, அவனளித்த காமநோய் ஒருவருக்குந் தெரியாதவகையாகத் தனியேயிருந்து வருந்துவாள். எ- று. (கஉங)

முந்தை யூழ்வினை முறைத்தொடர் பிருந்தவா முதியோன்
றந்த நான்மறைக் குலத்துளோன் புலைக்குலஞ் சார்ந்த
கந்த வார்குழற் குருகிய கருத்தின னானா
னந்த நான்முகன் விதிப்படி தவிர்ப்பவர் யாரே.

(இ - ள்.) முற்பிறப்பிற்செய்த தீவினை வழியின் தொடக்கிருந்தமையால், அறிவின் மேம்பட்டவனும் நான்கு வேதங்கட்குரிய வேதியர்குலத்திற் சனித்தவனுமாகிய சுகுமாரன், புலையர் குலத்துப்பிறந்த மணமிகுந்த நெடிய கூந்தலையுடைய அப்புலைச்சியின் கலவிக்கும் மனமுருகத்தக்க கருத்துடையவனானான். சிறப்புற்ற அந்த நான்கு முகங்களையுடைய பிரமதேவன் விதித்த முறைமையை நீக்க வல்லவர் யாவர்? (ஒருவருமிலர்). எ - று. (கஉச)

நிலவு வாணகைக் குடைந்ததென் னெஞ்சக நெடுங்காற்
கலவ மாமயிற் சாயலிற் களித்தவென் கண்க
டிலக வாணுத லின்னுயிர் செகுத்தது செழுந்தே
னிலவ மென்னுழை யென்செயு மறிந்தில னின்னும்.

(இ - ள்.) சந்திரிகை வீசும் ஒளிதங்கிய உன் பற்கட்கு என் மனங்கரைந்தது. நீண்ட கால்களையுங் கலாபத்தையுமுடைய சிறந்த மயில்போன்ற உன் சாயலைக்கண்டு என்விழிகள் மகிழ்ந்தன. திலகமணிந்த ஒளிபொருந்திய உனது நெற்றியானது என் அரியவுயிரை யழித்தது. செழிய தேன் நிறைந்த இலவமலர்போன்ற உன் இதழ்கள் என்பால் யாது செய்யுமோ? அதனை இன்னும் அறிகிலேன் எ - று. (கஉரு)

புரங்க டத்தவ னெற்றியந் தழலிடைப் பொடிந்தோன்
சரங்க டப்பன வெம்முயிர்ப் பொறையெலாந் தமியேற்
கிரங்கு நாளுள தென்றுமற் றறிகிலே னெரிவா
யரங்க டந்தவேற் கட்கடை சிறிதளித் தருளீர்.

(இ - ள்.) முப்புரங்களைப் பொடிபடுத்திய சிவபெருமானது அழகிய நெற்றியின் கண்ணுள்ள தீக்கண்ணினாற் சாம்பராய்விட்ட மன்மதனது பாணங்கள் என் உயிர்ச்சுமையைத் தகிக்கின்றன. அடியேனுக்கு மனமிரங்கு நாள் என்றோ அறியேன். தீயிற்காய்ப்பிட்டெடுத்த அரங்களையுந் தகிக்கத்தக்க வேற்படை போன்ற உன் கடைக்கண் பார்வையைச் சிறிது கொடுத்தருளவேண்டும். எ-று.

குதலை கேட்புறி னுயிர்தளிர்த் துடற்பொறை குளிர்க்குந்
திதலை வெம்முலை முகத்தொடு சிறியவென் றுணைத்தோண்
மதலை மோந்துறின் வார்சிலை குனித்தவேள் வரைப்பான்
முதலை யன்றியெம் முன்னர்நின் றிகலுமோ மொழியின்.

(இ. ள்.) சொல்லுமிடத்தில், உன் மழலைச்சொற்களைக் கேட்கப் பெற்றால் என்னுயிர் மகிழ்ச்சியுற்று உடற்சுமை குளிர்ச்சியெய்தும், தேமல்படர்ந்த விருப்பந்தரும் உன் குசங்களோடு என்னிருதோள்களாகிய தூண்கள் முகக்குமாயின், நெடிய தன் கருப்பு வில்லைவளைத்த மன்மதன், மலைமீதுள்ள முதலையாகுவனன்றி எமக்கு முன்னே நின்று பகைத்திறங் காட்டுவானோ? எ - று.

என்று பெய்பரற் பரிபுரப் பங்கய மிறைஞ்சிச்
சென்று வீழ்ந்தன னேக்கினண் முறுவலிற் சிறந்தாள்
குன்றெ டுத்தபூங் கொம்பரி னெதிர்ந்தனள் குறுகித்
தன்ற னிர்க்கைகோத் தெடுத்தன ளிறுகுறத் தழுவி.

(இ - ள்.) என்றுகூறி, அருகேசென்று, பருக்கைக் கற்கள் பெய்துள்ள காற்சிலம்பணிந்த தாமரைமலர்போன்ற பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

அப்புலைச்சியானவள் கண்டு, புன்னகை மிக்கவளாய் இருமலைகளைச் சுமந்த மலர்க்கொம்புபோன்று நோந்து நெருங்கி, தனது மாந்தளிர்போலுங் கைகளாற் கோத்துத் தூக்கியெடுத்துத் தனங்கள் இறுகும்படி தழுவிக்கொண்டு.

பூத்த மாதவிப் பொதும்பரி னகன்றன ரிருந்தார்
நாத்த ழும்புறப் பயின்றன மதன்கலை நவிற்றுங்
கோத்தி ரந்தெரிந் தியைவன யாவையுங் குணித்து
மாத்தி ரைக்கர ணந்தெரிந் தம்முறை மணந்தான்.

(இ - ள்.) புட்பித்துள்ள குருக்கத்தி மரச்சோலையிற்போய் வசித்து, நாவானது தழும்புறும்படி படித்துள்ள மதனுகமத்திற் சொல்லப்படும் சாதியிலக்கண முதலியன வறிந்து; பொருந்திய இலக்கணங்கள் யாவையும் நன்குணர்ந்து காலநுட்பங்களையும் கலவிகளையும் ஆராய்ந்து அவற்றிற்கியையப் புணர்ந்தான்,

பதுமினி முதலியநால்வகைச் சாதியும், வாலை தருணை முதலிய நால்வகைப் பருவமும், அப்பர்வத்திற்குரிய காலபேதமும், அவற்றிற்குரிய கரணமும் இவைபோல்வனபிறவுங் காமநூலுட் கண்டுகொள்க.

மழலை வாய்மொழி மயங்குற வாளரித் தடங்கண்
குழையு லாவிநின றலம்வரக் கருங்கொடி குனிப்ப
விழைத னக்குவ டெடுத்திடை நுடங்குற விருதாட்
டழைசி லம்பொலி கல்லெனத் தழுவின டணவாள்.

(இ - ள்.) வாயினின்றுவரும் மழலைச்சொற்கள் குழறவும், வாள்போலும் அரிபரந்த பரவிய கண்கள் காதளவும் ஓடியுலாவிச் சுழலவும், கரிய கொடிபோலும் புருவங்கள் வளையவும், ஆபரணமணிந்த குசங்களின் பாரத்தைத் தாங்கி இடையானது துவளவும், இருபாதங்களிலும் தரித்த சிலம்புகளின் ஒலி கல்லென்று பேசவும் சிறிதும் பிரியாது தழுவினன். எ - று. (கஙo)

இருவ ரீங்கிவ ருடலிரண் டோருயி ரென்னப்
பெரிய வார்தடங் கண்ணிணை யிமையெனப் பிரியா
ரொருவி நாள்பல கழித்தபின் னீங்கிவர்க் குரிமை
மருவு மைந்தர்க ளைவரைப் பயந்தனர் வளர்வார்.

(இ - ள்.) இவ்விடத்தே, இவர்களிருவருக்கும் உடலிரண்டு உயிரொன்று எனக் கண்டோர் கூறும்படி, பெரிதாக நீண்டு விசாலித்த இருவிழிகளும் அவற்றின் இமையும்போலப் பிரியாதவர்களாய், பலநாட்கள் கழித்து நீக்கியபிறகு, இவ்விருவருக்கும் உரியவர்களாகிக் கலந்த ஐந்து புத்திரரை யீன்றனர். அவர்கள் வளர்வாரானார்கள். எ - று. (கஙக)

பயந்த மைந்தரப் பாதக மைந்தெனப் படுவா
ரியங்கு நாள்பல கழிந்தன பின்னுமீங் கிவர்க்கு
வயங்கு தாய்பெறு வனபபொடு மகளிரோ ரிருவ
ருயங்கி மாரனு மயங்கிடப் பிறந்தன ருவர்கள்.

(இ - ள்.) இவ்வுலகத்தில் அவர்கள்பெற்ற புத்திரர்களைவரும் பஞ்சமா பாதகங்களென்று சொல்லத் தக்கவர்களாய் இவ்வாறு வாழுங்காலம் பல சென்றன. மேலும் இவர்கட்குப் புத்திரிகளிருவர் வாழ்ந்துகொண்டிருக்கும் தங்கள்

தாயினுடைய அழகுடன் மன்மதனும் மனவருத்தமெய்தி மயக்குறும்படி பிறந்தார்கள். எ - று. (க௩௨)

மைந்த ரைவருங் கூற்றமோ ரைந்தென வளர்வா
ரந்த மைந்தரோ டருநெறி யாறலைத் தொழுகிச்
சிந்தி மன்பதை பொருள்கவர்ந் துயிருகச் செகுத்து
வெந்த ழற்சுழல் விழிக்கடும் புலியென வெகுள்வான்.

(இ - ள்.) அப்புத்திரரைவரும் ஐந்தியமன்களைப்போன்று வளர்ந்து வருகின்றார்கள். அப்புத்திரர்களோடும் சுகுமாரன் நெருக்கமாகிய வழிகளிலே வழி பறித்துத் திரிந்து, வழிச்செல்வோர் பொருள்களை யழித்துச் சூறையிட்டு அவர்களை உயிரொழியக்கொன்று, வடவாக்கினிபோன்ற நிறமுள்ளதாய்ச் சுழல்கின்ற விழிகள்படைத்த கொடும்புலிபோலக் கோபிப்பான். எ - று. (க௩௩)

ஆவொ ராயிர மாயிர மருமறைத் துறவோர்
சேவு மோர்பதி னாயிரஞ் செகுத்தனன் றீயோன்
பாவ காரிய மெவையுள வவையெலாம் பயின்றான்
வாவு தென்றிசை நிரயமொன் றுளதென மதியான்.

(இ - ள்.) ஆயிரம் பசுக்களையும், அரிய வேதமறிந்த ஆயிரந்துறவிகளையும், பதினாயிரம் எருதுகளையும் அச்சுகுமாரனெனுங் கொடியோன் கொன்றனன். தாவிச்செல்லுந் தென்றிசையிலுள்ள இயமபுரத்தில் நரகமென்றொன்றுண்டென்னும் சிந்தனையே யில்லாதவனாய், பாவச்செயல்களாயுள்ளனவெவைவோ அவற்றிலெல்லாம் பழகிவந்தான். எ - று. (க௩௪)

மதுநு கர்ந்தனன் பிறர்பொருள் கவர்ந்தனன் மருளாக்
கதுமெனப்புரி பவத்தொகை யாவரே கணிப்பார்
புதிய பாதக மிழைப்பதற் கேதுவாம் புலைச்சி
யிதுபு ரிந்தவ னியங்குநா ளாருயி ரிறந்தாள்.

(இ - ள்.) மதுபானஞ் செய்தான். பிறர் திரவியத்தை யபகரித்தான். மயங்கி விரைவாக அவன் செய்த பாவத்தொகையை யாவர்தான் கணக்கிடுவார்கள். இவ்வகைய பாவங்களைச் செய்துகொண்டு அவன் திரிகையில், அவன் புதிதாக இப்பாதகங்களைச் செய்தற்கு ஏதுவாயிருந்த அப்புலைச்சிதன் அரிய உயிர்நீங்கி யிறந்தாள். எ - று. (க௩௫)

குழலை யாழினைப் பழித்தசொற் குதலையா ளிறப்ப
வுழலை வேடைவெங் காமவெந் நோய்தெற வுடைந்தான்
சுழலி ருஞ்சிறைத் தும்பியஞ் சுருளிரு ளோதி
மழலை மக்களை யிருவரை மனையென வரைந்தான்.

(இ - ள்.) ஊது குழலொலியையும் வீணை யொலியையும் பழிக்கத்தக்க மழலைச் சொல்லையுடைய அப்புலைச்சி யிறக்கவும், தாகத்தையும் வெப்பத்தையும் உண்டுசெய்யுங் கொடிய காமநோய் வருத்தவருந்தினவனாய்; சுழன்றுகொண்டிருக்கும் அரிய சிறகுகளையுடைய வண்டுகள்பொருந்திய அழகுடைத்தாய்ச் சுருண்டிருண்ட கூந்தலையுடைய மழலைச்சொற்கள் கூறுந் தன் புதல்வியரிருவரையும் தன் மனைவியராக்கிக்கொண்டான். எ - று. (க௩௬)

ஈன்ற பேதைய ரிருவர்த மின்னல நுகர்ந்து
சான்ற காமமீக் கூர்தர நாள்பல கழித்தா
ளுன்ற பாதக மனைத்துமோ ருருவெனு மனையா
னென்று சூழ்வரைக் கானகத் தியங்குறு மெல்லை.

(இ - ள்.) தான்பெற்ற புதல்வியரிருவர் பால் இனிய காமவின்ப மனுப வித்து, (மேலோர்) வெறுத்த காமவிருப்ப மதிகரிக்கப் பல தினங்கள் கழித் தான். மிக்க பாதகங்களெல்லாம் சேர்ந்த ஓர் வடிவுபோன்றவனென்று சொல் லத்தகும் சுகுமாரன், மலைசூழ்ந்த காட்டில் புறப்பட்டுத் திரிந்துகொண்டிருக் குங் காலத்தில். எ - று. (௧௩௭)

வேலை மாநிலம் புரந்தரு ளோர்தனி வேந்த
ருல வாளராப் பரிதியுண் டுமிழ்தரு மந்நா
ணூலி னுன்மறை வேதியர்க் கிடுபொரு ளுேக்கிப்
பாலை வெஞ்சுரத் தாங்கவ ரெதிருறப் பறித்தான்.

(இ - ள்.) பெரிய கடல்சூழ்ந்த பூமியை யரசாளும் ஒப்பற்ற ஓரரசன், விடந்தங்கிய ஒளியுள்ள கேதுவென்னும் பாம்பு சூரியனை விழுங்கிக் கக்கும் கிர கண தினத்தில், பூணூலணிந்தவராய் நால் வேதங்களுணர்ந்த வேதியருக்குத் தானங்கொடுக்குந் திரவியத்தைக் கண்டு, பாலை நிலமாகிய கடுவெளியிலே அவ் வேதியர்களுக்கெதிரே போய்க் கொள்ளையடித்தான். எ - று. (௧௩௮)

நெற்றி கீண்டெழு குருதியர் வெருவரு நெஞ்சர்
பற்று றந்திடு வாயினர் பதறிய பதைப்பர்
தெற்று காலின ரோடினர் மீண்டனர் சென்றூர்
கொற்ற வேந்தனுக் கிவனிலை யுணர்த்தினர் குழறி.

(இ - ள்.) அப்படிப் பறிகொடுத்தவர்கள், நெற்றியானது பிளவுற்றெழு கும் உதிரமுடையவர்களும், பயந்து நடுங்கும் மனமுடையவர்களும், பற்கள் கழன்ற வாயையுடையவர்களும் பதைத்துத் துடிப்பவர்களும், பின்னிய கால் களையுடையவர்களுமாகி, அங்கிருந்து திரும்பிச்சென்று, வெற்றிதங்கிய மன் னவனுக்கு இச்சுகுமாரன் செயலைக் குழறிய வார்த்தைகளாற் கூறி வெளியிட் டார்கள். எ - று. (௧௩௯)

அனைய கேட்புழி வடவையொத் தடுசினங் கதுவிக்
கனைக ருங்கழல் வெண்குடைக் கடுந்திறல் வேந்த
னினைய செய்தவற் கொணர்கென விசைத்தன னனிக
முனைவ ரோடின ரொருவருக் கொருவர்போய் முந்தி.

(இ - ள்.) அவ்வார்த்தைகளைக் கேட்கையில், வடவாக்கினிபோலச் சின முற்று, ஒலிக்கின்ற வலிய வீரக்கழலையும் மிகுவல்லபத்தையுமுடைய அம்மன் னவன், இத்தீங்கிழைத்தவனைக் கொண்டுவருகவெனக் கட்டளையிட்டான். சேனு வீரர்கள் விரைந்தவர்களாய் ஒருவரையொருவர் முற்பட்டுப்போய். எ - று.

தொடர்ந்த பல்வரை முடுக்கரு மருநெறித் தொடர்பும்
படர்ந்து பற்றின ரடவியும் படப்பையும் படர்ந்தா
ரடர்ந்த சேனைகண் டறிந்தனன் வெருவின னகன்றுன்
மடந்தை மாரொடு மகாரொடு மவ்வன மறைந்தான்.

(இ - ள்.) தொடர்ச்சியாயுள்ள பல மலைக்குகைகளிலும், நெருங்கிய பாறைகளின் சந்துகளிலுந் தேடிச்சென்று காட்டையடைந்து நாடுகளிலுஞ் சேர்ந்தார்கள். அப்படியடைந்த நெருங்கிய சேனையைப்பார்த்துத் தன்னைத் தேடுவதறிந்து பயந்து அங்கிருந்து நீங்கி, தன் புதல்வியரோடும் புதல்வரோடும் அவ்வனத்தில் மறைந்துகொண்டான். எ - று. (௧௪௧)

ஒழுகு மாரிருட் கங்குலி னிவ்வன மொருவி
யெழுவு காவதம் பற்பல கழிந்தன னேகிப்
பொழுதி யங்குற வூணதே யப்புடைப் பொருப்பின்
றழுவு சாரலி னடவிபுக் கொளித்தவண் சரித்தான்.

(இ - ள்.) நிறைந்த இருண்மிகுந்த இராத்திரியில் இக்காட்டை நீங்கித் தோன்றுகின்ற அநேக காதவழிகளைக் கடந்து சென்று, பொழுதுபுலரும் காலைப்பொழுதில், ஊணதேயத்தின் அருகிலுள்ள மலையின் சாரலையடைந்து அங்கோரிடத்தில் ஒளித்துக்கொண்டு வசித்திருந்தான். எ - று. (௧௪௨)

ஆய கானகத் தகவையுட் சரித்துறு மந்நாட்
பாய வேனெடுங் கண்ணிய ரிருமகப் பயந்தார்
தீய தீயன வீன்றெனப் பிறந்துறுஞ் செல்வர்
மாய மென்சிறு குதலைகேட் டுவந்தனன் மகிழ்ந்தான்.

(இ - ள்.) ஆகிய அக்காட்டின் உட்பாகத்தில் வசித்திருக்கும் அக்காலத்தில் பாய்கின்ற வேற்படைபோலும் நீண்ட கண்களையுடைய இருபெண்களும் இரண்டு புதல்வரைப் பெற்றார்கள். தீவினைகள் தீவினைகளைப் பெற்றன வென்று சொல்லும்படி பிறந்த அப்பிள்ளைகள் பேசுகின்ற மாயம்தங்கிய மெல்லிய சிறுகுதலைச் சொற்களைக்கேட்டுப் பெருமகிழ்வுற்றான். எ - று. (௧௪௩)

அன்ன கானகத் தயல்விளிம் புடுத்தநாட் டருப்பு
மின்னி ளம்பிறை முடித்தநா கேச்சுர ரிருக்கை
பின்னி டப்படு காவதம் பாதியிற் பெருநீர்
மன்னு நல்வளஞ் சுரந்தெழு நாகமா நகரம்.

(இ - ள்.) அத்தன்மையான காட்டினையடுத்த அருகேயுள்ள மதில்புடை சூழ்ந்த காட்டிலே, பிரகாசிக்கின்ற பிறைச் சந்திரனைச் சிரசிலணிந்த நாகேச்சுரர் திருவாலயமானது அமைந்து, பிற்பட்டுள்ள அரைக்காத வழிவரையிலும், நிலையாயுள்ள நல்ல நீர்வளமானது மிக்குள்ள நாகையென்னும் நகரமொன்றுள்ளது. எ - று.

உரைத்த மாநகர் மாதரு மைந்தரு மொருங்கே
யிரைத்தெ ழுந்துநா கேச்சுர மெய்தின ரிழைத்தார்
வரைத்து றுமுழு மறைமொழி வரன்முறை மரபான்
விரைத்த செஞ்சடை யவன்சிவ ராத்திரி விரதம்.

(இ - ள்.) சொல்லிய சிறந்த அந்நாகை நகரத்திலுள்ள மாதர்களும் புருடர்களும் ஒன்றாய்க்கலந்து கோஷித்துப் புறப்பட்டு நாகேச்சுவராலயத்தையடைந்து அளவிடற்கியலாத வேதமுழுவதுமுரைத்த வரிசைக்கிரமத்தின் முறைப்படி மணங்கமழுஞ் செவ்விய சடைமுடியையுடைய சிவபெருமானுக்குரித்தாகிய சிவராத்திரி விரதத்தை யநுஷ்டித்தார்கள். எ - று.

ஈது ணர்ந்தில னெம்பிரான் றிருமணி முன்றிற்
றாத விழ்ந்தலர் நந்தன வனமலர் தடவிப்
போத லுஞ்சுகு மாரன்மற் றடுகொலைப் புலையன்
காதன் மிக்குநின் றவர்தொழு துரைப்பன கண்டான்.

(இ - ள்.) சுகுமாரனென்னுங் கொலைத்தொழிலையுடைய புலையனானவன், இச்சிவராத்திரியின் விரத மகிமை தெரியாதவனாய்; எமது நாகேசுவரருடைய திருக்கோயிலின் அழகிய முற்றத்திலுள்ள மகரந்தத்தைச்சிந்திப் பூக்கள் அலர்ந்துள்ள நந்தன வனத்திலுள்ள பூக்களைத்திருடிக்கொண்டு புறம்போகையில், உள்ளன்பு மிகுந்த பக்தர்கள் பரமேசுவரனைப்பணிந்து பிரார்த்தனை செய்பவற்றைப்பார்த்தான். எ - து. (கசகூ)

ஆய கங்குலிற் கடிகைமூ வைந்துசென் றகலப்
பாய வெள்விடை யெம்பிரா னிலிங்கமுற் பவித்துத்
தூய வெண்பிறை யிதழிமான் மழுப்படை துவன்றச்
சாயை காட்டலு நோக்கினன் றொழுதனன் றணந்தான்.

(இ - ள்.) ஆகிய அன்றிராத்திரியில், பதினைத்து நாழிகை கழிந்துபோக, பாய்ந்து செல்லும் வெள்ளிய இடபவாகனமுடைய எமது நாகேசுவரப் பெருமான் சிவலிங்கத்தினிடந்தோன்றி, புனிதமாகிய வெள்ளியபிறைச்சந்திரனும் கொன்றைமாலையும் மானும் மழுவாயுதமும் விளங்கும்படி தமது சொரூபத்தைத் தரிசனந்தந்தருளவும், தரிசித்துப்பணிந்து போயினான். எ - று. ()

கள்ளுண் வாழ்க்கைய னெறுழ்வலி யாக்கையன் கடுவான்
புள்ளு நோக்குறின் வெருவரும் பாவிதென் புலத்தோ
னுள்ளு நாளெலா முறுக்குறு மியற்கைய னொருநா
ளெள்ளு பாதக மிறந்தெனத் தன்னுயி ரிறந்தான்.

(இ - ள்.) கட்குடிக்கும் வாழ்க்கையுடையவனும், மிக்க வலியமைந்த தேகமுடையவனும், வேகமாய்ப்பறக்கும் ஆகாயப்பறவைகளும் பார்த்தமாத்திரமே பயப்படத்தக்க பாவியும், தென்றிசைத்தலைவனாகிய காலனும் நினைக்கும் நாள்களெல்லாம் நரகத்தில் வருத்தத்தக்க தன்மையனுமாகிய சுகுமாரன் ஒருதினத்தில் இழித்துக்கூறத்தக்க பாவமென்பதே உயிர் தொலைந்தாற்போலத் தன்னுயிரைத்துறந்தான். எ - று. (கசஅ)

அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம்.

வெஞ்சினத் தெறுழ்வலித் தென்புலத் தவரெலாம் வெகுளி மிக்கா
ரஞ்சுறத் தழல்விழித் தொழுகுமுத் தலையயிற் படையெடுத்தார்
செஞ்சிலைப் படைகதைப் படைவலித் தொடர்விடுந் திகிரி கொண்டார்
நஞ்சுருத் தெனவுருத் தனர்தெழித் தனர்பொரு நகைவிளைத்தார்.

(இ - ள்.) கடுஞ்சினத்துடன் பெரும் பலமுள்ள இயமபுரக்கிங்கரர்கள் யாவரும் கோபமிக்கவராய், கண்டோர் அஞ்சும்படி தீப்பொறி சிந்தப்பார்த்து, முத்தலைகளையுடைய சூலாயுதத்தை யெடுத்துக்கொண்டார்கள். செவ்விய மலைபோலப்பூரித்த விற்களையும் கதாயுதங்களையும் பாசக்கயிறுகளையும் செலுத்தத்தக்க சக்கராயுதங்களையும் தாங்கியவர்களாய், ஆலகாலம் கோபித்தெழுந்தாற்போலக் கோபங்கொண்டு கர்ச்சனை செய்து கோபச்சிரிப்புச்சிரித்தார்கள்.

சென்றுறப் பின்ர்வளைத் தனர்பிடித் தனர்முடைச் சிகர வன்றோள்
குன்றிணைத் தெனவிணைத் தனர்கதைப் படையில்வெங் கொடிறு டைத்
தின்றடித் தனரிடித் தனர்கழுத் திடைநெடும் பாசமிட்டுப் [தார்
புன்றலைக் கண்பிதுக் குறவிடித் தனருடன் கொண்டு போவார்.

(இ - ள்.) அதட்டினவர்களாய்ச்சென்று சூழ்ந்துகொண்டார்கள். புலான் மணங்கமழும் புலைச்சியின் சோர புருடனை சுகுமாரனுடைய தோள்களை, மலைகளைச்சேர்த்ததுபோலச் சேர்த்துப்பிணித்தார்கள். அவன் பெரிய கன்னத்தைக்கதையினாற் பிளந்தார்கள், நேர் நின்று அடித்தார்கள் குத்தினார்கள். அவன் கழுத்தில் நெடிய பாசக்கயிற்றினை வீசிச்சுருக்கிட்டு அற்பத்தன்மையுடைய அவன் கண்கள் பிதுங்கும்படி செய்து ஆர்ப்பரித்துக்கொண்டு தங்களோடு இழுத்துப்போவார்கள். எ - று. (க௫0)

ஆயகா லத்துமுப் புரநகைத் தெரிகொளுத் தாதி நாதன்
றாயபொற் றிருவுளத் திவையுணர்ந் தருடலுந் தொல்லை மேனாட்
பாயநங் கங்குலிற் கடிகையீ ரெட்டினெம் பதமு ணர்ந்தான்
போயவற் கொணர்கெனக் கணமுதற் றலைவர்தென் புலம டைந்தார்.

(இ - ள்.) ஆகிய அக்காலத்தில், புன்னகைசெய்து புரங்கள் மூன்றையும் எரித்தருளிய முதற் கடவுளாகிய சிவபெருமான், தமது புனிதமாகிய திருவுள்ளத்திலே, இப்படிச் சுகுமாரன் அநுபவிக்கும் இயமவேதனையைக் கருதியவுடனே, பழமையாகிய முற்காலத்தில் புகழ் பரவிய நமது இரவாகிய சிவராத்திரி தினத்தில் பதினாறு நாழிகையில், நமது திருவடிகளைத் தரிசித்தவனாகிய அச்சுகுமாரனை நீங்கள் போய் அழைத்து வாருங்களெனக்கட்டளை செய்யவும், முதன்மையாகிய சிவகணத்தர்கள் இயமபுரஞ் சேர்ந்தார்கள். எ - று. (க௫க)

தண்டுசக் கரமழுப் படைத்திரு லங்கொடுஞ் சாப நேமி, பிண்டிபாலங்கதிர்க் கட்கமற் றுளவெலாம் பெரிது கொண்டார், திண்டிறற் செருமுகச் சண்டவெம் படையொடுஞ் சென்றி றுத்தார், கொண்டெதிர்த் தனர்வளைத் தனர்விளைத் தனர்கொலைக் கொடிய வெம்போர்.

(இ - ள்.) தண்டாயுதம் சக்கராயுதம் மழுவாயுதம் முத்தலைச்சூலாயுதம் வளைவாகியவில் அழகுபொருந்திய எறியாயுதம் ஒளிதங்கிய வாளாயுதம் மற்றுமுள்ளனவாகிய ஆயுதங்களெல்லாவற்றையும் மிகுதியாகத்தாங்கினவர்களாய் அதிகரித்த வல்லமைதங்கிய போர்க்களத்திற் பிரயோகிக்கும் பெரிய பாசுபதாஸ்திரத்தோடுஞ் சென்றெதிர்த்தார்கள். இயமகிங்கரர்களும் எதிர் வந்தெதிர்த்தவர்களாய்ச் சூழ்ந்துகொண்டுகொலைத்தன்மையுடைய மிக்க கொடூரமாகிய யுத்தத்தைச் சிவகணங்களோடு செய்தார்கள். எ - று. (க௫௨)

அக்கணத் துக்கணத் தலைவர்சென் றழல்விழித் தடல்வ யப்போர்
தெக்கணத் தவரொடும் புக்கிழைத் தடுசினந் திருகி நின்றார்
தொக்கவெம் படைபடத் தலைதெறித் தனவிழித் தொகைதெ றிப்பச்
செக்கர்தென் புலம்விழுந் தனவெனக் குருதிசெஞ் சேறு பட்ட.

(இ - ள்.) அந்த க்ஷணத்திலேயே சிவகண நாதர்கள் எதிர்த்துச்சென்று, கண்களில் தீப்பொறி சிந்தப்பார்த்து, வலிதங்கிய வெற்றியுள்ள யுத்தத்தை இயமகிங்கரர்களோடு கிட்டிச்சென்று, கொல்லத்தக்க கோபமுடையவர்களாயிருந்தார்கள். அத்தணத்தவர்களால் விடப்பட்ட கூட்டமாகிய பெரிய ஆயுதங்

கள் மோதுதலினாலே இயமகிங்கரர்களுடைய கூட்டமாகிய விழிகள் தெறித்து விழ அவர்கள் சிரங்கள் தெறித்தன. செவ்வானங்கள் இயமபுரத்தே வீழ்ந்தன வென்று கண்டோர் சொல்ல, செவந்த உதிரக்குழம்பு தேக்கின. எ - று.

பல்விழுந் தனர்கரப் படையிழுந் தனர்துணைப் பணைநெடுந்தோட்
கல்விழுந் தனர்தடக் கரமிழுந் தனர்சரங் கால்ப ரப்பார்
வில்விழுந் தனர்புலால் வேலிழுந் தனர்விடா மிடலி ழந்தார்
சொல்விழுந் தனருயிர்த் தொகையிழுந் தனர்பொரூர் மறலிதூதர்.

(இ - ள்.) சத்துருக்களாகிய இயமகிங்கரர்களிற் சிற்சிலர் பல்விழந்தார்கள், சிற்சிலர் கையிற்றாங்கிய ஆயுதங்களை யிழந்தார்கள். பூரித்து நீண்ட இரு புயங்களென்னும் மலைகளை யிழந்தார்கள். விசாலமான கைகளை யிழந்தார்கள். வாயுவேகம்போற் பரவும் அம்புகள் பூட்டிய வில்லை யிழந்தார்கள். புலால் மணங்கமழும் வேலை யிழந்தார்கள். அறிவுபடாத வல்லபமிழந்தார்கள். வீரச் சொற்களை யிழந்தார்கள். சிற்சிலர் தங்கள் உயிர்த்தொகைகளை யிழந்தார்கள்.

தாளிழுந் தனர்முடித் தலையிழுந் தனர்துணைச் சயில மேருத்
தோளிழுந் தனர்கரத் துணையிழுந் தனர்விழித் தொகையி ழந்தார்
கோளிழுந் தெழுமதிக் கடவுளொத் தடுதிறற் குரவை கொண்டார்
வேளிழுந் திடவிழித் தழலுமிழ்ந் தவனடித் துணைய வீரர்.

(இ - ள்.) சிற்சிலர் காலிழந்தார்கள்; கிரீடமணிந்த தலையிழந்தார்கள். இரண்டு மேருமலைகளையொத்த தோள்களை யிழந்தார்கள். இரு கைகளை யிழந்தார்கள். கண்களை யிழந்தார்கள். மன்மதன் உயிரிழக்கும்படி நெற்றி விழியிற் றீப்பொறி சிந்திய சிவபெருமானது திருவடியையே துணையாகக்கொண்ட சிவகண நாதர்கள், இராகுவென்னுங் கோளினால் விழுங்கிவிடுபட்டு உதித்த பூரண சந்திரன்போலப் பெருவல்லபத்தினாற் குரவைக்கூத்தாடினார்கள். எ-று.

முறுகுவெள் ளெயிறடித் தலைதெரித் தோடிவிண் முகடு முட்டிக்
குறுகவிண் ணாயிரம் பிறைபொடிப் பனகிர்ப் பனகு றிப்பி
னறுதலைக் குறையிரத் தங்குதித் தெழுவவே யணவு வெந்தீத்
தெறுதழற் கானகத் துலவைவே வனவெனச் சிவணு மன்றே.

(இ - ள்.) அக்கிங்கரர்களின் முறுகிய வெண்ணிறந்தங்கிய பற்கள் உதிர வெள்ளத்தின் அலைகளிலடிக்கப்பட்டுத்தெறித்துச்சென்று ஆகாயமுகட்டில் தாக்கிக் கீழே விழவும், அதனை யோசிக்குமிடத்தில், ஆகாயத்திலுள்ள சந்திரனை ஆயிரம் பிளவுகளாக்கிப்பொடித்ததை யொத்திருந்தன. உடல் அறுபட்ட தலைக் குறைகள் உதிர வெள்ளத்திலே முழ்கி யெழுந்தோற்றமானது மூங்கில் மரங்கள் மாய்தலினால் தோன்றிய கொடிய தீப்பற்றிய காட்டிலுள்ள ஏனைய மரங்களும் வேகின்றனவெனச் சொல்வதை யொத்திருக்கும், எ - று. (கடுகூ)

வெள்ளவெங் குருதியெங் கணுமெழுத் தோடிவெவ் வேறுபேதத்
தள்ளல்வா னிரயமெங் கணுநிரப் பினபிணத் தொகையி னம்மா
கொள்ளைபோ யினநெடுந் தென்றிசைக் கிழவனூர் கொடிதி ழைத்தா
ரெள்ளரும் போரிழுந் திரியலா லியமனூ டிரியல் போன.

(இ . ள்.) கொடிய உதிரவெள்ளம் எல்லா விடங்களிலும் பிரவகித்துப் பெருகி, வெவ்வேறு வகையாயுள்ள சிறந்த அள்ளல் (இரௌரவம் கும்பிபாகம்

கூடசாலம் செந்துத்தானம் அழற்பிரபை தூமப்பிரமை இரத்தப்பிரபை) முதலிய நரகங்களெல்லாவற்றிலும் பிணக்குவியலை நிரப்பிவிட்டன. தென்றிசைக்கிறைவனாகிய இயமனது நகரமானது கொள்ளைபோயது. கொடுமை செய்த கிங்கரர்கள் இகழ்ச்சி கூறுதற்கரிய யுத்தத்தில் தோல்வியுற்றவர்களாய்ப் புறமுதுகு காட்டி ஓடுவதால் இயமபுரம் அழிந்து விட்டது. எ - று. (௧௫௭)

அந்நிலத் தஞ்சுறுஞ் சுகுமார னைப்புரந் தஞ்ச லென்னாப்
பொன்னுடைத் தெய்வமா னத்தினுய்த் தவனொடும் போக லுற்றார்
கொன்னுனைச் சூலவெங் கணமுதற் றலைவர்தோள் கொட்டி யார்த்தா
ரின்னிளம் பிறைமுடிச் சடையவன் கைலைசென் றெய்தி னூரால்.

(இ - ள்.) அவ்விடத்தில் பயங்கொண்டிருக்கும் சுகுமாரனைக்காத்துப் பயபடாதேயெனக்கூறி, பொன்னாலாகிய தெய்வீகந்தங்கிய விமானத்திலேற்றி, அவனுடன் செல்லத்தொடங்கிய வெற்றி தங்கிய கூரிய சூலாயுதமுடைய கொடிய சிவகணத்தலைவர்கள், தோள் தட்டி ஆர்ப்பரித்தவர்களாய், இனிமையும் இளமையும் பொருந்திய மூன்றாம் பிறைச்சந்திரனை யணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கைலாயகிரியிற்போய்ச் சேர்ந்தார்கள்- எ - று. (௧௫௮)

கண்டமுக் கண்ணினா னுண்மகிழ்ந் திடையறாக் கருணை செய்தா
னண்டர்நா யகனுருப் பெற்றுநெஞ் சுருகியோ ரருகு நின்றான்
றொண்டர்பெற் றிடுபயன் பெறவளித் தனனவன் றொல்லை வானோர்
துண்டவெண் பிறையினா னிலையுணர்ந் திருகரந் தொழுது நின்றார்.

(இ - ள்.) அவர்களைச்சுகுமாரனோடு வரக்கண்ட திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் மனமகிழ்ந்து நீங்காத திருவருள் சுரந்தனர். அச்சுகுமாரன் மகாதேவராகிய சிவபெருமான் சாரூபமெய்தி மனங்கனிந்துள்ளவர்கட் கருகிலிருந்தான், சிவபெருமான் அவனுக்கு உண்மையடியார்க்குரிய பேற்றைத்தந்தருளினர். பழமையாயுள்ள தேவர்கள் தாவள்யமான இளம்பிறைச்சந்திரனை யணிந்த சிவபெருமான் திருவருணிலைமையையறிந்து இருகரங்களையும் சிரமிசைக் கூப்பிவணங்கி நின்றார்கள். எ - று. (௧௫௯)

வெருவருந் தகையனா கியநமன் சித்திரகுத் தனைவிளித்தான்
கருதரும் பாதகன் சிவகணத் தவரொடுங் கைலை சென்றான்
செருமுகத் திவரிழைத் தனவுமப் பாதகன் செயலு முக்க
ணொருவனைத் தொழுதுரைத் திடுதுமென் றொளிமணிக் கைலையுற்றான்.

(இ - ள்.) அச்சங்கொண்ட தன்மையுடையவனாகிய இயமன் சித்திரகுத்தனை யழைத்து உடன்கொண்டு, எண்ணுதற்கும் அரிய பாதகனாகிய சுகுமாரன் சிவகணத்தாருடன் திருக்கைலையையடைந்தான். இச்சிவகணர் யுத்தத்திற் செய்த செயல்களையும் அப்பாவியின் செயல்களையும் திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானை வணங்கிச்சொல்லுவோமென்று ஒளிமிகுந்த ரத்தின கசிதமாயிருக்கும் திருக்கைலாயகிரியை யடைந்தான். எ - று (௧௬௦)

பெற்றமே றியதனிப் புனிதனைப் பரவியெம் பெரும சென்றே
பற்றிவந் தனர்புலைச் சுகுமா ரனென்னுமிப் பாவி தன்னை
யுற்றகா லத்தருட் சிவகணத் தவர்மறித் தடனு ருத்துக்
கற்றடந் தோளினெம் படைசெகுத் திவனொடுங் கைலை வந்தார்.

(இ - ள்.) இடபவாகன மூர்ந்தருளும் ஒப்பற்ற சிவபெருமானைப்பணிந்து எம்பெருமானே! அடியேன் தூதர்கள் சென்று புலைக்குலத்தடைந்த சுகுமாரனென்னும் இப்பாவியையடைந்த காலத்தில், கிருபையுடைய சிவகணநாதர்கள் தடுத்துக்கோபித்து மலைபோல வலிதாய்ப்பருத்த தோள்களினாலே அடியேன் சேனையைக்கொன்று இச்சுகுமாரனோடு திருக்கைலைக்கு வந்தார்கள். எ - று. ()

கோறலஞ் சலன்மதுக் கொள்வதஞ் சலனடுங் கொடுமை செய்யச்
சேறலஞ் சலன்மறைத் தெய்வமா மரபினிற் சென்று தித்து
மாறரும் புலைமகட் புணருமங் கவள்வயின் வந்து தித்தார்
நாறிரும் கோதையோ ரிருவரைத் தழுவியின் னலநுகர்ந்தான்.

(இ - ள்.) கொலை செய்யப்பயப்படாதவனும், மதுபானஞ்செய்யப் பயப்படாதவனும், கொலைத்தொழில் செய்யுங்கொடுமை செய்யப் பயமற்றவனும், வேதமார்க்கந்தழுவிய தெய்வீகம் பொருந்திய சிறந்த மரபில் வந்து பிறந்து, மாறுபடுதற்கரிய புலைப்பெண்ணைக்கூடி அவள்பாற் பிறந்தவர்களாகிய மணமிக்க நெடிய கூந்தலையுடைய புதல்விய ரிருவரையுங்கூடி அவர்கள் பால் இனிய சிற்றின்பத்தை அநுபவித்தான். எ - று. (௧௬௨)

இவனிழைத் திடுபவத் தெல்லைகண் டிலமெடுத் தோதி னெந்தாய்
தவமுயற் சியர்பெறு வீடளித் தனையிதோ தருமமென்னக்
கவர்தலைச் சூலிமென் னகைவிளைத் திவருழைக் கண்ண டத்தாச்
சிவதினக் கங்குல்பெற் றற்றைநா ளெம்மடிச் சிந்தை செய்தான்.

(இ - ள்.) எமது தந்தையே! எடுத்துச்சொன்னால், இவன் செய்த பாவத்தின் அளவு காண்கிலோம். தவமுயற்சியுடையார்களும் அடைதற்கியலாத முத்தியின்பத்தை அநுக்கிரகித்தீர். இது தர்மந்தானோவெனக்கேட்க, கிளைத்த முத்தலைச்சூலந்தாங்கிய சிவபெருமான் புன்னகையரும்பி, இவன்பால் ஒரு காலத்திலும் பார்த்திராத சிவராத்திரி விரதத்தைக்காணப்பெற்று அத்தினத்திலே எமது திருவடியைத் தியானஞ்செய்தான். எ - று, (௧௬௩)

ஆதலா லிவனுழைக் கொடியபா தகமெலா மறைது மற்றைத்
தீதுறும் பஞ்சியிற் சென்றுறும் பரிதிமுற் றிமிர மொத்தவ்
வாதவன் கதிரொளிப் பனிநிகர்த் தனவிதற் கைய மில்லை
நீதடுத் திடுவதற் கெளியனன் றென்றனன் னிலவ ணிந்தோன்.

(இ - ள்.) ஆகையால், இவன்பாலிருந்த கொடிய பாதகங்களெல்லாம், தீயானது தகிக்கக்கேடுற்ற பஞ்சுப்பொதி போலவும், உதித்துப்பிரகாசிக்குஞ் சூரியன் முன் இருள்போலவும், அச்சூரிய கிரணங்களின் முன் பனி போலவும் ஆயின. இதற்குச்சந்தேகமில்லை. இவன் முத்தியடைதலினின்றும் நீதடுத்தற்கு எளியவனல்லவென்று சந்திர சேகரனாகிய சிவபெருமான் இயமனுக்குத் திருவாய் மலர்ந்தருளினர். எ - று. (௧௬௪)

எம்பிரா னிவையுரைத் தருளவொன் றுரைசெயா னியம னெந்தாய்
நம்பநா யகதிரிசூ லப்படைத் தேவபுன் னகைநி லாவான்
வெம்புமுப் புரமெரித் தருள்பரம் பரதராய் விடையெ னப்போ
யிம்பரா னவரெலா நகைதரத் தென்றிசைக் கெய்தி னால்

(இ - ள்) எமது சிவபெருமான் இப்படித் திருவாய்மலர்ந்தருளவும், அதனைக்கேட்ட இயமன் ஒன்றுஞ் சொல்லாதவனாய் எமது தந்தையே! நம்பா! நாயகா! முத்தலைச்சூலமேந்திய தேவனே! புன்சிரிப்பின் சந்திரிகையால் கொடிய முப்புரங்களை யெரித்தருளிய மேலான பரம்பரனே! அடியேனுக்கு விடையருளவேண்டுமென்று சென்று, இங்குள்ளார் யாவரும் நகைக்கும்படி தன் தென்றிசையடைந்தான். எ - று. (கசு௫)

ஈதுநஞ் சிவனருட் கங்குலின் பெருமைமற் றிதனை யுள்ளக்
காதலிற் பெரிதிழைப் பவர்பெறும் பதவியார் கழறு கிற்பா
ராதியிற் சிவநிசிக் குற்பவம் புகலமற் றறிதி ரென்னாச்
சூதமெய்த் தவன்மொழிந் திடமுனித் தலைவர்கை தொழுது நின்றார்.

(இ - ள்.) இதுவே நமது சிவபெருமானுடைய திருவருள் பெருகுஞ் சிவராத்திரி. மகிமை. இதனை மனவிருப்போடு மிகுதியாக அநுஷ்டிப்பவர்கள் அடையும் பதவியை யாவர் சொல்லுவர்? ஆதிகாலத்தில், சிவராத்திரியுண்டாகிய காரணத்தைச்சொல்ல, அறிந்து கொள்ளுங்களென்று, உண்மைத்தவத்தையுடைய சூதமுனிவர் சொல்ல, முனிசிரேஷ்டர்கள் கைகளைக்கூப்பி வணங்கி நின்றார்கள். எ - று. (கசுசு)

கலிவிருத்தம்.

கற்ப மீறுபட் டுந்திக் கமலவீட்
டிற்பு ரந்துல கீன்றவ னிற்றுறப்
பெற்றெ ழுந்த பிரளயத் தாருயிர்
முற்று முற்ற முடிந்தெழு கங்குலின்.

(இ - ள்.) ஒரு கற்பமழிந்து, திருமாலின் உந்தியிலுதித்து, தாமரை மலதிருக்கையிலிருந்து உலகினைட் படைத்த பிரமதேவன் இறக்க, அப்பொழுதுண்டாகிய பிரளய வெள்ளத்திலே அரிய உயிர் வகைகள் யாவும் அழிவடைய உண்டாகிய இரவில். எ - று. (கசுஎ)

யாம நாலு மிருந்துமை யாளிளங்
காமர் வெண்பிறைக் கண்ணியற் பூசியாச்
சேம வல்லிருட் சென்றக டைத்தலைத்
தோமில் வையந் தொடங்குறுந் தொல்லைநாள்.

(இ - ள்.) அந்த இரவின் நான்கு சாமங்களிலும், உமாதேவியார் இளமை தங்கிய அழகிய வெண்மையாகிய பிறைச்சந்திரனை யணிந்த சிவபெருமானைப் பூசைசெய்து கொடிய இருளின் புதையலாகிய அவ்விரவு நீங்கிய கடைசியில், பண்டுபோலக் குற்றமில்லாத உலகினைப் படைக்கத் தொடங்கிய காலத்தில். ().

எந்தை நானுனை யேத்திய கங்குனைட்
சிந்தை கூர்சிவ ராத்திரி யென்றுபேர்
தந்து நோற்றவர் சாயுச்சி யம்பெறப்
புந்தி கூர்ந்தரு ளென்றடி போற்றினாள்.

(இ - ள்.) எமது தந்தையே! அடியேன் தேவரீரைப் பூசைபுரிந்த இவ்விரவிற்கு எல்லோருஞ் சிந்திக்கத்தக்க சிவராத்திரியெனும் பெயர்தந்து, இவ்விரதத்தை நோற்றவர்கள் சாயுச்சியபதவி யெய்தும்படி திருவுளங்கொண்டருளவேண்டுமென்று திருவடிகளைப் பணிந்தனர். எ - று. (கசுஅ)

ஆக லிற்சிவ ராத்திரி யாகிய
தீதி லாமையு மின்னுமோர் காரண
மோது றுஞ்சிவ ராத்திரி யுற்பவந்
தீதின் மாதவர் கேட்கெனச் செப்புவான்.

(இ - ள்) ஆனபடியால், அது சிவராத்திரி தினமாயிற்று. இதுவேயல்லாமலும் சிவராத்திரியின் உற்பத்திக்கு வேறோர் காரணமும் நூல்கள் சொல்லும். குற்றமற்ற பெருந்தவமுடைய நைமிசாரணிய முனிவர்களே! அதனையுங் கேட்பீர்களாகவெனச் சூதமுனிவர் சொல்லுகின்றனர். எ - று, (௧௭௦)

ஆதி நாரண னம்புயத் தந்தணன்
காது வெஞ்சமர் தம்மிற் கனன்றனர்
தீதி ழைக்குஞ் சினந்திரு கிச்செருப்
போது நூறு வருடம் புரிந்தனர்.

(இ - ள்.) பூர்வத்திலே, திருமாலும் தாமரை மலரிலுள்ள பிரமனும் மிகக்கொடிய விரோதத்தினாலே தங்களுக்குள் கோபங்கொண்டவர்களாய், தீமையையுண்டு செய்யத்தக்க கோபமதிகரித்து, நூறுவருஷ காலம்வரையில் பெரும்போர்புரிந்து நின்றார்கள். எ - று. (௧௭௧)

நான்மு கன்பிர மாத்திர நாரணன்
மேன்மு கந்தெழ வேண்டி விடுத்தன
னான்மு கன்பட நாரணா வத்திர
மேன்மு குந்தன் வெகுளியி னேயினான்.

(இ - ள்.) சதுர்முகப் பிரமன், விஷ்ணுமூர்த்தியின் மேற்போய்ப் பாயும்படி பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்தான். அதனைக்கண்ட முகுந்தனாகிய விஷ்ணுமூர்த்தி கோபத்தோடு அந்தப்பிரமன் மேற்போய்ப்படும்படி நாராயணாஸ்திரத்தை அதன் பின்னர்ப் பிரயோகஞ்செய்தார். எ - று. (௧௭௨)

ஈண்டி றந்து படுவ ரிவரெனத்
தூண்டு மத்திர முன்னரிற் றோன்றியே
நீண்ட சோதி நிலவணி சென்னியான்
காண்ட குஞ்செங் கனற்பிழம் பாயினான்.

(இ - ள்.) இங்கே இவர்களிருவரும் இறப்பார்களென்று, மிக்க சோதிமயமான இளம்பிறை தரித்த திருமுடியையுடைய சிவபெருமான் அவர்கள் அஸ்திரங்கட்கு முற்பட வெழுந்தருளி, யாவருங் காணுதற்குரிய செவந்த அக்கினிப் பிழம்பாயினர். எ - று. (௧௭௩)

அன்ன காலையி லாங்கவ ரத்திர
மென்னை யாளுடை யானெதி ரேற்றிடச்
சன்ன மாகிவெண் சாம்பரி னாயது
மின்னோர் பாகனை யார்வியந் தேத்துறார்.

(இ - ள்.) அக்காலத்தில், அவர்கள்விடுத்த அஸ்திரங்களிரண்டும், என்னை அடிமையாகவுடைய சிவபெருமானை யெதிர்க்கவும், அற்பத்தன்மையுடையதாய் வெள்ளிய சாம்பராய்ப் பொடிபட்டன. ஆதலால் உமாதேவிபாகராகிய சிவபெருமானை எவர்தாம் வியந்து துதிசெய்யாதவர்கள்? எ - று. (௧௭௪)

மாக திங்கள் வரும்பதி னான்கினன்
ருக நீடிரு ளத்தம கன்றபின்
னேக நாத னிலிங்கமுற் றெய்தினான்
வேக நீத்தவர் வந்தடி வீழ்ந்தனர்.

(இ - ள்.) மாசி மாதத்தில்வரும் பதினான்காந் திதியாகிய சதுர்த்தசித் தினத்தில், செம்மையாக மிக்க இருளையுடைய நடுராத்திரி நீங்கிய பிறகு, ஒப்பற்ற தலைவராகிய சிவபெருமான் (சோதிப்பிழம்பின் வடிவைக் கரந்து) சிவலிங்கத்திற் கலந்தருளினர். கோபாவேசமொழிந்த பிரமவிஷ்ணுக்கள்வந்து அப்பெருமான் திருவடிகளை வணங்கினார்கள். எ - று. (கஎ௬)

ஐய நின்னை யளவறுப் பாரெவர்
வெய்ய பன்றியு மன்னமு மேயயாஞ்
செய்ய வூழி திரிந்துநிற் கண்டிலேம்
பொய்யி லன்பின ருள்ளம் புகுந்தனை.

(இ - ள்.) ஐயனே! தேவரீரை யளவிட்டுணர வல்லவர் யாவர்? கொடிய பன்றியாகவும் அன்னமாகவும் வடிவெடுத்துத் தேடிய நாங்கள் இருவரும் எண்ணிறந்த ஊழிகாலங்களாகத் திரிந்தும் தேவரீரைக் கண்டோமில்லை. பொய்மையில்லாத உண்மையடியவர்கள் உள்ளமே யிடமாகப் புகுந்திருந்தனை யாதலால்,

என்ன மாதவஞ் செய்தனம் யாங்கண்மற்
றுன்ன தின்னுருக் கட்புலத் துற்றனம்
பன்ன கப்பணி யாயினிப் பங்கயப்
பொன்ன டித்துணை போற்றப் புரிதியால்.

(இ - ள்.) அடியேங்கள் எவ்வகைப் பெருந்தவஞ் செய்தோம். தேவரீருடைய இனிய திருவுருவத்தைக் கண்களாற் றரிசிக்கப்பெற்றோம். அரவபூஷணராகிய இறைவரே! இனியேனும், தேவரீருடைய தாமரை மலர்போலும் அழகிய உபயபாதங்களை யர்ச்சிக்கத் திருவருள்புரிதல் வேண்டும்.

இற்றை வைக விருட்படு கங்குலைப்
பெற்ற மேறும் பிரானிர வென்றுயிர்
முற்று மோதவு நோற்பவர் முத்திபெற்
றுற்ற பாவ மொழியவும் வேண்டுமால்.

(இ - ள்.) இன்று தினத்தில், இருள்மிகுந்த இவ்விரவை இடபவாகனராகிய சிவபெருமானுக்குரிய சிவராத்திரியென்று ஆன்மாக்களெல்லாம் சொல்லவும், இவ்விரதத்தை யநுஷ்டிப்போர் முத்தியெய்தி, அதுகாறும் அவர்களியற்றிய பாவங்களை விலகவும் அநுக்கிரகிக்கவேண்டும். எ - று. (கஎஅ)

என்று வேண்டி யிரந்தன ரெம்பிரா
னன்ற வர்க்கவ் வரமளித் தானரோ
மன்ற லந்துள வோன்மல ரோனொடும்
புன்றெ ழிம்சம ரற்றுடன் போயினான்.

(இ - ள்.) என்று பிரார்த்தித்துப் பலவாறு யாசித்தார்கள். எமது சிவபெருமான் அவ்வாறு வேண்டிய அப்பிரம விஷ்ணுக்களுக்கு அப்படியே வரந்தந்தருளினர். மணங்கமழுந் துளவமாலையணிந்த திருமால் தாமரை மலரி

ளுள்ள பிரமதேவனு இழிதொழிலாகிய போர்செய்தலையொழிந்து உடனே தம்மிடஞ் சேர்ந்தனன். எ - று. (கஎகூ)

செங்க ணேறுடை யான்சி வராத்திரி
யங்க ணுற்ற தறிந்த திசைத்தனம்
பொங்கு கங்குற் புனிதமற் றெம்மனோர்
தங்க ளாலு முரைக்கத் தகுவதோ.

(இ-ள்.) சிவந்த கோபக்கண்ணையுடைய இடபத்தைவாகனமாகக்கொண்ட சிவபெருமானுக்குரிய சிவராத்திரியானது, இவ்வுலகத்தில் உற்பவித்த சரிதையைத் தெரிந்தமட்டிற் சொன்னோம். விசேடித்த அச்சிவராத்திரியின் மேம்பாடுகள் எம்மைப்போன்ற பிறராலும் சொல்லத்தகுவனவோ? எ - று. (கஅ0)

ஆதி நாளி னரும்பிய நோன்பினை
யோதி னுண்மை யறிந்தெவ ரோதுவார்
ஈது நோற்பவர் தங்களை யெம்மனோர்
மாதொர் பாக னெனத்தொழு வாரரோ.

(இ - ள் பூர்வகாலத்திலுண்டாகிய இச்சிவராத்திரி விரதத்தைச் சொல்லத்தொடங்கினால், அதன் உண்மையை நன்குணர்ந்துரைப்போர் யாவர்? இவ்விரதத்தை யநுஷ்டிப்பவர்களை, என்னையொத்தவர்கள் உமாதேவியை ஒப்பற்ற வாமபாகத்திலுடைய சிவபெருமானேயென்று பணிவார்கள். எ - று. (கஅக)

இந்த மாவிர தத்தினை யெம்பிரா
னந்தி பாலெடுத் தோதவந் நாண்முதற்
கந்த வேளயன் காளர் கடவுளர்
விந்தை கேள்வ னிழைத்தனர் மெய்ம்மையால்.

(இ - ள்.) இந்த மேலான விரதத்தை, முற்காலத்தில் எமது சிவபெருமான் திருநந்திதேவருக்கு எடுத்துபதேசிக்க, அந்தக் காலமுதலாகக் குமாரசுவாமி பிரமதேவன் மகாகாளர் பிறதேவர்கள் திருமகள் கொழுநனாகிய திருமால் ஆகிய இவர்கள் யாவரும் உண்மைப் பக்தியோடு அநுஷ்டித்தார்கள். எ - று.

கலிநிலைத்துறை.

உரைத்த னஞ்சிவ ராத்திரி விரதமுற் றுமக்கு
விரைத்த வார்சடை யவனுடை விரதமொன் றுளது
கரைத்த சிந்தையிற் கேட்குதி ரென்றனன் கருணை
யிரைத்த சிந்தையன் சூதன்மற் றுங்கவர்க் கியம்பும்

(இ - ள்.) கிருபை மிகுந்த மனதையுடைய சூதமுனிவர், சிவராத்திரி விரதப் பிரபாவ முழுவதையும் உங்களுக்கு எடுத்துச் சொன்னோம். மணம்பொருந்திய நெடிய சடையையுடைய சிவபெருமானுக்குரிய விரதம் மற்றொன்றுள்ளது. அதனை மனவுருக்கத்துடன் கேட்பீர்களாகவென்று, அந்த நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்வாராயினர். எ - று. (கஅஉ)

விரித்த செஞ்சடை யெந்தைகே தாரமா விரதந்
தெரித்து ணர்த்துறி னெம்முழை யடங்குமோ சிறியேந்
தரித்த வாறுமக் குணர்த்துது மென்றலுந் தாழாப்
புரித்த புன்சடை மாதவர் கேட்பது புரிந்தார்.

(இ - ள்.) விரித்துள்ள செவந்த சடையையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானுக்குரிய சிறப்புற்ற கேதார விரதத்தைத் தெளிந்து அறிவிக்கத் தொடங்கினால், எம்மளவில் அடங்குமோ? அடங்காது. அடியேன் மனதிற் றெளிந்தபடி உங்கட்கு உணர்த்துகின்றேன் என்று திருவாய்மலர்ந்தருளவும், முறுக்கிய சிறு சடைகளையுடைய பெருந்தவத்தினரான முனிவர்கள் வணங்கிக் கேட்கத் தொடங்கினார்கள். எ - று. (கஅச)

பனிப்ப டாம்பொதி யிமவரைக் கொடுமுடி பலவுட்
டனித்த தோர்முடி கைலைபோன் றுளததன் றன்மை
தொனித்து ணர்த்துறின் வெள்ளியொத் தவிரொளி துளங்குங்
கனித்த வன்பொடு முறைவது பிறைமுடிக் கடவுள்.

(இ - ள்.) பனியாகிய [படாம்] போர்வை பொதிந்துள்ள இமாசலத்தின் கொடுமுடிகள் எண்ணிறந்தவற்றுள்ளே, தனியாயுள்ள ஒரு கொடுமுடி திருக்கைலையைப் போன்றிருக்கின்றது. அக்கொடுமுடியின் றன்மையைச் சொல்லியுணர்த்தத் தொடங்கினால் வெள்ளிபோலப் பிரகாசிக்கும் ஒளி விளங்கிக் கொண்டிருக்கும் அக்கொடுமுடியில், இளம்பிறைச் சந்திரனைச்சூடிய திருமுடியையுடைய சிவபெருமான் மிகுந்த ஆசையோடு எழுந்தருளியிருப்பது. எ - று.

திசையெ லாம்பட வெள்ளொளி விரிப்பது சிமையத்
தசைவி லாமுழு மதியநின் றவிர்வதொத் திலங்கும்
விசைய மாதவ ருளத்தொடும் பொதிவது விண்ணோர்
வசையி லாரணு னுன்முகன் றொழுதகும் வணங்கி,

(இ - ள்.) அக்கொடுமுடி திசைகளிலெல்லாம் பரவும்படி வெள்ளிய காந்தியைப் பரப்புவது. அதனுச்சியில் சலனமில்லாத பூரண சந்திரனிருந்து ஒளி செய்வதுபோல விளங்கும். வெற்றிபொருந்திய பெருந்தவசிகள் இதயத்தையும்போன்றது. தேவர்களும் பழியற்றவர்களாகிய விஷ்ணு பிரமன் முதலானோரும் கைகூப்பி வணங்கத்தக்கது. எ - று. (கஅரு)

அருவி நாலிரு புறத்தினு மிடையறு தலைக்கு
மருவா ருஞ்சினைக் கற்பகம் பூழின்மந் தாரங்
குருந றுநதுணர்க் குங்குமஞ் சண்பகங் குருந்தம்
விரிக ருஞ்சினை நரந்தைதே மாவன வெள்ளில்.

(இ - ள்.) அருவியாறுகள் அஷ்ட திக்குகளிலும் ஓயாமல் இழிந்துகொண்டிருக்கும் மணம்பொருந்திய அரும்புகளையுடைய கற்பக விருட்சமும் அகில் விருட்சமும் மந்தாரமரமும் செந்நிறந்தங்கிப் பரிமளிக்கும் மலர்க்கொத்துகளையுடைய குங்குமமரமும் சண்பகமரமும் குருந்தமரமும், மிக்க கருநிறந்தங்கிய கிளைகளையுடைய நாரத்தை மரமும் தேமாமரமும் காட்டு விளாமரமும். எ று.

இவையெ லாம்பொதிந் திருட்படாம் போர்ப்பதவ் விருளை
நவம ணிக்குவை துவன்றிநின் றறுப்பன நளிநீர்க்
கவர்நெ டுஞ்சடை யெம்பிரான் றிருநடங் காண்பான்
றவறின் மாதவ ரரிமுதற் றேவர்சஞ் சரிப்பார்,

(இ - ள்.) இவையாவும் நெருங்கி இருட்படலை போர்த்துக்கொண்டுள்ளது அவ்விருட்படலையை அக்கொடுமுடியிலுள்ள நவரத்தினக் குவியல்கள் நெருங்கியிருந்து விலக்குவன. குளிர்ச்சி தங்கிய கங்காஜலத்தைக் கவர்ந்திருக்கும்

நீண்டசடைமுடியையுடைய எமதுசிவபெருமானது திருநடனத்தைத்தரிசிக்க, தவறுதலில்லாத பெருந்தவசிகள் திருமால் முதலிய தேவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். எ - று. (கஅஅ)

தெய்வ யோகிகள் கின்னர ரியக்கர்கந் திருவர்
மெய்கொ டெய்வமால் வரையினைச் சூழ்ந்தனர் விரும்பி
மைகொள் கண்டனை வணங்கினர் மாதவம் பயில்வார்
பொய்யி லுண்மறை யுச்சிவீற் றிருப்பதப் பொருப்பு.

(இ - ள்.) தெய்வீகந் தங்கிய யோகிகளும் கின்னரர்களும் இயக்கர்களும் கந்தர்வர்களும் உண்மை தங்கிய தெய்வீகம்பொருந்திய இப்பெரிய மலையை விருப்போடு பிரதக்கணஞ்செய்து, கருநிறந்தங்கிய ஸ்ரீகண்டத்தையுடைய சிவ பெருமானை வணங்கியவர்களாய் மேம்பட்ட தவத்தைச் செய்வார்கள். ஆத லால் அக்கொடுமுடியானது உண்மையாகிய நான்குவேதங்களின் உச்சிபோல வீற்றிருப்பது. எ - று. (கஅகு)

இனைய மால்வரை யுச்சிவா ளரிசுமந் தெடுத்த
புனைம ணித்தவி சும்பரி னுமையொடும் பொருந்திக்
கனைபொ லன்கழ லிந்திரன் கணத்தொடு மிறைஞ்ச
வினைய மாநிலத் துயிர்க்களித் திருந்தனன் விமலன்.

(இ - ள்.) இத்தகைய பெரிய மலையினுச்சியில், ஒளிதங்கிய சிங்கங்களாற் சுமந்துகொண்டிருக்கும் அலங்கரிக்கத்தக்க இரத்தினமயமாய் விளங்கிய ஆச னத்தின்பேரில், உமாபிராட்டியாரோடும் பொருந்தி, ஒலிக்கின்ற பொன்னுலா கிய வீரகண்டாமணி தரித்த தேவேந்திரன் தன் பரிவார தேவர்களுடன் வணங்க, இந்த நெடிய நிலவுலகத்திலுள்ள ஆன்மாக்களுக்குத் திருவருள் புரிந்துகொண்டு மலரகிதராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்றனர். எ - று.

பரிதி வானவன் பனிமதிக் கடவுண்மா தவத்தோர்
குருதி யாழிவெம் படையின னொன்முகக் குரிசி
விருடி நாரதன் முதலினோர் தும்புரு வியக்கர்
கருணை கூர்சன காதியர் யோகிகள் கணத்தோர்.

(இ - ள்.) சூரியபகவானும், குளிர்ச்சிதங்கிய சந்திரதேவனும், பெருந்தவ சிகளும், உதிரம்படிந்த கொடிய சக்கராயுதந்தாங்கிய விஷ்ணுமூர்த்தியும், நான்கு முகங்களையுடைய பிரமதேவனும், நாரதமுனிவர் முதலானவர்களும், தும்புருவரும் இயக்கரும், கிருபை மிகுந்த சனகனாதிய நால்வரும் யோகிகளும் சிவகணங்களும். எ - று. (ககூக)

வலவை கேள்வனு மரகதப் பலகையொத் தகலுங்
கலவ மாமயிற் பாகனு நந்தியுங் கடல்சூழ்
நிலநெ டுந்திசைப் பாலரும் வசிட்டனு நிரைத்தார்
மலர யன்றனித் தலைதுமித் தோனவை மருங்கின்.

(இ - ள்.) வல்லபை கணவராகிய விநாயகப்பெருமானும், மரகதத்தாலா கிய பலகையைப்போல விரித்தாடுகின்ற கலாபத்தையுடைய சிறந்த மயில்வாக னத்தையுடைய குமாரக் கடவுளும், திருநந்திதேவரும், கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகத்தின் அஷ்டதிக்குப் பாலர்களும், வசிஷ்டமுனிவரும், தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமனுடைய ஒப்பற்ற சிரசைக்கொய்தருளிய சிவபெரு மான் திருச்சபைக்கருகே வரிசையா யிருந்தார்கள். எ - று. (ககூஉ)

மருங்கு னோவுற மைபடு வாளரித் தடங்க
ணரம்பை மேனகை யுருப்பசி திலோத்தமை யருநாற்
றிருந்து பாடலிற் பல்லியச் சதிமுறை திறம்பா
திரங்கு சில்லொலிச் சீறடி நூபுர மிரங்க.

(இ - ள்.) மைதீட்டிய வாட்படைபோன்று செவ்வரிபடர்ந்து பரந்தவிழி களையுடைய அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமையாகிய விவர்கள் தங்கள் இடைவருந்தும்படி, அரிய பரத சாஸ்திரத்தின்படி திருத்தமாகிய பாடல் களினாலே, பலவாத்தியங்களின் சதிமுறைதவறாது, ஒலிக்கின்ற சிற்றோசை யுடையதாய்ச் சிறியபாதங்களி லணிந்துள்ள [நூபுரம்] கிண்கிணி யொலிக்க.

சுருதி யாழிசை தும்புரு நாரத ரிசைப்பக்
கருவி மத்தள மென்மெல விசைப்பன காணா
வுருகு பாடலி னரம்பையர் நடந்தர வொருபாற்
செருகு வெண்பிறைக் கண்ணியன் றிருவருள் சிறந்தான்.

(இ - ள்.) சுருதிகூட்டிய யாழினிசையைத் தும்புருவும் நாரதரும் வாசிக்க, வாத்தியக்கருவிகளும் மத்தளமும் மிகமெதுவாக ஒலிப்பதைக் கண்டு, மனவுருக் கந்தரும் பாடலைப்பாடிக்கொண்டு தேவமாதர்கள் ஒருபுறத்தே நடனஞ்செய்து கொண்டிருக்க, சடையினிடத்தே செருகியுள்ள வெண்ணிறந் தங்கிய பிறைச் சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமான் திருவருள் பாலித்தனர்.

இன்ன லந்தரு மரம்பையர் நடித்தவீற் றிறுதிப்
பின்ன லஞ்சடைப் பிங்கிரு டிப்பெரும் பெயரோ
னன்ன வர்க்கெலா நகைவர முடநட மயர்ந்தான்
மன்னு மாசவை நகைத்தது மாதிர மதிர.

(இ - ள்.) இனிய இன்பத்தை விளைவிக்கும் தேவமாதர்கள் நிர்த்தனஞ் செய்து முடிவுபெறும் கடைசியில், அழகிய பின்னற்சடையையுடைய பிருங்கி யென்னுஞ் சிறந்த முனிவர், அவர்கட்கெல்லாம் நகைப்புண்டாம்படி. [முடக்] கோணைக் கூத்தாடினர். கூடியிருந்த பெருஞ்சபை முழுவதும் திசைகள் அதி ரும்படி நகைத்தது. எ - று. (௧௯௫)

நன்று நன்றெனத் தனிவிழி நெற்றியோ னவிலப்
பின்ற வழ்ந்தபுன் புரிசடை நடித்தபிங் கிருடி
மன்ற லோதியை யொழித்திள மதிநிலாப் புனைந்த
குன்ற வில்லியை நடத்தொடுந் தனிவலங் கொண்டான்.

(இ - ள்.) நன்றாயுள்ளது நன்றாயுள்ளதென்று, ஒப்பற்ற நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளவும், முதுகின்மேல் முறுக்கிய சிறு சடைதவழ நடித்தவரான பிருங்கிமுனிவர், மணங்கமழும் கூந்தலையுடைய உமாபிராட்டியை நீக்கி, இளம்பிறைச் சந்திரனையணிந்த மலைவில்லையுடைய சிவபெருமானைமட்டுமே நடித்துக்கொண்டு பிரதக்ஷிணஞ் செய்தனர். எ - று.

கொண்டு போற்றினன் வரன்முறை வணங்கினன் குழைந்தா
னண்டர் நாயக நினதருள் பெறப்பெற்ற வாற்றாற்
பண்டை நான்முத லிழைத்தமா தவப்பய னடைந்தேன்
றொண்ட னேனென நடித்துநின் றடிக்கடி தொழுதான்.

(இ - ள்.) வலங்கொண்டு துதிசெய்து மனமிளகி, தேவர்தலைவரே! தேவரீருடைய திருவருளை யடையப்பெற்ற வகையால், ஆதிகாலந் தொடங்கி அடியேன் புரிந்த பெருந்தவத்தின் பிரயோசனத்தை யடைந்தவனாயினேன் என்று விண்ணப்பஞ்செய்து ஆனந்தக் கூத்தாடி சந்நிதியில் நின்று பலமுறை பணிந்தார். எ - று. (ககூஎ)

ஈது நோக்கின டிருவுளங் கறுத்தன ளிறைவி
யாதி வன்செய லென்னைநீத் தவமதித் திகழ்ந்து
போதி ளம்பிறைக் கண்ணியோய் நினைவலம் புரிந்த
தோத வேண்டின னென்றனள் சீற்றமிக் குமையாள்.

(இ - ள்) இதனை உமாதேவியார் கண்டு திருவுளஞ் சிறந்து, மலர்போன்ற இளம் பிறைச்சந்திரனையணிந்த தலைவரே! என்னை மதிப்பின்றி இகழ்ச்சியோடு தள்ளித் தேவரீரை மாத்திரம் பிரதக்ஷிணம் புரிந்ததாகிய இம்முனிவன் செயலுக்கு நிமித்தம் யாது? அதனைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கோபமிகுந்து உமாதேவியார் வினவினார். எ - று. (ககூஅ)

பான லங்கருங் கண்ணிமற் றுங்கது பகர
வானி ளம்பிறைக் கண்ணியோ னவட்கெதிர் வழங்கு
மோன மாதவர் மூலமொன் றேயென முன்னி
நீனெ டுங்குழன் மற்றுமொன் றுளதென நினையார்.

(இ - ள்.) நீலோற்பல மலர்போலும் அழகிய கரிய விழிகளையுடைய உமாபிராட்டியார் அப்படி வினவவும், உயர்ந்த இளம்பிறையை முடித்த சிவபெருமான் பிராட்டியாருக்கு விரைவாகத் திருவாய்மலர்ந்தருளுகின்றார். கறுத்த நெடிய கூந்தலையுடையாளே! மௌன நிலைவகித்த பெருந்தவமுடையோர் காரணப்பொருள் ஒன்றேயெனக்கருதி, மற்றொன்றிருப்பதாகக் கருதார்.

தேங்கு கங்கையஞ் சடையின னுங்கது செப்ப
வீங்கு சீற்றமிக் கெழுந்தன ளணைமீக் கிளரப்
பாங்கு நின்றபிங் கிருடியை நோக்கின ளவன்பா
லோங்கு சத்திநீத் தொழிதர வாங்கின ளுமையாள்.

(இ - ள்.) பெருகுகின்ற கங்காநதியைத் தரித்த அழகிய சடையையுடைய சிவபெருமான் இங்ஙனந் திருவாய்மலர்ந்தருள, உமாதேவியார் கடுங்கோபமதிகரித்தவராய் நாணும் மிகமேலே யதிகரிக்க, அருகே நின்றுகொண்டிருந்த பிருங்கி முனிவரைப்பார்த்து, அவரிடத்துள்ள உடல்வலிமை நீங்கிப்போம்படி வாங்கிவிட்டனர். எ - று. (உ00)

ஒழிந்த சத்திய னுலரிய வாக்கைய னுணங்கிக்
கழிந்த வென்பினன் றோலொடு நரம்பல காணான்
குழிந்த கண்ணின னொடுங்கிய கொடிற்றினன் குருதி
பிழிந்த மெய்யினன் சுரம்படு முலவையிற் பெயர்வான்.

(இ - ள்.) சத்தி நீங்கியவனாய்ச் சுஷ்கித்த தேகமுடையவராய் வாட்டமெய்தி, தசைகழிந்த வெற்றெலும்புடையவராய்த் தோலும் நரம்புமன்றிப் பிறிதொன்றுங் காணாது உள்ளே குழிந்த விழியுடையராய் வற்றிய கொடிறுடையவராய் உதிரத்தைப் பிழிந்துவிட்ட சக்கைபோன்ற உடலுடையராய், பாலை நிலத்திலகப்பட்ட தழைபோன்றவராய்ச் சென்றனர். எ - று. (உ0க)

ஈச னித்தனை கண்டன னெனமனத் திருத்தி
மூசு வெஞ்சினத் தகன்றன ளருந்தவ முயல்வான்
பாசி ழைப்பரும் பணைமுலை யுளத்தினைப் பழங்க
ணூச லாட்டுறக் கவுதம னுறையுள்சென் றுறைந்தாள்.

(இ - ள்.) சிவபெருமான் இவ்வளவு அவமதிப்பையும் பாராதிருந்தனரே யென்று தமது திருவுள்ளத்திற் கொண்டு பசிய பொன்னாற்செய்த ஆபரணங்களையும் மிகப் பூரித்த குசங்களையுமுடைய உமாதேவியார், அதிகரித்த கடுங்கோபத்தினால் அருந்தவஞ்செய்யக்கருதி நீங்கினர். அப்போது தேவியாரது திருவுள்ளத்தைத் துயரமானது ஊசலாட்டிக்கொண்டிருக்க, கௌதமமுனிவருடைய ஆச்சிரமத்திற்குச்சென்று அங்கே வீற்றிருந்தனர். எ - று. (௨௦௨)

உலகம் யாவையு முறுபொரு ளனைத்தையு முலவா
வலகி லண்டமுஞ் சராசர மனைத்தையு மளித்தாள்
செலவு மன்னவள் சீறடி தீண்டவுஞ் சிறப்புற்
றிலகு மவ்வன மரிதுறப் புரிந்ததெத் தவமே.

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றையும், அவற்றிலுள்ள வஸ்துக்களெல்லாவற்றையும், அழியாதகணக்கில்லாத அண்டங்களையும், சராசரப்பொருள்கள் எல்லாவற்றையும் பெற்றருளியதாயாகிய உமாபிராட்டியார் அவ்வாச்சிரமத்திற் கெழுந்தருளவும், அப்பிராட்டியாரது சிறிய திருவடிகளைப் பரிசிக்கவும், சிறப்புற்று விளங்கும் அவ்வனமானது புரிந்தது யாதுதவமோ? எ - று. ()

குருதி வாளெயிற் றடுபுலிக் கொள்ளையும் வெகுண்டு
திருகு வெஞ்சினக் கவிழ்தலை யுளியமுந் திணிதோட்
டொருகை வாரண மத்தமீர்ந் தூற்றெழுங் குருதி
பருகு வாளரி மடங்கலுங் கலந்துடன் படர்வ.

(இ - ள்.) உதிரம் படிந்தவாட்படைபோலும் கூர்மைவாய்ந்த பற்களையுடைய கொல்லத்தக்க புலிக்கூட்டமும், மாறுபட்ட கொடுங்கோபமுடைய கீழ்நோக்கிய தலையையுடைய கரடிகளும், வலிபொருந்திய தந்தங்களையும் ஒப்பற்றதுதிக்கையையுமுடைய யானைக்கூட்டங்களும், அவ்யானைகளின் துதிக்கையைப்பற்றியீர்த்து அதிற் சுரந்தொழுகும் உதிரத்தைப்பானஞ்செய்யும் ஒளிமிக்க ஆண்சிங்கங்களின் தொகுதியும் ஒருசேரக்கூடிச் சஞ்சரித்துக்கொண்டிருப்பன. எ - று. (௨௦௪)

திரிம ருப்பெழு மிரலையுஞ் சிறுபொறிப் புள்ளிக்
கரிய கட்பெடை மானொடுந் திரிவன கடுக்கான்
றெரிசி னத்தவா ளரவின மொழுக்கியூர்ந் தியங்கும்
வரிநெ டுஞ்சிறைப் புட்குலந் துவன்றுமவ் வனமே.

(இ - ள்.) முறுக்கியகொம்புகள் உயர்ந்திருக்குங் கலைமான்கள் சிறுபொறிகளையொத்த புள்ளிகள்பொருந்திய கரியகண்ணமைந்த பெண்மான்களோடு உலாவிக்கொண்டிருப்பன. தீப்போலவிடத்தைச்சிந்திக் கடுங்கோபத்தையுடையனவாகிய ஒளிதங்கிய சர்ப்பக்கூட்டங்கள் வரிசையாக நகர்ந்துகொண்டிருக்கும். வரிகளோடுகூடிய நெடிய சிறகுகளைப்படைத்த பறவைக்கூட்டங்களும் நெருங்கியிருக்கும். எ-று. (௨௦௫)

இழைத்த மாதவத் தலைவர்சூழ்ந் திருப்பன விமவான்
கழைப்ப சுங்கிரிப் புடைபடு மவ்வனங் கடுப்பத்
தழைத்த பூந்துணர் சினையொடுந் தழைப்பன சாந்தங்
குழைத்த கொம்பொடு பொதுளிய சிலிர்த்தன குருந்தம்.

(இ - ள்.) பெருந்தவத்தைச் செய்த தலைவர்களெல்லாரும் சூழ்ந்திருப்பார்கள். அந்த இமயமலையரயனது குளிர்ந்த மலைப்புறத்துள்ள கருப்பஞ்சோலை சூழ்ந்த ஆச்சிரமத்தைப்போல, விரிந்த மலர்க் கொத்துகளையுடைய கிளைகளுடன் சந்தன மரங்கள் தழைத்திருக்கின்றன. குருந்த மரங்கள் குழைவுற்ற கிளைகளோடு தேனைத் துளித்துக்கொண்டு குளிர்ச்சியுற்றிருந்தன, எ - று. ()

இருந்த மாதவக் கவுதம னவணகன் றேகி
யருந்து கின்றன சமிதையுந் தருப்பையு மாய்ந்து
பொருந்து மேல்வையிற் றன்னுழை யவ்வனம் புகுதத்
திருந்து மவ்வனம் புதுவளஞ் சிறந்தன தெரிந்தான்.

(இ - ள்.) அவ்வாச்சிரமத்தில் வீற்றிருந்த பெருந்தவமுடைய கௌதம முனிவர் அங்கிருந்து நீங்கிப்போய், தமக்குணவாயுள்ள (காய்கனிகிழங்குமுதலிய) வற்றையும், ஓமத்திற்குரிய சமிதையையும் தருப்பையையுந்தேடி யெடுத்துக்கொண்டு திரும்புஞ்சமயத்தில், தம்முடைய ஆச்சிரமத்திற்குச் சேர்தலுந் திருத்தமாகிய அவ்வனம் புதியவளப்பத்தில் மேம்பாடுற்றிருத்தலை யறிந்தனர்.

பொழிந்த மும்மதக் கலுழியம் பொருப்பொரு பூட்கை
கிழிந்த வாய்ப்பொரு கோளரி வெரிநுறக் கிடப்ப
தொழிந்த வெம்புலிப் போத்தொடு மொருதனி மடமா
னிழைந்து கின்றுட னேடுவ மாறொழிந் திரங்கி.

(இ - ள்.) மும்மதங்களைப் பெருக்கெடுக்கப்பொழிந்த தொளையோடுகூடிய துதிக்கையையுடைய மலைபோலும் அழகியயானையானது, திறந்தவாயையுடையகோபம் பொருந்திய சிங்கத்தின் முதுகின்மேலேறிக்கொண்டிருக்கின்றது. பெட்டையைநீக்கிய கொடிய ஆண்புலியோடு, பகையின்றி அன்புகூர்ந்து தனியேயுள்ள ஒப்பற்ற இளமான்கள் கூடியிருந்து அதனோடேகும். எ - று.

திறல்கொள் வெஞ்சினக் கலுழனோ டரவினந் திளையா
வுறைகொள் வாளெயிற் றிடையறு தாரமு துகுப்பப்
பொறைய ரிப்புறத் தொதுங்கிய மடற்செவிப் புனமேய்
சிறுமு யற்குழாத் துடனுறைந் தாடுவ செந்நாய்.

(இ - ள்.) வலிதங்கிய கடுங்கோபமுடைய கருடனோடு சர்ப்பகூட்டங்கள் கலந்து உறைபூட்டிய வாள்போலுங் கூர்மையான தங்கள் பற்களிலிருந்து ஓயாது சிறந்த அமுதத்தைத் துளித்துக்கொண்டிருக்க, மலைகளிலும் சோலைப் புறங்களிலும் காடுகளிலும் ஒதுங்கிமேயும் மடல்போன்ற செவிகளையுடைய சிறுமுயற்கூட்டத்துடன் செந்நாய்கள் சேர்ந்து விளையாடுவன. எ - று. ()

ஒருத னிப்பெருந் திகிரிதே ருருட்டிய வுதயோ
னுருகு வெங்கதிர் படப்பட வுணங்கிய வுலவை
மருவ ருந்துண ரீன்றன பூந்துணர் மலர்ந்த
பொருவ ருஞ்சினைக் கற்பக வனமெனப் பொதுளி.

(இ - ள்.) ஒப்பற்ற ஒற்றைச்சக்கரமமைந்த பெரிய தேரைச்செலுத்திய சூரியனது வெப்பத்தைத்தருங் கொடிய கிரணங்கள் படுந்தோறும் உலர்ந்திரு

ந்த [உலவை] கிலுகிலுப்பைக் கொடிகள், நிகரின்றி விளங்கும் கிளைகளோடு கூடிய கற்பகவனத்தை யொழித்துச்சென்று, மணங்கமழும் மலர்க்கொத்துக் களை வாய்ந்தன. பூங்கொத்துகளெல்லாம் மலர்ந்தன. எ - று. (உகo)

பருவ நோக்கில பண்ணமரம் பழக்குலை யீன்ற
மருவு றுமலர் மருப்பட மலர்ந்தன மலர்வாய்ப்
பெருகு தேத்துளி யிடையிடை தெறிப்பன பெரியோன்
கருதி யெட்டியு முண்பன பழுப்பன கண்டான்.

(இ - ள்.) பருத்த பழந்தருமரங்கள்யாவும், காலம்பாராமல் பழக்குலை பொருந்தின. மணமற்ற மலர்கள்யாவும் மணமுடையவாய்மலர்ந்தன. அம் மலர்களாற் பெருக்கெடுத்த தேன்றுளிகள் இடையிடையே துளித்துக்கொண் டிருந்தன. எட்டிப்பழங்களும் விரும்பி உண்ணத்தக்க இனிமையோடு பழுத் திருப்பதைக் கௌதமமுனிவர்கண்டு சிந்தித்து. எ . று. (உகக)

என்னை யிவ்வன மிருஞ்சிறப் பினையுடைத் தாகி
முன்னை யிற்சிறப் புடையதாய்ப் பெருவள முயன்ற
தென்னை யாளுடை நாயகி யினிதெழுந் தருளிப்
பொன்ன டித்துணை சாத்திய துணர்ந்திலன் புனிதன்.

(இ - ள்.) இவ்வாச்சிரமம் மிகு சிறப்புடையதாய் முன்னுளினும் மேன் மைதங்கியதாய்ப் பெருவளங்க ளெய்தியதன் காரணம்யாது? எனக் கௌதம முனிவர், என்னை யடிமையாகவுடைய உமாபிராட்டியார் இனிமையாக விங் கெழுந்தருளி, பொன்னையொத்த தமதுபயபாதங்களையும் பரிசிக்கச்செய்தரு ளியதைத் தெரிந்துகொள்ளாதவராய். எ - று, (உகஉ)

குடையன் குண்டிகை தூக்கிய கரத்தினன் குனித்த
நடைய னஞ்செழுத் தோதிய நாவினன் கலைத்தோ
லுடையன் செம்பொனு மோடுமொத் துளமென வுணர்வா
னடைத ருப்பையே முதலிய வொருங்குகொண் டடைந்தான்.

(இ-ள்.) குடையையுடையவரும், கமண்டலந்தொங்கவிட்டகையையுடை யவரும், தளர்நடையுடையவரும், பஞ்சாக்கரத்தைச் சபிக்கும் நாவினையுடைய வரும், மான்தோலாகிய உடையையுடையவரும்,செம்மையாகிய பொன்னையும் ஓட்டையும் சமானமாயுள்ளன வெனக்கருதியவருமாகிய கௌதமமுனிவர், கிடைத்த தருப்பைமுதலியவற்றை ஒன்றாக வெடுத்து வந்தனர். எ - று. ()

வெயிற்கொ ழுங்கதிர் பரம்பிய வேலைமா நிலத்தி
னுயிர்க்கு மாருயிர்ப் பொறைகட்கு முணர்வுதந் துதவிப்
பயிற்சி தொன்றுதொட் டறப்பயிர் வளர்க்குறும் பணைத்தோட்
குயிற்கொ ழுஞ்சிறு குதலைவீற் றிருப்பது கண்டான்.

(இ - ள்.) சூரியன் தனது வெயிலாகிய கிரணங்களைப் பரப்பும் கடல் சூழ்ந்த பெரியபூமியில், உயிர்கொண்டுள்ள ஆன்மவர்க்கங்களுக்கு அறிவைக் கொடுத்தனுக்கிரகித்து, அநாதியாகப்பழகிவரும் உயிர்களாகிய பயிரை வளர்க் கும் மூங்கிலையொத்த தோள்களையும் குயிலின் இனிய குரல்போன்ற மழலைச் சொல்லையுமுடைய உமாபிராட்டியார் எழுந்தருளியிருப்பதைக்கண்டார் எ.று.

யாமி ழைத்தமா தவங்கொலோ வெம்முனோர் முன்பு
தாமி ழைத்தமா தவங்கொலோ வனம்புரி தவமோ

வேம வெற்புறை யெம்பெரு மாட்டியைக் கொர்ணர்ந்து
காமர் நல்வினை யளித்தவெதன் றென்புறக் கனிந்தான்.

(இ - ள்.) நாம் பூர்வத்திற்செய்த பெருந்தவமோ? எமது முந்தியோர் முயற்சிசெய்து தாமே செய்த பெருந்தவமோ? அன்றி இவ்வாசிரமந்தான் செய்த் தவமோ? பொன்மலை [ஆகியமேருமலை] யில் எழுந்தருளிய எமது உமாபிராட்டியாரை ஈங்கழைத்துவந்து அழகிய புண்ணியம்போலத் தந்ததே யென்று தமது என்புகள் நெக்குவிடும்படி மனமுருகினர். எ - று. (உகடு)

கனித்த சிந்தையி னருக்கிய முதலிய கடன்க
டனித்து மாதவ னுமையவட் கருண்முறை தந்தான்
பணித்த மெய்யின னடிக்கடி நிலனுறப் பணிந்தா
ணினைத்தெ ழுந்தரு ளியகருத் தென்னென நிகழ்த்தும்.

(இ - ள்.) உருகிய மனதோடு அர்க்கியமுதலிய (ஷோடஸ)உபசாரங்களைக் கௌதமமுனிவர் தாம் தனியாகவே உமாபிராட்டியாருக்கு விதிவழிசெய்தவராய், நடுங்கியதேகமுடையராய், பலமுறை நிலந்தோயச் சாஷ்டாங்கமாக வணங்கினவராய், அடியேனையும் பொருளாக்கருதி யெழுந்தருளிய காரணம் யாது? எனவினவும், தேவியார் திருவாய்மலர்ந்தருளுகின்றனர். எ - று. ()

மறுவ றும்பிறைக் கண்ணியோற் கொருபுற மருவிப்
பெறுவ தாற்றுதற் கியைந்தன னுங்கது பெறுவா
னுறுபெ ருந்தவ விரதமொன் றுரைக்குதி யுரைத்தா
லிறுவ தின்றிவ ணிருந்தினி தியற்றுவ னென்றாள்.

(இ - ள்.) களங்கமற்ற பிறைச்சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமானுக்கு வாமபாகத்திற் கலக்கப்பெறுதற்காக ஒருவிரத மநுட்டிக்கச் சம்மதித்தேன். அதனையானடைய, பெருமைமிக்க சிறந்தவிரத மொன்றனைச் சொல்வீராக. அப்படி நீர் சொன்னால் தவறுதலின்றி அவ்விரதத்தை இவ்வாச்சிரமத்திலிருந்தே இனிதாக அநுஷ்டிப்பேனெனத் திருவாய்மலர்ந்தருளினர்.

ஏழை யின்னண முரைத்தலு மிருந்தவத் தலைவன்
வாழி நான்மறை யுயிர்த்தநாள் வழங்கிய வழக்கத்
தாழி யாகமப் பெருங்கடற் றுறைகுடைந் தளந்தோ
னூழி யான்றனி விரதமொன் றுளதெ தன வுணர்ந்தான்.

(இ - ள்.) பிராட்டியார் இங்ஙனந் திருவாய்மலர்ந்தருளவும், பெருந்தவமுடையவரும், நான்கு வேதங்களுதித்த காலமுதலாக வழங்கிய வழக்கத்துடன் ஆழ்பொருளுள்ள ஆகமமாகிய பெருங்கடற்றுறைகளில் மூழ்கியளந்தவருமாகிய கௌதமமுனிவர் ஊழிகாலத்தும் விளங்குபவராகிய சிவபெருமானுக்குரிய

(இ - ள்.) தழைத்துள்ள கிளைகளோடுயர்ந்த கற்பகவிருக்ஷத்தின் குளிர்ச்சி தங்கிய தேனைத்தூவிக்கொண்டு புதுமணங்கலந்த தென்றற்காற்று வீசுதலால் தீயினுற்சுடும் மெழுகுபோலுருகுவான். மெல்லிய சயனத்தின்மீது தெளிக்கின்ற செழுமைதங்கிய மலர்க்குவியல்கள் அவ்விந்திரனுடைய சுவாசம்படுவதால் தீப்போலக் கரிந்துபோம். எ - று. (உo)

கொழுநறை நரந்தங் கொட்டுங் குங்குமக் குவவுத் திண்டோண்
மெழுகுற வெதும்பிக் காந்திப் பொருக்கெழும் விரிபூந் தாமச்
செழுமலர் நெருப்பிட் டாற்போற் றீந்தன சிவந்த கண்கள்
பொழுதிடை நோக்கித் திண்டோள் புடைத்தன னனங்கப் புத்தேள்.

(இ - ள்.) மதர்த்த மணந்தங்கிய கஸ்தூரியை, குங்குமச்சாந்தணிந்த குவிவாகிய வலியதோள்களிற்பூச, அதுசூடேறி யெரிந்து பொடிபட்டுதிரும். விரிந்த மலர்மாலையிலுள்ள செழுமைதங்கிய கற்பகமலர்கள் தீமிசையிட்டாற்போலக் கரிந்தன. கண்களால் [அநங்கன்] உருவிலியாகிய மன்மதன் காலத்தைப்பார்த்துத் தன்வலிய தோள்களைத்தட்டினான். எ - று. (உக)

ஆய்மயி லனைய சாய லகலிகை யாசை தீர்வான்
சேயிழை யரம்பை மாரிற் றிலோத்தமை முதலா யுள்ளோ
ரேயபே ரழகை நோக்கி யெண்ணுறும் பரவை நாவாய்ப்
பாய்மரப் பரவை யொத்தா னொருங்கிலைப் படாத சிந்தை.

(இ - ள்.) ஆய்ந்த மயிலைப்போலுஞ் சாயலையுடைய அகலிகை யென்பவளது ஆசைதீரும்படி, செவ்வையாகிய ஆபரணங்களையணிந்த அரம்பாஸ்திரீகளில் திலோத்தமை முதலாகச் சொல்லப்பட்டுள்ளவர்கள் பொருந்திய பேரழகைப்பார்த்து ஒருங்கிலைப்படாத மனதால் நினைக்கின்றவனாகி, சமுத்திரத்தில் செல்லும்மரக்கலத்தின் பாய்மரப்பரப்பினை யொத்தவனாயினான். எ - று. (உஉ)

மயிலியற் குதலைச் செவ்வாய்ப் புலோமசை வளைப்பூங் காந்தள்
பயிலுறத் தடவா நின்று ளாங்கது பகரி னம்மா
வயின்முக நெடுவேற் றூளை யறுத்தழி பசும்பு ணூடு
மயர்வுறச் சலாகை காச்சிச் செலுத்துறன் மானு மன்றே.

(இ - ள்.) மயிலின்சாயலையும் மழலைச்சொல் பொருந்திய சிவந்த வாயையுமுடைய [புலோமசை=புலோமன்மகள்] இந்திராணியானவள் தனது வளையணிந்த அழகிய காந்தள் மலர்போன்ற கைகளால் பரிசமுறத் தடவுகின்றாள். அதன் நிலையைச்சொன்னால், கூர்மைவாய்ந்த முகத்தையுடைய நீண்டவேற்படையானது அறுத்தழித்த பசிய புண்ணினிடையே மயக்கமுண்டாம்படி, இருப்புச் சலாகையைப் பழுக்கக்காச்சிச் புகுத்துவதை யொத்திருக்கும். எ - று. (உங)

அளிபடு புதுப்பூங் கோதை யகலிகை யமுத ளாவுங்
கிளிபடு குதலை கேட்ட வார்செவித் துணைகண் மற்றைக்
களிபடு சுரும்ப ரோதி யணங்கனார் கருப்பு பூத்த
வெளிபடு மழலை காகத் தொனியென வெறுத்த வன்றே.

(இ - ள்.) வண்டுகள் மொய்த்த அன்றலர்ந்த மலர்களையணிந்த கூந்தலையுடைய அகலிகையென்பாளது, அமுதமயங்கலந்ததாய்க் கிளிகளுந் தோல்வியெய்தத்தக்க மழலைச்சொல்லைக்கேட்ட நீண்ட இருசெவிகளும், ஏனைய மதுமயக்குடையவண்டுகளமர்ந்த கூந்தலையுடையதேவமாதரது கரும்புபோல்வெளிப்பட்ட இளஞ்சொற்கள் காக்கையின் குரலொலியைப்போல வெறுப்புற்றுத் தள்ளின.

குனிபடு புருவச் சாபத் தகலிகை வதனங் கோட்டிக்
கனிபடு மனத்தி னேற்கு மற்றையோர் கடவுட் டிங்கட்
டனிபடு வதன மெல்லா முற்படு பருவந் தாங்கும்
பனிபட வெதும்பிச் சாம்பும் பங்கய நிகர்த்த மாதோ.

(இ - ள்.) வளைந்த புருவமாகிய வில்லையுடைய அகலிகையின் முகத்தைக் கண்டு காமுற்றிரங்கிய மனமுடைய இந்திரனுக்கு ஏனைய மாதர்களது தெய்வீகந் தங்கிய சந்திரன் தனித்தனி தோல்வியெய்தத்தக்க முகங்கள்யாவும், முன்பனிக் காலத்திலே பனியானது படுதலால் தீந்துவாடுகின்ற தாமரைமலர்களை யொத்திருந்தன. எ - று. (உசு)

அன்னவ ளுருவ நோக்கி யருந்துய ரளித்த நோக்க
மின்னல மின்று காறு மிவற்கினி தளித்த கோலப்
பொன்னெளி மருட்டு மேனிப் புலோமசை புணர்ந்த தெய்வ
மென்னல நோக்கா தாசை முதலற வெறுத்த வன்றே.

(இ - ள்.) அவ்வகலிகையின் வடிவத்தைக்கண்டு அரிய துயரத்தைக்கொடுத்த விழிகள், இவ்விந்திரனுக்கு இற்றையவரையில் இனிய காமசுகத்தைக்கொடுத்து வந்த, அழகிய திருமகளையும் மயக்கத்தக்க தேகத்தையுடைய புலோமசை யென்பாள் பாற்கொண்ட தெய்வீகம்பொருந்திய மெல்லிய சுகத்தைக்கருதாது அப்புலோமசைபாற்கொண்ட ஆசையைவேரற வெறுத்தன. எ - று. (உரு)

ஆரழ கமையப் பூத்த வகலிகை திதலை பூத்த
வேரிள முகிண்மென் கொங்கை யெண்ணுதோ றெண்ணு தோறுந்
தாரொடு குவவுத் திண்டோள் வீங்குறுந் தழுவக் கிட்டாள்
போரடு மதன வாளி படப்படப் பொருும தீரான்.

(இ - ள்.) நிறைந்த அழகுபொருந்த விளங்கிய அகலிகையினுடைய தேமல் படர்ந்த அழகுற்று முதிராத கோங்கரும்பு நிகர்த்த மெல்லிய குசங்களைக்கருதுந் தோறுங் கருதுந்தோறும், அணிந்த கற்பகமலர்மாலையோடு குவிந்தவலிய புயங்கள் பூரிப்பான். (அவ்வுருவெளித் தோற்றத்தை) ஆலிங்கனஞ்செய்வான் (அவள் கைக்கு) எட்டமாட்டாள். இதனால் போர்புரிகின்ற மன்மதபாணங்கள் தைக்குந் தோறும் துன்பம் நீங்கான். எ - று. (உஎ)

அருந்துய ரளித்த காம வெதுப்பிறை யாற்று னுகித்
தருந்தருப் பொதும்பர் வீழ்த் தண்ணிழ றழுவச் சார்ந்தான்
வருந்துணர் வீழ்த்த செந்தே மதுத்துளி தெறிக்குந் தோறும்
பொருந்திறற் றடந்தோண் மேனி சுறுக்கொளப் பொறுக்க லாற்றான்.

(இ - ள்.) அடைதற்கரிய துயரத்தைக்கொடுத்த காமாக்கினியை இந்திரன் சகியாதவனாகி, (எண்ணியோர் எண்ணியவற்றை எண்ணியவாறே) கொடுக்கத்தக்க கற்பகத்தருவின் சோலையில் உண்டாகின்ற அந்தக் குளிர்ச்சிவாய்ந்த நிழலைப் பெறச்சென்றான். வளர்ந்துவருகின்ற பூங்கொத்தினின்று துளித்த செந்நிறந் தங்கிய இனிமையாகிய தேன்றுளி தன்மேற்படுந்தோறும், பகைஞரோடு போர் செய்யும் வலிதங்கிய பரந்ததோளையுடைய அவனுடல் சுறுக்கெனநோகப் பொறுக்க முடியாதவனாயினான். எ - று. (உஅ)

தழைபடு தருவி னோங்குந் தடஞ்சினை யூழ்த்த மென்பூ
விழைபடு தடந்தோள் வெற்பி னிடைதுதைந் திழியுந் தோறும்
குழைபடு மநங்க சாபங் கோத்தெறி கொடுங்கூர் வாளி
நுழைவன வென்ன லானு னவனிலை நுவலற் பாற்றோ.

(இ - ள்.) தழைத்துள்ள கற்பகவிருக்ஷத்தின் உயர்ந்து பரவிய கிளைகள் சிந்திய மெல்லியமலர்கள், விரும்பத்தக்க விசாலமான தோள்களாகிய மலையினிடத்தில் நெருங்கி விழும்போதெல்லாம், மன்மதனுடைய வளைந்த கருப்புவில் லிற்பூட்டி யெய்கின்ற கொடுமைவாய்ந்த கூரியமலர்க்கணைகள் உருவுவனவென்று சொல்லும்படியானான். அவ்விந்திரன் நிலைமைசொல்லுந் தரமோ? எ - று. ()

சாந்துறு பொதிய மூதூர் தளர்நடைப் பசும்பூந் தென்றல்
காந்தெரி குளிர்க்குங் காமக் கடுங்கனல் கொளுத்து மேனி
மோந்தய னடந்து சுற்று முற்றிய மகளி ரெல்லாம்
வேந்தழற் கிடந்த மென்பூந் தொடையென வெதும்பிப் போமால்.

(இ - ள்.) சந்தன மரங்கள் பொருந்திய பொதியாசலமானது வீசுகின்ற தவழ்ந்துசெல்லும் நடையையுடைய பசிய இளந்தென்றலானது சுடுகின்ற அக்கினியைக் குளிரச்செய்யும் காமமாகிய கொடிய தீயிடைமூழ்கிய உடலைப்பரிசித்து, பக்கலிற்சென்று, சூழ்ந்து நிறைந்த மாதர்களெல்லாரையும், எரிகின்ற நெருப்பிடையிருந்த மெல்லிய மலர்மாலையென்று வெதும்பச்செய்து செல்லும். எ - று.

தண்டுளித் திவலை தூங்குஞ் சந்திர காந்த மேய்ந்த
மண்டபத் தரிக ளேந்து மலரணை யமளி சார்ந்தான்
கொண்டவக் காமத் தீயி னத்துளி கொதிப்ப தானு
னொண்டொடி திறத்தி னுள்ள நடக்கலாற் பிறிதொன் றோரான்.

(இ - ள்) குளிர்ச்சிவாய்ந்த நுண்ணிய நீர்த்துளிகளைச்சிந்தும் சந்திரகாந்தக் கற்கள் பொருந்திய மண்டபத்திலே சிங்காதனத்திலேயுள்ள மலர்ச்சயனத்தை யடைந்தான். தான் மேற்கொண்டுள்ள அந்தக் காமாக்கினியினால் (அச்சந்திர காந்தக்கற்கள் சிந்தும்) நீர்த்துளிகள் சுடுவதாகவாயினான். ஒளிதங்கிய வளையலை யணிந்த அகலிகை விஷயத்தில் மனமானது காமுற்றிருத்தலால், மற்றொன்று முணராதவனாயினான். எ - று. (ருக)

இரட்டுவெண் கவரிக் கற்றை யின்னிளம் புதுப்பூந் தென்றன்
முரட்டடந் தோளு மார்புந் தைவர முருகு நாறிப்
புரட்டிவண் டிமிருந் தண்டார் பொரிந்தன கரிந்த சாந்தந்
திரட்டுதெள் ளமுது மற்றை விடமெனத் திரிந்த சிந்தை.

(இ - ள்.) இரட்டுகின்ற வெள்ளிய சாமரைத்தொகுதியினின் றுதோன்றிய இனிய இளமைதங்கிய புதுமலர் மணத்தோடுகூடிய தென்றற்காற்றானது, வலி தங்கிய விசாலித்த தோளையும் மார்பையுந்தடவ, மணம்வீசி வண்டுகள்புரட்டி ஒலிக்கின்ற குளிர்ந்த மலர்மாலைகள் பொரிபட்டன. பூசிய சந்தனப்பூச்சு கரிந் தன. தெளிந்த அமிர்தமும் விஷம்போலத் தோன்ற மனம்மாறியது. எ - று. ()

முறுவலிற் றழகு சென்ற முகத்தின னகத்தி னோங்கு
முறுதுய ருழப்ப தோரா நிருத்தர்வ தொருங்கு சார்ந்தா
ரறுபதச் சுரும்பர் பாடித் துவைத்தெழு மஞ்சி லோதி
மறுவறு திங்க ளன்ன முகத்தியர் மருங்கு மொய்த்தார்.

(இ - ள்.) புன்னகைநீங்கி அழகுகழிந்த முகத்தையுடைய இந்திரன் மனத் திற்பொருந்திய அதிகரிக்கின்ற துயரமானது வருத்துவதையறிந்து, நடனஸ்தி ரீகள் ஒருசேரவந்து சேர்ந்தார்கள். அறுகாலையுடைய வண்டுகள் பண்பாடித் துதைந்தாடுகின்ற [அஞ்சிலோதி] ஐவகையாக முடிக்குங் கூந்தலையும், களங்க மற்ற பூர்ணசந்திரன்போன்ற முகத்தையுமுடையவர்களாய் அவன் பக்கலில் நெருங்கினார்கள். எ - று. (௫௫)

நயங்கெழு பாட றாங்க நரப்பிசை யமுதங் காலப்
பயன்படத் தெறிக்கு மெல்லென் குறட்டிசை பையப் பைய
வியங்கொடு நடப்ப நோக்கி யிருந்தன னிவைக ளெல்லா
முயங்குமச் செவிக டோறும் விடமென வொழுகி மண்ட.

(இ - ள்.) இனிமைமிகுந்த பாட்டோசைமிகவும், (வீணைமுதலியவற்றின்) நரம்பொலி தேவாமிர்தத்தைச் சிந்தவும், பயனுண்டாக வொலிக்கும் மெல்லிய மத்தளவோசை மெல்லமெல்லப் பிறவாத்தியங்களோடு நடக்கவும், இவற்றை யெல்லாங்கண்டு, இருசெவிகளிலும் விஷம்போலச்சேர்ந்து வருத்த இருந்தான்.

உருப்பசி யமுத வால வட்டமொன் றெடுத்துப் பையத்
திருப்பினள் காம வெந்தீத் தினைத்திடை கிளைப்ப மாழ்கிக்
கருப்புர மள்வு தண்ணங் கலவையுங் கனலக் காந்தி
நெருப்பெழ நினையுந் தோறு நெட்டுயிர்ப் பெறிந்து சோர்ந்தான்.

(இ - ள்.) உருப்பசியெனுந் தேவதாசி அமுதத்தையொத்த ஆலவட்டமென் றனையெடுத்து மெல்லப்பணிமாறினள். கொடிய காமாக்கினியானது தகித்தலால் வருந்தி, பச்சைக்கற்பூரங்கூட்டிய அழகிய குளிர்ச்சிதங்கிய கலவைச்சந்தனமும் சுடத்தீந்து, எண்ணுந்தோறும் நெருப்புண்டாகப் பெருமூச்சுவிட்டுச் சோர் வெய்தினன். எ - று. (௫௬)

உயிர்த்துயிர்த் தொடுங்கி யாவி யுணங்கின னெருப்பா டெய்தி
மயிர்ப்புறம் பொடிப்ப வோங்கி யெழுந்தனன் வணக்கம் போக்கி
குயிற்மொழுங் குதலைச் செவ்வாய்க் கோமளக் கொழுந்தே யீங்கெ
னெயிற்புற மொருவிப் போந்த தெவ்வழித் துரைத்தி யென்றான்.

(இ - ள்.) (அப்படிச்சோர்ந்த இந்திரன்) பெருமூச்சுவிட்டுப் பெருமூச்சு விட்டு அடங்கி உயிரொடுங்கி (அவளுருவெளியைநோக்கி) ஞானகி, உடல்முழுதும் புளகம் மேலேபோர்க்க வெழுந்து தண்டனிட்டு, குயிலொலிபோலுங்கொ காழுவிய குதலைச்சொல்கூறும் செவந்த வாயையுடைய இளங்கொழுந்துபோல்வாளே! நீ சம்மதமெய்தி, என்மதிற் புறக்காவல் கடந்து இங்கே வந்தது எப்படி? சொல்ல வேண்டுமென்றான். எ - று. (௬௬)

கலிவிருத்தம்.

என்னு யிரினக் கெதிரெய் தியதும்
பின்னே வருமா றுபிடித் திலதோ
பொன்னே யதுபுக் கிலதா யினுமற்
றுன்னா லுமொரா வியுயிர்த் தனனால்.

(இ - ள்.) என்னுயிரானது உனக்கெதிரில் வந்தவுடனே, மீண்டுந் திரும்பி வரும் வழியைப்பற்றிய தில்லையோ? பொன்னைப்போல்வாளே! அவ்வுயிர் திரும்பிவராவிட்டாலும், உன்னாலும் ஓருயிர் பெற்றிருந்தேன். எ - று. (௬௭)

புலரா விருளுற் றபுயற் குழலா
யலர்வா ளியறுத் தழிபுண் ணிநெடு
முலவா நெறிகண் டுனைவைத் தனனுன்
மலரோ னணிவை கலும்வா ழியவே.

(இ - ள்.) நீங்காத இருளானது குடியிருந்த மேகம்போன்ற கூந்தலையுடையாளே! (மன்மதன்சொரிந்த) மலர்க்கணைபட்டுருவிய புண்ணினின்று நீங்காதவழி யைப்பார்த்து உன்னைத் தாமரைமலரில் வசிக்கும் பிரமன்படைத்தனன். நாடோ றும் நன்றாகவாழக்கடவீர். எ - று. (௬௮)

கண்ணா றுமலர்க் கணைகா துபசும்
புண்ணா றுதழும் பொடுபோ யினவாற்
கண்ணே யமுதூ றுகரும் புருவே
பெண்ணே யுனதின் னருள்பெற் றபினே.

(இ - ள்.) என் கண்போல்வாளே! அமிர்தமே! ஊற்றெடுக்கின்ற செங்கரும் பின் வடிவுபோன்றாளே! அகலிகையெனும் பெண்ணே! உன்னுடைய இனிய கருணையை யானடையப்பெற்ற பிறகு, தேன்மணங்கமழும் புட்பபாணங்கள் பாய்ந்த பசும் புண்ணானது ஆறியவடுவோடும் அகன்றது. எ - று. (௬௯)

நறவார் சுருளோ திநறுங் களபந்
துறவா தபடா முலையிச் சுமைகொண்
டுறவா டுநுசுப் பினுடங் குயிர்கொண்
டிறவா மலிரங் குவதென் றுகொலோ.

(இ - ள்,) தேன்பொருந்திய மலரணிந்த சுருண்ட கூந்தலையுடையாளே! நறுமணங்கமழும் கலவைச்சாந்து நீங்காது சேலைபோர்த்த தனங்களாகிய இச்சு மையைக்கொண்டு நட்பு பாராட்டுகின்ற உன்னிடையைப்போல, தள்ளாடுகின்ற உயிரைத்தாங்கி யான் இறவாதபடி, நீமனமிரங்குவது என்றோ? எ - று. (௭௰)

துகுசி றடிபொன் முடிதாழ் தொறுநீ
தொகுமென் மொழியொன் றுதுறந் தருளின்
மிகுகா மநெருப் புறவெள் ளைநிலா
வுகுமூ ரல்விளைப் பதுமுண் டுகொலோ.

(இ - ள்.) வணங்கத்தக்க உன்னுடைய சிறியகாலில் என்பொற்கிரீடமானது படியும்போதெல்லாம், நீ மென்மைத்தன்மை யாகியமொழியொன்று வெளியிடுவாயானால் மிக்ககாமாக்கினி யெழும்படி வெள்ளிய சந்திரன் சிந்துகின்ற (புன்னகைசெய்வதும்) நிலவை வீசுவதும் உனதாகுமோ? எ - று. (௬௧)

மைதக் கமலர்க் குழல்வா ணுதலாய்
பைதக் கநிதம் பபடர் முலைநீ
பொய்தக் கநுசுப் பொடுபோ தரவின்
றெய்தப் பெறுபே றெவரெய் தினரே.

(இ - ள்.) தகுந்த மலரணிந்த கரியகூந்தலையும் ஒளிதங்கிய நெற்றியையுமுடையாளே! நீ பாம்பின்படத்தையொத்த அல்குலையும் படர்ந்த தனங்களையும் பொய்மைத்தன்மையுடைய இடையையுங்கொண்டு இங்கே இன்றுவர, நான் அடையப்பெற்ற பேற்றினை எவர்தாம் அடைவார்கள்? எ - று. (௬௨)

மின்னஞ் சுமருங் கெனவெவ் வினையே
னென்னெஞ் சறைபோ யதெனக் கெனநீ
வன்னெஞ் சமிரங் கிவழங் குதியே
லின்னஞ் சிலவை கலிருக் குவனால்.

(இ - ள்.) மின்னலும் அஞ்சத்தக்க இடையென்று, கொடியவினையையுடையானாகிய எமது மனமானது கீழ்மையுறத்தது. எனக்காக நீ உன்வலிய மனமானது இரங்கிக்கிருபைசெய்வாயாயின், யான் இன்னுஞ் சிலகாலம் உயிர் பெற்றிருப்பேன். எ - று. (௬௩)

தஞ்சம் பிறிதின் றியுமைச் சரணென்
றஞ்சுந் தமிகண் டருளா யலரோ
னஞ்சந் தருகட் கடைநல் கியுறு
வஞ்சந் தருநெஞ் சம்வழங் கினனே.

(இ - ள்.) வேறுபற்றுக்கோ டில்லை. உன்னையே சரணமென்று அஞ்சுகின்ற எளிமைத்தன்மையைக்கண்டு அருள்செய்வாயாக. பிரமன் விஷத்தைச் சிந்துங் கட்கடையைக்கொடுத்து, நீங்காதவஞ்சனையைச் செய்கின்ற மனத்தையும் உனக்குக்கொடுத்தனனே? எ - று. (௬௪)

மன்றற் சிறுதென் றல்வளைத் துயிரைத்
தின்றெய்த் துநடந் ததுதே மலரு
டொன்றிப் பனிவா டையுலா வருமு
னன்றிற் குரன்மிச் கிலருந் தியதே.

(இ - ள்.) மணந்தங்கிய இளந்தென்றற்காற்று என்னைச்சூழ்ந்து, என்னுயிரைப்பருகி வருத்திச்சென்றது.பனிக்காற்றானது இனிய மலர்மணத்தோடு கலந்து பவனிவருவதன்முன்னரே, அன்றிற்பறவையின் குரலானது அதன்மிகுதியையும் பருகியது. எ - று. (௬௫)

பயில்கற் பகமென் சினைபற் றியிளங்
குயில்கூ யெனதா விகுடித் தனவான்
மயில்போ லொருநீ வரவல் வினையே
னுயிர்போ வதொழித் தனனொண் ணுதலே.

(இ - ள்.) கற்பகவிருக்ஷத்தின் மெல்லிய கிளைகளிற் பழகும் இளங்குயில் கூவி எனது உயிரைக்குடித்தது. மயில்போலுஞ் சாயலையுடைய ஒப்பற்ற நீ இங் கேவந்ததால்,தீவினைச்சம்பந்தமுடைய நான் உயிர்போவதினின்றும் நீங்கினேன். ஒளிதங்கிய நெற்றியையுடையாளே! எ - று. (௬௬)

மூரிப் பனிவா ணனைமூ தறிவை
வாரிக் கொடுபோ கவமுங் கினனே
வீரத் தளிரங் கையெனின் னுயிரை
வேரிக் குழலோ டும்விளித் தனவே.

(இ - ள்.) வெள்ளிய பற்களையுடையாளே! வலிதங்கிய பனியானது என் முதிர்ந்த அறிவைக்கொள்ளைகொண்டு சென்றும்படி அசனைப்படைத்தான். குளிர்ச்சிவாய்ந்த மாந்தளிர்போன்ற அழகிய கையானது வாசந்தங்கிய கூந்தலோடுங்கூடி, எனது இனிமையாகிய பிராணனை யழைத்தன. எ - று. (௬௭)

எனவித் துணைபன் னியிரந் தனையாண்
மனவுத் துணைமா முலைவவ் வுறுவான்
வினவிப் புடைசென் றனன்மெய் தடவா
நினைவற் றுயிர்சோர் தரநின் றனனால்.

(இ - ள்.) என்று இத்தகைய சொற்களைக்கூறியாசித்து, அவ்விந்திரன், இரத்தினமாலையணிந்த பெரிய இருகுசங்களையும கைக்கொள்ளும்படி கெஞ்சி அருகேபோயினன். அவ்வுருவெளித் தோற்ற வுடலைத்தழுவி நினைவற்று உயிர் சோர்வெய்தி நின்றான். எ - று. (௬௮)

பொய்போ லுருவா யபொலன் கொடிதன்
பெய்வால் வளையங் கைபிடித் துறவக்
கைவால் வளைபற் றுதல்கண் டலனுன்
மெய்யா விமயங் கிவெதுப் புறுமால்.

(இ - ள்.) பொய்யைப்போல் (உருவெளியாகிய) உருவம் வகித்த பொற் கொடியின் அடுக்கிய ஒளிதங்கிய வளையலையணிந்த அழகிய கையைப்பிடிக்க, அந்தக் கையிலணிந்த வெள்ளிய வளையலைப்பிடித் தலைக்காணுதவனுகி உடலும் உயிரும் மயங்கி வாடுவெதாயினன். எ - று. (௬௯)

இத்தன் மையினின் றிவனீ டழியப்
பொய்த்தன் மைமடக் கொடிபோ யினளாற்
சித்தந் திகைதந் துதியங் கினனன்
மத்தந் தருவெண் ணிறவா ரணனே.

(இ - ஶ.) இத்தன்மையாக இவன்பெருமையழிகையில், பொய்த்தன்மையோடு காணப்பெற்ற இளங்கொடிபோல் வாளாகிய அப்பெண் மறைந்துபோயினள். மத மயக்கம்பொருந்திய வெண்ணிறந்தங்கிய ஐராவதமென்னும் யானையையுடைய இந்திரன் மனமானது திகைப்புற்று மயங்கினன். எ - ஶ. (௫௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஈங்கிவனிப் பரிசினொடு மகலிகைபா லெடுத்தசிந்தை யிகவா திருந் தான், றேங்கமழு மலரயனு முலகளிப்பா னுளத்தேர்ந்து செயற்கை முற்ற, வோங்கருமா தவத்தினொடு நாள்கழித்தான் கவுதமனென் றுணர்ந்தா னந்தண், பூங்கமலத் திருக்குமய னகலிகைகைக் கொண்ட வனிற் போயி னானால்.

(இ - ள்.) இங்கே இவ்விந்திரன் இவ்வகைத் துயரத்தோடு அகலிகைபாற் செலுத்திய மனத்தனராதிருந்தான். தேன்மணங்கமழும் தாமரைமலரிலுள்ள பிரமனாகி உலகினைப்படைப்பவன் மனதிற் சிந்தித்துணர்ந்து, செயல்களெல் லாம் முடிவுபெற,உயர்ந்த அரும்பெருந்தவத்தில் பலகாலத்தைக் கௌதமமுனிவர் கழித்தாரென்று தெரிந்து, அழகிய குளிர்ச்சிவாய்ந்த தாமரைமலரி லிருக்கும் பிரமன் அகலிகையைக் கையிற்பற்றிக்கொண்டு அக்கௌதம முனிவராசிரமத்தை யடைந்தனன். எ - ஶ. (௫௧)

சென்றெதிர்ந்த மலரயனுக் கருந்தவத்தோ னெதிரெழுந்து செய் வசெய்து, நின்றெழுந்து மனத்திரைக்கு முவகையனு யளவளாய் நெடுநீர் வைய, மன்றளித்தா யின்றுமுத லுயிரளிப்பாய் நின்பெருமை யளப்ப தாரே, யென்றெடுத்து முகமனுரைத் தெய்தியவா கேட்பமல ரிறைவன் சொல்லும்.

(இ - ள்.) அப்படிப்போய் நேர்நின்ற கமலாசனனுக்கு, அருந்தவமுடைய கௌதமமுனிவர் உடனேயெழுந்து செய்யத்தக்க உபசாரங்களைச்செய்து, மனத்தி லிருந்துண்டாகி அதிகரிக்கின்ற சந்தோஷமுடையவனாய் அளவளாவி, நெடிய கடல்சூழ்ந்த உலகத்தை ஆதிகாலத்திற்படைத்தீர். அன்றுமுதலாக வெல்லாவுயிர் களையும் சிருஷ்டிப்பீர்! தேவரீர் பெருமையை அளவிடுவோர் யாவர்? என்றெடுத்து உபசாரவார்த்தைகளைச்சொல்லி, அங்கடைந்த வகையைவினவ, பிரமன் சொல்லு கின்றான். எ - ஶ. (௫௨)

நீயிழைக்கு மருந்தவத்திற் கியன்றசெய்வா ரிலரென்ன நினைந்து நின்பா, லாயிழையிங் கிவளைநினக் களித்துமெனக் கொணர்ந்தனன்மற் றையவெய்திற், காயெரிமுற் கைபிடித்துப் பன்னியெனக் கோடியென் றான் கமலத் புத்தே, ளேயவனு மாங்கவன்சொற் றுறந்திலனாற் சடில முடி துவக்கி னானால்.

(இ - ள்.) நீசெய்த அரியதவத்திற்கு இயைந்த பலனை யுண்டுசெய்வோரில்லை யென்று கருதி, உன்னிடத்தில் இப்பொழுது அகலிகையாகிய இவ்வாய்ந்த ஆபரணங்களணிந்த பெண்ணை உனக்குக் கொடுப்போமென்று கொண்டுவந்தேன். ஐயனே! எரிகின்ற அக்கினிசாட்சியாக இவள் கையைப்பற்றி மனைவியெனக் கொள்ளக் கடவாயென்று கமலாசனனாகிய பிரமன் கூறினன். புனிதராகிய கௌதமமுனிவரும் அப்பிரமன் சொல்லைக் கடவாராய்த் தமது சடைமுடியை யசைத்தனர். (அங்கீகரித்தரென்றபடி) எ - று. (௫௩)

அன்னவளை யவற்களித்துத் தன்னுலகத் தோதிமத்தோ னடைந்
தா னந்நாட், பின்னவளுங் கவுதமற்குப் பன்னியெனச் சரித்துறவப்
பெரும்பூந் தாருப், பொன்னகரத் திறையவற்குத் துணர்த்தினராங்
கதுவுணர்ந்து பொருமா நின்றான், பன்னுபழ மறைக்கிழவற் குறித்தி
ழியப் பகர்வதெலாம் பகர்ந்தான் மன்னோ.

(இ-ள்.) அவ்வகலிகையைக் கௌதமமுனிவருக்குக் கொடுத்து, அன்னவாகனனாகிய பிரமன் தனது சத்தியலோகத்தை யடைந்தனன். அன்றுமுதலாக அகலிகையும் கௌதமருக்கு மனைவியாகி நடந்துகொள்ள, அந்தப்பெருமைதங்கிய அழகிய கற்பகத்தருவையுடைய பொன்னாட்டு மன்னவனாகிய இந்திரனுக்கு, சிலர் உணர்ந்து தெரிவித்தார்கள். அவன் அதனையறிந்து வருந்திநின்று, துதிக்கின்ற பழமையாகிய வேதங்களைச் சொல்லிய பிரமனைக்குறித்து இழித்துச் சொல்லத்தக்கவற்றையெல்லாம் மிகுதியாகச் சொன்னான். எ - று. (௫௪)

கள்ளவா ணெடுந்தடங்க ணகலிகையைக் குறித்தெழுந்த காம
வெந்தீ, யுள்ளவாய் நின்றழற்ற முன்னையினுங் கொடுந்துயர முழவா
நின்றான், வள்ளைவார் குழைகளப வனமுலைவேட் டெழுந்தனனாய்
வழிக்கொண் டேகிப், புள்ளறு மலர்ப்பொதும்ப ராச்சிரமத் தயற்க
ரந்து புகுந்து நின்றான்.

(இ - ள்.) கள்ளத்தன்மையுடைய வாட்படைபோலும் நீண்டு பரந்தகண்களையுடைய அகலிகையைக் குறித்துத் தோன்றிய கொடிய காமாக்கினியானது, தன் மனத்திலிருந்து சுடுவதால், முன்னைய துயரத்திலுங் கொடிய துயரத்தோடு வருந்தினான். வள்ளைக்கொடிபோலு நீண்டசெவியையும், களபம்பூசிய அழகியமுலையையுமுடைய அகலிகையை விரும்பி வழிகொண்டு புறப்பட்டவனாய்ச்சென்று, பட்சிகள் நீங்காத மலர்ச்சோலைசூழ்ந்த ஆச்சிரமத்திற்கருகே மறைந்து புகுந்திருந்தான்.

தருணமழ கதிரெழுச்சி தருகடிகை சிலகிடப்பத் தணந்து சென்ற,
பெருமுனிவ னிடைநோக்கி யவனுருக்கொண் டடைந்தவள்கைப் பிடி
ப்ப வன்னா, ளொருகியுள நெகிழ்ந்தனளா யிந்திரனென் றுணர்ந்துநல
னுகர்ந்தா ளன்னோன், மருவருமென் சுருளோதி யிவர்தமக்கு விளைவ
தொன்று மதித்தி லாரால்,

(இ - ள்.) இளஞ்சூரிய னெழுதற் சமயத்திற்குச் சிலநாழிகைகளிருக்கையில், ஆசிரமத்தை நீங்கிப் பெருமைதங்கிய கௌதமமுனிவர் சென்ற சமயம்பார்த்து, அம்முனிவன் வடிவேற்றுச்சென்று அவ்வகலிகையின் கரத்தைப்பற்ற, அவள் மனமுருகிக் கரைந்தவளாய் இந்திரனென்று தெரிந்துகொண்டு காமசுகத்தை யநு

பவித்தாள். அவ்விந்திரன், மணம்வீசுகின்ற மெல்லிய சுருண்ட கூந்தலையுடைய அகலிகை ஆகிய இவர்கள் (இருவரும்) தமக்குப்பின்னே சம்பவிப்பதை ஒருசிறிதுங் கருதினாரிலர். எ - று. (௫௬)

முத்தவா ணகைக்கருங்க ணகலிகைவெம் முலைமுகத்து முயங்கிப் போதா, மத்தலையி னருந்தவத்தோன் றருப்பையொடு சமிதைகரத் தடுக்கிப் போந்தா, னித்தலையி னிவரிருவ ரிழைத்தவெலாங் கருத்தி னுணர்ந் தெண்ணு கின்றான். மத்தமதத் தவளநிற வாரணத்தோற் குறித்துமன மாறு கொண்டான்.

(இ - ள்.) முத்துப்போல வெள்ளிய பல்வரிசையையும் கரியவிழியையுமுடைய அகலிகையின் வலிய முலைமுகத்திற்கலந்து திரும்பிவருகின்ற அக்காலத்தில், அருந்தவம் புரிந்த கௌதமமுனிவர் தருப்பையும் சமிதையும் கையிலடுக்கிக் கொண்டு வந்தனர். இப்பொழுது இவர்களிருவரும் செய்தனவற்றையெல்லாம் மனத்தால் ஆலோசித்தறிந்து, மதமயக்கத்தையுடைய வெண்ணிறம் பொருந்திய ஐராவதத்தையுடைய இந்திரனைக் குறித்து மனதிற் பகைமைகொண்டனர். எ - று. (௫௭)

பன்னுமறை யருந்தவத்தோற் குரியதொரு பன்னியெனப் பாராய் காமத், தின்னலுழந் தெமையிகழா வீதுபுரிந் தனையுனக்கு மினிமே லிந்தக், கன்னிகுறி விருப்புறலா லுடம்பனைத்து மக்குறியே காண்ப தாகப், பின்னருண தாண்குறிபோ யலியாகிப் பெரும்பாவம் பிடித்தி யென்றான்.

(இ - ள்.) வேதமோதும் அருந்தவம்புரிந்தவனுக்கு உரித்தாகிய ஒருபத்தினி பாராதவனாய், காமத்துயரெய்தி எம்மையிகழ்ந்து இத்தகைய காரியஞ்செய்தனை. இந்திரா! உனக்கும் இன்னமும் இந்தப்பெண் குறியில் விருப்பமிருத்தலால், உன் உடம்புமுழுவதும் அப்பெண்குறியே காணப்படுவதாக. மேலும் உனக்குரித்தாகிய ஆண்குறி நீங்கி நீ அலியாகிப் பெரும்பாவமெய்தக் கடவாயென்று சபித்தார்.

ஈங்கெனது பன்னிவரம் பழிவரம்பாய் நிற்கவிஃ திழைத்தாய் முந்நீர்த், தேங்குதிரை நெடுநிலத்து மன்பதைக்கு மவ்வரம்பு சிதைவ தாக, வோங்குபெருஞ் செருமுகத்து நிருதர்கரத் தகப்படுதி யொழி யாப்பாவந், தாங்குதியென் றிவையனைத்து மெடுத்துரைத்தா னிருஞ் சினத்திற் றவத்தின் மிக்கோன்.

(இ - ள்.) தேக்கெடுக்கின்ற அலைகள்பொருந்திய கடல்சூழ்ந்த பெரியபூமியில் மாந்தர்களுக்கும் அவ்வரம்பு அழிவதாக. இப்பொழுது என்மனைவியின் கற்புக்குரிய எல்லை, அழிந்ததாக உலகத்தில் நிற்கும்படி இத்தகைய செயலைச்செய்தனை. அதிகரிக்கின்ற பெரிய யுத்தமுகத்தில் நீ அசுரர்கள் கையிலகப்படுக. நீங்காத பாவத்தைத்தாங்குவாயாக வென்று இவற்றையெல்லாம் பெருங்கோபத்தோடு, தவத்தின் மேம்பட்ட கௌதமமுனிவர் எடுத்துக்கூறினர். எ - று. (௫௯)

ஈதொழிய வகலிகையை முகநோக்கி யெம்மையிகழ்ந் தீதுசெய்த, பேதைநீ நெடுநெறியிற் கருங்கல்லாய்க் கிடத்தியிந்தப் பிழைமாச் சாபந், தாதைமொழி தலைக்கொண்டு கானடைந்த தாசரதி கமலச் செய்ய, பாதமலர் சேதுவுறலு முன்னுருக்கொண் டெழுதியெனப் பணித்தா னன்றே.

(இ - ள்.) இதுகிற்க. அகலிகையின் முகத்தைப்பார்த்து, எம்மையவமதித்து இக்கொடுஞ் செயல்புரிந்த அறிவிலியாகிய நீ பெரியவழியிடையிலே கருங்கல்லாய்க் கிடப்பாயாக. நீங்காத இந்தச் சாபமானது, பிதாவாக்கியத்தைச் சிரமேற்றாங்கி (தண்டக) வனத்தையடைந்த [தாசரதி] தசரதன் மகனாகிய ஸ்ரீராமனது தாமரைமலர்போலச் சிவந்த பாதமானது படவும், (நீங்கி) பண்டைய வடிவு கொண்டு பெண்ணாக வெழுந்திருப்பாயென்று கட்டளையிட்டனர். எ - று. (௬௦)

ஆழிமா நிலப்பரப்பி னலங்குறுவெண் குடைநிழற்றி யரசர் போற்றும்
பாழியோங் கிருஞ்சினைய கற்பகநாட் டினும்புகுதப் பாரான் வெள்கி
வாழிநான் முகக்கடவு ணிருமித்த மானதப்பூ வாவி யேகிச்
சூழுமீ ரிதழ்க்கமலத் துட்கரந்து நெடுங்கா லந் தொலையா நின்றான்.

(இ - ள்.) கடல்சூழ்ந்த பெரிய உலகப்பரப்பில், அசைகின்ற வெண்கொற்றக்குடையால் நிழல்செய்து அரசர்கள் துதிக்கின்ற பெருமைதங்கிய உயர்ந்த பெரிய கிளைகளையுடைய தனது கற்பகநாட்டிற்குஞ்செல்லக்கருதாதவனாகி, வெட்கமெய்தி, நான்கு முகங்களையுடைய பிரமதேவன் சிருஷ்டித்த மலர்களையுடைய மானததீர்த்தத்தையடைந்து, குளிர்ந்த இதழ்கள் சூழ்ந்த தாமரைமலரில் ஒளித்துக்கொண்டு வெகுகாலத்தைத் தொலைத்துக்கொண் டிருந்தான். எ - று. (௬௧)

தாயிழந்த குழவியாய்த் தருவிழந்த தொழுதியாய்ச் சபையி னேறி
வாயிழந்த வழக்கினராய் மருவிழந்த மாலிகையாய்ப் பொதுளும்பச்சை
வேயிழந்த நெடுவரையாய் வில்லிழந்த பெருநாணாய் வெறித்து நின்றார்
போயிழந்த வலியினராய்ப் புலனழிந்து நிலைதிரிந்தார் புலவர் யாரும்.

(இ - ள்.) அதனால் தேவர்களெல்லாரும், தாயிழந்த குழந்தைபோலாகியும், மரத்தையிழந்த பறவைத்தொகுதிபோலவும், சபையேறிச்சென்று பேசும்வாயையிழந்த வழக்குடையார் போலவும், வாசனையையிழந்த மலர்மாலைபோலவும், நெருங்கிய பச்சையாகிய மூங்கிலையிழந்த நெடியமலைபோலவும், வில்லைநீங்கிய பெரிய நாண்போலவும், ஆவேசித்து நின்றவர்களாம்ப்போய்ப் போக்கடித்த வலிமையுடையார் போலவுமாகி, அறிவழிந்து தங்கள் நிலைமைதவறினார்கள். எ - று. (௬௨)

கேட்டனகேட் டனவழங்குந் தருவொன்றும் வழங்கிலவாய்க்
கிள்ளை யஞ்சொல், வாட்டடங்க ணரம்பையரும் வனப்பழிந்து வறுமையராய் மம்மர் கூர்ந்தார், வீட்டியவா ளெயிற்றரக்கர் மிக்கெழக்
கண் டவர்க்குடைந்தார் விண்ணோ ரம்பொ, னாட்டரந்தை துடைத்
தொழிப்பா ரில்லாராய் நெடுங்கால நடந்த வன்றே.

(இ - ள்.) கேட்டவற்றைக்கேட்டதுபோலவே கொடுக்குங் கற்பகத்தரு ஒன்றையுங் கொடாததாகியும், கிளிபோலும் அழகிய மதலைச்சொல்லையும் வாள்போலும் பரந்தவிழிகளையுமுடைய அரம்பாஸ்திரீகளும் அழகுகெடவும், தரித்திரர்களாய் மயக்கமிருந்தார்கள். கொல்லுதற்குரிய வாள்போலும் பற்களையுடைய அரக்கர்கள் மிகுதியாக வரக்கண்டு அவர்கட்குப் பயந்தோடினார்கள். தேவர்களுடைய அழகிய பொன்னாட்டிற்குற்ற துன்பத்தைநீக்கி யொழிப்பார் ஒருவரும் இல்லாதவராய் அநேககாலங் கழிந்தன. எ - று. (௬௩)

சுரர்குருவி னடிதொழுது கற்பகநாட் டனைவோருஞ் சொல்லிச் சொல்லிப், பரசுதனு மாங்கவனு மகபதியெங் கெனவோர்ந்து பாரா நின்றான், விரைமுளரி யகத்தொடுங்கி மானதவா வியிலிருந்த மெய்ம்மை கண்டா, னரசிழந்து தனிவருந்து புலவரொடு மாங்கவனுற் றடைந்தா னன்றே.

(இ - ள்.) தேவலோகத்திலுள்ள யாவரும், தேவகுருவாகிய பிரகஸ்பதி முனிவர் பாதங்களை வணங்கி (தங்கள் துயரைச்) சொல்லிச்சொல்லித் துதி செய்யவும், அப்பிரகஸ்பதி பகவானும் இந்திரன் எங்கேயுள்ளானென்று ஞான திருஷ்டியால் தெரிந்து பார்த்து, அவன் மானததீர்த்தத்தில் மண்தங்கிய தாமரை மலரினுள்ளடங்கி யிருந்த உண்மையை யுணர்ந்து, அரசனைக் காணு திழந்தவர்களாய் தனியே வருந்துகின்ற தேவர்களோடும் அவ்விடத்திற்குச் சென்று சேர்ந்தனர். எ - று. (கூச)

எதிரெழுந்த சுரகுருவுக் கெதிரெழுந்தா னிந்திரனு மிமையோர் யாரு, மதிர்குரலிட் டழுதயர்ந்தா ராங்கவனை யந்தணன்கொண் டேகின்று போகி, மதிமவுலி யவற்றொழுவான் காசிகொணர்ந் திருந்தனனம் மகவான் பச்சைப், புதியமர கதக்கொடிக்கோ ரிடங்கொடுத்தான் றனைப்பணிந்து பூசை செய்தான்.

(இ - ள்.) எதிரேவந்த தேவகுருவாகிய பிரகஸ்பதி முனிவருக்கு எதிரே இந்திரனும் எழுந்து வணங்கினான். தேவர்களெல்லாரும் சத்திக்கின்றபெருங் குரலிட்டழுது சோர்ந்தார்கள். அப்பொழுது அவ்விந்திரனைப் பிரகஸ்பதி முனிவர் உடன்கொண்டு சென்று சந்திரசடாதரனாகிய சிவபெருமானை வணங்கும் படி காசிநகரத்திற்குக் கொண்டுபோயிருந்தனன். அப்படிக் கொண்டுபோகப் பட்ட இந்திரன் புதிய பசுநிறந்தங்கிய மரகதக்கொடியாகிய உமாதேவியாருக்கு ஒரு பாகத்தைக் கொடுத்த சிவபெருமானை வணங்கிப் பூசைபுரிந்தனன். எ - று.

எம்பிரா னதுகருதி யெதிரெழுந்து திருவருள்கூர்ந் திரக்கஞ் செய்தான், வம்புலாங் கற்பகத்தார் மகபதிபெண் குறியொழிந்து வடிவ மெல்லா, மும்பரா குலமொழியக் கண்களா யிரம்படைத்தா னிவை யொன்றன்றே, யிம்பர்கேட் டனயாவு மினிதளித்தான் பழியொழிந்தா னிமையோர் வேந்தன்.

(இ - ள்) எமது சிவபெருமான் அதனைத் திருவுளங்கொண்டு எதிரே தோன்றித் திருவருண்மிகுந்து மனமிரங்கினர். வாசனைவீசுங் கற்பகமலர்மாலை யணிந்த இந்திரன் தனக்குள்ள பெண்குறிகளைநீங்கி, தேவர்கள் மனத்துயரமகல அப்படி உடல்முழுவதும் ஆயிரங்கண்களாகப் பெற்றான். இதுமாத்திரமன்று. இவ்வுலகிற் கேட்டவரங்களையெல்லாம் அவனுக்கு இனிதாகக்கொடுத்தருளினர். தேவராசனாகிய இந்திரன் தனக்குற்ற பழியினின்று நீங்கினான். எ - று. (கூரு)

கொற்றவார் குடைநிழற்றி யமரருல கினிதளிக்குங் குலிசவேந்தன், கற்றைவார் சடையானைக் காளத்தி முக்கணனைக் கருதிப் பூசித், தற்றைநா ளவனருள வலாசுரனை யுயிர்செகுத்தா னவனி யோடும், பெற்றவா னவருலகுந் துயரொழித்தான் வலாரியெனும் பெயரும் பெற்றான்.

(இ - ள்.) நெடிய வெண்கொற்றக் குடையால் நிழல்செய்து தேவலோகத்தை இனிதாகக்காக்கும் வச்சிராயுதமேந்திய இந்திரன், தெர்குதியாகிய நீண்டசடையை யுடையவரும் திரிநேத்திரங்களையுடையவருமாகிய சிவபெருமானைத் திருக்காளத்தியில் தியானித்துப் பூசித்து, அப்பொழுது அவ்விறைவன் திருவருள்புரிய வலாசுரனையுயிர்வதைத்து, பூலோகத்திற்கும் தான்பெற்ற தேவலோகத்திற்கும் உண்டாகியதுயரத்தை யொழித்து வலாரியென்னும் பெயரையும் அடைந்தான். எ - று. (௬௭)

செருக்குலிசத் தவனொருத்தன் கறைக்களத்தெம் பெருமானைச் சிந்தித் தோர்நாள்,விருத்தகிரி வழிபட்டான் றுருவாச னடுசினத்தான் விளம்ப வாசத், தருப்பணிலஞ் சுரபிசிந்தா மணிமுதல மறிகடலிற் றழுவிச் சார்ந்த, திருப்பிவறி தொழிந்துபெரு வளநுகர்ந்து தனிச்செங் கோல் செலுத்தி னானால்.

(இ - ள்.) போர்செய்யத்தக்க வச்சிராயுதந் தாங்கிய ஒப்பற்ற இந்திரன் விஷம்பொருந்திய கண்டத்தையுடைய எமது சிவபெருமானைத் தியானித்து ஒரு காலத்தில் விருத்தாசலத்தில் வழிபட்டு, துருவாசமுனிவருடைய கொல்லத்தக்க கோபத்தாற் சபித்தலால் வாசந்தங்கிய கற்பகத்தரு சங்கநிதி காமதேனு சிந்தாமணி முதலிய அலைகள் புரளுகின்ற கடலிற்சேர்ந்தவற்றை, மீண்டும் பெற்றுக்கொண்டு வறுமைதவிர்ந்து பெருவளங்களை நுகர்ந்து, ஒப்பற்றுச் செங்கோல் செலுத்தினன். எ - று. (௬௮)

மகபதியோர் மகவின்றி நெடுங்காலந் துயருழந்து மறுக்கக் கொண்டான், முகையவிழ்கற் பகநிழலி னினிதிருந்து முழுமுதலை முறையிற் பூசித், திகலொழிய வுலகளிக்குஞ் சயந்தனெனு மொருமகவை யினிதி னீன்றான், புகலரிய வாரூரிற் பூசித்தா னினிதுகைக்கும் புயலும் பெற்றான்.

(இ - ள்.) [மகபதி=யாகத்திற்கிறைவன்] இந்திரன் தனக்கொரு புத்திரனில்லாமல் வெகுகாலம் வருந்தித் துயருற்றனன். அரும்புகள் மறுக்கவிழ்ந்த கற்பக விருக்ஷத்தின் நிழலில் இனிதாக வீற்றிருந்து, முழுதற்கடவுளாகிய சிவபெருமானை முறைப்படி யர்ச்சித்து, பகைமைநீங்க உலகத்தைக் காக்கத்தக்க சயந்தனென்னும் ஒப்பற்ற புத்திரனைச் சந்தோஷமாக அடைந்தனன். சொல்லுதற்கரிய சிறப்புடைய திருவாரூரிற் சிவபெருமானைப் பூசித்தனன். இனிதாக ஏறிச்செலுத்தும் மேகவாகனத்தையும் பெற்றனன், எ - று. (௬௯)

அருணகிரிப் பெம்மானை மலரடிபெற் றருச்சித்தா னரும்பு மூரற், பொருகளப வனசமுலைப் புலோமசையைப் பெறப்பெற்றான் குலிசப் புத்தே,ளொருகியசிந் தையனாகி யெம்மானைப் பூசித்ததுரைக்கற் பாற்றோ, பெருநதியின் றுவட்டெடுக்குஞ் சடையோனைப் பூசித்த பிறவுஞ் சொல்வாம்.

(இ - ள்.) அருணகிரியில், எழுந்தருளிய சிவபெருமானுடைய மலர் போன்ற பாதங்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு பூசைசெய்தான். முல்லையரும்பை நிகர்த்த பல்லையும், நெருங்கிய களபமணிந்த தாமரைமொட்டையொத்த தனங்களையுமுடைய புலோமசையை மனைவியாக அடையப்பெற்றான்.

வச்சிராயுதமேந்திய இந்திரன் உருகியமனமுடையவனுகி எமது சிவபெருமா னைப்பூசித்தது சொல்லுந்தரமோ? பெரிய சங்காநதிதங்கிப் பெருகுகின்ற சடை யையுடைய சிவபெருமானைப் பூசித்த பிறவற்றையுஞ் சொல்லுவோம். எ - று.

துருவனெறிக் கதிர்க்கடவுள் பன்னிருவர் மதிக்கடவுட் டொல்லோ
னெல்லில் வருமுடுக்கண் மூவொன்ப னீராறி ராசியெழு கரண மற்
றை, யரிதினமுக்கும் விட்கம்ப முதலான யோகங்க ளன்றி யம்பொற்,
பொருகழற்கா லமரருந் தவமுனிவர் கருடர்கிம் புருடர் நாகர்.

(இ - ள்.) துருவன் வழியில் நடக்கும் துவாதசாதித்தர்கள் - சந்திரதேவ னுகிய பழையோன் - இரவில் உதிக்கின்ற இருபத்தேழு நக்ஷத்திரங்கள் - பன் னிரண்டு இராசிகள் - ஏழுகரணங்கள் - ஏனைய அருஞ்செயல்களைச்செய்யும் விட் கம்பமுதலிய யோகங்கள் - அல்லாமலும், அழகிய பொன்னுற்செய்து ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த காலையுடைய தேவர்களும், தவமுனிவர்களும், கருடர்களும், கிம்புருடர்களும், நாகர்களும். எ - று. (எக)

கந்தருவர் வித்தியா தரரியக்கர் கின்னரர்வெங் கடுங்கட் பேழ்
வாய், வெந்தொழிற்று னவர்நிருபர் மானிடர்மா முகிற்கணங்கள் வெ
ற்பு வாரி, பைந்தருக்கள் பசுப்பறவை கங்கைமுதல் வரநதிகண் மல
ரோன் பாரிற், றந்தசரா சரங்களர னருச்சனையாற் பெற்றதெம்மாற்
சாற்ற லாமே,

(இ - ள்.) கந்தர்வர்களும், வித்தியாதரர்களும், இயக்கர்களும், கின்னரர் களும், வெவ்விய கடுமையான விழியையும், பிளவுபட்ட வாயையும், கொடுந்தொ ழிலையுமுடைய அசுரர்களும், அரசர்களும், மானிடர்களும், சிறந்த மேகக்கூட்டங் களும், மலைகளும், சமுத்திரங்களும், பசுமைதங்கிய விருக்ஷங்களும், பசுபக்ஷி களும், கங்கைமுதலிய சிறந்த நதிகளும், மலர்ப்பீடத்தையுடைய பிரமன் உலகத் திற்படைத்த சராசரங்களும் சிவபெருமான் பூசையாற்பெற்றபேறுகளை எம்மால் எடுத்துச்சொல்லுதல் கூடுமோ? எ - று. (எஉ)

இந்திரன் சிவார்ச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம், உஎ-க்குத் திருவிருத்தம் ௲உகரு.

இருபத்தெட்டாவது

திரிபுரவிசயச் சருக்கம்.

—◇[*]◇—

கலிநிலைத்துறை.

பரவ சத்தரா யீங்கிவர் தனித்தனிப் பயிலா
வரன டித்துணை யருச்சனை புரிந்தன வறைந்தேம்
விரத மாதவத் தலைவிர்காள் வேறுறா திருந்து
வரனை ருச்சனை குழுவொடும் பணிந்தன வசிப்பாம்.

(இ - ள்.) விரதத்தோடு கூடிய பெருந்தவத்தலைவர்களே! இவ்வுலகத்தில் இவர்கள் பரவசமெய்தியவர்களாய்த் தனித்தனி சிவபெருமானுடைய உபயபாதங்களை யர்ச்சனைசெய்த வரலாற்றை இதுகாறுஞ்சொன்னோம். வேறுபடாதிருந்து சிவார்ச்சனையைத் தமது கூட்டத்தோடும் செய்து வணங்கிய சரிதையை இனிச் சொல்லுவோம் என்று (சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச்) சொல்வாராயினர். எ - று. (க)

தாருகாசுர னெனுமொரு தழற்கண்வா ளசுரன்
போருவந்தெழு மைந்தரோர் மூவரைப் புரிந்தான்
பேரு ரைக்குதும் வித்துன்மா லிப்பெரும் பெயரோன்
காரு ளத்தினன் றாருகாக் கன்கம லாக்கன்.

(இ - ள்.) தாருகாசுரனென்னும் பெயருடைய தீக்கண்பொருந்திய வாளேந்திய ஓரசுரன், யுத்தத்திற்குச் சந்தோஷித் தெழுகின்ற ஒப்பற்ற மூன்று புதல்வரைப் பெற்றனன். அவர்கள் பெயரைச் சொல்லுவோம். வித்யுன்மாலியென்னும் பெரும்பெயருடையவனும் வஞ்சகந்தங்கிய மனமுடைய தாருகாக்கனும் கமலாக்கனும். எ - று. (உ)

என்னு மப்பெய ரசுரரோர் மூவரு மெழுந்து
மன்னு பொற்கம லாலயத் தவனடி வணங்கிப்
பன்னு மாதவம் வரன்முறை பயின்றனர் பன்னா
ளன்ன வர்க்குமற் றுச்சிநெக் கருந்தழ லெழுந்த.

(இ - ள்.) என்னும் அப்பெயர்கள் வகித்த சமானமற்ற மூன்று அசுரர்களும் மனந்துணிந்து, பொற்றாமரைக் கோயிலில் வீற்றிருக்கும் பிரமனுடைய பாதங்களைப்பணிந்து, உயர்த்திப் பேசுகின்றபெருந்தவத்தை வெகுகாலம் முறைப்படி செய்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு உச்சியிலிருந்து கனிந்து அரிய தபாக்கினி யெழும்பியது. எ - று. (ங)

எழுந்த மூலவா தாரநின் றெழுப்பிய கொடுந்தீக்
கொழுந்து வையக மனைத்தையும் பொடித்தது குணியாத்
தொழுந்த கைத்திறத் திந்திரன் சுரரொடுங் குழுமி
யெழுந்து நான்மறைக் கிழவனை யடைந்திவை யுரைத்தான்.

(இ - ள்.) எழும்பிய மூலாதாரத்தினின்று கிளப்பிய கொடிய அக்கினிக் கொழுந்தானது உலக முழுவதையும் பொடிபடுத்தியது கருதி, தொழத்தக்க தன்மையையுடைய இந்திரன் ஏனைத்தேவர்களோடுஞ் சேர்ந்து வரிசையாக நான்கு வேதங்கட்குரிய பிரமன்பா லெய்தி இவற்றைச் சொன்னார்கள். எ - று.

தயங்கு வாளெயிற் றடுதிறற் றாருகா சுரனாற்
பயந்த மூவரு கிற்குறித் தருந்தவம் பயில்வா
ருயங்கு மன்னவ ருச்சிபோர்த் தருந்தழ லுருத்துக்
கயங்கொள் வாரிதி யுலகெலா மெரிபடக் கனன்றே.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற வெள்ளிய பல்லையும், கொல்லத்தக்க வல்லபமு முடைய தாருகாசுரனாற் பெறப்பட்ட புதல்வர் மூவரும், உய்மைக்கருதி அருந் தவஞ் செய்வாராய் முயற்சிக்கும் அவர்களுடைய உச்சியைப் பிளந்துகொண் டெழுந்த அரிய அக்கினியானது, ஆழங்கொண்ட சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழு வதும் எரியும்படிகொளுத்தி (வருத்தியது) எ - று. (௫)

ஆருயிர்த்தொகை யாவையு மருந்துய ருழந்த
மேரு மால்வரைப் புறமெலாங் கொழும்புகை மேய்ந்த
வோரி னன்னவர்க் கிரங்கிநீ யுவந்திலை யென்றாற்
சூரு வம்பரு மத்தழ லழிப்பது சரதம்.

(இ - ள்.) அதனால் அரிய உயிர்த்தொகுதிகளெல்லாம் (சகிக்கமுடியாத) அருந்துயரெய்தின. மேருவாகிய பெரியமலையின் புக்கலிலெல்லாம் கொழுவிய புகையானது சஞ்சரித்தது. இதனையுணர்ந்து அவர்கள் தவத்திற்கிரங்கி நீர் கருணைசெய்யாவிட்டால், கற்பகத்தருவின் நிழலில் வசிக்குந் தேவர்களையும் அவ் வக்கினியழிப்பது சத்தியமாகும். எ - று. (௬)

என்றி ரந்தவ னேத்தலு நான்முகத் திறைவ
னன்றெ ழுந்தன னிந்திர னொடுமவ ணடைந்தான்
சென்று மாதவப் பரிசெலா நோக்கினன் றிகைத்தான்
மன்ற லங்கம லாலயத் தவனுள மகிழ்ந்தான்.

(இ - ள்) என்று இந்திரன்கூறி யாசித்துத் துதிக்கவும், நான்குமுகங்களை யுடைய பிரமன், அப்பொழுது இந்திரனோடு புறப்பட்டு அத்தவம்புரியு மிடத்திற் குச்சென்றனன். அப்படிச்சென்று அவர்கள் செய்யும் பெருந்தவத் தன்மைமுழு வதையும் நோக்கித் திகைத்து மணம்வீசும் அழகிய தாமரைமலரிலுள்ள பிரமன் மனமகிழ்ந்தனன். எ - று. (எ)

எதிர நின்றிடு நான்மறைக் கிழவனை யெதிர்ந்து
முதிரு மன்பொடு மாங்கவர் முறைமுறை பணிந்தார்
பொதிர லங்கம லாலயந் துறந்தெமர் பொருட்டா
லதிரு மார்கலி நெடுநிலத் தடைந்தனை யைய.

(இ - ள்.) அவர்கள் மூவரும், பிரத்தியக்ஷமாக நிற்கின்ற நான்குவேதங்களை யுங்கூறிய பிரமதேவனை நோக்கி அதிகரித்த பேரன்போடு முறைமுறையாக வணங்கி, இதழ்கள் பொதிந்த மணமுடைய தாமரைக்கோயிலைத் துறந்து எங்க ளுக்காக, ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில் வந்தனிர், ஐயனே! எ-று.

சான்றெ னப்படுஞ் சராசர மனைத்தையுந் தாயா
யீன்று நின்றனை யெங்களை யன்றிமற் றன்றே
தோன்றி யெம்முடைப் புன்செயல் குறித்தனை தொல்லோ
யென்றெ மக்குள கட்புலத் தெளிதென நின்றாய்.

(இ - ள்.) பழை:டயானவரே! அடியேங்களையே யல்லாமல், சாட்சிபூதமாய் (இயங்கியற்பொருள் நிலையியற் பொருள் ஆகிய) சராசரங்களையும் மாத்துரு ஸ்தானமாய்ச் சிருஷ்டித்து விளங்கினீர். வேறில்லை. எளியேங்களுடைய சிறு செயல்களைக் கருதிப் பிரத்தியக்ஷமாயினீர். எங்கள் கண்ணுக்கு எளிதாக விளங்கும்படி எழுந்தருளினீர். எ - று. (௯)

வேத வேதிய ரியற்றுவர் நின்னுழை விரும்பி
நாத விந்துவு நின்னுழைப் பிறந்தன நம்ப
போதி னன்முகப் புராதன வாகமப் பொருளே
யாதி நாயக நின்னையா ரளவையிட் டுரைப்பார்.

(இ - ள்.) வேதங்களை யுணர்ந்த அந்தணர்களே தேவரீர் பால் விருப்பெய்தித் தவஞ்செய்யவல்லவர். நாதவிந்துக்களும் தேவரீரிடத்திற் சனித்தன. நம்பனே! தாமரைப்பூவில் வசிக்கும் நான்கு முகங்களையுடைய பழமையானவரே, ஆகமங்களாற் றுதிக்கப்படும் பொருளே! ஆதிநாயகரே! தேவரீர்புகழை எவர்தாம் அளவுபடுத்திச் சொல்லவல்லவர்? (ஒருவருமிலர்) எ - று. (௧௦)

எனப்பு கழ்ந்தெடுத் தேத்தின ராங்கவ ரிரந்தா
ரனத்தி னூர்தியான் றிருவுள நெகிழ்ந்தன னாகி
நினைத்த காரிய மேதுகொ னிகழ்த்துதி ரென்றான்
மனத்தி னோர்ந்துரை பரிசெலாம் வரன்முறை வலிப்பார்.

(இ - ள்.) என்று அவர்களெடுத்துப் புகழ்ந்து துதித்து யாசித்தார்கள். அன்னவாகனமுடைய பிரமன் திருவுள்ள முருகியவனாகி நீங்கள் எண்ணிய காரியம் யாது? கூறுங்களென்றான். அதற்கு அவர்கள் தங்கள் மனதிலாலோசித்துச் சொல்லவேண்டியவற்றையெல்லாம் வரன்முறையாகச் சொல்வாராயினர். எ-று.

கறங்கு வார்திரை நெடுநிலப் பரவையுட் கருப்புக்
கிறங்கி யாருயிர் வீழ்ந்துற லெமக்கரி தைய
வரங்கொ ளுயக விறப்புறா வகையெமக் கருளித்
திறங்கொள் யாவையுந் தருதியென் றிசைத்தனர் தீயோர்.

(இ - ள்.) ஒலிக்கின்ற நெடிய அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த பெரிய பூலோகப் பரப்பிலே, கருப்பக்குழியை யெய்தி உலகிற்குவந்து அரிய உயிரிறந்துபடுதல் எங்கட்குச் சகிக்க அரியது. ஐயனே! தருமவடிவங்கொண்ட தலைவரே! மரணமெய்தாத வகையை அடியேங்கட்கு அநுக்கிரகித்து, வலிமைதங்கியவற்றையெல்லாம் தந்தருள்கவென்று அக்கொடியோர் சொன்னார்கள். எ - று. (௧௨)

அனைய வாசகங் கேட்டலு மம்புயத் தவனும்
வினைய மாதவ ருவரை நோக்குபு விரிப்பான்

கனைக ருங்கட னெடுநிலங் காண்பன வெல்லா
நினையு முன்னரி னிறப்பன நிச்சய மஃதால்.

(இ - ள்.) அவர்கள்கூறிய அத்தகையவார்த்தைகளைக் கேட்டவுடனே கமலாதனனாகிய பிரமனும், வினயத்துடன்கூடிய பெருந்தவம்புரிந்த அம்மூவரையும் நோக்கிக்கூறுகின்றான். ஒலிக்கின்ற கரியகடல் சூழ்ந்த நெடியவுலகிற் காணப்படுவன யாவும் எண்ணுதற்கு முன்னரே இறக்குமென்பது நிச்சயம். ஆனபடியால். எ - று. (௧௫)

யானு மிந்திரன் முதலினோர் யாவரு மெனையீன்
றோனு மற்றுள பதவியி னுறைந்துளோ ரெவரும்
வானும் வையமு மேருவு மற்றைய வரையு
மேனை யாவையு மிறப்பது சரதமற் றில்லை.

(இ - ள்.) நானும், இந்திரன்முதலாயினோர் யாவரும், என்னையீன்ற தந்தையாகிய திருமாலும், வேறாகவுள்ள பதவிகளில் வசித்துள்ளவர்கள் யாவரும், தேவலோகமும் பூலோகமும் மேருமலையும் மற்றையமலைகளும், பிறபொருள்கள் எவையும் அழிவது சத்தியமன்றிப் பிறிதில்லை. எ - று. (௧௬)

கால மீறுபட் டிறப்பினும் பிறப்பினுங் கணக்கின்
மூல மாய்முதன் முத்தியாய் முத்தியின் வித்தாய்
ஞால மேமுத லாகிய பூதமாய் நவைதீர்
கோல மீறிலாற் கல்லது கூடுமோ குணிப்பின்,

(இ - ள்.) காலம் முடிவெய்தி யிறந்தாலும் பிறந்தாலும், கணக்கின் மூலமாய் முதன்மையாகிய முத்தியின்பமாய், முத்தியெய்துதற்கு விதையாய், பிருதிவிமுதலாகிய ஐம்பெரும் பூதங்களாய், குற்றமில்லாத தன்மை அழிவில்லாத சிவபெருமானுக்கல்லது ஆலோசிக்குமிடத்தில் பிறர்க்குக் கைகூடுமோ? எ - று. (௧௭)

இறப்பு றாவழி யார்தரற் கியைகுவ ரெண்ணிற்
சிறக்க வேண்டுவ யாவையுந் தருகுதுஞ் செம்பொற்
றுறக்கம் வேண்டினு மீகுதுஞ் சொல்லுதி ரென்றான்
மறக்கண் வஞ்சக ராங்கவ ணினையன வகுப்பார்.

(இ - ள்.) ஆலோசிக்குமிடத்தில், மரணமெய்தாத வகையைக் கொடுப்பதற்கு யாவர் சம்மதிப்பார்கள்? சிறப்பெய்துதற்கு வேண்டுவனவற்றையெல்லாம் கொடுப்போம். செம்பொன்னாலாகிய துறக்கலோகம் வேண்டுமானாலுந்தருவோம் சொல்லுங்களென்றான். கோபக்கண்ணையுடைய வஞ்சகர்கள் அச்சமயத்தில் இவ்வகையாகச் சொல்லுகின்றனர். எ - று. (௧௮)

இரும்பி னாலியைந் தெழுதரு மிஞ்சியொன் றியாரும்
விரும்பு வெள்ளியி னெழுதரு வேலியொன் றன்றி
யரும்ப சும்பொனா லெழுதரு மரணமொன் றவைக்குட்
டிருந்து செல்வமாப் பெரும்பதி யீங்கிவை செப்பின்.

(இ - ள்.) இரும்பினு லமைந்தெழுந்த மதிலொன்று, யாவரும் இச்சிக்கின்ற வெள்ளியாலாகி யெழுந்த மதிலொன்று, இவையல்லாமல், அரிய பசும்பொன்னு லாகியமதிலொன்று, அம்மூம் மதில்களுக்குள்ளே, திருந்திய செல்வத்தையுடைய பெரிய மேன்மைதங்கிய நகரம், இவற்றைச் சொல்லுமிடத்தில். எ - று. (கஎ)

மண்ணிற் றோய்வது முந்திய புரிசைவா னியங்கி
விண்ணிற் றோய்வது வெள்ளியங் கொடிமதி லிறக்க
நண்ணித் தோய்வது பொன்னெயி லிங்கிவை நாடி
யெண்ணிச் சென்றுழி யெம்மொடி மியங்குதல் வேண்டும்.

(இ - ள்.) அவற்றுள், முற்பட்ட இரும்பு மதில் மண்ணுலகிலுள்ளது. கொடிகள் கட்டிய அழகிய வெள்ளிமதில் ஆகாயத்தில் விளங்கி விண்ணிற்படிந் திருப்பது. பொன்மதில் தேவலோகத்திற் பொருந்தி விளங்குவது. இம்மதில் கள், நினைத்துச் செல்லுமிடங்களில் எம்மோடும் நாடிச்சஞ்சரித்தல் வேண்டும்.

நிதிப்பெ ருங்குவை வேண்டுது நெடுமதி லிஞ்சிப்
பதிக்க ணல்வளப் பயன்பட நினைந்தனம் பலரா
லெதிர்ப்பி னஃவ ரிறப்புறக் கருதின மெவையும்
விதித்த நாயக வேண்டிய குறைவற விழைந்தேம்.

(இ - ள்.) பெருஞ்செல்வக்குவியலை விரும்பினோம். நெடிய மதில்கள் சூழ்ந்த நகரத்தின்கண், நல்லவளப்பங்களெல்லாம் கைகூட எண்ணினோம். பலரோடு எதிர்த்தால் அப்படி யெதிர்த்தவர்கள் மரணமடையக் கருதினோம். எல்லாவற் றையும் சிருஷ்டித்த தலைவனே! வேண்டிய பொருள்களைக் குறைவின்றியடைய ஆசையுற்றோம். எ - று. (கசு)

வருட மாயிரங் கழிந்தபின் மணிமதிட் புரிசை
யொருவி யோரிடத் திருப்பன முகூர்த்தமொன் றுவந்தேஞ்
செருவி னெங்களைச் செகுப்பது மொருத்தனோ ரம்பாற்
றருவ ரங்களீ தென்றடி முடிதொடத் தாழ்ந்தார்.

(இ - ள்.) ஆயிரம் வருடங்கள் கழிந்தபிறகு, அழகியமதில்கள் நகரத்தோடு இருக்குமிடநீங்கி ஒருமுகூர்த்தகாலம், விரும்பிய வேற்றிடத்தில் இருப்பன விரும்பினோம். எங்களைப்போரில் ஒருவன் ஓரம்பினாற்கொல்லுதலும் ஆகியவி கொடுக்கவேண்டிய வரங்கள் என்றுகூறி, பிரமன் அடியில் தங்கள் முடிபடி படி பணிந்தார்கள். எ - று. (உ0)

கேட்ட நல்வரம் யாவையுங் கிளைபட வழங்கி
யேட்டி ருங்கம லாலயத் தெப்பிரா னெழுந்து
சூட்ட வோதிம முகைத்தனன் றொல்லுல கடைந்தா
ணேட்டு சிந்தையி னருந்தவ மொழித்தன ருவர்கள்.

(இ - ள்.) அவர்கள் கேட்ட நல்லவரங்களையெல்லாம், இதழ்கள் பொருந் திய பெரிய தாமரைக்கோயிலி லெழுந்தருளிய எமது பிரமதேவன், களிப்பக் கொடுத்தெழுந்து, உச்சிக்கொண்டையையுடைய அன்னவாகனத்தை யாரோகணி த்துப் பழமையாகிய தனது உலகத்தை யடைந்தனன். அம்மூவர் மனதோடு செய்துவந்த அருந்தவங்களை நிறுத்தினார்கள். எ - று. (உக)

இவ்வரி னைழுத்தமா தவங்கொடு பெற்றன யாவுங்
கவர்ப டச்சொலக் கேட்டனர் கற்பக நாட்டோ
ரிவர்கொ டும்படைக் குடைந்துபா தலத்திழிந் திருக்கு
மவர்த டம்புய நிவந்தனர் முறுக்கெயிற் றசுரர்.

(இ - ள்.) இவர்கள்செய்த பெருந்தவத்தாலடைந்த வரங்களையெல்லாம் இரட்டிப்பாகச் சொல்லக்கேட்டு, கற்பக நாட்டினராகிய தேவர்களுடைய செலுத்தத்தக்க கொடிய ஆயுதங்களுக்குத் தோற்றுப்பாதலத்திலே மறைந்துகொண்டிருக்கும் முறுக்கிய பற்களையுடைய அசுரர்கள், பிரகாசிக்கின்ற விசாலமான தோள்கள் பூரித்தார்கள். எ - று. (உ௨)

கோடி வெள்ளமோ ரறுபதி னாயிரங் குணிப்பி
னீடு சேனைய ரெழுந்தனர் மிடைந்தற நெருங்கி
யாடும் வெண்டிரை யகனிலப் பரவையி னடைந்தார்
மாடு சென்றிவர் மூவரைத் தொழுதனர் மகிழ்ந்தார்.

(இ - ள்.) கணக்கிட்டால் கோடியே அறுபதினாயிர வெள்ளமாகிய பெரிய சேனைகள் மிகவும் நெருங்கி, அசைகின்ற வெள்ளிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த விசாலமான பூலோகப் பரப்பிலடைந்தார்கள். இவர்கள் மூவரை அருகேசென்று வணங்கிக்களித்தார்கள். எ - று. (உ௩)

சேனை காவலர் யாவருஞ் சென்றுறத் தழுவி
மோனை கொண்டெழு முகமனின் றுரைத்தனர் முதியோ
ரேனை யோர்க்கய லிருந்தன ரிசைப்பன விசைத்தார்
தானை யீங்கிவை நுமக்குள வெறுழ்வலித் தகைய.

(இ - ள்.) சேனைத்தலைவர்களெல்லாரும் அப்படிச்சென்று அவர்களை உடலோடு பொருந்தத்தழுவிக்கொண்டு, பழமைபாராட்டி உபசாரவார்த்தைகளை நேரே நின்றுசொன்னார்கள். விருத்தர்கள் அவர்களுக்கருகே பொருந்தியிருந்தார்கள். சொல்லத்தக்கவற்றைச் சொன்னார்கள். இங்கேவந்த இச்சேனை உங்கட்குள்ள பெருவலிக்குத் தகுதியுடையன. எ - று. (உ௪)

என்ற ளவளா யிருந்தனர் நட்டன ரிவர்கண்
மன்ற லோதியர் மூவரை வழங்குற மணந்தா
ரன்று வானவ ரமரெடுத் துடற்றுறச் சிதறிச்
சென்ற வாறெலாம் படிப்படி வகுத்தனர் தொகுத்து.

(இ - ள்.) என்று அளவளாவியிருந்து நட்புக்கொண்டார்கள். இவர்கள் மணந்தங்கிய கூந்தலையுடைய மங்கையர் மூவரைக்கொடுப்ப, மூவரும் விவாகஞ்செய்து கொண்டார்கள். ஆதிகாலத்தில் தேவர்கள் பகைமைகொண்டு போர்புரியச் சிதைந்து பாதலத்திற்குத் தாம்போன வரலாறு முழுவதையும் முறைமுறையே சுருக்கிச் சொன்னார்கள். எ - று. (உ௫)

இளத்த வாறெலாங் கேட்டன ரவையுளங் கிடத்தி
வளர்க்க சிந்தையின் மயன்றனை வருகென வந்தான்
விளர்த்த நண்பொடு மாங்கவற் கினியன விளம்பி
யுளத்து வப்பொடு மிருத்தியென் றுரைத்தலு மிருந்தான்.

(இ - ள்.) சொல்லிய அவ்விருத்தாந்த முழுவதையுங் கேட்டுக்கொண்டு, அவற்றை மனத்திலிருத்தி விருத்திபெற்ற மனதில் மயனைவருகவெனச் சிந்தித்த வுடனே அவனும் வந்தான். கள்ளமில்லாத சிநேகத்துடன் அம்மயனுக்கு இனிய வார்த்தைகளைச்சொல்லி, மனக்களிப்போடும் இருக்கவென்று சொல்லவும், மய னிருந்தனன். எ - று. (உசு)

வரவி ளித்தனி ரென்கொலென் றுரைத்தனன் மயனம்
மூர லுடைத்தடம் புயத்தரின் முன்னவன் மொழிவான்
பரவை போத்தெழு தானையும் யாங்களும் பயில்வான்
விரவு மூவர்க்கு முப்புற மியற்றென விளம்பி.

(இ - ள்.) என்னைவரும்படி யழைத்தீர்கள். யாதுகாரணமென்று மயன் கேட்டனன். அந்த வலிமைதங்கிய விசாலமான தோள்களையுடையவர்களில் மூத்தோன் சொல்லுகின்றான். சமுத்திரம்போலத் தோன்றிய சேனையும் நாங்க ளும் வசிக்கும்படி ஆகாயமளாவிய முப்புரங்களை நிருமிப்பாயாகவென்றுகூறி.

ஆரி ரும்பினு லகணிலப் புரிசையு மதன்மேன்
மூரி வானிடை வெள்ளியம் புரிசையு முற்றிப்
பாரி சாதநாட் டம்பொனு லிஞ்சியும் படுத்திச்
சீரி யற்றிநின் றிவற்றுழைத் திருநகர் திருத்தி.

(இ - ள்.) பொருந்திய இரும்பினாலே அகன்றபூமியில் மதிலும், அதற்கு மேலே பழமையாகிய ஆகாயத்தில் அழகியவெள்ளிமதிலும் முடித்து, பாரிசாத த்தையுடைய சுவர்க்கத்தில் அழகிய பொன்னாலாகிய மதிலும் உண்டுசெய்து சிறப்புச்செய்திருந்து இம்மதில்களிடையே சிறந்த நகரத்தைச் சிருஷ்டிசெய்து முடித்து. எ - று. (உஅ)

முற்ற முற்றிய பின்னரிங் வருகென மொழிந்தா
ரிற்ற தோவென மயனதற் கெழுந்தன னியைந்தான்
கற்றை வெண்டுளித் திரைபொரு கருங்கட லிலத்தி
னுற்ற வெள்ளிடை நோக்கினின் றுளர்த்துணர்ந் தனனால்.

(இ - ள்.) முழுவதுஞ்செய்து முடித்தபிறகு இங்கேவருவாயாகவென்று கூறினன். மயனும் இத்தன்மையதோவென்று அதற்கிணங்கி யெழுந்தான், தொகுதியாகிய வெள்ளிய துளிகளா லாக்கப்பட்ட அலைகள் மோதுகின்ற கரியகடல் சூழ்ந்த பூமியில் பொருந்திய வெளியிடத்தைப்பார்த்து அங்கிருந்து மனதிற்கருதினன். எ - று. (உகூ)

அகனி லப்பரப் பளந்தளத் தளவையீட் டனபோன்
றிகலி யொன்றினொன் றெழுந்துறு தோர்நிலைத் தென்னப்
புகலு நாற்றிசை மறைத்தென விருப்பெழும் புரிசை
தகநி னைத்தன னெழுந்தது வானகந் தடவி.

(இ - ள்.) அகன்ற நிலப்பரப்பையளவிட்டு, மனதினால் கணக்கிட்டன போல, பகைமைகொண்டு ஒன்றற்கொன்று அதிகரித்துப் பொருந்தாமல், ஒரே நிலையையுடையதெனச் சொல்லவும், புகழ்ந்துபேசும் நாற்றிக்குகளையும் மறைத் தாற்போலவும், இரும்பா லெழுந்த மதிலானது பொருந்த நினைத்தான். ஆகாய மளாவி யங்ஙனம் உடனே உண்டாயது. எ - று. (௩0)

கொம்மை யாயிர மாயிரங் காவதங் குணித்தான்
வெம்மை நாஞ்சிலிட் டிழைத்தன னெந்திரம் விதித்தான்
பொய்ம்மை கீழ்ப்பட மேற்படு வாயிலும் புனைந்தான்
மைம்மு கிற்படு கோபுர மிடையிடை வகுத்தான்.

(இ - ள்.) ஆயிரக்கணக்கான காததூரம் பெருகச்செய்து, கொம்மையாகிய வலிய மதிலுறுப்புகளைப் பொருந்தச்செய்தான். சூத்திரங்களை நிருமித்தான். பொய்ம்மையானது கீழ்ப்படும்படி மேற்பட்ட வாயில்களையும் உண்டுசெய்தான். கரியமேகங்கள் தவழும்படியான நிலைக்கோபுரங்களை இடையிடையே ஏற்படுத்தினான். எ - று. (௧௧)

இனைய நோக்கியுண் மாநகர் வீதிகண் டெடுத்தா
னனைய வீதியி னவணவண் மாளிகை யமைத்தான்
புனைசெய் பொன்னினு மணியினு மல்லது புனையான்
வினையி னுண்ணிய யாவையுந் திருக்கற விதித்தான்.

(இ - ள்.) இத்தகையனவற்றை மனதிற்கண்டு பெரியநகரத்தின் வீதியைப் படைத்தான். அத்தன்மைத்தான தெருக்களினிடையே அங்கங்கே மாளிகைகளைச் சிருஷ்டித்தான். அலங்கரிக்கின்ற பொன்னாலும் இரத்தினங்களாலுமன்றிப் பிறிதொன்றால் அழகுசெய்யமாட்டான். சிற்பத்தொழிலில் நுட்பமாகிய எல்லாவற்றையும் குற்றமற நிருமித்தான். எ - று. (௧௨)

வச்சி ரக்கொழும் பலகையிட் டிழைத்தன வயங்கும்
பச்சொ ளிப்பெரு மரகதத் தியற்றின பகலோ
னச்சு செம்மணித் தூணக நிறுத்தின நயந்த
விச்சை யாற்புனை மாடமெண் ணிலவென விதித்தான்.

(இ - ள்.) கொழுவிய வைரப்பலகைகள் பதித்திழைத்தனவும், விளங்குகின்ற பசுமைதங்கிய காந்தியோடுகூடிய சிறந்த மரகதரத்தினத்தாற் செய்தனவும், சூரியனும் விரும்பத்தக்க செம்மைதங்கிய மாணிக்கத்தூண்களை உள்ளே நிறுத்தியனவுமாக, இச்சிக்கத்தக்க அறிவோடு அழகமைந்த மாளிகைகள் கணக்கில்லாதனவெனச் சொல்லும்படி சிருட்டித்தான். எ - று. (௧௩)

முத்த மேய்ந்தன முழுநில வெறித்தன வயிரப்
பத்தி வேய்ந்தன பவளவிட் டத்தன பகையா
தத்த லங்கொளி தருவயி டூரியஞ் சார்ந்த
வொத்தெ ழுந்தசெய் குன்றமெண் ணிறந்தன வுவந்தான்.

(இ - ள்.) முத்துக்களால் மூடப்பட்டனவும், பூர்ணிமாசந்திரிகையை வீசுவனவும், வைரவரிசைகள் அமைந்தனவும், பவளத்தினாலாகிய உத்தரமுடையனவும், அசைகின்ற காந்தியை வெளிவிடும் வைடூரியத்தினாலமைந்தவுமாக ஒருசேர விளங்குஞ் செய்குன்றுகள் எண்ணிறந்தனவற்றை விரும்பிச்செய்தான்.

படிக மீர்ந்தெடுத் திடையிடை வேதிகைப் படுத்திக்
கொடுவ டிம்பெலாந் தெளித்தகோ மேதகங் குயிற்றிப்
பொடிவி ளக்கின புட்பரா கக்குவை பொருத்தி
நெடிய மாளிகைச் சாளர வாயிலு நிரைத்தான்.

(இ - ள்.) படிகத்தைப் பிளந்தெடுத்து இடையிடையே திண்ணைகள் அமைத்து, விளிந்த ஓரங்களெல்லாம் தெளிவான கோமேதகங்களிழைத்து திருவிளக்குகளாகப் புட்பராகக்குவியல்களையமைத்து, பெரிய மாளிகைகளின் சாளரவாயில்களையும் வரிசையாயமைத்தான். எ - று. [சாளரம்=சன்னல்.]

வெள்ளி வெண்டகட் டொண்ணிறக் கருமணி வேய்ந்து
தள்ள லங்கொளிச் செம்மணி நாயக மிருத்தி
யுள்ள மைத்திடு மதலைமீப் பொலிந்தன வொருங்கே
யெள்ளி லாடரங் கமைத்தன னளவையெண் ணிறந்த.

(இ - ள்.) வெண்மையாகிய வெள்ளித்தகட்டிலே, ஒளிதங்கிய நிறத்தையுடைய நீலரத்தினங்களிழைத்து, பக்கலிற் பிரகாசிக்கின்ற காந்தியையுடைய சிவந்த மாணிக்கங்களை நடுநாயகமாகவமைத்து, உள்ளேயமைக்கப்பட்ட தூண்களின்மீது ஒருசேர விளங்கியனவாகிய இழிவில்லாத நடனசாலைகள் கணக்கிறந்தனவாக வமைத்தான். எ - று. (௩௬)

நகர நள்ளிடை நாயகக் கோயிலொன் றெழுப்பிப்
புகல ரும்பசும் பொன்னினு மணியினும் புனைந்தான்
பகல வன்கதி ரிருள்படப் பசுங்கதிர் பரப்பி
யகனி லாமணி முற்றமு மாங்கதி னமைத்தான்.

(இ - ள்.) நகரத்தின் நடுமத்தியில் இராசக்கிருகமொன் றுண்டாக்கி, சொல்லுதற்குரிய பசிய பொன்னாலும் இரத்தினங்களாலும் சித்திரித்தான். சூரியகிரணங்களும் இருள்படும்படி பசிய கிரணங்களைப் பரவச்செய்து, அகன்று அழகிய நிலாமுற்றமும் அம்மாளிகையிற் பொருந்த அமைத்தான் எ - று. (௩௭)

எழுது சித்திர முயிர்ப்பெழுந் தியங்குதல் போல
வொழுகு பேரொளி பதைப்புறச் சுவர்த்தலத் துவந்தான்
மெழுகு வெண்டிளிச் சந்திர காந்தத்தின் மேய்ந்து
பழுதின் மந்திர விருக்கையும் பசும்பொனாற் படுத்தான்.

(இ - ள்.) எழுதிய சித்திரப்பதுமையானது சுவாசம் விட்டுச் சஞ்சரிப்பது போல, சொரிகின்ற பேரொளிப் பிழம்பானது ஆங்காங்கு ஜ்வலிக்கும்படி சுவர்த்தலங்களில் அமைத்து, அதில் மெழுகிய வெள்ளிய திவலைகள் சிந்தும் சந்திரகாந்தக் கற்களால் மேலேமேய்ந்து, குற்றமில்லாத ஆலோசனைச்சபையையும் பசும்பொன்னாற் செய்தனன். எ - று. (௩௮)

இலங்கு மாமணி யொன்பதிற் றிருந்திகின் றிமைப்பக்
குலங்கொள் பொற்றசும் பெடுத்தொரு கோமுடி கவிழ்த்தி
வலங்கொள் கொய்யுளை வாளரி யாசனம் படுத்தா
னலங்கு பேரொளித் தனிக்கொலு மண்டப மமைத்தான்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற சிறந்த நவரத்தினங்களால் திருத்தமெய்தி விளங்கும்படி, கூட்டமாகிய பொற்குடங்களைத் தாபித்து ஒரு சிறந்தமுடியை மேலே கவிழ்த்தி, வெற்றிபொருந்திய கத்தரிக்கின்ற புறமயிரையுடைய சிங்காசனமியற்றி, பெருங்காந்தி விளங்கத்தக்க ஒப்பற்ற கொலுமண்டபத்தைப் படைத்தான். எ - று. (௩௯)

நீல மாமணிக் கங்குலோ நிரைதிரை யுததிப்
பால முத்தவெண் ணிலாக்கொலோ பருமணி யிமைப்போ
மேனி வர்க்கெழு வெயிற்கொலோ மிக்கதென் றுரைப்பா
ராலி லைத்துயி லரிக்குமற் றயனுக்கு மரிதால்.

(இ - ள்.) பெரிய நீலரத்தினமோ இருளோ, வரிசையாகிய அலைகளையுடைய கடலிற்றோன்றிய பால்நிறந்தங்கிய முத்தோ, வெள்ளியநிலவோ, பருத்த மாணிக்கத்தின் காந்தியோ, மேலோங்கியெழுந்தவெயலோ, இவற்றிற் சிறந்தது யாதென்று சொல்லுதற்கு வடபத்திரசாயியாகிய திருமாலுக்கும், பிரமனுக்கும் அரிதாம். எ - று. (௪௦)

எறித்த பேரொளி திசைமுழு தெழுதலா லிரவி
வெறித்த செங்கதிர் மழுக்கிநின் றிமைப்பது விண்ணோர்
மறித்து நோக்கினுங் கட்புலன் கதுவுறு மயனுங்
குறிப்பி னந்நகர் நோக்கிநின் றதிசயங் கொண்டான்.

(இ - ள்.) விடுத்தபேரொளியானது எல்லாத்திசைகளிலும் தோன்றுதலால் சூரியன்வீசிய கிரணங்களை மழுங்கச்செய்து விளங்குவது. தேவலோகவாசிகளாகிய வானவர்மீண்டுந் திரும்பிப்பார்த்தாலும் கண்ணுக்கடங்காதது. மயனுங் குறிப்பாக அந்நகரத்தைப்பார்த்து நின்று அதிசயமெய்தினன். எ - று. (௪௧)

பனித்த வார்புனற் படர்சடைப் பண்ணவற் கெனினுங்
கனிக்க ரும்புயல் வண்ண னுக் காயினுங் கமலத்
தனிப்பு ராதனற் காயினு மோர்நகர் சமைப்பி
னினித்தி ருத்துவ தந்நகர் நோக்கியென் றிசைத்தான்.

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய கங்காசலத்தையணிந்த நீண்டுபடர்ந்த சடையையுடைய சிவபெருமானுக்கானாலும், கருநிறமுதிர்ந்த மேகவண்ணனாகிய திருமாலுக்கானாலும், தாமரை மலர்ப்பீடத்தி லெழுந்தருளிய ஒப்பற்றபழையோனாகிய பிரமனுக்கானாலும் ஒருநகரத்தைப் புதிதாகப்படைத்தால், இனி அந்நகரத்தைப்பார்த்தே யமைப்பதாமென்று கூறினன். எ - று. (௪௨)

சோலை யாவையுங் கற்பக மந்நகர் தொகுத்த
சாலை யாவையும் பசும்பொனாச் சாலைதோ றமைத்த
மாலை யாவையு மணவணி மயனுளத் தமைத்த
வேலை யாவையு மார்கொலோ கடைப்பட விரிப்பார்.

(இ - ள்.) அந்நகரத்திற் பொருந்திய சோலைகளெல்லாம் கற்பகவிருக்ஷங்கள். சாலைகள் முழுவதும் பசும்பொன்னா லாக்கப்பட்டன. அச்சாலைகளிலெல்லாம் பொருந்திய மாலைகள் யாவும் மணவலங்காரங்கள். மயனுடைய மனதிலமைத்த தொழின்முறைகளை யெல்லாம் எவர்தாம் முற்றுப்பெற விளக்கிச் சொல்லவல்லவர்? எ - று. (௪௩)

பொன்ன கர்ப்படும் வளத்தொடும் பழகிய புலவோர்க்
கிந்ந கர்ப்படு புதுவள மினிதென லாகி
யன்ன வர்க்கை யரும்பொரு ளாகிய வதனாற்
றென்னி லஞ்சிறப் பெய்திய தந்நகர் தோன்ற.

(இ - ள்,) பொன்னகரத்திலுண்டாகிய வளப்பங்களோடு பழகிய தேவர்களுக்கு, இந்நகரத்திலுண்டாகிய புதியவளப்பங்கள் இனியவென்று சொல்வனவாகி, அத்தேவர்களுக்கு இவை பெறுதற்கரிய பொருள்களாகிய அக்காரணத்தினால், பழமையாகிய நிலவுலகமானது அந்நகரமுண்டானதாற் சிறப்புற்றது. எ-று.

இந்தி ரப்பெரும் பெரியனோ னளகையூ ரிறைவ
னந்த ரத்தினின் றந்நகர் நோக்கின ரயனார்
சிந்த னைக்குமீ தரிதென வயர்ந்தனர் திகைத்தார்
வெந்த சிந்தைய ராயினர் மயனொடும் வெறுத்தார்.

(இ - ள்.) இந்திரனாகிய சிறந்தபெயரையுடையவனும், அளகாபுரிக்குத்தலைவனாகிய குபேரனும் ஆகாயத்திலிருந்து அந்நகரத்தினழகைப்பார்த்து, இதன் அமைதி பிரமதேவன் கருத்திற்கும் அரிதென்று மனஞ்சோர்ந்து திகைத்தார்கள். மனம்வெந்தவர்களாகி (அசுரத்தச்சனாகிய) மயனிடம் வெறுப்புற்றார்கள். எ-று.

சித்தர் கின்னரர் கருடர்கிம் புருடர்கந் தருவர்
வித்தி யாதரர் நாகர்போ கத்தவர் விருப்பான்
மொய்த்து நோக்கினர் கதிரொளிப் படலைமூ டியதான்
மெய்த்த வத்தவர் வேறறக் காண்கிலர் வியந்தார்.

(இ - ள்.) சித்தர்களும் கின்னரர்களும் கருடர்களும் கிம்புருஷர்களும் கந்தர்வர்களும் விச்சாதரர்களும் நாகர்களும் போகபூமியர்களும் (ஏனையோர்களும்) ஆசையோடு நெருங்கிப்பார்த்தார்கள். ஒளிமயமான கிரணப்பரப்பு மூடிக்கொண்டிருத்தலால், உண்மைத்தவமுடையவர்கள் வேறே விளங்கக்காணாதவர்களாய் அதிசயித்தார்கள். எ - று. (சகூ)

இனைய மாபுர விஞ்சியுற் றிங்கிவைக் கென்னப்
புனைய வேண்டுவ யாவையும் பொதுவறப் புனைந்தான்
வினையி னுண்ணிய கிடந்தன புலப்பட விரித்தா
னினைய நீத்தனன் மற்றைய வியற்றவா னிவர்ந்தான்.

(இ - ள்.) இத்தகைய சிறந்த நகரத்தின் மதிலைப்பொருந்தி, இங்கேயிவற்றிற்கென்று அலங்கரிக்கவேண்டுவனவற்றை யெல்லாம் பொதுத்தன்மைநீங்க (சிறப்பாக) அலங்கரித்தான். சிற்பத்தொழிலில் நுட்பமாக உள்ளனவற்றையெல்லாம் வெளிப்படையாக விளக்கினான். மற்றையவற்றையும் படைக்கக்கருதி அங்கிருந்தகன்று ஆகாயத்திற்குயர்ந்தான். எ - று. (சஎ)

இதற்கு மேலென வெள்ளிவெண் ணேங்கெயி லியற்றி
யதற்கு ளிந்நகர்க் கிரட்டிய வணிநக ரமைத்தான்
முதற்செ யந்நகர் தீப்படு மென்பது முடித்தான்
மிதக்கு மப்பெரும் புரிசையி னளவையார் விரிப்பார்.

(இ - ள்.) இதற்குமேலாக வெண்மைதங்கிய வெள்ளியினாலாகிய அசைகின்ற மதிலைப்படைத்து அம்மதிலுள்ளாக, இந்நிலவுலக நகரத்திற்கு இரட்டிப்பாகிய அழகிய நகரத்தைச் சிருஷ்டித்தான். முதலிலேகண்ட அந்நகரமானது அக்கினிவேதை யுறுமென்பதைத் தீர்மானித்தான். மிதக்கின்ற அந்தப்பெரிய மதிலினளவை எவர்தாம் விரித்துக்கூற வல்லவர்? எ - று. (சஅ)

மேலி வர்ந்தெழு வெள்ளிவெண் புரிசைவிட் டெறித்துக்
காலும் வெள்ளொளி வானக முழுவதுங் கலந்த
வாலு மானினம் வளையினு முழையினு மமுதப்
பால்க விழுத்தென முழுமதி நிலவெனப் பாய்ந்த.

(இ - ள்.) மேனோக்கி யெழுந்த வெண்மை தங்கிய வெள்ளி மதிலானது ஒளிவிட்டுப் பிரகாசித்துச் சிந்தும் தாவள்யமான காந்தியானது ஆகாயமுழுவதுங்கலந்து, ஒலிக்கின்ற பசுக்கூட்டங்கள் வளைகளிலேயும் பக்கங்களிலேயும் அமுதமாகிய பாலைச்சொரிந்தாற்போலவும் பூர்ணிமா சந்திரனுடைய நிலவைப்போலவும் பாய்ந்தன. எ - று. (௪௯)

புரைத வப்புரி புரிசையி னிலங்கொளி போந்து
பரவை மாநிலம் பரக்கலாற் பனிப்படர் நிகர்த்த
திரைபொ ருப்பெரும் புறக்கடன் முதலிய தெண்ணீர்
நிரைது ரைப்பெருங் கடலெனக் கிடந்தவந் நிலவால்.

(இ - ள்.) குற்றமொழியச் சிருட்டித்த அவ்வெள்ளிமதிலின் பிரகாசிக்கின்ற காந்தியானது புகுந்து கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகமுழுதும் பரவுதலால், பனிப்படலையை யொத்திருந்தன. அலைகள்மோதுகின்ற பெரும்புறக்கடல் முதலாகிய தெளிந்த சலாசயவரிசைகள் நுரைகளையுடைய பெரியகடல்போல அந்நிலவொளியால் விளங்கின. எ - று. (௫௦)

வாலொ ளிப்படு கொடிமதிட் படுவைவா னண்டப்
பாலி வர்ந்தெழு பித்திகை யளவையிற் பரந்த
தாலு மந்தரத் தியங்கிய முனிவர ரதற்கு
மேலி வர்ந்தெழ லொழிந்திட வடைத்ததுவிண்ணம்.

(இ - ள்.) வெள்ளொளிபொருந்திய துவசங்கள் கட்டிய மதிலாகிய தெப்பமானது, ஆகாயத்திலுயர்ந்தெழுந்த அண்டச்சுவரினளவாகப் பரவியுயர்ந்ததாலும், ஆகாயவீதியிற் சஞ்சரிக்கும் முனிவர்கள் அதற்குமேலே கிளம்பியெழுந்து செல்வதுநீங்க ஆகாயத்தின் வழியையடைத்தது. எ - று. (௫௧)

இந்த மாநக ரியைந்தெழு மிஞ்சிமற் றிதற்குச்
சிந்தை வேண்டுவ யாவையுங் குறைவறத் திருத்தி
முந்தை வானவ ரமருல கிரண்டென முயற்சி
தந்த சிந்தையிற் றமனிய விஞ்சியுஞ் சமைத்தான்.

(இ - ள்.) இந்தச்சிறந்த நகரத்தைச் சேர்ந்தெழுந்த மதிலாகிய இதற்கு எண்ணத் தகுவனவற்றை யெல்லாங் குறைவில்லாமல் திருத்தமாக முடித்து, முற்பட்ட தேவர்கள் பொருந்திய தேவநகரங்களிரண்டென்று சொல்லும்படி முயற்சியோடு கூடியமனதாற் பொன்மதிலையுஞ் சிருஷ்டித்தான். எ - று. ()

இயங்கு மப்புறத் திஞ்சியி னிளவெயி லியங்கித்
தயங்கு கிடப்படு வெள்ளியம் புரிசைமேற் றவழ்ந்த
சயங்க டுத்துரித் துடுத்தவன் கயிலைகற் பகத்தின்
முயங்கு தாதினங் கவிழ்ந்தது நிகர்ப்பன மொழியின்.

(இ - ள்.) சஞ்சரிக்கின்ற அந்தகாரத்தைமதிலின் இளவெயிலனைய காந்தியா னது தவழ்ந்து விளங்குகின்ற கீழேயுள்ள அழகிய வெள்ளிமதிலின்மேற் பதிந்த காட்சியானது, சொல்லுமிடத்தில், கயாசுரனாகிய யானையைக் கோபித்துரித்து ஆடையாகவணிந்த,சிவபெருமானது *கைலாயகிரியைக் கற்பகத்தருவின் மகரந் தத்தொகுதிகள் மூடியதையொத்திருக்கும். எ - று. (௫௧)

பருப்ப தங்களு மாடகப் பொருப்பெனப் பட்ட
வுருக்கு செம்பொனொத் தலங்கின வுருடிரைப் பரவை
திருக்கு மொற்றையந் திகிரியென் றெனவிருள் சிந்துப்
பெருக்கு மிஞ்சியந் தமனியப் பேரொளி பிறந்து.

(இ - ள்.) ஒற்றைச் சக்கரத்தேரையுடைய சூரியனைப்போல இருளையகற்றி ஒளிபெருக்கிய அழகிய பொன்மதிலின் பேரொளியானது பிறந்தமையின், எல்லாமலைகளும் மேருவாகிய பொன்மலையெனச் சொல்லப்பட்டன. உருள் கின்ற அலைகளையுடைய சமுத்திரமானது உருக்கிய செம்பொன்னைப்போன்று விளங்கின. எ - று. (௫௨)

உலகெ லாம்பசும் பொன்னிறத் தும்பரை நிகர்த்த
மலர்த ருந்தரு கற்பக வனமென வாய்ந்த
நிலவு வெண்கதி ரிளங்கதிர்ப் பரிதியை நிகர்த்தா
னலகி லந்தரம் பசும்பொனொத் தலங்கிய தன்றே.

(இ - ள்.) உலகினர் யாவரும் பசிய பொன்னிறம்வாய்ந்த தேவர்களையொத் தார்கள். மலர்களைத் தருகின்ற மரங்களெல்லாம் கற்பகச்சோலையென்று சொல் லப்பொருந்தின. நிலவைவீசுகின்ற வெள்ளிய கிரணங்களையுடைய சந்திரன் இளங்கிரணம்வாய்ந்த சூரியனைப்போலாயினன். குற்றமில்லாத ஆகாயமானது பசும்பொன்னையொத்து விளங்கியது. எ - று. (௫௩)

முன்ன மைத்திடு மாநக ரதனினு முயன்று
பின்ன மைத்திடு நகரணி பெறப்பெரி தமைத்தா
னிந்ந கர்க்கவை யிரண்டுமொப் பெனவெடுத் திசைப்பின்
மின்னி ளங்கதிர்ப் பரிதியை நிகர்க்கும்வெண் மதியே.

(இ - ள்.) முதலிற் சிருஷ்டித்த பெரிய நகரத்தைக்காட்டிலும், பிரயத்த னஞ்செய்துபின்னர்ப்படைத்திட்ட நகரமானது பேரழகு பொருந்தச் சிறப்பாய்ச் சிருஷ்டித்தான். இம்மூன்றாவது நகரத்திற்கு அவ்விருபட்டணங்களும் சமான மென்றெடுத்துச்சொன்னால் மின்னுகின்ற இளங்கிரணங்களையுடைய சூரியனை வெள்ளிய சந்திரன் ஒப்பாவான். எ - று. (௫௪)

கலிவிருத்தம்.

இனைய யாவு மெளிதி னியற்றினு
னினையு நெஞ்சி னெடிதுநெ றிக்கொள்வான்
முனைமு கச்செரு வென்றடு மூவர்பாற்
கனைக ருங்கழற் கம்மிய வானவன்.

(இ - ள்.) சத்திக்கின்ற வலிய வீரகண்டாமணி தரித்த தெய்வத்தன்மையுடைய கம்மியனான மயனென்பவன், இத்தகையினவற்றையெல்லாம் சுலபமாகச் செய்துமுடித்து, பகைமுகமாகிய யுத்தத்தில் சத்துருக்களைவென்று கொல்லத்தக்க மூவர்களிடம்செல்ல, எண்ணுகின்ற மனதைக்காட்டிலும் அதிவேகமாக வழி நடப்பவனாய். எ - று. (௫௭)

சென்றெ திர்ந்திடு கம்மியத் தேவனை
யொன்று சிந்தையி னோடுமு சாவினா
னன்று செய்தன யாவும றைந்தனை
னன்றி தென்று நயந்தனர் மூவரும்.

(இ - ள்.) சென்று சந்தித்த மயனென்னும் அசுரத்தச்சனை, பொருந்திய மனத்தோடு குசலம் வினாவினான். அப்பொழுது தான்படைத்த (மும்மதில் முதலிய) வற்றின் சிறப்பையெல்லாம் மயன் கூறினான். அம்மூவரும் அவன்வார்த்தைகளைக்கேட்டு இது நல்லதென்று சந்தோஷித்தார்கள். எ - று. (௫௮)

தெய்வக் கம்மியன் செய்த திருநக
ரெய்திக் காண்பதற் கெண்ணியெ திர்ந்தனர்
வெய்திற் சென்றனர் மேதினிக் கார்மதி
ளெய்திற் புக்கனர் மாநகர் நோக்கினார்,

(இ - ள்.) தெய்வீகம்பொருந்திய மயனென்னும் கம்மியன் நிர்மித்த சிறந்த நகரத்தையடைந்து பார்ப்பதற்கு விரும்பி விரைவாகவெதிர்ந்து மூவரும்போனார்கள். பூமியிலுள்ள கரிய இரும்புமதிலி லிலேசாக நுழைந்து அந்தப்பெரிய நகரத்தைக்கண்டார்கள். எ - று. (௫௯)

நோக்கு மந்நகர் நோக்கிப் புடைபுடை
போக்கு வீதிகண் டார்வம் பொருந்தினார்
தேக்கு பேருவ கைப்பெருந் திண்கடன்
மீக்கொ ளத்திண் புயத்துணை வீங்கினார்.

(இ - ள்.) காணத்தக்க அந்நகரத்தைக்கண்டு பக்கங்களிற்போக்கிய தெருக்களையும் பார்த்து ஆசைமிகுந்தார்கள். தேக்கெடுக்கின்ற பெரிய சந்தோஷமென்னும் மிகவலிய சமுத்திரமானது பெருக்கெடுக்க, அவர்கள் மூவரும் தங்கடங்கள் வலிய இருதோள்களும் பூரித்தார்கள். எ - று. (௬௦)

மயனை நோக்குவர் மாநகர்ப் பேரொளிப்
பயனை நோக்குவ ரொன்றும் பகர்கிலா
ரயனு மித்தொழி லாற்றல னாமென
வியன கர்த்திற முட்கொடு விம்மினார்.

(இ - ள்.) மயனென்னுங் கம்மியனைப் பார்ப்பார்கள். பெரிய நகரத்தின் பேரொளிப்பயனைப் பார்ப்பார்கள். ஒன்றும் வாய்திறந்து சொல்வார்கள். (சிருஷ்டிகர்த்தாவாகிய) பிரமனும் இவ்வகைத் தொழின்மையைச் செய்ய வல்லவனல்லனாகுமென்று, பெருமைபொருந்திய அந்நகரத்தின்மேம்பாடுகளை மனத்திற்கருதி விம்மிதங்கொண்டார்கள். எ - று. (௬௧)

ஈதி யற்கை யீதுவென வீங்கிதன்
மீதி யற்றிய வெள்ளிப் புரிசையுந்
தீதின் மாநகர்ச் செவ்வியு நோக்குவான்
போது மென்று மயனொடும் போயினார்.

(இ - ள்) இது இயல்பானது எனமயன்கூற. அவர்கள் இதன்மேற்படைக்கப்பட்ட வெள்ளிமதிலையும் குற்றமில்லாத சிறந்த நகரத்தின் அழகையும் பார்க்கும்படி போவோமென்று, அவர்கள்மூவரும் மயனென்பவனொடும் சேர்ந்து சென்றார்கள். எ - று. (௬௨)

வெள்ளி வெண்புரி சைப்படர் வெள்ளொளி
யள்ளி வாரியி றைத்தற் கவிர்தலாற்
றெள்ளு கட்புலஞ் சென்றில சென்னெறி
யுள்ள மோரப் புகுந்தவ ணுற்றனர்.

(இ - ள்.) வெள்ளியாலாகிய வெண்மதிலின் பரவிய தாவள்யமான காந்தியானது, மொண்டெடுத்து இறைக்கும்படி பிரகாசித்தலால், தெளிந்த கட்புலனானது அங்கேசெல்லவில்லை. போகும்வழியை மனதானது உணர அதன்வழியே உட்பிரவேசித்துச் சேர்ந்தார்கள். எ - று. (௬௩)

கண்ட கண்கள் கவின்பெறப் பன்மணி
கொண்ட மாநகர் நோக்கிக் குழைந்தனர்
மண்ட லப்புரம் பின்னிட மாமயன்
றண்ட ருந்திறத் தாற்சமைத் தானரோ.

(இ - ள்.) அதனைப்பார்த்த விழிகள் அழகுறும்படி பலரத்தினங்களிழைக்கப்பெற்ற சிறந்த நகரத்தைப்பார்த்து மனமுருகினார்கள். நிலவுலகத்திலுள்ள நகரம் பிற்படும்படி சிறந்த மயனானவன் அடைதற்கரிய தனது வல்லமையினால் இங்ஙனம் படைத்தனன். எ - று. (௬௪)

எனவு ரைத்தன ரெண்டிசைக் கோபுர
மனவி ழைத்த நுணுக்க மனக்கொளா
வினவி மாமய னைத்தழு விக்கொளாப்
புனைமொ ழித்திறம் பற்பல போக்கினார்.

(இ - ள்.) என்றுசொல்லி, எட்டுத்திசைகளிலு மியற்றிய கோபுரங்களில் மணிகளையிழைத்த நுட்பத்தன்மையை மனத்திற்கொண்டு சிறந்தமயனை வினாவித் தழுவிக்கொண்டு அழகிய உபசாரவார்த்தைகளைப் பலபலவகையாக அவனுக்குச் சொன்னார்கள். எ - று. (௬௫)

பார்த்த நன்னகர்ப் பல்வளம் பார்த்தடி
பேர்த்து வைக்கப் பெறுகிலர் பெய்வளைக்
கார்த்த டங்கட் புலோமசை காந்தனுக்
கோர்த்த பொன்னக ரிந்நக ராக்குமே.

(இ - ள்.) அவர்கள் பார்த்த நல்ல நகரத்தின் பல வளப்பங்களையும்பார்த்து, காலையெடுத்துவைக்கப் பெறாதவர்களாகி, அடுக்கியவளையலையும் கரியவிசாலித்த கண்ணையுமுடைய இந்திராணி கணவனாகிய இந்திரனுக்கு ஆலோசித்தியற்றிய பொன்னகரமே இந்நகரத்திற்குச் சமானமாயிருக்கும். எ - று. (௬௬)

எனவி யந்தன ரின்மொழி கூறினார்
மனனு வந்து மயனைக் கரந்தொடா
வனைய மாநகர் நீத்தகன் றூரரோ
புனைசெய் பொன்மதிட் பொன்னகர்ப் போயினார்.

(இ - ள்.) என்று அதிசயித்தார்கள். இனிய வசனங்களைச் சொன்னார்கள். மனக்களிப்பெய்தி மயனைக்கையிற் பற்றிக்கொண்டு அந்தச் சிறந்த நகரத்தை விட்டு நீங்கினவர்களாகி, அலங்கரிக்கின்ற பொன்மதில்சூழ்ந்த பொன்னகரத்திற்குச் சென்றார்கள். எ - று. (கூஎ)

சாரச் சென்று தமனியப் பொன்மதின்
மேருப் போன்றது கண்டுவி யந்தனர்
பாரக் கோபுர மேற்பதம் பற்றினார்
வேரித் தாமரை விண்ணகந் தொட்டவால்.

(இ - ள்.) சமீபிக்கப்போய், பசும்பொன்னாலாகிய மதில் மேருமலையையொத்திருப்பது பார்த்துக் களிப்புற்றார்கள். பெரியகோபுரத்தின் மேனிலையைப்பற்றிச் சென்றார்கள். அது மணந்தங்கிய பிரமன் வசிக்குந் தாமரையுடைய சத்தியலோகத்தையளாவி யிருந்தது. எ - று. (கூஅ)

புள்புக் காடிய தாரினர் பொன்மதி
லுள்புக் கார்நக ரோங்கொளி மேவலால்
வள்புக் காரெழில் வாளெயிற் றோருருக்
கள்புக் கார்தரு நாட்டரிற் காட்டினார்.

(இ - ள்.) வண்டுகள் புகுந்து குடைகின்ற மாலையணிந்த மூவரும் பொன்மதிலுட் பிரவேசித்தார்கள். நகரத்தின் மிக்கவொளிவீசுதலால் அவைகூரிய அழகுற்ற வாட்படைபோன்ற பற்களையுடைய அவர்கள் வடிவங்களிற் புகுந்து, கற்பகத்தருபொருந்திய நாட்டிலுள்ள தேவர்கள்போலக் காணப்பட்டார்கள். எ - று. (கூகூ)

மணியி ழைத்த மரகத மேய்ந்தன
திணிப சும்பொனிற் செய்தன செஞ்சுடர்
பணிம ணிக்குலங் கொண்டு பயின்றன
வணிகொண் மாடம னைத்தையு நோக்கினார்.

(இ - ள்.) இழைத்த மரகதமணியால் மேய்ந்தனவும், மிகுந்த பசும்பொன்னாற் செய்தனவும், சிவந்த கிரணங்களையுடைய சூரியனும் பின்னிடத்தக்க மாணிக்கங்களாலிழைக்கப்பட்டனவுமாகிய அழகுபொருந்திய மாளிகைகளையெல்லாம் அவர்கள் கண்டார்கள். எ - று. (எ0)

பொன்னிற் செய்த புயலிடைப் போழ்ந்தெழு
மின்னிற் செய்தன தண்படி கத்தொடு
தன்னிற் செய்தன வெண்டர ளத்தொகை
பன்னிச் செய்தன யாவையும் பார்த்தனர்.

(இ - ள்.) பொன்னாற்செய்தனவும், மேகங்களிடையே பிளந்தெழுகின்ற மின்னலாலாக்கியனவும், வெள்ளிய முத்துக்குவியல்களாலா லியற்றப்பட்டன வும், குளிர்ந்தபடிகத்தால் நெருங்கவிழைத்தனவுமாகிய பலவகைத் தொழின்மை யுடையனவற்றை யெல்லாம் பார்த்தார்கள். எ - று. (எக)

இந்து காந்த மெடுத்தெடுத் தேற்றிய
பந்தி யிற்படு பத்திகி வாசமுஞ்
சிந்த ணிச்சுடர்ச் செம்மணிச் சாளர
விந்த மாடமுங் கண்டுவி யந்தனர்.

(இ - ள்.) சந்திரகாந்தக்கற்களை மிகுதியாகவெடுத்து வரிசைப்படப் பதித்த பத்தியாகிய இருக்கைகளையும், ஒப்பற்ற சிவந்த கிரணத்தையுடைய செம்மணி யாகிய மாணிக்கத்தாலிழைத்த சன்னல்கள் பொருந்திய மலைபோன்ற மாளிகை களையும்பார்த்து மகிழ்ந்தார்கள். எ - று. (எஉ)

வீதி நோக்கினர் மெய்த்திரு மாநகர்ச்
சோதி நோக்கினர் பொன்னகர்த் தொன்னிலை
யாதி மாநகர் நோக்கிய யர்த்தன
ரேதி யாகொ லிதற்கென வெண்ணினார்.

(இ - ள்) வீதிகளைப்பார்த்தார்கள். உண்மைச்செல்வமுடைய பெரிய நகரத் தின் காந்தியைப் பார்த்தார்கள். பொன்னகரத்தின் பழமையாகிய நிலைமை முதலானவற்றிற்கச் சிறந்த நகரத்தினைப்பார்த்து இதற்கு ஏதுசமமென்று மயங் கிக் கருதினார்கள். எ - று. (எங)

ஈத டங்குதற் கண்டமி யற்றிய
வாதி நான்முகன் றன்மைய றைதுமோ
பேத பேதம் பிறக்கம யன்புரி
தீதில் செய்கையைச் செப்புது மோவென.

(இ - ள்.) இஃது அடங்கும்படி அண்டத்தைப்படைத்த முதல்வனாகிய நான்கு முகங்களையுடைய பிரமன் செயலைச்சொல்வோமோ? பேதபேதங்க ளுண்டாகும்படி மயன் சிருஷ்டித்த குற்றமில்லாத தொழிலைச்சொல்வோமோ? (இவற்றிற் சிறந்தது எது?) என்று. எ - று. (எச)

பரக்கு மாநகர் பல்வளம் யாவையும்
முரட்ட டம்புய மூவரு நோக்கலும்
வரப்பெ ருந்தவ மாமய னங்கவர்
புரக்கு மந்தப் புரங்கொடு போயினான்.

(இ - ள்.) பரவிய சிறந்த நகரத்தின் பலவளங்களையெல்லாம், வலிமை தங்கிய பரந்த தோளையுடைய மூவரும் பார்க்கவும், சிறந்த பெருந்தவமுடைய மகிமைதங்கிய மயனென்பவன், அவர்கள் காக்கும் அந்தப்புரத்திற்கு அழைத்துக் கொண்டுபோயினான். எ - று. (எரு)

மும்ம யத்து முழுமணி யிஞ்சியுங்
கொம்மை முற்ற மணியிற் குயிற்றின

வம்ம ணிப்பெரு வாயில கன்றுபோய்க்
கைம்ம லர்க்கரந் தாங்கினன் காட்டினான்.

(இ - ள்.) (பொன் வெள்ளியிரும்பென்னும்) மும்மயமாகிய முழுமணிகள் பதித்த மதிலையும், அழகு முதிர்ந்த நவமணிகளால் ஆக்கப்பட்டனவாகிய அந்த அழகிய பெரியவாயிலையுங்கடந்து சென்று, மலர்போன்றதனது கையினால் அவற்றையெல்லாம் மயன் காட்டினான். எ - று. (எசு)

கண்ட காட்சியிற் கண்களி கூர்ந்தனர்
கொண்ட காதல் குழீஇக்கொளப் பன்மணி
மண்ட பத்திகல் வாளரி யேந்திய
வெண்ட ருந்தவி சேறியி ருந்தனர்.

(இ - ள்.) அவர்கள் தாம் கண்டகாட்சியினாலே, கண்களிற் காட்சியின்பம் பெருகினர். உண்டாகிய ஆசைமிகுதலால், பலமணிகள் நிரம்பியமண்டபத்திலே, வலிதங்கிய ஒள்ளிய சிங்கங்கள் சுமந்த எண்ணத்தக்க சிறப்புடைய பீடத்தில் ஏறி வீற்றிருந்தார்கள். எ - று. (எஎ)

வாளெ யிற்று நிருதர் மயன்றம
தேளெ னத்தம கிட்ட விருத்தினார்
மூளு மன்பி னுவகை மொழிந்தனர்
தோளி ணைக்கிணை யாத்துணைக் கொண்டனர்.

(இ - ள்.) வாட்படைபோன்ற பற்களையுடைய அசுரர்கள் மயனைத் தம்முடைய உறவினனென்று தமக்கருகேயிருக்கச்செய்தார்கள். அதிகரித்தெழுகின்ற அன்பினாலே ஆசையாகிய வார்த்தைகளைச்சொன்னார்கள். தமது தோள்வலிக்குச் சமானனாகத் தமது துணைவனாகக் கொண்டார்கள். எ - று. (எஅ)

இருக்கை மும்மய விஞ்சியின் யாமுடைக்
கருத்தி னொப்பக் களினளித் தீர்தனை
திருத்து செல்வஞ் சிதைந்தழி யாவகை
சுருக்கில் கேள்வியோய் சொல்லுதி யாலென்றார்.

(இ - ள்.) மூவகைமதிலினுள் இருத்தற்குரிய நகரமுதலியவற்றை எங்கட்குரிய எண்ணத்திற்கேற்ப அழகுபெறப்படைத்தளித்தனை. திருத்தமாகிய எங்கள் ஐசுவரியம் அழிந்துபடாதவிதமாக, சுருக்கமில்லாத மிக்கநூற்கேள்வியையுடைய மயனே! ஒருபாயஞ் சொல்வாயாகவென்றார்கள். எ - று. (எகூ)

அன்ன வாசகங் கேட்டு மாங்கவர்க்
கின்ன றீதின் மயனென் றியம்புவான்
முன்னர் நீவிரி யற்றுமு மூத்தவந்
தொன்னி லத்தெவர் செய்துதொ லைப்பரோ.

(இ - ள்.) அவர்கள் கூறிய அத்தகைய வார்த்தையைக் கேட்டவுடனே, அவர்கட்கு விடையாக, துன்பமாகிய தீமையில்லாத மயனென்பவன் ஒருவாறு சொல்வானாயினான். நீங்கள் பூர்வத்திற் செய்த பெருந்தவத்தை எவர்தாம் இப்பழைய பூமியிற்செய்து உங்கள் பதவியை நீக்கவல்லவர்கள்? எ - று. (அ0)

அத்த வத்தழி யாவரம் பெற்றனி
ரெத்தி றத்துநு மக்கிக லில்லையாற்
சித்தி ரச்சிலை கொண்டொரு வன்றெற
வொத்த தோர்குறை யுண்டுமக் கென்றனன்.

(இ - ள்.) அவ்வகைத் தவச்செயலால் அழியாத வரத்தைப்பெற்றீர்கள். எவ்விதத்திலாயினும் உங்களுக்குப்பகை ஒரொருவருமிலர். ஆனல், அழகிய வில்லினைக்கொண்டு ஒருவனழிக்கத்தக்க ஒருகுறைதான் உங்களுக்குள்ளதென்று மயன்கூறினன். எ - று. (அக)

ஆதொ ழித்தும தாருயிர் வாழ்வதற்
கோத வேண்டுவ துண்டது ணர்த்துகேன்
மாதோர் பாகன் மலரடி சென்னியெப்
போது மேந்தியோர் போதுபு ரிதிரால்.

(இ - ள்.) நீங்கள் அதனையகற்றி உங்கள் அரிய உயிரானது வாழ்வதற்காகச் சொல்லவேண்டுவ தொன்றுண்டு. அதனைச்சொல்லுகின்றேன். உமாதேவியை ஒருபாகத்திலுடைய சிவபெருமான் தாமரைமலர்போன்ற பாதங்களையெக்காலத்திலும் ஒப்பற்ற பூஜாநுஷ்டானஞ் செய்வீராக. எ - று. (அஉ)

என்று ரைத்தன கேட்டினி தாடகக்
குன்ற வில்லி யருச்சனை கோட்டுறு
நன்றி முற்றுந விற்றுதி யென்றனர்
மன்ற லந்தார் மயனுரைப் பானரோ.

(இ - ள்.) என்று மயன் கூறிய வார்த்தைகளைக்கேட்டு, அவர்கள் பொன்மலையை வில்லாகவுடைய சிவபெருமானை இனிதாக அர்ச்சனை புரியும் நற்செயல் முழுவதையுஞ் சொல்வாயாக வென்றனர். மணந்தங்கிய அழகிய மலர்மாலையணிந்த மயன்சொல்வானாயினன். எ - று. (அங)

ஆதி யாயவுருத்திர வக்கமும்
பூதி யும்பொறுத் தாரணம் போற்றிய
நீதி லாகம முற்றுந் தெளிந்துளத்
தோது மஞ்செழுத் துச்சரித் தோதுவீர்.

(இ - ள்.) முதன்மையாகிய உருத்திராக்ஷமும் திருவெண்ணீறும் அணிந்து, வேதமும் துதிசெய்யத்தக்க குற்றமில்லாத சிவாகமங்களும் முழுதுந் தெளிந்து, மனதில் தியானித்தற்குரிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு ஜபஞ்செய்வீர்களாக. எ - று. (அச)

விரித்த சைவபு ராணம் விளங்குறத்
தரித்த சிந்தைய ராகித் தயங்கொளிப்
புரித்த வார்சடைப் புங்கவற் போற்றிநீர்
சரித்தல் வேண்டு நுமக்கிவை தக்கவால்.

(இ - ள்) சைவபுராணங்கள் விளக்கமாகச் சொல்லியவற்றை மனத்திற்கொண்டவர்களாகி, பிரகாசிக்கின்ற ஒளியையுடைய பிரிவுபட்ட நீண்ட சடை

பொருந்திய சிவபெருமானை நீங்கள் துதிசெய்து ஒழுகவேண்டும், உங்கட்கு இவையே தக்கனவாம். எ - று. (அஹ)

முக்க ணனடிப் பூசை முயன்றுசெய்
தொக்க நோக்கு முனிவர ரோதிமத்
திக்கு நோக்கு முகத்தினன் செங்கண்மான்
மிக்க பெற்றனர் யாவர் விளம்புவார்.

(இ - ள்.) திரிநேத்திர தாரியாகிய சிவபெருமானுடைய பூசையை முயற்சியோடு செய்து சமான திருஷ்டி வாய்ந்த முனிவர்கள், அன்னவாகனத்தை யுடைய திசைமுகனாகிய பிரமனுக்கும், சிவந்த தாமரைக்கண்ணையுடைய திருமாலுக்கும் மேம்பட்ட வரங்களைப் பெற்றார்கள். (சிவபூசைச்சிறப்பு) எவர் சொல்வார்கள்?

இந்தி ராதிய ரெண்டிசைக் காவலர்
சந்திர சூரியர் தாரணி மானிடர்
தந்தி ரத்தொழிற் கின்னரர் தானவர்
வெந்த ழற்கணி ராக்கதர் விஞ்சையர்.

(இ - ள்.) இந்திரன் முதலானோராகிய அஷ்டதிக்குப் பாலர்களும், சந்திர சூரியர்களும், பூலோகத்திலுள்ள மனிதர்களும், தந்திரத்தொழிலையுடைய கின்னரர்களும் அசுரர்களும் வெவ்விய தீப்போலும் விழியையுடைய இராக்கதர்களும் வித்தியாதரரும். எ - று. தந்திரம்-நரம்புக்கருவி, வீணைமுதலியன. (அஎ)

ஏனை யோரு மிலங்கிழை பாகனைத்
தேனை வாமலர்ச் சேவடி பூசியா
ஞான ரூபத்த ராய்நெடு நாள்கழித்
தூன மற்ற பதவிபெற் றுய்ந்தனர்.

(இ - ள்.) பிறரும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களை யணிந்த உமாதேவியாரைப் பாகமாகவுடைய சிவபெருமானை, வண்டுகள் விரும்பும் மலர்களாற் சிவந்த திருவடிகளிற் பூசித்து, ஞான சொரூபிகளாய்ப் பலகாலங் கழித்து, கெடுதலற்ற பதவியை யடைந்து உச்சீவித்தார்கள். எ - று. (அஅ)

இன்ன மன்ன வரப்பதத் தெய்தினு
ரன்ன மென்னடை பாகனை ருச்சனை
மன்னு நூலின் வரன்முறை போற்றினு
ரின்ன லற்றினி தூழியி ருப்பரால்.

(இ - ள்.) இது காறும் அத்தகையினர் அந்தப் பதவிகளிற் பொருந்தினுர்கள். அன்னம்போலும் மெல்லிய நடையையுடைய உமாதேவிபாகராகிய சிவபெருமானையர்ச்சனைசெய்து நிலைபெற்ற நூல்களுட் கூறிய முறைப்படி துதிசெய்தவர்கள் துன்பமற்று இனிதாக ஊழிவரையிலிருப்பார்கள். எ - று. (அகூ)

மாணி திக்குவை மாண்புடை மாதரார்
காண ருந்திறற் காதலர் கற்பகச்
சேணி வர்ந்தெழு தேவரும் வேண்டுறப்
பேணு செல்வப் பெருக்குப் பெறுவரால்.

(இ - ள்.) மாட்சியுற்ற செல்வக் குவியலும், கற்பின் சிறப்புவாய்ந்த மாதர்களும், காணுதற்கரிய வல்லபமுடைய குமாரர்களும், கற்பக நிழலிலுள்ள ஆகாயவாசிகளாகிய தேவரும் விரும்பும்படி அபேக்ஷிக்கும் பெருஞ்செல்வப் பெருக்கையும் அடைவார்கள். எ - று. (கூ0)

ஆத லானுமை யாளனற் பூசனை
பாது காப்பது பற்றுவி டாதிது
போதி னன்னவன் சேவடி போற்றுமென்
ரோதி னானவை யுட்கொளன் மேயினார்.

(இ - ள்.) ஆனபடியால், உமாநாயகனாகிய சிவபெருமானது நல்ல பூசை பாதுகாக்கத்தக்கது. இதன்பால் சிறிதும் பற்றுவிடாதவர்களாய் மலர்களால் அவ்விறைவனது சிவந்ததிருவடிகளையர்ச்சித்துத் துதிப்பீர்களென்று மயன்கூறினன். அம்மூவரும் அவ்வார்த்தைகளை மனதிற் கொள்வாரானார்கள். எ - று. (கூக)

மைத ருங்களத் தோனை மனக்கொடு
செய்த வர்க்கன் றருச்சனைத் தேவனாய்
வெய்த ளித்தனன் வேத மரபினாற்
பொய்யில் கேள்வியர் பெற்றனர் போற்றினார்.

(இ - ள்.) கருமை பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானை மனதிற்கொண்டு சிவலிங்கமியற்றி, அவர்களுக்கு அப்பொழுது அர்ச்சனைக்குரிய மூர்த்தியாக வேதமுறைப்படி விரைவிற் கொடுத்தனன். உண்மையாகிய நூற்கேள்வியையுடைய அம்மூவரும் பெற்றுக்கொண்டு துதித்தார்கள். எ - று. (கூஉ)

ஏறு யர்த்தவ னுயலி லிங்கத்தின்
பேறு மற்றையர் யாவரும் பெற்றன
ரூறு மஞ்செழுத் துச்சரித் தெந்தைவெண்
ணீறு போற்றி வணங்கினர் நித்தலும்.

(இ - ள்.) இடபக்கொடியையுடைய சிவ சொரூபமாகிய சிவலிங்கார்ச்சனையின் பேற்றினை இன்னும் உள்ளோரெல்லாரும் அடைந்தனர். ஊறுகின்ற ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்து எமது தந்தையாகிய சிவபெருமானுடைய திருவெண்ணீறணிந்து தினந்தோறும் துதிசெய்து பணிந்தார்கள். எ - று. (கூங)

கால மூன்றுமருச்சனை கைவிடார்
பாலொ ளித்திரு நீறு படாதிரா
ராலு ருத்திர வக்கம ணிந்தனர்
நீல கண்டனை யன்றி நினைந்துமுரார்.

(இ - ள். (காலையுச்சி மாலையென்னும்) முக்காலங்களிலும் சிவார்ச்சனையைக் கைவிடார்கள், பால்போலும் வெண்ணிறம் வாய்ந்த திருநீற்றைத் திருமேனியில் அணியாதிரார்கள். சேர்ந்த உருத்திராக்க மணியை யணிவார்கள். நீலகண்டமுடைய சிவபெருமானையல்லாமல் பிறிதொரு தேவரைக் கருதார்கள். எ - று.

அண்டர் நாயகற் காட்படு மத்திருத்
தொண்டு பாடித் தொழுதுயர் கையினார்

தண்ட மிழ்ச்சிவ காதைச் சரிதையுட்
கொண்டு நாத்தடு மாறிக் குழறுவார்.

(இ - ள்.) தேவநாயகராகிய சிவபெருமானுக்கு அடிமைப்படும் அத்திருத்தொண்டினைப்பாடி வணங்கி யுயர்த்திய கையையுடையவர்களாய், குளிர்ச்சி வாய்ந்த தமிழ் மொழியிலுள்ள சிவபுராண சரிதைகளை மனதிற்கொண்டு (ஆநந்த மேலீட்டினால்) சொற்கள் தடுமாறிக் குழறுவார்கள். எ - று. (கூரு)

என்பெ ருக்கணி யெந்தைபி ரானிடத்
தன்பி னோடு மழுதிழி கண்ணினர்
முன்கு லத்தொழின் முற்றும யர்த்தனர்
நன்கு லச்சிவ தன்மந டத்துவார்.

(இ - ள்.) என்புகளையும் எருக்கமலரையு மணிந்த எமது தந்தையாகிய சிவபெருமானிடத்திற் கொண்ட பேரன்போடும் அழுதுசொரிகின்ற ஆநந்தக்கண்ணீருடையவர்கள், தமது பழய குலத்தொழில் முழுவதையும் மறந்தார்கள். நல்ல சிரேஷ்டமாகிய சிவதர்மங்களை நடத்துவாரானார்கள். எ - று. (கூசு)

போது போக்குவ தெந்தைபி ரான்புகழ்க்
காதை கேட்டுங் கடிகமழ் நாண்மலர்க்
கோதை சூற்றியுந் தொண்டர்கு ழாத்தொடு
மாதி யஞ்செழுத் தோதிய நிந்துமே.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமானுடைய கீர்த்தி தங்கிய சரிதங்களைச் சிரவணஞ்செய்தும், மணஞ்சொரியும் அன்றலர்ந்த மலர்களை மாலையாகத் தொடுத்தும், அடியவர் திருக்கூட்டத்துடன் பரமேசுவரனாகிய ஆதிதேவனது திருவைஞ்செழுத்தைச் சபித்து ஆராய்ச்சி செய்தும் அவர்கள் காலத்தைக்கழிப்பது. எ - று. (கூஎ)

அணிவ தென்று முருத்திர வக்கமே
பணிவ தீசன் கமலப தங்களே
தணிவ தன்னோன் றருமப் பொருளினே
துணிவ தெந்தைபி ரான்றிருத் தொண்டினே.

(இ - ள்.) அவர்கள் எக்காலமும் தரிப்பது உருத்திராக்கமே. வணங்குவது சிவபெருமானது தாமரை மலர்போன்ற திருவடிகளே. பிரிவது அவ்விறைவனது தருமப்பொருள்களே, துணிந்துசெய்வது எமது தந்தையாகிய சிவபெருமான் திருத்தொண்டுகளையே. எ - று. (கூஅ)

திருந்தி நோற்ப சிவவிர தங்களே
பொருந்தச் சொல்வதப் புண்ணிய ஞமமே
யருந்து கின்றதத் தொண்டரோ டாடியே
வருந்திச் செய்வதவ் வானவன் பூசையே.

(இ - ள்.) அவர்கள் சிவவிரதங்களையே ஒழுங்காக நோற்பார்கள். அப்புண்ணிய சொரூபியாகிய சிவபெருமான் திருநாமங்களையே பொருந்தச் சொல்வார்கள். அச்சிவனடியார்களுடன் கூடியாடிப் புசிப்பார்கள். அவ்விறைவன் பூசையையே வருந்தியுஞ் செய்வார்கள். எ - று. (கூகூ)

மேற்படி வேறு.

அம்மாநக ரெழுமாமர மைந்தாருவை யொத்த
செம்மாமணிப் பால்யாவையுஞ் சிந்தாமணி நிகர்த்த
மெய்ம்மாணகர்ச் சுரபித்திரண் முதுதேனுவைப் போல்வ
தெம்மானிணை யடிப்பூசனை யெளிதோவரி தம்மா.

(இ - ள்.) அச்சிறந்த நகரத்திலெழுந்த பெரிய மரங்கள் பஞ்சதருக்களைப் போன்றிருந்தன. பெரிய மாணிக்கங்களின் குணமெல்லாஞ் சிந்தாமணியை யொத்திருந்தன. நெருங்கிய மாட்சியுடைய அந்நகரத்திலுள்ள பசுக்கூட்டங்கள் பழமையாகிய காமதேனுவை யொத்திருந்தன. எமது சிவபெருமானுடைய உபய பாதங்களின் அர்ச்சனை இலேசானதோ? சொல்லுதற்கும் அரிது! ஆ ஆ! எ-று.

செந்தாமரை முழுதுந்தரு செந்தாமரை யொத்த
நந்தானவை முழுதுந்தரு நந்தானதை யொத்த
கந்தார்கருங் குழலாரருந் ததியொத்தனர் கற்பின்
கொந்தார்சடை யவன்பூசனை யெளிதன்றது குணிப்பின்.

(இ - ள்.) (அந்நகரிலுள்ள) செம்பதும மலர்கள்யாவும், கற்பகத்தருவின் நிழலிலுள்ள செவ்விய பதுமநிதியை யொத்திருந்தன. சங்குகளெல்லாம் கற்பக நிழலிலுள்ள சங்கநிதியைப் போன்றிருந்தன. கழுத்தடியிற் பொருந்திய கரிய கூந்தலையுடைய மாதர்கள் கற்பினால் அருந்ததிக்குச் சமானமாயிருந்தார்கள். ஆலோசிக்குமிடத்தில் மலர்க்கொத்துப்பொருந்திய சடையையுடைய சிவபெருமான் பூசையெளிதானதன்று. (பெரும்பலனை யளிக்கவல்லது.) எ - று. (௯0௪)

வேண்டப்படு வளமென்பன வினிவேண்டுவ விலவாற்
காண்டற்கரு நலத்தார்சிவ கதியொப்பதந் நகர
மீண்டப்படு சிவகாதையி னெழுபேரொலி யெங்கு
நீண்டப்பணி சடையானரு ணிலைமைக்கள வின்றே.

(இ - ள்.) விரும்பத்தக்க வளப்பங்களென்று சொல்வனவற்றில், இனி அடையவேண்டுவன வில்லையாதலாலும், காணுதற்கரிய சகல நன்மைகளாலும், அந்நகரமானது சிவபதவியை யொத்திருக்கும் நெருக்கப்பட்ட சிவசரிதைகளா லுண்டாகிய பேரொலியானது எல்லாவிடங்களிலும் பெருகி, கங்கையை யணிந்த சடையையுடைய சிவபெருமான் திருவருளின் நிலைமைக்கு அளவின்றிவிளங்கும்.

தேவத்துரு வாமங்கையர் தேவேந்திரன் முதலோ
ரேவற்பணி தலைக்கொண்டன ரிடைவிட்டில ரிவரைப்
பாவப்புலன் முதலாயின பகைவென்றனர் பகரின்
மூவர்க்குமி வர்க்கொத்தமு தன்மைத்திற னிலவால்.

(இ - ள்.) தெய்வவுருவாகிய மங்கையர்களும் தேவேந்திரன் முதலானவர் களும் கட்டளையிட்ட பணிவிடை சிரமிசைத்தாங்கி யியற்றுவாராயினர். இவர் களை யிடையேவிட்டுப் பிரியார்கள். ஐம்புலன் முதலாகிய பாவஞ்செய்யுத்தக்க பகைகளை வென்றார்கள். சொல்லுமிடத்தில் திரிமூர்த்திகளுக்கும் இவர்களுக் குச்சமானமான தலைமைத்தன்மை வாய்ந்ததில்லை. எ - று. (௯0௬)

இத்தன்மைய ரெனினுங்குல முதற்றொன்மையை யிகவார்
சங்கம்புனை கரத்தோனகர் முதலாயின நகரம்
பொத்துந்திரி புரத்தோடு மெழுகின்றனர் போவா
ரத்தொன்னகர் முழுதுங்கெட வழிபட்டபின் னெழுவார்.

(இ - ள்.) அவர்கள் இத்தகைச் சிறப்புற்றவர்களென்றாலும், தங்கள் குடிப் பிறப்பின் அநாதியாகிய பழய வழக்கத்தைவிடாதவர்களாய், சங்கத்தைத்தாங்கிய கையையுடைய திருமாலின் நகரமாகிய வைகுண்டமுதலிய நகரங்களை, மூடுகின்ற முப்புரங்களோடுகூடிச் செல்கின்றவர்களாய்ச் செல்வார்கள். அப்பண்டைய நகரம்முற்றிலும் கெடும்படி அழிபட்ட பிறகு திரும்புவார்கள். எ - று. (௧௦௪)

இவரிப்புர முடனெங்கணு மெழுகின்றன ரெறிநீ
ருவரிப்புவி யழிபட்டன விண்ணாடுமு லைந்த
கவர்கற்பக மகவானொடு கடவுட்டொகை முற்று
மவலப்படு மிடரானொடு வடவெற்பைய டைந்தார்.

(இ - ள்.) இவர்கள் இவ்வகையாக இம்முப்புரங்களோடு செல்கின்றார்கள். (ஆதலால்) அலைகள் மோதுகின்ற உவர்நீர்க்கடல் சூழ்ந்த பூலோகம் அழிபட்டது. தேவலோகமும் அழிந்தது. கிளைகளையுடைய கற்பக நீழலிலுள்ள இந்திரனொடு தேவர் கூட்டமுழுவதும் வருத்தமாகிய இடர்ப்பாட்டினால் நெடிய வட வெற்பாகிய மேருமலையை யணுகினார்கள். எ - று. (௧௦௫)

சங்காழிக ரித்தோனடி தணிநெஞ்சொடு பணியா
வெங்கேயெம புகலென்றன ரினியென்றது வெண்ணாக்
கொங்காடுசு ரும்பாடிய குல்லைத்தொடை மருமன்
பங்கேருக மடமாதுயிர்க் கொழுநன்சில பகரும்.

(இ - ள்.) சங்குசக்கரங்களைத் தரித்த திருமாலின் திருவடிகளைத் தணிந்த மனத்துடன் வணங்கி, இனி அடியேங்கட்குப் புகலிடம் யாதென்று வினவினர். வண்டுகள் பாடிய மகரந்தத்தையுடைய துளசிமாலை யணிந்த திருமார்புடையவரும், செந்தாமரைமலரில் வீற்றிருக்கும் இளமைதங்கிய திருமகளுடைய பிராணநாயகருமாகிய திருமால் சிலவார்த்தைகள் சொல்லுகின்றார். எ - று. (௧௦௬)

வாசத்தொடை யிதழிச்சடை மழுவேறுடை யோனைப்
பூசித்தன ரவர்மங்கையர் பொலிகற்பினு யர்ந்தார்
நீசத்தொழில் சிலவிட்டனர் நிருதத்தொழி லினையா
ராசைப்படு சிவபூசைய யர்த்தார்களு மன்றே.

(இ - ள்.) மணந்தங்கிய கொன்றைமாலை யணிந்த சடையையும் இளமை தங்கிய இடபவாகனத்தையுமுடைய சிவபெருமானைப் பூசைபுரிந்தவர்கள், அவர் மனைவியர் அழகிய கற்பு நிலையில் மேம்பட்டவர்கள். நீசத்தொழில்களைச் செல்ல விடுத்தார்கள். அசுரகுலத்தொழிலைக் கருதார்கள். விரும்பத்தக்க சிவபூசையைப் பராமரிக்கைசெய்தவர்களுமல்லர். எ - று. (௧௦௭)

வல்லொத்தெழு முலையைப்புடை வைத்தோனவ னாலும்
வெல்லப்படு திறத்தாரல ரினியெங்ஙனம் வெல்வோம்

புல்லிட்டருச் சனையாவர்பு ரிந்தாலுமன் னவர்பால்
வில்லச்சடை முடியாங்கவ னருளோடும் வியப்பான்.

(இ - ள்.) [வல்] சூதாடுகருவி போன்றுயர்ந்த தனங்களையுடைய உமாதேவியை யொருபக்கலில் வைத்த சிவபெருமானும் வெல்லத்தக்கதிறத்தினரல்லராகலின் இனி அவர்களை நாம் எவ்வகையால் வெல்லவல்லோம்? எவராயினும் புல்லைக்கொண்டு பூசைசெய்தாலும் வில்வத்தை யணிந்த சடையையுடைய சிவபெருமான் அப்பொழுதே அவர்களிடத்திற் கருணையோடு களிப்படைவார்.

ஆறுத்திரி புரத்தோர்திற னழியுந்திற னன்றே
மேறுட்டவ நிலைகண்டிலி ரெனமாயன் விளம்பக்
காறுட்பனி முகைமாலிகைக் கண்ணாயிரப் பெருமான்
றுறுச்சில வுணர்ந்தானது தருமாறெதிர் புகல்வான்.

(இ - ள்.) திரிபுரவாசிகளின் நீங்காத வல்லபமானது அழிபடும் வல்லபமன்று. அவர்கள் பூர்வத்திற் செய்த தவநிலைமையைக் கண்டீரல்லீர் என்று திருமால் கூற, மணந்தங்கிய குளிர்ந்த கற்பக வரும்பின்மாலையணிந்த ஆயிரங்கண்களையுடைய தேவேந்திரன் தானுகவே சிறிதுயோசித்துத் தக்கப்படியே அதனை நேரே சொல்லுகின்றான். எ - று. (௧0௯)

செயலொத்தெழு மயனீற்பெறு சிவலிங்கம டைந்தா
ரியலொத்தெழு சிவதேசிக ரெவரீந்தன ரிவர்பான்
மயலுற்றிடு மனத்தாரிவர் வழிபட்டதி லென்னும்
புயலுற்றெழு மின்னொத்தன விவர்புன்றலை நிலையே.

(இ - ள்.) ஒத்தெழுந்த செயலையுடைய மயனாற்கொடுக்கப்பெற்ற சிவலிங்கத்தையடைந்தார்களன்றி, நற்குணங்கள் பொருந்தியுயர்ந்த சிவாசாரியர்களில் யாவர் இவர்களிடத்திற் கொடுத்தார்கள். மயக்கங்கொண்ட மனமுடைய இவர்கள் வழிபாடு புரிவதில் யாதுபயனுண்டாம்? இவர்களுடைய இழிவாகிய தலைமை நிலையானது மேகத்திலுண்டாகும் மின்னலைப்போல உடனேயழியததக்கது.

ஓமத்தழ லவியிட்டதி லுயர்பூதக ணத்தால்
யாமப்புரம் வெல்லத்தகு மெனவெண்ணியி சைத்தான்
றுமத்துள வணியுங்கர சங்காழிவ ரித்தோ
னேமக்கிரி மிசையன்னது செய்வானுள மிசைத்தான்.

(இ - ள்.) ஓமாக்கினியில் அவியைப் பெய்து அவ்வோமகுண்டத்திலிருந்து புறப்படும் பூதகணத்தால் யாம் அத்திரிபுரங்களை வெல்லக்கூடுமென்று ஆலோசித்துச்சொன்னான். துளசிமாலையையும் கையிற் சங்குசக்கரங்களையுந் தரித்த திருமால், பொன்மலையாகிய இம்மேருவிலேயே அதனைச்செய்ய மனமொத்தனர். எ - று. (௧௧௧)

விண்ணாட்டருங் கமலாசன மேலோதிமந் தவனுங்
கண்ணாயிரத் தவனும்பெருந் திசைக்காவலர் யாரு
மெண்ணுமுழு மறைநான்கொடு மிருந்தாரவை புரிந்தா
ரண்ணார்புர மவியக்கன லவிநல்கின ரன்றே.

(இ-ள்.) விண்ணுலகில் வசிக்கும் தேவர்களும், தாமரைமலர்ப்பீடத்திலுள்ள அன்னவாகனனாகிய பிரமனும், ஆயிரங்கண்களையுடைய இந்திரனும், பெரிய அஷ்டதிக்குப் பாலகரும், ஏனையோரும் சுருதி நான்குவேதங்களோடும் அங்கு இருந்தார்கள். அவ்வக்கினிகாரியங்களைச் செய்தார்கள். சத்துருக்களுடைய முப்புரம் அழியும்படி யாகாக்கினியில் அவி சொரிந்தார்கள். எ - று. (கக௨)

வேதத்தொனி முழுமந்திர விதியானவி நல்கக்
காதுற்றக ணப்பூதர்க ணக்கில்லரெ ழுந்தார்
கேதப்படு புரமூவெயில் கனலக்கனல் கின்று
ரோதப்படு சிவபூசையி னுரிமைத்திற னுணரார்.

(இ - ள்.) துன்பஞ்செய்யும் மும்மதில் சூழ்ந்த புரமானது கனலும்படி கோபிக்கின்ற தேவர்கள், சொல்லப்பட்ட அவர்களுடைய சிவபூசையின் உரிமைத் தன்மையை யுணராதவராகி வேதமுழக்குடன் விதிப்படி மந்திரபூர்வமாக அவியைக்கொடுக்க, கோபம்பொருந்திய கூட்டமாகிய பூதர்கள் கணக்கில்லாதவர்கள் தோன்றினார்கள். எ - று. (ககந)

வைவாளெயிற் றனசெங்கைம ழுக்கொண்டன வொளிரும்
கைவாளின நெடுந்தண்டின கனற்கண்ணின களபங்
கொய்வாளரி வதனத்தன புலிவெங்கொடு முகத்த
மைவான்மழை முகிலொத்தன மலையேந்திய கரத்த.

(இ - ள்.) அப்பூதங்கள் கூர்மைதங்கிய வாள்போலும் பற்களுடையன. செவ்விய கைகளில் மழுப்படைதாங்கியன. பிரகாசிக்குங் கைவாள்களையுடையன நெடிய தண்டாயுதங்களை யேந்தியன. எரிகின்ற அக்கினிவிழிகள் பொருந்தியன. [களபம்] யானையைக்கொல்லும் ஒளிதங்கிய [அரி] சிங்கமுகங்கள் வாய்ந்தன. புலிபோலும் வெவ்விய கொடியமுகமுடையன. ஆகாயத்திலுள்ள கரிய கார்கால மேகம்பொன்றன. மலைகள்தாங்கிய கைகளையுடையனவாயிருந்தன. எ - று.

கடலொத்தன சிலவூழியிற் கனலொத்தன சிலமா
மிடலொத்தன சிலதென்புல வெங்காலரை யொத்த
படலப்படு முகிலொத்தல றுருமொத்தன பழியா
வடலொத்தக ணப்பூதம ளப்பறறவ நீகம்.

(இ - ள்.) அழியாத சமபலம் வாய்ந்த கூட்டமாகிய பூதங்களின் கணக்கற்ற சேனையானது, சமுத்திரத்தையொத்தன. சில ஊழிக்காலத்துதிக்கும் பிரளய காலாக்கினிபோன்றன. சிலசிங்கத்தின்வலியை நிகர்த்தன. சிலதென்றிசையிலுள்ள கொடிய காலபடரையொத்தன. சில வரிசையாகிய மேகத்தோடு பொருந்தி ஒலிக்கின்ற இடிபோன்றன. எ - று. (ககரு)

எதிருற்றக ணப்பூதரை யிவரேயினி புரமூன்
றதிரப்பொரு தசுரக்குல மறமுட்டுதி ரென்ன
முதிரப்படு சினவெய்மைய மும்மைப்புர முற்றார்
சதிரப்படு மெயில்கண்டுத டுத்தூடும டுத்தார்.

(இ - ள்.) எதிரே தோன்றிவந்த கூட்டமாகிய பூதர்களை யாகஞ்செய்த இத்தேவர்கள்நோக்கி, இனி நீங்கள் முப்புரத்துடன் அதிரும்படி போர்செய்து அசு

ரக்குலத்தையழியும்படி கொல்வீர்களாகவெனேக் கட்டளையிட, அப்பூதர்கள் அதி கரித்த கொடுமைதங்கிய கோபத்தோடு முப்புரத்தையடுத்தார்கள். சமர்த்துந் தங்கிய மதில்கண்டு தடுத்தும் நடுவேசென்றார்கள். எ - று. (கக௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நோக்கு நோக்கு நிருதரெலா நுணங்கு தவளத் திருநீறு
மாக்கி யணிந்த வுருத்திரமா மணியு மன்றிப் பிறகாணார்
தேக்கு விருப்பி னொடுமுறைப்பச் சிவநா மங்க ளலகேளார்
மூக்கி னுயிர்ப்பி னுயிர்ப்பதனாற் சிவனே யன்றிப் பிறமோவார்.

(இ - ள்.) கண்ணாற்காணும் அசுரர்கள் யாவரும் தாவள்யம் பொருந்திய அணிந்ததிருநீற்றையும் சிறந்த உருத்திராக்ஷவணியையுமேயல்லாமல் பிறிதொன் றனையுங் காண்கிலார். தேக்கெடுக்கின்ற ஆசையோடு சொல்லச் சிவநாமங்களை யற்றி மற்றொன்றனையுங் கேட்கிலர். மூக்கின் சுவாசத்தால் சுவாசிப்பதில் சிவ பெருமானையேயன்றி வேறொன்றையும் மோவார்கள். எ - று. (ககஉ)

எழுந்து நடந்த கணப்பூதர்க் கெதிர்ந்த வெகுளிக் கொடுவடவை
பொழிந்த கருணைச் சிவநேசப் புனலா லவியப் பொதுநின்றார்
வழிந்து மிகுந்த பேரன்பி னரனை முறையே வழிபட்டார்
கொழுந்து நிவந்த சினத்திவரைக் கோறற் கெளிதோ குணித்தென்னா.

(இ - ள்.) ஓங்கியடைந்த கூட்டமாகிய பூதர்களுக்கு உண்டாகிய கோபமா கிய கொடிய வடவானலமானது, சொரிந்த கிருபையாகிய சிவநேசப் புனலினால் அவிய, (பூதர் தமக்குற்ற கோபந்தணிந்து) பொதுத்தன்மை யெய்தினராய், இத் திரிபுரர் அதிகரித்த பேரன்போடு சிவபெருமானை முறைப்படி யர்ச்சித்தவர்கள். கொழுந்து விட்டோங்கிய கோபத்தினாலே இவரைக் கொல்லுதற்கெளிதோ வென்றாலோசித்து. எ - று. (ககங)

சென்று புரத்தி னயல்கிடந்த செழுங்கா வனத்துச் செறிந்தீண்டி
மன்றற் கொழுந்தீங் கனிபறித்து மாந்தி யழித்த வழிநோக்கா
வன்று காவி னிடைகாப்போர் புரம்போந் தவர்க்கு மறிவித்தார்
கன்று சினத்தி னுடனெழுந்து நடந்த தசுரர் கடற்றானை.

(இ - ள்) அங்குநின்றும் புறஞ்சென்று, திரிபுரத்தினருகே விளங்கிய செழியவனத்தில் நெருங்கிச்சேர்ந்து, மணந்தங்கிய மதுரமாகிய பழங்களை யறுத் துப்புசித்து அதனையழித்த வகையைக்கண்டு, அப்பொழுது அச்சோலையைக் காத்துள்ளவர்கள் முப்புரமெய்தி (நிகழ்ந்தவற்றை) உணர்த்தினார்கள். உடனே அசுரச்சேனையாகிய சமுத்திரமானது அதிகரித்தகோபத்தோடு புறப்பட்டு நடக் கின்றது. எ - று. (ககச)

எண்ணற் கரிய பெருஞ்சேனை யெதிர நோக்கி யெறுழ்வலித்தோ
ளண்ணற் கணத்தோர் தருப்பிடுங்கி யலைப்ப விருபா லமருடன்ற[ரைக்
விண்ணங் குலுங்க விருநிலத்தோர் வெருக்கொண் டொளிப்ப மேருவ
கண்ணின் மிழிந்த வரிமுதலோர் துணுக்க மெய்திக் கரந்தனரால்.

(இ - ள்.) கணக்கிடற்கியலாத பெருஞ்சேனையானது போர்செய்ய வருத லைக்கண்டு, மிக்கவலிமைதங்கிய தோள்களையுடைய பெருமைபொருந்திய பூதகணா

த்தவர்கள் மரங்களைப் பிடுங்கி அசுரர்களை மோதியடித்து, இருபகுப்பினருக்கும் போர் நிகழ்ந்தது. தேவலோகங் குலுங்கவும் பெரிய நிலவுலகத்தினர் அச்சமெய்தி மறையவும், மேருமலையினின்றும் இறங்கிப்போந்த திருமால் முதலாயினோர் அச்சமெய்தி யொளித்தார்கள். எ - று. (௧௨௦)

புரத்தி னிருதர் தனிக்கயிலைப் பெருமான் றிருத்தாள் பூசித்த
வரத்தி னோமத் தழலெழுந்த பூத ரனைத்து மடிந்தற்று
ருரத்தி னவரி லொருவரெனு மொழிந்தா ரல்ல ருடன்பட்டார்
முரட்டு நெடுந்தோ ளசுரவெள்ளந் திரும்பி நடந்த முப்புரத்தும்.

(இ - ள்.) திரிபுரத்திலிருந்த அசுரர்கள் ஒப்பற்ற திருக்கைலாயகிரியிலெழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளை யர்ச்சித்த வரமகிமையினால், ஓமாக்கினியினின்றுதித்த பூதர்கள் யாவரும் இறந்துபட்டார்கள். வல்லமையுடைய அவர்களில் ஒருவராயினும் தப்பினாரிலர். யாவருமிறந்தார்கள், வலிதங்கிய நெடிய புயங்களையுடைய அசுரச்சேனைவெள்ளம் திரும்பி முப்புரத்திற்சேர்ந்தது.

ஈது விளைத்த தெவரென்று மூவ ரொருங்கே யிருந்தோர்ந்து
தாது முகிழ்த்த கற்பகப்பூந் தருநாட் டவரென் றுணர்ந்தபின்னர்ப்
போதல் புரிந்து பொன்னாடு புகுந்து மற்றைப் புலவோர்க்குச்
சாதல் புரிந்தார் பொன்னுலகந் தகரத் தகர்த்தார் சலங்கொண்டார்.

(இ - ள்.) (பூதங்களைப்படைத் தனுப்பிய) இதனைச்செய்தோர் யாவரென்று மூவரும் ஒன்றாகவிருந்து யோசித்து, மகரந்தத்தோடலர்ந்த அழகிய கற்பகத் தருவையுடைய நாட்டினராகிய தேவர்களென் றறிந்து கொண்டபிறகு, அப்பொன்னாட்டிற்குப் போய்ச்சேர்ந்து மற்றைத் தேவர்களுக்கும் இறத்தற்கமைந்த துயர்செய்தார்கள். பொன்னுலகமானது இடியும்படி இடித்தார்கள். கோபங் கொண்டார்கள். எ - று. (௧௨௨)

ஒழிந்த புலவர் வடவைசலத் தோடி யோடி நாக்குழறி
மொழிந்த மொழியா ரரிமுதலோர்த் தொழுதா ரீது மொழிகின்றார்
பொழிந்த வடவை விழியினவாய் நிருத வெள்ளம் புடைபரந்து
கழிந்த சினத்தி னமருலகு முடிய முடித்துக் கன்றுகின்றார்.

(இ - ள்.) தப்பியொழிந்த அமரர்கள், மகமேருவுக்கு விரைந்தோடி நாக்குழறிப்பேசுஞ் சொற்களையுடையராய், திருமால் முதலானோரை வணங்கி இதனைச் சொல்லுகின்றார்கள். வடவாமுகாக்கினியைச் சிந்திய கண்களையுடையனவாய் அசுரர்கணக்கற்றவர்கள் பக்கங்களிலெல்லாம் நிரம்பி, மிக்ககோபத்தோடு தேவலோகத்தை யழியும்படி யழித்துக் கோபித்துச்சென்றார்கள். எ - று. (௧௨௩)

என்னு மளவி லரிபிரம ரமரர் யாரு மேக்குற்றுக்
கன்னல் விலவி யுடலெரித்த கண்ணோ னன்றிக் கடவாதாற்
பின்னன் மவுலி யருகணைந்து புரத்தா ரிழைக்கும் பிழையுரைப்பே
மன்ன துணர்ந்தன் னவன்பணித்த பணியி னிற்பே மெனவடைந்தார்.

(இ - ள்.) என்று கூறிய மாத்திரமே திருமால் பிரமன் முதலிய தேவர்களெல்லாரும் ஏக்கமெய்தி, கருப்புவில்லைத் தாங்கிய மன்மதனுடலைத்தகித்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானுக்கன்றி ஏனையோருக்கு முடியாதாகையால், பின்

ணிய சடையையுடைய அச்சிவபெருமானுக் கருகேசென்று முப்புரத்தவர்செய்யுங் குற்றங்களைச் சொல்வோம். அதவிறைவன் அதனையுணர்ந்து நமக்குக் கொடுத்த கட்டளைவழியில் நிற்போமென்று அங்கெய்தினார்கள். (கஉ௪)

வளரு மதிய முழுத்நிலாச் சூழ்இக்கொண் டன்ன மணிக்கயிலைக்
கிளைகொண் மணிவா யிலின்மருங்கு சென்றார் நின்றார் கிளிமழலைப்
புளக முலைக்கோ ரிடங்கொடுத்த புனிதற் போற்றப் பொழுதின்றி
யளவி யளக்குங் கருத்தினரா யிருந்தா ரயர்ந்தார் நெடுங்காலம்.

(இ - ள்.) வளர்கின்ற சந்திரனுடைய முழுநிலவும் கூடிக்கொண்டிருந்தாற்போன்ற அழகிய கைலாயகிரியின் ஒளிபொருந்திய மணிகளிழைத்த திருவாயிலினருகேசென்று நின்றார்கள். கிளிபோலும் மழலைச்சொல்லையும் புளகித்ததனத்தையுமுடைய உமாதேவிக்கு ஒருபாகத்தைக்கொடுத்த பரிசுத்தராகிய சிவபெருமானைத் துதிக்கச் சமயமில்லாமல் நெடுங்காலம் வருந்திய மனத்தினராய் வாடியிருந்தார்கள். எ - று. (கஉ௫)

இருந்து நெடுநாள் கழிந்தபின்ன ரிமையா முக்கட் பெருமானைப்
பொருந்தி மொழிந்தா ரலர்கணத்தோ ரதனாற் புலவோ ரனைவோரும்
வருந்தி வருந்தி யரகரவென் றெடுத்து விளித்தார் வடசைலப்
பெருந்திண் கிரியும் பொதிரெறிந்த ததிர்ந்த தண்டப் பெருங்கூடம்.

(இ - ள்.) அப்படிக் காத்திருந்து நெடுங்காலங் கழித்தபின்னர், இமைகொட்டாத திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானை யெய்தி, அங்குள்ள கணத்தவர்கள் சொன்னாரிலர். அதுகாரணத்தால், தேவர்களெல்லாரும் மிகவும் வருத்தமெய்தி ஹரஹரவென்றரத்திக் கூப்பிட்டார்கள். அதனால் வடமலையாகிய மேருவென்னும் பெரிய வலியமலையும் பிளவுபட்டது. பெரிய அண்டகூடமும் அதிர்ந்தது. எ - று. (கஉ௬)

முகுந்தன் முதலோ ரரகரவென் றெடுத்த குரலின் முறையீடு
திகந்த மளவுஞ் சென்றளப்பக் கயிலைக் கணத்தோர் சினந்திருகிப்
புகுந்து தடங்கைப் பிரம்பெடுத்துப் புடைப்ப மகுடப் புனைமணிவிட்
டுகுந்து தெறிப்ப வாற்றலராய் நெடுஞ்சே ணகற்றி யோட்டெடுத்தார்.

(இ - ள்.) திருமால் முதலானோர் ஹரஹரவென் றெடுத்துச் சொல்லிய முறையீடானது, அஷ்டதிசைகளிலுஞ் சென்று அளவுபடுத்த, கைலாயகிரியிலுள்ள சிவகணங்கள் கோபமதிகரித்து, தமது பரந்தகைகளிற் பிரம்பைத்தாங்கிச்சென்று புடைத்தமையின், கிரீடத்தின் அலங்கரிக்கின்ற மணிகள் சிதறித்தெளிக்கும்படி சகிக்காதவர்களாய் நெடுந்தூரத்தே பிரிந்து ஓட்டமெடுத்தார்கள்.

சென்ற சென்ற திசைதோறுஞ் சிதறிச் சிதறித் தனிப்பட்டார்
மன்றன் மலரோ னிருமித்த மலர்ப்பூந் தடத்தின் மருங்கடைய
வொன்றி யூறி யனைவரும் வந்தொருங்கு புகுந்தா ருடனிருந்தார்
நின்று மலரோ னுலகளந்த நெடுமாற் கிமையோர் நிகழ்த்துவார்.

(இ - ள்.) அவரவர்கள் விரைந்துசென்ற திசைகளிலெல்லாம் மிகவுஞ் சிதறித் தனிதனியானார்கள். மணங்கமழுந் தாமரை மலர்ப்பீடத்திலுள்ள பிரமன் படைத்த மலர்களையுடைய அழகிய மானததீர்த்தத்தினருகுசெய்த யாவரும் ஒன்று

சேர்ந்துகூடி யிருந்தனர். அப்படியிருந்து பிரமனுக்கும் உலகத்தைத் திரிவிக்கிரமாவதாரங்கொண்ட திருமாலுக்கும் தேவர்கள் சொல்கின்றார்கள். எ - று. ()

புரத்தி னிருத ரடுதொழிலாற் பொன்னு டடைத லெமக்கரிது
சிரத்து நிலவு முடித்தபிரான் கயிலைத் திருவா யிலிற்சென்று
லுரப்பு கணத்தர் பிரம்படிபட் டுலைந்தே மினியொன் றுவதில்லை
முரட்டு முரனைச் செருத்தடர்த்த முதலவா மொழிதி புகலென்றார்.

(இ - ள்.) திரிபுரத்திலுள்ள அசுரர்களது கொலைத்தொழிலால் பொன்னாட்டிற் கேகுதல் அரிது. சந்திரனைச் சிரசிலணிந்த சிவபெருமான் திருக்கைலாயகிரியின் திருவாயிலிற்போனால், அதட்டுகின்ற சிவகணங்கள் பிரம்பாலடித்த அடியைத்தாங்கி வருந்தினோம். இனியாவத்தக்கது ஒன்றுமில்லோம். வலிதங்கிய முரனென்னும் அசுரனை யெதிர்த்துக்கொன்ற முதல்வராகிய திருமாலே! எங்களுக்குப் புகலிடத்தைச் சொல்லுகவென்றார்கள். எ - று. (கஉகூ)

தறுகட் பகுவாய்த் தாருகன்று னளித்த புதல்வர் தவமிழைத்துப்
பெறுமப் பேற்றி னுமையிடத்தெம் பெருமா னிருதா ளருச்சித்து
மறுவற் றடைந்தார் பெருவானும் வலியுந் திறனு மதுயாட்டா
திறுதற் கியைந்த புன்றொழிலா லெடுத்த னமக்கிங் கென்னுமே.

(இ - ள்.) அஞ்சாமையையும் பெரியவாயையுமுடைய தாருகாசுரன்பெற்ற புதல்வர் மூவரும் தவஞ்செய்து பெற்ற பதவியால் உமாதேவியை யிடப்பாகத்திலுடைய சிவபெருமான் உபயபாதங்களை யர்ச்சனைபுரிந்து பெரியவானுலகையும் வல்லபத்தையும் திறமையையும் குற்றமற்றுக் கிடைக்கப்பெற்றார்கள். அதனைச் செய்ய முடியாமல் இறத்தற்குரிய இழிதொழிலால் அவர்களை வெல்லுதல் நமக்கிங்கு எங்ஙனங் கைகூடும்? எ - று. (கங௦)

ஓரா யிரந்தோட் டிதழவிழ்த்த பொன்னங் கமல முயிர்த்தவிந்தப்
பேரா வியினோர் மருங்கிருந்தெம் பெருமா னிருதாள் பூசித்தால்
வாரா வெதிர்ந்து திருவருளும் வழங்கி நினைத்த வாறெல்லாஞ்
சோரா தருளு மெனமொழிக்கொண் டவன்பூசனைக்குத் தொடங்கினார்.

(இ - ள்.) ஆயிரம் இதழ்கள் விகசித்த அழகிய பொற்றாமரை மலரைத்தந்த இந்தப் பெருமைதங்கிய மாதவாவியின் ஒருபுறத்திலிருந்து எமது சிவபெருமானுடைய உபயபாதங்களைப் பூசைசெய்தால், சிவபெருமான் நேராகக்காக்ஷியளித்துத் திருவருளுங்கொடுத்துக்கருதியவகையெல்லாம் சோர்வில்லாமல் அநுக்கிரகிப்பா ரென்னுஞ் சொல்லைக்கொண்டு அச்சிவபெருமான் பூசையைச் செய்வதற்கு ஆரம்பித்தனர். எ - டி. (கஙக)

எழுதா மறையன் றெடுத்திசைத்த வரம்பி னெம்மா னிருசரணந்
தொழுதா ரன்பி னருச்சித்தார் கழித்தார் நெடுநாட் டொல்லூழி
முழுநான் மறைக்கு மிருவருக்கு மெட்டா முதலோன் முன்னின்று
னழுதா ரயர்ந்தார் புளகுறறு ரவலக் கடனீந் தயர்வுயிர்த்தார்.

(இ - ள்.) எழுதாக் கிளவியாகிய வேதமானது ஆதிகாலத்தில் எடுத்துக்கூறியவரன் முறையே எமது சிவபெருமான் உபயபாதங்களை வணங்கி யர்ச்சனை செய்து பலபகல்கள் கழித்தார்கள். பழய ஊழிகடோறும் பூர்ணமாகிய நான்கு

வேதன்களுக்கும் பிரம விஷ்ணுக்களிருவருக்கும் எட்டுதற்கரிய முதல்வராகிய சிவபெருமான் பிரத்தியக்ஷமாயினர். தேவர்கள் உடனே அழுதார்கள் அவசமானார்கள் மயிர்க்கூச்செறிந்தார்கள். துன்பக்கடலை யகற்றிப் பரவசமானார்கள்.

கொலைவா ளெயிற்றுப் புரநிருத ரிழைத்த கொடுமைக் காற்றலமா
யுலையா மேரு வடபொருப்பி னொழித்தெம் பொன்னாட் டவரெய்தி
மலையா விண்ணோ ருயிர்செகுத்தார் வான நாடும் பொடிபடுத்தார்
தலைவா ணிலவுச் சடைமுடியோய் காத்தி யெனச்சே வடிவீழ்ந்தார்.

(இ - ள்.) கொலைத்தொழில் புரியும் வாட்படைபோன்ற பல்லையுடைய திரிபுராசுரர் புரிந்த கொடுமையை ஆற்றாதவர்களாய் வருத்தி மேருவென்னும் வடமலையி லெங்களையகற்றி, அவர்கள் எங்கள் பொன்னாட்டையடைந்து தேவர்களோடு போர்செய்து சிலரைக்கொன்றார்கள். தேவலோகத்தையும் பொடி செய்தார்கள். கலைகள் பொருந்திய வெள்ளிய சந்திரனையணிந்த சடைமுடியையுடையவரே! காப்பீராகவென்று சிவந்த திருவடிகளிற் பணிந்தார்கள். எ - று.

வீழ்ந்து வணங்கு மரிமுதலோர்க் குறித்து விடையே றுயர்த்தபிரா
னாழ்ந்த கருத்தி னுவகையுறு மடியார்க் கிரங்கி யினிதருள்வான்
றாழ்ந்த வணக்க முருத்திரமா மணிவெண் ணீறு தரித்தெம்பா
லாழ்ந்த கருத்த ரஞ்செழுத்து மறவா ரெம்மை யருச்சித்தார்.

(இ - ள்.) நிலமிசைப்படிந்து நமஸ்கரிக்கும் திருமால் முதலானோரைநோக்கி, இடபக்கொடியை யுயர்த்திய சிவபெருமான் திருவுளத்தில் மிக்க சந்தோஷமுடையராய்த் தமதடியவர்களாகிய தேவர்கட்கு இரக்கமெய்தி இனிதாக அருளிச்செய்கின்றார். கீழ்ப்படிந்தவணக்கத்துடன் சிறந்த உருத்திராக்கமணி திருவெண்ணீறு இவற்றைப்பூண்டு எம்மிடத்தில் ஆழ்ந்தமனமுடையவர்களும், பஞ்சாக்கரத்தை மறமாதவர்களும், எம்மையர்ச்சித்தவர்களுமாவர். எ - று. (கரு௪)

பூசைத் திறத்துச் சிறிதெனினுஞ் சிதையா ரெம்பாற் புராணமுறை
யாசைப் பாட்டின் வழிப்பட்டா ரறத்தி னொழுகி நெறிநின்றார்
பாசத் திவைநீத் தொழிந்தனரே லவர்க்கீ றிழைத்தல் பழியன்றா
னேசத் தவர்பா னெகிழ்ந்தசிந்தை யுடையேம் யாமே யெனநிகழ்த்தி.

(இ - ள்.) பூசைத்திறத்திலுஞ் சிறிதேனும் தவறாதவர்களும், எம்மிடத்தே கொண்ட ஆசைத்திறத்தால் சிவபுராணம் சிவமுறைகளைவழிபாடு செய்தவர்கள். தருமசிந்தனையெய்தி நன்மார்க்கத்தி லிருந்தவர்கள், பாசவலைப்பட்டு இவ்வுத்தமச் செயல்களை விலக்கிவிடுவார்களாயின் அவர்கட்கு இறுதியுண்டாக்குதல் பழியாகமாட்டாது. நாமே அவர்களிடத்தில் ஆசையோடு உருகியமனமுடையராயுள்ளோமென்று திருவாய் மலர்ந்தருளி. எ - று. (கருரு)

ஈரக் கடுக்கைச் சடைமவுலியெந்தை பெருமா னெழுந்தருள
வேரித் தருநாட் டிமையவரு மற்றை யோரும் வெருவந்தார்
வாரிக் குடிகைப் பாப்பணியோ னவர்க்கு வருந்தா வழிக்காட்டி
சூரிக் கமலத் தயனொடும்வேறி ருந்து மொருந்து மொழிகொண்டான்.

(இ - ள்.) குளிர்ச்சிபொருந்திய கொன்றைமாலையணிந்த சடைமுடியையுடைய எமது தந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளவும், மணங்கமழுங் கற்பகத்தருவையுடைய பொன்னாட்டில் வசிக்குந் தேவர்களும் மற்றவர்களும் பயந்தார்கள். திருப்பாற்கடலிலே உச்சிக்கொண்டையையுடைய சேஷசயனத்திற் பொருந்திய திருமால் அத்தேவர்களுக்கு வருந்தாதவழியைக்காட்டி, பழமையாகிய தாமரைமலரிலுள்ள பிரமனோடும் தனியேயிருந்து பொருத்தமாகியசொல்லை ஆலோசித்துக்கொண்டனன். எ - று. (கஙசு)

மாளா வசுரர் சிவபூசை மயங்க மயக்கு மாறெண்ணி
மூளாச் சமண முனியாகி யதற்கு வேண்டு செயன்முற்றித்
தாளார் கமலத் தவற்குவமை சான்ற தவத்து நாரதனைக்
கோளார் சீட னெனவருத்திக் கொண்டான் கருடக் கொடியோனே.

(இ - ள்.) அழியாத அசுரர்கள் சிவபூசை செய்வதினின்று மயங்கும்படி மயக்கும் வகையைக்கருதி, கூடுதலிலாத சமணமுனிவராகி அதற்கு வேண்டிய செயலை முடித்து, தாளையுடைய கமலத்தினனாகிய பிரமனுக்கு ஒப்பாகிய தவமுடைய நாரதமுனிவனை வலிதங்கிய சீடனெனவருவித்துக்கொண்டனர், கருடக்கொடியையுடைய திருமால். எ - று. (கஙஎ)

ஆய காலை முப்புரத்தை யடைந்தா ரிவரை யசுரரெலாந்
தூய ரல்லீ ரெனவிகழ வவர்தங் கருத்துத் தோய்ந்தறிவான்
பாயி ரத்த னூன்முறை பயின்று படுப்பான் பவுத்தன்மறு
மாய மயக்கு விஞ்சையெல்லா மெடுத்து விரிக்கும் வழிகொண்டான்.

(இ - ள்.) ஆகிய அக்காலத்தில் இவர்களிருவரும் திரிபுரத்தையடைந்தார்கள். அசுரர்கள் யாவரும், பரிசுத்தத்தன்மையுடைய ரல்லாதவர்களென்று இகழ்ந்துபேச, அவ்வசுரர்கள் கருத்தை அவர்களோடு கலந்துணரும்படி, பாயிரத்தையுடைய நூலினைமுறைப்படி பழகிப்படுப்பவனாகிய பவுத்தன், குற்றமாகிய மாய்கையால் மயக்கும் வித்தைமுழுவதையும் விளக்கும் வகையை மேற்கொண்டனன்.

பீலி துடைத்து வழிநடந்து கொல்லா விரதம் பிடித்தறியீர்
பால்வெண் ணீறு சுடுமவற்றுட் பட்ட கிருமிக் களவின்றே
யாலும் புனலை மஞ்சனமென் றெடுப்பீ ரதனுட் புலானாற்றஞ்
சால வுணரீர் நும்பூசை தருமா றளவேற் சாற்றுதிரால்.

(இ - ள்.) மயிற்றோகையால் வழியைத் துடைத்து நடந்து கொல்லாவிரதத்தை மேறகொண்டறியீர்கள். பால்போலும் வெள்ளிய திருநீற்றைச் சுடுகிறபோது அதிலகப்பட்ட கிருமிகளுக்குக் கணக்கில்லையே. அசைகின்ற சலத்தைத் திருமஞ்சனமென் றெடுக்கின்றீர்கள். அதிலேயுள்ள மிக்கபுலான் மணத்தையறியீர்கள். உங்கள் பூசைபலன்தரும் வகையுண்டாகிற் சொல்லுவீர்களாக. எ - று.

முத்தி யேது முத்திபுகு முறைப்பா டேது முறைப்பாட்டின்
பத்தி யேது பத்திதரும் பயனே துரைக்கப் படுவீரோ
வத்த னொருவ னுளனென்பீ ரவனு மனைவாழ்க் கையின்மயங்கும்
பித்தன் மனைவி மக்களிடை பிரியா னவனாற் பெறுவீரோ.

(இ - ள்.) முத்தியென்பது யாது? அம்முத்தியையடையும் முறைப்பாடு யாது? அம்முறைப்பாட்டிற்குரிய பத்தியாது? அப்பத்தியானது கொடுக்கும் பலன்யாது? சொல்லப்படுவீர்களோ? கடவுளொருவனுண்டென்கிறீர்கள், அக்கடவுளும் இல்வாழ்க்கையில் மயக்கெய்திய பித்தன், மனைவியையும் புதல்வரையும் பிரியாதவன், அத்தகையினால் முத்திபெறுவீர்களோ? எ - று. (௧௪௦)

சத்த பரிச ரூபரச கந்த மென்பீ ரவைதழுவி
யொத்து நடப்பா னொருவனவ னிவனென் றுணரப் பெறுவீரோ
பித்து மறவா னுமக்கவனை யிவனென் றுணர்த்திப் பெறல்காட்ட
வைத்த நிதிபோ லவைகாண வல்லீ ராகிற் சொல்லீரே.

(இ - ள்.) சத்தபரிச ரூபரச கந்த மென்னும் ஐம்புலன்களென்பீர்கள். அவற்றைத்தழுவி யொத்து நடப்பவனாகிய ஒருவனை அவனென்றும் இவனென்றும் அறியக்கிடைத்தீர்களோ? பித்தத்தன்மையும் மறவாதவன். உங்கட்கு அவனை இவனென்று தெரிவித்துப் பெறுதலைக் காட்டும்படிவைத்த நிதியைப்போல அவற்றைக் காணவல்லவர்களாகித் சொல்வீர்களாக. எ - று. (௧௪௧)

என்று மருட்டிப் பலவாற்று னெடுத்துக் காட்டி யவருளத்தி
னொன்றி யுணர்ந்து முணராமை யடைந்து மொருபா னிலையிலராய்
நின்று மயங்கு நிலையுணர்ந்தான் மாயப் பவுத்த னெடுநகரக்
கன்று சினவா ளெயிற்றசுரர் முழுது மயங்கும் வழிக்காட்டும்.

(இ - ள்.) என்றிப்படி (திருமாலாகிய) மாயப்பவுத்தன் மயக்கிப் பலவகையாக எடுத்துக்காட்டி, அவ்வசுரர்கள் மனதிற்பொருந்தி யறிந்தும் அறியாமையெய்தியும் ஒருவகைப்பட்ட நிலையில்லாதவர்களாய் நின்று மயங்குகின்ற நிலைமையை யறிந்தனன். அந்நெடிய நகரத்திலுள்ள மிக்ககோபத்தையும் வாள்போன்ற பல்லையுமுடைய அசுரர்கள் யாவரும் மயங்கும்படியான வழியைக் காட்டுவானாயினன். எ - று. (௧௪௨)

மனவு குயிற்றி யொழுங்கிழைத்த பசும்பொற் றகடு மருங்கெடுத்த
புனைசெய் படிகச் சுவரழுத்தி யதன்மேற் குயின்ற பொற்சிகரஞ்
சினவு கதிரி னொளியிருள விளங்கா நிற்குந் திருக்கோயி
லினைவி னெழுப்பி யதனகத்து ளிருந்தான் பவுத்த நெடுமாயன்.

(இ - ள்.) ஒழுங்குபட நவமணிகள் பதித்திழைத்த பசும்பொன்னாலாகிய தகடுகளைப் பக்கலிற்படுத்திய அலங்கரிக்கின்ற படிகச்சுவர்களிலழுத்தி அதன்மேற்சமைத்த பொற்கலசமானது மிக்க சூரியகாந்தியும் இருளெய்தும்படி பிரகாசிக்கும் திருக்கோயிலொன்றனை இச்சைமாத்திரையே படைத்து, அதனுள்ளே பவுத்தனாகவந்த நெடுமால் வசித்திருந்தனர். எ - று. (௧௪௩)

ஆடை முதலாக் கலனீறு யமுத முதலாஞ் சுவையனைத்துந்
தேடும் பொருளி னுரியவெலா நினைப்பி னிழைத்துச் சிலர்க்களித்தா
னூடு தவிசி னிருந்ததலத் துற்று நோக்கிற் காண்பரிதாய
மாடு புனையா டரங்கெழுப்பி யதுபுக் கிருந்து மயக்கிட்டான்.

(இ - ள்.) வஸ்திரமுதலாக ஆபரண மிறுதியாகவும், அமுதமுதலாகிய ஐவகைச் சுவைகளெல்லாவற்றையும், தேடுதற்குரிய பொருள்களில் உரியனவற்றையும் எண்ணத்தினாற் படைத்துச் சிலர்க்குக் கொடுத்தனன். நடுவிலிட்ட பீடத்திலிருந்த தலத்தில் உற்றுப்பார்த்தால் காண்டற்கரியதாய், பக்கலில் அலங்கரித்த நடனசாலையைச் சிருஷ்டித்து அதனுட்பிரவேசித்திருந்துப் பலரையும் மயக்கினான். எ - று. (கசஅ)

சருகு நுகர்ந்து பருப்பதத்தி னருமா தவத்தின் றலைநின்றோ
ரருகு புகுந்து தனைவணங்கி யகலக் காட்டி யறிவழித்தான்
றருவி னுயர்ந்த கற்பகப்பூந் தாமம் வருத்தித் தனிச்சாத்தி
மருவு நிருதர் கரங்கொடுத்து மயங்கா வுள்ள மயக்குவனால்.

(இ - ள்.) சருகுபக்ஷணஞ்செய்து மலைகளிற்றங்கி அரும்பெருந் தவத்திற் சிறந்திருந்தவர்கள் அருகேவந்து தன்னைப்பணிந்து செல்வதாகக் காண்பித்து அவர்கள் புத்தியைக்கெடுத்தான். உயர்ந்த கற்பகத்தருவின் மலர்மாலையை வருவித்து ஒப்பற்றுச்சாத்தி, தன்பாற்பொருந்திய அசுரர்கள் கையிலளித்து அவர்களுடைய மயங்காத மனத்தையும் மயங்கச்செய்தான். எ - று. (கசகூ)

ஆறு சமயத் தவருமுவந் தருகு சார்ந்து பெறற்கரிய
பேறு விரும்பித் தனைத்தொழுவா னெவருங் காணப் பெரிதிழைத்தா
னேறு பருதி தன்னிலைவிட் டிழியக் காட்டு மெரிபகலி
னூறு மமுத கதிரிழைக்கு முறுபே ரிருளைப் பகலாக்கும்.

(இ - ள்.) ஆறுசமயத்தினரும் சந்தோஷித்து அருகேவந்து, அடைதற்கரிய பதவிகளை யபேட்சித்துத் தன்னைப்பணியும்படி பலருங்காண மிகுதியாகச் செய்தனன். ஆகாயத்திற்செல்லுஞ் சூரியன் தன்னுயர்ச்சியினின்று இறங்கக் காட்டுவான். பிரகாசிக்கின்ற பகற்காலத்தில் அமுதத்தை யூற்றெடுக்கின்ற சந்திரனைத் தோற்றுவிப்பான். பொருந்திய பெரிய இருட்காலத்தைப் பகற்காலமாக்குவான். எ - று. (கருய)

புலரிக் காலத் தந்தரத்துப் புலவ ரெவருங் கற்பகப்பூ
மலரிட் டேத்திக் ககனநிரைத் தெழுதல் காட்டி மதிமயக்கு
முலகத் திரைத்துப் பிரளயம்வந் தெழுதல் காட்டி யுடனமைக்கு
நிலவுக் கவிகை யொருமூன்று நிழற்றுங் கடவு ணிலைகாட்டும்.

(இ - ள்.) விடியற்காலத்திலே ஆகாயத்திலிருந்து தேவர்கள் யாவரும் கற்பகமலர்களை யிறைத்துத் துதிசெய்து ஆகாயத்தை நிரப்பி விளங்குவதைக் காட்டி அவர்கள் புத்தியை மயக்குவான். உலகத்தில் ஒலித்துக்கொண்டு பிரளய வெள்ளம் வந்து தோன்றுவதுபோலக் காண்பித்து உடனே யடக்குவான். சந்திரிகையைவீசும் ஒப்பற்ற முக்குடைகள் நிழல்செய்யும் சைனக்கடவுளின் தன்மையைக் காட்டுவான். எ - று. (கருஎ)

இனைய மாயம் பலவியற்றி யவரை மயக்கி யவணிருப்ப
வினையி னிலைமை யுணராராய் நிருதர் மயங்கி வேறுற்றா
ரனைய பொழுதி னாரதனை யவணத் தொருபா லருகிருத்த
நினையு நிலைமை யுளராகி யவன்பா லினைய நிகழ்த்துவார்.

(இ - ள்.) இத்தகைய எண்ணிறந்த மாயங்களைச்செய்து, அத்திரிபுராசுரர்களை மயங்கச்செய்து அங்கே புத்தனிருக்க, செயலின் நிலைமையைச் சரியாகத் தெரியாதவர்களான அசுரர்கள் மயங்கிவேருனார்கள். அந்தக்காலத்தில், நாரதமுனிவனை அக்காவணத்தின் ஒருபக்கலில் அருகேயிருக்கச்செய்ய, அசுரர்கண்டு எண்ணூந் தன்மையுடையவராகி அம்முனிவன்பால் இதனைச்சொல்லுவார்கள்.

கலிவிருத்தம்.

என்னையிவர் காரணமி ருக்குநிலை யெங்கே
மன்னியபு ரத்திவர்வ ரப்பெறுவ தெங்கே
பன்னியவ குப்பொடுப குத்தருடி யென்றார்
நன்னிலைய வர்க்குணர நாரதனி சைப்பான்.

(இ - ள்.) இவர்காரியம் யாது? வசிக்கும் இடம் எவ்விடம்? நிலைபெற்ற இத்திரிபுரத்திற்கு இவர் அடையப்பெற்றது என்னகாரணம்? சொல்லிய விளக்கத்துடன் இவற்றைப் பிரிவுபடுத்திக்கூறி யருள்கவென்று அத்திரிபுரர் கேட்டார்கள். நாரதமுனிவன் புத்தனுடைய நல்லநிலைமையை யறியும்படி சொல்வானாயினன். எ - று. (௧௪௯)

வையகம னைத்தையும்வ குத்தவனு மேனாள்
வெய்துயிர னைத்தையும்வி தித்தவனும் வேறு
வையரிவ ரன்றியவை யாவரறி யாதார்
பொய்யில்புல மைத்தலைமை பெற்றனர்பொ லிந்தார்

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றையும் படைத்தவனும், பூர்வகாலத்தில் மிகுதியாகிய சீவர்களையெல்லாம் சிருஷ்டித்தவனும் அழகினையுடையராகிய இவரேயன்றி வேறுண்டா? அவற்றை உணராதவர் எவர்? பொய்ம்மையில்லாத புலமைத்தன்மையில் தலைமைபெற்று விளங்கினார். எ - று. (௧௫௦)

மேருவரை யுச்சியின்வி ருப்புடனி ருப்பார்
வாரிதிவ ளைந்தபெரு மால்வரையின் வைகி
யாரருள்பு ரிந்தடிய வர்க்கினித ளிப்பார்
சோர்வறுத வப்பெருமை சொல்லலெளி தன்றே

(இ - ள்.) மேருமலையின் சிகரத்தில் ஆசையோடு வசிப்பார். கடலாற்சூழப்பட்ட பெரிய சக்கரவாளகிரியிலே தங்கியிருந்து, பொருந்திய திருவருளைச் செய்து அடியார்களுக்கு இனிதாக அனுக்கிரகிப்பார். இவரது சோர்வற்றதவத்தின் சிறப்பையெடுத்துச் சொல்லுதல் இலேசானதன்று. எ - று. (௧௫௧)

எண்ணியக ருத்துணரு மெய்ப்பொருளு மின்னே
புண்ணியர ளிப்பரிது பொய்ம்மைநிலை யன்றே
யண்ணலடி யேற்குமிவை யாவுமெளி தாமா
னண்ணியது நீர்புரியு நற்றவ முயற்சி.

(இ - ள்.) எண்ணிய வெண்ணத்தை யறியும் உண்மைப்பொருளுணர்ச்சியும் இப்பொழுதே இப்புண்ணியர் கருணைபுரிவார். இதுபொய்ம்மைத் தன்மையன்று.

இப்பெருமானுடைய அடியேனாகிய எனக்கும் இவையெல்லாம் எளிதாகும். நீங்களும் அதனைவிரும்பி நல்ல தவமுயற்சியைச் செய்யுங்கள். எ - று. (௧௫௨)

சீடரில நேகருளர் சித்தரினு யர்ந்தார்
நாடொலைய நிற்குநெறி நன்குறவு ணர்ந்தேன்
றாடொழுதி வர்க்கடிமை சாருநெறி நின்றேன்
றேடருமு யற்சிசில நொய்தினருள் செய்தார்.

(இ - ள்.) இவருடைய சீடர்களிற் கணக்கில்லாதவர்கள் சித்தர்களைக் காட்டிலும் மேன்மையுற்றோராய் உள்ளார்கள். வெகுகாலங்கழியப் பிழைத்திருக்கும் வழியை நன்றாகப்பொருந்த அறிந்தேன். இவர் திருவடிகளை வணங்கி இவர்க்கு அடிமைசெய்யும் மார்க்கத்தி லிருக்கின்றேன். தேடுதற்கரிய முயற்சியுடைய சிலவற்றை இலேசாக அநுக்கிரகித்தார். எ - று. (௧௫௩)

நீவிர து காணுநிலை யிங்ஙனநி கழ்த்தி
னாவதுநு மக்கறிவுற்ற வெளித மைப்பேம்
பாவகநி னைந்ததுப கர்ந்தருளு மென்றான்
றேவரெதி ரப்படுவ செய்தருளுமென்றார்.

(இ - ள்.) இப்படிச்சொன்னால், நீங்கள் அதைப்பார்க்கும் நிலைமை உங்களுக்குத் தெரிதற்கு இலேசாவதுஞ் செய்வோம். கருத்திற்கருதியது யாது? அதனைச் சொல்லுங்களென்றான். தேவர்கள் நேராக வரப்படுவதாகிய ஒன்றைச் செய்தருளுமென்று, அசுரர் நாரதனுக்குச் சொன்னார்கள். எ - று. (௧௫௪)

திண்டிறலெ யிற்றசுரர் செப்பவொரு செங்கைக்
குண்டிகையி ருந்தபுன லங்கையிறை கொண்டான்
விண்டலமெ றிந்துகண்வி ழித்திலன்மு கிழ்த்தா
னண்டவெளி யெங்கணும டைத்தனர டைந்தார்.

(இ - ள்.) வலியபற்களையும் பராக்கிரமத்தையுமுடைய அசுரர்கள் இப்படிச் சொல்ல, நாரதமுனிவன் தனது சிவந்த ஒருகரத்திற்றாங்கிய கமண்டலத்திலிருந்த சலத்தை மற்றொருகையினால் ஒருசிறிதுகொண்டு ஆகாயத்தைநோக்கி வீசிக் கண்ணைத்திறக்காமல் மூடிக்கொண்டிருந்தார். ஆகாயவெளி முழுவதையும் அடைத்துக்கொண்டு அமரர் சேர்ந்தார்கள். எ - று. (௧௫௫)

தேமருது ழாய்மவுலி யோன்முதல தேவர்
தாமரையி னான்முனிவ ரெழுவரொடு தக்கோர்
காமுறுவி ருப்பினொடு கைதொழுது நின்றார்
யாம்வரநி னைந்தபரி சென்கொலரு ளென்றார்.

(இ - ள்.) தேன்பொருந்திய துளசிமாலைதரித்த கிரீடத்தையுடைய திருமால் முதலாகிய தேவர்கள், கமலாசனனாகிய பிரமன், சப்தரிஷிகள் முதலிய தகுந்தவர்கள் விரும்பத்தக்க ஆசையோடு கைகூப்பிநின்றார்கள். அடியேங்கள் வரும்படி கருதிய தன்மையாதோ? அதனைக்கூறியருள்கவென்றார்கள். எ - று.

காண்வருவி ருப்பொடுக ருத்துறம தித்தேஞ்
சேண்வருந கர்க்கினிது சென்றிடுதி ரென்றான்
மாண்வருவி ருப்பொடுநி சாசரர்ம தித்தா
ருண்வரும ருந்தினித ழைத்திடவு ரைத்தார்.

(இ - ள்.) காணத்தக்க விருப்பத்தால் மனதிற் கருதினோம். ஆகாயத்திலுள்ள உங்கள் நகரங்களுக்கு இனிதாகப் போகக்கடவீர்களென்றான். மாட்சிமைப்பட்ட ஆசையோடு அசுரர்கள் மதித்தார்கள். உண்ணத்தக்க தேவாமிர்தத்தை இனிதாக வருவிக்கும்படி சொன்னார்கள். எ - று. (க௱௭)

புன்னிலைய மாயவழி புத்தமிழ்தி னைப்போ
லந்நிலைய வர்க்குநுக ராரமுத ழைத்தான்
மெய்ந்நிலைமை கண்டனர்வி யந்தனர்ப ணிந்தார்
நின்னிகர்ச கத்திலையெ னத்தொழுது நின்றார்.

(இ - ள்.) அற்பமாகிய நிலையாகிய மாயவழியால், புத்தமிழ்தத்தைப் போல, அப்போழுதே அவ்வசுரர்களுக்கு உண்ணத்தக்க அரிய அமிழ்தத்தை வருவித்தான். அவ்வுண்மையாகிய நிலைமையைப் பார்த்தார்கள், களித்தார்கள், வணங்கினார்கள், உமக்குச் சமானமானவர் உலகத்தில் (ஒருவரும்) இலரென்று கூறிப்பணிந்து நின்றார்கள். எ - று. (க௱௮)

மற்றையரி யாவரும தித்தன வழங்கப்
பெற்றனர்ம யங்கினர்பெ றற்கரிய வென்று
ரீற்றிதுகி டக்கவினி யெங்களையு மினோர்
பொற்பதம்வ ணங்குதல்பு ரிந்திடுதி ரென்றார்.

(இ - ள்.) மற்றவர்களெல்லாரும் விரும்பியவற்றை இப்படியேகொடுக்க, அதனைப்பெற்றவர்கள் மயங்கினார்கள். அடைதற்கரியன இவையென்றார்கள். இஃதிருக்கட்டும். இனி, தேவரீர் அடியேங்களையும் இப்பெரியாரது அழகிய திருவடிகளைப்பணியும் வகையைச் செய்தருள்வீராகவென்றார்கள். எ - று. ()

நன்றுரைசெய் தீருமது ளப்படுந யப்புச்
சென்றுரைசெ யத்திருவு ளச்செயலு ணர்ந்து
பின்றையினி தும்முழைவ ரப்பெறுது மென்று
னன்றவரெ ழுந்துதொழு தன்னபுரி கென்றார்.

(இ - ள்.) (அதுகேட்ட நாரதமுனிவன்) நன்று சொன்னீர்கள். உங்கள் மனத்திற்கொண்ட விருப்பத்தைச்சென்று அவருடன்சொல்ல, திருவுள்ளத்தின் செயலினையறிந்து பின்னர் இனிதாக உம்மிடத்தில் வருவோமென்றனன். அப்பொழுது, அவ்வசுரர்கள் எழுந்து வணங்கி அப்படியே செய்தருள்கவென்றார்கள்

நாரதமு னித்தலைவ னாயகனை யண்மிப்
போரவுணர் சொற்றனபு கன்றிடலு மன்னோ
ராரறிவ னைத்துமொரு மாயையி னகற்றிச்
சோர்வுறவ வர்க்கொடுதொ ழப்புரிதி யென்றான்.

(இ - ள்.) முனித்தலைவனாகிய நாரதமுனிவன், புத்தனையடைந்து; போர் செய்தற்குரிய அசுரர்கள் சொல்லியவற்றைச் சொல்லவும், அதனைக்கேட்ட புத்தன், பொருந்திய அவர்கள் அறிவையெல்லாம் ஒருமாய்கையினால் விலக்கி, சோருதலில்லாமல் அவர்களை வருவித்து வணங்கச்செய்க வென்றனன். எ - று.

என்னுமள விற்கடிதெ ழுந்துடன டந்தான்
மின்னெயிலெ யிற்றவர்வ ணங்கவையின் மேவி
மன்னியத வத்துருவ மாதவனி ருந்தா
னன்னவர்த மக்கிவையெ டுத்தறைவ தானான்.

(இ - ள்.) என்றுசொல்லியவுடனே, நாரதன் விரைந்து எழுந்து சென்றனன். மின்னுகின்ற வேல்போன்ற பல்லையுடைய அசுரர்கள் பணியும் சபையிற் பொருந்தி, நிலைபெற்ற தவவடிவனாகிய நாரதமுனிவனிருந்தனன். அவ்வசுரர்கட்கு இவற்றையெடுத்துச் சொல்லுவதானான். எ - று. (நகூஉ)

நீவிர்புக லப்படுவ யாவுநினை வோடு
மோவில்கரு ணைப்படவு ரைத்தனனு ரைப்ப
மாவிரதி காள்புலவர் வானவர்வ ணங்குந்
தேவனரு ளப்படுவ செப்புவன கேண்மின்.

(இ - ள்.) பெரியவிரத முடையவர்களே! நீங்கள் சொல்வனவற்றையெல்லாம் நினைவுடன், அழிவில்லாத கிருபையுண்டாகவுரைத்தேன். அப்படியுரைத்ததற்கு, புலவர்களும் வானவர்களும் பணிகின்ற தேவன் அருள்செய்யும்படி திருவாய் மலர்ந்தருளியவற்றைக் கேட்பீர்களாக. எ - று. (ககூங)

புண்டர நுதற்றவள நீறுபுனை கின்றார்
கண்டிகைபு னைந்தனர்க ருத்தவல முற்றார்
மண்டுநர கம்புகுது மாமரபி னின்றார்
பண்டையமறை யென்றுசில பன்னியழி கின்றார்.

(இ - ள்.) (நீ சொல்லுகின்றவர்கள்) நெற்றியில் திரிபுண்டரமாக வெள்ளிய நீற்றினைத் தரிக்கின்றார்கள். உருத்திராக்க கண்டிகையை யணிகின்றார்கள். நெருங்கிய நரகத்திற் புகத்தக்க பெரியவழியில் நின்றார்கள். பழயவேதமொழியென்று சிலவற்றைக்கூறி யழிகின்றார்கள். எ - று. (ககூச)

முக்குடைநி ழற்றிசைமு கக்கடவு ளுக்கே
நெக்குருகு சிந்தையொடு நின்றிதழ விழ்க்குஞ்
செக்கமல மென்னமலர் சேவடிதொ ழாதே
புக்கவர்த மக்கருள்பு ரிந்திடுத னன்றோ.

(இ - ள்.) (பொன் மணி முத்துக்களாலாகிய) முக்குடை நிழலிலே நான்கு முகங்களையுடைய அருகனுக்கே நெக்குவிட்டுருகும் மனதுடனிருந்து, இதழ்கள் விரிக்கும் செங்கமலமலர்போன்ற சிவந்தபாதங்களை வணங்காமற் போனவர்களுக்குத் திருவருள் பாலித்தல் நல்லதாமோ? எ - று. (ககூரு)

தேமலர்சி னைப்பொதுள சோகுடைநி ழற்கீழ்
மாமைதரு முக்குடையொ ருத்தனைவ ணங்கின்
யாமவரெ னப்புரிவ துண்டெனவு ரைத்தான்
றீமகல வுங்கணிலை சொற்றிடுதி ரென்றான்.

(இ - ள்.) தேன்பொருந்திய மலர்கள் நிறைந்த கிளைகள் நெருங்கிய அசோகமரத்தின் நிழலிலே அழகுவாய்ந்த முக்குடை நிழற்றும் ஒப்பற்ற ஒருவனைப்பணிந்தால், நாம் அவர்போலச் செய்வதுண்டாமென்றுகூறினர். உங்கள் நிலையைக் குற்றமகலச் சொல்லுங்களென்றான். எ - று. (கசுசு)

எம்முடைய முற்றவமி ருந்தபரி சன்றோ
மும்மையம ணிப்புரிசை முப்புரம டைந்தீ
ரிம்மைமறு மைக்குமினி தெய்திநிலை பெற்றேம்
பொய்ம்மைநிலை யற்றனமெ னச்சிலர்பு கன்றார்.

(இ - ள்.) அப்பொழுது, அவ்வசுரர்களிற் சிலர், எம்முடைய பண்டைத் தவப்பலன் இருந்த தன்மையாலல்லவோ, மூவகைப்பட்ட அழகிய மதில்சூழ்ந்த திரிபுரத்தை யடைந்தீர்கள். இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையுற்று நிலைபெறடைந்தோம். பொய்ம்மையாகிய நிலைமையினின்று பிரிந்தோமென்றார்சள்.

பூசனைது றந்தனர்க ணீறுபுனை கில்லா
ரீசனைம றந்தனரெ டுத்தநிலை விட்டார்
மாசொழியு மந்திரம னைத்தையும றந்தார்
நீசரெனு முற்குணநி லைத்தனரி ழிந்தார்.

(இ - ள்.) சிவபூசையை விடுத்தார்கள். திருவெண்ணீறு தரிக்கமாட்டார்கள். சிவபெருமானை மறந்தார்கள். குற்றம் நீங்கிய மந்திரங்களையெல்லாம் அறவே மறந்தார்கள். நீசர்களென்று சொல்லப்படும் பழயகுணமானது நிலைக்கப்பெற்றார்கள். இழிதகைமை யெய்தினார்கள். எ - று. (கசுஅ)

வேதமுறை கெட்டனர்பு ராணமுறை மேவுங்
காதனெறி விட்டனர்க ருத்தவல முற்றா
ரோதருமு ருத்திரம ணித்தொடையொ ழித்தார்
தீதுகுடி புக்கினர்ம யக்கமுறு தீயோர்.

(இ - ள்.) வைதிகமுறை தவறினார்கள், புராணமுறைகளிற் பொருந்திய விருப்பமான வழியைவிலகினார்கள். மனத்தின்கண் வருத்தமெய்தினார்கள். சொல்லுதற்கரிய சிறப்புடைய உருத்திராக்க மணிமாலையை விடுத்தார்கள். (புத்தோபதேசத்தால்) மயக்கமெய்திய அக்கொடியோர்கள் தீதென்பது தமது நெஞ்சத்தில் குடிபுகுந்தவர்களானார்கள். எ - று. (கசுகூ)

எழுந்தனர்ந டந்தனர்ப வுத்தனிரு தாண்மேல்
விழுந்தனரி ரந்தனர்வி யப்புறும னத்தார்
தொழுந்தகையி னின்றனர வர்க்கருள்சு ரந்தா
ன[illegible]ங்குமறு மாயையினோர் மந்திரம ளித்தான்.

(இ - ள்.) சந்தோஷமெய்திய மனமுடையவர்களாய், எழுந்து விரைந்து நடந்து புத்தனுடைய இருதாள்களின்மீது நமஸ்கரித்து யாசித்துப்பணியுந் தன்மையிலிருந்தார்கள். அவ்வசுரர்களுக்குப் புத்தன் கருணைபூத்து, அச்சந்தருகின்ற குற்றம்பொருந்திய மாயையால் ஒருமந்திரத்தை யுபதேசித்தான். எ - று. (௧௭௰)

அத்தகைய மந்த்ரவிதி கொண்டதிச யித்தார்
சித்தநினை கின்றனசி றப்பினொடு பெற்றார்
மத்தமரு ளோடறம யங்கினர்மு யங்கிப்
புத்தசம யத்தொடுபொ ருத்தினர்க ருத்தை.

(இ - ள்) அப்படிப்பட்ட மந்திரவிதியினால் அதிசயமெய்தினார்கள். மனதிற்கருதுகின்றனவற்றைச் சிறப்பாக அடைந்தார்கள். களிப்பும் மதமும் ஒன்றுபட மயங்கினார்கள். பிரயத்தனப்பட்டுத் தமது கருத்தைப் புத்தசமயத்துடன் பொருந்தச் செய்தார்கள். எ - று. (௧௭௧)

மூன்றெனவ யங்கியம ணிப்புரிசை மூதூ
ரேன்றவரி யாவருமு ணர்ந்தனரெ ழுந்தார்
தோன்றினர்வ ணங்கினர்து தித்தனர்ம கிழ்ந்தார்
வான்றுணையெ னக்கருதி மந்த்ரவருள் பெற்றார்.

(இ - ள்.) மூன்றுகவிளங்கிய அழகிய மதில்சூழ்ந்த பழைய நகரத்திற் பொருந்தியவர்களெல்லாரும் இதனையறிந்து புறப்பட்டார்கள், அங்கேவந்தார்கள். புத்தனைப்பணிந்தார்கள். தோத்திரஞ்செய்தார்கள். மகிழ்ந்தார்கள். இவரே சிறந்த துணையாவாரென்று நினைத்து மந்திரசக்தியை யருளப்பெற்றுக் கொண்டார்கள். எ - று. (௧௭௨)

மூதுணர்ந் நாரதமு னித்தலைவ னன்னோர்
மாதர்நிலை பெற்றுவளர் கற்பழியும் வண்ணங்
காதொடுந டந்திகல்க ருங்கண்மயில் போல்வார்
போதமழி யத்தனிபு குந்திவைபு ரிந்தான்.

(இ - ள்) முழுதுணர்ந்த முனித்தலைவனாகிய நாரதமுனிவன், அத்திரிபுரத்துடைய மாதர்களின் நிலைபெற்று வளர்கின்ற கற்புநிலைகெடும்படி, காதுவரையில் நடந்து போர்செய்யும் கரியகண்ணையுடைய மயிலின் சாயல்பொருந்திய அம்மாதர்களுடைய அறிவகலும்படி தனியேசென்று இவற்றைச்செய்தனன்.

கற்புநிலை யென்பதெது காமனிக லம்பான்
மற்புயமெ லிந்துநலம் வவ்வினர்த மக்கே
யிற்படவ ருத்தியரு ளின்னலம ளித்த
லற்படுகு ழற்றெரிவை யர்க்கழக தாமால்.

(இ - ள்.) கற்புநிலையென்பதுயாது? மன்மதனுடைய போர்செய்யும் மலர்க்கணையினால் மற்போர்புரியும் தோள்கள் மெலிந்து சுகத்தைக் கிரகிக்கவிரும்பினவர்களுக்கே, வீட்டில் வருவித்து அன்போடு சுகந்தருதல். இருள்போற் கரியகூந்தலையுடைய மங்கையர்களுக்கு இதுவே அழகாகும். எ - று. (௧௭௪)

அன்னுயிரெ னற்குரிய கேள்வர்தழு வுந்தோ
றின்னலம ளிப்பதும னக்கினிய ரெண்ணி
யன்னதுதொ ழத்தகைய கற்பினிலை யல்லாற்
கன்னியர்த மக்கொருக வின்பெறுவ தெங்கே.

(இ - ள்.) மனத்திற்கினியராகிய தன்னுடைய வுயிரென்று சொல்லுதற் குரிய அன்பினர் விரும்பித்தழுவுந்தோறும் இனிய சுகத்தைக்கொடுப்பது வணங்கத்தக்க கற்பின்நிலைமை. அதுவேயல்லாமல் மாதர்களுக்கு வேறொரு அழகு உண்டாவது எங்கே? எ - று. (௧௭௩)

ஆரெழில நங்கனைநி கற்பவரை யண்மி
வாரிளமு லைச்சுவடு மார்புறவ ழுத்திச்
சேர்பவர்வ யங்கழகு செல்வநிறை வாணாள்
பேரெழின்ம கப்பெறுதல் பெற்றினிது வாழ்வார்.

(இ - ள்.) அழகுபொருந்திய [அநங்கன் = உருவிலி] மன்மதனை யொத்த ஆடவரை நெருங்கி, கச்சணிந்த முதிராதமுலையின் சுவடு அவர்கள் மார்பிற்பொருந்த அழுத்திப்புணரும் மங்கையர்கள், பிரகாசிக்கின்ற அழகு செல்வம் மிக்க ஆயுள் பேரழகுடைய புதல்வரைப்பெறுதல் முதலியபேறுகளையெய்தி இனிதாக வாழ்வார்கள். எ - று. (௧௭௪)

செந்துவரி தழ்ப்பருகு தெள்ளமுதம் வவ்விச்
சிந்தைம ருண்டவர்தெ ருட்சிமன னெண்ணி
யந்தளிர்வ ளைக்கையின ணைத்துமரு வாரேற்
றந்தமுயிர் தம்முடல்வெ றுப்பதிடை தாழார்.

(இ - ள்.) செம்பவளம்போன்ற அதராமிர்தத்தைப் பானஞ்செய்துதெளிந்த அமுதத்தைக்கொண்டு மனமயங்கி யவருடைய தெருட்சியை மனதிற்கருதி, அழகிய மாந்தளிர்போன்ற வளையலணிந்த கையினாலணைத்து அத்தகையினரைப் புணராராகில், தங்களுயிர் தங்களுடலை வெறுப்பதைச் சிறிதும் தாமதியார்.

செக்கரெழு வெண்பிறைசெ ழுந்தழல்வி ரிப்பப்
புக்கிளைய வாடையுயிர் தேடியிடை போத
நெக்குருகு நெஞ்சொடுவ ருந்துநெறி தேரா
மைக்குழல வர்க்குநிரை யக்குழிவ ழாதால்.

(இ - ள்.) செவ்வானத்திலெழுந்த வெண்மைதங்கிய சந்திரன் செழிய அக்கினியைவீச, இளமைதங்கிய வாடைக்காற்றானது புகுந்து உயிரை(ப்பருக)த் தேடி இடையேவர, நெக்குவிட்டுருகும் மனத்துடன் வருந்துகின்ற ஆடவருடைய மார்க்கத்தைத்தேராத கரியகூந்தலையுடைய மாதருக்கு நரகக்குழிதவறாது,

பற்றியவி ருப்பொடுப சித்தவ ரிருப்ப
மற்றவர்த மக்கனம்வ ழங்குநரை யொப்ப
முற்றுதுய ரக்கடலின் மூழ்குநரை யன்றி
நற்றுணைவ ரென்றருள்வ ழங்குவது நன்றே.

(இ - ள்.) பற்றிக்கொண்ட ஆசையோடு பசிப்பிணியெய்தியவர்கள் பட்டினியிருக்கவும், (பசிப்பிணியில்லாத) ஏனையோருக்கு அன்னம் அளிப்பவர்களைப் போலு, (காமப்பசியால்) முதிர்ந்த துன்பக்கடலில் மூழ்கியவர்களைவிடுத்து (அப் பசியில்லாதவர்களை) நல்ல [துணைவர்] களைவிரன்று கிருபைசெய்து சுகங் கொடுப்பது நல்லதோ? எ - று. (கஎகூ)

என்றிவைய பன்னினனா ருந்தவனி ருந்தான்
மன்றன்மல ரோதியர்ம னக்கவலு ழந்தார்
நின்றமுனி யைத்தொழுது நீயிவணெ மக்கோர்
நன்றதிச யப்பொருணடத்தியரு ளென்றார்.

(இ - ள்.) என்று இத்தகைய மொழிகளைச்சொல்லிப் பெருந்தவசியாகிய நாரதமுனிவனிருந்தான். அதனால், மணந்தங்கிய மலர்களையணிந்த கூந்தலையுடைய அசுரமங்கையர்கள் மனத்துயரெய்தினார்கள். பின்னர், அங்கிருந்த நாரத முனிவனைவணங்கி, நீர் இப்பொழுது எங்களுக்கு ஓரதிசயப்பொருளை நடத்தியருள்கவென்றார்கள். எ - று. (கஅ0)

வானுலக ரம்பையரி யாரும்வரு மாறோர்
மேனிலையு ணர்ந்தனனடைந்தனர்வி ருப்பி
னானவரை நீவிரெவ ரென்னவவர் யார்க்குங்
கானிலவு காமமருள் கற்பினர்க ளென்றார்.

(இ - ள்.) தேவலோகத்திலுள்ள அரம்பாஸ்திரீக ளெல்லாரும் வரும்படி ஒருமேலாகிய நிலைமையைக்கருதினன். உடனே அவர்கள் ஆசையுடன்வந்தார்கள். அவர்களைநோக்கி நீங்கள் யாரென்னவினவ, அவர்கள்; நாங்களெல்லாருக்கும் அளவாகிய காமசுகத்தைக் கொடுக்குங் கற்புடைய மங்கையர்களென்று சொன்னார்கள். எ - று. (கஅக)

ஈதுளம தித்தனரி லங்கிழையர் யாரும்
பேதுறும னத்தர்படு கற்பொடுபி ழைத்தார்
மாதரவர் பற்பலரி டத்துமனம் வைத்தார்
போதகில வர்க்கினிய பற்பலபு ரிந்தார்.

(இ - ள்.) விளங்குகின்ற ஆபரணமணிந்த அசுரமாதர்கள்யாவரும் இதனை மனதிற்கொண்டு மயங்கிய மனமுடையவர்களாகி, தவறிய கற்புநிலையோடு மாறுபட்டார்கள். அவர்கள் அழகினையுடைய ஆடவர் டலர்பால் மனம்விரும்பினார்கள். அப்போது அவ்வாடவர்க்கு இனியனவாகிய பலதொழில்களைச் செய்தார்கள்

வாயின்மரு கெய்துவர்ம னக்கினியர் வந்தாற்
பாயலின ழைத்திருப ணைப்புயம ழுந்த
வாய்வளைம லர்க்கைகொடு தக்குவர துச்கிச்
சேயிதழ்கொ டுப்பர்புது மைக்கலவி செய்வார்.

(இ - ள்.) தெருவிலுள்ள வாயிலின்பாலடைந்து, தங்கள் மனதிற்கினிய காமுகர்கள் வரக்கண்டால், அவர்களையுள்ளே யழைத்துச்சயனத்திற் சென்று

கிளைத்த இருதோள்களும் அழுந்தும்படி வளையலணிந்த தாமரைமலர்போன்ற கைகளாலிறுக்கி ஆலிங்கனஞ்செய்வார்கள். செவ்விய இதழைக்கடித்துப் பருகும்படி கொடுப்பார்கள். புதிய புணர்ச்சியைச் செய்வார்கள். எ - று. (௬அ௫)

பற்பலரி டத்தலது சிந்தனைப ரப்பார்
கற்பினெறி யென்பதுக ழிந்தனரொ ழிந்தா
ரெற்படுமு கிர்க்குறிய ராகியெழி லெய்தும்
வற்பொருத னந்தெரிய வீதிமறு குற்றார்.

(இ - ள்.) எண்ணிறந்தவ ரிடத்திலல்லாமல் (ஒருவர்பால்) மனத்தைப் புகவிடார்கள். கற்புவழியென்பதை அறவே நீங்கி யொழிந்தார்கள். பகற்காலத்திலே, உண்டாகிய நகக்குறிகளையுடையவராகி அழகுபொருந்திய சூதாடுகருவியையொத்த முலைகள் தெரியும்படி தெருக்கடோறும் திரிவார்கள். எ - று. ()

குங்குமமெ ழுக்கெறித ருக்குவவுக் கொங்கை
தங்கியநு சுப்பொசித ரும்படியொ துக்கிக்
கொங்கலர்ம லர்ச்சிகழி மைந்தர்குவ வுத்தோள்
செங்கயலெ றிந்துயிர்செ குத்துநகை செய்வார்.

(இ - ள்.) குங்குமச்சேறு மெழுகிய குவிவாகிய கொங்கையைச்சுமந்த இடையானது உடையும்படி யொதுங்கி, மகரந்தத்தோடு மலர்ந்த மலரணிந்த முடியையுடைய மைந்தர்களது, குவிந்ததோள்களை, தமது செவ்விய கயல்போன்ற விழிகளை யெறிந்து ஆவியையழித்துப் புன்னகைபுரிவார்கள். எ - று. (௬அ௭)

மற்படுபு யத்தறுகண் வாளசுர ரீதே
கற்பெனம தித்தனர ருங்கலவி தன்னாற்
லுற்புதும டைந்தனர்ம யங்கினர யர்ந்தார்
முற்கலவி யித்துணைகொ டாதெனமு னிந்தார்.

(இ - ள்.) மற்போர்புரியும் புயத்தையும் அஞ்சாமையையுமுடைய வாளேந்திய அசுரர்கள் இதுவே கற்பென்று மதித்தார்கள். அரியசையோகத்தினால் மதிமயங்கிச் சேர்ந்தார்கள். முன்னைய புணர்ச்சி இவ்வளவு சுகத்தைக்கொடுக்கமாட்டாதென்று (தமது பண்டைய கணவர்களின்புணர்ச்சியை) வெறுத்தார்கள்.

மேற்படி வேறு.

இப்பரி சியற்றின னியைந்த நாரதன்
செப்பிள முலையவர் கற்பிற் றீர்ந்தனர்
மைப்புய லனையவன் மருங்கு சார்ந்தன
னொப்புற வொருவழி யிருந்து சாவினான்.

(இ - ள்.) பொருந்திய நாரதமுனிவன் அவ்வகையாகச் செய்தனன். கிண்ணத்தையொத்த இளமைதங்கிய முலையையுடைய அசுரமாதர்கள் கற்புநிலையினின்று பிரிவுபட்டார்கள். கரியமேகம்போலும் திருமேனியையுடைய திருமாலுக்கருகே சென்றான். இணக்கமெய்தும்படி ஓரிடத்திலிருந்து வினவுகின்றான்

பேரடு வாளெயிற் றசுரர் பூசனை
வேரற முடிந்ததோ வனைய மெல்லிய
லாரெழில் கற்புநீத் தகன்று ளார்கொலோ
சோர்வற வுரைத்தியென் றருகன் சொல்லினான்.

(இ - ள்.) போர்க்களத்திற் கொல்லுகின்ற வெள்ளிய பற்களையுடைய அசுரர்செய்த சிவபூசையானது அடியோடு அழிந்ததோ? அந்தமாதர்கள் அழகுபொருந்திய கற்பென்பதை விலக்கிப்பிரிந்து விட்டார்களோ? சோர்வின்றிச்சொல்லுவாயாக வெனப்புத்தன் கேட்டனன். எ - று. (கஅஅ)

நீறழித் தொழிந்தனர் நிருத்த னின்னரு
ளூறுமஞ் சக்கரத் துண்மை சோர்ந்தனர்
மாறொடு முருத்திர மணியு நீத்தன
ராறணிந் தவனருச் சனையு மற்றனர்.

(இ - ள்.) (நெற்றியிலிட்ட) திருநீற்றைக் கலைத்துவிடுத்தார்கள். நடனஞ்செய்யுஞ் சிவபெருமானுடைய இனியதிருவருளானது ஊற்றெடுக்கும் பஞ்சாக்கரத்திற்கொண்ட உண்மையைக் கைவிட்டார்கள். மாறுபாட்டோடு உருத்திராக்கமணியையும் விலக்கினார்கள். கங்காநதிதரித்த அவ்விறைவன் பூசையையும் பிரிந்தார்கள். எ - று. (கஅகூ)

இற்படும் வாழ்க்கையர் யாருந் தம்முடைக்
கற்பற நீத்தனர் கலவிப் பூசலின்
முற்படு சிந்தைய ராகி முன்னினார்
பற்பலர்க் களித்தன ரதர பானமே.

(இ - ள்.) இல்லறவாழ்க்கை யுடையவர்களெல்லாரும் தம்முடைய கற்புத்தன்மையை அறவே நீத்தார்கள். போகசுகத்தில் முற்பட்ட மனமுடையவர்களாகி அதனையே கருதியிருந்தார்கள். தங்கள் இதழைக்கடித்துப் பருகும்படி பற்பலருக்குங் கொடுத்தார்கள். எ - று. (ககூ0)

விரதமா தவந்தரு விரத்தன் மற்றொரு
பரமயோ கன்குண பரனென் றின்னவ
ருரவுமா யையினம துள்புக் காரல
ரரனடித் தாமரை யயர்த்தி லார்களே.

(இ - ள்.) நல்விரதங்களையும் சிறந்த தவத்தையுமுடைய விரத்தன், மற்றொரு பரமயோகனென்பவன், குணபரன் என்றுசொல்லப்பட்ட இவர்கள், வலிதங்கிய நமது மாயாசத்தியால் நமக்கு மனந் திரும்பினாரல்லர். சிவபெருமானுடைய பாததாமரைகளை மறந்தாரிலர். எ - று. (ககூக)

ஆங்கவர் தன்மையை யளப்பிற் கொன்றையந்
தேங்கமழ் சென்னியோற் குவமை செப்பலாம்
பூங்கழ லருச்சனைப் போது போக்குவார்
நீங்கிலர் சைவநா னெறியி னின்றனர்.

(இ - ள்.) அம்மூவருடைய நிலைமையை யளவிட்டுப் பார்த்தால் அழகிய தேன்சொரியுங் கொன்றைமாலைசூடிய முடியையுடைய சிவபெருமானுக்கு ஒப்பு சொல்லுதல்கூடும். சிவபெருமானுடைய அழகிய வீரக்கழலணிந்த திருவடிகளில் அர்ச்சனைசெய்தும், நீங்காதவர்களாகிச் சைவநூல்களை முறையேபயின்றும் பொழுதுபோக்குவார்கள். எ - று. (௧௱௨)

ஒருபுரத் தொருவரா யுறைவ ராங்கவர்
குருமொழித் ததீசியோ கும்ப யோனியோ
வருளுப மன்னியத் தறவ ேனவவர்த்
தெருமரு சிந்தையேந் தெரிகிலே னென்றான்.

(இ - ள்.) ஒருபுரத்திற் கொருவராக (அம்மூவரும் அம்மூன்று புரங்களில்) வசிக்கின்றார்கள். அவர்கள் குருமொழித் ததீசிமுனிவனே, [கும்பயோனி] குடத்திற்பிறந்த அகத்தியமுனிவனே, அருள்புரியும் உபமன்னியுமுனிவனோ? மயங்கிய மனமுடைய அடியேன் அவர்களை யின்னவரென்று உணரமாட்டேன் என்று நாரதன் கூறினன். எ - று. (௧௱௩)

அனையது கேட்டலு மமல நாயகன்
றனதடிச் சீடரைத் தருக வென்றன
னனையரு மடைந்தன ரிவரை நோக்கினான்
கனைகழற் றிகிரியோன் கழறன் மேயினான்.

(இ - ள்.) அதனைக்கேட்டவுடனே அமலநாயகனாகிய திருமால், தன்திருவடிகளைப் பக்திசெய்யும் சீடர்களைக்கொண்டு வருகவென்றனன். உடனே யெல்லோரும் வந்தார்கள். இவர்களைப்பார்த்து ஒலிக்கின்ற வீரகண்டாமணிதரித்த சக்கிராயுதமேந்திய திருமால் சொல்லத்தொடங்கினான். எ - று. (௧௱௪)

புன்றொலச் சமயமே பொருந்து மூவர்த
முன்புறப் போகலீர் முகமு நோக்கலீர்
வன்புலத் தவரொடு மாறு கொள்கலீர்
தென்புலத் தவ்ரவ ரென்று செப்பினான்.

(இ - ள்.) இழிகுலத்தவருடைய மதத்தையேபொருந்திய அம்மூவர்களுக்கு முன்பாக நீங்கள் போகாதீர்கள். அவர்கள் முகத்தையும் நோக்காதீர்கள். அக்கடின புத்தியையுடையவர்களோடு கூடாதீர்கள். பகைகொள்ளாதீர்கள். அவர்கள் [தென்புலம்] யமபுரமடையவேண்டியவர்களென்று கூறினன். எ - று. ()

தன்னிலை நிறுவுற நினைந்து தன்னுடைப்
புன்னிலை மாயையி னொருவன் போந்துற
முன்னினா னங்கவன் முகுந்தப் புத்தனா
யன்னவ னுருவுகொண் டமைதன் மேயினான்.

(இ - ள்.) தன்னிலைமையை நிறுத்திவைக்கக்கருதி, தன்னுடைய இழிதகைமையாகிய மாயையால் ஒருவன் வரும்படி கருதினான். அப்பொழுது அவன் முகுந்தப்புத்தனாகி அவனுடைய வடிவையே தன்வடிவாகக்கொண்டு பொருந்துவதாயினான். எ - று. (௧௱௫)

ஆங்கவ னவ்வுழை யிருப்ப வாடரித்
தேங்கமழ் துளவினன் சேறன் மேயினன்
வீங்குநீர்த் திரைபொரு தலைக்கும் வேணியோற்
றாங்கிருங் கயிலையஞ் சாரன் மேவினன்.

(இ - ள்.) அப்பொழுது அத்தோன்றிய முகுந்தப்புத்தன் அங்கேதங்கியிருக்க, வண்டுகள் மொய்க்கின்ற தேன்சொரியும் துளசிமாலைதரித்த திருமால் செல்லுதல் பொருந்தினார். பெருக்கெடுக்குங் கங்காநதியின் அலைகள்மோதுகின்ற சடையையுடைய சிவபெருமானைத்தாங்கிய பெரிய கைலாயகிரியின் அழகியசாரலை (நாரதமுனிவனோடு) சேர்ந்தனர். எ - று. (௧௯௭)

நோக்கிய விருவருங் கயிலை நோக்குறு
வாக்கிய விழிமறைந் தலம்வந் தாரவ
ணூக்கிய கருத்தரா யொருங்கு சிந்தையைத்
தூக்கினின் றளந்தன ரினைய சொல்லினார்.

(இ - ள்.) சேர்ந்த இருவரும் திருக்கைலாயத்தைநோக்கியவுடன், கண்பார்வைமறைந்து வருத்தமெய்தினார்கள். அப்பொழுது தளர்ச்சியெய்திய மனமுடையவராய் ஒருவழிப்படக் கருத்தைச்செலுத்தி நின்று ஆலோசித்து இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுவார்கள். எ - று. (௧௯௮)

சுழிகொணீர் வேணியைத் தொழுத பூசனைக்
கழிவுசெய் தியற்றினே மாத லானம
விழிதெரி யாவழி யேவி னோமெனத்
தொழுதுயர் கையினார் தவத்திற் றாங்கினார்.

(இ - ள்.) சுழிகள்பொருந்திய கங்கைநீரையணிந்த சடையையுடைய சிவபெருமானை வணங்கிய பூசைக்குக் கெடுதியைச்செய்து முடித்தோம். ஆனபடியால், நம்முடைய கண்கள் பார்வைதெரியாத வகையை யெய்தினோமென்று, வணங்கி உயர்த்திய கையையுடையவர்களாய்த் தவச்செயலைமேற்கொண்டார்கள்

ஊழிபல் கழித்தனர் தவத்தி னோங்கினா
ராழிநஞ் சணிமிடற் றவனை யர்ச்சியாப்
பாழியே றுயர்த்தருள் பரம னீங்கிவர்
சூழ்வன திருவுளத் தடைத்துத் தோன்றினான்.

(இ - ள்.) தவத்தொழிலில் மேம்பட்டார்கள். திருப்பாற்கடலிற் றோன்றிய ஆலாலவிஷத்தை யணிந்த கண்டத்தையுடைய சிவபெருமானை யர்ச்சித்து, பல ஊழிகாலங்கள் கழித்தனர். வலிதங்கிய இடபக்கொடியை யுயர்த்தியருளிய சிவபெருமான், இவர்கள் கருதியனவற்றைத் திருவுளத்திற்கொண்டு காட்சிதந்தருளினர். எ - று. (௨௦௦)

பரித்துறு சிந்தையிற் பரிவி னன்மை
யருச்சனை யாற்றினோர்க் கழிவு செய்துளாந்

திரித்தனி ரதலிற் றெரிந்தி லீர்விழி
யுரித்தென நமக்கவை யுதவி னேமென்றூ.

(இ - ள்.) மனத்தில் பரிவுற்று ஆசையோடு எம்மைப்பூசைசெய்த திரிபுரவாசிகளுக்குக் கெடுதியுண்டுபண்ணி மனதைத்திருப்பி விட்டீர்கள். ஆதலால் கண்கள்தெரியப் பெற்றிலீர். நமக்கு உரித்தென றுகருதி அவற்றையுங் கட்டுக் கொடுத்தோமென்று திருவாய் மலர்ந்தருளி. எ - று. (௨௦௧)

மானத வாவியின் மருங்கு வானவ
ரானவர் யாவரு மடைந்து ளாரவண்
டேனமர் துளவினோய் சேறி சென்றபி
னேனைய புரந்தெறற் கியற்று வீரென.

(இ - ள்.) மானததீர்த்தத்தினருகே தேவர்களானவர்க ளெல்லாரும் சேர்ந்திருக்கின்றார்கள். தேன்பொருந்திய துளசிமாலைதரித்த திருமாலே! நீயங்கேசெல்லக்கடவாய். அப்படிச்சென்றபிறகு அந்தமுப்புரங்களை யழித்தற்கு வகைசெய்யக்கடவீர்களென்று. எ - று. (௨௦௨)

திருவருள் புரிந்தருட் கயிலை சென்றனன்
மருவருந் துளவினோன் மான தப்பெரும்
பொருபுனற் றிருக்கரை யருகு போயினன்
றருநிழற் கடவுளர் தொழுது சார்ந்தனர்.

(இ - ள்.) திருவருள்செய்ய, கிருபைதங்கிய கைலாயகிரியை யடைந்தனர். மணம்வீசுந் துளவமாலைதரித்த திருமால் மானததீர்த்தத்தின் அலைகள் மோதுகின்ற நீரையுடைய கரைக்கருகே சென்றனர். கற்பகத்தருவின் நீழலில் வசிக்குந் தேவர்களெல்லாரும் திருமாலைக்கண்டு வணங்கிச் சார்ந்தார்கள். எ - று. (௨௦௩)

அனையவர் தம்மொடு மவ்வணி ருந்துழி
முனிவரு மமரரு முகுந்தற் போற்றிநீ
புனைபுர மடைந்தவண் புரிந்த வாறெலா
நினைவொடு மொழிதியென் றிரந்து நின்றனர்.

(இ - ள்.) அவ்வமரர்களோடும் அத்தீர்த்தக்கரையில் இருந்தகாலத்தில் முனிவர்களும் தேவர்களும் விஷ்ணுவைத் துதிசெய்து, தேவரீர் அலங்கரிக்கின்ற முப்புரங்களையெய்தி அங்கேசெய்த செயல்களையெல்லாம் நினைவாகச்சொல்ல வேண்டுமென்று யாசித்துக் கேட்டார்கள். எ - று. (௨௦௪)

முப்புர மடைந்தது முயன்ற மாயையா
லப்புர மழிந்தது மனைத்து நாரதன்
செப்புர வளத்தினாற் செப்பி னானுளத்
துப்புர வடைந்தன ரமரர் தொல்லையோர்.

(இ - ள்.) திரிபுரங்களைச் சேர்ந்ததும், முயற்சிசெய்த மாயாசக்தியால் அப்புரங்கள் தர்மமழிந்ததும் எல்லாவற்றையும் நாரதமுனிவன் செவ்வையாக வளமையோடு தெரியச்சொல்லினன். அதனைக்கேட்ட பழையோராகிய தேவர்கள் மனத்தின் ஒழுங்கைப்பெற்றார்கள். எ - று. (௨௦௫)

இலங்கெயிற் றசுரருக் கிலிங்க மீந்துள
வலங்கெழு தோளினன் மயனு மற்றையோர்
குலந்தழை தாத்தரு குருவு மாங்குளார்
பொலங்கெழு திகிரியாய் புரிந்த தெவ்வணம்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பற்களையுடைய அசுரர்களுக்குச் சிவலிங்கங்கொடுத்துள்ள வெற்றிமிகுந்த தோள்களையுடையோனாகிய மயனென்பவனும், அவ்வசுரர் குலந் தழையச்செய்யும் குருவாகிய சுக்கிரனும் அங்கேயிருக்கின்றார்கள். அப்படியிருக்க, அழகுமிகுந்த சக்கரந் தாங்கிய திருமாலே! நீங்கள் இதுசெய்தவகை எப்படி? எ - று. (௨௦௬)

என்னலு முயிர்புரந் தளிக்கு மெம்பிரா
னன்னவர்க் கியம்புவா னவர்க்குத் தம்மிலோர்
பின்னமுண் டாதலிற் பிறந்தசா பத்தாற்
பொன்னிம யாசலத் தலத்திற் போயினார்.

(இ - ள்.) என்றுவினவவும், உயிர்களைக் காத்திரட்சிக்கும் எமது பெருமானாகிய திருமால், அத்தேவர்கட்குச் சொல்லுவார். அம்மயனுக்கும் சுக்கிரனுக்கும் தங்களில் ஒரு குறைவுண்டாதலாற் றோன்றிய சாபகாரணமாக, அவர்கள் அழகிய இமயாசலமாகிய இடத்திற்குச் சென்றார்கள். எ - று. (௨௦௭)

அன்னதோ வென்றனர் பிரம னாதிய
ரின்னல்கொண் டித்துணை யெடுத்த காரிய
முன்னிநே மாங்கது முடித்து மென்றொளி
பொன்னவிர் சடையினோற் போற்றன் மேயினார்.

(இ - ள்.) அதுகேட்ட பிரமன் முதலினோர் அப்படியோ வென்றார்கள். துன்பத்தினால் கருதினோமாகிய இவ்வளவினதாகிய எடுத்தகாரியத்தை முடிவு செய்வோமென்று பேசிக்கொண்டு, பொன்போலப் பிரகாசிக்குஞ் சடையையுடைய சிவபெருமானைத் துதிப்பாரானார்கள். எ - று. (௨௦௮)

ஆழ்புனன் மானத வாவி யாழ்ந்துற
மூழ்கினன் கிடந்தன னினைத்தன் முற்றுவான்
றாழ்சடை யவன்றிருப் பூசை சார்ந்தன
னூழ்பல கழித்தன னுவண னூர்தியே.

(இ - ள்.) ஆழ்ந்தநீரையுடைய மானததீர்த்தத்திற் படிந்து மூழ்கினன். ஓர்புறத்திலிருந்து, தாங்கள் கருதியதை முடிக்கும்படி, தாழ்ந்த சடையையுடைய சிவபெருமான் திருப்பூசையைச் செய்பவராகிப்பல்லூழிகாலம் கருடவாகனராகிய திருமால் அமர்ந்து கழித்தனர். எ - று. (௨௦௯)

தாளுடைத் தாமரைச் சதுமு கத்தனோ
டாளுடை யிந்திர னமரர் யாவரு
மூளிருந் தவம்புரி முனிவ ரேனையோர்
கோளறு புன்றவங் குறித்து நின்றனர்.

(இ - ள்.) தாளையுடைய தாமரையிலெழுந்தருளிய நான்கு முகங்களையுடைய பிரமனுடன், அரசுரிமைபொருந்திய தேவேந்திரனும் ஏனையதேவர்களும், முயன்று பெருந்தவஞ்செய்த முனிவர்களும், மற்றையோர்களும், குற்றமற்ற சலத்தில் தவஞ்செயலை மேற்கொண்டு நின்றனர். எ - று. (௨௧௦)

தீம்புனல் புறவடி தோய்க ளார்தெளி
வாம்புன னின்றன ரானை யேத்தினார்
வாம்பரி மழவிடை யரதன் சேயொடுந்
தேம்புரி குழலொடு மெதிரிற் சென்றனன்.

(இ - ள்.) இனியநீரானது புறவடியில் தோயப்பெறுதவர்கள், தெளிவாகிய சலத்தில் நின்றுகொண்டு சிவபெருமானைத் துதிசெய்தார்கள். தாவிச்செல்லும் இளமைதங்கிய இடபத்தைவாகனமாகவுடைய சிரேஷ்டமான சிவபெருமான், குமாரசுவாமியோடும் தேனொழுகும் (மலரணிந்த) புரிந்த கூந்தலையுடைய உமாதேவியோடும் பிரத்தியட்சமாயினர். எ - று. (௨௧௧)

சென்றதிர் மழவிடைச் செல்வற் போற்றினார்
நின்றவா னவர்நிலை நெடிது நோக்கிநீர்
நன்றிழைத் தீரது நயந்து ளோமினி
யொன்றுள துரைத்துமென் றுரைத்தன் மேயினான்.

(இ - ள்.) எதிர்சென்று, சத்திக்கின்ற இளமைதங்கிய இடபவாகனமுடைய சிவபெருமானைத் துதித்தார்கள். அப்படித் துதித்து நின்றதேவர்கள் நிலைமையைச் சிவபெருமான் பார்த்து நீங்கள் வெகுகாலமாக நன்றாகநோற்றீர்கள். அதனை விரும்பினோம். இனிச்சொல்லவேண்டியதொன்றுண்டு. அதனையுஞ் சொல்லுவோமென்று சொல்லலாயினர். எ - று. (௨௧௨)

பரகதி நெறிதரு பசுப திப்பெரு
விரதநீ ரிழைத்திட வேண்டும் வேண்டினாற்
புரையற வுணர்ந்தன பெறுதிர் போமென
வரனவர்க் கெடுத்துரைத் தருளு மெல்லையில்.

(இ - ள்.) பரகதிக்குரியவழியைத் தரத்தக்க பாசுபதவிரதமென்னும்பெரிய விரதத்தை நீங்கள் அநுஷ்டிக்கவேண்டும். அவ்விரதத்தோடு நம்மைப் பிரார்த்தித்தால், குற்றமறக்கருதிய வரத்தைப் பெறுவீர்கள், போங்களென்று, சிவபெருமான் அவர்களுக்கு எடுத்துச்சொல்லுங்காலத்தில். எ - று. (௨௧௩)

பன்னிரு தடம்புயக் குழவிப் பண்ணவ
னன்னயக் குழவிநா டகந டித்தன
னென்னையா ளுடையவ னிவனை நோக்கலுங்
கன்னிகை யன்னது கடைக்கண் சாத்தினாள்.

(இ - ள்.) விசாலமான பன்னிரு திருத்தோள்களையுடைய குமாரசுவாமியானவர், நல்ல இனிமையோடுகூடிய குழந்தைத் திருவிளையாடலாக நடித்தனர். என்னையடிமையாகவுடைய சிவபெருமான் இவனைப்பார்க்கவும், கன்னிகையாகிய உமாதேவியார் அதனைத் திருக்கடைக்கண்ணோக்கஞ் செய்தருளினர். எ - று.

அறனெலா மொருவழிப் புரக்கு மம்புயத்
துறுமலர்த் தாமரை வெறிநுற் றேச்சினாள்
சிறுவனிச் சிறுநட நோக்கல் செய்திலாய்
கறைமிடற் றேயெனக் கனன்று சீறினாள்.

(இ - ள்.) தருமங்களையெல்லாம் ஒருவழியாகக்காக்கும் உமாபிராட்டியார் தமது தாமரைமலர்போன்ற அழகியகையினால் பிற்புறமெய்தித் தட்டினாள். இளையவனாகிய முருகன்செய்யும் இச்சிறு நடனத்தைக்காண்டல் புரியவில்லை. விஷம்பொருந்திய கண்டத்தையுடையவரே! என்று கோபித்துக்கொதித்தாள்.

முறுவலார் முகத்தினன் முருகப் பிள்ளையை
யுறுபெருங் கருணையி னுவந்து நோக்கினா
னறுமலர்த் தளிரடி குழைய நாட்டியஞ்
சிறுதினங் காட்டெனச் செங்கை யொத்தினான்.

(இ - ள்.) சிவபெருமான் அதனாற்புன்னகைபொருந்திய முகமுடையவராய், முருகனாகிய இளையகுமாரரைப் பொருந்திய பெருங்கிருபையோடு சந்தோஷித்துப் பார்த்து, மணந்தங்கிய மலரையும் தளிரையும் போன்ற திருவடிகள் குழையும்படி சிலகாலம் நாட்டியஞ்செய்து காட்டுகவென்று, அந்நடனத்திற் கியையத்தமது சிவந்த கைகளால் தாளமிட்டனர். எ - று. (௨௧௬)

பேரெழிற் குமரவே ணடிக்கும் பெற்றியா
னாரணன் மலரவன் முதல நானிலத்
தாருயி ரனைத்துநின் றாடிப் பாடினார்
வேரசைந் திடச்சினை யசையு மெய்ம்மைபோல்.

(இ - ள்.) அடிமரமசைதலாற் கிளைகளெல்லாம் அசையுமென்னும் உண்மைபோல், பேரழகுடைய குமரவேள் நடனஞ்செய்யும் தன்மையால், அன்புடைய அன்றலர்ந்த தாமரையிலுள்ள பிரமன்முதலிய பெரியபூமியிலுள்ள அரிய ஆன்மாக்கள் யாவரும் ஆநந்தமயமாய் நின்று ஆடிப்பாடினார்கள். எ - று. (௨௧௭)

சேந்தனை முருகனைக் குகனைச் சேயினை
மோந்தெடுத் தணைத்தன ருச்சி மோந்தனர்
காந்தையுந் தலைவனும் புதல்வற் கைவிடார்
போந்தனர் கணத்தொடுங் கயிலை புக்கனர்.

(இ - ள்.) உமாதேவியும் சிவபெருமானும், சேந்தன் முருகன் குகன் ஆகிய திருநாமங்கொண்டு விளங்கும் தமது இளையபிள்ளையாரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு உச்சிமோந்து குழந்தையைக்கையினின்று விடாமல் புறப்பட்டுத் தமது சிவகணங்களோடுந் திருக்கைலாயகிரியை யடைந்தார்கள். எ - று. (௨௧௮)

ஆயதோ ரளவையி னிவர்கள் யாவருங்
காய்சின விடையினா னெதிர்ந்துங் கட்கனற்
றீயரை முடித்திலஞ் செய்வ தேதெனா
மேயினர் பசுபதி விரத மாதவம்.

(இ - ள்.) அப்படிப்பட்ட காலத்தில் இத்தேவர்களெல்லோருங் காய்ந்து கோபிக்கின்ற இடபவாகனனாகிய சிவபெருமான் காட்சிகொடுத்தும், கண்களில் தீப்பொறி சிந்துங் கொடியோராகிய திரிபுராசுரர்களை வென்றேமில்லை. யாது செய்வோமென்று பாசுபத விரதமென்னும் பெருந்தவத்தைச்செய்ய மேற்கொண்டார்கள். எ - று. (உகூ)

விரதமங் கதுபுரிந் தியற்றும் வேலையில்
வரநதிச் சடைமுடி மழுவ லானுணர்ந்
துறவுறுந் தவப்பய னுணர்ந்த நந்தியா
விரைதருங் கருணையா னியம்பி னானரோ.

(இ - ள்.) அப்பாசுபத விரதத்தை யநுஷ்டித்து வருங்காலத்தில், கங்கையாறு பொருந்திய சடைமுடியையுடைய மழுப்படைதாங்கிய சிவபெருமான் தெரிந்து, வலிபொருந்திய தபோபலனை யுணர்ந்த நந்திதேவரிடத்தில் நிறைந்த கருணைக் கிருப்பிடமாகிய சிவபெருமான் திருவாய் மலர்கின்றனர். எ - று.

அரிமுதற் றோன்றிய வமரர் யாவருந்
திரிபுரத் தவர்களாற் றீமை யெய்தின
ருரிமையி னெமையிரந் துவந்து போற்றினர்
பரிவுழந் தின்னமும் பரசன் மேயினார்.

(இ - ள்.) திருமால் முதலாகவுள்ள தேவர்களெல்லாரும் திரிபுரத்தசுரர்களால் துன்பமடைந்தார்கள். சுதந்திரத்தோடு எம்மையாசித்துவந்து துதிசெய்தார்கள். துயரமநுபவித்து இதுகாலம்வரையிலும் துதித்துக்கொண்டிருக்கின்றார்கள். எ - று. (உஉக)

ஈதிழைத் தாங்கவ ரியற்று மெல்லையிற்
போதிநீ திரிபுரம் பொடித்து மாய்ப்பதற்
கேதமி லிரதமே முதல யாவையுந்
தீதற வியற்றுவா னெப்பி வாவென்றான்.

(இ - ள்.) அம்மானத தீர்த்தக்கரையில் அவர்கள் இப்பாசுபதவிரதத்தை நடத்தி நிற்கையில், நீ அங்குச்சென்று முப்புரங்களை யெரித்தழிப்பதற்கு, குற்றமில்லாத தேர்முதலிய போர்க்கருவிகளெல்லாவற்றையும் செவ்வையாகச் சித்தஞ்செய்யக் கட்டளையிட்டு வருகவெனத் திருவாய் மலர்ந்தருளினார். எ - று. ()

வேத்திரக் கரத்தினன் றவள வெண்பொடி
பூத்தொளிர் மேனியன் பூதர் சூழ்வர
நேத்திர மூன்றுடை நிமலன் சேவடி
காத்தருணந்தியங் கடவு டோன்றினான்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் செவ்விய திருவடியைக்காத்தருளுகின்ற அழகிய திருநந்திதேவர். [வேத்திரம்] பிரம்பைத்தாங்கிய கையையுடையவரும், தாவள்யமாகிய திருவெண்ணீறு பிரகாசித்து விளங்கும் திருமேனியுடையவருமாய்ப் பூதகணங்கள் புடைசூழ்ந்து வரும்படி அங்கே எழுந்தருளினார். எ - று. (உஉங)

நந்திவந் திறுத்தலு நளின நான்முக
னந்தரத் தவரரி முதல யாவருஞ்
சிந்தையுற் றுயிர்த்தனர் திருக்கை மானுடை
யெந்தைபோற் றிருவரு ளுளதென் றெண்ணினார்.

(இ - ள்.) திருநந்திதேவர் எழுந்தருளிக் காட்சிதரவும், தாமரைமலரி லெழுந்தருளிய பிரமனும் தேவர்களும் திருமால் முதலிய வெல்லோரும் மனங் களித்துயிர்த்தார்கள். திருக்கரத்தில் மானேந்திய எந்தையாகிய சிவபெருமானைப் போல திருவருள் புரிதலுண்டாகுமென்று கருதினார்கள். எ - று. (உஉச)

எண்ணுறு மளவையி னந்தி யெம்பிரா
னண்ணின னெதிருற நயந்து போற்றினார்
கண்ணுதல் வானவற் காணு மன்பினார்
புண்ணியற் கியைவன யாவும் போற்றினார்.

(இ - ள்.) அப்படி யெண்ணுகின்றகாலத்தில் எமது பெருமானாகிய நந்தி தேவர் சமீபமாக வெழுந்தருளியணைய, யாவரும் விரும்பித் துதிசெய்தார்கள். நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானைத் தரிசிக்கும் அன்புடைய அத்தேவர் கள், புண்ணிய சொரூபியாகிய திருநந்திதேவருக்குப் பொருந்திய உபசார மொழிகளால் துதிசெய்தார்கள். எ - று. (உஉரு)

என்னையா ளுடையவ னந்தி யெம்பிரான்
றன்னைநா ரணனொடுந் தழுவிச் சார்ந்தனர்
மின்னொளி யலங்குநூன் மார்ப வெய்திவண்
முன்னிவந் தடைந்தவா மொழிகு வாயென்றார்.

(இ - ள்.) என்னை யடிமையாகவுடைய எமது பெருமானாகிய திருநந்தி தேவரை, திருமாலுடன் அங்கேபொருந்தியுள்ள தேவர்களும், பிரகாசிக்கின்ற ஒளியோடசையும் உபவீதமணிந்த திருமார்பையுடைய நந்திபகவானே! தேவரீர் இவ்விடத்திற்கு யாதுகருதி விரைந்தெய்திய வகை. அதனைத் திருவாய்மலர வேண்டுமென்றார்கள். எ - று. (உஉசு)

அக்கணத் தவரொடு நந்தி யாரெயில்
புக்கமுப் புரத்தொடும் பொருதப் போதுவான்
றொக்கதேர் முதலிய தொகுத்தி யற்றுவான்
முக்கணு னுமக்கெதிர் மொழிந்து வாவென்றான்.

(இ - ள்.) அக்காலத்தில், அத்தேவர்களோடும் சொல்லுகின்றார். சிவபெரு மான் மும்மதில்களமைந்த முப்புரத்தினருடன் யுத்தஞ்செய்யச் செல்லும்படி கூட்டமாகிய இரதமுதலிய யுத்தகருவிகளைச் சேர்த்துவைக்கும்படி, திரிநேத்தி ரங்களையுடைய அச்சிவபெருமான் உங்களுக்கு நேரிற்சொல்லி வருகவென் றனுப்பினர். எ - று. (உஉஎ)

அதுவுணர்ந் தும்பரு மழை யடைந்து ளேனெனக்
கதுமென வீங்கிவை கடிதிற் செய்திரென்
றிதுவுரைத் தகன்றன னந்தி யீங்கிவர்
புதிதிழைத் தனவெலாம் புகல்செய் வாமரோ.

(இ - ள்.) அக்கட்டளையைத் தெரிந்து உங்களிடத்திற் றெரிவிக்கும்படி வந்தேனென்றுகூறி, உடனே இவற்றை விரைந்து சித்தஞ்செய்வீர்களென்று இதனைத் திருவாய்மலர்ந்து திருநந்திதேவர் திருக்கைலாயகிரிக்குச் சென்றருளினர். இத்தேவர்கள் புதிதாகப் புரிந்தனவற்றையெல்லாம் இனிச்சொல்லுவோம்.

கலிநிலைத்துறை.

மந்த ரத்தொடு கேசரி நெடுவரை வாங்கித்
தந்து திண்டிற லச்செனப் படுத்தினர் தழைக்குஞ்
செந்த னிக்கதி ரீனத்தைவெண் டிங்களைத் திருத்தி
யுந்து பேரெழி லாழிகொண் டவைக்கடை யுறுத்தி.

(இ - ள்.) மந்தரமலையையும் கேசரியெனும் பெரியமலையையும் வாங்கித் தந்திரமாகிய மிகுவல்லபமுடைய அச்சுக்கட்டைகளாகக் கிடத்தினர். சிவந்த கிரணங்கள் தழைத்த ஒப்பற்ற சூரியனையும் வெள்ளிய சந்திரனையும் திருத்தமாக்கிச் செலுத்தத்தக்க பேரழகுடைய சக்கரமாக்கி அவ்வச்சின் இறுதிகளிற் பூட்டி. எ - று. (உஉ௯)

ஏழி ரட்டியென் றுரைத்திடு மிருநிலப் பரப்பைச்
சூழ்த ரப்படு நிலங்களீ ரேழெனத் தொகுத்தார்
பாழி வாளரிப் பிடரிபி மாசனப் பரப்பை
யாழி யொத்தலர் தட்டினோர் தட்டகத் தமைத்தார்.

(இ - ள்.) பதினான்கென்று சொல்லப்படும் பெரிய உலகப்பரப்பினை, சூழ்ந்த பதினான்கு நிலைகளாகத் தொகுத்தார்கள். பெருமைதங்கிய ஒள்ளியசிங்கத்தின் பிடரியிலிட்ட பீடத்தின் பரப்பை, கடல்போற் பரந்துள்ள தட்டுகளின் ஒருதட்டிலே பொருந்தினார்கள். எ - று, (உ௩0)

கலைக ளாகம வேள்விகள் கார்முதற் பருவ
நிலைகள் கோடியோ ரேழெனு மந்திர நியமந்
தொலைவி லோரைக டிங்களுற் றெழுப்படு தொன்னாட்
குலவி ருத்தையோ கங்கண்மற் றுள்ளன குணித்து.

(இ - ள்.) கலைஞானங்கள் (அறுபத்துநான்கு) சிவாகமங்கள் (இருபத்தெட்டு) யாகங்கள் (இருபத்தொன்று) கார்முதலிய (ஆறு) பருவங்கள், நிலைகள் ஏழுகோடி மகாமந்திரங்கள் நியமங்கள் நீங்காத இராசிகள் மாதங்கள் பொருந்தியுண்டாகின்ற பண்டைய தினங்கள் சிறந்த நாழிகைகள் யோகங்கள் மற்றுள்ளனவற்றையுங் கருதி. எ - று. (உ௩க)

கடைப்ப டச்செலுத் தரமுத லாயவாக் கருதிப்
புடைப்ப டுத்தவ ணவணெலாந் திருத்தினர் பொருத்தி
யுடைத்தெ ழுங்கடத் தோங்கெழில் யானையோ ரெட்டு
மிடைப்ப டச்சுமந் தேந்துவ போலமைத் திட்டார்.

(இ - ள்.) கடைப்படும்படி செல்லுகின்ற உத்தரமுதலியனவாகக் கருதி அவ்வவ்விடங்களிற் பொருத்தி, அங்கங்கெல்லாம் உடைத்தெழுகின்ற மதப்பெருக்கையும் மிக்க அழகையுமுடைய திக்கஜங்களெட்டனையும் நடுவிலேதாங்கி நிற்பனபோலப் பொருத்தி அமைத்தார்கள். எ - று. (உ௩உ)

திகந்த முற்றிய புயங்கமோ ரெட்டுமத் திகந்தம்
பகுந்து தாங்கிய குலவரை யெட்டுமேற் பரிதி
புகுந்தி றங்கிய நெடுவரை யிரண்டுமேற் பொருந்தத்
தகுந்த னித்தனி மதலையி னமைத்தனர் தரத்தால்.

(இ - ள்.) திசைகளி னிறுதியிலுள்ள அஷ்டநாகங்களையும், அத்திசாந்தங்களைப் பிரித்துச் சுமந்த அஷ்டகுல பர்வதங்களையும், சூரியன் உதித்து மறையும் (உதயாஸ்தமன) கிரிகளிரண்டையும், மேலே பொருந்தத்தக்க தனித்தனி தூண்கள்போல முறைப்படி யமைத்தார்கள். எ - று. (உ௲௩)

வருண மைந்தெனப் படுவன யாவையும் வருத்தி
யுருள்பெ ருந்திரை யேழையும் வருத்தின ரொருங்கே
யருக மைத்திடு கன்னசா லைகளதற் கருகே
மருவு கன்னகூ டங்களொத் திருப்பன வகுத்து.

(இ - ள்.) ஐந்துவருணங்களென்று சொல்லப்படுவனவற்றை யெல்லாம் வருவித்து, உருளுகின்ற பெரிய அலைமயமான கடல்கள் ஏழையும் ஒருசேரவருவித்தார்கள். அருகே யமைக்கத்தக்க கன்னசாலைகளும் அவற்றிற்கருகே பொருந்திய கன்னகூடங்களும்போ லிருப்பனவாகச் சமைத்து. எ - று.

கன்னகூடம் - கோபுரங்களினிலையில் மூலைகளிற் சிறுகோபுரம்போல விளங்கும். கன்னசாலை - கோபுரங்களினிலையில் நாற்புறமும் நடுவேநீண்டவடிவாய் அவ்வகலத்தில் அரைப்பங்கு இடங்கொண்டு நிற்கும். இவ்விரண்டிற்குமிடையே பஞ்சரமென்ப தொன்றுண்டு. இது சிற்பநூன்முடிபு. விரிப்பிற்பெருகும். (உ௲௪)

இடைப டும்படாம் வெண்மையி னியற்றின ரிவைக்கீழ்
மிடைப டுத்துவ கருநிறப் பண்பொடுவேய்ந்து
புடைப டுத்துவ சேயொளிப் படம்பொதிந் திட்டா
ரடைப சும்படாம் வெளியமைத் தவணவ ணமைத்தார்.

(இ - ள்.) நடுவிலுள்ள கொடித்துவசங்கள் வெண்ணிறமாகச் சமைத்தார்கள். இவற்றின்கீழே நெருங்கியுள்ளனவற்றைக் கருமை நிறம்பொருந்திய அழகோடு கட்டி, பக்கங்களிலுள்ளனவற்றை செந்நிறந்தங்கிய சீலைகளால் நிறைத்தார்கள். சுற்றிலும் பசுமைநிற மமைந்தனவாக அங்கங்கே பொருத்திவைத்தார்கள். எ - று. (உ௲௫)

குங்கு மத்தன படாம்படக் கோடிதோ றமைத்தார்
தங்கு கீழ்த்திரை பெரும்புறக் கடலெனச் சமைத்தார்
பொங்கு பேரொளி யைந்தொடுங் கொடிஞ்சியும் புனைந்தா
ரங்கு நின்றிடை தூக்குவ யாவையு மசைத்தார்.

(இ - ள்.) குங்குமநிறந்தங்கிய கொடிச்சீலைகள் பொருந்தும்படி மூலைகளிலெல்லாம் அமைத்தார்கள். பொருந்திய கீழ்த்திசையிலுள்ள அலைகள் பொருந்திய பெரும்புறக்கடல் என்று கண்டோர் சொல்லும்படி யமைத்தார்கள். அதிகரிக்கின்ற பஞ்சவர்ணப் பேரொளியோடும் [கொடிஞ்சி] மொட்டும் அலங்கரித்தார்கள், அங்கே யிடையில் தொங்கவிடுவனவற்றை யெய்லாம் கட்டினார்கள்.

மன்னு யிர்த்தொகை யாவைக்கும் வானவ ரெவர்க்கும்
பின்ன லந்துழாய் மருமற்கும் பீடிகைப் பொகுட்டு
மன்னு நான்முகக் கிழவற்கு மேலதாய் மறைந்தோன்
றன்னை யொத்துயர்ந் தொளிர்மணித் தனித்தசும் பமைத்தார்.

(இ - ள்.) நிலைபெற்ற உயிர்த்தொகைக ளெல்லாவற்றிற்கும் தேவர்கள் யாவர்க்கும் பின்னிய அழகிய துளவமாலையணிந்த திருமாலுக்கும் தாமரைப் பொகுட்டாகிய பீடத்தில் நிலையாயுள்ள நான்குமுகங்களையுடைய பிரமனுக்கும் மேலாகி, அவர்கட்கு அதீதப்பட்ட சிவபெருமானைப் போன்றுயர்ந்து பிரகாசிக்கின்ற ஒப்பற்ற நவமணிகள் பதித்த கலசத்தை யமைத்தார்கள். எ - று. (௨௩௭)

எழுது ருமறை யனைத்தையும் பரியென வியற்றி
வழுவ றக்குறை நிரப்பின ரரிமுதல் வானோ
ரொழுகு மாயிரங் கொடுமுடி வடவரை யோங்க
றழுவு செங்கையிற் பிநாகமொத் தமைத்தனர் தந்தார்.

(இ - ள்.) எழுதாக் கிளவியாகிய வேதங்களையெல்லாம் குதிரைகளாகச் செய்து குற்றமறக் குறைவுபாட்டினை நிரம்பச்செய்தார்கள். திருமால் முதலாகிய தேவர்கள், பிரகாசிக்கின்ற ஆயிரம் [கொடுமுடி] சிகரங்களையுடைய மகா மேருமலையைச் சிவந்த கையில்தழுவிய பிநாக வில்லைப்போல வில்லாக நியமித்துத் தந்தார்கள். எ - று. (௨௩௮)

பொறிப்ப ணுடவி வாசுகி நாணெனப் பொருத்தி
வெறிப்ப சுந்துழா யலங்கலோன் கணையென வியப்பக்
குறித்த வெந்துதி பாவகற் பொருத்தினர் குதைவாயச்
செறித்த தூவலை வாயுவிற் செறித்தனர் திருத்தி.

(இ - ள்.) புள்ளிகள் பொருந்திய படக்கூட்டத்தையுடைய வாசுகியென்னும் பாம்பை நாணகச்சேர்த்து, மணம்வீசும் பசிய துளசிமாலைதரித்த திருமால் அம்பாக, அதிசயிக்கக்குறித்த வெவ்விய அவ்வம்பின் கூர்வாய் அக்கினியாக அமைத்தார்கள். அம்பினிறுதியிற்கட்டிய சிறகு வாயுவாகவுந் திருத்தமாகக் கூட்டினார்கள். எ - று. (௨௩௯)

முன்னை மாதவக் கடைப்பிடி யிருந்தவர் முளரி
யன்ன வூர்தியும் வலவனைத் தமர்ந்தன னமையாத்
தொன்ன லந்தரு குடிலைமத் திகையெனத் தொகுத்தார்
பின்னர் வானவர் சேனையொத் தெழுந்தனர் பிரியார்.

(இ - ள்.) பழயபெருந் தவத்தினாலே க்ருமமுடிக்குந் துணிவிலிருந்த அவர்கள், விரும்பியபடி, தாமரைமலரி லெழுந்தருளிய அன்னவாகனனாகிய பிரமனும் இரதசாரதியாகப் பொருந்தினன். அமையாத பண்டைய நன்மைகளையெல்லாந் தரத்தக்க பிரணவத்தைக் குதிரைச்சம்மட்டியாகச் சேர்த்தார்கள். பின்னரே தேவர்கள் பிரியாதவர்களாய்ச் சேனையாகப் புறப்பட்டனர். எ - று. (௨௪௦)

மாதி ரப்பெருங் கடவுள ரெண்மரு மறலி
காது சேனையின் றலைவரிற் பொலிந்தனர் கனகச்
சோதி மேருவி னுச்சியந் தொன்னகர்ப் பிரம
னாதி நாரண னரனைவாழ்த் தெடுத்தன ரடைய.

(இ - ள்.) பெரிய எண்டிசைப்பாலகர்களும், போர்செய்கின்ற பெரிய இயமனுடைய சேனைகளின் நாயகர்கள்போல விளங்கினார்கள். அப்பொழுது பொன்மயமாகிய (மநோவதி வைகுந்தமென்னும்) நகரங்களில் வசிக்கும் பிரமனும் தொல்லோனாகிய திருமாலும், சிவபெருமானை யடையும்படி வாழ்த்தெடுத்தார்கள். எ - று. (உசக)

அருந்த வத்தரோ ரெழுவரு மாசிசொற் றெடுப்பப்
பொருந்து விஞ்சையர் கின்னரர் பூதர்ப் பொருவத்
திருந்து மெல்லிசைத் தும்புரு நாரதர் சிவன்பா
லிருந்த சிந்தைய ரருகுநின் றின்னிசை தூக்க.

(இ - ள்.) அருந்தவஞ்செய்த சப்தருஷிகளும் ஆசீர்வசனங்களை யெடுத்துச் சொல்லவும், பொருந்திய வித்தியாதரர் கின்னரர் பூதர்களைப்போல, மெல்லிய இசையையெழுப்பும் தும்புருநாரதர் முதலிய சிவபெருமானிடத்திற் றங்கிய மனமுடையவர்கள் அருகேநின்று இனிய இசைப்பாடல்கள் பாடவும். எ - று.

ஈங்கு வேண்டுவ யாவையுங் குறைவற வியற்றித்
தாங்கு சக்கரத் தடக்கையான் றழல்விழிப் பெருமா
னோங்கு வெள்ளியம் பொருப்புற நடந்தன னொலிநீர்
தேங்கு சென்னியன் றிருநகர்க் கடைத்தலைச் சென்றான்.

(இ - ள்.) இவ்விடத்தில் யுத்தத்திற்கு வேண்டுவனவற்றையெல்லாம் குறைவின்றிச் செய்துமுடித்து, சுதரிசனத்தைத் தாங்கிய பாந்தகையையுடைய திருமால், அக்கினிக்கண்ணையுடைய சிவபெருமானது உயர்ந்த வெள்ளிமலையாகிய அழகிய கைலாயத்தை யடையச்சென்று சப்திக்கின்ற கங்காசலம் தேக்கெடுக்கின்ற சடையையுடைய சிவபெருமான் திருக்கோயிலின் திருவாயிலிலெய்தினர்.

நந்தி பாலவ னியன்றன யாவையு நவின்றான்
சிந்தை கூர்தர வாங்கவ னுணர்ந்தனன் சென்றா
னெந்தை சேவடி யிறைஞ்சின னிருந்துணா ரலங்கற்
பைந்து ழாயினோ னடைந்தன னென்பது பகர்ந்தான்.

(இ - ள்.) அப்படிச்சென்ற திருமால், திருநந்திதேவரோடு நடந்தனவற்றையெல்லாங் கூறினர். அத்திருநந்திபகவான் மனங்களிப்புற அவற்றைத்தெரிந்துகொண்டு சந்நிதானத்தினுட்சென்று, எமது தந்தையாகிய சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளைவணங்கி, பசிய பூங்கொத்துக்களோடே கூடிய பெரிய துளசிமாலையணிந்த திருமால் வந்தனனென்பதைத் தெரிவித்தனர். எ - று. ()

ஒரும ருங்குறை மரகதப் பசுங்கொடி யோடுஞ்
செருவு வந்தெழு வேட்கையிற் சினவிடை யுகைத்து
வருவ தோர்ந்தனன் றெழுதனன் மழைமுகில் வண்ணன்
கருணை மிக்கெழுந் தளித்தன னோக்கினன் களித்தான்.

(இ - ள்.) (உடனே சிவபெருமான்) தமது ஒப்பற்ற வாமபாகத்தில் வசிக்கும் பசிய மரகதக்கொடிபோன்ற உமாதேவியாருடன், போர்புரிதலிற் களித்தெழுந்த விருப்பத்தோடு, கோபம்பொருந்திய இடபவாகன மூர்ந்து எழுந்தருளுவதை, கார்காலமேகம்போலும் நிறமுடைய திருமால் உணர்ந்தனர். கருணைமிகுந்தெழுந்து அநுக்கிரகித்ததைக் கண்டுகளித்தனர். எ - று. (உசஙி)

அடைந்த வானவ ரினிதெழுந் தருள்வது நோக்கி
மிடைந்து வீழ்ந்தனர் பாடின ராடினர் வியந்தார்
தடங்கொ டிஞ்சியந் தேரினை நோக்கினன் றையற்
கிடங்கொ டுத்தரு ளெம்பிரா னினிதுகொண் டியைந்தான்.

(இ - ள்.) திருக்கைலாய கிரியையடைந்த தேவர்கள், சிவபெருமான் இனிதாக வெழுந்தருள்வது கண்டு, நெருங்கி நமஸ்கரித்தார்கள். துதி செய்தார்கள். ஆநந்தக் கூத்தாடினூர்கள். சந்தோஷித்தார்கள். உமாதேவிக்கு வாமபாகத்தைக் கொடுத்தருளிய சிவபெருமான் விசாலமாகிய [கொடிஞ்சி] மொட்டினையுடைய அழகிய தேரினைக் கண்டு இனிதாகச் சம்மதித்தனர் எ - று. (௨௯௬)

மூரி வெள்ளிமி லேறுவிட் டிழிந்தனன் முதல்வன்
மேரு மால்வரை யொருதனி வில்லொடு மேவித்
தேரி னேர்தனி யெடுத்துற மிதித்தலுந் தெறித்துப்
பாரு மச்சுமற் றிழிந்தது தேர்த்தடம் பரப்பு.

(இ - ள்.) வலிதங்கிய வெள்ளிய இமிலையுடைய இடபத்தை விட்டுச் சிவபெருமான் இழிந்தருளி, ஒப்பெற்ற தனியாகிய பெரிய மேருமலையாகிய வில்லுடன் பொருந்தித் தேரினை மிதித்தருளிய மாத்திரமே, தெறிபட்டுப்பாரும் அச்சும் உடைபட்டு, தேரின் விசாலமாகிய பரப்பானது நிலமிசைப் பொருந்த இழிந்து விழுந்தது. எ - று. (௨௯௭)

மடுத்தெ டுத்தனன் வெள்விடை யுருக்கொடு மாய
னெடுத்த வப்பரம் பொறுக்கலா னிருதொளை நாசி
விடுத்தெ ழுந்தன குருதிநீர் விழித்துணை பிதுங்கிப்
படுத்த வாய்வழி யுமிழ்ந்தனன் குருதிநீர்ப் பரவை.

(இ - ள்.) அதனைக் கண்ட திருமால், வெண்மைதங்கிய இடபவாகன வடிவந்தாங்கிச் சிவபெருமானை உடனே தாங்கினர். அப்படித் தாங்கிய அப்பாரத்தினைப் பொறுக்க மாட்டாதவராய் நாசியின் இருதொளைகளிலும் உதிரநீரானது தோன்றிப் பெருகியது. இருவிழிகளும் வெளிப்பட்டு வாய்வழியாக உதிரநீர்ப் பிரவாகத்தைச் சிந்தினர் எ - று. (௨௯௮)

வெருவி யேங்கினர் விண்ணவர் வெள்விடை யாய
கருவி மாமழை வண்ணனும் பொறுக்கலன் கவன்று
னிருது ணைப்பத மடக்கினன் கவிழ்ந்தன னிவற்றுற்
பொருதி றற்கொடு வில்லியை நோக்கினர் புகல்வார்.

(இ - ள்.) அதனைக் கண்ட தேவர்கள் பயந்து ஏக்கமெய்தினர். வெள்ளிய இடப வடிவேற்ற பெரிய மோகவண்ணராகிய திருமாலும் சகித்தற் கேலாதவராய் வருந்தினர். தமது இருபாதங்களையும் மடக்கிக்கொண்டு கீழே கவிழ்ந்தனர், இவற்றுல், போர் செய்யத்தக்க கொடியவில் லேந்திய சிவபெருமானைத் தேவர்கள் நோக்கி விண்ணப்பிக்கின்றுர்கள், எ - று. (௨௯௯)

எந்தை யேயுனக் கபயமற் றெவ்வுயிர்த் தொகைக்குந்
தந்தை யேயுனக் கபயமெத் தலைவர்க்கு முதலா
முந்தை யேயுனக் கபயமென் றிரந்தனர் மொழிந்தா
ரிந்து சேகரன் மாயவற் குறித்தன னிரங்கி.

(இ - ள்.) எமது தந்தையே! தேவரீருக்கு அடைக்கலம். எல்லா உயிர்த் தொகைகளுக்குந் தந்தையே! தேவரீருக்கு அடைக்கலம். எல்லாத் தலைவர்களுக்கும் முதன்மையானவரே! தேவரீருக்கு அடைக்கலமென்று யாசித்துக்கூறி முறையிட்டார்கள். சந்திரனைச் சடையிலணிந்த சிவபெருமான் திருமாலைக் கருதித் திருவுளமிரங்கி எ - று. (உ௱)

முக்க ணெம்பிரா னிரங்கலு முளரிபூத் தெழுந்த
மைக்க ரும்புயல் வண்ண னுக் கெறும்வலி வாய்ப்ப
வொக்க நின்றது தெய்வவான் றேர்மல ருவந்த
திக்கு மாமுகன் றன்னொடுந் திகைத்தனர் தேவர்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய எமது சிவபெருமான் திருவுளமிரங்கவும், கரியநீலமேக நிறமுடைய திருமாலுக்குப் பெருவல்லபமுண்டாக, தெய்வீகம் பொருந்திய சிறந்த தேரானது சமானமாக நின்றது. தாமரைமலரில் வசிக்கும் சிறந்த நான்குமுகங்களையுடைய பிரமனுடன் தேவர்கள் அதனைக்கண்டு பிரமித்தார்கள். எ - று. (உ௱க)

மடந்தை பாகனு மாமழை வண்ணனை நோக்கி
யடைந்த பேருவ கைப்பெருங் கடலின னாகித்
தொடர்ந்த சிந்தையின் வேண்டுவ சொல்லுதி யென்றான்
படர்ந்த வார்சடைப் பண்ணவற் கின்னணம் பகரும்.

(இ - ள்.) அப்பொழுது, பார்வதிபாகராகிய சிவபெருமானும் சிறந்த மேகவண்ணராகிய திருமாலைப்பார்த்து, பெரிய சந்தோஷப் பெருக்காகிய பெருங் கடலில் மூழ்கினவராகிப் பதிந்த திருவுள்ளத்தோடு, நீவிரும்பியவற்றைக் கேட்பாயாக வென்றனர். படர்ந்த நெடிய சடையையுடைய சிவபெருமானுக்குத் திருமால் இவ்வகையாகச் சொல்லுகின்றார். எ - று. (உ௱உ)

சத்தி யோர்புடை யிருக்கவும் யானுமோர் சத்தி
யொத்தி டப்புரிந் தருளினை யாதுபோ லுடையாய்
வித்த கத்தனி யேறனை யாயினும் வினையே
னத்த னித்திற லேறெனத் தாங்குதற் கருள்வாய்.

(இ - ள்.) என்னை யடிமையாக வுடையவரே! தேவரீருடைய சத்தி ஒருபக்கலிலிருக்கவும் அடியேனையும் ஒருசத்தியை யொப்பாகச் செய்தருளினீர். அதுபோலவே, ஒப்பற்ற ஞானசொரூபமாகிய இடபவாகனத்தையுடைத்தாயிருக்கின்றீரானபோதிலும், அடியேனும் அத்தகைய ஒப்பற்ற வலிதங்கிய இடபம்போலத் தேவரீர் திருமேனியைப்பரித்தற்கு அநுக்கிரகிக்கவேண்டும்.

என்ப தாயவீ தளித்தனை நின்னையென் ஞான்று
மென்ப தத்துணை மறப்புறு தருடர வேண்டு
மின்ப டுந்திறல் வேணியே யென்றலும் விமலன்
றன்பெ ருந்திருக் கருணையா லவற்கவை தந்தான்.

(இ - ள்.) என்று சொல்லுவதாகிய இவ்வரத்தைத் தந்து, எக்காலத்தும் தேவரீருடைய மெல்லிய உபயபாதங்களை மறவாமற்படி திருவருள் புரியவேண்டும், மின்னலை வீசுகின்ற வலியசடையையுடைய சிவபெருமானே! என்று

யாசிக்கவும், புனிதராகிய சிவபெருமான் தமது சிறந்த பெருங்கருணைத்திறத்தால் அத்திருமாலுக்கு அவற்றை யநுக்கிரகித்தனர். எ - று. (உ௫௪)

ஓட்டு தேரெனத் திசைமுகன் றன்னொடு முரைப்பக்
கோட்டு நான்மறைப் பரியுகைத் தியக்கினன் கொடிஞ்சி
நீட்டு தேர்நிலை திரிந்தில மத்திகை நீட்டிப்
போட்ட னன்குல மலரயன் புரவியம் புறத்து.

(இ - ள்.) சிவபெருமான் இனித்தேரினை யோட்டுகவென்று நான்குமுகங்களையுடைய பிரமனோடு திருவாய் மலர்ந்தருள, கூட்டமாகிய நான்குவேதப் புரவிகளையேறி யோட்டினன். கொடிஞ்சியையுடைய உயர்ந்ததேரானது நிலை திரிந்திலது. தன்கையிலேந்திய குதிரைச் சம்மட்டியைநீட்டி, சிறந்த தாமரையில் வசிக்கும் பிரமன் குதிரைகளின் முதுகிலடித்தனன். எ - று. (உ௫௫)

வேத வாம்பரி தங்களி னுவன வெருவிக்
காதி யோங்கலுந் திகிரிநின் றசைந்தில காணு
வேரது சிந்தையின் யாவரு முணர்ந்தனர் வதனப்
போத கத்தினன் செயலென யாவரும் புலந்தார்.

(இ - ள்.) தாவிச்செல்லும் வேதமாகிய குதிரைகள் தங்களாலாவனவரையில் பாய்ந்து விரைந்து நடக்க முயன்றும், சக்கரங்கள் நின்ற நிலையினின்று அசையவில்லை. அங்குள்ள தேவர் முதலியயாவரும் அதனைக்கண்டு மனதில் ஆலோசித்தவர்களாய், இது யானைமுகமுடைய கணேசப்பெருமான் செய லென்று எல்லோரும் மனம் வருந்தினார்கள். எ - று. (உ௫௬)

குருத்தி ளம்பிறைக் கண்ணியோன் றன்மகற் குறித்துக்
கருத்தி னேர்ந்துள யாவையுங் கொடுத்தனன் கமழ்பூந்
தருத்த லத்தினோ ரயனொடு மருச்சனை தந்தார்
மருத்து ழாயினோ னவ்வணந் தொழுதுள மகிழ்ந்தான்.

(இ - ள்.) மிக்க இளம்பிறைச் சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமான் தமது மூத்தகுமாரராகிய கணபதியைக் குறித்து மனதிற் கருதியவற்றையெல்லாம் உபகாரஞ் செய்தளித்தனர். மணஞ்சிந்தும் மலர்களமைந்த கற்பக விருக்ஷத்தையுடைய தேவலோகத்திலுள்ள அமரர்கள் பிரமனோடும் கணபதியைப் பூசித்தார்கள். வாசந்தங்கிய துளசிமாலைதரித்த திருமால் அவ்வகையே அவரைப்பணிந்து மனங்களித்தனர். எ - று. (உ௫௭)

மூத திர்ந்துணர் கயமுகன் மூடிகத் தெழுந்தான்
சூத மாமுத றடிந்தவன் றோகையி னிவர்ந்தான்
சீத ரன்பெருங் கலுழனிற் சிறந்தனன் சிறைப்பா
லோதி மத்தினோ னேதிம முகைத்தன னொருபால்.

(இ - ள்.) முற்றறிந்துணருந் தன்மையுடைய பழய யானைமுகக்கடவுள் பெருச்சாளிவாகனத்தி லாரோகணித்தனர். பெரியமாமர வடிவாயிருந்த சூரபன்மனைச் சங்கரித்த குமாரசுவாமி மயில்வாகனத்திலேறினர். திருமகளை மார்

பிற்றரித்த திருமால் பெரிய கருடவாகன மூர்ந்தனர். பால்போலும் வெள்ளிய சிறகுகளமைந்த அன்னவாகனத்தினையுடைய பிரமன் ஒருபுறத்தில் அன்னத்தை வாகனமாகச் செலுத்தினன். எ - று. (உருஅ)

புரந்த ராதிய ரெண்மரும் புடைபடுங் கரடக்
கரந்த ருங்களி றுதிய வாகனங் கடவ
வரந்த ருந்தவ ரெழுவரு மாசிவாழ்த் தெடுப்ப
விரங்கு மின்னிசை தும்புரு நாரத ரிசைப்ப.

(இ - ள்.) இந்திரன் முதலிய அஷ்டதிக்குப் பாலகரும் பக்கங்களிலே, மதசலம்பொழியுந் துதிக்கையையுடைய யானைமுதலிய வாகனங்களைச் செலுத்தவும், சிரேஷ்டம் பொருந்திய தவசிகளாகிய சப்தருஷிகளும் ஆசீர்வசனஞ் சொல்லி வாழ்த்தவும், ஒலிக்கின்ற இனிய இசைப்பாடல்களைத் தும்புரு நாரதர் பாடவும். எ - று. (உருகூ)

விஞ்சை நாட்டவர் மாகத ரெனவெதிர் வியப்பக்
கஞ்ச யோனியை முதலினோர் கைதொழத் தகையோ
னஞ்ச யின்றவன் றிருமுன நடந்தரு ணந்தி
யெஞ்ச லில்லதோர் வேத்திரத் திருக்கர மெடுப்ப.

(இ - ள்.) வித்தியாதரர்கள் [மாகதர்] புகழ்பாடுவோராக எதிரே நின்று துதிசெய்யவும், தாமரைமலரிலுதித்த பிரமனையொத்தவர்கள் பணியத்தக்கவரும் ஆலாலவிஷத்தை யருந்தியவருமாகிய சிவபெருமான் திருமுன்னே நடந்துசெல்லும் திருநந்திபகவான் குறைவில்லாத சிறப்புடைய ஒப்பற்ற பிரம்பினைத் தாங்கிய திருக்கரத்தையுயர்த்தி நடத்தவும். எ - று. (உசு0)

தேவ துந்துமி முழக்குறச் சில்லரிப் படுத்த
பாவு கட்படு சல்லிகை யோங்குறப் படர்வான்
மேவு துள்ளொலி முருட்டொடு வெம்முழ வதிர
வோவில் பேரிய மாதிரம் பிளப்பநின் றொலிப்ப.

(இ - ள்.) தேவதுந்துமி முழங்கவும், சிலபருக்கைகளிட்ட பரந்தகண்ணையுடைய சல்லிகையொலிக்கவும், படர்ந்த ஆகாயவரையிற் செல்லும் துள்ளியவோசையுடைய முருட்டுடன் வலிய மத்தளம் அதிரவும், கெடுதலில்லாத பேரொலிவாச்சியமாகிய பேரிகை திசைகள் பிளவுபடும்படி சப்திக்கவும். எ-று.

வளைக்கு ழாத்தொடு வலம்புரி வலம்பட முழங்கத்
தொளைக்கு லம்படு கருவியெண் டிசையொடுந் தொடர
முளைத்த வெண்பிறை வெள்ளெயிற் றிருங்கண மொய்ப்ப
விளைத்த வெஞ்சினக் கடவுளர் தானைசூழ் மிடைய.

(இ - ள்.) வெற்றியுண்டாகும்படி சங்குகூட்டங்களோடு வலம்புரிச் சங்கங்களும் கோஷிக்கவும், தொளைக்கூட்டங்கள் நிறைந்த (தொளைக்கருவியாகிய) வாத்தியங்களினொலி அஷ்டதிசைகளிலும்பரவவும், வெள்ளிய பிறைச்சந்திரன் முளைத்தாற்போன்ற வெள்ளிய பற்களையுடைய பெரிய சிவகணங்கள் நெருங்கவும், மிக்க கோபம்பொருந்திய தேவசேனை புடைசூழ்ந்துவரவும். எ - று. ()

உருண்ட வாழியி னதிர்குரற் பிரளய முடைத்துப்
புரண்ட காலையின் மலையின மும்மடி பொலிய
வரண்ட ரும்புர மோரிடத் தமர்ந்தன வந்நாண்
முரண்ட ருந்திருத் தேர்நடந் ததிர்ந்தது முன்னி.

(இ - ள்.) அதிர்குரலையுடைய பிரளயவெள்ளமானது உடைபட்டுப் புரண்டகாலம்போல, தேரின் உருண்ட சக்கரத்தினுல் மலைத்தொகுதிகளும் அடிபடவும், வலிமைபொருந்திய அழகிய இரதமானது விரைந்து நடந்தது. அக்காலத்தில் மதில்கள் சூழ்ந்த முப்புரமும் ஓரிடத்திலிருந்தன. எ - று. (உகூரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாயன் மாயையி னிருங்கடற் படிந்தெழா வாளெயிற் றசுரர்க்கன்
றேய கண்களுந் திண்டிறற் புயங்களு மிடந்துடித் தனவன்னோர்
சேயி ழைக்குல மங்கையர் மங்கலஞ் சழன்றன சிறைக்காக
மாய்கொ டுஞ்சிறை பிணங்கிவீழ்ந் தெழுவன முன்றிலங் கணமெல்லாம்

(இ - ள்.) திருமாலின் மாயையினுற் பெரிய கடலிற் படிந்து எழுந்திராத வெள்ளியபற்களையுடைய அசுரர்களுக்கு, அப்பொழுது பொருந்திய கண்களும் வலிய பராக்கிரமம் பொருந்திய தோள்களும் இடப்பக்கத்தில் துடித்தன. அவ்வசுரர்களுடைய செவ்விய ஆபரணங்களை யணிந்த மாதர்களது மங்கல சூத்திரங்கள் கழுத்தினின்று கழல்வனவாயின. சிறகுகளையுடைய காகங்கள் ஆய்ந்து வளைந்த சிறகுகள் கோடி அவர்கள் வாயில்கடோறும் வீழ்ந்தெழுந்தன. எ - று.

என்னை யாளுடை நாயகன் பூசையா லெழுந்தகற் பகமெல்லாம்
பின்ன ரெங்ஙனம் போயின கண்டிலர் பேரிருட் கனவெல்லாந்
துன்ன லம்பெறக் காண்பன வன்றிநன் னலத்தொடர் காணுராற்
பொன்ன லங்கொளி மாளிகை யிருளொடும் பொலிந்தன பகற்காலை.

(இ - ள்.) என்னை யடிமையாகவுடைய சிவபெருமான் பூசாவிசேடத்தால் விளங்கிய கற்பக விருட்சங்கள்யாவும் அதன் பின்னர் யாண்டுச் சென்றனவோ ஒருவரும் பார்த்தாரில்லை. அவர்கள் இரவிற் காணும் சொப்பனங்களெல்லாம் துர்நிமித்தங்களாகக் காணப்படுவன வல்லாமல் நன்னிமித்த சம்பந்தத்தைக் காணுராயினர். பொன்மயமாகிப் பிராசிக்கின்ற மாளிகைகள் பகற்காலத்திலும் இருளோடு விளங்கின. எ - று. (உகூடு)

மணிம திட்புரத் தவரிவை நோக்கினர் வருந்தின ரதுகாலை
யணிம ணிக்களத் தனையிரந் தேத்தின ரரிமுத லிமையோர்க
டணித டஞ்சிலை குழைதர வளைத்துநீ செலுத்துதி யம்பென்னுப்
பணிய வாசுகி குதைமடுத் தேற்றினன் பனிமதிச் சடையோனே.

(இ - ள்.) அழகிய மதில் சூழ்ந்த முப்புரத்தவர் இவற்றைக் கண்டார்கள். அப்பொழுது வருந்தினுர்கள். அழகிய நீலரத்தினம்போலும் ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானைத் திருமால் முதலிய தேவர்கள் யாசித்துத் துதிசெய்தார்கள். வலியவிசாலமான மேருமலையாகிய வில்லைக்குழையும்படி வளைத்துத் தேவரீர் அம்பினைச்செலுத்துகவென்று விண்ணப்பித்து வணங்க, குளிர்ச்சிதங்கிய சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமான், சர்ப்பமாகிய வாசுகியைவில்லின் குதையைவளைத்தேற்றினர். எ - று. (உகூசு)

இடத்தி ருக்கர மேருமால் வரைச்சிலை யேந்தியூன் றியதன்னேன்
மடற்ச ரோருக வலம்படு மலர்க்கரம் வாளிசுற் றியதாங்கண்
புடைத்த வெம்முலை யிமாசலை திருமுக நோக்கினன் புன்மூரற்
படுத்து நோக்கின னெழுந்தது புரமெனு மூன்றினும் படலைத்தீ.

(இ - ள்.) அவ்விறைவனுடைய இடது திருக்கரமானது பெரிய மேருமலையாகிய வில்லைத்தாங்கி யூன்றியது. இதழ்களையுடைய தாமரை மலர்போன்ற வலத்திருக்கரமானது வெற்றிபொருந்திய அம்பினைக் கவர்ந்தது. அப்பொழுது பூரித்த வலியதனங்களையுடைய இமாசல புத்திரியாராகிய உமாதேவியாருடைய திருமுகத்தைநோக்கிப் புன்னகைசெய்து கடைக்கண் சாத்தியமாத்திரமே முப்புரங்களிலும் படலைத் தீயானது எழுந்தது. [படலை=பரந்தவடிவு.] எ - று.

அருப்ப வெண்ணிறத் துய்யிடைப் பெருங்கன லடுத்தென வணிமூர
லுருத்த வெங்கழற் கொழுந்துற வெண்ணிறத் தடலையி னெழிந்தற்ற
திருத்த மாணிதிச் செல்வரா யிரப்பவர்க் களித்துறுத் தீயோர்தம்
பெருத்த செல்வநீத் தொழிந்தென மடிந்தவப் பெருநகர்ப்புரமூன்றும்

(இ - ள்.) வெண்ணிறம் பொருந்திய அற்பமாகிய [துய்] நூற்கும்பஞ்சின் நுனியில் பெருந்தீயடைந்தாற்போல, அழகிய புன்னகையினின் றெழுந்த கோபாக்கினிக் கொழுந்து பொருந்த, அப்பெரிய நகரங்களாகிய முப்புரங்களும், திருத்தமாகிய பெரிய நிதிச்செல்வராயிருந்தும் யாசித்தோர்க்குக் கொடுத்தல் புரியாத கொடியோராகிய உலோபிகளுடைய, பெரிய செல்வமானது நீங்கிச் சென்றாற்போல வெண்ணிறந்தங்கிய சாம்பராயொழிந்துபோயின. எ - று.

ஆன மாயையி னகப்படா தரனடி யருச்சனைக் குரியோரா
மோன மாதவ ராகிய மூவரு முரிதிரைப் புனற்பூத்த
தேன வாமலர்த் தாமரை யொத்ததம் மனையொடுஞ் சிறப்புற்றார்
பான லங்கருங் கண்ணியோ ரிடத்தனை யடைந்தனர் பணிந்துற்றார்.

(இ - ள்.) ஆகிய திருமாலின் மாயையில் அகப்படாதவர்களாய், சிவபெருமான் திருவடிகளில் அர்ச்சனைசெய்தற்கு அன்புடையவர்களாய், மௌனமும் பெருந்தவநிலையு முடையவர்களாகிய (விரத்தன் பரமயோகன் குணபரனென்னும்) மூவர்களும், முரிகின்ற அலைகளையுடைய நீரில் மலர்ந்த வண்டுகள் விரும்பும் தாமரைமலரையொத்த தமது மாளிகைகளோடும் சிறப்புற்றிருந்தவர்களாய், நீலோற்பலம்போலும் கரிய அழகிய விழிகளையுடைய உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய சிவபெருமானைச் சார்ந்து வணங்கி நின்றார்கள். எ - று. (௨௯௧)

மெய்பொ டித்தனர் கண்கணீர் ததும்பினர் விம்மினர் வியப்புற்றார்
செய்ய தாமரைச் சேவடி யுளம்படச் சிந்தைசெய் தனர்நின்று
ரைய ருங்கவர்க் குறித்துநீர் வேண்டுவ யாவென வருள்செய்தான்
பொய்யில் கேள்வியோர் நந்தியோ டிருங்கடை காப்பது புரிகென்றார்.

(இ - ள்.) உடல்புளகித்தார்கள். கண்களில் ஆநந்தபாஷ்பம் பெருக்கினார்கள். பூரித்தார்கள். சந்தோஷித்தார்கள். செவ்விய தாமரைமலர்போன்ற சிவந்த திருவடிகளை மனதிற்பொருந்தத் தியானித்தார்கள். பணிந்து நின்றார்கள். அப்பொழுது சிவபெருமான் அவர்களைநோக்கி நீங்கள் விரும்புவன யாவையென்று

வினவியருளினர். பொய்ம்மையில்லாத நூற்கேள்வியையுடைய அவர்கள் ஐயனே! அடியேங்கள் நந்தியம் பெருமானுடன் திருக்கடைக் காவல்புரியும்படி அருள் புரிய வேண்டுமென்றார்கள். எ - று. (௨௭௦)

வாலொ ளிப்படு கயிலையங் கிரிதரு சினகர மணிவாய்ந்த
வால யக்கடை காப்பதி யாவர்க்கு மளித்தில மாறுலு
நூலி யற்கையி னுங்களை மகிழ்ந்தன மாதலி னுமக்கந்தக்
கோல வாயில்காப் பளித்தன மென்றனன் குளிர்சடைப் பெருமானே.

(இ - ள்.) வெண்ணிறம் பொருந்திய அழகிய கைலாயகிரியின் திருக்கோயிலினது மணிகள் பதித்த ஆலயவாயிலின் காத்தற்றொழிலை எல்லோருக்குங் கொடுத்திலோம். ஆனபோதிலும், சாத்திரமுறைப்படி நடந்த உங்களை மகிழ்வுற்றோம். ஆனபடியால், அந்த மணந்தங்கிய அழகிய திருவாயில் காக்குந் தொழிலை உங்கட்குக் கொடுத்தோமென்று குளிர்ந்த சடையையுடைய சிவபெருமான் வரங்கொடுத்தனர். எ - று. (௨௭௧)

பங்க யாசனத் தவனையே முதலினோர் யாவர்க்கும் பனிவெற்பின்
மங்கை பாகன்வேண் டினவர மியாவையும் வரன்முறை பணித்தீந்தான்
பொங்கு முப்புரத் தலைவரம் மூவரைக் கணத்தொடும் புகவிட்டா
னெங்க ணாயகன் கணங்களோ டணிமணிக் கயிலையி னினிதுற்றான்.

(இ - ள்.) தாமரைமலர்ப் பீடத்தையுடைய பிரமன் முதலாகிய தேவர்களெல்லாருக்கும், இமாசல புத்திரியாரை வாமபாகத்திலுடைய சிவபெருமான் வேண்டியவரங்களைக் கொடுத்தனர். வரன்முறையாக மேம்பட்ட முப்புரத்திலிருந்து உச்சிவித்த அச்சிறந்தோர் மூவரைச் சிவகணங்களோடுசேர விடைதந்தனர். எங்கள் நாயகனாகிய சிவபெருமான் அதன்பின்னர், சிவகணங்களோடு அழகிய நவரத்தின கசிதமாகிய திருக்கைலாயகிரிக்கு இனிதாக வெழுந்தருளினர்.

பதும பீடிகைத் திருமகட் கிறைவனை முதலினோர் பனிப்பிள்ளைப்
புதுநி லாவணி வேணியோன் றன்செய லினைந்தனர் புதுக்கொண்டா
ரெதுகொ டுந்துய ரடைந்தன நமக்கது தடைப்பதற் கிடைநின்றான்
முதிரு மாதவத் தருமகப் பெற்றவர் காப்பது முனிவாரோ.

(இ - ள்.) செந்தாமரை மலர்ப்பீடத்திலுள்ள திருமகள் கொழுநனாகிய திருமால் முதலாகிய தேவர்கள், இளம்பிறைச் சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமான் திருவருட் செயலைக்கருதி அதிசயித்தார்கள். எந்தக் கொடிய துன்பத்தையடைந்தோமோ. அதனைத் தீர்ப்பதற்குச் சிவபெருமான் நடுவினின்றனர். முதிர்ந்த பெருந்தவஞ்செய்யும் அரியகுழந்தைகளைப் பெற்றோர் அக்குழந்தைகளைக் காப்பாற்றுதற்குக் கோபிப்பார்களோ? கோபிக்கமாட்டார்கள்

வெள்ளை வெண்பொடி யிகந்தவ ருருத்திர மாமணி வெறுப்புற்றார்
தெள்ளு மாமறை யஞ்செழுத் தோதுறார் சிவனருச் சனைசெய்யார்
பள்ள வார்கட லெனுநிலத் தருந்தவம் பற்பல புரிந்தாலுங்
கள்ள வாழ்க்கைய ராங்கவர் கருத்திறை நினைப்பதுங் கடனன்றே.

(இ - ள்.) தாவள்யமான திருவெண்ணீற்றைப் பகைத்தவர்களும், சிறந்த உருத்திராக்க மணியினிடத்தில் வெறுப்பெய்தியவர்களும், பெருமைதங்கிய வேதத்திற் றெள்ளிய பொருளாயுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் சபிக்காதவர்களும் சிவபெருமானை யர்ச்சியாதவர்களும், பள்ளமாகிய நெடியகடல் சூழ்ந்த பெரிய பூமியில் எண்ணிறந்தனவாகிய அரியதவங்களைச் செய்தபோதிலும் கள்ளத்தன்மைபொருந்திய வாழ்க்கையை யுடையவர்களாவார்கள். அவர்களை மனதில் இறைப்பொழுதாவது நினைப்பதிங் கடனன்று. எ - று. (உஎச)

எனமொ ழிக்கொடு மானத வாவியி னெந்தையெம் பெருமானு
மனனு வப்புற வருச்சனை வகுத்தனர் பற்பல மகிழ்பெற்றார்
தனமெ னும்பதத் தடைந்தனர் மன்னரிற் றழைசெவித் தனிப்பூட்கைக்
கனைகு ரற்களி றுரித்தவன் றன்மையாங் கழறுதற் கரிதன்றே.

(இ - ள்.) என்று சொல்லிக்கொண்டு மானததீர்த்தத்தின்கரையில் எமது தந்தையாகிய சிவபெருமானும் மனக்களிப்பெய்தும்படி பூசைபுரிந்து எண்ணிறந்த களிப்பையடைந்தார்கள். தங்கடங்களுக்குரித் தென்னும் பதவிகளில் அரசர்போலச் சார்ந்தார்கள். தழைத்த செவியையும் கிம்புரியணிந்த கோட்டையும் துதிக்கையையுமுடைய பிளிறுகின்ற குரலையுடைய கயாசுரனென்னும் யானையையுரித்துடுத்த சிவபெருமானது சிறப்பு நாம் எடுத்துச் சொல்லுதற்கரிதல்லவா? எ - று. (உஎரு)

திரிபு ரத்தவ ரொருங்கிருந் தருச்சனை செய்திகழ்ந் ததனாலே
யரிதெ னுந்திருப் பெற்றிழந் தனர்கண்முற் புரியருச் சனைப்பேற்றா
லரிய நன்கணத் தலைவராய்ப் பொலிந்தன ருமையிடத் தவற்போற்றித்
தெரித ரப்புரி பூசையா லிமையவர் திரிபுரந் தெறப்பெற்றார்.

(இ - ள்.) திரிபுராசுரர்கள் ஒன்றாய்க்கூடிச் சிவார்ச்சனைசெய்து பின்னர் இகழ்ந்தனரானபடியால், அடைதற்கரிதென்று சொல்லுஞ் செல்வத்தையடையப்பெற்றும் இழந்தவர்களானார்கள். (அவர்களில்மூவர்) பூர்வத்திற்புரிந்த சிவார்ச்சனைப்பலனால், சிவபெருமான்பால் அன்பிற்குரிய நல்ல சிவகணத்தலைவர்களாய் விளங்கினார்கள். உமாதேவியை யிடப்பாகத்திலுடைய அவ்விறைவனைத் துதித்து, பலருமறியும்படி யியற்றிய சிவபூசையால் தேவர்கள் தங்கள் பகையாகிய முப்புரங்களும் அழியப்பெற்றார்கள். எ - று. (உஎசு)

பெறல ரும்பத மிழந்தவா னவர்சிவ னருச்சனை பெறப்பெற்றுங்
குறுபெ ரும்பதம் புகுந்தன ரரியொடு நான்முகத் துயர்புத்தே -
ணறும லர்ப்பழு தகற்றிய பூசையாற் றம்பத நணுகுற்றா
ரறலு வட்டெறி சடையினோன் பூசனை யரிதெமக் கெளிதன்றே.

(இ - ள்.) அடைதற்கரிய தங்கள் பதவியை யிழந்த தேவர்கள் சிவார்ச்சனை மீண்டும் அடையப்பெற்று, அதனாற் பொருந்திய தமது உயர்ந்த பதவிகளை யடைந்தார்கள். திருமாலுடன் நான்குமுகங்களையுடைய உயர்ந்த பிரமனும் குற்றமகற்றிய நல்ல மலர்கொண்டியற்றிய பூசாபலத்தால் தங்கள் பதவியை யடையப்பெற்றார்கள் கங்கையாறு ஊற்றெடுக்கின்ற சடையையுடைய சிவபெருமான் பூசாமகிமையைச் சொல்வது எமக்கு அரிதன்றி எளிதன்று. எ - று. ()

ஆருயிர்ப்பொறை யெடுத்துமா நிலத்துறி னவைகொலப் பட்டனபட்
வார்பு னற்சடைப் புனிதனுக் கருச்சனை வரன்முறை தரவேண்டு [டும்
மோரி னப்பெரும் பூசனைக் கருமமே முதலின வொருங்கியு
மார தற்குள பெருமைபெற் றிசைப்பவ ரெம்மனோர்க் கெளிதன்றே.

(இ - ள்). அரிய உயிர்ச்சுமை தாங்கிப் பெரியபூமியினுதித்தால் கொல்லப் பட்டனவாம். அப்படியாயினும் நீர்ப்பெருக்கமைந்த சடையையுடைய சிவபெருமானை வரன்முறையே அர்ச்சனை செய்யவேண்டும். ஆலோசிக்குமிடத்தில் அவ்வர்ச்சனைத் தொழிலே கருமமுதலியவற்றை ஒருசேர உதவும். ஆனபடியால் அவ்வர்ச்சனைக்குரிய பெருமையையெய்தி விளக்கிச்சொல்வோர் யாவர்? அது எம்மைப்போல்வார்க்கு எளிதானதல்ல. எ - று. (உஎஅ)

மனித ராயினும் வாளெயிற் றசுரரே யாயினு நெடுவானிற்
புனித ராயினும் விஞ்சைய ராயினு மியக்கரா யினும்போற்றற்
கினிய மாதவ ராயினு நாகர்கந் தருவரா யினுமெம்மான்
பனிம லர்ப்பதத் தருச்சனைக் குரியரைப் பரசுறக் கடவாரே.

(இ - ள்.) மனிதர்களானாலும் ஒளிதங்கிய பற்களையுடைய அசுரர்களானாலும் பெரிய ஆகாயத்தில் வசிக்குந் தேவர்களானாலும் வித்தியாதரரானாலும் இயக்கர்களானாலும் துதித்தற்கினியராகிய பெருந்தவசிகளானாலும் நாகர்களானாலும் கந்தர்வர்களானாலும் எமது சிவபெருமானுடைய குளிர்ச்சிவாய்ந்த தாமரைமலர் போன்ற திருவடிகளில் அர்ச்சனைசெய்தற்குரியவர்களைத் துதிசெய்யக் கடமைப் பட்டவர்கள். எ - று. (உஎகூ)

திரிபுரவிசயச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் உஅ க்குத் திருவிருத்தம் ருசகூஉ.

இருபத்தொன்பதாவது

அந்தகாசுரன்வதைச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

மின்னுந் தொளிர்வா ளெயிற்றந்தக வெய்ய தீயோன்
பொன்னுந் தொளிர்வார் சடைப்புங்கவன் பூசை போற்றி
வன்னத் துளவோன் முதற்றேவ ரியவானு ளோருக்
கின்னற் புரிந்தா னதுசூத னியம்ப லுற்றான்.

(இ - ள்.) மின்னல்போன்று பிரகாசிக்கின்ற வெள்ளிய பற்களையுடைய கொடிய தீயோனாகிய அந்தகாசுரன், பொன்போன்று பிரகாசிக்கும் நெடிய சடையையுடைய சிவபெருமான் பூசையைச்செய்து, நிறந்தங்கிய துளசிமாலை தரித்த திருமால்முதலாகிய தேவர்களுக்குத் துன்பம்புரிந்தனன். அச்சரிதையைச் சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லலாயினர். எ - று. (க)

பெயரா வலியந் தகனென்றொரு பேரி னின்றான்
புயலே றுங்கார்த் தங்சாசரன் பொங்கு சேனை
யயல்சூழ் தரவந் தகற்கந்தக னுய தேவை
மயர்வற் றதிறத் தொடும்பூசை வகுத்து நின்றான்.

(இ - ள்.) நீங்காத வல்லபத்தையுடைய அந்தகனென்று ஒப்பற்ற பேர் பெற்று விளங்கியவன் மேகத்திலுண்டாகும் இடிபோன்ற அசுரன் மிக்கசேனை யானது பக்கலிற்சூழ, இயமனுக்கு இயமனாகிய சிவபெருமானை மயக்கமற்ற திட புத்தியோடும் பூசைசெய்துகொண் டிருந்தான். எ - று. (உ)

அரியே முதலா கியதேவரி னுவி நீங்கிப்
பிரியா வரனும் பிறழாவலிப் பேறு முற்றான்
விரிதா ருவினீ ழலின்வெண்குடை மீவி ளங்கப்
புரியா சனத்துற் றவன்றன்னடி போற்ற நின்றான்.

(இ - ள்.) திருமாலே முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களால், தன்னுயிரா னது நீங்கிப் பிரியாதவரத்தையும், தவறுபடாத வல்லபத்தையும் பெற்றனன். விரிந்த கற்பகத்தருவின் நிழலில் சந்திரவட்டக்குடைமேலே பிரகாசிக்கச்செய்த சிங்காதனத்தில் வீற்றிருக்கும் இந்திரனும் தன்னடி பரவவிளங்கினான். எ - று.

பைந்தா தளைசூல் லையந்தாமனைப் பண்டு பூத்த
வந்தா மரையோ னையுமே வலினுடல் கொண்டான்
சந்தா டுபுயத் தினவுற்றனன் றந்த போரிற்
பிந்தா தவரில் லையமர்க்களம் பெற்று ளோரின்.

(இ - ள்.) பசிய மகரந்தத்தோடு அசைகின்ற அழகிய துளசிமாலை தரித்த திருமாலையும் பூர்வம் உலகங்களைப்படைத்த அழகியதாமரை மலர்ப்பீடத்தை யுடைய பிரமனையும் கட்டளையிட்டுத் தொழில்செய்யக் கொண்டனன். சந்த னக்குழம்புபூசிய தோள்கள் தினவெய்தினன். மேற்கொண்டபோரில் யுத்தகளத் தில் எதிர்த்தவர்களில் இவனுக்குப் பிற்பட்டுப் புறமுதுகு காட்டாதவர்களொரு வருமிலர். எ - று. (ச)

எய்தா விடரெய் தினராற்றல மென்ன நின்றார்
மைதா ழுமனத் தனையஞ்சினர் வானு ளோர்கள்
பைதா ழுநடித் தபிரானொடும் பைத லுற்றார்
வைதா ழெயிற்றந் தகன்றன்னை மருங்கு சார்ந்தார்.

(இ - ள்.) தேவர்கள் அதுகாறும் அடையாத துன்பத்தையடைந்து இனிச் சகியோமென்று வஞ்சகம்பொருந்திய நெஞ்சையுடைய அந்தகாசுரனுக்குப் பயந்து, காளிங்கனது பணமுடிதாழும்படி அவன்சிரமிசைநடித்த திருமாலோடு வருந்தினார்கள். கூர்மைபொருந்தித் தாழ்ந்த பற்களையுடைய அந்தகாசுரன் பாலெய்தினார்கள். எ - று. (ரு)

நின்னன் றியெம்மைப் புரந்தாள்பவர் யாவர் நின்று
மின்னுந் துயரெய் தினமென்பது முண்மை யெம்பாற்
பன்னும் பணியைத் தலைக்கொள்ளுதும் பாது காப்பாய்
மின்னுந் தனிக்கூ ரிலைவிட்டு விளங்கும் வேலோய்.

(இ - ள்.) மின்னுகின்ற ஒப்பற்ற கூர்மைவாய்ந்த இலைவடிவேற்றுப் பிரகாசிக்கும் வேற்படைதாங்கிய அந்தகனே! உன்னையன்றி எங்களைக்காத் திரட்சிப்பவர் யாவருளர்? உன்னால் நாங்கள் இன்னுந் துன்பமடைந்தோமென்பது உண்டாகாமல், உன்னுடைய கட்டளைப்படி நாங்கள் பணிசெய்யப் பெறுவாயாக. நீ எங்களைப் பாதுகாப்பாயாக. எ - று. (௬)

என்றா னிமையோ ரொடுசக் கரமேந்து கையான்
குன்றா யதடம் புயநோக் கினன்கூற்ற மன்னான்
பொன்றாழ் மணிமோ லிதுளக் கினன்போற்றி முன்னர்
நின்றான் முகநோக் கினன்மூ ரணிகழ்த்தி னானால்.

(இ - ள்.) என்று சக்கராயுதமேந்திய திருமால் தேவர்களோடு கூடிச்சொல்லினர். [அந்தகன்] இயமன்போன்ற அந்தகன் மலையையொத்த பரந்த தன் தோள்களை நோக்கினன். பொன்மயமாய் இரத்தினங்களிழைத்த கிரீடமணிந்த சிரசையசைத்தனன். துதித்துத்தன் முன்னேநிற்கும் திருமால் முகத்தைநோக்கிப் புன்னகைசெய்தனன். எ - று, (௭)

அடுபோர் வலித்திண் டிறல்வா ளரியேறி யானே
கெடுநா ளுடைநீ விரெல்லோர் களுங்கெண்டை யங்கட்
படுவால் வளைச்செந் துவர்ச்சே யிதழ்ப்பாவை மாரொத்
திடுவீ ரெனச்சொற் றனன்பின் னுமிசைப்ப தானான்.

(இ - ள்.) கொல்லத்தக்க போர் வல்லபமாகிய அடங்காத பராக்கிரமமுடைய ஆண்சிங்கவேறு யானொருவனே. தீர்க்காலமுடைய நீங்களெல்லோரும் அழகிய சேற்கண்டைபோலும் விழிகளையும் வெள்ளிய வளையல்களையும் செம்பவளம்போலும் வாயையும் செவந்த இதழையுமுடைய மாதர்களைப்போன்று திரியக்கடவீரென்றுசொல்லி மேலுங் கட்டளையிடுகின்றான். எ - று. (௮)

செந்தா மரைக்கட் கடையஞ் சனந்தீட்டி யம்பொற்
பைந்தா னையுமன் னவர்க்கொத் தபரிந்தி றுக்கி
யந்தார்க் கிளியென் னமிழற் றியரிக்கு லஞ்சூழ்
கொந்தார் குழலென் னறும்பங் கியுங்கோத் தமைத்து,

(இ - ள்.) செவந்த தாமரைமலர்போன்ற விழிகளின் கடைசியில் மையெழுதி அழகிய பீதாம்பரமும் அம்மாதர்கட்குரியனவாக விரும்பியணிந்து, அழகிய மலர்த்தாறுகளில் வசிக்குங் கிளிபோல வசனித்து, வண்டுகூட்டங்கள் மொய்க்கும் மலர்க்கொத்தணிந்த கூந்தலையுடைய மங்கையர்களாக உமது தலைமயிர்களையுஞ் சீவிமுடித்து. எ - று. (௯)

பூணப் படுபொற் பணியப் பணிபூண்ப தன்றிக்
காணப் பெறினும் முயிரின் றுகழிப்ப துண்டாற்
சேணப் பதமே குதிரென் றனனவ்ன தேவர்
நாணப் படுவா ரலரா விநயந்து சென்றார்.

(இ - ள்.) அணியத்தக்க அழகிய ஆபரணங்கள் அம்மாதர்க்குரியனவற்றை அணிவதல்லாமல் வேறுவகையாகப் பார்க்கப்பெற்றால், அன்றையதினமே உங்களுயிர்கள் போக்கப்படும். அதிதூரமாகச் செல்லக்கடவீர்கள் என்று கட்டளை

செய்தான். அந்தத்தேவர்கள் வெட்கமெய்தாதவர்களாய்த் தங்களுயிரை விரும்பிக் காத்துச்சென்றார்கள். எ - று. (க0)

வெய்யோ னிவைசெப் பலுமா லயன்விண் ணுளோர்கள்
பொய்யா யநுசுப் பினையார் நலம்போற்றி நின்றார்
மையா யமனத் தினனந் தகவாள ரக்கன்
செய்யா தனயா வையும்பின் னருஞ்செய்த டர்த்தான்.

(இ - ள்.) அந்தகாசுரன் இதனைச்சொல்லவும், திருமால் பிரமன் முதலிய தேவர்கள், நுண்ணிய இடையையுடைய மங்கையருருவேற்று விளங்கினர். வஞ்சகநெஞ்சினையுடைய வாளேந்திய அந்தகன் செய்யத்தகாத பலவகைத்துன் பங்களைமேலுஞ் செய்து வருத்தினன். எ - று. (கக)

குயில்போன் மொழிக்கொம் பரனார் குணங்கொண்டு மன்னோ
ரயில்வா ளெயிற்றந் தகன்செய் வனவாற்ற லாராய்ப்
பயினீண் முடிமந் தரஞ்சென் றனர்பண்டை யோர்மூன்
றெயினீ றநகைத் தவற்போற் றியிரந்து நின்றார்.

(இ - ள்.) குயில்போன்ற சொல்லையுடைய பூங்கொம்பையொத்தமாதர்களது குணங்கொண்ட பின்னும், கூர்மைவாய்ந்த வெள்ளியபற்களையுடைய அவ்வந்தகன்செய்யுந் துயரங்களைச்சகிக்கமுடியாதவர்களாய், நெடியசிகரத்தையுடைய மந்தர பர்வதத்தையடைந்து, முற்காலத்தில் ஒப்பற்ற முப்புரங்களுஞ் சாம்பராகப் புன்னகைசெய்த சிவபெருமானைத் துதிசெய்து யாசித்து நின்றார்கள். எ - று.

அங்கோல் வளைபங் கனருச் சனைக்கன்பி னோராய்ச்
செங்கோ கனகத் திருக்கண் ணினன்றேவர் யாருந்
தங்கோல் வளைக்கை கொடருச் சனைதந்து நின்றார்
வெங்கோ லவிடைக் கொடியோ னருண்மிக்கெ ழுந்தான்.

(இ - ள்.) அழகிய வளையலையணிந்த பார்ப்பதிபாகராகிய சிவபெருமானை யர்ச்சிப்பதற்கு அன்புடையவர்களாய், செந்தாமரை மலர்போலும் விழிகளையுடைய திருமால் முதலிய தேவர்களெல்லோரும், தமது அழகியவளையலணிந்த கைகளாற் சிவார்ச்சனை செய்திருந்தார்கள். வலிய அழகமைந்த இடபக்கொடியையுடைய சிவபெருமான் திருவருண் மிகுந்து எழுந்தருளினார். எ - று. (கங)

வள்ளை றியமுத் தலைச்சூற் படைமங்கை பாகன்
வெள்ளை றுகைத்தெய் தலும்வே தபுராத னற்கும்
புள்ளை றுகைத்தோற் கும்விண் ணேயபுத்தே ளிருக்கு
முள்ளை றியிரைத் தெழுந்தார் வமுவட்டெ ழுந்த.

(இ - ள்.) கூர்மைமிக்க முத்தலைவேலாகிய சூலத்தையுடையவரும் பார்வதி பாகருமாகிய சிவபெருமான், வெள்ளிய இடபவாகனமூர்ந்து எழுந்தருளவும் பிரமதேவனுக்கும், கருடவாகனமுடைய விஷ்ணுவுக்கும், ஆகாயத்தில் வசிக்கும் ஏனைத்தேவர்களுக்குஞ் சந்தோஷவெள்ளமானது உள்ளத்திலெழுந்து ஊற்றெடுத்துப்பெருக. எ - று. (கச)

கொலைவா ளெயிற்றந் தகவா சுரன்கூற்ற மன்னு
னிலையா விடர்செய் தனனாற் றலமாகி நின்றேங்

கலைவாண் மதிவாண் முகப்பெண் மைகரந்து நின்று
முலையா வெமக்கின் னலிழைப் பதொழிந்தி லானால்.

(இ - ள்.) கொலைத்தொழில் புரியும் வாள்போலும் பல்லையுடைய அந்தகாசுரன் இயமனையொத்தவனாய், நாங்கள் ஓரிடத்தும் நிற்காமல் துன்புசெய்தனன். சகியாது வருந்துகின்றோம். வெள்ளிய கலைகளையுடைய சந்திரன்போன்ற ஒளிவாய்ந்த முகத்துப் பெண்மைத் தன்மைவகித்து மறைந்து வசித்திருந்தும், எங்களுக்கு நீங்காத துன்புசெய்வதை நீங்கினானில்லை. எ - று. (கரு)

அதுகாத் தெமதா ருயிர்க்கன் பினிரங்கி யைய
புதுவாழ்க் கையளித் தவனேச் சியபுண்ட ழும்பின்
முதுகாற் றுதியன் னதுசெய் யருயன்றி லாயே
லெதுநாட் கரையே றுதுமென் றெடுத்தேத்தி னாரால்.

(இ - ள்.) ஐயனே! எங்கள் அரியவுயிரை அத்துயரத்தினின்றும் காத்து அன்போடு திருவுள்ளமிரங்கிப் புதிய வாழ்வினையநுக்கிரகித்து, அவனடித்த புண்களின் தழும்போடுகூடிய முதுகினை யாறச்செய்தருள்வீராக. அங்ஙனம் திருவருள்செய்யத் திருவுளமியையாவிடின், அடியேங்கள் எந்தக்காலத்தில் இத்துயர்க்கடலினின்றும் கரையேறுவோமென்று பலவாறெடுத்துத் துதிசெய்தார்கள். எ - று. (கசா)

புரமூன்று தழற்பட வாணகை பூத்து நின்ற
சிரமேந்து கரத்தின னாங்கது சிந்தை செய்யா
வரனேங்கிம வானருண் மாமட மங்கை யேவற்
கரவால்வளை யாரொடு நீவிர் கரத்தி ரென்றான்.

(இ - ள்.) திரிபுரங்களும் எரியும்படி ஒள்ளிய புன்னகைசெய்து, பிரமசிரத்தைக் கையிற்றாங்கிய சிவபெருமான், அவர்கள் பிரார்த்தனையைத் திருவுளங்கொண்டு சிறப்புமிக்க இமாசலமன்னன்பெற்ற பெருமைதங்கிய இளமங்கையாகிய உமாதேவியாருடைய ஏவல்புரியும் வெள்ளியவளையலணிந்த கையையுடைய மங்கையர்களோடுஞ் சேர்ந்து, நீங்கள் அவனுக்கு மறையக்கடவீர்களென்று திருவாய் மலர்ந்தருளினர். எ - று. (கஎ)

உமையாளுயிர்ப் பாங்கியர் பாங்கி னுவந்து நிற்பி
னுமையாங்கவ னின்ன லிழைத்திட நோக்கி னேனே
லிமையாமுன மன்னவன் போர்வலி யென்ப தொன்றை
யமையாதுமக் கந்நிலை யஞ்ச லளித்து மென்றான்.

(இ - ள்.) உமாதேவியாருடைய உயிர்த்தோழியரோடு களித்து வசிப்பீரானால், உங்களை அங்கே அவ்வந்தகன் துன்புசெய்யக் கருதின மாத்திரமே இமைக்குங் காலத்திற்கும் முற்பட, அவனுடைய போர்வல்லபமென்பது ஒருசிறிது மமையாமல், உங்கட்கு அக்காலத்தில் அபயங்கொடுப்போமென்று சிவபெருமான் கூறியருளினர். எ - று. (கஅ)

இருளுங்கறைக் கண்டனை வர்க்கென வன்றி ரங்கி
யருளும்படி நின்றன னங்கத ரக்க ரோரா
மருளுந்தனி நெஞ்சொடு வெஞ்சின மாறு கொண்டா
னுருளும்புரி வார்சடை யோன்றிறத் துண்மை யோர்வான்.

(இ - ள்.) இருணிறந்தங்கிய நீலகண்டத்தையுடைய சிவபெருமான் அத்தேவர்களுக்காக அப்பொழுது மனமிரங்கித் திருவருள்புரியத் திருவுள்ளங்கொண்டனரென்பதை அந்தகாசுரன் உணராதவனாகி மயக்கெய்திய ஒப்பற்ற மனத்துடன் கொடுங்கோபம் பொருந்திய பகைமையெய்தி, புரிந்து புரள்கின்ற நெடிய சடையையுடைய சிவபெருமான் திறத்தில் உண்மையுணரக்கருதி. எ - று. ()

வெள்ளப்படை கொண்டொரு மந்தர வெற்பி னெய்தி
வள்ளைக்குழை மங்கைய ரென்ன வளைந்து நின்ற
பள்ளத்திருப் பாற்கட லோன்முதற் பண்ண வர்க்கன்
றுள்ளப்பய மெய்துற வெம்மை யுடற்றி நின்றான்.

(இ - ள்.) வெள்ளமென்னுந் தொகைகொண்ட சேனையோடு, ஒப்பற்ற மந்தரமலையையடைந்து குண்டலமணிந்த வள்ளைக்கொடிபோன்ற செவியையுடைய மாதர்கள்போலச் சூழ்ந்துநின்ற ஆழமாகிய திருப்பாற்கடலில் துயிலும் திருமால் முதலாகிய தேவர்களுக்கு மனதிற் பயமெய்தும்படி கொடுமைசெய்து கொண்டிருந்தான். எ - று. (உ௦)

அன்னானம ராடலுக் கஞ்சியன் னோர கன்று
பொன்னார்கயி லைத்திரு வாயில்பு குந்து நின்றார்
பன்னாகம ணித்துணை நூபுரப் பங்க யத்தோன்
முன்னாவடு கக்கட் வுட்கவன் மொய்ம்பு ரைத்து.

(இ - ள்.) அவ்வந்தகன் போர்செய்தற்குப் பயந்து அத்தேவர்கள் மந்தரகிரியைநீங்கி அழகுபொருந்திய திருக்கைலாயகிரியின் திருவாயிலையடைந்து நின்றார்கள். சர்ப்பங்களையணிந்த பாதசரமாகக்கொண்ட உபயதாமரை மலர்போன்ற பாதங்களையுடைய சிவபெருமான் வடுகக்கடவுளைக்கருதி அவ்வந்தகன் வல்லமையை வெளியிட்டு. எ - று. (உக)

பன்னாகம்=காளி காளாஸ்திரி யமன் யமதூதனென்னும் விஷப்பற்களையுடைய நாகம், அல்லது பலநாகம் என்று பொருள்படும்.

சென்றுற்றவ னாவி செகுத்திடு மாறு செப்பக்
குன்றொத்த புயக்கட வுட்குவெங் கோப முற்றி
யன்றற்றெறு வாளெயிற் றந்தக னாவி யுண்பா
னென்றொத்தெரி கட்கணத் தோரொடு மெய்தி னானால்.

(இ - ள்.) அவன்பாற்சென்று உயிர்வாங்கும்படி கட்டளையிட, விந்தகிரியைப்போன்ற தோள்களையுடைய வைரவக்கடவுளுக்குப் பெருங்கோபமெய்தி, அப்பொழுது அந்த அந்தகாசுரனுயிரைப் பருகும்படி சூரியன் போன்று பிரகாசிக்கும் விழிகளையுடைய தமது கணங்களோடும் வைரவக்கடவுள் அவன்பாலடைந்தனர். எ - று. (உஉ)

கண்டானது திண்டிற லந்தகன் கால னேப்பான்
கொண்டான்வட வைக்கு நிகர்த்தெரி கோப வெந்தீ
மண்டாவமர் தம்மின் மலைந்தனர் வாள ரக்கர்
திண்டாடின ரஞ்சின ரந்தரத் தேவர் யாரும்.

(இ - ள்.) இயமனை யொத்தவனாகிய மிக்கவல்லபமுடைய அந்தகாசுரன் அதனைக்கண்டு, வடவாமுகாக்கினிக்குச் சமானமாகி யெரிகின்ற கொடிய கோபாக்கினி கொண்டனன். அதனால் அவ்விருதிறத்தரும் நெருங்கித் தம்முட்போர் செய்தனர். வாளேந்திய அசுரர்கள் வருந்தினார்கள். ஆகாயவாசிகளாகிய தேவர்களெல்லாரும் பயந்தார்கள். எ - று. (௨௩)

முறிபட்டன வாளெயிற் றந்தகன் மொய்த்த சேனை
தறிபட்டது தண்டொடு சக்கரம் பிண்டி பாலம்
பொறிபட்டது மண்படு தூளி பொதிந்த வானம்
பறிபட்டன செங்கதி ரோனுடைப் பச்சை வாமா.

(இ - ள்.) வாள்போலும் பற்களையுடைய அந்தகாசுரனுடைய நெருங்கிய சேனைகள் முறிபட்டன. தண்டு சக்கரம் பிண்டிபாலமுதலிய ஆயுதங்கள் ஒடிபட்டன. மண்படுபுழுதியானது எங்கும் பரவியது. ஆகாயத்தைமூடியது. சிவந்த கிரணங்களையுடைய சூரியன் தேரிற்பூட்டிய தாவிச்செல்லும் பசுநிறந்தங்கிய குதிரைகள் நடைதவறி வழுக்கின. எ - று. (௨௪)

துள்ளுந்திரை யோடு பரந்தது சோரி வாரி
கொள்ளுந்திற னின்றி நெடுங்கடல் கோத்த லைப்பக்
கள்ளுண்புலை யாக்கைய ராவி கழிந்து பட்டா
ருள்ளுஞ்சின வந்தக னெஞ்சமு ருத்த ழன்றான்.

(இ - ள்.) அப்பொழு துண்டாகிய உதிரவெள்ளத்தைக் கடலானது அடக்கிக்கொள்ளுந் திறனில்லாமல் பெரிய கடலானது கலந்து அலைக்கும்படி துள்ளுகின்ற அலையுடன் கூடிப்பரவியது. கள்ளைக்குடிக்கும் புலைத்தன்மை பொருந்திய உடலையுடைய அசுரர்கள் உயிர்நீங்கி யிறந்தார்கள். நினைக்கத்தக்க கோபத்தையுடைய அந்தகாசுரன் கோபித்துக்கொதித்தான். எ - று. (௨௫)

வடுகக்கட வுட்பெருந் தேவனும் வாளெ யிற்றுக்
கடுவொத்தெழு மந்தக னோடு கன்ன்று நின்றா
னடுவுற்றனன் வெள்ளிகை தந்தரு ணன்ம ருந்து
கொடுபெற்றன ராவி யிறந்தவக் கொண்ட லொப்பார்.

(இ - ள்.) வைரவக் கடவுளாகிய பெருவல்லபமுடைய தேவனும் வாட்படைபோலும் பல்லையுடைய விஷத்தன்மையோடோங்கிய அந்தகாசுரனோடு கோபித்துப் போர்க்கு நின்றனர். வெள்ளியாகிய சுக்கிரபகவான் போர்க்களத்திடையே யெய்திக்கொடுத்த நல்ல அமிர்த சஞ்சீவிமருந்தினால், முன்னேயிறந்த மேகநிறந்தங்கிய அவ்வசுரர்கள் மீண்டும் உயிர்பெற்றெழுந்தார்கள், எ - று. ()

அக்கண்மய மில்லவ ராவி யடைந்த வாறுந்
திக்கண்ணி நெடுஞ்செரு வன்னவர் செய்த வாறு
முக்கண்ண னுணர்ந்தனன் வெள்ளியை முன்ன ரள்ளி
விக்கின்றில னெய்தி னெடுத்து விழுங்கி னானால்.

(இ - ள்.) பட்சமில்லாத அவ்வசுரர்கள் உயிர்பெற்ற வகையும், அக்கொடியோர திசைகடோறுங் கலந்து பெரும்போர்புரிந்த வகையையும், திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருவுளத்துணர்ந்து (அவனால் அத்துன்பங்கள் பெருகுதலின் அவற்றையகற்ற) முற்பட வெள்ளியைவாரி யெடுத்து வாயிலகப்படாமல் இலேசாக விழுங்கி வயிற்றிலடக்கினர். எ - று. (௨௭)

மல்லாடு தடம்படு திண்புய மாகணத் தோர்
கொல்லாவசு ரப்பெருந் தானைகு றைத்த றுத்தார்
செல்லாவடு கத்தனி நாதனுந் திண்டி றற்போர்
வல்லானு மெதிர்த்தன ரூழிம லைந்து நின்றார்.

(இ - ள்.) மற்போர்புரியும் பரந்த வலியதோள்களையுடைய பெரியகணத் தலைவர்கள், கொல்லமுடியாத பெரிய அசுரச்சேனையைக் குறைவுறும்படி வெட்டியழித்தார்கள். பிறர்வல்லபம் தம்மீது செல்லாத ஒப்பற்ற வைரவப் பெருமானும், திண்ணியவலிய போர்புரிதலில் வன்மையுற்றோனாகிய அந்தகாசுரனும் ஒருவரோடொருவ ரெதிர்ந்து யுகாந்தம்போலப் போர்புரிந்தார்கள். ()

ஞாலப்படு மன்னுயி ரியாவுந டுங்க வூழிக்
காலக்கட லென்னவ ருந்தறு கட்க டுந்தீ
யாலத்திரு ளேறெனு மந்தகன் றன்னை மின்னுஞ்
சூலத்தொடு குத்தியெ டுத்தனன் றொல்லை யோனே.

(இ - ள்.) உலகிலுண்டாகிய நிலைபெற்ற உயிர்கள்யாவும் நடுங்கும்படி, பிரளயகால சமுத்திரம்போல வரும், அஞ்சாமையையுடைய ஆலாலவிஷத்தினைப் போற்கறுத்தும், ஆண்சிங்கத்தையொத்தும் விளங்கிய அந்தகாசுரனை, பழையோனாகிய வைரவக்கடவுள் பிரகாசிக்கின்ற சூலாயுதத்தாற்குத்தி மேலேதூக்கிக் கொண்டனர். எ - று. (உகூ)

பத்தாயிர கோடியெ னும்பரு வங்க டக்க
முத்தாரை யயிற்படை கொண்டனன் மொய்த்த சோரி
நெய்த்தாரை யுணங்கி யொழுக்குற நின்ற நீதி
பொய்த்தானை யுணக்கினன் வெந்திறற் பூத நாதன்.

(இ - ள்.) பத்தாயிரகோடி வருஷங்கள் கழிய, முத்தலைகள் பொருந்திய சூலமுனையில் அந்தகாசுரனைத் தாங்கினர். நெருங்கிய உதிரவெள்ளமெல்லா மொழுகி, ஒழுக்கமாகிய நீதிமார்க்கத்தினின்று பொய்த்துத்தவறிய அந்தகனை, வெவ்விய வல்லபமுடைய பூதகணங்கட் கிறைவராகிய வைரவக்கடவுள் உலர்த்தினர். எ - று. (௩௦)

முதலிக்கனை நெற்றிவி ழிக்கனன் மூட்டி வென்ற
குதலைக்கொடி பங்கனி டத்தெதிர் கொண்டு சென்றான்
விதலைப்படு வெந்திற லந்தக வெய்ய னைக்கார்க்
கதலிக்கொடி யாமென முன்னரிற் காட்டி னால்.

(இ - ள்.) பூர்வத்தில், கருப்புவில்லியாகிய மன்மதனைத் திருநெற்றிவிழியி லுண்டாகிய தீயைமூட்டி யெரித்துச்சயித்த, மழலைச்சொல்லையுடைய பூங்கொடிபோன்ற உமாதேவிபாகராகிய சிவபெருமானிடத்தில் நேரே தூக்கிச்சென்றனர். மிக்கவல்லபமுடைய அந்தகாசுரனெனும் நடுக்கமெய்தியிருக்குங் கொடியோனை, கரிய [கதலிக்கொடி] விருதுக்கொடிபோலத் திருமுன்னர்க்காட்டினார். எ - று.

கைகாலிடை தூங்குற வீங்குக டற்க டுங்கார்
மைகான்மணி கண்டனை யந்தகன் வாய்வ ழுத்த
நெய்கானெடு முச்சிகைச் சூற்படை நீக்கி நோக்கி
யுய்காரணம் வேண்டுவ யாகொலு ரைத்தி யென்றான்.

(இ - ள்.) அந்தகாசுரன் (சூலநுனியிலிருந்துகொண்டு) கைகாலும் இடை யேதொங்கும்படியிருந்து, கடல்போலுங் கொடிய கருநிறந்தங்கிய விஷம்பொ ருந்திய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானை வாயாற்றுதிசெய்ய, நெய்பூசிய முத்தலையையுடைய சூலாயுதத்தின் முனையினின்றகற்றி அவனைப்பார்த்து, நீ உச்சீவிக்குங்காரணமாக யாதுவேண்டுவது? சொல்லுக வென்றனர். எ - று. ()

மாதுக்கொரு பங்கனை யங்ஙன் வணங்கி யைய
பூதர்க்கொரு நாயக னாகுதல் போற்றி நின்றே
னீதக்க தெனப்பணி யென்றுங் கழ்த்தி னனப்
போதத்தலை யன்னவற் காதுபு ரிந்த ளித்தான்.

(இ - ள்.) உமாதேவிக்கு ஒருபாகமாகவுள்ள சிவபெருமானைப்பணிந்து, ஐயனே! பூதகணங்கட்கு ஒப்பற்ற தலைவனாகுதலை விரும்பி நின்றேன். தேவரீர் இது தக்கதென்று கட்டளையிட்டருள வேண்டுமென விண்ணப்பித்தனன். அப் பொழுது சிவபெருமான் அத்தலைமைத் தன்மையை அந்த அந்தகாசுரனுக்குப் பிரசாதித்தருளினர். எ - று. (௫௩)

மேற்படி வேறு.

பிரசு ரன்றனை யுதரம்வைத் தருளிய பெம்மா
னுரவு மன்னவன் செருக்கொழிந் ததுகருத் துணர்ந்தான்
மரபி னீட்டிய வருடமை யாயிரத் திரட்டி
விரவி நீங்கிய பின்னரின் வெள்ளிடை விடுத்தான்.

(இ - ள்.) சுக்கிரனைத் திருவயிற்றிலடக்கிய சிவபெருமான், வலிதங்கிய அவனுடைய இறுமாப்பை விலக்கி யருளியதைத் திருவுளத்துணர்ந்து, முறைப் படி நீடித்த பதினாயிரவருடங்கள் கலந்துகழிந்தபிறகு, வெளியேவரும்படி (அச் சுக்கிரனை) விடுத்தருளினர். எ - று. (௫௪)

முக்க ணாயகன் றிருவுத ரத்தொடு முயங்கிச்
சுக்கி லத்தொடுந் தோய்தலாற் சுக்கிர னெனும்பேர்
தக்கு நின்றனன் பார்க்கவன் றயங்குநாட் கிரகம்
புக்க பேரொளி மழுங்குற விளங்கொளி பொலிந்தான்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் திருவயிற்றிற்பொ ருந்திச் சுக்கிலத்துடன் படிந்து வந்தமையால், சுக்கிரனென்னும் பெயர்திருத்த மாகப் பொருந்தினன். [பார்க்கவன்] சுக்கிரன் பிரகாசிக்கின்ற தினத்தில் கிர கங்கள் தமது பேரொளி மழுங்கும்படி விளங்குகின்ற தேஜஸோடு பொருந்தி னான். எ - று. (௫௫)

ஆட ராப்புனை வேணியோற் கருச்சனை யயர்ந்து
பாட கன்றுதன் னிலைபுகுந் தடைந்தனன் பன்னு
ளோட ரித்தடங் கண்ணிய ருருவுகொண் டடைந்த
..ட நீத்தனர் யாவருந் தம்பதந் தொக்கார்.

(இ - ள்.) ஆடுகின்ற சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சிவபெருமானை யர்ச்சனைசெய்து, அந்தகன் தனக்குற்ற துன்பநீங்கித் தனக்களித்த தலைமை நிலைமையை யெய்தினன். பலகாலம், நீண்ட அரிபரந்த விசாலித்த கண்களை யுடைய மாதருருவேற்ற தேவர்களெல்லாரும் தங்கட்குற்ற தோஷத்தை விலக்கித் தத்தம் பதவிகளையடைந்தார்கள். எ - று. (௩௯)

அந்தகாசுரன்வதைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௨௯-க்குத் திருவிருத்தம். ௩௫௨௮.

முப்பதாவது
பண்டாசுரன்வதைச் சருக்கம்.

இனிப்பு கன்றன யாவையு மொழியமற் றின்னும்
பனிக்கொ டுஞ்சடைப் பண்ணவன் பூசனை பயின்று
தனிப்பெ ரும்பதம் பெற்றன வுரைக்குதுந் தவத்தீர்
கனித்த சிந்தையிற் கேட்கெனப் பின்னருங் கழறும்,

(இ - ள்.) இதுகாறுங் கூறியவையாவும் நீங்க, குளிர்ச்சிவாய்ந்த வளைந்த சடையையுடைய சிவபெருமான் பூசையைச்செய்து ஒப்பற்ற சிறந்தபதவிகளெய்திய சரிதையை இன்னுஞ் சொல்லுகின்றோம். தவசிந்தையுடையவர்களே! கனிவுற்றமனதோடுங் கேட்கக்கடவீர்களென்று சூதமுனிவர் மேலுஞ்சொல்லத் தொடங்கினர். எ - று. (௧)

ககன முற்றன விளநிலா வெறித்திடுங் கயிலைச்
சிகர நீத்தெழு மகேச்சுர னுமையொடுஞ் செல்லா
நகைமு கிழ்த்தல ரிருஞ்சினை நறுந்தழைப் பொதும்ப
ரகவை நோக்குவான் கணத்தொடு மினிதெழுந் தருள.

(இ - ள்.) ஆகாயமளாவி, இளஞ்சந்திரிகையை வீசுந் திருக்கைலாயகிரியையகன்று எழுந்தருளிய சிவபெருமான் உமாதேவியாரோடுஞ்சென்று ஒளிவிட்டு மலர்ந்த பெரிய கிளைகளையும் நறுமணமமைந்த இலைகளையுமுடைய மலர்ச்சோலையைப் பார்க்கும்படி சிவகணங்களோடும் இனிதாக எழுந்தருள. எ - று.

கனைகு ரற்சுரும் பினத்தொடுந் துதைந்தெழு கற்றை
வனைம லர்க்குழ லம்பிகை மலர்க்கரந் தாங்கப்
புனைபு னற்சடை யெம்பிரான் பொன்னடி சாத்த
வனைய சோலைமற் றியாவையும் பவித்திர மடைந்த.

(இ - ள்.) ஒலிக்கின்ற குரலையுடைய வண்டுகள் கூட்டத்தோடு மூழ்கியெழுகின்ற கற்றையாகிய அலங்கரிக்கின்ற மலர்களையணிந்த கூந்தலையுடைய உமாபிராட்டியார் அம்மலர்களைத் தமது திருக்கரத்திற்றாங்கவும், கங்காசலத்தைத் தரித்த சடையையுடைய எமது சிவபெருமான் அழகிய திருவடியில் சாத்தவும்; அந்தச்சோலைமுழுவதும் புனிதத்தன்மை யடைந்தது. எ - று. (௩)

குழைத்த மென்சினைக் கொம்பர்சூழ் பொதும்பர்காப் புடையோ
ருழைத்தி ருக்கரத் தெந்தையை யுமையொடும் வணங்கத்
தழைத்த மல்லிகைப் பூங்கொடி தவழ்ந்தல ருயிர்க்கு
மிழைத்த மென்கனிப் படப்பைமுற் றெங்கணு மெய்தி.

(இ - ள்.) தளிர்த்த மெல்லிய அரும்புகளையுடைய பூங்கொம்புகள் சூழ்ந்த சோலையைக் காவற்றொழில் செய்வோர், மானேந்திய திருக்கரத்தையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானை உமாதேவியாரோடும் பணிந்து ஏவல்புரிய, தழைத்த மல்லிகையின் அழகிய கொடிபடர்ந்து மலர்கள் சொரியும் மெல்லிய கனிகள் மிகுந்த சோலைமுழுதும் யாண்டும் சென்றுலாவி. எ - று. (௪)

திருக்க ணோக்கின னெந்தைதன் னிடம்படு தேவி
யருட்க ணோக்கின ளாதலா லாங்கவை யனைத்து
மருக்க நிற்பன யாவையு மருத்தன வினிமேற்
குருக்க வேண்டுவ யாவையுங் குருத்தெழுந் தனவால்.

(இ - ள்.) எமது தந்தையாகிய சிவபெருமான் திருக்கண்ணோக்கஞ் செய்தருளினர். அவ்விறைவருடைய வாமபாகத்தி லெழுந்தருளிய உமாதேவியாரும் கிருபாநோக்கஞ் செய்தருளினர். ஆதலால் அப்பொழுது அவை யெவற்றிலும் மணந்தருவன வெல்லாம் மணஞ்செய்தன. இனிமேல் தளிர்விடவேண்டுவன வெல்லாம் அப்பொழுது தளிர்விட்டெழுந்தன. எ - று. (௫)

கனிய நிற்பன கனிந்தன முகையலம் பொதும்பர்
பனிந றுந்தளி ரீன்றன பூத்தன பசும்பொற்
புனித மென்கனி தூக்கின பொலம்பணைச் சினைக்க
ணனிந றுங்கனி காலநீத் தளித்தன நடுவண்.

(இ - ள்.) பழுக்கவேண்டி யிருந்தனவெல்லாம் பழுத்தன. அவ்வழகிய சோலையிலுள்ள மரங்கள் மொட்டுகளையும் குளிர்ச்சிவாய்ந்த மணமமைந்த தளிர்களையுந்தந்தன. மலர்ந்தன. பசியபொன்னிறந்தங்கிய பரிசுத்தமான மெல்லியபழங்களையேந்தின. அழகிய கிளைத்த கிளைகளில் மிக்க நறுமணங்கமழும் பழங்களைக் காலங்கடந்தும் இடையே கொடுத்தன. எ - று. (௬)

சந்த வார்பொழிற் றடம்பணைத் தழைமுகத் தீன்ற
பைந்த ளிர்ப்புறத் திழிந்தன கிடந்தன பசுந்தா
துந்த ரும்பசும் பொற்றகட் டொருங்குறக் கவிழ்த்த
சிந்து ரத்துக ளாமெனச் சினைதொ றுஞ் சிறந்த.

(இ - ள்.) அழகிய நெடியசோலையில் விசாலமான கிளைகளிலுள்ள தழைகளினுனியிற் றந்தபசிய தளிர்ப்புறத்திலே இழிந்தனவாய், பசியமகரந்தங்கள் கிளைத்தற்கரிய பசும்பொற்றகட்டிலே ஒருசேரக்கவிழ்த்த சிந்துரப்பொடிபோலக்கிளைகடோறுஞ் சிறந்தனவாகி விளங்கின. எ - று. (௭)

அள்ளி யப்புற நிழற்றிய வாரிருட் பிழம்பை
வெள்ள வேணியி னிடைப்படு வெண்ணிலாக் குழவிப்
பிள்ளை வாணிலாக் கவர்ந்ததப் பெருநிலாப் பரப்பை
வள்ள னெற்றியங் கட்கடை நுகர்வதோர் மருங்கு.

(இ - ள்.) அப்புறத்திலே நிழல்செய்யும் நிறைந்த விருட்டொகுதியை யள்ளியெடுத்து, சிவபெருமானது கங்காசலம் பொருந்திய சடையினிடையே யுள்ள வெள்ளிய சந்திரிகையைவீசும் இளம்பிறைச் சந்திரனுடைய ஒளிதங்கிய சந்திரிகையானது கவர்ந்துகொண்டது. அப்பெரிய சந்திரிகையின் ஒளியை, சிவபெருமானுடைய அழகிய திருநெற்றிவிழியின் கடைநோக்கானது பருகுவதும் ஓர்புறத்திலுள்ளது. எ - று. (அ)

குழைப்ப சும்பொனி னவமணி குயிற்றிய கொம்ப
ரிழைத்த பேரொளி கலத்தலா லிராப்பக லென்ன
விழைத்த சிந்தையிற் பகுத்துணர்ந் தறிவரி தெஃதுற்
றழைத்த பூம்பொழிற் கேதுமற் றறிவரோ தக்கோர்.

(இ - ள்.) தளிர்களாகிய பசிய பொன்னினிடத்தில் நவரத்தின கசிதமாகிய மலர்க்கொம்புகள் உண்டுசெய்த பெருங்காந்தி விராவுவதனால், இரவென்றும் பகலென்றும் விரும்பிய மனத்தோடு பிரித்துணர்ந்தறிதல் அருமையென்று சொல்வோமானால், தழைத்துச் செழித்துள்ள அம்மலர்ச்சோலைக்குக் காரணம் இஃதென்று மேலோரும் அறிவார்களோ? அறியார்கள். எ - று. (௯)

வெள்ளி வெண்டிரை நுரைதிரைத் திரங்குபால் வேலை
நள்ளு மந்தரந் திரித்தமு தெடுக்குநா ளலங்கற்
றெள்ளு தேத்துழா யவனுருத் தெறித்தபே ரமுதப்
புள்ளி யொத்தென மலர்ந்தன கருஞ்சினைப் புன்னை.

(இ - ள்.) வெண்பொன்போலத் தாவள்யமான அலைகளையும் நுரையையும் வரிசையாகக்காட்டி யொலிக்கின்ற பாற்கடலை மந்தரகிரியாகிய மத்தினாற்கடைந்து அமுதத்தை யெடுத்த அக்காலத்தில், தெளிந்த தேனொழுகுகின்ற துளசிமாலைதரித்த திருமாலுடலின்மேல் தெறித்துவீசிய யெரிய அமிர்த பிந்துக்களைப் போலக் கரிய கிளைகளையுடைய புன்னைமரங்கள் புட்பித்திருந்தன. எ - று. ()

புன்னை திருமாலும், மலர்கள் அமிர்த பிந்துக்களுமாம்.

ஈர நாண்மல ரொருசினை யீர்ங்கனி யொருபாற்
பூரி யேந்திய தொருசினை பொலங்கல னொருபா
லார மேந்திய தொருசினை யிரப்பவர்க் களிப்பான்
சாரு மன்பினர் போன்றன தெய்வமாத் தருக்கள்.

(இ - ள்.) அங்குள்ள தெய்வீகம் பொருந்திய பெரிய தருக்கள், குளிர்ச்சிவாய்ந்த அன்றலர்ந்த மலர்களொருகிளையாலும், அழகிய பழங்கள் ஒருகிளையாலும், பொன்னைத்தாங்கிநிற்கும் ஒருகிளையாலும், பொன்னாலாகிய ஆபரணங்களைப் பெற்றுள்ள ஒருகிளையாலும், சந்தனத்தை யேந்திநிற்கும் ஒருகிளையாலும், தம்மையாசிப்பவர்க்குக் கொடுத்துதவப் பொருந்திய அன்புடையவர்களைப்போன்றிருந்தன. எ - று. (௧௧)

பலங்கள் யாவையும் பொதிந்தன பாசடை பரப்பிப்
புலங்க ளெய்துறு திருஞ்சினை நெருங்கிமீப் போகிக்
குலங்கொண் மாநிதி பொதுக்கிநல் குரவினர்க் குதவா
வலங்கு செல்வரை நிகர்த்தன மாம்பொழி லடவி.

(இ-ள்.) அங்குள்ள மாமரச்சோலைகள் எல்லாப்பழங்களையும் பொதிந்துள்ளனவும், பசிய இலைகளைப்பரப்பிக்கொண்டு கட்புலங்கட்குக் கண்டடையப்பெறுமற் பெரிய கிளைகள் நெருக்கமாகி மேலேயுயர்ந்து, கூட்டமாகிய பெருஞ்செல்வத்தை மறைத்து, தம்மையடுத்த வறிஞர்கட்குக் கொடாமல் வஞ்சிக்குஞ் செல்வர்களைப் போன்றுவிளங்கின. எ-று. (கஉ)

ஊடொ துங்கினர்க் கின்னிழ லினிதென வுதவித்
தோட விழ்ந்தபூங் கரங்களுக கணித்தெனத் துணர்த்துப்
பாடி ரந்தனர் கொண்மெனப் பொன்பரப் பினர்போற்
கோட ரந்தொறு மலர்ந்தன பொன்னிறக் கொன்றை.

(இ-ள்.) பொன்னிறந் தங்கிய மலர்களையுடைய கொன்றை மரங்கள் தம்பாலடைந்தவர்களுக்கு இனியநிழலை நன்றாகக்கொடுத்து, இதழ்கள் விகசித்த மலர்கள் கைகளுக்குச் சமீபமாகத் தொத்துகளையுடைத்தாய், தம்பால் யாசித்தவர் கொள்ளக்கடவரென்று பொன்னைப்பரப்பி வைத்தார்போல, சோலைகடோறும் புட்பித்திருந்தன. எ-று. (கங)

மறிக்கொ ழுங்கதிர் முழுநிலா வாலிளங் குழவி
யெறித்த வார்ச்சடை யெம்பிராற் கினிதென லாக
வெறித்த செங்கதிர்ச் சிறுவரங் கதுகொடு வெதும்பிக்
குறித்து நோக்குறுந் தன்மையொத் தலர்ந்தன கோங்கம்.

(இ-ள்.) மான்பொருந்திய கொழுவிய கிரணங்களையுடைய வெள்ளிய இளம்பிறைச்சந்திரன் பூரணசந்திரிகையைவீசும் நெடியசடையையுடைய எமது சிவபெருமானுக்கு இனிதென்று சொல்லும்படியாய் விட்டமையின், அதுகாரணமாகக் கோபித்த சிவந்த கிரணங்களையுடைய பாலசூரியர்கள் மனம்வெதும்பிக் குறிப்பாகப் பார்க்குந்தன்மைபோலக் கோங்கமலர்கள் பூத்திருந்தன. எ-று.

கார்த்தி கேயனைக் கடற்படு மாமுத றடிய
மீத்த தும்புசெங் குருதியின் மிதந்திள மென்கால்
சாய்த்தி றுந்தொறு மசைந்தகன் றடம்பணை குழைந்து
பூத்த பாசடைக் கிடையிடை பிண்டிபூத் தலர்ந்த.

(இ-ள்.) கிருத்திகாசுதனாகிய குமாரக்கடவுள், கடலினிடத்தேதோன்றிய சூரபன்மனாகிய அம்மாமரத்தைச்சேதிக்க, மேலேததும்பிய செவ்விய உதிரம்போல மிதந்து, மெல்லிய இளங்காற்றுவீசி அசைக்குந்தோறும் அசைந்து அகன்ற விசாலமான கிளைகள் தளிர்விட்டு மலர்ந்த பசிய இலைகளுக்கு இடையிடையே பூத்தலர்ந்த அசோகமரங்களிருந்தன. எ-று. (கசு)

ஓரந் தாங்கிய வேர்முதற் றடம்பணை யுமிழ்ந்த
வாரந் தாங்கிய சினைதொறுங் குடக்கனி வழங்கி
யீரந் தாங்கிய கருணையி னிருங்கிளை பொறுக்கும்
பாரந் தாங்குறு மொருவனைப் பொருவின பனசம்.

(இ-ள்.) அங்குள்ள [பனசம்] வேர்ப்பலாமரங்கள், பக்கங்களிற்றூங்கிய வேர்முதலாக, பரந்த கிளைகள்தந்த உருட்சிவாய்ந்த சிறுகிளைகளிலும் குடம்போன்ற பெரிய பலாக்கனிகளைத்தந்து, அன்புபொருந்திய கிருபையினால் பெரிய [கிளைகளை] சுற்றத்தாரைக்காப்பாற்றும் பாரத்தைத் தாங்குகின்ற ஒருவனையொத்திருந்தன. எ-று. (சுகூ)

ஒருங்கு வார்கலை மதிபிதிர்த் துருட்டிய வனைய
வரும்பு முல்லைமீப் பந்தரி னிடைமிடைந் தலர்ந்த
பிரிந்து சேயொளி யுடுக்குலம் பிறழ்ந்தக னெடுவான்
றிரிந்து துண்டமிட் டகனிலங் கிடப்பன சிவணும்.

(இ - ள்.) நெடியகலைகளையுடைய சந்திரனை யொருசேரப்பிழிந்து உருட்டினாற்போன்ற மேலேயரும்பிய முல்லைப்பந்தரில் இடையிடையே மலர்ந்துள்ள தோற்றமானது, பிரிந்துநின்று அதிதூரத்தி லிருந்து ஒளியைச்செய்யும் நட்சத்திர கூட்டங்கள் நெடிய ஆகாயத்தினின்று நீங்கிச் சஞ்சரித்துத் துண்டமிடப்பட்டுப் பெரியபூமியி லிருப்பனபோலும். எ - று. (கஎ)

மழுப்ப சும்பிறை நெற்றியோர் மரகதக் கொம்பர்
மிழற்று வாய்மலர்க் குவமையொத் திலமென வெள்கி
யுழக்கு துன்பொடுங் கண்டக மூடறுத் திடமென்
பழத்தொ டுந்தலை கவிழ்ந்தது மாதுளம் படப்பை.

(இ - ள்.) பசிய இளம்பிறைபோன்ற நெற்றியையுடைய ஒருமரகதக்கொடியொத்த பெண்ணின் பேசுகின்ற வாய்மலருக்குச் சமானமானேமில்லையென்று மாதுளங் கொல்லையானது வெட்கமடைந்து, வருத்துகின்ற துன்பத்தோடு கண்டகம் தம்மை ஊடறுக்கும்படி, மெல்லிய பழங்களோடும் தலைகவிழ்ந்துள்ளது. எ - று. கண்டகம்=காடு; நீர்முள்ளி. (கஅ)

இனைய காவகத் துழைதொறு முழைதொறு மியங்கிப்
புனைக ருங்குழ லுமையொடு நோக்கினன் புகலு
மனைய பூம்பொழி லகத்தையுட் பளிங்கரிந் துடுதத
வனைம லர்க்குழாம் பொதுளிய தடத்தயல் வந்தான்.

(இ - ள்.) இத்தகைச் சிறப்புவாய்ந்த சோலையின் இடந்தோறும் இடந்தோறும் சஞ்சரித்து, சிவபெருமான் அலங்கரிக்கின்ற கரியகூந்தலையுடைய உமாதேவியாருடன் திருக்கண்ணோக்கஞ் செய்தருளினர். சொல்லிய அத்தகைய அழகிய சோலையினுள்ளே பளிங்குக் கற்களைப்பிளந்து போர்த்ததும் அலங்கரிக்கின்ற மலர்க்கூட்டங்கள் நிரம்பியதுமான தடாகக்கரையில் வந்தனர். எ - று.

ததும்பு தண்புனற் பொய்கையந் தடங்கரைப் பகலு
மொதுங்கு மோதிம முதலிய மிழற்றுத லுவரி
பதுங்கு நஞ்சணி மிடற்றினன் பதங்களிப் பார்மேல்
வெதும்பி நிற்பன கண்டெடுத் தரற்றுதன் மேவும்.

(இ - ள்.) ததும்புகின்ற குளிர்ந்த நீரையுடைய அழகிய பொய்கையின் பரந்தகரையிலே, பகற்காலத்திலும் தங்குகின்ற அன்னமுதலிய பறவைகள் ஒலிசெய்தல், திருப்பாற்கடலில் உதித்த விஷத்தைத்தரித்த கண்டத்தினையுடைய சிவபெருமான் திருவடிகள் இப்பூமியின்மீது வெதுப்பெய்தி நிற்பனவற்றைப் பார்த்து இரைந்தரற்றுவதை யொத்திருக்கும். எ - று. (உ0)

கயங்கொ டாமரை கண்கரங் கழற்றுணை காட்ட
வயங்கு பாசடை திருவுருக் காட்டவெள் வளையுந்

தயங்கு நேமியும் பொறுத்தனன் சீதரன் சடிலப்
புயங்க னைத்தொழப் புகுந்தது போலுமப் பொய்கை.

(இ - ள்.) பெருமைபொருந்திய தாமரையாகிய கண்கள் கைகள் இருபா தங்களைக்காட்டவும், விளங்குகின்ற பசிய இலைகள் திருவடிவத்தைக் காட்டவும், வெள்ளிய வளையும் விளங்குகின்ற நேமியும் தாங்கி, திருமால் சடையையுடைய சர்ப்பாபரணனாகிய சிவபெருமானை, வணங்குதற்கு வந்ததுபோலும் அப்பொய் கைவிளங்குகியது. எ - று. (உக)

திருமாலின் பக்கலில் வளை - பாஞ்சசன்னியம்; நேமி - சக்கரமென்றும், பொய்கையின் பக்கலில் வளை - சங்குகள்; நேமி - சக்கரவாகப் புள்ளென்றும் பொருள்கொண்டு சிலேடைப்படுதல் காண்க.

புண்ட ரீகமீப் பொலிந்தவெண் டாமரைப் பூவை
யெண்ட ரத்தரு நலனொடு மினிதுபெற் றெய்தி
யண்டர் நாயகற் றொழத்தகு வேட்கைய னாகிப்
பண்டை நான்முகன் புகுந்தது போலுமப் படுகர்.

(இ - ள்.) வெண்டாமரைக் கொடியின்மீது விளங்கிய வெண்டாமரைப் பூவை எண்ணத்தக்க நன்மையோடு இனிதாக அடையப்பெற்று, தேவநாயக னாகிய சிவபெருமானை வணங்கத்தக்க விருப்புடையவனாகி, பழய நான்குமுகங் களையுடைய பிரமன் வந்துள்ளதை அத்தடாகமானது ஒத்திருக்கும். எ - று.

அரம்பை தன்மருங் கணைதர வங்கமுற் றலர்ந்து
நிரந்த கண்மலர் துளிதரத் தருப்புடை நிற்பக்
கரந்தை வார்சடை யவற்றொழுங் காதன்மிக் கெழுந்து
புரந்த ரன்புகுந் தனனெனப் போன்றதப் பொருநீர்.

(இ - ள்.) அரம்பை தன்பக்கலிலணையவும், உடல் முழுவதும் மலர்ந்து நீங்காத கண்மலர் துளிக்கவும், தருக்கள் பக்கலில் நிற்கவும், கரந்தைமலரை யணிந்த நெடிய சடையையுடைய சிவபெருமானை வணங்கும் ஆசையதிகரித்து, இந்திரன் அங்கெய்தினன்போல அவ்வலைமோதுந் தடாகம் விளங்கியது. எ - று.

இந்திரன் பக்கலில் அரம்பை-அரம்பாஸ்திரீ, அங்கமுற்றலர்ந்து-உடல்முழு துங் கண்கள் திறந்து, கண்மலர் துளிதர - கண்ணாகியமலர் ஆநந்தபாஷ்பஞ் சொரிய, தரு - கற்பத்தருவென்றும்; தடாகப்பக்கலில் அரம்பை - வாழை, அலர்ந்து - மலர்கள்பெற்று, கண்மலர் - தேனையுடைய பூக்கள், தரு - பலவகை மரங்களென்றும் பொருள்பட்டுச் சிலேடையாதல் காண்க.

மரைகி ளைத்தலர் பாசடை வாயுவை யொடுக்கி
விரைசெய் மாமுகைக் கரங்குவித் தரும்புனன் மிதந்து
பிரச மென்குழ லினதுடற் பேரொளி பெறுவான்
பரசி மாதவ முஞற்றுதல் போன்றது பாராய்.

(இ - ள்.) தேன்சொரியும் மலர்சூடிய மெல்லிய கூந்தலையுடைய உமையே! தாமரையானது கிளைத்துப்படர்ந்த பசிய இலைகளால் வாயுவையடக்கி (கம்பித்து) மணஞ்செய்கின்ற சிறந்த அரும்பாகிய கைகளைக்கூப்பி, அரிய நீர்மிசைக்கிடந்து உன்னுடைய உடலின் பெருங்காந்தியை யெய்தும்படி துதித்துச் சிறந்ததவத் தைச் செய்வது போன்றுள்ளதைப் பார்ப்பாயாக. எ - று. (உச)

விரித்த தாமரை யொன்றினுக் கணித்தென மீப்போய்ப்
புரித்த மெல்லிதழ் முறைமுறை யவிழ்த்தபூங் கமலம்
விரைத்த மென்குழல் வீங்கிள முகிண்முலை யொருநீ
கரத்தி னேந்திய தாமரை நிகர்ப்பது காணாய்.

(இ - ள்.) இயற்கை மணமுற்ற மெல்லிய கூந்தலையும், பூரித்த கோங்கரும்புபோன்ற முற்றாத தனங்களையுமுடையாளே! விரிந்த ஒரு தாமரை மலருக்கருகே மேலேயுயர்ந்து புரிபட்டமெல்லிய இதழ்களை முறைமுறையே மலர்ந்த அழகிய மற்றொரு தாமரைமலரானது ஒப்பற்ற நீ உன்கையிற் றாங்கிய தாமரை மலரைப்போன் றிருப்பது காண்பாயாக. எ - று. (௨௫)

வாக்கி னாலிளங் குயிலின மருட்டிய மயிலே
தேக்கு நீரகத் தரும்பிய முளரிதேங் குவளை
தாக்கு வார்கணை யென்றெமைச் சார்ந்தன வெள்கி
நோக்கி லேமெனக் கரப்பன போன்றன நோக்காய்.

(இ - ள்.) வார்த்தையினாலே இளமைதங்கிய குயிற்கூட்டங்களை மயக்கிய மயிலின்சாயலுடையாளே! தேக்கெடுக்கின்ற நீரிலே மலர்ந்ததாமரையும் தேன் பொருந்திய குவளையும், மன்மதன் எய்யத்தக்க நெடிய அம்புகளென்று எம்மை யெய்தின. ஆனால் (பண்டைய மன்மதன் அபஜயத்தைக்) கருதி வெட்கமடைந்து இனி கண்ணாலும் பாரோமென்று மறைவன போன்றுள்ளன பார்ப்பாயாக.

அளிக்கு லந்துவைத் திடச்சரி கருங்குழ லணங்கே
குளிர்த்த மென்சடை நிலாப்பட வொருங்கலர் குமுதந்
தளிர்ப்பு னற்பது மங்கணின் றளிரடிக் குடைந்து
களிப்பி ழந்திடச் சிரிப்பன போன்றன காணாய்.

(இ - ள்.) வண்டுகூட்டங்கள் மிதித்தலாற் சரிந்த கரியகூந்தலையுடைய உமையே! குளிர்ச்சிவாய்ந்த மெல்லிய சடையிலுள்ள நிலவானது படுதலால், ஒன்றாகமலர்ந்த அல்லிமலர்களும், நீரிலுள்ள தளிர்கள் வாய்ந்த தாமரைமலர்களும் நினது மாந்தளிர்போன்ற பாதங்கட்குத் தோல்வியெய்திச் சந்தோஷ நீங்க (வருத்தமாற்றாது) சிரிப்பனபோற் காணப்படுவனவற்றைக் காண்பாயாக.

குவளை யேந்திய னநடை காட்டியுங் குமுதத்
தவள முத்தினை யுணர்த்தியுஞ் சங்குகைப் பொறுத்து
மிவரொ ளிக்குணப் பாசடை பொருந்தியு மிலங்கு
பவள வாயுனைப் போன்றதிம் மலர்த்தடம் பாராய்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற செம்பவளம்போலும் வாயையுடையாளே! இம் மலர்த்தடாகமானது, நீலோத்பலம் (ஆகியவிழிகளைத்) தாங்கியும், அன்னநடையைக்காட்டியும், (வாயாகிய) செவ்வாம்பலையும் வெள்ளிய (பற்களாகிய) முத்தையும் காட்டியும், (வளையலாகிய) சங்குகளை (அலைகளாகிய) கையிற்சுமந்தும், அதிகரிக்கின்ற காந்தியுடைய பசிய (வெற்றிலையாகிய) இலைகளமைந்தும் உன்னை யொத்திருந்தது. எ - று. (௨௮)

பொருது வார்குழை நடந்தகட் புனமயி லனையா
யுருகு சேவலி னுதறுபூந் தாதயிர்த் துகுத்து

மருவ னப்பெடை திருகிய சினத்தொடு மறுகிக்
கருகு சிந்தையி னூடலிற் றூங்குதல் காணாய்.

(இ - ள்.) நெடிய குண்டலம் வரையில் நடந்து போர்புரிந்த விழிகளை யுடைய வனமயில் போல்பவளே! மனமுருகிய சேவலின் உதறிய அழகியதுகளி னைச் சிந்தியையுற்று மருவிய அழகிய பெட்டைக்கோழி மாறுபட்ட கோபத் தோடு வருந்திக் கொதித்த மனதோடு ஊடல்கொண்டு தூங்குவதைப் பார்ப் பாயாக. எ - று. (உ௯)

அம்பு ளோதிம மயிலையுஞ் சிரலைகா ரண்டம்
பம்பு புன்சிறைக் குரண்டமற் றுளபல மிழற்ற
விம்பர் மாதவச் சிறாரிருக் கிசைப்பன விசைக்கும்
கம்ப லைக்குழா மொத்தன கேட்டிகார் மயிலே.

(இ - ள்.) அழகிய அன்னப்பறவை, மீன்களையேகுத்தித்தின்னும் [சிரலை] மீன்கொத்தி, காக்கை, பரவிய சிறுசிறகையுடைய கொக்கு, இன்னுமுள்ள பலபறவைகளும் சத்தித்தல், இவ்வுலகத்திற் பெருந்தவமுடைய சிறுவர்கள் வேதமோதுவனவற்றை இசைப்படுத்துங் கூட்டமாகிய ஒலியையொத்திருந்தன கேட்பாக, கார்கால மயில்போல்வாளே! எ - று. (௩0)

கலிவிருத்தம்.

எனவிவை யெடுத்தெடுத் திறைவிக் கோதினன்
பனிமலர் பொதுளுமப் படுகர்ப் பாங்கரி
னனிகெழு பழுமரத் தருகு நண்ணினன்
புனிதனப் பனிவரைப் பூவை தன்னொடும்.

(இ - ள்.) என்று இவற்றைப் பரிசுத்தராகிய சிவபெருமான் உமாதேவிக்கு எடுத்தெடுத்துச் சொல்லினர். குளிர்ச்சிபொருந்திய மலர்கள் நிறைந்த அந்நீர் நிலையின் பக்கலிலுள்ள மிகவுயர்ந்த ஆலமரத்தினருகே, இமாசலபுத்திரியாரா கிய பார்வதிதேவியோடும் சேர்ந்தனர். எ - று. (௩௧)

ஆங்கதன் முதற்பளிங் கரிந்து டுத்தய
லோங்கிய வடிவெலாம் பசும்பொ னொட்டிமீத்
தேங்கொளி மணவணி திருத்தி வாளரி
தாங்கிய வாசனத் தருகு சார்ந்தனன்.

(இ - ள்.) அவ்வடவிருக்ஷத்தினடியிலே, பளிங்குக்கற்களைப் பிளந்துமூடிப் பக்கலிலுயர்ந்த உருவமுழுவதும் பசும்பொன்னைச்சேர்த்து மேலே பேரொளி யுடைய நவமணிகளாலே திருந்தச்செய்து ஒளிபொருந்திய சிங்கங்கள் சுமந்த பீடத்தின் அருகேயெய்தினர். எ - று. (௩உ)

கண்ணுதற் பரமனுங் கமல வாண்முக
வொண்ணுதற் கௌரியு முடனி ருந்துழீஇ
வண்ணவால் வளைநிரை மலர்க்கை மால்வரைப்
பெண்ணமு தினையன பேசன் மேயினாள்.

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும், தாமரைமலர்போன்ற ஒளிதங்கிய முகத்தையும் ஒள்ளிய புருவத்தையுமுடைய உமாதேவியும் ஒன்ருக வீற்றிருக்கையில், அழகிய காந்தியையுடைய வளையல்களை வரிசையாகவணிந்த தாமரை மலர்போன்ற கைகளையுடைய பெரிய இமாசலபுத்திரியாகிய உமாதேவியார் இவ்வாறு சொல்வாராயினர். எ - று. (௩௩)

விண்டொட நிவந்துமேல் விரிந்த தொன்மரங்
கண்டதி லிதற்குநேர் கண்டி லேமென
வண்டர்நா யகனிடத் தணங்கை நோக்கிமற்
ருெண்டொடி கேட்டியென் றுரைப்ப தாயினன்.

(இ - ள்.) ஆகாயமளாவ வுயர்ந்து மேலேபரவிய ஆலமரத்தைப்பார்த்ததில், சுவாமி! இதற்குச் சமானமான மரத்தை நாமிதுகாறுங் கண்டோமில்லையென்றுகூற, தேவநாயகராகிய சிவபெருமான் தமது வாமபாகத்திலுள்ள பார்வதி தேவியாரைப்பார்த்து, ஒளிபொருந்திய வளையலையணிந்தவளே! கேட்பாயாகவென்று சொல்வாராயினர். எ - று. (௩௪)

நாளநாண் மலரய னிறக்கு நாளையின்
மூளிரும் பிரளய முற்று மற்றைநா
ணீளிருந் தடஞ்சினை நிறுத்தி யிம்மரங்
கோளொடு மடங்குநூ றுயருங் கோளது.

(இ - ள்.) நாளத்தையுடைய அன்றலர்ந்த புதியதாமரை மலரிலெழுந்தருளியிருக்கும் பிரமன் இறக்குங்காலத்தில் உண்டாகின்ற பெரியபிரளயவெள்ளமானது மூளும். அக்காலத்தில் நெடிய பெரிய பரந்தகிளைகளை நிறுத்தி இம்மரமானது வலிமையோடு நூறுமடங்குயர்ந்து நிற்குந்தன்மையுடையது. எ - று.

தார்புனை துளவினன் றனது கண்முகிழ்த்
தோரிலை யகவையி னுறக்கங் கொள்வஞு
லாருயிர்த் தொகைமுழு தளிக்க வேண்டிநின்
றேர்முதற் சத்தியா யெம்மை வேண்டுமால்.

(இ - ள்.) துளவமாலைதரித்த திருமால் அக்காலத்தில் தனது கண்களைமூடி இதன் ஓரிலையில் நித்திரைசெய்வான். அரிய உயிர்த்தொகைகள் முழுவதையும் படைக்கவேண்டி நின்று, (அச்சமயத்தில் அவன்) அழகிய முதற்சத்தியாக எம்மைப்பிரார்த்திப்பான். எ - று. (௩௬)

ஈதித னிலைமையென் றருளி யின்னுரை
மாதுட னளவளாய் மகிழு மெல்வையிற்
காதுட னிகலிடுங் கடைக்க ணம்பிகை
யோதிம மதுபிடித் துதவு கென்றனள்.

(இ - ள்.) இதுவே இவ்வாலமரத்தின் நிலைமையென்று அருளிச்செய்து, இனிய சொற்களையுடைய உமாதேவியோடு அளவளாவி மகிழ்ந்திருக்குஞ் சமயத்தில், காதுடன் போர்செய்கின்ற கடைக்கண்பார்வையுடைய உமாதேவியார் ஓரன்னப்பறவையை எனக்குப் பிடித்துக்கொடு என்றுகேட்டனர். எ - று. (௩௭)

அன்னது காவலர்க் கருள வாங்கவர்
பொன்னிறத் தாமரைப் பொகுட்டு மேயதோ
ரின்னிள மடப்பெடை யனத்தொ டின்னுரை
பன்னிய கிளியையும் பரிவிற் பற்றினார்.

(இ-ள்.) அவ்வார்த்தையைச் சிவபெருமான் காவலாளர்க்கு அருளிச் செய்ய, அக்காவலாளர் பொன்னிறத்தோடுகூடிய தாமரைப்பொகுட்டிற் பொருந்திய ஓரிளமைதங்கிய பேடன்னத்துடன், இன்மொழிபேசிய கிளியையும் ஆசையோடு பிடித்தார்கள். எ-று. (௫அ)

பற்றிய வோதிமம் பசலைப் பூங்கிளி
சுற்றைவார் சடையினன் றிருமுற் காட்டலும்
பெற்றெழு முவகையிற் பெரிது நோக்குறா
மற்றவை யொடுஞ்சில வகுப்ப தாயினான்.

(இ-ள்.) பிடித்துவந்த அன்னத்தையும் அழகிய பச்சைக்கிளியையும் தொகுதியாகிய நீண்டசடையையுடைய சிவபெருமான்திருமுன்னர்க்காட்டவும், உண்டாகியெழுந்த சந்தோஷத்தோடு நன்றாகப்பார்த்து அவ்விருபறவைகளோடுஞ் சிலவார்த்தைகள் சொல்வாராயினர். எ-று. (௫௯)

வைகலு மெவ்வுழை வைகு வீரெனச்
செய்யவாய்ப் பசுங்கிளி சிவனைப் போற்றுறா
மையற முற்புரி தவத்தின் மாட்சியா
லையநின் காவகத் தடைந்து ளேனெனா.

(இ-ள்.) தினந்தோறும் எவ்விடத்தே நீங்கள் வசிப்பீர்களென வினவ, சிவந்த வாயையுடைய பச்சைக்கிளியானது சிவபெருமானைத் துதிசெய்து, குற்றமறப் பூர்வத்திற்செய்த தவத்தின் மேம்பாட்டால், ஐயனே! தேவரீர் பூஞ்சோலையில் வசித்துள்ளேனென்றுகூற. எ-று. (௬௦)

பானிறத் தோதிமம் பணிந்து பண்ணவ
மேனிலைத் தாருவி னடைந்து மேயினேன்
கானிகந் தெண்டிசைக் கடவுண் மாநதி
யூனறி யாதன வில்லை யெந்தையே.

(இ-ள்.) பால்போலும் வெண்ணிறந் தங்கிய அன்னமானது வணங்கி, கடவுளே! தேவலோகத்திலுள்ள கற்பகவிருட்சத்திற்பொருந்தி வாழ்ந்திருந்தேன். அக்கற்பகவனத்தைவிட்டு எட்டுத்திசைகளிலுமுள்ள தெய்வீகம்பொருந்திய சிறந்த நதிகளில் யானறியாதன ஒன்றுமில்லை. எனது தந்தையே! எ-று.

வடவரைப் புடைபடு வையம் யாவையுந்
தடவர வென்னுழைத் தவத்தி னேன்மையா
லடல்கெழு மழுப்படை யமல நின்னுடை
மடலவிழ் தாமரை வாவி மேவினேன்.

(இ-ள்.) மேருமலையைச் சூழ்ந்துள்ள உலகமுழுவதும் (தடவர = தடவ) சஞ்சரிக்க, அடியேன்செய்த தவமேம்பாட்டால், வலிமைமிகுந்த மழுப்படை தாங்கிய மலரகிதனே! தேவரீருடைய இதழ்கள் விரிந்ததாமரைத் தடாகத்தில் வசித்திருக்கின்றேன். எ-று. (௬௨)

வாவியிற் பொன்னிற வனச மேந்திட
மேவியீற் றிருந்தன னினது வேணியிற்
றேவியங் திருநதி சிறப்புச் செய்யுமிப்
பூவிரி மலர்த்தடம் பொருந்திப் போகலேன்.

(இ - ள்.) தடாகத்திலே பொன்னிறந்தங்கிய தாமரைமலர் தாங்கும்படி பொருந்தி வசித்திருந்தேன். தேவரீர் சடையிலுள்ள தேவியாகிய அழகிய சிறந்த கங்காநதி சிறப்புச்செய்யத்தக்க இம்மலர்கள் விரிந்த தாமரைத்தடாகத்திற் பொருந்திப் போகமாட்டாதவளாயினேன். எ - று. (௪௩)

என்றிள மடவன மியம்பக் கேட்டலுங்
கொன்றையஞ் சடையினுன் முறுவல் கோட்டினு
னன்றிள வனப்பெடை விடைகொண் டாருயிர்ப்
பொன்றழை சிறைக்கிளி யோடும் போயதால்.

(இ - ள்.) என்று இளமையும் அறியாமைக் குணமுமுடைய அன்னமானது சொல்லக் கேட்டவுடன், அழகிய கொன்றைமாலையணிந்த சடையையுடைய சிவபெருமான் புன்னகைபுரிந்தருளினர். அப்பொழுது இளமைதங்கிய அழகிய அன்னப்பேடு இறைவர்பால் விடைகொண்டு அரிய உயிர்போலும் பொன்னிற மாகத் தழைத்த சிறையையுடைய கிளியுடன் சென்றது. எ - று. (௪௪)

கங்கைபே ருரைத்தலுங் கனிந்த மூரலிற்
பொங்கிய வுவகையிற் பொருமி னுனெனப்
பங்குறை மடமயில் பரிவு கூர்ந்தனள்
செங்கயற் றுணைதுளி சிதறச் சீறினுள்.

(இ - ள்.) கங்கையின் பெயரைச்சொன்னவுடன் உளங்களித்த புன்னகையோடு அதிகரித்த சந்தோஷத்தினுற் பூரித்தனரென்று, அச்சிவபெருமான் பாகத்திலிருந்த இளமைதங்கிய மயிலின் சாயலையுடைய உமாதேவியார் துன்பமிகுந்து செவ்விய கயற்கெண்டைபோலும் இருவிழிகளில் கண்ணீர்சிந்தக் கோபித்தனர். எ - று. (௪௫)

போயின டிருமனம் பொருமை மீக்கொள
மாயிருங் கவலையின் மறுக்க மெய்துறுப்
பாய்விடைப் படர்சடைப் பரம னெற்குறித்
தேய்வன செய்தில னெனவெ தும்பினுள்.

(இ - ள்.) உமாதேவியார் திருவுள்ளம் வேறுபட்டு, பொருமையதிகரிக்க, மிகப்பெரிய கவலையினுல் துயரமெய்தி, பாய்ந்து செல்லும் இடபவாகனத்தையும் படர்ந்த சடையையுமுடைய சிவபெருமான் என்னைக்குறித்துச் செய்தற்குப்பொருந்தியனவற்றைச் செய்தாரிலரென்று உள்ளம் வெதும்பினர். எ - று.

முன்னர்நா ளிமவரை முடுகித் தற்குறித்
துன்னரும் பெருந்தவ முற்று மெல்லவையி
னென்னுடைத் தனிமையோர்ந் திகலு மாரனைத்
தன்னொரு நுதற்கணுற் சாம்ப ராக்கினுன்.

(இ - ள்.) யான் முற்காலத்தில் இமாசலத்தையடைந்து, அச்சிவபெருமானைக்குறித்து, நினைத்தற்கும் அரிதாகிய பெரியதவத்தைச்செய்து கொண்டிருக்குஞ்சமயத்தில், என்னுடைய தனித்திருக்குந் தன்மையையுணர்ந்து, (எங்களையொன்று கூட்ட) போருக்கு வந்த மன்மதனை, தமது ஒப்பற்ற நெற்றிவிழியினால் சாம்பராகச் செய்தழித்தனர். எ - று. (௪௭)

அதுபொறுத் தாற்றினே னவி மேவியே
மதுமல ரோதிம மருவு கங்கையாள்
புதுமொழி வழங்குற முறுவல் பூத்தன
னெதுபொறுத் தாற்றுகே னெளிய ளாயினேன்.

(இ - ள்.) அதனை மனம்பொறுத்து உயிரைத்தாங்கிச் சகித்தேன். தேனெழுகும் தாமரைமலரில் வசிக்கும் அன்னமானது, பொருந்திய கங்கையின் புதுமையாகிய பெயரைச்சொல்ல, இறைவர் புன்னகைசெய்தனர். எதனை மனம் பொறுத்துப் புலம்புவேன்? ஏழைப்பெண்ணாக ஆய்விட்டேன். எ - று. (௪௮)

ஆயினு மென்னிலை யறியு மாறொரு
தீயன வியற்றுகே னென்று சீறியக்
காய்சின வநங்கன தடலை கண்ணுறு
வேயதோ ருருவகத் தெழுதி யென்றனள்.

(இ - ள்.) ஆனாலும் என்னிலைமையை அறியும்படி ஒருகொடுந்தொழிலைச் செய்வேனென்று கோபித்து, அக்கொல்லத்தக்க கோபமானது அதிகரிக்க, மன்மதனெரிந்த சாம்பரைக் கண்ணால்நோக்கி, பொருந்திய ஓருருவங்கொண்டு இதினின்றும் உண்டாகுகவென்று உமாதேவியார் கூறினர். எ - று. (௪௯)

அடலையி னின்றுபண் டாசு ரப்பெயர்
மிடல்கெழு நிருதரில் வெய்யன் றோன்றினன்
படரொழி பருவமோர் பத்துக் கோடினின்
றிடரொழி பூசனையி யற்றி னனரோ.

(இ - ள்.) அச்சாம்பரிலிருந்து பண்டாசுரனெனும் பெயரையுடைய வலிமைமிகுந்த அசுரரிற் கொடியோன் உதித்தான். துன்பமகன்ற ஒரு பத்துக் கோடி வருஷகாலமட்டும் ஒரேநிலையிலிருந்து, தடையற்ற சிவபூசையை முறைப்படி செய்தனன் (பண்டாசுரன்) எ - று. (௫௰)

இப்பரி செம்பிராற் கியற்றி யெய்துறு
மப்பொழு தியோகத்தி னடைத்த கண்ணனாய்த்
தப்பற வருந்தவஞ் சார வைகினன்
முப்புர மெரித்தவ னிரங்கி முன்னினன்.

(இ - ள்.) இவ்வகையாக எமது சிவபெருமானுக்குப் பூசைபுரிந்துகொண்டிருக்கும் அச்சமயத்தில், யோகத்திற்செலுத்திய விழியையுடையவனாய் தவறுதலற அரியதவநிலைபொருந்த விருந்தனன். திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமான் திருவுளமிரங்கி ஆங்கெழுந்தருளினர். எ - று. (௫௧)

அருந்தவத் தருச்சனை யரிதி னாற்றினை
திருந்துளத் துணர்ந்தவை செப்பு கென்றலு

மிருந்திறற் றேவர்மற் றியாரு மென்னுழைப்
பொருந்திறற் பகைஞரென் றுரைத்துப் போற்றினன்.

(இ-ள்.) அரிய தவநிலையுற்றுச் செய்தருளிய பூசையை எம்மைநோக்கிச் செய்தாய். திருத்தமாகிய மனதில் நீவிரும்பிய வரங்களைச் சொல்லுகவென்று வினவவும், பெருவல்லபமுடைய தேவர்களும் மற்றெல்லோரும் என்னிடத்தில் போர்புரியும் ஆற்றலுடைய பகைஞர்களென்று கூறித்துதிசெய்தான். எ-று.

ஆங்கவ ராக்கைபுக் கடைந்து தம்முடற்
றாங்கிய சுக்கில சுரோணி தங்களை
வாங்கிமாந் துதலெனக் கருளி மற்புயந்
தாங்கிய வெறுழ்வலி தருதி யென்றனன்.

(இ-ள்.) ஆதலின், அவர்களுடைய உடலிற்பிரவேசித்து நின்று அவர்களுடலிலுள்ள சுக்கிலத்தையும் சுரோணிதத்தையும் எடுத்துக்குடிக்கும் வல்லபம் அடியேனுக்கு அநுக்கிரகிக்கவேண்டும். அன்றியும் மற்போற்புரியும் தோளைத் தாங்கிய பெருவலிமையையுங் கொடுத்தருள்கவென்று யாசித்தான். எ-று.

என்னையா ளுடையவ னிரங்கி யீந்தனன்
பொன்னவிர் நெடுமுடிக் கயிலை போயினு
னன்னவ னவரவ ராக்கை புக்கிருந்
துன்னருஞ் சுரோணித முறுஞ்சி மாந்தினன்.

(இ-ள்.) என்னையாளாகவுடைய சிவபெருமான் திருவுளமிரங்கி அவ்வரங்களைப் பிரசாதித்தனர். பொன்னாற்செய்து விளங்கும் நெடியசிகரங்களையுடைய திருக்கைலாயகிரிக்கு எழுந்தருளினர். அப்பண்டாசுரன் அவரவர்களுடைய உடலுட்புகுந்திருந்து நினைத்தற்கரிய சுக்கில சுரோணிதங்களை யுறிஞ்சிக் குடித்தனன். எ-று. (௬௪)

சுக்கிலசு ரோணிதத் தொடக்க மற்றபின்
முக்கணன் முதலினோர் செயற்கை முற்றுறத்
தக்கில ரிதுசெயத் தக்க தாரென
வொக்கநோக் கினரது வுணரப் பெற்றிலார்.

(இ-ள்.) சுக்கில சுரோணிதங்களின் சம்பந்தம் அறவேநீங்கிய பின்னர், உருத்திரன் முதலானோர், இச்செயல் முற்றுப்பெறும்படி தகுதியில்லாதவராய் இப்படிச்செய்யத்தக்கவர் யாவரென்று, ஒருசேரக்கருதினார்கள். அதனையறியப் பெறாதவர்களானார்கள். எ-று. (௬௫)

முழுமுதன் மகேச்சுரக் கடவுண் மூர்த்தியை
யெழுதரு முவகையி னிரங்கிப் பூசியா
வழுவறு முழுமணிக் கயிலை மாமருங்
கொழுகின ரிரந்திரந் துரைப்ப தாயினர்.

(இ-ள்.) முழுமுதற் கடவுளாகிய மகேசப்பெருமானை, மனதின்கண்ணெழுந்த ஆநந்தத்தோடு உளங்கனிந்து பூசைசெய்து, குற்றமற்ற பெரிய நவமணிகள் நிறைந்த திருக்கைலாயகிரியிலெய்தி நல்லொழுக்கினின்று உருகியுருகி விண்ணப்பிப்பாரானார்கள். எ-று. (௬௬)

வெஞ்செய விழந்தனம் விளர்க்கு மெய்யினேந்
தஞ்சமொன் றிலமிது வுணரத் தக்கிலே
நஞ்சணி கறைமிடற் றுதி நாயக
வுஞ்சுறு நெறியளித் துதவு வாயென்றார்.

(இ - ள்.) வலிய செயல்கள் புரிதலேயிழந்தோம். வெளுக்கத்தக்க உடலை யடைந்தவர்களானோம். ஆதரவு பிறிதுடையேமல்லோம். இச்செயற்குக்காரணம் அறியத்தக்கவர்களா யில்லோம். விஷத்தையணிந்த கரியகண்டத்தையுடைய முதற்கடவுளே! அடியேங்கள் உச்சீவிக்கும் வகையைத்தந்து அநுக்கிரகிப்பாயாக வென்று முறையிட்டார்கள். எ - று. (கஎ)

அனையவ ரிரந்திரந் தறைந்த வாசகம்
புனைகுழைத் திருச்செவி யகத்துப் போதலு
நனைமல ரிதழியந் தொடைய ணுயகன்
வினையினோர்ந் தினையன விளம்பு வானரோ.

(இ - ள்) அத்தேவர்கள் யாசித்து யாசித்துக்கூறிய சொற்கள், அலங்கரிக் கின்ற குண்டலமணிந்த திருச்செவியி னுட்பிரவேசிக்கவும், தேன்பொருந்திய கொன்றைமலரின் அழகிய மாலையையணிந்த சிவபெருமான், அவர்கட்குற்ற வினைச்சம்பந்தத்தால் அவ்வரலாற்றினையறிந்து இவ்வகையாகத் திருவாய்மலர் கின்றார். எ - று. (கஅ)

அருந்திற லடுசினப் பண்ட வாசுரப்
பொருந்திற லசுரனு முதரம் புக்கவ
ணிருந்தனன் சுக்கில சுரோணி தங்களே
விருந்தெனப் பருகுவான் வெள்ளி டைப்படான்.

(இ - ள்.) பிறரால் வெல்லற்கரிய வல்லபமும் கொல்லத்தக்க கோபமு முடைய பண்டாசுரனாகிய போர்செய்யும் ஆற்றலுடைய அசுரனானவன், உங்களு டைய வயிற்றிற் பிரவேசித்து அங்குள்ளனவாகிய சுக்கில சுரோணிதங்களையே பெருவிருந்துபோலக் குடித்துக்கொண்டிருக்கிறான். அவன் உங்கள் கண்கட்கு வெளியே புலப்படமாட்டான். எ - று. (கசு)

மன்னுயிர்ப் பொறைதொறும் வகையின் வைகுவா
னிந்நிலை யுயிர்க்கெலா மிடுக்க ணீந்தனன்
றொன்னிலைச் சத்தியாற் பிறந்து தோன்றலா
லன்னசத் தியைநுகர்ந் தழிப்ப தாயினன்.

(இ - ள்.) நிலைபெற்ற உயிர்ப்பொறைகளிலெல்லாம் இவ்வகைப்படவசிக்கின் றான். இவ்வகையாக உயிர்கட்கெல்லாம் துன்பத்தையுண்டு செய்கின்றான். பழய நிலைமையுடைய நமது சத்தியாற்பிறந் துதித்தவனானபடியால், அப்படிப்பட்ட சுக்கில சுரோணிதங்களென்னும் சத்தியைப்புசித்து உங்களையழித்தற்றொழிலை மேற்கொண்டான். எ - று. (உo)

இன்றியா மியற்றுதற் கியைந்து நீவிரும்
பொன்றுதற் கியைந்துறி னிஃது போக்கலா
மன்றெனி வித்துயர் மாற்றி யாற்றலீ
ரென்றன னவர்க்கெலா முதன்மை யெய்தினன்.

(இ - ள்.) இப்பொழுது நாம் செய்வதற்கிணங்கி நீங்களும் இறப்பதற்குச் சம்மதிப்பீர்களானல் இத்துயரை யகற்றலாம். அல்லாவிடின் இத்துன்பத்தை நீக்கி யொழிக்கமாட்டீர்களென்று, அத்தேவர்கட்கெல்லாம் முதன்மைத்தன்மையுடைய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர். எ - று. (௬௧)

தேவரும் பதத்துளோ ரெவருஞ் செய்வினை
மூவரு மருந்தவ முனிவ ரென்றுளோர்
பாவருங் கதிர்களு மியைவ தாயினர்
மேவரு நிருதனல் விளைந்த வெம்மையால்.

(இ - ள்.) இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், தேவர்களும் உயர்பதவிகளிலுள்ளவர்களும் மற்றெல்லோரும், சிருட்டிமுதலிய முத்தொழில்களைச்செய்யும் திரிமூர்த்திகளும், அருந்தவஞ்செய்த முனிவர்களென்று சொல்லப்பட்டவர்களெல்லோரும், சுடர்களும், அடைதற்கரிய அசுரனலுண்டாகிய கொடுமையால் அதற்குச் சம்பதிப்பவர்களாய். எ - று. (௬௨)

ஒக்கநின் றுயிர்க்கெலா முதவுந் தொல்லையோன்
றக்கதோர் வேள்வியந் தழலிற் றாழ்சடை
முக்கணன் முதலிய மூவ ரன்னவர்
பக்கநின் றியற்றுவான் பணித்த சத்திகள்.

(இ - ள்.) எல்லாவுயிர்கட்குஞ் சமானமாக நின்று அநுக்கிரகிக்கும் பழையோனுகிய சிவபெருமான் தகுதியாகிய அழகிய ஒருயாககுண்டத்தக்கினியில், தாழ்ந்த சடையையும் முக்கண்களையுமுடைய உருத்திரன் முதலிய திரிமூர்த்திகளை யொத்தவர்கள் பக்கலிலிருந்து சத்திகளைப்படைப்பாராயினர். எ - று. ()

வானவர் விஞ்சைய ரியக்கர் வன்றிறற்
றானவ ரெண்டிசைத் தலைவர் பாதலர்
மோனமா தவத்தரு முனிவர் முற்றுற
வேனையர் பல்லுயிர்த் தொகுதி யாவையும்.

(இ - ள்.) தேவர்கள் வித்தியாதரர்கள் யக்ஷர்கள் பெருவல்லபமுடைய அசுரர்கள் அஷ்டதிக்குப்பாலர்கள் பாதலவாசிகள் மௌனநிலையை மேற்கொண்ட பெருந்தவமுடைய அரியமுனிவர்கள் ஏனையோர் ஆகிய பலவகை உயிர்க்கூட்ட முழுவதும் முடியும்படி. எ - று. (௬௪)

தரைப்படு தாவர சங்க மங்களென்
றுரைப்பன யாவையும் வாரி யோமித்தா
னிரைத்தெழுங் கொழுங்கன லஞ்சி யீங்கிவர்
புரைப்படா தசுரனும் புறத்துப் போயினன்.

(இ - ள்.) உலகிலுண்டாகிய [தாவரசங்கமங்கள்] நிலையியற்பொருள்கள் இயங்கியற்பொருள்களென்று சொல்லப்படுவனவற்றையெல்லாம் வாரிப்புசித்தான். சத்தித்துக்கொண்டெழுந்த கொழுவிய அக்கினிக்குப்பயந்து இவர்கள் இம்படித் துயரெய்தாது பண்டாசுரனும் அவர்கள் வயிற்றைவிட்டு வெளியே சென்றான். எ - று. (௬௫)

அக்கணந் திரிபுரை யென்னு மாயிழை
புக்கன ளடுசின வடவைப் போர்வையாண்
மிக்கெழுந் திருக்கர நான்கு மேயினாள்
செக்கர்வான் பொருப்பினைச் செங்கை கூப்பினாள்.

(இ - ள்.) அக்காலத்தில் திரிபுரையென்னும் பெயருடைய ஆய்ந்த ஆபரணங்களையணிந்த சத்தியானவள் புகுந்தனள். கொல்லத்தக்க கோபத்தையுடைய வடவாமுகாக்கினியாகிய போர்வையணிந்தவள், கோபித்துத்தோன்றிய நான்கு திருக்கரங்களைப் பொருந்தியவள். சிறந்த செம்மலைபோன்ற சிவபெருமானைத் தனது சிவந்தகைகளைக் குவித்துப் பணிந்தனள். எ - று. (௬௬)

ஒருகரங் கருப்புவி லொருகை பூங்கணை
யொருகர மங்குச மொருகை பூந்தொடை
தருவன வன்றியுந் தணந்த யாவையும்
தருவன வண்டமூன் றேந்திச் சார்ந்தனள்.

(இ - ள்.) ஒருகையிற் கருப்புவில்லும் ஒருகையில் மலர்ப்பாணமும் ஒருகையில் அங்குசமும் ஒருகையில் மலர்மாலையும் தாங்குவதுடன், பிரிந்த பலபொருள்களையும் தருக்களையும் வனங்களையும் மூன்று அண்டங்களையும் தாங்கிச் சிவபெருமானை யடைந்தனள். எ - று. (௬௭)

இத்தலை வருத்தினை யென்னை யென்னென
வத்தனை வினவலு மமலை நாயக
னொத்தெழு முயிர்த்தொகை யுயிரு லைந்துக
வைத்தபண் டாசுர னிலைவ ழங்கினான்.

(இ - ள்.) அடியாளை இவ்விடத்தில் வருவித்தீர், யாதுகாரணமென்று சிவ பெருமானை வினாவவும், மலரகிதையாகிய உமாதேவி நாயகராகிய சிவபெருமான், உண்டாகிய உயிர்த்தொகுதிகள் ஒரேமாதிரியாக உயிர்நீங்கி யிறக்கச் செய்த பண்டாசுரன் கொடுமை நிலையைக்கூறினார். எ - று. (௬௮)

இன்றுகொண் டவனுழை யெய்தி யன்னவற்
கொன்றிவண் வருகென நிமலன் கூறலுஞ்
சென்றனள் கருப்புவில் லுடக்கித் தேமலர்ப்
பொன்றழை வாளியா லவனைப் போக்கினாள்.

(இ - ள்.) இப்பொழுதே அப்பண்டாசுரனிடஞ் சேர்ந்து அவனைக்கொன்று கொண்டு திரும்பிவருகவென்று நிமலனாகிய சிவபெருமான் கட்டளையிடவும், அங்ஙனமேசென்று கருப்புவில்லை வளைத்து, தேன்சிந்தும் மலர்களாகிய அழகிய அம்புகளால் அப்பண்டாசுர னுயிரை யகற்றினள். எ - று. (௬௯)

திரும்பின டிரிபுரை தெண்ணி லாக்கொழுந்
தரும்பிய சென்னிசே வடிவ ணங்கினாண்
முருந்திவர் வாணகை முதல்வி தன்னொடும்
பொருந்திறற் சூற்படைப் புனிதன் கூறுவான்.

(இ - ள்.) திரிபுரையவனைக்கொன்று திரும்பி, தெளிந்த பிறைச்சந்திரன் பிரகாசிக்கும் சடைமுடியையுடைய சிவபெருமான் சிவந்த பாதங்களைப்பணிந்தனள். [முருந்து] மயிலிறகின் அடியையொத்த ஒளிவாய்ந்த பற்களையுடைய

ஆதிநாயகியாகிய பார்வதிதேவியாரோடும், போர்புரியத்தக்க வல்லபமுடைய, சூலாயுதந்தாங்கிய பரிசுத்தரான சிவபெருமான் திருவாய்மலர்ந் தருளுகின்றார்.

அண்டமூன் றிவற்றினு லானை யேமுதற்
பண்டைய மூவரைப் பயந்து பால்வளை
யொண்டொடி யவரைநீ யுதவி முற்செயல்
கொண்டளித் திடுமுறை கொடுத்தி யென்றனன்.

(இ - ள்.) இம்மூன்று அண்டங்களினுலே உருத்திரனே முதலாகவுள்ள பழய திரிமூர்த்திகளைப்படைத்து, வெள்ளியவளையலணிந்த அவர்கள் சத்திகளை நீயே சிருட்டித்து, பண்டைய சிருட்டியாதி செயல்களை மேற்கொண்டு உலககாரியத்தை நடத்தும் முறைமையைக் கொடுப்பாயாக வென்றருளினர். எ - று.

ஈசனை தியற்கையி னிவளு மந்நிலை
மாசற வகுத்தனண் மகேச்சு ரன்புரி
யாசறச் சதாசிவ மருளிற் பூசியா
வேசற முச்செய லியல நின்றனன்.

(இ - ள்.) சிவபெருமானியற்கைக் குணத்தால் இவ்விறைவியும் அந்நிலைமையைக் குற்றமறச்செய்தனள். மகேச்சுரன்செய்த குற்றமகல, சதாசிவம் திருவருளினுற் பூசைபுரிந்து ஏசுதல் நீங்கிச் சிருட்டியாதி முத்தொழில்கள் நடைபெறும் படி விளங்கினர். எ - று. (எஉ)

பண்டாசுரன்வதைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௩0-க்குத் திருவிருத்தம். ௩௯00.

முப்பத்தொன்ருவது

அரிபிரமாதியர்பூசனைச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாம ரைத்தவிசின் மீதி ருக்குமறை யந்த ணற்குமொரு தண்டுழாய்
மாமு கிற்குமிடை வெஞ்செ ருக்கெழும லைந்து நின்றனர்ம லைந்தநாட்
பாம கட்கிறைவெ குண்டு வென்றிமகி டாசு ரப்பதகனைத்தரா
வாமு னைத்தலைபு குந்து நின்றெதிர்ம லைந்து வாவெனமொ ழிந்தனன்.

(இ - ள்.) ஒருகாலத்தில், தாமரைமலர்ப் பீடத்தின்மேல் வீற்றிருக்கும் வேதங்களையோதிய பிரமனுக்கும், ஒப்பற்ற குளிர்ச்சிவாய்ந்த துளசிமாலைதரித்த சிறந்த மேகவண்ணராகிய திருமாலுக்கு மிடையே, கொடிய இறுமாப்புண்டாகப் போர்புரிந்து நின்றார்கள். அப்படிப்போர்புரிந்த காலத்தில், சரசுவதி கணவனு

கிய பிரமன் கோபித்து, வெற்றிபொருந்திய மகிடாசுரனென்னும் பாவியைப் படைத்து, தாவிச்செல்லும் யுத்தமுனையிற் சென்றெதிர்ந்து நின்று போர்செய்து வருகவெனக் கூறினன். எ - று. (௧)

அன்ன தன்மையை யுணர்ந்த னன்பெயர்க ளாயி ரந்தழுவு சீதர
னுன்ன ரும்புலி மு கத்த ரக்கனைநி னைப்பி னெய்து றவு ரைத்தனன்
மின்னு வாளெயிறு வெண்பி றைக்குலநி கர்ப்ப வெங்கனல்வி ழிக்குலந்
துன்ன ரும்பொறிபி றக்க வெம்புலி முகத்த னக்கடிகை தோன்றினன்.

(இ - ள்.) அவ்வகையினை, சகஸ்ரநாமதரனாகிய திருமால் தெரிந்துகொண்டு, நினைத்தற்கரிய கொடுமைகளையுடைய புலிமுகாசுரனை நினைத்தமாத்திரமே வரும்படி சொல்லினர். அப்பொழுது, மின்னுகின்ற வெள்ளிய பற்கள் வெண்மையாகிய பிறைக்கூட்டங்கள் போல் விளங்கவும், வெவ்விய தீயைச்சிந்தும் விழிக்கூட்டங்கள் அடைதற்கரிய தீப்பொறி சிந்தவும் கொடிய புலிமுகாசுரன், அத்திருமால் நினைத்த அந்தக்கணத்திலேயே உதித்தான். எ - று. (௨)

மாய னோடமரு டற்றி நின்றனன்ம ருப்பி வர்ந்தமகி டாசுரன்
சாய்சி னப்புலிநி சாச ரன்கமல நாத னோடமர்க டிந்தனன்
றீய ராமிவரு டைப்பெ ரும்படைசெ றுத்த தேவரையொ றுத்ததாற்
பாய வெண்டிரைநெ டுந்த ராதலமு லைந்த தும்பரயல் பாறினர்.

(இ - ள்.) கொம்புகளுயர்ந்த மகிடாசுரன் திருமாலோடு போர்புரிந்து கொண்டிருந்தான். கொல்லத்தக்க கோபத்தையுடைய புலிமுகாசுரன் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனுடன் போர்செய்தனன். கொடியோராகிய இவ்விருவருடைய பெருஞ்சேனைகளும், போர்செய்துகொண்டிருந்த தேவர்களைத் துரத்தியடித்தன. பரவிய வெண்மைதங்கிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த பெரிய உலகமானது சிர்குலைந்தது. தேவர்கள் வேற்றிடங்கட்கு ஓடினார்கள். எ - று.

செய்ய தாமரைம டந்தை நாயகன மர்க்கு டைந்தயல்சி தைந்தனன்
வெய்ய வெம்புலிநி சாச ரற்கமரு டைந்து வேதனும றைந்தனன்
வைய மெங்கணும ரந்தை கொண்டமரர் நெஞ்ச மஞ்சுறவ ருந்தினர்
தெய்வ வெண்கயிலை சென்றி ருந்துசிவ னுக்க ருச்சனைதி ருத்தினர்.

(இ - ள்.) செந்நிறந்தங்கிய தாமரைமலரில் வசிக்கும் திருமகள் கொழுநராகிய திருமால் (மகிடாசுரனுக்குத்) தோல்வியெய்தி அயலில் மறைந்தோடினர். பிரமதேவனும் அப்படியே கொடுமைபொருந்திய வலிய புலிமுகாசுரனுக்கு யுத்தத்தில் அபஜயப்பட்டு மறைந்துபோயினன். உலகமுழுவதும் துன்பமெய்தி, தேவர்களும் மனதிற்பயமெய்த வருத்தப்பட்டார்கள். தெய்வீகந்தங்கிய வெண்மையாகிய திருக்கைலாயகிரியை யடைந்திருந்து சிவபெருமானைத் திருத்தமாகப் பூசித்தார்கள். எ - று. (௩)

சேவு யர்த்தவன ருச்ச னைக்குரிய ராகி நாள்பலசெ லுத்தினர்
காவி யங்கணுமை பங்க னன்னதக ருத்து ணர்ந்து றம தித்தனன்
பூவை மேனியன்மு தற்பெ ரும்புலவர் வைகு மத்தலைபு குந்தனன்
வாவு மன்பொடுமெ ழுந்து சென்றுளம்வ ணங்கி நின்றடிவ ணங்கினர்.

(இ - ள்.) இடபத்தைக் கொடியாக வுயர்த்திய சிவபெருமானை யர்ச்சிப்பதற்கு உரியவர்களாகிப் பலகாலத்தைக் கழித்தார்கள். அழகிய நீலோற்பலம் போலும் விழிகளையுடைய பார்வதிபாகராகிய சிவபெருமான் அப்பூசையைத் திருவுளத்துணர்ந்து மிகுதியாகக் களிப்பெய்தினர். காயாம்பூவையொத்த திருமேனியையுடைய திருமால் முதலாகிய பெருங்கடவுளர் வசிக்குமிடத்திற்கெழுந்தருளினர். அப்பொழுது அவர்கள் அன்புடனெழுந்து நேரேசென்று மனத்தாற் பணிந்து நேர்நின்று திருவடிகளை நமஸ்கரித்தார்கள். எ - று. (௫)

என்னை யித்தலையி ருந்து நும்பதமி ழந்து நம்பதம்வ ணங்கினீ
ரன்ன செப்புதிரெ னத்த னிக்கழல்வி ழிப்பி ரானருள வன்னவர்
மின்னெ யிற்றுநிரு தக்கொ டுந்தலைவர் வெம்மை யாவையும்வி ளம்பினார்
நன்னு தற்கொடியி டத்து முக்கணுந டத்தி னான்மறியி டத்தினான்.

(இ - ள்.) ஒப்பற்ற தீவிழியையுடைய சிவபெருமான், தேவர்களே! நீங்கள் உங்கள் பதவிகளையிழந்து இவ்விடத்திலிருந்து நம்முடைய பாதங்களைப் பணிந்தீர்கள். யாதுகாரணம்? அதனைச் சொல்வீர்களாகவென்று திருவருள் செய்ய, அத்தேவர்கள் மின்னுகின்ற பற்களையுடைய கொடிய அசுரத்தலைவர்களது கொடுமைகளெல்லாவற்றையும் சொன்னார்கள். மானை யிடக்கரத்தேந்திய சிவபெருமான் நல்ல நெற்றியையுடைய பூங்கொடிபோல்வாளாகிய உமாதேவியார்பால் தமது திருவிழிகள் மூன்றையுஞ் செலுத்தினார். எ - று. (௬)

அக்க ணத்தவண்மு கத்து நின்றுமுரு மொத்து வந்தவ தரித்தனள், மிக்க வெம்படைக்க ரங்க ளோன்பதினி ரட்டி கொண்டனள் வெளிப்படா, முக்க ணற்பரசு துர்க்கை யென்பணிமொ ழிந்தி டென்றனள் பொழிந்தகார், மைந்த ளத்தனொரு கோப வாளரிவ ழங்கி யங்கிலவ ழங்குவான்.

(இ - று.) அக்காலத்தில் அவ்விறைவி திருமுகத்தினின்றும் இடியைப்போல வந்து பிறந்தனள். வலிமைமிகுந்த ஆயுதங்களேந்திய பதினெட்டுக் கைகளைத்தாங்கித்தோன்றி, திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானைத்துதித்த துர்க்கையானவள் அடியாளுக்கு யாதுகட்டளை? திருவாய் மலர்ந்தருள்கவென்றனள். கரியமேகம்போலும் ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமான், கோபந்தங்கிய ஒருவாட்படையை யநுக்கிரகித்து அப்பொழுது அவளுக்குச்சொல்லுகின்றனர். எ - று. (௭)

வெம்பு வெம்புலிமு கத்தி னன்மகிட வெந்தொ ழிற்கொலைய ரக்கனா
லும்ப ரோடரிம லர்ச்ச ரோருகனு லைந்து தம்பதமி ழந்தனர்
செம்பு னற்படவ வர்ச்செ குத்திவர்சி றக்கு மப்பதம ளித்தியென்
றம்பி கைக்கிடம ளித்த நாயகன ளித்த லுந்தழல்வி ழித்தனள்.

(இ - ள்.) கொடிய கோபங்கொண்ட புலிமுகாசுரன், வெவ்விய கொலைத்தொழில்புரியும்மகிடாசுரனாகிய இவர்களால், தேவர்களும்திருமாலும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமனும் வருந்தித்தங்கடங்கள் பதவிகளை யிழந்தார்கள். உதிரப்பெருக்குண்டாக அவ்வசுரர்களைக்கொன்று, இத்தேவர்கட்குரிய சிறந்த பதவிகளை யெய்தும்படி கொடுப்பாயாகவென்று, உமாதேவிக்கு வாமபாகமுதவிய சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளவும், துர்க்காதேவி தீயெழவிழித்துப் பார்த்தனள். எ - று. (௮)

அண்ட கோளகைய திர்ந்தி டப்புவிய திர்ந்தி டப்புலிகி சாசரன்,
மண்டு வெஞ்சமர் முகத்து நின்றமர்ம லைந்து ருவழிம டித்தன, டிண்டி
றற்கொடுமை ருப்ப ழற்கண்மகி டாசு ரன்செருமு கப்படக், கொண்டெ
ழுந்தவெகு ளிப்பெ ருங்கடல்கொ திப்ப வெம்படைவி திர்த்தனள்.

(இ - ள்.) அண்டகோளகை யதிரவும் உலகமதிரவும் புலிமுகாசுரனுடன் நெருங்கிய கொடியயுத்தமுகத்திலிருந்து, அவன்மீண்டும் யுத்தஞ்செய்யாதவகையாகச் சங்கரித்தனள். மிக்கவல்லபத்தையும் வளைந்த கொம்பையும் தீச்சொரியுங் கண்ணையுமுடைய மகிடாசுரன் யுத்தமுகத்திற்றோன்ற, மேற்கொண்டெழுந்த கோபமாகிய பெரிய கடலானது கொதிக்கும்படி வெவ்விய ஆயுதங்களைச் செலுத்தினள். எ - று. (கூ)

வாளெ யிற்றுமகி டாசு ரன்றனைவ ளைத்து வெஞ்சமர்வி ளைத்தலு
நீளநின்றுநெடு நாள்க ழிந்துறநெ ருங்கி வெஞ்சமர்மு ருக்கினள்
காள கூடவிட மொத்தெ ழுந்தமகி டன்க னைக்குரலெ ழுப்பினன்
கோளு திர்ந்தனவ திர்ந்த வெண்டிசைகு லுங்கி நின்றவகி லங்களே.

(இ - ள்.) வாட்படைபோலும் பற்களையுடைய மகிடாசுரன், தன்னைச் சூழ்ந்துகொண்டு கொடும்போர் புரியவும், அர்க்கை கோபித்து நின்று பலகாலங் கழியும்படி மூண்டு பெரும்போர் செய்தனள். காளகூடவிஷம்போற் றோன்றிய மகிடாசுரன் தனது பெருங்குரலைக்கிளப்பினன். அப்பொழுது நக்ஷத்திரங்களுதிர்ந்தன. அஷ்டதிசைகளும் அதிர்ந்தன. உலகங்கள் நிலைகுலுங்கின. எ-று.

ஒள்ளெ ரிப்பொறிவி ழிப்பி றந்திடவு ருத்து வாயிதழ துக்கியோர்
வள்ளி லைப்புகர்மு கத்த வாள்கொடுமை ருப்பு டைத்தலைது மித்தனள்
பள்ள வாரிதிநி மிர்ந்த செங்குருதி பாய வற்றுவிழு மத்தலை
பொள்ளெ னக்கடிதெ ழுந்து சென்றுருமெ னத்த ழங்கமர்பு ரிந்ததால்

(இ - ள்.) ஒளிதங்கிய தீப்பொறியானது விழிகளினின்றுஞ் சிந்தும்படி கோபித்து வாயிதழைக்கடித்து, ஒரு கூர்மைதங்கிய அச்சவடிவாகிய உதிரப் புள்ளிகள் பொருந்திய முகத்தையுடைய வாளாயுதத்தால் மகிடாசுரனது கொம்புகளுடைய தலையைத் துர்க்காதேவி வெட்டியெறிந்தனள். பள்ளமாகிய கடலானது நிறைந்த தொத்த செவ்விய உதிரவெள்ளம்பெருக, அவ்வெள்ளத்தில் வீழ்ந்த அம்மகிடத்தலை அதிவிரைவிலெழுந்துபோய் இடிபோல முழங்கிப் போர்செய்தது. எ - று. (கக)

முச்சி கைப்படைதி ரித்தெ டுத்தனண்மு ழக்க மர்த்தலைம ருப்பினூ
டுச்சி குத்தினள முக்கி யத்தலைமி தித்த ருஞ்சமரொ ழித்தனள்
பச்சொ ளிக்கவுரி நூபு ரம்புனைப தந்தொ டப்பபடுகி ராசர
னச்சி ரத்தையொழி யச்சி றந்தருள மைந்து மூதறிவ டைந்தனன்.

(இ - ள்.) அதுகண்ட துர்க்காதேவி, முத்தலைச் சூலாயுதத்தை யெடுத்துச் சுழற்றி, முழக்கத்துடன் போர்செய்யும் எருமைத்தலையின் கொம்புகட்கிடையே உச்சியிற் குத்தினள். அத்தலையை யமுக்கிமிதித்து அரியயுத்தத்தினை யகற்றினள். பசிய திருமேனியுடைய கௌரியின் பாதசரமணிந்த திருவடிதீண்டப்பெற்ற மகிடாசுரன் அத்தலையையகல, மேம்பட்டுத் திருவருள்பெற்று முதிர்ந்த ஞானத்தை யெய்தினன். எ - று. (கஉ)

தரவுக் கொச்சகக் கலிப்பா.

ஓரெட் டிதழ்வட்டத் துள்ளாய சட்கோணம்
பாரித்த முக்கோண வட்டப் பராபரையே
வாரிப் படுநஞ் சமுதாக்கும் வால்வளைக்கை
வேரிக் கரும்பேவித் தின்றிவிளை மூலமே.

(இ - ள்.) ஒப்பற்ற எட்டிதழ்க்கமல வட்டத்தினுள்ளாகிய அறுகோணத்திற் பெரிய முக்கோணவட்டத்தினுள்ளே விளங்கும் பராபரையே! பாற்கடலி லுதித்த ஆலாலவிஷத்தை யமுதமாகச்செய்யும், இளமைதங்கிய வளையலணிந்த கையையுடைய மணந்தங்கிய கரும்புபோல்வாளே! விதையின்றி முளைத்த மூலப் பொருளே! எ - று. (௧௫)

ஆதியா யந்தத்தி னந்தமாய் நின்றோற்குப்
பாதியா யொன்றாய்ப் பலவாகிப் பல்லுயிராய்ப்
பேதியா நின்றாய் பெருமாட்டி நின்பெருமை
சோதியா நின்றார்க் கெளிதன்றே தொல்லவமே.

(இ - ள்.) முதன்மையாகியும் இறுதிக்கிறுதியாகியும் விளங்கும் நித்தியப் பொருளாகிய சிவபெருமானுக்குப் பாதியாகியும், ஒன்றாகியும், பலவாகியும், பல் வேறுவகைப்பட்ட உயிர்களாகியும் வேறுபட்டு விளங்குகின்றாய். பெருமாட்டியே! உன்சிறப்பைச் சோதித்துணர்வார்க்கு இலேசானதன்று. [தொல்லவமே] மேன்மையானவளே! எ - று. (௧௬)

தோன்று சராசரங்க ளெல்லாந் தொடர்விடா
தேன்ற சிவமயமு நின்னன்றி யில்லையா
லான்ற விருப்பி னருந்துவன வின்றாமே
லூன்று சுவையுளவோ நந்தா வொளிவிளக்கே.

(இ - ள்.) தோன்றப்படும் எல்லாச் சராசரங்களையும் வியாபரித்து நீங்காமற் பொருந்திய சிவமயமும் உன்னுடைய (சத்தி) மயமுமல்லாமல் வேறுஒன்று மில்லை. ஆனபடியால் நீங்காத மாணிக்கத்தீபம் போல்வாளே! அதிகரித்த விருப்பத்துடன் ஒருவர் புசிக்கும் பண்டங்களில்லையாயின் ஊன்றியுணரத்தக்க உருசி யென்பதொன்றுண்டோ? (இல்லையல்லவா) எ - று. (௧௭)

முச்செயலுங் காட்டி யவைபுரக்கு மூவரைத்த
னிச்சையிற் காட்டி யவருளத்து மெட்டாயாற்
பச்சை யிளங்குதலைக் கிள்ளாய் பரையேநின்
விச்சையிவை யென்றால் விடுத்துணர வல்லாரார்.

(இ - ள்.) சிருட்டியாதி முத்தொழில்களையுங் காண்பித்து அத்தொழில்களைக் காக்கும் திரிமூர்த்திகளைத் தனதிச்சாமாத்திரையிற் படைத்து, அத்திரிமூர்த்திகளுள்ளத்திலும் எட்டாமல் விளங்குகின்றனை. ஆனபடியால், இளமை தங்கிய மழலைச்சொல்லைக்கூறும் பசுங்கிளிபோல்வாளே! பராசத்தியே! உன்னுடையவித்தை இங்ஙனமாக விள்க்கியுணரவல்லோர் யாவர்? ஒருவருமிலர். எ - று. (௧௮)

பேதாதி பேதம் பிறந்த வுயிர்த்தொகைக்கோ
ராதார மாகி யனைவை யறிந்தளிக்கா

யோதா மறைநூ லுபநிடதத் துண்மயமாம்
பாதார விந்தம் பெறப்பெற்றேன் பாதகனே.

(இ - ள்.) பேதாதி பேதங்களாகத் தோன்றிய உயிர்த்தொகுதிகளுக்கு ஓர் ஆதாரமாகி அவரவர் தநுகரணபுவன போகங்களை அளவறிந்து அநுக்கிரகித்தனை. ஓதற்கரிய வைதிக சம்பந்தமாகிய உபநிடதநூலின் உட்பொருளாகிய உன்னுடைய பாததாமரையைப் பாதகனாகிய அடியேன் அடையப்பெற்றேன்.

என்னப் பலவா றெடுத்தேத்தி நின்றிரந்து
பன்னிப் பரசுதலு நன்கருணை பாலித்தாள்
பொன்னொத் திலங்கு சடையோற் புகழ்கணத்து
மன்னிப் புகப்பணித்தா டென்கயிலை மன்னினாள்.

(இ - ள்.) என்று பலவகையாக வெடுத்துச்சொல்லி, மகிடாசுரன் நேர் நின்று துதிசெய்து பிரார்த்திக்கவும், நல்லகிருபையை அவனுக்கு அநுக்கிரகித்தனள். பொன்போன்று பிரகாசிக்கும் சடையையுடைய சிவபெருமானைப் புகழ்கின்ற சிவகணத் தொகுதியிலே நிலைபெற்றுப் பிரவேசிக்கும்படி, அழகிய கைலையிலெழுந்தருளிய அம்பிகை கட்டளையிட்டனள். எ - று. (க௮)

ஈசற் பரவி யிருதா ளருச்சிக்கும்
பூசைத் திறனாற் புயல்வண் ணனைமுதலோ
ரேசற் றிரும்பதவி யெய்தினா ரீரிதழி
வாசத் தொடையானை யாருணர வல்லாரே.

(இ - ள்.) சிவபெருமானைத் துதிசெய்து அவருடைய உபயபாதங்களைப் பூசைபுரியும் பூசாபலத்தினால், மேகவண்ணராகிய திருமாலை முதலானவர்கள் குற்றமற்றுத் தமது பெரிய பதவிகளையடைந்தார்கள். குளிர்ந்த வாசந்தங்கிய கொன்றை மலர்மாலையணிந்த சிவபெருமானை எவர்தாம் உணருமாற்றலில் வல்லவர்? எவருமிலர். ஏ - று. (க௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மொழிந்த சரிதை முழுதுணர்ந்தீ ரினியோர் சரிதை முழுமுதலோன்
பொழிந்த கருணை தரநினைந்த ததுமற் றுமக்குப் புகல்கின்றே
மிழிந்த குணமூன் றறப்போக்கி யெழுதா மறையி னுணுக்கமுணர்ந்
தொழிந்த பவத்தீர் கேண்மினென வெடுத்துச் சூத னுரைசெய்வான்.

(இ - ள்.) இதுகாறுங்கூறிய சரிதமுழுவதையும் உணர்ந்தீர்கள். இன்னும் ஒருசரிதை முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் மிகுந்த கிருபையைக்கொடுக்கக்கருதியது. அதனையுங்கட்குச் சொல்லுகின்றோம். இழிவாகிய முக்குணங்களை யறவேயகற்றி, எழுதாக்கிளவியாகிய வேதத்தின் நுட்பத்தையறிந்து நீங்கிய பிறவியையுடையவர்களே! கேளுங்களென்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குச் சொல்வாராயினர். எ - று. (௨௦)

பண்பாற் குதலை மடமகளி ரெடுத்த கவரி பணிமாறத்
தண்பாற் றருவி னடுநீழற் றுங்கு மரியா சனந்தாங்க
வெண்பாற் கவிகை மீவிளங்க மகவா னிருக்கு மவ்வேலை
யெண்பாற் சிறந்த தவமுனிவ ரெழுவர் வரக்கண் டெதிரெழுந்தான்.

(இ-ள்.) பண்போடு குதலைச்சொல்லைப்பேசும் இளமாதர்கள் எடுத்த கவரியைப் பணிமாறவும், குளிர்ச்சியோடு கூடிய கற்பகத்தருவின் நீழலிடையே சிங்கங்கள் சுமந்த பீடிகையானது தாங்கவும், வெள்ளியபால்போன்ற சந்திரவட்டக்குடைமேலே பிரகாசிக்கவும், இந்திரன் கொலுவீற்றிருக்கும் அக்காலத்தில், எண்ணுந் தன்மைவாய்ந்த சிறப்புற்ற தவமகிமையுடைய சப்தருஷிகள் அங்கெழுந்தருளக்கண்டு இந்திரன் அவர்கட்கெதிரே யெழுந்தனன். எ-று. (௨௧)

எழுந்து முனிவர்க் கெதிர்போகிக் கடன்கள் யாவு மினிதியற்றிக்,
கொழுந்து நிமிர்த்துத் தனிப்படரும் புரிபுன் சடையோர்க் கொணர்ந்
திருத்தி, யழுந்து முவகை யெழுந்திரைப்ப முகமன் கூறி யளவளாய்த்,
தொழுங்கை தாழா னுரைப்பவிருந் தினைய பேசத் தொடங்கினன்.

(இ-ள்.) இந்திரன் எழுந்து எழுமுனிவர்கட் கெதிர்சென்று, அவர்கட்குச் செய்யவேண்டிய கடன்களை யெல்லாம் இனிதாகச்செய்து முடித்து, கொழுந்துவிட்டு ஒப்பற்றுநீண்ட புரிந்த சிறுசடையையுடைய அம்முனிவர்களை யழைத்துக்கொண்டு வந்து பீடத்திலிருத்தி, ஆழ்ந்த அன்பானது அதிகரித்துத் மேம்படலால் உபசாரவார்த்தைகள்சொல்லி அவர்களோடுகலந்து கூப்பியகையை யடாதவனாயிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகின்றான். எ-று.

அருமா தவத்தீ ரெழுந்தருளற் கனியேன் பெற்ற தளவின்றாற்,
றருமா நிதியப் பெருஞ்செல்வந் தழைக்கப் பெற்றே னின்றன்றோ,
வொருவா மனத்தி னிடைக்கிடக்குங் குறையொன் றுண்ட ததுவுரைக்கேன், பொருவா ளசுர ரிடர்விளைக்குங் கடுங்க ணாற்றிப் பொறுக்கிலனால்.

(இ-ள்.) சிறந்த அருந்தவமுடையவர்களே! தேவரீர் எழுந்தருளுவதற்கு அடியேன் பெற்றபலன் எல்லையில்லை. ஆதலால் இன்றல்லவோ கற்பகத்தருவும் சிறந்த பெரிய நிதிகளாகியசெல்வமும் தழைக்கப்பெற்றேன். அடியேன்மனதில் நீங்காமலிருக்கும் ஒருகுறைவுள்ளது. அதனைச் சொல்லுகின்றேன். அதாவது போர்புரியும் வாளேந்திய அசுரர்களுடைய துன்பஞ்செய்யுந்தீமையைப்பொறுத்துச் சகிக்ககில்லேன். எ-று. (௨௩)

திரைநீ ராடை யுலகத்துச் சிறக்கு முயிருஞ் செழும்பசும்பொற்
புரைதீ ருலகத் திமையவருந் தருமத் தொழுக்கிற் புகுந்தோருங்
கரைதீர் துயரக் கடற்கிடந்தா ரதுகாத் தொழிக்குங் கடனற்றேன்
விரைவார் சடிலத் தருந்தவத்தீர் நும்மால் வேண்டப் பெறுவேனால்.

(இ-ள்.) அலைகள் பொருந்திய கடலாடையுடுத்த நிலவுலகத்திலே மேம்பட்ட உயிர்களும், செழிய பசும்பொன்னுலாகிய குற்றநீங்கிய அமருலகத்தி லுள்ள தேவர்களும், தருமநெறியிற் பிரவேசித்தவர்களும், எல்லையில்லாத துன்பக்கடலில் மூழ்கியுள்ளார்கள். அதனை யொழித்து அவர்களைப் பாதுகாக்கும் கடன்மையை நீங்கியுள்ளேன். மணந்தங்கிய நெடியசடையையுடைய அருந்தவஞ்செய்த முனிவர்களே! உங்களால் அதையடையப்பெற வேண்டுகின்றேன். எ-று.

புரக்குந் தருவி னிழற்கிடந்த பொன்னாட் டகவை யெண்டிசையுங்
கரக்கு நிருதர் குலமுடிய மறைமந் திரத்திற் கனவோம்பிய்

பரக்கு முலகு வுயிர்த்தொகையு முய்வா னிரங்கிப் பணிப்பீரெண்
றிரக்க முனிவ ரெழுவோரு மகவாற் குறித்தொன் றியம்புவரால்.

(இ - ள்.) என்றுலே காக்கப்படும் கற்பகத்தருவி னீழலிலுள்ள பொன்னாட்டின்கண் எட்டுத்திசைகளிலும் ஒளித்துள்ள அசுரர்கள் குலமுதலற, வேத மந்திரத்தால் யாகஞ்செய்து, தேவர்கள் மட்டுமல்லாமற் பரந்த விலகிலுள்ள உயிர்க்கூட்டங்களும் உச்சீவிக்கும்படி திருவுளமிரங்கி அநுக்கிரகிப்பீர் என்று யாசிக்க, சப்தருஷிகள் இந்திரனைநோக்கி ஒன்று சொல்கின்றார்கள். எ - று.

அடலே றுகைக்கும் பெருமாற்கென் றியற்றி வணங்கு மருச்சனைகை
விடலா காது முப்பொழுது மதற்கு வேண்டுங் குறைதீர்வே
மிடைபோ கலமென் றம்முனிவ ரிசைப்பத் தவளக் கொடுங்கோட்டுக்
கடவா ரணத்தோ னெழுந்துபணிந் திரப்ப நோக்கிக் கவல்கூர்ந்தார்.

(இ - ள்.) வெற்றிபொருந்திய இடபத்தை வாகனமாகச் செலுத்தும் சிவபெருமானுக்கென்று செய்துபணியும் பூசையைக் கைவிடுதலாகாது, ஆதலால் அதற்குவேண்டிய குறையை முக்காலத்திலுந் தவிர்ப்போம், நடுவேவிடமாட்டோமென்று அச்சப்தமுனிவர்களுரைப்ப, வெள்ளியவளைந்த தந்தத்தையும் மதப்பெருக்கையுமுடைய வெள்ளையானையையுடைய இந்திரன் எழுந்துவணங்கி யாசிக்க, அவனைநோக்கி அவர்கள் கவலையிருந்தார்கள். எ - று. (உசு)

ஈன்னே யிவர்க்குப் பெருந்துயர மொழிப்பா னெதுவென் றுளமிரங்கி
யன்னே யவன்சொற் றனகேளா முனிவ ரெழுவ ரதற்கிசைந்தார்
பொன்னேய் திருநாட் டெண்டிசையும் புகுந்தார் முனிவர் புரந்தரனும்
பின்னே யிதற்கு வேண்டுவன சமிதை முதல பெரிதீந்தான்.

(இ - ள்.) இவர்கட்குள்ள பெருந்துயரத்தையொழிக்க ஏதுவழியென்று மனங்கசிந்து, அந்த இந்திரன் கூறிய வார்த்தைகளைக்கேட்டு, சப்தருஷிகள் அவன் வேண்டுகோளுக்கிணங்கினார்கள். பொன்மயமான சுவர்க்கநாட்டில் அஷ்டதிசைகளிலும் முனிவர்கள் பிரவேசித்தார்கள். இந்திரனும் அம்முனிவர்கட்குப்பின்னே இவர்கள் யாகத்திற்கு வேண்டுவனவாகிய சமிதைமுதலியவற்றை மிகுதியாகக் கொடுத்தான். எ - று. (உஎ)

தருப்பை முதல வரநோக்கிக் குண்டந் திருத்தித் தழலெழுப்பி
யிருக்கு முறைசொற் றனநுஞுக்க மெடுத்துக் கூறி யோமித்தார்
மருக்கு மிதழிச் சடைமோலிப் பெருமான் பூசை வழுவரலாற்
பெருக்குந் தழல்வாய் முகந்தோறும் பிறந்தார் பிறைவா ளெயிற்றசுரர்.

(இ - ள்.) தருப்பைமுதலிய உபகரணங்கள் தமக்கு வேண்டுவனவரக்கண்டு, முனிவர்கள் யாககுண்டம் நியமித்து அக்கினியை யெழுப்பி, வேதத்தில் முறையாகச் சொல்லப்பட்டனவாகிய நுட்பங்களை யெடுத்துச்சபித்து ஹோமஞ்செய்தார்கள். மணங்கமழுங் கொன்றைமாலையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான் பூசனை இதனுல் தவறியபடியால், வளர்ந்த அவ்யாகாக்கினியில் இடந்தோறும் பிறைச்சந்திரன்போலும் வெள்ளிய பற்களையுடைய அசுரர்கள் சனித்தார்கள். எ - று. (உஅ)

அரத்தா சுரனென் றொருசிருத னரத்த வீர னொருசிருத
னுரப்பு திறலோ ரிராவணரென் றெழுவ ரோங்கி யுருத்தெழுந்தார்
வரத்தா னுயர்ந்த முனிவரரைத் தின்பா னெழுந்து வழியலைத்துத்
துரத்தா நின்றா ரவரிவருக் கெட்டா மறையுந் தொலைசென்றார்.

(இ - ள்.) அரத்தாசுரனென்றோ ரசுரன், அரத்தவீரனென்றோ ரசுரன், அதட்டத்தக்க வல்லபமுடையோராகிய இராவணரென்னும் பெயருடைய ஏழசுரர்கள் ஆகிய விவர்கள் கோபித்தெழுந்தார்கள். வரத்தினால் மிகுந்த சப்த ருஷிகளைத் தின்னும்படி யெழுந்து வழிமறித்துத் துரத்தினார்கள். அம்முனிவர்கள் இவ்வசுரர்களுக்கு அகப்படாமல் மறைந்துபோகுமளவும் ஓடிப்போனார்கள்.

வரிவண் டலைக்கும் பசுந்துளவத் தொடையோன் முதல வானவரை
விரியும் படிகண் டவருலக மிடித்துப் பொடித்தா ரெவ்வுலகும்
புரியுந் துயரக் கடலுழப்பப் புடைத்துச் செகுத்தார் புன்றொழிலோர்
விரியுங் கடனீ ருலகவுயிர் வெங்காற் பூளை யெனச்சிதைந்த.

(இ - ள்.) கீற்றுகளமைந்த வண்டுகளலைக்கின்ற பசிய துளசிமாலை யணிந்த திருமால் முதலாகிய தேவர்களைப் பரவியோடும்படிசெய்து, அவர்களுலகங்களாகிய பதவிகளை யிடித்துப் பொடிபடுத்தினார்கள். எல்லாவுலகங்களிலும் இழிதொழிலுடைய அவர்கள் தாம் செய்யுந் துன்பக்கடலால் வருந்த அடித்துக்கொன்றார்கள். பரந்தகடனீர் சூழ்ந்த உலகத்திலுள்ள வுயிர்களெல்லாம், கடுங்காற்றிலகப்பட்ட பூளைமலர்போலச் சிதைந்தன, எ - று. (௬௦)

நின்ற நின்ற பதவியொழித் தொருங்கு போகி நெடுங்கயிலைக்
குன்று புகுந்தா ரரிமுதலோ ரிமயச் சிலையோற் குறித்திரங்கி
மன்றன் மலரா லருச்சனைகை வகுத்தார் மலர்த்தாள் பூசித்தார்
சென்று கழிந்த பெருங்காலம் புலவர் யாருந் திகைப்புற்றார்.

(இ - ள்.) திருமால் முதலானவர்கள் தாங்களிருந்த நிலைபெற்ற பதவிகளை விடுத்து ஒருசேரச்சென்று நெடிய கைலாயகிரியை யடைந்தார்கள். மேருமலையை வில்லாக வுடைய சிவபெருமானைத் தியானித்து மனமிரங்கி மணந்தங்கிய மலர்களைக்கொண்டு தமது கையால் அர்ச்சனைபுரிந்து, அவ்விறைவனது தாமரைமலர்போன்ற பாதங்களைப் பூசித்தார்கள். பலகாலங்கழிந்தன. தேவர்களெல்லாருந் திகைத்தார்கள். எ - று. (௬௧)

மல்லற் கயிலைத் திருப்பொருப்புக் கிடந்த கோயி னெடுவாயிற்
செல்லப் புகுந்தா ரிருகமலச் செங்கட் பெருமான் முதலெவரும்
புல்லத் துவசத் தனிப்பரனைத் தொழுதா ரழுதார் புலம்புற்றா
ரல்லொத் தெழுந்த கொடுநிருத ரிழைத்த வனைத்து மறிவித்தார்.

(இ - ள்.) வளந்தங்கிய திருக்கைலாயகிரியிலுள்ள திருக்கோயிலின் பெரிய திருவாயிலிற் புகுந்துசென்றார்கள். செந்தாமரை மலர்போலும் இருவிழிகளையுடைய திருமால் முதலிய தேவர்களெல்லாரும் இடபக்கொடியையுடைய ஒப்பற்ற சிவபெருமானை வணங்கினார்கள். அழுதார்கள். புலம்பினார்கள். இருள்போன்றெழுந்த கொடிய அசுரர்கள் செய்த கொடுமைகளையெல்லாம் விண்ணப்பஞ் செய்தார்கள். எ - று. (௬௨)

மத்த மறுகு புனைந்தசடா மகுடப் பெருமான் மருங்கிருக்கு
முத்த நகையாண் முகநோக்கி முறுவல் பூத்து மொழிகுவனாற்
சத்த முனிவர்க் கொடுதமது பகைதீர்த் தொழிவான் சமைந்தற்றார்
நித்த நெறியன் னவர்க்கழியப் பகைமேற் பழியாய் நிகழ்ந்ததால்.

(இ - ள்.) ஊமத்தமலரையும் அறுகம்புல்லையுமணிந்த சடாமுடியையுடைய சிவபெருமான் தமது வாமபாகத்திலிருக்கும் முத்துப்போன்ற தந்தபந்தியுடைய பிராட்டியார் திருமுகத்தைநோக்கிப் புன்னகையரும்பித் திருவாய்மலர்கின்றார். சத்தமுனிவர்களைக்கொண்டு தங்கள் பகைவரைக்கொன்றொழிக்க ஆலோசித்துச் செய்தார்கள். நித்தியமாகிய மார்க்கத்தையச்சப்த முனிவர்நீங்க, பகையேயன்றிப் பழியாகவும் சம்பவித்தது. எ - று. (௯௩)

என்று வருளித் திரிசூலக் கௌரி வதன மெதிர்நோக்கிக்
கொன்னே சூலப் படையேந்திக் குண்டோ தரற்கொண் டவணேகி
மின்னு றெயிற்று நிருதரவ ரெழுவர் விளிய விளித்துநெடும்
பொன்னார் திகிரி யவனுலகு மேனோ ருலகும் புரந்தளிப்பாய்.

(இ - ள்.) என்று அருளிச்செய்து, திரிசூல கௌரியின் முகத்தை நேரே கண்டு, பெருமைதங்கிய சூலாயுதந்தாங்கி, குண்டோதரனைக்கொண்டு ஆங்கெய்தி மின்னல்பொருந்திய பற்களையுடைய அவ்வசுரர் எழுவரிறக்கும்படிகொன்று, நெடிய பொன்மயமாகிய சக்கிராயுதந்தாங்கிய திருமாலின் வைகுண்டலோகத்தையும் பிறதேவருலகத்தையும் காத்திரட்சிப்பாயாக. எ - று. (௯௪)

போதி நீயென் றுமையிடத்துப் புரிபுன் சடையோன் பணித்தருளக்
காதி மறலுஞ் சினங்கிளைப்பக் கௌரி கடுவா ளரியுகைத்துப்
பாத கரையெங் கெனத்தடவ வரத்தா சுரன்வந் தெதிர்ப்பட்டான்
மோதி யுடற்று மடுசினத்துத் திமிலத் திண்போர் மூண்டனவே.

(இ - ள்.) இனிநீ செல்கவென்று, புரிந்த சிறு சடையையுடைய சிவபெருமான் உமாதேவியாரிடத்தில், கட்டளைசெய்தருள, உருத்தெழுந்த கோபாவேசம் அதிகரித்த கௌரியம்மை கொடுமைதங்கிய வலிய சிங்கவாகனமேறி அப்பாவிகளை யெங்குள்ளாரென்று தேடுகையில், அரத்தாசுரனென்பவன் எதிரேவந்து காணப்பட்டான். தாக்கிக்கிளம்பிக் கொல்லுங் கோபத்தோடு போரொலியுடன்கூடிய வலியபோர் உண்டாயிற்று. எ - று. (௯௫)

விளைத்த சினத்துக் கௌரிகர வெள்வா ளெறிய வெவ்வசுரன்
கிளைத்த குருதித் துளியொன்றுங் கிவன துருவங் கிடைத்தெழுந்து
வளைத்த சேனை யளவிறந்த தாகப் பொருதான் வல்லசுரன்
முளைத்த சீற்றந் தலைக்கொண்டு முனிந்தாண் முக்கட் பெருமாட்டி.

(இ - ள்.) கௌரியம்மையார் அதிகரித்த கோபத்தோடு கையிலேந்திய வெவ்விய வாளால் வெட்டவும், கொடிய அசுரனுடைய சிந்திய உதிரத்துளியொவ்வொன்றும் அப்பொழுது அவன் வடிவம்பெற்றெழுந்து சுற்றிக்கொண்ட அசுரச்சேனை யெண்ணிறந்தனவாக அவ்வலிய அசுரன் போர்செய்தான். தோன்றிய கோபமானது மீக்கொண்டெழும்பி, திரிநேத்திரங்களையுடைய கௌரியம்மையார் சீற்றமெய்தினர். எ - று. (௯௬)

சீற்றந் தலைக்கொண் டெரிவிழித்து நினைக்குங் காலைச் செருக்களத்துக்
கூற்றுந் துணுக்கம் பெறநடந்து காளி புகுந்தாள் கொலைநிருத
ராற்றுஞ் சமரி னரியுகைத்தாள் படைவா ளறுப்ப வவருடல
மூற்றுங் குருதிக் கருங்காளி பேழ்வாய் மடுத்துண் டுறிஞ்சினளால்.

(இ - ள்.) கோபந்தலைக்கேறித் தீயெழவிழித்து நினைத்தகாலத்திலே, அவ் யுத்தபூமியில் இயமனும் நடுக்கமெய்தும்படி காளிகாதேவி நடந்துவந்தாள், கொலைத்தொழில் புரியும் அசுரர்கள் செய்த யுத்தத்தில், சிங்கவாகனகௌரி, அசுரச்சேனையை வாட்படையாலறுக்க, அவர்களுடலங்கள் சிந்திய உதிரத்தைக் கரிய காளியானவள் பிளவுபட்டவாயைத் திறந்து பருகியுறிஞ்சினள். எ - று.

கொடும்போ ரினைய விளைத்துடற்ற நிருத ரிருவர் கொலைப்பட்டார்
கடும்போர் விளைக்கு மைவருமக் குண்டோ தரனாற் கழிந்தொழிந்தா
ரடும்போர் கவைச்சூற் கருங்காளி குருதிச் செருக்கி னறிவொழிந்தா
டொடுங்கா ருவரி யுலகனைத்துஞ் செகுத்தா ளமரர் துணுக்குற்றார்.

(இ - ள்.) இத்தகைய கொடும்போர்புரிந்து கலக்க, இரண்டசுரர்கள்கொல் லப்பட்டார்கள், இன்னும் கடும்போர்செய்து கொண்டிருந்த ஐந்தசுரர்களாகிய இராவணர்கள் குண்டோதரனால் உயிர்நீங்கி யிறந்தார்கள். கொல்லத்தக்க போர் புரியும் பிளவுபட்ட சூலாயுதந்தாங்கிய கரிய காளிகாதேவி உதிரம்பெருகிய இறுமாப்பினால் மதிமயங்கினாள். தோண்டப்பட்ட கரியகடல்சூழ்ந்த உலகமுழு வதையும் அழித்தாள். தேவர்கள் நடுங்கினார்கள். எ - று. (௧௮)

ஆய பொழுதி னிருங்கயிலைப் பெருமா னுணரா வவளுடனே
மேய நிருத்தத் தொழிலயர்ந்தா னுடனேத் தாடும் விறல்கொண்டாள்
சேய பவளக் கொடிச்சடிலப் பெருமா னொருபொற் றிருத்தாளை
மீயம் பரத்தி னுச்சிதொட விடுத்தா ளவளும் வெள்குற்றாள்.

(இ - ள்.) ஆகிய அக்காலத்தில் பெரிய கைலாயகிரியி லெழுந்தருளிய சிவ பெருமான் இவ்விர்த்தாந்தத்தை யறிந்து அக்காளியோடு பொருந்திய நடனயுத் தஞ்செய்ய விரும்பினர். அவளும் அவரோடு சமானமாகி நடிக்கும் ஆற்றலெய்தி னள். சிவந்த பவளக்கொடிபோலுஞ் சடையையுடைய சிவபெருமான் தமது அழகிய ஒருதிருவடியை மேலே ஆகாயத்தைநோக்கி உச்சிதொடும்படி யுயர்த்தி னர். அவரும் (அங்ஙனம்புரிய வியலாது) நாணமெய்தினள். எ - று. (௧௯)

ஆடு நிருத்த முடனடித்தா ளந்தத் தொழிலி னறத்தோற்று
ணீடு செருக்கி னிலையொழிந்தா ளரியை முதலோர் நிலவலையச்
சாடு திரைநீர்ச் சடையோனை நடனம் பரவுந் தகைபெற்று
ரூடு நனைக்கு முவகையொடும் பதம்பெற் றொழிந்தா ருறுதுயரம்.

(இ - ள்.) ஆடத்தக்க நடனமுறையாக வாடினாள். அந்த நடனத்தொழி லில் அறவே தோற்றனள். மிக்க அகங்காரத்தினால் தன்னிலை நீங்கினள். திரு மாலை முதலாகிய தேவர்கள் பூவலயத்திலே, மோதுகின்ற அலைகளையுடைய கங் காநதிதங்கிய சடையையுடைய சிவபெருமானைத் திருநடனகாலத்தில் துதி செய்யுந் தகுதியெய்தினார்கள். உள்ளத்தில் குளிர்ச்சி யெய்திய சந்தோஷத் தோடும் தங்கள் பதவிகளையெய்தி, அசுரர்களாற் பொருந்திய துயரத்தினின் று விலகினார்கள். எ - று. (௨௰)

அரிபிரமாதியர் பூசனைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௯௧-க்குத் திருவிருத்தம் ௯௪௰.

முப்பத்திரண்டாவது

சனகாதியர் சிவார்ச்சனைச் சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முள்ளுடை நெடுந்தாட் கமலபீ டிகையி னான்மறை முழுமுதற் கிழவ, னுள்ளுறு முவகை நிலைதரப் பயந்த பாலக ரொருதனி நால்வர், தள்ளருந் தவத்தி னோங்கிய தொல்சீர்த் தகுசன காதியர் சடைமேற் றெள்ளுதெண் டிரைநீர் மிலைச்சுமெம் பரனை யருச்சனை வரன்முறை செய்தார்.

(இ - ள்.) முள்ளையுடைய நெடிய தாளமைந்த தாமரைமலர்ப் பீடத்தி லெழுந்தருளிய நான்குவேதங்கட்கும் முழுமுதற்றலைவனாகிய பிரமன், மனத்தின்கட் பொருந்திய சந்தோஷம் நிலைக்கும்படி தவத்தினாலுயர்ந்த பழமையாகிய சிறப்பையுடைய சனகன்முதலானவர்கள், சடையின்மேலே தெள்ளிய அலைகள் பொருந்திய கங்காசலத்தையணிந்த எமதுசிவபெருமானை முறைப்படி அர்ச்சனை புரிந்தார்கள். எ - று. (க)

ஆண்டவ ரியற்று மருச்சனைக் கிரங்கி யாடகப் பொருப்பருஞ் சிலையோ, னீண்டுபே ரன்பி னாங்கவர் நோக்க வினிதெழுந் தருளின னிணையோர், தூண்டரு முவகை யிரைத்துமிக் கெழுந்து தொழுதன ரழுதனர் துணைக்கண், காண்டகு சிறப்பின் மெய்பொடித் தயர்ந்தா ராடினர் பாடினர் களித்தார்.

(இ - ள்.) அப்பொழுது அவர்கள் செய்யும் அர்ச்சனைக்கு மனங்குழைந்து, பொன்மலையாகிய மேருவை அரியவில்லாகக்கொண்ட சிவபெருமான், நெருங்கிய பேரன்போடு அமரர்கள் தரிசிக்கும்படி இனிதாக எழுந்தருளினர். இவர்கள் நால்வரும் எழுதற்கரிய பேரானந்தமானது மேம்பட்டுத் தோன்றுதலால் வணங்கினார்கள் அழுதார்கள். இருவிழிகளாற் றரிசிக்கத்தக்க சிறப்போடு உடல் புளகித்துப் பரவசமானார்கள். ஆநந்தக்கூத்தாடினார்கள். பலவகைத்தோத்திரங்களைப் பாடினார்கள் சந்தோஷித்தார்கள். எ - று. (உ)

விரித்தவார் சடையோன் றிருவரு ளுவப்ப வேதவா ரிதிக்கரை கண்டார், தெரித்துமப் புராண வாகமப் பரவை சிவபுரா ணப்பெருந் திரட்சி, யுரித்தெனப் படுவ யோகமோ ரெட்டு மற்றுள கலையெலா மொருங்கே, தெரித்துணர்ந் தளந்த சிவானந்த வெள்ளத் தாழ்ந்தன ரருந்தவச் செல்வர்.

(இ - ள்.) விரித்த நெடியசடையையுடைய சிவபெருமான் சந்தோஷித்துத் திருவருள்புரிய, வேதக்கடலைக் கரைகண்டார்கள். அப்புராணாகமக்கடலையும், சிவபுராணப் பெருந்தொகுதியையும் உரித்தென்று சொல்லப்படுவனவாகிய ஒப்பற்ற அஷ்டாங்கயோகங்களையும், இன்னும் உள்ளனவாகிய பலகலை ஞானங்களையும் ஒருசேர வோதியுணர்ந்தளவுபடுத்திய சிவானந்தப் பெருக்கில் அவ்வருந்தவச்செல்வர் நால்வரும் அமிழ்ந்தனர். எ - று. (ங)

இனையவரைப் போல வியாதனெம் பெருமா னிரங்குறு புரப்பதங் குணியா, நனைமல ருவப்பி னருச்சனை புரிந்தா னுங்கது நயந்தன னாகிப், புனைசடைப் புனிதன் சனகனா தியர்க்குப் புரிந்தரு டிருவருள் வழங்க, நினைவரு மறையு மாகம புராணப் பரவையுங் கடந்தன னின்றான்.

(இ - ள்.) இவர்களைப்போல, வியாதமுனிவன் எமது சிவபெருமானது சத்திக்கில் ற பாதசரமணிந்த திருவடிகளைத் தியானித்துக் களிப்போடுகுளிர்ச்சி பொருந்திய மலர்களால் அர்ச்சனைபுரிந்தனன். கட்டிய சடைமுடியையுடைய பரிசுத்தராகிய சிவபெருமான் அப்பூசையை விரும்பினவராகி, சனகாதிமுனிவர்கட்கு அநுக்கிரகித்த திருவருளைத்தந்தருள, எண்ணுதற்கரிய வேதாகமபுராணமாகிய சமுத்திரத்தைக் கரைகடந்து விளங்கினான். எ - று. (௪)

வாணிலா நகையி னடுபுரந் தீத்த வளரொளிக் கயிலையெம் பெருமா, னீணிலா மௌலிப் பரமனே முதன்மை யென்பதோர் நெறித்தலை நின்றான், கோணிலா வுளத்துச் சிவானந்த வெள்ளங் குளித்தன னாண்டுறை யொருநா, ளாணவச் செருக்கொண் டிருந்தவன் வாணித் திருநதிக் கரைமருங் கடைந்தான்.

(இ - ள்.) ஒளிபொருந்திய சந்திரிகையைவீசும் புன்னகையினாற் கொல்லத்தக்க முப்புரங்களையு மெரித்தருளிய, ஒளிவளருந் திருக்கைலாயகிரியி லெழுந்தருளிய எமது சிவபெருமானாகிய நெடிய சந்திரசேகரனே ஆதிநாயகனென்னும் ஒரேவழியிற் சிறந்து நின்றனர். கோணுதலில்லாத மனத்தோடு சிவானந்தவெள்ளத்தில் மூழ்கினர். ஒருநாள் அவன் ஆணவமலச்செருக்கோடிருந்து சரசுவதி நதிக்கரையினருகே யெய்தினர். எ - று. (௫)

நாரதன் முதல விருடிகண் முக்க ணாயகற் பரசுறுந் தவத்தோர், வார்சடை மௌலி யெம்பிராற் குணித்த யோகிகள் குழாத்திடை வந்தா, ரார்தரு வேட்கைக் குறையுள ராகி யாங்கவற் கெதிரெழுந் தடைந்தார், சோர்வறத் தெரிந்து செய்வன யாவும் வரன்முறை தொகுத்தனர் கொணர்ந்தார்.

(இ - ள்.) நாரதன் முதலாகிய விருடிகள், திரிநேத்திரராகிய சிவபெருமானைத் துதிசெய்யுந் தவமுடையவர்கள், நீண்ட சடைமுடியையுடைய எமது சிவபெருமானைத் தியானித்த யோகிகள் ஆகியவிவர்கள் கூட்டத்தில் வந்தனன். பொருந்திய ஆசைக்கு வாசஸ்தானமானவர்களாகி அவ்வியாதமுனிவனுக்கு எதிராகவெழுந்து சேர்ந்தார்கள். சோர்வின்றிச் செய்யத்தகுவனவாகிய உபசாரங்களையெல்லா முணர்ந்து முறையேசெய்து அழைத்துவந்தார்கள். எ - று. (௬)

வேதமுற் றளந்த வியாதனு மற்றை நாரதன் முதலமெய்த் தவத்து, மாதவர் யாரு மொருவழிச் சிறப்பி னிருந்துழி மற்றைய முனிவ, ராதியெம் பெருமான் றிருவரு ளடைந்தா யாரண நான்கெனப் பகுத்தா, யோதுசின் மயத்துக் கொருதலை நின்றாய் கலையெலா மொருதனி யுணர்ந்தாய்.

(இ - ள்.) வேதமுழுவதையும் அளந்தறிந்த வியாதமுனிவனும் ஏனையநாரதாதி மெய்த்தவமுடைய முனிவர்களும் ஓரிடத்திற் சிறப்பாக வீற்றிருக்கையில், மற்றமுனிவர்கள் வியாதமுனிவரைநோக்கி ஆதிதேவனாகிய எமது சிவபெரு

மான் திருவருள்பெற்றீர். வேதங்களைநான்காகப்பிரித்தீர். சொல்லத்தக்க ஞானமயத்திற்கு ஒருதலைமையாக நின்றீர். எல்லாக் கலைஞானங்களையும் ஒருசேர ஒப்பற்றுணர்ந்தீர். எ - று. (எ)

முற்படு காலத் தொருதனிப் பெருமான் றன்மைமுற் றறைந்தனை யனையான், சிற்குண மளந்து தெரிப்பதற் கரிதாய்த் தெருமரு சிந்தையே மெமக்கு, நற்படு வகையி னாதியங் கடவுட் டன்மையை நவிற்றுதியென்று, ரற்படு முளத்தி னாணவச் செருக்கின் வியாதனீ தறைகுவதானான்.

(இ - ள்.) பூர்வகாலத்தில் ஒப்பற்ற ஒரு சிவபெருமான் தன்மையை முழுதும் ஓதினீர். அவ்விறைவனுடைய ஞானமயத்தை யளவுபடுத்திச் சொல்லுதற் கரிதாய் மயங்கிய மனமுடைய வெங்களுக்கு, நல்லவகையாக ஆதிநாயகனாகிய அழகிய சிவபெருமான் மகிமாவிசேஷங்களைக்கூறி யருள்வீராக வென்றார்கள். [இருள்தங்கிய] அஞ்ஞானம் பொருந்திய மனத்திலெழுந்த ஆணவமலச்செருக்கினால் வியாதமுனிவர் இதனைச்சொல்வாராயினர். எ - று. (அ)

உயிர்க்கெலா முறையு முடம்புமா யாங்க னுயிர்தொறு முயிர்தொறு முதவி, யயிர்க்கலாந் தன்மை யன்மைய னாகிச் சராசர மனைத்தினு மளவிக், குயிற்கொழுங் குதலைத் திருமகட் புணர்ந்து குரைதிரைப் பாற்கடன் முகட்டிற், புயற்கிடந் தாங்கு யோகநித் திரையி னரவணை பொலியுமப் புனிதன்.

(இ - ள்.) உயிர்கட்கெல்லாம் வசிக்கும் உடம்பாகியும், எல்லாவுயிர்களோடுமிருந்து அநுக்கிரகித்து, ஐயப்படுந் தன்மையில்லாதவனாகி, சராசரப்பொருள்களிலெல்லாங் கலந்து, குயில்போலுங் கொழுவிய மதலைச்சொல்லையுடைய திருமகளைக்கூடி, ஒலிக்கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலி னுச்சியில் மேகமானது இருந்தாற்போல ஆதிசேஷனாகிய சயனத்தில் யோகநித்திரைபுரியும் அந்தப்பரிசுத்தமான நாராயணன். எ - று. (கூ)

அண்டமு மண்டத் தகவையி னடங்கு மகிலமுங் குலவரை யனைத்து, மெண்டரற் கரிய வுயிர்த்தொகை யனைத்து முந்திநின் றெழுதரக் கிளைத்த, புண்டரீ கத்த னினிதிருந் தளிப்பான் புராதனற் கின்னருள் வழங்கிக், கண்டுயில் பவனே கடவுண்மற் றில்லை யொருதனிக் கடவுளென் றிசைத்தான்.

(இ - ள்.) அண்டமும், அண்டத்தினுள்ளடங்கிய உலகங்களும், சிறந்த மலைகள் யாவும், எண்ணுதற்கரிதாகிய உயிர்த்தொகுதிகள் முழுவதையும், திருவுந்தியினின்று எழும்படி, கிளைத்த தாமரைத்தவிசில் பிரமனானவன் இனிதாக விருந்து படைக்கும்படி அப்பழையோனுக்கு இனிதாகத் திருவருள் செய்து யோகநித்திரைசெய்யும் அத்திருமாலே கடவுள். ஒப்பற்ற மேலானகடவுள் வேறில்லையென்று வியாதமுனிவர் கூறினர். எ - று. (க௦)

ஆண்டவ னுரைத்த புன்மொழிகேட்ட நாரதன் முதலினோ ரழிந்து, நீண்டநெஞ் சினராய்ச் செவித்தொளை புதைத்தார் சிவமெனும் பெருந்தொனி கேட்ப, வேண்டரு நலத்தின் முன்னெமக் குணர்த்தி விளக்கினை யவையெலாங் கிடப்பத், தூண்டருங் கடவுள் வேறெடுத் துரைத்தா யர்த்தனை பழமறைத் துணிவு,

(இ - ள்.) அப்பொழுது அவ்வியாதன்கூறிய இழிந்தவார்த்தையைக்கேட்ட நாரதன் முதலானோர் வருந்திப்புண்பட்ட மனமுடையவராய்த் தமது செவித் தொளைகளைப் பொத்திக்கொண்டார்கள். சிவமென்னும் பெருந்தொனியைக கேட்கும்படி, வேண்டிய சிறப்புகளோடு முன்னே எங்களுக்கு விளக்கியுணர்த்தினீர். இப்பொழுது அவையெல்லாமிருக்க, சுயஞ்சோதியாகிய கடவுள் வேறுண்டென்றெடுத்துக் கூறினீர். பழமையாகிய வேதத்தின் துணியொருளை மயங்கினீர்போலும். எ - று. (கக)

என்றவ ரிசைப்பத் தன்னுழை யிருந்த சீடருந் தமதுள மிகழ்ந்தா
ரொன்றின ரொருங்கு வியாதனை நோக்கி யீங்குநீ யுரைத்தருண் மாற்ற
மின்றெழுந் தியங்கிக் கங்கைநீர் படிந்து காசியி னெம்பெரு மான்மு
னின்றுரைத் தனையே லத்தலை யாமு நின்றிறத் தொழுகுது மென்றார்.

(இ - ள்.) என்று அம்முனிவர்கள்கூற, அவ்வியாதமுனிவனோடிருந்தமாணவரும் தமது மனதில் அவமதித்தார்கள். அப்பொழுது யாவரும் ஒன்றாகக் கூடி வியாதமுனிவனைநோக்கி, இவ்விடத்தில் நீர்சொல்லிய சொல்லானது, இப்பொழுதுசென்று கங்காசலத்தில் ஸ்நானஞ்செய்து காசிக்ஷேத்திரத்திலெழுந்தருளிய எமது சிவபெருமான் சந்நிதானத்திலிருந்து சொல்லுவீராகில், அப்பொழுதேநாங்களும் உம்முடைய கருத்தின்படி நடப்போம் என்றார்கள். எ-று.

ஆதுசெய் குதுமென் றெழுந்தனள் வியாத னனைவரு மந்நெறிப்
படர்ந்தார், மோதுவெண் டிரைநீர்ப் பகீரதி மருங்கு புகுந்தனர் மூரி
திரைப் பெருநீர், நீகறத் துளைந்தார் மழவிடை யவன்முற் சென்றனர்
திருநடம் பயிலுஞ், சீதநாண் மலர்ப்பொற் சேவடி பணிந்தா ரெழுந்
தன ரருந்தவச் செல்வர்.

(இ - ள்.) அதனைக்கேட்ட வியாதமுனிவன் அதனைச்செய்வோமென்றெழுந்தனன். யாவரும் அவ்வழியே சென்றார்கள். மோதுகின்ற வெள்ளிய அலைகளையுடைய நீர் நிரம்பிய கங்கையாற்றினருகே சென்றார்கள். மறிகின்ற அலையுடைய பெரிய கங்காநதியிற் குற்றமறமூழ்கினார்கள். இளமைதங்கிய இடபவாகனமுடைய சிவபெருமான் சந்நிதியை யடைந்தார்கள். திருநடனம் புரியும் குளிர்ச்சிபொருந்திய அன்றலர்ந்த தாமரை மலர்போன்ற அழகிய சிவந்த திருவடிகளை அவ்வருந்தவச் செல்வர்கள் வணங்கினார்கள். எ - று. (கங)

வெறிப்பட மடக்கு மாணவச் செருக்கு விரவநின் றலமரு வியாத
னெறிப்படு சடையீர் கேண்மினென் றொருகை நிவத்தினின் றுங்கிது
நிகழ்த்தும், பொறிப்பணிப் படலைத் துழாய்புனை மருமப் புங்கவற்
கல்லது முதன்மை, குறிப்பரி தெனலு நாவயர்ந் தெடுத்த கொடுங்கர
முடக்கில னின்றான்.

(இ - ள்.) மயக்கமெய்தத் திருப்புகின்ற ஆணவமலச் செருக்கானது கலப்பவிருந்து சுழலுகின்ற வியாதமுனிவன், நெறிதலுற்ற சடையையுடைய முனிவர்களே! கேட்பீர்களாக என்று ஒருகையைத்தூக்கி நின்று அப்பொழுது இதனைச் சொல்லுகின்றான். புள்ளிகள் பொருந்திய சேஷசயனமுடைய துளவமாலை தரித்த மார்பினராகிய நாராயணனுக்கல்லது தலைமைத்தன்மை கூறுவதரிதென்று சொல்லவும், நாசோர்ந்து தூக்கியவலிய கரமானது முடக்கமாட்டாதவனாக நின்றான். எ - று. (கச)

உரைத்தநா வயர நீட்டிய தடக்கை யந்தரத் தேகுற நிறுத்தான்,
வரைத்திர டின்டோட் சூற்படைக் கால வயிரவக் கடவுளாங் கதனை,
யிரைத்தெழு முவகை மிக்கெழுக் கண்ட முனிவர ரிவனுடைச் சீடர்,
கரைத்தசிந் தையரா யவெள்ளிவெண் கயிலைக் கடவுளைத் தொழுதுளங்
களித்தார்.

(இ - ள்.) சொல்லிய நாவானது சோரவும் நீட்டியபரந்த கையானது மே லோக்கிச் செல்லவும், மலைபோலத் திரண்டதோளையுடைய சூலாயுதமேந்திய வைரவக்கடவுள் நிறுத்திவிட்டனர். அச்செயலை அதிகரித்தெழுந்த சந்தோஷ மிக்கூறக்கண்ட முனிவர்களும் இவ்வியாதனுடைய சீடர்களும் உருகிய மன முடையவர்களாய் வெண்ணிறந்தங்கிய வெள்ளிமலையாகிய கைலாயத்திலெழுந் தருளிய சிவபெருமானை வணங்கி மனமகிழ்ந்தார்கள். எ - று. (கரு)

நீட்டிய தடக்கை முடக்கல னாகி யுரைத்தநா நிமிர்க்கல னாகிக்,
கோட்டிய வுருவிற் றன்செய லொழிந்து நிற்றலுங் கொழித்தெறி கடுங்
கான், மூட்டுவான் சிறைய புள்ளர சுகைத்து முளரியொன் றுந்திபூத்
தலரக், காட்டிநான் முகனைப் பயந்தசெங் கமலக் கண்ணனுங் கடைந்
திவை கழறும்.

(இ - ள்.) அப்பொழுது வியாதமுனிவன் நீட்டிய தன் பரந்தகையினை முடக்கமாட்டாதவனாகியும், சிவநிந்தைகூறியநாவினை நிமிர்க்கமுடியாதவனாகியும் விளங்கிய தன்வடிவத்தில் தனது செய்தொழிலற்றவனாய் நிற்கவும், கொழித்து வீசுகின்ற கொடியகாற்றை யெழுப்பும் பெரிய சிறகுகளையுடைய பட்சிராசனா கிய கருடனை வாகனமாகச்செலுத்தி, தமது உந்தியினின்று தாமரையொன்று புட்பித்தலரக் காண்பித்து, நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவனையீன்ற செந்தாமரை மலர்போன்ற விழிகளையுடைய திருமால் அங்கெழுந்தருளி அவ் வியாதமுனிவனோடு இப்படிக்கூறுவார். எ - று. (கசு)

இருந்தவத் தெவர்க்கும் பரமயோ கத்தி னடைந்தரு ளியோகிய
ரெவர்க்குந், திருந்துநான் மறைக்கு மாகம புராண மெவற்றிற்குஞ்
செப்புமற் றெமக்கும், பொருந்துதற் கரிய யாவையுங் கடந்து மேற்படு
மொருதனிப் புனித, னரும்பிளந் திங்கட்கண்ணியோ னன்றி யாருள
ரறிந்தயர்ந் தனையால்.

(இ - ள்.) பெருந்தவமுடைய ரெல்லாருக்கும், சிறந்த யோகநிலையிற்பொ ருந்தியுள்ள யோகவான்களெல்லாருக்கும், திருத்தமாகிய நான்குவேதங்களுக் கும், ஆகமபுராணாதிகளெல்லாவற்றிற்கும், சொல்லப்படும் சிறப்பமைந்த எமக் கும், அடைதற்கரிய எல்லாவற்றையுங் கடந்து மேம்பட்ட ஒரு ஒப்பற்ற பரி சுத்தமுடையார் அரும்பிய இளஞ்சந்திரனைச் சிரோமாலையாகவணிந்த சிவபெரு மானையன்றி வேறியாவரிருக்கின்றனர்? (ஒருவருமிலர்) தெரிந்திருந்தும் மதி மயங்கினை. எ - று. (கஎ)

பல்லுயிர்த் தொகையு மண்டமு முலகு மப்படி வரன்முறை
படைத்துத், தொல்லையர் தொழிலு நடத்துவா னெந்து கடவுளர்த தொ
குத்துமே லொருதா, னல்லனு யாவா னருவுரு வன்றி யறிதரு மறிவி
னுக் கெட்டா, வொல்லையு மொழியா னூழியு மாகி நின்றன னுணர்ந்தி
லை போலும்,

(இ - ள்.) பலசீவராசிகளையும், அண்டங்களையும், உலகங்களையும் அவ்வகையே வரன்முறையாகச் சிருஷ்டித்து, பழமையாகிய பஞ்சகிருத்தியங்களையும் நடத்தும்படி பஞ்சகர்த்தாக்களை நியமித்து, உயர்ந்தவனும் இழிந்தவனும் தானேயாகி, அருவமும் உருவமுமல்லாமல், அறியத்தக்க அறிவிற்கு அதீதப்பட்ட ஒருசிறிதும் நீங்காத ஊழிக்காலமுமாகி விளங்குபவன் சிவபெருமானென்று நீயறிந்திலைபோலும். எ - று. (௧௮)

அத்தனிக் கடவுட் டன்மையெம் மாலு மளப்பரி தவன்றிரு வருளி, னொத்துநின் றருளு முயல்வன வெல்லா மஃதறிந் துணர்ந்திலை போலும், பித்துற மயங்கி மருண்டனை யெமக்கும் பெரும்பிழை வருத்தினை நீயென், றத்தலை யவனை மறுத்தரு ணெடுமான் முனிவரர்க் கின்னண மறையும்.

(இ - ள்.) அந்த வொப்பற்ற சிவபெருமான் தன்மையை எம்மாலும் அளவிட்டுச் செல்லுத லருமையாம். ஒவ்வொருவரும் முயற்சிசெய்யுஞ் செயல்கள் யாவும் அவ்விறைவன் திருவருளுக்கியைந்து நடக்கும். அதனைத்தெரிந்தாயில்லை போலும். பித்தமுண்டாக மயக்கமெய்திப் பிரமைகொண்டாய். எமக்கும் பெரிய குற்றத்தை நீவரும்படி செய்தனையென்று, அவ்வியாத முனிவனை மறுத்து அருள்புரிந்த திருநெடுமால் அங்குள்ள முனிசிரேஷ்டர்களுக்கு இப்படிச்சொல்லுகின்றார். எ - று. (௧௯)

மூரிநீர்ப் பரவை நஞ்சணி களத்து முக்கணெண் டோளுடையவனே, தேர்வருந் தன்மைப் பராபர னியாமு மவனுடைத் திருவருளெய்தி, யாருயி ரனைத்தும் புரக்குது மீதுசத் திய மறைந்தன மென்று, வோர்தனித் திகிரிக் கரமெடுத் துரைத்தா னுவத்தனர் முனிவரர் யாரும்.

(இ - ள்.) பெரிய நீரையுடைய கடலிலுதித்த விஷத்தைத்தரித்த கண்டத்தையும் திரிநேத்திரங்களையும் எட்டுத்தோள்களையுமுடைய சிவபெருமானே ஆராய்தற்கரிய தன்மையையுடைய பராபரன். நாமும் அவ்விறைவன் திருவருளையடைந்தால் அரிய உயிர்களையெல்லாம் இரட்சிப்போம். இது சத்தியம் சொன்னோமென்று, ஒப்பற்ற சக்கிராயுதமேந்திய திருக்கையையுயர்த்தித் திருமால்கூறினர். அதுகேட்ட முனிவர்கள் யாவரும் சந்தோஷித்தார்கள். எ - று.

அந்நிலை யுருகு சிந்தைய னாகி யம்புயத் தடங்கணீர் மல்கத், தன்னிலை யுருவ மயிர்ப்புறம் பொடிப்பச் செய்யவாய் நாத்தடு மாற, மின்னொழுக் கனைய வேணியெம் பரனை யுளப்பட விரும்பின னாகித், தொன்னிலை யுணர்ந்து பற்பல மொழிந்து தொழுதன னொருதனி நின்றான்.

(இ - ள்.) அக்காலத்தில் உருகிய மனமுடையவனாகி, தாமரைமலர்போன்ற பரந்த கண்கள் நீர்பெருகவும், தன்னுடைய அசையாத உருவமானது மேலே மயிர்க்கூச்செறியவும், சிவந்தவாயும் நாவுந்தடுமாறவும், மின்னல் ஒழுகினாற் போன்ற சடையையுடைய எமது சிவபெருமானை மனதிற்பொருந்த விரும்பினவனாகி, பழய நிலைமையையறிந்து பற்பலவார்த்தைகள்கூறி வணங்கி ஒருபுறத்தே நின்றனன். எ - று. (௨௰)

விளங்குபொற் றிகிரி யொருதனித் திருமால் வியாதனை மருங்கயு ஞேக்கிக், களநதரு மிடற்றுப் பவளவே ணியனைக் கைதொழு திரக்குதி யென்று, ளுளந்தரு மயக்கி ளுப் பிறழாமை யவிநயத் துணர்த்தலு மெ டுமா, லளந்தறி வரிய வஞ்செழுத் துண்மை தெளிதர வுணர்த்தலு மனையான்.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பொன்மயமான சக்கிராயுதமேந்திய ஒப்பற்ற திருமால் வியாதமுனிவனை யருகேபார்த்து, விஷம்பொருந்திய கண்டத்தையும் பவளம்போன்ற சடையையுமுடைய சிவபெருமானைக் கைகுவித்து யாசிக்கக்கட வாயென்றனர். மனதிற்பொருந்திய மயக்கத்தினல் நாவானது அசையாதிருக் குந் தன்மையைச் சைகையினுல் தெரிவிக்கவும், திருமாலானவர் அளவிட்டு அறி தற்கரிய பஞ்சாக்கரத்தின் உண்மைப்பொருளைத் தெளியும்படி யுபதேசிக்கவும், அவ்வியாதமுனிவன். எ - று. (உஉ)

புலர்ந்துநீர் வறந்து முரண்படு நெடுநாப் புனற்றுளி கிளைத்தன வாகி, யலந்தலைப் பட்ட சிந்தைய ளுகி வெருவருந் துணுக்கொடு மய ரா, விலங்கொளிப் பவள வேணிநா யகனை யிணைமலர்ச் சேவடி பணி ந்து, வலம்படு திகிரி மாயவற் கொருபான் மருங்குநின் றினையன வகு ப்பான்.

(இ - ள்.) உலர்ந்து நீர்வறண்டு பேசுமியற்கையினின்று மாறுபட்ட நெடிய நாவானது நீர்த்துளிகள் துளித்தனவாகி, துன்பமெய்திய மனமுடைய வனுகி அஞ்சத்தக்க நடுக்கத்தோடுஞ் சோர்ந்து, பிரகாசிக்கின்ற வொளியை யுடைய பவளம்போன்ற சடையையுடைய சிவபெருமான் தாமரைமலர் போன்ற உபயபாதங்களை வணங்கி, வெற்றிபொருந்திய சக்கிராயுதமேந்திய திருமாலுக்கு ஒருபுறத்தில் அருகே நின்று இப்படிச்சொல்வாளுயினன். எ - று.

மேற்படி வேறு.

தேவாபொ றுத்தி யரனேபொ றுத்தி சிவனேபொ றுத்தி யருள்கூர்
மூவாத முக்க ணிறைவாபொ றுத்தி முதல்வாபொ றுத்தி துளவச்
சேவாபொ றுத்தி தெருளற்ற சிந்தை மருளுற்று ரைத்த செயலிற்
காவாவி டுக்கி லுயிர்பெற்ற ளித்த கருணைக்க டுப்ப தலவே.

(இ - ள்.) மகாதேவனே! மனம்பொறுப்பாயாக. ஹரனே! பொறுப்பா யாக. சிவபெருமானே! பொறுப்பாயாக. கருணைமிகுந்த அழியாத திரிநேத்தி ரங்களையுடைய தலைவா! பொறுப்பாயாக. முதற்கடவுளே! பொறுப்பாயாக. துளவமாலையணிந்த (திருமாலாகிய) இடபவாகனமுடையவனே! பொறுப்பா யாக. அறிவற்ற மனமானது மயக்கமெய்திக்கூறிய குற்றத்தினின்று காவாது விடுவாயாகில், எல்லாவுயிர்களையும் ஈன்று காத்த கிருபாவிசேடத்திற்குத் தக்க தன்று! எ - று. (உ௩)

மோதுந்த ரங்க மெறிகங்கை திங்கள் முனைகொண்ட லர்ந்த சடைமேற்
றுதொன்று தும்பை யறுகோட ணிந்த தலைவாவு னக்கு னடியா
ரேதம்ப ழிச்ச விவையோரி ரண்டு மிருபாலெ டுப்ப தருளோ
பூதங்க டோறு முடனுடி நின்று புலவாதி யங்கு பொருளே.

(இ - ள்.) மோதுகின்ற அலைகளையெறியும் கங்காநதியையும் சந்திரனையும் முனையிற்கொண்டு பிரகாசிக்கின்ற சடையின்மீது மகரந்தம்பொருந்திய தும்பை மலரை அறுகம்புல்லோடு சூடிய தலைவனே! நினதடியார்கள் செய்தகுற்றமும் துதியும் ஆகியவோரிரண்டும் உனக்கு இருபகுப்பாக அடுப்பது கருணையோ? பூதங்களெல்லாவற்றிலுங் கலந்திருந்து பிரியாது விளங்கும் பரம்பொருளே!

மாயாவி கார மிடைபட்டி ருண்டு மருள்பட்ட மாயை யதனைத்
தீயாகி நின்று துருவத்தெ ளிந்த சிவஞான மின்ன செயலோர்
நீயாதி யாயி னிகழ்வாலு யர்ந்த புகழாளி கழ்ந்த வையெலாந்
தாயாய நின்னை யலதார்பொ றுப்ப ருலவாது நின்ற தகையோய்.

(இ - ள்.) மாயாவிகாரத்திற்சிக்கி அஞ்ஞானமெய்தி மயங்கிய மாயையும் அம்மாயையை ஞானாக்கினியாகி நின்று தேடத்தெளிந்த சிவஞானமுமாகிய இத்தகைய செயலுடையோர் நீயேயாகின்றாயாதலின், இகழ்ச்சியாலும் உயர்ந்த புகழ்ச்சியாலும் நடந்தவையாவும் தாயாகிய வுன்னையன்றி யெவர்கள் பொறுப்பார்கள். அழியாது நின்ற உயர்ந்ததகைமையையுடைய கடவுளே! எ - று.

அருவாதி மற்றை யுருவாதி யெண்ணி லவையோரி ரண்டு மலையா
யொருவாது நிற்றி யொருவித்து றத்தி யுனையன்றி யொன்று மியலா]
விருமூன்றி ரட்டி யெனநின்றெ டுத்த சமயங்க டோறு முளையாய்
மருவாம யங்கி யலையாதி யெங்ஙன் மறைநூலு ணர்த்து மரபே.

(இ - ள்.) ஆலோசிக்குமிடத்தில், அருவமாயிருக்கின்றாய். மற்றைய உருவமாயிருக்கின்றாய்- ஒப்பற்ற அவ்விரண்டுமல்லாமல் எல்லாப்பொருள்களிலும் நீங்காது நிற்கின்றாய். உன்னையன்றி உன்னைவிட்டுநீங்கி ஒன்றும் நடவாது. (அகச்சமயம் ஆறுபுறச்சமயம் ஆறுஆக) அளவுபடுத்திய பன்னிருசமயங்களிலும் உள்ளனை. ஆதிநாதனே! உன்னைக்கலந்தும் மயங்கி யலைகின்ற வேதநூல்கள் எங்ஙனம் தெரிவிக்கும் மரபினவாம்? எ - று. (௨௭)

பையாயி ரங்கொள் பொறிவாள ராவி னிருகண் படுத்த பரமன்
கையாயி ரங்கண் முகுளித்து நிற்ப விடமுண்டி ருண்ட களனைப்
பொய்யாத வேத முறைசொற்றி ரந்த பரிசேயி வன்பு கறலும் [னன்.
பெய்வால்வ ளைக்கை யுமையாளி டங்கொள் பெருமானெ ழுந்த ருளி

(இ - ள்.) ஆயிரம் படமுடிகளைக்கொண்ட புள்ளிகள் பொருந்திய ஒளி தங்கிய ஆதிசேஷனாகிய சயனத்தில் இருவிழிகள் துயின்ற திருமால், தமது கைகள் ஆயிரத்தையுங் கூப்பிப்பணிந்து நிற்க, ஆலாலவிஷத்தை யமுதுசெய்து கருநிறமெய்திய கண்டத்தையுடைய சிவபெருமானை, பொய்மையில்லாத வேதமானது துதிசெய்து யாசித்தவகையே இவ்வியாதமுனிவன் துதிசொல்லவும், வெள்ளிய வளையையணிந்த கையையுடைய உமாதேவியை இடப்புறத்தே யமர்த்திய சிவபெருமான் அங்கெழுந்தருளினர். எ - று. (௨௮)

ஆனந்த வெள்ளம் விழிநின்று பொங்க வன்புந்து ளுக்கும் வியாச
னானந்த வன்பு முருகிக்கு ழைந்து பாசற்ற வெல்லை யுலவா
ஞானந்த வாத திறனந்தி யெந்தை திருமுன்னர் நின்று நவைதீர்
தானந்த மாதி யுணராவி யாத னுடனின்ன தன்மை மொழிவான்.

(இ - ள்.) அதுகண்ட வியாதமுனிவன் கண்களினின்று ஆநந்தப்பெருக்கு அதிகரிக்க, அன்பும் அச்சமுங்கலந்து, உடலிளைக்க எலும்பு முருகிக்குழைந்து துதிசெய்த காலத்தில், அழியாத ஞானநெறியிற்றவறாத வல்லபமுடைய திருநந்திதேவர், எமது தந்தையாகிய சிவபெருமான் திருமுன்னர்நின்று, குற்றமற்ற தமது திருவாக்கால், ஆதியந்தமறியாத வியாதமுனிவனுடன் இன்னவகையாகச் சொல்லுகின்றார். எ - று. (௨௯)

வேதங்க ணாலு வகைசெய்த வற்றின் விரிமுற்று ணர்ந்து முறையா
னோதும்பு ராண மீரொன்ப தாய தொகைசெய்து முண்மை யுணரா
வேதங்கொள் சிந்தை யிரதங்க விழ்த்த கலனாயெ டுத்த கரனு
மீதங்க நிற்ப திதுமாலொ ழிப்ப துளதேல்வி ளம்பு தியெனா.

(இ - ள்.) வேதங்களை நான்குவகையாகப்பிரித்து, அவ்வேதங்களின் விரிபொருண் முழுவதுமறிந்து, முறைப்படி சொல்லுகின்ற புராணங்களைப் பதினெட்டு ஆகிய தொகைப்படுத்தியும் உண்மையை யறியாமல் குற்றம்பொருந்திய மனத்தினால், தன்பாற்பொருந்திய சாரத்தைச்சிந்திய ஓட்டைப்பாத்திரமாகி, தூக்கியகையும் மேலே பொருந்த (கம்பித்து) நிற்பது மயக்கத்தை நீங்கும் வகையுளதாயிற் கூறுகவென்று. எ - று. (௩௦)

சதகோடி செங்க ணெடுமாய ரென்பு தலைமாலை கொண்ட பரனை
முதுநான்ம றைக்கு மரிதாகி மூல முதலீறு மன்றி யுலவாக்
கதிதோறு நின்று சிவயோகர் சிந்தை யுணர்வுங்க டந்த பொருளை
யெதுநீநி னைந்து பிழைசொற்று நின்ற திழிதக்க செய்தல் கடனே.

(இ - ள்.) சிவந்த தாமரை மலர்போன்ற விழிகளையுடைய நூறுகோடி திருமால்களின் என்புகளையும் தலைமாலையையுமணிந்த சிவபெருமானை, பழமையாகிய நான்குவேதங்களுக்கும் அறிதற்கரிதாகி மூலப்பொருளாகி ஆதி (மத்தி) அந்தமற்றுவியாபித்து எல்லாப்பதவிகளிலும் விளங்கி, சிவயோகிகளுடையமனவுணர்ச்சியையுங் கடந்தபொருளை, நீயாது கருதிப்பிழைச் சொல்கூறியிருந்தது? இழிவுடையத்தக்க செயல்களைச் செய்வது முறையோ? எ - று. (௩௧)

கையோடு நாவு மரிதக்க பொய்மை கழறுற்ற புன்மை கழிவான்
மையால கண்ட னடிபேணி வெள்கி மனனஞ்சி நிற்றி யதனாற்
செய்யாதொ ழிந்து மெனவோடு மெந்தை திருவாய்ம லர்ந்த ருளினான்
பொய்தீர வியாதன் வழிபாடு கண்டு பொறைதந்தெ ழுந்த ருளினான்.

(இ - ள்.) கையுடனே நாவினையும் அரியத்தக்க பொய்ம்மை மொழிகளைச் சொல்லிய இழிதகைமை நீங்கும்படி, விஷம்பொருந்திய நீலகண்டத்தையுடைய சிவபெருமான் திருவடிகளைப்பணிந்து நாணெய்தி நிற்கின்றனை. அதனால், அங்ஙனம் புரியாது விடுப்போமென்று திருவாய் மலர்ந்தருளவும், எமது தந்தையாகிய சிவபெருமான் அதனைச் செய்யாதொழித்தோமென்று திருவாய் மலர்ந்தருளினர். வியாதமுனிவன் தான்கூறிய பொய்ம்மைக்குற்ற மகலும்படிசெய்த வழிபாட்டைக்கண்டு சாந்தமுகமளித்து அங்கெழுந்தருளினர். எ - று.

முக்கட்பி ரானை யெதிர்கொண்டு மோன முனிவோர்மு ழங்கு மழல்
நெக்குற்றி ழைந்த மெழுகிற்கு ழைந்து விழிநீர்த தும்ப வுருகித் [வாய்
திக்குற்றெ ழுந்து தமதெல்லை சென்று சிவபூச னைக்கு ரியரா
யொக்கத்தெ ளிந்து கயிலைப்பி ரானை யடிபேணி யின்ன முறைவார்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானை யெதிர்கொண்டு பணிந்து மௌனநிலையிலுள்ள முனிவர்கள், ஒலிக்கின்ற தீயிடையே தளர்ந்துருகிய மெழுகுபோலக்கசிந்து கண்களில் ஆநந்தபாஷ்பஞ்சிந்த மனமுருகி, திக்குகடோறு நோக்கித் தமது இருக்கையை யெய்தி, சிவபெருமானைப் பூசித்தற்குரியராய் ஒருசேர மனந்தெளிந்து திருக்கைலாயநாதனாகிய சிவபெருமானைத் திருவடி வணங்கி இன்றுகாறும் வசிப்பார்கள். எ - று. (௫௫)

செந்தாம ரைக்க ணெடுமாலு மெந்தை சிவனைப்ப ணிந்த திறனா
னந்தாது பெற்ற நிதியோடு முந்தை நனிநாடு வந்து புகுதச்
சிந்தாகு லத்தி னிலைகூர வியாத முநிவன்சி றந்த செயலாற்
சந்தாப மற்று மணிகங்கை மூழ்கி யொருகாசி நின்று தணவான்.

(இ - ள்.) செந்தாமரை மலர்போன்ற விழிகளையுடைய திருமாலும் எந்தையாகிய சிவபெருமானை வணங்கிய காரணத்தினால், குறையாமற்பெற்ற நவநிதிகளோடு, பழமையாகிய அழகிய நல்ல வைகுந்தபதவியை வந்தடைய, மனவருத்தத்தின் றன்மையதிகரிக்க, வியாதமுனிவனது சிறந்த செய்கையால் சந்தாபநீங்கி மணிகங்கை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஒப்பற்ற காசிப்பதியினின்று நீங்காதவனாயினன், எ - று. (௫௬)

மனமாலி ழைத்து வருபுன்மை தீர மடமங்கை பங்க னவனைப்
புனைகோயி லுய்த்து வழிபாடு செய்து புதுஞான மெய்தி யருள்கூர்
கனைவார்க ழற்கண் விழிவைத்தி ரந்து கனிதந்த சிந்தை யனுமாய்
வினைபோயொ ளிப்ப நெறிநின்று வேத முறையால்வி ளங்கி னனரோ.

(இ - ள்.) மனதில் மயக்கமெய்தி வந்த இழிதகைமை நீங்கும்படி, இளமைதங்கிய பார்ப்பதிபாகராகிய சிவபெருமானை, அழகிய திருக்கோயிலிலெழுந்தருளச்செய்து வழிபாடியற்றிப் புதிய சிவஞானமடைந்து, கருணைமிகுந்த சத்திக்கின்ற நெடிய வீரகண்டாமணி தரித்த திருவடிகளில் கண்களைப் பொருத்தியாசித்து, கனிந்த மனமுடையவனாய், தீவினையானது தன்னைவிட்டு விலக, நன்னெறியிலிருந்து வேதமுறையாகிய வைதிகநெறியோடு விளங்கினன். எ - று.

கலிவிருத்தம்.

மரபி னோங்கும் வசிட்ட னும் வாளெயிற்
றரவ வார்சடை யண்ணலை யர்ச்சியாப்
பரவு கற்பி னருந்ததி புன்மணி
விரவு பூணு று வெம்முலை மேயினான்.

(இ - ள்.) மரபினாலுயர்ந்த வசிட்டமுனிவனும், ஒளிதங்கிய பற்களையுடைய சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சிவபெருமானைப்பூசித்து; துதிக்கத்தக்க கற்பினையுடைய அருந்ததியின், பலரத்தினங்களிழைத்த ஆபரணமணிந்த வலிய குசங்களைப் பொருந்தினான், எ - று. (௫௭)

தெய்வ கோக்குலத் தேனுவும் பெற்றனன்
மெய்கொள் வேத மனைத்தும் விளங்கினன்
பொய்யில் கேள்வியர் போற்றப் பொலிந்தனன்
றுய்ய நூனெறி யாவையுந் தோய்ந்தனன்.

(இ - ள்.) தெய்வீகம்பொருந்திய பசுக்குலத்துயர்ந்த காமதேனுவையுமடைந்தனன். உண்மையாகிய வேதங்களிலெல்லாம் விளக்கமெய்தினன். பொய்மையில்லாதநூற் கேள்வியையுடையோர் துதிக்கப் பிரகாசித்தனன். புனிதமாகிய நூற்றுறைகளிலெல்லாம் படிந்தனன். எ - று. (கூஎ)

ஈது லாம லிவன்றனிக் கோத்திரத்
தாதி நாள்வந் தவதரித் தென்பணி
சோதி நாயகன் பூசை தொடுப்பறுன்
பாத லந்தொழ நின்றப ராசரன்.

(இ - ள்.) இதுவேயல்லாமல் இவனது ஒப்பற்ற கோத்திரத்தில் ஆதிகாலத்தில் வந்துதோன்றி, என்புமாலையணிந்த சோதிசொரூபராகிய சிவபெருமான் பூசைத்தொடக்கு நீங்காதவனுகிப் பாதலலோகமும் பணியும்படியிருந்த பராசரமுனிவன். எ - று. (கூஅ)

கனிந்த சிந்தைக னன்மெழு காமெனத்
தனித்தி ருந்தரன் றாமரைத் தாளிணை
பனித்த நாண்மல ரார்ப்பர சுற்றனன்
முனிக்கு லத்தரின் மாதவ முற்றினன்.

(இ - ள்.) கனிவுற்ற மனமானது தீயிலிட்டமெழுகுபோலுருகி யொப்பற்று விளங்கி, சிவபெருமானது செந்தாமரை மலர்போன்ற உபயபாதங்களைக் குளிர்ச்சிவாய்ந்த அன்றலர்ந்த மலர்களானர்ச்சித்துப் பூசித்தனன். முனிக்கூட்டத்தவரி லெல்லாம் சிறந்த தவத்தைச்செய்து முடித்தனன். எ - று. (கூகூ)

இன்ன காலத் திவன்றிரு முன்னரி
னன்ன வன்றனை யீன்றவ ணங்கனன்
முன்னி நிற்றலு நோக்கினன் முத்தருக்
கன்னி மென்கமு கக்களத் தாளையே.

(இ - று.) இப்படிப்பட்ட காலத்தில் இவனுக்குமுன்னே, தன்னைப்புதல்வனுகப்பெற்ற தெய்வப்பெண்ணை யொத்த தாயானவள் எண்ணங்கொண்டு நிற்கவும், அவளுடைய முத்துகள் நீங்காத இளமைவாய்ந்த மெல்லிய பாக்குமரத்தை யொத்த கழுத்தினுடையைப் பார்த்தனன். எ - று. (௪௦)

களத்தி னுடை கதுவுற நோக்கலு
முளத்தொ டுந்துனுக் குற்றுயிர்ப் போங்கினன்
றளைத்த வெந்துயர்க் கோர்தலை யாயினன்
விளைத்த கவ்வை விளைவய லாயினன்.

(இ - ள்.) கழுத்துப் போர்வையைக் காணவும், மனமுந்துணுக்கெய்திப் பெருமூச்சு மிகுதியாக விருந்தான். தன்னைப்பிணிந்த கொடுந்துன்பத்திற்கு ஒரு பற்றுக்கோடாயினன். உண்டாகிய இடர்ப்பாடென்னும் பயிருக்கு ஒரு வி[illegible]

ஏன்ற தாதையி றந்ததெவ் வாறெனத்
தோன்று தாயர்த் தொழுதுவி னாயினா
னூன்ற சிந்தைய ளன்பினொ டழுகணீர்
நான்ற தன்முகஞ் சாய்த்து நவிற்றுவாள்.

(இ - ள்.) தன்முன்னே நின்ற தாயைப்பணிந்து; என்னைப்பெற்ற தந்தை எந்தவகையாக இறந்ததென்று கேட்டான். அவ்வினாவினால் அதிகரித்த சிந்தையுடைய அம்மாது அன்புடன் அழுகின்ற கண்ணீர் சிந்துகின்ற தனது முகத்தைச்சாய்த்து மகனோடு சொல்லுவாள். எ - று.　(சஉ)

மைந்தனே நின்னை யீன்றருண் மாதவத்
தந்தை யாவி தறுகட் பிறையெயிற்
றந்த ரக்க னொருவனுண் டானென
வெந்த சிந்தைய ளாகி விளம்பினாள்.

(இ - ள்.) மகனே! உன்னைப்பெற்றருளிய பெருந்தவத்தையுடைய பிதாவின் உயிரை, அஞ்சாமையையும் பிறைச்சந்திரன் போன்ற பல்லையுமுடைய அசுரனொருவன் பருகினானென்று, வெதும்பிய மனமுடையவளாகி அவன் தாய் சொல்லி வெளியிட்டனள். எ - று.　(சங)

அனைய என்னது கூறலு மந்நிலை
வனைகொ டிச்சடை மாதவ மைந்தனு
நினையு நெஞ்சொடு நின்றயர்ந் தானரோ
வினைய மேதிதற் கென்றகம் விம்மினான்.

(இ - ள்.) அவள் அத்தகைய சொல்லைக்கூறவும், அச்சமயத்தில், கட்டிய கொடிபோலுஞ் சடையையுடைய பெருந்தவஞ்செய்த புதல்வனாகிய பராசரன் (யாதுசெய்வலென்று) எண்ணிய மனதோடு நின்று வருந்தினான். இதற்குத் தீர்வுயாதென்று கருதி மனம்புழுங்கினான். எ - று.　(சச)

கொற்ற வாட்கைய ரக்கர் குலங்கெடப்
பெற்ற தாதை வெளிபெறப் பெய்வளை
யுற்ற பாக னருச்சனை யோம்பினான்
மற்று ணர்ந்தறி யாத்தனி மைந்தனே.

(இ - ள்.) வெற்றிவாய்ந்த வாட்படைதாங்கிய கையையுடைய இராக்கதர் குலமானது அழியவும், தன்னைப்பெற்ற தந்தை வெளிபெறவும், அடுக்கியவளையலையணிந்த பார்வதிபாகராகிய சிவபெருமானை, வேறொன்றுங் கற்றறியாத புதல்வனாகிய பராசரமுனிவன் பக்தியோடு அர்ச்சனை புரிந்தனன். எ - று.

பன்னு வேதப் பராசர மாமுனி
பொன்னின் வார்சடை யோனடி பூசியாத்
தன்னை யோர்ந்தத் தலைவனை நோக்கினான்
என்னை யாளுடை நாயக னெய்தினான்.

(இ - ள்.) சொல்லுகின்ற வேதத்தையுணர்ந்த பெருமைதங்கிய பராசர முனிவன் பொன்போலும் நீண்டசடையையுடைய சிவபெருமான் திருவடிகளை யர்ச்சனைசெய்து தன்னையுணர்ந்து அத்தலைவனாகிய சிவபெருமானைத் தரிசித்த

னன். என்னையாளாகவுடைய சிவபெருமான் அப்பொழுது அவனுக்குக் காக்ஷி தந்து அங்கெழுந்தருளினர். எ - று. (சுகூ)

கண்டு கண்களி கூர்ந்தனன் கைமுகிழ்
கொண்ட சென்னிய னுள்ளங் குழைந்தன
பண்ட ரப்பதம் பாடிநின் ருடின
னண்டர் நாயக னுள்ளநெக் கானரோ.

(இ - ள்.) சிவபெருமானைத் தரிசித்து; பராசரமுனிவன் கண்களில் ஆநந்த மிகுந்தனன். கையைக்கூப்பி யமைத்த சிரமுடையவனுகி மனமுருகினன். பண்ணெலிமுழங்கச் சிவதுதியாகிய பதங்களைப்பாடி நின்று ஆனந்தக்கூத்தாடினன், அதனுல் தேவர்கள் தலைவராகிய சிவபெருமான் திருவுளங்கனிந்தனர்.

பால நீயெம் பதத்துணை வேண்டிநின்
ருனு மன்பி னருச்சனை செய்தனை
யேல வேண்டிய யாவென் றியம்பலுங்
கால மோர்தறி பிள்ளை கழறுவான்.

(இ - ள்.) சிறுவனே! நீ நம்முடைய உபயபாதங்களை விரும்பி நின்று அதிகரிக்கும் பேரன்போடு நம்மையர்ச்சித்தாய். அதனுல் உனக்கு ஆகவேண்டியகாரியங்களெவை? என்று திருவருள் புரியவும், தனக்குற்ற நற்காலத்தை யுணர்ந்தறிந்த பராசரமுனிவன் கூறுவான். எ - று. (சுஅ)

எந்தை யென்னை யருந்தவத் தீன்றரு
டந்தை யாவி கழற்கணி சாசரன்
சிந்தி யுண்டன னுங்கவன் றீக்குலம்
வெந்து வீழ விழித்திட வேண்டினேன்.

(இ - ள்.) எமது தந்தையே! அடியேனை யருந்தவத்தாற் பெற்றருளிய தந்தையினுயிரை, தீப்போலும் விழிகளையுடைய அரக்கன் அழித்தருந்தினுன். ஆதலால் அவனுடைய கொடிய இராக்கதகுலம் வெந்துவிழும்படி விழியால் நோக்க விரும்பினேன். எ - று. (சுகூ)

எய்து மாதவத் தாலெனை யீன்றருள்
செய்த தந்தை திரும்ப விரும்பினேன்
பெய்த வால்வளைப் பேதைக் கிடந்தரு
மைய னேயினி தளிததருள் செயகென.

(இ - ள்.) பொருந்திய சிறந்த தவச்செயலால், அடியேனைப் புதல்வனுகப் பெற்றருளிய தந்தை மீண்டும் வருதற்கு விரும்பினேன். அடுக்கிய வெள்ளிய வளையலையணிந்த உமாதேவியாருக்கு இடப்பாகந் தந்தருளிய சிவபெருமானே! இவ்வரங்களை இனிதாக அடியேனுக்குத் திருவருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்க. எ - று. (ஞo)

மூண்ட வெஞ்சினத் தன்னவர் முற்றுற
மாண்டி றக்கு மரபுவ ழங்கினுன்
கண்ட குந்தனித் தந்தையைக் கண்ணுதன்
மீண்டெ டிர்ந்துற முன்னர்வி டுத்தனன்.

(இ - ள்.) மேற்கொண்டெழுந்த கடுங்கோபத்தினால் அவ்வரக்கர்கள் குல முழுவதும் இறந்துபடும் மார்க்கத்தை யநுக்கிரகித்தனர். காணத்தக்க ஒப்பற்ற பிதாவைத் திரும்பவும் நேரே வரும்படி, சிவபெருமான் அப்பராசரமுனிவனுக்கு முன்னே விடுத்தனர். எ - று. (௫௧)

ஈச னின்னவ ரங்கொடுத் தேகினா
னாச னுங்கயி லைக்கிரி யண்மினான்
பூச னைக்குரித் தாயபு தல்வனு
மாச றுத்துள மம்மரொ ழிந்தனன்

(இ - ள்.) சிவபெருமான் இத்தகைய வரத்தைப் பராசரமுனிவனுக்குக் கொடுத்து, குற்றமற்ற கைலாயகிரிக்குச் சென்று எழுந்தருளினர். சிவபூசைக் குரித்தாகிய பராசரமுனிவனும் மனமாசறுத்துத் தனக்குற்ற மயக்கமகன்றனன்.

தாதை யைத்தொடித் தாயைத் தனித்துணைப்
பாதம் வீழ்ந்து பணிந்தனன் பன்முறை
யேதில் சிந்தை யவனுமெ டுத்தெடுத்
தாத ரத்தி னணைத்துயிர்த் தானரோ.

(இ - ள்.) தந்தையையும் வளையலணிந்த தாயையும் ஒப்பற்ற உபயபாதங் களில் விழுந்து வணங்கினான். குற்றமில்லாத மனமுடைய அவன் தந்தையும் பராசரனை யெடுத்தெடுத்து ஆசையோடணைத்து உச்சிமோந்தனன். எ - று.

வாள ரக்கர்ம றக்குல முற்றவு
மூளெ ரித்தலை வீழ்ந்துமு டிந்துறக்
கோளெ ரித்தலை மந்திரங் கோட்டினான்
றூளெ ழுந்தத ரக்கரத் தொல்குலம்.

(இ - ள். வாட்படையேந்திய இராக்கதரது குலமுழுவதும், அதிகரித்த தீயில் வீழ்ந்திறக்கும்படி வலிதங்கிய தீத்தலை மந்திரத்தைச் செலுத்தினான். அதனால் அவ்வரக்கருடைய பழமையாகிய குலம் தூளிபட்டழிந்தது. எ - று.

தாம வேற்கைய ரக்கர் தனிக்குல
மோம வெந்தழல் புக்கொழிந் தார்திற
றூம மண்டம னைத்தையுஞ் சூழ்ந்துபோ
யேம மால்வரைச் சுற்றுமெ ழுந்ததே.

(இ - ள்.) மாலைசூடிய வேலேந்திய கையையுடைய இராக்கதரது ஒப்பற்ற குலத்தினர், வெவ்விய ஓமாக்கினியிற் பிரவேசித்து மாண்டார்கள். அத்தீப்புகை யானது அண்டங்களை யெல்லாஞ் சூழ்ந்துசென்று, பெரிய பொன்மலையைச் சுற்றிலும் எழும்பியது. எ - று. (௫௫)

மூது ணர்ந்தவ சிட்டன்மு தலினோ
ரீது ணர்ந்துப ராசரை யெய்தினார்
தீது தீர்த்தனை யிச்செய றீர்க்கென
வாது செய்தவர்க் காறுசெய் தானரோ.

(இ - ள்.) முற்றுமுணர்ந்த வசிஷ்டன் முதலிய முனிவர்கள் இதனையறிந்து பராசரமுனிவனை யடைந்தார்கள். அசுரர்களது துன்பத்தை யகற்றினை. தீப்புகையின் பெருக்குதலையும் நீக்குகவென்று, அப்படிச்சொல்லி வந்தவர்களுக்குப்பராசரன் நல்வழிசெய்தனன். எ - று. (௫௬)

மோன வேத முனிவரர் யாவரு
மான தம்முறை யாச்சிர மம்புகா
ஞான ரூப பராசர னன்கருண்
மாணி டத்த னடித்துணை வாழ்த்தினன்.

(இ - ள்.) மௌனநிலையையும் வேதவாராய்ச்சியையுமுடைய முனிசிரேஷ்டர்கள் பலருந் தமது வாசஸ்தானங்களாகிய ஆச்சிரமங்களையடைய, ஞானரூபியாகிய பராசரமுனிவன் நன்றாகத் திருவருள் புரியும் உமாதேவியாரை யிடப்பாகத்திலுடைய சிவபெருமான் உபயதிருவடிகளைத் துதிசெய்தனன். எ - று.

மாது பாகன ருச்சனை மாட்சியே
தீது தீர்ப்ப தஃதல தில்லெனப்
போது போக்கிய ருச்சனை போக்கினன்
சாத நீர்ந்து தலைமைபெற் றனரோ.

(இ - ள்.) பார்ப்பதி பாகராகிய சிவபெருமானுடைய பூசையின் சிறப்பே தீமைகளை யகற்றுவதுவது. அஃதன்றி வேறொன்றுமின்று. என்று துணிந்து, காலத்தைச் செலவிட்டுச் சிவார்ச்சனையை மிகுதியாகச் செய்தனன். அதனால் இறத்தலினின்றும் விலகித் தலைமைத்தன்மை யெய்தினன். எ-று. (௫௮)

கோசி கப்பெரு மாதவக் கோமகன்
பூசை யிற்சிவ பூசையு ரித்தென
வாசை பற்றிய ருச்சனை யாற்றினன்
றேசின் மாதவச் செய்கைதி ருந்தினன்

(இ - ள். கோசிகனென்னும் சிறந்த பெருந்தவமுடைய மன்னவன், அர்ச்சனைசெய்தலிற் சிவார்ச்சனையே யொருவர் செய்தற்குரித்தென்று ஆசைகொண்டு சிவார்ச்சனை புரிந்தனன். குற்றமில்லாத பெரிய தவச்செயலில் திருத்தமெய்தினன். எ - று. (௫௯)

ஓது சாபத் துருவுதி ரிந்துமுற்
போத நீங்கிப் புலையரிற் போகிய
தீதொ டுந்திரி சங்குவை மெய்யொடும்
போதி யென்றவர் பொன்னகர்ப் போக்கினன்.

(இ - ள்.) வசிஷ்டமுனிவர் சொல்லிய சாபமொழியால், தன் வடிவமாறிப் பண்டைய ஞானத்தையிழந்து புலையர் குலத்தினன் போலாகிய குற்றத்தோடுந் திரிசங்குவென்னு மன்னவனை, உடம்போடுஞ் செல்கவென்று அவனைச் சுவர்க்கலோகத்திற்குச் செலுத்தினன். எ - று. (௬௦)

தரும மாதவ ரெழுவரிற் றனுமற்
றொருவ னாகி யுயர்குலத் துற்றனன்
கருணை வானவன் கண்ணுதல் பூசனை
யருமை யாவ ரளவைசொற் றார்களே.

(இ-ள்) தருமசொரூபிகளாகிய பெருந்தவமுடைய சப்தருஷிகளில், தானும் ஒருவனாகி உயர்குலமாகப் பெற்றனன். கிருபாமூர்த்தியாகிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் பூசையின் அருமைப்பிரபாவங்களை யெவர்தாம் முற்றுஞ் சொன்னார்கள். எ-று. (சுக)

கலிநிலைத்துறை.

முழுது ணர்ந்தறி புலிப்பதத் தொருதனி முனிவ
னொழுகு மன்பொடு மரனடி யருச்சனை யோம்பி
யெழுது சித்திர மொத்திருந் தெம்பிரா னடிக்கும்
பழுதி றண்டவந் தில்லையி லனுதினம் பணிவான்.

(இ-ள்.) கலைஞானங்களை யெல்லாங் கற்றறிந்த புலிக்காலையுடைய ஒப் பற்ற மழமுனிவர் அதிகரித்த அன்புடனே சிவனடிப்பூசையைக் காத்து, சுவர்த் தலத்தில் வரைந்த சித்திரப்பதுமைபோல அசைவற்றிருந்து எமது சிவபெரு மான் திருநடம்புரியுங் குற்றமில்லாத அநவரத தாண்டவத்தைத் தில்லைப்பதி யிற் சதாகாலமும் வணங்குகின்றார். எ-று. (சுஉ)

இறப்பு றாவரம் பெற்றன னிருந்தன னின்னு
மறத்தி றத்துப மன்னியற் பெற்றினி தளித்தான்
றிறத்தி னோங்கிய மாதவச் செய்கையுட் சிவன்றா
ளுறக்கி டைப்பது பூசையி னன்றிமற் றுளதோ.

(இ-ள்.) இறவாதவரத்தை யடைந்து இன்றையவரையில் விளங்குகின் றனர். தருமநெறியையுடைய உபமந்யுமுனிவரை இனிதாகப் புதல்வராகப் பெற்றளித்தனர். வல்லமையோடுயர்ந்த பெருந்தவச்செயலில், சிவபெருமான் திருவடியை அடையப்பெறுவது பூசாபலத்தாலன்றிமற்றொன்றாலுண்டாகுமோ?

அனைய னீன்றவந் தருளுப மன்னிய னுவற்குத்
தநய னாகிமென் றளர்நடை பயின்றிடுந் தலைநா
ளினைப சிக்கெனப் பாலினைந் தழுதனு மீன்ற
மனையின் மாட்சியள் வருந்தினண் மகன்முக நோக்கி

(இ-ள்.) அப்புலிப்பத்முனிவர் சந்தோஷித்து ஈன்றருளிய உபமந்யுமுனி வர், அவருக்குப் புத்திரராகி மெல்லிய தளர்நடைபயிலும் ஆதிநாளில், வருந்து கின்ற பசிக்காகப் பாலைப்பருக நினைத்து புலம்பவும், அவ்வுபமந்யுவைப்பெற்ற மனைமாட்சியிற்சிறந்த தாயானவள், தன்புத்திரன் முகத்தைப்பார்த்து மனம் வருந்தினாள். எ-று. (சுஈ)

குழவி பாற்கென வருந்தலும் பச்சைநெற் குறுகா
விழையு மீக்களைந் தரியெடுத் தீர்ம்புன லிட்டுக்
குழைம லர்க்கையா லுலக்கையா லிடிபடக் குமைத்தாள்
விழைபு னற்கரந் தளித்தனு நுகர்ந்திலன் வெறுத்தான்.

(இ-று.) குழந்தை பாலுக்காக அழவும், பச்சைநெல்லைக் குறுகியெடுத்து உமியையகற்றி விரும்பத்தக்க அரிசியைக்கொண்டு குளிர்ந்தநீரை யதிற்பெய்து, மென்மைத் தன்மையுடைய தாமரைமலர்போன்ற தனதுகையில் உலக்கை கொண்டு இடிபடும்படி (மாவாம்படி) குத்தினாள். அம்மாவினை நீரோடுகரைத் துப் பருகக்கொடுக்கவும் உபமந்யுமுனிவர் பருகாமல் அதனைத்தள்ளினர். எ-று.

நின்றி ரங்கின னழுதன னவனிலை நோக்கிக்
கன்று சிந்தையி னெடுத்தெடுத் தணைத்தனள் கவல்வா
ளொன்று மாவதி லாமையி னுருத்தன ளுரைத்தா
ளின்று நீயழு தென்கொலென் றினையன வியம்பும்.

(இ - ள்.) அந்நிலையே நின்று மனம்வருந்தி அழுதனர். அப்புதல்வன் நிலைமையைக்கண்டு வருந்திய மனத்தோடு குழந்தையை எடுத்தெடுத்தணைத்துக் கொண்டு மனம்வருந்துபவளாய், செய்யத்தக்கது ஒன்றுமில்லாமையால் கோபமெய்தி மகனைநோக்கிச் சொல்லுகின்றாள். மகனே! இப்பொழுது நீயழுது என்னவாகுமென்று இப்படி மேலுஞ்சொல்லுகின்றாள். எ - று. (௬௬)

பாசொ ளிக்கொடி யிடம்படர் பவளமால் வரையின்
பூச னைக்குரி யார்க்கலா னல்வளம் புகுமே
காய்சி னத்தினின் றழுதனை யென்செயக் கடவேன்
மாசின் மைந்தநீ யழேலெனக் கட்புனன் மறித்தாள்.

(இ - ள்.) ஒளிபொருந்திய உமாதேவியாகிய மரதகக்கொடி இடப்புறம் படர்ந்த சிவபெருமானாகிய பவளமலையின் அர்ச்சனையைச்செய்ய வல்லவர்களுக் கல்லாமல் நல்வளங்கள் உண்டாகுமோ? குற்றமில்லாத மகனே! மிக்ககோபத் தோடு நின்றழுகின்றனை. இதற்குயான் யாதுசெய்யக் கடவேன்? நீயழாதே யென்று கண்ணீரை மாற்றினாள். எ - று. (௬௭)

அருந்த வத்தனி யோகிய ரளப்பதற் கரிதாய்
விரிந்த பூதமோ ரைந்தினும் புலப்படான் விரவிப்
பொருந்தி நின்றவ னருச்சனை போற்றினர்க் கல்லாற்
பெருஞ்சி றப்பொடு நினைத்தவை கிடைக்குமோ பிள்ளாய்.

(இ - ள்.) குழந்தையே! அருந்தவம்புரிந்த ஒப்பற்ற யோகிகளாலும் அளவிடுதற்கரிதாய், விரிந்த ஐம்பெரும் பூதங்களிலும் புலப்படாமற் கலந்து, பொருந்தி விளங்குஞ் சிவபெருமானுடைய அர்ச்சனையைப் பாதுகாத்தவர்களுக்கல்லாமல் ஏனையோருக்கு விரும்பிய பொருள்கள் பெருஞ்சிறப்புடன் உண்டாகப் பெறுமோ. எ - று. (௬௮)

என்றெ டுத்தெடுத் தருச்சனைக் குரிமைசொற் றிசைத்தா
டன்று ணைச்செவி தாழ்த்தவை சிறுவனுந் தரித்தா
னன்று ருத்திர மாமணி பூதிகொண் டணிந்தான்
றொன்று தொட்டெழு மஞ்செழுத் துளத்தொடுந் தொனித்தான்.

(இ - ள்.) எனப்பலவா றெடுத்துச் சிவார்ச்சனையின் உரிமைச்சொற்களைக் கூறினாள். உபமந்யுவும் தன்னிருசெவிகளைச் சாய்த்து மனதிற்கொண்டனர். அப்பொழுதே சிறந்த உருத்திராக்க மணியையும் திருவெண்ணீற்றையும் எடுத்துத் தரித்தனர். பழமையாக உண்டாகிய பஞ்சாக்கர மந்திரத்தை மனதில் தியானித்தனர். எ - று. (௬௯)

சிரித்து முப்புரம் பொடித்தவ னூபுரத் திருத்தா
ளருச்ச னைக்குரித் தாய்நினைந் துருகுமன் பினனாய்ப்
பரித்த பத்திசேர் புலத்தினை யொருநெறிப் படுத்திப்
புரித்த வார்குழ லிடத்தி னன்பூசனை புரிந்தான்.

(இ - ள்.) புன்னகைசெய்து புரமூன்றையும் பொடிசெய்த சிவபெருமானுடைய நூபுரமணிந்த திருவடிகள் அர்ச்சனைசெய்தற்குரியவாய்க் கருதிவருந்தும் அன்புடையவனாகிப் பக்திபொருந்திய மனதை யொருவழிசெலுத்தி, புரிவுற்ற நெடிய கூந்தலையுடைய உமாதேவியை யிடப்பாகமாகவுடைய சிவபெருமானைப் பூசித்தனர். எ - று. (௭0)

இன்ன தன்மையி னீங்கிவ னருச்சனை யியற்ற
வன்ன வூர்திக்கு மரிக்குமற் றறிதென லானோன்
றன்ன ருள்புரிந் திந்திர னுருவொடு சார்ந்து
முன்ன ரெய்தினன் சிறுவனை நோக்குபு மொழியும்.

(இ - ள்.) இந்தகையதன்மையோடு இவ்வுபமந்யு முனிவர் சிவார்ச்சனைபுரிய, அன்னவாகனமுடைய பிரமனுக்குந் திருமாலுக்கும் காண்டற் கரிதென்று சொல்லத்தக்கவராகிய சிவபெருமான் திருவருள்கொண்டு இந்திரன்வடிவேற்றுச் சென்று, சிறுவராகிய உபமந்யு முனிவர்க்கு முன்னரெழுந்தருளி, அவரை நோக்கித் திருவாய் மலர்ந்தருளுகின்றனர். எ - று. (௭௧)

பால னீயுனக் கெம்பிரா னருச்சனை பயிலுங்
கால மோவிது பருவமன் றெனச்சில கழற
மூல மோர்ந்தறி புதல்வனு மவனெதிர் முனிந்தா
னேனு மன்பறச் சபிப்பனென் றெழுதலு மிறைவன்.

(இ - ள்.) நீயோ சிறுவன், எமது சிவபெருமான் பூசையைச்செய்யுங்காலம் உனக்கு இதுவோ? காலமிதுவன்று, என்று சிலசொற்கள் சொல்ல, மூலத்தை யாய்ந்தறிந்த உபமந்யு முனிவரும் அவ்விந்திர வடிவினனுக்கு நேர்முகமாகக் கோபித்து பொருந்திய அன்பானது நீங்கும்படி சபிப்பேனென்று எழவும், சிவபெருமான். எ - று. (௭௨)

பிள்ளை யீங்கிவ னருச்சனைப் பெருந்திற னோக்கி
யுள்ள மோர்ந்துதன் றிருவரு ளுவந்தன னாகி
வள்ளை வார்குழை யுமையொடு மழவிடைப் பொலிந்தான்
கொள்ளை யன்பொடும் பணிந்தனன் புதல்வனுங் குறுகி.

(இ - ள்.) இவ்விடத்தில், சிறுவனாகிய இவனுடைய அர்ச்சனையின் பெருவலிமையைக்கண்டு திருவுளங்கொண்டு, தம்து திருவருள் மிகுந்தவராகி, வள்ளைக் கொடிபோன்ற நீண்டசெவியையுடைய உமாதேவியாரோடு இளமைபொருந்திய இடபவாகனத்தில் விளங்கினர். மிகுதியாகிய அன்புடன் உபமந்யு முனிவரும் இறைவரை நெருங்கி நமஸ்கரித்தனர். எ - று. (௭௩)

கைபு டைத்தனன் கண்கணீர் கலுழ்ந்தனன் களித்து
மெய்பொ டித்தன னாடினன் பாடினன் வியந்தா
னைய நின்னடித் தாமரை காண்பதற் களியேன்
செய்யு மாதவ முளதெனத் திகைத்தனன் சிந்தை

(இ - ள்.) உபமந்யுமுனிவர் சந்தோஷத்தாற் கைகொட்டினர். கண்களில் ஆநந்த பாஷ்பஞ்சிந்தினர். உடல் முழுதும் மயிர்க்கூச்செறிந்தனர். ஆநந்தக்கூத் தாடினர். மதுரமாகப்பாடினர். அதிசயித்தனர். ஐயனே! தேவரீருடைய திருவடித்தாமரைகளை அடியேன் தரிசிப்பதற்குப் பூர்வத்திற்புரிந்த சிறந்ததவமுள்ள தென்று மனமயங்கினர். எ - று. (௭௪)

ஒருங்கு பூசனை திருந்துப மன்னிய னுளத்தைப்
பொருந்த நோக்குறு மெம்பிரா னுவகையிற் பொங்கி
வருந்த ருச்சனை புரிதரும் புதல்வநின் மனத்தி
னிருந்த தேதெமக் கியம்புதி யொழிவுறு தென்றான்.

(இ - ள்.) சிவபூசையில் ஒருசேரத்திரும்பிய உபமந்யுமுனிவர் மனதைத் திருத்தமாகக்கண்டு, சிவபெருமான் சந்தோஷித்திருந்து, வருந்துகின்ற சிவார்ச்சனைசெய்யுஞ் சிறுவனே! உன்மனதிற் கருதியதுயாது? தவறாமல் எனக்குச் சொல்வாயாகவென வினவினர். எ - று. (எரு)

வெள்ளை மால்விடை யெம்பிரா னருளினன் வினவிப்
பிள்ளை பாலெனப் பிதற்றலும் பேரொளி பிறந்த
வள்ளை வார்குழை நோக்குபு நகைத்தனன் வரத
னௌ்ள ருந்திருப் பாற்கட லமுதொடு மீந்தான்.

(இ - ள்.) வெண்மை நிறந்தங்கிய பெரிய இடபவாகனமுடைய எமது சிவபெருமான் வினவியருளினர். உபமந்யுமுனிவர் பாலென்றுசொல்லவும், பேரொளிவீசிய வள்ளைக்கொடிபோலநீண்ட செவியையுடைய உமாதேவியைத் திருக்கண்ணோக்கி நகைத்தருளினர். அப்பொழுதே சிவபெருமான் இழிவற்ற திருப்பாற்கடலை அமுதத்தோடும் அநுக்கிரகித்தனர். எ - று. (எசு)

தன்னை யோர்ந்தறி ஞானமுஞ் சாதறீர் வரனும்
பின்னு மாகிய கலைகளு நான்மறைப் பெருக்கும்
பன்னி யோர்ந்துண ரறிவளித் தகன்றனன் பரமன்
மின்னி மைத்தெறி கயிலைபுக் கினிதுவீற் றிருந்தான்.

(இ - ள்.) தன்னையுணர்ந்தறியும் ஞானமும், இறத்தலற்ற வரமும், கலைஞானங்களும், நான்குவேதங்களின் பெருக்கையும் ஓதியுணர்ந்தறியத்தக்க அறிவையுந் தந்து சிவபெருமான் அந்தர்த்தானமாகி, மின்னலைப்போல ஒளிவீசுந திருக்கைலாயகிரியை யடைந்து இனிதாக வீற்றிருந்தருளினர். எ - று. (எஎ)

தாம வார்சடைச் சதானந்த னெனுஞ்சிவ யோகி
யேம வெற்பெனும் வில்லியை யினிதுபூ சித்து
நாம மீறுபட் டிறப்புறா நலனொடு நவைகூர்
காம னைத்தெறு நுதலிமை யருளொடுங் களிப்பான்.

(இ - ள்.) மாலைபணிந்த நீண்டசடையையுடைய சதானந்தனென்னுஞ்சிவயோகியானவர், பொன்மலையென்று சொல்லப்படும் வில்லையுடைய சிவபெருமானை இனிதாகவர்ச்சித்து, தம்பெயர் இறுதியெய்தி யழியாத நன்மையோடு, குற்றமிகுந்த மன்மதனையெரித்த திருநெற்றி விழியையுடைய சிவபெருமான் திருவருளோடு சந்தோஷித் திருக்கின்றனர். எ - று. (எஅ)

ஏழி ரண்டெனு முலகமுங் கணப்பொழு தெய்தி
யாழி யந்நிலைத் தவரவ ரியற்கைமுற் றறிந்து
தாழி ருஞ்சடை யெம்பிராற் கனுதினஞ் சாற்றுஞ்
சூழு மந்திரத் தியங்குறாந் தன்னிலை தொலையான்.

(இ - ள்.) பதினான்கென்று சொல்லும் உலகங்களிலும் கணப்பொழுதினுட் சஞ்சரித்து, கடல்சூழ்ந்த அப்பூமியிலுள்ளாருடைய இயற்கைகளை முழுவது முணர்ந்து, தொங்குகின்ற பெரிய சடையையுடைய எமது சிவபெருமானுக்கு நாடோறும் விண்ணப்பிக்கின்ற தன்மையோடு, தியானிக்கும் மந்திரத்தினால் எங்குஞ் சஞ்சரிக்கின்ற தமது நிலைமையினின்று நீங்காதிருக்கின்றனர்.

கோத மப்பெரும் பெயரினு னருச்சனை கோட்டித்
தீத றுஞ்சிவ விரதநோற் றதனொடுஞ் சிறந்து
பூத லத்தரை யம்முறை நோற்றிடப் புரிந்து
சாத நீர்ந்தன னருச்சனை யொழிந்திலன் சரிப்பான்.

(இ - ள்.) கோதமராகிய பெரும்பெயரையுடைய முனிவர் சிவார்ச்சனை செய்து அதனோடு குற்றமற்ற சிவவிரதங்களை யநுஷ்டித்து மேம்பட்டு, பூலோகத்திலுள்ளவர்களையும் அவ்வகையே யநுஷ்டிக்கச்செய்து இறத்தலினின்று நீங்கினர். சிவார்ச்சனை நீங்கிலர். எங்குஞ் சஞ்சரிக்கின்றார். எ - று. (அ0)

விரித்த நான்மறைக் குலத்துளோன் மிருகண்டு வென்பான்
புரித்த வார்சடை யரனடி யருச்சனை போற்றிப்
பரித்த நான்மறைக் குருசின்மார்க் கண்டனைப் பயந்தா
னரிக்கு மெட்டருஞ் சத்திய லோகமுற் றடைந்தான்.

(இ - ள்.) சொல்லிய நான்குவேதங்களை யுணர்ந்த அந்தணர் குலத்திலுதித்த மிருகண்டுவென்பவர், புரிந்துள்ள நீண்டசடையையுடைய சிவபெருமான் திருவடிப்பூசையைச்செய்து, நான்குவேதங்களையு முணர்ந்த தலைவராகிய மார்க்கண்டேயரைப் புதல்வராகப் பெற்றனர். இறுதியில் திருமாலுக்கும் அடைதற்கரிய சத்தியலோக மெய்திப்பொருந்தினர். எ - று. (அக)

அனைய மைந்தனைப் பயக்கலா லரன்றிரு வருளா
லினைய லோகத்தி னினிதுவீற் றிருந்தன னின்னும்
புனித மாதவத் தலைவிர்கா ளாங்கவன் புனிதத்
தநய னன்னிலை கேண்மெனச் சூதனுஞ் சாற்றும்.

(இ - ள்.) அம்மார்க்கண்டேயரைப் புதல்வராகப்பெற்றமையால், சிவபெருமான் திருவருளோடு, இத்தகையலோகத்தில் இனிதாக வசித்திருந்தனர். பரிசுத்தமான பெருந்தவஞ்செய்த தலைவர்களே! இன்னும் அம்மிருகண்டு முனிவர் புதல்வரது நல்ல நிலைமையைக் கேளுங்களென்று சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குச் சொல்லலாயினர். எ - று. (அஉ)

வேத முற்றுணர்ந் திசைத்திடு மிருகண்டு வென்பான்
காதன் மைந்தனுக் கருந்தவ மியற்றலுங் கருதி
யாதி நாயக னருமக வளித்தன னவற்குப்
போது மாண்டுமற் றெண்ணிரண் டளவையிற் புரிந்தான்.

(இ - ள்.) வேதமுழுவதையும் உணர்ந்தோதிய மிருகண்டு முனிவர், ஆசையுடைய புத்திரனுக்காக அருந்தவம் புரியவும், ஆதிநாயகனாகிய சிவபெருமான் திருவுளங்கொண்டு அரியபுதல்வனை யநுக்கிரகித்தனர். அப்புதல்வனுக்கு எய்தும் வயது பதினாறுவரையி லிருக்கச்செய்தனர். எ - று. (அங)

கேட்ட நான்மறை யந்தண னுவகையிற் கிளர்ந்தான்
மீட்டு வந்துமார்க் கண்டனைப் பயந்தனன் விருப்பா
லேட்டி ருங்குழன் மனையொடுங் களித்தன னிருந்தான்
றோட்ட லங்கலாற் கெண்ணிரு பருவமுந் தொக்க.

(இ - ள்.) அதனைக்கேட்ட நால்வேத முணர்ந்த மிருகண்டு முனிவர் சந்தோஷத்தில் மிகுந்தனர். திரும்பிவந்து மார்க்கண்டேய முனிவனைப் புதல்வராகப்பெற்றனர். மலரணிந்த பெரிய கூந்தலையுடைய மனைவியோடு ஆசையோடு சந்தோஷித்திருந்தார். இதழ்கள் மலர்ந்த மாலையணிந்த மார்க்கண்ட முனிவருக்குப் பதினாறுவருடமாயின. எ - று. (அச)

ஈன்ற தாயருந் தந்தையு மிருந்திருந் திரங்கிக்
கான்ற நெஞ்சொடு மழுதழு தலமரக் காணூத்
தோன்ற னீவிர்மற் றயர்குவ தென்னெனச் சொற்றார்
மூன்று கட்பெருந் தலைவனன் றருளிய மொழியை.

(இ - ள்.) தன்னைப்பெற்ற தாயும் தந்தையும் அடிக்கடி மனமிரங்கிக்கசிந்த மனதோடு அழுதழுது வருந்தக்கண்டு, பெற்றோரே! நீங்கள் மனம் வருந்துவதென்னகாரணமென மார்க்கண்டர் வினவ, திரிநேத்திரங்களையுடைய பெரிய தலைவராகிய சிவபெருமான் அக்காலத்திற் றிருவாய்மலர்ந்த வார்த்தையைத்தெரிவித்தார்கள். எ - று. (அரு)

இன்ன தோநும தரந்தையென் றிசைத்தன னாற்றித்
துன்னி ருஞ்சடை யெம்பிரான் றிருவடி துதித்துப்
பன்னு நாண்மலர் பழுதறுத் தருச்சனை பயின்றா
னன்ன காலையி னந்தக னவற்கெதி ரடைந்தான்.

(இ - ள்.) உங்கள் மனவருத்தம் இத்தகைத்தோவென்றுகூறி, அவர்களைத் தேற்றி, நெருங்கிய பெரிய சடையையுடைய எமது சிவபெருமான் திருவடிகளைத் துதிசெய்து, சிவபூசைக்குச்சொல்லிய அன்றலர்ந்த மலர்களைப்பழுதகற்றி அருச்சனை செய்வாராயினர். அப்படி மார்க்கண்டமுனிவர் சிவார்ச்சனைசெய்துகொண்டிருக்குங் காலத்தில், இயமன் அவர்கட்புலனுக்கு நேராகத்தோன்றினன்.

வருதி யென்றெதி ரந்தக னழைத்தலு மதலை
யிருசெ வித்தொளை யேற்றில னுங்கவ னிசைத்தல்
சுருதி நாயகற் றொழுதடி யருச்சனை தொகுத்தான்
செருமு கத்தனித் தென்றிசைக் கிழவனுஞ் சீற.

(இ - ள்.) இயமன் அவர்க்கு முன்னே நின்று வருகவென விளிக்கவும், மார்க்கண்டமுனிவர் இயமன் கூறுவதை இருசெவித் தொளைகளாலுங் கேளாதவராகி, வேதநாயகனாகிய சிவபெருமானைப் பணிந்து திருவடிகளைப் பூசித்தலிலிருந்தனர். போர்முகத்தில் ஒப்பற்றவனாகிய தென்றிசைக் கிறைவனாகிய இயமன் கோபமெய்த. எ - று. (அஎ)

உருத்தெ ழுந்தனர் தெழித்தன ருருமெனத் தூதர்
கருத்தி ழந்திலன் பாலகன் கண்ணுதற் பரனைக்
குருத்தி ளம்பிறைக் கன்னியோற் றழீஇக்கொடு கிடந்தான்
செருக்கொ டுந்திறற் பாசம்விட் டெறிந்தனன் றீயோன்.

(இ - ள்.) இயமதூதர்கள் கோபித்தெழுந்தார்கள். இடிபோலக் கர்ச்சித்து அதட்டினார்கள். அவற்றால் சிறுவராகிய மார்க்கண்டர் மனமயங்காதவராகி, நெற்றிக்கண்ணையுடைய, புனிற்றிளம்பிறையைச் சிரோமாலையாகவணிந்த மேன்மைதங்கிய சிவபெருமானைத் தழுவிக்கொண்டிருந்தனர். அதனால் இறுமாப்புடன் இயமன் வலியபாசத்தை விசிறியெறிந்தனன். எ - று. (அஅ)

எடுத்தெ றிந்திடு பாசமுற் றெதிருறு முன்னங்
கடுத்த கண்டமுஞ் சூலக பாலமும் புலித்தோ
லுடுத்த சைத்திடு நுசுப்புமற் றுமையொரு புறனும்
விடுத்த முக்கணுந் தோன்றநின் றருளினன் விமலன்.

(இ - ள்.) எடுத்துவீசிய பாசக்கயிறானது முழுவதும் நேரே வருவதன்முன்னர், விஷம்பொருந்திய கண்டமும் சூலகபாலங்களும் புலித்தோலாடையையணிந்து விளங்கும் இடையும், உமாதேவியார் வாமபாகமும், திரிநேத்திரங்களும் பிரகாசிக்கும்படி மலரகிதராகிய சிவபெருமான் காட்சிதந்தருளினர். எ - று.

சீற்ற மீக்கொள வொருதிருத் தாளொடு மறலி
யூற்றெ ழுங்கொழுங் குருதியா றுவட்டெழ வுதைத்தான்
மாற்ற ரும்பத மணிநெடு மருமமுற் றிடலும்
வேற்று ணர்ச்சிபெற் றெழுந்தில னெடுந்தரை வீழ்ந்தான்.

(இ - ள்.) கோபமதிகரிக்க, ஒருதிருத்தாளினாலே, அவ்விய மனது ஊற்றெடுக்கின்ற கொழுவிய உதிரவெள்ளம் பெருக்கெடுக்க உதைத்தருளினர். நீக்குதற்கரிய அத்திருவடி, இயமனுடைய மணிமாலைபூண்ட மார்பிற்படவும் அவன் சிறிதும் உணர்வுற்று எழுந்திருக்கமாட்டாமல் நெடிய நிலமிசைவீழ்ந்து விட்டான்.

ஆய காலையி னரனடிக் கீழ்க்கிடந் தரற்றித்
தூய சிந்தனை வெருவொழிந் தடிக்கடி தொழுதான்
பாய வெண்டிரைக் கடுநுகர் பரமனைப் பற்றி
யேய வன்பினோ டெடுத்தெடுத் தேத்துவா னிசைந்தான்.

(இ - ள்.) ஆகிய அக்காலத்தில், மார்க்கண்டமுனிவர் சிவபெருமான் திருவடி நிழலிற் படிந்து அரற்றி, புனிதமான மனதில் அச்சமின்றி அடிக்கடிவணங்கிக்கொண்டிருந்து, பரவிய வெள்ளிய அலைகளையுடைய கடலிற்றோன்றிய விஷத்தைப் பானஞ்செய்த சிவபெருமானை ஆதரவாகப்பிடித்துப் பொருந்திய அன்புடனே எடுத்தெடுத்துத் துதிசெய்யத் தொடங்கினர். எ - அ. (௯௧)

தரவுக்கோச்சகக்கலிப்பா.

தோற்றப் படுபொருளாய்த் தோன்றா தனவாகிச்
சாற்றற் கரிதாய்த் தனிநினைவுக் கெட்டாயா
லாற்றப் படாரா யரிமுதலோ ரன்றெடுத்துப்
போற்றப் பெருமான் புரந்தீத்த தெவ்வாறே.

(இ - ள்.) காணப்பட்ட பொருள்களாகியும் எடுத்துச்சொல்லுதற் கரிதாகியும் ஒப்பற்ற மனதுக்கும் எட்டாததாகியு மிருக்கின்றீர். திருமால் முதலானவர்கள் சகிக்கமுடியாதவர்களாய் அக்காலத்தில் தேவரீரை யெடுத்துத் துதிபுரிய எமது பெருமானே! தேவரீர் முப்புரங்களை எரித்தது எப்படியோ? எ - று. ()

எண்ணிறந்த பல்கோடி யண்டங்க ளிங்கிவற்றி
னுண்ணுறைந்த மேரு வுலகமுயி ரத்தனைக்கு
மண்ண றிருவருளே மூலமென்பா ராதுணரு
நுண்ணறிவு முண்டேமற் றெம்மனோர் நோக்குதற்கே.

(இ - ள்.) கணக்கிறந்த பலகோடி யண்டங்களும் இவ்வண்டங்களினுள்ளே நிரம்பிய மகம்மேரு உலகங்கள் உயிர்கள் எல்லாவற்றிற்குந் தேவரீர் திருவருளே காரணமென்று சொல்லுவார்கள். அதனையறியத்தக்க நுட்பமாகிய புத்தியும் எம்மையொத்தவர்கள் காண்டற்கு உளதாகுமோ? எ - று. (கூக)

அஞ்செழுத்தா யையைந்து பேதமா யஞ்செழுத்தின்
பிஞ்செழுத்தா யெப்பொறையு மேய பெருமாற்கு
மஞ்சனைய கோலத்தா னுள்ளிட்டார் மற்றையார்
நெஞ்சமுழ்த்தி யீதே நிலையென்ப தெவ்வாறே.

(இ - ள்.) பஞ்சாக்கர ஸ்வரூபமாகியும், (பஞ்சவிம்சதி) இருபத்தைந்து (மூர்த்தி)பேதமாகியும், பஞ்சாக்ஷரங்களின் மூலாதாரமாகியும், எல்லாப்பொறுப்பும் பொருந்திய எமது பெருமானுக்கு மேகத்தையொத்த அழகுடைய திருமால் முதலிய உள்ளிட்டவரும், ஏனையோரும் மனதால் ஊகித்து இதுதான் உண்மை நிலையென்று சொல்லுவது யாங்ஙனம்? எ - று. (கூச)

மூலமுத லாறிடனு யம்மூ விரண்டினுக்குந்
தாலமுத லைந்தாய் மனனாகி யத்தலத்தின்
மேலனுகி நின்று விரிபூஞ் சததளத்துன்
கோல மெவரறிய நின்றாய் கொழுஞ்சுடரே.

(இ - ள்.) மூலாதாரமுதலிய ஆறுதாரங்களாய், அவ்வாறுதாரத்திற்கும் பிருதிவிமுதலாகிய ஐந்தாய், மனமாகி, அத்தலத்திற்குமேலெய்தி நின்று மலர்ந்த அழகிய [சததள] நூறிதழ்த்தாமரை மலரின்மேலுள்ள தேவரீருடைய திருக்கோலத்தையாவர் அறிய வீற்றிருந்தீர்? கொழுமைதங்கிய சுடர்மயமானவனே! எ-று.

ஆலத்தை யாரமுத மாக்கி யரிமுதலோர்
காலத்தை யீந்தா யிதுநாட் கடுஞ்சினத்த
சூலக் கொடுமறலி தோள்சாய்த் தறிவில்லாப்
பாலற்கி ரங்கி யளித்தனையெம் பண்ணவனே.

(இ - ள்.) ஆலாலவிஷத்தைப் பொருந்திய அமுதமாக்கிப் புசித்துத் திருமால் முதலிய தேவர்கள் ஆயுள்காலத்தைத் தந்தருளினீர். இக்காலத்தில் கடுங்கோபமெய்திய சூலாயுதந்தரித்த வலிய இயமனைத் தோள்சாயச்செய்து, அறிவில்லாத பாலனாகிய சிறியேனுக்கு அநுக்கிரகஞ் செய்தருளினீர். எமது சிவபெருமானாகிய கடவுளே! எ - று. (கூரு)

என்னப் பலவாய்ப் பிதற்றி யழுதிரங்கிக்
கன்னிக் கொருபா லளித்தனிக் கண்ணுதலை
முன்னர்ப் பணிந்தான் முடிச்சடில முன்னவனுந்
தன்னெக்க சிந்தை யவற்கருளிச் சாற்றுவான்.

(இ - ள்.) என்று பலவாறாகத் துதிசெய்து அழுது மனமிரங்கி, கன்னியாகிய உமாதேவியாருக்கு ஒருபாகத்தைத் தந்தருளிய ஒப்பற்ற நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் திருமுன்னர் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர். சடைமுடியுடைய சங்கரபகவானுந் தமது உருகியதிருவுள்ளத்தை மார்க்கண்டருக்குச் சாற்றியருளுகின்றார். எ - று. (௯௭)

என்று மிறவாதாண் டெட்டிரட்டி யாயிருத்தி
நின்று நினைந்தவெலா நிற்கே வசமாக
நன்றி மறையு நவையில் கலையனைத்து
மொன்றுநீ யோதா துணரப் பெறுகென்றான்.

(இ - ள்.) மார்க்கண்டேயனே! நீ எக்காலத்திலும் இறவாமல் பதினாறுவயதாகவே யிருக்கக்கடவாய். நீயெண்ணி விரும்பியயாவும் உனக்கே உரித்தாகுக. நன்மைபொருந்திய வேதமும் குற்றமில்லாத கலைஞானங்கள் முதலியயாவும், நீ ஒன்றும் ஓதாமலே அறியப்பெறுகவென்று சிவபெருமான் திருவருள்புரிந்தனன்.

பின்னைப் பலவு மவற்கருளிப் பிள்ளைநிலாச்
சென்னிப் பெருமான் றிருக்கயிலை சென்றடைந்தான்
றன்னைப் பயந்தார் தமக்கீ தெடுத்தியம்பி
யின்னற் கடற்கரைகண் டின்புற்றா னின்னமுமே.

(இ - ள்.) இன்னும் பலவரங்களையும் அம்மார்க்கண்டருக்குப் பிரசாதித்து, இளம்பிறைச் சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமான் திருக்கைலாயகிரிக்கு எழுந்தருளினர். உடனே மார்க்கண்டர் தம்மையீன்ற தாய்தந்தையர்பாலெய்தி இவ்வரவிசேடத்தை யெடுத்துக்கூறி, துன்பக்கடலின் கரையைக்கடந்து இப்பொழுதும் இன்பமெய்தி யுள்ளனர். எ - று. (௯௯)

தேங்குங் குருதிக் கடற்கிடந்த தென்புலத்தோ
னேங்கு துயரமுணர்ந் தும்பர்தொழு தண்மினார்
வீங்கும் புனற்சடையோற் போற்றி வெருவருமற்
றாங்கவனைத் தென்பா லடைய விடுத்தனரால்.

(இ - ள்.) தேங்கிய உதிரக்கடலிற் படிந்து கிடந்து தென்புலத்திறைவனாகிய இயமனது பெருந்துயரத்தைத் தேவர்களறிந்து, பெருகிய கங்காநதியையணிந்த சடையையுடைய சிவபெருமானை நெருங்கிப்பணிந்து துதிசெய்து, அஞ்சியுள்ள அவ்வியமனைப் பண்டுபோலத் தனது தென்றிசையெய்த விடுத்தார்கள். எ - று. (௯௦௦)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மும்மலங் கடிந்த சூத முனிவரன் முனிவர்க் கெல்லாஞ்
செம்மொழிக் காதை முற்றுந் தெரிவர வுணர்த்திப் பின்னும்
மைம்மலி களத்து விண்ணோன் பூசனை மரபி னோன்மை
யெம்மனோ ரொழியா தின்னுங் கேட்கென விசைப்ப தானான்.

(இ - ள்.) (ஆணவமுதலிய) மும்மலங்களையும் வென்ற முனிசிரேஷ்டராகிய சூதமுனிவர், நைமிசாரணியத்தி லிருந்த எல்லாமுனிவர்களுக்குஞ் செவ்விய சொற்களாலாகிய சிவசரிதையை முற்றுந்தெரிய வுணர்த்தி, இன்னும், கருமைமிக்க கண்டத்தையுடைய சிவபெருமான் பூசாமரபின் மேம்பாடுகளை, நம்மவர்கள் இன்னும் நீங்காமற் கேட்கக்கடவரென்று சொல்வாராயினர். எ - று. (௯௦௧)

மலையமா தவத்துத் தெய்வ மாமுனி வழிநீர்க் கங்கை
யலைபுரண் டிரைக்குஞ் சென்னி யரனடி யருச்சித் தங்க
முலைமெழு கென்ன வன்பி னென்பற வுருகா நின்றான் [றான்.
கொலைகொண்மூத் தலைவே லன்னோன் வேண்டின கொடுக்கப் பெற்

(இ - ள்.) பொதியாசலத்தி லெழுந்தருளிய பெருந்தவமுடைய தெய்வீகம் வாய்ந்த சிறந்த அகத்திய முனிவர், பாய்கின்ற நீரையுடைய கங்கையாற்றின் அலைகள் புரண்டொலிக்குஞ் சடையையுடைய சிவபெருமான் திருவடியைப் பூசைசெய்து, உலையிலிட்ட மெழுகுபோல அன்பினால் என்புகள் நெக்குவிடவும் உடலுருகவும் நின்று, கொலைத்தொழில் பொருந்திய சூலப்படையேந்திய அச்சிவபெருமான் விரும்பிய வரங்களைப் பிரசாதிக்கப் பெற்றனர். எ - று. (௧௦௨)

நெளிதிரைப் பரவை யேழு மோர்கரத் தகவை நிற்குந்
துளியென வேந்தி மாந்தி யுமிழ்ந்தனன் றொடர்ந்த வுச்சி
வெளிமுக டணவ நின்ற விந்தியப் பொருப்பை மெல்லென்
றளிர்புரை யங்கை யூன்றி யமுக்கினன் றரணி தாழ்த்தான்.

(இ - ள்.) நெளிகின்ற அலையையுடைய சத்தசமுத்திரங்களையும் ஒருகையி லிருக்குந் துளிபோலத்தாங்கி உட்கொண்டுமீட்டும் வெளியிட்டனர். [ஆசமனஞ் செய்தனர்] நீண்டகொடுமுடியானது அண்டகடாகந் தோய்கின்ற விந்தமலையை, மெத்தென்ற தளிரையொத்த [அகங்கை] உள்ளங்கையினாலூன்றிப் (பாதலம் வரையில்) அழுத்தி நிலமட்டமாக இறக்கினர். எ - று. (௧௦௩)

வெந்திறற் படைவா தாவி வில்வல னென்னும் வெய்ய
செந்தழற் கண்ண ராவி யுதரவெந் தீயிற் செற்றான்
பைந்தமி ழமுதி யார்க்கு மினிதெனப் பருகச் செய்தான்
முந்தைநான் மறைக ளெல்லா முதுக்குறை வோடுந் தோய்ந்தான்.

(இ - ள்.) கொடிய வல்லபமுடைய வாதாவி வில்வலனென்னும் கொடுமை வாய்ந்த சிவந்த தீப்போலுங் கண்களையுடையாரது உயிரை வயிற்றிலுள்ளவெப்ப மாகிய அக்கினியாற் கொன்றனர். பசிய தமிழமிர்தத்தை எல்லோருக்கும் இனி தாகப்பருகும்படி செய்தனர். பழமையாகிய நான்குவேதங்கண் முழுவதையும் பேரறிவோடும் தேர்ந்தனர். எ - று. (௧௦௪)

பன்னிரு தடந்தோ ளெந்தை யருளொடும் பகர நிற்ப
வுன்னரும் பொருளி னோங்குஞ் சிவாற்பரத் துண்மை தேர்ந்தான்
றொன்னிலத் திறவாத் தன்மை பெற்றனன் றொடுநீர் வேலை
யிந்நிலம் பரவ நின்றா னிசைக்கலை முழுது மீந்தான்.

(இ - ள்.) பரந்த பன்னிரு திருத்தோள்களையுடைய எமது தந்தையாகிய முருகக்கடவுள் திருவருள்கூர்ந்து உபதேசிக்க, நினைத்தற்கரிய பொருள்களின் மேம்பட்ட சிவாத்பரத்தின் உண்மை நிலையை யுணர்ந்தனர். பழயபூமியில் இற வாததன்மையை யெய்தினர். தோண்டப்பட்ட நீர்மயமான கடல்சூழ்ந்த இவ் வுலகமானது துதிசெய்ய விளங்கினர். இசைநூல்களை யெல்லாந் தந்தனர்.

பனிபட ரிமய மென்னும் பருப்பதத் தரசர் கோமான்
றனிபடு தவத்தி னீன்ற சரிவளைத் தளிர்க்கை நல்லாள்
குனிசிலை வரையொன் றேந்திப் புரந்தழல் கொளுத்து வோனைக்
கனிபடு கருத்தி னோர்ந்து மெய்த்தவங் கருதி நின்றாள்.

(இ - ள்.) பனிபடர்ந்த இமயமென்னும் மலையின் அரசனானவன், ஒப்பற்ற தவத்தினாற்பெற்ற, சரிகின்ற வளையலணிந்த மாந்தளிர்போன்ற கையையுடைய உமாதேவியார், ஒருமலையை [மேருவை]வளைத்த வில்லாகத்தாங்கி முப்புரங்களை யெரித்தருளிய சிவபெருமானைக் கனிந்தமனத்தோடு தியானித்து (விவாகஞ் செய்து கொள்ளும்படி) உண்மையாகிய தவச்செயலி லிருந்தனர். எ - று. ()

ஆங்கவ ளிழைத்த நோன்பி னரிதுணர்ந் தவிழ்ந்த கொன்றைத்
தேங்கம ழலங்கற் சென்னி திருவரு ளிரங்கி மற்றைப்
பூங்குழன் மணப்ப தோர்ந்து வடதிசைப் பொருப்பி னெய்த
வோங்கிமண் ணளந்த மாயோன் முதலினோ ரொருங்கு சென்றார்.

(இ - ள்.) அவ்விடத்தில் அவ்வுமாபிராட்டியாரியற்றிய தவத்தினருமையைச் சிந்தித்து, மலர்ந்த கொன்றைமலரின் மணம்வீசும் மாலையணிந்த முடியையுடைய சிவபெருமான் திருவருள்கனிந்து, அப்பொலிவுதங்கிய கூந்தலையுடைய பிராட்டியாரைத் திருமணங்கொள்ளக்கருதி, இமாசலமாகிய வடதிசை மலையையடைந்தபோது, திரிவிக்கிரமாவதாரங்கொண் டுயர்ந்து உலகினை மூவடியாலளந்த திருமால் முதலானோர் ஒன்றாகக்கூடினார்கள். எ - று. (கoஎ)

சித்தர்கிம் புருடர் நாகர் கின்னரர் சிறப்பி னோங்கு
மெய்த்தவத் தலைவர் யோகர் விஞ்சையர் விருப்பி னீண்டி
யத்தலத் தடையச் சென்றா ராகையா லம்பொன் மேரு
வுத்தரந் தாழ்ந்து தென்பா லுயர்ந்தது விண்ணி னோங்கி.

(இ - ள்.) சித்தர்கள் கிம்புருஷர்கள் நாகர்கள் கின்னரர்கள் சிறப்புற்றுயர்ந்த உண்மைத்தவமுடைய மேலோர்கள் யோகிகள் வித்தியாதரர்கள் விருப்பத்தோடு சேர்ந்து, அவ்விடத்திற் பொருந்தச் சென்றார்கள். ஆனபடியால் அழகிய பொன்மலையாகிய மேருவும் வடக்கே தாழ்ந்து, தென்பக்கலில் ஆகாய நோக்கியுயர்ந்தது. எ - று. (கoஅ)

ஈதுணர்ந் தமரர் யாரு மெம்பிராற் றிசைப்ப வெம்மான்
மாதலத் தட்டுச் செவ்வ னிறுத்துறு மரபு தேர்ந்து
தீதவித் தரிதி னோற்ற தெய்வமா முனிவர் யாரும்
போதுதி ரென்ன முன்ன மழைத்தனன் கயிலைப் புத்தேள்.

(இ - ள்.) தேவர்களெல்லாரும் இதனையறிந்து எமது சிவபெருமானுடன் விண்ணப்பஞ்செய்ய, எமது சிவபெருமான் பூமியாகியதட்டினை, சமானமாக நிறுத்தத்தக்க முறைமையை யாலோசித்து, துன்பத்தை யகற்றி அரிதாகத்தவஞ் செய்த தெய்வீகம் பொருந்திய முனிவர்களெல்லாரும் முற்படவாருங்களென்று திருக்கைலாயகிரிக் கடவுளாகிய சிவபெருமான் விளித்தருள. எ - று. (கoகூ)

பொறியர வணிந்த வேணிப் புண்ணிய னருளச் சென்ற
நெறிசடை முனிவ ரெம்மை நிறைதுலைத் தட்டி னேற்றி
யறிதிற னுணர்ந்த பின்னர்த் திருவுளத் தடைந்த செய்கை
மறிதரு திருக்கை யெந்தா யென்றடி வணங்கி நின்றார்.

(இ - ள்.) புள்ளிகளையுடைய சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சிவ பெருமான் திருவருள்புரிதலால், அங்கடைந்த, நெறிதல் பொருந்திய சடையை யுடைய முனிவர்கள், அடியேங்களை நிலைத்தராசின் தட்டிலேற்றி யளவறிந் துணர்ந்த பிறகு தேவரீர் திருவுளத்திற் பொருந்திய கட்டளையைச்செய்வோம். மானேந்திய திருக்கரத்தையுடைய எந்தையே! என்று திருவடிகளிற் பணிந்து நின்றார்கள். எ - று. (௧௧௦)

எய்துமா முனிவர் யாரு மோர்தனித் தட்டி னேறச்
செய்தனிக் கும்ப யோனி யோர்தனித் தட்டிற் சென்றா
னையநீத் தளவை நோக்க வகத்திய னிருந்த தட்டுப்
பைதரு நிலத்திற் றாழ்ந்த துயர்ந்ததப் பரவைத் தட்டு.

(இ - ள்.) அங்கடைந்த சிறந்த முனிவர்களெல்லாரும் தராசின் ஒருதட்டில் தனியேயேற, ஒப்பற்ற கும்பயோனியாகிய அகத்தியமுனிவர் ஒருதட்டில் தனி யேயேறினர். அதனால் சந்தேகமின்றி அளவைகாண அகத்தியமுனிவரேறிய தட்டானது பசிய நிலத்தினிடமாக (ப்பாரத்தினால்) இறங்கியது. மற்றப்பரந்த தட்டானது (பாரமின்மையால்) உயர்வாக மேலெழும்பியது. எ - று. (௧௧௧)

மகத்துவத் தலைமை நோக்கி வரிவளை யிடத்துப் பெம்மா
னகத்திய நீபோய்த் தென்பா லடைகென வருளிச் செய்யச்
செகத்தனி நாத னின்னைத் திருமணக் கோலங் காண்பான்
மிகப்படு விருப்பி னின்றே னென்றனன் றமிழ்க்கு வேந்தன்.

(இ - ள்.) கீற்றுகளமைந்த வளையலையணிந்த பார்வதிதேவியாரை இடப் பாகத்திலுடைய சிவபெருமான், அகத்திய முனிவருடைய மகத்துவத்தலைமை யைப்பார்த்து; அகத்தியமுனிவனே! நீசென்று தென்றிசை யடைகவென்று திருவாய் மலர்ந்தருள, உலகிற்கெல்லாம் ஒப்பற்ற தலைவரே! தேவரீருடைய திருமணக் காட்சியைத் தரிசிக்கும்படி, அதிகரித்துண்டாகிய விருப்பத்தோ டிருக்கின்றேனென்று தமிழரசராகிய அகத்தியமுனிவர் கூறினர். எ - று. ()

வேதவா ரணியத் துன்பா லெய்தியாம் விரைவண் டார்க்குஞ்
சீதவார் குழலி யோடுந் திருமணக் கோலங் காட்டிப்
போதுதும் போதி யென்றா னங்கது போற்றி நின்றான்
மாதிரத் தென்பாற் றிக்கி னெடுமுடி மலயஞ் சார்ந்தான்.

(இ - ள்.) யாம் வேதாரணியத்தில் உன்பாலடைந்து, வண்டுகளொலிசெய் யும் மணந்தங்கிய குளிர்ச்சிவாய்ந்த கூந்தலையுடைய உமாதேவியோடுந் திரு மணக்கோலக் காட்சியை யளித்துவருவோம். செல்லுகவென்றனர். அவ்விடத் தில் அதைத் துதிசெய்துகொண் டிருந்து பெரிய தென்றிசையிலுள்ள நெடிய கொடுமுடிகளையுடைய பொதியமலையை யடைந்தனர். எ - று. (௧௧௩)

சாந்துறு மலயத் துச்சி யிருந்தனன் றமிழின் செல்வன்
பாந்தளஞ் சென்னி தாங்கு நெடுநிலப் பரவை முன்னு
ளேந்திய தென்ன முற்றுஞ் சமதலத் திருந்த தெம்மா
னோர்ந்துணர் பூசைத் தன்மை யளவையா ருரைக்கற் பாலார்.

(இ - ள்.) தமிழ்ச்செல்வராகிய அகத்தியமுனிவர் சந்தனமரங்கள்பொருந்திய பொதியமலையி னுச்சியில் வீற்றிருந்தனர். ஆதிசேடன் அழகிய சிரசிற் றாங்கும் பெரிய உலகமாகிய பரப்பு, முற்காலத்தில் தாங்கியிருந்தாற்போல முழுவதும் சமதலமாக விருந்தது. எமது சிவபெருமானைக்கருதி யுணர்ந்து செய்யும் பூசைத்தன்மையின் பெருக்கை எவர்தாஞ் சொல்லவல்லவர்? எ - று. (ககச)

தெள்ளுதெண் டிரைநீர் வைப்பின் முன்னாளிற் சென்ற காலம்
வெள்ளிவெண் குடையிற் காக்குங் குபனெனுந் தனிக்கோல் வேந்த
னெள்ளருந் தவத்தி னோங்குந் ததீசியோ டினிது கூரா
வுள்ளநெக் களவ ளாவி நடக்குநா ளொருநா ளன்னோன்.

(இ - ள்.) தெள்ளித்தெளிந்த அலைகள் பொருந்திய கடல்சூழ்ந்த உலகத்தில், முன்னேகழிந்த தொருகாலத்தில், வெண்மைதங்கிய சந்திரவட்டக்குடை நிழலில் உலகினைக்காக்கும் குபனென்னும் ஒப்பற்ற செங்கோலையுடைய அரசன், இகழ்ச்சியற்ற தவத்தினாலுயர்ந்த ததீசிமுனிவரோடு இனிமைமிகுந்து மனங்கசிந்து அளவளாவி நடக்கு நாட்களில் ஒருநாளில். எ - று. (ககரு)

மரபுடைத் தனிக்கோல் வேந்தன் றதீசியை வதன நோக்கிப்
பிரமமோ வரசர் செய்யு மறங்கொலோ பெரிதென் றோதத்
திரணெடுஞ் சடில மோலித் ததீசிபுன் சிரிப்புக் கொண்டா
னரசர்கோ னதனை நோக்கி யையுறுங் கருத்த னானான்.

(இ - ள்.) மரபுவழியே ஒப்பற்ற செங்கோல் செலுத்தும் அரசன் ததீசி முனிவர் முகத்தைப்பார்த்து, பிரமமா அல்லது அரசர்புரியுந தருமமா பெரியது எனவினவ, திரண்ட நீண்டசடைமுடியையுடைய ததீசிமுனிவர் புன்னகை புரிந்தனர். அரச சிரேஷ்டனாகிய குபன் அதனைப்பார்த்துச் சந்தேகிக்கும் மனமுடையவனாயினான். எ - று. (ககசு)

சுக்கிரன் மருமான் றெய்வச் சுருதிமுற் றளந்து தோயா
வொக்கநோக் கினைமற் றீதே யதிகமென் றுரைப்ப தல்லா
னக்கனை யென்கொ லென்று வுருத்தன னமை வேந்த
னக்கணந் ததீசி நோக்கிப் பிரமமே யதிக மென்றான்.

(இ - ள்.) சுக்கிரன் வழித்தோன்றலே! தெய்வீகம் பொருந்திய வேதமுழுவது மாராய்ந்தறிந்து முழுவதுங்கண்டனை. தருமமே யதிகமென்று சொல்லுவதல்லாமல் புன்னகை புரிந்தாய். யாதுகாரணமென்று அச்சந்தரும் அரசனாகிய குபன் கோபித்தனன். அக்கணத்திலேயே ததீசிமுனிவர் அவனைப்பார்த்துப் பிரமந்தான் அதிகப்பட்டதென்று கூறினர். எ - று. (ககஎ)

ஆங்கது முனிவன் கூறக் கேட்டரு ளரச னோங்கி
யோங்குநீ ருலகங் காக்குந் தருமமே பெரிதென் றோத
வோங்கிருந் தவத்த தீசியு தைத்தன னரசன் மார்பின்
வீங்கினின் றெழுந்த சீற்ற மிக்கனன் வேந்தர் வேந்தன்.

(இ - று.) அப்படி, ததீசிமுனிவர் சொல்லக்கேட்ட மன்னவன், உயர்ந்த நீர்க்கடல்சூழ்ந்த உலகினை மேம்பட்டுக் காக்குந்தருமமே பெரிதென்றுகூற, அதிகரித்த பெருந்தவத்தையுடைய ததீசிமுனிவர் அரசனாகிய குபன்மார்பில் உதைத்தனர். இராசராசனாகிய குபன் அதனால் மேம்பட்டெழுந்த கோபமதிகரித்தனன். எ - று. (௧௧௮)

வண்டுழா யலங்கன் மாயோற் போற்றிய வரத்தாற் பெற்ற
திண்டிறற் றிகிரி யோச்சி முனிவனைச் சிரங்கொய் திட்டான்
கண்டவர் பொறுக்க லாற்றார் கண்கணீர் கலுழ நின்றார்
மண்டுநீர்க் குருதி சோரக் கிடந்தனன் மறையின் செல்வன்.

(இ - ள்.) வளந்தங்கிய துளசிமாலைதரித்த திருமாலைத் துதிசெய்த வரவிசேடத்தால் அடைந்திருந்த பெருவல்லபமுடைய சக்கரத்தைச் செலுத்தித் ததீசிமுனிவனுடைய தலையை அறுத்துவிட்டான். அதனைக்கண்டவர்கள் மனந்தாளாதவராகி விழிகளிற் கண்ணீர்சொரிய நின்றார்கள். வேதச்செல்வராகிய ததீசிமுனிவர் அதிகரித்த உதிரநீர்ப்பெருக் கொழுகக்கிடந்தனர். எ - று. ()

அருமறைக் குலங்க ளெல்லா மழுதழு தரற்றி நின்ற
தருமநெஞ் சழுங்கிச் சோர்ந்து தலைதடு மாறி நின்ற
வுருகின ரிமையோர் கையாற் கண்புடைத் துள்ள நெக்கார்
வெருவின துலக மெல்லாம் பின்னரின் விளைவ தோரார்.

(இ - ள்.) அரியவேதத் தொகுதிகளெல்லாம் அழுதழுதிரங்கி நின்றன. தருமமானது மனம்வருந்திச் சோர்வெய்தித் தலைதடுமாற்றங்கொண்டிருந்தது. தேவர்கள் மனமுருகினர். கையாற் கண்களையடித்துக்கொண்டு மனம்நெக்குவிட்டார்கள். உலகிலுள்ளார் யாவரும் பயமெய்தினார்கள். மேல்விளையுஞ்செயல் இத்தகைத்தென்று உணராதவர்களானார்கள். எ - று. (௧௨௦)

ஈதுணர்ந் தரிதி னெய்திச் சுக்கிர னெடுத்துக் கொண்டான்
சீதநீர்க் குருதி யெல்லாந் தைவரப் புழுதி தேய்த்தான்
மாதுயர்க் களவை யற்றான் மம்மர்நோய் மயக்கங் கொண்டான்
றீதவித் தரிதி னோற்ற சிந்தனை திருப்பிக் கொண்டான்.

(இ - ள்.) சுக்கிரன் இதனையறிந்து அங்கெய்தித் ததீசிமுனிவரை அரிதாக எடுத்துக்கொண்டனன். குளிர்ந்த உதிர நீர்ப்பெருக்கையெல்லாந் துடைத்துப் புழுதியையும் போக்கினன். தான்கொண்ட துன்பத்திற்கு எல்லையில்லாதவனாயினன். கலக்கமாகிய நோயினால் மனமயக்கங்கொண்டனன். தீமையைத் தவிர்த்து அரிதாகத் தவஞ்செய்த மனதைத் திருப்பிக்கொண்டனன். எ - று.

இற்றிடு சிரத்தை யேந்தி யிசைத்தன னிசைக்குங் காலை
யற்றழி வுடம்பு தம்மிற் பொருந்திய தமரர் யாருங்
கற்றைவார் சடையான் பூசைப் பெருமையைக் கருத்துட் கொண்டார்
முற்றவத் ததீசி யென்பா னெழுந்தனன் முனிவு கூர்வான்.

(இ - ள்.) ததீசிமுனிவரது வெட்டுப்பட்டுப்பிரிந்த தலையைத்தாங்கிச்சேர்த்தனன். அப்படிச் சேர்க்குங்காலத்தில் அத்தலை பிரிந்துகழிந்த உடம்போடு பொருந்தியது. தேவர்களெல்லாரும், தொகுதியாகிய நெடிய சடையையுடைய

சிவபெருமான் பூசைச்சிறப்பை மனதிற்கொண்டார்கள். முற்பட்ட தவத்தை யுடைய ததீசிமுனிவ ரென்பவர் உயிர்பெற்றெழுந்து கோபமதிகரிக்கின்றனர்.

அங்கிலை யவனை நோக்கிச் சுக்கிர னருள்வ தானான்
மன்னவ னலங்கற் றுல்லை மாயனை மரபிற் போற்றி
மின்னிலைத் திகிரி பெற்று ணங்கது விளித்த துன்னை
யென்னைநீ மதித்த துன்பா லுணர்த்துவ தினமொன் றுண்டால்.

(இ - ள்.) அச்சமயத்திற் சுக்கிரன் ததீசியைப்பார்த்துச் சொல்லுகின்றான். அரசனாகிய குபன் துளசிமாலைதரித்த திருமாலை வரன்முறையே துதிசெய்து, மின்னுகின்ற நிலைமையையுடைய சக்கிராயுத மெய்தினன். அது உன்னைக் கொன்றது. நீமதித்தது யாது? உன்னிடத்தில் இன்னும் யான் சொல்லவேண் டியது ஒன்றுள்ளது. அஃதியாதென்னில். எ - று. (௧௨௩)

மாயனை வழிபட் டேற்ற திகிரியை மறுப்ப தங்கட்
பாய்விடைப் பரனு லன்றி யாவரப் படையைத் தீர்ப்பார்
சேயொளிக் குடில வேணிச் சென்னியைக் கருத்தி னோரா
வாய்மலர்ப் பழுது நோக்கி யருச்சனை யயர்தி யென்றான்.

(இ - ள்.) திருமாலை வழிபாடுசெய்து அவர்பாற் பெற்ற சக்கிரத்தைத் தடுப்பது, அழகிய கண்களையுடைய பாய்ந்துசெல்லும் இடபவாகனமுடைய சிவ பெருமானாலன்றி, வேறெவர்தாம் அச்சக்கிராயுதத்தினை விலக்குபவர்? செவ் வொளிவாய்ந்த கட்டிய சடைமுடியையுடைய சிவபெருமானை மனதிற்சிந்தித்து ஆய்ந்த மலர்களைக் குற்றங்கடிந்து எடுத்துச் சிவார்ச்சனை செய்வாயாக வென் றனன். எ - று. (௧௨௪)

அரிமுத லமரர் யாரு மாங்கவ னடிக்கீழ்த் தொண்டு
புதரிலா லெவர்க்கு மெட்டாப் பதவியும் புரந்து நின்று
ருரியைநீ யவனைப் போற்றி யருச்சனை யுவப்பி னல்லான்
விரிதனிக் கவிகை வேந்தை வெலற்கரி தென்று விட்டான்.

(இ - ள்.) திருமால் முதலிய தேவர்களெல்லாரும், அச்சிவபெருமான் திரு வடியின் நிழலில் திருத்தொண்டினைச் செய்ததால் ஒருவருக்கும் எட்டாத உயர் பதவியையும் காத்துநின்றார்கள். உரியவனாகிய நீ அவ்விறைவனைத் துதிசெய்து சந்தோஷப் படுத்தினாலல்லது, பரந்த ஒப்பற்ற சந்திரவட்டக் குடையையுடைய குபனென்னும் அரசனை வெல்லுதற்கரிதென்று சொல்லிவிடுத்தனன். எ - று

பூசனைக் குரிய வெல்லாம் வரன்முறை போதித் தாங்க
ணீசனைப் பரவ வேண்டு முதுக்குறை யருளி னீந்தான்
மாசறு குணத்தான் வெள்ளி தன்னுழை மருங்கு புக்கா
னேசறு ததீசி யென்பா னருச்சனைக் கியைவ தானான்.

(இ - ள்.) குற்றமற்ற நற்குணங்களையுடைய சுக்கிரன் சிவபூசைக்கு உரித் தாயின வற்றையெல்லாம் வரன்முறையாக உபதேசித்து, அப்பொழுது சிவபெரு மானைத் தொழுதற்குரிய பேரறிவையுங் கருணையோடு தந்தனன். ஏசுதலற்ற செயல்களமைந்த ததீசிமுனிவரென்பவர் அவரதாச்சிரமத்திற் கருகெய்திச் சிவா ர்ச்சனை செய்தற்கு மனமியைந்தனர். எ - று. (௧௨௬

ஆகமத் துறைவ ழாம லருமறை மரபு நோக்கி
யேகநா யகனைப் பூசித் திருந்தனன் றதீசி யென்பான்
மாகநாண் மதியஞ் சூடும் வளர்சடைப் பெருமா னுள்ளச்
சேகறு முனிவற் கென்னத் திருவரு ளிரக்கஞ் செய்தான்.

(இ - ள்.) சிவாகம நெறிதவறாமல் அரியவைதிக மரபைக்கருதி, ஏகநாயக னாகிய சிவபெருமானைத் ததீசிமுனிவர் பூசைசெய்து கொண்டிருந்தனர். ஆகாயத்திற்றோன்றும் இளஞ்சந்திரனை யணிந்த பெருகிய சடையையுடைய சிவபெருமான், மனத்தின் வைரமற்ற ததீசிமுனிவர்க்கென்று திருவருட் கனிவுசெய் தருளினர். எ - று. (௧௨௭)

ஆயவ னினைந்த வெல்லாம் புரிந்தன னமரர் கோமாற்
கேயதா னளித்த முன்னை வச்சிரத் தென்பு கொண்டான்
மாயிரு ஞால மெல்லாம் போற்றுறு மரபி னின்றான்
போயினன் குபனென் றோது மரசவை யகத்துப் புக்கான்.

(இ - ள்.) அத்ததீசிமுனிவர் கருதியன வற்றையெல்லாம் செய்தருளினர். தேவராசனாகிய இந்திரனுக்குத்தாம் முன்னர்க்கொடுத்த வச்சிரவடிவாகிய முதுகென்பைக் கைக்கொண்டனர். மிகப்பெரிய உலகமுழுவதும் துதித்தற்குரிய மரபின்மேம் பாட்டிலிருந்தனர். குபனென்று சொல்லும் மன்னவன் சபையி னிடத்திற் போய்ச்சேர்ந்தனர். எ - று. (௧௨௮)

கொதித்தெழு வெகுளி வெந்தீக் கொழுந்தெழ வரசன் மார்பின்
மிதித்தனன் மிதித்த லோடு மரசனும் வெகுளி பொங்கித்
ததிப்பெரும் பெயரோன் றன்பாற் சக்கர மோச்சி விட்டா
னுதித்தலை மடங்கி மீண்ட தப்படை நொடிப்பி னுள்ளே.

(இ - ள்.) கொதித்தெழுந்த கொடிய கோபாக்கினிக்கொழுந்து விளங்கி யெழ, அரசனாகிய குபன்மார்பில் உதைத்தனர். அப்படி யுதைக்கவும் குபனுங் கோபமிகுந்து, பெரிய ததீசியென்னும் பெயருடைய முனிவர்பேரில் சக்கிரா யுதத்தை யோங்கிச்செலுத்தினன். அச்சக்கிராயுதமானது இமைப்பொழுதிற் குள் தன்கூர்மைதங்கிய [தலை] ஈர் வாய் மழுங்கித்திரும்பியது. எ - று. (௧௨௯)

அதுகுறித் தடைய நின்ற வருந்தவத் ததீசி மெல்லெண்
புதுமணி முறுவல் பூத்தா னரசனும் புலம்பு கொண்டான்
மதுகைவா ளரசை நோக்கி மாமுனித் தலைவன் வேந்தே
யெதுநினைந் துறுதி யென்னக் கேட்டியென் றிசைப்ப தானான்,

(இ - ள்.) அருகேயிருந்த அருந்தவம்புரிந்த ததீசிமுனிவர் அச்சக்கிரந் திரும்பியது கருதிமெல்லியமுத்துமாலைபோன்றபுன்னகைசெய்தனர். மன்னனும் அச்சமெய்தினன். வெற்றிதங்கிய வாளேந்திய அரசனைப்பார்த்து பெரியமுனித் தலைவராகிய ததீசியென்பவர், அரசனே! நீயெதனை உறுதியென்று கருதியுள் ளாயென்பது கேட்பாயாக வென்று சொல்லுவாராயினர். எ - று. (௧௩௰)

தொல்லைநா ளரிதி னோலா வருந்தவந் தொலைய நின்று
குல்லையந் தடந்தோண் மாயன் றிகிரிபெற் றரசு கொண்டா
யொல்லையி லவன்ற னாழி முனைமடிந் துகுதல் கண்டாய்
வல்லையேல் வருதி யென்னு மனமறுத் தரசன் போனான்,

(இ - ள்.) பூர்வகாலத்தில் அரிதாகநோற்று அருந்தவத்திற் பன்னாளிருந்து அழகிய துளசிமாலையணிந்த பரந்த தோளையுடைய திருமால் சக்கிரத்தைப் பெற்று அரசுரிமையைத் தாங்கினை. அத்திருமால் சக்கிரம் அதிவிரைவில் கூர் வாய்மடிந்து சிந்தியதுபார்த்தனை. கூடுமானால் போருக்கு வருவாயாகவென, குபன்மனதைத் தடுத்துக்கொண்டு போய்விட்டனன். எ - று. (கஙக)

பருத்தநாச் சுடிகைத் துத்திப் பாப்பணை யமலற் போற்றித்
தொகுத்தருந் தவத்தி னின்று ளுங்கவ னெளிதிற் றேற்ற
மிகுத்தவெஞ் சினத்தா லந்தத் ததீசியால் விளைந்த வெல்லாம்
வகுத்தெடுத் துரைத்துச் சென்னி மலரடி தடவ வீழ்ந்தான்.

(இ - ள்.) பிளவுபட்ட நாவையும் உச்சிக்கொண்டையையும் படப்பொறி யையுமுடைய ஆதிசேடனாகிய சயனத்தி லெழுந்தருளிய திருமாலைத்துதி செய்து, அரியதவச்செயலிற் சேர்ந்துநின்றனன். அதனால் அத்திருமால் இலே சாகக் காட்சிதந்தருள, அதிகரித்த கொடுங்கோபத்தால் அந்தத் ததீசிமுனிவரால் விளைந்த சங்கடங்களையெல்லாம் பிரித்தெடுத்துச்சொல்லி, தாமரை மலர்போன்ற திருவடியிற் பொருந்த நமஸ்கரித்தனன். எ - று. (கஙஉ)

அன்னது கருத்துட் கொண்டான் றுழாய்முடி யலங்கன் மாயோன்
செந்நெறி தவத்தி னேங்குந் ததீசியாச் சிரமஞ் சென்று
னந்நெறி யளவ ளாவித் தம்மிலோ ரன்புட் கொண்டார்
நெய்ந்நிலை திகிரி மாயோ னினையன நிகழ்த்த லுற்றான்.

(இ - ள்.) துளசிமாலையணிந்த கிரீடத்தையுடைய திருமால் அக்குபன் கூறியதை மனதிற்கொண்டு, செம்மை நெறியாகிய தவச்செயலில் மேம்பட்ட ததீசிமுனிவர் ஆச்சிரமமெய்தி,அவ்வழியில் அவரோடு அளவளாவி, தங்களிருவ ரில் ஒருவிசுவாசத்தை யுட்கொண்டவர்களாயினர்.நெய்பூசிய சக்கிராயுதமேந்திய திருமால் இப்படிப்பட்டசொற்களைச்சொல்வாராயினர். எ - று. (கஙங)

தண்ணளிக் கவிகைச் செங்கோற் குபனொடுஞ் சலந்தீர்ந் தின்னே
கண்மய மருளி வேந்த ரறநெறிக் கருமந் தானே
யுண்மையென் றுரைக்க வேண்டு மீதெனக் குதவ லென்றான்
பண்மரு சுரும்ப ரூதும் படலையம் பசுந்து ழாயோன்.

(இ - ள்.) குளிர்ந்த கருணையுடைய வெண்கொற்றக் குடைதாங்கிய செங் கோல்செலுத்துங் குபனெனும் அரசனோடும் இப்பொழுதே கோபந்தணிந்து கண்பார்த்தருளி, அரசருடைய தருமமார்க்கமாகிய செயலே யுண்மைப்பொரு ளென்று உரைக்கவேண்டும். இவ்வரத்தை யெனக்குத் தருகவென்று,பண்ணொலி பொருந்திய வண்டுகள் பண்பாடும்வரிசையாகிய பசிய துளசிமாலைதரித்த திரு மால் வேண்டினர். எ - று. (கஙச)

மெய்ம்மொழி வரம்பி னிற்ப தல்லது வேத நீத்த
பொய்ம்மொழி யெமக்க டாது யாமது புகலோ மென்ன
மைம்மழை யுருவத் தாழி மாயவன் மதிப்பு றாம
லெம்மொழி மறுத்தா யென்னு வெழுந்தனன் வெகுளித் தீயான்.

(இ - ள்.) நாம் சத்தியவாக்கி னெல்லையில் இருப்பதல்லது வேதபாகிய மான அசத்தியவாக்கு எமக்குப்பொருந்தா தாகலின் அதனைச் சொல்லமாட்டோ மெனக்கூற, கரியமேகம்போன்ற திருவுருவும் சக்கிராயுதமுந் தாங்கிய திருமால், ததீசிமுனிவரே! நீர் எம்முடைய வார்த்தையைச்சிறிதும் மதிப்பில்லாமல் தடுத்தீ ரென்று கோபாக்கினியோடு எழுந்தனர். எ - று. (கருஅ)

முந்தைநா ளவன்பா லேவ முனைமடி திகிரி யோச்சித்
தந்தனன் விடுத்த லோடுஞ் சிதைந்ததத் திகிரிச் சாயை
வெந்தழி மனத்த னாகி வெகுண்டனன் விரைத்து ழாயோ
னந்தரஞ் சிகரச் சென்னி யணவுற நிமிரா நின்றான்.

(இ - ள்.) முன்னாளில் அத்ததீசிமுனிவர்பாற் செலுத்தக்கூர்வாய் மழுங்கிய சக்கிராயுதத்தை விடுத்தனர். அப்படிவிடுப்பவும் அச்சக்கிரத்தின்சாயை சிதை வுற்றது. மணம்பொருந்திய துளசிமாலையணிந்த திருமால் அதுகண்டு கொதித் தழிந்த மனமுடையவராகிக் கோபித்து ஆகாயத்தில் திருமுடியானது கலக்கும் படி உயர்ந்த வடிவமாயினர். எ - று. (கருகூ)

கார்க்கட லுருவ நீண்டு காட்டலுந் ததீசி யென்பான்
போர்க்கெனக் கறுவு கொண்டா னவ்வுருப் பொருந்தா நின்றான்
றார்ப்பெருந் துளவோன் மாயை யாவையுந் தகுவ செய்தான்
சீர்த்தவத் தலைவ னன்னோன் செய்வன யாவுஞ் செய்தான்.

(இ - ள்.) திருமால் தமது கருங்கடலுருவத்தை பெருகச்செய்துகாட்டவும், ததீசிமுனிவர் போர்செய்தற்காகக் கோபமெய்தியவராய் அவ்வடிவினைத்தாமும் பொருந்தி நின்றனர். பெரிய துளசிமாலையணிந்த திருமால் செய்யத்தகுவன வாகிய மாயைகளையெல்லாஞ்செய்தனர். சிறப்புப்பொருந்தியதவசிரேஷ்டராகிய ததீசிமுனிவரும் அத்திருமால் புரியும் மாயைகளையெல்லாம் செய்தனர். எ-று.

அளப்பருஞ் சேனை யீட்டி யாரமர் தொடங்கு மாயோ
னுளத்துறு மளவை நோக்கி யொண்டவத் தலைவ னின்றான்
றளப்பனிக் கமலக் கையாற் றருப்பை யொன்றெடுத்து நீலக்
களக்கறை மிடற்றோன் றெய்வ மந்திரங் கருத்துட் கொண்டான்.

(இ - ள்.) அளவிடற்கரிய சேனைகளைச்சேர்த்து, பொருந்திய போர்தொ டங்குகின்ற திருமாலின் மனம்பொருந்திய அளவினை, ஒளிதங்கிய தவத்தலைவ ராகிய ததீசிமுனிவர் பார்த்துக்கொண் டிருந்தனர். பின்னர், இதழ்களையுடைய குளிர்ச்சிவாய்ந்த தாமரைமலர்போன்ற, தமது கையினால் ஒருதருப்பைப் புல்லை யெடுத்து நீலநிறந்தங்கிய ஆலாலவிஷம்பொருந்திய கண்டத்தையுடையசிவபெரு மானுடைய தெய்வீகந்தங்கிய மகாமந்திரத்தை மனதிற் றியானித்தனர். எ - று.

எடுத்தவத் தருப்பை நோக்கி மந்திர மியலபிற் சாற்றி
விடுத்தலும் விரைத்து ழாயோன் சேனையை விழுங்கிக் கொண்ட
தடுத்தன ரொருவ ரின்றி யோர்தனி யாக நின்றான்
மடற்பெருங் கமல பீடத் தந்தணன் மருங்கு சார்ந்தான்.

(இ - ள்.) கையிலெடுத்த அத்தருப்பையைநோக்கி முறைப்படி மந்திரஞ் சபித்து விடுப்பவும், அது மணந்தங்கிய துளசிமாலையணிந்த திருமாலின் சேனை

முழுவதையும் விழுங்கியுட்கொண்டது. தடைசெய்வோர் ஒருவருமில்லாமல் யாவருமகல, திருமால் ஒருவரே தனியாகநின்றனர். பெரிய மடல்களையுடைய தாமரைமலர்ப்பீடத்திலுள்ள பிரமனுக்கு அருகேயெய்தினர். எ - று. (கஙக)

அந்தரத் திமையோர் யாரு மவனொடு மருகு சார்ந்தார்
மந்திரத் தகைமை சான்ற ததீசியை வணக்கம் போக்கிப்
புந்திநெக் குருகி வாழ்த்திப் புகழ்ந்தனர் புரங்க ளடத்த
வெந்தையெம் பெருமான் பூசை யளவையா ரியம்பற் பாலார்.

(இ - ள்.) ஆகாயத்தில் வசிக்குந்தேவர்கள் யாவரும் அத்திருமாலோடு பிரமனருகே சேர்ந்தார்கள். மந்திரத்தகுதிமிகுந்த ததீசிமுனிவரை யடுத்துவணக்கஞ்செலுத்தி மனம்நெக்குவிட்டுருகி, வாழ்த்திப் புகழ்ந்தார்கள். முப்புரங்களைப் பொடிபடுத்திய எமதுதந்தையும் எமது பெருமானுமாகிய சிவபகவான் பூசைச் சிறப்பை எவர்தாம் சொல்லுந்தன்மை யுடையார்? எ - று. (கசo

பச்சொளிப் பருமத் திண்டோ ளைம்படைப் பசுந்து ழாய
வச்சுதன் வெருவி நிற்ப வருந்தவத் தலைவ னோக்கிக்
கொச்சைநீ யொருநாட் டக்கன் வேள்வியிற் கொடிய வீரன்
கைச்சினக் கதைபட் டேங்கிக் கிடவெனக் கனன்று சொன்னான்.

(இ - ள்.) பசியவொளியைவீசும் பூரித்தவலிய தோளையுடையபஞ்சாயுதங்களேந்திய பசியதுளசி மாலையணிந்த திருமால் பயந்துநிற்கவும், அருந்தவத்தலைவராகிய ததீசிமுனிவர்கண்டு [கொச்சை] அறிவிலியாகியநீ ஒருநாள் தக்ஷப்பிரசாபதியின் கொடுமைதங்கிய யாகத்தில் வீரபத்திரக் கடவுள் கையிலேந்திய கோபத்தோடுகூடிய கதாயுதத்தாலடிபட்டு வருந்துகவெனக் கோபித்துச்சபித்தனர்.

நின்னடிக் குரிய ராயோர் நிலவணி குடில வேணி
பொன்னடிக் கயலா மீளா நரகிடைப் புகுத வென்று
னந்நிலைக் கமல பீடத் தந்தண னலங்கன் மாயோன்
றன்னிலை கருதிச் சாரா வினையன சாற்ற லுற்றான்.

(இ - ள்.) உன்னுடைய திருவடிப்பக்தியுடையவர்கள், சந்திரனையணிந்த கட்டிய சடையையுடைய சிவபெருமான் அழகியதிருவடிக்கு அன்னியராய்த்திரும்பாத நரகத்திற் புகக்கடவரென்று சபித்தார். துளவமாலையணிந்த திருமாலின் நிலைமையைச் சிந்தித்து, தாமரை மலர்ப்பீடத்திலெழுந்தருளிய பிரமன் நெருங்கி இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வானாயினன். எ - று. (கசஉ)

ஆதியெங் கயிலைப் பெம்மா னடித்துணைக் கன்பு பூண்ட
பூதிசா தனத்தோர் தம்பா லாரமர் புரிய லாமே
யோதிமற் றுணரார் போல வுருற்றினை யுரிமைத் தன்றே
போதியென் றுடன்கொண் டேகி நடந்தனன் கமலப் புத்தேள்.

(இ - ள்.) ஆதிநாயகனுகிக் கைலாயத்தி லெழுந்தருளிய எமது சிவபெருமான் உபயபாதங்களுக்கு அன்புபூண்ட திருவெண்ணீற்றின் சாதனமுடையோரிடத்தில் பொருந்திய போர்செய்தல் கூடுமோ? நூல்களையோதி, மீண்டும் அறியாபோலச் செய்தீர் இதுதகுதியன்று வருகவென்று தன்னோடு உடன்கொண்டு பிரமதேவன் நடந்துபோயினன். எ - று. (கசஙு)

தண்ணளிக் கவிகை வேந்தன் குபனெனுந் தாம வேலோ
னண்ணன்மா முனிவற் போற்றி மலரடிக் கபயம் புக்கா
னண்ணரும் புலையேன் செய்த படிறெலா நவைதீர் நோன்பி
னெண்ணருந் தவத்தின் மிக்கோய் பொறுத்தியென் றிரந்து சொல்வான்.

(இ - ள்.) குளிர்ந்த கருணையோடு கூடிய வெண்கொற்றக்குடையணிந்த குபனென்னும் மாலைசூடிய வேலேந்திய மன்னவன், சிறந்த ததீசிமுனிவரைத் துதிசெய்து தாமரைமலர்போன்ற அவர் திருவடிகளுக்கு அடைக்கலம்புகுந்தான். அடைதற்கரியபுலைமைத்தன்மையுடைய அடியேனியற்றிய குற்றங்களையெல்லாம், குற்றத்தினின்று நீங்கிய நல்லவிரதங்களால் எண்ணுதற்கரிய தவத்தின் மேம்பட்ட முனிவரே! பொறுத்தருள வேண்டுமென்று யாசித்துக் கூறுவான். எ-று.

வேதநூன் மரபிற் றோன்றும் வேதியர் பெரிய ரென்று
வாதிவா னவனே யன்றி யமரரு மறித றேற்றார்
தீதவித் தரிதி னோற்குந் தெய்வமா முனிவன் கேள்வி
மூதுணர் வொழிந்த வாழ்க்கை மனிதரோ மொழியற் பாலார்.

(இ - ள்.) வேதநூன் மரபிலுதித்த அந்தணர்கள் பெரியோர்களென்று சிவபெருமானேயல்லாமல் தேவர்களும் அறியமாட்டார்கள். தீமையைநீக்கி அரிதாகநோற்குந் தெய்வீகம்பொருந்திய சிறந்தமுனிவன், நூற்கேள்வியின் முதிர்ச்சியுணர்வு நீங்கிய சிறுவாழ்க்கையையுடைய மானுடரோ சொல்லத்தக்கவர்கள்.

வெறுப்பொடு சிறியோர் செய்த வெம்மையைத் தண்மை யாக்கிப்
பொறுப்பவர் பெரியோ ரென்ப யான்சில புகல வேண்டா
மறுப்படாக் குழவித் திங்கட் கண்ணிபால் வழிபா டெய்திப்
பெறற்கரு நிலைமை பெற்றாய் நின்னலாற் பெரியர் யாரே,

(இ - ள்.) வெறுப்புடன் சிறியோர்செய்தகொடுமையைநன்மையாக்கிமனம் பொறுப்பவர் பெரியோரென்று சொல்லப்படுவார்கள். யான் அதுபற்றிச் சிறிது சொல்லவேண்டுவதின்று, களங்கமெய்தாத பிறைச்சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமானிடத்தில் வழிபாடுசெய்து அடைதற்கரிய உயர்நிலைமையெய்தினீர். தேவரீரையல்லாமல் பெரியார் யாவருள்ளார்? எ - று. (கசசு)

என்றவ னினைய வெல்லா மிரந்திரந் தெடுத்துக் கூறத்
தன்றனித் தவத்து மேலோ னிரங்கினன் றனது சிந்தை
யொன்றுநீ நினைய லைய வெருவலை யெழுதி யென்றான்
மன்றலந் தொடையன் மார்பற் கினையன வகுப்ப தானான்.

(இ - ள்.) என்று அக்குபன் இத்தகைய வார்த்தைகளையெல்லாம் மிகவும் யாசித்து எடுத்துச்சொல்ல, தனது ஒப்பற்ற தவத்தினான் மேம்பட்ட ததீசிமுனிவர் தமது மனமிரங்கினர். ஐயனே! நீவேறொன்றும் நினைக்கவேண்டாம். அஞ்சாதே எழுந்திருவென்றனர். மணந்தங்கிய அழகிய மலர்மாலையணிந்த மார்பையுடைய குபனுக்கு இன்னும் இத்தகைய வார்த்தைகளைச் சொல்வாராயினர். எ - று. (கசஎ)

தனிநுதல் விழித்து மாரற் செகுத்தரு ளவ்வற் போற்றிக்
கனிதரு சிந்தை யோடு மருச்சனைக் கடன்க ளாற்றிப்
புனிதமா தவரைப் போற்றி யின்னுயிர் புரத்தி யென்றான்
குனிசிலைத் தடந்தோள் வீர னதுமனக் கொண்டு போனான்.

(இ - ள்.) ஒப்பற்ற நெற்றிக்கண்ணைத்திறந்து மன்மதனை யெரித்தருளிய சிவபெருமானைத் துதிசெய்து, கனிவுற்ற மனத்துடன் அருச்சனைக்கடன்களைச் செய்து, பரிசுத்தராகிய பெருந்தவசிகளைத் துதித்து இனிய உயிர்களையெல்லாம் காப்பாயாகவெனக் கூறினர். வளைந்த வில்லேந்திய பரந்ததோளையுடைய வீரனாகிய குபன் அவ்வார்த்தைகளை மனத்திற் கொண்டு சென்றனன். எ - று. ()

அவ்வழி யரனைப் போற்றி யருச்சனை முறையி னாற்றிச
செவ்வழிக் குரவர்க் கெல்லாஞ் சிந்தனை திருந்த நின்றான்
வெவ்வழிக் கொடுங்கோ னீத்துப் பேரறம் விளையச் செய்தா
னுய்வழிக் கொண்டு வேந்தன் கயிலைசென் றுவந்து புக்கான்.

(இ - ள்.) அவ்வகையே சிவபெருமானைத் துதித்து முறைப்படி சிவார்ச்சனைபுரிந்து, செம்மையாகிய வழியிலே முதியோர்க்கெல்லாம் மனங்களிக்க விளங்கினான். வெவ்விய வழியாகிய கொடுங்கோன்மை யகன்று பெரிய தருமமானது பெருகும்படி செய்தனன். அவ்வரசன் இறுதியில் உச்சீவிக்கும் வழியை மேற்கொண்டு திருக்கைலாயகிரியைச் சந்தோஷித்துப்போய்ச் சேர்ந்தனன். எ - று.

அருந்தவத் ததீசி யென்பா னரனடி யருச்சித் துள்ள
மிருந்தைவெந் தழலிற் பொன்னொத் துருகிநெஞ் சிரங்கி நின்றான்
பெருந்தவத் தலைவர்க் கெல்லாம் பேரறி வுணர்த்தப் பெற்றா
னருந்தவச் சனக ராதி யெவரினுந் தலைமை சான்றான்.

(இ - ள்.) அருந்தவம்புரிந்த ததீசிமுனிவர் சிவபெருமான் திருவடிகளைப் பூசித்து மனமாகியகரி வெவ்விய தீயிலிட்ட பொன்போன்றுருகி மனங்கசிந்து விளங்கினர். பெருந்தவம்புரிந்த தலைவர்களுக்கெல்லாம் பேரறிவு உணர்த்தப் பெற்றனர். அருந்தவமுடைய சநகர்முதலிய வெல்லோரைக்காட்டிலும் தலைமை மிக்கனர். எ - று. (கழ0)

சனகாதியர் சிவார்ச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௩௨-க்கு திருவிருத்தம் ௩௭௩0.

முப்பத்து மூன்றாவது

வாணாசுரன் பூசவணைச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்கை பாகனுக் கருச்சனை வரன்முறை குழீஇக்கொடு வருவ
தோரைப், பொங்கு கங்கையஞ் சடிலபிரா றனித்தனிப் பூசனைப் புரிந்
தோரை, யங்க ணுற்றறிந் தனசில வறைந்தன மினியறி விலராகி,
யெங்க ணாயகற் கருச்சனை யியற்றினோர் பெற்றன விசைக்கின்றோம்.

(இ - ள்.) பார்வதிபாகராகிய சிவபெருமானுக்கு அர்ச்சனையை வரன்முறையே கூட்டங்கொண் டியற்றியவர்களையும், கங்கையாறு பெருக்கெடுக்கின்ற சடையையுடைய சிவபெருமானிடத்தில் தனித்தனி பூசைசெய்தவர்களையும் பற்றிக் கேட்டறிந்தனவாகிய சிலசரிதங்களை இதுகாறுஞ்சொன்னோம். அறிவில்லாதவர்களாய், எங்கள் சிவபெருமான் பூசையைச்செய்தோர் பெற்றபேறுகளை இனிச்சொல்லுகின்றோம். எ - று. (௪)

என்று சூதமா முனிவர னிசைத்தன விருசெவிப் புலன்றேக்கி
நின்று கண்கணீர் கலுழ்ந்தன ரருந்தவர் நெடுமுடி துளக்குற்றார்.
மன்று ளாடிபொற் பூசனை விரித்தனை வரன்முறை யினிமேலுஞ்
சென்று தீமையோ ரருச்சனை மொழிகெனச் செப்புறுந் திறநின்றான்.

(இ - ள்.) என்று பெருமைவாய்ந்த சூதரென்னும் முனிசிரேஷ்டர்கூறிய வார்த்தைகள் அரிய தவசிகளாகிய நைமிசாரணிவாசிகள் இருசெவிகளிலுந் தேக்கெடுத்து அசைவற்றிருந்து ஆநந்தக்கண்ணீர் சிந்தினர். நெடிய முடிகளை யசைத்தார்கள். பொன்னம்பலத்தில் நடனஞ்செய்தருளும் சிவபெருமானது அழகியபூசையை வரன்முறையாக இதுகாறுங்கூறியருளினீர். இன்னும், கொடுஞ்செயலுடையோர் (அபுத்தி பூர்வமாகச்) செய்த சிவார்ச்சனைகளையுந்திருவாய் மலர்ந்தருள வேண்டுமெனக்கேட்க, சூதமுனிவர் சொல்லுதலுற்றனர். எ - று.

கொழித்த வெண்டிரை நதிபுடை கிடந்திடக் கொடிமதி ளுடுத்தோங்குஞ், செழித்த பல்வள மகததே யத்தொரு திருநக ரவ்வூரிற், பழிப்பி னான்மறைச் சக்கிராங் கனுக்கொரு பாலக னுளனன்னோன், சுழித்த சிந்தையன் றிரிதராட் டிரனெனச் சொலத்தகும் பெயர்பெற்றான்.

(இ - ள்) வெள்ளிய அலைகளைக் கொழிக்கும் நதியானது புடைசூழ, கொடிகள் கட்டிய மதில்சூழ்ந்துயர்ந்த பலவளங்களோடு செழித்த மகததேயத்தில் ஒருசிறந்த நகரமுண்டு. அந்நகரத்திலே பழித்தலில்லாத நான்குவேதங்களையுணர்ந்த சக்கிராங்க னென்பவனுக்கு ஒருபுத்திரனுண்டு. அவன் சுழித்த மனமுடையவன். திரிதராட்டிரனென்று சொல்லத்தகும் பெயரெய்தினன். எ-று.

கொடுமை யென்பன யாவையு மிழைத்தனன் குலத்தொழில் வரம்பறுான், வடிநெடுங்குழைப் பொதுமகட் புணர்முலை மயங்குறு மரபோரான், படியி கந்தன நோக்கலன் றருமமும் பாவமும் பகுத்தோரான், குடிது றந்தன னுரைமதுக் குடிப்பவர் குலத்தொடுங் குடிபுக்கான்.

(இ - ள்.) கொடுந்தொழிலென்று சொல்லப்படுவனவற்றை யெல்லாம் செய்தனன். தனது அந்தணர் குலத்தொழிலின் எல்லையைக்கடந்தான். கூரிய நீண்ட குண்டலமணிந்த [பொதுமாதர்] வேசையர்களிருதனங்களிலும் மயங்குவான் மரபின் மேம்பாடுணரான். தன்னை உலகினர் இழித்துரைத்தலைக்கருதான். புண்ணியபாவங்களைப் பிரித்தறியமாட்டான். அந்தணருடன் குடியிருக்கையை விடுத்தான். நுரையோடுகூடிய கள்ளைக்குடிப்போர் குலத்துடன் குடியிருக்கப் புகுந்தான். எ - று. (௫)

கொன்று தின்றறத் துறைநெறி துறந்தனன் கள்விலைக் குலப்பே
தை, மன்ற லோதியோர் மகட்புணர்ந் தவளொடும் மயங்கினன் வரு
நாளின், வென்றி வேந்தனு லியற்றிய நறுமலர் விரிபொழி லவளோடுஞ்,
சென்று பூந்துணர் கொய்தெடுத் திருவரும் புனைந்தனர் செலனுற்றார்.

(இ - ள். உயிர்களை வதைத்துப் புசித்து, தருமநெறியினின்று நீங்கினன். கள்விலைபகரும் குலத்துதித்த அழகிய மணம்வீசுங் கூந்தலையுடைய ஒருபெண்ணைக்கூடி அவள் பால் மயங்கிக்கிடக்கும் நாளில், வெற்றிபொருந்திய அரசனால் அமைத்த மணந்தங்கிய பூக்களலர்ந்த சோலையில் அப்பெண்ணோடு புகுந்து பூங்கொத்துக்களைக் கொய்தெடுத்து இருவருஞ் சூடிக்கொண்டு செல்வாராயினர்.

எடுத்து வைகனு நறுமலர் புனைகுவர் காவல ரிதுநோக்கி
யடுத்து நோக்கலுங் காண்கில ராங்கவர்க் கொருபொழு தகப்பட்டார்
பிடித்த சைத்தன ரிறுக்கின ரடித்தனர் செய்தனர் பிழையென்று
விடுத்து விட்டனர் பின்னரு மத்தொழில் விடுத்திலர் வினையோரார்.

(இ - ள்.) இப்படியே நாடோறும் மலர்கள் கொய்தெடுத்துச் சூடிக்கொள்வார்கள். நந்தவனக் காவலாளர் இதனையடுத்தடுத்துக் கவனிக்கவுங்கண்டாரிலர். அப்படியிருக்க அவர்கள் கண்ணுக்கு ஒருநாள் அகப்பட்டார்கள். அப்பொழுது அவர்களைப்பிடித்துக் கட்டினார்கள். அடித்தார்கள். தவறுசெய்து விட்டார்களென்று விட்டுவிட்டார்கள். (அவர்களிருவரும் இப்படிக் கஷ்டப்பட்டும்) மேலும் அம்மலர்த்திருடுதலை மேல்வினையுஞ் செயலையறியாதவர்கள் விடுத்தாரிலர்.

நறவ ருந்திய மயக்கமீக் கொளவொரு நள்ளிரு ளவணேகி
யிரவு பார்த்தணி மலர்பறித் தணிந்தன ரிருந்தன ரிருட்காலைப்
பெறவ ரும்பெருந் துயில்வரிற் காவலர் பிடிப்பரென் றுளமஞ்சி
யுறவ ருந்துயி லொழிதர வேண்டியொன் றியற்றுவா னுளமோர்ந்தார்.

(இ - ள்.) கட்குடித்த வெறியானது அதிகரிக்க, ஒருபேரிருளில் அவர்கள் அங்கடைந்து இரவுபார்த்து அழகிய மலர்களைக்கொய்து அணிந்துகொண்டிருந்தார்கள். இருட்காலத்தில் அடைதற்கரிய பெருநித்திரைவந்தால் காவற்காரர் பிடித்துக் கொள்வார்களென்று மனதிற்பயந்து, அடைகின்ற நித்திரைநீங்க விரும்பி ஒன்றுசெய்ய மனதிற்கருதினார்கள். எ - று; (எ)

குழைத்த மண்கொடு வேதிகை யமைத்தன ரதனடுக் குலக்கங்கை
தழைத்த வேணியெம் பரமனை யமைத்தன ராங்கவன் றனைப்போற்றி
விழைத்த சிந்தைய ரல்லராய்த் துயில்கெட வேண்டின ருச்சித்தார்
மழைத்த கூந்தலுந் தானுமெய் தழுவினர் துயின்றனர் மறப்புற்றார்.

(இ - ள்.) பிசைந்த மண்ணைக்கொண்டு மேடைபோட்டு, அதனடுவேசிறந்த கங்காநதி விளங்கிய சடையையுடைய எமது சிவபெருமானை யமைத்து, அதில் அவ்விறைவனைத்துதிசெய்து விரும்பிய மனமுடையவரல்லராகி, நித்திரைகெட விரும்பினவராகிப் பூசித்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தபின், குளிர்ச்சி தங்கிய கூந்தலையுடைய அப்பெண்ணும் தானுமாக மெய்ம்மறந்து நித்திரை செய்து விட்டார்கள். எ - று. (அ)

அற்றை நாளகத் தந்நக ரரசர்கோ னம்மலர்ப் பொழில்காண்பா
னுற்றெ ழுந்தனன் காவலர் முந்தின ரோடியப் பொழில்புக்கார்
சுற்றி நோக்கின ரிருவருந் தழீஇக்கொடு கிடந்தனர் துயில்வோரைப்
பற்றி வீக்கின ரப்பொழி லப்புறப் படப்பையி னகத்திட்டார்.

(இ - ள்.) அன்றையதினத்தில் அந்நகரத்தரசன் அம்மலர்ச்சோலையைப் பார்க்கும்படி வந்தடைந்தனன். காவற்காரர் முற்படவோடி அச்சோலையுட் புகுந்தார்கள். சுற்றிப்பார்த்தார்கள். இவ்விருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டிருந்தார்கள். அப்படித் தூங்கும் அவர்களைக் காவலாளர் பிடித்துக்கட்டினார்கள். அச்சோலைக்கு வெளியிலுள்ள ஆன்கொட்டிலினுள் விட்டார்கள்.

இனைய ரின்னண மிப்புறங் கிடந்தன ரீங்கிவ ரெதிரேகிப்
புனைபொ லன்கழன் மன்னவற் போற்றினர் பூம்பொழில் கொடுபுக்கார்
வனையு மாமணி நெடுமுடி யரசர்கோன் மலர்தொறுந் துதைந்தாடிக்
கனைசு ரும்பெறி நறும்பொழி லோக்கனு மன்னவர் செயல்கண்டான்.

(இ - ள்.) இவ்விருவரும் இவ்வகையாக இப்புறங்கிடந்தார்கள். இக்காவலாளர் அலங்கரிக்கின்ற பொன்னாலாகிய வீரகண்டாமணிதரித்த அரசனைத் துதித்து அழகிய சோலைக்குள்ளே அழைத்துக்கொண்டு புகுந்தார்கள். சிறந்த இரத்தினங்கள் பதித்த நெடிய கிரீடமணிந்த அப்பேரரசன், மலர்களிலெல்லாம் மூழ்கி விளையாடிப்பண்பாடும் வண்டுகள் பொருந்திய நல்லசோலையைக் காணவும், அவ்விருவர்செய்வதைக் கண்டனன். எ - று. (௧௦)

யாரி வட்புகுந் தருச்சனை யியற்றினோ ரியம்புதி ரெனநோக்கி
வார்த டம்பொழிற் காவலர்க் கேட்டுற வாங்கவர் மறுகுற்றார்
காரி ருட்படர் கங்குலி னியற்றினர் கண்டில மிதுவென்னா
வேரி யந்தொடை யரசனைத் தொழுதன ராங்கவன் வெகுளுற்றான்.

(இ - ள்.) இங்கேவந்து சிவார்ச்சனை புரிந்தோர் யாவர்? சொல்வீராக வென்று, பரந்து விசாலித்த சோலைக்காவலரைநோக்கிக்கேட்க, அவர்கள் மயங்கினார்கள். கரிய இருள்நிறைந்த இரவில் இதனையாரோ செய்தார்கள். இதனைக் கண்டிலோமெனக்கூறி, தேனொழுகின்ற அழகியமாலையணிந்த அரசனை வணங்கினார்கள். அதற்கவன் கோபித்தனன். எ - று. (௧௧)

பக்க நோக்கின னால்வரைப் பணித்தனன் பைம்பொழில் காப்போரை
யொக்க நீவிர்கொண் டொருகரங் காறுணித் தோட்டுதி ரெனலோடு
நெக்க சிந்தைய னமைச்சன்மற் றவ்வுழி நின்றன னதுகேளாப்
புக்கி றைஞ்சின னரசனை வாய்புதைத் தினையன புகல்கின்றான்.

(இ - ள்.) பக்கலிலிருந்த நால்வரைப் பார்த்துப் பின்வருமாறு கட்டளையிட்டான். இப்பசிய சோலையைக் காவல்செய்வோரை நீங்கள் ஒருசேரக்கொண்டுபோய் ஒருகையையும் காலையும் வெட்டி யோட்டி விடுங்களென்னச்சொல்லவும், உருகிய மனமுடையவனாகிய மந்திரி அங்கிருந்தவனாய் அதைக்கேட்டு அரசனை நெருங்கிப்பணிந்து வாய்பொத்திக்கொண்டு இத்தகைய சொற்களைச் சொல்லுகின்றான். எ - று. (௧௨)

தெய்வ மாப்பொழி லீங்கிவ னருச்சனை திருத்திய செயனோக்கின்
மெய்கொ டேவரோ வருந்தவத் தலைவரோ விண்படர்ந் தெழுவோரோ

வைய யாவரென் றறிந்தில மெம்பிரா னருச்சனைப் பயனோக்கி
னுய்யு மாறுனக் கல்லது பிறர்க்குறா தென்றெடுத் துரைசெய்தான்.

(இ - ள்.) தெய்வீகம் பொருந்திய பெரிய சோலையாகிய இவ்விடத்தில் சிவார்ச்சனை புரிந்த செய்கையைப் பார்க்கையில், உண்மைதங்கிய தேவர்களோ, அருந்தவத் தலைவர்களாகிய முனிவர்களோ, ஐயனே! யாரென்றும் அறியகில்லோம். எமது சிவபெருமான் அர்ச்சனைப்பயனை நோக்குமிடத்தில் உச்சீவிக்கும் வகை உமக்கேயன்றிப் பிறருக்கு உண்டாகாது என்றெடுத்துச் சொல்லினன்.

அருகு நின்றிரந் தமைச்சர்கோ னுரைத்தலுங் காறுணித் தகற்றாது
வருக வென்றலுங் கடிபொழிற் காவலர் வந்தடி வணங்குற்றார்
திருகு வெஞ்சினக் களிமத யானையான் செழுமலர்ப் பொழினீங்கிக்
குருகு றங்கிய தாமரைத்த டஞ்செறி கோநகர் குறுகுற்றான்.

(இ - ள்.) மந்திரத்தலைவன் (அரசனுக்கு) அருகே நின்று இப்படியாசித்துக்கூறவும், காலத்துணித்தோட்டாமல் வருகவென்று கூறவும், மணந்தங்கிய சோலைக்காவலாட்கள் வந்து பாதங்களைப் பணிந்தார்கள். திருகிய கொடியகோபத்தையுடைய மதமயக்கமைந்த யானையையுடைய அரசன் செழுமைதங்கிய மலர்ச்சோலையினின்றும் நீங்கி, அன்னங்கள் துயில்புரியும் தாமரைத்தடாகங்கள் நெருங்கிய சிறந்த நகரத்தை யடைந்தான் எ - று. (௧௪)

ஈர நாண்மலர்ப் பசும்பொழிற் காவலர் விசித்தன விடுத்திட்டு
வேரி வாணிபத் தவனொடு மாங்கவன் விசிப்பறுத் தயல்போனான்
மூரி யம்புயக் காவலர் சேறலுங் கண்டிலர் முனிவுற்றார்
காரி ருட்படு கங்குலுங் காத்தனர் கடிமலர்ப் பொழிற்காவை.

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய அன்றலர்ந்த மலர்கள் பொருந்திய பசிய சோலைக் காவலாட்கள் கட்டிய கட்டுகளை யவிழ்த்துவிடுத்துக் கள்வாணிபஞ் செய்பவனோடும் அக்கொடியோன் தன்கட்டுகளையும் அவிழ்த்துக்கொண்டு வெளியேபோயினன். வலிதங்கிய அழகிய தோளையுடைய காவற்காரர் அங்கு வரவும் அவ்விருவரையுங் காணாமற்கோபித்தார்கள். கருமைதங்கிய இருள் நிறைந்த அவ்விரவும் மணமலர்ச்சோலை பொருந்திய நந்தவனத்தைக் காத்திருந்தார்கள். எ - று. (௧௫)

கழிந்த நாள்சில வாங்கது காலையிற் கண்ணுகர் மயக்கத்தா
லழிந்த சிந்தைய னப்பொழி லவனொடு மடைந்தன னதுநோக்கி
யெழுந்த கோபவெங் கனலொடுங் காவலர் கடுகின ரிடைசென்றார் [ம்.
பொழிந்த செம்புன லொழுகுறப் புடைத்தனர் விசித்தனர் புயத்தோடு

(இ - ள்.) சிலதினங்கள் சென்றன. அப்பொழுது கட்குடித்த வெறியினாலே மதிமயங்கினவனாய், அச்சோலைக்கு அவனோடு மெய்தினன். காவலர் அதனைப்பார்த்துத் தமக்குண்டாகிய கொடிய கோபாக்கினியோடும் விரைந்து அவர்கள் பாலடைந்து உதிரநீர் சிந்தியொழுக அடித்துத் தோள்களைச்சேர்த்துக் கட்டினர். எ - று. (௧௬)

விடிய நோக்கினர் கோநகர் குறுகின ரிவரொடும் விறல்வேந்தர்,
முடிதொ டும்பதத் தரசனிற் கொண்டுபோய் விடுத்தலு முடிவேந்தன்,

கொடிது ணர்ந்திவண் மூக்கொடு முலைத்துணை கொய்கெனக் கொடி யோனை, யடிக ரந்துணித் திடுகெனப் பணித்தன னுங்கவர் கொடு போனார்.

(இ - ள்.) பொழுதுவிடியப் பார்த்தார்கள். சிறந்த அரசநகரத்தை யிவர்க ளோடும் அடைந்தார்கள். வெற்றிவாய்ந்த அரசர்கள் கிரீடந்தடவும் பாதத்தை யுடைய மன்னவன் மாளிகையிற் கொண்டுபோய் விடவும், கிரீடமணிந்த அர சன், இவர்கள் செய்தகுற்றத்தை யறிந்து இவள்மூக்குடன் இருஸ்தனங்களையும் அரிகவென்றும், இத்தீயோனைக் காலுங்கையும் வெட்டி விடுகவென்றுங் கட் டளையிட்டான். அக்காவலர் அப்படியே கொண்டு சென்றார்கள். எ - று. (கஎ)

முலைய ரிந்தனர் மூக்கரிந் தனர்பழ முதுமறைக் குலதோன்கைத்
தலைய ரிந்தனர் தாளரிந் திட்டனர் தம்முயி ரறநீத்தா
ரலைநெ டுங்கட னஞ்சமு தாக்கியோன் றிருவரு ளவற்காகக் [வான்.
கொலைகொள் வாளெயிற் றசுரரிற் றோன்றின னருச்சனைக் குறைதீர்

(இ - ள்.) அவளுடைய ஸ்தனங்களையரிந்தார்கள். மூக்கையரிந்தார்கள், பழ மைமுதிர்ந்த வேதமுணர்ந்த அந்தணர் மரபிலுதித்த அத்தீயோன் கையையறிந் தார்கள். காலையரிந்தார்கள். அவற்றால் தங்களுயிரை அறவேயொழிந்தார்கள். அலைகள் பொருந்திய நெடிய கடலிலுதித்த விஷத்தை அமுதாகச்செய்த சிவ பெருமான் திருவருள் அவனுக்குண்டாக, கொலைத்தொழில் பொருந்திய வாள் போன்ற பல்லையுடைய அசுரர்குலத்தில், தமது சிவார்ச்சனைக் குறைபாடு நீங் கும்படி யுதித்தனன். எ - று. (கஅ)

மண்ணெ டுத்துவா ணித்தலான் மதுநுக ரியற்கையால் வயிரத் திண்ணெ டும்புயத் தசுரன்வா ணசுர னெனும்பெயர் சிறப்புற்று, னண்ணன் மாவலிக் கொருதனிப் புதல்வனிற் றோன்றினனனை யாளும், வண்ண வால்வளைச் சுப்ரதீ பிகையென் றுதித்தனள் வனப் புற்றாள்.

(இ - ள்.) மண்ணையெடுத்துச் (சிவலிங்கமாக) அழகுசெய்ததாலும், கள்ளைக் குடிக்கும் இயற்கையாலும் வயிரம்போல வலிய நெடிய தோளையுடைய அசுர னாகி வாணசுரனெனும் பெயரால் சிறப்பெய்தினன். பெருமையமைந்த மாவ லிக்கு ஒரு ஒப்பற்ற புதல்வனாக உதித்தனன். அப்பெண்ணும் அழகிய வெள்ளிய வளையலணிந்த சுப்பிரதீபிகையென்று தோன்றி அழகெய்தினாள். எ - று. ()

ஆடு றுங்கொடிச் சோணித மாநக ரந்நகர்க் கருகாகி
யோடு மாநதி நருமதை யந்நதி மருங்கிருந் துமையாட்கு
மாடு வந்தரு ளெம்பிரா னருச்சனை வரன்முறை வகுத்தன்றே
னீடு வைகலொன் றாயிர மிலிங்கமந் நீணதித் துறைவீழ்ப்பான்.

(இ - ள்.) ஆடுகின்ற பெரிய துவசங்கள் கட்டிய சிறந்த சோணிதபுரி யொன்று. அச்சோணிதபுரிக்கருகே யோடுகின்ற பெரிய நருமதை நதியொன்று. அந்நருமதை நதிக்கருகிலிருந்து, உமாதேவியாரைப் பக்கலிலமர்த்தி யருளிய எமது சிவபெருமானுக்கு வரன்முறைப்படி அர்ச்சனைசெய்து அவ்வாணன் நெடிய பகலொன்றிற்கு ஆயிரம் சிவலிங்கங்களை யர்ச்சித்து அந்நெடிய நதித் துறையில் விடுப்பான். எ - று. (உ0)

வைக லிப்படி யாயிர மிலிங்கமு மருச்சனை வருத்தன்பு
செய்ய நோக்கின னன்னவற் கெம்பிரான் றிருவரு ளிரங்குற்று
வெய்து மால்விடைக் காட்சிதந் தருளினன் விண்ணவர் பெருமானைக்
கைக ளாயிரங் குவித்துநின் றிறைஞ்சினன் கண்கணீர் கலுழ்கின்றான்.

(இ - ள்.) நாடோறும் இவ்வகையாக ஆயிரஞ் சிவலிங்கங்களையும் அர்ச்சனை புரிந்து அன்புசெய்ய, எமது சிவபெருமான் திருவருணோக்கஞ்செய்து திருவருளிரங்கிப் பெரிய இடபவாகனத்தின்மீது தரிசனந் தந்தருளினர். தேவநாயகராகிய சிவபெருமானை (வாணாசுரன்) ஆயிரங் கைகளுங் கூப்பினின்று பணிந்து இருவிழிகளிலும் ஆநந்தக்கண்ணீர் சொரிகின்றான். எ - று. (உக)

மூவ ராயினை தனிமுத லாயினை மூவிரு சமயத்துத்
தேவ ராயினை பூதமைந் தாயினை நின்றிருச் செயனோக்கின்
யாவ ராயினு மேத்துதற் கெளியையோ வரியைநீ யெம்மானே
பாவ காரியேன் கட்புலப் படுவதற் கெளிதெனப் படர்ந்தாயே.

(இ - ள்.) திரிமூர்த்திகளாக விளங்குகின்றீர்! ஒப்பற்ற தலைவராயினீர்! சட்சமயத் தேவர்களாயினீர்! பஞ்சபூதங்களாயினீர்! தேவரீர் திருச்செயலைப் பார்த்தால், எவர்களானாலும் துதிசெய்தற்கெளியரோ? தேவரீர் அரியீர்! எமது பெருமானே! பாவகாரியங்களைச் செய்வோனாகிய எனது கட்புலனிற்காண்டற்கு எளிதாக வெழுந்தருளினீரே. எ - று. (உஉ)

நீல மேனியன் முதலினோர் கடைதரு நெடுங்கட லகத்தோங்கு
மால மாரமு தாக்கியுண் டாங்கவர்க் காருயிர் புரந்தாய்பொற்
பால லோசன பாதக முற்புரி பழவினை யொழித்தம்பொற்
கோல மால்விடைக் காட்சிதந் தருளினை யெத்தவங் குறித்தேனே.

(இ - ள்.) நீலமேனியுடைய திருமால் முதலானோர் கடைந்த பெரிய திருப்பாற்கடலிற் றோன்றிய விஷத்தைப்பொருந்திய அமுதமாகச்செய்து ஆபோசனஞ்செய்து அப்பொழுதே அவர்கட்கு அரியவுயிரைக் காத்தீர்! அழகிய நெற்றிக் கண்ணையுடையவரே! முன்னே செய்த பாவமாகிய பழவினையை யகற்றி அழகிய பொன்மயமாகிய பெரிய இடபாரூடராய்க் காட்சிதந்தருளினீர்! யாது தவஞ் செய்தேன்? எ - று. (உங)

ஆதி யாயினை யந்தமு மாயினை யன்பின ரகத்தோங்குஞ்
சோதி யாயினை மாதவத் துறையுளோர் வேள்வியந் துறைதோறும்
பேதி யாதுநின் றவியுணுங் கடவுளாய்ப் பேதபே தகமாகிப்
பாதி யாகியொன் றாயினை நின்செயல் பகர்வதற் கெளிதன்றே.

(இ - ள்.) சர்வ ஜகத்திற்கும் முதலாயினீர்! இறுதியுமாயினீர்! அடியார்களுள்ளத்திலெழுஞ் சோதியாயினீர்! பெருந்தவத்துறையி லுள்ளவர்கள் அழகிய வேள்வித் துறைகளிலெல்லாம் பேதமெய்தாமலிருந்து அவிபெற்றருந்துங் கடவுளாய்ப் பேதாபேதங்களாய்ப் பாதியாகி யொன்றாயினீர்! தேவரீர் செயலை யெடுத்துச் சொல்லுதற் கெளிதல்லவே. எ - று. (உச)

கட்பு லப்படி யாவையுங் கட்புலங் கதுவுறு துணர்ந்தோங்கு
முட்பு லப்படி யாவையு நின்னல துண்டுகொ லுடையோனே

விட்பு லத்தவர் யாவர்க்கு மெட்டுரு விமலனே வினையேற்கு
நட்பு லப்புறு தளித்தெதி ரெழுந்தனை நல்வினைப் பயனன்றே.

(இ - ள்.) கட்புலனுக்குத் தோற்றும் யாவையும், கட்புலனுக்ககப்படாது அறிந்தோங்கிய அறிவுக்குத் தோற்றும் யாவையும் தேவரீரை யன்றியுண்டோ? என்னை யடிமையாக வுடையவரே! தேவலோகத்தில் வசிப்போர்களெல்லாருக்கும் எட்டப்படாத மலரகிதரே! அடியேனுக்கு அன்பு குன்றாது காட்சிதந்தீர்! இது பூர்வம் யான்செய்த புண்ணியப் பலனல்லவா? எ - று. (உரு)

என்ற டிக்கடி வீழ்ந்துவீழ்ந் திறைஞ்சின னீங்கிவன் செயனோக்கிக், கொன்றை வார்சடை யெம்பிரான் றிருவருள் குழைந்தறக் குளிர்ப்புற்று, னின்று வேண்டுவ தென்னைகொ லிங்கிலே நிகழ்த்தென நிரைதோட்டு, மன்ற லந்தொடைத் திண்புயத் தசுரர்கோ னினையன வகுக்கின்றான்.

(இ - ள்.) என்றடிக்கடிப் பலமுறை விழுந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தனன். இவ்வாணன் செய்கையைப் பார்த்து, கொன்றைமாலை சூடிய நெடியசடையையுடைய எமது சிவபெருமான் திருவருள்கனிந்து மிகக்குளிர்ச்சியெய்தி, இப்பொழுது வேண்டியபது யாது? இங்கே சொல்வாயாகவென்று வினவ, வரிசையாகிய இதழ்களையுடைய மணமமைந்த அழகிய மலர்மாலையணிந்த வலியதோளையுடைய வாணசுரன் இவ்வாக்கியங்களைச்சொல்லி (வரங்) கேட்கின்றனன். எ - று. (உசு)

கலிவிருத்தம்.

குணிப்பரும் பெருநிதிக் குவையுந் தெவ்வராற்
கணிப்பற நிவந்தெழு கனலிக் கோட்டையுந்
தணிப்பரும் பெருவலித் தகையுந் தெய்வமா
மணிப்படு வளங்களும் வழங்க வேண்டுமால்.

(இ - ள்.) அளவிடற்கரிய பெருஞ்செல்வக் குவியலும், பகைஞர்களாலே கணித்தற்கரிதாய் உயர்ந்தெழுந்த அக்கினிக்கோட்டையும், அடக்குதற்கரிய பெரிய வல்லபத்தகைமையும், தெய்வீகம்பொருந்திய சிறந்த சிந்தாமணிமுதலிய வளப்பங்களுந் தந்தருளவேண்டும். எ - று. (உஎ)

வெங்களத் தொருவரால் வெலப்ப டாமையுந்
திங்களங் கண்ணியோய் தெறப்ப டாமையு
மங்கையர் செல்வமு மைந்த ரீட்டமு
மிங்கெனக் கருள்வதை யினிது வேண்டினேன்.

(இ - ள்.) அழகிய சந்திரனைச் சிரோமாலையாக வணிந்த சிவபெருமானே! அடியேன் வெவ்விய யுத்தகளத்தில் ஒருவரால் வெல்லப்படாமையும், கொல்லப்படாமையும் மனைவிமார் செல்வமும் புத்திரத்தொகுதியும், இப்பொழுது எனக்கு அருள்புரிவதை இனிதாக விரும்பினேன். எ - று. (உஅ)

விண்ணகத் தியங்கியக் கயிலை வெற்பின்வந்
தண்ணனின் சேவடி யன்பி னேத்துவா
னெண்ணினே னீங்கிவை முதல யாவையுங்
கண்ணுதல்வ ழுங்கென வழங்குங் காலையில்.

(இ - ள்.) அண்ணலே! ஆகாயவழியே சஞ்சரித்து, அந்தத் திருக்கைலாய கிரியில் வந்து தேவரீருடைய சிவந்த பாதங்களை அன்போடு துதிசெய்யவுங் கருதினேன். இவைமுதலிய எல்லாவரங்களையும், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானே! தந்தருள்கவெனக் கேட்கும்போது எ - று. (உகூ)

அளித்தன னவ்வர மனைத்து மாடுதேன்
றுளிப்பசுந் தாரினன் றுயரம் போக்கினு
னொளித்திரைக் கருங்கட னேமி வேந்தர்தங்
களிப்பற வந்தவன் கழற்கு ளாயினார்.

(இ - ள்.) சிவபெருமான் அவ்வரங்களையெல்லாம் அளித்தருளினர். பக்கங்களில் தேன் றுளிக்கும் பசிய மலர்மாலையணிந்த வாணாசுரன் தனது துயரத்தை யகற்றினான். நெளிகின்ற அலைகளையுடைய கரிய கடல்சூழ்ந்த உலகிலுள்ள ஆக்கினாசக்கிர மேந்திய அரசர்கள், தங்கள் சந்தோஷ மகலவந்து அவ்வாணன் பாதத்தி லடங்கினார்கள். எ - று. (௩0)

ஒருதனிக் கவிகையா னுலகங் காத்தன
னிருநிலத் தரசரை யிரியல் போக்கினன்
பருமணிப் பொலன்கழல் பருமத் தோளினன்
கருமிடற் றெந்தைபாற் கருத்து நீங்கலான்.

(இ - ள்.) ஒப்பற்ற ஒரே குடைநிழலில் உலகத்தைப் பாதுகாத்தான். பெரிய பூமியிலுள்ள மன்னர்களை ஓடச்செய்தான். பருத்த நவமணிகளாலாகிய அழகிய வீரகண்டாமணியையும் பூரித்த தோளையுமுடைய வாணன், கரியகண்டத்தையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானிடத்தில் மனதை நீங்காதவனாயிருந்தான். எ - று. (௩க)

இப்பரி சின்னர சியற்றுங் காலையிற்
செப்பிள முகிண்முலைத் தேவி பாகனை
மைப்படு களத்தனை வணக்கம் போக்குவா
னொப்பருங் கயிலையி னுயர்ந்து போயினான்.

(இ - ள்.) இவ்வகையாக அரசு நடாத்துங் காலத்தில், செப்புப்போல அரும்பிய இளமைதங்கிய தனங்களையுடைய பார்வதி பாகரும் விஷம்பொருந்திய கண்டத்தையுடையவருமாகிய சிவபெருமானை வணங்குங் காரணமாக, சமானரகிதமாகிய திருக்கைலாயமலைக்கு ஆகாயவீதியினாற் சென்று சேர்ந்தனன். எ - று. (௩உ)

போயினன் கயிலையங் கிரியிற் புக்கன
னாயிரந் திருமுகக் கங்கை யாளுடை
நாயகன் றிருநட நடப்ப வாயிரஞ்
சாயையங் தடக்கையான் முழவு தாக்கினான்.

(இ - ள்.) அழகிய திருக்கைலாயகிரியிற் போய்ப்புகுந்தனன். அப்பொழுது ஆயிரந் திருமுகங்களையுடைய கங்காதேவியின் கணவராகிய சிவபெருமான் திருநடனம் நிகழ்ந்து கொண்டிருப்ப, வாணாசுரன் ஆயிரங் கிளைகள்போன்ற அழகிய பரந்த ஆயிரங்கைகளால் குடமுழவு வாசித்தனன். எ - று. (௩௩)

முழக்கிய முழவினான் முனைக்கொழும்பிறை
யுழப்படு வேணியா னுவகை கூர்ந்தனன்
விழைப்பவேட் டனவெலாம் விளம்புவா யென்றான்
கழற்படு காலினான் கழறன் மேயினான்,

(இ - ள்.) வாணாசுரன் முழக்கிய குடமுழவினாலே, கூர்மைவாய்ந்த கொழுவிய பிறைச்சந்திரன் தவழ்கின்ற சடையையுடைய சிவபெருமான் சந்தோஷமிகுந்தனர். வாணா! நீயடைய விரும்பிய வரங்களை யெல்லாஞ் சொல்லுகவென்றனர். வீரக்கழலணிந்த காலையுடையவாணன் சொல்வானாயினன். எ - று. ()

விண்ணவ நின்னடி விரும்பி மேவுநாள்
வண்ணவான் கயிலையின் வாயில் காப்பவ
ரெண்ணருந் துயர்விளைத் திடுக்கண் செய்வரா
லண்ணலே யானதற் கறைதல் கேட்டியால்.

(இ - ள்.) கடவுளே! தேவரீர் திருவடியை விரும்பி அடியேன் வரும்போது, அழகிய சிறந்த கைலாயத்தின் திருவாயிற் காவல்செய்வோர், எண்ணுதற்கரிய துன்பஞ்செய்து வருத்தப்படுத்துகின்றார்கள். ஆதலால், அண்ணலே! அதற்காக யான் சொல்வதைக் கேட்டருளவேண்டும். எ - று. (௯௫)

மொய்குழன் மடந்தையு முருகச் செல்வனுங்
கைகளோ ரைந்துடைக் களிறு நந்தியு
மையநின் னுடனடைந் தளியன் வாயிலி
னெய்திவந் திருப்பதற் கெளியன் வேண்டினேன்.

(இ - ள்.) ஐயனே! நெருங்கிய கூந்தலையுடைய உமாதேவியும், முருகக்கடவுளாகிய செல்வக்குமாரனும், ஐந்து திருக்கரங்களையுடைய யானைமுகம் பொருந்திய கணபதியும், நந்திதேவரும், தேவரீரோடும் எழுந்தருளி அடியேன் திருவாயிலிலெய்தி வீற்றிருப்பதற்கு அடியேன் விரும்பினேன். எ - று. (௯௬)

அன்னது புரிதியே லைய நின்னிரு
பொன்னடித் தாமரை வைகல் போற்றுவே
னென்னுடை யருச்சனைக் கினிது மாமினி
மன்னுநின் கணத்தொடும் வருதியா லென்றான்.

(இ - ள்.) ஐயனே! அதனைத் தேவரீர் செய்தருளுவீராகில், தேவரீரது உபயபாதங்களாகிய பொற்றாமரை மலர்களைத் தினந்தோறுந் துதிப்பேன். என்னுடைய சிவபூசைக்கு இனியதுமாகும். ஆதலால், இனி, தேவரீர் சிவகணங்களோடும் வந்தருள்வீராக வென்றனன். எ - று. (௯௭)

அவனஃ துரைத்தலு மலங்கற் கொன்றைசூழ்
கவர்சடைப் புங்கவன் கணத்தொ டேகியச்
சிவகணத் தவர்மலை மடந்தை செல்வரோ
டிவர்மணி வாயில்வா யிருக்கப் போற்றினான்.

(இ-ள்.) அவ்வாணன், அதனைச் சொல்லவும், கொன்றை மலர்மாலை சுற்றிய பிளவுபட்ட சடையையுடைய சிவபெருமான் கணங்களோடு வாணன் மாளிகைக்கெழுந்தருளி, அந்தச் சிவகணத்தவர்களோடும், மலையரச புத்திரியாகிய பார்வதிதேவியாரோடும், கணபதி ஸ்கந்தரோடும், பிரகாசிக்கின்ற இரத்தினங்களிழைத்த வாயிலில் வீற்றிருக்க, வாணன் அவர்களைத் துதித்திருந்தான். எ-று.

விடுசினைக் கற்பகத் தருவும் விண்ணகத்
தடுதிறற் கோமக னரசுங் கொண்டன
னெடுநில முதலமூன் றுலகு நித்திலங்
கொடுவடிம் பிழைத்ததன் குடைக்கு ளாக்கினான்.

(இ-ள்.) கிளைகள்விட்ட கற்பக விருட்சத்தையும், தேவலோகத்திலுள்ள கொல்லத்தக்க வல்லபம்பொருந்திய தேவேந்திரனுடைய அரசுரிமையுங் கைக்கொண்டனன். பெரிய பூலோகமுதலிய திரிலோகங்களையும் தனது முத்துக்களாலாகிய விளிம்பு ஓரஞ்செய்யப்பற்ற வெண்கொற்றக் குடையின் நிழலுக்குட்படுத்தினன். எ-று. (௩௯)

வினைமுகத் தடுசமம் விளைக்கும் வேட்கையாற்
றினவுறத் தேய்ப்புறுந் திணிபொற் றோளினான்
கனைகட னெடுநிலஞ் சுமக்குங் காவன்மாப்
புனைகளி றெட்டொடும் பொருது போக்கினான்.

(இ-ள்.) தொழின் முகத்தாற் கொல்லத்தக்க போர்புரியும் விருப்பத்தோடு தினவு உண்டாகத் தேய்த்துக்கொள்ளும் வலிய பொன்போன்ற தோளையுடைய வாணாசுரன், சத்திக்கின்ற கடல்சூழ்ந்த நெடிய வுலகத்தைத் தாங்குங் காவல்கொண்ட அழகிய பெரிய அஷ்டகஜங்களோடும் போர்செய்து தோற்கச்செய்தனன். எ-று. (௪௦)

மேருவே முதலிய வெற்பி யாவையும்
வேரொடுங் கிளைத்தவை மீக்கொண் மொய்ம்பினான்
போரடு குலிசியே முதல புங்கவர்த்
தாரணி முருக்கிய தறுக ணாண்மையான்.

(இ-ள்.) மேருபர்வத முதலிய பர்வதங்களை யெல்லாம் வேரோடுகெல்லி மேலேகொள்ளத்தக்க வலிமையுடையவனும், போர்த்தொழிலிலேகொல்லத்தக்க வச்சிராயுதமேந்திய இந்திராதி தேவர்களையும் உலகினரையும் துன்புசெய்த அஞ்சாமைபொருந்திய ஆண் தன்மையுடையவனுமாயினன். எ-று. (௪௧)

இந்திரன் முதலினோ ரிடுக்க ணாற்றலர்
பைந்துள வலங்கலாற் பணிந்து போற்றினா
ரெந்தைநீ யிரங்கலை யென்னின் யாமுயி
ருய்ந்தில மெனப்பல வுரைத்து வாழ்த்தினார்.

(இ-ள்.) இந்திராதி தேவர்கள் இவன்புரியுந் துன்பைச் சகியாதவர்களாய், பசிய துளசிமாலையணிந்த திருமாலை வணங்கித் துதிசெய்தார்கள். எந்தையே! தேவரீர் திருவுளமிரங்காதிருந்தீரென்றால், யாங்கள் உயிர் பிழைத்திலோமென்று பலவாறுகூறி வாழ்த்தெடுத்தார்கள். எ-று. (௪௨)

சேன்முகப் பரவைநீ ருலகுஞ் சேயனு
நான்முகத் தவனரு ளுயிரு நாளொடும்
வேன்முகப் படுவது சரதம் விண்ணவர்
நூன்முகத் தறமெலா நொடிப்பி னேயுமால்.

(இ - ள்.) கெண்டை மீன்கள் வசிக்குங் கடனீராற் சூழ்ப்பட்ட பூலோகமும் தேவரீர் குமாரராகிய நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவனாற் படைக்கப்பட்ட உயிர்களும் நாளடைவில் அம்பின்வாயில் அகப்பட்டு இறப்பது சத்தியம். தேவர்களும் சாஸ்திரங்களிற் கூறப்பட்ட தருமங்கள் யாவும் இமைப்பொழுதில் இல்லையாம். எ - று. (௪௩)

என்பன பலவெடுத் திரந்து கூறலு
மின்படு திகிரியான் வெகுளி மீக்கொளாத்
துன்பறுத் தவனுயிர் தொலைப்பன் யானென்று
வன்பிடர்க் கலுழன்மேல் வருதன் மேயினான்.

(இ - ள்.) என்பனவாகிய இவைபோன்ற பலசொற்களை யெடுத்து யாசித்துக்கூறவும், மின்னல்வீசும் சக்கிராயுதமேந்திய திருமால் கோபமிகுதியாகக் கொண்டு, உங்கள் துன்பத்தை யகற்றி அவ்வாணாசுரனுயிரை யகற்றுவேனென்று, வலிய கருடனுடைய பிடரின்மேற்கொண்டு திருமால் அங்கே எழுந்தருள்வதாயினர். எ - று. (௪௪)

வெண்ணிறக் களிறுகைத் தமரர் வேந்தனுங்
கண்ணனுக் கருகுறக் கடவு ளோரெலாந்
துண்ணெனு மனத்தராய் மருங்கு சூழ்வர
வண்ணல்வா ளசுரனோ டமர்செய் தாற்றினான்.

(இ - ள்.) தேவராசனாகிய இந்திரனும், வெண்மை நிறந்தங்கிய ஐராவதமென்னும் யானையூர்ந்து திருமாலுக்கருகேவர, தேவர்கள் யாவரும் துணுக்குற்ற மனமுடையவராய்ப் பக்கலிற் சூழ்ந்துவர, பெருமை தங்கிய திருமால் வாட்படையேந்திய வாணாசுரனோடு போர்ச்செயல் மேற்கொண்டான். எ - று. ()

ஆற்றிய வமரகத் தாற்ற லாரென
நாற்றிசை பிழைத்தனர் நடந்த வானவர்
போற்றிய நறுமலர்ப் புனத்து ழாயினான்
வேற்றுரு வெடுத்தம ரஞ்சி மீண்டனன்.

(இ - ள்.) நடத்திய யுத்தத்திலே ஆற்றமுடியாதவர்களாகி, தேவர்கள் நாற்றிசைகளிலும் ஓடிப்பிழைத்தார்கள். துதிக்கத்தக்க நல்லமலரோடுகூடிய வயலிலுள்ள துளசிமாலைதரித்த திருமால், வேற்றுவடிவந்தாங்கிப் போருக்குப் பயந்து திரும்பினார். எ - று. (௪௬)

உடற்றிய பேரமர்க் குடைந்து பன்முறை
கடப்பருந் திறலினான் கனலப் போயினு
னடற்பெறுங் குலிசமீண் டபயம் புக்கனன்
விடத்தினுங் கொடியரை யாவர் வெல்வரே.

(இ - ள்.) துன்புசெய்த பெரிய போருக்குத்தோற்று, கடத்தற்கரிய வல்லமையுடைய திருமால் தீப்போலெரிக்கப்பட்டுப் பலமுறை திரும்பிப்போயினர். வலிமைபெற்ற வச்சிராயுத மேந்திய இந்திரன் ஆற்றுது திரும்பி அபயம்புகுந்தனன். ஆலாலத்தினுந் தீயோராகிய அசுரரைவெல்ல வல்லவர் யாவர்? எ - று.

வெஞ்சம ருளுற்றினோர் விளிந்து ளாரென
மஞ்சிவர் தோளினான் றினவு மாற்றுவா
னஞ்சணி கறைமிடற் றிறையை நண்ணிரு
னஞ்சல னிணையடின் றறைகு வானரோ.

(இ - ள்.) கொடும்போர் புரிந்தவர்கள் இறந்தார்போலாக, வலிமைபொருந்திய தோளையுடைய வாணசுரன் தனது தோட்டினவுதீர, விஷத்தைப் பொருந்திய நீலகண்டத்தையுடைய சிவபெருமானை யடைந்து முன்னின்று சிறிதும் அஞ்சாதவனாகி இப்படிப்பட்ட சொற்களைச் சொல்வானாயினன். எ-று.

அடுகளத் தென்னொடு மமர்க்குத் தோன்றினார்
படுகதிர்ப் பனியெனப் பரந்து பாறினார்
நெடுநிலந் தாங்கிய நெடுநல் யானையுந்
தொடுமதம் புலர்ந்துவாய் பிளிறித் தூங்கின.

(இ - ள்.) கொல்லத்தக்க யுத்தகளத்தில் என்னுடன் போர்புரிதற்குத் தோன்றிய தேவர்கள் சூரியனுக்கு முற்பட்ட பனியைப்போலப் பரவியோடிப் போனார்கள். பெரிய நிலவுலகத்தைத் தாங்கிய பெரிய நல்லதிக்கு யானைகளும் ஊறறெடுக்கும் மதப்பெருக்குநீங்கி வாயாற் பிளிறிக்கொண்டு வாடிப்போயின.

ஏழெனப் படுகிரி யெடுத்த தோள்கொடு
பூழிபட் டுதிர்ந்தன புலவர் யாவரும்
பாழிநீர்ப் பெரும்புறக் கடலுட் பாந்தினார்
காழ்வரைக் குலங்களைக் கரத்தி னீற்றினேன்.

(இ - ள்.) ஏழென்று தொகைசொல்லப்படும் மலைகள், உயர்ந்த எனது தோளினால் புழுதியாகிப் பொடிபட்டுதிர்ந்தன. தேவர்களெல்லாரும் பரந்த நீரையுடைய பெரும்புறக் கடலில் மறைந்தார்கள். வலியமலைத் தொகுதிகளைக் கையினாலே பொடிப்படுத்தினேன். எ - று. (க0)

பொன்னுல களித்தருள் புரந்த ரப்பெயர்
முன்னவன் முப்பதிற் றிரட்டி மொய்யமர்க்
கந்நிலை யுடைந்துமீண் டபயம் புக்கனன்
றென்மலர்க் கிழவனே டமர்க்குத் தொட்டிலேன்.

(இ - ள்.) பொன்னுலகத்தைக் காத்தருளும் இந்திரனென்றும் பெயரையுடைய தலைவன், முப்பத்திரண்டுமுறை நெருங்கிய போரில், அப்போர்புரியுந் தன்மையற்றுத்திரும்பி என்னையே சரணமடைந்தனன். பழமையாகிய தாமரை மலரி லெழுந்தருளிய பிரமதேவனேடும் போருக்குத் தொடங்கினேனில்லை. ()

என்னொடும் போரம ரெடுத்து ளாரிலர்
மன்னெடுந் திரள்புயத் தினவு மாற்றுவா
னின்னொடு முடற்றுவா னினைந்து ளேனதற்
குன்னுடைத் திருவரு ளுரைத்தி யாலென்றான்.

(இ - ள்.) என்னுடன் பெரும்போரெடுத்தவர்கள் ஒருவருமில்லை. நிலைபெற்ற பெரிய தோள்களின் தினவை நீக்கும்படி, தேவரீரோடு போர்செய்யக் கருதியுள்ளேன். அதற்காகத் தேவரீருடைய திருவருட் சம்மதம் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வாணன் கூறினன். எ - று. (௫௨)

வாளெயிற் றசுரனீ துரைத்த மாற்றத்தான்
மூளிருங் கறுவொடு முறுவல் பூத்தன
னாளுடை நாயக னவனை நோக்கிநின்
கோளம ரடக்குநாள் குறுகிற் றென்றனன்.

(இ - ள்.) வாள்போன்ற பற்களையுடைய வாணாசுரன் இப்படிச்சொல்லிய சொற்களால், உண்டாகிய பெரிய கோபத்தோடு புன்னகையரும்பினன். யாவரை அடிமையாகவுடைய சிவபெருமான், அவ்வாணனைப்பார்த்து, உன்னுடைய வலிய யுத்தத்தை யடக்குகின்றகாலம் சமீபித்ததென்று கூறினர். எ - று. (௫௩)

ஈசனீ துரைத்தலு மெறுழ்வ லிப்புயக்
காய்சினத் தவுணனுங் கனன்று பொங்கினான்
மூசுவெஞ் செருவிலென் முரண டக்குவா
னேசறும் பெருவலி யெவர்க்குண் டாமென்றான்.

(இ - ள்.) சிவபெருமான் இதனைத் திருவாய் மலர்ந்தருளவும், பெருவலி வாய்ந்த தோளையுங் கொல்லத்தக்க கோபத்தையுமுடைய வாணாசுரனுங் கோபமெய்திப் பொங்கி யெழுந்தான். நெருங்கிய கொடியபோரில் என்வல்லபத்தை யடக்க, குற்றமற்ற பெருவல்லபம் யாவர்க்குளதாகுமென வினாவினான். எ - று.

யாமுடை யருச்சனைக் கெளிய னாகியங்
கோமுடி புனைந்தெது குலத்து வைகினான்
றாமரை யுந்தியந் தலத்து மன்னுயிர்ப்
பாமரு முலகெலாம் பயந்த பண்ணவன்.

(இ - ள்.) தாமரையாகிய அழகிய உந்தித்தலத்திலே, நிலைபெற்ற உயிர்களையும் பரவிய உலகமுழுவதையும் பெற்ற திருமால், எம்முடைய சிவார்ச்சனைக்கு எளிய மனமுடையவனாகி அழகிய சிறந்த கிரீடந்தரித்து எதுகுலத்தவதரித்து (கண்ணனென்னும் பெயரோடு) வசிக்கின்றனன். எ - று. (௫௫)

என்றலு மசுரர்கோ னெயிறு தீயுக
மென்றன னகைநிலா விளங்க நக்கன
னன்றமர்க் காற்றல னாகி யஞ்சியத்
துன்றிரும் பாற்கடற் றுஞ்சினா னென்றான்.

(இ - ள்.) என்று சொல்லியவுடனே அசுரர் தலைவனாகிய வாணன், பற்களை நெருப்புப்பொறிசிந்தக் கடித்து, பற்களாலாகிய சந்திரிகைவீசச் சிரித்தனன். அப்பொழுது போருக்குச் சகியாதவனாகிப்பயந்து அந்தப்பெரிய திருப்பாற்கடலில் (தேவரீர்கூறிய திருமால்) தூங்கிக்கொண்டுள்ளான். எ - று. (௫௬)

மூன்றுபத் தாகிய முறையி னீண்டமர்க்
கேன்றுவந் தெதிர்த்தன னென்னைக் காண்டொறு
நான்றமர் முகத்தொடு நடந்து போயினான்
கான்றவெஞ் சிறைப்பெருங் கலுழப் புள்ளொடும்.

(இ - ள்.) நெருங்கிய போர்செய்தற்கு மனமியைந்து முப்பது முறைகள் வந்தெதிர்த்தவனாகி (ஒவ்வொரு முறையிலும்) என்னைப்பார்க்குந்தோறும், யுத்தத்தில் கவிழ்ந்த முகத்தோடும், (அவன்வாகனமாகிய) வெவ்விய சிறகையுடைய பெரிய கருடபக்ஷியோடும் பிற்பட்டு நடந்துபோய்விட்டான். எ - று. (௫௭)

ஆயிரம் பெயருடை யமல னாற்றல
னீயது நினைகலை நிமல வென்றனன்
சேயரித் தறுகணா னினைய செப்பலும்
பாய்விடைப் பண்ணவன் பகர்தன் மேயினான்.

(இ - ள்.) ஆயிரந் திருநாமங்களையுடைய அத்திருமால் என்னோடு போர் புரியச் சக்தியில்லாதவன். மலரகிதராகிய சிவபெருமானே! தேவரீர் அதனைத் திருவுளங்கொள்ள வேணடாமென்று செவ்வரிபரந்தவிழியையும் அஞ்சாமையையுமுடைய வாணாசுரன் இதனைச்சொல்லவும், பாய்ந்துசெல்லும் இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமான் திருவாய் மலர்வதாயினர். எ - று. (௫௮)

முன்னைநா ணீயடு முனையிற் றோற்றபி
னின்னம ரொடுக்குவா னினைந்து ளானுப
மன்னிய னிடத்தருள் வைதி கம்பெறு
வென்னிலை யெறுழ்வலி மேவினா னென்றான்.

(இ - ள்.) பூர்வத்தில் நீ போர்புரிந்த யுத்தமுனையில் அவன் தோல்வியெய்திய பிறகு, உன் போர்வல்லபத்தை யொடுக்கக்கருதி, உபமந்யுமுனிவரிடத்தில் வைதிகதீக்கைபெற்று (சிவார்ச்சனைசெய்த விசேஷத்தால்) வெல்லத்தக்க பெருவல்லபம் அடைந்துள்ளானென்று சிவபெருமான் திருவாய் மலர்ந்தனர். எ-று.

ஆங்கவ னின்செருக் கடக்குவா னெனப்
பூங்கழற் கொன்றையான் புகலக் கேட்டனன்
வீங்கிய புயததினா னவுணன் மெல்லியல்
பாங்கவ தெந்தநாட் பகர்செய் வாயென்றான்.

(இ - ள்.) அக்கண்ணன் உன்னிறுமாப்பை யடக்கி விடுவானென்று, அழகிய வீரகண்டாமணியும் கொன்றைமாலையுமணிந்த சிவபெருமான் கூறக்கேட்டனன். பூரித்ததோளையுடைய வாணாசுரன், உமாதேவிபாகரே! அந்நிகழ்ச்சி எக்காலத்தி லுளதாகும். திருவாய் மலர்ந்தருள்கவென்றனன். எ - று. (௬0)

ஆணவச் செருக்கினா லமைத்த நின்னுடை
நீணகர்க் கொடுமுடி நிறுத்து மோர்கொடி
மாணழிந் தொடியுநாண் மாத ராயநின்
பூண்முலைக் கோர்பழி பொருந்து மென்றனன்.

(இ - ள்.) ஆணவச் செருக்கோடு பொருந்திய உன்னுடைய நெடிய நகரத்தின் உச்சியிற்கட்டி நிறுத்திய ஒருதுவசமானது மாட்சிமைநீங்கி யொடிபடும். அந்தக்காலத்தில் அழகுபொருந்திய ஆபரணமணிந்த குசங்களையுடைய உன் குமாரத்திக்கு ஒரு பழிச்சொல் உளதாகுமென்று தெரிவித்தருளினர், எ - று.

அற்றைநா ணின்னொடு மாயிரம் பெயர்க்
கொற்றவ னின்னமர் குறிக்கொள் வானெனச்
சொற்றன னெம்பிரா னசுரன் றொல்கொடி
யிற்றிடு நாள்குறித் திருந்த வெல்லையின்.

(இ - ள்.) அந்தக்காலத்தில், ஆயிரம்பெயர் வாய்ந்த திருமால் உன்னுடன் இனிய போர்செய்தலை மேற்கொள்வானென்று எமது சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினர். வாணாசுரன் பழமையாகிய துவசம் ஒடிபடுந்தினத்தைக் கருதிக்கொண் டிருந்தகாலத்தில். எ - று. (௬௨)

சுழித்தெறி காலொடுந் துவச மிற்றிற
விழித்தன னடுதிற லசுரர் வேந்தனும்
வழித்திறத் தொழுகிய மகட்கு வந்தெழும்
பழித்திற மிதுவெனப் பகர்செய் வாமரோ.

(இ - ள்.) சுழன்றுவீசிய காற்றினால் அத்துவசம் முறிபட்டொடிய, கொல்லத்தக்க வல்லபமுடைய அசுரேந்திரனாகிய வாணாசுரனும் மயங்கினன். நல்லொழுக்க நெறியில் நடந்த அவன் மகளுக்கு உண்டாகித் தோற்றிய பழித்திறம் இத்தகைத்தென்று இனிச்சொல்லுவேன். எ - று. (௬௩)

பூந்துழாய்க் கண்ணியன் புதல்வன் வேனில்வே
ளேந்திய பெயர்பிரத் தியும்ன னென்றுள
சாந்தன்மா தவத்தொடுஞ் சரிக்கு மன்பின
னீந்திட வருமனு ருத்தனென் றுளான்.

(இ - ள்.) அழகிய துளசிமாலையணிந்த திருமாலின் புதல்வன், வேனிற்காலத்திற்குரிய மன்மதன் பிரத்யும்னனென்னும் பெயரோடுள்ளான், சாந்தமுடையவன். பெருந்தவத்தோடு பழகிய அன்புடையவன், அவன்பெறத்தோன்றிய குமாரன் அநுருத்தனென்று ஒருவனுண்டு. எ - று. (௬௪)

அனையவ னசுரர்கோன் மகளை யற்றைநாட்
புனைமல ரமளியிற் கனவிற் புல்லினா
னனைமலர்க் கூந்தலாள் விழித்து நாடினாள்
வனைகழற் குமரனை மருங்கு கண்டிலாள்.

(இ - ள்.) அவ்வநிருத்தன் வாணாசுரன் புதல்வியை அன்று தினத்தில் அலங்கரிக்கின்ற புஷ்பசயனத்தில் அவள் கனவிற்கலந்தானாக, குளிர்ச்சிபொருந்திய மலரணிந்த கூந்தலையுடைய உஷையென்பவள் கண்விழித்துப்பார்த்து, வீரக்கழலணிந்த அப்புருஷனைப் பக்கலிற்காணாதவளாய். எ - று. (சு௫)

வெய் துயிர்த் திருந்தனள் வெதும்பு மேனியள்
பைதலுற் றொழிவுறாப் பழங்க ணெய்தினாள்
கொய்தழற் கருப்புவிற் குமர னேந்தினன்
பெய்தபூங் கணைபடப் பிளந்த னெஞ்சினாள்.

(இ - ள்.) பெருமூச்சு விட்டுக்கொண்டு உடல் வெதுப்பெய்தி, பசுமைநிறங்கொண்டு, நீங்காத காமத்துயரடைந்தனள். கொய்த நெருப்புப்போன்ற கருப்புவில்லை மன்மதன் தாங்கினவனாகி அவன்விடுத்த மலர்ப்பாணங்கள் படுதலால் உள்ளம் உடைபட்டனள், எ - று. (சுசு)

மைபுரை நெடுங்கணீர் மாரி தூங்குறப்
பைபுரை யல்குலாள் பதைத்து விம்மினாள்
நெய்புனை கருங்குழ னிலந்து ழாய்வரப்
பொய்யுரை மருங்குலாள் புலம்பு வாளரோ.

(இ - ள்.) பாம்பின்படத்தையொத்த அல்குலையுடைய உஷையென்பாள் மைதீட்டிய நெடியவிழிகள் சலமழைசிந்த, உடல்பதைத்து விம்மினாள். நெய்பூசிய கரியகூந்தலானது பூமியைத்தடவிக்கொண்டுவர, பொய்யினைப்போலக் காணப்பட்ட இடையையுடைய அப்பெண் பின்வருமாறு புலம்புவாளாயினள். எ . று. (சுஎ)

மேற்படி வேறு.

பாரா திருளூடு படர்ந் தனையெம்
பேரா சைபெறும் படிபுல் லினையாற்
போரா டன்மதன் கணைபுக் கதுநீ
வாரா வழியென் கொலவயக் களிறே.

(இ - ள்.) பார்க்கப்படாத இருளிடையே வந்தனை. எம்முடைய மிக்க ஆசையைப்பெறும்படி கூடினையாதலால், போர்புரியும் வல்லபமுடைய மன்மதனது மலரம்புகள் புகுந்தன. நீவாராதவகையாது கொல்லோ? வெற்றிபொருந்திய யானைபோல்வானே! எ - று. (சுஅ)

கனவூ டுகலந் துபுலந் தனைநீ
நனவூ டுவருந் திறநல் கிலையா
லினவால் வளைசிந் தியிருந் தனனென்
வினையோ விதுவந் துவிளைந் ததுவே.

(இ - ள்.) நீ என் சொப்பனத்திடையேவந்து பிரிந்தனை. எனது சாக்கிராவஸ்தையில் வருந்திறமையை எனக்குக்கொடுத்தாயில்லை யாதலால், தொகுதியாகிய தெள்ளிய வளையலைச் சிந்தப்பெற்றிருந்தேன். என்பூர்வ வினைச்சம்பந்தமோ? இத்துயரம் வந்து சம்பவித்தது. எ - று. (சுகூ)

இன்று லியவா டையெழுந் துயிரைத்
தின்று லடல்வே ளெதுசெய் குவனே
குன்று டருவிக் குளிர்பூ சிவருந்
தென்று லிவணீ யெதுசெய் குதியே.

(இ - ள்.) இப்பொழுது முழங்குகின்ற வாடைக்காற்றானது எழுந்து, என்னுயிரைப் பருகுமானால், வெற்றிபொருந்திய மன்மதன் எவ்வகைத் துயர்செய்வான்? பொதியமலையில் அசையும் அருவியாற்றின் குளிர்ச்சிகலந்துவருந்தென்றற்காற்றே! இங்குநீ யெதனைச் செய்வாய்? எ - று. (௭0)

வள்ளைக் குழையா ரிடைவந் துயிரைக்
கொள்ளைக் குயிலுண் டதுகூ றுவதென்
பிள்ளைப் பிறையூ டெபிறந் தழலும்
வெள்ளைக் கனலெங் ஙன்விளைந் ததுவே.

(இ - ள்.) வள்ளைக்கொடிபோலுஞ் செவியிற் குண்டலமணிந்த மாதரிடத்திற் குயிலானது வந்து உயிரைக் கொள்ளை கொண்டுண்டது கூறவேண்டுவதேதுக்கு? இளம்பிறைச் சந்திரனிடத்தில் உதித்துச் சுடுகின்ற வெள்ளிய அக்கினியானது எப்படிப் பெருகியது? எ - று. (௭௧)

அவரித் தனியா சைவிளைத் தகலக்
கவரிச் சிறுதென் றல்கனற் றுறநின்
றெவரிப் படிவெம் புவரென் றுணரா
யுவரிக் கடனீ யுமுறங் கலையால்

(இ-ள்.) அவர் இவ்வொப்பற்ற ஆசையையுண்டுசெய்து நீங்கவும், சாமரைவீசினாற்போன்ற இளந் தென்றற்காற்று வெதுப்பவு மிருந்து யாவர், இப்படி வெம்பி வருந்துவரென் றுணர்ந்தனையாகி, உவர்த்தன்மை பொருந்திய கடலே! நீயும் (என்போன்று) கண்ணுறங்கினை யில்லை. எ - று. (௭௨)

மன்றற் பனிவா டைதொடா வதனங்
கன்றிக் கனன்மா லையெனக் கவல்வெ
னின்றித் தனைபட் டனளென் பதுணர்ந்
தன்றிற் குரல்யா வரடைப் பவரே.

(இ - ள்.) மணந்தங்கிய குளிர்ந்த வாடையானதைத் தாங்காத முகங்கன்றிப்போய், மாலைப்பொழுது தீயேயென்று வருந்துவேன். இப்பொழுது இத்தனை துயரையெய்தின ளென்பதனை யறிந்திருந்தும், அன்றிற் பட்சியின் குரலையடக்க வல்லவர்யாவர்? (ஒருவருமில்லையே) எ - று. (௭௩)

வல்லா ரிளவெம் முலைமங் கையர்முன்
பொல்லா வுயிர்கொண் டுபுலம் புறுவே
னல்லார் குழலீ ரெனதா ருயிரைக்
கொல்லா துகொலா யர்குறுங் குழலே.

(இ - ள்.) கச்சணி பொருந்திய முதிராதவலிய தனங்களையுடைய மங்கையர்கட்கு முன்னர், சுகமற்ற பிராணனைத்தாங்கி வருந்தி நிற்கின்றேன். இருள்போன்று கருநிறம்பொருந்திய கூந்தலையுடைய மாதர்களே! என்னரிய உயிரை ஆயர்கள் தங்கள்கையிற்றாங்கியூதுங் குறுகிய வேய்ங்குழலொலி கொல்லாதோ?

செருவா டியதிண் சிலைவீ ரரொடு
மொருவா றுநடந் திவணுற் றிலையா
லிருளூ டினியென் செயல்கண் ணுறுவான்
வருமா றினமுண் டுகொன்மன் னுயிரே,

(இ - ள்.) போர்புரிந்த அரிய வில்லைத்தாங்கிய வீரருடனே, ஒருவகையாக நடந்து இங்கே வந்தாயில்லை. இருட்காலத்தில் இனி எனக்குறுந் துன்பச்செயலைக் காணும்படிவரும் வகை இன்னுமிருக்குமோ? என்நிலைபெற்ற வுயிரே! (கூ-று வாயாக). எ - று. (எசு)

மென்று தளைமென் மலர்வா ளியினுன்
கொன்று னலனென் னைகுறித் தனனோ
வன்று மெனவந் திலையன் பிலர்பா
னின்று யிதுவென் னைகொனெஞ் சகமே.

(இ - ள். மெல்லிய மகரந்தம் பொருந்திய மென்மைத்தன்மை வாய்ந்த புஷ்பபாணத்தையுடைய மன்மதன் கொன்றவனுமல்லன், யாது கருதியுள்ளனோ? அன்பில்லார் பாற்றூதுசென்ற என்மனமே! அல்லவென்றும் ஆமென்றும் செய்திகொண்டு வந்தாயில்லை. அங்கேயே யிருந்தனை (ஆ! நன்றாயிருந்தது;. எ - று.

மதியா துவளைந் ததுவல் வினையூழ்
விதியா ரிதுவெந் நன்விளைத் தனரே
யிதியா துகொலென் றுணரா தகலும்
புதியா ரொடுபோ யினைபொன் னுயிரே.

(இ - ள்.) வலிய ஊழ்வினையானது மதியாமல் சூழ்ந்துகொண்டது. பிரமதேவர் இத்துயரை எப்படி உண்டுசெய்தனரோ? இது யாதாகுமோவென்றுலோசியாது பிரிந்து செல்லும் புதியவரோடு நீயும் சென்றனை. என் பொன்போன்ற உயிரே! எ - று. (எஎ)

என்றித் தனைபன் னியிருந்த யர்வாள்
சென்றுற் றனள்சித் திரரே கையெனும்
மன்றற் சுருளோ திமடந் தையவட்
கன்றுற் றனயா வுமறைந் தனளால்.

(இ - ள்.) என்றிவ்வார்த்தைகளை யெல்லாஞ் சொல்லிக்கொண்டு வருந்தும் உஷை, தன்பால் வந்தடைந்தவளாகிய சித்திரரேகையென்னும் மணந்தங்கிய சுருண்ட கூந்தலையுடைய தோழியானவளுக்கு, அப்பொழுது நிகழ்ந்த விர்த்தாந்தங்களை யெல்லாஞ் சொல்லினள். எ - று. (எஅ)

நீறுந் தனிநெஞ் சநெருப் புமடிந்
தாறும் படிகூ றினளன் னவளாற்
றேறுண் டிலள்சிந் தைசெய் கைதிரிந்
தூறும் படிபின் னுமுழந் தனளால்.

(இ - ள்.) நீறுபடும் ஒப்பற்ற மனத்திலுள்ள காமத்தீமடங்கித் தணியும் வகையாகச் சித்திரரேகை பலவார்த்தைகள் சொல்லினள். (ஆனால்) அவளால் உஷை மனந்தேறினாளில்லை. மனமுஞ் செயலும் மாறுபட்டுத் துன்பம் ஊற்றெடுக்கும்படி மேலும் வருந்தினள். எ - று. (எகூ)

வாசந் தருமான் மதமென் பனிநீர்
பூசுந் தொறும்வெந் துபொருக் கெழுமாற்
கூசுங் குளிர்சா மரைகொண் டிருபால்
வீசுந் தொறுமங் கம்வெதுப் பெழுமே.

(இ - ள்.) மணம்வீசும் [மான்மதம்] கஸ்தூரியும் மென்மணங்கமழும் பனிநீரும் பூசும்பொழுதெல்லாம் உடல் வெந்து கொப்புளிப்பாள். பயன்படத்தக்க குளிர்ச்சிதங்கிய சாமரையினல் இருபுறத்திலும் விசிறியபோதெல்லாம் உடல் வெதுப்பெழுவாள். எ - று. (அ0)

பாவுண் டதளிர்ப் படுபா யலொடும்
வேவுண் டுமெலிந் துவெதும் புறுமாற்
கூவுங் குதலைக் குயில்கூ வுதொறு
மாவென் றுபிதற் றியரற் றுறுமே.

(இ - ள்.) பரவிய தளிர்கள் பரப்பிய சயனத்தோடும் வெந்துமெலிந்து உடல் வாடுவாள். கூவுகின்ற குதலைக்குரலையுடைய குயில்கள் கூவும்பொழுதெல்லாம், ஆவென்றுகூவி (மன்மதவாதைதாளாமல்) அழுவாள். எ - று. (அக)

மாகப் பதிதந் தவயங் கிழையார்
போகப் பதிதந்த பொலங் குழையார்
மோகத் தணிவிஞ் சையர்மொய் குழலா
ரேகிப் புடைசுற் றுமிருந் தனரால்.

(இ - ள்.) விண்ணகரமாகிய தேவலோகத்திலுதித்த விளங்குகின்ற ஆபரணமணிந்த அரம்பாஸ்திரீகளும், போகபூமியிற்சனித்த பொன்னாலாகிய குண்டலமணிந்த மங்கையர்களும், மோகத்தை விளைக்கும் நெருங்கிய கூந்தலையுடைய ஒப்பற்ற வித்தியாதரப் பெண்களுமாகிய இவர்கள் உஷையின் அருகேசென்று பக்கலிற்சூழ்ந்து உபசரித்துக்கொண் டிருந்தார்கள். எ - று. (அஉ)

என்செய் யுமெனக் கைநெரித் திலகும்
பொன்செய் தபொலங் குழையா ளிவள்பால
வன்செய் கைவிளைத் துமயக் கியதார்
முன்செய் வினையென் றுமொழிந் தனரால்.

(இ - ள்.) என்னசெய்வோமென்று கைநெரித்துக்கொண் டிருக்கும் பொன்னாற்செய்த அழகிய குண்டலமணிந்தவளாகிய இவ்வுஷையினிடத்தில் இக்கொடுஞ் செயலைப்புரிந்து இவளை மயக்கியது யாவர்? இது ஜந்மாந்தரத்திற் செய்த தீவினையென்று சொன்னார்கள். எ - று. (அங)

என்று வவணுய் துறுமெல் லையுயி
ரன்ன ளிவளுக் கருகா கவடைந்
துன்னி விகொடே குமொருத் தனைநீ
யின்ன னிவனென் னவியம் புதியால்.

(இ - ள்) என்றிவ்வகையாக அங்கே நிகழுங்காலத்தில், அவ்வுஷைக்குச் சமீபமாக, அவளுயிரை யொத்தவளாகிய சித்திரரேகை யென்பாளெய்தி, உன்னுடைய உயிரைக் கொள்ளைகொண்டு செல்லும் ஒருவனை நீ இன்னவனென்றும் இவனென்றும் எனக்குச் சொல்லுவாயாக. எ - று. (அச)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சேயொளிப் பருதிக் காந்தி மழுங்கிய செம்பொன் மோலிப்
பாயொளி மரக தத்திண் பருப்பதங் கவிழ்த்தி யாங்கு
மீயுயர்ந் தெழுந்த மேனி விரிநறுங் கமலம் பூத்த
சாய்திரைப் பரவை யேய்ப்ப தன்றெனத் தகுவ தன்றே.

(இ - ள்.) செவ்வொளிவாய்ந்த சூரியகாந்தியை மழுங்கச்செய்த செம்பொன்னாலாகிய கிரீடமானது, பரவிய ஒளியையுடைய மரகதமலையின்மேலே கவிழ்த்தாற்போன்று, மேனோக்கியெழுந்த திருமேனியானது மணம்விரிந்த நல்ல தாமரைகளலர்ந்த, மடிகின்ற அலையையுடைய கடல்நிறத்தையொப்பது அல்லவென்று சொல்லத்தக்கதல்ல. எ - று. (௮௬)

விண்டொட நிவந்த திண்டோள் வெற்பொடுந் துவண்டு லாவுங்
குண்டல வதன மிந்தக் குளிர்மதி நிகர்ப்ப தாமே
பண்டரு பவள முத்தம் பங்கயஞ் சிலையி ரண்டு
முண்டெனிற் சிறிது போலு மன்றெனி லுவமிப் பாமே.

(இ - ள்.) ஆகாயமளாவ வுயர்ந்த வலியதோள்கள், மலைபோலப்பூரித்து ஒசிந்துலாவும். குண்டலமணிந்த முகத்தைக் குளிர்ச்சிபொருந்திய பூரணசந்திரன் ஒப்பாகுமோ, அழகமைந்த பவளக்கரணையும் முத்துமாலையும் செந்தாமரை மலரும் வில்லும் இவ்விரண்டுகள் (சந்திரனிடத்திற் பொருந்தி) இருக்குமென்றால் (அம்முகத்திற்குச்) சிறிது ஒக்கும் அல்லாவிடில் உவமானமாகுமோ? எ-று.

மழலையங் குதலைச் செவ்வாய் மங்கையர் கொங்கை யானை
யுழுதுழு தகன்ற மார்பிற் குவமையொன் றுளது காணே
னெழுதரும் பரிதி வாங்கிச் சாணைவாய்த் திருத்தி யீர்ந்தா
லொழுகுசாந் தணிந்த மார்பை யொக்குமே லொக்கு மன்றே

(இ - ள்.) இளமைதங்கிய அழகிய குதலைச்சொல்பேசும் செவந்தவாயையுடைய மங்கையர்களது குசங்களாகிய யானைகள் மிகவும் உழுதலாற் பரந்துள்ள மார்பிற்குச் சமானப்பொருள் ஒன்றிருப்பதாகக் கண்டிலேன். எழுதற்கரிய சூரியனை யெடுத்துச் சாணையிலிட்டுக் கடைந்து எடுத்தால், ஒழுகுகின்ற சந்தனக் குழம்பூசிய மார்பத்தை நிகர்க்குமானால் நிகர்க்கும். எ - று. (௮௭)

குழைபொரு தடங்க ணல்லார் குங்கும மெழுதி விட்ட
வெழுவுறழ் குவவுத் திண்டோட் குவமிக்கு மியல்பு காணேன்
முழவுகொல் லுலங்க ளேகொன் மொய்வரைக் குலங்கொ லன்றேன்
மழைதவழ் நீல ரத்ன வரைகொலோ வறித றேற்றேம்.

(இ - ள்.) [குண்டலமணிந்த செவியோடு போர்செய்யும்] காதளவாக வோடிய பரந்த கண்களையுடைய மங்கையர் குங்குமக்குழம்பைத் தடவிவிட்ட எழுக்கம்பத்தையொத்த குவிந்த வலியதோளுக்குச் சமானப்படுத்தும் இயல்புடைய பொருளொன்றைக் கண்டிலேன். மத்தளமோ கற்றிரள்களோ நெருங்கிய மலைக்கூட்டங்களோ அல்லது மேகந்தவழும் நீலரத்தின பர்வதமோ? சமானமென்று உணர்தல் தெளிந்திலோம். எ - று. (௮௮)

தாடொடுந் தடக்கை மற்றை யழிமதத் தறுகண் யானை
நீடுறு தடக்கை மானு மன்றெனி னெடுவா னும்பர்த்
தோடுறு தருவி னோங்குந் தொடுசினை நிகர்ப்ப தன்றே
லாடலந் தடக்கை தன்னை யின்னதென் றறைதற் பாற்றே.

(இ - ள்.) காலைத்தொடும்படி நீண்ட பரந்தகையானது மதமொழுகுகின்ற அஞ்சாமையையுடைய யானையின் நீட்சிபொருந்திய விசாலித்த துதிக்கையை யொக்கும். அல்லவென்றால், பெரிய ஆகாயத்தின்மீது இதழ்கள் பொருந்திய கற்பகத்தருவின் உயர்ந்தகிளைத்தகிளையை நிகர்க்கும்-அல்லாவிடில், போர்புரியத் தக்க அழகிய பரந்தகையினை யின்னதையொத்ததென்று சொல்வதற்காகுமோ.

கொய்யுளைப் புரவி யொற்றை யாழியங் கொடிஞ்சித் திண்டேர்
வெய்யவற் கொணர்ந்து காந்தி யனைத்தையும் விரைய வாரிச்
செய்தெனத் திகழு மம்பொற் பீதகச் செழும்பொன் னாடை
நொய்தெனப் படுத்து விக்கு நுசுப்பினுக் குவமை யுண்டே.

(இ - ள்.) கத்திரிக்கின்ற புறமயிரையுடைய சப்தாவென்னுங் குதிரைபூட்டிய அழகிய ஒற்றைச்சக்கரத்தையும் [கொடிஞ்சி] தேர்மொட்டையுமுடைய வலிய தேரில் வரும் சூரியனைக் கொண்டுவந்து அவன் கிரணங்களையெல்லாம் விரைந்து வாரியெடுத்துச் செய்ததுபோல விளங்கும் அழகிய செழுமைதங்கிய பொற்பீதாம்பரத்தைச் சாமானியமாக அணிந்திருக்கும் இடைக்குச் சொல்லத் தக்க உவமானமுமுண்டோ? (இல்லை). எ - று. (கூO)

குருதியி னரத்த மூட்டிப் பஞ்சொடுங் குழைத்து மாட்டித்
தருவன வென்னச் சேந்த தாமரைச் சரண மீங்கென்
னிருகருங் கண்ணி னுள்ளே யிருந்தன வின்னு நீங்கா
பொருவயக் களிறு போல்வார் தம்மொடும் போய சிந்தை.

(இ - ள்.) உதிரம்போலச் செந்நிறத்தைக் கலந்து செம்பஞ்சோடு மட்டித்துக் குழைத்துத் தந்தனவெனச் சொல்லும்படி செவந்த தாமரைமலர்போன்ற பாதங்கள் இங்கே என் கரிய இருவிழிகளினுள்ளே நீங்காதின்னுந் தங்கியிருந்தன. என்மனமோ போர்செய்யத்தக்க வெற்றிவாய்ந்த யானைபோன்ற அவரோடும் பின்பற்றிப் போயிற்று. எ - று. (கூக)

ஆங்கவ ளினைய கூற யாவனென் றறித றேற்றா
டேங்கமழ் பவளச் செவ்வாய்ச் சித்திர ரேகை யென்பாள்
வாங்குநீ ருலகங் காக்கு மன்னவர்ப் படத்திற் றீட்டி
யீங்குனக் களிப்ப னோக்கி யினையனை யுரைத்தி யென்றாள்.

(இ - ள்.) அவ்விடத்தில் அவ்வுவை இப்படிச்சொல்ல, தேனொழுகுகின்ற பவளம்போலும் செவந்த வாயையுடைய சித்திரரேகையென்று சொல்லப்படுபவள் எவனென்றும் உணரக்கூடாதவளாகி, வளைந்த கடல்சூழ்ந்த உலகத்தை யரசுசெய்யும் அரசர்களைச் சித்திரப்படத்திலெழுதி இப்போது உனக்குக்கொடுப்பேன். அவற்றைப்பார்த்து இவனை இன்னவனென்று சொல்லுகவென்றாள்.

என்னலு முவகை மீக்கொண் டெழுதுதி தோழி யென்னப்
பொன்னடி வணக்கம் போக்கிப் போக்கின ளவளும் போனாள்

பன்னெடுந் துகிலி னீலக் காளிமம் பசையிற் றேய்த்தாள்
பின்னதற் கியைவ கூட்டித் தூரிகை பிழம்பு தோய்த்தாள்

(இ-ள்.) என்று சித்திரரேகை யென்பாள் சொல்லவும், உஷை சந்தோஷ மிகுந்து, தோழி! அப்படியே யெழுதுகவென்று அவள் பொன்போன்ற பாதத்தைவணங்கி யனுப்பினள். அச்சித்திர ரேகையுஞ்சென்று பலநீண்ட வஸ்திரங்களில் நீலக் [காளிமம்] கறுப்புப்பசையால் தடவினாள். அதன்பின்னர் அதற்கியைவன சேர்த்து [தூரிகை] எழுதுகோலின் திரட்சியைத் தோய்த்து. எ-று.

வீழ்திரைப் பரவை வைப்பின் வேந்தரிற் கவிகைச் செங்கோ
லாழியந் தடந்தோள் வேந்த ரவயவ மனத்துட் கொண்டா
ளூழ்முறை மரபிற் றீட்டி நோக்கின ளுயிரை யன்னாள்
வாழிய நலனுண் டேகுங் குமரனை மதித்துக் கொண்டாள்.

(இ-ள்.) வீழ்கின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூலோகத்திலுள்ள மன்னர்களில் வெண்கொற்றக் குடையையும் செங்கோலையும் ஆக்கினாசக்கரத்தையும் அழகிய பரந்ததோளையுமுடைய மன்னவர்களுறுப்புக்களை தன்மனத்தினுட்கொண்டவளாகி, ஊழ்வினைவழியாக முறைப்படி யெழுதிப்பார்த்தனள். தன்னுயிர்க்குச் சமானமாகிய உஷையினது சிறந்த சுகத்தை நுகர்ந்து சென்ற இளைஞனை இன்னவனென்று தன்னுள்ளத்தில் தீர்மானித்துக்கொண்டனள்.

எழுதுறு படத்திற் றீட்டு மரசரி லிவனே யாவி
யொழுகுவால் வளையை யுண்டா னென்பதென் னுளமே கூறுங்
கழைகுனித் துலக முற்றுங் கடந்தவன் குமரன் போலு
மழைமதக் களிற்றை யன்னா னனுருத்தன் மன்னர் கோமான்.

(இ-ள்.) எழுதிய படத்தில் எழுதப்பட்டுள்ள அரசர்களில் இவ்வநுருத்தனே, சிந்துகின்ற வொள்ளியவலையலையணிந்த உஷையின் உயிரைக்கொண்டவனென்பதை என்மனமே சொல்லுகின்றது. கருப்பு வில்லைவளைத்து உலக முழுவதையுஞ் சயித்த மன்மதனையும் குமாரசுவாமியையும் போலும், மேகம்போலும் மதத்தைச்சொரியும் யானைபோலும் விளங்கிய இராசராசனாகிய அநுருத்தன். எ-று. (௯௫)

என்பன பலவு மெண்ணி யெழுதிய படங்கொ டேகி
மின்புரை நுசுப்பி னாள்பாற் காட்டினள் விரைமென் கோதை
யன்பொடும் படத்து வார்க ணானுறப் பரப்பா நின்றா
டன்புனை நலனுண் டேகுங் குமரனைத் தனித்துக் கண்டாள்.

(இ-ள்.) என்பனமுதலாகப் பலவுங்கருதி, தானெழுதிய சித்திரப்படங்களைக்கொண்டு சென்று, மின்னலையொத்த இடையையுடைய உஷையென்பாளிடத்திற் சித்திரரேகை காண்பித்தனள். படத்தின்கண்ணே தன்நெடிய கண்ணால் அன்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது தன்னிடத்திலுள்ள அலங்கரிக்கின்றஇன்பநலத்தைப் பருகிச்சென்றவிடனாகிய அநுருத்தனைத் தனியேபார்த்தனள். எ-று. (௯௬)

பூத்தனள் புளக மேனி பொங்கினள் குலவுக் கொங்கை
நீத்தொழி வளைக ளெல்லா நெரிந்தன சரிந்த கூந்த

வேத்தின ளிருகை கூப்பி யிரந்தன ளினியென் னாவி
காத்தனை யாவி யேகா தொழியெனக் கலுழா நின்றாள்.

(இ - ள்.) உடல முழுவதும் மயிர்க்கூச்சிறைற் போர்க்கப்பட்டனள். குவிந்த குசங்கள் பூரித்தனள். கழன்றொதுங்கத்தக்க நிலையிலிருந்த வளையல்கள்யாவும் நெரிபட்டன. அளகபாரம் சரிந்தது. உடனே உஷை தன்னிருகைகளையுங் குவித்துயாசித்தனள். இனி என்னுயிரைக் காத்தனை. உயிர்போகாமற் பாதுகாக்க வென்று வருந்துவாளாயினள். எ - று. (௯௭)

அனையவ டன்னை நோக்கிச் சித்திர ரேகை யன்னா
யினையனீ யிவனை யானே தருகுவ னென்னத் தேற்றிப்
புனைகழற் குமரற் கொண்டு போதுறு வினையந் தேர்வா
ணினைதொறு நெஞ்சு வெவ்வே றாயின ணிரைமென் கோதை.

(இ - ள்.) சித்திரரேகை அவ்வகைத் துயரெய்தும் உஷையைப்பார்த்துத் தாயே! நீவருந்தாதே. இம்மன்னவனை நானே யுனக்குக்கொடுப்பேன் என்று மனந்தேற்றி, வீரக்கழலணிந்த அவ்விளைஞனைக் கொண்டுவரும் உபாயத்தை யாலோசித்து எண்ணுந்தோறும், வரிசையாகிய மெல்லிய மலர்மாலையணிந்த சித்திரரேகை மனம் வெவ்வேறு வகைப்பட்டனன். எ - று. (௯௮)

மந்திர மாயங் கூர்ந்து துவாரகை மருங்கு சார்ந்தாள்
சுந்தரத் தடக்கை வீர னமளியிற் றுயிலக் கண்டா
டந்திரத் தமளி யோடுந் தாங்கின டணந்து போந்தா
ளெந்திரப் பாவை போலத் துயின்றன னிறைவர் கோமான்.

(இ - ள்.) மந்திர வல்லபத்தால் மாயை மிகுந்து துவாரகா புரிக்கருகிலெய்தினள். அழகிய பரந்தகையையுடைய வீரனாகிய அநுருத்தன் கட்டிலில் நித்திரை செய்யப் பார்த்தனள். தந்திரத்தால் அப்படுக்கையோடு அவனையெடுத்துக்கொண்டு அங்கிருந்து நீங்கிவந்தனள். சூத்திரப்பதுமைபோல அரசகுமாரனும் நித்திரையிலிருந்தனன். எ - று. (௯௯)

தாங்கிய வமளி யோடுஞ் சோணித புரத்துச் சார்ந்தா
ளோங்கெயி லகன்று கோயில் புகுந்தன ளொலிமென் கோதை
பூங்குழ லவட்கு முன்ன ரமைத்தனள் புலம்பு தீர்ந்தாள்
வீங்கிள முகிண்மென் கொங்கை தழீஇக்கொடு வெம்மை தீர்ந்தாள்.

(இ - ள்.) எடுத்துக்கொண்ட கட்டிலுடன் சோணித புரத்தையெய்தினள். உயர்ந்த மதிலைக்கடந்து அரண்மனையிற் பிரவேசித்தனள். வண்டுகளொலிக்கும் மெல்லிய கூந்தலையுடைய உஷைக்குமுன்னே வைத்தனள். அவள் அழுகையை யகன்றனள் உடனே உஷைபூரித்த இளமைவாய்ந்த கோங்கரும்பையொத்த மெல்லிய தனங்களில் தழுவிக்கொண்டு காமவெப்பத்தை நீங்கினள். எ - று. ()

சித்திர ரேகை யென்னுந் தேமொழிக் குதலைச் செவ்வாய்த்
தத்தையங் கனையா டன்னை வளைக்கையாற் றழுவிக் கொண்டாண்
முத்தணி முதல யாவும் மளித்தனண் முகிண்மென் கொங்கை
யுய்த்தனை யாவி யென்னு நினைதொறு முவகை பூத்தாள்.

(இ - ள்.) சித்திரரேகை யென்றுசொல்லும் மதுரமாகிய குதலைச்சொல்லையும் செவ்விய வாயையுமுடைய தன்தோழியைச் சந்தோஷப்பெருக்கால் உஷை தழுவிக்கொண்டனள். முத்துமாலைமுதலிய பல சன்மானங்களைத் தந்தனள். அரும்பிய மெல்லிய கொங்கையையுடையாளே! என்னுயிரைத் தந்தாயென்று கூறிக் கருதுந்தோறும் ஆனந்த மதிகரித்தனள். எ - று. (௧௦௧)

அசைகழ லரசர் கோமான் விழித்தன னசுர னீன்ற
வுசையொடு முகிண்மென் கொங்கை யின்னல மினிதி னுண்டான்
குசைவிடு புரவித் தானைக் கோமகன் றடந்தோள் வைகி
நசைதரு கலவிப் பூச னாடொறும் விளைப்ப தானாள்.

(இ - ள்.) வீரகண்டாமணி யணிந்த இராசராசனாகிய அநுருத்தன் நித்திரைதெளிந்தனன். வாணாசுரன்பெற்ற உஷையுடன்கூடி அரும்பியமெல்லிய கொங்கையின் இனிய நலத்தைச் சுகமாக அநுபவித்தனன். கடிவாளம் பூட்டிய குதிரைச்சேனையையுடைய அம்மன்னவனுடைய பரந்த தோளிற்றங்கி விருப்பத்தைச்செய்யும் புணர்ச்சியாகிய காமப்போரைத் தினந்தோறுஞ் செய்வாளாயினள். எ - று. (௧௦௨)

நடந்தன சிறிது வைக னகைநிலாத் தரளச் செவ்வாய்
நுடங்கிடை கருப்ப மாகி நுதல்பசப் பூர நின்றாள்
கடம்புரை குவவுக் கொங்கை யரும்புகண் கறுத்து மீப்போய்க்
கிடந்தன நரம்பு பச்சென் றெழுந்தன கிளவிக் கிள்ளை.

(இ - ள்.) சிலதினங்கள் சென்றன. ஒளிபொருந்திய சந்திரிகையை வீசும் முத்துப்போன்ற பற்களையும் சிவந்தவாயையும் ஒசிகின்ற இடையையும் கிள்ளைமொழியையுமுடைய உஷையானவள் கருப்பமெய்திப் பசப்பெய்தி நின்றனள். கும்பத்தையொத்தகுவிவாகிய கொங்கையென்னும் அரும்புகள்கண்கறுத்து நரம்புகள் பச்சென்றுதோன்றி, கிளிமொழிமேலெழும்பிக்கிடந்தன. எ - று. (௧௦௩)

வள்ளெயிற் றசுரர் கோமான் கோயிலுள் வாயில் காப்போ
ருள்ளயிர்த் துணர்ந்தா ரீது மன்னவற் குரைத்து மென்னாப்
பொள்ளெனப் புகுந்தார் நின்று கனைகழற் பொலந்தாள் போற்றி
யள்ளலங் களபத் தோளா னருகுவாய் புதைத்துத் தாழ்ந்தார்.

(இ - ள்.) கூர்மைவாய்ந்த பற்களையுடைய வாணாசுரன் மாளிகையின் உன்வாயிற் காவலர் மனதிற் சந்தேகித்து இவ்விடயத்தைத் தெரிந்துகொண்டார்கள். அரசனுக் கறிவிப்போமென்று விரைந்து மன்னவன்பாற்சென்று சத்திக்கின்ற வீரக்கழலணிந்த அழகிய பாதங்களைத் துதிசெய்து, அழகிய களபச்சேறணிந்த தோளையுடைய வாணாசுரனுக்கருகே வணங்கி வாய்பொத்தி நின்றார்கள். எ-று.

ஆங்கவர் தாழ நோக்கிக் குண்டல மருகு தாழ்ந்து
தூங்குற மகுடஞ் சாய்த்தான் சொற்றன சுருக்கொண் டேற
வீங்கிய வெகுளி வெந்தீ மிக்கெழ வெழுந்து போனான்
றேங்கம ழலங்க லோதி யுசையுழைச் சென்று சார்ந்தான்.

(இ - ள்.) அக்காவலாட்கள் வணங்கக்கண்டு, குண்டலமானது பக்கலில் அசைவுறும்படி கிரீடத்தைச் சாய்த்தான். அவர்கள் சொல்லிய சொற்கள்

செவியில் சுறுக்கென நுழைய, பூரித்த கொடிய கோபாக்கினியானது மேலோங் கியதிகரிக்கப் புறப்பட்டுச்சென்று, மணம் வீசுகின்ற மலர்மாலையணிந்த கூந் தலையுடைய உஷையினிடத்திற்குப் போய்ச்சேர்ந்தனன். எ - று. (௧0௫)

தீதெறு சினத்த னாகி நிருதர்கோன் செல்வ தோரார்
சூதிழைத் தாட லுற்றா ராங்கவர் தொடர நோக்கி
யேதில னிவனைப் பற்றி யெற்றுமி னெறிமி னென்றான்
கோதறு குணத்தான் வீரத் தண்டொரு தடக்கை கொண்டான்.

(இ - ள்.) அசுரேசனாகிய வாணாசுரன் இதனால் தீச்சிந்துங் கோபமுடைய வனாகிச் செல்வதை யுணராதவர்களாய், அவர்கள் அவ்வரண்மனையினுள்ளே சொக்கட்டான் காய்களைப்பரப்பி யாடிக்கொண்டிருந்தார்கள். தொடர்ந்து செல்லக்கண்டு அயலானாகிய இவனைப்பிடித்து இடியுங்கள் வெட்டுங்களென் றான். குற்றமற்ற குணத்தையுடைய அநுருத்தன் வீரந்தரும் தண்டாயுதத்தை விசாலமான கையிற் பிடித்துக்கொண்டான். எ - று. (௧0௬)

எறிந்தன ரடுகோல் வாங்கி யெய்தன ரிவைக ளெல்லாஞ்
சொறிந்தன வெனினுஞ் செய்யா வாங்கவன் சுழற்று தண்டான்
முறிந்தன பிடருந் தாளு முழவடு திரடோட் குன்றுஞ்
செறிந்தன குருதிச் சேற்றிற் றண்டொடுந் தேயத் தேய்த்தான்.

(இ - ள்.) வில்லைவளைத்து நாணைசையெறிந்து கொல்லத்தக்க அஸ்திரங் களை விடுத்தார்கள். இவையாவுஞ் சொறிந்தன வென்றாலும், அவன் சுழற்று கின்ற தண்டாயுதத்தால் ஒன்றுஞ் செய்யாவாயின. தோள்களுந் தாள்களும் முறிந்தன. மத்தளத்தைவென்ற திரண்டதோள்களாகிய மலையுஞ்செறிந்தன. உதிரச்சேற்றில் தண்டாயுதத்தோடுந் தேயும்படி தேய்த்தனன். எ - று. (௧0௭)

வந்துவந் தெழுந்த சேனை யாவையு மண்டை துண்டந்
தந்தனர் மூளைச் சேற்றிற் சறுக்கினா றுறுக்குந் தோறுஞ்
சிந்தினர் சிதறி மீண்டார் செழுமணி வயிரத் தண்ட
மந்தகன் றனுக்குற் றேங்கச் சுற்றின னடல்வேற் காளை.

(இ - ள்.) மேன்மேலும் வந்து போர்க்கெழுந்த சேனை நாயகர்களெல்லாம் மண்டைகள் பிளவுபட்டார்கள். மூளைகள் சேற்றில் சறுக்கினார்கள். அதட்டுந் தோறும் சிந்திச் சிதறித்திரும்பினார்கள். வெற்றிபொருந்திய வேலையுடைய காளையாகிய அநுருத்தன் செழிய நவமணிகள் பதித்த வச்சிரதண்டாயுதத்தை இயமனும் விரைந்து பயப்படும்படி சுழற்றினன். எ - று. (௧0௮.

புனைகழ னிருத னந்தப் புரத்துள மகளிர் யாருங்
கனைகட லரவ மென்னக் கரநெறித் தலறா நின்றார்
முனைகொள்வே னிருதர் வாழ்க்கை முடிவுநா ளிதுகொ லென்ன
வனைகுர லரவ மற்றைத் திசைதமுற் றெழுந்த வன்றே.

(இ - ள்.) அலங்கரிக்கின்ற வீரக்கழலணிந்த வாணாசுரனுடைய அந்தப்புர த்திலுள்ள மாதர்களெல்லாரும் சத்திக்கின்ற கடலொலிபோலக் கையைநெரித் துக்கொண்டு அலறினார்கள். கூர்மைபொருந்திய வேலாயுதமேந்திய அசுரர்கள் வாழ்க்கை முடிவெய்துங்காலம் இதுதானோவென்று சொல்லத்தக்க அத்தகைய குரலோசையானது மற்றத்திசைகளெல்லாவற்றிலும் அப்பொழுது எழும்பின.

வரைமுழை திறந்து போந்த வாளரி மடங்க லொப்பான்
றிரைபொரு தடக்கைத் தண்டா லரைத்தனன் சேனை யெல்லாங்
கரையழித் தொழுகு செந்நீர் கண்டன னவுணர் கோமா
னிரைமணித் தடக்கை மாட்டிப் பிடிப்பனென் றெதிர நேர்ந்தான்.

(இ - ள்.) மலைக்குகையைத் திறந்துகொண்டு வந்த ஒளிதங்கிய சிங்கவேற்றினையொத்தவனாகிய அநுருத்தன் அலையையொத்த விசாலமான கையிலேந்திய தண்டாயுதத்தினாலே சேனையைமுற்றும் அரைத்துவிட்டனன். அசுரேந்திரனாகிய வாணாசுரன் எல்லைகடந்து பெருகுகின்ற உதிரவெள்ளத்தைப்பார்த்தனன். வரிசையாகிய மாணிக்கத் தூண்போன்ற பரந்தகைகளைமாட்டி இவனைப் பிடிப்பேனென்று எதிர்ப்படலாயினன். எ - று. (௧௧௦)

பற்றினன் றடக்கைத் தண்டம் பன்முறை கீழு மேலுஞ்
சுற்றினன் சுற்ற லோடு மவுணனுந் துணுக்கங் கொண்டா
னிற்றவன் றன்னைப் பற்ற லரிதென வெண்ணி நின்றான்
பெற்றமே றுகைத்தோ னாக பாசத்தாற் பிணித்துக் கொண்டான்.

(இ - ள்.) அப்பொழுது அநுருத்தன் தன்விசாலமானகையில் தண்டாயுதத்தைத்தாங்கினன். கீழுமேலுமாகச் சுழற்றினன். அப்படிச் சுழற்றவும் வாணாசுரனும் மனந்துணுக் கெய்தினன். இவ்வகையாக இவனைப்பிடித்தல் அருமையென்று கருதியிருந்தனன். பின்னர், இடபத்தை வாகனமாகச் செலுத்திய சிவபெருமானுடைய நாகபாசத்தினாலே கட்டிக்கொண்டனன். எ - று. (௧௧௧)

கண்டன ளுசையென் றோதுங் கன்னிகை வெருவா நெஞ்சு
விண்டன ளலமந் தேங்கி வெய்துயிர்ப் பெறிந்து மாழ்கி
மண்டலத் தரசர் கோமாற் கிதுகொலோ வருமென் றெண்ணுந்
தண்டுணா ரெரியிட் டாங்கு வெதும்பின டரிபப தோராள்.

(இ - ள்.) உஷையென்று சொல்லப்படும் கன்னிகை இதனைக்கண்டாள். அஞ்சாத மனமானது விண்டு வருந்தி யேக்கமுற்று வெவ்விய பெருமூச்செறிந்து விசனித்து, நிலவுலகிலுள்ள அரசர் தலைவனாகிய உனக்கு இதுவா சம்பவிப்பது? என்றெண்ணமிட்டு, குளிர்ந்த மலர்க்கொத்தினைத் தீயிலிட்டாற்போலச் சகிக்க வழிதெரிய மாட்டாது வெதும்பினள். எ - று. (௧௧௨)

பொங்கொளி மோலி காணேன் றிருமுகப் பொலிவு காணேன்
மங்கல மடந்தை நீங்கா வலயமுந் தோளுங் காணேன்
முங்கிய தரளக் காந்தி வெண்ணிலா முறுவல் காணே
னெங்கொளித் தென்னை நீத்தா யெறும்வலித் தடக்கை வேந்தே.

(இ - ள்.) அதிகரிக்கின்ற காந்தியையுடைய கிரீடத்தைக் காண்கிலேன். திருமுகத்தின் அழகினைக் காண்கிலேன். மங்கலம் பொருந்திய விஜயலட்சுமி எக்காலத்திலும் நீங்காத அணிந்த வாகுவலயத்தையுந் தோளையுங் காண்கிலேன், முத்துமாலையின் பிர ாசத்தையடக்கிய வெள்ளிய சந்திரிகை வீசும் தந்தபந்தி (புன்னகை)யை க்காண்கிலேன். எங்கேயொளித்துக்கொண்டு அடியாளைப்பிரிந்தனை? பெருவல்லபம் வாய்ந்த பரந்தகையையுடைய அரசனே! எ - று. (௧௧௩)

தேன்பிறந் தொலிக்கு மாலைத் திருநெடுந் தடந்தோட் செல்வ
மான்பிறந் தனைய கண்ணார் முன்னர்நான் வரும்பா றுண்டே
யூன்பிறந் தெடுத்த யாக்கை யுயிர்சுமந் தோங்கி நின்றே
னென்பிறந் திருந்தேன் பாவி யிறப்பதொன் றறிகி லேனே.

(இ - ள்.) தேன்சிந்தி வண்டுகளொலிக்கும் மாலையணிந்த அழகிய நீண்ட பரந்த தோளையுடைய செல்வனே! மான்பிறந்தாற்போன்ற கண்ணையுடைய மாதர்கள் முன்னே நான்வரும் வகையுளதாகுமோ? மாமிச தேகத்தோடுதித்த இவ்வுடலில் உயிரைத்தாங்கி வளர்ந்து நிற்கின்றேன். யாதுக்குப் பெண்ணாகப் பிறந்திருக்கின்றேன். பாவியாகிய நான் இறத்தற்கு வழியொன்றும் அறிந்திலன். (யாதுசெய்வேன்?) எ - று. (௧௧௬)

தழன்மணிக் கடகத் திண்டோ டாம்புகொண் டிறுக்கக் கண்டே
னிழன்மணி மகுட நீத்த நீண்முடி வறுமை கண்டே
னழன்மணி மருமச் செவ்வி யெவ்வுழி யடைவே னையா
பழவினை யிருந்த வாபெண் பாவியாற் படுவ தீதோ.

(இ - ள்.) நீப்போன்ற (செம்மணியாகிய) மாணிக்கங்களிழைத்த வாகுவலயமணிந்த வலிய தோளினைப் பாசத்தை வீசிப்பிணிக்கக்கண்டேன். நிழல்செய்யத்தக்க ரத்தினங்களிழைத்த கிரீடத்தை யகற்றிய நீண்ட (வறுமையாகிய) வெறுமுடியைப் பார்த்தேன். சூரியன்போன்ற காந்தியுடைய உன்திருமார்பின் பொலிவை எவ்விடத்தில் இனிக்காணப் பெறுவேன்? ஐயனே! பழவினையிருந்தவகை, பெண்பாவியாகிய அடியாளால் படுந்துயர மிவையோ? எ - று.

எனவெடுத் தரற்றி நின்றா ளிங்கிவ ளசுரன் கோயின்
முனைவழி நிகழ்ந்த வெல்லா நாரத முனிவன் கேட்டா
னினைதரு முளத்த னாகித் துவாரகை யெய்தச் சென்றான்
நனைமலர்த் துளவி னோற்கு நடத்தின னிகழ்ந்த வெல்லாம்.

(இ - ள்.) என்றிவ்வாறு இப்பொழுது இவ்வுஷை அழுது புலம்பிக்கொண்டிருந்தனள். வாணாசுரன் மாளிகையில் யுத்தமுகத்தில் நடந்த வரலாறுகளையெல்லாம் நாரதமுனிவர் கேட்டுணர்ந்து வருந்திய மனதையுடையவராகித் துவாரகாபுரியை யடையப்போய், குளிர்ச்சிபொருந்திய மலர்ந்ததுளவமாலை தரித்த கிருஷ்ணமூர்த்திக்கு நடந்த சங்கதிகளெல்லாவற்றையுந் தெரிவித்தனர்.

நாரத னுரைப்பக் கேட்ட கண்ணனு நளினச் செங்கை
வார்கழற் குமாரற் றேடி மறுகிய மறுக்கந் தீர்ந்தா
னாரம ருடற்ற வேண்டுங் காலம்வந் தடுத்த தென்னாப்
போர்செழு வயிரத் திண்டோ ளடிக்கடி புளகம் பூத்தான்.

(இ - ள்.) நாரதமுனிவர் சொல்லக்கேட்ட கண்ணபிரானும், தாமரைமலர்போன்ற சிவந்த கையையுடைய நெடிய வீரக்கழலணிந்த புதல்வனைத்தேடி வருந்திய துன்ப மகன்றனன். பொருந்திய போர்புரிய வேண்டியகாலம் வந்து சம்பவித்ததென்று, போர்வன்மைமிக்க வச்சிரத்தம்பம்போன்ற வலியதோள்கள் அடிக்கடி புளகித்தனன். எ - று. (௧௧௭)

எழுகநஞ் சேனை யென்று பணிமுர சியம்பச் சொற்று
ணிழிமதக் களிற்றின் மேல்கொண் டியன்முர சறைவ தானார்
சுழிதிரைப் பரவை யார்த்த நுண்மணற் றொகைக்கு மீப்போய்
கழிபெருங் கணக்கை நீத்த கடற்படை யெழுந்த தன்றே

(இ - ள்.) நம்முடையசேனை போருக்கெழுகவென்று அழகியபேரிகை முழக்கும்படி கட்டளையிட்டனன். அக்கட்டளைபெற்று, சொரிகின்ற மதத்தையுடைய யானையின்மேல் ஏறிக்கொண்டு அழகிய பேரிகையறைந்தார்கள். சுழிக்கின்ற அலைகள் நிரம்பிய சமுத்திரத்திற் பொருந்திய நுட்பமாகிய மணற்றொகைக்கும் மேம்பட்டு, மிகப்பெரிய தொகையை யகற்றிய சேனாசமுத்திரம் போருக்கெழுந்தது. எ - று. (௧௧௮)

நெடுமுகி றடவிச் செல்லு மழிமத நெடுநல் யானை
படுகட லுருவு கொண்டா லெனப்பல பரந்து செல்ல
விடுவயப் புரவி யந்நீர்த் திரையென வெகுண்டு பாயச்
சுடர்முடிப் புலவர்க் கேயு மளப்பருஞ் சேனை தொக்க.

(இ - ள்.) பெருங்கடலானது வடிவெடுத்து வந்தாற்போல, நெடியமேகத்தையளாவிச் செல்லுகின்ற மதஞ்சொரியும் பெரிய நல்லயானைகள் பலவிரைந்து செல்லவும்,வெற்றிபொருந்திய குதிரைகள் அந்நீரின் அலைபோலக் கோபித்துப் பாயவும், ஒளிவீசுங் கிரீடமணிந்த தேவர்கட்கு ஒப்பாகும் அளவிடற்கரிய சேனைத்தொகுதி சேர்ந்தன. எ - று. (௧௧௯)

கொடிநெடுங் கொடிஞ்சித் திண்டேர் நெடுநிலங் குழியச் செல்ல
விடுகுர லதிர்ச்சி யெட்டுத் திக்கையும் விழுங்கிக் கொண்ட
தொடுகட லுவரி யெல்லாந் திடர்படத் தூளி போர்த்த
படுமணிப் படம்பொ றுமை யனந்தனும் பதைப்ப தானான்.

(இ - ள்.) கொடிகள் கட்டிய நெடிய கொடிஞ்சியையுடைய வலியதேர்கள் பெரிய பூமியானது புதைபடும்படி செல்லுதலாலுண்டாகிய குரலதிர்ச்சியானது அஷ்டதிசைகளையும் விழுங்கிக்கொண்டது. தோண்டப்பட்ட கடல் முழுவதும் மேடுபடும்படி புழுதிமூடிக்கொண்டது. பெரியமாணிக்கம் பொருந்திய படமானது சுமைதாங்க மாட்டாமல் ஆதிசேடனுந் துடிப்பதானான். எ - று. (௧௨௦)

தொன்னிலைப் பரவை யேழு மொருவழித் தொடர்ந்த வாபோல்
வன்னகப் புலவுப் பேழ்வாய் வாளரி மடங்க லொப்பார்
பன்னெடுஞ் சேனைத் தானை காவலர் பரந்து மொய்த்தார்
பொன்னெடுஞ் சிகரத் திண்டோ டினவுறப் பொருமா நின்றார்.

(இ - ள்.) பழமைத்தன்மை வாய்ந்த சப்த மகாசமுத்திரங்களும் ஒருழையாய்த் தொடர்ந்துவந்த வாறுபோல, வலிய நகத்தையும் புலான் மணங்கமழும் பிளவுபட்டவாயையுமுடைய வொளிதங்கிய ஆண்சிங்கத்தை யொத்தவர்களாய், பலபெருஞ் சேனையின் படைக்காவலர்கள் எங்கும் பரவி நெருங்கி நெடியபொன் மலைபோலும் வலியதோள்கள் தினவுண்டாக ஆர்ப்பரித்தார்கள். எ-று. (௧௨௧

வினைதுகிற் கதலி மீப்போய் வன்சிறைப் பறவை மானப்
புனைமணிக் கவிகை யெல்லாம் வெண்சிறை யனமே போல

வினமணிக் கவரி யீட்டம் வெண்டிரைப் புணரி யேய்ப்பக்
கனைகடற் றானை மற்றோர் கருங்கட னிகர்த்த மாதோ.

(இ - ள்.) அலங்கரித்த வஸ்திரத்தாலாய விருதுக்கொடிகள் மேலோங்கிச் சென்று வலிய சிறகையுடைய பறவைபோலவும், அணிந்த மணிகளையுடைய குடைகளெல்லாந் தெள்ளிய சிறகையுடைய அன்னத்தைப்போலவும், தொகுதியாகிய இரத்தினங்கள் பதித்த சாமரைக்கூட்டம் வெள்ளிய அலையையுடைய சமுத்திரத்தைப் போலவும் விளங்குதலின், கோஷத்தையுடைய சமுத்திரத்தையொத்த அச்சேனையானது பிறிதொரு கருங்கடலையு மொத்திருந்தது. எ - று.

பொலங்கழ லரவ மற்றைப் புரவியின் சிரிப்பு வீரத்
துலங்கெழு வயிரத் தோளா ருரப்பொலி நீழல் சீறி
நிலம்பகக் குமுறிப் பாயு நீனிறக் கொடுங்கை யானைக்
குலங்கொடு பிளிறு மோதை யொருவழிக் குழீஇய வன்றே.

(இ - ள்.) அழகிய வீரக்கழலின் அதிர்ப்பொலியும், குதிரைகளின் கனைப்பொலியும், வீரத்தின் வன்மை மிக்க வச்சிரத்தம்பம்போன்ற தோளையுடைய போர்வீரர்களின் அதட்டுகின்ற ஆர்ப்பரிப்பும், தன்னிழலைக் கோபித்துப் பூமியானது பிளவுறும்படிகுமுறிப்பாய்கின்ற நீலநிறம் பொருந்திய வளைந்த கையையுடைய யானைக்கூட்டங்களின் வலியபிளிறுதலா லுண்டாகிய ஓசையுமொருவழியாகக்கூடின. எ - று. (கஉ௩)

கரும்பனைத் தடக்கை நால்வாய்க் களிற்றிழி மதத்தி னாலும்
பொருந்திரை யுகண்ட வாபோற் புரவிவாய் விலாழி யானு
மருந்திறல் வயவர் திண்டோட் சாந்தழிந் திழித லானும
வருந்திய புவனப் பேதை முதுகுற வழுக்கு வாரால்.

(இ - ள்.) கரிய பனைமரத்துண்டுபோன்ற பருந்தகையையும் [நால்வாய்] தொங்குகின்ற வாயையுமுடைய யானையின் சொரிகின்ற மதப்பெருக்கினாலும், (பின்சென்று) போர்செய்யும் அலைகள் புரண்டவாறுபோலக்குதிரைகளின் வாயினின்றிழியும் [விலாழி] நுரையினாலும் அரியவல்லபமுடைய போர்வீரர்களின் திண்ணிய புயத்திலணிந்த செஞ்சந்தனக் குழம்பு அழிந்து சொரிதலாலும், வருத்தமெய்திய பூமியாகிய பெண்ணின் முதுகிற்பொருந்தக் கால்வழுக்குவாராயினர். எ - று. (கஉ௪)

முற்பட நடந்த தானைச் செதும்பிகல் மூனவ ரேறிப்
பிற்பட நடந்த திண்டே ராழியிற் பெருந்தூ ளாகி
யெற்படு மிரவி யோட்டு மெழுபசும் புரவி போர்த்து
நிற்பன திகந்த மெல்லாம் பொதிந்தன நிமிர்ந்த தூளி.

(இ - ள்.) முற்பட்டு நடந்தசேனைகளாலாகிய சேறானது வலிதங்கிய போர்வீரர்கள் ஏறிப்பிற்பட்டு நடத்தும் வலியமைந்த தேர்களின் சக்கிரத்தினால் பெருந்தூளாகி, இருளையகற்றும் சூரியன்செலுத்துகின்ற பசுநிறமமைந்த எழுபுரவியைமூடிக்கொண்டு விளங்குகின்ற திசைகளெல்லாம் எழும்பிச்சென்ற தூளிகள் பரந்தன. எ - று. (கஉ௫)

பரந்தெழு பூழ்தி யுள்ளம் படுத்தெடுத் தளவிட் டாலுஞ்
சுரந்தெழு பனியின் றாரைத் துளியொரு தொகையிட் டாலு
நிரந்தெழும் பரவைத் தானை நிலைதெரிந் தளவை கூறிப்
புரிந்தவ ருளரேல் வையத் தவர்களே புலமை மிக்கோர்

(இ - ள்.) பரவியெழுந்த புழுதியை மனத்தாற் கணித்தெடுத்து அளவு சொன்னபோதிலும், சுரந்து துளிக்கும் பனித்தாரையின் துளிகளை யொருகணக்கிட்டபோதிலும், நிரம்பியெழுந்த கடல்போன்ற சேனையின் நிலைமையையுணர்ந்து அளவுபடுத்திச்சொல்லவல்லவரிருப்பராயின், அவர்களே நிலவுலகத்திற்கணிதநூற்புலமையில் மிகுந்தவர்களென்று சொல்லப்படுவார்கள். எ - று. (௧௨௬)

படுகுர லெழுந்து வீங்கும் பல்லிய விடிப்பி னோங்கி
விடுசுடர் வயிர வொள்வாண் மின்னொளி மருட்டிக் காட்டிக்
கொடிவிடு துவச நீழற் காரொளி யடையக் கொற்ற
நெடுநக ரொழியத் தானை மழைப்புய னிமிர்ந்த தன்றே.

(இ - ள்.) பெருங்குரலிட்டு முழங்கும் பலவாத்தியங்களின் இடிப்பினாலுயர்ந்து, சுடர்விடுகின்ற வொளிபொருந்திய வச்சிரவாளினால் மின்னலொளியை மயக்கிக்காட்டி விருதுக்கொடியாகிய துவசங்கள் தந்த நிழலினாற் [கார்] கரிய வொளியை யடைதலால் வெற்றிபொருந்திய நெடிய நகரத்தைநீங்க, அச்சேனையானது மழைசொரியுஞ் சூல்கொண்ட மேகத்தையொத்திருந்தது. எ - று. ()

எழுபுய லெழுந்து விம்மி யினத்தொடு மிடித்துப் பொங்கிப்
பொழிபல புனலு மேழு பரவையும் புரண்டு போகி
முழுதொரு வழிக்கொண் டாற்போ னடந்தன மூரித் தானை
யிழிதக வுடைய வாணன் சோணிதத் திறுத்த தன்றே.

(இ - ள்.) சப்தமேகங்களு மொன்றாயெழுந்து பூரித்துத் தம்மினத்தோடு மிடித்து அதிகரித்துப் பொழிந்த மழைவெள்ளமுஞ் சப்தசாகரங்களுங் கரைபுரண்டு பாய்ந்து முற்றுமொருவழிக் கொண்டாற்போல் அவ்வலிய பெருஞ்சேனையானது நடைகொண்டு இழிதகைமை பொருந்திய வாணாசுரனுடைய சோணிதபுரத்தை யடைந்தது. எ - று (௧௨௮)

ஐந்துட னாறு கோடி நிவந்தெழு மக்கு ரோணி
பைந்துகிற் கதலித் தானை படுகொடி யிஞ்சி சூழ
வெந்தழற் றறுகட் பேழ்வாய் வெள்ளெயிற் றசுர னோர்ந்தா
னெந்தையெம் பெருமான் முன்ன ரருளிய வெல்லை யொல்லை.

(இ - ள்.) முப்பதுகோடி யென்னுங் கணக்கோடுயர்ந்த அக்குரோணிகளாகிய பசிய விருதுக்கொடிகளேந்திய சேனை வளைதல் பொருந்திய மதில்சூழ, வெவ்விய தீயைச்சொரியுங் கோபக்கண்ணையும் பிளவுபட்ட வாயையும் வெள்ளிய பல்லையுமுடைய வாணாசுரன், எமது தந்தையுந் தலைவனுமாகிய சிவபெருமான் தனக்குப் பூர்வமருளிச்செய்த காலகணிதத்தை யுணர்ந்தவனாயினான். எ - று.

படுகடற் பரவைத் தானை யாங்கவன் பரிந்த நாட்டை
யடுதிறத் திரியல் போக்கி வெள்ளிடை யடையச் செய்தக்

கொடுநில வெயிற்று வெங்க ணசுரர்கோன் கொதித்துப் பொங்கி
விடுபரி வெள்ளத் தானை வம்மென விளிப்ப தானான்.

(இ - ள்.) ஆழமாகிய கடல்போலப் பரவுதலுடைய சேனையானது அவ்வா ணாசுர னரசுபுரிந்த சோணிதபுரியைக் கொல்லும் வல்லமையாற் பலரையும் புறத் தேதுரத்தி வெற்றிடங்களி லோடச்செய்தது. வளைந்த பிறைச்சந்திரன்போன்ற பற்களையுங் கோபக்கண்ணையுமுடைய அசுரேசனாகிய வாணன் கோபமிகுந்து விரைவிற் செலுத்தத்தக்க வெள்ளக் கணக்காகிய குதிரைமுதலிய சேனைகளை வருகவென்றழைப்பவனாயினான். எ - று. (௯0)

என்னிடைப் பிறந்த வைஞ்ஞூற் றிரட்டியி னிவர்ந்த தோட்குப்
பின்னிடு துளவ மாயோன் பேடியிற் றணந்து போனான்
புன்னுனை யுகிர்த்தாட் பூசை புலியெனிற் புலியே ரொப்பா
ரென்னெனப் படுவ ரென்று வெண்ணில னிகற்குப் போந்தான்.

(இ - ள்.) என்னிடத்துதித்த பெரிய ஆயிரந்தோள்களுக்குப் பன்முறை பின்னிட்டோடிய துளசிமாலையணிந்த கண்ணன் நபும்சகனைப்போலப் போர் செய்தாற்றாது புறந்தந்து போயினான். புல்லினுனிபோன்ற (நுண்ணிய) நகம் பொருந்திய காலையுடைய வொருபூனையானது புலியென்றுசொல்லிக்கொண்டால் ஆண்புலியை யொப்பானவர்கள் யாதென்று சொல்லப்படுவார்களென்றெண்ணா மல் இப்பொழுது மீண்டும் போர்புரியவந்துள்ளான். எ - று. (௯௧)

வருகவென் றுரைத்த மாற்றத் தெழுந்தன வயவெஞ் சேனை
கருமுகிற் கணத்தை யொப்பார் வடவையிற் கனலுங் கண்ணார்
திருகிய சினத்தார் வானந் தீண்டிய சிகரத் தோளா
ருருமென முழக்க மிக்கார் மொய்த்தன ரொருங்கு சூழ்ந்தார்.

(இ - ள்.) வருகவென்றுகூறிய வார்த்தையால் வலியசேனையானது போர்க் கோலமெய்திப் புறப்பட்டது. கரியமேககூட்டத்தை யொத்தவர்களும் வட வாக்கினிபோல எரியும் விழியையுடைவர்களும், மாறுபட்ட கோபத்தையுடைய வர்களும், ஆகாயமளாவிய தலையையும் தோள்களிற் பொருந்திய இடியொலி போன்ற மிக்க முழக்கத்தையுடையவர்களுமாய் நெருங்கி ஒருசேரச் சூழ்ந்து கொண்டார்கள். எ - று. (௯௨)

கல்லெனக் கலிக்குஞ் சேனை யளவையிற் கண்ணு றுவா
வொல்லென வொலிக்கு மோதை யும்பருந் துணுக்கங் கொண்டார்
வில்லினர் வயிர வாளர் தினவுறு வீரத் தோளார்
பல்லியந் துவைப்பப் போந்தார் படுகடல் பருகும் வாயார்.

(இ - ள்.) கல்லென்று முழங்குஞ் சேனையானது அளவைக் குட்படாதது. ஒல்லென்று சத்திக்கும் ஓசைப்பெருக்கினால் தேவர்களும் அச்சமெய்தினார்கள். வில்லேந்தியவர்களும் வச்சிரவாளைத் தாங்கியவர்களும் தினவெடுக்கும் வீரந்தங் கிய தோளையுடையவர்களும், ஆழமாகிய கடலைப்பருகத்தக்க வாயைவாய்ந்தவர் களுமாகப் பலவகை வாத்தியங்கள் கோஷிக்க நடந்தார்கள். எ - று. (௯௩)

ஏந்துறு முலகை மீரே ழோர்கரத் தெடுத்துக் கொள்வார்
காந்துறு தெறுகட் டீயாற் கருங்கடல் சுவற்றுந் தீயோர்
பாந்தளின் மகுட கோடிப் பருமணி பறிக்குங் கையார்
போந்தனர் கடலங் தானைப் பொருந்திறற் றலைவர் யாரும்.

(இ - ள்) ஆதிசேடன் தாங்கிய பதினான்குலகங்களையும் ஒரேகையில் எடுத்துக்கொள்ளத் தக்கவர்களும், காந்துந்தன்மை பொருந்திய கொடியகண்ணினிலுள்ள அக்கினியாற் கரிய சமுத்திரத்தையும் வறளச்செய்யத்தக்க கொடியவர்களும், ஆதிசேடனுடைய கிரீடகோடிகளிலமைந்த பருத்த சிரோரத்தினங்களைப்பறிக்கத்தக்க கையையுடையவர்களுமாக அழகிய சமுத்திரத்தை யொத்த சேனையாகிய போர்புரியத்தக்க வல்லபமுடைய போர்வீரர்களெல்லாரும் வந்தார்கள். எ - று. (௧௫௪)

எண்ணருங் கணக்கி னீத்த வெட்குவை யெண்ணிட் டாலுங்
கண்ணுதற் கரிய சேனைக் கருங்கடல் பரந்த தம்மா
வண்ணவான் கொடிக்கோட் டிஞ்சி மணிநெடு வாயி னீப்பார்
திண்ணெடுந் திரைகொண் டாடுங் கடன்மடை திறந்த வாபோல்.

(இ - ள்.) கணக்கிடுதற்கரிய தொகையிற்கழிந்த எட்குவியலைக் கணக்கிட்டபோதிலும், கணக்கிடற்கரிதாகிய சேனையாகிய கரியகடலானது பரவியது. குளிர்ச்சிவாய்ந்த நெடிய அலைகளால் அசைந்துகொண்டிருக்கும் சமுத்திரமானது மடைதிறந்து பாய்ந்தாற்போல, அழகிய ஆகாயமளாவிய கொடிகள் கட்டிய சிகரத்தையுடைய மதிலின் அழகிய நெடியவாயிலைக் கடப்பாராயினர்.

சில்லியங் கொடிஞ்சித் தேரோ திரைபொரும் புரவிக் காடோ
செல்லென முழங்கும் பூட்கைச் சிறுவிழிச் சிகரக் குன்றோ
மல்லலந் திரடோள் வீர வயவரோ மிகுதி யோர்வான்
றொல்லையம் புலவர்க் கேனு மரிதெவர் தொகுக்கற் பாலார்.

(இ - ள்.) அழகிய சக்கரத்தையும் மொட்டினையுமுடைய இரதங்களோ? அலைகள்போல வரிசையாகவரும் திரகத்தொகுதியோ? வளந்தங்கிய அழகிய திரண்ட தோளையுடைய காலாட்களோ? இச்சேனையிற் பெருந்தொகையென்றுணர்தற்கு, பழமையாகிய தேவர்களுக்கானாலும் அரிதாகுமானால், வேறெவர்தாம் அளவிட்டுச் சொல்ல வல்லவர்? எ - று. (௧௫௬)

வாளினர் சிகரி யேந்துங் கரத்தினர் வயிர மேருத்
தோளின ருவரி யேழுஞ் சுவற்றுறப் புறத்தா லெற்றுந்
தாளினர் மறலி யேனுந் துணுக்குறும் வயிரத் தண்டார்
கோளிளம் பிறைபூத் தோங்கு மழைமுகிற் குழுவை யொப்பார்.

(இ - ள்) வாட்படையேந்தியவர்களும், மலைகளைத்தாங்கிய கைகளையுடையவர்களும், வச்சிரத்தம்பம்போலும் மேருவரைபோலும் விளங்குந் தோளைத்தாங்கியவர்களும், சத்தசமுத்திரங்களும் வறண்டுபோக வெளியே யெற்றத்தக்க காலைவகித்தவர்களும், இயமனேயென்றாலும் (எதிர்த்தகாலத்தில்) அஞ்சத்தக்க வச்சிரதண்டம் பிடித்தவர்களும், வலிய இளம்பிறைச் சந்திரன் பிரகாசித்து விளங்கும் சூல்கொண்ட மேகசாலம்போன்ற (வக்கிரதந்தம் பிரகாசிக்கும் கரிய உடலையுடைய)வர்களும் (ஆக.) எ - று. (௧௫௭)

அளவெழு வயவெஞ் சேனை மதிளகத் தளவை நீத்த
கிளைபடு வயிரத் தோளா னுருமெனக் கிளத்துஞ் சொல்லான்
வளையெயிற் றசுரர் கோமான் வாளரி மடங்கல் போல
விளைசினஞ் சுறுக்கொண் டேற வெள்ளிடை யெழுந்து போந்தான்.

(இ - ள்.) கணக்கிறந்த வெற்றிபொருந்திய வலியசேனையானது மதிலிடத்தின் எல்லையைக்கடந்தது. கிளைபட்ட வச்சிர தம்பம்போன்ற தோளையுடையவனும் இடிபோலக் கர்ச்சித்துப்பேசுங் குரலையுடையவனும், வளைந்த பற்களையுடைய அசுரர் தலைவனுமாகிய வாணாசுரன், ஒளிதங்கிய ஆண்சிங்கம்போல உண்டாகிய கோபமானது விரைந்து அதிகரிக்க வெளியே புறப்பட்டு வந்தனன்.

பீதகப் பசும்பட் டாடை மருங்கொடும் பிறழ வீக்கி
மீதகக் கொய்யஞ் சாத்திக் கொடுக்கிரு மருங்கு வீழ்த்துத்
தீதகு வயிர வொள்வாள் கச்சொடுஞ் செறிந்து வானத்
தாதவற் கிழிவு காட்டுங் கனைகழ லடியிற் சேர்த்தி.

(இ - ள்.) பசும்பட்டாகிய பீதகவாடையை இடையிலே பிறழும்படி கட்டி மேலே கொய்சகமணிந்து, கவைத்தாளை யிருபுறத்திலும் விழுத்தி, நெருப்புப்போன்ற வச்சிரவாளை அரைக்கச்சுடன்கட்டி, ஆகாயத்திலுள்ள சூரியனுக்கும் இழிதகைமையைக் காட்டத்தக்க சத்திக்கின்ற வீரகண்டாமணியைத் தன் காலில் அணிந்துகொண்டு. எ - று. (௧௬௯)

மனவிழைத் தியற்று வாகு வலயமார் குவட்டுத் தோண்மேற்
றினவுதேய்த் திடுவ போலக் கிம்புரிக் கடகஞ் சேர்த்தி
வனைமணித் தொகுதிச் சன்ன வீரமு மாறிச் சாத்திப்
புனைமணித் தடந்தோ ணக்கிக் குண்டலம் புரளா நின்றான்.

(இ - ள்.) இரத்தினங்க ளிழைத்துச்செய்த வாகுவலயம் புனைந்த தோளின்பேரில், தினவைத்தேய்த் தகற்றுவனபோலக் கிம்புரிக்கடகந்தரித்து அலங்கரிக்கின்ற நவமணித்தொகுதியாலாகிய சன்னவீரத்தையும் மாறுபடவணிந்து, குண்டலமானது அழகமைந்த பரந்ததோளை வருடிப்புரளும்படிபூண்டு விளங்கினான். எ - று. (௧௭௦)

இனமணித் தொகுதிக் காந்தி வேறுவே றிமைத்துக் காட்ட
வனமணி மகுடஞ் சாத்திப் பட்டமு மருகு வீக்கிப்
புனைவிரற் சரடு கோதை வலமிடம் புதையப் போர்த்தான்
முனைமுகப் பகழி யோயாத் தூணியு முதுகு சேர்த்தான்.

(இ-ள்.) வெவ்வேறினமாகிய இரத்தினத் தொகுதிகளின் பிரகாசமானது கூட்டங்கூட்டமாகப் பிரகாசித்துக் காட்டும்படி அழகிய நவரத்தின கிரீடமணிந்து, அதற்கருகே பட்டத்தையுமணிந்து, விரலினாலே சரட்டிற்புனைந்த மலர்மாலையை வலமிடமாகப் புதைபடும்படி தரித்தான். போர்முகத்திலே அம்புகள் நீங்காத அம்பறாத்தூணியையும் முதுகிற்கட்டினான். எ - று. (௧௭௧)

தற்பொதி சேமத் தோரோ ராயிரந் தழுவச் சொற்றான்
விற்படை நூற்றுப் பத்தின் மேலென விளம்பி விட்டான்
கொற்படை நெடுவே றேட்டி தோமரங் கொடுவா ணேமி
பற்படை யமைக்க வென்றான் றன்னுடைப் பரவைத் தேர்மேல்.

(இ - ள்.) தன்னைச்சூழ்ந்து மறைத்துள்ள ஓராயிரஞ் சேமத்தேர்கள் அடையும்படி உத்தரவளித்தான். அன்றியும் ஆயிரத்திற் கதிகமான விற்படைகளையும், கொல்லத்தக்க நெடியவேலாயுதங்களையும் தோட்டி தோமரம்கொடுவாள் சக்கரமுதலிய பலவகை ஆயுதங்களையும் தன்னுடைய பரவுதலமைந்த தேரின்மேல் அமர்த்துகவென்று சொல்லிவிட்டான். எ - று. (௧௪௨)

தன்னுடைக் கோயி னீங்கி வாயிலிற் றழுவச் சார்ந்தா
னென்னையா ளுடைய கோமா னிருந்துழி யெதிர நின்றான்
பொன்னவி ரலங்கு வேணிப் புங்கவ போற்றி யென்று
நின்னல தமர்க்கு யானே யேகல னிமல வென்றான்.

(இ - ள்.) தன்னுடைய அரண்மனையைவிட்டுநீங்கி வாயிலையடையவெளிச் சார்ந்தான். என்னை யடிமையாகவுடைய சிவபெருமான் எழுந்தருளிய விடத்திலே நேராக நின்றவனாகி, பொன்போலப் பிரகாசித் தசைகின்ற சடையையுடைய சிவபெருமானே! போற்றியென்று துதிசெய்து, மலரகிதனே! தேவரீரையன்றி யானொருவனாகவே போருக்குப்போக மாட்டேனென்று விண்ணப்பித்தான். எ - று. (௧௪௩)

பூங்குழ லுமையை நீக்கிப் புகர்முகப் பிள்ளை யோடும்
வாங்குவேற் குமர னோடு மன்னிய கணத்தி னோடும்
வீங்குநீ ரொலிக்கும் வேணி விண்ணவர் பெரும வின்னே
யாங்கணுற் றடைதி யென்ன வெழுந்தன னசுர னோடும்.

(இ - ள்.) பெருக்கெடுத்த கங்காசலமானது கோஷிக்கின்ற சடையையுடைய தேவநாயகராகிய சிவபெருமானே! மலரணிந்த கூந்தலையுடைய உமாதேவியாரை யிங்கேநீக்கி, புள்ளிகளமைந்த யானைமுகமுடைய மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுளோடும், வேற்படையேந்திய இளையபிள்ளையாராகிய முருகக்கடவுளோடும், நிலைபெற்ற சிவகணங்களோடும், இப்பொழுதே போர்முகத்திற்கு வந்தருள்கவென்றுவேண்ட, சிவபெருமான் வாணாசுரனோடும் எழுந்தருளினர். எ - று. (௧௪௪)

கொடிநகர்ப் புரிசை வாயிற் கோனகர் பிறகிட் டேகி
நெடுமுடிச் சிகரத் திண்டே ரேறின னிமிர்ந்த சேனை
யடுகொடிச் சேமத் திண்டே ராயிர மருங்கு சூழ்ந்த
துடியிடத் தோளை நோக்கிச் சுறுக்கொளச் சினக்குஞ் சொல்லான்.

(இ - ள்.) துவசங்கள் கட்டிய நகர்மதிலையும் வாயிலையும் சிறந்த நகரத்தையும் பின்றச்சென்று, நீண்டமுடியமைந்த சிகரத்தையுடைய வலியதேரின்மீதேறினன். சைனியங்கள் புறப்பட்டன. கொல்லத்தக்க கொடிகள் கட்டிய வலிய ஆயிரஞ் சேமத்தேர்களும் பக்கலிற் சூழ்ந்துகொண்டன. அப்பொழுது, துடிக்கின்ற தன்னிடது தோளைப்பார்த்துக் கோபச்சொல்லையுடைய வாணாசுரன் விரைந்து. எ - று. (௧௪௫)

வாரிதி யமலை நீக்கி மாதிர மதிர வீக்கும்
பேரிய மதிர மற்றைத் திமிலையோ பிறங்கா நின்ற
தூரியங் கறங்கப் பம்பை துடியொடு முழவ மார்ப்பக்
காரிணை ரோதி மாதர் கவரிகா லசைப்பச் சென்றான்.

(இ - ள்.) கடன் முழக்கையகற்றி, எண்டிசைகளும் அதிரும்படி வாரிறுக்கிய பெரிய வாச்சியங்கள் முழங்கவும், திமிலை முதலிய அழகுவிளங்கும் வாத்தியங்கள் ஒலிக்கவும், பம்பை உடுக்கை மத்தளம் ஆகிய இவைகள் சத்திக்கவும், மலர்க்கொத்துக்களையணிந்த கரியகூந்தலையுடைய மங்கையர் இருபுறத்திலும் சாமரையிரட்டவும் வாணசுரன் சென்றான். எ - று. (கசசு)

சேயிதழ்க் கமல பீடத் தந்தணன் முதல தேவ
ராயிர நயனம் பூத்த விந்திர னரம்பை நல்லார்
மீயுயர் விசும்பு மொய்த்தா ரெதுகொலோ விளைவ தென்று
நாயகத் துளவத் தாற்கே நல்வினை பயக்க வென்றார்.

(இ - ள்.) சிவந்த இதழ்களையுடைய தாமரைமலர்ப் பீடத்தி லெழுந்தருளிய பிரமன் முதலான தேவர்களும், ஆயிரங்கண்கள் பிரகாசிக்கும் தேவேந்திரனும், தேவஸ்திரீகளாகிய நல்லவர்களும் யாதுவிளையுமோவென்றுமனதிற்கருதி, மேலோங்கிய ஆகாயவீதியில் நெருங்கியவராகி, துளசிமாலையணிந்த நாயகனாகிய திருமாலுக்கே நன்மையுண்டாகட்டுமென்று பிரார்த்தித்து நின்றார்கள். எ-று.

எதிர்ந்தன விருபாற் றானை யெதிரெழு மமலை தாக்கி
யதிர்ந்தன திசைக ளெட்டு மதிர்குர லாழி காலாற்
பிதிர்ந்தன வவனி யண்டம் பிளந்தன பிறங்கு வைவாள்
விதிர்ந்தன திமிலத் திண்போர் விளைத்தனன் விளைவ தோரான்.

(இ - ள்.) இருபக்கலிலுள்ள சேனைகளும் ஒன்றோடொன் றெதிர்ந்தன. அப்படி யெதிர்த்தெழுந்ததனாலுண்டாகிய பேரொலியானது தாக்கி அஷ்டதிசைகளும் அதிர்ந்தன. ஒலிக்கின்ற குரலையுடைய கடலைக்காலாற் பிதிர்படுத்தின. உலகமும் அண்டகடாகமும் பிளவுபட்டன. பிரகாசிக்கின்ற கூர்மைவாய்ந்த வாட்படைகள் அசைந்தன. மேல்விளைவ தின்னதென்றுணராதவனாய் வாணசுரன் வலிதங்கிய போர்புரிவானாயினன். எ - று. (கசஅ)

எறிந்தனர் கொடுங்கூர் வாளி யெய்தன ரிடைய றாமற்
செறிந்தனர் திகிரி யாழி செலுத்தினர் சிகரத் திண்டோண்
முறிந்தன ரெயிறு தீண்டி முறுக்கின ரசுரர் வாங்கிப்
பிறிந்தில விருபாற் றானை பெருகின குருதி வெள்ளம்.

(இ - ள்.) அக்காலத்தில், அசுரர்கள் வில்லைவளைத்து நாணொலியெறிந்து வலிய கூர்மைவாய்ந்த அம்புகளையெய்தினார்கள். இடைவிடாமற் றொடர்ந்து நெருங்கினார்கள். வட்டவடிவாகிய சக்கிராயுதத்தைப் பிரயோகித்தார்கள். உயர்வாகிய வலிய தோள்கள் முறிபட்டார்கள். பற்களை யிறுக்கி முறுக்கினார்கள். இருபக்கத்துச் சேனைகளும் நீங்காதனவாகிப் போர்புரிய உதிரப்பெருக்குப் பிரவகித்தோடியது. எ - று. (கசகூ)

கலிநிலைத்துறை.

சிகர மால்வரை யெடுத்தனர் தெழித்த ருலா
ரகனி லப்பட விடுத்தன ரரக்க ரதனைத்
தகரு மாறுபல தண்டமொ டுதண்ட மிடனுங்
ககன நின்றமரர் கைத்தலம் விதிர்த்த னர்களால.

(இ - ள்.) அரக்கர் உச்சியையுடைய பெரியமலைகளைப்பறித்தெடுத்து ஆர்ப்பரித்த குரலோடு, அகன்ற பூமியிற்படும்படி யெறிந்தார்கள். அப்படி அவர்கள் விடுத்தனவற்றை யுடைபடும்படி பல தண்டாயுதங்களால் துண்டங்களாகச் செய்யவும்; ஆகாயத்திலிருந்த தேவர்கள் கைகள்நடுங்கினார்கள். எ - று. (௧௩௰)

நீறு செய்தன ரெடுத்தெறி நெடுஞ்சி கரியைக்
கூறு செய்தனர் குறித்தன ராக்கர் கொடியோ
ரேறு முத்தலை யயிற்படை யெடுத்தெ றிதலும்
பாறி விட்டது துழாயவன் விடுத்த படையே.

(இ - ள்.) நீறணிந்த அரக்கர்கள், எடுத்தெறிந்த பெரிய மலைகளைப் பொடிபடுத்தியதை யாலோசித்து அக்கொடியோர் பகைஞர்மேற்செல்லத்தக்க முத்தலைச்சூலாயுதத்தை யெடுத்துஎறியவும், துளசிமாலை யணிந்த கண்ணபிரான் சேனை ஓடிப்போயிற்று. எ - று. (௧௩௧)

கொக்க ரித்தநி ருதக்குல நகைத்த குரலா
லக்க ரிக்கட லடங்கிய தறிந்த துளவோன்
புக்க தேரொடு புகுந்தன னதிர்ந்த தவனி
செக்க ரொத்தலை வுகுஞ்சிய ரெதிர்ந்து செலலும்.

(இ - ள்.) கொக்கரித்துக்கொண்டிருந்த அசுரக்கூட்டத்தின் சிரித்த குரலினால், தமதுசேனைக்கடல் அடங்கிய செய்தியை யுணர்ந்த துளசிமாலை தரித்த கண்ணபிரான், போர்க்கோலங்கொண்டெய்திய இரதத்தோடு போர்க்களம் புகுந்தனர். அப்பொழுது பூமி யதிர்ந்தது. செவ்வானத்தையொத்து விளங்குந் தலைமயிரையுடைய அரக்கர்கள் எதிர்த்துவரவும். எ - று. (௧௩௨)

தாளி ழந்தனர் தனித்தலை யிழந்த னர்துணைத்
தோளி ழந்தனர் நெடுங்குடர் துறந்த னர்களான்
மூளை சிந்தினர் முடித்தலை நெரிந்த னர்பொருங்
கோளி ழந்தனர் கொடிக்குடை யிழந்த னர்களால்.

(இ - ள்.) அப்படி யெதிர்த்தவர்களில் அநேகர்தாளிழந்தார்கள். தனித்தனி காலிழந்தார்கள், தலையறுப்பட்டார்கள். இருதோள்கள் வெட்டுப்பட்டார்கள். நெடிய குடரறுபட்டார்கள். மூளையை யிழந்தார்கள். கிரீடமணிந்த தலைகள் நறுக்கப்பட்டார்கள். போர்புரியும் வல்லபமழிந்தார்கள். கொடிகளையுங் குடைகளையும் போக்கடித்தார்கள். எ - று. (௧௩௩)

வெள்ளெ யிற்றவுணர் வாளிபட விண்ண மளவுந்
துள்ளி யோடினர் தெறித்தனர் துளைக்கை மதமாக்
கொள்ளை வெம்பக ழிதைத்துல வைகுத்த விழுமாற்
கள்ள விழ்ந்ததுள வோனெடி யகைச்சி லையினே.

(இ - ள்.) வெள்ளிய பற்களையுடைய அவுணர்கள், தேன்சொரிகின்ற துளசிமாலை யணிந்த கண்ணபிரானுடைய நெடிய கையிலேந்திய வில்லி னின்று புறப்பட்ட அம்புகள் படுதலால், ஆகாயம்வரையில் துள்ளியோடினார்கள். தெறித்துப்போனார்கள். அப்பொழுது தொளைபொருந்திய கையையும் மதத்தையுமுடைய யானைகள் கூட்டமாகிய கொடிய அம்புகள் பாய்தலால், தமது கொம்புகள் குத்திக்கொள்ள நிலத்தில் விழுந்தன. எ - று. (௧௩௪)

மத்த மாகரி பிளந்தன வயப்பு ரவியு
மொய்த்த கொய்யுளை நெடுங்கள முறிந்து விழுவ
தத்து வெண்டிரை புரண்டகு ருதிச்ச லதிவாய்ச்
சித்தி ரக்கொடி நுடங்குபல தேர்தி ரியுமால்.

(இ - ள்.) பெரிய யானைகள் மத்தகம் பிளவுற்றன. வெற்றிதங்கிய குதிரைகளும் நெருங்கிய கத்தரித்த புறமயிரோடு நெடிய போர்க்களத்திலே முறிந்து விழுந்தன. மோதுகின்ற வெள்ளிய அலையோடு புறண்ட உதிரக்கடலில், சித்திரங்கள்செய்த துவசங்கள் அசையும்பல இரதங்கள்திரிந்துகொண்டிருந்தன. எ-று

ஆழி யற்றசில தேர்செருகு மச்சு முறியப்
பூழி பட்டசில தேர்தரை புரண்ட சிலதே
ரூழி வெங்கட லெனத்திரை யுகண்ட குருதிப்
பாழி யாறொடுங் கண்டுவரி புக்க பலதேர்.

(இ - ள்.) சிலதேர்கள் சக்கிரங்களொடிந்தன. சிலதேர்கள்செருகிய அச்சுக்கட்டை முரிப்பட்டமையிற் புழுதிபட்டழிந்தன. சிலதேர்கள் நிலைதவறித்தரையிற் புரண்டன. ஊழிக்காலத்தி லுண்டாகும் பெருங் கடற்பெருக்குபோல, அலைகள் புரளும் பெரிய உதிரநதியோடுங்கூடிப் பலதேர்கள் கடலிற் புகுந்தன.

கண்மெட றித்தனர் மணித்தலை தெறித்த னர்கதிர்க்
குண்ட லம்பல தெறித்தனர் குனித்த சிலையோ
டெண்ட ருங்கர மிழந்தன ரிழந்த வுயிரைச்
சண்ட னுண்டுவகை தந்துநட னம்பு ரிவனால்.

(இ - ள்.) சில போர்வீரர்கள் தங்கள் கண்கள் தெறிபட்டார்கள். அழகிய தலைகளறுபட்டார்கள். கிரணங்களையுடைய பலகுண்டலங்கள் பறிபட்டார்கள். வளைத்தவில்லோடு எண்ணுதற்கரிய கைகளை இழந்தார்கள். அவரில் இறந்தவுயிர்களை இயமன்பருகிச் சந்தோஷமெய்தி நடனஞ்செய்வானாயினான். எ - று.

வாளி யொன்றுசில மாகளிறு தேர்பு ரவியைத்
தூளி கண்டுருவி யெண்டிசை தொடர்ந்து செலுமா
லாளி மொய்ம்பரை யரக்கரை யமுக்கி யழல்வாய்க்
கூளி செங்குருதி யிற்குமிழி பொங்க விழுமால்.

(இ - ள்.) ஒவ்வோரம்புஞ் சில பெரிய யானைகளையுந் தேர்களையுங் குதிரைகளையுந் தூள்படுத்தி ஊடுருவி யெட்டுத்திசைகளிலுந் தொடர்ந்து செல்லும். தீப்பொருந்திய வாயையுடைய பூதங்கள், யாளிபோலும் வலிமையுடைய அரக்கரிலிறந்தாரை யமுக்கிக்கொண்டு செவ்விய வுதிரப்பெருக்கிற் குமிழிகளுண்டாம்படிக்கு வீழாநிற்கும். எ - று. (௯௮)

அம்பொ ராயிர மரக்கரை யறுக்கு மழல்வா
யம்பொ ராயிர மதக்களி றறுக்கு மெரிவா
யம்பொ ராயிர மடற்பரி யறுக்கு மகல்வா
யம்பொ ராயிர மறுப்பதி ரதத்தி னையரோ.

(இ - ள்.) ஒவ்வோரம்புகள் ஆயிரமரக்கர்களை யழிக்கும். தீவாயமைந்த வொவ்வோரம்புகள் மதப்பெருக்குடைய ஆயிரம் யானைகளைக்கொல்லும். எரிகின்

றவாயையுடைய வொவ்வோரம்புகள் வெற்றிபொருந்திய ஆயிரங் குதிரைகளைச் சங்கரிக்கும். அகன்ற வாயையுடைய வொவ்வோரம்புகள் ஆயிரந் தேரினை யழிப்பதுமாயின. எ - று. (௧௫௯)

தேரி ழந்தனர் சினப்பரி யிழந்த னர்சினக்
காரி ழந்தனர் கதிர்ப்படை யிழந்த னர்களாற்
றாரி ழந்தனர் தனிக்கழ லிழந்த னர்வயப்
போரி ழந்தனர் புகுந்திற லிழந்த நிருதர்.

(இ - ள்.) போருக்குப்புகுந்த வல்லபத்தைக் கண்ணபிரான் அம்பினாலிழந்த அரக்கரில், அனேகர்தங்கள் தேரையிழந்தார்கள். கோபம்பொருந்திய குதிரைகளை விடுத்தார்கள். கோபத்தையுடைய அழகையொழிந்தார்கள். ஒளிவீசுகின்ற ஆயுதங்களைப் போக்கடித்தார்கள். வெற்றிமாலைகளறுபட்டார்கள். ஒப்பற்ற வீரகண்டாமணியைத் துறந்தார்கள். வெற்றிபொருந்திய போர்புரியுமாற்றலை யகன்றார்கள். எ - று. (௧௬௦)

வண்டு றாயவன் விடுத்தசர மாரி யதனைக்
கண்டு நெஞ்சிறை கலங்கில னணிந்த கழலோன்
றுண்ட வெண்பிறை யெயிற்றழல் சுறுக்கொ ளநெரித்
துண்ட வெஞ்சின முருத்தெழ வுருத்த னனரோ.

(இ - ள்.) வளந்தங்கிய துளசிமாலை யணிந்த கண்ணபிரான் பிரயோகித்த அஸ்திரவருஷத்தைக்கண்டு சிறிதும் மனது கலங்காதவனாகி வீரக்கழலணிந்தவாணாசுரன் வெள்ளிய பிறைத்துண்டம்போன்ற பற்களைத் தீப்பொறிசிந்தக் கடித்துத் தன்னை விழுங்கிய பெருங்கோபமானது உருத்தெழக் கர்ச்சித்தனன். எ - று.

விடுக தேரென வெகுண்டனன் வெகுண்டு விடலுந்
தொடுபி ணக்குவை நெரித்தது தொடுத்த திகிரி
யடுப டைத்தலைவ ராவியிழ வாரு மழிவார்
கொடுவி னைத்தொகை விளைப்பது குறிக்க வசமோ.

(இ - ள்.) தேரினைச் செலுத்துகவென்று கோபித்தனன். அப்படிக் கோபித்துத் தேரைச் செலுத்தவும் பிணக்குவியல் நிறைந்தது. அத்தேரிற்பூட்டிய சக்கிரத்தால் கொல்லத்தக்க ஆயுதமேந்திய யுத்தவீரரி லுயிரிழக்காதவர்களு மிறப்பாரானார்கள். தீவினைச்செயல்செய்யுங் கருமத்தை யளவிட்டுரைப்பது சாத்தியமாகுமா? எ - று. (௧௬௨)

சேம மாயிர மெனப்புடை வளைந்து செறிதேர்
வாம முற்றுற வளைந்தனன் வயப்ப டையொடுந்
தாம வார்சிலை குனித்தொரு தழற்க ணிருதன்
வேம னத்தொடு முருத்தெழ முழங்கி வெகுள்வான்,

(இ - ள்.) ஒப்பற்ற தீப்பொறிசிந்துங் கண்களையுடைய வாணாசுரன் தன்னைச் சூழ்ந்து வளைந்து நெருங்கிய ஆயிரஞ் சேமத்தேர்கள் அழகுபொருந்திவர, கண்ணபிரானை முற்றுகைசெய்து மாலைகட்டிய நெடிய வில்லைவளைத்து எரிகின்ற மனத்தோடு இடிபோலக்கர்ச்சித்துக் கோபிப்பானாயினன். எ - று. (௧௬௩)

ஆயி ரத்தினொரு பாதியு மடுக்கு சிலையா
னாயி ரத்தினொரு பாதியி னடற்ப கழியா
னாயி ரத்தலை யனந்தணி லனந்த லெழுவா
னாயி ரப்பெயரி னானெதி ரழன்று புகுவான்.

(இ - ள்.) அடுக்கிய [ஆயிரத்தினொருபாதி] ஐந்நூறு விற்களால் வெற்றி பொருந்திய ஐந்நூறு அம்புகளால், ஆயிரஞ்சிரங்களையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தி லறிதுயில்புரியும் ஆயிரந்திருநாமங்களையுடைய கண்ணபிரானுக் கெதி ரே கோபித்துப் புகுவானாயினான். எ - று. (க௱ச)

தேரி னின்றுதொடை கொட்டியுரு மொத்த செயலிற்
போரு வந்தெதிர் முழங்கின னதிர்ந்த புவனம்
வீர மங்கலை கறுத்தனள் வெறுத்தொ ருவினாள்
வார்த டம்புய மிடத்தொடு துடித்த வலையம்.

(இ - ள்.) வாணாசுரன் தன்தேரிலிருந்து தொடையைத்தட்டி இடிபோன்ற முழக்கத்தோடு யுத்தாபேட்சையெய்தி யெதிரே கர்ச்சித்தனன். அதனால் உலக மதிர்ந்தது. வீரலட்சுமிமனங் கொதித்தனள். அவளைவெறுத்து அப்பொழுதே நீங்கினாள். நெடிய விசாலமான தோள்கள், பூண்டிருந்த வலயத்தோடு இடப்புறத் தே துடித்தன. எ - று. (க௱ரு)

வட்ட வார்புய றுளிக்குருதி மாரி சிதறக்
கட்டு வெம்புரவி குன்றியொரு கண்க ளுழுமா
லெட்டி ருஞ்சிறைய கங்கமிவ னேறி ரதநீண்
மொட்டி ருந்தயல் வெள்ளிடை முயங்கி யதுவால்.

(இ - ள்.) வட்டவடிவமாகிய நெடிய புயல்கள் உதிரத்துளிகளாகிய மழை யைச்சொரியவும், தேரிற்பூட்டிய கொடிய குதிரைகள் வலிமைகுறைந்து ஒருகண் களாலழவும், நீண்டு பெருத்த சிறகையுடைய பருந்துகளிவனேறிய நீண்டதேரின் மொட்டிலிருந்து சமீபத்தே முழக்கஞ்செய்தன. எ - று. (க௱சா)

ஆது ணர்ந்துவிளை புன்னகை யமைத்த பெருமான்
மாது பங்கனை யடைந்தனன் வணங்கி மொழிவான்
றீது புன்குறி யெழுந்ததிகல் செய்வ னினிமே
னீத டுத்தியென நின்றன னழன்ற நிருதன்.

(இ - ள்.) அதனை யுணர்ந்துண்டாகிய புன்னகையை யடக்கிய தலைவராகிய உமாதேவிபாகரை, கோபமெய்தியிருந்த வாணாசுரன் சமீபித்துப்பணிந்து சொல் லுகின்றான். தீமைபயக்குந் துஸ்சகுனங்கள் தோன்றின. யான் போர்புரிவேன் தேவரீரினிமேல் சத்துருக்களைத் தடுப்பீராகவென்றுகூறி நின்றனன். எ - று.

அந்தி வெண்பிறை யணிந்தரு நடம்பு ரிபிரான்
றந்தி மாமுகனை நீயிது தடுத்தி யெனலுஞ்
சிந்து ரத்தனி முகக்கடவுள் சேற லுணராய்
பைந்து ழாய்முடி யவன்சில பரிந்து புரிவான்.

(இ - ள்.) மாலைக்காலத்தி லுதிக்கும் வெள்ளியபிறைச் சந்திரனைத் தரித்து அரியதிருநடம்பயிலுஞ் சிவபெருமான், தமது மூத்தபிள்ளையாகிய சிறந்த யானை முகக்கடவுளை, நீயிதைத் தடைப்பாயாகவெனக் கட்டளையிடவும் ஒப்பற்ற யானை முகமுடைய விநாயகக்கடவுள்யுத்தகளத்தையடைந்தலைப்பசிய துளவமாலையணிந்த முடியையுடைய கண்ணபிரான் தெரிந்து அன்புகூர்ந்துசில உபசாரங்களை (பின் வருமாறு) செய்வாராயினர். எ - று. (கசுஅ)

ஏன லெட்பொரியொ டப்பமிவை யென்ப வுணரா
மான தப்பெரிய பூசனை வகுத்த வழிபா
டான வர்ச்சனை யயர்ந்தன னயர்ந்த துணராப்
போன சிந்தனை திரிந்துவிளை யாடல் புரிவான்.

(இ - ள்.) [ஏனல்] தினையினால் மோதகமும் எட்பொரியும் அப்பமுமாகிய இவற்றைச் சிந்தித்துப்பெரியமானதமாகிய பூசையை யியற்றிய வழிபாடாகிய அருச்சனையைச் செய்தனர். அங்ஙனஞ்செய்தனவற்றை யுணர்ந்துகொண்டு விநாயகக்கடவுள் தந்தைகட்டளைப்படி சென்றகருத்தினைமாறி, திருவிளையாடல்செய்து கொண்டிருந்தார். எ - று. (கசுகூ)

அன்ன போதவ ணயர்ந்துவிளை யாடி மறுகப்
பின்ன லஞ்சடை முடிப்பிறை முடித்த பெருமான்
மின்னி லங்குசுடர் வேலிளைய காளை யைவிளி
யென்னை நின்செய லெனக்குமர னீது புகல்வான்.

(இ - ள்.) அக்காலத்தில், கணேசப்பெருமான் அங்கேசேர்ந்து திருவிளையாடல்செய்துகொண்டிருக்க, பின்னலாகிய அழகியசடைமுடியின்மீது பிறைச் சந்திரனை முடித்தருளிய சிவபெருமான்,* மின்னலைக்கக்கும் காந்தியுடைய வேலாயுதமேந்திய இளையபிள்ளையாராகிய குமாரக்கடவுளை விளித்து உன்செயல்யாது? எனக்கேட்க, குமாரசுவாமி இதனைக்கூறுகின்றார். எ - று. (களO)

சென்றெ திர்ந்தரி பெரும்படைசி தைந்து மடியக்
கொன்று மீள்வது குறிக்கொளென நின்று தொழுதான்
மன்றல் வார்சடையி னுள மகிழ்ந்த ருளினு
னன்று நன்றென மொழிந்தன னடந்த னனரோ.

(இ - ள்.) இப்பொழுதே சென்று, கண்ணபிரான் பெருஞ் சேனையை யெதிர்த்து அது சிதைவுற்றிறக்கும்படி கொன்று திரும்புவது குறிக்கொள்வீராக வெனக்கூறிநின்று வணங்கினார். மணந்தங்கியநெடிய சடையையுடைய சிவபெருமான் திருவுள்ளமகிழ்ந்து அங்ஙனமேபுரிகவென்றருளினர். குமாரசுவாமியும் நல்லது நல்லதென்று கூறி உடனே நடந்துபோயினர். எ - று. (களக)

தோகை மாமயி லுகைத்தெதிர் தொடர்ந் துபுகலு
மேக வண்ணனெதிர் கண்டுள நடுங்கி வெருவா
மோக முற்றவ னருச்சனை முயன்று புரிய
வாகை வேன்முருக னன்னவை யிரங்கி மதியர்.

(இ - ள்.) கலாபத்தையுடைய பெரிய மயில்வாகனத்தி லாரோகணித்து, சேனையைநோக்கி எதிர்முகமாகப்புகவும், மேகவண்ணராகிய கண்ணபிரான் எதி

ரிற்பார்த்து மனநடுக்கெய்திப் பயந்து, மோகித்து, பிரயத்தினத்தோடு அருச்சனைசெய்ய, வெற்றிமாலையணிந்த வேற்படையேந்திய முருகக்கடவுள் அவ்வருச்சனையை மனமிரங்கி மதித்து. எ - று. (கஎஉ)

வெய்ய வெஞ்செரு விளைப்பவ ரெனச்சு லவினுன்
செய்ய பைந்துளவி னேனஃ துணர்ந்து தெளியா
வைய போகுதி யெனப்புகல வாறி ருதடங்
கையி னுனும்வெரு வுற்றவரி னின்று கழல்வான்.

(இ - ள்.) கொடுமைதங்கிய வலியபோர்செய்பவரைப்போல உலாவினூர். செழுமை தங்கிய பசியதுளசிமாலையணிந்த கண்ணபிரான் அதனைத் தெளிந்துணர்ந்து ஐயனே! இனிச்செல்கவென்று வேண்டி, பரந்த பன்னிரு திருக்கரங்களையுடைய குமாரசுவாமியும் பயந்தவர்போல அங்குநின்று திருப்பிச் சென்றனர். எ - று. (கஎகூ)

தும்பி மாமுகனும் வாகைபுனை தந்த சுடர்வேற்
றம்பி யுஞ்சமர் மறுத்தனர் தழற்க ணிறைவா
வெம்பு வெஞ்சமர் விளைத்தியென வெய்ய நிருதன்
நம்ப னைத்தொழுது பற்பல நவிற்றி னனரோ.

(இ - ள்.) துதிக்கையையுடைய யானைமுகக்கடவுளும், வெற்றிமாலையணிந்த ஒளிவிடும் வேற்படையேந்திய இளையபிள்ளையும் போர்புரிய மறுத்தார்கள். ஆதலால், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானே! தேவரீரே அவர்களையெதிர்த்து, தன்புறத்தக்ககொடிய போரினைச்செய்வீராகவென்று கொடியவாணுசுரன், சிவபெருமானைவணங்கிப் பற்பலவார்த்தைகள் சொல்லினன். எ - று. (கஎச)

ஆது ணர்ந்துயி ரளித்தருளு மெந்தை பெருமான்
காது வெஞ்சமர்வி ளைப்பது கருத்தி னுணராப்
பூதமைந் தும்வெரு வப்படு களம்பு குதலும்
மாத வன்சிறி துணர்ந்தெதிர் வணங்கி மொழிவான்.

(இ - ள்.) ஆன்மாக்களைக் காத்திரட்சிக்கும் எமதுதந்தையாகிய சிவபெருமான், அதனையறிந்து, மோதத்தக்க வலிய போர்புரிவதைத் திருவுள்ளத்திற் கருதி, ஐம்பெரும்பூதங்களும் அஞ்சும்படி யுத்தபூமியிற் பிரவேசிக்கவும், கண்ணபிரான் சிறிது யோசித்துப் பணிந்து நேர்நின்று சொல்லுகின்றார். எ-று. (கஎரு)

ஐய நீயுயி ரனைத்தையு மளித்து தவினுய்
பொய்யில் கேள்விய ரகத்தருள் புரிந்து புகுவாய்
வெய்ய னன்னவை யழித்தற வெகுண்டு முனிவா
னெய்தி னன்னது துடைப்பனின தின்ன ருளினல்.

(இ - ள்.) ஐயனே! தேவரீர் எல்லாவுயிர்களையும் படைத்தருளினீர். பொய்மையில்லாத நூற்கேள்வியுடையோர் உள்ளத்தின்கண் திருவருள்செய்து விளங்குவீர். கொடியோனுகிய வாணுசுரனுடைய தீமைகளை யொழித்து மிகப்பதைத்துக் கோபித்துப் போருக்குவந்தனன். அவன்போரைத் தேவரீர் இனிய திருவருளால் அகற்றுவேன். எ - று. (கஎசு)

மாய னீயுனு மாயையென வந்த னனியான்
றாய நீயிறை புலப்படுவ தொல்லு லகில்யா
ஞய வேள்வியிறை நீயளியன் வேள்வி யலனே
பாயி ரப்பனுவ லுக்குமுத னின்ற பரனே.

(இ - ள்.) முகவுரையோடுகூடிய நூலினுக்கு ஆதியாக விளங்குஞ் சிவபெருமானே! நீயே மாயையுடையவன். உன்னுடைய மாயையென்று தோன்றியவன் அடியேன். புனிதமாகிய நீயே தலைவன். பழமையாகிய உலகத்தில் காணப்படுபவன் யான். ஆகிய யாகத்தலைவன் நீ அடியேன் யாகமாயுள்ளவனன்றோ? எ-று. ()

வேழ விற்படை குனித்தவனை நெற்றி விழியாற்
பூழி பட்டெழ விழித்தனை புரம்பொ டியுமா
றாழி வெங்கனன் மடுத்துற நகைத்தனையுனக்
காழி வெம்படை நெடுஞ்சிலை தரிப்ப தழகோ.

(இ - ள்.) கருப்புவில்லையுடைய மலர்க்கணையெய்த மன்மதனைத்திருநெற்றிக்கண்ணினாற் புழுதிபட்டொழியும்படி நோக்கியருளினீர். முப்புரங்களைக்கொடிய பிரளயகாலாக்கினிவாய் மடுத்துண்ணும்படி புன்னகைபுரிந்தீர். தேவரீருக்கு இப்போரில் சக்கரமுதலிய வெவ்விய ஆயுதங்களைத்தாங்கி யுத்தத்திற்கு வருவது அழகாகுமோ? எ - று. (௧௭அ)

என்ற டிக்கடி பணிந்திவை யெடுத்து மொழியக்
கொன்றை யஞ்சடிலி யன்னது குறித்து நகைகூர்
மன்ற லந்துளவி னேய்வருதி யென்ன வரனு
மன்ற வற்கினிய மென்மொழி யறைந்த ருள்செய்வான்.

(இ - ள்.) என்று பலமுறை வணங்கி இத்தகைய சொற்களை யெடுத்துக் கூற, அழகிய கொன்றை மாலையணிந்த சடையையுடைய சிவபெருமான் அதனைக்கருதி, புன்னகைபுரிந்து மணஞ்சொரியும் அழகியதுளசிமாலை யணிந்த கண்ணபிரானே! வருகவென, (கண்ணபிரான் அருகே) வரவும் அப்பொழுது சிவபெருமான் அவருக்கு இனிமையாகிய மெல்லிய சொற்களாற் கூறியருளுகின்றார். எ - று. (௧௭௯)

செந்த ழற்கணிரு தன்செரு வடக்கு வைபெனு
முந்தை நாணிருத னேடிது மொழிந் தனமியா
மெந்த மர்ச்சனை தனக்குரிய நின்னொ டுமியாந்
தந்த போர்சரத மன்றிது தனித்து ணர்குவாய்.

(இ - ள்.) செவந்த தீயைச்சொரியும் விழிகளையுடைய வாணாசுரன் போரை நீயே யடக்குவாயென்று பூர்வத்திலேயே அவ்வாணனுடன் இதனையாம்கூறியுள்ளோம். எம்முடைய அர்ச்சனைக்கு உரித்தாகிய உன்னுடன் யாம் புரிந்த யுத்தம் சத்தியமானதன்று. இதனைத்தனியேநீ யுணரக்கடவாய். எ-று. (௧அ0)

அஞ்ச லஞ்சலினி வெங்கள மடைந்த ழிவுறு
வெஞ்செ ருப்பல வினைத்தியெனில் வேறு கினையே
னஞ்ச மன்னவர் நளிச்செரு வடக்கு தியென
வஞ்சி பாகனை மனக்கொடு வணங்கு துளவோன்,

(இ - ள்.) பயப்படாதே. பயப்படாதே. இனி வெவ்விய யுத்தகளத்தை யெய்தி அழிவற்ற கொடிய பலகைப்போரும் புரிகவென்று கூறினால், வேறொன்றுங் கருதற்க. விஷத்தையொத்த அசுரருடைய தொகுதியாகிய யுத்தத்தையடக்கக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருள, பார்வதிதேவியாரை ஒருபாகத்திலுடைய சிவபெருமானை மனதிற்கொண்டு வணங்கிய துளசிமாலையணிந்த கண்ணபிரான். எ - று. (௧௮௧)

சிந்தை கொண்டரு ளருச்சனை தெரிந்து முறையாற்
றந்து தந்துகர தாமரை குவித்தன னரோ
வெந்தை கண்டுள மிரங்கின னிரங்கு புலவோர்
புந்தி பேருவகை கொண்டரனை நின்று புகழ்வார்.

(இ - ள்.) சிந்தித்துச் சிவார்ச்சனையை யாலோசித்து முறைப்படி மானசிகமாகச்செய்துசெய்து கைகளாகிய தாமரைமலர்களைக் குவித்துப் பணிந்தனன். எமது தந்தையாகிய சிவபெருமான்பார்த்து மனங்கனிந்தனர். மனம்வருந்திய தேவர்கள்மனதிற் பெருங்களிப்பெய்தி நின்று சிவபெருமானைத் துதிபுரிவாரானார்கள். எ - று. (௧௮௨)

மேற்படி வேறு.

கோதை பூட்டினன் குழைவழி நுழைந்துலாங் கருங்கட்
பேதை பாகனும் பினாகமொன் றெடுத்துநாண் டொடுத்தா
னோத ருஞ்சிறு நாணொலி கேட்டலு முலகுங்
கோதி லண்டமுந் திகந்தமுங் குலுங்கின வன்றே.

(இ - ள்.) குண்டலத்தின் வழியே நுழைந்து உலாவத்தக்க கரியகண்களையுடைய உமாதேவி பாகராகிய சிவபெருமானும் உடனே கோதைபூட்டிப் பினாகமென்னும் தமது ஒப்பற்றவில்லையெடுத்து நாணேற்றிட்டனர். சொல்லுதற்கரிய சிறிய [நாணொலி] குணத்தொனிகேட்டமாத்திரத்தில் உலகமும் குற்றமில்லாத அண்டமும் அஷ்டதிசைகளும் அப்பொழுதே நிலைகுலுங்கின. எ - று. (௧௮௩)

பிளந்த தெண்டிசை மேருவே முதலிய பிறங்க
றுளங்க லுற்றன வனந்தனுந் துணுக்கெடுத் தயர்ந்தான்
றளர்ந்த வானவர் முடிபொதி ரெறிந்தன தருணக்
களங்க றுத்தவ னடுசிலைப் பேரொலி கலந்து.

(இ - ள்.) புதுமையாகிய நீலகண்டத்தையுடைய சிவபெருமான், கொல்லத்தக்க பினாக வில்லின் பெரிய குணத்தொனியானது எங்குங்கலந்து அஷ்டதிசைகளும் பிளவுபட்டன. ,,கமேருமுதலிய மலைகள்சலித்தன. ஆதிசேடனுந் துணுக்குற்றுப் பயந்தான். மனந்தளர்ந்த தேவர்கள் கிரீடங்கள் பொதிரெறிந்தன. எ - று. (௧௮௪)

தளைத்த குல்லையோன் றன்னுடைச் சார்ங்கமொன் றெடுத்து
வளைத்து நாணுதி மடுத்தன னொலிப் படுத்தான்
கிளைத்த வண்டமு மெண்டிசைத் தலைவருங் கிளைத்துத்
தொளைத்த பூட்கையுந் துணுக்குற வெழுந்தகத் தொனியே

(இ - ள்.) துளசிமாலையைத்தரித்த கண்ணபிரான் தன்னுடைய சார்ங்கமென்னும் ஒருவில்லையெடுத்து வளைத்து நாணைக்குதையி லேற்றினர். அதனை டங்காரஞ்செய்தனர். இளைப்பட்ட அண்டங்களும் அஷ்டதிக்குப் பாலர்களுந் தொளைபொருந்திய துதிக்கையையுடைய அஷ்டதிக்கஜங்களும் அச்சமெய்தும்படி அந்நாணோசை யெழும்பியது. எ-று. (௧௮௫)

கரந்தை சூடிய கண்ணுதற் றனிமுதற் பரமன்
சரந்தொ டுத்தன னங்கது தடுப்பனென் றுணரាப்
பரந்த பச்சிலைத் துளவினோ னடுசரம் பரப்ப
நிரந்த வையமு மண்டமுஞ் சாமென நிரந்த.

(இ - ள்.) கரந்தைமாலையணிந்த நெற்றிக்கண்ணையுடைய ஒப்பற்ற முதற் கடவுளாகிய சிவபெருமான் அம்பினை விடுத்தனர். பரவியபசிய துளசியிலைமாலையணிந்த கண்ணபிரான் அவ்வஸ்திரத்தைத் தடுப்பேனென்று யோசித்துக் கொல்லத்தக்க அம்புகளைப்பரவச்செய்ய, அவை உலகமும் அண்டமும் அழியுமென்று சொல்லும்படி நிரம்பின. எ-று. (௧௮௬)

இருவ ருந்தொடுத் தெய்தன வடுசர மிமையோர்
கருதி நோக்கலர் கண்புதைத் தலமரு லுற்றார்
பொருதி ரைக்கடற் பரவையு மற்றுள பொருப்பு
மிருநி லப்பெருந் திசைகளுஞ் சாமென லாய.

(இ - ள்.) (கண்ணபிரான் சிவபிரானென்று சொல்லப்படும்) இருவரும் வில்லிற்றொடுத்து எய்தனவாகிய கொல்லத்தக்க அம்புகளைத் தேவர்கள் கருதிக் காணமாட்டாதவர்களாய்க் கண்ணைப்பொத்திக்கொண்டு வருந்துவாரானார்கள். மோதுகின்ற அலையையுடையகடற்பரப்பும் மற்றுள்ளனவாகிய மலைகளும்பெரிய பூமியின் நாற்பெருந்திசைகளும் அழியுமென்று சொல்லும்படியாயின. எ - று.

தரும மேங்கின சராசரஞ் சலித்தன விமையோர்
கருதன் முற்றுறு மென்பது கருதினர் கருதா
வெருவு பூதமு மயங்கின வேதநூற் றலைவ
ரிருவ ருஞ்செரு விளைத்தன ரென்கொலென் றெண்ணி.

(இ - ள்.) வேதநூற்றலைவர்களான இருபெருந்தேவரும் போர்புரிவாராயினர், யாதுகாரணமென்றுகருதி தருமச்செயல்கள் ஏக்கமுற்றன. [சரம்] இயங்கியற் பொருளேயன்றி [அசரம்] நிலையியற்பொருளு மசைவுற்றன. தேவர்கள் எண்ணுதல் முடியாதென்றெண்ணினார்கள். அதனைக்கருதிப் பயந்த ஐம்பெரும் பூதங்களும் மயங்கின. எ - று. (௧௮௮)

இன்ன தன்மையி னெடிதுநாட் பொருதன ரிவர்கண்
மின்னு வாளெயிற் றசுரர்கோன் செருக்கற வேண்டி
யென்னை யாளுடை நாயகன் வாங்கின னெயிற்றுப்
பன்ன கப்படு பாயலான் பறந்தலை நின்றான்.

(இ - ள்.) இத்தகைய தன்மையால் பலதினங்கள் இவ்விருவரும் போர் புரிந்தார்கள். அப்பொழுது, பிரகாசிக்கின்ற வாட்படைபோன்ற பல்லையுடைய அசுரேசனாகிய வாணனுடைய இறுமாப்பு நீங்கக்கருதி, என்னை] யடிமையாக

வுடைய சிவபெருமான் நீங்கினர் (காளி, காளாஸ்திரி, யமன், யமதூதனென்னும் நான்கு) விஷப்பற்களையுடைய சேஷசயனத்தி லமருந் திருமால்மட்டுமே யுத்தபூமியிலிருந்தனர். எ - று. (௧௮௯)

தெரித்த நான்மறை யெவற்றிற்குஞ் செவ்விதழ் வீழ்த்து
விரித்த தாமரை மேலவன் முதலினோர் யார்க்கும்
பிரித்து ணர்ந்துறுன் பேரமர் துறந்தனன் முனிவீ
ரருச்ச னைக்கெலா மின்னண மிரங்குறு மமலன்.

(இ - ள்.) முனிவர்களே! சொல்லிய நான்கு வேதங்களுக்கும், எல்லாக் கலைகட்கும், செவ்விய இதழ்களை வீழ்த்தி விரிந்த தாமரை மலர்மேல் விளங்கும் பிரமதேவன் முதலினோ ரெல்லாருக்கும் பிரித்துணரப்படாத சிவபெருமான் பெரிய யுத்தத்தினின்று நீங்கினர். அம்மலரகிதனாகிய சிவபெருமான் தமக்கியற்றிய அருச்சனைகளெல்லாவற்றிற்கும் இவ்வகையே திருவுள்ளமிரங்குவர். எ - று. ( )

முக்க ணெம்பிரா னிகந்தது மொய்கழ லசுர
னொக்க நோக்கின னகைத்தன னுருமெனக் கொதித்தான்
றிக்க திர்ந்துற நெடுநிலம் பிதிர்ந்திடச் செல்வா
னக்க ளத்துநின் றுயிரந் தோள்புடைத் தார்த்தான்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய எமது சிவபெருமான் யுத்தகளத்தினின்று நீங்கியதை, நெருங்கிய வீரக்கழலணிந்த வாணாசுரன் ஒருசேரக்கண்டு பெருநகைசெய்து இடியேறுபோலக் கொதித்தான், திசைக ளதிரவும் பெரியபூமியானது பிதிர்படவுஞ் சென்று அவ்யுத்தபூமியில் நின்று தனது ஆயிரந்தோள்களையுங்கொட்டி யார்ப்பரித்தான். எ - று. (௧௯௧)

கோடு வாளெயிற் றடுசின வசுரர்கோன் குறுகி
யோடு நேமியந் தேரொடு மடுகளத் துற்று
னீடு தெண்டிரைக் கருங்கட னிரையிதழ்க் கமலக்
காடு பூத்தன திருவுருத் தெரிவுறக் கண்டான்.

(இ - ள்.) வளைந்த வெள்ளிய பல்லையுங் கொல்லத்தக்க கோபத்தையுமுடைய வாணாசுரன் சென்று ஓடுகின்ற சக்கிரம் பூட்டிய அழகிய தேருடன் யுத்தபூமியை யெய்தினான். தெள்ளிய நீண்ட அலையையுடைய கரியகடலானது வரிசையாகிய இதழ்களையுடைய தாமரைக்காட்டினை மலர்ந்தாற்போன்ற கண்ணபிரானுடைய திருவுருவந் தெரியப்பார்த்தான். எ - று. (௧௯௨)

கண்ட காலையி லடுசினம் வடவையிற் கதுவத்
துண்ட வாளெயி றதுக்கினன் றீப்பொறி துள்ள
விண்ட லத்துறு விண்ணவர் வெருவரலுற்று
ரண்டர் நாயக னிவன்செய லுணர்க்கின னடுத்தான்.

(இ - ள்.) அப்படிப் பார்த்தபோது கொல்லத்தக்க கோபமானது வடவாக்கினிபோன்றெரிய, வாளின்றுண்டம்போன்ற பற்களைத் தீப்பொறிசிந்தக் கடித்தனன். ஆகாயத்தில் வசிக்குந் தேவர்கள் அதுகண்டு பயந்தார்கள். [அண்டர்=தேவர்] ஆயர்குலத்தின் தலைவராகிய கிருஷ்ணமூர்த்தி இவ்வாணன் செய்கையைப் பார்த்துச் சமீபித்தனர். எ - று. (௧௯௩)

அடுத்த தேரகத் தாயிரம் பெயருடை யமல
னெடுத்த வில்லொடு நின்றமை நோக்கின னிசைப்பான்
கடுத்த வெஞ்செருப் பன்முறை தோற்றனை கழிந்தாய்
விடுத்த தன்னையுன் றொன்னிலைப் பழவினை விதியே.

(இ - ள்.) சமீபித்ததேரில் ஆயிரந்திரு நாமங்களையுடைய பரிசுத்தராகிய கண்ணபிரான் கையிற்றாங்கிய சார்ங்கம் என்னும் வில்லொடு நின்றமையை வாணன்பார்த்துச் சொல்லுகின்றான்: கோபத்தோடுகூடிய வெவ்விய யுத்தத்திலே எனக்குப் பலமுறை தோற்றோடிப்போயினை. இப்பொழுது உன்னுடையபூர்வத்திற்செய்த பழவினையின் விதி மீண்டும் போருக்குவிடுத்தது. எ - று. (௧௧௯௪)

எனச்சி னத்தவா ளரக்கனின் றிசைத்தன னெம்மான்
முனைக்க ளத்தினின் றின்னண மொழிவது முறையோ
வினைப்ப யன்றெரிந் துணர்ந்திலை வெய்யநின் சேனை
யனைத்து மிக்களத் தவிந்தன வறிந்திலை போலும்

(இ - ள்.) என்று கோபம்பொருந்திய வாட்படையேந்திய வாணாசுரன் தேரினின்று கூறினன். எமது கண்ணபிரான், யுத்தகளத்திலே நின்று இப்படிச் சொல்வதும் முறையாகுமோ? உனது ஊழ்வினைப் பயனை ஆலோசித்தறிந்தாயில்லை. கொடியோனே! உன்சேனைமுழுவதும் இவ்யுத்தபூமியிலழிந்து போயின தன்மையைத் தெரிந்தாயில்லைபோற் காணப்படுகின்றது. எ - று. (௧௧௯௫)

என்று மாயவ னுரைத்தலு மெறுழ்வலி நிருதன்
கன்றி வாளெயி றாழிவெங் கனலுகக் கறித்தான்
வென்றி வெஞ்சிலை யைந்நூறெ றெடுத்தனன் வெகுண்டான்
பொன்ற யங்கொளி வடிம்புடைப் பலகணை பொழிந்தான்.

(இ - ள்.) என்று திருமால் சொல்லவும்,பெருவலியுடைய வாணாசுரன் மனநொந்து வாள்போன்ற பற்களை வெவ்விய ஆழித்தீசிந்தும்படிசுறித்தான். வெற்றிபொருந்திய வலிய ஐந்நூறு விற்களைக்கையி லெடுத்தான். கோபித்தான். பொன்போலும் ஒளிவீசும் வடிம்பினையுடைய பல அஸ்திரங்களை மாரிபோலவருஷித்தான். எ - று. (௧௧௯௬)

பொழிந்த பல்கணை யனிகவெஞ் சேனையைப் புரட்டிக்
கழிந்து போயின குருதிபோய்க் கருங்கடன் மடுத்த
விழிந்த புன்றொழி லீங்கிவ னெய்தவெஞ் சரத்தா
லழிந்து சேனைபட் டிறப்பது நோக்கின னையன்.

(இ - ள்.) வாணாசுரன் சிந்திய பலஅம்புகள் கூட்டமாகிய பெரியசேனையைப் புரட்டி விலகிப்போயின. உதிரப்பெருக்கானது கருங்கடலிற் கலந்தது. தாழ்வாகிய இழிதொழிலையுடைய இவ்வாணன் பிரயோகித்த வலிய சரங்களால் தமது சேனையானது அழிவுற்று இறப்பதைக் கண்ணபிரான் கண்டனர். எ - று.

கார்மு கப்படை பொறுத்தனன் கடுஞ்சரந் தெரிந்தான்
போர்மு கத்தெழு வாளெயிற் றசுரரிற் பொழிந்தா
னூர்மு கப்பரி யானையை யுருட்டிய தொருங்கே
நீர்மு கத்தெழு மழையென நிமிர்ந்தன நெடுங்கோல்.

(இ - ள்.) தமது வில்லாயுதத்தை யெடுத்து வலிய அம்புகளைப் பிரயோகித்தனர். ஜலமழைசொரியும் மேகம்போல நீண்ட அம்புகள் யுத்தபூமிமுழுவதும் நிரம்பின. யுத்தபூமியிலெழுந்த வாளையும் வக்ரதந்தத்தையுமுடைய அசுரரிற் சிறந்த வாணாசுரனூர்ந்த தேர்முகத்திலிருந்த குதிரைகளையும் யானைகளையும் ஒருசேரத்தள்ளின. எ - று. (௧௧௮)

சேமத் தேரினை யச்சிறச் சிதறின வத்தேர்
நாமச் சாரதி புன்றலை யுருட்டின நடந்து
தூமத் திண்பொறி யுமிழ்ந்தன சுடுசர மதனாற்
பாமத் திண்புவி புதைத்தன கொழும்புகைப் படலை.

(இ - ள்.) கண்ணபிரான்விடுத்த சுடுசரங்கள், வாணனுடைய சேமத்தேரை அச்சுக்கட்டை யுடைபடும்படிச் சிதைத்தன. அன்றியும் அத்தேரின் அச்சந்தரத்தக்க சாரதியின் இழிதகைமையுடைய தலையுருளச் செய்தன. மேலுஞ்சென்று புகையோடுகூடிய வலிய தீப்பொறிகளைச்சிந்தின. அதனால், பரவிய பூமியானது கொழுவிய புகைப்படலத்தால் மூடுண்டது. எ - று. (௧௧௯)

ஆனை பட்டன கடுந்திற லடுந்தொழி லசுரத்
தானை பட்டன துரகதங் குரமறச் சாய்ந்த
சேனை பட்டன நோக்கினன் வெந்திறற் றீயோன்
மோனை பட்டெழு வெகுளிமீக் கொண்டெழ முனிந்தான்.

(இ - ள்.) யானைகளிறந்தன. பெருவல்லபத்தையுங் கொல்லுந்தொழிலையுமுடைய அசுரச்சேனைக ளிறந்தன. குதிரைகள் குளம்புகளறுபட வீழ்ந்தன. இப்படித்தனது சேனைகளழிபட்டனவற்றைக் கடுந்திறற்கொடியோனாகிய வாணாசுரன்கண்டு பெருங்கோபமெய்தி, எழுந்தகோப மதிகரித்தனன். எ - று. ()

கொடுமு கக்கணை யாயிரத் திரட்டிமேற் கோத்தா
னடுசி லைத்தொழி லையனு மாங்கவை யறுத்தான்
விடுக டுங்கணை யாயிரந் துரந்தனன் விமலன்
சுடுச ரந்தெரிந் தாங்கவை யசுரனுந் துரந்தான்.

(இ - ள்.) வளைந்த முகத்தையுடைய இரண்டாயிரம் அம்புகளை வாணாசுரன் பிரயோகித்தான். கொல்லத்தக்க விற்போர்புரியும் கண்ணபிரானும் அவ்வம்புகளை யறுத்தகற்றினர். செலுத்தத்தக்க ஆயிரம்வலியபாணங்களைச்செலுத்தினர். அவற்றை யகற்றத்தக்க வாளிகளையுணர்ந்து வாணாசுரனும் நேரேவிடுத்தனன்.

எரிமு கப்படை தொழுதெடுத் தெய்தன னிருதன்
கரிய கார்முகி லப்படை யதுகொடு காத்தான்
பரிதி மாப்படை தொடுத்தனன் பதகனப் படையைச்
சுருதி நாயக னப்படை தொடுத்தனன் றுரந்தான்.

(இ - ள்.) வாணாசுரன் அக்கினிமுகாஸ்திரத்தை நமஸ்கரித்தெடுத்துப் பிரயோகித்தனன். கரியகார்காலமேகம்போன்ற கண்ணபிரான் அவ்வஸ்திரங்களை யவ்வஸ்திரங்களாலேயே காத்துக்கொண்டனர். வாணாசுரன் சிறந்த சூரியாஸ்திரத்தைவிடுத்தான். வேதநாயகராகிய கண்ணபிரான் அச்சூரியாஸ்திரத்தைச் சூரியாஸ்திரத்தைவிடுத்து விலக்கினர். எ - று. (௨0௨)

வாயு வத்திரந் தொடுத்தனன் வாளெயிற் றசுரன்
மாய னுங்கது வப்படை தொடுத்தன னறுத்தா
னேய வாருணத் திரந்தொடுத் தெய்தன னிருதன்
மாய னப்படைக் கப்படை தொடுத்தெதிர் மறுத்தான்.

(இ - ள்.) வாள்போன்ற பல்லையுடைய வாணாசுரன் வாயுஅஸ்திரத்தைச் செலுத்தினன். கண்ணபிரான் அதனை அவ்வாயுவஸ்திரத்தையே விடுத்துக் கண்டித்தனர். அசுரன், பொருந்திய வருணாஸ்திரத்தை தொடுத்து பிரயோகித்தான். கண்ணபிரான் அவ்வருணாத்திரத்திற்கு அவ்வருணாத்திரத்தையே எதிர்விடுத்துத் தடைசெய்தனர். எ - று. (உ௦௩)

முத்த லைக்கழு தொடுத்தனன் முனிந்தவா ளரக்க
னத்த னுங்கதற் கென்செய்து மென்றக மயிர்த்தான்
மத்த வாரணத் துரிவையாற் றொழுதுள மதித்தா
னெய்த்த லைப்படை யங்கிலை திரிந்தது நெடுவான்.

(இ - ள்.) அதனால் கோபமெய்திய வாளேந்திய வாணாசுரன் முத்தலைச் சூலத்தை விடுத்தான். கண்ணபிரான் அதற்கு யாதுசெய்வோமென்று மனந்தளர்ந்தனர். கயாசுரனென்னும் யானையையுரித்துடுத்த சிவபெருமானைப்பணிந்து தியானஞ்செய்தனர். நெய் பூசிய குடுமியையுடைய அச்சூலாயுதம் அப்பொழுதே நெடிய ஆகாயத்தை நோக்கித் திரும்பியது. எ - று. (உ௦௪)

ஆழி மாப்படை தொடுத்தனன் வாளெயிற் றசுரன்
கேழ்கி ளர்ந்துவெம் புகையொடும் பொறித்துளி கிளைப்பப்
போழ்வி சும்பறுத் தெதிர்ந்தது புயனிறத் தவனைச்
சூழ்வ லங்கொடு மீண்டதச் சுடுசினத் திகிரி.

(இ - ள்.) வாள்போலும் பல்லையுடைய வாணாசுரன் பெரிய சக்கிராயுதத்தைவிடுத்தான். நிறம் விளங்கிய வெவ்விய புகையோடு தீப்பொறிகளைச் சிந்தும்படி, பிளந்து ஆகாயத்தை யறுத்துக்கொண்டு நேரேவந்தது. ஆனால் சுடுகின்ற கோபத்தோடு கூடிய அந்தச் சக்கிரம் உடனே மேகநிறந்தங்கிய கண்ணபிரானைச் சூழ்ந்து பிரதக்ஷிணஞ் செய்து திரும்பியது. எ - று. (உ௦௫)

காய்சி னத்தராப் படைதொடுத் திவன்றனைக் கட்டிப்
பூச றீர்ப்பனென் றெடுத்தனன் விடுத்தனன் புகலும்
பாய்சி றைக்கலு ழாத்திரந் தொடுத்தனன் பரமன்
மூசு வெஞ்சினத் தெதிரெதிர் விழுங்கின முனிந்து.

(இ - ள்.) எரிகின்ற கோபத்தையுடைய நாகாஸ்திரத்தைப் பிரயோகித்து இக்கண்ணனைக்கட்டிப் பிணித்து யுத்தத்தை யொழிப்பேனென்று சொல்லி வாணாசுரன் விடுத்தான். கண்ணபிரான் பாய்ந்து செல்லுஞ் சிறகையுடைய கருடாஸ்திரத்தை விடுத்தனர். அது அதிகரித்தபெருங்கோபத்தோடு அந்நாகாஸ்திரத்தை யெதிர்த்து நேர்பட்டு விழுங்கியது. எ - று. (உ௦௬)

ஒன்று மாவதன் றெனச்சிலை யெடுத்தழன் றுருத்தான்
குன்று கைக்குடை யாக்கொடு கோப்புரந் தளித்த
வென்றி மாயனு மாங்கவ னெடுத்தவெஞ் சிலைக
ளொன்ற குன்றமைஞ் ஞூற்றையுந் துண்டமிட் டிறுத்தான்.

(இ - ள்.) வாணன், ஒன்றும்ஆவதாயில்லையென்றுவில்லைக்கையிலெடுத்துக் கொதித்துக்கோபித்தனன். கோவர்த்தன கிரியைக் குடையாகவெடுத்துப்பசுமந்தையைக் காத்தளித்த வெற்றிபொருந்திய கிருஷ்ணமூர்த்தியும் அப்பொழுது அவ்வாணன் தாங்கிய வலிய விற்கள் என்று சொல்லப்படும் மலைகள் ஐந்நூற்றையுந் துண்டமிட்டறுத்தனர். எ - று. (உ0எ)

பின்னு மைந்நூ றாகிய பெருஞ்சிலை பொறுத்தான்
பொன்ன லங்கொளி வடிம்புடை நெடுங்கணைபொழிந்தா
னென்னை யாளுடை நாயக னச்சிலை யிறுத்தான்
வன்னெ டும்புயத் தழுத்தினன் சிலசில வாளி.

(இ - ள்.) அவன்மீண்டும் ஐந்நூறு பெரிய வில்லுகளைத்தாங்கினன். பொன்மயமாகிப்பிரகாசிக்கும் ஒளிவாய்ந்த வடிம்பையுடைய நெடிய அம்புகளைச்செலுத்தினன். என்னை யாளாகவுடைய கண்ணபிரான் அந்த வில்லையும் ஒடித்தனர். அன்றியும் அவனுடைய வலிதங்கிய நெடிய தோள்களிற் சிற்சில பாணங்களை விட்டு அழுத்தினர். எ - று. (உ0அ)

ஆர மார்பினு டழுத்தினன் சிலகணை யழல்வாய்த்
தீர னெற்றியிற் செலுத்தினன் சிலகணை குருதி
சோர நின்றன னயர்ந்தனன் றூங்கினன் கமல
வார்கொ ழும்புயல் வண்ணனு மணிநகை பூத்தான்.

(இ - ள்.) சில அம்புகளை மார்பிடையே பொருந்த அழுத்தினன். தீச்சிந்தும் வாயையுடைய வாணன் நெற்றியிற் சிலபாணங்களை விடுத்தனர். அதனால் வாணாசுரன் உதிரஞ்சொரிய நின்று சோர்ந்து மயங்கினன். தாமரை மலர்களலர்ந்த நெடிய மதர்த்த மேகவண்ணராகிய கண்ணபிரானும் அழகிய புன்னகையரும்பினர். எ - று. (உ0கூ)

இவனி னிப்படு மென்பதென் றுணர்ந்தன னிடையே
யவனை யீன்றிடு கோட்டவி நக்கினத் தடைந்தாள்
புவனி நாயகன் வெள்கினன் றிருப்பினன் பொலந்தேர்
கவர்த டம்புயத் தசுரனுங் கடிநக ரடைந்தான்.

(இ - ள்.) இவ்வாணன் இனியிறப்பானென்று கருதியாலோசித்தனர். அப்பொழுது, அவ்வாணாசுரனைப் பெற்ற கோட்டவியென்பாள் நிர்வாணத்துடன் அங்கடைந்தனள். நிலமகள் கொழுநராகிய திருமால் நாணமெய்தித் தமது அழகிய தேரைத்திருப்பினர். பிளவுபட்ட பரந்த தோளையுடையவாணாசுரனுந் தனது காவல் பூண்ட நகரத்தைச்சேர்ந்தனன். எ - று. (உகo)

கூவ கம்பனுங் கொதித்தகும் பாண்டனுஞ் சேனை
காவல் பூண்டவ ரிருவரும் வடவையிற் கனன்று
ரோவ ருபல பத்திர ராமனோ டெருத்தார்
வாவு தோமர மெடுத்தனன் மடுத்தனன் மறித்தான்.

(இ - ள்.) கூவகம்பனென்பவனுங் கோபித்த கும்பாண்டனென்பவனுமாகிய சேனைக் காவலரிருவரும் வடவாக்கினிபோலச் சினந்து, கெடுதலில்லவல்லபமுடைய பலபத்திரராமனுடன் போர்தொடங்கினர். தாவிச்செல்லும் [தோமரம்] இருப்புலக்கையைப் பலராமனெடுத்து அவர்களைமறித்துத் தடுத்தனன். எ - று.

அளப்ப ருந்திறற் சேனையு மிருவரு மதிரக்
களத்தி னேர்ந்தனர் பத்திர ராமனுங் கனன்று
ளுளப்ப டுஞ்சினந் தலைக்கொளச் சுழற்றின னுலக்கை
தளப்ப டப்படுத் தரைத்தன னிரைத்ததத் தானை.

(இ - ள்.) அளவிடற்கரிய வல்லபமுடைய சேனைகளும் இருவரும் அதிரும்படி யுத்தபூமியிலெதிர்த்தார்கள். பலபத்திர ராமனுங்கோபமெய்தினன். மனத்திலுண்டாகிய கோபமதிகரித்தலால், தனது இருப்புலக்கையைச் சுழற்றிப்பொடிபடும்படி தரையோடரைத்தனன். அச்சேனையானது பேரிரைச்சலிட்டது. எ-று.

சுற்றி னன்பல சுழற்றின னுருமெனச் சுழற்றி
யெற்றி னன்படப் புடைத்தன னிகலெயிற் றசுர
னுற்ற சேனையைத் தொன்னிலங் குழம்பெழத் துவைத்தா
னற்ற துண்டமுங் கண்டில பசைப்படத் தரைத்தான்,

(இ - ள்) அப்பொழுது பலபத்திர ராமன் பலமுறை சுற்றினன். சுழற்றினன். இடிபோலச் சுழற்றிமோதி யிறக்கும்படி யடித்தனன். வலிதங்கிய பல்லையுடைய வாணாசுரன் சார்பிற்பொருந்திய சேனையை, பழைய பூமியானது குழம்புபடும்படி மிதித்தனன். அறுபட்டொடிந்த துண்டுகளுங் காண்கிலவாக குழம்புபட அரைத்துத்தேய்த்தனன். (௨௧௩)

கரங்க ளீதிகல் வாளெயிற் றசுரர்தங் கழல்கள்
சிரங்க ளீதடு பரியிது தேரிது சிதைந்த
வுரங்க ளீதென வறிவரி தன்னவ னுலக்கை
பரங்கொண் மாநிலஞ் சேறெழப் பசைபடத் தேய்ப்ப.

(இ - ள்.) அப்பலபத்திர ராமனுடைய இருப்புலக்கையானது பாரமாகிய பெரிய நிலவுலகு சேறுபடும்படி தேய்த்தலால், வெள்ளிய பல்லையுடைய அசுரர்கள் கைகள் இவை, கால்கள் இவை, தலைகள் இவை, கொல்லத்தகக புரவிகள் இவை, தேர்கள் இவை, சிதைவுற்ற மார்பகங்கள் இவையென்று தெரிதற்கரிதாயது. எ - று. (௨௧௪)

கண்டெ றித்தனர் பணைப்புய முறிந்தனர் கனகக்
குண்ட லங்களு மகுடமுந் தகர்ந்தனர் கொடியோர்
மண்டை சிந்தினர் தாளறப் படுகள மறிந்தா
ரண்டர் நாயகன் றோமரத் துலக்கையா லநேகர்.

(இ - ள்.) ஆயர்குலத்தலைவனாகிய பலபத்திர ராமனுடைய தோமரமாகிய இருப்புலக்கையால், அக்கொடியோர்களில் அநேகர், கண்கள் தெறிபட்டார்கள். திரைத்த தோள்கள் முறிபட்டார்கள். பொன்னாலாகிய குண்டலங்களுங் கிரீடங்களும் பொடிபட்டார்கள். மண்டைகளுடைபட்டார்கள். கால்கள் அறுபட யுத்த பூமியில் வீழ்ந்திறந்தார்கள். எ - று. (௨௧௫)

ஈது கண்டன ரடுபடைத் தலைவர்மற் றிருவர்
பூத ரஞ்சுமந் தாழிவெங் கனலெனப் புகுந்தார்
காது வெஞ்சினத் தெறிதலுந் தோமரங் கடாவிப்
பாத கத்தர்கைப் பருப்பத நெருப்பெழப் பகுத்தான்.

(இ - ள்.) இச்செயல்களை, கொல்லத்தக்க சேனைத்தலைவர்களாகிய (கூவ கம்பன் கும்பாண்டனென்னும்) இருவரும் பார்த்தவராகி, மலைகளைத்தாங்கிக் கொண்டு வேகத்தோடுகூடிய பிரசண்டமாருதம்போலப் பாய்ந்தார்கள். பலபத்திர ராமனை மோதுகின்ற பெருங்கோபத்தோடு எறியவும், உடனே இராமன் நெருப்பெழச் சினந்து தோமரத்தைச்செலுத்தி அப்பாவிகள் கையிலிருந்த மலைகளையுடைத்தனன். எ-று. (உ௧௬)

மாறி யோச்சினன் வயிரவா னுலக்கையான் மருமங்
கீறி வீழ்ந்தன னொருவன்மற் றொருவனைக் கிடைத்தா
னேறு வெஞ்சம ரேற்றன னுங்கவ னிவனு
மூறு செம்புனற் சென்னியைத் துண்டமிட் டுடைத்தான்.

(இ - ள்.) பெரிய வயிர வுலக்கையால் மாறியடித்தனன். அதனால் அவ்விருவரிலொருவன் மார்பம் பிளவுபட்டு விழுந்தனன். மற்றொருவன் இடியேறுபோலப் பெரிய போர்புரிதற்குத் தொடங்கினன். அப்பொழுது இப்பலபத்திரராமனும் உதிரவெள்ளம் பெருக்கெடுக்கும்படி அவனுடைய சிரசை இருப்புலக்கையால் துண்டுகளாக உடைத்தனன். எ - று. (உ௧௭)

அன்ன காலையின் மீண்டன னயிலெயிற் றசுரன்
றன்னை யீன்றவ ளழுதிடை விலக்கவுந் தாழான்
மின்னு வாளெயிற் றடுபுலி யேறென வெகுண்டா
னென்னை யாளுடை நாயகன் முறுவல்பூத் ததிர்ந்தான்.

(இ - ள்.) அத்தகைய வேளையில், கூர்மைபொருந்திய பல்லையுடைய வாணசுரன், தன்னைப்பெற்ற தாயாகிய கோட்டவியென்பாள் (போருக்குப்புகவேண்டாமென்று) புலம்பித்தடைசெய்யவுங் கேளாதவனாகி யுத்தபூமியிற்றிரும்பி, மின்னுகின்ற வாட்படைபோன்ற பல்லையுடைய கொல்லத்தக்க ஆண்புலிபோலக் கோபித்தான். என்னையாளாகவுடைய திருமால் புன்னகைசெய்து எதிர்த்தனர்.

வளைத்த சேனைமற் றியாவையும் பிணப்பட மடித்துத்
தொளைக்கை யானையுந் துரகமுங் கீழ்ப்படத் தொலைத்துக்
கிளைத்த வாளெயிற் றசுரர்கோன் றனிப்படக் கிடைத்துத்
தளைத்து ழாயினன் விளைத்தன னடுபெருஞ் சமரம்.

(இ - ள்.) சூழ்ந்துள்ள சேனைகளெல்லாவற்றையும் பிணமாகும்படிகொன்றுதள்ளி, துவாரம்பொருந்திய கையையுடைய யானைகளையுங் குதிரைகளையுங் கீழ்ப்படும்படி யொழித்து, கிளைபட்டவாள்போலும் பல்லையுடைய அசுரர்தலைவனாகிய வாணனைத் தனிப்படச்செய்து, கட்டிய துளசிமாலையணிந்த கண்ணபிரான் கொல்லத்தக்க பெரும்போர்புரிந்தனன். எ - று. (உ௧௮)

தேருந் தேருமாய்த் திரிந்தன திரிந்தவெண் டிசையும்
பாரு மண்டமுங் குலுங்கின பேரறம் பதைத்த
தாரு வானகத் திமையவர் வெருவினர் சலித்தார்
போர்வி ளைத்தெது விளைப்பரென் றஞ்சினர் போனார்.

(இ - ள்.) தேருந் தேருமாகத்திரிந்தன. எட்டுத்திசைகளுஞ்சுழன்றன. பூமியும் அண்டமும் நிலைகுலுங்கின. பெரிய தருமமானது பதைத்தது. கற்பகத்

தருவையுடைய தேவலோகத்தில்வசிக்கும் அமரர்கள்பயந்துமனஞ்சலித்தார்கள். இவர்கள் போர்புரிந்து எதனையுண்டு செய்வார்களோ வென்று பயந்துபோனார்கள். எ - று. (உஉ0)

இனைய தன்மைய ரின்னண முடற்றிய வெல்லை
நனைந றுந்துழாய் நாயக னுங்கவ னடத்துந்
துனைக டும்பரித் தேர்முகச் சாரதி சுடரும்
புனைமு டித்தலை யுருட்டின னொருசரம் போக்கி.

(இ - ள்.) இத்தன்மையராகிய கண்ணபிரானும் வாணாசுரனும் இவ்வகையாகப் போர்புரிந்தகாலத்திற் குளிர்ந்த மணந்தங்கிய துளசிமாலை யணிந்த கண்ணபிரான் அவ்வாணாசுரனடத்துகின்ற வலிய வேகத்தோடு கூடிய குதிரைபூட்டிய தேர்முகத்திலிருக்கும் சாரதியின் பிரகாசிக்கின்ற அலங்கரித்த கிரீடமணிந்த தலையை ஓரம்பினைப் பிரயோகஞ்செய்து நிலமிசையுருட்டினர். எ - று. (உஉக)

மாண்டி றந்தனன் சாரதி வயப்பரி நெடுநாண்
பூண்ட கோலொடுஞ் சரிவரப் போக்கினன் புனிதன்
றாண்டு தேரினை யச்சிறச் சரங்கொடு துணித்தா
ணுண்டு வாளெயிற் றசுரனு மிருநிலத் தானான்.

(இ-ள்.) சாரதியிறந்துயிர் நீங்கினன். வெற்றிபொருந்திய குதிரையை நெடிய நாணிற்பூட்டிய அம்புடன் சரிவரக்கண்ணபிரான் செலுத்திய தேரினை நடத்தினர். அப்பொழுது வாள்போன்ற பல்லையுடைய வாணாசுரன் கண்ணபிரான் தேரினில் அச்சாணி முறியும்படித்துண்டித்துப் பெரியபூமியில் வந்தனன்·

நாறு பூந்துழாய்த் தனிமுத லாயக னமர்க்கென்
றேறு தேரிழிந் திருநிலத் தாயின னவன்கைச்
சீறு திண்சிலை யனைத்தையுந் துணிபடச் சிதைத்தா
னீறி லாப்பெருந் தன்னுடைத் திகிரிகொண் டெதிர்ந்தான்.

(இ - ள்.) மணம் வீசும் அழகிய துளவமாலைதரித்த ஒப்பற்ற முதல்வனாகிய கண்ணபிரான் போருக்கென்று ஆரோகணித்த தேரினின்றிறங்கிப் பெரிய நிலமிசைநின்று, அவ்வாணனது கையிலுள்ள கோபத்தோடுகூடிய வலியவில்லையெல்லாந் துணிபடும்படிகண்டித்து, அழிவில்லாத தம்முடைய பெரிய சுதரிசனத்தைக் கையிற்றாங்கி யெதிர்த்தார்கள். எ - று. (உஉ௩)

நீல வார்கட லுருவுகொண் டனையவ னிரைத்தோ
ளால மாமரந் தூக்கிய விழுதென வரிந்தான்
பால லோசன னோக்கினன் பசுந்துழா யவற்குச்
சாலு மன்பொடும் வெள்விடைக் காட்சிதந் தளித்தான்.

(இ - ள்.) பெரிய நீலநிறந்தங்கியகடலானது வடிவெடுத்தாலொத்த வாணாசுரனது வரிசையாகிய தோள்களைப் பெரிய ஆலமரத்தின் தொங்கவிட்ட விழுதுகள்போல அரிந்தனர். அதனை நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் பார்த்தருளிப் பசிய துளவமாலை யணிந்த கண்ணபிரானுக்குப் பேரன்போடுந் தாவள்யமாகிய இடபாரூடக்காட்சியைக் கொடுத்தருளினர். எ - று. (உஉச)

அரிந்து போக்கின வன்றியெம் மருச்சனை யயர்ந்து
புரிந்த கைகளோர் நான்கையும் போக்கலை யென்று
விரிந்த வார்சடை யெம்பிரா னருளின வேண்டிப்
பரிந்து போற்றின னரிந்தில னுங்கவன் பணிப்பில்.

(இ - ள்.) அரிந்தொழித்தனவாகிய கைகளல்லாமல் எம்மை அருச்சனை செய்த கைகள் நான்கினையும் போக்கவேண்டாமென்று பரந்துநீண்ட சடையையுடைய எமது சிவபெருமான் அருளினவற்றை விரும்பி யன்போடு காப்பாற்றி அவ்விறைவன் கட்டளைப்படி வாணனது நான்குகரங்களை அரியாதுவிடுத்தனர்.

தூக்கு கைகளோர் நான்கொடு மரனடி தொழுதான்
மேக்கு யர்ந்தெழு குருதியான் வெள்கின னின்றான்
றாக்கு வெஞ்செரு வேண்டிய செருக்கொடு தடக்கை
போக்கி நின்றனை புயத்தின வொழிந்தனை போலும்.

(இ - ள்.) தூக்கிய ஒரு நான்குகைகளோடும் வாணன் சிவபெருமான் திருவடிகளை வணங்கி மேம்பட்டு உயர்ந்தெழுகின்ற உதிரத்தோடு நாணுற்று நின்றனன். மோதுகின்ற வெவ்வியபோர்விரும்பிய இறுமாப்புடன் பரந்த கைகளையொழித்து நிற்கின்றனை, தோள்தினவு நீங்கினாய்போலும். எ - று. (௨௨௬)

இனிச்செ ருக்கொழிந் திருத்திமற் றிருந்துழா யலங்கற்
கனிக்கொ ழும்புயல் வண்ணனோ டளவளாய்க் கலந்து
பணித்த வார்குழ னின்மக ளுசையினைப் பணைவிற்
குனித்த காரனு ருத்தனுக் கிந்நிலை கொடுத்தி.

(இ - ள்.) இனி யிறுமாப்பகன்றிருக்கக் கடவாய், பெரிய துளசிமாலையணிந்த பழுத்துக்கொழுவிய மேகவண்ணனாகிய கண்ணனோடு கூடிக்கலந்து குளிர்ச்சிதங்கிய நெடிய கூந்தலையுடைய உனதுகுமாரி உசையென்பாளை விருப்பத்தோடு இப்பொழுதே வளைத்தவில்லைத்தாங்கிய அநிருத்தனுக்குக் கொடுப்பாயாக. எ-று.

என்ற ளித்திக லேறுடை யெம்பிரான் கயிலைக்
குன்ற மெய்தலு மெறுழ்வலி யசுரர்தங் கோமான்
மன்ற லோதியை வதுவைசெய் தவற்கென வளித்தா
னன்று வேண்டிய யாவையு மன்னவற் கீந்தான்.

(இ - ள்.) என்றநுக்கிரகித்து வலிதங்கிய இடபவாகனமுடைய எமது சிவபெருமான் திருக்கைலாயகிரியையடையவும், பெருவலியுடைய அசுரமன்னனாகிய வாணாசுரன் மணந்தங்கிய கூந்தலையுடைய உஷையை விவாகமுடித்து அவ்வநிருத்தனுக்கென்று கொடுத்தனன் அப்பொழுது விரும்பிய பலபொருள்களையும் அவனுக்குச் சீதனமாகக் கொடுத்தனன். எ - று. (௨௨௮)

வதுவை முற்றிய பின்னரின் வரிச்சுரும் பரற்றும்
புதுந றுந்துழாய்க் கணணியோன் றுவாரகை புகுந்தான்
விதுவ லங்கலஞ் சடையினோ னருச்சனை விரும்பி
யெதுகு லத்தனி நாயக னரசுவீற் றிருந்தான்.

(இ - ள்.) திருமணமுடிந்த பின்னர், சிற்றுகள்பொருந்தியவண்டுகளொலிக்கும் புதிய மணந்தங்கிய துளசிமாலை யணிந்த கண்ணபிரான் தனது பரிவாரத்துடன் துவாரகாபுரியை யடைந்து, சந்திரனைச் சிரோமாலையாக வணிந்து அழகிய சடையையுடைய சிவபெருமான் பூசையை விரும்பி, யதுகுலத்தி னொப்பற்ற தலைவன் அரசுபுரிந்திருந்தனர். எ - று. (உஉ௯)

சோணி தப்புரத் திருந்தன னசுரர்கோன் றென்னீர்
வேணி யெம்பிரா னருச்சனை வரன்முறை விளைத்தான்
மாணி ழைக்கொரு புறங்கொடுத் தருளிய வரதற்
காண நோற்றலா லெம்பிரான் காட்சிதந் தளித்தான்.

(இ - ள்.) அசுரேந்திரனாகிய வாணாசுரன் சோணிதபுரியிலிருந்து பழைய கங்காஜலத்தை யணிந்த சடையையுடைய எமது சிவபெருமான் பூசையை வரன்முறைப்படி செய்தனன். மாட்சி பொருந்திய ஆபரணங்களையணிந்த உமாதேவியாருக்கு ஒப்பற்ற வாமபாகத்தைத் தந்தருளிய சிறந்தோனாகிய சிவபெருமானைத் தெரிசிக்கும்படி நோற்றபடியால் எமது சிவபெருமான் அவனுக்குத் தெரிசனந் தருளினர். எ - று. (உ௯௦)

என்னை வேண்டினை யென்றலு மசுரர்கோ னெந்தாய்
நின்ன டித்துணை போற்றவு நிருத்தநா டகத்தின்
முன்னர் நின்றியான் குடமுழ விசைப்பவு முயன்றே
னன்ன தந்தெனக் கருளெனப் பின்னரு மறைவான்.

(இ - ள்.) நீயாது விரும்பினை எனச் சிவபெருமான் வினவவும், அசுரேந்திரனாகிய வாணன், எந்தாய்! தேவரீர் உபயபாதங்களைத் துதிக்கவும் தேவரீரியற்று திருத்த நாடகங்களின் முன்னிருந்து அடியேன் குடமுழவு ஒலிக்கவும் விரும்பினேன். அவற்றைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து மேலும்விண்ணப்பிக்கின்றான். எ - று. (உ௯௧)

கருணை பெற்றுநின் கணத்துளே ளாகவுங் கருத்திற்
பெருகு மன்பொடு நின்னடி யருச்சனை பேணி
நரும தைப்பெரு நதியிடைப் பத்திய விலிங்க
மிருநி லப்புறத் தென்பெய ராக்கவு மியைந்தேன்.

(இ - ள்.) கிருபையெய்தித் தேவரீர் கணத்தினரில் ஒருவனாகவும், என்மனதிற் பெருகிய அன்புடன் தேவரீர் திருவடிப் பூசனைசெய்து பெரிய நருமதை ஆற்றில் விசர்ஜனஞ் செய்த சிவலிங்கங்களெல்லாம் பெரிய பூமியில் என்பெயரால் விளங்கும்படி செய்யவும் விரும்பியுள்ளேன். எ - று. (உ௯உ)

அந்த மாநதி யிலிங்கமற் றருச்சனை யயர்ந்தா
ரெந்தை நின்னடி பெறவரு ளீகுதி யென்று
னந்த நல்வரம் யாவையு மளித்தன னமலன்
புந்தி கூர்ந்தவன் றன்னொடுங் கயிலைபோய்ப் புகுந்தான்.

(இ - ள்.) அந்தப் பெரிய நதியிலுள்ள சிவலிங்கங்களை யருச்சனை செய்தவர்கள், எந்தையே தேவரீர் திருவடிநீழலைப்பெறுமாறு திருவருள் புரிதல்

வேண்டுமென்று யாசித்தான். மலரகிதராகிய சிவபெருமான் அந்த நல்லவரங் களையெல்லாம் அங்ஙனமே யநுக்கிரகித்து மனக்களி மிகுந்து அவ்வாணாசுரனொ டுங் கைலாயகிரிக்கெழுந்தருளினார். எ - று. (௨௩௩)

வாணாசுரன் பூசனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௩௩-க்கு திருவிருத்தம் ௪௦௨௭.

முப்பத்து நான்காவது

மன்மதன் சிவார்ச்சனைச் சருக்கம்.

கலிவிருத்தம்.

மன்னு வார்சடை மாதவத் தந்தணீ
ரின்னு மோர்கதை கேட்டி ரியம்புதும்
பொன்ன லங்கு புரிசடைப் புங்கவன்
றன்ன.ருச்சனைக் கின்னரு டந்ததே.

(இ - ள்.) நிலைபெற்ற பெருந்தவத்தையும் நீண்ட சடையையுமுடைய அந்த ணர்களே! பொன்னிறமாகப்பிரகாசிக்கும் புரிந்தசடையையுடைய சிவபெருமான் தம்மையருச்சித்ததற்கு இனிய திருவருள்புரிந்ததாகிய மற்றொருசரித்திரத்தைச் சொல்லுவோம். கேட்பீராக. எ - று. (௧)

பள்ள நீர்வயற் பப்பர தேயத்தி
னெள்ள றீர்ந்த பகவதி யென்னுமூர்த்
தெள்ளு நான்மறைச் செல்வன் றபனனோர்
பிள்ளை யன்னவன் பேரும சித்தனே.

(இ - ள்.) ஆழமாகிய நீர் நிரம்பிய வயல்களையுடைய பப்பரதேசத்திலே, இழிதகைமை நீங்கிய பகவதியென்னும் நகரத்திலே, தெள்ளிய நான்கு வேதங் களையுமுணர்ந்தசெல்வனாகிய தபனனென்றொருவன். அவனுடைய ஏகபுத்திரன் அவன் பேரும் அசித்தனெனப்படும். எ - று. (௨)

தரும நீத்தனன் றன்குல வைதிகக்
கரும நீத்தனன் கண்ணுகர் வாழ்க்கையா
னுருவ மங்கையர்க் காணினொ ருத்தரை
வெருவ லன்றொடர் காமவி ருப்பினான்.

(இ - ள்.) தருமச்செயலொழிந்தனன். குலவியற்கையாகத் தனது வைதிக கருமங்களை யகற்றினன். கட்குடிக்கும் வாழ்க்கையுடையவன். அழகிய மங் கையர்களைக் கண்டால் ஒருவருக்கும் பயப்படாமல் பின்றொடரும் காமவிருப்பு உடையவன். எ - று. (௩)

இழிகு லத்தவ ராயினு மின்னுரு
விழியி னோக்குறின் வெம்முலை புல்லுவான்
கழிபெ ருங்கருங் கங்குற் களவினு
லொழிவ ரும்பொரு ளீட்டி யுதவுவான்.

(இ - ள்.) தாழ்குலத்திற் பிறந்தவர்களானாலும் இனிய வடிவத்தைக் கண்ணிற் கண்டால், அவர்கள் வலிய தனங்களைத் தழுவுவான். மிக்க பேரிருணிரம்பிய இராக்காலத்திற் களவாடுதலால் நீக்கமற்ற அரிய பொருளைச் சம்பாதித்து அம்மங்கையர்க்குக் கொடுப்பான். எ-று. (ச)

புன்றொ ழிற்கு வனாகிய புன்மையா
னன்றி தீர நடக்குறு நாளையிற்
கன்று காரிருட் கங்குலிற் றார்க்கிக
மென்று ரைத்திடு மானக ரெய்தினன்.

(இ - ள்.) இழிதொழிலுக்கு உட்பட்டவனாகிய அவ்வற்பன் நன்மையென்பது சிறிதுமின்றிக் கழிய நடந்துவருங்காலத்தில், மிக்ககரிய இருளையுடையவோரிரவில், தார்க்கிகமென்று சொல்லப்படும் பெரிய நகரத்தை யெய்தினன். எ-று.

மண்டு கங்குன் மறைப்பர வைக்கரை
கண்ட வன்சங் கரிசனன் றன்மனை
கொண்ட நன்பொருள் வவ்வினன் கோடலுந்
தண்ட ருந்திற லோனைத் தழீஇக் கொண்டான்.

(இ - ள்.) நெருங்கிய இரவில் வேதநூற்கடலைக்கரை கண்டவனாகிய சங்கரிசனன்வீட்டிலே பொருந்தியிருந்த நல்வழியிற் றேடிய திரவியத்தை யபகரித்தெடுத்துக்கொள்ளவும், அவ்வந்தணன் பெருவல்லபமுடைய அசித்தனை யணைத்துப்பிடித்துக்கொண்டனன். எ-று. (கூ)

விட்டி லன்னவ னைக்குல வேதியன்
கட்டு கைக்க ணெகிழ்ந்திலன் கண்ணுறு
வட்ட வாண்முக நோக்கி மறைக்குலம்
பட்ட நீயிப் பழிசெய வேண்டுமோ.

(இ - ள்.) சிறந்தஅவ்வீட்டந்தணன் அக்கள்வனைவிடுத்தானில்லை. பிணித்த கையையும் நெகிழ விட்டானில்லை. வட்டவடிவமைந்த வொள்ளிய முகத்தைப் பார்த்து, வேதியர்குலத்திலுதித்தநீ இப்பழிச்செயலைச் செய்தல்கூடுமோ. எ-று.

மரபி னோங்கிய வான்குலத் துற்றனை
யுரவு நீணிலத் தாரெழி லோங்கினை
கரவு செய்யக் கடவதன் றேயெனுக்
குரவ னிற்சில பின்னருங் கூறுவான்.

(இ - ள்.) மரபினாலுயர்ந்த சிறந்த அந்தணர்குலத்திற் பிறந்தனை. வலிதங்கிய நெடிய உலகத்திலே பேரழகுற்றனை. திருடுதல் செய்யத்தக்க தல்லவே யென்று, ஆசிரியன்போல மேலுஞ் சொல்வானாயினன். எ-று. (அ)

குலங்கெ டுத்தனை கோத்திர சூத்திர
நலங்கெ டுத்தனை நல்லொழுக் கெய்திய

புலங்கெ டுத்தனை புல்லொழுக் கெய்திய
துலங்கொ டோள வுரைத்தியென் றோதினன்.

(இ - ள்) குலத்தின் சிறப்பைக் கெடுத்தாய். கோத்திரசூத்திரங்களின் நன்மையை யழித்தாய். நல்லொழுக்கமடைந்த அறிவை யகற்றினாய். இழிநடையடைந்த வலிதங்கியதோளையுடையவனே! என்று அவ்வந்தணன் கூறினான். எ-று.

அன்ன வன்சொலக் கேட்ட வ சித்தனும்
பன்னு நான்மறைப் பண்டித வென்னுடை
முன்னை யூழின் முயற்சியின் மொய்குழற்
கன்னி மார்தங் கலவிவி ரும்புவேன்,

(இ - ள்.) அவ்வேதியன் அங்ஙனஞ் சொல்லக்கேட்ட அசித்தனென்பவனும், கொல்லத்தக்க நான்குவேதங்களிலும் வல்ல பண்டிதனே! என்னுடைய பண்டைய ஊழ்வினையின் முயற்சியால், நெருங்கிய கூந்தலையுடைய மங்கையர்கள் முயக்கத்தில் இச்சிப்பேன். எ-று. (க௦)

அன்ன மன்னவர்க் காட்பட் டழிகுல
மன்ன சாதி வரம்பழிந் தேகினேன்
பின்ன வர்க்கென நல்கப் பெரும்பொருண்
முன்னி யீங்கிது செய்ய முயன்றனன்.

(இ - ள்.) அன்னம்போலும் நடையையுடைய நங்கையர்களுக்காளாகி கீழ்க்குலத்தார்போலச் சாதிவரம்பு கெட்டுப்போயினேன். மேலும் அவ்வனிதையர்க்காகக்கொடுக்கப் பெரும்பொருளைக்கருதி, இக்களவுத் தொழிலைச் செய்யத்தொடங்கினேன் எ-று. (கக)

அந்த ணாள னசித்த னுரைத்தசொற்
சிந்தை மேவுறக் கேட்டனன் றீமையோய்
நிந்தை நீத்து நெடுங்கதி யெய்தினை
யுய்ந்து போதியென் றோதுதன் மேயினன்.

(இ - ள்.) அசித்தன் கூறியவார்த்தையை அவ்வேதிய சிரேஷ்டன் மனத்திற் பொருந்தக்கேட்டு, கொடியோனே! பழித்தன்மையகன்று பெருங்கதி யெய்தினவனாகி உச்சீவித்துப்போகக்கடவாயென்று மேலுஞ் சொல்லுவதாயினன். எ-று.

கண்ணு தற்கட வுட்பெரு மான்றனை
வண்ண நாண்மல ரான்மலர்த் தாளிணை
யெண்ணி யெண்ணி யருச்சித் திரங்குதி
நண்ணி யோர்ந்தவை யாவையு நல்குமால்.

(இ - ள்.) நெற்றிக்கண்ணையுடைய தெய்வ நாயகராகிய சிவபெருமானுடைய தாமரைமலர்போன்ற உபயபாதங்களை அழகிய அன்றலர்ந்த மலர்களால் மிகவுஞ் சிந்தித்து மனமிரங்கி அர்ச்சனைபுரிவாயாக. அதுவே, நீ யெண்ணிவிரும்பியவற்றையெல்லாங் கொடுக்கும். எ-று. (க௨)

பொருளு மேன்மையும் புல்லொழுக் கெய்துறு
வருளு மீயு மவனடித் தாமரை

மருள்செய் காம வெகுளி மயக்கமு
மொருவி நீங்குவை யென்றெடுத் தோதினான்.

(இ-ள்.) செல்வத்தையும் மேம்பாட்டையும் இழிதொழிலடையாத திருவருளையும் அச்சிவபெருமான் திருவடித்தாமரைகளேகொடுக்கும். மயக்கத்தைச்செய்யுங் காமவெகுளி மயக்கங்களை விலக்கி யகல்வாயாகவென்று எடுத்துச் சொல்லினன். எ-று. (சச)

தூய்மை யென்பன சொற்றுணர்த் தந்தணன்
வாய்மை கேட்டு மணிநகை பூத்தனன்
றீமை யென்றனை யென்சொலித் தேற்றினா
யாய்ம யிற்குலத் தாரடிக் கன்பனே.

(இ-ள்.) புனிதமென்று சொல்லப்படுவனவற்றைச் சொல்லித் தெரிவித்த வேதியன் சத்தியவார்த்தைகளைக்கேட்டு அழகிய புன்னகைபுரிந்தான். ஆய்ந்த மயிலின் கூட்டத்தையொத்த மங்கையர் பாதங்களில் அன்புடைய கொடியேனாகிய என்னையாதிகூறித் தேற்றினீர். எ-று. (கரு)

மானி எம்பெடை மங்கையர்க் காட்பட
லான தொண்டுள வேலருளையநீ
கான மாவினைக் கைநொடித் தாயயல்
போன நீரணை மீளப்பு காதென்றான்.

(இ-ள்.) இளமைவாய்ந்த பெண்மான்போன்ற மங்கையருக்கு ஆட்படுதலாகிய ஒருதொண்டு இருக்குமாயின், அதனை யருள்புரிவீராக. ஐயனே! நீர் காட்டானையைக்கைநொடித்தீர். வெளியேசென்ற நீர்வெள்ளம், கட்டிய அணையில் மீண்டும் புகுமோ? என்றான். எ-று. (கசு)

நன்று சொற்றனை யாயினு நல்லுணர்
வொன்று சொற்றும சித்தவு ணர்தியால்
மன்ற லோதி மயிலனை யார்முலைக்
குன்றி லிங்கமெ னவுளங் கோடியால்.

(இ-ள்.) அசித்தனே! நீநன்றாகச் சொல்லினை. ஆனாலும் நல்லறிவு ஒன்று உனக்குச்சொல்லுவோம். அறிவாயாக. மணந்தங்கிய கூந்தலையுடைய மயிலின் சாயல்பொருந்திய மங்கையர் தனங்களாகிய மலைகளைச் சிவலிங்கக்குறிகளென்று மனதிற்கொள்வாயாக. எ-று. (கஎ)

பூசப் பட்டன முன்புறப் பூசிநல்
வாச நாண்மல ரால்வழி பட்டபி
னேசில் பண்டநை வேத்திய மீந்தரு
ளீச னேயென் றிளமுலை யேத்தென்றான்.

(இ-ள்.) பூசத்தக்கனவாகிய கலவை முதலியவற்றை முதலிலே பூசி, நல்ல மணந்தங்கிய புதியமலர்களால் வழிபாடுசெய்த பின்னர், குற்றமில்லாத பலபண்டங்களை நிவேதனஞ்செய்து, அநுக்கிரகிக்கின்ற கடவுளே! என்று இளமைதங்கிய குசங்களைத்துதிசெய்கவென்றனன். எ-று, (கஅ)

இனைய தன்மை யெடுத்துரைத் தத்தொழில்
வினவி னானை விடுத்தனன் வேதிய
னனைய னேகி யழிதொழிற் பார்ப்பினி
மனைபு குந்தனன் காமம யக்கினால்.

(இ-ள்.) இத்தகைய பூசைத்தன்மையை யெடுத்துக்கூறி, அத்தொண்டினைக் கேட்டுக்கொண்ட அசித்தனைச்சங்கரிசனன் செல்லவிடுத்தான். அவ்வசித்தன் அங்கிருந்துபோய், குலத்தொழில்கெட்ட அந்தணச்சிறுமி மனையைக் காமமயக்கத்தோடு புகுந்தனன். எ-று. (௧௯)

அரவ வல்கு லவளொடு மின்னலந்
தரவி ரும்பினன் றம்மிற் பொருந்தினார்
மரபி னீங்கு மசித்தனு மங்கையு
மிரவி னுண்மலர்ப் பாயலி னெய்தினார்.

(இ-ள்.) பாம்பின் படம்போன்ற அல்குலையுடைய அப்பார்ப்பினியுடன் இனியசுகத்தைக்கொடுக்க விரும்பினன். தங்கள் வீட்டிலிருந்தார்கள் வருணாசிரமதர்மத்திற் கழிந்த அசித்தனும் அவளும் அன்றிரவிற் புதியமலர்கள் பரப்பிய சயனத்தை யடைந்தார்கள். எ-று. (௨௰)

மங்கை யன்னவ ளேந்திம தர்த்தெழு
கொங்கை நோக்கினன் வேதியர் கோன்றனக்
கங்கு ணர்த்திய துள்ளம டைத்தனன்
பொங்கு நாண்மலர்ப் பூசனை போற்றினான்.

(இ-ள்.) அந்த மங்கையின் பூரித்து மதர்த்தெழுந்த குசங்களைக் கண்டான். அந்தணசிரேஷ்டன் தனக்குபதேசித்ததைத் தன்மனதிற்கொண்டான். அதிகரித்தபுதிய மலர்களால் அதனைப்பூசித்துத் துதிசெய்தான். எ-று. (௨௧)

இசைய வேண்டிய வெள்ளிலை யீர்க்ககன்
றசைத ருந்தன தேவனுக் காக்கினான்
வசையி லாசையி னால்வழி பட்டன
னசைவி ருப்பி னினைய நவிற்றுவான்.

(இ-ள்.) இசையவேண்டிய வெள்ளிய வெற்றிலையை நரம்புகிழித்து ஆசைதரத்தக்க தன்னுடைய தேவனுக்கு நிவேதனம் ஆக்கினான். குற்றமில்லாத உண்மையன்போடு வழிபாடுசெய்து, பெருவிருப்பத்தோடு இத்தகைய சொற்களைச் சொல்லுகின்றான். எ-று. (௨௨)

தேவ தேவத னேச்சுர தேவநீ
பாவை மார்பிற் பணைத்தெழு கொங்கையா
மேவ ருஞ்செ யனல்கென வேண்டிநின்
றாவ கூறி யவட்புணர்ந் தானரோ.

(இ-ள்.) தேவதேவனே! தனேசுவரனே! தேவனே! தேவரீர் இப்பெண்ணின்மார்பிலே கிளைத்தெழுந்த கொங்கைரூபமாக அடைதற்கரிய செயலைத் தந்[illegible]ன்று பிரார்த்தித்து நின்று ஆவனவற்றைச்சொல்லி அப்பெண்ணைக் (௨௩)

விடிய நோக்கினன் வெள்ளிடைப் போயினன்
கொடிம ருங்குனல் லார்துணைக் கொங்கையின்
கடிகொ ளுண்மல ரர்ச்சனை கைவிடா
னெடிது வைகலு மின்னண நீத்தனன்.

(இ-ள்.) பொழுது புலரப்பார்த்துக்கொண் டிருந்தனன். வெற்றிடத்திற் சென்றான். பூங்கொடிபோலும் இடையையுடைய நல்லாராகிய மாதர்களது இரு கொங்கையினிடத்தில், மணம்பொருந்திய அன்றலர்ந்த மலர்களாற் பூசித்தலைக் கைவிடாமற் பலகாலத்தையும் இவ்வகையாகக் கழித்தனன். எ-று. (உ௪)

ஈது காலத் திருஞ்சுர மெய்தினன்
காது வெஞ்சினக் கைக்கதை யாலவண்
போது மாக்க ளுயிர்ப்பொறை போக்குவான்
வாதை செய்தவர் கைப்பொருள் வவ்வுவான்.

(இ-ள்.) இப்படிப்பட்டகாலத்தில் அவன்பெரியவனத்தை யடைந்து கடுங் கோபம் பொருந்திய கையிலுள்ள கதாயுதத்தினால், அவ்வழியே செல்லும் மாந் தர்களுடைய உயிர்ச்சுமை யகற்றியும், பலவகைத் துன்பம்புரிந்தும் அவர்கள்கை யிலிருக்கும் பொருள்களை யபகரிப்பான். எ-று. (உ௫)

இன்ன வீதிழைத் தெய்திய காலையி
லன்ன கானத் தெரியழ லாங்கவன்
றன்னை யாருயி ருண்ணத் தழற்சுரஞ்
சென்னெ றித்தலைத் தீமையொ ழிந்ததால்.

(இ-ள்.) இத்தகைய துன்பஞ் செய்துகொண்டிருந்தகாலத்தில், அவ்வனத்தி லெரிந்துகொண்டிருந்த [தாவானலம்] காட்டுத்தீயானது அவனை அரிய உயி ருண்ண, தீமயமானகாட்டிற் செல்லும் வழிமார்க்கத்தில் அவனாலுண்டாயிருந்த துன்பமகன்றது. (அவனிறந்தானென்றபடி.) எ-று. (உ௬)

மாதர் கொங்கைய னென்னும் வரதனைத்
தீதில் சிந்தையி னாலருச் சித்தலா
லோது பாவ மொழிந்தன னோங்கிரும்
பாத கற்கும் பவித்திர முற்றதால்.

(இ-ள்.) மாதர்களது கொங்கையின்கண் விளங்கும் (தனேச்சுவரனென்னும்) சிவபெருமானை, குற்றமில்லாத மனதினாற் பூசித்தகாரணத்தினால், சொல்லத் தக்கபாவங்களை நீங்கினன். அதிகரித்த பெரும்பாவம்புரிந்தவனுக்கும் (சிவார்ச் சனையினாற்) புனிதத்தன்மையுண்டாயிற்று. எ-று. (உ௭)

கந்த வார்குழ லார்கதிர்க் கொங்கையி
னெந்தை தாளருச் சித்திரந் தேத்தலாற்
பைந்து ழாய்முடிப் பாம்பணைப் பள்ளியான்
சிந்தை தந்துறச் சித்தச னாயினன்

(இ-ள்.) மணந்தங்கிய நெடிய கூந்தலையுடைய மங்கையர்கள் ஒளிவீசுந் தனத்தில், எந்தையாகிய சிவபெருமான் திருவடிகளை யர்ச்சனைசெய்து யாசித்துத் துதித்தபடியால், பசிய துளசிமாலையணிந்த கிரீடத்தையுடைய சேஷசயனத்தி

லறிதுயில்புரியுந் திருமால் மனமானது தரப்பெற்றுச் சித்தசனென்னும் பெயருடையவனாயினன். எ-று. (உஅ)

மேற்படி வேறு.

நல்லெழி லுருவத்தா னவையி னேக்கத்தான்
மல்லெழு தடம்புய வனப்பு வாய்ந்தனன்
றொல்லைவா னமரருந் தொழுதன் மேயினு
னல்லொளி மரகதத் தலங்கு மேனியான்.

(இ-ள்.) இருண்மயமாகிய மரகதம்போலவிளங்குந் தேகமுடையவனும், நல்லழகமைந்த வடிவமுடையவனும், குற்றமில்லாத பார்வையுடையவனும், வளந்தங்கிய எழுத்தம்பம்போன்ற பூரித்த தோளழகுவாய்ந்தவனுமாகி, பழமையாகிய தேவலோகத்திலுள்ள அமரர்களும் வணங்குதலெய்தினன். எ-று. (உகூ)

வரிப்பொறிப் பாம்பணை வரத னேவலி
னருச்சனைக் குறைமுடித் தாற்ற வேண்டுவோன்
விரித்தவெண் டிரைப்புனற் காசி மேயினன்
புரித்தவார் சடைமுடிப் புனிதற் போற்றுவான்.

(இ-ள்.) வரிகள்பொருந்திய படப்பொறியையுடைய ஆதிசேஷனாகிய சயனத்தில் யோகநித்திரைபுரியுந் திருமால் கட்டளையினால், சிவார்ச்சனையின்குறைபாட்டை முடித்துச்செய்ய விரும்பி, பரந்தவெள்ளிய அலைகள்பொருந்திய நீரையுடைய காசிக்ஷேத்திரமெய்தினன். புரிவுபட்ட நீண்டசடைமுடியையுடைய சிவபெருமானைத் துதிப்பானாயினன். எ-று. (௩௦)

அத்தலை யருச்சனை யயர்ந்த தேவற்குச்
சித்தச னெனத்திரு நாமஞ் சேர்த்தினன்
மெய்த்திறத் தாலயம் விதியிற் கோட்டினன்
பத்தியி னருச்சனை பயில்வ தாயினன்.

(இ-ள்.) அங்கே தான்சிவார்ச்சனைசெய்த சிவலிங்கப்பெருமானுக்கு சித்தசனென்று திருநாமஞ் சூட்டினன். உண்மைத்திறத்தோடு சிவாலயத்தைச் சிற்பநூல் விதிமுறையே கட்டிமுடித்தான். பத்தியோடு சிவார்ச்சனையைக் காலநியதிகடவாமல் விதிப்படிசெய்பவனாயினன். எ-று. (௩க)

இயற்றிய வருச்சனைக் கிரங்கி யெம்பிரான்
புயற்குழ லவளொடும் விடையிற் போந்தனன்
மயக்கறச் சித்தசன் மரபிற் போற்றினன்
வியப்பொடுங் கண்கணீர் கலுழ வீழ்ந்தனன்.

(இ-ள்.) சித்தசன்செய்த சிவபூஜைக்குமகிழ்ந்து சிவபெருமான் திருவுளமிரங்கி, மேகம்போலக்கறுத்த கூந்தலையுடைய உமாதேவியாரோடும்இடபவாகனமூர்ந்து காட்சிதந்தருளினர். சித்தசன் தரிசித்துமனமயக்ககல, சந்தோஷத்துடன் கண்களில் ஆநந்தபாஷ்பஞ்சிந்தப்பணிந்து துதிசெய்தான். எ-று. (௩உ)

தென்றலந் தேரொடு கருப்புச் செஞ்சிலை
துன்றிய புகர்முகச் சுரும்பு நாணொடு

மன்றலுண் மலர்க்கணை வழங்கி னன்கலை
குன்றுரு முழுமதிக் குடையு மீந்தனன்,

(இ-ள்.) அழகிய தென்றலாகிய தேருடன், சிவந்தகருப்புவில்லும், நெருங்கிய புள்ளிகளமைந்த முகத்தையுடைய வண்டுகளாகிய நாணும், மணந்தங்கிய புதியமலர்ப்பாணங்களும் வழங்கினர். கலைகள் குறைவுபடாத பூரணசந்திரனாகிய வெண்கொற்றக்குடையையும் அளித்தனர். எ-று. (௫௩)

கிள்ளைவாம் புரவியும் பூவைக் கிள்ளையும்
வள்ளைவார் நெடுங்குழை மகளிர்ச் சேனையுங்
கள்ளவிழ் கருங்குழ லிரதி யுங்கனி
நள்ளிருட் பகடுமே முதல நல்கினான்.

(இ-ள்.) கிளியாகிய தாவிச்செல்லுங் குதிரையும், நாகணவாய்ப்புள்ளாகிய கிளிபும், வள்ளைக்கொடிபோலுஞ் செவியில்நெடிய குண்டலமணிந்த மாதர்களாகிய சேனையும், தேன்சிந்துங்கரிய கூந்தலையுடைய இரதிதேவியும், கனிந்தபேரிருளாகியயானையும் முதலியவற்றைத் தந்தருளினர். எ-று. (௫௪)

பெற்றன னிவையெலாம் பெற்ற போர்வலி
முற்றமூன் றுலகெலாங் கடந்து முற்றினான்
மற்றுள தேவரும் வைய மாக்களுங்
கொற்றவெண் முழுமதிக் குடைக்கு ளாக்கினான்.

(இ-ள்.) இவற்றையெல்லாஞ் சிவபெருமானாற் கொடுக்கப்பெற்றனன். அப்படிப் பெற்ற போர்வல்லபமானது முற்றுப்பெறத் திரிலோகங்களையுஞ் சயித்து முடித்தான். மற்றுள்ள தேவர்களையும் பூலோகத்திலுள்ள மாந்தர்களையுந் தனது பூர்ணசந்திரனாகிய வெண்கொற்றக்குடை நிழற்குட்படச்செய்தான். எ-று. (௫௫)

விருப்பினா லருச்சனை மரபின் வேண்டலா
னருட்பெறப் பெற்றபே றிவையென் றாலணி
யிருட்கறை மிடற்றனை யினிதி னேத்தினோர்க்
கொருப்படும் பேறியா துரைக்கற் பாலதோ.

(இ-ள்.) (தாமரை மா அசோகு முல்லை நீலோற்பலமென்னும்) மலர்ப்பாணங்கள் ஐந்தினால் திரிலோகங்களிலும் உயர்ந்தபெரியதன் செங்கோலைச் செலுத்திச் சயங்கொண்டான். நீங்குதற்கரிய சராசரங்களெல்லாம் நெடிய சந்திரிகைவீசும் அரியபெரியகுடையாகிய பூர்ணசந்திரன்நிழலில்வசிக்கும். எ-று. (௫௬)

பூங்கணை யைந்தினாற் புவன மூன்றினு
மோங்கிருந் தனதுகோ லோச்சி வென்றனை
னீங்கருஞ் சராசர மனைத்து நீணிலா
வாங்கரும் பெருங்குடை மதிக்குண் வைகுமால்.

(இ-ள்.) விருப்பத்துடன் சிவார்ச்சனைபுரிதலை மரபுவழிவிரும்பாதவன் திருவருளையடையப் பெற்றபேறு இத்தகையினவென்று சொன்னால், அழகிய இருள்போன்ற விஷம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமானை இனிதாகத்துதிசெய்தவர்களுக்கு அடையப்பெறும் பதவியாம் எடுத்துச்சொல்லுந் தன்மையுடையதோ. எ-று. (௫௭)

எள்ளரு மதச்செருக் கிருந்த வாபிறைப்
பிள்ளைவே ணியனையு மதிக்கப் பெற்றிலான்
கள்ளவிழ் கணையவன் கருத்திற் சார்த்தினான்
பொள்ளெனத் தொடையுடைத் தெழுந்து பொங்கினான்.

(இ-ள்.) இகழ்தற்கரிய மதச்செருக் கிருந்தவகையால் இளம்பிறைச்சந்திரனை யணிந்த சடையையுடைய சிவபெருமானையும் மதிக்கப்பெறாதவனாய், தேன் சொரியும் மலர்க்கணையை அவ்விறைவனுளத்திற்பொருத்தினான். விரைந்துதொடையைத்தட்டிக்கொண்டு எழுந்துகோபித்தான். எ-று. (௩௮)

என்னையா ளுடையவ னென்கொ லீதென
வுன்னருந் திருவரு ளுருத்து நோக்கலும்
வெந்நெருப் பெழுநுதல் விழித்த தாங்கவன்
றன்னுடற் பொடிபடு சாம்ப ராயினான்.

(இ-ள்.) என்னை யடிமையாகவுடைய சிவபெருமான் இஃதியாதென்று நினைத்தற்கரிய திருவருளாற் கோபித்துப்பார்க்கவும். நெற்றிவிழி வெவ்விய நெருப்பெழ விழித்தது. அதனால் அச்சித்தசன் தன்னுடலமானது பொடிபடும்படி சாம்பராக ஆயினன். எ-று. (௩௯)

தேவருந் திகைத்தனர் திகந்த மெட்டுள
காவலர் திகைத்தனர் கடவுட் சித்தசன்
வேவருந் தழற்புகை விழிக்கொ ணாமையாற்
றுவரு முலகெலாந் தவழ்ந்து வீங்கிற்றே

(இ-ள்.) தேவர்களுந் திகைத்தார்கள். அஷ்டதிசைகளிலுள்ள திக்குப்பாலர்கள் மயங்கினார்கள். கடவுளாகிய சித்தசனுடைய வேகற்கரிய தீம்புகையானது காணப்படாமையால், கெடுதலற்ற உலகமுழுவதும் பரந்துபெருகியது. எ-று.

ஓர்ந்தன ளிரதிவெந் தொழிந்த சாம்பரிற்
சோர்ந்தன ளரற்றின டுணுக்க மெய்தின
ளீர்ஞ்சடைப் புனிதனை யிரந்து போற்றினள்
பேர்ந்தில ளந்நிலை யழுது பேதுறா.

(இ-ள்) இரதிதேவி இதனையறிந்தனள். சித்தசன் வெந்தழிந்த சாம்பலிற் சோர்வடைந்து விழுந்தனள். அழுதனள். துணுக்கெய்தினள். குளிர்ந்த சடையையுடைய சிவபெருமானையாசித்துத்துதித்தனள். அந்நிலைமையிலேயே அழுதுகொண்டு துனபமெய்திப் பெயர்ந்தாளில்லை. எ-று. (௪௧)

நின்றன ளவணிலை நிமல னோக்குறாக்
கன்றிய திருவுளக் கறுப்பு நீத்தன
னன்றவட் குருவமா யருவ மற்றவர்க்
கென்றளித் தந்நிலை யெழுப்பி யீந்தனன்.

(இ-ள்.) இப்படி வருந்திநின்றவளாகிய இரதியின் நிலைமையைச்சிவபெருமான் திருவருணோக்கஞ்செய்து, கோபித்த திருவுள்ளத்தின் சினக்குறிப்பை யகற்றினர். அப்பொழுது அவளுக்கு உருவமாகவும் ஏனையோருக்கு அருவமாகவும் விளங்குகவென்றநுக்கிரகித்து மன்மதனை யெழுப்பிக்கொடுத்தன. எ-று. ()

தேவரி லொருவனென் றரனைச் சிந்தியாப்
பூவருங் கணைகளாற் பொருது மாண்டனன்
யாவரு மிங்ஙன மதிக்கி லந்தணீர்
மேவருந் தழற்படு நிரையம் வீழ்வரால்.

(இ - ள்.) சிவபெருமானைத் தேவர்களிலொருவனென்று கருதி, அரிய புஷ்பபாணங்களாற் போர்செய்திறந்தனன். வேதியர்களே! எவராயினும் இங்ஙனம் மதிப்பார்களானால், அடைதற்கரிய தீமயமாகிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவார்கள். எ - று. (௪௬)

மன்மதன் சிவார்ச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௩௪-க்கு திருவிருத்தம் ௪௦௭௦.

முப்பத்தைந்தாவது,

கிருது சிவார்ச்சனைச்சருக்கம்.

(*)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இந்தியங் கடந்து புலன்களோ ரைந்து மொருவழி நிறுத்தி மற்றெழுதா, முந்தைநான் மறைக்கு மரிமுத லெவர்க்கு மளப்பரு முழுமுதற் பொருளிற், சிந்தனை திருத்து மருந்தவத் தலைவீ ரின்னுமோர் கதையதன் றிறத்துப், புந்திவைத் தொருங்கு கேட்கெனச் சூதன் புகன்றவர்க் காங்கது புகல்வான்.

(இ - ள்.) பஞ்சேந்திரியங்களையுங்கடந்து, ஒப்பற்ற ஐம்புலன்களையும் ஒரே வழியில் நிறுவி, எழுதாக்கிளவியாகிய பழைய நால்வேதங் கட்கும் திருமால் முதலியவெல்லாருக்கும் அளவிடற்கரிய முழுமுதற் கடவுளாகிய பொருளினிடத்தில் மனதைத் திருத்திய அருந்தவம்புரிந்த தலைவர்களே! இன்னுமோர் சரித்திரமுள்ளது. அதன்பால் மனதை ஒருசேரவைத்துக் கேட்பீர்களாகவென்று சொல்லி, சூதமுனிவர் அவ்விருடிகட்கு அதனைச் சொல்வாராயினர். எ-று. (க)

மணிகொழித் திரைக்கும் பெருநதி யுடுத்த மாளவ தேயமத் தேயத், தணிநெடும் புரிசை வயிணவ மென்னு மணிகிளர் பெருந்திரு நகரிற், கணிதநான் மறையின் குலத்தவ தரித்த கிருதுவென் றொருகடுங் கண்ணன், குணில்படு கரத்தோ னுயிர் செகுத் துண்ணுங் கொலைத்தொழி லடுதிறற் கொடியோன்.

(இ - ள்.) நவமணிகளைக் கொழித்திரைக்கும்படியான பெரிய நதிசூழ்ந்த மாளவதேயமொன்று. அத்தேயத்திலே அழகியநெடிய மதிலையுடைய வயிணவமென்னும் அழகுவிளங்கும் பெரிய செல்வந்தங்கிய நகரத்தில்கணித்த நால்வேதமுணர்ந்த அந்தணர் குலத்திற் பிறந்த கிருதுவென்று சொல்லப்படுங் கடுங்கண்ணனொருவன், குணில்பொருந்திய கையையுடையவன், உயிர்களைக் கொன்றுதின்னுங் கொலைத்தொழிலையும், கொல்லத்தக்க வல்லபத்தையுமுடைய தீயோன்,

புண்ணிய பாவ மென்பன விரண்டும் பகுத்துண ரறிவிலன் பொருகோட், டண்ணல்வெள் ளிடையோ னடியவ ரொழியா வரந்தைபெற் றலமரப் புடைக்குந், துண்ணெனக் கழுதுஞ் சுழல்வரு மிருளிற் பிறர்மனை தொறும்பொருள் கவரும், வண்ணவால் வளைக்கைப் பொதுமகட் குதவி வளரிள வனமுலை முயங்கும்.

(இ - ள்.) புண்ணியம் பாவமென்று சொல்லப்படும் இரண்டனையும் பகுத்தறியும் அறிவில்லாதவன். போர்புரியுங் கொம்பையுடைய பெருமைபொருந்திய வெள்ளிய இடபவாகனராகியசிவபெருமான் அடியவர்களை ஒழியாததுன்பமெய்திவருந்தும்படியடிப்பான். பேயும் விரைந்து சுழலும் இருட்காலத்தில் அன்னியர்வீடுகளிலெல்லாம் பொருளை யபகரிப்பான். அழகிய ஒள்ளிய வளையலணிந்த கையையுடைய பொதுமாதர்க்குக் கொடுத்து வளர்கின்ற இளமைதங்கிய அழகிய தனங்களைச்சேருவான். எ - று. (௫)

ஈநற வெடுத்து வெளிப்பட நுகரும் பல்லுயி ரீர்ந்தெடுத் துண்ணுங், கானகஞ் சுழலு நெறிப்படு மாக்கட் புடைத்தவர் கைப்பொருள் கவரு, மேனையோ னின்ன புல்லொழுக் கொழுகு மெல்லையி னிளமுலைக் கருங்கட், டேநகைப் புலைச்சி நலனுகர்ந் தவள்பாற் றுயருழன் றியங்குறு மந்நாள்.

(இ - ள்.) ஈக்கள் மொய்க்குங் கள்ளையெடுத்து வெளிப்படையாகக் குடிப்பான். பல்வகைப்பிராணிகளையுங் கொன்றெடுத்துப் புசிப்பான். காட்டிலே சஞ்சரிப்பான். வழியிலகப்பட்டமாந்தர்களை யடித்து அவர்கள் கையிலுள்ள பொருள்களை யபகரிப்பான். இவன் இத்தகைய இழிதொழின்மேற்கொண்டொழுகு நாட்களில் இளமைதங்கிய தனத்தையும் கரியவிழியையும் சுத்தமாகிய பல்லையுமுடைய ஒருபுலைச்சியின் இன்பத்தை யனுபவித்து அவளிடத்தில் துன்பமெய்தி அலைகின்றகாலத்தில். எ - று. (௬)

கருங்கடற் பரவை கிழித்தெழு மால காளகண் டத்தினோற் கென்னப், பொருந்திய புலரி நறுமலர் தெரிந்து போதரு மொருவனப் பொழுதி, லெரிந்தெழ வெகுளி மீக்கொளத் தொடரா வோடின னம்மலர்க் குடம்பை, பரிந்திடை பறித்தா னங்கவ னரற்றக் குணில்கொடு புடைத்தனன் பதகன்.

(இ - ள்.) கரிய கடற்பரப்பைக் கிழித்துக்கொண்டெழுந்த ஆலாலம்பொருந்திய கரியகண்டத்தையுடைய சிவபெருமானுக்கென்று, பொருந்திய விடியற்காலத்தில் மணந்தங்கிய நல்லமலர்களைத் தெரிந்தெடுத்துவருகின்ற ஒருவனை, அப்பொழுது எரிந்துகொண்டெழுந்த கோபமதிகரிக்கத்தொடர்ந்தோடி, அம்மலர்ப்புட்டிலையிடையே பறித்தான். அதற்கவன் இரைச்சலிட, அப்பாவிதன் கையிலிருந்தகுறுந்தடியா லடித்தனன். எ - று. (௭)

தண்மலர்க் குடம்பை பறித்தலு மொழுகி வீழ்ந்ததோர் தனிமுகை யதனை, மண்மலர்ந் ததுவீ தெமக்கல வரற்கீ தென்றுதன் மனத்தொடு மதித்தான், புண்மலர்ந் தடுவேற் கருநெடுந் தடங்கட் புலைச்சியுந் தானுமாய்ப் புனைந்தா, னுண்மருங் கொசிக்கு மிளமுலை யவளைத் தழீஇக்கொடு நன்னல நுகர்ந்தான்.

(இ - ள்.) குளிர்ச்சிபொருந்திய புட்பக் குடலையைப்பறிக்கவும்,சிந்திவிழுந்த தொரு ஒப்பற்ற அரும்பினை இது மண்ணிற்படிந்தது ஆனபடியால் இது எமக்கா காது. சிவபெருமானுக்குரித்து என்று மனதிற் கருதினான். புண்படுத்திக்கொல் லும் வேல்போன்ற கரிய நீண்டுபரந்த விழியையுடைய புலைச்சியுந் தானுமாய் அணிந்துகொண்டு, நுட்பமாகிய இடையை ஒடியச்செய்யும் இளமைதங்கிய தனை முடைய வவளை ஆலிங்கனஞ்செய்துகொண்டு நல்ல இன்பத்தை யநுபவித்தான்.

அழுதழு தரற்றி யாவெனக் கூவி மழவிடை யானடித் தொண்ட, னெழுதரு கவிகை மன்னவற் குரைப்ப வாங்கவன் வெகுளிமிக் கெழுந் தான், பழுதிழைத் தகனு மன்னவற் கொணர்மி னென்றலு மிரவுபார்த் தனரப், பொழுதவற் கொணர்ந்தா ரருஞ்சிறைப் பிணித்துப் புகுத்தி னர்காரகத் தகவை.

(இ - ள்.) இளமைதங்கிய இடபவாகனத்தையுடைய சிவபெருமான் திரு வடிக்கன்பன், (மலர்ப்புட்டிலையிழந்து) மிகவும் அழுதுபுலம்பி ஆஆவென்று கூச் சலிட்டு, உயர்ந்த வெற்றிக் குடையையுடைய அரசனுக்குக்கூற, அவன் கோப மிகுந்தவனாய், சிவாபசாரஞ்செய்து சென்ற அக்கொடியோனைக் கொண்டுவருக வெனக் கட்டளையிடவும், அவர்கள் இரவிற்பார்த்திருந்து அப்பொழுது அவ னைக்கொண்டுவந்து அரிய சிறைப்பிணித்து காராக்கிரகத்தில் அடைத்து வைத் தார்கள். எ - று. (எ)

அருஞ்சிறைக் கிடந்து நாட்பல கழிய வாக்கைவிட் டாருயிர் துறந் தான், பொருஞ்சினத் தறுகட் டென்புலத் தூதர் புகுந்தனர் புயத்தொ டுந் தாம்பு, வரிந்துகொண் டிறுக்கிச் சேறலு மதனை நோக்கினர் மழ விடைப் பெருமான், பெருந்திருக் கயிலைக் கணத்தவர் படர்ந்தா ராங்க வர்ப் பிற்படப் புடைத்தார்.

(இ - ள்.) அரிய சிறைக்களத்திற் பலகாலம் நீங்க உடலைவிட்டு அரிய வுயிர் நீங்கினான். போர்செய்யத்தக்க கோபத்தையுடைய அஞ்சாமைத்தன்மைவாய்ந்த இயமபுரத்தூதுவர்கள் அங்கெய்தி, தோள்களைக்கயிற்றாற்கட்டிக்கொண்டிறுக்கிச் செல்லவும், இளமைதங்கிய இடபாரூடராகிய சிவபெருமானது பெரியதிருக்கை லாயத்திலுள்ள சிவகணத்தவர்கள்கண்டு அவ்விடஞ்சென்று அவர்களைப்பிற்படும் படி யடித்தார்கள். எ - று. (அ)

வாளொளி யிமைக்கு மானமீப் பொருத்திச் சென்றனர் மகரநீ ரளித்த, காளகண் டத்தன் முன்னரின் விடுப்பத் திருவருட் கருணை பெற் றுவந்தான், மூளம ரிழந்த தென்புலத் தூதர் மறலிபா லிங்கிது மொழிந்து, தாளிணை தொழுதார் சித்திர குத்தன் றன்னொடும் வினவ லும் புகல்வான்.

(இ - ள்.) ஒள்ளிய காந்தியைவீசும் விமானத்தின்மீதி லிருத்திக்கொண்டு போயினாராகி, சமுத்திரநீரிற்றோன்றிய விஷம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான் திருமுன்னர் நிறுத்த, சிறந்த பெருங்கருணை பெற்றுக் களித்த னன். நெருங்கிய போர்க்குத் தோற்ற இயமதூதர்கள் இயமனிடத்தில் இச்செய் தியைக் கூறி இருபாதங்களையும் வணங்கினார்கள். சித்திரகுத்தனோடு சொல்லவும். அவன் சொல்லுகின்றான். எ - று. (கூ)

மல்லனீர்ப் பழன மாளவ தேய வயிணவத் தொன்னக ரதன்பாற்,
றொல்லைநான் மறையோர் குலத்தவ தரித்துத் தன்னிலை துறந்தன
னவனா, லெல்லைமா நிலத்தி னிகழ்ந்தபா தகத்தை யெம்மனோர் மொழி
யமுற் றுறுமோ, குல்லைநீண் மோலி முதலினோ ரளப்பிற் கற்பமோர்
கோடிபெற் றுறுமால்.

(இ - ள்.) வளந்தங்கிய நீர் நிறைந்த கழனிகளையுடைய மாளவதேசத்திலே வயிணவமென்னும் பழமையாகிய நகரத்திலே, தொன்றுதொட்டுவரும் நான்கு வேதங்களுணர்ந்த வேதியர் குலத்திலே பிறந்து தன்னிலைமைமாறினவன். பெரியபூமியில் அவனாற் செய்யப்பட்ட பாவங்களை யெம்மவர்கள் சொல்ல முற்றுப் பெறுமோ? துளவமாலையணிந்த நெடிய கிரீடத்தையுடைய திருமால் முதலானோர் அளவிட்டாலும் ஒருகோடிகற்பகாலஞ் செல்லும். எ - று. (௧௦)

பூதிசா தனத்த னுருத்திர மணிய னொருத்தனெம் புனிதனுக்கென்
றுச், சீதநாண் மலர்கொண் டேகலு மவனைச் செயிர்த்திடை பறித்த
னன் பறிக்கும், போதினோ ரரும்பு நிலத்திடை வீழ வீசரற் கென்றனன்
போனா, னீதலா லிவனாற் செய்ததோர் தருமமுண்டுகொ லென்றன
னெனலும்.

(இ - ள்.) திருவெண்ணீ றணிந்தவனும் உருத்திராக்கம் பூண்டவனுமாகிய வொருத்தன், எமது புனிதனாகிய சிவபெருமானுக்கென்று, குளிர்ச்சிவாய்ந்த அன்றலர்ந்த மலர்களைக்கொண்டு செல்லவும், அவனை வழியிடையே தடுத்துப் பறித்தான். அப்படிப் பிடுங்குகையில் ஒரு அரும்புபூமியில் வீழ, இது சிவபெருமானுக்கென்று சொல்லிப்போய்விட்டான். இதுவேயல்லாமல் இவனாற் செய்யப்பட்ட தருமமொன்றுள்ளதோவென்று சித்திரகுத்தன் சொல்லினன். அப்படிச் சொல்லவும். எ - று. (௧௧)

வயிரவா ளெறிக்கு நெடுங்குழை மகரந் துயல்வர மணிமுடி யசை
த்தா, னயிலெயிற் றரவ மிலைச்சிய பெருமான் றிருவரு ளறிந்ததி சயித்
தான், குயின்மொழிக் குதலை பங்கனுக் குரியோர் கொலைத்தொழில்
புரிந்தன ரெனினு, மயர்வறத் தொழுது நீங்குமி னமர்கா ளென்றனன்
பின்னரும் வலிப்பான்.

(இ - ள்.) வச்சிர ரத்தினங்கள் வெள்ளொளிவீசும் நெடிய மகரகுண்டலமானது அசையும்படி நவரத்தினங்கள்பதித்த கிரீடத்தை யசைத்தனன். கூர்மையாகிய பற்களையுடைய சர்ப்பத்தை யணிந்த சிவபெருமானது திருவருட்டிறத்தை யுணர்ந்து அதிசயமெய்தினன். குயில்போலுங் குதலைச்சொல்லையுடைய பார்வதிபாகராகிய சிவபெருமானுக்கு உரியவர்கள் கொலைப்பாதகஞ்செய்தனரானபோதிலும், மயக்க மகல அவர்களைப்பணிந்து நீங்கக்கடவீர்கள். நம்மவர்களே! என்று மேலுஞ்சொல்வானாயினான். எ - று. (௧௨)

வருகுதிர் நீவிர் மழுவிடைப் பெருமான் மலரடி யருச்சனை புரிவோ,
ரருகுநின் றவர்க்கொன் றியற்றின கொடுப்போ ராங்கவர் பணிவிடைக்
குரியோர், கருதுமிம் மூவர்க் காணுறி னமர்காள் கையெடுத் தடிக்கடி
தொழுமி, னுருகிநீத் தகன்மி னன்றெனி னமது கோமுறை யழிவுபெற்
றிடுமால்.

(இ - ள்.) நம்மவர்களே! வாருங்கள். நீங்கள் இளமைதங்கிய இடபவாகன முடைய சிவபெருமான் தாமரைமலர்போன்ற பாதங்களையர்ச்சனைசெய்பவர்கள், அவர்கட்கருகே யிருந்து தம்மாற் கூடிய பொருளை யுபகரித்தவர்கள், அவர்கள் தொண்டுபுரிதலுக் குரியவர்கள் ஆகிய எண்ணத்தக்க இம்மூவகையினரைக்காணப் பெற்றால், அடிக்கடி கைகூப்பிப் பணியக்கடவீர்கள். மனங்கசிந்து அவர்களை விட்டு நீங்குங்கள். அல்லாவிடின் நம்முடைய அரசமுறைமை கெட்டுப்போய் விடும். எ - று. (௧௫)

விரிதிரை புரளு நெடுங்கடல் வரைப்பின் வெண்மருப் பொருகை
மால் யானை, யுரிவைபோர்த் துடுத்தோன் பூசனை புரிவா ருளரெனி லாங்
கவர் நோன்மை, யரிமுத லெவர்க்கு முரைப்பதற் கெளிதன் றெம்ம
னோ ரறைவதற் கெளிதோ, புரிசடை யவனை யருச்சனை மரபிற் போற்றி
னோர் விழுப்பமார் புகல்வார்.

(இ - ள்.) விரிந்த அலைகள் புரளுகின்ற நெடிய கடல்சூழ்ந்தபூமியில் வெள்ளிய தந்தத்தையும் ஒற்றைக்கையையு முடைய பெரிய (கயாசுரனென்னும்) யானையின் றோலை யுரித்துப் போர்த்திய சிவபெருமான் பூசையைச்செய்பவர்களுண்டாகில், அவர்கள் தவசீலம் திருமால் முதலிய எவருக்கும் சொல்லுவதற் கிலேசானதல்ல, நம்மவர்கள் சொல்லுவதற் கெளியதோ? புரிந்தசடையையுடைய சிவபெருமானை முறைப்படி அருச்சித்துத் துதித்தோர் சிறப்பினை யாவர் சொல்ல வல்லவர்? எ - று. (௧௬)

முத்தவா ணகைய முகின்முலைக் கௌரி யைங்கரன் முருகவேள் வீர
பத்திரன் கணத்தோர் நந்திமா காளர் வயிரவர் பரமனுக் கரிக்குப்
புத்திர னிவனையோர் மற்றுளோ ரெவரும் புராந்தகன் மலரடி போற்றி
நித்தலும்பரவி யருச்சனை வகுப்பா ரின்னமு நிகழ்த்துவன் கேண்மின்.

(இ - ள்.) முத்துப்போன்ற வெள்ளிய தந்தபந்தியையும் கோங் கரும்பு போன்ற குசத்தையுமுடைய உமாதேவியார்-ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமான்-குமாரசுவாமி-வீரபத்திரர்-சிவகணங்கள்-நந்தி மாகாளர் - வயிரவர்-சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பிறந்த அரியரபுத்திரனென்னும் ஐயனார்-இவர்களும் இன்னும் உள்ளவர்களெல்லாரும், திரிபுரதகனராகிய சிவபெருமான் மலர்போன்ற பாதங்களைத் துதித்து நாடோறும் வணங்கி யருச்சிப்பார்கள். இன்னும் சொல்லுவேன். கேட்பீர்களாக. எ - று. (௧௭)

கன்னியர் கருப்ப மகளிர்நான் மறையோ ரின்னவர்க் கடிந்துயிர்
செகுத்தோர், பொன்னவிர் சடையோன் சினகரம் புகுந்து நிதிகவர்
புலையர்தங் குருவின், பன்னிகைப் பிடித்தோ ரிவரலாற் கொடிய பாதக
ராயினும் பரமன், றன்னடிப் பூசைக் குரியரே லவரே யரிமுத லவர்
தொழுந் தலைவர்.

(இ - ள்.) கன்னிகைகள்-கருப்பஸ்திரீகள்-நான்குவேதங்களையுணர்ந்த அந்தணர்கள்-இவர்களை வருத்தி உயிர்வதை செய்தவர்கள், சிவாலயத்தினுட் பிரவேசித்துத் திரவியத்தைத்திருடுகின்றநீசர்கள்-குருபத்தினியைக்கைப்பிடித்தவர்கள், இவர்களேயல்லாமல் மகாபாதகர்களானபோதிலும், சிவபெருமான் திருவடிப்

பூசைக்கு உரியவர்களானால் அவர்களே திருமால் முதலானோர்களாலும் வணங்கத் தகுந்தலைவர்களாவார்கள். எ - று. (௧௬)

என்றுதென் புலத்தோ னெடுத்தவர்க் குரைத்த யாவையு மெடுத்
தன னியம்பிப், பொன்றிகழ் சடிலச் சூதமா முனிவ னருந்தவர்க் கின்
னமும் புகல்வான், கன்றுமா னெடுத்த திருக்கரப் பெருமா னருச்ச
னைக் கடன்முறை புரிந்தோர்க், கொன்றுநன் கிழைப்பி னுங்கவ ரானுக்
கொருமருங் கினிதிருந் துவப்பார்.

(இ - ள்.) என்று இயமதருமன் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியவற்றை யெல்லாம் பொன்போலப் பிரகாசிக்குஞ் சடையையுடைய சிறந்த சூதமுனிவர் எடுத்துக்கூறி மேலுஞ் சொல்லுகின்றார். மான் கன்றினைத் திருக்கரத்திற்றாங்கிய சிவபெருமானுக்கு முறைப்படி அர்ச்சனைபுரிந்தவர்களுக்கு ஒருபகாரஞ் செய்தவர்கள் சிவபெருமானுக்கு ஒருபக்கலில் இனிதாகச் சந்தோஷித்து வீற்றிருப்பார்கள். எ - று. (௧௭)

சூதமா முனிவ னின்னணமிசைப்ப முழுதுண ரருந்தவத் தொல்லோர்
ஆதிநா யகன தருச்சனை மரபி னதிகமீ தெனவுரைத் தருளென்
றோதலும் பரம னாயிர நாம முச்சரிப் பனவென வுரைத்தான்
கோதறு நாம மெவ்வழித் தென்று வினாயின ரருந்தவக் குலத்தோர்.

(இ - ள்.) சிறந்த சூதமுனிவர் இவ்வாறு கூறவும், முற்றுணர்ந்த பழமையாகிய அருந்தவமுடைய நைமிசாரணிய முனிவர்கள், முதற்கடவுளாகிய சிவபெருமான் அர்ச்சனை முறைப்படி இப்படிச்சிறந்ததென்று திருவாய்மலர்ந்தருள வேண்டுமென வினாவவும், சிவபெருமானது சகத்திரநாமங்களை ஸ்மரித்தலெனக் கூறினார். அருந்தவம்புரிந்த அம்முனிவர்கள், குற்றமில்லாத அத்திருநாமங்கள் எவ்வகையதென்று கேட்டார்கள். எ - று. (௧௮)

பரந்துவண் டாற்றும் பசுந்துழா யலங்கற் பண்ணவ னெடுத்தெ
டுத் தேத்திப், புரந்தன னவற்றைப் பாரத காதை புகல்வன காண்டி
ரென் றருள, நிரந்தர மவற்றி னெறித்தலை நின்று நிமலனைப் பூசனை புரிந்
தோ, ரரன்றிரு வருளிற் பெற்றவா றுளவே லருளெனச் சூதனுங்
கிசைக்கும்.

(இ - ள்.) வண்டுகள் பரவியொலிக்கும் பசிய துளசிமாலையணிந்த திருமால் எடுத்தெடுத்துக்கூறிப் பாதுகாத்தனர். அத்திருநாமங்களைப் பாரதநூல்கூறுகின்றது. காண்பீர்களாகவெனச் சூதமுனிவர் சொல்லவும், இடையீடின்றி அத்திருநாமங்களின் தியானத்திலிருந்து சிவபெருமானைப் பூசித்தவர்கள் சிவாநுக்கிரகம் பெற்றவகையிருக்குமாயின் திருவருள்புரியவேண்டுமென வேண்ட, சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார். எ - று. (௧௯)

கிருது சிவார்ச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௬௫-இ திருவிருத்தம் ௪௦௮௯.

முப்பத்தாறுவது

இலக்குமிபூமிதேவி சகத்திர நாமார்ச்சனைச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சேயகா லத்து வெஞ்சு ணசுரர்தங் குலத்து ட்டியோ
னுயவா லத்தை யொப்பான் சலந்தர னலங்கற் றுல்லை
மாயவன் றன்னை யேற்று மண்டமர் விளைப்ப தானன்
போயது பருவ நூறு யிரமிடை பொருது நின்றார்.

(இ - ள்.) பூர்வகாலத்திலே, அஞ்சாமைத்தன்மையையுடைய அசுரர்குலத்திற்கொடியோனாகிய விஷத்தையொத்தவனாகிய சலந்தரனென்னும் பெயரினன், துளசிமாலை யணிந்த திருமாலை யெதிர்த்து நெருங்கிய போர்புரிபவனாயினன். நூறாயிரவருடகாலங்கள் கழியும்படி இருவரும் இடைவிடாது போர்புரிந்திருந்தார்கள், எ - று. (க)

புனத்துழா யலங்கற் றோளான் புறங்கொடுத் திரிந்துபோனா
னினப்புயத் தினவு தீர்ப்பான் சலந்தர னெழுந்து போந்து
சினப்புலி யுரிவை யார்த்த செஞ்சடைப் புனிதன் றன்னை
முனைச்சமர்க் களத்துக் கூவி யாரமர் முயல்வ தானன்.

(இ - ள்.) வனத்திலுள்ள துளவினை மாலையாகவணிந்த தோள்களையுடைய திருமால் புறமுதுகுகாட்டித் தோற்றுப்போயினர். இன்னமும்தன் தோளிணைத் தினவு தீராதவனாகிய சலந்தரன் எழுந்துசென்று, கோபந்தங்கிய புலித்தோலையுடுத்த செவ்விய சடையையுடைய சிவபெருமானை யுத்தபூமியிற் போர்புரியும்படி அறைகூவியழைத்துப் பொருந்திய போர்செய்வானாயினன். (உ)

வாலிளம் பிறைமென் கண்ணி மணிநகை பூத்து மெல்லென்
கால்கொடு வரைந்த நேமிப் படையொடுங் கழிந்தா னாவி
யேனுமக் காலந் தன்னி லிருந்துழா யவனு மன்னோன்
மேலெழு மலர்க்கா வெய்தி யருந்தவம் விளைத்து நின்றான்.

(இ - ள்.) வெள்ளிய இளமைதங்கிய சந்திரனைச் சிரோமாலையாகவணிந்த சிவபெருமான் அழகிய புன்னகைசெய்து, மெல்லெனத்தமது திருவடியாலெழுதிய சக்கராயுதத்தோடும் சலந்தரன் உயிர்நீங்கினான். பொருந்திய அக்காலத்தில் பெரிய துளசிமாலைசூடிய திருமாலும் அச்சலந்தராசுரனது மேனோக்கியெழுந்த பூஞ்சோலையை யடைந்து அரியதவம்புரிந்துகொண்டிருந்தனர், எ - று. (ங)

அவ்வனத் தசுரன் றேவி யாரெழில் விருந்தை யென்னுஞ்
செவ்விய ணறும்பூக் கொய்வான் சென்றனண் முனிவற் காணா
வவ்விதழ்க் கமலச் செங்கை கூப்பினள் வணக்கம் போக்கி
நவ்வியம் பேடை போல்வா ளினையன நவில்வ தானள்.

(இ - ள்.) அந்த வனத்திலே, சலந்தராசுரன் மனைவி அழகுபொருந்திய விருந்தையென்னுஞ் செவ்வியமாது, மணந்தங்கிய மலர்களைக் கொய்யும்படிசென்றவளாகி (திருமாலாகிய) முனிவனைப்பார்த்து, தாமரையிதழ்கள்போன்ற செவ்விய கரத்தைக்குவித்து வந்தனைசெய்து, பெண்மான்போன்ற அப்பெண் இத்தகைய வார்த்தைகளைச்சொல்லுவாளாயினள். எ - று. (ச)

ஐயனே தவமேற் கொண்ட வந்தண மற்றொன் றோரா
மெய்யனே யளியேற் கொன்று விளம்புதல் வேண்டு மென்னுப்
பையரா வணிந்த வேணிப் பண்ணவ னுடனெங் கோமான்
மொய்யமர் விளைப்பச் சென்றா னடுதிறன் மொழிதி யென்றாள்.

(இ-ள்) ஐயரே! தவத்தொழின்மேற்கொண்ட வேதியரே! வேறொன்று மறியாத உண்மையானவரே! அடியாளுக்கு ஒன்று திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று, எமதுகணவன் படம்பொருந்திய சர்ப்பத்தையணிந்த சடையையுடைய சிவபெருமானோடு நெருங்கிய போர்புரியச் சென்றுள்ளார். அடுதிறன் இத்தகைத்தென அருளவேண்டுமென்றனள். எ - று. (ரு)

நின்னுயிர்க் கொழுந னாழி நேமியா லிருகூ றாகித்
தன்னுயி ரொழிய வீழ்ந்தா னென்றலுந் தமிய ளாகி
யந்நிலை யலறிச் செங்கை நெரித்தன ளலறி வீழ்ந்தாள்
பன்னக மழலிட் டென்னப் புரண்டனள் பதையா நின்றாள்.

(இ - ள்.) உன்னுயிர் நாயகனானவன் சக்கரத்தால் இருபிளவாகி; தன்னுயிர் நீங்க விறந்தான் எனக்கூறவும், அந்நிலையிலேயே விருந்தை யலறிக்கொண்டு செவந்த கைகளை நெரித்துக்கொண்டு கோவென்றலறி (நிலமிசை) வீழ்ந்தனள். தீயிற்போட்ட சர்ப்பத்தைப்போலப் புரண்டு பதைபதைப்புற்றாள். எ - று. (சு)

பின்னரு முனிவற் போற்றிப் பெருந்தவத் தலைவ னேநீ
சொன்னது சரத மாயி னவ்வுடற் றுணியி ரண்டு
மிந்நிலை யழைத்தி நோக்கின் மெய்ம்மையென் றிரந்து சொற்றாள்
கொன்னுலைத் திகிரிக் கோமா னங்கது கருத்துட் கொண்டான்.

(இ - ள்.) மேலும் விருந்தை முனிவரைத் துதிசெய்து, பெருந்தவம்புரிந்த பெரியோரே! தேவரீர் கூறியது சத்தியமானால் அவ்வுடற்கூறுகளிரண்டையும் இவ்விடத்திற்கு வருவிப்பீராக. அதனைப்பார்த்தால் உண்மையாமென்று யாசித்துச்சொல்லினள். பெருமைபொருந்திய சக்கராயுதமேந்திய திருமால் அதனைத் தமது திருவுளங்கொண்டனர். எ - று. (எ)

மாயமற் கடங்க ளாக விரண்டுரு வகுத்து நீவிர்
தாயரன் றிகிரி கீண்ட சலந்தர னுருவ யாக்கை
யாயவோ ரிரண்டுங் கொண்டு வருதிரென் றருள வாங்குப்
போயவை யிரண்டுங் கொண்டு புகுந்தன விருந்தை கண்டாள்.

(இ - ள்.) மாயவடிவங்களாக இரண்டு வானரங்களைப்படைத்து நீங்கள்தாவி, சிவபெருமான் சக்கரத்தாற் பிளந்த சலந்தராசுரன் வடிவமாகிய உடற்றுண்டிரண்டையுங் கொண்டுவருவீர்களாக வென்றருளிச்செய்ய, அவ்விரண்டு வானரங்களும் அங்கெய்தி அவற்றைக்கொண்டுவந்தன. விருந்தையென்பாள் பார்த்தனள்.

கண்டனள் விருந்தை யென்பாள் கண்புடைத் தலறி மாழ்கி
விண்டன ணெஞ்சு வெந்து வீழ்ந்தனள் வெதும்ப லுற்றாள்
கொண்டவெந் துயர்க்கோ ரெல்லை கண்டிலள் குழைவ தானு
டண்டவி லருந்த வத்தோற் பணிந்தனள் சரணம் போற்றி.

(இ - ள்.) விருந்தையென்பாள் பார்த்துக் கண்களைப் பொத்திக்கொண்டு கூச்சலிட்டுப் புலம்பி மனம் புண்ணாகிவெந்து வீழ்ந்து துக்கிப்பாளாயினள். தானெய்திய துயரத்திற்கு ஓரளவு காணாதவளாகியுருகி, குறைதலில்லாத அருந்தவம் புரிந்த முனிவரைத் திருவடிகளில் வணங்கித் துதித்தனள். எ - று. (௯)

ஆருயிர் கொழுநற் போக்கி யாவிகொண் டிருக்க மாட்டேன்
வார்குழ லவர்க்கு நீங்கா மங்கலப் பிச்சை நல்கி
ஞோர்தவ மதன்மே லுண்டோ வாதுணர்ந் தரவோ யீங்கெ
னேர்கெழு துணைவ னாவி தருகென விரந்து வீழ்ந்தாள்.

(இ - ள்.) அரிய பிராண நாயகனைப் போகவிட்டு உயிரைச் சுமந்திருக்க மாட்டேன். நெடிய கூந்தலையுடைய மங்கையருக்கு அழியாத மாங்கல்யபிட்சை கொடுத்தால் அதன்மேம்பட்ட தவமொன்றுள்ளதோ? முனிவரே! அதனையறிந்து அடியாளது அழகுமிகுந்த கணவனுயிரை யெழுப்பித் தருகவென்று பிரார்த்தித்துப் பணிந்தாள். எ - று. (௧0)

ஆயவ ளுருவ நோக்கி யந்நல நுகர வேண்டி
மாயவ னவன்ற னாக்கை புகுந்தவன் வடிவு தாங்கிச்
சேயநா ளவள்பாற் காமச் செருக்கொடு மயக்க முற்றான்
பாய்திரைப் பரவை ஞாலத் திதிமுறை பார்த்தி லானால்.

(இ - ள்.) திருமால் அவ்விருந்தையின் உருவத்தைப் பார்த்து அவ்வின்பத்தை யனுபவிக்க வேண்டி, அச்சலந்தரன் வடிவாகிய களேபரத்திற் பிரவேசித்து அவனுருவேற்று வெகுகாலம் அவ்விருந்தையிடங் காமச்செருக்கோடு மயங்கியிருந்தனர். பரவிய அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூமியில், தமது [திதி]காக்குந் தொழின் முறையைக் கவனித்தாரிலர். எ - று. (௧௧)

அனையவ ளிளமென் கொங்கை யணிநல நுகரு மந்நாட்
புனைமலர்த் தவிசின் மாயோன் கண்படை பொருந்துங் காலை
வினைபுரி மாயம் போக மரகத வெற்பி னோங்கிச்
சினவுமைத் திகிரி சங்கிற் றுயில்வன தெரியக் கண்டாள்.

(இ - ள்.) திருமால் அவ்விருந்தையின் இளமைதங்கிய மெல்லிய குசங்களின் அழகிய இன்பத்தையநுபவித்திருக்கும் அக்காலத்தில், ஒருநாள் அலங்கரிக்கின்ற புஷ்பசயனத்தில் துயில்புரியும் பொழுது இச்செயல் புரிந்த மாயமானது நீங்க, மரகதமலைபோலோங்கிக் கைகளிற் கோபிக்கின்ற சக்ராயுதமும் சங்கமும் விளங்குவனவாகத் தோன்றப் பார்த்தாள். எ - று. (௧௨)

ஆவென வரற்றி யெங்கோ னல்லனென் றலறிப் பாய்ந்து
வேவழற் புகுந்து மாண்டாள் விரைநறுந் துளவத் தண்ணல்
பூவையங் குதலைச் செவ்வாய் விருந்தைபாற் புந்தி போக்கி
வாவிரும் புலங்கள் வேறாய்க் காமத்தான் மயக்கங் கொண்டான்.

(இ - ள்.) ஆவென்றலறி, எமதுகணவ னல்லனென்றிளைந்துகொண்டு எரிகின்ற அக்கினியிற் பாய்ந்து பிரவேசித்து விருந்தை யிறந்தனள். மணந்தங்கிய நல்ல துளசிமாலைதரித்த திருமால் நாகணவாய்ப் புள்ளைப்போன்ற அழகிய குதலைச்சொல்லையுஞ் செவ்விய வாயையுமுடைய விருந்தையினிடத்தே மனதைச்செலுத்தி, தாவுகின்ற ஐம்புலன்களும் வேறுபட்டுக் காமவிச்சையான் மயங்கியிருந்தனர். எ - று. (கரு)

ஆங்கவ ளடலைப் பூழ்தி புரண்டனன் மாய னந்நாட்
டேங்குநீ ருலகக் காவ லொழிந்தது செழுந்தோட் டம்பொற்
பூங்கமழ் முளரி மேலோன் முதலினோர் கயிலை புக்கா
ரீங்கிவன் றன்மை கூறி யிரந்தனர் வழிபட் டேத்தி.

(இ - ள்.) திருமால் அவ்விருந்தையின் சாம்பற்புழுதியிற் புரண்டனர். அப்பொழுது கடல்சூழ்ந்த உலகமானது காவற்றன்மை நீங்கியது. செழுமை தங்கிய இதழ்களையுடைய அழகிய மணந்தங்கிய பொற்றாமரையில் வீற்றிருக்குந் திருமால் முதலாயினோர் திருக்கைலாயகிரியை யடைந்து வழிபாடு புரிந்து இத்திருமாலின் செயலை விண்ணப்பித்து யாசித்தார்கள். எ - று. (கசு)

பம்புநீர்ச் சடிலப் பெம்மான் பனிமொழிப் பவளச் செவ்வா
யம்பிகை வதன நோக்க வரும்பிய வதன வேர்வை
யும்பரி னுருவித் தெய்த வெயர்வொடு முகிரின் வாங்கி
நம்பர னளித்தான் றெய்வ நான்முகக் கடவு டன்பால்.

(இ - ள்.) பெருகுகின்ற கங்காசலத்தையணிந்த சடையையுடைய சிவபெருமான், மெல்லிய சொல்லையும் பவளம்போற் செவந்த வாயையுமுடைய உமாபிராட்டியார் திருமுகத்தை நோக்க, அரும்பிய முகவேர்வையின் மீது ஒருவிதையுண்டாக, நமது சிவபெருமான் அதனை வெயர்வுடன் திருநகத்தினு லெடுத்து, தெய்வீகந்தங்கிய நான்முகனுகிய பிரமனிடத்திற் கொடுத்தனர். எ - று. (கஎ)

அங்குர மதனைக் குல்லை யலங்கலோற் களித்தி யென்னச்
செங்கண்மா லவற்குக் கொண்டு தந்தனன் றிசைமு கத்தோ
னங்கண்மா லதனை வாங்கி யடலையி னடுவி னுய்த்தான்
பொங்குபூங் குழலி பச்சைத் துளவெனப் போதா நின்றாள்.

(இ - ள்.) அவ்விதையினைத் துளவமாலையணிந்த திருமாலுக்குக் கொடுக்கவென்று கட்டளையிட, பிரமதேவன் அங்ஙனமே அதனைக் கொணர்ந்து சிவந்த கண்களையுடைய திருமாலுக்குக்கொடுத்தனர். திருமாலோ அதனை வாங்கிச் சாம்பரினிடையி லிட்டனர். விளங்குகின்ற மலரணிந்த கூந்தலையுடைய விருந்தை துளசியென்று சொல்லும்படி வளரா நின்றனள். எ - று. (கஅ)

அடலையின் றெழுந்து போந்த விருந்தைபா லுள்ள மாக்கித்
தடமுலை முயங்கிப் போந்து கிடந்தனன் சங்க மேந்தி
மடவரற் பிரிவ தோரா னஃதுணர் மலர்ப்பூங் கோதை
நெடுநில மடந்தை யின்னோர் நெட்டுயிர்ப் பெறிவ தானார்.

(இ - ள்.) சங்கேந்திய திருமால் அம்மடந்தை பிரிந்ததை யுணராமல், சாம்பரினின்று பிறந்து தோன்றிய விருந்தையினிடத்தே மனதைச்செலுத்தி, பரந்த

குசங்களைத் தழுவிக்கொண்டிருந்தனர். அதனை யறிந்த அழகிய மலர்மடந்தையாகிய இலக்குமி, நெடிய நிலமடந்தையாகிய பூமிதேவி இருவரும் பெருமூச்சு விடுவதானார்கள். எ-று. (௧௭)

துவாபர யுகத்துங் காம வேட்கையிற் றுயரங் கூரு
மவாவொடு மயங்கி யீரெண் ணாயிர மகளி ரோடுந்
தவாநல னுகர்ந்தா னெம்மைத் தணந்துபோய்த் தமியே மென்று
மூவாமதி யொழிந்த வாறே நன்னல முருகி னேமால்.

(இ-ள்.) துவாபர யுகத்திலேயும் காமவிருப்பத்தால் துயரமிகும் ஆசையோடு மயக்கடைந்து பதினாறாயிரங் கோபிகைகளுடன் நீங்காதகாமவின்ப மனுபவித்தான். எங்களைப் பிரிந்துபோய்த் தமியேமாகி, பூர்ணிமாகாலத்திற் சந்திரனை நீங்கிய வகையாக உள்ளமுருகி நிற்கின்றோம். எ-று. (௧௮)

சிந்தனை திரிந்து வேறாய்த் தெருமரு நெடுமா னம்பால்
வந்தருள் புரக்க வேண்டும் வருதியென் றவனி யோடு
மெந்தையா ரூரி னெய்தி யிருந்தனள் கமலப் பேதை
தந்தமி லுவகை யோடு மருச்சனை தருவ தானார்.

(இ-ள்.) மனந்திரிந்து வேறுபட்டு மயக்கங்கொண்ட திருநெடுமாலானவர், நம்மிடத்தில் திரும்பித் திருவருள் புரியவேண்டும். நீயும்வருகவென்று பூமிதேவியுடன், செந்தாமரையில் வசிக்கும் இலக்குமிதேவி எமது தந்தையாகிய சிவபெருமான் வீற்றிருக்குந்திருவாரூரையடைந்து முடிவில்லாத சந்தோஷத்தோடு வீற்றிருந்து (இருவரும்) அருச்சிப்பாரானார்கள். எ-று. (௧௯)

அரனடிக் கமலம் பூசித் தன்பினென் புருக நின்று
பரவிநா மங்க ளென்னு மாயிரம் பரிவி னோதி
விரைநறுங் கமல மன்ன கரத்தினர் விருப்பி னின்றார்
புரமெரித் தவனு மன்னோர்க் கெதிர்ந்தனன் புலப்ப நின்றான்.

(இ-ள்.) சிவபெருமான் திருவடித்தாமரைகளை யர்ச்சனைசெய்து அன்புடன் எலும்புருக விருந்து திருநாமங்களென்று சொல்லும் ஆயிரத்தினையும்ஆசையோடு தியானித்துத் துதிசெய்து, மணந்தங்கிய நல்ல செந்தாமரைமலர்போன்ற கையையுடைய அம்மங்கையர் (இலக்குமி பூமிதேவி) இருவரும் விருப்புற்றிருந்தார்கள். திரிபுரதகனராகிய சிவபெருமானும் அவர்கட்குக் கட்புலனாகக் காட்சி தந்தருளினர். எ-று. (௨௦)

கருதிய தென்னை யென்பா லருச்சனைக் கடன்க ளாற்றி
யுருகிய தென்னை யென்னத் திருவரு ளுவந்து கேட்பத்
திருமக ளவனிப் பேதை யவளொடுஞ் செங்கை கூப்பி
யிருநில வதனங் கோட்டி நின்றன ளினைய சொல்வாள்.

(இ-ள்.) சிவபெருமான் திருவருள் சுரந்து, நீங்கள் எம்மிடத்தில் விரும்பியதுயாது? அருச்சனை முதலியன புரிந்து மனமுருகியது யாதுகாரணம்? என்று வினவியருள, இலக்குமிதேவி யானவள் பூமிதேவியோடும் சிவந்த கரங்களைக் குவித்துப்பெரிய நிலமுகமாக முகத்தைவளைத்துக்கொண்டு நின்று இவ்வார்த்தைகளை விண்ணப்பிப்பாளாயினள். எ-று. (௨௧)

ஆருயிர்த் தொகுதி காட்டி யைந்தொழிற் குரியை யாகி
யோருயிர்க் கொருவ னாகி யமர்ந்தரு ளொருவ மற்றை
வாரியுட் டுயிலு மாயோன் விருந்தையான் மயங்கப் பெற்றான்
சோர்வுறத் தணந்தா னெம்மை யத்துயர் துடைத்தி யென்றாள்.

(இ - ள்.) அரிய உயிர்த்தொகைகளைச் சிருஷ்டித்து, பஞ்சகிருத்தியங் கட்கும் உரியவராகி, ஒப்பற்ற உயிருக்கும் ஒருவனாகி வீற்றிருக்கின்ற ஏகனாகிய சிவ பெருமானே! திருப்பாற் கடலில் அறிதுயில்புரியுந் திருமால் விருந்தையென்பவளால் மயக்கப் பெற்றவராகி, எங்களைச் சோர்வெய்தும்படி பிரிந்தனர் (ஆதலின்) அத்துன்பத்தை நீக்கியருள வேண்டுமென்று கூறினள். எ - று. (௨௨)

அவ்வர மவர்க்கு நல்கி யளித்தன னமல னம்பொற்
செவ்விய டன்னை யீன்ற பாற்கட னகரஞ் சேர்ந்தா
ளெவ்வமி லவனிப் பூவை மேருவை குண்டத் தெய்தி
வெவ்வடு துயர நீங்கி யிருந்தனள் விருப்பி னன்னாள்.

(இ - ள்.) மலரகிதராகிய சிவபெருமான் அவர்கட்கு அவ்வரத்தினை யநுக்கிரகித்தனர். அழகிய இலக்குமிதேவி, தன்னைப்பெற்ற திருப்பாற்கடல் நகரத்தை யடைந்தனள். அழகினையிழந்த பூவிதேவியானவள் மகமேருவிலுள்ள வைகுண்ட நகரமடைந்து துயரமகன்று விருப்பத்துடன் வீற்றிருந்தனள். எ - று. (௨௩)

வளர்திரைப் பரவை துஞ்சு மாயவன் விருந்தை யென்னு
மிளைநுசுப் பணங்க னாளைத் துறந்தன னெழுந்து சென்றான்
வளநகர் வைகுண் டத்து மாணிழை யவரைக் காணா
னளைதிரை கொழித்து வீங்கு பாற்கட லகவை யுற்றான்.

(இ - ள்.) வளர்கின்ற அலையையுடைய திருப்பாற்கடலிற் றுயிலும் திருமால் விருந்தை யென்னும் நுண்ணிய இடையையுடைய மங்கையின்மையலைநீங்கி யெழுந்துபோயினர். வளந்தங்கிய வைகுண்ட நகரத்திலே மாட்சிபெற்ற ஆபரணங்களணிந்த மனைவிமாரைக்காணப் பெறாதவராய், சேற்றினை அலைகள் கொழித்துப் பெருக்குந் திருப்பாற்கடலெய்தினர். எ - று. (௨௪)

வரிந்தகச் சறுத்து வீங்கும் வனமுலைக் கமலை தன்பாற்
புரிந்தபே ரன்பி னோடும் பொலங்குழை போதி யென்றான்
பிரிந்திடா வரம்பெற் றன்றிப் பெருநில மடந்தை யோடும்
பரிந்துநின் னிடத்து வைகே னென்றனள் பதுமப் பாவை.

(இ - ள்.) இறுக்கிய கச்சினைக்கிழித்துப் பூரித்த அழகிய தனங்களை யுடைய திருமகளிடத்திற் சென்று, தமக்குண்டாகிய பேரன்புடன் பொன்னாலாகிய குண்டல மணிந்தவளே! வருகவென்றனர். செந்தாமரையில் வசிக்குந் திருமகள், பிரியப்பெறாத வரத்தினைப் பெற்றல்லாமல், பெரியபூமிதேவியோடும் உம்மிடத்தில் ஆசைகொண்டு வசிக்கமாட்டேனென்று மறுத்தனள். எ - று. (௨௫)

கணங்குழை யுரைத்த மாற்ற மயிர்த்தனன் கமலக் கண்ணா
னணங்கரா மிலைந்த வேணி யரனடி யருச்சித் தன்றி
யிணங்கில ரிவரென் றெண்ணிக் காஞ்சிமா நகர மெய்தி
வணங்கினன் கயிலைப் பெம்மான் பரிபுர மலர்த்தாள் போற்றி.

(இ - ள்.) இலக்குமிதேவி யிசைத்த சொல்லினால் மனம் வருந்தியவராகிய திருமால், துன்பஞ் செய்யுஞ் சர்ப்பங்களை யணிந்த சடையையுடைய சிவபெருமானை யருச்சித்தாலல்லாமல், இம்மங்கைய ரிருவரும் நமக்கு இணக்கமாகார்களென்று கருதி, சிறந்த காஞ்சிநகரமடைந்து திருக்கைலாய நாதராகிய சிவபெருமானுடைய சிலம்பணிந்த மலர்போன்ற பாதங்களை வணங்கித் துதிசெய்து. எ-று.

அருச்சனை யயருந் தோறு மாயிரந் திருநா மங்கள்
விரித்துநின் றிரந்து வாழ்த்தி வெள்ளிவெண் கயிலை நின்றும்
புரித்தவார் சடில மோலி வெள்விடை யுகைத்துப் போந்தான்
றெரித்தநான் மறைகொண் டேத்தி வழுத்தினன் செங்கண் மாயன்

(இ - ள்.) பூசிக்கும் பொழுதெல்லாம் ஆயிரந் திருநாமங்களையும் சொல்லித் துதித்து நின்று யாசித்து வாழ்த்த, வெள்ளி மலையாகிய திருக்கைலையினின்றும், புரிந்த நீண்ட சடைமுடியையுடைய சிவபெருமான் தாவள்யமான இடபவாகனரூடராய் எழுந்தருளினர். சிவந்த தாமரைக்கண்ணையுடைய திருமால் நான்குவேதங்களையுங் கொண்டு துதிசெய்து வணங்கினர். எ - று. (உஎ)

நினைத்தநின் கருத்தின் வேட்கை யென்னென நிமலன் கூற
நனைப்பனிக் கமலத்தாளு நானிலத் தவளு மின்னே
யெனைக்கருத் துணர்ந்து போத வேண்டின னிதுமற் றன்றி
முனைக்கடுந் திகிரி யீவா யென்றனன் முளரிக் கண்ணன்.

(இ - ள்.) கருதிய நின் மனவிருப்பம் யாதென்று சிவபெருமான் வினவியருள, செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய திருமால், தேனொழுகிக் குளிர்ச்சி தங்கிய கமலாசனத்திலுள்ள திருமகளும் பூமிதேவியும் இப்பொழுதே என்னை மனதிற்கருதி யென்பால் வரவேண்டினேன். இதுவே யல்லாமல் போர் செய்தற்கடுத்த சக்கராயுதத்தையும் அடியேனுக்குத் தந்தருள்க வென்றனர். ()

வரங்களோ ரிரண்டு மீந்து மணிநெடுங்க கயிலை புக்கான்
கரந்தைவார் சடையோ னீலக் கார்முகை கமலம் பூத்துப்
புரிந்தன வுருவ மாயோன் றனதுவை குண்டம் புக்கா
னிரந்தவால் வளைக்கை நல்லா ரிருவரந் நிலையிற் சென்றார்.

(இ - ள்.) கரந்தை மலரணிந்த நெடிய சடையையுடைய சிவபெருமான், அவ்விரு வரங்களையும் அநுக்கிரகித்து அழகிய நெடிய கைலையங்கிரியை யடைந்தனர். இப்பால், கரிய மேகமானது தாமரை மலர்களைப் பூத்து விளங்கினாற்போன்ற உருவத்தையுடைய திருமால் தமது வைகுண்ட பதவியை யெய்தினர். வரிசைப்பட்ட வெள்ளிய வளையலணிந்த கையையுடைய (இலக்குமி பூமிதேவி யென்னும்) மங்கைய ரிருவரும் அப்பொழுதே ஆங்கெய்தினர். எ - று. (உகூ)

அலங்குவால் வளைக்கை நல்லா ராயிர நாமத் தண்ணல்
சிலம்படி யருச்சித் தந்நாண் மாயனைச் சேரப் பெற்றார்
வலம்படு திகிரி யோனு மாங்கதன் மரபி னின்று
பொலங்குழை மகளிர் தம்மொன் புணர்முலை புணரப் பெற்றான்.

(இ - ள்.) ஒலிக்கின்ற வளையலணிந்த கையையுடைய இலக்குமிதேவி பூமிதேவியாகிய விருவர், சிவபெருமானைச் சகத்திர நாமங்களாற் சிலம்பணிந்த திரு

வடிகளை யர்ச்சித்து அக்காலத்தில் (தம்மைப் பிரிந்த) திருமாலை யடையப் பெற்றார்கள். வெற்றிபொருந்திய சக்கரத்தையுடைய திருமாலும் அச்சகத்திர நாமங்களின் அர்ச்சனையிலிருந்து அழகிய குண்டலமணிந்தமனைவிமார்களுடைய நெருங்கிய குசங்களைக் கலக்கப்பெற்றனர். எ - று. (௩௦)

இலக்குமிபூமிதேவி சகத்திரநாமார்ச்சனைச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௩௬-க்குத் திருவிருத்தம். ௪௧௧௩.

முப்பத்தேழாவது
சிவார்ச்சனமான்மியச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

முன்னொர் காலத்து முழுமலர்ப் பீடிகை முதல்வ
னன்ன நாமங்க ளாயிரத் தொடுமருச் சித்து
நன்ன லத்தொடுஞ் சிறந்தகோ கன்னமா நகரிற்
பின்னல் வேணியன் றிருவுருப் பெறுஞ்சிறப் படைந்தான்.

(இ - ள்.) பூர்வம் ஒருகாலத்திலே மலர்ந்த தாமரைமலர்ப்பீடத்திலெழுந்தருளிய பிரமதேவன், அத்தகைய ஆயிரந்திருநாமங்களால் அர்ச்சனைபுரிந்து, நல்ல நலங்களோடு மேம்பட்ட பெரியகோகன்னமென்னு நகரத்தில், பின்னலிட்ட சடையையுடைய சிவபெருமான் சாரூபத்தை யெய்தும் மேம்பாடடைந்தனன்.

கண்ணொ ராயிரக் கடவுளுங் கண்ணுத லவற்குத்
தண்ண றுமலர் சாத்தின னங்கவை சாத்தி
வண்ண வால்வளைப் புலோமசை முகிண்முலை மருவி
விண்ணி வந்தெழு கற்பக நீழல்வீற் றிருந்தான்.

(இ - ள்.) ஆயிரங் கண்கள் பெற்ற இந்திரனும், நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானுக்குக் குளிர்ச்சி பொருந்திய தேனொழுகுகின்ற மலர்களைச் சாத்தி, அத்திருநாமங்களா லர்ச்சித்து அழகிய வளையலணிந்த இந்திராணியின் கோங்கரும்பு போன்ற குசங்களைக்கலந்து ஆகாயமளாவி யுயர்ந்த கற்பகத்தருவின் நிழலில் அரசுவீற் றிருந்தனன். எ - று. (௨)

ஐய னாயிர நாமத்தி னருச்சனை புரிந்து
தெய்வ மாக்கதி யடைந்தவர்ச் செப்புவார் திரைநீர்
மொய்கொள் வேலைநுண் மணலளந் தறிகுவர் முனிவீர்
நொய்ய சிந்தையே னளவையி னொடிதரற் பாற்றோ.

(இ - ள்.) சிவபெருமானைச் சகத்திரநாமங்களால் அருச்சனை செய்துசிறந்த தெய்வகதியைப் பெற்றவர் தொகையைச் சொல்பவர்கள், அலைகள் பொருந்திய நீர் நிறைந்த சமுத்திரத்திலுள்ள நுட்பமாகிய மணலின் தொகையையும் கணக்கிட்டுத் தெரியவல்லவர்க ளாவார்கள். முனிவர்களே! அற்ப அறிவுடையேனது அளவின்றற் சொல்லத் தக்கதோ? எ - று. (௩)

எட்டு மேற்கொளு மாயிர மன்றிநூற் றெட்டுத்
தொட்ட றிந்தமூ வெட்டிரண் டாறிவை தொகுக்கப்
பட்ட நாமஞ்சொற் றரனடி யருச்சனை பயில்வார்
கட்டு வார்சடை யெம்பிரான் கயிலைவீற் றிருப்பார்.

(இ - ள்.) ஆயிரத்தெட்டு, அல்லாமலும் நூற்றெட்டு, இருபத்து நான்கு, பன்னிரண்டு ஆகிய இவை அவ்வாயிரத் தெட்டினின்றும் தொகுக்கப்பட்ட திருநாமங்களாம். அவற்றைச் சபித்துக்கொண்டு சிவபெருமான் திருவடிகளையருச்சித்தவர்கள், கட்டிய நீண்ட சடையையுடைய எமது சிவபெருமான் வீற்றிருந் தருளுந் திருக்கைலாயமலையில் வசிப்பார்கள். எ - று. (௪)

உரைத்த நாமஞ்சொற் றருச்சனை புரிகுவோ ருவப்பின்
விரைத்த பூவினாற் புல்லினால் வில்லத்தி னாலு
மிரைத்த மென்புனற் கழுவுபச் சரிசிபச் சிலையா
னிறைத்த வார்சடைப் பரமனைத் தொழுவது நெறியால்.

(இ - ள்.) மேலே சொல்லிய தொகையுடைய திருநாமங்களைச் சொல்லியருச்சிப்பவர்கள் சந்தோஷத்தோடு மணந்தங்கிய மலர்களாலும் அறுகம்புல்லினாலும் வில்வத்தினாலும் ஒலிக்கின்ற மெல்லிய நீரிற் சுத்திசெய்த பச்சரிசியினாலும் பச்சிலையாலும், வரிசையாக நீண்ட சடையையுடைய சிவபெருமானைப் பணிவது முறையாகும். எ - று. (௫)

சொற்ற நூற்படி யருச்சனைக் கிரியையிற் றொருத்தன்
மற்றை மானத பூசனை யனத்தொடு மதித்த
லுற்ற பூசனை யிரண்டுள வன்னவை யுரைப்பிற்
பொற்ற லத்துளோர் கண்ணுறப் புரிவதோர் பூசை.

(இ - ள்.) சொல்லிய நூன்முறையாக அருச்சனையைக் கிரியையாற்செய்தல் மானதபூசை மனதாற் செய்தல் ஆகப்பொருந்திய பூசைகள் இருவகையாக உள்ளன. அவற்றைச் சொல்லுமிடத்தில், அழகிய உலகிலுள்ளார் கண்ணுக்குப்பொருந்தும்படி செய்வது ஒருவகைப் பூசை. எ - று. (௬)

அனைய பூசனைக் கிரியையின் மெய்யயர்ந் திருந்து
நினைய லாவது மானத பூசனை நிமலன்
புனைய வேண்டுநை வேத்திய முதலின பொருந்தி
வினையம் யாவையு மனத்தினா லியற்றுவர் மேலோர்.

(இ - ள்.) அத்தகைய கிரியா பூசைபோல மெய்மறந்திருந்து சிந்தித்தலாவது மானதபூசை. மலரகிதராகிய சிவபெருமான் அணியவேண்டிய நைவேத்திய முதலியனவற்றை யமைத்து, தொண்டுகளை யெல்லாம் தமது மனதினாலே செய்பவர்மேலோரெனப்படுவர். எ - று. (௭)

மனத்தி னேத்திய பூசனை வரன்முறை மாக்க
ணினைத்த போதுமாங் காலமா லையினுமா நினைத்த
வனைத்து மீசனுக் காக்கவெத் தலத்தினு மாமாற்
புனைத்த வார்சடைப் புனிதர்காண் மானத பூசை.

(இ - ள்.) மனத்தினாலாக்கிய பூசையானது, கிரமப்படி மாந்தர்கள் கருதிய போதுங் கைகூடும். காலைமாலைகளினும் ஆகும். கருதிய எல்லா (அபிஷேக நிவேதன உபசாராதிகளும்) சிவபெருமானுக்குச் சமர்ப்பிக்க எல்லா விடங்களினுஞ் சாத்தியப்படும். கட்டிய நெடிய சடைமையுடைய பெரியோராற் காணத்தக்கது மானதபூசை. எ - று. (அ)

உருகு சிந்தையின் மானத பூசனை யுஞற்றிக்
கருதி வேண்டின பெறுகுவர் கடைமுறை கயிலைப்
பெருவ ளம்பெறப் பெறுகுவ ரீங்கிது பேசின்
மருவி நித்தலும் வழுக்குறு தியற்றுதன் மரபே.

(இ - ள்.) உருகிய மனதுடன் மானத பூசையைச்செய்து, நினைத்து விரும்பியவற்றையடைவார்கள். இறுதியில் திருக்கைலாயகிரியிற் பெருவளப்பங்களை யடையப்பெறுவார்கள். இதனைப்பற்றிச்சொல்லுமிடத்தில் நாடோறும்மனம் பொருந்தி நியதி தவறாமல் மானத பூசையையியற்றுதல் முறையாகும். எ - று.

பரவை மாநிலத் துயிர்க்கெலாங் குருவெனப் பட்ட
வரனை மர்ந்திடு மிலிங்கங்கள் பலவித மவற்றிற்
குரவ ரேத்துறத் தோற்றின கொழும்புயல் வண்ணன்
மரபி னாற்பிர திட்டையின் மாநிலத் தமர்ந்த.

இ - ள்.) கடல்சூழ்ந்த பெரியபூமியில் உயிர்கட்கெல்லாங் குருவென்றுசொல்லப்பட்ட சிவபெருமான் பொருந்தியுள்ள சிவலிங்கங்கள் பலவகைப்பட்டன. அவ்விலிங்கங்களில், குரவர்கள் துதிசெய்யும்படி முளைத்தன, மதர்த்தமேக வண்ணராகிய திருமால் முறைப்படி உலகத்திற்பொருந்தப் பிரதிட்டைசெய்தன. எ - று. (கo)

முனிவ ராற்பிர திட்டையி னமர்ந்தன முயன்ற
மனித ராற்பிர திட்டையி னமர்ந்தன மற்றைப்
புனிதர் விஞ்சைய ரரக்கர்வா னசுரர்கிம் புருட
ரனைய ராற்பிர திட்டையி னமர்ந்தன விலிங்கம்.

(இ - ள்.) முனிவராற் பிரதிஷ்டைசெய்யப்பட்டு விளங்குவன, முயற்சிசெய்த மனிதர்களாற் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ளன, ஏனைய புனிதர்கள் வித்தியாதரர்கள் இராக்கதர்கள் வானேந்திய அசுரர்கள் கிம்புருடர்கள் முதலிய அத்தகையினராற் பிரதிஷ்டைசெய்யப்பட்டனவாகி இலிங்கங்கள் விளங்கும்.

சயம்பு திவ்விய மாரிட மானிடந் தரும்பே
ரியம்பி யவ்வழி நிறைந்தன வீங்கிவை புணரக்
கயங்க டிந்துரித் தார்த்தருள் கண்ணுத லவற்றின்
முயங்கு சத்தியோ டுறைகுவ னுயினு மொழிவாம்.

(இ - ள்.) (தாமேதோன்றிய) சயம்புலிங்கங்கள், (தேவர்கள் பிரதிஷ்டித்த) திவ்வியலிங்கங்கள், (இருஷிகளாற் பிரதிட்டைபுரிந்த) ஆரிடலிங்கங்கள், (மானுடர்களமைத்த) மானுஷலிங்கங்கள் என்னுங் காரணப்பெயரெய்தியெங்கும் நிறைந்துள்ளன. கயாசுரனென்னும் யானையைக் கோபித்து உரித்தணிந்த சிவபெருமான் இவ்விலிங்கங்களில் தமது சத்தியோடு வீற்றிருப்பார். ஆறுனும் சொல்லுகின்றேம். எ - று. (கக)

எழுத ருந்தனிப் பவித்திர லிங்கத்திற் சயனம்
பழுதி றிவ்வியத் திருப்புமற் றாரிடப் பகுப்பி
னொழுகு வார்சடைப் பண்ணவ னிற்றன்மற் றுலகந்
தொழுத மானிடம் விநோதமற் றிவைதொகுத் துரைக்கேம்.

(இ - ள்.) தொங்குகின்ற நெடிய சடையையுடைய சிவபெருமான்எழுதற்கரிய ஒப்பற்ற பரிசுத்தமான சயம்புலிங்கத்திற் சயனமும், குற்றமில்லாத திவ்யலிங்கத்திலிருத்தலும், மற்றையபகுப்பாகிய ஆரிஷலிங்கத்தில் நிற்றலும், மற்றவுலகினர்வணங்கிய மானுஷலிங்கத்தில் விநோதமுமாக விளங்குவர். இவற்றைத் தொகுத்துச் சொல்லுவோம். எ - று. (௧௩)

ஆருயிர்த்தொகை புரந்துறு மரசர்தங் கோயி
லோரி டத்தினிற் றுயில்வர்மற் றோரிடத் திருப்பர்
தேரின் மற்றையோ ரிடத்தினின் றுலவுவர் செல்லா
நேரி னோரிடங் களிவிளைத் தகல்வரந் நெறிபோல்.

(இ - ள்.) அரிய வுயிர்த்தொகைகளைக் காவல்புரியும் மன்னவர், தமதுமாளிகையில் ஓர் புறத்திற் சயனிப்பார்கள். மற்றோரிடத்தில் வீற்றிருப்பார்கள். ஆலோசிக்குமிடத்தில், பிறிதோரிடத்தில் நின்றுலாவுவார்கள். சென்று நேரிட்டால் பின்னுமோரிடத்திற் களிவிளையாடி நீங்குவார்கள். அம்முறைபோல.

வித்து மாலுமொத் தெங்கணு நிறைந்திடும் விமலன்
சத்தி யோடுமற் றிலிங்கத்துத் தனித்தனித் தழுவி
யொத்து நின்றவா றென்னைகொ லென்பிரே லுரைக்கே
முத்தி யாருயிர்த் தொகைக்களித் தருளுவான் முயன்று.

(இ - ள்.) விதையும் மரமும்போல எங்கும் வியாபித்துள்ள சிவபெருமான் தமது (காருண்ய) சத்தியோடு அவ்விலிங்கங்களில் தனித்தனிக்கலந்து விளங்கும் வகையாது காரணமோ? எனவினவுவீராயிற்சொல்லுவோம். அரியவுயிர்த்தொகைகளுக்கு முயற்சித்து மோட்சத்தைக்கொடுத்தருளும்படி. எ - று. (௧௫)

எண்ணு நெய்யுமொத் தெங்கணு நிறைதரு ளிவனைத்
திண்ணெ டும்புவி யிலிங்கத்தி னருச்சனை செய்வோர்
நண்ண ருங்கதி நண்ணுவர் சத்திய நவின்றே
மொண்ணெ டுஞ்சடை முனிவிர்கா ளுண்மையீ துண்மை.

(இ - ள்.) எள்ளும் நெய்யும் போன்று எவ்விடத்தும் பூரணமாக விளங்கும் இச்சிவபெருமானை வலிய விசாலமான வுலகத்திற் சிவலிங்கக் குறியினிடத்திலருச்சித்தவர்க ளடைதற்கரிய பதவிகளை யடைவார்கள். சத்தியத்தைச் சொன்னோம் ஒளிபொருந்திய நெடிய சடையையுடைய முனிவர்களே! இது சத்தியம் சத்தியம். எ - று. (௧௬)

உரைத்த சூதனாற் கேட்டருண் முனிவர ருவகை
யிரைத்த சிந்தைய ராகிநின் றெம்மனோர்க் கெல்லாந்
திரைப்பு னற்சடை யெம்பிரா னருச்சனைத் திறத்தை
வரைத்து ணர்த்தின போலுணர்த் தினையென மகிழ்ந்தார்.

(இ - ள்.) இவ்வாறு சொல்லிய சூதமுனிவராற் கேட்டருளிய நைமிசாரணிய முனிவர்கள் சந்தோஷமதிகரித்த மனமுடையவர்களாக நின்று, எம்மவர்களெல்லாருக்கும் அலைகள் பொருந்திய கங்காசலத்தை யணிந்த சடையையுடைய எமது சிவபெருமான் அருச்சனையின் மகிமையை அளவிட்டு நன்குணர்த்தியருளினீர் என்று சந்தோஷித்தாகள். எ - று. (௧௭)

சிவார்ச்சனை மான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ௩௭-க்குத் திருவிருத்தம் - ௪௧௩௯.

முப்பத்தெட்டாவது

குருமான்மியச் சருக்கம்.

குரவ னின்னவ னென்பதொன் றுணர்ந்திலங் குறைநீ
ரரவ வார்சடை யண்ணலோ சக்கரத் தவனோ
வரச ரோருகத் தொருவனோ தந்தையோ மற்றோ
திரமு ணர்ந்திலே மன்பதை யின்னமுந் தெரியா.

(இ - ள்.) மாந்தர்களின்னும் உணரமாட்டாத குரவன் இவனென்பதொன்றினை யாங்களறிந்திலோம். ஒலிக்கின்ற கங்கை நீரையும் சர்ப்பத்தையு மணிந்த நெடிய சடையையுடைய சிவபெருமானோ, சுதரிசனமென்னுஞ் சக்கரத்தைத் தாங்கிய திருமாலோ, சிறந்த [சரோருகம்] தாமரையில் வசிக்கும் ஒப்பற்றபிரமதேவனோ, பிதாவோ, வேறுயாரோ? அதன் உண்மையறியோம். எ - று. (௧)

அன்ன தன்மையை யின்னதென் றருளுதி யைய
தொன்னி லைக்குரு வரம்பினின் றருச்சனை தொகுப்பா
னென்ன மாதவ ரியம்பலு மென்னையா ளுடையான்
பன்ன ருந்தவக் குரவர்தொன் மரபினைப் பகர்வான்.

(இ - ள்.) ஐயனே! பழமை நிலைமையாகிய குருவை வரம்பின்படி யிருந்து அருச்சனை செய்யும்படி, அத்தகைய குருவின் தன்மையை இஃதென்றருள் செய வேண்டுமென்று பெருந்தவமுடைய முனிவர்கள் கேட்கவும், என்னை ஆளாகவுடையவர் துதித்தற்கரிய சிறந்த குரவரது பழமையாகிய மரபினை யெடுத்துச் சொல்வாராயினர். எ - று. (௨)

தேவர் கின்னர ரியக்கர்கந் தருவர்கிம் புருட
ரோவ ருந்திறற் கணத்தர்மற் றியோகிக ளுரகர்
பேவு நால்வகை வருணத்தர் விஞ்சைய ரொழியாப்
பாவ ராயினுங் குருமுகப் படுவது வேண்டும்.

(இ - ள்.) தேவர்கள், கின்னரர்கள், இயக்கர்கள், கந்தர்வர்கள், கிம்புருஷர்கள், கெடுதற்கரிய வல்லபமுடைய கணத்தவர்கள், யோகிகள், நாகர்கள், பொருந்திய நால்வகை வருணத்தார்கள், வித்தியாதரர்கள், நீங்காத பாவமுடையவர்களாலுங் குருமுகத்தி லெய்துவதாவயசிகம். எ - று. (௩)

நெற்றி யொள்ளெரி துறந்துமன் மதனுட னீற்றுங்
கற்றை வார்சடை யெம்பிரான் கயிலைவீற் றிருந்து
மற்றை யன்பதை யாவுக்குந் திருவருள் வழங்கி
யுற்றி ரங்கிய காலையி னறமுற் றுணர்ந்தார்.

(இ - ள்.) திருநெற்றியினின்று மொளிபொருந்திய அக்கினியைச்செலுத்தி மன்மதன் உடலினைச் சாம்பராக்கிய தொகுதியாகிய நீண்டசடையை யுடைய எமது சிவபெருமான் திருக்கைலாயகிரியில் வீற்றிருந்து, மாந்தர்முதலிய எல்லோருக்குந் திருவருள் சுரந்து அநுக்கிரகித்தருளிய காலத்தில், நல்லசமய மறிந்து உணர்ந்தவர்களாய். எ - று. (௪)

இமய மீன்றரு ளெஃபெரு மாட்டியீன் றெடுத்த
குமர னைங்கரக் குழவிமற் றரிமுதற் குணிக்கு
மமரர் நந்தியோ டருந்தவத் தலைவர்கள் யாருஞ்
சமனை வென்றடு திருக்கழன் முறைமுறை தாழ்ந்தார்.

(இ - ள்.) இமாசல மன்னன் தந்தருளிய எமது உமாபிராட்டியார் பெற்ற குமாரக்கடவுளும், ஐந்து திருக்கரங்களையுடைய மூத்த பிள்ளையாரும், திருமால் முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களும், திருநந்தி தேவரோடு அருந்தவம்புரிந்த தலைவர்களுமாகிய யாவரும், இயமனைச்சயித்து வென்ற சிவபெருமானது திருவடிகளில் முறைமுறையாகப் பணிந்தார்கள். எ - று. (௫)

வெள்ள மீக்கொளும் பிரளயத் தொரீமலர் வேத
னுள்ளி டப்படு தேவர்மற் றியாவரு மொடுங்கி
நள்ளி ருட்பெயர் காலையிற் றோன்றுவ ரதுநா
ளெள்ள ரீர்த்துப தேசமுற் றளித்தனை யெந்தாய்.

(இ - ள்.) வெள்ளமானது மேலோங்கியெழும் பிரளயகாலத்துடன் பிரமதேவன் உள்ளிடப்பட்ட தேவர்கள் முதலிய வெல்லோரும் இலயமெய்தி, அப்பேரிருளானது நீங்கிய விடியற்காலையிற் சனிப்பார்கள். அக்காலத்தில் எமதுதாய் போல்வாராகிய சிவபெருமானே! தேவரீர் அவர்கள் இழிதகைமையை விலக்கி உபதேசஞ் செய்து காத்தருளினீர். எ - று. (௬)

குரவ னீயெமக் கருமறைக் குலமுழு துணர்த்தித்
தரவி ரும்பினே மென்பது திருச்செவி சாத்தி
யரவ வார்சடை யண்ணலக் கயிலையி னருகு
பரவு நீண்முடிப் பனிமலர்ப் பருப்பத மடைந்தான்.

(இ - ள்.) தேவரீரே எமக்கு ஆசிரியர். அரியவேதத்தின் தொகுதி முழுவதையுந் தெரிவித்துக்கொடுக்க அவாவுடையோமெனக் கூறியதை, சர்ப்பமணிந்த சடையினராகிய சிவபெருமான் திருச்செவியிலேற்று, அக்கைலாயகிரிக் கருகேயுள்ள, துதிக்கத்தக்க நீண்டகொடுமுடியையுடைய பனிமிகுந்த இமாசலத்தை யடைந்தனர். எ - று. (௭)

சிகர நீண்முடித் தெக்கிண மூர்த்தமொன் றெடுத்துத்
தகர வார்குழ லுமைக்கும்வேன் முருகற்குந் தந்திப்
புகர்மு கத்தவன் றனக்குமோர் வடுகற்கும் புகர்வா
ணிகில் பத்திரன் றனக்குமன் றருளின னிமலன்.

(இ - ள்.) மலையினுயர்ந்த சிகரத்தில் சிவபெருமான் ஒருதக்ஷிணா மூர்த்தமாகி, மயிர்ச்சாந்தணிந்த நீண்டகூந்தலையுடைய உமாதேவியாருக்கும் முருகவேளுக்கும் புள்ளிகள் வாய்ந்த யானைமுகமுடைய விநாயகப் பெருமானுக்கும் ஒப்பற்ற வைரவக்கடவுளுக்கும் வாட்போரில் ஒப்பில்லாத வீரபத்திர சுவாமிக்கும் அக்காலத்தில் அநுக்கிரகித்தருளினர். எ - று. (அ)

பொய்யில் கேள்வியோர்க் குரியவா மத்தனிப் பொருப்பி
லைய னவ்வுரு மூர்த்தத்தி னினிதெழுந் தருளி
வெய்ய திண்டிறற் காளர்பிங் கிருடிமெய்ப் பொருளாற்
றுய்ய சோமநந் திக்குமுற் றுணர்த்தினன் றூய்மை.

(இ - ள்.) பொய்மையில்லாத நூற்கேள்வியை யுடையவர்களுக்கே உரித்தாகிய அவ்வொப்பற்ற மலையிலிருந்து சிவபெருமான் அந்தத் தக்ஷிணாமூர்த்தத்திலே இனிதாக வெழுந்தருளியிருந்து வெவ்விய பெருவல்லபமுடைய மாகாளர் பிருங்கிமுனிவர் உண்மைப்பொருளாற் புனிதமாகிய சோமநந்திஆகிய இவர்கட்கெல்லாம் அத்தூய்மைப்பொருளை முழுதுந் தெளிவித்தருளினர். எ - று. (கூ)

கோள மால்வரை யுச்சியங் குவட்டெழுந் தருளி
வாள ராவணை யவனுக்கு மலரயன் றனக்கு
நீளி ருஞ்சினைக் கற்பக நாடற்கு நிமலன்
மூள நின்றெழுங் கருணையி னருளினன் முறையால்.

(இ - ள்.) கோளவடிவமாகிய பெரியமலையுச்சியிலுள்ள அழகியகுவட்டில் வீற்றிருந்தருளி, ஒளிதங்கிய சேஷசயனத்தையுடைய திருமாலுக்கும் தாமரை மலரிலுள்ள பிரமனுக்கும் நீண்டபெரிய கிளைகளையுடைய கற்பகவிருட்சம் பொருந்திய பொன்னாட்டிற் கிறைவனாகிய இந்திரனுக்கும், சிவபெருமான் அதிகரிக்கும்படி தோன்றிய கிருபையோடு முறைப்படி யருளிச்செய்தனர். எ - று. (க0)

பெருந்த வத்துளோர்க் குரியபிச் சாடனப் பொருப்பி
னிருந்த வச்சன காதியர்க் கினிதுவந் தருள
வொருங்கு நின்றவே தாகம முதலிய வுணர்ந்தார்
திருந்து கேள்விபெற் றனைவரும் பவித்திரஞ் சிறந்தார்.

(இ - ள்.) பெரிய தவநிலையிலிருப்பவர்களுக்குரிய பிச்சாடனமலையில் வீற்றிருந்த அந்தச் சனகாதி முனிவர்களுக்கு, இனிதாகச் சந்தோஷித் தருளலால் ஒருசேர நின்ற வேதாகம முதலியவற்றை யுணர்ந்தவர்கள், திருத்தமாகிய நூற்கேள்வியை யெய்தி எல்லோரும் புனிதத்தன்மையில் மேம்பட்டார்கள். எ - று.

திங்க ளஞ்சடை யெம்பிரான் றிருவரு ளடைந்த
பொங்கு நால்வகைப் பொருப்பினோர் தம்மடி போற்றி
யங்கண் மாதவத் தலைவர்மற் றியாவரு மடைந்தார்
தங்க டங்குறை கேள்வியி னிரப்பினர் தக்கோர்.

(இ - ள்.) அழகிய சந்திரனை யணிந்த சடையையுடைய எமது சிவபெருமானது திருவருளைப்பெற்ற மேம்பட்ட, நால்வகை மலையிலுள்ளோரது திருவடிகளைத் துதிசெய்து, அங்குள்ள பெருந்தவத் தலைவர்களெல்லாரும், தங்கடங்கள் மனக்குறைகளை நூற்கேள்வியால் நிரப்பித்தக்கவரானார்கள். எ - று. (கஉ)

தொல்லை நாள்பல கழிந்தன துவாபர யுகத்தி
னெல்லை நான்மறை யாகம புராணங்க ளிறப்ப
வல்லை மாமுதற் றலைவர்பாற் கேட்டநான் மரபோ
ரல்ல னீத்தவை நிறுத்துவா னெடுநிலத் தடைந்தார்.

(இ - ள்.) பழமையாகிய பலநாள்கள் கழிந்தன. துவாபரயுகத்தி னிறுதி யில் நான்கு வேதங்களும் ஆகமபுராணங்களும் இறக்க, சிறந்த முதற்றலைவர்க ளிடத்திற் கேட்டறிந்த நான்கு மரபினரும், துன்பத்தையகற்றி அவற்றை நிலை நிறுத்தும்படி பெரிய பூமியிலடைந்தார்கள். எ - று. (௧௩)

இறந்த நான்மறை யாகம புராணங்க ளிவற்றை
யறந்த ரப்படுஞ் சரியையே முதலிய வவற்றைச்
சிறந்த மேலவர்க் கம்முறை யருளினர் திரைநீர்
நிறைந்த வேணியான் சைவவா கமந்தலை நிமிர்ந்த.

(இ - ள்.) இறந்துபட்ட நான்குவேதங்கள் ஆகமங்கள் புராணங்களாகிய விவற்றையும், தருமத்தைத் தருஞ்சரியை முதலிய பாதங்களையும், சிறப்பெய்திய மேலோருக்கு அம்முறையாகவே யருளிச்செய்தனர். அதனால், அலைகள்பொருந் திய கங்கைநீர் நிறைந்த சடையையுடைய சிவபெருமானுக்குரிய சைவாகமங்கள் தலைதூக்கின. எ - று. (௧௪)

வரைக ணான்குள குரவர்தந் திருப்பெயர் வழங்கிப்
புரைத விர்த்தபி டேகமும் புரிந்தனர் போனார்
திரைகொண் மாநிலத் தப்பரம் பரைசிறந் ததுவால்
விரத நால்வகைக் குரவரா யொழுகினர் விரதர்.

(இ - ள்.) ஆசிரியர்கள் திருப்பெயரால்வழங்கி நான்குமலைகளுள்ளன. குற்ற நீக்கி ஆசாரிய ரபிஷேகமுஞ் செய்து சென்றார்கள். அலைகள் பொருந்திய கடல் சூழ்ந்த பெரிய பூமியில் அந்தப்பரம்பரை மேம்பட்டது. அவ்விரதிகள் சிறந்த விர தத்தையுடைய நால்வகைப்பட்ட ஆசிரியர்களாக விளங்கினார்கள். எ - று. (௧௫)

அற்றை நாண்முத லின்றுகா றருயிர்த் தொகைக்கும்
பெற்ற மேறியோன் பதம்பெறற் கருளிய பெரியோர்
கற்றை வார்திரைக் கடனிலங் கட்புலங் காண்பா
னுற்று வந்தெழுந் தருளின ரிருந்தன ருவப்பின்.

(இ - ள்.) அன்றுமுதல் இன்றுவரையிலும், அரிய உயிர்த்தொகைகளுக கெல்லாம், இடபாரூடராகிய சிவபெருமான் திருவடியை யடைதற் கநுக்கிர கித்த மேலோர், தொகுதியாகிய நெடிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமியில் அப்பெருந்தவ முடையோர் யாவர்க்குங் கட்புலனாகச் சந்தோஷத்துடன் பொருந் திவந் தெழுந்தருளினார்கள். எ - று. (௧௬)

குருப ரம்பரை யீதுபுன் கொடிச்சடைப் பெருமா
னொருவன் யாவர்க்கு முள்ளிருந் துணர்த்திய குரவன்
கருணை யன்பொடு முணர்த்துமெக் குரவருங் கயிலைப்
பொருவி டைக்கொடி யுயர்த்தியோன் றனிநிலை புகல்வார்.

(இ - ள்.) இதுவே குருபரம்பரை. சிறியகொடிபோன்ற சடையையுடைய சிவபெருமா னொருவனே எல்லோருக்கும் உள்ளத்திலிருந்து விளக்கிய ஆசிரியனு

வான். கிருபை தங்கிய அன்புடன் விளக்கத்தக்க எல்லாக்குரவர்களும் திருக்கையிலெழுந்தருளிய போர்செய்யும் இடபக்கொடியை யுயர்த்திய சிவபெருமானுடைய ஒப்பற்ற நிலைமையைக் கூறுவார்கள். எ - று. (கஎ)

ஆத லாற்சிவ னருச்சனை யாகமத் தடைவே
தீதி னற்குரு மொழிவழி செயப்பட வேண்டு
மோது மஞ்செழுத் தாதிய வுணர்த்துந ரன்றிப்
பேத பேதமிட் டோதினர் பிழைத்திடார் நரகம்.

(இ - ள்.) ஆதலால், சிவார்ச்சனையானது ஆகமமுறைப்படி குற்றமில்லாத உத்தமாசிரியன் உரைத்தவழியாகச் செய்யப்படவேண்டும். சொல்லுகின்ற பஞ்சாக்ஷர முதலியவற்றை உபதேசஞ் செய்பவர்களல்லாமல், பேதபேதங்களாகச் சொல்லிவைத்தவர்கள் நரகத்தின்பத்திற்குத் தவறமாட்டார்கள். எ - று. (கஅ)

போய காலத்து நிகழ்ந்ததோர் கதையது புகல்கே
மாயி ரந்தலைச் சேடனு வாயிரத் தளந்து
பாயி ரத்தலைப் பனுவன்முற் றுணர்ந்தனன் பரவித்
தூய சற்குரு வழிப்படா னக்கலை தொலைத்தான்.

(இ - ள்.) கடந்துபோன முற்காலத்திலே ஓர்சரிதம் நிகழ்ந்ததைச்சொல்லுகின்றேன்: ஆயிரந்தலைகளை யுடைய ஆதிசேடன் தனது ஆயிரம் வாய்களாலும் அளவுபடுத்தி, பாயிரத்தை முதலாகவுடைய நூலைமுழுவதும் அறிந்தனன். புனிதமாகிய சற்குருவைத் துதித்து வழிபாடு செய்யாமல் அக்கல்வியை யொழித்தான்.

கலைச்செ ருக்கினாற் கண்ணனோ டருங்கலைக் கடலை
நிலைத்த ளந்தனை வாதியென் றெடுமென நிகழ்த்தக்
குலைத்து ழாயினோற் கருகுறு மாதவக் குலத்தோர்
சிலைக்கை மாயவற் கியம்புவா ரிவனுடைச் செய்கை.

(இ - ள்.) வித்தியாமதத்தினால், சாஸ்திரக்கடலைக் கண்டளவிட்டனை. நீ யென்னோடு வாதிடுகவென்று திருமாலுடன் சொல்ல, கொத்தாகிய துளசிமாலை யணிந்த திருமாலைத் துதிக்கத்தகுந்த பெருந்தவக்குலத்தினர், வில்லேந்திய கையையுடைய அம்மாயோனுக்கு இவன் செய்கையைச் சொல்லுவார்கள். எ - று.

ஒருவர் மற்றையோர்க் குணர்த்துத லருகுகேட் டுணர்ந்துங்
குருமொ ழிப்படி யெழுதிய துணர்ந்துமிக் கொடியோ
னிருநிலக்கலை யாவையுந் தோய்ந்தன னிவனைக்
கருதிற் கண்ணுறிற் கிடைப்பன கறைபடு நிரயம்.

(இ - ள்.) ஒருவர் மற்றொருவருக்கு உபதேசித்தலை அருகிருந்து கேட்டறிந்தும், குருபதேசப்படி யெழுதியவற்றைக் கொண்டு கற்றும், பெரிய பூமியிலுள்ள கலைஞானங்களை யெல்லாம் தேர்ந்தனன். இவனை நினைத்தாலும் பார்த்தாலும், களங்கம் பொருந்திய நரகமே பிராப்தியாகும். எ - று. (உக)

என்று மாதவ ரியம்புறு மெல்லையிற் பொதியக்
குன்றி ருந்தவ னெய்தினன் பாற்கடல் குறுகி
நின்ற சேடன தியற்கையை நிகழ்த்தலும் வினவி
மன்ற லந்துழாய் மாயவற் கின்னணம் வலிப்பான்.

(இ - ள்.) என்று பெருந்தவசிகள் சொல்லுங் காலத்தில், பொதியாசலத்தில் வீற்றிருந்த அகத்தியமுனிவர் வந்து திருப்பாற்கடலை யடைந்து, அங்கிருந்த ஆதிசேடன் சுபாவத்தைச் சொல்லவும் கேட்டு மணந்தங்கிய அழகியதுளசிமாலை தரித்த திருமாலுக்கு இப்படிச் சொல்லுகின்றார். எ - று. (௨௨)

குருவெ னக்கென நினைந்தொரு குரவனைப் போற்றா
னிருநி லக்கலை யாவையுங் கரந்தன னிவன்றன்
றிருவி லாமுக நோக்கரி திவனொடுஞ் செப்பி
னொருவி டாநெடு நிரையம்வீழ்ந் துறுவது திண்ணம்.

(இ - ள்.) எனக்குக் குருவென்று கருதி ஓராசிரியனைத் துதிசெய்யான். பெரிய பூமியிலுள்ள கலைஞானங்களை யெல்லாம் ஒளித்துக்கற்றனன். இவனுடைய இலக்குமி விலாசமில்லாத முகத்தைப் பார்ப்பதரிது. இவனோடுபேசின் நீங்காத பெரிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவது சத்தியம். எ - று. (௨௩)

என்ன மாயவற் கியம்பினன் சேடனை யெதிர்ந்து
நின்னை நோக்குறிற் பாவமுண் டென்பது நிகழ்த்தித்
தொன்னி லைக்கலை கரந்தனை குருநெறி தொடராப்
புன்மை யாளநிற் குணர்த்துவ துளதெனப் புகல்வான்.

(இ - ள்.) என்று அகத்தியமுனிவர் திருமாலுக்குச் சொல்லினர். ஆதிசேடனை நோக்கி, உன்னைப்பார்த்தால் பாவமுண்டாமென்று கூறி, பழமையாகிய நிலைமையையுடைய கலைஞானங்களை மறைத்தனை. குருவழித் தொண்டுபுரியாத இழிதகைமையான உனக்குச்சொல்வதொன்றுண்டென்று சொல்லுவார். எ-று.

வரச ரோருகன் முதலினோர் யாவர்க்கு மதிக்குங்
குரவன் மாயவ னிவனைநீ குருவெனக் கொண்டு
விரவு பல்கலை யாவையும் விளங்குதி யென்ன
வரவ நாயகன் குருமுனிக் கின்னண மறைவான்.

(இ - ள்.) சிறந்த தாமரையில் வசிக்கும் பிரமன் முதலானோரெல்லாருக்கும் மதிக்கத்தக்க ஆசிரியன் திருமால். இத்திருமாலைநீ ஆசிரியராகக்கொண்டு நெருங்கிய பலசாஸ்திரங்களையும் விளக்கமுறுக வெனக்கூற, சர்ப்பராசனாகிய ஆதிசேடன் அகத்திய முனிவருக்கு இவ்வாறு கூறுவான். எ - று. (௨௫)

ஓத வேண்டுவ யாவையு மொருங்குற வுணர்ந்தேன்
பூத லத்துள குரவரீங் கெனக்கெது புகல்வார்
தீதின் முற்சென னக்குறைக் கலையெலாந் தெரிந்தே
னோது னார்ந்திலை யென்னைகொ லருளினை யையா,

(இ - ள்.) கற்க வேண்டுவனவற்றை யெல்லாம் ஒருசேரக் கற்றறிந்தேன். உலகத்திலேயுள்ள ஆசிரியர்கள் இப்பொழுது எனக்கு வேறெதனை யுபதேசிப்பார்கள்? குற்றமில்லாத பண்டைய பிறவியிற் குறைவாகிய கலைகளை யெல்லாந் தெரிந்து கொண்டேன். அதனை யுணராதவராய், ஐயனே! யாதுகூறியருளினீர்.

எனத்த டுத்தனன் சேடனுங் குறுமுனி யெதிர்ந்து
சினத்த சிந்தையன் சேடனீ தெரிதருங் கலைக
ளனைத்து நீத்தனை யாகிமற் றுயிர நாமப்
புனத்து ழாயவன் றுயில்பெறக் கிடவெனப் போனான்.

(இ-ள்.) என்று ஆதிசேடனும் மறுத்துரைத்தான். குறுகிய வடிவுடைய அகத்திய முனிவர் கோபங்கொண்ட மனமுடையவரா யெதிர்த்து, சேஷா! நீயு ணர்ந்த கலைஞானங்களை யெல்லாம் ஒழித்தவனாகி, ஆயிரந்திருநாமங்களையுடைய வனத்துளவ மாலையணிந்த திருமால் துயில்புரியப் பாயலாய்க் கிடக்க வென்று சபித்துப் போயினர். எ - று. (உஎ)

வெருவி நின்றனன் சேடனும் விழுத்தவ முனியை
யிருப தந்தொழு தறிவிலா திசைத்தன னிவற்றைப்
பொருவில் சாபநீத் தொழிவது புகலுதி யென்றான்
பருவ ரற்குட னாயினு னடிக்கடி பணிந்தான்.

(இ-ள்) ஆதிசேடனும் பயந்திருந்து, பெருந்தவமுடைய அகத்திய முனிவரை உபயபாதங்களிற் பணிந்து, அடியேன் மதியின்றி இம்மொழிகளை யுரைத்தேன். ஒப்பில்லாத சாபத்தையகன்று நீங்குவது சொல்லுவாயாக வென்றனன். துன்பத்திற்கு உடனாயிருந்தவன் அடிக்கடி முனிவரை வணங்கினான். எ - று. ()

என்று மாயிரம் பெயரவற் கிருவிழி துயிற்றித்
துன்று பாயலிற் கிடந்தவன் சொற்கலை யுணர்ந்து
பின்று நின்கலை யாவையும் பெறுகுவை யந்நா
ளின்றி யாம்புகல் சாபநீத் தொழிகுவை யென்றான்.

(இ-ள்.) ஆயிரந் திருநாமங்களையுடைய திருமாலுக்கு எக்காலமும் இருவிழிகளைத் துயில்வித்து, நெருங்கிய சயனம்போலக் கிடந்து, அவர் கூறியகலைகளை யெல்லா மறிந்து, பிற்பட்டுப்போன உன் கலைஞானங்களை யெல்லாம் அடையக்கடவாய், அக்காலத்தில் இப்பொழுதுநாம்கூறியசாபநீங்கி விளங்குவையென்றனர்.

சங்கு சக்கரந் தாங்குகைத் தாமரைக் கண்ணன்
பொங்கு பேரு ளாற்சிவ பூசனை புரிந்து
கங்கை வார்சடைக் கண்ணுதற் பரமனைக் கருதி
யெங்கி ருப்பினு மறக்கலை யெனமுனி யெழுந்தான்.

(இ-ள்.) சங்கு சக்கரங்களைத் தாங்கிய கைகளையுடைய செந்தாமரை மலர் போன்றவிழிகளையுடைய திருமாலே! அதிகரித்த பேரன்போடு சிவபூசைசெய்து கங்கையையணிந்த நெடிய சடையையுடைய நெற்றிக்கண் வாய்ந்த சிவபெருமானைத் தியானித்து எவ்விடத்திலிருந்தாலும் மறவாதே யென்றுகூறி அகத்திய முனிவர் போயினர். எ - று. (௩௦)

அனைய தப்பரி சாதலி னாருயிர்த் தொகைக்கு
வினையொ ழித்துறக் குரவனை வேண்டுமால் விரிநீர்
புனைநெ டுஞ்சடைப் புங்கவன் பூசனை புனித
முனைவர் காணுமக் கறிந்தவா றின்னண மொழிந்தேம்.

(இ-ள்.) பரிசுத்தமான முனிவர்களே! அச்சிவார்ச்சனையின் தன்மை அத்தகையது. ஆனபடியால் அரிய உயிர்த்தொகைகளுக்கு இருவினைச் சம்பந்தத்தை யகற்றும்படி ஆசிரியனையடையவேண்டும் பரந்த கங்காசலத்தையணிந்த சடையையுடைய சிவபெருமான் பூசையைத் தெரிந்தவரையில் உங்களுக்கு இப்படிச்சொன்னேன். எ - று. (௩௧)

வேத நான்கெனப் பகுத்தருள் வியாதமா முனிவ
ேனோது மின்னரு ளாற்சில வறிந்தன வுரைத்தே
ேனாதி நாயக னருச்சனைப் பெருமைமுற் றளப்பிற்
சீத ரற்குமற் றயனுக்கு மூழ்பல செல்லும்.

(இ - ள்.) வேதங்களை நான்கெனப் பிரித்தருளிய சிறந்த வியாசமுனிவர் திருவருளாற் கூறியவற்றிற் சிலதெரிந்தன வற்றைச் சொன்னேம். முதற்கடவுளாகிய சிவபெருமான் அர்ச்சனைச் சிறப்பை முழுதும் அளவிட்டால் திருமாலுக்கும் பிரமனுக்கும் அநேக ஊழிகளாகும். எ-று. (கூஉ)

இனியு ரைப்பன கேட்குதி ரெம்பிரா னருளா
னனிபெ றப்பெறுஞ் சரியையே முதலிய நான்கும்
புனித மாதவத் தந்தணீ ரெம்மனோர் புகலற்
கனித மாவன வாயினு மறைவனென் றறைவான்.

(இ - ள்.) பரிசுத்தமான பெருந்தவத்தையுடைய வேதியர்களே! இன்னுஞ் சொல்வனவற்றைக் கேட்பீர்களாக. எமது சிவபெருமான் திருவருளால் நன்றாக அடையப்பெறுஞ் சரியை முதலாகிய நான்கு பாதங்களும் எம்மையொப்பார் சொல்லுதற்கு அளவுபடாதன. ஆனாலுஞ் சொல்கின்றேமென்று சூதமுனிவர் சொல்வாராயினர். எ - று. (கூகூ)

குருமான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் கூஅ-க்குத் திருவிருத்தம்-சகககூ.

முப்பத்தொன்பதாவது

சரியையாதிமான்மியச் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கனையிருள்போழ்ந் தலரியெழு புலரியினிற் சரீரசுத்தி கழித்த பின்னர்ப்
புனறுளைந்து வெள்ளாடை வெண்பட்டுப் புனைந்துநனை பூதி சாத்தி
வனையுமுருத் திரவக்கம் புனைந்துவா னவர்க்குமுனி வரர்க்கு மென்று
நினைவினருக் கியங்கொடுத்துப் பரிதிவா னவற்கியற்று நியமம் போற்றி.

(இ - ள்) மிக்கவிருளைவிலக்கிச் சூரியனுதயமாகும் விடியற்காலத்தில், தேகசுத்தி முடித்தபிறகு நீராடி, வெள்ளிய வஸ்திரத்தையும் வெள்ளிய பட்டாடையையுமணிந்து குளிர்ந்த திருவெண்ணீறு தரித்து, அணியத்தக்க உருத்திராக்கத்தை யணிந்து, தேவர்க்கென்றும் முனிவர்க்கென்றும் விருப்போடு அருக்கியமளித்து, சூரியபகவானுக்குச் செய்யும் நித்தியகடனாற் துதிசெய்து. எ - று.

திருமலர்க்கா வகம்புகுந்து மலரெடுத்துப் பழுதகற்றித் தெரிந்து
நோக்கிப், பொருவருபூ சனைத்தலத்துத் திருமெழுக்கிட் டியற்றுகலம்

புதுக்கிச் சுத்தி, தருநிலத்துக் கவிழ்த்திநீர்ம் புனறெளித்தாங் கவையெ
டுத்துத் தையல் பாகற், குருகியபே ரன்பொடுமஞ் சனங்கொணர்ந்து
நறுஞ்சாந்த முரைத்துப் பின்னர்.

(இ - ள்.) சிறந்த மலர்ச்சோலையிற் பிரவேசித்துப் பூக்கள் கொய்து குற்ற நீக்கிப் பார்த்தாய்ந்து, ஒப்பிடற்கரிய பூசாஸ்தானத்தில் திருமெழுக்கிட்டு, பாத்திரசுத்திசெய்து புனிதமானவிடத்திற் கவிழ்த்தி, குளிர்ந்தசலத்தைத் தெளித்து அவற்றையெடுத்து, உமாதேவிபாகராகிய சிவபெருமானுக்கு உருகிய பேரன்போடுந் திருமஞ்சனசலங் கொண்டுவந்து, நல்ல சந்தனத்தை யுரைத்து அதன் பிறகு. எ-று. (உ)

ஈசனருச் சனைத்தலத்து விதானித்துக் கொழுந்தீப மேற்றி யின்ன
வாசறச்செய் வனசரியை யினிக்கிரியை யெனுமதனை வகுப்பா மற்றைக்
காசறுமந் திரமான்மாத் திரவியம்பூ தங்கடவு ளிலிங்க மைந்தி
னேசறுசுத் தியைவருத்தி யமைத்தபீ டத்தரனை யினிதி னேற்றி.

(இ - ள்.) சிவார்ச்சனை புரியுமிடத்தில் விதானஞ்செய்து திருவிளக்கேற்றி இப்படிப்பட்டனவற்றைக் குற்றமறச் செய்வன சரியையெனப்படும். இனி, கிரியையென்று சொல்லப்படும் அதனைப்பிரித்துக் கூறுவாம். குற்றமற்ற மந்திரம் ஆன்மா திரவியம் பூதம் தெய்வீகந்தங்கிய சிவலிங்கமாகிய இவ்வைந்தின் ஏசுதலற்ற சுத்தியைச்செய்து அமைக்கப்பட்டுள்ள பீடிகையின்மீது சிவபெருமானை இனிதாக வேறச்செய்து. எ - று. (ங)

புரிந்தபுனற் கொண்டுதிரு வடிவிளக்கிப் பொதியநறுஞ் சாந்தஞ்
சாத்தித், தெரிந்தமலர்த் திருமாலை யுரைத்தவரன் முறைசாத்தி யுபதே
சத்தாற், பரிந்துதிருக் கருணைபுரி குரவனரு ளியபரிசு பணைக்கை யானை,
யுரிந்துடுத்தோன் றனக்கிரெட் டுபசாரத் தொடும்பூசை யுவந்தபின்னர்.

(இ - ள்.) கொணர்ந்த சலத்தினாலே திருவடியைச் சுத்திசெய்து, பொதியமலையிற்றோன்றிய நல்ல சந்தனத்தைச்சாத்தி, தெரிந்தெடுத்த சிறந்த மலர்மாலையை நூல்களிற் சொல்லியவரன் முறையோடுசாத்தி, உபதேச முறையால் விரும்பித் திருக்கருணைசெய்த ஆசிரியனருள்புரிந்த முறையே, பனைபோலுங் கையையுடைய கயாசுரனென்னும் யானையை உரித்துடுத்த சிவபெருமானுக்கு ஷோடசோபசாரங்களோடும் பூசையைவிரும்பிச் செய்தபின்னர். எ - று (ச)

மற்றுளபுங் கவர்க்கோமத் தவிர்ப்பாகந் தருதலிது கிரியை வாசஞ்
சுற்றுகொடிச் சடைமுடியீ ரினியுமக்கு யோகத்தின் றொடர்ச்சி சொல்
முற்றியம நியமமுட னாசனம்ப்ரா ணாயாம முதலின் னான்கு [கே
வுற்றபிரத் யாகாரந் தாரணைதி யானமற்றைச் சமாதி நான்கே.

(இ - ள்.) இன்னுமுள்ள தேவர்களுக்கு ஓமாக்கினியில் அவிப்பாகந் தருவதாகிய இது கிரியையாம். வாசந்தங்கிய சுற்றியகொடிபோலுஞ் சடைமுடியையுடைய முனிவர்களே! இனி உங்கட்குயோகத்தின் றொடர்பினைச் சொல்லுவோம் முற்றிய இயமம்-நியமம்-இதனுடன் ஆசனம்-பிராணாயாமமாகிய முதனான்கும், பொருந்திய பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதியாகிய ஏனைய நான்கும்.

எய்துமெட்டு யோகத்தி னியமமென்ப தொருவர்க்கு மிடர்செய் யாமை
பொய்களவு பிறர்பொருளை நயத்தலொழிந் திந்திரியப் புலத்தை வெல்ல
றுய்யகிய மங்கோப மொழிந்துபெறு வனநயந்து தூநீர் கன்மஞ்
செய்துகுரு மொழிவழிப்பட் டருச்சித்தா சாரத்திற் சிறப்ப தாமே.

(இ - ள்.) என்றெய்திய அஷ்டாங்கயோகத்தில். இயமமென்பது ஒருவர்க்குந் துன்பு செய்யாதிருத்தல், பொய் களவு பிறர்பொருள் விழைதலின்மை, இந்திரியங்களையும் ஐம்புலன்களையும் வெல்லுதல். புனிதமாகிய நியமமென்பது கோப நீங்கி அடையப் பெறுவனவற்றை விரும்பி, புனிதமான நீரிற்செய்யுஞ் சந்தி செய்து, ஆசிரியன்கட்டளைப்படி வழிபாடு புரிந்து பூசித்து, ஆசாரத்தில் மேம்படுவதாம். எ - று. (௬)

ஆசனமென் பதுபுலித்தோ லரிணத்தோல் பதுமவா சனங்கூர் மத்தி
னேசறுமா சனமிவற்றிற் பொருந்தியவா சனத்திருந்தி யோக சித்தி
மாசறுத்து நிருமிக்கக் கடவதினிப் பிராணுயம் வகுப்பேந் தெய்வப்
பூசுரமா தவத்தலைவீ ரொருங்கிருந்து கேண்மினெனப் புகல்வ தானுன்.

(இ - ள்.) ஆசனமென்பது புலித்தோலாசனம் மான் தோலாசனம் பதுமாசனம் குற்றமற்ற கூர்மாசனம் இவற்றொன்றிற் றமக்கியைந்ததோ ராசனத்திருந்து, குற்றநீக்கி யோகசித்தியை நிருமிக்கக்கடவதாம். இனி, பிராணுயாமத்தைச் சொல்லுவோம், தெய்வீகம் பொருந்திய பெருந்தவமுடைய அந்தணத்தலைவர்களே! ஒன்றுபட்டிருந்துகேட்பீர்களாகவென்று சூதமுனிவர்சொல்வாராயினர்.

வல்லுமூக் கங்குட்டத் தாற்புதைத்தீ ரெண்குடிலை வாங்கி யேற்றி,
யுலவுமெண்ணெண் பிரணவத்தைச் சுவாசம்விடா துருவேற்றி யகத்துக்
கும்பித், திலகிடநா சியைப்புதைத்து வலமூக்கா லந்தவெண்ணெண்
பிரண வத்தைச், சுலவவெளி விடுகமுப்பா னிரண்டுபிர ணவமாக்கிச்
சுவாசத் தோடும்.

(இ - ள்.) வலப்புற நாசியை [அங்குஷ்டம்] பெருவிரலாற் பொத்திக் கொண்டு பதினாறு பிரணவத்தை உள்ளேவாங்கியேற்றி, உலாவுகின்ற அறுபத்து நான்கு பிரணவத்தைச் சுவாசம் விடாமல் உருவேற்றி உள்ளே கும்பகஞ்செய்து விளங்குகின்ற இடப்புற நாசியை மூடிக்கொண்டு வலப்புற நாசியால், அந்த அறுபத்து நான்கு பிரணவத்தை முப்பத்திரண்டு பிரணவமாக்கிச் சுவாசத்துடன் சுழலும்படி வெளியே விடுக. எ - று. (அ)

இடநாசி நடுவிரலிற் புதைத்துவல நாசியினப் பரிசி னேற்றி
நெடுநாசி வலம்பொத்தி யிடநாசி வழிமுன்னர் நிகழ்ந்த வாறே
விடலீது பிராணுய மிதுவிரண்டு விதஞ்சகற்பங் கற்ப மென்னப்
படலாகு மாங்கவற்றி னிலையுரைப்பக்கேண்மினெனப் பகர்வ தானுன்.

(இ - ள்.) இடப்புற நாசியை மத்தியமையினுற்பொத்திக்கொண்டு, வலப்புற நாசியில் அவ்வடைவாகவேற்றி, நெடியநாசியை வலப்புறத்திற்பொத்திக்கொண்டு இடநாசி வழியிலே முன்னே நடந்தவகையாகவே விடுவதாகியவிது பிராணுயாமம். இப்பிராணுயாமம் இரண்டு வகையாய்ச் சகற்பம் கற்பமென்று சொல்லப்படும். அவற்றின் தன்மைகளைச் சொல்லக் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்வாராயினர். எ - று. (௯)

மந்திரதி யானத்தோ டிருக்கையாற் சகற்பமென வழங்கு மற்றை,
யிந்தவோ ரிரண்டுமன்றிக் கும்பித்து விடல்கற்ப மென்ப தாகு, மூன்
றையா சனத்திருந்து பிரணவத்தைச் செவித்துமுக்கட் பரமனென்னு,
மெந்தைதிரு வஞ்செழுத்தை வரன்முறைநிட் டையிற்செபிப்ப தியல்ப
தாமே,

(இ - ள்.) மந்திர தியானத்தோடிருப்பதனால் அதுசகற்பமெனப்படும். மற்று இவ்விரண்டு மல்லாமல் கும்பகஞ்செய்து வெளிவிடுவது கற்பமென்று சொல்லப் படுவதாகும். முற்கூறியபடி சுகாசனத்திலிருந்து பிரணவத்தைச் செபஞ்செய்து, திரிநேத்திரங்களையுடைய கடவுளென்று சொல்லும் எமது தந்தையாகிய சிவபெருமானுடைய ஸ்ரீபஞ்சாக்கரத்தைக் கிரமப்படி நிஷ்டையிலிருந்து ஜபிப்பது இயற்கையாம். எ - று. (௰)

வருணமூ வகைத்தாயோர் பிரணவத்தி னொடுஞ் செவிக்க மற்றை
யோரத், திருவெழுத்தஞ் சினையுரைத்துப் பிரணவமின் றிச்செவிக்கக்
கடவ ராவ, ருரியயோ கந்திளைப்போர் துவர்ப்பினிப்பு மிளகுபுளி
சுரைக்கா யுப்புப், பருகுதனீத் தருந்தாக மடைந்ததென்றால் வெந்த
புனல் பருக லாமே,

(இ-ள்) முதன்மூன்று வருணத்தினராகிய பிரமக்ஷத்திரிய வைசியர் பிரணவத்தோடுஞ் செபிக்கக்கடவோர். ஏனைய சூத்திராதியர் அத்திருவைந்தெழுத்தைப் பிரணவ நீக்கி உரைத்துச் செபிக்கக்கடவ ராவார்கள். அவரவர்கட்குரிய யோகத்தை யநுஷ்டிப்போர் துவர்ப்பு இனிப்பு மிளகு புளி சுரைக்காய் உப்பு இவற்றைப் புசியாமல் தடுத்து, தாகவிடா யுண்டாகியதானால் வெந்நீரையே பருகுதலாகும். எ - று. (௧௧)

ஈதுபிரா ணாயாம மினிப்ரத்யா காரமிதை யியம்பக் கேண்மின்
றீதறுபஞ் சேந்திரியம் புறம்புகா வழிநிறுத்தல் சிவனைப் போற்றிப்
பாதமல ரிடைவிடா துளத்திருத்த றாரணமாம் பகர்தி யான
மாதியைத்தன் னிதயமல ரகத்திருத்தித் தியானிப்ப தாகு மன்றே.

(இ - ள்.) இதுவே பிராணாயாமமாம். இனி, பிரத்தியாகாரமாகிய இதனைச் சொல்லக் கேட்பீர்களாக. குற்றமற்ற பஞ்சேந்திரியங்களையும் புறஞ்செல்லாத வகையாகத் தடுத்தல்-சிவபெருமானைத் துதிசெய்து திருவடித்தாமரைகளை நீங்காமல் எப்பொழுதும் தமது மனத்திலிருத்துதல் தாரணமாகும். சொல்லுகின்ற தியானயோகமாவது முதற்கடவுளாகிய சிவபெருமானைத் தமது இதயதாமரையிலெழுந்தருளச்செய்து தியானித்தலாகும். எ - று. (௧௨)

ஈறுபடு சமாதியென்ப தெரிபுரையுந் திருமேனி யெந்தை தன்பாற்
கூறருமைம் புலனமைத்துக் கரணங்க லாதியொடுங் குணங்க ணீத்து
மாறிடுமா ணவங்கெடுத்துத் தனைமறந்து காந்தமுமற் றிரும்பு மென்ன
வேறுபடா தொன்றாகப் படுவதந்தச் சமாதியென விளம்ப லாமே,

(இ - ள்.) இறுதியாகிய சமாதியென்பது, தீவண்ணத்திருமேனியையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானிடத்தில் சொல்லுதற்கரிய ஐம்புலன்களையிருத்தி கரணங்களைக் கலாதிகளோடும் குணங்களோடும் விலக்கி, பகைசெய்யும்

ஆணவமலத்தை நீக்கித் தன்வசமாறி, காந்தமும் இரும்பும்போல வேறுபாடின்றி ஒன்ருகக் கலந்திருப்பது அந்தச்சமாதியென்று சொல்லுவதாகும். எ - று. (௧௩)

சரியையீ திதுகிரியை யிவையோக மெனவறிந்த தன்மை சொற்றேம், முரியசிவ ஞானத்தி னுண்மைசிறி தறிந்தவா றுரைக்கே மென்னப், புரிதருமில் லொழுக்கத்திற் ருயென்றுந் தமரென்றும் புதல்வ ரென்றும், பரிவுறுபா சத்தினின்றுங் கரையேறிப் பிறப்பொழிக்கப் படுவ தென்ருன்.

(இ - ள்.) சரியாமார்க்கம் இது. கிரியாமார்க்கம் இது. யோகமார்க்கம்இவை யென்று எமக்குத்தெரிந்த தன்மையைச் சொன்னேம். பொருந்திய சிவஞானத்தி னுண்மையை ஒருசிறிது தெரிந்தமட்டிற் சொல்லுவோமென்று, நடத்துகின்ற இல்லொழுக்கத்திலே தாயரென்றும் உறவினரென்றும் புத்திரரென்றும் பரியத்தக்க பாசக்கடலிலிருந்து கரையேறிப் பிறவிப்பகையை நீக்கத் தகுவதென்று சொல்லினர். எ - று. (௧௪)

சூதமா முனிவனுங் கஃதுரைப்ப முழுதுணர்ந்த தூயோரையா யாதுநீ யெமக்குணர்த்துஞ் சிவஞான மாங்கதனு லறியாநிற்ப[றெல்லாந் தேது ணர்த்தும் பொருளறிந்தா லப்பொருளாற் பெறுவதியா திவ்வா றீதறவெவ் வேறுணர்த்தி யெனப்பரவ வன்னவர்க்குச் செப்ப லுற்ருன்.

(இ - ள்.) பெருமை தங்கிய சூதமுனிவர் அதனைச் சொல்லவும், முற்றுணர்ந்த பரிசுத்தராகிய நைமிசாரணியவாசிகள், ஐயா! எமக்குத்தேவரீர் உணர்த்தியருளுஞ் சிவஞானம்யாது? அந்த ஞானத்தால் அறியவுள்ளது எப்பொருள்? அறிவித்தபொருளை யறிந்தால் அந்தப்பொருளால் அடைவதுயாது? இவ்வகைகளை யெல்லாங் குற்றமற வெவ்வேருக விளக்கியருளவேண்டுமென்று துதிக்க, சூதமுனிவர் அவர்கட்குச் சொல்வாராயினர். எ - று. (௧௫)

பதியென்றும் பசுவென்றும் பாசமென்று மொருமூன்ருய்ப் பகுத்து நின்ற, விதிகண்டிம் மூன்றமுணர்ந் தறிபவனே ஞானியென விளம்ப லாமாற், கதிகொண்ட ஞானமெது வென்பீரே லஞ்ஞானக் களங்க நீக்கு, மதுவெந்தை நிலைமைதெரிந் தறிவிக்கு ஞானமென வறையலாமால்.

(இ - ள்.) பதியென்றும், பசுவென்னும், பாசமென்றும் மூன்ருகப் பிரிக்கப் பட்டுள்ள முறையைத்தெரிந்து இம்மூன்றனையும் விசாரித்து உணர்பவனையே ஞானியென்றுசொல்லுவதாகும். மோட்சத்தைப்பயனுகக்கொண்ட ஞானமென்பது யாதென்று வினவுவீராகில், அஞ்ஞானமாகிய விருளைவிலக்கும் அதுவே எமது தந்தையாகிய சிவபெருமானுடைய நிலைமையை உணர்ந்து தெரிவிக்கும் ஞானமென்று சொல்லப்படுவதாம். எ - று. (௧௬)

அப்பரிசி னறியுமறி வாங்கதனு லறிபொருணின் றறியப் பெற்ருே, ரிப்படிமூன் றளவிறந்த மூன்றிலறி பொருண்மூன்று யிருக்கு மன்னே, செப்பிலசு டஞ்சடமென் றிரண்டிவற்றைக் கொடுசரிக்கச் செய்யா நின்ற, தொப்பில்கருத் தாவென்ப தொன்ருக மூன்றிவற்றை யுணரக் கேண்மின்.

(இ - ள்.) அவ்வகையில் அறிகின்ற அறிவு-அவ்வறிவாலறியத்தக்கபொருள்-அறியப்பெற்றவன் ஆக இப்படி மூன்று. அளவுக்கெட்டாத அம்மூன்றில் அறியத் தக்கபொருள் மூன்றுசவிருக்கும். சொல்லுமிடத்தில் அசடம் சடமென்றிரண்டு. இவ்விரண்டினைக்கொண்டு சரிக்கும்படி செய்கின்றதாகிய ஒப்பில்லாத கருத்தா வென்பதொன்று. ஆகமூன்றும். இவற்றினைத் தெளியும்படி கேட்பீர்களாக.

இனையவற்றை யும்பசுபா சம்பதியென் றியம்புவர்மற் றிந்த மூன்றி,
னினையுமச டம்பசுவச் சடம்பாச மிவைக்கிறைவ னிமல னாகு, மனைய
மூன் றினையுமற்றை யநாதியென்று சொலப்படுமா லறிதி ரென்றான்,புனை
யுநெடுஞ் சடைமோலிச் சூதனஃ துணர்ந்ததவப் புனிதர் சொல்வார்.

(இ - ள்.) இவற்றையும் பசு பாசம் பதியென்றுசொல்லுவார்கள். இத்தகைய மூன்றனுள், எண்ணத்தக்க அசடமானது பசு, அந்தச் சடமானது பாசம், இவற்றிற்குத் தலைவன் பதி. அப்படிப்பட்ட மூன்றுபதார்த்தங்களும் அநாதிநித்தியப் பொருள்களென்று சொல்லப்படும். அறியக்கடவீர்களென்று, அலங்கரித்தநெடிய சடைமுடியையுடைய சூதமுனிவர்சொல்லினர். அதனையறிந்த அம்முனிவர்கள் சொல்லுகின்றார்கள். எ - று. (௧௮)

தெரித்தெமக்கு நீயுரைத்த துளமுணரப் பெற்றிலமச் சிவஞா னத்
தை, விரித்துவதன் சொரூபமதன் றொழிலனைத்தும் விளங்கவிளம் புதி
கொ லென்னப்,புரித்திடுபுன் சடைச்சூத னினிக்கேண்மி னெனப்புகலு
மாயை தன்னைப், பரப்பிரமம் பிரகிருதி சடம்பாச மெனவெடுத்துப்
பகர்ந்தார் நல்லோர்.

(இ - ள்.) தேவரீர் எமக்குவிளக்கிச்சொல்லியதை யாங்கள் மனதில் அறியப் பெற்றோமில்லை. ஆதலால் அந்தச்சிவஞானத்தை விரிவாகவெடுத்து அதன்சொரூபம் அதன்செயல் முதலிய வெல்லாவற்றையும் விளக்கமாக வியம்பியருளீரோவென்ன, இனிக்கேளுங்களென்று சொல்லுகின்றார். மாயையைப்பரப்பிரமம் பிரகிருதியென்றும் சடம்பாசமென்றும் பெரியோர்கள் எடுத்துச்சொல்லியுள்ளார்கள். எ - று. (௧௯)

ஆங்கஃத நாதியிலே பதியினின்றுந் தோன்றியதாம் பசுவென்
றோது, நீங்கரிய வான்மாவை மலபேதங் கொடுவளைத்து நிற்ப வங்ஙன,
மோங்குபசு விருவினையா லுண்டான பயனுண்ணும் வினைகட் கெல்லா,
மீங்கிவன்செய் திடுந்தொழிலே காரணமவ் விருவினையெப் போது முண்
டால்.

(இ - ள்.) அந்தமாயை அநாதியிலேயே பதியினின்றுந் தோன்றியதாகும். பசுவென்று சொல்லப்படும் நீங்கற்கரிய ஆன்மாவைப் பாசமானது பலபேதங்களாற் சூழ்ந்து நிற்க, அப்படியெழுந்த பசுவானது இருவினையாலுண்டான பயனை நுகரும். வினைகளுக்கெல்லாம் இவ்வான்மா செய்கின்ற செயலேகாரணமாக இருவினை யெக்காலத்திலும் உண்டாகும். எ - று. (௨௦)

இருவினையெப் போதொடுங்கு மெனிலான்மா வினைவளைத்த யலம்
போ யன்றி, யொருவலவவ் வினையாதென் றுரைத்திடிற்புண் ணிய

பாவ மிவைக ளீட்டித், தருவநுக ரும்போக நுகர்வதற்குச் சரீரங்கா ரணமே யாகும், பொருவருமைம் புலத்திலந்தக் கரணத்தாற் பொசிக்கு மலம் பொதிந்த சீவன்.

(இ - ள்.) இருவினைகள் எக்காலத்தில் ஒடுங்குமென்றால், ஆன்மாவைச் சூழ்ந்துகொண்ட மலசம்பந்தம் நீங்கி யல்லது நீங்கமாட்டாது. அவ்வினையை ஏதெனச்சொன்னால், புண்ணிய பாவங்களாகிய இவைகள் சம்பாதித்துத்தருவன. நுகரத்தக்க போகங்களை நுகருதற்குத்தேகமே காரணமாகும். ஒப்பற்ற ஐம்புலன்களினாலும் அந்தக்கரணங்களாலும் மலபந்தமெய்திய சீவனே அவற்றைப்பொசிக்கும். எ - று. (உக)

சீவனெனப் படுபுருட னேகனவன் றமரோடுஞ் செல்வா ரோடு
மேவருமென் பதுகொடிய வெஞ்சுரத்தி னருநீழற் கீழ்வே டைக்கா
யாவருந்தொக் கதுபோலு மிவனுடம்ப நேகமெடுத் திழப்பா னந்த
மீவருங்க லாமதியைப் பன்முறையாற் புயன்மறைத்து விடுதல்போலும்

(இ - ள்.) சீவனென்று சொல்லப்பட்ட புருடன் ஏகனுவான், அவன் சுற்றத்தாரோடும் செல்லுபவர்களோடும் பொருந்துவானென்பது, கொடிய வெப்பமாகிய பாலைவழியில், கிடைத்தற்கரிய நிழலின்கீழே வெயில் வெப்பமாற்றுமைக்காக எல்லோருங் கூடியதுபோலும். அழகிய ஆகாயத்தில் வருகின்ற கலைகளோடுகூடிய சந்திரனைப்பலமுறையும் மேகமானது மறைத்து விடுவதுபோல இவன் அநேக தேகங்களையடைந்து ஒவ்வொன்றாக இழப்பான். எ - று. (உஉ)

இவன்றிரிந்த காயத்திற் களவையிலை பழங்கலைநீத் தெடுத்துக் கொண்டு, கவர்ந்தபுதுக் கலையெடுக்கு மாபோல வெடுத்தபல காயம் போக்கி, நிவர்ந்தெழுமச் சடமகற்றி யச்சீவன் முத்திசென்று நிலைக்குங் காறு, முவந்தபுனற் கயல்கரைப்பா னுலவுதல்போற் சடந்தோறு முலவா நிற்கும்.

(இ - ள்.) இவ்வான்மா மாறியதேகத்திற்கோ கணக்கில்லை. பழய வஸ்திரத்தை யகற்றிவிட்டுப் புதிதாக வெடுத்துக்கொண்ட கோடிவஸ்திரம்போல, அதிகாறுங்கொண்ட பல உடல்களை யகற்றி, மேற்கொண்டெழுந்த அச்சடத்தை யகற்றி அந்தச் சீவனுவான் முத்தியிற்சென்று நிலைபெறுமெல்லையும், விரும்பிய சலத்திற்கு அயலிலேயுள்ளகரைமேல் திரிதல்போலச் சடங்களில் உலவிக்கொண்டிருப்பான். எ - று. (உரு)

விளைத்தவிரு வினைத்தொடரா லச்சீவன் றளைப்பட்டு மேவி மூன்றுய்க், கிளைத்தபுவ னந்தோறு மின்பதுன்பந் துய்த்துழலல் கிளர்பூங் கொன்றை, தளைத்தமோ லிப்பெருமான் றிருவிளையாட் டென்றுரைக் குஞ் சாத்திரங்கள், வளைத்தெழுசீ வனுக்கெல்லாம் பசுவெனும்பே ரென்னையெனின் வகுத்துச் சொல்கேம்.

(இ - ள்.) தானியற்றிய இருவினைத்தொடர்பினால் அச்சீவன்கட்டப்பட்டு, மூன்றாய்ப்பொருந்திப் பிரிந்த புவனங்களில் இன்பதுன்பங்களை யநுபவித்துழல்வது, பிரகாசிக்கின்ற அழகிய கொன்றைமாலையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானது திருவிளையாடலென்று சாத்திரங்கள் சாற்றாநிற்கும், மலபந்த

முடைய எல்லா ஆன்மாக்களுக்கும் பசுவென்னும் பேர் யாது காரணமென்றால் விளக்கிச்சொல்லுவோம். எ - று. (உச)

பிரமனே முதலெறும்பு கடையாகப் பசுவென்று பேசலாமச், சுர பிதறித் தளைப்பட்டாலோரிடத்தும் போகாத தொடர்பே போல, விர வுமிந்தச் சீவனுங்கன் மத்தளையாற் கட்டுண்டால் வேறு போகா, துரவு தளைக் கிடந்துழலு மாதலாற் பசுவெனும்பே ருரிமைத் தாமே.

(இ - ள்.) இரணிய கருப்பன் முதல் எறும்பு (பிபீலிகை) இறுதியாகப் பசுக்களென்றுசொல்லுதலாம். அப்பசுவானது கட்டுத்தறியிற் கட்டப்பட்டால் ஓரிடத்திற்குஞ் செல்லாது. அப்பிணிப்பைப்போல, இந்தச் சீவனுங்கலந்தகன் மபாசத்தாற் பிறிதொன்றிற் செல்லாது, உறவாகிய பாசத்திற்பொருந்தி யுழன் றுகொண்டிருக்கும். ஆகிய இக்காரணத்தால், இதற்குப் பசுவென்னும்பேர் உரிமை யுடையதாகும். எ - று. (உரு)

என்றாக மத்துறையோர்க் கியம்பியசூ தனையனையோர் யாரும் போற்றி, நின்றாக மத்துறையோப் பசுவினிலை முழுதுணர்ந்தே மினி நீ யான்மா, வொன்றாய மாயையெடுத் ததன்றெழிலைச் சொரூபத்தை யுரைத்தி யென்னப், பொன்றாழ்புன் சடைச்சூத முனிவனுங் கவர்க்கத னைப் புகல்வ தானான்.

(இ - ள்.) என்று, ஆகமத்துறையிலிருந்த சௌனகாதிமுனிவர்கட்குக்கூறிய சூதமுனிவனை, அந்த நைமிசாரணியவாசிகள் யாவரும் துதித்துநின்று, ஆகமநெ றியை யறிந்தவரே! பசுவின் றன்மையை முற்றுமறிந்தோம். தேவரீர் இனி, ஆன் மா ஒன்றாகிய மாயையெடுத்ததன் செயலையும் சொரூபத்தையும் சொல்லுவீராக வெனக்கேட்க, பொன்னிறமாகித் தொங்கிய சிறுசடையையுடைய சூதமுனிவர் அம்முனிவர்களுக்கு அதனைச்சொல்வாராயினர். எ - று. (உசு)

பிரகிருதி யெனச்சொல்லப் படுமாயை யுமையிடத்தெம பெருமா னென்னு, மரனையா தரித்திருக்கும் பிரமனு தியர்க்குமயக் களிப்பு தா கும், விரவுபசும் பொன்னணிப்பால் வெவ்வேறு குதல்போன்மென் கலைக்கு நூல்போற்,பரவுபிர பஞ்சமுண்டா வதற்கதுவே காரணமாய்ப் பவித்த தாமே.

(இ - ள்.) பிரகிருதியென்று சொல்லப்படும் மாயையானது, உமாதேவியா ரைவாமபாகத்திலுடைய எம்பெருமானாகிய சிவபெருமானை யாதரித்திருக்கும். பிரமாதிகளுக்கும் மயக்கத்தைக்கொடுப்பதாகும். பசு நிறம்பொருந்திய பொன்னானது ஆபரணங்களில் வெவ்வேறாகத்திரிதல்போலவும், மெல்லியவஸ்திரத்திற்கு நூலிழைபோலவும், துதிக்கத்தக்க பிரபஞ்சத்தோற்றத்திற்கு அதுவே காரண மாக உற்பவித்தாம். எ - று. (உஎ)

ஓதுறுமம் மாயைபிர பஞ்சமொடுங் குறிலொடுங்கு முளதே லுண் டா, மேதுவெது வெனின்வித்து மாலும்போன் மாயைமா யையிலே நிற் குந், தீதிலின்ப துன்பமோ கங்கொடுக்க வுளவாகித் திரியா நின்ற,கோத றுமுக் குணமுண்டக் குணச்செய்கை மும்முறையாற் கூறக் கேண்மின்

(இ - ள்.) ஓதுகின்ற அந்தமாயையானது பிரபஞ்சம் ஒடுங்கினால் ஒடுங்கி நிற்கும். பிரபஞ்சமிருக்குமானால் இருக்கும். காரணம் யாதென்றால் விதையும் ஆலும்போல மாயையானது மாயையிலேயேயிருக்கும். குற்றமில்லாத இன்பம் துன்பம் மோகம் இவற்றைக் கொடுக்க வுண்டாகித்திரிகின்ற குற்றமற்ற முக்குணங்களுண்டு. அக்குணச் செய்கையை மும்முறையாகச் சொல்லக் கேட்பீர்களாக. எ - று. (௨௮)

தாமதரா சதஞ்சாத்து விகமென்னுங் குணமூன்றத் தன்மை சொல்லிற், காமருதா மதந்துன்ப மிராசதமோ கம்மொன்று கருது நன்மை, நாமமிவை பெறுமூன்று மாயையிலுண் டானவிவை யன்றி நல்லோ, ரே முறுமா யையிற்றோன் றுஞ்சிலவுளவென் றாரவற்றையியம்பக் கேண்மின்.

(இ - ள்.) தாமத ராசத சாத்துவிகங்களென்னுங் குணங்கள் மூன்று, அவற்றின் தன்மையைச்சொன்னால், விரும்பத்தக்க தாமதம் துன்பமாம். இராசதம் மோகமாம். மற்றொன்றாகிய சாத்துவிகம் நன்மையாம். மூன்றுபெயர்களெய்திய விவை, மாயையினின் றுண்டாயின. இவையேயன்றி மாயையின் றுதிக்கும் வேறு சில உண்டென்று பெரியோர்சொல்லுவார்கள். அவற்றையுஞ் சொல்லக்கேட்பீர்களாக. எ - று. (௨௯)

சத்தமுத லைந்துநில முதலைந்துஞ் சட்சுமுத லைந்தா மற்றைச், சுத்த வாக்கினை முதல வைந்துமன முதனான்கு முன்னர்ச் சொற்ற, வத்தகைய குணமூன்றிம் மூவொன்பான் மாயையிலுண் டாவ தாகும், வைத்தபிர பஞ்சமொடுங் குறின்மாயை யுடனொடுங்கும் வரிலுண் டாமால்.

(இ - ள்.) சத்தமுதலாக வைந்தும், பிருதிவிமுதலாக வைந்தும், சட்சுமுதலாக வைந்தும், மற்றப்புனிதமாகிய வாக்குமுதலாக வைந்தும், மனமுதலாக நான்கும், முன்னேகூறிய அத்தன்மைத்தான (தாமதராசத சாத்துவிகங்களாகிய) முக்குணங்களும் ஆக இருபத்தேழும் மாயையினின்று உண்டாவதாகும், பொருந்திய பிரபஞ்சமானது ஒடுங்கினால் அவை மாயையோடு இலயமெய்தும். பிரபஞ்சந் தோன்றினால் அதனோடுண்டாகும். எ - று.

இச்செய்யுளிற் காட்டிய தொகை: சத்த ஸ்பரிச ருப ரச கந்தங்கள். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசங்கள். சட்சு தோத்திரம் தொக்கு சிங்குவை ஆக்கிராணங்கள். வாக்குபாதம் பாணி பாயுரு உபஸ்தங்கள். மனம் புத்தி சித்த அகங்காரங்கள் என்பதாம். (௩௦)

விரித்திடுமூ வொன்பானு மாயையும்வேற் றுமையன்றவ் விரிகட்கெல்லா, முரித்தெனநிற் பதுமாயை யுடம்புக்கா தாரமிம்மூ வொன்பா, னாகுந், தெரித்தசரீ ரம்பொசிக்கு மதற்கவையே யாதாரந் தீய மாயை, பரித்தகர ணங்களொடு மான்மாவைச் சூழ்ந்திருக்கப் படுவ தாமே.

(இ - ள்.) விளக்கிய அவ்விருபத்தேழும் மாயையும் வேற்றுமையுடையவல்ல. அந்த விரிவுகட்கெல்லாம் உரித்தாக விளங்குவது மாயையாம். உடலுக்கு இவ் விருபத்தேழும் ஆதாரங்களாயுள்ளன. விளக்கிய தேகமானது பொசிப்பதற்கு அவையே காரணமாகும். கொடிய மாயையானது கரணங்களோடும் ஆன்மாவைச் சூழ்ந்திருக்கப்படுவதொன்றாம், எ - று. (௩௧)

உரைக்குமிந்தச் சீவனுடைப் பிரமாதி களைப்பசுவென் றுரைக்க
லாகும், விரைக்கமலத் தயனனே பிரமமென்று மேதினியீன் றளித்தே
னென்று, மிரைக்குமுளத் துவகையொடு மாயையுட்பட் டிருப்பனுடம்
பிலனு மெங்கு, நிரைத்துநிரம் பியபரமன் றன்விளையாட் டினைநோக்கி
மகிழ்ந்து நிற்கும்.

(இ - ள்.) சொல்லிய இத்தகைய சீவனையுடைய பிரமாதிகளைப் பசுக்க ளென்று சொல்லுவதாகும். மணந்தங்கிய தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவன் நானே பிரமமென்றும், உலகினைப்படைத்தேனென்றும் மனதிற் சந்தோஷித்து மாயையின் வயப்பட்டிருப்பான். தேகமில்லாதவராய் எங்கும் நிரம்பிப் பூரணத் துவ மெய்திய கடவுள் தனது திருவிளையாடல்களாகிய விவற்றைக்கண்டு களித் திருப்பார். எ - று. (௯௨)

பாசத்தா லுண்டான தத்துவங்க ளாலறியப் படுவா னல்ல
னேசித்த சீவனுமா யையுமறிதற் கரிதாகி நிற்ப னந்த
வீசற்காண் பான்வேண்டிற் சற்குருவி னுபதேச மெய்தி மற்றை
மாசற்ற சோதியைக்கண் டிருவினையற் றவனோடே வதிப்ப ரன்றே.

(இ - ள்.) பாசபந்தத்தினு லுண்டாகிய தத்துவங்களினு லுணரத்தக்கவனல் லாதவனும், விரும்பிய சீவனும் மாயையாலும் உணர்தற்கு அரிதானவனுமாக நிற்பவனுமாகிய அந்தப்பதிப்பொருளாகிய சிவபெருமானைத் தரிசிக்க விரும்பி னல், சற்குருவினுடைய உபதேசத்தைப்பெற்று, அந்தக்குற்றமற்ற சுயஞ்சோதி யைத் தரிசித்து, இருவினைத்தொடக்ககன்று அந்தப்பதியோடு கலந்திருப்பர். எ-று.

முதலுரைத்த வான்மாவைச் சடப்படுத்தி யாட்டுவிக்கு முதல்வ னந்தத்
திதமுறுமான் மாவுக்கஞ் சவத்தைசாக் கிரந்துரியா தீத மீறு
மிதமுறுமவ் வுடம்பெடுத்த சீவன்கே வலசகல சுத்த மென்னும் [ண்மின்.
விதமுறுமூன் றினையுடைத்தா யிருக்குமிந்த மூன்றினையும் விளம்பக்கே

(இ-ள்.) முதலிற்கூறிய ஆன்மாவைக்கடவுளே சடமாக்கி யாடச்செய்விப் பான். இறுதியிற் சுகமடையும் ஆன்மாவுக்குச் சாக்கிரமுதல் துரியாதீதமிறுதியா கப்பஞ்சாவஸ்தைகளுண்டு. நன்மைபெறத்தக்க அத்தகைத் தேகமெடுத்த அவ் வான்மா, கேவலம் சகலம் சுத்தமென்னும் அவஸ்தாத்திரயத்திற் பட்டதாயிருக் கும். இந்தமுத்திறத்தான்மாவையுஞ் சொல்லக்கேட்பீர்களாக. எ - று. (௯௪)

உறக்கமுறிற் கேவலமாம் பாசத்தா ருடன்கூடி யுவந்து சிந்தை,
சிறப்புறுதல் சகலமென்பர் சீவன்மன் னரனடிக்கீழ்ச் செலுத்தித் த
ன்னை, மறப்புறுதல் சுத்தமென்ப ரிவைமூன்றிப் படியானை மனத்தினே
ரா, விறைப்பொழுது தியானிக்கிற் பரமசிவன் றிருவருண்மற் றிவனுக்
குண்டாம்.

(இ - ள்.) நித்திரையெய்திற் கேவலாவஸ்தையாம். பாசபந்தமுடையாரோ டுகலந்து மனங்களித்து மேம்படுதல் சகலாவஸ்தையென்று சொல்லுவார்கள். ஆன்மாமிகுதியும் சிவபெருமான் திருவடிநீழலில் மனதைச்செலுத்தித் தன்னை மறந்திருத்தலைச் சுத்தாவஸ்தையென்பார்கள். இவ்வவஸ்தாத்திரயம் இத்தகை யன. சிவபெருமான்திருவடியை மனதிற்கருதி க்ஷணகாலம் தியானித்தால் இவ னுக்குச் சிவகடாக்ஷமுண்டாம். எ-று. (௯௫)

அக்கால நல்லறிவென் றொன்றுண்டா மதுசிவனை யறிவித் தன்னோன்
மிக்காய நூல்வழியிற் செலுஞ்சென்றாற் சிவனடியி லன்பு மேவுந் [ர்
தொக்காய வுடம்புக்கு முயிர்க்குமுள வேற்றுமையுந் தோன்றும் பின்ன
மைக்காள கண்டனவ னேயிறவாப் பொருளென்னு மனனுண் டாமால்.

(இ - ள்.) அக்காலத்தில், நல்லறிவென்ப தொன்றுண்டாகும். அவ்வறிவே சிவனையுணர்த்தி, அவனருளிய மேம்பட்ட சிவாகமநெறியிலே செல்லும். அப்படிச்சென்றால், இவனடியிலே அன்புண்டாகும். கலந்துள்ளதாகிய உடலுக்கும் உயிருக்குமுள்ளவேறுபாடுந் தெரியவரும். அதன்பிறகு, விஷம்பொருந்திய நீலகண்டத்தையுடைய சிவபெருமானே அழியாப்பரம்பொருளென்னுஞ் சித்தமுண்டாகும். எ - று. (௯௬)

திருக்கோயி னியமமரன் பணிவிடையிற் சிந்தைசெலுந் தேசிகன்ற,
னருட்கூர வேண்டுமெனுங் கருத்துண்டாந் தொண்டரிடத்தன்பு முண்,
டா, முருத்திரவக் கம்பூதி யஞ்செழுத்தை யிடைமறத்தற் குள்ள மோ
ரா, திருக்குமர னருச்சனைபெற் றந்நிலையா சாரத்தி னிருக்கவேண்டும்.

(இ - ள்.) திருக்கோயில் நியமம், சிவபணிவிடையில் மனஞ்செல்லுகின்ற ஆசாரியனுடைய திருவருளை மிகுதியும் பெறவேண்டுமென்னுங் கருத்துண்டாகும். அடியார்களிடத்தில் அன்பும் உளதாகும், உருத்திராக்கம் திருவெண்ணீறு பஞ்சாக்கரத்தை நடுவே மறப்பதற்கு மனமிணங்காது. விளங்குஞ் சிவார்ச்சனையை யெய்தி அந்நிலையிலேயே யாசாரத்தோடு இருக்கவேண்டும். எ - று. (௯௭)

எப்பரிசப் பரிசரன்பா லுளமிருத்தி யிந்நெறிக்க ணியலா நிற்போ
னொப்பரிய பாசநீத் தொழிந்தசிவ ஞானியவ னுலகோ ரேத்திச்
செப்பியருச் சிப்பதற்கு முரியனவன் சிவகதியிற் செல்லா நிற்போ
னிப்புவனத் தவற்கனமீந் திடிற்சிவனுக் கற்புதமா யிருக்கு மன்றே.

(இ - ள்.) எத்தன்மையெனினும், அத்தன்மையாகச் சிவபெருமானிடத்தில் மனதையிருத்தி இவ்வழியில் நடப்பவன், ஒப்பிடுதற்கரிய பாசத்தை யகற்றியொழிந்த சிவஞானியாவான். அவனே உலகினர் துதிசெய்து புகழ்ந்து பூசிப்பதற்கும் உரியவன், அவனே சிவகதியிற் செல்லுபவன். இவ்வுலகத்திலே அத்தகைய சிவஞானிக்கு அன்னமளித்தால், சிவபெருமானுக்கு ஆனந்தமாகவிருக்கும். எ - று. (௯௮)

அன்னவனை நிந்திப்ப தரனைநிந் திப்பதவன் றன்னை வாழ்த்தன்,
முன்னவனை வாழ்த்துவதா மவனருட்கண் ணோக்கடைந்தார் முத்த
ராவ, ரென்னிலர னருச்சனையே செயவேண்டு மிவன்பெறுதற் கரிய
வில்லை, சொன்னதுசத் தியமென்றான் கேட்டமுனி வரர்சடிலந் துளக்
கிச் சொல்வார்.

(இ - ள்.) அவ்வகைச் சிவஞானியை நிந்திப்பது சிவபெருமானை நிந்திப்பதாம். வாழ்த்துவது சிவபெருமானை வாழ்த்துவதாம். அவன் கிருபாநோக்கமெய்தியவர்கள் ஜீவன்முத்தராவார்கள் என்று சொன்னால், சிவார்ச்சனையே செய்யவேண்டும். இவன் அடைதற்கரியவை யில்லை. சொல்லியவையெல்லாஞ் சத்தியமென்று சூதமுனிவர்கூறினர். கேட்டிருந்த நைமிசாரணிய முனிவர்கள் சிரமசைத்துச் சொல்வார்கள். எ - று. (௯௯)

தீட்டரிய பழமறைநான் கனைத்துணர்ந்து புராணமுற்றுந் தெளிந்தோய் சொல்லக், கேட்டுணர்ந்தோம் பசுபாச நிலையிந்தப் பாசத்தாற் கிளையா நின்ற, மோட்டறிவு நீத்தொழியா முத்திதரும் பதிநிலைமை மொழிதி யென்றார், நீட்டுநெடுங் கொடிச்சடில மாதவர்க்குச் சூதனது நிகழ்த்த லுற்றான்.

(இ - ள்.) எழுதுதற்கரிய பழமையாகிய நான்குவேதங்களையுங் கற்றுப் புராணங்களையெல்லாந் தெளிந்த சூதமுனிவரே! பசுநிலை பாசநிலை யிவற்றைத் தேவரீர் சொல்லக்கேட்டறிந்தோம். இந்தப்பாசத்தினாலே கிளைக்கின்ற பெருமைதங்கிய அறிவு நீங்கி, அகலாமல் முத்திதரத்தக்க பதிநிலைமையைச் சொல்வீராகவென்றார்கள். நீட்டியநெடிய கொடிபோன்ற சடையையுடைய பெருந்தவஞ்செய்தவர்க்குச் சூதமுனிவர் அதனைச்சொல்வதானார். எ - று. (௪௦)

கண்ணாலுங் கருத்தாலு மெம்மனோ ரரிபிரமர் கருதி நோக்கு [முண்டா
மெண்ணாலும் புலப்படா வொருபொருளுண் டப்பொருண்மற் றெங்கு
னண்ணாது நண்ணிநிறைந் தெப்பொருட்கு மேலாகி நவையின் மேலோ
ருண்ணாடித் தெளிந்தறியிற் பரஞான ரூபத்தி னுண்மை யாமால்.

(இ - ள்.) எம்மையொத்தோர்களுடைய கண்ணாலுங் கருத்தாலும், அரிபிரமாதிகள் எண்ணிப்பார்க்கும் ஞானநோக்காலும் புலப்படாத ஒரு பரம்பொருளுண்டு. அப்பொருளோ எல்லாவிடத்தும் உள்ளதாம். எதனுள்ளும் பொருந்தாது பொருந்திப் பூரணமாகி, எல்லாப்பொருள்கட்கும்மேலாகி, குற்றமில்லாத மேலோர் உள்ளத்தால் நாடித்தெளிந் துணர்ந்தால், அப்பரஞானரூபத்தின் உண்மையுண்டாகும். எ - று. (௪௧)

அந்தரபூ ரணமாகிச் சோதிமய மாயிருக்கு மான்மா வுக்குப்
பந்தமறுத் தருள்புரியு மாணவமற் றதற்கில்லை பகரினீது
வந்தனைநிட் களமென்ப ரரிபிரம னுருத்திரன்மகேச னென்னு
மிந்தநால் வரைச்சகள மென்பர்சதா சிவஞ்சகளா களமென் பாரால்.

(இ - ள்.) அந்தரபூரணமாகியும் சோதிமயமாகியும் விளங்கும் ஆன்மாவுக்குப் பந்தமோசனஞ்செய்து அநுக்கிரகிக்கும் ஆணவமென்பது அவ்வான்மாவுக்குக் கிடையாது. சொல்லுமிடத்தில் இதனை வந்திக்கத்தக்க நிஷ்களமென்பார்கள். திருமால் பிரமன் உருத்திரன் மகேசனென்னும் இந்த நால்வரைச் சகள மென்பார்கள். சதாசிவத்தைச் சகளநிஷ்கள மென்பார்கள். எ - று. (௪௨)

இத்தகைய வைந்துமுல கிலகிக்க மகாசதா சிவத்திற் றோன்று
முய்த்தசா தாக்கியங்க ளைந்துமந்தப் பொருளிடத்து முதித்த வாகுஞ்
சுத்தவீ சானாதி யைந்துபிர மத்தோடு மிதய மாதி
வைத்தமூ வீரங்கத் தொடுமிருப்ப ததுவதனை வகுக்க லாமே.

(இ - ள்.) இவ்வகைத்தாகிய ஐந்தும் உலகமானது இலயமெய்துகையில் மகாசதாசிவத்தினின்றுதிக்கும். செலுத்திய ஐவகைச் சாதாக்கியங்களும் அந்தச் சதாசிவப் பொருளினின்றுந் தோன்றியனவாம். புனிதமாகிய ஈசானாதிபஞ்சப் பிரமத்துடன் இதயமுதலாகப் பொருந்திய ஆறங்கங்களோடு மிருப்பது அதுவாம். அதனைவகுத்துச்சொல்லுவாம். எ - று. (௪௩)

தீதறுமப் பொருளினைச்ச தாசிவம கா சதா சிவமென் றோது
மோதருமகேச்சுரத்தி னையைந்து மூர்த்தியுதித் துளவா மந்த
வாதிமகேச் சுரனைந்து தொழிலுக்குங் கருத்தனவ னன்றி யுள்ள
பேதமலப் படுமான் மாக் களையெல்லாம் பசுக்களென்று பேச லாமே.

(இ - ள்.) குற்றமற்ற அப்பொருளைச் சதாசிவம் மகாசதாசிவமென்றுசொல்லப்படும். சொல்லுதற்கரிய மகேச்சுரத்தினின்றும் இருபத்தைந்து மூர்த்திகள் உதித்துள்ளார்கள். அந்தமுதல்வனாகிய மகேச்சுரனே பஞ்சகிருத்தியங்களுக்குங் கருத்தாவாவான். அவ்விறைவனல்லாமலுள்ள பேதமாகிய மலசம்பந்தப்பட்ட ஆன்மாக்களெல்லாவற்றையும் பசுக்களென்று சொல்லுவதாகும். எ-று. (௪௪)

விளம்புமிந்தப் பசுக்கடமைப் பாசத்தாற் கட்டியருள் விளையாட்
டாடு, மளந்தறியி னப்பசுவுக் கனுக்கிரகித் தருள்புரியுமந்த வீச, னுள
ந்தெரிச தாசிவத்தை மகாசதா சிவத்தையொழித் திடையே நின்று, கள
ங்கறுத்தமகேச்சுரனேபொருளென்பதென்னையெனிற்கழறக்கேண்மின்.

(இ - ள்.) அளவுபடுத்தி அறியுமிடத்தில் அந்தமகேச்சுரனே, சொல்லிய விந்தப்பசுக்களையெல்லாம் பாசபந்தத்தால்வீக்கி அருட்டிரு விளையாடலைச் செய்யாநிற்பன். அந்தப்பசுக்களுக்கு அநுக்கிரகஞ்செய்யத்தக்க காலத்திலே அருள் புரிவான். மனதால் அறியத்தக்க சதாசிவத்தையும் மகாசதாசிவத்தையும் விலக்கி நடுவேயிருந்து நீலகண்டத்தையுடைய மகேச்சுரனையே பொருளென்று சொல்லுவது யாதுகாரணமெனில் அதனைச் சொல்லக்கேட்பீர்களாக. எ- று. (௪௫)

நிட்களமென் றுரைப்பர்மகா சதாசிவத்தைச் சகளநிட் களமென்
றோதி, யுட்கருதி யுரைப்பர்சதா சிவத்தைமகேச் சுரஞ்சகள மென்ப
ருண்மை, பெட்புறுமுப் பொருட்குமொரு பேதமிலை யவையுணர்ந்து
பிரித்துச் சொற்றே, நட்புறுமா தவத்தலைவீ ராங்கவைக ளொருபேத
நடத்தற் பாற்றோ.

(இ - ள்.) மகா சதாசிவத்தை நிட்களமென்று சொல்லுவார்கள். சதாசிவத்தைச் சகள நிட்களமெனக்கூறி மனதிற் றியானித் திரைப்பார்கள். மகேச்சுரத்தைச் சகளமென்பார்கள். உண்மைத்தன்மைபொருந்திய அம்முப் பொருள்களுக்கும் ஒரு பேதமுங் கிடையாது. அவற்றையறிந்து பிரிவுபடுத்திக் கூறினேம். அன்புபொருந்திய பெருந்தவத்தலைவர்களே! அவைகள் ஒருபேதமாக நடக்குந் தன்மையவோ? எ - று. (௪௬)

எடுத்துரைக்கு மகேச்சுரனு மியலாத தொன்றில்லை யெவைக்கு
மேலாய்ப், படுத்தசத்தி யொடுமிருப்ப னினைத்தவையெல் லாமுடிக்
கும் பரம னன்றேனு, றெடுத்தறிதற் கரியவனப் பொருளறிந்தோன்
பாசத்தின் றொடர்பை நீக்கி, விடுத்துமுத்தி யடைவனினிச் சரியைமுத
னான்குதரு மேன்மை கேண்மின்.

(இ - ள்.) எடுத்துச் சொல்லிய மகேச்சுரனால் முடியாதகரும மொன்று மில்லை. எல்லாவற்றிற்கும் மேலாகிவிளங்கிய சத்தியோடும் வீற்றிருப்பன். கருதியவற்றையெல்லாம் நிறைவேற்றும் மேலானவன். அவனே ஆலோசித்துணர்தற்கு அருமையானவன். அந்தப்பொருளை யுணர்ந்தவன் பாசபந்தத்தை யகற்றிக் கொண்டு சீவன்முத்தியெய்துவான். இனி, சரியைமுதலியநான்குங் கொடுக்கத்தக்க மேன்மைகளைக் கேட்பீர்களாக. எ - று. (௪௭)

முந்துரைத்த சரியையோன் சிவலோகம்பெறுங்கிரியை முயன்றோ
ன்மற்றை, யெந்தைசாமீபம்பெற் றிருக்குமியோ கத்தடைந்தோன்சாரூ
பத்தை, வந்தடைவன் சிவஞானி சாயுச்சி யம்பெறுவன் மறைவல்லோர்
கள், சிந்தைதெரிந் திடுஞான மேமுத்தி தருவதுண்மை செப்புங்காலே.

(இ - ள்.) முதலிற்கூறிய சரியையிலிருப்போன் சிவலோகத்தை யெய்து வான். கிரியையிற் பழகினோன் எமதுதந்தையாகிய சிவபெருமானுடைய சாமீபத்தையடைந்திருப்பான். யோகநிலையெய்தியவன் சிவசாரூபத்தைப் பொருந்துவான். சிவஞானியாயுள்ளவன் சாயுச்சிய முத்தியடைவான். சொல்லுமிடத்தில் வேதத்தில் வல்லவர்கள் மனதாலுணர்ந்த சிவஞானமே மோக்ஷத்தைக் கொடுப்பதுண்மை. எ - று. (௪௮)

பரமஞா னந்தெரித்தற் கரிதரிதப் பரமஞா னத்தா லான்மா
விரவுமா யையைத்துரக்க லாம்பலவாங் கலையனைத்தும் விரித்துக் கற்று
முரவுநான் மறையுணர்ந்தும் புராணசாத்திரங்களாகமங்களோர்ந்துங்
கரவுதரு பதிபசுபா சத்தையறிந் தவர்க்கல்லாற் கதியுண் டாமே.

(இ - ள்.) பரமஞானமானது எடுத்துச்சொல்லுதற்கரியது அரியது. அந்த மேலான ஞானத்தினாலேயே ஆன்மாவானது பொருந்திய மாயையைத் துரந்துவிடலாகும்: பலவகைத்தாகிய கலைகளையெல்லாம் விரித்துணர்ந்தும் நான்குவேதங்களை யறிந்தும் புராணங்கள் சாத்திரங்கள் ஆகமங்களையெல்லாங் கற்றும் மறைபொருளாகிய பதிபசு பாசங்களை யுணர்ந்தவர்கட்கேயல்லாமல் ஏனையோர்க்கு மோட்சமுண்டாகுமோ? எ - று. (௪௯)

மோனத்தா லருந்தவங்க ளியற்றுமுனி வரர்காளம் முதல்வன் றன்னை
ஞானத்தா லலதுணரப் படுமோவிஞ் ஞானமகத் திருப்ப நன்றென்
றேனைப்பா சத்திலகப் பட்டுமயங் குறுவரிஃ தொழிந்து ஞானத்
தானத்தா னிற்பர்நல்லோ ரவரடியை யருச்சிக்கத் தகுவ தாமே.

(இ - ள்.) மவுனநிலைமையால் அருந்தவங்கள்புரிந்த முனிவர்களே! அவ்விறைவனை ஞானமார்க்கத்தாலல்லாமல் அறியப்படுமோ? விஞ்ஞானமானது மனத்திலிருப்பவும், ஏனையபாசங்களில் நன்றென்று அகப்பட்டு மயங்குவார்கள். இதனை யகற்றி ஞானத்தானத்திலே நல்லோர் நிற்பார்கள். அத்தகையினர் பாதங்களை அறிவுடையோர் பூசிக்கத்தகும். எ - று. (௫௦)

சரியையாதி மான்மியச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௩௧-க்குத் திருவிருத்தம்-௪௨௧௧.

நாற்பதாவது

மூர்த்திவிசேடச் சருக்கம்.

கலிவிருத்தம்.

அருந்தவத் தலைவிர்கா ளையைந் தாகிலை
தருங்குண மூர்த்தியின் றன்மை பேசுவா
மொருங்குணர்ந் துளமொருப் படுத்திக் கேட்கெனப்
பெருங்குணத் தருந்தவச் சூதன் பேசுவான்.

(இ - ள்.) அரியதவச்செயலுடைய தலைவர்களே! இருபத்தைந்து நிலைமையாகிய மூர்த்தியின் தன்மைகளைச்சொல்வோம், நன்குணர்ந்து மனவொருமைப்பாட்டுடன் கேட்பீர்களாகவென்று பெருமைதங்கிய குணத்தையும் அரியதவத்தையுமுடைய சூதமுனிவர் சொல்வாராயினர். எ - று. (௧)

அத்திறத் தோதிய தையைந் தாந்திறத்
தொத்துநின் றியல்வது கயிலை யோங்கலின்
முத்தரோங் கியசிவ கதியின் மொய்புன
றத்துமா கயிலையிற் சரிப்ப தாகுமால்.

(இ - ள்.) அவ்வகையாகக்கூறியது இருபத்தைந்து மூர்த்தங்களாம். அவை வல்லபத்தில் ஒருபடித்தாக நின்றுவிளங்குவது, திருக்கைலாயகிரியின் சீவன் முத்தர்கள் மேம்பட்டுள்ள சிவபதவியில், நெருங்கிய நீரலம்புகின்ற பெரியகைலாயத்தில் சஞ்சரிப்பதாகும். எ - று. (௨)

ஆதிநா யகன்றிரு வருளி னப்பொருள்
பேதமின் மகேச்சுரப் பிரிவிற் றோன்றிய
சோதநீ ருலகிலா ருயிருண் டாக்குவா
னேதமில் குணத்தர னிலிங்க மாயினான்.

(இ - ள்.) முதற்கடவுளாகிய சிவபெருமான் திருவருளினால் அப்பொருளானது பேதமில்லாத மகேசுவரப்பிரிவினாற்றோன்றிய குளிர்ச்சிதங்கிய கடல்சூழ்ந்த பூமியில், பொருந்திய உயிர்களைப்படைக்கும்படி, குற்றமில்லாத குணத்தோடு சிவபெருமான் சிவலிங்கமூர்த்தியாயினர். எ - று. (௩)

முக்கணா னிலிங்கமா மூர்த்தி யாதலி
னக்குறி யுயிர்த்தொகை யனைத்து மெய்தின
வொக்கநோக் காவிடை யாளை யொண்டொடி
மைக்குழன் மடந்தையர் வதியப் பெற்றனர்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான்சிறந்த இலிங்கமூர்த்தியானபடியால், உயிர்த்தொகுதிகள்யாவும் அக்குறியையடைந்தன. அதுபோலவே ஒளிதங்கியவளையலையணிந்த கரியகூந்தலையுடைய மாதர்கள் ஆவுடையாளை எய்தப்பெற்றார்கள். எ - று. (௪)

ஆதலா னுயிர்த்தொகைக் கருளு மத்தனுந்
தீதறு மன்னையுஞ் சிவனுந் தேவியு
மாதல முயிர்த்தொகை வகுக்க வேண்டியே
யோதரு மிலிங்கத்தி னுருவ மாயினன்.

(இ - ள்.) ஆனபடியால் ஆன்மகோடிகளுக்கு அநுக்கிரகிக்குந் தந்தையும் குற்றமற்றதாயுமாகிய சிவபெருமானும் உமாதேவியுடன், பெரிய உலகிலுள்ள பிராணகோடிகளைச் சிருட்டிக்கவிரும்பியே சொல்லுதற்கரிய இலிங்கத்தின்வடிவமாயினர். எ - று. (கு)

முந்திய மூர்த்தமீ தடுத்த மூர்த்தமோர்
சுந்தர வுருவமாய்ச் சுகாச னத்ததாய்
யெந்தைநா யகனெனும் பெயர தாயிக
லுந்திய மழுப்படை யுழையுந் தாங்குமால்.

(இ - ள்.) இதுவே முற்பட்டமூர்த்தம். இதனையடுத்த மூர்த்தமாவது - ஒப்பற்ற சுந்தரரூபமாய்ச் சுகாசனத்திலுற்றதாய் எமது தந்தையாகிய சுகாசனமூர்த்தியென்னும்பெயருடையதாய், பகைமையை நீக்கிய மழுவாயுதத்தையும் மானையுமேற்று நிற்கும். எ - று. (சு)

அப்பரி சிருத்தலா லுயிர்கள் யாவையுஞ்
செப்பரு மிளமையிற் சிலைக்கை மாரனால்
வெப்பெழு விகாரமுற் றிருந்த மெய்த்தவத்
தொப்பரு முனிவிரீ துபய மூர்த்தமே.

(இ - ள்.) அவ்வகையாக விளங்குதலால் ஆன்மாக்களெல்லாம் சொல்லுதற்கரிய இளமைப்பருவத்தில் வில்லேந்தியகையையுடைய மன்மதனாற் கொடுமையாகிய காமவிகாரமெய்தியிருந்தன. உண்மைத் தவத்தினால் ஒப்புகூறற்கரிய முனிவர்களே! இது இரண்டாவது மூர்த்தம். எ - று. (எ)

மூன்றெனப் படுதனி மூர்த்தி யம்பிகை
யேன்றுறத் திருவுளத் தெண்ண லானிலந்
தோன்றிய வுயிர்த்தொகை தொடுத்த காமத்தி
னூன்றிய விருப்பினொ லொருத்தி வேண்டின.

(இ - ள்.) மூன்றாவதென்றுசொல்லப்பட்ட ஒப்பற்ற உமேசமூர்த்தி, உமாபிராட்டியாரை வாமபாகத்திற்பொருந்தும்படி திருவுள்ளத்திற் கருதியதால், உலகிற்றோன்றிய உயிர்த்தொகைகள், உண்டாகிய காமவேட்கையால் மாதர்களை விரும்புவனவாயின எ - று. (அ)

நாலெனப் படுவது நம்ப னம்பிகை
வால்வளைக் கரந்தொடு வதுவை வேண்டலாற்
பால்படு முயிர்த்தொகை வதுவைப் பண்பொடுங்
கோல்வளைக் கரந்தொடக் குறித்து நின்றதால்.

(இ - ள்.) நான்காவதென்று சொல்லப்படுவது சிவபெருமான் உமாதேவியின் தெள்ளியவளையலணிந்த திருக்கரத்தைப்பற்றித் திருக்கலியாணஞ்செய்ய விரும்பிய உமேசமாகையால், பகும்புக்களையுடைய உயிர்த்தொகைகள் கலியாணத்தன்மையோடும் அழகியவளையணிந்த மாதர்கையைப்பற்றக்கருதி நின்றன.

ஐந்தெனப் படுவதம் பிகையின் றன்மணச்
சுந்தரக் கோலங்கொண் டிருந்த தோற்றத்தான்
மைந்தரு மாதரும் வதுவை முற்றியே
தந்தமி லுவகைபெற் றிருக்கத் தந்ததே.

(இ - ள்.) ஐந்தாவதென்றுசொல்லப்படுவது உமாதேவியாரின் திருக்கலியாணசுந்தரகோலத்தைக்கொண்டிருந்த காட்சியினாலே ஆடவரும் மகளிருந் திருக்கலியாணச்சடங்குமுடித்துத் தங்கடங்களிற் சந்தோஷமெய் தியிருக்கத்தக்கதாயிற்று. எ - று. (௧0)

ஆறெனப் படுவதி மாச லத்தியை
வேறுறா துருவொடுங் கலந்த மெய்மையா
லூறிய கலையெலா முணர்ந்து மன்பதை
நாறுபூங் குழலொடு நயக்க வேண்டிற்றே.

(இ - ள்) ஆறுவதென்றுசொல்லப்படுவது, இமாசலகுமாரியாகிய உமாதேவியைவேறுபடாமல் தமது திருவுருவோடும் அர்த்த நாரீசமாகக்கலந்த வுண்மையினாலே, அதிகரிக்கின்ற கலைஞானங்களையெல்லாந் தெரிந்திருந்தும் மாந்தர்கள், மணம்பொருந்திய அழகிய கூந்தலையுடைய மங்கையருடன் விரும்பவேண்டியதாயிற்று. எ - று. (௧௧)

ஏழெனப் படுவது குமர னெம்பிரான்
றாழ்குழ லுமையொடுந் தணப்பு றாமையால்
வாழிய நெடுநிலம் பிறந்த மன்பதை
யூழ்முறைத் தநயரோ டுவகை யுற்றதே.

(இ - ள்) ஏழாவதென்றுசொல்லப்படுவது எமது சிவபெருமான் ஸ்கந்தரையும் தொங்குகின்ற கூந்தலையுடைய உமாதேவியையும் பிரியாது சோமாஸ் கந்தராகவிளங்குதலால், பெரிய நிலவுலகத்திற்பிறந்த மாந்தர்கள் ஊழ்வினை வசத்தாற் புதல்வரோடுகளிப்புறுவாராயினர். எ - று. (௧௨)

எட்டெனப் படுமுரு விறைவன் பாலிள
மட்டவார் துளவினோன் றிகிரி வாங்கிமேம்
பட்டெழு திதிமுறை பரிப்பப் பண்டையோர்
தொட்டநீ ருலகெலாம் போந்து தய்ப்பவே.

(இ - ள்.) எட்டாவதென்றுசொல்லப்படுஞ் சக்கிரதானமூர்த்தம், சிவபெருமானிடத்தில், இளமைதங்கிய மணமமைந்த நெடிய துளசிமாலைதரித்ததிருமால் சுதரிசனமென்னுஞ் சக்கிராயுதத்தைப்பெற்று மேம்பட்டுள்ள காத்தற்றொழிலை முறைப்படி தாங்குதலால், முன்னோர்[சகரர்] தோண்டியகடல்சூழ்ந்த உலகமுழுவதும் தோன்றிப்புசிக்கின்றன. எ - று. (௧௩)

ஒன்பதென் றுரைப்பதெம் மொருத னிப்பொரு
ளன்பொடு மூவுரு வெடுப்ப வாருயிர்
துன்புறு மாயமத் தூல சூக்கும
மென்பன முச்சட மெடுக்க வேண்டின.

(இ - ள்) ஒன்பதாவதென்றுசொல்லப்படுவது எமது ஒன்றியாகிய ஒப்பற்ற பரம்பொருளானது அன்புடன் திரிமூர்த்தவடிவம். அவ்வடிவெடுத்தலால் அரியு

வுயிர்கள் துன்பம்பொருந்திய மாயவுடல் தூலசரீரம் சூக்குமசரீரமென்னும் முச்சரீரங்களெடுக்கவேண்டிவந்தன. எ - று. (௧௪)

பத்தெனப் படுவதப் பரம நாயகன்
முத்தரிற் றெக்கிணா மூர்த்த மாயவர்க்
கொத்துநின் றுண்மைசொற் றுறுத லாருயி
ரித்தலைக் குருமுகத் திறைஞ்சிக் கேட்கவே.

(இ - ள்.) பத்தாவதென்றுசொல்லப்படுவது அம்மேலாகிய சிவபெருமான் சீவன்முத்தர்போலத் தக்ஷிணாமூர்த்தமாகி, அவர்கட்குச் சமானமாயிருந்து சத்தியப்பொருளை உபதேசித்தபடியால், அரியமாந்தர்கள் இவ்வுலகத்திற் குருமுகத்திலே வணங்கி உபதேசங்கேட்கக்கடவராயினர். எ - று (௧௫)

அம்பணி வேணிபிச் சாட னப்பெயர்
நம்பனு யந்தர நாத னுதலா
லெம்பிரான் ஞானநா யகனென் றிவ்வுயி
ரும்பரு முணர்வர்பன் னொன்றி னென்பரால்.

(இ - ள்) பதினொன்றாவதில், கங்காசலத்தையணிந்த சடையையுடைய சிவபெருமான் பிக்ஷாடனப்பெயர்மூர்த்தியாகி அந்தரநாதனாராயினமையால், எமது சிவபெருமானே ஞானநாயகனென்று இவ்வுலகிலுள்ள வுயிர்களுந் தேவர்களும் தெரிவார்கள் எ - று. (௧௬)

பன்னிரண் டாவதப பால லோசனன்
கன்னிகை யொழிந்துகங் காள னுதலாற்
றென்னிலத் தியோகியர் தூநி லாச்சிறை
யன்னமன் னவரிடத் தாசை நீத்ததே.

(இ - ள்.) பன்னிரண்டாவது நெற்றிக்கண்ணையுடைய அந்தச் சிவபெருமான் உமாதேவியை விலக்கி (வாமனன்முதுகந்தண்டையேந்திய) கங்காளமூர்த்தியானபடியால், பெரியபூமியில் யோகிகள் புனிதமானவெள்ளிய சிறையையுடைய அன்னம்போன்ற மங்கையரிடத்தில் ஆசையகன்றதாம். எ - று. (௧௭)

மூன்றுபத் தாவது முக்க ணனிக
லேன்றெழு மாரனை யெரிக்க வற்றைநாட்
டோன்றுரு வெடுத்தலாற் றொன்னி லத்தவ
ரான்றெழு காமத்தீ யவிக்கப் பெற்றதே.

(இ - ள்.) பதின்மூன்றாவது சிவபெருமான், பகைமைகொண்டெழுந்தமன்மதனை யெரிக்கும்படி அக்காலத்திற் றோன்றிய காமசங்காரமூர்த்தியுருவகித்தவால், பழயபூமியிலுள்ளவர்கள், அதிகரித்தெழுந்தகாமாக்கினியை யடக்கப்பெற்றார்கள். எ - று. (௧௮)

ஈரெழு தொகுதிமற் றீச னந்தகன்
போர்செகுத் துறவெனப் பொருந்து மூர்த்தத்தாற்
பார்மிசைப் பக்குவ மடைந்த மேலவ
ரோர்சிறி தவன்பய மொழிய நிற்பதே.

(இ - ள்.) பதினான்காவது சிவபெருமான் இயமனைப்போரிற் செயித்துக் கொன்றுவருகவென்றுபொருந்திய காலாரி மூர்த்தத்தால், உலகத்திற் பரிபக்குவ மெய்திய மேலோர் அவ்வந்தகன் பயத்தினின்றும் ஒரு சிறிது நீங்கப்பெற்று நிற்பதாம். எ - று. (௧௯)

ஐந்துமூன் றென்பதென் னீச னூரமர்
தந்தெதி ரெழுசலந் தரனை மாய்த்தலான்
முந்தைநான் மறைத்தவர் முனிவு நீத்துநற்
சிந்தையி னருந்தவஞ் செய்து நிற்பரால்.

(இ - ள்.) பதினைந்தாவது மூர்த்தமாவது எனது சிவபெருமான் போர்புரிந்து எதிர்த்தெழுந்த சலந்தராசுரனைக்கொன்ற சலந்தராரிமூர்த்தம். அதனாலே பழமையாகிய நான்கு வேதங்களையுணர்ந்ததவசிகள் கோபநீக்கி நற்கருத்துடனே அரிய தவத்தைச்செய்துகொண்டிருப்பார்கள். எ - று. (௨௦)

எண்ணிரண் டாகுவ தெந்தை யெம்பிரான்
றிண்ணெடு முப்புரஞ் செகுத்த தோற்றத்தா
னண்ணரு நிமலமாய் நானி லத்துள
புண்ணியத் தவர்குணத் திரயம் போனதே.

(இ - ள்.) பதினாறுவது எமதுதந்தையாகிய சிவபெருமான் வலிதங்கியநெடிய முப்புரங்களையெரித்த திரிபுரசம்மாரமூர்த்தமாம். அதனால் அடைதற்கரிய மலரகிதராய் உலகின் கண்வசிக்கும் புண்ணியசொரூபிகள் முக்குணங்களும் நீங்கப்பெற்றதாம். எ - று. (௨௧)

சொற்றிடப் படுபதி னேழிற் றொல்லையோன்
செற்றமுற் றெழுநர சிங்க மாய்ப்பதற்
குற்றதோர் சரபமா யுதிப்ப மேலவர்
பெற்றபா சங்களைந் தொழிக்கப் பெற்றனர்.

(இ - ள்.) சொல்லப்பட்ட பதினேழிலே, பழையோனாகிய சிவபெருமான், (இரணியன்மீது) கோபங்கொண்டெழுந்த நரசிங்கத்தைச் சங்கரிப்பதற்குப்பொருந்திய ஒப்பற்ற சரபமூர்த்தியாகத்தோன்ற, மேன்மைக்குணமுடையோர் தமக்குற்ற பாசங்களைக்களைந்து நீக்கப்பெற்றார்கள். எ - று. (௨௨)

ஒன்பதிற் றிரட்டியி னுமையொர் பாகத்தான்
றுன்புறத் தருவிட நுகர்ந்த தோற்றத்தா
லின்புறு மருந்தவ மியற்றித் தொன்னில
மன்பதை யாணவ மலத்தை நீத்ததே.

(இ - ள்.) பதினெட்டில் உமாதேவியை ஒருபாகமாகவுடைய சிவபெருமான், (உலகமானது) துன்பமெய்தும்படி (திருப்பாற்கடல்) தந்தவிஷத்தை ஆபோசனஞ்செய்த நீலகண்டமூர்த்தத்தால், பழயபூமியிலுள்ளமாந்தர்கள் இன்பம்பொருந்திய அருந்தவஞ்செய்து ஆணவமலத்தை நீக்கியதாம். எ - று. (௨௩)

ஒன்றொழி யிருபஃ தரைப்பிற் றேனுலாங்
கொன்றையோ னிருதலை மூன்று காலொடு
வன்றிறன் மருப்புநான் கெழுகை வாய்ந்தரு
ளன்புறு பிரம மேழென்ப தாயினன்.

(இ - ள்.) பத்தொன்பதாவது, மூர்த்தத்தைச்சொன்னால், தேன்பொருந்தியகொன்றைமாலையணிந்த சிவபெருமான், இருசிரங்களும் மூன்றுகால்களும் வலியவெற்றிதங்கிய நான்குகொம்புகளும் ஏழுகைகளும்பொருந்தி அருள்புரிகின்ற அன்புதங்கிய சப்தப்பிரமமென்னுமூர்த்தியாயினர். எ - று. (உச)

ஆதலா லுயிர்த்தொகை யனைத்து மவ்வழி
தீதறு கிரியையுந் தெளிந்த ஞானமு
மூதறி வுடனடைந் தடங்க முந்தையோன்
வேதநூற் கைலையின் விளங்கப் பெற்றதே.

(இ - ள்.) ஆனபடியால் ஆன்மகோடிகளெல்லாம் அவ்வகையாகக்குற்றமற்ற கிரியையும் தெளிவுற்றஞானமும் மூதறிவோடுபெற்று அடங்கும்படி ஆதிநாயகனாகிய சிவபெருமானுடைய வேதநூன்முழக்குடைய திருக்கைலையில் விளக்கமெய்தியது. எ - று. (உரு)

இருபஃ தெனப்பட லெம்மை யாளுடை
யொருவனத் தருமத்தி னுருவ மாதலாற்
றருமமே யருங்கதி தருவ தாமெனக்
கருதியிவ் வுயிர்க்கெலாங் கருத்து ளூற்றதே.

(இ - ள்.) இருபதாவதென்று சொல்லப்படுவது, எம்மையடிமையாகவுடைய ஒப்பற்ற சிவபெருமான் அத்தருமத்தின்சொரூபமானபடியால், தருமமே யடைதற்கரிய முத்தியைக்கொடுப்பதாமென்றுகருதி இவ்வுயிர்கட்கெல்லாம் மனத்திற்பொருந்தியது. எ - று. (உசு)

மூவெழு தொகுதியின் முக்க ணாயக
னோவரு வயிரவத் துருவ மாதலான்
மேவரு மிருநிலப் புனித மேலவர்
தாவருந் துறவராய்த் தணந்து நீத்தனர்.

(இ - ள்.) இருபத்தொன்றில், திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் கெடுதலற்றவைரவமூர்த்தமானபடியால், அடைதற்கரியபெரியபூமியிலுள்ளபரிசுத்தமானமேலோர்கள், பெறுதற்கரியதுறவிகளாய் (உலகவின்பங்களை) விட்டுநீங்கினர்கள். எ - று. (உஎ)

பத்திரண் டேற்றிடு மிரண்டிற் பண்ணவன்
றத்துவெள் விடையிருந் தருளுந் தன்மையான்
மொய்த்தெழு பஃறிரை மூரி நீரிடை
யித்தலத் துயிரெலா மின்பம் பெற்றதே.

(இ - ள்.) இருபத்திரண்டில், சிவபெருமான் தாவிச்செல்லும் வெள்ளிய இடபத்தின்மீதெழுந்தருளியிருக்கும் (ருஷபாரூட) மூர்த்தத்தால், நெருங்கியெழுகின்றபல அலைகளையுடையவலிய சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில் உயிர்கள் யாவும் சுகமெய்தின. எ - று. (உஅ)

மும்மைசா லிருபஃ திமைப்பின் முக்கணான்
வெம்மைதீர் பிறையணி வேடத் தானுயிர்
தம்முடைப் பிறப்பிறப் பொழிந்து சார்வருஞ்
செம்மைசா லருங்கதி செல்ல நிற்பதே.

(இ - ள்.) இருபத்துமூன்றாவது, இமைத்தலில்லாத திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான், வெப்பமொழிந்த பிறைச்சந்திரனைச்சூடிய (சந்திரசேகர) மூர்த்தத்தால், ஆன்மாக்களுடையபிறப்பும் இறப்புநீங்கி, அடைதற்கரியசெம்மைமிகுந்தமேலானமுத்தியை, அடைய நிற்பதாம். எ - று. (௨௯)

ஆறுநான் கெனப்படு மதனி லைம்முகன்
சீறுமஞ் ஞானத்துச் சிவந்த தாளுறுத்
தூறுமா னந்தமா நடமு ஞற்றலாற்
சீறரு மூவகையி னுலகஞ் செல்வதே.

(இ - ள்.) இருபத்துநான்கென்றுசொல்லப்படுவதில், ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமான், கோபிக்கின்ற அஞ்ஞானத்திலே தமது செவ்வியதிருவடியையூன்றி ஆனந்தம்பெருகுகின்ற சிறந்ததிருநடனம்புரிதலால், நீக்கற்கரிய சந்தோஷத்தோடு உலககிருத்தியங்கள் நிகழும். எ - று. (௩0)

உரைக்குமை யைந்தரு ளுடைய நாயகன்
றிரைக்குநீர்க் கங்கையைச் செறிக்குந் தோற்றத்தாற்
றரைப்படு முயிர்த்தொகை தமது சிந்தையைக்
கரைக்குமா னந்தமா கடலி னாழ்வதே.

(இ - ள்.) சொல்லுகின்ற இருபத்தைந்தில், காருண்ணியத்திருமேனியுடைய சிவபெருமான் அலைகள்வீசும் கங்காசலத்தைச் சடையிலணிந்த, (கங்காதர) மூர்த்தத்தால், உலகிலுள்ள ஆன்மகூட்டங்கள் தமதுமனதைக்கரைக்கின்ற பெரிய ஆனந்தக கடலிலாழ்வதாம். எ - று. (௩௧)

உரைக்குமற் றுணர்வுக்கு மறிய வொண்கிலாப்
பரப்பிர மத்தினிற் றோன்றிப் பல்லுயிர்க்
கிரக்கமுற் றளித்திட வெய்து மிப்பொரு
ணிரப்புறு முயிர்த்தொகை நிறைந்து நிற்குமால்.

(இ - ள்.) வாக்குக்கும் அறிவுக்குந்தெரியமுடியாத பரப்பிரமத்தினின்றுமுதித்து, பல்வகையுயிர்கட்கும் இரக்கமெய்திக்காக்கும்படியெய்திய இப்பரம்பொருள், நிறைந்துள்ள ஆன்மாக்கடோறும் நிறைந்துநிற்கின்றது. எ - று. (௩௨)

வித்தெனப் படுமுத லொன்றின் மென்சினை
கொத்திண ரலர்முறி குழைந்த பாசடை
வைத்தகாய் பலமிவை திரிந்த வாறுபோன்
முத்தனிற் பிரிந்ததிப் பொருள்கண் முற்றுமே.

(இ - ள்.) விதையென்றுசொல்லப்படும் முதற்பொருளானது, ஒன்றினுடைய மெல்லியகிளைகள் மலர்க்கொத்துகள் இலைகள் இளமைதங்கியபசிய தளிர்கள் பொருந்தியகாய்கள் பழங்கள் இவை முதலியவாகத்திரிந்தவகைபோல், முத்தனாகிய சிவபெருமானிடத்திலிருந்து இப்பொருள்களெல்லாவற்றிலும் பிரிந்து விளங்கும். எ - று. (௩௩)

ஈதெலா மிப்பரி செடுத்துக் காட்டின்
வேதமப் பொருளெலாம் விரிந்தவாற்றினைப்
பேதுறப் பொய்மையென் றிழியப் பேசினோர்
தீதுறு நரகெலாஞ் சென்று வீழ்வரே.

(இ - ள்.) அப்பரம் பொருள்யாவுமாகப் பரந்ததன்மையாகிய இவற்றையெல்லாம் இத்தன்மையாக வேதங்கள் எடுத்துரைத்தன. இவற்றை மயக்கமெய்தப் பொய்மைத்தன்மையுடையவென்று தாழ்த்திக்கூறினவர்கள், தீமைபொருந்திய நரகங்களிலெல்லாம் போய்ப்படிவார்கள். எ - று. (௯௪)

இன்னண முரைத்தன வனைத்து மெம்பிரான்
றொன்னிலை யெனவகுத் துணருந் தொன்மையோர்
பின்னிய விருவினைத் தொடர்பின் பின்னனீத்
துன்னருங் கதியடைந் துறுவ துண்மையால்.

(இ - ள்.) இவ்வகையாகச்சொல்லினவற்றையெல்லாம் எமது சிவபெருமானுடைய பழய நிலைமையென்று தெரியத்தக்க பழமையானவர்கள், தம்மைப் பிணித்துள்ள இருவினைப்பாசபந்தத்தினையகற்றி அடைதற்கரிய சிவகதியைச் சேர்ந்துவசிப்பது சத்தியமென்று சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்குக் கூறினர் எ - று. (௯௫)

மூர்த்திவிசேடச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௪௦-க்குத் திருவிருத்தம். ௪உ௫௪

நாற்பத்தொன்றாவது

சிவகாட்சிப்பேற்றுச் சருக்கம்.

[*]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தத்து வங்கடந் தொருநிலை மனநிறீஇத் தற்பர முணர்ந்தீரின்
றித்தி றத்துப தேசகாண் டத்துமுற் றிசைத்தன மிதன்முன்ன
ருய்த்த சம்பவ காண்டமுன் றெக்கிண காண்டமீ றுரைத்தெம்பால்
வைத்த சிந்தைய ராயினீ ரென்னுடை மாதவப் பயனென்றான்.

(இ - ள்.) தத்துவங்களைக்கடந்து ஒரேநிலையில்மனதை நிறுத்தித்தற்பரத்தையறிந்த முனிவர்களே! இப்பொழுது இவ்வகையாக உபதேசகாண்டத்தை முழுதுஞ்சொன்னோம். இதன்முன்னரே உற்பத்திகாண்ட முதல்தக்ஷகாண்டமிறுதியாகக்கூறிய எம்மிடத்தில் பொருந்திய மனமுடையவர்களானீர்கள். இதுவும் எம்முடையபெருந்தவப்பயனேயென்றனர். எ - று. (௧)

என்னு மாதவச் சூதனை யருந்தவ ரியாவரு மெழுந்தேத்திப்
பொன்ன லங்குபுன் புரிசடை மாதவப் புனிதநின் பொருட்டாலத்
தொன்னி லைப்படு ஞானமே முதலிய யாவையுந் தொகப்பெற்றே
மின்னி லைப்படு மியாக்கைநீத் திருங்கதி பெறப்பெறும் வியப்புற்றேம்.

(இ - ள்.) என்றுகூறிய பெருந்தவமுடைய சூதமுனிவரை, அருந்தவஞ்செய்த நைமிசாரணிய முனிவர்களெல்லாரும் எழுந்து துதிசெய்து, பொன்போலசைகின்றபுரிந்த சிறுசடையையுடைய பெருந்தவமுடைய பரிசுத்தராகிய சூத

முனிவரே! தேவரீர் காரணமாக அந்தப்பழமையாகிய நிலையையுடைய ஞான முதலியவெல்லாமடையப்பெற்றோம். மின்னல்போலழியுந் தன்மையுடைய உடலையொழித்துப் பெரியமோக்கத்தையடையத்தக்க ஆசையுடையோம். எ-று. (௨)

ஈன்ற தாயருந் தந்தையுங் கடவுளுங் குரவரு மெமக்கிங்ஙன்
றோன்று நின்னல துளர்கொலோ வீன்றவர் தொல்கதி யளிப்பாரோ
வான்ற சோதிமா மயத்தவா மந்தர்யா மியையறி தற்கேநற்
சான்றெ னப்படு ஞானமுற் றளித்தனை யெதுசெயத் தகுவேமே.

(இ - ள்.) எங்களைப்பெற்ற அன்னையும் அப்பனும் தெய்வமும் குருவும் அடியேங்கட்கு இப்பொழுது பிரத்தியட்சமாயுள்ள தேவரீரையன்றிவேறொருவருண்டோ? எம்மைப் பெற்ற தாய்தந்தையர் பெரிய மோக்ஷத்தைக் கொடுப்பார்களோ? அகன்ற சோதிமயமாகிய அந்தர்யாமியையுணர்தற்காகவே நல்ல சாக்ஷியென்றுசொல்லப்படும் ஞானமுழுவதையுந்தந்தீர். (பிரதியுபகாரமாக) எதனைச்செய்யக் கடவோம்? எ - று. (௩)

பெற்ற வன்பசிக் கனங்கொடுத் தளித்தவன் பெரிதுறு மிடுக்கண்டீர்த்
துற்ற ளித்தவன் முப்புரி நூல்புனைந் துதவினோ னொருங்கேதான்
கற்ற விஞ்சைதந் தருளினோன் முழுமுதற் காண்குறுஞ் சிவஞான
முற்று ணர்த்தினோ னீங்கிவர் பிதாவென மொழிகுவர் பெரியோரே.

(இ - ள்.) தன்னையீன்றவனும், பசிவேளையில் உணவளித்துக்காத்தவனும், பெரிதாகவெய்துந்துன்பத்தைத் தவிர்த்துதவியவனும், உபவீதமணிவித்தவனும் தானுணர்ந்தவித்தையை ஒரு சேரக்கற்பித்தவனும், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைத் தரிசிக்கத்தக்க சிவஞானத்தைமுழுவதும் தெரிவித்தவனுமாகியவிவர்கள் தந்தையராவரென்றுபெரியோர்கள் சொல்வார்கள். எ - று. (௪)

உரைத்த மூவிரு தந்தையி னறிவரு ஞானமுய்த் துரைத்துள்ளங்
கரைத்த தந்தையே தந்தைமற் றுங்கவர் கதிதரக் கடவாரோ
புரைத்த மெய்யுயிர் பொருளெனு மூன்றுமப் புனிதரேயுடையோரென்
றிரைத்தி ரங்குநான் மறைக்குல மாதலின் யாமுனக் குரியேமால்.

(இ - ள்.) சொல்லிய இந்த ஆறுதந்தைகளிலும், அறிதற்கரிய ஞானத்தையுபதேசித்து மனதைக்கரைவித்த பிதாவே பிதாவாவான். மற்ற ஐவரும்முத்தியைக்கொடுக்க வல்லவர்களோ? புரைபட்ட உடல்பொருளாவியென்றுகூறிய, மூன்றனையும் அப்புனிதரேயுடையவரென்று, ஒலிகின்ற நான்குவேதங்களுணர்ந்த அந்தணர்குலமாதலின் அடியேங்கள்தேவரீருக்கு உரியோம். எ - று. (௫)

ஊதை மீப்படு புன்சரு கருந்திநீ டுலவையுண் டுலந்தேமற், றாதி நாயகன் றிருவருள் பெறப்பெறே மங்ஙன மருண்டேமுக், கோதி யப் பொரு ளுணர்த்திமெய்ஞ் ஞானமுற் றுணர்த்தினை யுனக்கென்னைப், பேதை யெங்களா லியற்றுகைம் மாறுமொன் றுண்டுகொல் பெரியோனே.

(இ - ள்.) பெருந்தன்மையுடைய சுழல்காற்றிலடித்துவந்த சிறுசருகுகளைப் பக்ஷித்து, நெடியவாயுபக்ஷணஞ்செய்து உடலிளைத்தும், சிவபெருமான் திருவரு

லையடையப்பெற்றேமில்லை. அப்படிமயங்கியவெங்களுக்கு அப்பரம்பொருட் டன்மையை யோதியுணர்த்தி மெய்ஞ்ஞானமுழுவதையுந்தெளிவித்தீர். தேவரீ ருக்கென்று அறிவிலிகளாகிய எங்களால் செய்யத்தக்க பிரதியுபகாரமொன்றி ருக்கின்றேதோ? எ - று. (௬)

தனக்கு வேண்டுவ யாவையுங் குரவனிற் சாற்றியங் கவனன்பா
னினைத்து வேண்டுவ பெறுகவென் றுரைத்தன ரருமறை நெறிநின்றோர்
புனற்ச டாடவிப் புங்கவற் காண்குறு வேட்கையுள் புகநின்றேம்
வினைக்கு றும்பற நோற்றவா வருளுதி யென்றவ னடிவீழ்ந்தார்.

(இ - ள்.) ஒருவன் தனக்குவேண்டுவனவற்றையெல்லாம் ஆசிரியன்பால் தெரிவித்து அன்போடுகருதிவிரும்பியவற்றையடையக்கடவனென்று, அரியவை திகமார்க்கத்தில் நின்றவர்கள் சொன்னார்கள். கங்காசலத்தையணிந்த சடைக் காட்டையுடைய சிவபெருமானைத்தரிசிக்கும் விருப்பமானது மனதிற்குடிகொள் ளவிருக்கின்றோம். இருவினையாகிய சிறு குறும்புகள் நீங்கும்படி தவஞ்செய்தசூத முனிவரே! அருள்புரிவீராகவென்று அச்சூதமுனிவர் திருவடிகளிற் பணிந் தார்கள். எ - று. (௭)

வீழ்ந்த மாதவத் தலைவர்பாற் சூதமா முனிவரன் வியப்பெய்தித்
தாழ்ந்த சிந்தையி னவர்க்கெதிர் தாழ்தலு மெடுத்தனர் தழீஇக்கொள்ள
வாழ்ந்த பேரறி வுடையநீ ரிங்கென தருளினோ பசும்பாவை
வாழ்ந்த பங்கனைக் காண்குதிர் நும்முடை மாதவ மெளிதன்றே.

(இ - ள்.) அப்படி நமஸ்கரித்த பெருந்தவத்தலைவர்களாகிய முனிவர்களி டத்தில், சிறந்த சூதமுனிவர் சந்தோஷித்து, கீழ்ப்படிந்தமனதோடு அவர்கட் கெதிரேவணங்கவும், அவர்கள்வாரியெடுத்து ஆலிங்கனஞ்செய்துகொள்ள, ஆழ மாகிய பேரறிவுடைய நீங்கள் எமதுசொற்படி, பசியபதுமைபோன்ற உமா பிராட்டியார்பொருந்திய வாமபாகத்தையுடைய சிவபெருமானைத் தரிசிப்பீர்கள். உங்களுடைய பெருந்தவம் இலேசானதல்ல. எ - று. (௮)

வகுத்த வார்சடை மாதவத் தந்தணீர் நும்முடை மரபோர்ந்து
நெகிழ்த்த சிந்தையி னெம்பிரா னும்முழைத் திருவரு ணீங்கானாற்
றொகுத்த வாரணத் துறைமுறை யேத்துதிர் யாமுமத் தொல்லோனைப்
பகுத்த வாறுணர்ந் தேத்துது மென்றன னனைவரும் பரசுற்றார்.

(இ - ள்.) பிரித்தநெடியசடையையுடையபெருந்தவம்புரிந்தவேதியர்களே! உங்கள் வரன்முறையறிந்து உருகிய திருவுள்ளத்தோடு எமது சிவபெருமானும் உங்கள்பால் திருவருள் நீங்கமாட்டார். தொகுத்துள்ளவைதிகநெறிவழியே துதி புரியுங்கள். யாமும் அப்பழையோனைப்பகுப்புற்றவகையாகவே தெரிந்துதோத் திரஞ்செய்வோமென்றனர்-எல்லோருஞ்சொல்லுவதானார்கள். எ - று. (௯)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஒன்றாய்ப் பலவா யருவாகி யோருருவு மல்லையா யுட்புலத்துக்
கெட்டாய், நின்றா யகண்டபரி பூரணமாய் வாழி நிராதார மாகிநீ நிற்
பதுண ரேமாற், பொன்றாழ் புரிசடையெம் புங்கவனே போற்றி புண்
ணியனே புண்ணியபு ராதனனே போற்றி, யென்றார்க்கெளிவரவி னெய்
தினையே யெந்தா யாமுமடி கட்கடிமை யல்லாமை யுண்டே,

(இ - ள்.) ஏகமாகியும் அநந்தமாகியும் உருவமாகியும் அருவமாகியும் ஒருருவுமல்லாதவனுகியும் உள்ளத்திற்கும் ஐம்புலத்திற்கும் எட்டாதுநின்றவரே! அகண்டபரிபூரணமாய் நின்றவரே! (நீரேசகலத்திற்கும் ஆதாரமாகி உமக்கு) யாதொரு ஆதாரமுமில்லாமல் நிற்பதையறியேம். ஆனபடியால் பொன்னுனது வீழ்ந்தாற்போன்ற புரிந்தசடையையுடைய எமதுசிவபெருமானே! போற்றி. புண்ணியரே! புண்ணியசொரூபமாகிய பழைமையானவரே! போற்றியென்று துதித்தவர்கட்கு எளிதாகக் காட்சிதந்தருளினீரே. எந்தாய்போல்வாரே! யாங்களுந் தேவரீருடைய திருவடிகட்கு ஆளாகாமையுள்ளதோ? எ - று. (௧0)

ஐந்தாகி யைந்தா யப்புறத்துக் கப்பா லநாதியா யாருயிர்க்கு மாருயிரே யாகித், தந்தா யளவிறந்த பல்கோடி யண்டந் தண்ணளியாற் றுய்ப்பனவுந் தாராநின் றனையா, லெந்தா யிமைப்பளவி னீங்கிவற்றை நீப்பாயீ துனக்கு விளையாட லிவ்விளையாட் டயர்ந்தால், நந்தா விளக்கொளியே நின்னிலைமை யுணரே நாள்கழித்தே மெக்கால நம்பநிற்காண் குதுமே.

(இ - ள்.) ஐந்துமூர்த்திகளாகியும், ஐந்தாகிய அப்புறத்துக்கப்பாலாகியும், அநாதியாகியும், பொருந்திய உயிர்கட்கும் உயிராகியும், எண்ணிறந்தபலகோடியண்டங்களையும் படைத்தவரே! குளிர்ந்தகருணையால் புசிக்கத்தக்கபோகங்களையுங் கொடுத்தருளுகின்றீர். எமதுதாயானவரே! இவற்றையெல்லாம் ஒருக்ஷணப்பொழுதில் துடைப்பீர். இது தேவரீருக்குத்திருவிளையாடல் இவ்விளையாடலை நீங்கினல் தேவரீர் நிலைமையை நாங்களறியோம். அழியாதசுடர் விளக்கொளியானவரே! பலகாலங்கழித்தோம். நம்பனே! எந்தக்காலத்தில் தேவரீரைத் தரிசிப்போம். எ - று. (௧௧)

ஆதியாய் நெடுமேரு வூடுருவிச் சுமக்கு மளவொழிந்த மண்டங்களண்டத்தோ டகன்று, பேதியா வுலகங்க ளுயிர்த்தொகுதி யிவற்றைப் பேதித்து நின்றிரைக்கும் பிரளயத்தி லொடுங்குஞ், சோதிமா மயமாகி நிராதார மாகுந் தொன்மையோ யீங்கிவற்றைத் தொட்டறியா தவரி, னேதில னுகியந்த நிரந்தரமாய் நின்று வெம்பிரா னேகனு யிருபாற்பட்டனையே.

(இ - ள்.) ஆதியாகியும், நெடியமேருமலையானது ஊடுருவித்தாங்குகின்ற எண்ணிறந்த அண்டங்களும் அவ்வண்டங்களோடுபரந்து பேதியாத உலகங்களும் உயிர்த்தொகுதிகளுமாகிய இவற்றைப்பேதித்து நின்று ஒலிக்கின்ற பிரளயகாலத்தில் இலயமெய்துஞ் சிறந்தசோதிமயமாகியும், தமக்கொரு ஆதாரமில்லாத பழமையானவரே! அவ்விடத்தில் இவற்றைக்கலந்தும் அவர்களாலறியப்படாமல் அவர்கட்கு அன்னியமாகியும் அந்த நிரந்தரமாகியும் நின்றவரே! எமது பெருமானே! தேவரீர் ஏகனுகி இருபகுப்பெய்தினீரே. எ - று. (௧௨)

இருநோக்கு நெடுமூக்கி னுதிக்கிடப்பக் கிடத்தி யிந்தியங்க ளவித்தைந்து புலனுமொருங் கிருத்தி, யொருநோக்கி னுளம்போக்கி விகாரப்பா டொழியா வுனையுணரி னின்னுருமற் றிவ்வுருவென் றுணரார், செருநோக்கிக் கழைகுனித்து மலர்ப்பகழி தெரிந்து சீறிளங்கா ளையைச்சீறுந் திருநுதலெம் பெருமா, னருநோக்கு நோக்கு மூவந் தருள்யுள மிரங்கி யருணோக்க மெமக்களிப்ப தெம்பெருமாற் கழகே.

(இ - ள்.) இருபார்வையும் நெடியமூக்குமுனையிலிருக்கவிருத்தி, இந்தியங்களையடக்கி, ஐம்புலன்களையும் ஒன்றுபடுத்தி, ஒரேயெண்ணத்தில் மனதைச்செலுத்தி, விகாரப்படுதலொழிந்து தேவரீரைத்தியானித்தாலுந் தேவரீர் திருவுருவம் இத்திருவுருவமென்றறியமாட்டார்கள். போர்செய்தலைக்கருதிக்கருப்புவில்லை வளைத்து மலர்ப்பாணங்களையெடுத்துக்கோபித்த இளமைதங்கிய மன்மதனைக்கோபித்தெரித்தருளிய நெற்றிவிழியையுடைய எமது சிவபெருமானே! அருமையாகநோக்குகின்ற நோக்கமானது களித்தருளித் திருவுளமிரங்கித்திருவருணோக்கத்தை அடியேங்கட்குத்தந்தருள்வது எம்பெருமானாகிய தேவரீருக்கு அழகாகும். எ - று. (௧௩)

காட்டியபல் லுயிர்த்தொகைக்கு மலபாசம் புரிந்த கருமத்தா லிருவினையுங் காட்டியந்த வினையா, லீட்டினவுண் பனவாக்கி யுண்பதற்குச் சரீர மேதுவாக் கினையுண்பா னின்னுயிரே யாக்கி, யூட்டியுறக் கினைமுடிவி னவ்வினையின் செயல்கண் டுறுகதியு நரகுமீந் தொருங்கீன்ற வுயிரை, யாட்டுவித்தா யீதுனது விளையாட லீசற் கவ்விளையாட் டினிற்பெறுவ தறிகிலமற் றருளே.

(இ - ள்.) சிருட்டித்தபல உயிர்த்தொகைகளுக்கும் மலபந்தஞ்செய்த கர்மத்தினாலே இருவினைகளையுங்காட்டி, அந்தவினையினாலே தேடியபொசிக்கத்தக்க போகங்களையுண்டுசெய்து, அங்ஙனம் பொசிப்பதற்குச் சரீரத்தைக்காரணமாக்கினீர். உண்ணுதற்கு இனிய உயிரையே படைத்து உண்பித்து உறங்கச்செய்தீர். இறுதியில் அவ்வினைச்செயலைப்பார்த்து அடையத்தக்க மோட்ச நரகங்களைத்தந்து, சிருட்டித்தவுயிர்களை ஒருசேரவியங்கச்செய்தீர். இவைதேவரீருக்குத் திருவிளையாடல்கள். ஈசுவரனாகிய தேவரீருக்கு இத்திருவிளையாட்டினாற்பெறத்தக்கதியாது? அறியேம். அருள்புரிவீராக. எ - று. (௧௪)

ஆரணமா யாரணத்தி னுபநிடதப் பொருளா யப்பாலா யிப்பாலா யணுவினுக்கு மணுவாய்ப், பூரணமாய்ச் சச்சிதா னந்தமா யார்க்கும் புலப்படா வொன்றாகிப் பொய்யாகி மெய்யாய்க், காரணமாய்க் காரியமாய்க் கருவியாய் முடிக்குங் கருத்தனுமா யாவர்க்குங் கட்புலப்பட்டிடினு, நாரணமாய்ப் பிரமமாய் நின்றனையே யெந்தாய் நாயேமுக் குனைக்காட்டு நாளொருநா ளுளதோ.

(இ - ள்.) வேதங்களாகியும், வேதங்களின் சிகையாகிய உபநிடதங்களிற் கூறப்பட்டபொருளாகியும், அதற்கப்பாலாகியும் இப்பாலாகியும், அணுவுக்கும் அணுவாகியும், (எங்கும் நிறைந்த) பூரணமாகியும், சத்துச்சித்து ஆனந்தமாகியும், எத்தகையினருக்குங் காணப்படாத ஒருபொருளாகியும், பொய்யாகியும் மெய்யாகியும், காரணமாகியும் காரியமாகியும் கருவியாகியும், (செயல்வினையை)முற்றுப்பெறச்செய்யுங் கர்த்தாவாகியும், யாவர்க்குங்கண்கூடாகக் காணப்பட்டாலுங் காரணமாகியும் பிரமமாகியும் விளங்குகின்றீரே! எமது தாய்போல்வாரே! நாய்போல்வாராகிய எங்களுக்குத் தேவரீரைக்காண்பிக்குந்தினம் ஒருதினமிருக்குமோ? எ - று. (௧௫)

எண்பாலா முட்சமயம் புறச்சமய மென்னு மீராறு யீராறுக்குளையாகி யிவைக்கு, நண்பாய கடவுளுமா யந்நெறிநின் றவர்க்கு நன்களித்தி ச்சமய நடத்துநூற் கெட்டாய், பெண்பாலோ வாண்பாலோ வலி

யோமற் றுணரேம் பின்னறியே முன்னறியேம் பெருமானே யொருநீ,
யுண்பானு முண்பனவு மூட்டுவனு மானா யுத்தமனே யெத்திறத்து மு
னைக்காண்ப தரிதே.

(இ - ள்.) எண்ணத்தக்க பகுதியவாகிய அகச்சமயம் புறச்சமயமென்னும் ஈராறு சமயங்களாகியும், இவ்வீராறு சமயங்கட்குப்பட்டவராகியும், இச்சமயங்கட்கு நண்பாகிய கடவுளுமாகியும், அம்மார்க்கத்தில் நின்றவர்க்கு நன்றாக அநுக்கிரகிக்கிறீர். அவ்வச்சமயங்களை நடைபெறச்செய்யுஞ் சமயநூல்களுக்கும் அதீதப்பட்டீர். தேவரீர் பெண்பாலினரோ ஆண்பாலினரோ அலியினரோ? அறியமாட்டோம். பின்னுமறியோம் முன்னுமறியோம். பெருமானரே! ஒப்பற்ற தேவரீரே உண்பவனும் உண்பொருளும் உண்ணச்செய்பவனுமாக விருக்கின்றீர். உத்தமசொரூபியே! எவ்வகையாலாயினுந்தேவரீரைத் தரிசிப்பது அருமையாகும். எ - று. (௧௬)

அஞ்செழுத்தி னுட்பொருளா யகரமுதற் றோன்று மைம்பத்தோ
ரக்கரமா யாவையினுங் கரந்தாய், நெஞ்சழுத்தி நினைப்பானு நினைத்த
னவு நினைப்பு நீயாகி நின்றனையா னின்னையா ரறிவார், மஞ்சனைய கோ
லத்தான் மலரயனே முதலோர் மாண்டிறவா திரைதிரைநீர் வயிறுளோங்
கின் றளித்த, நஞ்சழுத்து மணிமிடற்றாய் சிற்பரா னந்த நாயகமே
யுனைக்காணு நாளொருநா ளுளதோ.

(இ - ள்.) பஞ்சாக்ஷரத்தின் உட்பொருளாகியும்,
றுகின்ற ஐம்பத்தோரக்ஷரமாகியும், எல்லாவற்றினும் ம
மனதிற்கருதி நினைப்பவனும் நினைக்கப்படுபொருளும்
யாகி விளங்குகின்றனிர். தேவரீரை எவர் உணரவல்ல
திருமேனியையுடையவனாகிய திருமாலும் பிரமனு முதலானவர்கள் இறந்துபடாமல், ஒலிக்கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலானது அகடுவருந்தித்தந்த ஆலாலத்தை நிலைநிறுத்திய நீலமணிபோன்ற கண்டத்தையுடையவரே! (சித்= ஞானம்; பரம்=மேன்மை; ஆனந்தம்=இன்பம்) சித்பரானந்தத்தலைவரே! தேவரீரைத்தரிசிக்குந்தினமாக ஒருதினம் இருக்குமோ? எ - று. (௧௭)

என்றென்று பலவாற்று னெடுத்தெடுத்துப் பரசி யிருகண்க ளா
னந்த வாரிநீர்த் தொழுக, நின்றென்று நெஞ்சுபுகா தொருநெறிக்க
ணிறுத்தி நினைவயர்ந்து மெய்யயர்ந்து நாக்
வரிசிலையோன் றுழாய்நாறுங் கொ
யோன் குதித்துகளுஞ் சிறுமான், க
ணுதலெம் பெருமான் களிவிளைந்து
தான்.

(இ - ள்.) என்றிப்படிப்பலவகையாக
விழிகளும் ஆநந்தபாஷ்பம்பெருகியொழுக
தாது அதனையொரேவழியிற்செலுத்தி எ
தழதழத்திருக்கையில், வரிக்கட்டுகளமை
ரும், துளவமாலிகை மணக்கும் திருமால
வரும், தோண்டியெடுத்த சங்காலாகிய கெ
புரளுகின்ற சிறுமான் கன்றினைப்பொருந்

கண்ணைப்பொருந்தியவருமாகிய எமது சிவபெருமான் சந்தோஷமெய்தித்திருவுள்ளங்கனிந்தருகியிரங்கினர். எ - று. (கஅ)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருதம்.

இனைய காலையி னந்தியை நோக்கி யொருதனி முக்கணெம் பெருமான், புனைந றுந்துணர்ப் பொதும்பர்சூழ் நைமிசா ரணியமா தவத்தரிற் போகி, யனைய வர்க்குநங் காட்சிதந் தருள்செய்வா னினைந்தன மாதலானமது, துனைக டுங்கதி யடுதிறற் பொருவிடை யிங்கிலை கொணர்கெனச் சொற்றான்.

(இ - ள்.) இப்படிப்பட்ட காலத்தில், ஒப்பற்றசிறந்ததிரிநேத்திரங்களையுடைய எமது சிவபெருமான் திருநந்திதேவரைநோக்கி, அலங்கரிக்கின்ற மணந்தங்கிய மலர்க்கொத்துகளமைந்த சோலைசூழ்ந்த நைமிசவனத்திலுள்ள பெருந்தவசிகளிடஞ்சென்று அவர்கட்கு நமது தரிசனங்கொடுத்து அநுக்கிரகிக்கும்படி திருவுளங்கொண்டோம். ஆனபடியால், நீ நம்முடைய வேகமாகிய பெருநடையையும்கொல்லத்தக்கவல்லபத்தையுமுடைய போர்செய்யத்தக்க இடபத்தை இப்பொழுதுகொண்டுவருக வென்றுகட்டளையிட்டனர். எ - று. (கசு)

பின்னு மன்னவன் றன்முக நோக்கியப்பெருக்கணத் தருந்தவத் தலைவர் மன்னு மாதவச் சூதனு னம்முடைக் குமரவேள் வரன்முறைச் சரிதை சொன்ன சம்பவ காண்டமே முதலிய வேழையும் வகுத்துற வுணர்ந்தா ரன்ன தன்மைய ரின்னுநின் றேத்தின ரென்பகேட் டகமகிழ் சிறந்தான்.

(இ - ள்.) மேலும், அந்நந்தியம்பகவான் திருமுகத்தைப்பார்த்து, அப்பெருங்கூட்டமாகிய அருந்தவம்புரிந்த நைமிசாரணிய முனிவர்கள், நிலைபெற்ற சிறந்ததவமுடைய சூதமுனிவனுல்நம்முடைய இளையபிள்ளையாராகியகுமாரசுவாமியின் சரிதையைக்கிரமமாகச்சொல்லிய உற்பத்திகாண்டமுதலாக ஏழுகாண்டங்களையும் விளக்கிச்சொல்லக்கேட்டார்கள். அத்தகையினர் இதுகாறும் அந்நிலையிலேயேயிருந்து துதிசெய்கின்றார்கள் என்பதைக்கேட்டு மனமகிழ்ச்சிமிகுந்தனர். எ - று. (உo)

எவ்வொ ளிப்பசும் பொன்னினு மணியினு மியன்றன வீரிரு பதத்துக், கவ்வெ னக்கெழு தண்டையைப் புனைந்தனன் பன்மணித் தொடையலைப் புனைந்தான், மல்லன் மாமருங் கரசிலைக் கிடையிடை மணித்தொடர் பிணித்தனன் வனைந்தா, னொல்லை வெண்கதிர்ப் பிதிர்தொகுத் தன்னவெண் கவரிகீழ் விடுத்தரு குறுத்தான்,

(இ - ள்.) சூரியகாந்தியைச்செய்யும் பசும்பொன்னாலும் நவரத்தினங்களாலுஞ் செய்தனவாகிய கல்லெனவொலிக்கும் தண்டையை நான்குகால்களிலுங் கட்டினர். பலரத்தினமாலைகளைத்தரித்தனர். வளந்தங்கிய சிறந்த பக்கலிலே அரசிலைமாலையின் நடுவெல்லாம் மணிமாலைகளைக்கட்டி யலங்கரித்தனர். சீக்கிரத்திலே சந்திரனுடைய அமிர்த தாராபிந்துகளைச்சேர்த்தாற்போல வெண்ணிறந்தங்கிய சாமரையைக்கீழே தொங்கவிட்டுப் பக்கலிலலங்கரித்தனர். எ - று.

மருப்பு மாமுகத் திரையவன வனைந்துபின் வேண்டுவ யாவையும் வனைந்தான், குருத்த வெண்ணிலா வெள்ளியங் கிரியெனு மால்விடை

வாயிலிற் கொணர்ந்தா, னெருக்க லர்ந்தவார் சடைமுடி யெம்பிராற் கினமணிப் பாதுகை யிட்டான், செருக்கு முப்புரங் கடந்தவ னந்திகை கொடுத்துறச் சென்றெழுந் தருளி.

(இ - ள்.) கொம்பிலும் பெரியமுகத்திலும் பொருந்திய ஆபரணங்களாலலங்கரித்து, பின்னர் விரும்பியவற்றையெல்லாம் அணிந்தனர். தளிர்த்தவெள்ளிய சந்திரிகையைவீசும் அழகிய வெள்ளிமலையென்றுசொல்லத்தக்க பெரிய இடபத்தைத் திருவாயிலிடங்கொண்டுவந்தனர். வெள்ளெருக்க மலர்கள் விகசித்த நீண்டசடைமுடியையுடைய எமது சிவபெருமானுக்குஉபய(பாதங்களில்) இரத்தினபாதுகைகளைச்சேர்த்தனர். இறுமாந்த முப்புரங்களையெரித்த சிவபெருமான் திருநந்திதேவர் கைலாகுகொடுப்ப ஆஸ்தானத்தினின்றும் எழுந்தருளி.

வாயி லெய்தினன் மழவிடைக் கடவுளை நோக்கினன் றிருவுள மகிழ்ந்தான், பாய வெள்விடை யடைந்துகும் போதரன் புறத்திரு சேவடித்து, மேய பன்மணிக் கம்பள வெரிநகத் தேறின னுமையோடும் வியந்தா, னேய மாதவத் தலைவரி னைமிசா ரணியமுற் றெய்துவா னெழுந்தான்.

(இ - ள்.) திருவாயிலையடைந்து இளமைதங்கிய இடபதேவரைக்கடைக்கணித்து, திருவுள்ளங்களித்து, பாய்ந்துசெல்லத்தக்க வெண்மையாகிய இடபத்தை நெருங்கி, கும்போதரன்முதுகிற் செவ்விய உபயபாதங்களைவைத்து, பலமணிகள் பதித்தகம்பளம்பொருந்திய முதுகின்பேரில் உமாதேவியாரோடும் ஆரோகணித்துக்களித்தனர். பெருந்தவம்பொருந்திய முனிவர்கள் வசிக்கும் நைமிசாரணியத்தையடையும்படி புறப்பட்டனர். எ - று. (௨௩)

வேத யோகிய ரருமறைத் திறமெலா மிடைவிடார் முன்னரின் விளம்ப
பூத ராயிர கோடிய ரெம்பிரான் றிறத்தியற் கட்டியம் புகலப்
போத கத்திரு முகக்களி றுருவிற் போதரப் பொறியயி லுகைத்துத்
தாது லாந்தொடைப் பன்னிரு தடம்புயக் காளையு மருங்கயல் சார.

(இ - ள்.) வேதயோகிகள் அரியவேதநூல்களையெல்லாம் இடையீடில்லாதவர்களாய்த், திருமுன்னே சொல்லிவரவும், ஆயிரகோடிப்பூதநாதர்கள் எமது பெருமான்வல்லபைத்திற் கியைந்தகட்டியங்கள் சொல்லவும், அழகிய யானைமுகத்தையுடைய விநாயகப்பெருமான் பெருச்சாளிவாகனத்தில் எழுந்தருளவும், மகரந்தஞ்சிந்தும் (கடப்பமலர்) மாலையணிந்த பன்னிருபாந்த திருத்தோள்களையுடைய இளைய குமாரக்கடவுள் புள்ளிகளமைந்த மயில்வாகனமூர்ந்து ஒருபக்கலிற் சமீபித்துவரவும். எ - று. (௨௪)

இரங்கு வெண்டிரைப் பாற்கடற் றுயின்றவ னெறுழ்வலிக் கலுழன்மீ தெழுந்தான், பரந்த செவ்விதழ்த் தாமரை நாயக னோதிம முதைத்தனன் படர்ந்தா, னரங்க டிந்தவெங் குலிசிவெள் வாரணத் தெழுந்தன னருந்தவத் தலைவர், புரங்க டந்தவற் சூழ்ந்துடன் போந்தனர் தம்முடை யூர்தியிற் பொலிவார்.

இ - ள்.) ஒலிக்கின்ற வெண்மைதங்கிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் யோகநித்திரைசெய்யுந்திருமால்பெருவலிதங்கிய கருடவாகனத்தின்மீது புறப்

பட்டனர். பரவிய சிவந்த இதழ்களையுடைய செந்தாமரைமலரில்வசிக்கும் பிரம தேவன் அன்னவாகனமூர்ந்துசென்றனன். அரத்தைவென்ற வெவ்வியவச்சிரா யுதமேந்திய இந்திரன் வெள்ளானையின்மீது புறப்பட்டான். அரியதவசிரேஷ் டர்களாகிய ஏனையோர்தங்கள்வாகனங்களில் விளங்கி, புராரியாகிய சிவபெரு மானைச் சூழ்ந்துகொண்டு வருவாராயினர். எ - று. (௨௫)

ஆய காலகா லாக்கினி யுருத்திர னனந்தகோ டியகணத் தோடும், போய டைந்தன ளுடகேச் சுரன்கண மாயிர கோடியிற் புகுந்தான், காய்சி னத்தகூர் மாண்டர்மா கோடிவெங் கணத்தோடு மடைந்தனன் குருதிச், சேய கண்ணனீ ரைந்துகோ டியரெனுங் கணத்தோடுஞ் சென் றெதி ரடைந்தான்.

(இ - ள்.) அக்காலத்திலே, காலாக்கினியுருத்திரதேவர் எண்ணிறந்தகோடி யாகிய கணங்களோடும்போய்ச்சேர்ந்தனர். ஆடகேச்சுரர் ஆயிரகோடிகணங்க ளோடும் புகுந்தனர். கொதிக்கின்றகோபத்தையுடைய கூர்மாண்டர் மகாகோ டியாகிய வலிதங்கிய கணத்தினரோடும் வந்துசேர்ந்தனர் சிவந்தகுருதிக்கண் ணர் பத்துக்கோடிய ரென்னுங்கணத்தோடும்போய் எதிரிற்சேர்ந்தனர். எ - று.

வயித்து வன்கணங் கோடிகொண் டடைந்தனன் வரைபெறு தடம் புய விசாகன், செயிர்ப்பு றுங்கணம் பதுமகோ டியரொடுஞ் சென்ற னன் றிண்டிறற் கபில, னயிர்ப்பு றுங்கணம் பரார்த்தமோ டடைந்த னன் பிருங்கிகும் பகன்சங் கிலாதன், மயிர்ப்பு றம்பொடித் தெழுந்தன ரெழுந்தனர் மற்றுள கணத்தவ ர்யாரும்.

(இ - ள்.) வயித்துவர் கோடிகணங்களோடும்வந்து உடன் கூடினர். மலை போன்றவிசாலமானதோளையுடைய விசாகர் சயம்பொருந்திய கணங்கள் பதும கோடியரோடும் போயினர். பெருவல்லபமுடைய கபிலர் பரார்த்தங்கணங்க ளோடும் எய்தினர். பிருங்கி-கும்பகன்-சங்கிலாதர் இவர்களும் மற்றுள்ள கணத் தலைவர்களெல்லாரும் உடல்முழுதும் மயிர்க்கூச்செறியப்புறப்பட்டார்கள்.

வள்ளெ யிற்றுவா ளசுரவெள் ளப்படை வளைந்தன முறைமுறை வணங்கி, வெள்ளி வெண்ணிறக் கவிகைகுண் டோதர னிவத்தின னக் குடை விளிம்பி, னள்ளி நாற்றிய கொத்துமுத் தத்தொடை யெம்பிரா னணிதருங் கங்கை, துள்ளி நின்றசைந் திழிவன போன்றன வென்றுவா னவரெலாந் துதிப்ப.

(இ - ள்.) கூர்மைபொருந்திய பல்லையுடைய வாளேந்திய அசுரர்களின் வெள்ளமாகிய சேனைகள் கிரமமாகப்பணிந்து, சூழ்ந்துகொண்டன. வெள் ளியைப்போலும் வெண்ணிறந்தங்கிய குடையைக் குண்டோதரன் பிடித்த னன். அந்தக்குடையின் ஓரத்தில் அள்ளித்தொங்கவிட்ட கொத்தாகியமுத்து மாலைகள் எமது சிவபிரான் அணிந்துள்ள கங்காநதியானது துள்ளிநின்று அசைந்திறங்குவதுபோன்றனவென்று தேவர்கள்யாவருந்துதிசெய்ய. எ - று.

சித்தி ராசனன் றும்புரு நாரத ரேழிசைச் சித்திர சேனன்
மொய்த்த கந்தரு மன்னவர் கின்னர ரொழிந்தகிம் புருடரை முதலோ
ரத்த மூட்டிய நரப்பிசைக் கருவியர் விதிமுறை யடுக்கிய விரலி
ஞெத்த பாடலி னின்னிசை யாரமு திருகுழைச் செவிவழி யொழுக்க.

(இ - ள்.) சித்திராசனன்-தும்புருநாரதர்-ஏழிசையில்வல்ல சித்திரசேனன். நெருங்கிய கந்தர்வமன்னர்கள்-கின்னரர்கள்-ஏனைய கிம்புருடர்கள்முதலானவர்கள் கைகளில் சுருதிசெய்த (யாழ்முதலிய) நரம்பிசைக்கருவியுடையவர்களாய் அமேக்கியவீரலிமெனுலிக்குச்சமானமானபாடலால் இனிய இசையாகிய அரிய அமிர்தத்தைக்குண்டலமணிந்த இருசெவிகளின்வழியாக வொழிக்கிவார்க்கவும்.

வள்ளி தழ்க்கம லாலய பீடிகை யினிதுறை தருதிரு மடந்தை
வெள்ளி தழ்க்கம லாலய பீடிகை நாமக ளிவரொடு மேய [ளிர்
கள்ள விழ்ந்தமென் புரிகுழற் றுவரிதழ்க் கயல்விழிக் கனங்குழை மக
வெள்ள மாயிர முலகமீன் றளித்தரு ளம்பிகை மென்பதம் பரவ.

(இ - ள்.) கூர்மையாகிய இதழ்களமைந்த கமலாலயமாகிய பீடத்திலே இனிதாகவசிக்கின்ற இலக்குமிதேவி, வெள்ளிய இதழ்களையுடைய தாமரைக்கோயிலாகிய இருக்கையிலுள்ள சரசுவதிதேவி ஆகியவிவர்களோடும் பொருந்திய தேன்சிந்துகின்ற மெல்லியபுரிந்தகூந்தலையும் பவளம்போன்ற அதரத்தையும் சேல்போன்றகண்ணையும் கனமாகிய காதணியையுமுடையமாதர்கள் ஆயிரவெள்ளக்கணக்கினர், சர்வலோகத்தையும் பெற்றுக்காத்தருளிய உமாதேவியார்மெல்லிய திருவடியைத்துதிபுரியவும். எ - று. (௬0)

அரன ருச்சனை வரன்முறை யியற்றலா லாங்கவன் றிருவுரு வடைந்து
வரனு வப்புறு மளவொழி நாரணர் வாகனத் துடனயன் மருவப்
பிரம ராயிர கோடிய ரவ்வழி யேகுறப் பெருந்தவத் தலைவர்
பரவ ருஞ்சன காதியர் யோகிகள் கபிலரை முதலினோர் பரவ.

(இ - ள்.) சிவார்ச்சனையை வரன்முறையாகச்செய்ததால் அவ்விறைவனது சாரூபமடைந்து, வரங்களை விரும்பியுள்ள கணக்கிறந்த நாராயணர்கள் வாகனங்களோடு பக்கலில்வரவும், ஆயிரகோடி பிரமாக்கள் அப்படியேசெல்லவும், பெருந்தவத்தலைவர்களாகிய துதிசெய்தற்கரிய சனகாதிமுனிவர்களும் யோகிகளாகிய கபிலரை முதலானவர்களுந் துதிபுரியவும். எ - று. (௬க)

மூன்று பத்துமுக் கோடிய தீர்த்தமு மேருவே முதலிய வரையுங்
கான்ற வெண்டிரை யுததியோ ரேழுமக் கலைகளும் வருடமு மதியு
மேன்ற பக்கமு மிருத்தையு முதலிய வித்திறத் தியாவையு முருவிற்[டர.
றேன்றி யெம்பிராற் றெழுதகை மறந்திலர் கூப்பிய கரத்தொடுந் தொ

(இ-ள்.) முப்பத்துமுக்கோடியாகிய தீர்த்தங்களும் மேருமுதலியமலைகளுஞ் சிந்துகின்றவெள்ளிய அலைகளையுடைய சப்தசமுத்திரங்களும், கலைகளும் வருடங்களும் மாதங்களும்பொருந்திய பக்ஷங்களும் இருத்தைமுதலிய இவ்வகைப்பட்டகாலநுட்பங்களெல்லாம் உருவத்தோடெழுந்து எமது சிவபெருமானைப் பணிதகைமை மறவாதவர்களாய் எடுத்தகையோடுந் தொடர்ந்துவரவும். எ -று.

கான நாண்மலர்க் கற்பகஞ் சினைதொறும் பொதுளிய கடிமலரிறைப்ப, வான நாட்டர மடந்தையர் மற்றுள பெரும்பத மடந்தையர் மருவி, யேனை மாகணத் திடையிடை கலந்தன ரெடுத்தவெண் சாமரையிரட்ட, வான தொல்லறந் திருவுருக் கொண்டிங்கி ரக்கமுற் றடைந்து பின்றொடர.

(இ - ள்.) மணந்தங்கிய அன்றலர்ந்த மலர்களையுடைய கற்பக விருட்சமானது கிளைகளிலெல்லாம் நெருங்கியவாசந்தங்கிய பூக்களைச் சிந்தி நிற்கவும், தேவலோகத்திலுள்ள அரம்பாஸ்திரீகளும் ஏனையபெரிய பதவிகளில் வசிக்கும்மங்கையர்களும்பொருந்தி, பெரியமற்றக்கணங்களோடு நடுவே கலந்துநின்று கையிற் பற்றியவெள்ளியகவரிகளைப்புரட்டவும், பழமையாகிய தருமமானது ஓர்திருவுருவேற்று மனவிரக்கமெய்திப்பின் றொடர்ந்துவரவும். எ - று. (௯௯)

தேவ துந்துமி மீச்சுரம் படுமொரு கரடிகை திண்டிமந் திமிலை
பாவு கோமுகை குடமுழ விடக்கைகின் றதிர்குரற் பேரிகை படக
மேவு சல்லரி முதலிய பல்லியந் துவைப்புற வளைக்குலம் விம்ம
வோவ ருந்திசை துளங்குறத் தொளைபடு கருவியின் றெங்குணுமோங்க.

(இ - ள்.) தெய்வதுந்துமி பேரொலிமுழக்குடைய ஒப்பற்றகரடிகை தம்பட்டம் பம்பை பரந்தகோமுகை குடமுழவு உடுக்கை ஒலித்ததிர்கின்ற குரலையுடைய பேரிகை இரணபேரி பொருந்தியசல்லரிமுதலிய பலவாத்தியங்கள் முழக்கவும், தொளைக்கருவிகளாகிய(நாகசுரம் புள்ளாங்குழல் பூரி எக்காளம் சின்னமுதலிய) வாத்தியங்கள் நின்று எங்குமொலிக்கவும். எ - று. (௯௪)

முக்க ணெம்பிரா னைமிசா ரணியமுற் றெழுந்தனன் முயற்சியின் முறைமை, யொக்க நோக்கிய தெய்வமாத் தச்சனு துணர்ந்தன னொருநெறி யடைந்தான், பக்க நோக்கினன் வெள்ளிடை குணித்தவ னொருதனி மண்டபம் படுத்தா, னக்க ணுங்கவ னியற்றிய சித்திரத் தளவையை யாவரே யளப்பார்.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் நைமிசாரணியத்தை நோக்கி எழுந்தருளினர். முயற்சியின்முறைமையை ஒருசேரக்கண்ட சிறந்த தெய்வத் தசச்னுகிய விசுவகர்மா அதனையறிந்து ஒருபுறத்தெய்திப் பக்கலிற் பார்த்து, ஒருவெற்றிடத்தில் மானசிகமாக ஒருஒப்பற்றமண்டபத்தை நிருமித்தான். அவ்விடத்தில் அவ்விசுவகர்மனியற்றிய மண்டபத்தின் சிறப்பினையெவர்தாம் அளவிடுவோர்கள்? எ - று. (௯௫)

கலிநிலைத்துறை.

அடுத்த யோசனை யகலைநூ றுயிரத் தளவை
யெடுத்த கோபுர மாயிர நிலைநிரீஇ யதற்குத்
தொடுத்த பல்லுருப் பொன்னினு மணியினுந் தொகுத்தான்
மடுத்த முச்சியிற் றுவியோ ராயிரம் வகுத்தான்.

(இ - ள்.) பொருந்திய நூறுயிரக்கணக்குயோசனையளவாக நிர்மித்தகோபுரமும் அதற்கு ஆயிரம் நிலைகளும் நிறுத்தி அதிற்சேர்த்தபலபிரதிமைகள்பொன்னுலும் இரத்தினங்களாலும் அமைத்தான். மேற்கொண்ட உச்சியிலே ஆயிரந் தூபிகளைப் பிரித்தான். எ - று. (௯௬)

பாரு மண்டமுந் தாங்குவான் பஃறலைப் பசும்பொன்
மேரு வாற்றல தென்றுகொண் டருமறை விரிஞ்சன்
றேரு நன்னெறிச் சிந்தையா னுலகெலாம் பொறுக்க
நேரு மேருவொத் தெழுந்ததக் கோபுர நிலையே.

(இ - ள்.) உலகத்தையும் அண்டத்தையும் தாங்கும்படி பலதலைகளையுடைய பசும்பொன்னாகிய மேருமலையானது சாத்தியமாகாதென்று, அரிய வேதங்களைக் கூறிய பிரமதேவன், நல்லவழியை ஆலோசித்தமனதோடு உலகத்தையெல்லாந் தாங்கும்படி இயைந்தமைத்த (மற்றொரு)மேருமலைபோன்று அக்கோபுர நிலை தோன்றியது. எ-று. (௯௭)

தூணை மென்பநூ றாயிர நிரைநிரை தொகுத்தான்
சேணி வந்தபாற் சந்திர காந்தமீச் செறித்தா
னீணெ டுங்கொடுங் கபோதகம் பசும்பொனா னிரைத்தான்
மாணி லக்குல மணியினா லல்லது வனையான்.

(இ - ள்.) தூண்களென்றுசொல்லப்படுபவை நூறாயிரக்கணக்கில் வரிசை வரிசையாக அமைத்தான். ஆகாயத்திலுயர்ந்த வெண்மைதங்கிய சந்திரகாந்தக் கற்களைமேலே பரப்பினான். நீண்டுநெடிதாகிவளைந்த கபோதவரிசையைப்பசும் பொன்னால்வரிசைப்படுத்தினான். பெரியபூமியிலுள்ளசிறந்த இரத்தினங்களாலல் லாது பிறிதாலலங்கரியான். எ - று. (௯௮)

போதி கைக்குல மரகதத் தியற்றினன் பொலங்கோ
மேத கத்தினா னெடுவடிம் பொழுக்கினன் விரிக்குஞ்
சோதி மாமணி குயிற்றின பல்லுருத் தொகுத்தான்
சீத ளத்தர ளத்தொடை மேற்படச் செறித்தான்.

(இ - ள்.) [போதிகை] தூண்மீதிருக்குஞ் சுமையடைக்கட்டைகளை மரகத ரத்தினத்தினாற்செய்தான். அழகிய கோமேதகத்தினாலே நீண்டவிளிம்பினைச் செய்தான். சோதியைப்பரப்பும்பெரியமாணிக்கங்களாலியற்றியனவாகியபல உரு வங்களைச்சேர்த்தான். குளிர்ந்த முத்துமாலையைமேலேகட்டினான். எ-று. (௯௯)

பரந்த வாளொளி ததும்பிய வச்சிரப் பலகை
நிரந்து கீழ்ப்படப் படுத்தன னிரைக்கதிர்த் தொகுதி
சுரந்த பன்மணிப் பலகையா னெடும்படி தொகுத்தான்
புரந்த வான்கதி ரொளிமழுங் குறவொளி புரிந்தான்.

(இ - ள்,) பரவிய வெள்ளொளிவீசிய வச்சிரரத்தினப் பலகையை வரிசைப் படுத்திக் கீழேபொருந்தப்பதித்தனன். வரிசையாகிய கிரணத்தொகுதி பெரு கிய பலவகை ரத்தினப்பலகைகளால் நெடியபடிக்கட்டுகளமைத்தான். (உலகி னைக்)காத்த ஆகாயவழியிற் செல்லும் சூரியகாந்தியும் மழுங்கும்படி காந்திசெய் தான். எ - று. (௱)

சூளி கைப்புறத் திருகதி ரிடறவிண் டுவன்று
மாளி கைக்குல மளவொழிந் தனவென வகுத்தான்
சாள ரம்பல பன்மணி குயிற்றினன் சமைத்தா
னீள நின்றெழு வாயில்க ளவணவ ணிரைத்தான்.

(இ - ள்.) சூளிகையின்பக்கலில், (சூரியசந்திரர்களாகிய) இருசுடரும் வழி யிடறும்படி ஆகாயமளாவிய மாளிகைக்கூட்டங்களை அளவிறந்தனவெனச்சொல் லும்படி நிருமித்தான். பலசன்னல்களைப் பலரத்தினங்களாற் சமைத்தான். நீள மாகநின்றுதோன்றும் வாயில்கள் ஆங்காங்கு வரிசையாகச் செய்தான். எ - று.

வாயி லின்றிய சுவர்த்தலம் வாயில்க டோன்ற
வேய வாயில்கள் வாயிலன் றெனமன மருட்டப்
பாய வச்சிரத் தளவிசை வெள்ளொளி படைத்தான்
மேய வாருதித் திரைபுரண் டனவென விதித்தான்.

(இ - ள்.) வாயில்களில்லாத சுவர்களில் வாயில்கள்போலத் தோன்றவும், பொருந்திய வாயில்கள் வாயில்களல்லவென மனமதை மயக்கவும், பரவிய வச்சிர ரத்தினத்தின் அளவாகச்சொல்லும் வெள்ளியவொளியைப்படைத்தான். (சில விடங்களில்) கடலானது பொருந்திய அலைகள் புரண்டதென்று சொல்லும்படி நிர்மித்தான். எ - று. (௬௨)

இயங்கு பேரொளி வெள்ளியங் கயிலையோன் றிருப்ப
வயங்கு பொற்கயி லாயமீ தெனவில மதிப்பத்
தயங்கு வாளரி யாசன மகவையுட் டந்தான்
முயங்கு பன்மணித் தொகுதியிற் கதிரொளி முளைப்ப.

(இ - ள்.) பிரகாசிக்கின்ற பேரொளியையுடைய அழகிய வெள்ளிமலையாகிய கைலாயகிரியொன்றிருக்கவும், விளங்குகின்ற பொன்மயமாகிய கைலாயமிது வென்று உலகினர் மதிக்கும்படி அதனிடையே கூடிய பலரத்தினங்களின் கூட்டத்தாற் சூரியகாந்தி தோன்றும்படி ஒளிதங்கிய சிங்காசனத்தைச் சிருட்டித்தான். எ - று. (௬௩)

இனைய வாகிய திருச்சபை யலங்கொளி யியங்கத்
தினக ரன்பசும் புரவியுந் தம்மொளி திரிந்த
கனைக ருங்கட லுலகெலா மவ்வொளி கரப்ப
வனைச ராசரத் துருவுகட் புலப்படா மயங்கும்.

(இ - ள்.) இத்தகைத்தாகிய சிறந்தசபையின் பிரகாசிக்கின்ற காந்தியானது விளங்குதலால், சூரியனும் அவன்பச்சைக் குதிரையும் தங்கள் தேகவொளி மாறின. சப்திக்கின்றகரிய கடல்சூழ்ந்த வுலகமுழுவதும் அவ்வொளியில் மறைய, அழகிய சராசரப் பொருள்களின் வடிவங்கள் கட்புலனுக்குத் தெரியாமல் மயங்கின. எ - று. (௬௪)

சிகர மீப்படச் செறித்தன னப்பெருஞ் சிகரப்
புகரின் மாமணி யிமைத்தெறி கொழுந்தொளி போகிக்
ககன மெங்கணும் பன்மணிக் குழும்பொடு கரத்தா
னிகரி னன்னவன் றீற்றிய தொக்குமா னிகழ்த்தின்.

(இ - ள்.) சிகரத்தைமேலோங்கி சிறப்பச் சேர்த்தனன். அந்தப்பெரிய சிகரத்தின்கண்ணுள்ள குற்றமில்லாத பருத்தமாணிக்கங்கள் ஒளிவிட்டு வீசுகின்ற கொழுந்தின் காந்தியானது ஒப்புசொல்லுமிடத்தில் இந்திரனுடைய உலகமுழுவதையும், பலரத்தினக்குழும்பால் தனதுகையைக்கொண்டு ஒப்பில்லாத அவன் தீட்டியதை யொத்திருக்கும். எ - று. (௬௫)

எண்ணி றந்தொழி யண்டமுற் றுயிர்த்தொகை யாவு
நண்ணி யெய்தினு மோர்புடை யொடுங்குமா னவைதீர்
வண்ண வார்திரைப் பிரளயம் புகுதினு மருங்கோர்
கண்ண டங்குமென் றுலினி யென்சொலக் கடவோம்.

(இ - ள்.) கணக்கின்றியுள்ள அண்டமுழுவதுமுள்ள உயிர்த் தொகுதிகளெல்லாம் அடைந்திருந்தாலும் அதில் ஒருபக்கலி லடங்கும். குற்றநீங்கிய அழகிய நெடிய அலைகளையுடைய பிரளயவெள்ளம் புகுந்தாலும் பக்கலில் ஓரிடத்தில் அடங்கிவிடுமென்று சொல்வோமானால், இன்னும் அதனை என்ன வர்ணித்துச் சொல்லக்கூடும்? எ - று. (௬௬)

இன்ன தன்மைய வாகிய தெய்வமாச் சபையிற்
பொன்ன லங்கொளித் திகிரியோன் முதலிய புலவர்
மன்னு மாகணத் தொகுதியர் யாவரும் வணங்க
வென்னை யாளுடை நாயக னினிதெழுந் தருளி.

(இ - ள்.) இவ்வகைத்தாகிய பெரியதெய்வசபையில், பொன்போலப் பிரகாசிக்குஞ் சக்கிராயுதமுடைய திருமால் முதலாகிய தேவர்கள், நிலைபெற்ற பெரிய கூட்டமாகிய சிவகணங்கள் எல்லோரும் வணங்கும்படி, என்னை யடிமையாக வுடைய சிவபெருமான் இனிதாக வெழுந்தருளி. எ - று. (௬௭)

வள்ளை வார்குழை மரகதப் பசுங்கொடி யைங்கைப்
பிள்ளை வெள்ளிலை வேற்படை யொருதனிப் பெருமா
னுள்ளு வந்தெழு முவகையி னொருங்குவந் திருப்ப
வெள்ளின் பாமணி யாசனத் திருந்தன னெம்மான்.

(இ - ள்.) வள்ளைக்கொடிபோலும் நெடிய குண்டலமணிந்த காதினையுடைய பசியகொடிபோன்ற உமாதேவியார் ஐந்துதிருக்கரங்களையுடைய மூத்தபிள்ளையார் வெள்ளிய அச்சவடிவாகிய வேலாயுதமேந்திய ஒப்பற்ற இளையபிள்ளையாராகிய குமாரசுவாமி மனத்தின்கண் சந்தோஷித்தெழுகின்ற ஆநந்தத்தோடு ஒருசேரவந்திருக்கவும், எமது சிவபெருமான் இகழ்ச்சியில்லாதபெரிய ரத்தினசிங்காசனத்தில் வீற்றிருந்தனர். எ - று. (௬௮)

இலகு மாமணி மண்டபத் தரிமுத லிவர்ந்த
புலவர் யாவருஞ் சொற்றனர் முறைமுறை புகுந்தார்
விலகி நின்றனர் நந்திகை வேத்திரம் புடைப்ப
வலகி னீண்முடிப் பன்மணி தெறித்தன ரநேகர்.

(இ - ள்.) பிரகாசிக்கின்றபெரிய இரத்தினமண்டபத்திலே திருமால்முதலாக ஏறிய தேவர்களெல்லாருந் துதிசொன்னார்கள். வரிசைவரிசையாகப் பிரவேசித்தார்கள். தூரமாக நின்றார்கள். திருநந்திதேவர் தமதுகையிலுள்ள பிரம்பினாலடித்தலால் அநேகர் தங்கள் குற்றமில்லாத நெடிய முடிகளிலிருந்து பலரத்தினங்களைச் சிந்தினார்கள். எ - று. (௬௯)

இரும ருங்கினு மரிமுதற் புங்கவ ரெவரு
மருவி நின்றன ராங்கவ ரணிமணி மகுட
மருண ராயிரங் கோடியின் மேற்பட வடைந்து
பொருப சுங்கதி ருமிழ்ந்துமிழ்ந் திமைப்பது போன்ற.

(இ - ள்.) இருபுறத்திலும் திருமால்முதலிய தேவர்களெல்லாரும் பொருந்தி நின்றார்கள். அப்பொழுது அத்தேவர்களணிந்த ரத்தினகிரீடங்கள் (எப்படியிருந்தனவென்றால்) சூரியர் ஆயிரங்கோடிக் கதிகமாகவந்து சுடுகின்ற பரிய கிரணத்தைச்சிந்திச்சிந்திப் பிரகாசிப்பதுபோன்று விளங்கின. எ - று. (௭௦)

மலர்க்க ருஞ்சுரு ளோதிய வானவர் மகளி
ரிலிர்த்த சாமரை யெடுத்தன ரிருமருங் கிரட்ட
வுலத்த டம்புயக் கணத்தவர் நறும்புகை யோட்டச்
சிலிர்த்த திண்சினைக் கற்பகம் பூமழை சிதற.

(இ - ள்.) மலர்சூடிய கரிய சுருண்ட கூந்தலையுடைய அரம்பாஸ்திரீகள் தலைபரந்த சாமரைகளைக்கையிற்றாங்கி இருபக்கலிலும் புரட்டவும், திரண்ட கல் போன்ற பரந்த தோளையுடைய சிவகணங்கள் மணம்பொருந்திய தூபம்போட

வும், குளிர்ச்சிவாய்ந்தவலிய கிளைகளையுடைய கற்பகவிருட்சமானது மலர்மாரி சொரியவும். எ - று. (௫௧)

நார தாதிய ரெடுத்திய னரப்பிசை யமுதஞ்
சோர வாயினின் றதிர்குரற் பல்லியந் துவைப்ப
மூரி யெண்டிசை யரகர வெனுந்தொனி முழங்க
வேர வார்சடை யெம்பிரான் றிருச்சபை விளங்க.

(இ - ள்.) நாரதர் முதலானவர்கள் எடுத்து நடத்துகின்ற நரம்புக் கருவியின் இசையமுதமுஞ் சோர்வெய்தும்படி வாயினின்று அதிர்கின்ற குரலொலியோடு பலவாத்தியங்கள் முழங்கவும், மணம்பொருந்திய நெடியசடையையுடைய எமது சிவபெருமானுடைய சிறந்த சபையானது விளங்க. எ - று. (௫௨)

அவிழ்ந்த வார்சடை குலைந்தலைந் தருஞ்சுவற் புறத்துக்
கவிழ்ந்து சோர்தரச் சிந்தனை முந்துறக் கரத்தாற்
குவிந்த சென்னிய ரோடினர் கொடுந்தவ மல்லாற்
றவிர்ந்த சிந்தைய ரடைந்தனர் சந்நிதிச் சபையில்.

(இ - ள்.) வலியதவமேயல்லாமல் (மற்றெல்லாவற்றையும்) நீக்கிய மனமுடைய முனிவர்கள், தமது கட்டவிழ்ந்த நீண்டசடையானது குலைந்தலைந்து, அரியதோட்புறத்தில்வீழ்ந்து தொங்கவும், தங்கள்மனம் முற்பட, கூப்பிய கையுடன் வணங்கிய சிரமுடையவர்களாயோடி, சபையின் சந்நிதியி லடைந்தார்கள்.

ஆடி னார்சில ரங்கையிற் குடந்தமிட் டசைந்து
பாடி னார்சில ருயிர்த்தனர் சிலர்சிலர் பதைத்து
வீடி னாருயிர்த் தாரெனு முவகையால் விழிநீ
ரோடி னார்சிலர் புரண்டனர் சிலர்சில ருருண்டார்.

(இ - ள்.) அப்பொழுது அவர்களிற் சிலர் ஆனந்தக்கூத்தாடினார்கள். சிலர் அழகியகையினால் [குடந்தம்] நால்விரன்முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடைவைத்து நின்று அசைந்து பாடினார்கள். சிலர்பெருமூச்சுவிட்டார்கள். சிலர் பதைத்து மரித்தார்கள். (அவர்கள் மீண்டும்) பிழைத்தார்களென்னுஞ் சந்தோஷத்தாற் சிலர் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். சிலர் நிலமிசைப் புரண்டார்கள். சிலர் உருண்டார்கள். எ - று. (௫௩)

உயிர்த்தி லார்சில ரொருதனித் தங்களை மறப்புற்
றயிர்த்தி லார்சில ரானந்த வாரிவீழ்ந் துடலம்
பெயர்த்தி லார்சிலர் பேசினார் சிலர்சிலர் பிரியாக்
குயிற்கு லம்படு பாகனைக் கண்டுகண் குளிர்ந்தார்.

(இ - ள்.) சிலர் சுவாசம்விட்டாரில்லை. சிலர்தனித்தனி ஒப்பற்ற தங்களை மறந்து சந்தேகித்தாரிலர். சிலர் ஆநந்தக்கடலிற்படிந்து தேகத்தை யசைத்தாரிலர். சிலர் பலவாறு பேசினார்கள். சிலர் குயின்மொழியுடைய உமாதேவியாரை யென்றும் பிரியாது வாமபாகத்திலுடைய சிவபெருமானைத் தரிசித்துக் கண்கள் குளிரப்பெற்றார்கள். எ - று. (௫௫)

மெய்பொ டித்தனர் சிலர்சிலர் விம்மலுற் றயர்ந்து
செய்கை யற்றனர் சிலருயிர்ப் பெறிந்தனர் சிலரான்
மைய லுற்றனர் நாத்தடு மாறினர் மருண்டார்
பொய்க டிந்தரு மாதவ மியற்றிய புனிதர்.

(இ-ள்.) பொய்யை யகற்றி அரும்பெருந்தவஞ்செய்த பரிசுத்தர்களாகிய அம்முனிவர்களிற் சிலர் உடன்முழுதும் மயிர்க்கூச்செறிந்தார்கள். சிலர் பூரித்துச்சோர்ந்து செயலற்றிருந்தார்கள். சிலர்சுவாசித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் மனமயக்கெய்தினார்கள். சிலர் சொற்றடுமாறினார்கள். சிலர்பிரமித்தார்கள். எ-று.

இன்ன தன்மைய சவுனக ராதியா மிவரை
யென்னை யாளுடை நாயகன் குழாத்தொடு மெதிர்ந்த
மன்னு நான்மறை வசிட்டனே முதலமா தவத்தோர்
முன்னை நாரதன் முதலிய கடவுண்மா முனிவர்.

(இ-ள்.) இத்தகையதன்மையராகிய சவுநகர் முதலாகச் சொல்லப்பட்ட இந்தநைமிசாரணியமுனிவர்களை, என்னையாளாகவுடைய சிவபெருமான் திருக்கூட்டத்துடன் எதிர்ந்த நிலைபெற்ற நான்குவேதங்களும்உணர்ந்த வசிட்டர்முதலாகிய பெருந்தவமுடையோர்களும், பழமையாகிய நாரதர்முதலிய தெய்வீகம் பொருந்திய முனிவர்களும். எ-று. (கூஎ)

காசி பன்றவக் கண்ணுவன் கவுதமன் பிருகு
கோசி கன்பரா சரர்ததீ சியொடுங் குச்சர்
மாச றுந்தவத் தேவலர் முற்கலர் மரீசி
யேச றுந்தவத் துரோமச ரங்கிர சிவர்கள்.

(இ-ள்.) காசிபர் தவத்தையுடைய கண்ணுவர் கவுதமர் பிருகு கௌசிகர் பராசரர் ததீசி குச்சகர் குற்றமற்றதவத்தையுடைய தேவலர் முற்கலர் மரீசி ஏசுதலற்ற தவமகிமையுடைய உரோமசர் அங்கிரசு ஆகிய இவர்களும். எ-று. ()

ஏனை மாமுனித் தலைவரு முவகைமிக் கெழுந்து
மோன மாதவ ரிவரொடு மெதிரெதிர் முன்னி
யான வன்பொடு மளவளாய்த் தழுவின ராகி
மான மாதவத் தந்தணீர் கேட்கென வலிப்பார்.

(இ-ள்.) சிறந்த மற்றைய முனிசிரேஷ்டர்களும் சந்தோஷ மதிகரித்துப் புறப்பட்டு, மௌனநிலையையுடைய பெருந்தவசிகள் இவர்களோடும் எதிரெதிராகக் கருதிய அன்புடன் அளவளாவித் தழுவிக்கொண்டவர்களாய் மானத்தையும் சிறந்த தவத்தையுமுடைய அந்தணர்களே! கேட்பீர்களாகவென்று சொல்வாரானார்கள். எ-று. (கூகூ)

மூரி நாண்மலர்க் கிழவனன் றருளிய மொழியா
லார்வ முற்றெழ நைமிசா ரணியமுற் றடைந்தீர்
வார்கொ டுஞ்சடைச் சூதனோர் முகக்கலை மதியாற்
சூர்த டிந்தவன் கதையமு தினிதுறத் துய்த்தீர்.

(இ-ள்.) பழமையாகிய அன்றலர்ந்த தாமரைமலரில் வசிக்கும்பிரமதேவன் அக்காலத்திற் கூறியருளிய சொற்படி ஆசையதிகரித்துண்டாக நைமிசாரணியத்தைச்சென்றடைந்தீர்கள். நீண்டுவளைந்த சடையையுடைய சூதமுனிவரது முகமாகிய ஒற்றைக்கலையையுடைய சந்திரனால், சூரபன்மனைச்சங்கரித்த குமாரசுவாமியின் சரிதமாகிய அமிர்தத்தை இனிமையுண்டாகப் புசித்தீர்கள். எ-று.

ஆத லானுமக் கரிக்குமற் றயனுக்கு மரிய
வேத நாயகன் காட்சிதந் தருளினன் விருப்பாற்
றீதின் மாதவச் செய்கையிற் பெறுவன சிறந்தீ
ரோத வேண்டுவ தில்லென விழுப்பமுற் றுரைத்தார்.

(இ-ள்.) ஆனபடியால், திருமாலுக்கும் பிரமதேவனுக்கும் அறிதற்கரியவேத நாயகராகிய சிவபெருமான் உங்களுக்குத் தரிசனந்தந்தருளினர். குற்றமில்லாத பெருந்தவச்செய்கையில் அடையவேண்டுவனவற்றில் விருப்போடு மேம்பட்டீர்கள். இனி, சொல்லவேண்டியதில்லையென்று மேன்மையான வார்த்தைகளையெல்லாஞ்சொன்னார்கள். எ - று. (௬௧)

ஆய மாதவத் தலைவருக் காங்கருந் தவத்துத்
தூய நைமிசா ரணியமா தவத்தருந் துவன்றி
யேய வேண்டிய யாவையு மிசைப்பன விசைத்தார்
பாய வெள்விடை யவற்றொழு தேத்தினர் பணிவார்.

(இ-ள்.) அப்படிச்சொன்னவர்களாகிய பெருந்தவத்தலைவர்களுக்கு அப்பொழுது அருந்தவமுடைய புனிதமாகிய நைமிசாரணியத்துப் பெருந்தவசிகளும் தோன்றிச்சொல்லவேண்டிய உபசாரங்களையெல்லாஞ் சொல்லத்தக்கனவாகச் சொன்னார்கள். பாய்ந்துசெல்லும் வெண்மையாகிய இடபவாகனமுடைய சிவபெருமானைப் பணிந்து நமஸ்கரித்துத்துதிப்பாரானார்கள். எ-று. (௬௨)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சங்கரா போற்றி போற்றி தற்பரா னந்தா போற்றி
கங்கரா போற்றி போற்றி கண்ணுதற் பரமா போற்றி
பொங்கரா வணிந்த வேணிப் புண்ணியா போற்றி போற்றி
திங்களங் கண்ணித் தொல்லோய் சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்) [சங்கரா] சுகத்தைச் செய்பவரே! போற்றி போற்றி. [தற்பரா] தனக்குத் தானே பரமானந்தமானவரே! போற்றி. [கங்கரா] (பிரமன்) தலைபொருந்திய கையையுடையவரே! போற்றி போற்றி. நெற்றிக்கண்ணையுடைய மேலானவரே! போற்றி. கோபித்த சர்ப்பத்தையணிந்த சடையையுடைய புண்ணிய சொரூபியே! போற்றி போற்றி. அழகிய சந்திரனைச் சிரோமாலையாகவணிந்த பழமையானவரே! சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௩)

அரியயர்க் கெட்டாய் போற்றி யானந்த நிருத்தா போற்றி
கரியமா ணிக்க மன்ன கறைமிடற் றிறைவா போற்றி
புரிதரு முகுள மூரற் பொங்கொளி நிலவு காட்டித்
திரிபுர மெரித்தாய் போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) திருமாலுக்கும் பிரமனுக்கும் அதீதப்பட்டவரே! போற்றி. ஆநந்தத்திருநடனஞ் செய்பவரே! போற்றி. கருமாணிக்கம் போன்ற விஷம்பொருந்திய கண்டத்தையுடைய தலைவரே! போற்றி. புரிந்த அரும்புபோன்ற புன்னகையால், மிகக்காந்தியுடைய சந்திரிகையைக் காண்பித்துத் திரிபுரதகனஞ் செய்தவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௪)

பூக்கமல முந்தி யானைப் புரந்துல களித்தாய் போற்றி
நீக்கமி லுயிர்க டோறு நின்றுண வளித்தாய் போற்றி
யாக்கிய முகங்க டோறு மலைபுரண் டிரைக்கும் கங்கை
தேக்கெறி சடையாய் போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) மணம்வீசுந் தாமரையுந்தியையுடைய திருமாலைக்காத்து உலகத்தையுங் காத்தவரே! போற்றி, நீக்கமில்லாத உயிர்களிலெல்லாம் நின்று உணவுகளைக் கொடுப்பவரே! போற்றி. (ஆயிரமாக) ஆக்கிய முகங்களிலெல்லாம்

அலைகள் புரண்டொலிக்கும் கங்காநதியானது ஊற்றெடுத்து வீசுகின்ற சடையை யுடையவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௫)

முக்கணா யகனே போற்றி முழுமுதற் றலைவா போற்றி
நக்கனே போற்றி போற்றி நான்மறைக் கொழுந்தே போற்றி
யெக்குவெண் பிறையி னோங்கி யிருவிசும் படைந்து நின்ற
செக்கரம் பரமே போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) திரிநேத்திரங்களையுடைய தலைவரே! போற்றி. முழுமுதற் கடவுளே! போற்றி. [நக்கனே] திகம்பரரே! போற்றி. போற்றி நான்குவேதங்களின் உச்சியில் விளங்குபவரே! போற்றி. ஏறுகின்ற வெள்ளியபிறைச் சந்திரன்போலுயர்ந்து, பெரிய ஆகாயத்திற் பொருந்திநின்ற அழகிய செவ்வானம்போன்ற பரமனே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௬)

ஒருதனித் தலைவா போற்றி யுயிர்க்குயி ரானாய் போற்றி
கருணையங் கடலே போற்றி கனங்குழை யிடத்தாய் போற்றி
பொருசிலை வேனிற் காளை பொங்கழற் கொளுந்தி வீழத்
திருநுத றிறந்தாய் போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) ஒப்பற்ற தனியாகிய தலைவரே! போற்றி. சீவான்மாக்கட்கெல்லாம் பரமான்மாவானவரே! போற்றி. அழகிய கிருபா சமுத்திரமே! போற்றி. கனமாகிய காதணியையுடைய உமாதேவியை வாமபாகத்தி லுடையவரே! போற்றி. போர்செய்யுங் கருப்புவில்லேந்திய வேனிற்காலத்திற் குரிய காளையாகிய மன்மதனை, அதிகரித்த தீயினாலெரிந்து விழும்படி அழகிய நெற்றி விழியைத் திறந்தவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௭)

முற்பரா போற்றி யையைந் தாகிய முதல்வா போற்றி
நிற்பரா வினர்க்கி ரங்கி நின்னிலை யளித்தாய் போற்றி
தற்பரா போற்றி போற்றி சகளநிட் களமே போற்றி
சிற்பரா னந்தா போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்) முதலாகிய பரமானவரே! போற்றி. இருபத்தைந்து மூர்த்தங்களாகிய தலைவரே! போற்றி. தேவரீரைத் துதித்தவர்களுக்கிரங்கித் தேவரீர் நிலைமையை யளித்தவரே! போற்றி. தற்பரா! போற்றி. போற்றி. சகள நிட்களமே! போற்றி. சிற்பரானந்தரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௮)

தருமதற் பரமே போற்றி தவம்புரி தவமே போற்றி
கருணைவா ருதியே போற்றி கட்புலத் தரியாய் போற்றி
யொருதனிக் கயிலை கீண்டோன் புயகிரை யொடிய வொற்றைத்
திருவிர லுறுத்தாய் போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) தருமமயமாகித் தமக்குத்தாமே பரமானவரே! போற்றி. தவஞ்செய்கின்ற தவசொரூபியே! போற்றி. கருணைக்கடலானவரே! போற்றி. கட்புலனுக்கு அருமையானவரே! போற்றி. ஒப்பற்ற திருக்கைலாயகிரியை யசைத்த இராவணனுடைய தோள்வரிசை யொடிபடும்படி ஒரு திருவிரலை யழுத்தியவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௬௯)

எந்தையே போற்றி போற்றி யிறைவனே போற்றி போற்றி
தந்தையே போற்றி போற்றி தருமமே போற்றி போற்றி
முந்தையோய் போற்றி போற்றி முக்கணெம் பெருமா போற்றி
செந்தழற் கொழுந்தே போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) எமது தந்தையானவரே! போற்றி போற்றி. தலைவராயுள்ளவரே போற்றி போற்றி. தகப்பனானவரே! போற்றி போற்றி. தருமசொரூபியே! போற்றி போற்றி. முற்பட்டவரே! போற்றிபோற்றி. திரிநேத்திரங்களையுடைய எமது பெருமானே! போற்றி. செவ்விய அக்கினிக்கொழுந்தானவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௭௦)

வம்பவி ழலங்க லோதி மலைமக டலைவா போற்றி
பம்புசெங் குருதிச் சூலப் படையுடைப் பரனே போற்றி
வெம்புலி யரவ நோக்கி வேட்கைமிக் கிரப்ப ஞானச்
செம்பொனம் பலத்து ளாடுஞ் சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) மணத்தோடலர்ந்த மலர்மாலையணிந்த கூந்தலையுடைய பர்வதராசகுமாரியின் கணவரே! போற்றி. சிவந்த உதிரந்தோய்ந்த சூலாயுதத்தையுடைய மேலானவரே! போற்றி. வெவ்வியபுலி(யாகிய வியாக்கிரபாத) முனிவரும் அரவமாகிய (பதஞ்சலி) முனிவரும் ஆசைமிகுந்து நேசிக்க, ஞானசொரூபமாகிய செம்பொன்னாலாகிய அம்பலத்திலே திருநடஞ்செய்கின்ற சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௭௧

மாசற விளங்குஞ் சோதி மாணிக்க மலையே போற்றி
பூசுவெண் பொடியாய் போற்றி புராதனா போற்றி போற்றி
யேசறு தவத்தோர்க் குள்ளத் திருளற விளக்கு ஞான
தேசிக பரமா போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) குற்றமறப் பிரகாசிக்குஞ் சோதிமாணிக்க மலையாயுள்ளவரே! போற்றி. பூசிய தாவள்யமான விபூதியையுடையவரே! போற்றி. பழைமையானவரே! போற்றி போற்றி. ஏசுதலற்ற தவமுடையோர்களுக்கு மனத்திலுள்ள அஞ்ஞான நீங்கப் பிரகாசிக்கின்ற ஞானதீபமாகிய தேசிகரே! மேலானவரே! போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௭௨)

ஐயனே போற்றி போற்றி யமலனே போற்றி போற்றி
மெய்யனே போற்றி போற்றி விமலனே போற்றி போற்றி
பையரா வணியாய் போற்றி பவளமால் வரையே போற்றி
செய்யனே போற்றி போற்றி சிவசிவ போற்றி போற்றி.

(இ - ள்.) ஐயரே! போற்றி போற்றி. அமலரே! போற்றி போற்றி. உண்மைமயமானவரே! போற்றிபோற்றி. மலரகிதரே! போற்றி போற்றி. படம்பொருந்திய பாம்பினை ஆபரணமாக வணிந்தவரே! போற்றி. பெரிய பவளமலைபோல்பவரே! போற்றி. செவந்ததிருமேனியுடையவரே! போற்றி போற்றி. சிவசிவ! போற்றி போற்றி. எ - று. (௭௩)

என்பன பலவும் பன்னி யெடுத்தெடுத் திரங்கி யேத்தி
யன்புநெக் குருகிச் சிந்தை யண்ணல்பாற் செலுத்தி மீளார்
புன்புறம் பொடிப்ப நின்று புரிசடைப் புனித னாடன்
மென்பதக் கமலந் தாழ்ந்து வீழ்ந்தனர் முனிவர் யாரும்.

(இ - ள்.) என்பனவலவற்றையும் எடுத்தெடுத்துக்கூறியாசித்துத்துதித்து, அன்புடன் நெக்குவிட்டு, மனத்தைச்சிவபெருமானிடத்திற்செலுத்தித்திரும்பாராய், முனிவர்கள்யாவரும் உடல்முழுதும் மயிர்க்கூச்செறியநின்று, புரிந்தசடையையுடைய பரிசுத்தராகிய சிவபெருமானது திருநடம்புரியும் மெல்லியபாததாமரையிற்படிந்து நமஸ்கரித்தார்கள். எ - று. (௭௪)

இத்திற முனிவர் யாரு மென்புடைந் துருகி யுள்ள
மொத்துற நோக்கி யெம்மான் றிருவரு ளுவப்ப தானுன்
மெய்த்தவத் திறத்தீர் நீவிர் வேண்டிய விருப்பாற் சூத
னுய்த்துரைத் துணர்த்த வெம்பாற் சரிதைமுற் றுணரப் பெற்றீர்.

(இ - ள்.) இவ்வகையாக முனிவர்களெல்லாரும் என்புகளுடைந்துருகி மன மொத்திருப்பக்கண்டு, எமது சிவபெருமான் திருவுள்ளங்களிப்பதானார்-உண்மைத் தவத்திறமுடையவர்களே! நீங்கள்வேண்டியவிருப்பத்துடன், சூதமுனிவர் ஆலோசித்துச்சொல்லித்தெளிவிக்க எம்முடையசிவசரிதமுழுவதும் அறியப்பெற்றீர்கள்

பரமரா சியமென் றோது மிக்கதைப் பரவை யாய்ந்து
விரவிய காண்ட மேழு மறுவற விளங்கப் பெற்றீ
ரொருவினன் மறையா லெம்மைப் பரசினீ ரும்மை நோக்கிக்
கரையழி யுவகை யோடு மெம்முழைக் காட்சி தந்தேம்.

(இ - ள்.) மேலான அந்தரங்கமென்றுசொல்லப்பட்ட இக்கதாசாகரத்தை [கந்தபுராணசிவரகசியகண்டத்தை] ஆராய்ந்து, பொருந்திய சப்தகாண்டங்களையும் குற்றமற நன்குணரப்பெற்றீர்கள். நீக்கமில்லாதநல்ல வேதவாக்கியங்களால் நம்மைத்துதிபுரிந்தீர்கள். உங்களைப்பார்த்துஎல்லையில்லாதபேரானந்தத்தோடும், எமது தரிசனத்தைக்கொடுத்தோம். எ - று. (எசு)

நீவிரிங் கியற்று கின்ற மாதவ நினைந்தே மல்லேஞ்
சேவலங் கொடியோன் றெய்வச் சரிதைநீர் தெளியப் பெற்றீ
ராவது கருதி நும்பா லளித்தன மருந்த வத்தீ
ரோவறு கருத்தில் வேட்கை யுரைத்திரென் றருளிச் செய்வார்.

(இ - ள்.) நீங்கள் இவ்விடத்திற்புரிகின்ற பெருந்தவத்தைக்கருதினோமல்லோம். அழகிய சேவற்கொடியையுடைய குமாரசுவாமியின் தெய்வீகந்தங்கிய சரிதத்தை நீங்கள் அறியப்பெற்றீர்கள். ஆனதுயோசித்து உங்களுக்கு அநுக்கிரகித்தோம். அருந்தவம்புரிந்தமுனிவர்களே! கெடுதலற்றமனதில் விரும்பியதைச் சொல்லுங்களென்றருளிச்செய்ய, முனிவர்கள் சொல்லுகின்றார்கள். எ-று. (எஎ)

இப்பெருஞ் சரிதை கேட்டோர்க் கெம்பிரான் காட்சி நல்கி
முப்பெருஞ் சிறப்பு நல்கி முத்தியீ றளித்தல் வேண்டுஞ்
செப்பருங் குணத்த ரன்பாற் சிந்தைநின் சரிதை கேட்ப
தொப்பரு நினைம றாமை வேண்டுது முடையோ யென்றார்.

(இ - ள்.) எமதுபெருமானே! எம்மை உடையவரே! இம்மாசரிதத்தைச் சிரவணஞ்செய்பவர்களுக்குத் தேவரீர்காட்சியளித்து, (அறம்பொருளின்பமென்னும்) பெரியமூன்றுசிறப்புக்களுங்கொடுத்து, அவர்கள் தேகாந்தத்தில் மோக்ஷமுந் தந்தருளல் வேண்டும். சொல்லுதற்கரிய நற்குணமுடையவர்கள் அன்புபொருந்திய மனதுடன்தேவரீர்சரிதையைக்கேட்பதும், ஒப்பற்றதேவரீரை மறவாமையும்வேண்டுகின்றோ மென்றார்கள். எ - று. (எஅ)

எம்பிரான் றொண்ட ரோடு மளவளா யிருத்தன் மூக்கட்
டம்பிராற் குரிய வெண்ணீ றஞ்செழுத் திவற்றைச் சார்த

னம்பநின் விளையாட் டெல்லாங் காண்வர நல்க வேண்டு
மிம்பரி னெமக்கு முத்தி யீதென விரந்து நின்றார்.

(இ - ள்.) கடவுளே! எமதுபெருமானாகிய தேவரீருடைய அடியார்களோடும் அளவளாவியிருக்கவும், திரிநேத்திரங்களையுடைய தேவரீருக்குரிய திருவெண்ணீறு பஞ்சாக்ஷரமாகிய விவற்றையடையவும், தேவரீர் திருவிளையாடல்களையெல்லாங் காணவும்வரந்தரவேண்டும். இவ்வுலகத்தில் அடியேங்கட்கு இதுவே முத்தி யின்பமென்றுயாசித்து நின்றார்கள். எ - று. (எகூ)

என்றிவ ரெடுத்துச் சொற்ற யாவையு மினிது நல்கிக்
கொன்றையஞ் சடிலி தேவர் குழாத்தொடுங் கைலை புக்கா
னின்றமா முனிவர் நோக்கி நெஞ்சழிந் திருகை கூப்பிக்
கன்றுதாய்க் கிரங்கு மாபோற் கரைந்துகண் கலுழ்வ தானார்.

(இ - ள்.) என்று இம்முனிவர்கள் எடுத்துக்கூறியவற்றையெல்லாம் இனிதாகப்பிரசாதித்து, அழகியகொன்றைமாலையணிந்த சடையையுடைய சிவபெருமான்தேவர்கூட்டத்துடன் திருக்கைலாயத்தையடைந்தனர். அங்கிருந்த சிறந்த முனிவர்கள் அதனைக்கண்டு மனம்வருந்தி இருகரங்களைக்குவித்து, கன்றுக்குட்டியானது தாய்ப்பசுவுக்காசவருந்தும் வகைபோலவருந்திக்கண்ணீர்சொரிந்தார்கள்.

தெய்வமாக் கயிலை நோக்கி யெம்பிரான் சேற னோக்கிப்
பொய்யின்மா தவத்தர் யாரு மொருவழிக் கொண்டு போந்தார்
மையின்மா தவத்துச் சூத முனிவனை வணக்கம் போக்கி
யையநின் னருளாற் பெற்றே மிப்பய னளிய மென்றார்.

(இ - ள்.) தெய்வீகம்பொருந்தியபெரிய கைலாயகிரியைநோக்கி எமது சிவபெருமான்செல்லுவதைக்கண்டு, பொய்மையில்லாத பெருந்தவசிகளெல்லாரும் மனதையொருவழிப்படுத்தித் திரும்பினார்கள். குற்றமில்லாத பெருந்தவமுடைய சூதமுனிவரை நமஸ்காரஞ்செய்து, ஐயனே! தேவரீர் திருவருளால் எளியேங்கள் இப்பெரும்பயனையடையப்பெற்றோமென்றார்கள். எ - று. (அக)

பூக்கமழ் கமலத் தோனா லிவ்வுழைப் போந்தே மெங்கள்
பாக்கிய மிருந்த வாநீ யிந்நிலை படரப் பெற்றேந்
தாக்குவெஞ் சமரில் வெஞ்சூர் தடிந்தவன் சரிதை யீங்குன்
வாக்கினா லுணரப் பெற்றே மினிப்பெறு வரனு முண்டோ.

(இ - ள்.) மணம்பொருந்திய தாமரைமலரிலெழுந்தருளிய பிரமதேவனால் இவ்விடத்திற்கு வந்தோமாகிய அடியேங்கள் பாக்கியம் இருந்தவகையாக, தேவரீர் இந்நைமிசாரணியத்திற்கு அடையப்பெற்றோம். மோதுகின்றகொடியயுத்தத்திலே வலியசூரபன்மனைச் சங்கரித்த குமாரக்கடவுளின் சரித்திரத்தை இப்பொழுது தேவரீர்திருவாக்கால் அறியப்பெற்றோம். இன்னும் அடையத்தக்க வரமொன்றுள்ளதோ? எ - று. (அஉ)

இப்பெரும் புராணங் கேட்ப தியபடித் துரைப்ப தீது
செப்பருந் தலமற் றெல்லாம் வரன்முறை செப்பு கென்றார்
துப்புவிட் டனைய வேணிச் சூதமா முனிவன் சொன்ன
வப்பரி சனையர்க் கெல்லா மெடுத்தெடுத் தறைவ தானான்.

(இ - ள்.) இப்பெரிய புராணத்தைச்சிரவணிக்கும் வகையும், இதனைவாசித்துச்சொல்லும்விதமும், இதனையுபந்யசிக்கும்இடமும், மற்றவையும்வரன்முறையாகச்சொல்லவேண்டுமென்றார்கள். பவளமான துகிலைவிட்டதுபோன்ற சடையையுடைய பெருமைதங்கிய சூதமுனிவர், அவர்கள்சொல்லிய அத்தன்மைகளை அம்முனிவர்கட்கெல்லாம் எடுத்தெடுத்துச்சொல்வாராயினர். எ - று. (௮௩)

மங்கல தினத்திற் றேவ ராலயங் குரவர் வாயில்
பொங்குநீர் நதியின் பாங்கர் புண்ணியத் தலங்கண் மன்றந்
தங்குகோ மயத்தா லீவித் தண்மலர்த் தொடைய னாற்றி
யங்கண்மாக் கரும்பு வாழை தீபமிட் டமையச் செய்து.

(இ - ள்.) சுபதினத்திலே, தேவாலயம், ஆசிரியரிருக்கை, அதிகரித்த நீரையுடைய நதிக்கரை, புண்ணியஸ்தலங்கள், சபைகள் ஆகிய இவற்றொன்றில், பொருந்திய பசுவின்சாணத்தாலே மெழுகி, குளிர்ந்தமலர்மாலைகளைத்தொங்கவிட்டு, அவ்விடத்தில், மாயிலை கருப்பங்கோல் வாழைக்கன்று தீபங்கள் இவற்றைப்பொருந்தச்செய்து. எ - று. (௮௪)

பட்டுரை கொய்து நாற்றிப் பசுங்கமு கமைத்துப் பின்ன
ரிட்டபொற் பீடந் தன்னிற் புத்தக மினிதி னேற்றி
மட்டுவார் தூபஞ் சாந்த மலரினா லருச்சித் தாங்க
ணட்டவர் கிளைஞ ரோடுங் கேட்பது நன்மைத் தாமால்.

(இ - ள்.) பட்டுவஸ்திரத்தைக் கிழித்துத்தொங்கவிட்டு, பசியகமுகுகளமைத்து, அதன்பின்னர் அங்கமைத்தபொன்மயமாகிய பீடத்திலே புராணப்புத்தகத்தை இனிதாகவைத்து மணமிகுந்த தூபம் சந்தனம் புட்பம் இவற்றினாற் பூசைசெய்து, அங்கே சிநேகர் உறவினர்முதலானாரோடும் சிரவணஞ்செய்வது நன்மையுடையதாம். எ - று. (௮௫)

அரசரே லமைச்ச ரோடுந் தந்திரத் தலைவ ரோடு
மரபினாற் கேட்க வேண்டு மருங்கிருந் தோர்கட் கெல்லாம்
விரைமலர் நறுமென் சாந்தம் வெள்ளடை முதல நல்கிப்
பரசுறுங் கருணை யோடுங் கேட்பது பண்பிற் றாமால்.

(இ - ள்.) மன்னர்களாயிருப்பின், மந்திரிகளோடும் பிரதானிமுதலிய பரிசனரோடும் வரன்முறையாகக்கேட்கவேண்டும். அப்பொழுதுபக்கலிலிருந்தவர்களெல்லாருக்கும் மணந்தங்கிய புஷ்பங்கள் மென்மணம் வீசுஞ்சந்தனக்குழம்பு தாம்பூலமுதலியவற்றைக் கொடுத்து, துதிக்கத்தக்ககிருபையோடு சிரவணஞ்செய்வது தகுதியாம். எ - று. (௮௬)

ஏசறு புராணக் காதை படித்தெடுத் திசைப்போர்க் கென்ன
வாசன மளித்துப் பூவாற் சாந்த்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யியற்றி யன்னோர் பூருவ நோக்கி வைக
மாசறு சரிதை கேட்போ ரிருப்பது வடக்கு நோக்கி.

(இ - ள்.) ஏசுதலற்ற புராணசரிதையை வாசித்துப்பொருளையெடுத்துப்பிரசங்கிப்பவர்களுக்கென்று பீடங்கொடுத்து, மலர்களாலும் சந்தனத்தாலும் அவர்களுக்குவேண்டிய பூசைகளைச்செய்து, அப்பௌராணிகர் கிழக்குத்திசைநோக்கி

யிருக்க, குற்றமற்ற புராணசிரவணஞ்செய்வோர் வடக்குநோக்கியிருப்பது (முறையாகும்) எ - று. (அஎ)

பெருகுநூற் புராண மோதிப் பிரித்துரைத் திடுவோர் நாலு
வருணத்தி னொருவ ராகிப் பொறையொடு மரபி னோங்கி
முருகவே ளடிக்கீழ்த் தொண்டு முயன்றவ ராகி யம்பொற்
றிருவொடுந் தநய ரோடுங் கிளையொடுஞ் சிறக்க வேண்டும்.

(இ - ள்.) பெருகியபுராணநூலைவாசித்துப் பதச்சேதஞ்செய்துபொருளைப் பிரசங்கிப்பவர்கள் ஒப்பற்றநான்குவருணத்தவரில் ஒருவராகியும், சாந்தத்துடன் குடிப்பிறப்பினுன்மேம்பட்டு, குமாரசுவாமியின் திருவடிகளின்கீழ்த்தொண்டுபுரியுங்கருத்தினராகி, அழகியபொருட் செல்வத்தோடும் புதல்வர்களோடும் உறவினரோடுஞ் சிறந்தவர்களாயிருக்கவேண்டும். எ - று. (அஅ)

ஆதிதொட் டீறு காறு முடக்குறு தருளிற் கேட்க
வோதிய புராணத் தெம்மா னுமையினை மணக்கு நாளிற்
காதுவேற் குமரற் கம்பொற் கதிர்முடி கவிக்கு நாளிற்
றீதறு தெய்வ யானை திருமணஞ் சிறக்கு நாளில்.

(இ - ள்.) ஆதிமுதல் அந்தம்வரையில் தடைபடாமல் அன்போடுகேட்கக்கடவர். சொல்லிய அப்புராணத்திலே எமது சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணம் புரியுந்தினத்திலும், கோபிக்கின்றவேற்படைதாங்கிய குமாரசுவாமிக்கு அழகியபொன்னாலாகிய ஒளிபொருந்திய மகுடாபிஷேகஞ்செய்யுந் தினத்திலும், குற்றமற்ற தெய்வயானை நாயகியார் திருமணச்சரிதம் மேம்பட நடக்கு நாளிலும். எ - று. (அகூ)

மறையவர்க் கினிய வேண்டும் போசன மரபி னீந்து
நிறைதமிழ்ப் புராணக் காதை நிகழ்த்தினோர்ப் பணிந்து போற்றி
யுறுகதிர்ப் பசும்பொ னுடை பொலன்கல னுவந்து நல்கி
நறைகமழ் மலரிற் சாந்தி னருச்சனை நடத்த வேண்டும்.

(இ - ள்.) வேதியர்களுக்கு இனிமையாகிய விரும்பத்தக்க போசனாதிகளை முறைப்படியளித்து, தமிழ்ச்சுவை நிறைந்த புராணசரிதையைப் பிரசங்கித்தவர்களை வணங்கித்துதிசெய்து ஒளிபொருந்திய பசியபீதாம்பரங்களும் பொன்னாபரணங்களும் சந்தோஷித்துப்பரிசளித்து மணஞ்சொரியும் புஷ்பங்களாலும் சந்தனத்தினாலும் பூசிக்கவேண்டும். எ - று. (கூ0)

எண்ணியிப் புராணங் கேட்போ ரிருக்குநா லுணர்ந்தோர் பெற்ற
புண்ணிய மதனிற் கோடி புண்ணியம் பெறுவர் மற்றிம்
மண்ணிடை யாக முற்றும் வளர்ப்பவர் பெறும்பே றெல்லா
நண்ணுவர் தான மெல்லாம் புரிபய னணுகு வாரால்.

(இ - ள்.) இப்புராணத்தை விரும்பிச்சிரவணஞ்செய்தவர்கள், நான்குவேதங்களையுங்கற்றறிந்தோரடைந்த புண்ணியத்தைக்காட்டிலுங்கோடிப்பங்கு அதிகமாகிய புண்ணியத்தையடைவார்கள். (அன்றியும்) உலகத்திலேயாகங்களையெல்லாம் வளர்ப்பவர்கள் அடையத்தக்க பதவிகளையெல்லாம் பொருந்துவார்கள் (மேலும்) எல்லாத்தானங்களையுஞ்செய்த பயனையுமெய்தப்பெறுவார்கள். எ - று

கலிவிருத்தம்.

அறந்த ழைத்தெழ நான்மறை யாகம
நிறைந்த சைவ நிலைமைபெற் றோங்குக
கறங்கு வார்திரை வையகங் கார்மழை
சிறந்து மும்முறை பெய்கமற் றிங்களே.

(இ - ள்.) தருமமானது தழைத்தோங்குக. நான்குவேதங்களும் சிவாகமங்களும் (எங்கும்) நிறைந்தசைவசமயமும் நன்னிலையெய்தி யபிவிர்த்தியாகுக. சுழல்கின்றநெடிய அலைகடல் சூழ்ந்த பூமியில், மேகங்கள் மேம்பட்டுமாதம்மும் முறைமழைசொரிக. எ - று. (கூஉ)

வாழி நான்மறை வாழிய வந்தணர்
வாழி சைவ மநுமுறை யோங்குக
வாழி வையகம் வாழிய மன்னுயிர்
வாழி வாழி யறநெறி வாழியே.

(இ - ள்.) நான்குவேதங்களும்வாழ்க. வேதியர்கள்வாழ்க. சைவசமயம் வாழ்க. மநுமுறைவளர்ந்துயர்க. உலகம்வாழ்க. நிலைபெற்ற பிராணகோடிகள் வாழ்க. நீதிமார்க்கம்வாழக்கடவது வாழக்கடவது வாழக்கடவது. எ - று. (கூரு)

சிவகாட்சிப்பேற்றுச் சருக்கம் முற்றிற்று

ஆகச்சருக்கம் சுக-க்குத் திருவிருத்தங் சுஙசுஎ.

உபதேசகாண்டம்

பொழிப்புரையுடன் முற்றுப் பெற்றது.

சாம்பசிவார்ப்பண மஸ்து.

உ

உரைச்சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அலப்படைசேர் வல்லிபுரத் தெய்வநா யகப்புலவ னரன்பா லன்பன்
உலப்பில்புக ழுபதேச காண்டவுரை முற்றுவிக்க வுன்னி யார்க்கும்
புலப்படவோர் பொழிப்புவரைந் தளித்தியென மனங்கொண்டு புடவி போற்ற
நலப்படுவார்த் திகம்வரைந்தா னீக்காட்டி ரத்தினவே லுவ லோனே.

உபதேசகாண்டப் பிழைதிருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
14	30	6	தர்மதேவர்கள்	பிர்மதேவர்கள்
22	65	1	லரியா	லரியர
26	4	8	யணிற்	பணிந்
31	25	4	தொடாந்	தொடர்ந்
40	65	10	இரணியன்	இரணியன்
41	68	9	நீங்கிப்	நீங்கப்
45	80	2	முறுமுனி	குறுமுனி
51	108	5	சொல்லிப	சொல்லிய
58	137	5	ளாதவின்	ளாதலின்
58	2	7	அல்விசிஷ்டன்	அவ்விசிஷ்டன்
58	3	1	வளையாள்	அளையாள்
59	3	2	போள்றவள்	போன்றவள்
65	34	4	வோடிஞன்	வோடிஞள்
65	36	4	தெண்ணிஞள்	தெண்ணிஞன்
72	71	7	இளதினை	இளகினை
73	75	1	எந்த	எந்தை
76	5	1	ஞல்வா	ஞல்வர்
96	80	7	மாட்டான்	மாட்டேன்
98	89	1	கீந்திறக்கும்	நீந்திரக்கும்
104	113	6	லத்திலிருக்குஞ்	பத்திலிருக்கும்
111	145	6	கும்பயோனிதி	கும்பயோனி
117	176	8	விளக்குபவரார்	விலக்குபவரார்
120	191	8	திகுக்கரத்தால்	திருக்கரத்தால்
120	192	2	துடம்பறப்ப	துடம்புறப்பு
120	192	8	இளைமவன்	இளையவன்
122	201	4	யரக்கறை	யரக்கரை
123	207	2	நான்மலர்க்	நாண்மலர்க்
123	8	7	பூசிக்	பூசித்த
127	13	7	கணிந்தாள்	கணிந்தாள்
132	34	1	குழைத்து	குழைந்து
152	118	8	சொன்ஞள்	சொன்ஞன்
155	134	7	இகழ்வில்வாத	இகழ்வில்லாத
156	136	1	யோகாங்கள்	யோகாங்கன்
156	138	1	றுததன்	றுளததன்
158	147	9	வினங்கச்	விளங்கச்
165	178	1	ஒறை	ஒற்றை
173	213	2	சரணெணம்	சரணெனப்
173	214	3	துணர்த்துது	குணர்த்துது
177	234	3	முகோடி	முக்கோடி
184	10	8	சிக்தும்	சிந்தும்
186	15	2	உபிரைப்	உயிரைப்
186	16	5	தீப்பொற்	தீப்போற்

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
186	18	7	விருத்தனன்	விடுத்தனன்
192	42	1	விருப்பியுள்ளேம்	விரும்பியுள்ளேம்
195	57	9	ஈகரத்தில்	நரகத்தில்
196	63	5	சத்திரசேனன்	சந்திரசேனன்
196	64	4	யவனை	யவளை
198	73	9	மார்கத்திற்கு	மார்க்கத்திற்கு
200	81	5	யழைத்த	யழைக்க
201	86	6	கைமிசாரணிய	நைமிசாரணிய
202	89	4	லீழ்ந்தாள்	வீழ்ந்தான்
203	95	4	றிரிவனென்று	றறிவனென்றே
205	105	2	மைந்தனுக்ரும்	மைந்தனுக்கும்
211	131	9	செங்தாள்	செய்தாள்
213	138	8	திறந்த	திறத்தல்
216	13	10	சிறைபிட்டார்களோ	சிறையிட்டார்களோ
218	22	7	வவ்லப	வல்லப
220	28	5	வரைபும்	வரையும்
223	46	4	வரைந்தனால்	வறைந்தனால்
226	60	8	மிண்டும்	மீண்டும்
227	63	4	காவனைக்	காலனைக்
240	139	2	புனைய	புனையு
241	142	7	கெய்தேன்	செய்தேன்
242	147	8	மவிவியைத்	மனைவியைத்
243	150	13	றன்னோடு	றன்னொடு
243	152	8	ஒற்வரா	ஒற்றரா
246	165	4	யறன்கொள்	யரங்கொள்
246	167	2	பொருர்தி	பொருந்தி
247	171	9	பொரரதவனாய்க்	பொருதவராய்க்
248	172	7	வல்வோர்	வல்லோர்
248	174	9	ளென்று	வென்று
250	5	2	யண்ணியையு	பன்னியையு
250	7	1	செய்விற்	செய்வித்
252	15	1	களைபெய	களைபெய
253	20	1	புரிவுற்றான்	பரிவுற்றான்
257	37	9	திகுவருள்	திருவருள்
258	38	1	வற்கள்	வர்கள்
258	41	7	திருவ	திருவுருவ
259	44	3	மூசித்த	முகிழ்த்த
259	86	4	திக	கதி
272	100	6	முகலாக	முதலாக
273	105	9	தணிந்தது	தணிந்தது
275	112	6	செய்பும்	செய்யும்
279	128	2	நோங்து	நேர்ந்து
279	130	9	தழுவினான்	தழுவினாள்
281	138	6	பாம்யு	பாம்பு
282	143	9	நொற்களைக்	சொற்களைக்
282	145	5	சிறக்த	சிறந்த
284	153	8	அத்கணத்	அக்கணத்
285	156	6	அலைகனி	அலைகளி
285	156	9	முழ்கி	மூழ்கி
285	157	1	மெழுத்தோடி	மெழுந்தோடி

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
286	157	1	தூமப்யிரமை	தூமப்பிரபை
286	161	2	பற்ழி	பற்றி
287	161	1	பணிக்து	பணிந்து
291	180	6	இல்வுலகத்தில்	இவ்வுலகத்தில்
292	188	6	அல்விருட்	அவ்விருட்
302	229	6	வளிந்து	வளித்து
304	238	9	மாமரை	தாமரை
305	242	11	தந்தையிள்	தந்தையின்
307	249	6	அவனை	அவளை
311	269	7	டிளை	டினை
313	275	2	ணினு	ணிது
315	286	1	தெரிந்து	தெரிந்த
326	332	5	முதுரை	முதிரை
327	339	6	எலும்யுகள்	எலும்புகள்
328	341	5	பிணவுற்ப்பட்ட	பிளவுபட்ட
333	364	4	வினைவ	விளைவ
333	367	5	சொவ்லிய	சொல்லிய
334	371	7	தெரியயும்	தெரியவும்
340	393	3	தரிதாயுள்ள	கரிதாயுள்ள
343	406	7	திநானஞ்	ஸ்நானஞ்
344	409	12	தார்ற்போன்ற	தாற்போன்ற
349	16	5	சந்தர்வர்களும்	கந்தர்வர்களும்
350	17	2	கிரமம்	சிரமம்
350	19	7	முழுவதிம்	முழுவதும்
350	20	3	மெம்ம்மை	மெய்ம்மை
350	21	7	பக்திலக்	பத்திலக்
354	39	6	முகடாம்	முகபடாம்
361	68	4	கழுற்திடைச்	கழுத்திடைச்
361	70	2	தணிந்தனண்	கணிந்தனண்
363	79	6	இழுவிழிகளும்	இருவிழிகளும்
380	149	6	தார்தள்	தார்கள்
380	151	9	எண்டோ	உண்டோ
382	159	4	கரந்தா	கலந்தா
384	164	7	பக்கல்களி	பக்கங்களி
390	185	1	சித்தை	சிந்தை
395	206	1	லுஞ்சுங்	துஞ்சுங்
396	206	4	அலனைச்	அவனைச்
398	217	7	காவத்திலே	காலத்திலே
401	232	4	னண்ணினுள்	னண்ணினுன்
409	266	5	துள்ன	துள்ள
422	328	3	மகிழ்த்தனர்	மகிழ்ந்தனர்
423	331	2	ஞேக்சி	ஞேக்கி
429	356	2	மேலான்	மேலாள்
430	360	8	பிள்னர்	பின்னர்
432	367	7	குடைபை	குடையை
440	403	8	சுயையைச்	சுமையைச்
449	15	8	சிறந்தீர்கள்	பிறந்தீர்கள்
454	38	6	முன்னிருக்த	முன்னிருந்த
456	45	2	சிரங்கு	கிரங்கு
466	33	8	ஒளித்துக்	ஒலித்துக்

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
482	107	6	எல்வா	எல்லா
483	109	8	விசாவித்த	விசாலித்த
484	112	2	விரலற்றார்	விரலற்றார்
487	127	3	தறன்னி	தன்றனி
491	142	4	சென்னீர்க	சொன்னீர்க
492	150	9	நகரவேதனை	நரகவேதனை
493	153	7	திரயங்க	திரவியங்க
501	186	8	யுவடய	யுடைய
512	233	1	குங்பியுட்	கும்பியுட்
512	234	3	திருக்துறப்	தருக்துறப்
513	237	6	நகரங்	நரகங்
513	237	10	குழம்யு	குழம்பு
535	332	1	வினைவன	விளைவன
544	372	10	ணிருந்தாண்	ணிருந்தான்
544	373	3	பொதிக்து	பொதிந்து
557	431	6	கில	சில
567	471	4	நால்வா	நால்வர்
567	471	2	புரத்திள்	புறத்தின்
568	478	6	மித்திரி	மந்திரி
570	486	8	சிவத்துரோகிகத்தா	சிவத்துரோகத்தா
578	14	4	பிரனவ	பிரணவ
579	18	2	லிங்சார்ச்சனை	லிங்கார்ச்சனை
580	21	6	செற்தற்	செய்தற்
580	33	4	தாராகின்றான்	தரகின்றான்
585	41	2	வான்பெற்றான்	வாட்பெற்றான்
590	63	2	ஞுத்தரன்பரத	ஞுத்தானபாத
591	64	3	புதல்தன்	புதல்வன்
594	79	2	வேண்டிரைப்	வெண்டிரைப்
595	84	4	மாலிகை	மாளிகை
598	97	7	அக்காலத்திற்	அக்கபாலத்திற்
612	9	7	பர்களையும்	பற்களையும்
613	13	4	முழ்கி	மூழ்கி
623	57	2	மொஞுங்ரு	மொருங்கு
625	68	4	யுவவை	யுவமை
631	94	7	தலைவளே	தலைவனே
637	17	6	முட்புரங்களை	முப்புரங்களை
642	2	11	அதைகோக்கித்	அதைநோக்கித
644	7	2	லுள்ன	லுள்ள
644	10	6	மலைகனின்	மலைகளின்
648	23	3	பிள்ளை	பின்னை
649	24	3	வாறு	வரஞு
651	35	1	குடித்றுச்	குடித்துச்
653	42	5	பொன்ளிற	பொன்னிற
666	42	6	திரயம்	திரவியம்
679	25	7	காலப்	காலத்
681	34	4	வோய்த்தன	வோய்ந்ததன்
683	41	9	திரும்பிஞர்கன்	திரும்பிஞர்கள்
684	44	9	போஞன்	போஞள்
685	47	2	நெடுஜி	நெறியி
686	51	9	கொடுத்தோ	கொடுத்தோம்

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
688	2	7	கலிகிலேத்துரை	கலிகிலேத்துறை
697	14	8	சிராத	கிராத
698	15	3	னவ	னவை
704	13	8	அவ்வரசன்பால்	அவ்வசுரன்பால்
710	36	1	கிரா	கிசா
711	40	2	புரந்தற்ரகுப்	புரந்தரற்குப்
714	10	3	புட	புடை
715	14	8	சேய்ய	செய்ய
715	16	4	நீர்தான்	தீர்ந்தான்
722	44	4	மீண்டுபுந்	மீண்டுபுக்
733	41	2	தோன்றினுள்	தோன்றினுன்
734	45	4	வேண்டுமாஞல்	வேண்டுமால்
736	6	7	யிருக்கும்	யிருக்கும்
736	7	4	லரஞன்	லாஞள்
737	10	8	செச்	செங்
739	17	4	மாழகி	மாழ்கி
739	19	2	சோரர	சோர
740	23	10	பொத்திருக்கும்	யொத்திருக்கும்
743	35	5	ஆலவட்டயென்	ஆலவட்டமொன்
745	41	8	உனதாக்குமோ	உளதாகுமோ
745	45	4	மிச்கி	மிச்சி
747	52	7	முனிறர்	முனிவர்
747	53	5	துவக்கி	துளக்கி
749	57	7	வக்தனர்	வந்தனர்
752	68	5	கொல்	கோல்
752	68	7	தியாளித்து	தியானித்து
762	35	3	கிறுவிளக்கு	சிறுவிளக்கு
766	56	3	திசைப்யின்	திசைப்பின்
767	61	6	சொல்வார்கள்	சொல்லார்கள்
774	92	6	அர்சசனேங்	அர்ச்சனேக்
774	93	7	ஸ்ரீபஞ்சாக்சர	ஸ்ரீபஞ்சாக்கர
774	94	7	உருத்திராங்க	உருத்திராக்க
775	98	4	தொண்டினே	தொண்டினே
782	124	2	அதவிறைவன்	அந்தவிறைவன்
782	125	7	புளசித்த	புளகித்த
784	134	10	மறமாதவர்	மறவாதவர்
785	138	9	விளக்கும்	விளக்கும்
789	152	2	அதனே	அதனே
789	154	2	வுற்ற	வுறாக்
800	203	6	திருமால்	திருமால்
805	226	3	வெய்திவன்	வெய்திவண்
805	227	5	சிவகிபரு	சிவபெரு
806	229	8	டிங்களேத்	டிங்களேத்
808	238	8	வில்ளாக	வில்லாக
814	264	9	கழுத்திளின்று	கழுத்தினின்று
823	21	2	கின்ருர்	நின்ருர்
825	31	1	லிக்கனே	ஶிக்கணே
829	8	5	விழிபின்	விழியின்
829	10	8	யெரிய	பெரிய
846	12	10	பெய்தினன்	யெய்தினன்

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
848	20	9	கைமிசாரணிய	நைமிசாரணிய
857	13	1	றெழுந்தனள்	றெழுந்தனன்
867	55	3	சூழ்ந்றுபோ	சூழ்ந்துபோ
871	72	6	முலத்தை	மூலத்தை
873	80	8	அல்வகை	அவ்வகை
874	89	3	கன்னி	கண்ணி
876	93	3	முலமென்பா	மூலமென்பா
879	109	1	திசைப்ப	கிசைப்ப
883	123	3	துன்ளை	துன்னை
894	18	1	குலதோன்	குலத்தோன்
903	56	3	சசியா	சகியா
915	113	8	பிராசத்தை	பிரகாசத்தை
916	116	8	உள்திரு	உன்திரு
928	167	2	மொழிவாள்	மொழிவான்
932	182	4	நின்து	நின்று
946	10	6	கொல்லத்தக்க	சொல்லத்தக்க
962	14	7	திருமால்	பிரமன்
972	10	3	நிளி	நீளி
983	22	2	கிழ்வே	கீழ்வே
992	7	7	உன்மைத்	உண்மைத்
997	33	6	பகிய தளிர்	பசிய தளிர்
1000	6	1	வெங்கணுக்கு	வெங்சணுக்கு
1002	16	3	ச்சமய	யச்சமய
1005	23	2	சேவ	சேவடிய

15-ம் பக்கம், 32-ம் பாட்டு, 8-ம் வரியில் வித்தியாதரர்களும் என்பதன் பின்னர், கருடர்களுமென்று சேர்த்துக்கொள்க.

249-ம் பக்கமுதல் 295-ம் பக்கம் வரையில் தலைப்பிலுள்ள சிவநாமமான்மிய மென்பதைச் சிவவிரதமான்மிய மென மாற்றிக்கொள்க.

951-ம் பக்கத்திலுள்ள 36-வது பாட்டின் உரை 37-வது பாட்டின் அடியிலும், 37-வது பாட்டின் உரை 36-வது பாட்டின் அடியிலுமாக மாறியுள்ளன.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1